# பாமரனின் பைபிள் குறிப்புகள்

## நூல் 19

# சங்கீதங்கள் / திருப்பாடல்கள்

**க. வி. பால் பாஸ்கர்,**
**(MCS from Serampore University / TTS, Madurai)**
**A Bible Student and a Retired Banker**

**Free distribution of this ebook is encouraged.**
**இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்.**
**கொடையாகப் பெற்றீர்கள்; கொடையாகவே வழங்குங்கள்.**
**மத்தேயு 10:7**

**பதிப்புரிமை: கடவுளுக்கே!**
**மின்னூலாக இந்த நூலை எவரும் பயன்படுத்த / விநியோகிக்கத் தடை ஏதுமில்லை!**
**அச்சுரிமை: ஆசிரியருக்கு**

**திருவிவிலியம் என்னும் பொது மொழிபெயர்ப்பு இந்த நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவையான இடங்களில், பவர் மொழிபெயர்ப்பு (OV) வசனங்கள் ஒப்பிடப்பட்டுள்ளன.**

**Contact Information:**
WhatsApp & Telegram: +919443338739
Facebook: https://facebook.com/groups/orae.vazhi/
Email: paul_palk@yahoo.co.in

## *முன்னுரையாகச் சில எண்ணங்கள்*

***பொது மொழிபெயர்ப்பு - சில புரிதல்கள்:***

*திருப்பாடல்களில், கடவுள், ஆண்டவர், இறைவன், தலைவர் - என்று வெவ்வேறு பெயர்களில் கடவுள் அழைக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். இவை ஒவ்வொன்றின் அடிப்படை என்ன என்பதை இன்று பார்க்கலாம்.*

*எபிரேய பைபிளில், தொடக்க நூல் 1:1ல், படைப்பாளரைக் குறிக்க, ஏலொஹிம் (Yelohim) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏல் என்ற சொல்லின் பன்மையே ஏலொஹிம் என்பது. இந்த வார்த்தையை, சீகன்பால்க் தனது மொழிபெயர்ப்பில் (1715) சருவேசுவரன் என்று குறிப்பிட்டார். இது தமிழ்ச் சொல் அல்ல.*

*ஃபேப்ரீசியஸ் திருப்புதலில் (1772), ஏலொஹிம் என்பது பராபரன் என்று மாறியது. இது ஒரு தமிழ்ச் சொல் என்கிற அளவில் ஒத்துக் கொள்ளலாம்.*

*1850ல் இலங்கையில், பீட்டர் பெர்சிவல் என்பவரது தலைமையில் ஒரு மொழிபெயர்ப்புக் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவில், சைவ சமயத் தமிழ் அறிஞர்களும் இடம் பெற்றனர். ஏலொஹிம் என்பதற்குத் தனித்துவமான சொல் ஒன்றைக் "கண்டு பிடிக்க" வேண்டும் என்ற முயற்சியில், சைவ சமயப் பெருமகனார் ஆறுமுக நாவலர் "கண்டு பிடித்து" அருளிய சொல்லே "தேவன்" என்பது. இங்கு எழும் கேள்வி, கடவுள் ஒருவரே என்றால், அவருக்கு ஏன் புதிய பெயர்?*

*ஏலொஹிம் என்கிற பன்மைப் பெயரை, விண்ணையும் மண்ணையும் அவற்றில் உள்ள அனைத்தையும் படைத்த ஆற்றல் மிக்க கடவுளை, ஒருமையில் "தேவன்" என்று அழைக்கலாமா? முப்பத்து முக்கோடி தேவர்கள் உள்ள நாட்டில், படைப்பாளரும் ஒரு "தேவனா?"*

*பொதுவாக, இப்போது நாம் பழைய மொழிபெயர்ப்பு (Old Version, OV) என்று அழைக்கும் பவர் (Henry Bower) திருப்புதல், 1871ல் வெளிவந்தது. இதற்கு முந்தைய எல்லா மொழிபெயர்ப்புகளிலும் இருந்து திரட்டி, ஐக்கியத் திருப்புதலாக இந்தப் பரிசுத்த வேதாகமம் அமைந்தது. ஆனால், ஆறுமுக நாவலர் அவர்களால் தானமாக அருளப்பட்ட "தேவன்" என்ற சொல் விடாமல் ஒட்டிக் கொண்டது.*

*கடவுள் ஒருவரே என்றால் அவருக்கு ஒரு பொதுவான பெயர் மட்டுமே இருக்க முடியும். பல மொழிபெயர்ப்புகள் ஆங்கிலத்தில் இருந்தாலும், God, Lord என்கிற பொதுப் பெயர்கள் மாற்றப்படுவதில்லை என்பதை நாம் அறிவோம் - ஆனால் உணர்ந்தோமா?*

*தமிழ்ப் பொது மொழிபெயர்ப்பில், கடவுளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களைப் பார்ப்போம்.*

*1. ஏலொஹிம் (Elohim) என்கிற பன்மைச் சொல்லுக்கு, ஒருமைப் பன்மையற்ற, கடவுள் என்ற சொல்; ஆங்கிலத்தில், GOD (all capitals). கடவுள் என்பதற்கு, கடந்து உள்ளத்துள் வந்து உறைபவர் என்று பொருள்; மூவொரு கடவுளாக விளங்கும் ஏலொஹிம்; அவரே உள்கடந்து வருபவர் - ஒருமைப் பன்மையற்ற கடவுள் என்ற பெயரில் அழைத்தலே சிறப்பு.*

2. யெஹொவா (Yehovaw), என்கிற சொல்லுக்கு "ஆண்டவர்"; ஆங்கிலத்தில், LORD (all capitals).

3. ஏல் (El) என்ற ஒருமைச் சொல்லுக்கு, இறைவன்; ஆங்கிலத்தில், God அல்லது god.

4. அடொனாய் (Ad-o-noy, எஜமானர்) என்கிற சொல்லுக்கு, தலைவர்; ஆங்கிலத்தில், Lord.

இவ்வாறு பொது மொழிபெயர்ப்பில், கடவுள், ஆண்டவர், இறைவன், தலைவர் என்கிற பொதுப் பெயர்களில், கடவுள் அழைக்கப்படுகிறார்.

தவிர, வேற்றின மக்களின் கடவுள், எபிரேய பைபிளில், ஏல் என்று குறிப்பிடப்படுகிறது; அவை பொது மொழிபெயர்ப்பில், தெய்வம் அல்லது தெய்வங்கள் (ஆங்கிலத்தில் god அல்லது gods!) என்று வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு எபிரேயச் சொல்லுக்கும் தமிழ் எவ்வாறு சொற்களை வழங்குகிறது!

பெயரில் என்ன இருக்கிறது என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். மனிதர்களின் பெயர்களைப் போல, கடவுளின் பெயரைக் கருதக் கூடாது; அவரின் நாமம் அதிசயம்; ஆண்டவர் தமது திருப்பெயரில் உறுதியாக இருப்பதை பைபிளில் பார்க்கிறோம். தமது பெயரை அவர் உறுதியோடு, "இருக்கின்றவராக இருக்கின்றவர் நானே" (I AM THAT I AM) என்று மோசேயிடம் உரைக்கிறார். மகிமையும் மாட்சிமையும் நிறைந்த அவருடைய திருப்பெயரை அற்பமாக அழைக்கலாமா?
*

**மொழிபெயர்ப்புகள் ஏன் வேண்டும்?**
தலைமுறைக்குத் தலைமுறை மொழிநடை மாறிக் கொண்டே இருக்கிறது. ஆங்கில மொழியில் பலப்பல மொழிபெயர்ப்புகள் உள்ளன. பல திருப்புதல்களையும், மொழிபெயர்ப்புகளையும் மக்கள் வாசிக்கிறார்கள். இங்கோ, கடினமான மொழி நடையின் பொருட்டு, இளம் தலைமுறையினர் தமிழில் பைபிள் வாசிப்பை விட்டு விட்டு, ஆங்கில பைபிளை வாசிக்க மாறிவிடுகிறார்கள். எந்தப் பெற்றோரும், ஆங்கில மொழியில் KJV-தான் வாசிக்க வேண்டும் என்று அப்போது சொல்லுவதில்லை. இந்தப் பரந்த மனம் ஏன் தமிழ் பைபிள் வாசிப்பில் பெற்றோருக்கும் திருச்சபைகளுக்கும் இல்லை? எனவே, ஒவ்வொரு திருப்புதலையும் வாசியுங்கள் - வாசிக்க ஊக்குவியுங்கள். ஒப்பிட்டு வாசிக்கப் பழகுங்கள் - பழக்குங்கள்.

திருவிவிலியம் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளபடி, "***… பழைய ஏற்பாடு, எபிரேய பாடமான 'பிபிலியா எபிராயிக்கா' நூலையும் (Biblia Hebraica, Stuttgart Edition – Masoretic Text) புதிய ஏற்பாடு, விவிலியச் சங்கங்களின் இணையத்தின் வெளியீடான கிரேக்க புதிய ஏற்பாட்டு நூலின் மூன்றாம் பதிப்பையும் (The Greek New Testament, UBS, Third Edition) சார்ந்து மொழிபெயர்க்கப்பட்டன. தொன்மையும் தரமுமான மூலபாடங்களையே அடிப்படையாகக் கொண்டாலும், மரபு மொழிபெயர்ப்புகளுக்கு மதிப்புத் தரும் வகையில் சில இடங்களில் காலத்தால் பின்னைய பாடங்களும் இடம்பெறுகின்றன. அவை சதுர அடைப்புக்குறிக்குள் […......] இடப்பட்டுள்ளன. … பொருள் துல்லியம், தெளிவு, எளிமை, மக்கள் மொழிநடை, மனிதநேயம், இருபால் சமத்துவநோக்கு ஆகியவற்றைக் கண்முன்கொண்டு செய்யப்பட்ட இம்மொழியாக்கம் கிறிஸ்தவ சமுதாயம் மட்டுமல்ல, தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதும் இறையுளத்தை அறிந்து செயல்படத் தூண்டும் என நம்புகிறோம். திருவிவிலியம் திருச்சபை வழிபாடுகளிலும், கருத்தரங்குகளிலும், விவிலியப் பள்ளிகளிலும், வீதிகளிலும் பயன்பட வேண்டும்; இல்லங்களிலும் உள்ளங்களிலும் இடம் பெற வேண்டும்.***

***இதன் மூலம் இறையாட்சி வருக! இறைவாக்கு ஒளிர்க!***"

***பைபிள் விளக்க நூல்கள்:***

*பிள்ளைகள் பள்ளியில் படிக்கும் போது, பாட நூல்கள் தவிர, துணை நூல்களை வாங்கித் தரும் நாம், தொன்மையும் ஆழமுமான பைபிளைத் தெளிவாக வாசிக்க ஏன் துணை நூல்களை வாசிப்பதில்லை?*

*இந்த மின்னூலை வாசியுங்கள்; உங்கள் அனுபவங்களைப் பகிருங்கள். மகிழ்வுறும் வேளைகளில், கடவுளுக்கே துதி! குறை ஏதும் தென்படின், தொடர்பு கொண்டு தெரிவியுங்கள்.*

*நல்ல வாசிப்பு அனுபவத்திற்குள் தூய ஆவியார் வழிநடத்துவாராக!*

***முன்னுரையை முடிக்கும் முன்:***

*பைபிள் குறிப்புகளையோ, எனது இறையியல் எண்ணங்களையோ வெளிப்படுத்தும் தகுதி ஏதும் எனக்கு இல்லை; ஆவியில் உந்தப்படுகிறேன். நாள்தோறும் வாட்சப் / டெலிகிராம் வழியாக நான் எழுதத் தொடங்கியபோது, தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் என்னுடன் பயின்று, திருச்சபைகளை நடத்திவரும் சகோதரர்கள், அவர்களுடைய வாட்சப் குழுக்களில் என்னை இணைத்து, எனக்குத் தளம் அமைத்துத் தந்தார்கள். அவர்களுக்கு என் அன்பும் நன்றிகளும்! பின்னர், இதனை வாசிக்க நேர்ந்த அருள்பணியர், திருப்பணியர், சபைத் தலைவர்கள் பலரும், அவர்களுடைய வாட்சப் குழுக்களில் என்னை இணைத்துக் கொண்டு, அனேகம் பேரை இந்தக் குறிப்புகள் சென்றடைய ஊக்கமளித்தனர்; நேரில் பழகாமல், ஆவியால் இந்தப் பணியில் இணைந்த அவர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றி! இந்தக் குழுக்களில் இணைந்து பயணிக்கும் இறைமக்கள் பலரும் கரம் தட்டி எனக்கு ஊக்கமூட்டுகின்றனர்; அவர்கள் அனைவருக்கும் எனது நன்றியும் வாழ்த்துகளும்! இதன் வழியாக ஆண்டவராகிய ஆவியார் என்னை என் எழுத்துப் பணியில் அன்றாடம் வலுப்படுத்துகிறார். எல்லாப் புகழ்ச்சியும் மேன்மையும் மாட்சியும் கடவுளாகிய ஆண்டவருக்கே! சற்றும் எண்ணிப் பாராத விதத்தில், கடவுளின் அநாதி திட்டத்தின்படி சந்திக்க நேர்ந்த, சகோதரர் ஏசுதாஸ் சாலமன் (wordofgod.in - கிறிஸ்தவத் தமிழ் நூல்களை, இலவசமாகத் தரவிறக்க) அவர்களின் ஊக்கமான வார்த்தைகளுக்காக ஆண்டவரைத் துதிக்கிறேன். எபிரேய சொற்குறிப்புகளுக்குத் துணை நிற்கும், எங்கள் குடும்ப நண்பர், திருப்பணியர் சகோதரர் இராஜேந்திரனுக்கு என் அன்பும் நன்றியும்.*

*38 அகவையில் இரட்சிக்கப்பட்ட எனக்கு, பைபிள் வாசிப்பில் ஆவிக்குள் அனலூட்டும், அருட்திரு சாமுவேல்ராஜ் (கொல்கத்தா), அருட்திரு மோசஸ் ஜெயக்குமார் (பெங்களூரு), அருட்திரு ரிச்சர்ட் (மதுரை), அருட்திரு மா. ஞானவரம் (மதுரை), அருட்திரு கிறிஸ்டோபர் ஜாக்சன் (மதுரை), அருட்திரு இரவீந்திர விக்டர் சிங் (மதுரை), அருட்திருமிகு ஐவி சிங், அருட்திரு ச. வேதமுத்து (மதுரை), கிறிஸ்துவுக்குள் இளைப்பாறும் என் அருமை அண்ணன் விக்டர் P. லாரன்ஸ் (மதுரை) - ஆகிய அனைவருக்கும் என் நன்றி கலந்த வணக்கங்கள்! இந்த நூலின் சிறப்புகள் இவர்களையே சாரும். இந்தப் பணியில் முழுமையாக என்னை ஈடுபடுத்திக் கொள்ளத் துணையாக இருக்கும், என் இணையர் மற்றும் குடும்பத்தினரே என் பெருமை.*

*இறை அருள் பெருகட்டும்! கடவுளுக்கே மாட்சி!*

*அன்பன்,*
*க. வி. பால் பாஸ்கர்*

*"பெத்சூர்," ஒசூர்*
19-04-2023

## பொருளடக்கம்


| அதிகார எண் | பக்க எண் | அதிகார எண் | பக்க எண் | அதிகார எண் | பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 001 | 011 | 051 | 209 | 101 | 427 |
| 002 | 013 | 052 | 217 | 102 | 429 |
| 003 | 016 | 053 | 220 | 103 | 436 |
| 004 | 019 | 054 | 223 | 104 | 442 |
| 005 | 022 | 055 | 225 | 105 | 448 |
| 006 | 025 | 056 | 230 | 106 | 456 |
| 007 | 028 | 057 | 235 | 107 | 466 |
| 008 | 032 | 058 | 239 | 108 | 473 |
| 009 | 035 | 059 | 243 | 109 | 475 |
| 010 | 039 | 060 | 249 | 110 | 480 |
| 011 | 042 | 061 | 254 | 111 | 483 |
| 012 | 044 | 062 | 258 | 112 | 485 |
| 013 | 046 | 063 | 262 | 113 | 488 |
| 014 | 048 | 064 | 267 | 114 | 490 |
| 015 | 052 | 065 | 270 | 115 | 493 |
| 016 | 054 | 066 | 275 | 116 | 496 |
| 017 | 058 | 067 | 280 | 117 | 500 |
| 018 | 062 | 068 | 282 | 118 | 501 |
| 019 | 072 | 069 | 291 | 119 | 508 |
| 020 | 076 | 070 | 299 | 120 | 548 |
| 021 | 079 | 071 | 301 | 121 | 552 |
| 022 | 082 | 072 | 306 | 122 | 554 |
| 023 | 088 | 073 | 312 | 123 | 557 |
| 024 | 093 | 074 | 317 | 124 | 559 |
| 025 | 095 | 075 | 323 | 125 | 561 |
| 026 | 101 | 076 | 326 | 126 | 563 |
| 027 | 104 | 077 | 329 | 127 | 565 |
| 028 | 109 | 078 | 334 | 128 | 567 |
| 029 | 112 | 079 | 344 | 129 | 570 |
| 030 | 115 | 080 | 347 | 130 | 572 |
| 031 | 119 | 081 | 352 | 131 | 574 |
| 032 | 125 | 082 | 356 | 132 | 576 |
| 033 | 128 | 083 | 358 | 133 | 580 |
| 034 | 132 | 084 | 362 | 134 | 582 |
| 035 | 137 | 085 | 366 | 135 | 584 |
| 036 | 142 | 086 | 369 | 136 | 589 |
| 037 | 145 | 087 | 374 | 137 | 593 |
| 038 | 152 | 088 | 377 | 138 | 596 |
| 039 | 157 | 089 | 381 | 139 | 599 |
| 040 | 161 | 090 | 392 | 140 | 604 |
| 041 | 165 | 091 | 396 | 141 | 607 |
| 042 | 170 | 092 | 401 | 142 | 610 |
| 043 | 175 | 093 | 404 | 143 | 613 |
| 044 | 178 | 094 | 405 | 144 | 616 |
| 045 | 183 | 095 | 410 | 145 | 620 |
| 046 | 187 | 096 | 413 | 146 | 626 |
| 047 | 190 | 097 | 417 | 147 | 629 |
| 048 | 193 | 098 | 420 | 148 | 633 |
| 049 | 197 | 099 | 422 | 149 | 636 |
| 050 | 202 | 100 | 425 | 150 | 639 |

# 19 திருப்பாடல்கள் 00

## *முன்னுரை*

*பல நூல்கள் அடங்கிய ஒரு நூல் பைபிள். ஒரே அதிகாரம் கொண்ட, சில வசனங்களே உடைய, ஒபதியா, 2 யோவான், 3 யோவான் மற்றும் யூதா ஆகியவையும் நூல்கள் தான். அதுபோலவே, ஐந்து நூல்கள் அடங்கிய ஒரு நூலாகத் திருப்பாடல்கள் நூல் உள்ளது.*

*பைபிளின் நூல்களுள் சிறப்பிடம் பெற்ற நூல் திருப்பாடல்கள். நூலின் இலக்கியச் செழுமைக்காகவும், கருத்துச் செறிவுக்காகவும், வெளிப்படும் ஆழமான உணர்வுகளுக்காகவும், கடவுளிடம் மனமுருகி ஏறெடுக்கும் மன்றாட்டுகளுக்காகவும் இந்த நூல் உலகிலேயே அதிகம் வாசிக்கப்படும், பெரிதும் நேசிக்கப்படும் நூலாக விளங்குகிறது. மன்றாட்டுகளின் உயர்நிலையில், மகிழ்ச்சியும் நன்றியும், அடிநிலையில், இழப்புகளும் மன அழுத்தங்களும் உள்ளன. கூடுதலாக, இறைவாக்கு நூலாகவும் இந்நூல் விளங்குகிறது. நமது வாழ்வின் இன்பம் - துன்பம், வெற்றி - தோல்வி, ஆற்றல் - நோய், என எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வாசித்துப் பொருத்திப் பார்க்கக்கூடிய ஒப்பற்ற நூல், திருப்பாடல்கள்.*

*மிகவும் தனிப்பட்ட ஒருவரின் சிக்கலில் எழுதப்பட்ட 51ம் திருப்பாடல் கூட, எல்லாராலும் உணர்ந்து படிக்கக்கூடிய, வெவ்வேறு நிலைகளில், படிப்பவர் தன்னைப் பொருத்திப் பார்க்கக்கூடிய ஒன்றாக உள்ளது. இது இந்த நூலின் பொதுமைக்குச் சான்றாகும்.*

***நூலின் பெயர்:***

*Tehillim என்பது இந்நூலின் எபிரேயப் பெயர்; இதற்குத் துதிகள் என்பது பொருள். ஒவ்வொரு திருப்பாடலும் கடவுளுக்கு நன்றியை ஏறெடுத்துத் துதிப்பதாக அமைந்துள்ளது. மனமுடைந்த நிலையிலும், புலம்பலிலும் கூட, கடவுளைத் துதித்தல் பாடல்களின் அடிப்படையாக உள்ளது. இராகத்தோடும் இசைக்கருவிகளோடும் பாடப்படும் பாடல்கள் என்பதால் சங்கீதங்களின் நூல். கிரேக்க செப்டுவஜின்ட் இந்நூலை Psalmoi (எபிரேயத்தில், மிஷ்மொர், mizmor) என்று தலைப்பிட்டதன் அடிப்படையில், ஆங்கிலத்தில் Psalms என்று அழைக்கப்படுகிறது.*

***பைபிளில் நூலின் இடம்:***

*பைபிளின் நடுநாயகமாக விளங்கும் நூல் திருப்பாடல்கள். பைபிளின் பெரிய நூலும் இதுவே. பைபிளின் மிகச் சிறிய அதிகாரமும், மிக நீண்ட அதிகாரமும் இந்நூலில் உள்ளன. புதிய ஏற்பாட்டில் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட, பழைய ஏற்பாட்டு நூலும் இதுவே.*

***காலம்:***

*இந்த நூலில் உள்ள பாடல்கள், மோசேயின் காலம் முதல் (கி.மு. 1400க்கு முன்) எஸ்ராவின் காலம் வரை (கி.மு. 430) பாடப்பட்டிருக்கலாம்.*

***பாடலாசிரியர்:***

*பொதுவாக நினைப்பது போல, தாவீது அரசர் மாத்திரம் இந்தப் பாடல்கள் அனைத்தையும் எழுதவில்லை. அதேபோல, தாவீது அரசர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பாடல்களிலும், பல அவருக்காக அல்லது அவரைக் குறித்துப் பாடப்பட்டவை என்றும் கருதலாம்.*

*பாடலாசிரியர்களைப் பின்வருமாறு பட்டியல் இடலாம்:*
1. *தாவீது:*
3 ~ 9; 11 ~ 32; 34 ~ 41; 51 ~ 65; 68 ~ 70; 86; 95; 101; 103; 108 ~ 110; 122; 124; 131; 133; 138 ~ 145.
2. *இசைவழி ஆராதனையை நடத்திய ஆசாப் என்னும் குரு* (1 *குறிப்பேடு* 15:19; *எஸ்ரா* 2:41):
50; 73 ~ 83.
3. *கோராகியர்* (*பார்க்க, எண்ணிக்கை* 26:9-11):
42; 44 ~ 49; 84; 85; 87.
4. *சாலமோன் அரசர்:*
72; 127.
5. *மோசே:*
90
6. *ஏமான்* (*பார்க்க,* 1 *அரசர்கள்* 4:31; 1 *குறிப்பேடு* 15:19):
88
7. *ஏத்தான்* (1 *குறிப்பேடு* 15:19):
89

- *இவை தவிர,* 50 *திருப்பாடல்களை இயற்றியவர்கள் யார் என்று தெரியவில்லை. அவற்றை அல்லது அவற்றில் அதிகமானவற்றை எஸ்ரா எழுதியிருக்கலாம் என்கிற கருத்து உள்ளது.*

***திருப்பாடல்களில் கிறிஸ்து:***
*கிறிஸ்துவைக் குறித்த செய்திகள் காணப்படும் வசனங்கள்:*
34:20; 69:4&9.
*கிறிஸ்து இயேசுவுக்கு நடக்க இருக்கும் நிகழ்வுகள்:*
*திருப்பாடல்* 22.
*கிறிஸ்து இயேசுவில் நிறைவேற இருப்பவை:*
*திருப்பாடல்* 2; 45; 72.
*கிறிஸ்து இயேசுவைக் குறிக்கும் இறைவெளிப்பாடு:*
*திருப்பாடல்* 110.
*இறையரசின் வருகையைக் குறித்த எதிர்பார்ப்பு:*
*திருப்பாடல்கள்* 96 ~ 99.

*இவை தவிர, புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவைக் குறித்து நிறைவேறிய இறைவாக்குகள் பல இருக்கின்றன; அவற்றை நாம் தொடர்ந்து சிந்திக்கலாம்.*

***நூலின் பகுப்பு:***
*திருப்பாடல்கள் எனும் இந்நூலை, ஐந்து தொகுதிகளாகப் பிரிக்கலாம்:*
1. *திருப்பாடல்* 1 ~ 41
*இப்பகுதியில் பலவும், தாவீதின் திருப்பாடல்கள். அவருடைய அனுபவங்களையும், அவருக்குக் கடவுளோடு உள்ள உறவையும் விளக்கிப் பாடப்பட்டவை. "ஆண்டவர் என் ஆயர்" என்கிற சிறிய வசனம் இதனை நமக்கு உணர்த்துகிறது.*
2. *திருப்பாடல்* 42 ~ 72
*இந்த ஐந்து தொகுதிகளை, மோசேயின் ஐந்து நூல்களோடு ஒப்பிட்டுச் சொல்வதுண்டு; மற்ற நான்கு தொகுதிகளுக்கு அந்த ஒப்பீடு பொருந்துமோ இல்லையோ, இந்த இரண்டாம் தொகுதிக்கு விடுதலைப் பயணம் என்பது பொருந்தும். போராட்டங்கள், இன்னல்கள், தடைகள் - இவற்றிலிருந்து மீட்பை வேண்டுவோரின் குரலாக இப்பகுதி திகழ்கிறது: "என் கடவுளே! என் எதிரிகளினின்று என்னை விடுவித்தருளும்!"* (59:1).

3 திருப்பாடல் 73 ~ 89
இஸ்ரயேல் மக்களை மீட்டு, அவர்களுக்கு நீதி வழங்கிய கடவுளை நன்றியோடு துதித்துப் பாடிய திருப்பாடல்கள்; "யாக்கோபின் கடவுளைப் புகழ்ந்து ஏத்துங்கள்!" (81:1).

4 திருப்பாடல் 90 ~ 106
எப்போதும் மாறாத வழித்துணையாகவும், இஸ்ரயேல் மக்களின் பாதுகாவலராகவும், என்றும் திகழும் ஆண்டவரைத் துதிப்பதாக இந்தப் பாடல்கள் அமைகின்றன; "நீரே என் புகலிடம்; என் அரண்; நான் நம்பியிருக்கும் இறைவன்" (91:2). மேலும்"ஆண்டவர் ஆட்சி செய்கிறார்" என்பதும் இப்பகுதியில் காணப்படும் செய்தி ஆகும்.

5 திருப்பாடல் 107 ~ 150
எதிரிகளிடமிருந்து தங்களை விடுவித்துக் காத்த கடவுளுக்கு நன்றிகளை ஏறெடுத்துப் பாடப்பட்ட பாடல்கள் அடங்கிய பகுதி; "ஆண்டவரின் பெயரே நமக்குத் துணை! விண்ணையும் மண்ணையும் உண்டாக்கியவர் அவரே!" (124:8). நிறைவாக வரும் ஆறு திருப்பாடல்களும் (146 ~ 150) துதித்தலின் உச்சமாக விளங்குகின்றன.

நூலின் ஒவ்வொரு தொகுதியும் முடியும் போது, ஆண்டவரைத் துதிக்க விடப்பட்ட அழைப்போடும், ஆமென் என்கிற ஆமோதிப்போடும் நிறைவடைகிறது.

இறைவரின் உடன்படிக்கைப் பெயராகிய "யாவே" (ஆண்டவர் / கர்த்தர் / the LORD) நூலின் முதல் தொகுதி, நான்காம் தொகுதி, ஐந்தாம் தொகுதியிலும், பொதுப் பெயரான "எலோஹிம்" (கடவுள் / தேவன் / GOD) இரண்டு மற்றும் மூன்றாம் தொகுதிகளிலும் அதிகம் காணப்படுகின்றன.

ஒரே திருப்பாடலான 14ம், 53ம் முதல் தொகுதியிலும், இரண்டாம் தொகுதியிலும் இடம் பெற்றுள்ளதை வைத்து, இவ்விரு தொகுதிகளும் தனித் தனி நூல்களாக முன்னர் இருந்திருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ளலாம். அதேவேளையில், திருப்பாடல் 14ல் யாவே என்று உள்ள இறைவரின் பெயர், திருப்பாடல் 53ல் எலோஹிம் என்று இருப்பது, இவ்விரு தொகுதிகளும் தனித் தனி நூல்களாக இருந்ததை உறுதிப்படுத்துகிறது.

**திருப்பாடல் தலைப்புகள்:**
பெரும்பாலான திருப்பாடல்களுக்குத் தலைப்புகள் தரப்பட்டுள்ளன; அதோடு சிறிய விளக்கக் குறிப்புகளும் கொடுக்கப்பட்டுள்ளன. இவை கிறிஸ்து பிறப்பதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே கொடுக்கப்பட்டு, செப்டுவஜின்ட் என்னும் கிரேக்கப் பழைய ஏற்பாட்டிலும் வழங்கப்பட்ட ஒன்று. எஸ்ராவின் காலத்தில் இந்தத் தலைப்புகள் வழங்கப்பட்டனவா என்று தெரியவில்லை. தலைப்புகளின் வழியே, எழுதியவர், திருப்பாடலின் பின்னணி, இராகம், இசைக்கருவிகள் எவை எவை போன்ற செய்திகளை நாம் அறிகிறோம். ஒவ்வொரு திருப்பாடலுக்கும், அப்பாடலின் கருப்பொருளின் அடிப்படையில் திருவிவிலியம் வழங்கிய தலைப்பு, அடைப்புக்குறிகளுக்குள் தரப்பட்டுள்ளது. இது மூல நூலின் தலைப்பையும், திருவிவிலியம் தலைப்பையும் தனித்துப் பார்க்க உதவும்.

**நூல் மாந்தர்கள்:**
தாவீது, ஆசாப், கோராகின் புதல்வர்கள், சாலமோன், மோசே, ஏமான், ஏத்தான்.

**சிறப்பிடம் பெறும் நிகழ்வு:**
* இஸ்ரயேலின் மீட்பு
* மீட்பரின் வருகை குறித்த எதிர்பார்ப்பு

***பாடுபொருள்:***
*கடவுளாகிய ஆண்டவரின் நல்லியல்புகளும், அடியவருக்கு அவர் அருளும் ஆசிகளும்.*
***சிறப்பான சொல்:***
*துதி / ஸ்தோத்திரி*
***சிறப்பான வசனம்:***
"*என் கற்பாறையும் மீட்பருமான ஆண்டவரே! என் வாயின் சொற்கள் உமக்கு ஏற்றவையாய் இருக்கட்டும்; என் உள்ளத்தின் எண்ணங்கள் உமக்கு உகந்தவையாய் இருக்கட்டும்.*" (19:14)

***சிறப்பான திருப்பாடல்:***
*ஒன்றை மட்டும் சொல்வது கடினம். சிலவற்றைக் குறிப்பிட வேண்டுமென்றால், திருப்பாடல்கள்* 1; 2; 22; 23; 24; 27; 34; 37; 51; 72; 84; 91; 96; 100; 103; 111; 112; 113; 116; 119; 121; 127; 128; 133; 144; 145.

"*என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு! என் பாதைக்கு ஒளியும் அதுவே!*"

*ஆமென்.*

✝

# தொகுதி 1

**(திருப்பாடல் 1 முதல் திருப்பாடல் 41 முடிய)**

## 19 திருப்பாடல் 01

(நற்பேறு பெற்றோர்)

1 நற்பேறு பெற்றவர் யார்?
- அவர் பொல்லாரின் சொல்லின்படி நடவாதவர்;
பாவிகளின் தீயவழி நில்லாதவர்;
இகழ்வாரின் குழுவினில் அமராதவர்;
2 ஆனால், அவர் ஆண்டவரின் திருச்சட்டத்தில் மகிழ்ச்சியுறுபவர்;
அவரது சட்டத்தைப்பற்றி இரவும் பகலும் சிந்திப்பவர்;
3 அவர் நீரோடையோரம் நடப்பட்ட மரம் போல் இருப்பார்;
பருவகாலத்தில் கனிதந்து,
என்றும் பசுமையாய் இருக்கும் அம்மரத்திற்கு ஒப்பாவார்;
தாம் செய்வதனைத்திலும் வெற்றி பெறுவார்.
4 ஆனால், பொல்லார் அப்படி இல்லை;
அவர்கள் காற்று அடித்துச் செல்லும் பதரைப் போல் ஆவர்.
5 பொல்லார் நீதித் தீர்ப்பின்போது நிலைநிற்க மாட்டார்;
பாவிகள் நேர்மையாளரின் மன்றத்தில் இடம் பெறார்.
6 நேர்மையாளரின் நெறியை ஆண்டவர் கருத்தில் கொள்வார்;
பொல்லாரின் வழியோ அழிவைத் தரும்.

திருப்பாடல் 1:1-6

**சிந்தனைக்கு**

திருப்பாடல்கள் நூலின் முதல் பகுதியின் முதல் இரு திருப்பாடல்களும் தலைப்பற்றவை! எனவே, எழுதியவர் யார், எழுதப்பட்ட காலம் எது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியாது. ஆனால் எழுதப்பட்ட நோக்கத்தை நம்மால் புரிந்து கொள்ள முடியும்: நம்முன் வழிகள் இரண்டு உண்டு; ஆனால் மெய்யான வாழ்வுக்கு வழி ஒன்றே, அதைப் பற்றிப் பிடித்துக் கொண்டு வாழ்வதே மகிழ்ச்சியான வாழ்க்கை!

இவ்விரு திருப்பாடல்களையும் சேர்த்து வாசிக்கும்போது, ஒரு சிறப்பைக் காணலாம்:
"நற்பேறு பெற்றவர் யார்?" என்ற கேள்வியோடு முதலாம் திருப்பாடல் தொடங்கி, "அவரிடம் அடைக்கலம் புகுவோர் அனைவரும் பேறு பெற்றோர்!" என்று இரண்டாம் திருப்பாடல் நிறைவடைகிறது.

"நற்பேறு பெற்றவன் நானே" என்று உணர்ந்து, இவ்விரு திருப்பாடல்களை நம் ஒவ்வொருவருக்கும் சொந்தமாக ஆக்கிக் கொள்வோமா!
🕎

வசனம் 1:1-2
சிறிதிலிருந்து பெரிதிற்குச் சென்று நிலை கொள்ளும் பாவம் -
... நடத்தல்
... நிற்றல்
... அமர்தல்

அருமையான உருவகம் இங்கு அமைகிறது; நடவாமை, தீயவரின் சொல்லைப் பின்தொடர்ந்து செல்லாமை; நில்லாமை, தீய வழிகளில் நிலைபெறாமை; அமராமை, தீயோரின் கூட்டத்தில் சேராமை.

பொல்லாரின் சொல் கேட்டு நடப்பது என்பது, அவர்களின் தீய வழிகளைப் பற்றிக் கொண்டு, இறுதியில் அவர்களில் ஒருவனாக எவரையும் மாற்றிவிடும்.

அப்படியானால் நற்பேறு பெற்றவர் யார்?

ஆண்டவரின் திருச்சட்டத்தில் மகிழ்ச்சி அடைபவர் நற்பேறு பெற்றவர் (திருச்சட்டம், பார்க்க, 19:7-11) சடங்காகவோ, சம்பிரதாயமாகவோ, கடமையாகவோ அல்ல - ஆண்டவரின் திருச்சட்டமே நமது மனமகிழ்ச்சியாக!

திருச்சட்டத்தைக் கடைப்பிடித்து வாழும் போது, சோதனைகள் வரலாம், துன்பங்கள் நேரிடலாம்; ஆனால் திருச்சட்டத்தில் உறுதியாக இருப்பதே மனமகிழ்ச்சி!

திருச்சட்டத்தில் எப்படி உறுதியாக இருப்பது?
அதனையே நமது உள்ளத்தில், இரவும் பகலும் சிந்தித்துக் கொண்டு இருக்கும் போது, திருச்சட்டமே நமது வாழ்க்கையாக, நம்மை இயக்குவதாக மாறி விடும். மாந்தர்தம் உள்ளத்தனையது உயர்வு!

திருப்பாடல் 1:2
"சிந்தித்தல்" -
மூலமொழியில் haw-gaw என்பது, meditate, imagine, mourn, mutter, utter, speak, talk.
மேலும், 35:28, 37:30 & 71:24ல் எடுத்துரைத்தல், 77:12ல் தியானித்தல் என்றும் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதே எபிரேயச் சொல், எரேமியா 48:31ல் (எசாயா 16:7லிலும்), புலம்பல் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. எசாயா 31:4ல், சிங்கத்தின் கர்ஜனைக்கும் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. நீதிமொழிகள் நூலில், 8:7ல், பேசுதல் என்ற பொருளிலும், 15:28ல், எண்ணிப் பார்த்தல் (KJV, study) என்ற பொருளிலும், 24:2ல், நினைத்தல் (devising) என்ற பொருளிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

எல்லா வேளைகளிலும், உள்ளத்தில் நினைத்து, உதடுகளில் வெளிப்படுவதாக இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே, பைபிள் எடுத்துக் காட்டும் தியானம் / meditation என்பது தனித்து எங்கோ அமர்ந்து மனதிற்குள் முனகிக்கொண்டு இருப்பது அல்ல; அது கடவுளைக் குறித்து அல்லும் பகலும் நினைத்து மற்றவர்களிடம் நாம் உள்ளத்தில் பெற்றுக் கொண்டதை வெளிப்படுத்துவது.

வசனம் 1:3
மேலும், 92:12-14; எரேமியா 17:7-8.
திருச்சட்டத்தின்படி வாழ்வோர் -
நீரோடையோரம் நடப்பட்ட மரம் போன்றவர்கள்; அவர்கள் "நேர்மையின் தேவதாருகள்"; ஆண்டவர் மாட்சியுறுமாறு அவரே நட்டவர்கள் (எசாயா 61:3). பலுகிப் பெருகி பயன்தரப் படைக்கப்பட்ட நாம், அப்போது பருவ காலங்களில் தவறாது கனி தருவோராக, என்றும் பசுமையாக விளங்குவோம். திருச்சட்டத்தின் வழியில் நின்று, நாம் செய்யும் எதிலும் வெற்றி காண்போம். அதிலே கடவுளும் மனமகிழ்கிறார் (147:11).

வசனம் 1:4-5
ஆண்டவரின் திருச்சட்டத்தைக் கடைப்பிடிக்காத பொல்லாத மனிதர்களுக்கு என்ன நிகழும்?

அவர்கள் காற்றில் அடித்துச் செல்லும் பதர் போன்றவர்கள் (திருப்பாடல் 35:5). அவர்கள் நீதித் தீர்ப்பின் நாளிலே தண்டனைக்காகப் பிரித்து வைக்கப்பட்டவர்கள் (லூக்கா 3:17). நேர்மையாளரைக் கண்டு, எள்ளி நகையாடும் தீயோருக்கு, இறுதியில் நடப்பது இதுவே.

வசனம் 1:6

நேர்மையாளரை ஆண்டவர் நினைக்கிறார்; ஏனெனில், நம்மைத் தமது வழியில் அவரே தெரிந்து கொண்டார்; அதில் நம்மை அவரே நித்தமும் நடத்துகிறார்; தமது மேய்ப்பனின் கோலால் நம்மை நேரிய வழியில் நிலைநிறுத்துகிறார்; நாம் பேறு பெற்றோர், அதன் புகழ்ச்சியும் மாட்சியும் அவருக்கே உரியன!

## 19 திருப்பாடல் 02

(கடவுள் தேர்ந்து கொண்ட அரசர்)

1 வேற்றினத்தார் சீறி எழுவதேன்?
மக்களினங்கள் வீணாகச் சூழ்ச்சி செய்வதேன்?
2 ஆண்டவருக்கும்
அவர்தம் அருள் பொழிவு பெற்றவர்க்கும் எதிராகப்
பூவுலகின் அரசர்கள் அணிவகுத்து நிற்கின்றார்கள்;
ஆள்வோர் ஒன்றுகூடிச் சதிசெய்கின்றார்கள்;
3 'அவர்கள் பூட்டிய தளைகளைத் தகர்ப்போம்;
அவர்கள் வைத்த கண்ணிகளை
நம்மிடமிருந்து அறுத்தெறிவோம்' என்கின்றார்கள்.
4 விண்ணுலகில் வீற்றிருப்பவர் எள்ளி நகைக்கின்றார்;
என் தலைவர் அவர்களைப் பார்த்து ஏளனம் செய்கின்றார்.
5 அவர் சினமுற்று அவர்களை மிரட்டுகின்றார்;
கடுஞ்சினத்தால் அவர்களைக் கலங்கடிக்கின்றார்;
6 'என் திருமலையாகிய சீயோனில்
நானே என் அரசரைத் திருநிலைப் படுத்தினேன்.'
7 ஆண்டவர் ஆணையிட்டு உரைத்ததை நான் அறிவிக்கின்றேன்;
'நீர் என் மைந்தர்; இன்று நான் உம்மைப் பெற்றெடுத்தேன்.
8 நீர் விரும்புவதை என்னிடம் கேளும்;
பிறநாடுகளை உமக்கு உரிமைச் சொத்தாக்குவேன்;
பூவுலகை அதன் கடையெல்லைவரை
உமக்கு உடைமையாக்குவேன்.
9 இருப்புக் கோலால் நீர் அவர்களைத் தாக்குவீர்;
குயவன் கலத்தைப்போல அவர்களை நொறுக்குவீர்.'
10 ஆகவே, மன்னர்களே, விவேகமாக நடந்துகொள்ளுங்கள்;
பூவுலகை ஆள்வோரே, எச்சரிக்கையாயிருங்கள்.
11 அச்சத்தோடு ஆண்டவரை வழிபடுங்கள்;
நடுநடுங்குங்கள்! அவர்முன் அக மகிழுங்கள்!
12 அவர் சினங்கொள்ளாதபடியும்
நீங்கள் வழியில் அழியாதபடியும்
அவரது காலடியை முத்தமிடுங்கள்;

இல்லையேல்,
அவரது சினம் விரைவில் பற்றியெரியும்;
அவரிடம் அடைக்கலம் புகுவோர் அனைவரும் பேறுபெற்றோர்.

திருப்பாடல் 2:1-12

**சிந்தனைக்கு**

மேசியாவைக் குறித்த திருப்பாடல்களில் முதலில் அமைந்த திருப்பாடல். முதலாம் திருப்பாடல் தனிமனித ஒழுக்கம் சார்ந்த பாடல் என்றால், இரண்டாம் திருப்பாடல், நற்செய்தி அளிக்கும் திருப்பாடல்.

சிறுவன் தாவீது அரசானது, கடவுளின் தெரிந்தெடுப்பு - ஆனாலும் அவர் அரசரானது எளிதாக இல்லை. மேசியாவின் அரசாட்சி இங்கு முன்னறிவிக்கப்பட்டாலும், அதுவும் எதிர்ப்புகளை மேற்கொள்ள வேண்டும். இந்தப் பாடல், சாலமோன் இஸ்ரயேலின் அரசராக ஆனதைக் குறித்துப் பாடப்பட்டது என்று குறிப்பிடுவோர் உண்டு (பார்க்க, 1 குறிப்பேடு 17:11-14). ஆனால் இத்திருப்பாடலின் பொருளை ஆய்ந்து பார்த்தால், இது சாலமோன் அரசரான செய்திக்கும் மேலான செய்திகளைத் தருவதைக் கவனிக்க முடியும். தாவீதின் வழியில் மேசியா வருகிறார் என்பதையும் சேர்த்தே நாம் இத்திருப்பாடலைப் புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக வ.8 மற்றும் வ.11-12 எந்தவொரு மனிதரின் அரசாட்சிக்கும் பொருந்தாது என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். மேலும் இதனைத் திருப்பாடல் 110டு இணைத்து வாசிப்பது நமது புரிதலை மேம்படுத்தும். திருத்தூதர் பணிகள் நூலில் (4:25) பேதுருவும் யோவானும் இத்திருப்பாடலை தாவீது பாடியதாகக் குறிப்பிடுகின்றனர்.

வசனம் 2:1-3
மேசியாவின் அரசாட்சிக்குப் பூவுலகில் இருக்கும் எதிர்ப்பு.
மேசியாவை எதிர்ப்போர் யார்?
பூவுலகை ஆள்வோர் மட்டும் அல்ல, வேற்றின மக்களும் எதிர்க்கிறார்கள். ஆள்வோர் ஒன்று கூடிச் சதிசெய்து எதிர்க்கிறார்கள்.
யாரை எதிர்க்கிறார்கள்?
ஆண்டவரையும், அவர் அருட்பொழிவு செய்தவரையும் எதிர்க்கிறார்கள். சவுலும் அவரைச் சேர்ந்தவர்களும் தாவீதை எதிர்த்தது போல, ஏரோதும், பிலாத்தும், குருக்களும், பரிசேயரும், சதுசேயரும் கிறிஸ்துவை எதிர்க்கிறார்கள் (திருத்தூதர் பணிகள் 4:27). "என் ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல" என்று சொன்ன பிறகும், அன்றைய ஆட்சியாளர்கள் எதிர்த்தார்கள்!

எதிர்ப்பவர்கள் எப்படிப்பட்டோர்?
அவர்கள் எந்த ஒழுங்குக்கும் கட்டுப்படாதவர்கள்; நெறிமுறைகளின் வழியில் நடக்காதவர்கள்; திருச்சட்டத்தைத் தங்களுக்கு ஏற்றபடி வளைப்பவர்கள். ஆனால், மேசியாவால் ஆளப்படுவோர், அவரது கட்டுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும்; அது அன்பின் கட்டு; பாவத்திற்கு விலகி நிற்கும் கட்டு.

வசனம் 2:1
"வேற்றினத்தார்" -
go-ee, heathen: இந்தச் சொல் நீதித் தலைவர்கள் 2:21 மற்றும் திருப்பாடல் 10:16 வசனங்களிலும் இடம் பெறுகிறது. வேற்றினத்தார், வேற்று நாட்டார் என்று யூதர்கள் அல்லாத வேறு இன மக்களைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மாறாக, கானான் நிலத்தில்

வந்து குடியேறுமுன், இஸ்ரயேலரைக் குறிக்கவும் இதே சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது (யோசுவா 4:1 & 5:6). பொதுவாக, வேற்றின நாடுகள் என்ற பொருளில் இணைச் சட்டம் நூலில் (4:38) குறிப்பிடப்பட்டுள்ளது; அந்த நாடுகள் தீய பழக்கங்களை உடையவை என்று ஆண்டவர் உரைத்தார் (இணைச் சட்டம் 9:4-5).

ஆனாலும், வேற்றினத்தாருக்கு ஆண்டவர் நம்பிக்கை தருகிறார்; தமது பேரருளை அவர்களுக்கும் கிறிஸ்துவின் வழியாக வாக்களித்திருக்கிறார் (எசாயா 2:2-4, 11:10, 42:6).

வசனம் 2:2
ஆண்டவர் என்பது விண்ணகக் கடவுளையும், அருள்பொழிவு பெற்றவர் என்பது தாவீதின் வழியில் வரும் கிறிஸ்துவையும் குறிக்கும்.

வசனம் 2:4-5
எதிர்ப்புகளைக் கண்டு, விண்ணுலகில் வீற்றிருக்கும் பிரபஞ்சத்தின் அரசராகிய (அதி. 93) ஆண்டவர் நகைக்கின்றார்; அவர் பேராற்றல் மிக்கவர் (29:3-10); அவரே தம் மக்கள் எதிர்ப்புகளை மேற்கொள்ள, ஆற்றல் அளிக்கிறார் (29:11).
கடவுளின் சீற்றத்தை யாரால் அளவிட முடியும்?

வசனம் 2:6
எதிர்ப்புகளுக்கு மேலாகத் திருச்சபை கட்டப்பட்டு, அங்கிருந்து இறைவார்த்தை புறப்பட்டுச் செல்லும்; வேற்றினத்தாரும் தேடி அங்கு வந்து அவர்தம் வழியை ஏற்றுக் கொள்வார்கள் (எசாயா 2:2-3).
***
"திருமலையாகிய சீயோன்" -
ஆப்ரஹாம் தன் மகன் ஈசாக்கைப் பலியிட வந்த மோரியா மலை (தொடக்க நூல் 22:2); ஆண்டவரின் இல்லத்தை எழுப்ப, தாவீது தெரிந்து கொண்ட மலை (1 குறிப்பேடு 21:14-22:1).

வசனம் 2:7-9
பார்க்க, எபிரேயர் 1:5 & 5:5.
மேசியாவின் அரசாட்சியைப் பிரகடனப்படுத்தும் கடவுளின் ஆணை.
இது இறை ஆணை என்பதால், ஒருபோதும் மாற்ற முடியாதது. இதனை நிறைவேற்ற வேண்டும் என்பதே கடவுளின் விருப்பம் (யோவான் 6:39-40); கடவுளின் கட்டளை (யோவான் 10:18, 14:31).

வசனம் 2:7
"நீர் என் மைந்தர்" -
பார்க்க, மத்தேயு 3:17; மாற்கு 1:11; லூக்கா 3:22.

வசனம் 2:10-12
இவ்வுலகின் ஆட்சியாளர்களுக்கு எச்சரிக்கை.

வசனம் 2:12
"அவரது காலடியை" -
"(குமாரனது) காலடியை," OV.
வ.7ல், மகன் என்பதற்குப் பயன்படுத்தப்பட்ட எபிரேயச் சொல், ben என்பது; வ.12ல் பயன்படுத்தப்பட்ட சொல், அரமேயச் சொல்லான bar என்பது, இதற்கு வாரிசு என்பது பொருள். அரமேயம் இஸ்ரயேலில் மட்டுமல்லாமல், அதனைச் சுற்றியிருந்த நாடுகளிலும் பேசப்பட்ட

மொழி; இஸ்ரயேலின் அரசரைக் குறிப்பதாக அல்லாமல், எல்லா நாடுகளுக்குமான கிறிஸ்துவைக் குறிப்பதாக இது அமைகிறது.
***
"பேறு பெற்றோர்" யார்?
பார்க்க, 31:19.
கடவுளாகிய ஆண்டவரால் அருட்பொழிவு பெற்ற, கன்மலையும் கோட்டையுமாகிய கிறிஸ்துவிடம் அஞ்சி, அடைக்கலம் புகும் அனைவரும் பேறு பெற்றோர்!

✝

## 19 திருப்பாடல் 03

(காலை மன்றாட்டு)

*தாவீதின் புகழ்ப்பா: தன் மகன் அப்சலோமிடமிருந்து தப்பி ஓடிய போது அவர் பாடியது*
1 ஆண்டவரே, என் எதிரிகள் எவ்வளவாய்ப் பெருகிவிட்டனர்!
என்னை எதிர்த்து எழுவோர் எத்தனை மிகுந்து விட்டனர்!
2 'கடவுள் அவனை விடுவிக்கமாட்டார்' என்று
என்னைக் குறித்துச் சொல்வோர் பலர்.
(சேலா)
3 ஆயினும், ஆண்டவரே, நீரே எனைக் காக்கும் கேடயம்;
நீரே என் மாட்சி; என்னைத் தலைநிமிரச் செய்பவரும் நீரே.
4 நான் உரத்த குரலில் ஆண்டவரிடம் மன்றாடுகிறேன்;
அவர் தமது திருமலையிலிருந்து எனக்குப் பதிலளிப்பார்.
(சேலா)
5 நான் படுத்துறங்கி விழித்தெழுவேன்;
ஏனெனில், ஆண்டவரே எனக்கு ஆதரவு.
6 என்னைச் சூழ்ந்திருக்கும்
பல்லாயிரம் பகைவருக்கு நான் அஞ்சமாட்டேன்.
7 ஆண்டவரே, எழுந்தருளும்;
என் கடவுளே, என்னை மீட்டருளும்;
என் எதிரிகள் அனைவரையும் கன்னத்தில் அறையும்!
பொல்லாரின் பல்லை உடையும்!
8 விடுதலை அளிப்பவர் ஆண்டவர்;
அவர்தம் மக்களுக்கு ஆசி வழங்குவாராக!
(சேலா)

திருப்பாடல்கள் 3:1-8

**சிந்தனைக்கு**

தாவீதியத் திருப்பாடல்களில் முதல் திருப்பாடல்; நூலின் முதல் பகுதியில், 1, 2, 10, 33, ஆகியவை மட்டுமே தாவீதைத் தொடர்பு படுத்த முடியாத 4 திருப்பாடல்கள்.

தலைப்பு வழங்கப்பட்ட முதல் திருப்பாடல். இந்தத் தலைப்பு, திருப்பாடலின் வரலாற்றுப் பின்னணியைக் குறிப்பிடுகிறது; அதனை, 2 சாமுவேல் நூலின் அதி. 15 ~ 17ல் நாம் விரிவாக

வாசித்தோம். 2 சாமுவேல் 15:32-37ல், அப்சலோமின் திட்டங்களைக் குழப்பி விடவும், அவற்றைத் தனக்கு அறிவிக்கவும், தன்னோடு வர ஆயத்தமாக இருந்த ஊசாயை, தாவீது எருசலேமுக்குத் திருப்பி அனுப்புவதை நாம் வாசிக்கிறோம்; எந்த ஒரு செயலுக்கும் திட்டமிடல் இருந்தாலும், அது சரியான நேரத்தில், சரியான முறையில் நிறைவேற, கடவுளின் அருள் வேண்டும். தாவீது தந்திரமாகத் திட்டமிட்டாலும், கடவுளைச் சார்ந்து செயல்பட்டார் என்பதை இத் திருப்பாடல் நமக்குக் காட்டுகிறது.

தாவீதின் வாழ்க்கை நிகழ்வுகளைத் தலைப்புகளாகக் கொண்ட இன்னும் 13 திருப்பாடல்கள் உள்ளன (7; 18; 30; 34; 51; 52; 54; 56; 57; 59; 60; 63 & 142). இவற்றில் ஒன்று மட்டும், நூலின் ஐந்தாம் பகுதியிலும், ஏனையவை முதலிரு பகுதிகளிலும் அமைந்துள்ளன.

தலைப்பில் "புகழ்ப்பா" / Psalm என்று சொல்லப்பட்டுள்ளது; இதற்கான எபிரேயச் சொல் miz-more என்பது; தலைப்புகள் தரப்பட்டுள்ள திருப்பாடல்களில், 57 திருப்பாடல்கள், மிஷ்மோர் / புகழ்ப்பா என்று சொல்லப்பட்டுள்ளன. (அவை: 3,4,5,6; 8,9; 12,13; 15; 19,20,21,22,23,24; 29,30,31; 38,39,40,41; 47,48,49,50,51; 62,63,64,65,66,67,68; 73; 75,76,77; 79,80; 82,83,84,85; 87,88; 92; 98; 100,101; 108,109,110; 139,140,141;143.) தெஹில்லிம், அதாவது துதிகள் என்ற இந்த நூலில், 57 துதிகள் மிஷ்மோர் / புகழ்ப்பா வகையைச் சேர்ந்தவை. வேறு வகைப் பாடல்களும் உள்ளன - அவற்றை அவ்வப் பாடலின் போது பார்ப்போம்.

வசனம் 3:1-2

தாவீதின் புலம்பல்.

அப்சலோம் தனியாகத் தன் தந்தை தாவீதை எதிர்க்கவில்லை; தாவீதின் அரச அவையில் இருந்த சிலரும், இஸ்ரயேலின் படைத் தலைவர்கள் பலரும், சவுலின் பொருட்டு அரசரை எதிர்த்தோரும் இப்போது அப்சலோமோடு சேர்ந்து கொண்டு, அவரை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து, தங்கள் சூழ்ச்சியில் வென்று விட்டனர். நண்பர்களாக இருந்தோர் எதிரிகளாக மாறி, தாவீதின் கதையை முடித்து விட்டதாகக் கொக்கரித்தனர்; தாவீதின் மீது கடவுளுக்கு இருந்த அன்பைப் புரிந்து கொள்ளாமல், கடவுள் தாவீதை விடுவிக்க மாட்டார் என்று இறுமாப்பு அடைந்தனர். இது அவர்கள் கடவுளை எந்த அளவுக்கு அறிந்திருந்தனர் என்பதைக் காட்டுகிறது!

கடவுளால் அருட்பொழிவு செய்யப்பட்டவர் தாவீது அரசர் என்பதும், "அருட்பொழிவு பெற்றவரும்" துன்பங்களைக் கடக்க வேண்டும் என்பதும், இறுதியில், மரணத்தை வென்ற கிறிஸ்துவைப் போல, தாவீதும் வெற்றி பெறுவார் என்பதும் நாம் அறிய வேண்டிய செய்தி.

"செலா" -

seh-law; குறிப்பிட்ட பொருள் ஏதும் இல்லை; புகழ்ந்தேத்துதல் அல்லது தூக்கலான இசை; பாடலின் இடை இசை அல்லது பாடலின் இடையே ஓர் இடைவெளி. திருப்பாடல்கள் நூலில் காணப்படும், இசையைக் குறிக்கும் இச்சொல், 71 முறை இடம்பெறுகிறது. இதுதவிர, அபக்கூக்கின் மன்றாட்டு எனப்படும் அபக்கூக்கு 3ம் அதிகாரத்தில் 3 முறை இந்தச் சொல் இடம்பெறுகிறது.

வசனம் 3:2

இணை, 71:10-11.

வசனம் 3:3-4

ஆண்டவர் மீது தாவீதுக்கு உள்ள உறுதியான நம்பிக்கையை அவர் இங்கு அறிக்கையிடுகிறார்.

"ஆயினும் ஆண்டவரே!" -
தாவீதின் கவனம் ஆண்டவர் மீது, தனது துன்பங்கள் மீது அல்ல. உலகோர் பகைத்தாலும், ஆண்டவரே தாவீதின் கேடயம்; அவரின் மாட்சி; அவரின் மீட்பர்.

உலகோரை நினைக்கும் போது மனதில் எழும் துயரம், ஆண்டவரின் கடந்த கால ஆசிகளை நினைக்கும் போது, நம்பிக்கையாக மாறுகிறது!

நமது எண்ணங்கள் நமது துன்பங்களைச் சுற்றி இருக்கிறதா? அல்லது கடந்த காலத்தில் கடவுள் நமக்குச் செய்த அருஞ்செயல்களைத் தழுவி இருக்கிறதா?

நம்பிக்கையோடு மன்றாடிய தாவீது, சீயோன் மலையிலிருந்து ஆண்டவர் தனக்குப் பதிலளிப்பார் என்று நம்பினார்.

வசனம் 3:5-6
அமைதலான உறக்கம், நம்பிக்கையின் வெளிப்பாடு. உங்களால் உறங்க முடிகிறதா?

அரண்மனையையும், அரண்சூழ் நகரையும் துறந்து, எங்கு தங்குவோம் என்ற நிச்சயமின்றி, அவ்விடத்தில் தனக்கும் தன்னோடு வருவோருக்கும் ஏற்ற பாதுகாப்பு இருக்குமா என்ற உறுதியின்றிப் பயணத்தில் இருக்கும் தாவீது சொல்கிறார், "நான் படுத்து உறங்கி, விழித்து எழுவேன்" - ஆண்டவரில் எத்துணை நம்பிக்கை!
நமக்கோ, உண்ண உணவும், இருக்க இடமும், ஆறுதலுக்கு உறவுகளும் உடன் இருந்தாலும், நமது வாழ்வில் ஏற்படும் சிறிய சலனமும் அமைதியைக் குலைக்கிறது! நம்பிக்கையின் படிக்கட்டுகளில் நாம் எங்கே இருக்கிறோம்?

"நான் அஞ்ச மாட்டேன்" -
23:4. 27:3, 118:6.
ஆண்டவரை அடைக்கலமாகக் கொண்ட நாம் எதற்கு / யாருக்கு அஞ்ச வேண்டும்?

வசனம் 3:7-8
தாவீதின் மன்றாட்டு.
பதில் பெறுவேன் என்ற நம்பிக்கையின் மன்றாட்டு; விடுதலை அளிப்பவர் ஆண்டவர்; தாவீதுக்கு மட்டும் விடுதலை அல்ல; கடவுளின் மக்கள் அனைவருக்கும் விடுதலை வழங்கி ஆசி வழங்குபவர் ஆண்டவர்!

வசனம் 3:7
"ஆண்டவரே... கடவுளே..." -
"கடவுளாகிய ஆண்டவர்" என்பது இறைப் பெயர்களை இணைத்துப் பொதுவாக பைபிளின் பல இடங்களில் வழங்கப்பட்டுள்ளது; இங்கு கவித்துவமாக, இரண்டும் ஒரே வாக்கியத்தின் இரு இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

"பல்லை உடையும்" -
காட்டு விலங்குகளோடு தனது எதிரிகளைத் தாவீது ஒப்பிட்டாரோ?

"விடுதலை அளிப்பவர் ஆண்டவர்" -
பல திருப்பாடல்களின் இறுதியான, உறுதியான கருத்து இதுவே. சான்றாக, 6:8-10, 10:16-18, 12:7, 13:5-6....

"ஆசி வழங்குவாராக" -
1:1லும், 2:12லும், ஆசி என்பதற்கு eh-sher என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது; ஆனால் இங்கு, ber-aw-kaw என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது; ஆசி / எசேர் என்பது மகிழ்ச்சி; பெராக்கா / ஆசி என்பது நிறைவான மகிழ்ச்சி!
ஆப்ரஹாமுக்கு கடவுள் வழங்கிய ஆசி போல (தொடக்க நூல் 12:2)!
🕎

தொல்லைகள், கவலைகள், துயர்கள் நம்மை எல்லாத் திசைகளிலுமிருந்தும் நெருக்கலாம்; அவைகளிலிருந்து நம்மைப் பாதுகாப்பவர், அவைகளை எதிர்கொள்ள நமக்கு ஆற்றல் தருபவர், தமது பேரன்பால் நம்மைச் சூழ்ந்து கொள்பவர், நமது கடவுள். எனவே துன்பங்களை எண்ணிச் சோர்ந்து விடாமல், அவற்றில் மூழ்கி விடாமல், மன்றாட்டோடு கடவுளைப் பற்றிக் கொள்ள வேண்டும்; மன்றாட்டுக்கு மறுமொழி தருபவர் கடவுளே! அவரே நமது சார்பாகச் செயல்படுபவர். அவரிடம் அடைக்கலம் புகுதல், நமக்கு அமைதியையும் தீர்வையும் தருகிறது; இம்மட்டும் நம்மைக் காத்தவர், இனியும் நம்மைக் காத்து வழிநடத்துவார்.
ஆமென்!

✝

## 19 திருப்பாடல் 04

(மாலை மன்றாட்டு)

*பாடகர் தலைவர்க்கு; நரம்பிசைக் கருவிகளுடன்; தாவீதின் புகழ்ப்பா*
1 எனக்கு நீதி அருள்கின்ற கடவுளே,
நான் மன்றாடும்போது எனக்குப் பதிலளித்தருளும்;
நான் நெருக்கடியில் இருந்தபோது, நீர் எனக்குத் துணைபுரிந்தீர்;
இப்போதும் எனக்கு இரங்கி,
என் வேண்டுதலுக்குச் செவிசாய்த்தருளும்;
2 மானிடரே!
எவ்வளவு காலம் எனக்குரிய மாட்சிக்கு
இழுக்கைக் கொண்டு வருவீர்கள்?
எவ்வளவு காலம் வெறுமையை விரும்பிப்
பொய்யானதை நாடிச் செல்வீர்கள்?
(சேலா)
3 ஆண்டவர் என்னைத் தம் அன்பனாகத் தேர்ந்தெடுத்துள்ளார்;
நான் மன்றாடும் போது அவர் எனக்குச் செவி சாய்க்கின்றார்;
-இதை அறிந்துகொள்ளுங்கள்.
4 சினமுற்றாலும் பாவம் செய்யாதிருங்கள்;
படுக்கையில் உங்கள் உள்ளத்தோடு பேசி அமைதியாயிருங்கள்.
(சேலா)
5 முறையான பலிகளைச் செலுத்துங்கள்;
ஆண்டவரை நம்புங்கள்.
6 'நலமானதை எங்களுக்கு அருள யார் உளர்?'
எனக் கேட்பவர் பலர்.
ஆண்டவரே,

*எங்கள்மீது உமது முகத்தின் ஒளி வீசும்படிச் செய்தருளும்.*
7 *தானியமும் திராட்சையும்*
*நன்கு விளையும் காலத்தில் அடையும் மகிழ்ச்சியைவிட*
*மேலான மகிழ்ச்சியை நீர் என் உள்ளத்திற்கு அளித்தீர்.*
8 *இனி, நான் மன அமைதியுடன் படுத்துறங்குவேன்;*
*ஏனெனில், ஆண்டவரே, நான் தனிமையாயிருந்தாலும்*
*நீரே என்னைப் பாதுகாப்புடன் வாழச் செய்கின்றீர்.*

திருப்பாடல் 4:1-8

**சிந்தனைக்கு**

*தலைப்பு தரும் தகவல்கள், முந்தைய திருப்பாடல் போலவே, தாவீதின் புகழ்ப்பா; இசைக் குறிப்புகளைத் தலைப்பில் கொண்ட முதல் திருப்பாடல் - நரம்பிசைக் கருவிகளுடன் இசைக்க, பாடகர் தலைவரிடம் கொடுக்கப்பட்டது.*

*தலைப்பில் காணப்படும் ஒரு சொல், நெகிநா* (neg-ee-naw), *பாடல் என்றும் பொருள்படும், நரம்பிசைக் கருவி என்றும் பொருள்படும். ஒருமையில், பாடல் என்ற பொருளில், யோபு* 30:9, *திருப்பாடல்* 69:12, 77:6 *வசனங்களிலும், நரம்பிசைக் கருவி என்ற பொருளில், திருப்பாடல்* 61:1*லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. பன்மையில்* (neg-ee-nath, *நெகிநாத்*) *நரம்பிசைக் கருவிகள் என்ற பொருளில், திருப்பாடல்* 4:1, 6:1, 54:1, 55:1, 67:1 & 76:1 *தலைப்புகளிலும், அபக்கூக்கு* 3:19*ன் குறிப்பிலும், பாடல்கள் என்ற பொருளில், எசாயா* 38:20*லும் வழங்கப்பட்டுள்ளது. பாடல் என்றோ, கருவி என்றோ இல்லாமல், இசை / இசைத்தல் என்ற பொருளில் புலம்பல்* 5:14*ல் எடுத்தாளப்பட்டுள்ளது.*

*வரலாற்றுக் குறிப்பு ஏதும் இல்லை; அதேவேளையில், வ.*6-7*ன் அடிப்படையில், வறட்சியான ஒரு காலத்தில், உயர்குடி மக்கள் தங்கள் பொல்லாத வழிகளை விட்டு விட்டு, ஆண்டவரிடம் திரும்ப* (*வ.*2-5) *தாவீது அழைப்பதாகச் சில வேத ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.*

*மூன்றாம் திருப்பாடலோடு இணையாகவும், பொருந்திப் போவதாகவும், அதன் கருத்துகளை நிறைவு செய்வதாகவும் இத்திருப்பாடல் அமைந்துள்ளது –*
"*மாட்சி*" (3:3 & 4:2),
"*உறக்கம்*" (3:5 & 4:8),
"*செலா*" (3:2, 3:4, 3:8 & 4:2, 4:4 *வசனங்களுக்குப் பிறகு*).

3:2*ல் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலாக,* 4:3 *அமைகிறது.*

*வ.*4 & 8*ன் அடிப்படையில், இது மாலை நேர மன்றாட்டு என்று சொல்லப்படுகிறது. "இரவின் மடியில்" நாம் பாட வேண்டிய திருப்பாடல்.*

*வசனம்* 4:1
"*எனக்கு இரங்கி*" -
*இந்நூலில், தாவீது உட்பட, அனைவரின் கூக்குரலும், கடவுளின் இரக்கத்தை நாடுவதாக இருக்கிறது. யோபைப் போல, நீதி வேண்டி வழக்காடுவது அல்ல, இரக்கத்தை வேண்டி மன்றாடுவதே கடவுளிடம் நாம் செய்யக் கூடிய செயல். சிக்கல் எழும்போது, மனத் தாழ்மையோடு கடவுளை நாடுவதில் நாம் எவ்வளவு விரைவாகச் செயல்படுகிறோம்?*

வசனம் 4:2
"எவ்வளவு காலம்" -
துன்பம் நேரிடும் வேளைகளில் எல்லாம், நமது கேள்வி இதுதானே!

இங்கு தாவீது தனது எதிரிகளை நோக்கி இந்தக் கேள்வியை வைக்கிறார்.

"எனக்குரிய மாட்சி" -
பற்றுறுதி கொண்ட எவருக்கும், மாட்சி என்பது கடவுளோடு இணைந்து வாழும் ஐக்கியத்தில் உள்ளது.

வசனம் 4:3
"தேர்ந்தெடுத்துள்ளார்" -
இத்திருப்பாடலின் மையக்கரு, கடவுளின் தெரிந்தெடுத்தலே! தமக்கும், தமது வழிகளிலும், உண்மையுள்ளவனாக விளங்க, தாவீதைக் கடவுள் தெரிந்து கொண்டார்.

வ.2ல் தனது எதிரிகளை "மானிடரே" என்று உலகோரைக் குறிப்பிட்ட தாவீது, இங்கு ஆண்டவரின் அன்பனாகத் தான் தெரிந்து கொள்ளப்பட்டதைக் குறிப்பிடுகிறார்.

நாம் நமது வாழ்வில், கடவுளுக்கும் கடவுளின் வழிகளிலும், உண்மையுள்ளவர்கள் என்றால், நாமும் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களே!

வசனம் 4:4-5
தனது எதிரிகளுக்கு அரசர் தாவீதின் ஆலோசனைகள்; அவ்வாறு சொல்வதைவிட, நமக்கு அவர் வழங்கும் ஆலோசனைகள்!
* சினமுற்றாலும், பாவம் செய்யாதிருங்கள்! (எபேசியர் 4:26)
* படுக்கையில் உங்கள் உள்ளத்தோடு பேசி, அமைதியாயிருங்கள்!
* ஆண்டவரை நம்புங்கள்! நம் எதிரிகளின் கண் முன்னே நமக்கு ஒரு பந்தியை ஆயத்தம் செய்பவர் அவர் அல்லவா!
* அவர் நமக்குக் கற்பித்த நீதியின் பலிகளைத் தாழ்ச்சியோடும் கீழ்ப்படிதலோடும் செலுத்துங்கள்!

வசனம் 4:6-8
துதி, நன்றி, மன்றாட்டு!

வசனம் 4:6
"உமது முகத்தின் ஒளி" -
ஆரோனியக் குருத்துவ ஆசி! "ஆண்டவர் தம் திருமுகத்தை உன்மேல் ஒளிரச் செய்து, உன்மீது அருள் பொழிவாராக!"
(எண்ணிக்கை 6:25).

வசனம் 4:7
"தானியமும் திராட்சையும்" -
கடவுள் அருளும் ஆசியே, நிலத்தின் செழிப்பு! ஏற்ற வேளையில் பொழியும் மழையும், நல்ல விளைச்சலும் அவரால் கிடைக்கிறது.

இவை அனைத்தும் கிடைக்கும் போது நாம் பெறும் வெளிப்புறமான மகிழ்ச்சியை விடவும் மேலான மகிழ்ச்சி, ஆண்டவர் நமது உள்ளத்திற்குத் தரும் மகிழ்ச்சி.

வசனம் 4:8
"*மன அமைதியுடன் உறங்குதல்*" -
*பார்க்க,* 3:5. *அங்கு, பல்லாயிரம் எதிரிகளைக் குறிப்பிட்ட தாவீது, இங்கு தனது தனிமையைக் குறிப்பிடுகிறார். எந்த நிலையில் இருந்தாலும், நமது பாதுகாப்பு ஆண்டவரிடம் மட்டுமே உள்ளது. எனவே நாம் மன அமைதியோடு படுத்து உறங்குவோம்!*
*ஆண்டவரே என் கேடயம், என் அரண், என் பாதுகாப்பு, என் மகிழ்ச்சி என்று சொல்லும் வகையில், திருப்பாடல்கள்* 3*ம்* 4*ம் நம் வாழ்விற்கு ஒரே நல் ஆலோசனையை வழங்குகின்றன.*

✝

## 19 திருப்பாடல் 05

(பாதுகாப்புக்காக மன்றாடல்)

*பாடகர் தலைவர்க்கு; குழல்களுடன்; தாவீதின் புகழ்ப்பா*
1 *ஆண்டவரே,*
*என் விண்ணப்பத்திற்குச் செவி சாய்த்தருளும்;*
*என் பெருமூச்சைக் கவனித்தருளும்.*
2 *என் அரசரே, என் கடவுளே,*
*என் கெஞ்சும் குரலை உற்றுக்கேளும்; ஏனெனில்,*
*நான் உம்மை நோக்கியே மன்றாடுகின்றேன்.*
3 *ஆண்டவரே, விடியற்காலையில் என் குரலைக் கேட்டருளும்;*
*வைகறையில் உமக்காக வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பேன்.*
4 *ஏனெனில்,*
*நீர் பொல்லாங்கைப் பார்த்து மகிழும் இறைவன் இல்லை;*
*உமது முன்னிலையில் தீமைக்கு இடமில்லை.*
5 *ஆணவமிக்கோர் உமது கண்முன் நிற்க மாட்டார்;*
*தீங்கிழைக்கும் அனைவரையும் நீர் வெறுக்கின்றீர்.*
6 *பொய் பேசுவோரை நீர் அழித்திடுவீர்;*
*கொலை வெறியரையும் வஞ்சகரையும் அருவருக்கின்றீர்.*
7 *நானோ உம் பேரருளால் உமது இல்லம் சென்றிடுவேன்;*
*உம் திருத்தூயகத்தை நோக்கி*
*இறையச்சத்துடன் உம்மைப் பணிந்திடுவேன்;*
8 *ஆண்டவரே,*
*எனக்குப் பகைவர் பலர் இருப்பதால்,*
*உமது நீதியின் பாதையில் என்னை நடத்தும்;*
*உமது செம்மையான வழியை எனக்குக் காட்டியருளும்.*
9 *ஏனெனில், அவர்கள் வாயில் உண்மை இல்லை;*
*அவர்கள் உள்ளம் அழிவை உண்டாக்கும்;*
*அவர்கள் தொண்டை திறந்த பிணக்குழி;*
*அவர்கள் நா வஞ்சகம் பேசும்.*
10 *கடவுளே,*
*அவர்களின் குற்றங்களுக்குரிய தண்டனையை*
*அவர்களுக்கு அளியும்;*
*அவர்கள் தங்கள் சூழ்ச்சிகளாலேயே வீழ்ச்சியுறட்டும்;*
*அவர்களுடைய ஏராளமான தீச்செயல்களை முன்னிட்டு,*

அவர்களைப் புறம்பே தள்ளிவிடும். ஏனெனில்,
அவர்கள் உம்மை எதிர்த்துள்ளார்கள்.
11 ஆனால், உம்மிடம் அடைக்கலம் புகுவோர்
அனைவரும் மகிழ்வர்;
அவர்கள் எந்நாளும் களித்து ஆர்ப்பரிப்பர்;
நீர் அவர்களைப் பாதுகாப்பீர்;
உமது பெயரில் பற்றுடையோர் உம்மில் அக்களிப்பர்.
12 ஏனெனில், ஆண்டவரே,
நேர்மையாளர்க்கு நீர் ஆசிவழங்குவீர்;
கருணை என்னும் கேடயத்தால் அவரை மறைத்துக் காப்பீர்.

திருப்பாடல் 5:1-12

**சிந்தனைக்கு**

பாடகர் தலைவர்க்கு அளிக்கப்பட்ட திருப்பாடல்; தாவீதின் புகழ்ப்பா; காற்றிசைக் கருவி / குழலில் இசைக்க ஒப்புவிக்கப்பட்டது. தலைப்பில் nekh-ee-law நெகிலா என்ற ஒருமைச் சொல் உள்ளது (பன்மை, நெகிலொத்); இதனை இசைக்கருவி என்றும் குழல் என்றும் கருதுகின்றனர். மெல்லிசைப் பாடலைக் குறிப்பதாகவும் இருக்கலாம். இந்த ஓரிடத்தைத் தவிர, பைபிளில் வேறு எங்கும் இந்தச் சொல் இடம் பெறவில்லை. பாடலைக் குறித்த வரலாற்றுத் தகவல் எதுவும் இல்லை.

அமைப்பு:
வ.1-3, மன்றாட்டு
வ.4, புகழ்ச்சி
வ.5-6, ஆண்டவர் வெறுக்கும் மனிதர்
வ.7, இறையச்சம்
வ.8-10, மன்றாட்டு
வ.11-12, பற்றுறுதி கொண்டோருக்கு ஆண்டவரிடம் கிடைக்கும் களிப்பு.

வ.3ன் அடிப்படையில், இது ஒரு காலை மன்றாட்டுப் பாடல்.

வசனம் 5:1-3
உறங்கும் போது ஆண்டவரை வேண்டுவதைப் போலவே (3:5, 4:8), விழிக்கும் போதும் துதியோடு, கடவுளைக் குறித்த எண்ணத்தோடு எழுதலைத் தாவீது இங்குக் குறிப்பிடுகிறார்.

எழுதல் என்பது விடியலுக்கு முன்பு எழுதல். இருளில் படுத்து இருளில் எழ வேண்டும்; எந்தக் காட்சியும் கண்ணுக்குப் புலப்படாத போது, இறைமாட்சியே உள்ளத்தில் உதிக்கும்.

உள்ளங்கையில் தொடுதிரையைப் பார்த்துக் கலைத்து உறங்கி, தொடுதிரையைப் பார்த்து விழிப்போமானால், தாவீதுக்கு இருந்த மனநிலையை நாம் ஒருபோதும் உணரமுடியாது.

வசனம் 5:1
"பெருமூச்சு" -
"தியானம்" - OV

எபிரேயச் சொல் haw-gheez, அனத்துதல், முணகுதல், முணுமுணுத்தல் என்று பொருள் படும். திருப்பாடல்கள் நூலில் மட்டும் தான் இந்தச் சொல் இருமுறை (5:1 & 39:3) இடம் பெற்றுள்ளது.

வசனம் 5:2
அரசனான தாவீது, பிரபஞ்சத்தை ஆளுகை செய்யும் விண்ணகக் கடவுளை, அரசர் என்று பலமுறை அழைக்கிறார் (44:4, 68:24, 74:12, 84:3).

வசனம் 5:3
"காத்திருப்பேன்" -
தனது மன்றாட்டின் குரலை ஆண்டவர் கேட்டு, அவர் தரும் மறுமொழிக்காக ஆவலுடன் தாவீது காத்திருக்கிறார்.

வசனம் 5:4
கடவுளின் பண்பு; அவர் நேரிய செயல்களில் மகிழ்கிறார்.

வசனம் 5:5-6
பார்க்க, 1:5
பொல்லாங்கு செய்வோர், தீயோர், ஆணவமிக்கோர் - அனைவரையும் கடவுள் வெறுப்பதால், அவர் முன் அத்தகையோர் நிற்க முடியாது.

"ஆணவமிக்கோர்" -
"haw-lal", போற்றுதல், துதித்தல், மகிமை, மாட்சி என்றும் பொருள் படும். வசனத்தின் பொருள் அடிப்படையில், ஆணவம் என்று சொல்லப்பட்டுள்ளது.

வசனம் 5:7
தாவீதின் வாழ்க்கையின் அடிப்படையாக அமைந்த பண்பை இங்கு நாம் பார்க்கிறோம்.

தாவீதோ கடவுள் முன் நிற்பதற்காக, அவரது இல்லத்திற்கு வருகிறார்; ஆணவமற்றவர் என்பதால் தாவீது கடவுளின் இல்லத்திற்கு வரவில்லை; மாறாக, கடவுளின் பேரருளால் அவரது இல்லத்திற்கு வருகிறார். கடவுளின் முன் நிற்பதற்கு தனது தகுதிகள் என்று எதையும் சொல்லாமல், கடவுளின் பேரருளையே அவர் சார்ந்து நிற்கிறார்.

ஆலயத்திற்கு நாம் எப்படிச் செல்கிறோம்?
ஆயராகவா?
கமிட்டி செயலாளராகவா?
கிறிஸ்தவன் என்பதாலா?
"ஓய்வு நாளில் ஆலயத்திற்குத் தவறாமல் செல்வேன்" என்பதற்காகவா?
எச்சரிக்கை! நமது வருகையை ஆண்டவர் அங்கீகரிக்க மாட்டார்!
மாறாக, கடவுளின் கிருபையைத் தேடி நாம் ஆலயத்திற்குச் செல்ல வேண்டும், தாவீதைப் போல!

"உமது இல்லம் / ஆலயம்" -
தாவீது இந்தப் பாடலை இயற்றிய போது, கடவுளுக்கென்று ஆலயம் எழுப்பப்படவில்லை. ஆனால், கடவுளின் ஆலயத்தின் மாட்சியை, பெரும் தோற்றத்தை தனது உள்ளத்தில் தரிசித்தவர், தாவீது. மாட்சிமை பொருந்திய மாபெரும் ஆலயத்திற்குத் தேவையான (1 குறிப்பேடு 22 ~ 27) கட்டுமானப் பொருட்களைச் சேகரித்து வைத்து, ஏற்பாடுகளைத் தன் காலத்திலேயே செய்தவர்

அவர் அல்லவா! எனவே கூடாரம் என்று சொல்லாமல், கடவுளின் இல்லம் என்றே அவர் சொல்கிறார்.

வசனம் 5:8-10
தாவீதின் மன்றாட்டு. இறையச்சத்தோடு நேரிய வழியில் செயல்படும் அவருக்கு எதிராக உள்ளோரை அவர் விளக்கமாக எடுத்துரைத்து, அவர்களின் வீழ்ச்சியை வேண்டுகிறார். ஆண்டவரின் எதிரிகள் என்பதாலேயே அவர்கள், தனது எதிரிகள் என்று தாவீது சித்தரிக்கிறார் (வ.10) - அந்த அளவுக்குத் தான் கடவுளின் வழியில் நடப்பதில் உறுதியோடு இருந்தார். தான் தனது சுய அறிவினாலும், ஆற்றலினாலும், கடவுளின் செம்மையான வழியில் நடப்பதாக எண்ணாமல், அது கடவுளின் அருள் என்கிறார் (வ.8).

வசனம் 5:9
"அவர்கள் தொண்டை திறந்த பிணக்குழி" -
தனது பகைவர்களை, கடவுளுக்கு எதிராகச் செயல்படுவோரை, தாவீது இவ்வாறு வருணிக்கிறார். இதே உவமையைப் பவுலடிகள் உரோமையர் 3:13ல் எடுத்தாளுகிறார்.

வசனம் 5:11-12
மகிழ்வர், களிப்பர், ஆர்ப்பரிப்பர் - யார்?
கடவுளிடம் அடைக்கலம் புகுவோர். ஏன்?
நேர்மையானவர்களைக் கருணை எனும் தமது கேடயத்தால் பாதுகாத்து, ஆண்டவர் ஆசி வழங்கி வழி நடத்துகிறார். அதனால் நாம் களி கூருவோம்!

✝

## 19 திருப்பாடல் 06

(இக்கட்டுக் காலத்தில் உதவுமாறு வேண்டல்)

*பாடகர்த் தலைவர்க்கு; நரம்பிசைக் கருவிகளுடன்; எட்டாம் கட்டையில்; தாவீதின் புகழ்ப்பா*

1 ஆண்டவரே,
என்மீது சினங்கொண்டு
என்னைக் கண்டியாதேயும்;
என் மீது கடுஞ்சீற்றங்கொண்டு
என்னைத் தண்டியாதேயும்.
2 ஆண்டவரே,
எனக்கு இரங்கும்;
ஏனெனில், நான் தளர்ந்து போனேன்;
ஆண்டவரே,
என்னைக் குணமாக்கியருளும்;
ஏனெனில், என் எலும்புகள்
வலுவிழந்து போயின.
3 என் உயிர் ஊசலாடுகின்றது;
ஆண்டவரே,
இந்நிலை எத்தனை நாள்?
4 ஆண்டவரே,
திரும்பும்;

என் உயிரைக் காப்பாற்றும்,
உமது பேரன்பை முன்னிட்டு
என்னை மீட்டருளும்.
5 இறந்தபின் உம்மை நினைப்பவர் எவருமில்லை;
பாதாளத்தில் உம்மைப் போற்றுபவர் யார்?
6 பெருமூச்சினால் இளைத்துப் போனேன்;
ஒவ்வோர் இரவும்
கண்ணீரில் என் படுக்கை மிதக்கின்றது.
என் கட்டில் அழுகையால் நனைகின்றது.
7 துயரத்தால் என் கண் வீங்கிப்போயிற்று;
என் பகைவர் அனைவரின் காரணமாக
அது மங்கிப்போயிற்று.
8 தீங்கிழைப்போரே!
நீங்கள் அனைவரும்
என்னை விட்டு அகன்று போங்கள்;
ஏனெனில், ஆண்டவர்
என் அழுகுரலுக்குச் செவி சாய்த்து விட்டார்.
9 ஆண்டவர் என் விண்ணப்பத்தைக் கேட்டருளினார்;
அவர் என் வேண்டுதலை ஏற்றுக்கொண்டார்.
10 என் எதிரிகள் யாவரும் வெட்கிப் பெரிதும் கலங்கட்டும்;
அவர்கள் திடீரென நாணமுற்றுத் திரும்பிச் செல்லட்டும்.

திருப்பாடல் 6:1-10

**சிந்தனைக்கு**

இத் திருப்பாடலின் தலைப்பில், ஒரு புதிய சொல் வருகிறது: shem-ee-neeth / ஷெமினித், என்ன பொருள் என்று தெரியாத நிலையில், இதற்கு இரண்டு விளக்கம் சொல்கிறார்கள்:
- எட்டு நரம்புகள் கொண்ட நரம்பிசைக் கருவி
- எட்டுக் கட்டையில் இசைக்க / பாட வழங்கப்பட்ட இசைக் குறிப்பு.

பழைய ஏற்பாட்டில், திருப்பாடல் 6 & 12 தலைப்புகளிலும், 1 குறிப்பேடு 15:21 வசனத்திலும் (உச்சத் தொனியில் சுரமண்டலம் வாசித்தல்) இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வரலாற்றுக் குறிப்பு ஏதும் இல்லை; பாடகர் தலைவர்க்கு அளிக்கப்பட்ட, தாவீதின் புகழ்ப்பா.

பிழை பொறுத்து அருள மன்றாடும் திருப்பாடல்களில் முதலாவது பாடல்; ஏனையவை:
32, 38, 51, 102, 130 & 143.
பிழை பொறுத்து அருள மன்றாடும் நிலை தாவீதுக்கு ஏன் வந்தது என்பதை நாம் அறியோம்; ஆனால் எச்சூழ்நிலையிலும் கடவுளை நாடும் தாவீதை நாம் இங்கே காண்கிறோம்.

அமைப்பு:
வ.1-5, மன்றாட்டு
வ.6-7, தளர்ச்சியும் கண்ணீரும்
வ.8-10, மன்றாட்டுக்கு மறுமொழி பெற்ற மனநிலை.
🕎

வசனம் 6:1-3
கடும் நோயினால் தாவீது பாதிக்கப்பட்டு இருந்திருக்க வேண்டும்; தன் உயிர் ஊசலாடுகிறது என்றும், இன்னும் எத்தனை நாள்கள் இப்படித் தொடரும் என்றும் அவர் அஞ்சுகிறார். தண்டனையை இம்மட்டும் ஏற்றுக் கொண்ட அவர், தன்மீது சினம் கொண்டு மேலும் தண்டியாமல், ஆண்டவர் தனக்கு இரங்கித் தன்னைக் குணமாக்க வேண்டுகிறார் (எரேமியா 10:24).

துயரம் எப்போதும் தனித்து, உடலுக்கோ உள்ளத்துக்கோ ஆவிக்கோ ஏற்படுவதில்லை; அது முழுமையாகத் துயருற்றவரைத் தாக்குகிறது. எனவே துயருற்றவரின் மீட்சியும் முழுமையாக இருக்க வேண்டும்; உடல் குணமடைய வேண்டும், உள்ளம் பண்பட வேண்டும், ஆவி உயிர்ப்படைய வேண்டும்.

நோயுற்ற பொழுதுகள், நம்மை நாமே ஆய்ந்து அறிய உதவும் காலங்கள். நமது உள்ளத்தை முழுவதுமாக ஆண்டவரிடத்தில் அர்ப்பணித்து, நமது குறைவுகளை அவருக்குள் நிறைவாக்கி நாம் புத்துயிர்ப்போடு மீண்டு வர அந்தக் நாள்களை நாம் பயன்படுத்துவோம்.

வசனம் 6:4-5
தனது கடினமான நிலையில் உடன்படிக்கையின் ஆண்டவர் தன்னை விட்டு விலகி நிற்பதை உணர்ந்து, கிருபையோடு தன்னைத் திரும்பிப் பார்க்குமாறு தாவீது மன்றாடினார்.

வசனம் 6:5
இணை, 30:9, 88:10-12, 115:17; எசாயா 38:18.
தான் உயிரோடு இருப்பதைத் தாவீது மிகவும் விரும்பினார் - எதற்காக என்றால், கடவுளைத் துதிப்பதற்கும், அவர் செய்த அருஞ்செயல்களைக் குறித்து நற்சாட்சி பகரவும் (94:17).

இவ்வுலகில் வாழ நாம் ஏன் விரும்புகிறோம்? கடவுள் அருளிய நமது வாழ்வின் நோக்கம் என்னவாக இருக்கிறது?
***
இன்னொரு உண்மையை நாம் அறிய வேண்டும்: இறந்தவுடன் நாம், அழியாத நாவுகளால் ஆண்டவரை எந்நேரமும் துதித்துக் கொண்டிருக்கப் போவதில்லை; நீதிமான்களின் ஆத்துமாக்கள் பாதாளத்தில் நியாயத்தீர்ப்பின் நாளுக்காக வைக்கப்பட்டிருக்கும்; அது ஆத்துமாக்களின் உணர்வற்ற உறக்கநிலை; அங்குத் துதித்தலும் களிப்பும் இருக்கும் என பைபிளில் சொல்லப்படவில்லை.

வசனம் 6:6-7
துயரில் மூழ்கிய தனது நிலையை ஆண்டவரிடம் தாவீது விளக்குகிறார். தன் பகைவர் என்று தாவீது குறிப்பிடுவோர் கடவுளின் நீதியின் வழியில் நடவாதோர் (5:5) என்பதால் அவர்களை தாவீது நினைப்பூட்டினார்.

உடல் தளர்வடையும் போது, கண்பார்வை மங்குகிறது, 31:9, 88:9.

வசனம் 6:8-10
மன்றாட்டின் போதே ஆண்டவரின் மறுமொழி கிடைத்து விட்டது; தாவீதின் பாடலின் போக்கு உடனே முற்றாக மாறுகிறது; நோய்ப் படுக்கையில் இருந்த அவர் உடனேயே தனது எதிரிகள் முன்பு வந்து விடவில்லை; அதனாலேயே வ.10 எதிர்காலத்தைக் குறித்த அறிவிப்பாக இருக்கிறது. கடவுளின் மறுமொழியின் நிச்சயத்தை அவர் தனது உள்ளத்தில் உணர்ந்தார்; இது ஓர் உன்னத அனுபவம்!

அப்படிப்பட்ட மன்றாட்டின் அனுபவத்தை ஆண்டவர் நம் ஒவ்வொருவருக்கும் தந்தருளுவாராக! ஆமென்.

✝

## 19 திருப்பாடல் 07

(நீதி வழங்குமாறு வேண்டல்)

*தாவீதின் புலம்பல்; பென்யமீனியனான கூசின் சொற்களைக் கேட்டுத் தாவீது ஆண்டவரை நோக்கிப் பாடியது*

1 என் கடவுளாகிய ஆண்டவரே,
உம்மிடம் அடைக்கலம் புகுந்தேன்;
என்னைத் துரத்துவோர் அனைவரிடமிருந்தும்
என்னைக் காப்பாற்றித் தப்புவியும்.
2 இல்லையெனில்,
என் எதிரிகள் சிங்கம்போல
என்னைப் பீறிக் கிழித்துப் போடுவார்கள்;
விடுவிப்போர் எவரும் இரார்.
3 என் கடவுளாகிய ஆண்டவரே,
நான் இவற்றைச் செய்திருந்தால் -
என் கை தவறிழைத்திருந்தால்,
4 என்னோடு நல்லுறவு கொண்டிருந்தவனுக்கு
நான் தீங்கிழைத்திருந்தால்,
என் பகைவனைக் காரணமின்றிக் காட்டிக்கொடுத்திருந்தால்-
5 எதிரி என்னைத் துரத்திப் பிடிக்கட்டும்;
என்னைத் தரையில் தள்ளி மிதித்து நசுக்கட்டும்;
என் பெருமையைப் புழுதியில் புதைக்கட்டும்.
(சேலா)
6 ஆண்டவரே,
சினங்கொண்டு எழுந்தருளும்;
என் பகைவரின் சீற்றத்தை அடக்க வாரும்;
எனக்காக விழித்தெழும்;
ஏனெனில்,
நீதியை நிலைநாட்டுபவர் நீர் ஒருவரே.
7 எல்லா இனத்தாரும் ஒன்றுகூடி
உம்மைச் சூழச் செய்யும்;
அவர்கள்மீது உயரத்தினின்று ஆட்சி செலுத்தும்.
8 ஆண்டவரே,
நீரே மக்களினத்தார்
அனைவருக்கும் நீதி வழங்குபவர்;
ஆண்டவரே,
என் நேர்மைக்கும் வாய்மைக்கும் ஏற்ப
எனக்குத் தீர்ப்பளியும்.
9 பொல்லாரின் தீமையை
முடிவுக்குக் கொண்டுவாரும்;

*நல்லாரை நிலைநிறுத்தும்;*
*நீர் எண்ணங்களையும் விருப்பங்களையும் கண்டறிபவர்;*
*நீதி அருளும் கடவுள்.*
10 *கடவுளே என் கேடயம்;*
*நேரிய உளத்தோரை அவர் விடுவிப்பார்.*
11 *கடவுள் நடுநிலை தவறாத நீதிபதி;*
*நாள்தோறும் அநீதியைப் பொறுத்துக் கொள்ளாத இறைவன்.*
12 *பொல்லார் மனமாற்றம் அடையாவிடில்,*
*அவர் தம் வாளைக் கூர்மையாக்குவார்;*
*வில்லை நாணேற்றி ஆயத்தம் செய்வார்.*
13 *கொலைக் கருவிகளை ஆயத்தமாக்குவார்;*
*அம்புகளை அனல் பறக்கும்படி எய்வார்;*
14 *ஏனெனில்,*
*பொல்லார் கொடுமையைக் கருக்கொள்கின்றனர்;*
*அவர்கள் தீவினையைக் கருத்தாங்கி,*
*பொய்மையைப் பெற்றெடுக்கின்றனர்.*
15 *அவர்கள் குழியை வெட்டி*
*ஆழமாகத் தோண்டுகின்றனர்;*
*அவர்கள் வெட்டிய குழியில்*
*அவர்களே விழுகின்றனர்;*
16 *அவர்கள் செய்த கேடு*
*அவர்கள் தலைக்கே திரும்பும்.*
*அவர்கள் செய்த கொடுமை*
*அவர்கள் உச்சந்தலையிலேயே விழும்.*
17 *ஆண்டவர் வழங்கிய நீதிக்காக*
*அவருக்கு நன்றி கூறுவேன்;*
*உன்னதரான ஆண்டவரின்*
*பெயரைப் போற்றிப்பாடுவேன்.*

திருப்பாடல் 7:1-17

**சிந்தனைக்கு**

இத்திருப்பாடலின் தலைப்பில் இரண்டு புதிய செய்திகள் உள்ளன. ஒன்று, ஷிக்கையோன் என்பது; இங்கு ஒருமையில் உள்ள சொல், அபக்கூக்கு 3:1ல் ஷிகியொனொத் என்று பன்மையில் உள்ளது. இவ்விரு பகுதிகளும் மன்றாட்டுகளாக உள்ளன. குறிப்பிட்ட பொருள் இந்தச் சொற்களுக்கு இல்லை; சூழலின் அடிப்படையில், கதறி மன்றாடுதல், அல்லது உரத்த குரலில் மன்றாடுதல் என்று பொருள் கொள்ளலாம்.

பைபிளில் ஒரே ஒரு கூஷ் என்பவன் மட்டுமே உண்டு. அவன் நோவாவுக்கு காம் வழிப் பேரன் (தொடக்க நூல் 10:6); இவன் தெற்கு நோக்கிச் சென்று ஆப்பிரிக்காவில் (எத்தியோப்பியா) வாழ்ந்தான்; அவன் வாழ்ந்த பகுதி கூஷ் என்றும் அவன் வழிமரபினர் கூஷியர் என்றும் அறியப்பட்டனர். ஆனால் இங்கு பென்யமீனியான கூஷ் என்று சொல்லப்பட்டுள்ளது; சவுல் அரசரும் பென்யமீனியர் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், தாவீதின் காலத்தில், சாமுவேல் மற்றும் குறிப்பேடு நூல்களில் கூஷ் என்ற பெயரில் ஒருவரும் இல்லை. தாவீதைக் குறித்துத் தனக்குத் தகவல் சொல்ல (1 சாமுவேல் 22:6, 23:19-25, 24:8-9, 26:1), சவுல் அரசர் ஆங்காங்கே சில தலைவர்களை ஒற்றர்களாக வைத்திருந்தார்; அவர்கள் தாவீதைக் குறித்துத் தவறான செய்திகளை சவுலுக்குத் தந்து, தாங்கள் ஆதாயம் பெற, இருவருக்கும் இடையே பகையை

*வளர்த்தனர்* (1 *சாமுவேல்* 24:8-9). *அப்படிப்பட்ட தலைவர்களில், இந்தப் பென்யமீனியான கூஷும் ஒருவனாக இருக்கலாம். சவுல் மிகவும் வன்மத்தோடு தாவீதை வேட்டையாட வந்திருக்க வேண்டும்; அதனால் தாவீதின் மன்றாட்டு கூக்குரலாக ஒலிக்கிறது.*

*அமைப்பு:*
*வ.*1-2, *மன்றாட்டு*
*வ.*3-5, *தனது குற்றமின்மையை வெளிப்படுத்துதல்*
*வ.*6-10, *கடவுளே நீதி வழங்க மன்றாட்டு*
*வ.*11-13, *கடவுளின் நீதியான செயல்கள் குறித்த விளக்கம்*
*வ.*14-16, *தீச்செயல்கள் குறித்த விளக்கம்*
*வ.*17, *துதித்தல் குறித்த பொருத்தனை*

*வசனம்* 7:1-2
*இளம் வயது தாவீதின் மேய்ப்பன் பணியிலிருந்தே, தாவீது சிங்கங்களை எதிர்கொண்டதுண்டு* (1 *சாமுவேல்* 17:34-36). *இறையருளால் சிங்கங்களை மேற்கொண்ட தாவீது, இப்போது அதனிலும் கொடிய தீயோரிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள கடவுளின் துணையை நாடினார்.*

*வேட்டையாடப்படுபவராகத் தாவீது தன் நிலையை வெளிப்படுத்துகிறார். அவருடைய எதிரிகள், சிங்கம் போல அவரை வேட்டையாடுகிறார்கள்; மறைவில் பதுங்கியிருக்கும் சிங்கம்* (10:9; 17:12); *கிழித்துக் குதறிப் போடும் சிங்கம்* (17:12); *சீற்றத்தோடு முழங்கி, விழுங்குவதற்கு வாயை அகலத் திறந்து கொண்டு பாயும் சிங்கம்* (22:13); *வெறி கொண்ட சிங்கம்* (57:4); *கொடூரமான பற்களை உடைய சிங்கம்* (58:6) - *இவ்வாறு திருப்பாடல்களில் தீங்கிழைப்போர் சிங்கத்தோடு ஒப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளனர். தீங்கின் மொத்த வடிவமான சாத்தானை, முழங்கும் சிங்கமாகப் பேதுரு* (1 *பேதுரு* 5:8) *கட்டமைக்கிறார்.*

*கடவுளாகிய ஆண்டவரே அல்லாமல், தன் எதிரிகளிடமிருந்து தன்னை விடுவிப்போர் வேறு எவரும் இல்லை என்று தாவீது உரைக்கிறார். கிறிஸ்து இயேசுவினாலன்றி சாத்தானை நாம் வெற்றி கொள்வது எப்படி?*

*வசனம்* 7:3-5
*எதிரிகள் துரத்தி வரும் அளவுக்குத் தன்னிடம் எந்தவொரு குற்றமோ, வஞ்சனையோ இல்லை என்று, தனது தீங்கின்மையைத் தாவீது வெளிப்படுத்தினார். கேள்விகளை எழுப்பித் தனது குற்றமற்ற தன்மையை எடுத்துரைத்தார்.*

*வசனம்* 7:2&5
"*என்னை*" -
"*என் ஆத்துமாவை*" - OV
"neh-fesh" *என்கிற எபிரேயச் சொல், ஆத்துமா, உயிர், சுயம்* (oneself) *என்று பொருள் படும். தாவீதுக்கு எதிராக, சவுல் எடுத்த முயற்சிகள் அவரைக் கொல்வதற்கே.*

*வசனம்* 7:6-8
*அனைத்துலகுக்கும் நீதி வழங்கும் ஆண்டவர்* (*தொடக்க நூல்* 18:25), *மண்ணுலகிற்கு நீதித் தீர்ப்பு வழங்க வரும் ஆண்டவர்* (1 *குறிப்பேடு* 16:33) - *தனது எதிரிகளுக்குத் தீர்ப்பு வழங்க அவரே வருமாறு தாவீது அழைக்கிறார்.*

வ.5ம் வ.8ம் ஒப்பிட்டுப் பார்க்கத் தக்கது. கேள்விகளை எழுப்பித் தன்னில் குற்றமிருந்தால் தண்டிக்கட்டும் என்று வாதிட்ட தாவீது, பிறகு தனது நேர்மைக்கு ஏற்ப தீர்ப்பளிக்க ஆண்டவரிடம் வேண்டுகிறார்.

வசனம் 7:9
நீதி அருளும் கடவுள், தனது ஓட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, தன்னை நிலைநிறுத்தத் தாவீது வேண்டினார்.

"எண்ணங்களையும், விருப்பங்களையும்" -
"இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையும்" - OV
"hearts and reins" - KJV
"hearts and minds" - many modern versions.

எபிரேயத்தில் hearts (லிப்பா) and reins (கில்யா) என்பது உள்ளார்ந்த மனிதனைக் குறிக்கும் பண்டைக் கால வழக்கு மொழி. பொருள் அமைந்துள்ள சூழலில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

வசனம் 7:10
தன்னைப் பாதுகாப்பவர் கடவுளே என்னும் பொருளில், "கேடயம்"; பார்க்க, 3:3.

வசனம் 7:11-13
நீதிபதியாகிய கடவுள் நீதியை அறிவிப்பவர் மட்டுமல்ல; நீதியை நிறைவேற்றுபவர். ஒருவர் அநீதியாக நடக்க நடக்க, கடவுள் தமது கொலைக் கருவிகளை ஆயத்தம் செய்வது போன்ற ஒரு தோற்றத்தை இங்கு தாவீது நிறுவுகிறார். அவரே தம்மைக் காப்பார் என்ற நம்பிக்கையைத் தாவீது வெளிப்படுத்துகிறார்.

வசனம் 7 11
"நாள்தோறும்" -
வருங்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று தமது தீர்ப்புகளை ஆண்டவர் சேர்த்து வைப்பதில்லை.

வசனம் 7:14-16
"கருக்கொள்தல்," "கருத்தாங்குதல்," "பெற்றெடுத்தல்" - பொல்லாரின் உள்ளத்தில், தீமை எவ்வாறு உருவாகிச் செயல்வடிவம் பெறுகிறது என்பதைத் தாவீது உருவகமாக விளக்குகிறார் (இணை, யோபு 15:35). தீமை தீயோர்க்கே தீங்காகிறது.

வசனம் 7:17
"உன்னதர்" -
"the Most High" -
"El-yone" -
கடவுளாகிய ஆண்டவரின் மற்றுமொரு திருப்பெயர்.
தொடக்க நூலிலிருந்து (14:18-22), பல இடங்களிலும் கடவுளின் இறையாண்மையைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது (சான்றாக, 47:2; இணைச் சட்டம் 32:8; தானியேல் 4:17).

இன்றைய துன்பங்களை எண்ணி வாழ்வது அல்ல; நாளைய ஆசிகளை எதிர்நோக்கிப் பொருத்தனையோடு வாழ்வதே வாழ்க்கை!

✝

## 19 திருப்பாடல் 08

(இறைவரின் மாட்சியும் மனிதனின் மேன்மையும்)

*பாடகர் தலைவர்க்கு; "காத்து" நகரப் பண்; தாவீதின் புகழ்ப்பா*
1 ஆண்டவரே!
எங்கள் தலைவரே!
உமது பெயர் உலகெங்கும்
எவ்வளவு மேன்மையாய் விளங்குகின்றது!
உமது மாட்சி
வானங்களுக்கு மேலாகவும் உயர்ந்துள்ளது.
2 பாலகரின் மழலையிலும்
குழந்தைகளின் மொழியிலும்
வலிமையை உறுதிப்படுத்தி
உம் பகைவரை ஒடுக்கினீர்;
எதிரியையும் பழிவாங்குவோரையும் அடக்கினீர்.
3 உமது கைவேலைப்பாடாகிய வானத்தையும்
அதில் நீர் பொருத்தியுள்ள
நிலாவையும் விண்மீன்களையும்
நான் நோக்கும்போது,
4 மனிதரை நீர் நினைவில் கொள்வதற்கு
அவர்கள் யார்?
மனிதப் பிறவிகளை
நீர் ஒருபொருட்டாக எண்ணுவதற்கு
அவர்கள் எம்மாத்திரம்?
5 ஆயினும்,
அவர்களைக் கடவுளாகிய உமக்குச்
சற்றே சிறியவர் ஆக்கியுள்ளீர்;
மாட்சியையும் மேன்மையையும்
அவர்களுக்கு முடியாகச் சூட்டியுள்ளீர்.
6 உமது கை படைத்தவற்றை
அவர்கள் ஆளும்படிச் செய்துள்ளீர்;
எல்லாவற்றையும்
அவர்கள் பாதங்களுக்குக்
கீழ்ப்படுத்தியுள்ளீர்.
7 ஆடுமாடுகள்,
எல்லா வகையான காட்டு விலங்குகள்,
8 வானத்துப் பறவைகள்,
கடல் மீன்கள்,
ஆழ்கடலில் நீந்திச் செல்லும் உயிரினங்கள்
அனைத்தையும் அவர்களுக்குக் கீழ்ப்படுத்தியுள்ளீர்.
9 ஆண்டவரே,
எங்கள் தலைவரே,
உமது பெயர் உலகெங்கும்
எவ்வளவு மேன்மையாய் விளங்குகின்றது!

திருப்பாடல் 8:1-9

**சிந்தனைக்கு**

சிறப்பான திருப்பாடல்களில் இதுவும் ஒன்று. படைப்பின் (தொடக்க நூல் 1) மாட்சியையும் மேன்மையையும் கொண்டாடும் ஒரு பாடல் (இதே பொருளில் மற்றொரு திருப்பாடல் 104). பிரபஞ்சத்தின் படைப்பை வியக்கும் அதேவேளையில், மானுடத்தின் மேன்மையைக் குறித்துப் பேசும் ஒரு பாடல்; இன்னும் சொல்லப் போனால், மனிதனை உயர்வாகப் பேசும் ஒரே பாடல். அதே சமயத்தில், எல்லாத் திருப்பாடல்களைப் போல, மானுடத்தை உயர்வாகப் படைத்த கடவுளைப் போற்றிப் பாடத் தவறவில்லை. தொடக்க நூல் 1:26-28ன் சிறப்பைக் கொண்டாடும் திருப்பாடல் என்று இதனைச் சொல்லலாம்.

திருப்பாடலின் தலைப்பில் ஒரு புதிய சொல் வருகிறது: காத்து நகர்ப் பண்; இந்த வார்த்தை OV / KJV / NIV / NRSV பதிவுகளில் கித்தித் (பெலிஸ்தியரின் காத்து நகரிலிருந்து?) என்று சொல்லப்பட்டுள்ளது. இந்தச் சொல்லின் பொருள் என்ன என்பதில் தெளிவில்லை; கித்தித் என்பதற்கு அழுத்தித் திராட்சை ரசமெடுத்தல் என்றும் பொருள் உண்டு; இரசமெடுப்போரின் பாடலா? மேலும் கித்தித் என்பதற்கு, இசைக்கருவி / இராகம் / பாடல் பாடும் விதம், என்று வெவ்வேறு விளக்கங்கள் உள்ளன. திருப்பாடல் 81 மற்றும் 84ன் தலைப்புகளிலும் இந்தச் சொல் காணப்படுகிறது.

அமைப்பு:
வ.1-2, துதி
வ.3-8, மேன்மையாக மனிதனைப் படைத்த ஆண்டவரை வணங்குதல்
வ.9 = வ.1
🕎

வசனம் 8:1
"எங்கள் தலைவரே!" -
எபிரேயத்தில், Aw-done; எஜமானர் / Master, தலைவர், அரசர், பிரபு (நில உடமையாளர்), ஆளுநர், கணவர் என்று பல பொருள்களில் இச்சொல் பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வசனம் 8:2
மிதக்கும் மேகங்களின் தோற்றத்தைக் கண்டு, அதற்குப் பெயர் கொடுக்கும் குழந்தைகளின் மொழி, வியப்பூட்டுவது. அந்த மழலையரின் மொழியில் கடவுளைக் குறித்த சாட்சி வெளிப்படும் போது, கடவுளைப் பழிக்கும் அகந்தை கொண்டோருக்கு அது எவ்வளவு பேரிழிவாக இருக்கும்?

இந்த வசனத்தை, இயேசு மத்தேயு 21:16ல் எடுத்து விளக்குகிறார்.
இதே வசனத்தின் விளக்கமாக, 1 கொரிந்தியர் 1:26-29 பகுதி அமைகிறது.

வசனம் 8:3-4
அறிவியல் மற்றும் விண்வெளி ஆராய்ச்சி வளர்ந்துள்ள இன்றைக்கும், அண்டங்களைக் குறித்த செய்திகள் நமக்கு வியப்பூட்டுவனவாக உள்ளன. அவற்றின் பிரம்மாண்டத்தையும், காலத்தையும் எண்ணிப் பார்க்கும்போது, பிறந்து சில காலம் வாழ்ந்து மறைந்து போகும் மனிதன் எவ்வளவு அற்பமானவன்! (144:3-4; யோபு 7:17-21).

வசனம் 8:5-8
தொடக்க நூல் 1:26-28, படைப்பின் ஆறாம் நாள் நிகழ்வுகளுக்கு ஒரு வருணனையாக இந்த வசனங்கள் உள்ளன.

*வசனம் 8:5*
*பார்க்க, 82:6.*
*மனிதர், கடவுளை விடச் சிறியோரா, தேவதூதரிலும் சற்றுச் சிறியோரா?*

*படைக்கப்பட்ட அண்டசராசரங்களிலும் மனிதனே சிறப்பானவன். படைப்பில், கடவுளின் சாயலில் படைக்கப்பட்டவன். படைக்கப்பட்ட அனைத்தின் மீதும் ஆளுகை கொடுக்கப்பட்டவன். அவனையும் ஆள்பவர் கடவுள் ஒருவரே. ஆதலால் கடவுளைத் தவிர, மனிதனுக்கு மேலானது எதுவும் இல்லை. தொடக்க நூல் 1:1ல் கடவுள் / தேவன் என்ற பொருளில் உள்ள அதே எபிரேய வார்த்தையான ஏலொஹிம் என்கிற வார்த்தையே இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே இந்த வார்த்தையை "தேவதூதர்" என்று சொல்லிவிட முடியாது.*

*எபிரேயர் 2:7ல் இந்த வசனம் எடுத்தாளப்படும் போது, அது செப்டுவஜின்ட் என்னும் கிரேக்க பைபிளின் அடிப்படையில் வருகிறதே அல்லாமல், எபிரேய பைபிளின் அடிப்படையில் அல்ல.*

*எபிரேயர் நூலை எழுதியவரே, வ.1:14ல், தேவதூதர்களைப் பணிவிடை ஆவிகள் என்று சொல்லி இருப்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும்.*

*மேலும், நாம் இந்த வசனத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள, 1 கொரிந்தியர் 6:3ன் பொருளையும் தியானிக்க வேண்டும். தேவதூதரிலும் நாம் சற்றே சிறியோர் என்றாலும், தேவதூதர்களை நாம் நியாயம் தீர்ப்பது எப்படி ஆகும்?*

*மானிட மகனாக வந்த இயேசுவின் ஆளுகையையும் இந்த வசனம் உணர்த்துகிறது (1 கொரிந்தியர் 15:27); உரோமையர் 8:17ன்படி, கிறிஸ்து இயேசுவால் மீட்படையும் நாம், கடவுளின் பிள்ளைகள்; படைக்கப்பட்ட அனைத்திற்கும், கிறிஸ்து இயேசுவோடு நாம் பங்காளர்கள்.*

*எனவே நமது படைப்பின் மேன்மையை உணர்ந்து, கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட நாம், அவரைப் போலவே நீதியுள்ளவர்களாய் வாழ்வது எவ்வளவு அவசியம்!*

*தம்மிலும் சிறியோரான நம்மீது கடவுள் நீதியுள்ளவராக, அன்போடு, பாதுகாத்துப் பராமரிப்பவராக இருக்க, நம்மிலும் சிறியவையான படைப்பின் மீது நாம் நீதியுள்ளவர்களாக, அன்புடையோராக, பாதுகாப்போராக, பராமரிப்போராக வாழ்கிறோமா?*

✝

## 19 திருப்பாடல் 09

(நீதியின் கடவுளுக்கு நன்றி செலுத்துதல்)

*பாடகர் தலைவர்க்கு; "மகனுக்காக உயிரைக் கொடு" என்ற மெட்டு; தாவீதின் புகழ்ப்பா*

1 ஆண்டவரே,
என் முழு இதயத்தாலும் உம்மைப் புகழ்வேன்;
வியத்தகு உம் செயல்களையெல்லாம் எடுத்துரைப்பேன்.
2 உம்மை முன்னிட்டு மகிழ்ந்து களி கூர்வேன்;
உன்னதரே,
உமது பெயரைப் போற்றிப் பாடுவேன்.
3 என் எதிரிகள் பின்னிட்டுத் திரும்புவார்கள்;
உமது முன்னிலையில் இடறிவிழுந்து அழிவார்கள்.
4 நீர் நீதியுள்ள நடுவராய்
அரியணையில் வீற்றிருக்கின்றீர்;
என் வழக்கில் எனக்கு நீதி வழங்கினீர்.
5 வேற்றினத்தாரைக் கண்டித்தீர்;
பொல்லாரை அழித்தீர்;
அவர்களது பெயர் இனி இராதபடி
அடியோடு ஒழித்துவிட்டீர்.
6 எதிரிகள் ஒழிந்தார்கள்;
என்றும் தலையெடுக்க முடியாமல் அழிந்தார்கள்.
7 அவர்களின் நகர்களை நீர் தரைமட்டம் ஆக்கினீர்;
அவர்களைப்பற்றிய நினைவு அற்றுப் போயிற்று.
ஆண்டவர் அரியணையில் என்றென்றும் வீற்றிருக்கின்றார்;
நீதி வழங்குவதற்கென்று
அவர் தம் அரியணையை அமைத்திருக்கின்றார்.
8 உலகிற்கு அவர் நீதியான தீர்ப்பு வழங்குவார்;
மக்களினத்தார்க்கு நேர்மையான தீர்ப்புக் கூறுவார்.
9 ஒடுக்கப்படுவோருக்கு ஆண்டவரே அடைக்கலம்;
நெருக்கடியான வேளைகளில் புகலிடம் அவரே.
10 உமது பெயரை அறிந்தோர் உம்மில் நம்பிக்கைகொள்வர்;
ஆண்டவரே,
உம்மை நாடி வருவோரை நீர் கைவிடுவதில்லை.
11 சீயோனில் தங்கியிருக்கும் ஆண்டவரைப் புகழ்ந்து பாடுங்கள்;
அவருடைய செயல்களை
மக்களினத்தாரிடையே அறிவியுங்கள்;
12 ஏனெனில்,
இரத்தப்பழி வாங்கும் அவர்
எளியோரை நினைவில் கொள்கின்றார்;
அவர்களின் கதறலை அவர் கேட்க மறவார்.
13 ஆண்டவரே,
என்மீது இரக்கமாயிரும்;
என்னைப் பகைப்போரால்
எனக்கு வரும் துன்பத்தைப் பாரும்;
சாவின் வாயினின்று என்னை விடுவியும்.
14 அப்பொழுது,
மகள் சீயோனின் வாயில்களில்

உம் புகழ் அனைத்தையும் பாடுவேன்;
நீர் அளிக்கும் விடுதலைகுறித்து அகமகிழ்வேன்.
15 வேற்றினத்தார் வெட்டின குழியில்
அவர்களே விழுந்தனர்;
அவர்கள் மறைத்து வைத்திருந்த வலையில்
அவர்கள் கால்களே சிக்கிக்கொண்டன.
16 ஆண்டவர் நீதியை நிலைநாட்டுவதன் மூலம்
தம்மை வெளிப்படுத்தியுள்ளார்;
பொல்லார் செய்த செயலில்
அவர்களே சிக்கிக்கொண்டனர்.
(இடை இசை; சேலா)
17 பொல்லார் பாதாளத்திற்கே செல்வர்;
கடவுளை மறந்திருக்கும்
வேற்றினத்தார் யாவரும் அங்கே செல்வர்.
18 மாறாக,
வறியவர் என்றுமே மறக்கப்படுவதில்லை;
எளியோரின் நம்பிக்கை ஒருபோதும் வீண்போகாது.
19 ஆண்டவரே,
எழுந்தருளும்;
மனிதரின் கை ஓங்க விடாதேயும்;
வேற்றினத்தார் உமது முன்னிலையில்
தீர்ப்புப் பெறுவார்களாக!
20 ஆண்டவரே,
அவர்களைத் திகிலடையச் செய்யும்;
தாம் வெறும் மனிதரே
என்பதை வேற்றினத்தார் உணர்வார்களாக!

திருப்பாடல் 9:1-20

**சிந்தனைக்கு**

திருப்பாடல் 9ம் 10ம் முற்காலத்தில் ஒரே பாடலாக இருந்திருக்கலாம். இரண்டின் கருப்பொருளும் ஒன்றே! செப்டுவஜின்ட் மற்றும் வல்கேட் மொழிபெயர்ப்புகளில் இப்போதும் இவ்விரு பாடல்களும் ஒன்றாக உள்ளன. எபிரேய அகர வரிசைப்படி இரண்டு திருப்பாடல்களின் வசனங்களின் முதல் எழுத்துகள் அமைகின்றன - ஆனால் அனைத்து வசனங்களும் அல்ல. அகர வரிசை என்பது நமது ஆத்திசூடி போல, கேட்பதற்கு இனிமை சேர்ப்பது இந்த அமைப்பு.

தலைப்பில் காணப்படும் புதிய சொல், முத்லப்பென்; இந்த வார்த்தை, மரணத்தைக் குறிக்கிறது என்ற அடிப்படையில், ஏற்கனவே இருந்த ஒரு பாடலின் மெட்டு என்று சொல்லப்படுகிறது. இதே வார்த்தை, 48:14ல், "இறுதிவரை / மரணபரியந்தம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

வ.16க்குப் பிறகு, hig-gaw-yone என்ற சொல் வருகிறது; பாடலுக்கு இடையே வரும் இசை என்று இதனைச் சொல்கின்றனர். இதே சொல், 19:14ல் "எண்ணங்கள்" என்றும், 92:3ல், "இசை" என்றும், புலம்பல் 3:62ல், திட்டமிடல் என்றும் பொருள் படுகிறது.

அமைப்பு:
வ.1-2, மன்றாட்டு
வ.3-8, காக்கும் கடவுள்

வ.9-10, அனுபவ சாட்சி
வ.11-12, துதி
வ.13-14, மன்றாட்டும் பொருத்தனையும்
வ.15-18, பொல்லாருக்குக் கிடைக்கும் தண்டனைத் தீர்ப்பு
வ.19-20, மன்றாட்டு
எதிரிகளிடமிருந்து கடவுளின் பாதுகாப்பை இதற்கு முந்தைய மன்றாட்டுகளில் வேண்டிய தாவீது, இந்தப் பாடலில், தனது எதிரிகளை அழித்த கடவுளுக்கு நன்றி செலுத்துகிறார். தன்னைப் போலவே எளியோரையும் துன்புற்றோரையும் தாவீது முதன்முதலாகத் தனது மன்றாட்டுகளில் நினைவுகூர்ந்தார்.
🕎

வசனம் 9:1
"என் முழு இதயத்தாலும்" -
மேலும் பார்க்க, 146:2.
கடவுளைப் புகழ்வது, அரை மனதாக அல்ல; வாரத்திற்கு ஒரு நாளைக்கு அல்ல; முழு உள்ளத்தோடும், வாழ்நாள் முழுவதும் கடவுளைப் புகழ வேண்டும். அவருடைய திருப்பெயருக்காகவும், அவருடைய அருஞ்செயல்களுக்காகவும் அவரைப் புகழ்கிறோம். புகழ்தலின் ஒரு பாதி, உள்மனதில் உணர்தல் என்றால், மறு பாதி வாயினால் அறிக்கை செய்தல்.

வசனம் 9:3-5
"எதிரிகள்" -
திருப்பாடல்களின் சிறப்பு, பெயரற்ற "எதிரிகள்"; அதனால் எனது எதிரிகளுக்கு எதிராக எனது மன்றாட்டுப் பாடலாகவும், அதேபோல உங்கள் எதிரிகளை மனதில் வைத்து நீங்களும் படிக்க முடியும். பொதுவாக, இது கடவுளின் எதிரிகளைக் குறிக்கிறது.

தாவீதின் இக்கட்டான சூழ்நிலையில், ஆண்டவர் அனைத்தையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு, தாவீதுக்கு அமைதி அருள்பவராக இருக்கிறார்.

வசனம் 9:6-10
ஆண்டவரின் வெற்றியையும், அவரது நேரிய ஆட்சியையும் கொண்டாடுதல். ஆண்டவரின் ஆட்சியைக் குறித்து, விரிவாக அதி.93 & 96~99ல் பார்க்கலாம்.

எதிரிகள் ஒழிந்தார்கள்; ஆனால் ஆண்டவரோ என்றென்றும் அரியணையில் வீற்றிருக்கிறார். அவரது அரியணை நீதி வழங்குவதற்கென்று அமைக்கப்பட்ட அரியணை. நிறைவுக் காலத்தின் நியாயத் தீர்ப்பு மட்டுமல்ல (96:13, 98:9), எல்லாக் காலங்களிலும் (94:2) இந்த உலகின் மீது நீதி செய்பவராக அவர் இருக்கிறார்.

வசனம் 9:9
நீதியின் அரியணை மட்டுமல்ல; ஆண்டவர் உறையும் இடம், இரக்கத்தின் இருக்கை (விடுதலைப் பயணம் 25:20-21). நெருக்கப்படுவோருக்கும் ஒடுக்கப்படுவோருக்கும் அவரே அடைக்கலம்.

வசனம் 9:10
தம்மை நாடி வந்தவர்களை, ஆண்டவர் ஒருபோதும் கைவிடுவதில்லை; இதன் பொருள், கடவுளை அண்டியோருக்கு துன்பங்களோ இழப்புகளோ இருக்காது என்பது அல்ல; அவ்வாறு ஆண்டவர் எங்கேயும் ஒருபோதும் வாக்களிக்கவில்லை. ஆனால், எத்தகு இடர் வரினும், அதனை நாம் வெற்றிகரமாக மேற்கொள்ள அவர் நம்மை ஆயத்தம் செய்கிறார்.

*"உமது பெயரை அறிந்தோர் உம்மில் நம்பிக்கை கொள்வர்" -*
*சான்றாக, அவரது பெயர், "இருக்கிறவராகவே இருக்கிறவர்." அந்தப் பெயரை அறிந்தவர்கள், அவர் தம் மக்களுக்காக எகிப்தில் செய்த அருஞ்செயல்களையும் அறிவர்.*

*அறியாவிட்டால் எப்படி நம்பிக்கை கொள்வர் என்கிற கேள்வியும் இங்கு எழுகிறது; அது அறிவிக்கும் அருட்பணியின் தேவையை உணர்த்துகிறது.*

*வசனம்* 9:11-12
*சீயோனில் தங்கியிருக்கும் ஆண்டவர் யார்?*
*எளியோரை, துன்புற்றோரை நினைவில் கொள்பவர்; அவர்களின் கதறலை அவர் கேட்க மறவார்.*

*இன்றைக்கு சீயோனியம் என்று பேசுவோர் எளியோரா?*
*பாலஸ்தீன அப்பாவி மக்களைக் கதற விடும் இஸ்ரயேலரை நீதியின் ஆண்டவர் ஆதரிப்பாரா?*

*வசனம்* 9:13-14
*மன்றாட்டும், விடுதலையின் அறிவிப்பும்.*

*"... மகள் சீயோனின் வாயில்களில் ... பாடுவேன்."*
*மரணத்தின் வாயிலிருந்து தப்பிய தாவீது, கடவுளின் புகழை எங்கே பாடுவார்?*
*எருசலேம் நகர் மக்களும், நகருக்குத் தொழில் நிமித்தமாக வரும் மக்களும் கூடுகிற, நகர வாயிலில் நின்று, கடவுளை அறிந்தோரும், அறியாதோரும் அறிந்து கொள்ளும் விதமாக, கடவுளைப் புகழ்ந்து தாவீது பாடுவார்.*

*வசனம்* 9:15-18
*ஆண்டவருக்கு எதிராக எழுவோருக்கும், பொல்லாருக்கும் ஆயத்தமாக ஆண்டவர் வைத்திருப்பது பாதாளம்; மாறாக வறியோரும் எளியோரும் அவரால் மறக்கப்படுவதில்லை. அவர்களின் நம்பிக்கை வீண் போகாது.*

*வசனம்* 9:15
*வெட்டுதல், குழி, விழுதல், மறைத்தல், வலையில் சிக்குதல் - எதிரிகளின் வஞ்சகமான திட்டங்களை விவரிக்கும் உருவகம்; மீண்டும் மீண்டும் திருப்பாடல்களில் காட்சியாக வருவது.*

*வசனம்* 9:19-20
*"வெறும் மனிதரே" -*
*ஆண்டவருக்கு எதிராக ஆதிக்க வெறி கொண்டோர் வெறும் மனிதர்களே; அவர்கள் இறைத் திட்டத்தை அறியாதோர், எதிர்த்துச் செயல் படுவோர். அவர்களுக்கு எதிராக ஆண்டவர் எழுந்தருளுமாறு தாவீது மன்றாடுகிறார்.*

✝

## 19 திருப்பாடல் 10

(நீதிக்காக வேண்டல்)

1 ஆண்டவரே,
ஏன் தொலைவில் நிற்கின்றீர்?
தொல்லைமிகு நேரங்களில்
ஏன் மறைந்துகொள்கின்றீர்?
2 பொல்லார் தம் இறுமாப்பினால்
எளியோரைக் கொடுமைப்படுத்துகின்றீர்?
அவர்கள் வகுத்த சதித்திட்டங்களில்
அவர்களே அகப்பட்டுக் கொள்வார்களாக.
3 பொல்லார் தம் தீய நாட்டங்களில்
தற்பெருமை கொள்கின்றனர்;
பேராசையுடையோர்
ஆண்டவரைப் பழித்துப் புறக்கணிக்கின்றனர்.
4 பொல்லார் செருக்கு உள்ளவராதலால்
அவரைத் தேடார்;
அவர்கள் எண்ணமெல்லாம்
"கடவுள் இல்லை!
5 எம் வழிகள் என்றும் நிலைக்கும்" என்பதே.
உம் தீர்ப்புகளோ மிக மேலானவை;
அவர்களின் அறிவுக்கு எட்டாதவை.
தம் பகைவர் அனைவரையும் பார்த்து
அவர்கள் நகைக்கின்றனர்.
6 'எவராலும் என்னை அசைக்க முடியாது;
எந்தத் தலைமுறையிலும் எனக்குக் கேடுவராது'
என்று அவர்கள் தமக்குள் சொல்லிக்கொள்வர்.
7 அவர்களது வாய் சாபமும் கபடும் கொடுமையும் நிறைந்தது;
அவர்களது நாவினடியில் கேடும் தீங்கும் இருக்கின்றன.
8 ஊர்களில் அவர்கள் ஒளிந்து காத்திருக்கின்றனர்;
சூதறியாதவர்களை மறைவான இடங்களில்
கொலை செய்கின்றனர்;
திக்கற்றவர்களைப் பிடிப்பதிலேயே
அவர்கள் கண்ணாயிருக்கின்றனர்.
9 குகையிலிருக்கும் சிங்கம்போல்
அவர்கள் மறைவில் பதுங்கியிருக்கின்றனர்;
எளியோரைப் பிடிப்பதற்காகவே
அவர்கள் பதுங்கியிருக்கின்றனர்;
தம் வலையில் சிக்கவைத்து இழுத்துச் செல்கின்றனர்.
10 அவர்கள் எளியோரை நலிவுறச் செய்து நசுக்குகின்றனர்;
அவர்களது கொடிய வலிமையால் ஏழைகள் வீழ்த்தப்படுகின்றனர்.
11 'இறைவன் மறந்துவிட்டார்;
தம் முகத்தை மூடிக்கொண்டார்;
என்றுமே எம்மைப் பார்க்க மாட்டார்'
என்று பொல்லார் தமக்குள் சொல்லிக் கொள்கின்றனர்.
12 ஆண்டவரே, எழுந்தருளும்!
இறைவா, உமது ஆற்றலை வெளிப்படுத்தும்!

எளியோரை மறந்துவிடாதேயும்.
13 பொல்லார் கடவுளைப் புறக்கணிப்பது ஏன்?
அவர் தம்மை விசாரணை செய்யமாட்டாரென்று
அவர்கள் தமக்குள் சொல்லிக்கொள்வது ஏன்?
14 ஆனால், உண்மையில் நீர் கவனிக்கின்றீர்;
கேட்டையும் துயரத்தையும் பார்த்து,
உதவி செய்யக் காத்திருக்கின்றீர்;
திக்கற்றவர் தம்மை உம்மிடம் ஒப்படைக்கின்றனர்;
அனாதைக்கு நீரே துணை.
15 பொல்லார் மற்றும் தீயோர் கைகளை முறித்துவிடும்;
அவர்களது பொல்லாங்கைத் தேடிக் கண்டுபிடித்து,
அது அற்றுப்போகச் செய்யும்.
16 ஆண்டவர் என்றுமுள அரசர்;
அவரது நிலத்தினின்று
வேற்றினத்தார் அகன்று விடுவர்.
17 ஆண்டவரே,
எளியோரின் விருப்பத்தை நீர் நிறைவேற்றுகின்றீர்;
அவர்கள் உள்ளத்திற்கு ஊக்கம் அளித்து
அவர்களுக்குச் செவிசாய்க்கின்றீர்.
18 நீர் அனாதைகளுக்கும்
ஒடுக்கப்படுகிறவர்களுக்கும்
நீதி வழங்குகின்றீர்;
மண்ணினின்று தோன்றிய மனிதர்
இனியும் அவர்களைத் துன்புறுத்த மாட்டார்.

திருப்பாடல் 10:1-18

**சிந்தனைக்கு**

திருப்பாடல்கள் 3க்கும் 32க்கும் இடையே தலைப்பற்ற ஒரே பாடல், திருப்பாடல் 10; அதி.9ம் 10ம் ஒன்றாக இருந்தன என்பதற்கு இதுவும் ஒரு சான்று. ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டோருக்கான ஆதரவுக் குரல், 9:9,12&18ம் வசனங்களில் காணப்பட்டது போல, 10:2,8-10,12,14&17-18 வசனங்களிலும் காணப்படுகிறது. எல்லா மக்களினங்களும் தங்கள் தங்களுக்கென்று தெய்வங்களைக் கொண்டுள்ளன; அந்த தெய்வங்கள் எல்லாம், மன்னர்களின் தெய்வங்களாக, நிலவுடைமையாளர்களின் தெய்வங்களாக, அதிகாரம் உடையோரின் தெய்வங்களாக உள்ளன. ஆனால் கடவுளாகிய ஆண்டவர், எப்போதும் ஏழைகள், அடிமைகள், ஒடுக்கப்பட்டோர், ஆதரவற்றோர், அனாதைகள், மற்றும் கைம்பெண்களின் கடவுளாகவே வெளிப்படுகிறார்.

அமைப்பு:
வ.1, மன்றாட்டு
வ.2-11, பொல்லார் / நெறியற்றோரின் செயல்கள்
வ.12-13, ஆண்டவருக்கு அழைப்பு
வ.14-15, ஆண்டவர் மீதான நம்பிக்கையை அறிவித்தல்
வ.16-18, அரசாளும் ஆண்டவருக்குத் துதி
🕎

வசனம் 10:1-2
இணை, 13:1-3
"பொல்லார்" -
raw-saw / *துன்மார்க்கன், தீயோர், நெறியற்றோர், இறையச்சமற்றோர்.*

*தீயோரின் செயல்களில் தாவீது சினமடைகிறார்; அவற்றைக் காணும் அவர், ஆண்டவரின் செயலற்ற நிலையால் திகைக்கிறார்; ஆண்டவரின் நெறிமுறைகளின் வழியில் வாழ்கின்ற தனக்குப் பொல்லார் மீது சினம் வரும் போது, பொல்லாங்கை அருவருக்கிற ஆண்டவர் வாளாதிருப்பது ஏன் என்று வினவுகிறார். ஆண்டவரைக் கேள்வி கேட்டாலும், நம்பிக்கை நிறைந்த தனது மன்றாட்டை அவர் விடவில்லை.*

*நமது வாழ்க்கையிலும், துன்பங்கள் நேரிடும் போது, கடவுளின் இருத்தல் குறித்த கேள்வி எழும்; அந்தக் கேள்வி கடவுள் ஒதுங்கிச் சென்றதால் அல்ல - நமது குறைவுகளினாலேயே. அப்படித் திக்கற்றுத் திகைக்கும் வேளைகளில், தனிமையில் அவரோடு அமர்ந்து மன்றாடுதலே அவரை மீண்டும் பற்றிக் கொள்ளும் வழி.*

வசனம் 10:3-11
*பொறுமையாக இருக்கும் ஆண்டவரிடம் பொல்லாரின் செயல்களைத் தாவீது பட்டியலிடுகிறார்:*
*- தாங்கள் விரும்பியவற்றை அடைந்து, அதில் தற்பெருமை கொண்டோர்;*
*- பேராசை உடையோர்;*
*- ஆண்டவரை இகழ்வோர், புறக்கணிப்போர்;*
*- தங்கள் அகந்தையால் கடவுளை நாடாதோர்;*
*- தாங்கள் கடைப்பிடிக்கும் வழிகள் நிலையானவை என்ற எண்ணமுடையோர்;*
*- யாராலும் தங்களை அசைக்க முடியாது என்று எண்ணுவோர்;*
*- தலைமுறைகளாகத் தங்களுக்கு எதிர்ப்பு இராது என்று எண்ணுவோர்;*
*- சாபம், கபடு, கொடுமை, இவைகளை வெளிப்படுத்துவோர்;*
*- குற்றமற்றவர்களை மறைவாக அழிப்போர்;*
*- ஆதரவற்றோரை அடிமையாக்குவோர்;*
*- தங்கள் வஞ்சக வலையில் எளியோரைச் சிக்க வைப்போர்;*
*- எழைகளை மேலும் மேலும் நலிவடையச் செய்வோர்;*
*- தங்கள் வலிமையைக் கொண்டு ஏழைகளை ஒடுக்குவோர்;*
*- தங்கள் தீவினைகளை ஒருபோதும் ஆண்டவர் பார்ப்பதில்லை என்ற இறுமாப்பில் வாழ்வோர்.*

*இன்றைக்கு உலகம் பொல்லாங்கான செய்திகளால் நிறைந்திருக்கிறது.*
*ஆனால் ஆண்டவரின் வழிகளோ மேலானவை; அவை பொல்லாரின் அறிவுக்கு எட்டாதவை* (வ.5ஆ).

வசனம் 10:12-13
மேலும், 9:19-20
*பொல்லாரை வெற்றி கொள்ள ஆண்டவருக்கு அழைப்பு.*

வசனம் 10:14-15
*தன் நம்பிக்கையை வெளிப்படுத்தும் நயமான மொழியில் ஆண்டவரைச் செயல்பட அழைக்கிறார், தாவீது.*

நடக்கும் செயல்களைப் பார்க்கும் போது, கடவுள் இருக்கிறாரா என்று தோன்றுகிறது - ஆனால், அவர் உற்றுப் பார்த்துக் கொண்டே இருக்கிறார். தம்மை நாடுவோரின் குரல் கேட்டு உதவி செய்யக் காத்திருக்கிறார்; எந்த ஆதரவும் அற்றோர் ஆண்டவரையே அன்றி வேறு யாரை அண்ட முடியும்?

அனாதைக்கு ஆதரவு ஆண்டவரே! (27:10)

"கைகளை முறித்தல்" -
இணை, 3:7.
பொல்லாரின் வலுவான நிலையை "கைகள்" உணர்த்துகின்றன.

வசனம் 10:16-18
அதி.9&10ல், வலியுறுத்தப்படும் ஒன்று, ஆண்டவர் அரியணையில் வீற்றிருக்கிறார்.
அப்படியானால், இவை மேசியாவின் பாடல்களா?
அப்படி அல்ல; ஆண்டவர் அரியணையில் அமரும் ஆட்சியில், தீங்குக்கு இடமில்லை; இப்போதோ, தீவினை ஆளுகை செய்கிறது; அத்தீவினையை அகற்ற ஆண்டவரை அழைத்து மன்றாடுவதாக இவ்விரு பாடல்களும் அமைகின்றன (திருவெளிப்பாடு 19:1-7).
எழுந்தருளும் ஆண்டவரே!
உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல, மண்ணுலகிலும் நிறைவேறுக!
மாரநாதா!

✝

## 19 திருப்பாடல் 11

(ஆண்டவரிடம் நம்பிக்கை)

*பாடகர் தலைவர்க்கு; தாவீதுக்கு உரியது*
1 நான் ஆண்டவரிடம் அடைக்கலம் புகுந்துள்ளேன்;
நீங்கள் என்னிடம்,
'பறவையைப் போல மலைக்குப் பறந்தோடிப் போ;
2 ஏனெனில், இதோ!
பொல்லார் வில்லை வளைக்கின்றனர்;
நாணில் அம்பு தொடுக்கின்றனர்;
நேரிய உள்ளத்தார்மீது
இருளில் அம்பு எய்யப் பார்க்கின்றனர்;
3 அடித்தளங்களே தகர்க்கப்படும் பொழுது,
நேர்மையாளரால் என்ன செய்ய முடியும்?'
என்று சொல்வது எப்படி?
4 ஆண்டவர் தம் தூய கோவிலில் இருக்கின்றார்;
அவரது அரியணை விண்ணுலகில் இருக்கின்றது;
அவர் கண்கள் உற்று நோக்குகின்றன;
அவர் விழிகள் மானிடரைச் சோதித்தறிகின்றன.
5 ஆண்டவர் நேர்மையாளரையும்
பொல்லாரையும் சோதித்தறிகின்றார்;
வன்முறையில் நாட்டங்கொள்வோரை

*அவர் வெறுக்கின்றார்.*
6 *அவர் பொல்லார்மீது*
*கரிநெருப்பும் கந்தகமும்*
*சொரியும்படிச் செய்கின்றார்;*
*பொசுக்கும் தீக்காற்றே*
*அவர்கள் குடிக்கும் பானமாகும்.*
7 *ஏனெனில், நீதியுள்ள ஆண்டவர்*
*நேரிய செயல்களை விரும்புகின்றார்;*
*அவர்தம் திருமுகத்தை நேர்மையாளர் காண்பர்.*

திருப்பாடல் 11:1-7

**சிந்தனைக்கு**

9 மற்றும் 10ம் திருப்பாடல்களின் தொடர்ச்சியான இறைவேண்டலாக, இத்திருப்பாடல் உள்ளது. புலம்பல் மிகுந்த, 9, 10 மற்றும் 12 ஆகிய திருப்பாடல்கள் நடுவே, இப்பாடல் ஆண்டவரில் அதிக நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

நம்பிக்கையின் மூன்று உறுதிமொழிகளைக் கொண்டதாக இத்திருப்பாடல் அமைந்துள்ளது:
வ.1-3, பொல்லாரின் தாக்குதல்களுக்கு நடுவே இறைப்பற்று;
வ.4-6, பொல்லாருக்கு எதிராக, விண்ணகத்தில் வீற்றிருக்கும் ஆண்டவரின் நியாயத்தீர்ப்பு;
வ.7, நேர்மையான செயல்களை விரும்பும் நீதியுள்ள ஆண்டவர்.
🕎

வசனம் 11:1
"ஆண்டவரிடம் அடைக்கலம்" -
(பார்க்க, 5:11, 7:1, 9:9, 11:1, 16:1, இன்னும் பல வசனங்கள்.)
இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரிடம் அடைக்கலம் புகுந்த ரூத்து புதிய வாழ்வடைந்தது போல (ரூத் 2:12).

"பறவையைப் போல" -
தன்னைத் தற்காத்துக் கொள்ள முடியாதது, பறவை; அது செய்யக்கூடியது ஒன்று தான்: தீங்குக்கு விலகிப் பறத்தல். தீயோர் நல்லோரை எள்ளி நகையாடிச் சொல்வது போல இது இருந்தாலும், நல்லோர் செய்யக்கூடியது, தீயோரின் இடத்தில் நில்லாமல், விலகிச் செல்வதுதான் (1:1).

வசனம் 11:2
நேர்மையாளரைச் சுற்றி வளைத்துப் பொல்லார் தொடுக்கும் தாக்குதல்; மேலும் பார்க்க, 10:8-10. இத்தகைய போருக்கு எதிராக நாம் எப்படி ஆயத்தமாக வேண்டும் என்று பவுலடிகள் நமக்கு விளக்குகிறார், எபேசியர் 6:10-18.

வசனம் 11:3
"அடித்தளங்களே தகர்க்கப்படும்" -
நமது அடித்தளங்களை எத்தகைய பொல்லாத மனிதனும் தகர்க்க முடியாது; ஏனெனில் நமது அடித்தளம், உறுதியான கற்பாறையாகிய, கிறிஸ்து இயேசுவில் உள்ளது (1 கொரிந்தியர் 3:11).

வசனம் 11:4-6
விண்ணகத்தில் தமது அரியணையில் அமர்ந்திருக்கும் ஆண்டவர், அனைத்தையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு இருக்கிறார்; நல்லோரின் நேர்மையான உள்ளத்தைச்

சோதித்து அறிகிறார்; பொல்லாத மனிதர்களின் செயல்களைக் காண்கிறார்; தண்டித்து அழிக்க வேண்டிய நிலை ஏற்படும் போது, சோதோம் மற்றும் கொமோரா நகர்களைத் தீயோரோடு அழித்தது போல (தொடக்க நூல் 19:24-25), அழிப்பார்.

வசனம் 11:5
நெர்மையாளருக்கு வரும் சோதனைகள் அவர்களின் பாவத்தால் உண்டானதல்ல; ஆண்டவர் அவர்களிடம் பாராமுகமாக இருக்கிறார் என்றும் பொருளல்ல; அத்தகைய சோதனைகளின் வழியே நேர்மையாளரின் உண்மையான உள்ளத்தை அவர் கண்டறிகிறார்.

வசனம் 11:7
ஆண்டவர் நீதியுள்ளவர்; நல்லோர் துன்புற்றாலும், அவர்களிடமிருந்து நேர்மையான செயல்களை ஆண்டவர் விரும்புகிறார்.
"நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது." (மத்தேயு 5:10)

✝

## 19 திருப்பாடல் 12

(உதவிக்காக மன்றாடல்)

*பாடகர் தலைவர்க்கு; எட்டாம் கட்டையில்; தாவீதின் புகழ்ப்பா*
1 ஆண்டவரே, காத்தருளும்;
ஏனெனில் உலகில் இறையன்பர்கள் அற்றுப் போயினர்;
மானிடருள் மெய்யடியார் மறைந்து போயினர்.
2 ஒருவர் அடுத்திருப்பாரிடம் பொய் பேசுகின்றனர்;
தேனொழுகும் இதழால் இருமனத்தோடு பேசுகின்றனர்.
3 தேனொழுகப் பேசும் எல்லா உதடுகளையும்
ஆண்டவரே, துண்டித்து விடுவீராக!
பெருமையடித்துக் கொள்ளும் நாவை அறுத்து விடுவீராக!
4 'எங்கள் நாவன்மை எங்கள் வலிமை;
எங்கள் பேச்சுத்திறனே எங்கள் பக்கத் துணை;
எங்களுக்குத் தலைவர் வேறு யார்?'
என்று சொல்பவரை ஒழித்து விடுவீராக!
5 'எளியோரின் புலம்பலையும்
வறியோரின் பெருமூச்சையும் கேட்டு
இப்பொழுதே எழுந்து வருகின்றேன்;
அவர்கள் ஏங்குகின்றபடி
அவர்களைப் பாதுகாப்பில் வைப்பேன்'
என்கின்றார் ஆண்டவர்.
6 ஆண்டவரின் வாக்குறுதிகள்
கலப்பற்ற வாக்குறுதிகள்;
மண் உலையில் தூய்மையாக்கப்பட்ட
வெள்ளி போன்றவை;
ஏழுமுறை புடமிடப்பட்டவை.
7 ஆண்டவரே,

நீர் எம்மைக் காத்தருளும்;
இத்தகைய தலைமுறையிடமிருந்து
எம்மை என்றும் காப்பாற்றும்.
8 பொல்லார் எம்மருங்கும் உலாவருகின்றனர்;
மானிடரிடையே பொல்லாப்பே ஓங்கி நிற்கின்றது.

திருப்பாடல் 12:1-8

**சிந்தனைக்கு**

செமினித் என்பது எட்டு நரம்புகள் கொண்ட இசைக் கருவி அல்லது எட்டுக் கட்டையில் இசைக்கப்படும் அல்லது பாடப்படும் பாடல் என்று பொருள் சொல்கிறார்கள்; பார்க்க, அதி.6ன் தலைப்பு.

திருப்பாடல்கள் 9 மற்றும் 10 போலவே, இதுவும் ஒரு புலம்பல் பாடல். அதே சமயம், தூய்மையும் ஆற்றலும் கொண்ட இறை வாக்குறுதிகளில் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

அமைப்பு:
வ.1-2, தீயோரின் இனிமையான மொழி
வ.3-4, மன்றாட்டு
வ.5, ஆண்டவர் அருளும் பாதுகாப்பு
வ.6-7, கடவுளின் வாக்குறுதிகளின் தன்மையும், மன்றாட்டும்
வ.8, தீயோர் தொடர்ந்து பலப்படுதல்

வசனம் 12:1-4
எதிர், 10:7.
தீயோரின் வாய் சாபமும் கேடும் கொடுமையும் நிறைந்ததாக மட்டுமல்ல; வேறு வகைத் தீயோர் இனிமையான பேச்சும், மறைமுகமான கொடும் செயலுமாக இருக்கின்றனர். நலமானதைப் பேசிப் பொல்லாங்கு செய்வோரின் நாவைத் துண்டித்து விடுமாறு தாவீது மன்றாடுகிறார்.

வசனம் 12:4
இணை, 10:6

வசனம் 12:5
கடவுளின் வாக்குறுதி. எளியோரின் புலம்பலையும், வறியோரின் பெருமூச்சையும் கேட்கிற ஆண்டவர், எழுந்து வருகிறார்.

ஏழைகள் மற்றும் வறியவர்களுக்கு ஆண்டவர் பாதுகாப்பு அளிக்கிறார்; ஆதரிக்கிறார்.

திருப்பாடல்கள் நூல், ஆண்டவரைப் பாடும் துதிப்பாடல்கள் அடங்கிய மன்றாட்டு நூல். ஆனால் பல பாடல்களிலும் ஒடுக்கப்பட்ட மற்றும் வறிய மக்களுக்கான அக்கரை, பாடல்களை இயற்றியோரிடம் வெளிப்படுகிறது. நமது மன்றாட்டுகளில் சமுதாயத்தின் அடித்தட்டு மக்களைக் குறித்த கரிசனை இருக்கிறதா?

வசனம் 12:6
"புடமிடுதல்" -
ஒப்பிடுக, 66:10; எசாயா 48:10; எசேக்கியேல் 22:17-22; செக்கரியா 13:9; மலாக்கி 3:2-3.

துன்பங்கள் வழியாக நம் உள்ளங்களை ஆண்டவர் உலைக் கலனில் புடமிட்டுத் தூய்மைப்படுத்துவதாக மேற்கூறிய வசனங்களில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இந்த வசனத்தில், ஆண்டவரின் வாக்குறுதிகள் ஏழுமுறை புடமிடப்பட்ட வெள்ளியைப் போலத் தூய்மையானவை என்று தாவீது உரைக்கிறார். இளமைக் காலம் முழுவதும் சவுல் அரசரால் வேட்டையாடித் துரத்துண்ட தாவீது, ஆண்டவரின் பாதுகாப்பையும், பராமரிப்பையும், வாக்குறுதிகளின் நிறைவேறுதலையும் அனுபவித்து அறிந்தவராக இந்த வார்த்தைகளைக் கூறுகிறார்.

வசனம் 12:7-8
10:12ல் தாவீதின் மன்றாட்டுக்கு ஆண்டவரின் மறுமொழி.

"எழுந்து வருகிறேன்" என்று சொன்ன ஆண்டவரிடம், எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்து வரும் பொல்லாரிடமிருந்து, "எங்களைக் காத்தருளும்" என்று தாவீது வேண்டுகிறார்.

✝

## 19 திருப்பாடல் 13

(உதவிக்காக மன்றாடல்)

*பாடகர் தலைவர்க்கு; தாவீதின் புகழ்ப்பா*
1 ஆண்டவரே,
எத்தனை நாள் என்னை மறந்திருப்பீர்?
இறுதிவரை மறந்துவிடுவீரோ?
இன்னும் எத்தனை நாள்
உமது முகத்தை எனக்கு மறைப்பீர்?
2 எத்தனை நாள் வேதனையுற்று
எனக்குள் போராடுவேன்?
நாள் முழுதும்
என் இதயம் துயருறுகின்றது;
எத்தனை நாள்
என் எதிரி
எனக்கெதிராய் மேலோங்கி நிற்பான்?
3 என் கடவுளாகிய ஆண்டவரே,
என்னைக் கண்ணோக்கி
எனக்குப் பதில் அளித்தருளும்;
என் விழிகளுக்கு ஒளியூட்டும்.
4 அப்பொழுது,
நான் சாவின் உறக்கத்தில்
ஆழ்ந்து விடமாட்டேன்;
என் எதிரி,
'நான் அவனை வீழ்த்திவிட்டேன்'
என்று சொல்லமாட்டான்;
நான் வீழ்ச்சியுற்றேன் என்று
என் பகைவர் அக்களிக்கவுமாட்டார்.
5 நான் உமது பேரன்பில்
நம்பிக்கை வைத்திருக்கின்றேன்;

நீர் அளிக்கும் விடுதலையால்
என் இதயம் களிகூரும்.
6 நான் ஆண்டவரைப் போற்றிப் பாடுவேன்;
ஏனெனில், அவர் எனக்கு
நன்மை பல செய்துள்ளார்.

திருப்பாடல் 13:1-6

**சிந்தனைக்கு**

புலம்பலும் மன்றாட்டும் துதியுமான இன்னொரு புகழ்ப்பா. சிறிய திருப்பாடலே எனினும், வார்த்தைகளில் ஆற்றல் மிக்கதொரு பாடல்.

அமைப்பு:
வ.1-2, புலம்பல்
வ.3-4, மன்றாட்டு
வ.5-6, அறிக்கையும் பொருத்தனையும்
🕎

வசனம் 13:1-2
வேதனை, போராட்டம், துயரம், எதிரியின் மேலாதிக்கம் - இந்த வார்த்தைகளால் தாவீது தனது துயரை வெளிப்படுத்துகிறார்.

தனது துன்பங்களில் அவர் ஆண்டவரைத் தேடுகிறார்; ஆறுதலோ கிடைக்கவில்லை. எனவே தன்னை மறப்பீரோ, உமது முகத்தை மறைப்பீரோ என்று வினவுகிறார். கடினமான நாட்கள் அவருக்கு மிகவும் நீண்டதாகத் தோன்றின (4:2, 6:3).

எது வரைக்கும், இன்னும் எவ்வளவு காலம் - இவை மனித வாழ்வின் தவிர்க்க முடியாத கேள்விகள். மகிழ்ச்சியில் திளைக்கும் மனிதன் கூட, எத்தனை நாட்கள் இந்த மகிழ்ச்சி நீடிக்குமோ என்று கவலை கொள்கிறான்! அப்படியானால், நோயோ, வறுமையோ, வேறு ஏதோவொரு சிக்கலோ ஒருவனை வாட்டும் போது, அவனது மனநிலை வேறு எப்படி இருக்கும்?

"எவ்வளவு காலமோ" என்ற கேள்வி, புலம்பல் திருப்பாடல்களில் மீண்டும் மீண்டும் எழுப்பப்படும் கேள்வி!

நமது துன்பங்களை விட, மன்றாட்டுக்கு ஆண்டவரின் மறுமொழி இல்லாத நிலை மிகவும் கடுமையானது. ஆண்டவர் மீது தளராத நம்பிக்கையும், பொறுமையுமே நம்மை மீட்கும் பண்புகள்.

வசனம் 13:1
இணை, 44:24

கடவுளாகிய ஆண்டவருடைய முகத்தின் ஒளி -
* முகத்தை மறைப்பதனால் உண்டாகும் வேதனை, 30:7, 44:24, 88:14.
* அவர்தம் திருமுகத்தின் ஒளியே ஆசி மற்றும் மீட்பை உறுதி செய்கிறது, 4:6, 31:16, 44:3, 67:1, 80:3,7&19, 119:135.

* எல்லாவற்றுக்கும் மேலாக, ஆண்டவரது முகத்தின் ஒளி, அவரே அருளிய குருத்துவ ஆசி, எண்ணிக்கை 6:25.
- ஆண்டவரது திருமுகமே அவரது அன்பையும், அமைதியையும், ஆசியையும் அருளுகிறது!

வசனம் 13:3
பார்க்க, 38:10.
வலுவற்றுத் தளர்ந்த நிலையில் பார்வை குன்றுகிறது (6:7). ஒருவேளை, தாவீது ஏதேனும் நோயுற்று இருந்திருக்கலாம் என்கிற கருத்தும் உள்ளது. இந்தப் பாடலும், புறச் சிக்கலைப் பேசாமல், மனச் சிக்கலைப் பேசுவதாக உள்ளது.

நோய் குறித்த கவலையிலும், ஆண்டவர் அவருக்கு அளித்த பொறுப்பை உணர்ந்து, தனது நாட்டின் எதிரிகளைக் குறித்தே தாவீது துயருற்றார்.

எதிரிகளின் நெருக்குதலிலும், ஆதரவற்ற தனது நிலையிலும், தாவீது மரண இருள் தன்னைச் சூழ்வதாக உணர்ந்தார். ஆண்டவரிடமிருந்து கிடைக்கும் மறுமொழியே தன்னை உயிர்ப்பிக்க வல்லது என்று நம்பி அவரை நாடினார்.

வசனம் 13:4
எதிரிகளின் வெற்றியால் கடவுளுக்கு என்ன நன்மை? கடவுளையே நம்பி வாழும் தாவீதின் வீழ்ச்சி (6:5), அவருக்கு மகிமை சேர்க்குமா?

வசனம் 13:5
"பேரன்பு" -
கிருபை, OV
எபிரேயத்தில், kheh-sed. இச்சொல், KJVல், mercy, kindness, lovingkindness, pity என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. திருப்பாடல்களில் இந்தச் சொல் அதிகம் இடம்பெறுகிறது.

கடவுள் உண்மையுள்ளவர்; தமது கிருபையின் பொருட்டு, தமது வாக்குறுதிகளை அவர் நிறைவேற்றுகிறார். இந்த உண்மையை எண்ணித் தாவீதின் மனம் மகிழ்கிறது.

வசனம் 13:6
மகிழ்வூட்டும் பல நன்மைகளை ஆண்டவர் தாவீதுக்குச் செய்துள்ளார். இனியும் அவ்வாறே அவர் செய்வார் என்கிற நம்பிக்கையோடு ஆண்டவரை மென்மேலும் போற்றிப் பாடத் தாவீது பொருத்தனை செய்தார் (7:17).

✝

## 19 திருப்பாடல் 14

(இணை, திருப்பாடல் 53)

(இறைப் பற்று இல்லாதோர்)

*பாடகர் தலைவர்க்கு; தாவீதுக்கு உரியது*
1 "கடவுள் இல்லை" என
அறிவிலிகள் தம் உள்ளத்தில்
சொல்லிக் கொள்கின்றனர்;
அவர்கள் சீர்கெட்டு

அருவருப்பான செயல்களில் ஈடுபடுகின்றனர்.
நல்லது செய்வோர் எவருமே இல்லை.
2 ஆண்டவர் விண்ணகத்தினின்று
மானிடரை உற்றுநோக்குகின்றார்;
மதிநுட்பமுள்ளோர்,
கடவுளை நாடுவோர்
எவராவது உண்டோ எனப் பார்க்கின்றார்.
3 எல்லோரும் நெறிபிறழ்ந்தனர்;
ஒருமிக்கக் கெட்டுப்போயினர்;
நல்லது செய்வார் யாரும் இல்லை;
ஒருவர்கூட இல்லை.
4 தீங்கிழைக்கும் யாவரும்
அறிவை இழந்துவிட்டார்களோ?
உணவை விழுங்குவதுபோல்
என் மக்களை
விழுங்கப் பார்க்கிறார்களே!
அவர்கள் ஆண்டவரை நோக்கி மன்றாடுவதுமில்லை.
5 அவர்கள் அஞ்சி நடுங்குவர்;
ஏனெனில்,
கடவுள் நேர்மையாளரின்
வழிமரபோடு இருக்கின்றார்.
6 எளியோரின் திட்டத்தை
அவர்கள் தோல்வியுறச் செய்கின்றார்கள்;
ஆனால்,
ஆண்டவர் எளியோர்க்கு
அடைக்கலமாய் இருக்கின்றார்.
7 சீயோனிலிருந்து இஸ்ரயேலருக்கு மீட்பு வருவதாக!
ஆண்டவர் தம் மக்களுக்கு
மீண்டும் வளமான வாழ்வை அருளும்போது,
யாக்கோபின் இனத்தார் களிகூர்வராக!
இஸ்ரயேல் மக்கள் அகமகிழ்வராக!

திருப்பாடல் 14:1-7

**சிந்தனைக்கு**

திருப்பாடல் 14ம், திருப்பாடல் 53ம் ஒன்றே என்று சொல்ல முடியாது - ஆனால் ஒத்துச் செல்பவை - இணையான வசனங்களை உடையவை. எனவே நாம் இந்த இரண்டு பாடல்களையும் சேர்த்தே இன்று பார்க்கலாம்.

தலைப்பு:
திருப்பாடல் 53ல், கூடுதலாக இரண்டு சொற்கள் உள்ளன:
* மகாலாத், makh-al-ath; திருப்பாடல் 88ன் தலைப்பிலும் இந்தச் சொல் இடம் பெறுகிறது. பொருள் தெளிவாகத் தெரியவில்லை; எபிரேய மொழி அறிஞர் ஸ்ட்ராங்க் சொல்கிற அடிப்படையில், "நோயுற்று" எனும் மெட்டு எனலாம்.
* மஸ்கீல், mas-keel; ஸ்ட்ராங்க் சொல்கிற படி, அறிவுறுத்தும் பாடல் / போதனைப் பாடல் / அறப் பாடல் / ஞானப் பாடல் என்று பொருள். மேலும் சில திருப்பாடல்களின்

தலைப்புகளிலும் இந்தச் சொல் இடம் பெற்றுள்ளது: 32, 42, 44, 45, 52, 53, 54, 55, 74, 78, 88, 89, 142.

வ.2,4,7ல், உடன்படிக்கைப் பெயரான ஆண்டவர் என்பது இடம் பெற்றுள்ளது; திருப்பாடல் 53ல், கடவுள் என்கிற பொதுப் பெயரே பயன்படுத்தப்பட்டுள்ளது. வ.5லிருந்து, 53:5 சற்றுக் கூடுதலாக உள்ளது. வ.6, 53ம் திருப்பாடலில் இல்லை.

அமைப்பு:
வ.1, தீயோரின் எண்ணங்கள்
வ.2, மனிதர்களை ஆய்ந்து அறியும் ஆண்டவர்
வ.3-4, தீயோரின் செயல்கள்
வ.5, தீயோரின் உணர்வுகள்
வ.6-7, எளியோருக்கு ஆண்டவர் அருளும் அடைக்கலமும், மீட்பும்

வசனம் 14:1
அறிவிலி / முட்டாள் -
மனதின் இயலாமையை இந்தச் சொல் இங்குக் குறிக்கவில்லை; மாறாக, மனதில் ஆன்மீக உணர்வின்மையைக் குறிக்கிறது. அறிவில்லாதவன் யார் என்றால், கடவுள் இருந்தால் இருந்து விட்டுப் போகட்டும் - மனித வாழ்க்கையில் அவருக்குப் பங்கு ஏதுமில்லை என்று சொல்பவர்கள்.

இதோடு வ.3-4கையும் இணைத்துத் தியானியுங்கள்:
கடவுள் தம் படைப்புகளை, அதிலும் மனிதர்களை நேசிக்கிறார்; தமது விண்ணகத்திலிருந்து உற்றுப் பார்க்கிறார்; தம்மை நாடுவோரைத் தேடுகிறார். ஆனால் மனிதர்களோ அவரை நேசிக்கவில்லை; அமர்ந்திருந்து அவருடைய முகத்தைத் தேடவில்லை; அவர் தந்த வார்த்தைகளை வாசிப்பதில்லை; கடவுளின் நீதியைத் தேடுவதில்லை.

கடவுள் இல்லை என்று சொல்பவர்களைப் போலவே, நடைமுறையில் அனுதினமும் அவர்முன் அமராதவரும், அவருடைய வார்த்தைகளை வாசித்துக் கடைப்பிடிக்காதவருமாக மனிதர்கள் இருக்கின்றனர். நாத்திகம் பேசுவோர் வெளிப்படையாகக் கடவுளை மறுப்போர் - ஆனால் கடவுள் இருக்கிறார் என்று சொல்பவரோ, தங்கள் முழு உள்ளத்தோடும் அவரைத் தேடாததினால், "எதார்த்தத்தில்" நாத்திகர்களாக இருக்கின்றனர்.
- இது ஓர் ஆழமான உண்மை; நாம் ஒவ்வொருவரும் இந்த உண்மையை உரைகல்லாக வைத்து நம்மை நாமே ஆய்ந்து பார்ப்போம்.

நீங்கள் நாத்திகரா? இல்லை, "எதார்த்த" நாத்திகரா?
***
"அறிவிலி / முட்டாள்" -
பொருளைத் தேடி, கடவுளைத் தேடாத நாபால், 1 சாமுவேல் 25. எபிரேய மொழியில் நாபால் (naw-bawl) என்பதற்கு, அறிவிலி என்று பொருள்.

வசனம் 14:2
பார்க்க, 11:4.
ஆண்டவர் மனிதர்களில் யாரைத் தேடுகிறார்?
தம்மை நாடுவோர் எவராவது இருக்கிறார்களா என்று பார்க்கிறார்.

வாழ்வில் நமது துன்பங்களிலிருந்து விடுபட நாம் யாரைத் தேடுகிறோம்? யாரைப் பிடித்தால் காரியம் ஆகும் என்று வாழ்கிறோமா? அல்லது ஆண்டவரின் ஒத்தாசையை நாடுகிறோமா?

வசனம் 14:2-3
உரோமையருக்கு எழுதிய திருமடலில் (3:12&23), பவுல் அடிகளார் இந்த வசனங்களை எடுத்தாளுகிறார்.

வசனம் 14:3
"கெட்டுப் போதல்" -
இதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேயச் சொல் (aw-lakh), பால் திரிந்து போவதைக் குறிக்க அன்றாடம் பயன்படுத்தும் சொல் என்கின்றனர். தங்களுக்குள் கடவுள் இல்லாதோர், தரம் கெட்டுத் தீயோராக மாறி விடுவர்.

வசனம் 14:4
"என் மக்களை விழுங்கப் பார்க்கிறார்கள்" -
பார்க்க, எரேமியா 10:25 & மீக்கா 3:3.

வசனம் 14:5
நேர்மையாளர்களோடு கடவுள் இருக்கிறார் என்பதை, அவர்களை விழுங்க வரும் தீயோர் உணரும் போது, அஞ்சி நடுங்குகிறார்கள்.

வ.53:5ல், தாவீது கூடுதலாக, தீர்க்கதரிசனமாக இப்படிச் சொல்கிறார்:
"இறைமக்களை ஒடுக்கியோரின் எலும்புகளைக் கடவுள் சிதறடிப்பார்; கடவுள் அவர்களைக் கைவிட்டதால் அவர்கள் மானக்கேடு அடைவர்."

நேர்மையாளரைக் கடவுள் சோதிக்கிறார், ஆனால் கைவிட மாட்டார்; தீயோரையோ, சரியான நேரத்தில் அவர் கைவிட்டு விடுவார்.

வசனம் 14:6
திருப்பாடல் 53ல், இந்த வசனம் இல்லை.
பார்க்க, 9:9.
எளியோருக்கு எதிராகத் தீயோர் செயல்படும் போது, ஆண்டவர் எளியோருக்கு அடைக்கலமாக இருக்கிறார்.

வசனம் 14:7, 53:6
பார்க்க, 10:16-18.
இஸ்ரயேலரின் மீட்பு, சீயோனில் தங்கியிருக்கும் ஆண்டவரிடம் உள்ளது. யாக்கோபு மற்றும் இஸ்ரயேல் என்பது தனிநபரைக் குறிக்காமல், நாட்டைக் குறிக்கிறது.

✝

## 19 திருப்பாடல் 15

(கடவுள் மனிதரிடம் எதிர்பார்ப்பவை)

*தாவீதின் புகழ்ப்பா*
1 *ஆண்டவரே,*
*உம் கூடாரத்தில் தங்கிடத் தகுதியுள்ளவர் யார்?*
*உம் திருமலையில் குடியிருப்பவர் யார்?*
2 *மாசற்றவராய் நடப்போரே!*
*- இன்னோர் நேரியவற்றைச் செய்வர்;*
*உளமார உண்மை பேசுபவர்;*
3 *தம் நாவினால் புறங்கூறார்;*
*தம் தோழருக்குத் தீங்கிழையார்;*
*தம் அடுத்தவரைப் பழித்துரையார்.*
4 *நெறிதவறி நடப்போரை இழிவாகக் கருதுவர்;*
*ஆண்டவருக்கு அஞ்சுவோரை உயர்வாக மதிப்பர்;*
*தமக்குத் துன்பம் வந்தாலும்,*
*கொடுத்த வாக்குறுதியை மீறார்;*
5 *தம் பணத்தை வட்டிக்குக் கொடார்;*
*மாசற்றவருக்கு எதிராகக் கையூட்டுப் பெறார்;*
*- இவ்வாறு நடப்போர் என்றும் நிலைத்திருப்பர்.*

திருப்பாடல் 15:1-5

**சிந்தனைக்கு**

தாவீதின் புகழ்ப்பா என்பதற்கு மேல், கூடுதல் செய்தி எதுவும் தலைப்பில் இல்லை. இதனை ஒரு போதகப் பாடல் அல்லது ஞானப் பாடல் எனலாம்.

திருப்பாடல்கள் 15 முதல் 24 வரை உள்ள பாடல்கள் ஒரு தொகுப்பாக அமைந்துள்ளன என்கின்றனர் பைபிள் அறிஞர்கள். அவற்றுள், தொடக்கமும் முடிவுமாக உள்ள, 15 மற்றும் 24ம் பாடல்கள், கருப்பொருளின் அடிப்படையில் இணையானவை; வசனங்கள் 15:1ம் 24:3ம் பளிச்சென இணையாக உள்ளன. இவ்விரு பாடல்களும், ஆண்டவரின் மாட்சியையும், நமது தூய உள்ளத்தையும் வலியுறுத்துகின்றன; ஏனெனில், தூய்மையின்றி எவரும் ஆண்டவரைக் காண மாட்டார் (எபிரேயர் 12:14ஆ).

இந்தத் தொகுப்பின் நடுநாயகமாகத் திருப்பாடல் 19 (அதி.20 மற்றும் 21ஐ ஒன்றாக எடுத்துக் கொண்டால்) உள்ளது. இந்தப் பாடல், படைப்பில் வெளிப்பட்ட கடவுளின் அழகுணர்ச்சியையும் ஆற்றலையும் எடுத்துரைத்து, நாம் எவ்வாறு கடவுளின் கட்டளைகளாலும், மன்னிப்பு மற்றும் மேய்ப்பராம் ஆண்டவரின் கரிசனையினாலும் தூய்மை அடைகிறோம் என்று சொல்லுகிறது. மற்ற பாடல்களைக் குறித்து அந்த அந்தப் பாடல்களைச் சிந்திக்கும் போது பார்ப்போம்.

திருப்பாடல் 15, இரண்டு கேள்விகள், அதற்கான பதில்கள் என்று எளிய வடிவத்தில் ஆழ்ந்த உண்மைகளை எடுத்துரைக்கும் திருப்பாடல். ஆண்டவரை அண்டிச் செல்ல, வ.2-4ல், வசனத்திற்கு மூன்றாக ஒன்பது தகுதிகளும், வ5ல், இரண்டு தகுதிகளும் வகுக்கப்பட்டுள்ளன. இத்தகுதிகளை அடைவோர், இவ்வாழ்க்கையில் நிலை பெறுவது மட்டுமல்லாமல், நிலை வாழ்வையும் பெறுவர் என்ற வாக்குறுதியோடு தாவீது இந்தப் பாடலை முடிக்கிறார். 🕎

*அமைப்பு:*
*வ.1, தூயவரின் கூடாரத்தில் தங்கத் தகுதி பெற்றோர் யார் என்கிற கேள்வி*
*வ.2-5ஆ, கேள்விக்கான விடைகள்*
*வ.5இ, ஆசி*
🕎

*வசனம் 15:1*
*"ஆண்டவரின் கூடாரத்தில் தங்குதல்" -*
*பார்க்க, 23:6, 27:4-6, 61:4, 84:10.*
*நாம் நன்கு அறிந்துள்ள படி, பழைய ஏற்பாட்டில், கடவுளின் கூடாரத்தில், குருக்களும் கூடாரப் பணிகளுக்கென்று தெரிவு செய்யப்பட்ட லேவியரும் தவிர, வேறு யாரும் தங்க முடியாது. அப்படியானால், இந்தத் திருப்பாடலில் தாவீது எதைப்பற்றிப் பேசுகிறார்?*

*எந்த இடத்தில் இருந்தாலும், கடவுளுக்கு ஏற்புடையோராக வாழ்வதற்குத் தகுதி உடையவர்களாக வாழ்வது எப்படி என்று தாவீது பேசுகிறார். யூத வழியில் வந்தவரான தாவீதும் கூடாரத்திற்குள் தங்க முடியாது என்பதனால், அவர் குறிப்பிட விரும்பியதை நாம் புரிந்து கொள்ளலாம்.*

*"திருமலையில்" - பின்னாளில் கோயில் எழுப்பப்பட்ட சீயோன் மலை.*

*வசனம் 15:2-5ஆ*
*பதினோரு நிபந்தனைகளைத் தனது கேள்விகளுக்குப் பதிலாக, தாவீது அடுக்குகிறார். தூய்மைச் சடங்குகளோ, காணிக்கைப் படையல்களோ எதுவும் சொல்லப்படவில்லை என்பது மனதில் கொள்ளத் தக்கது.*

*எளிய நிபந்தனைகள் என்று தோன்றினாலும், இன்றைக்கு அழுத்தம் நிறைந்த, நிர்ப்பந்தமான சூழ்நிலைகளில், இவற்றைக் கடைப்பிடித்து வாழ்வது மிகவும் கடினம் என்பது விளங்கும்.*

*வசனம் 15:3*
*அனைத்து நிபந்தனைகளிலும் மிகவும் எளிதான நிபந்தனைகள் இங்கு உள்ளன. ஆனால், இவற்றை நாம் கடைப்பிடிப்பது எளிதா? நமது ஆலயத்திலோ, குடும்ப நிகழ்ச்சிகளிலோ, பணியாற்றும் இடங்களிலோ, ஒருவரோடு நாம் உரையாடினால், இரண்டாவது நிமிடமே, அந்த இடத்தில் இல்லாத மூன்றாவது ஆளைப் பற்றியதாக நமது பேச்சு மாறிவிடுகிறது. இதில் உள்ள உண்மையை எண்ணிப் பாருங்கள் - தவறு செய்வது நமக்கு எவ்வளவு இயல்பான ஒன்றாக மாறிப் போனது!*

*வசனம் 15:4*
*இந்த வசனத்தைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், இப்படிச் சொல்லலாம்:*
*கடவுள் நேசிப்பவர்களை நேசித்து, அவர் வெறுப்பவர்களை வெறுப்பது (139:21-22).*

*வசனம் 15:5அ&ஆ*
*வட்டியும் கையூட்டும், அடுத்தவரின் துரதிருஷ்டத்தால் உண்டாகின்றன.*
*அடுத்தவரின் துரதிர்ஷ்டத்தை நமது அதிர்ஷ்டமாக மாற்றலாமா?*

வசனம் 15:5இ
நேர்மையானவர்களுக்குக் கடவுள் அருளும் வாக்குறுதி, அவர்கள் இந்த வாழ்க்கையில் அசைக்கப்படுவதில்லை; நேர்மையாளரின் அடித்தளம் கற்பாறையாகிய ஆண்டவரில் உள்ளது; எனவே அவர்கள் நிலைவாழ்வையும், தங்கள் நேர்மைக்குப் பரிசாகப் பெறுவர்.

✝

## 19 திருப்பாடல் 16

(பற்றுறுதியும் நம்பிக்கையும்)

*தாவீதின் கழுவாய்ப் பாடல்*
1 இறைவா,
என்னைக் காத்தருளும்;
உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்.
2 நான் ஆண்டவரிடம்
'நீரே என் தலைவர்;
உம்மையன்றி வேறு செல்வம் எனக்கு இல்லை'
என்று சொன்னேன்.
3 பூவுலகில் உள்ள தூயோர்
எவ்வளவோ உயர்ந்தோர்!
அவர்களோடு இருப்பதே
எனக்குப் பேரின்பம்.
4 வேற்றுத் தெய்வங்களைப் பின்பற்றுவோர்
தங்கள் துன்பங்களைப் பெருக்கிக்கொள்வர்;
அவற்றுக்குச் செலுத்தப்படும் இரத்தப் பலிகளில்
நான் கலந்து கொள்ளேன்;
அவற்றின் பெயரைக்கூட நாவினால் உச்சரியேன்.
5 ஆண்டவர்தாமே என் உரிமைச் சொத்து;
அவரே என் கிண்ணம்;
எனக்குரிய பங்கைக் காப்பவரும் அவரே;
6 இனிமையான நிலங்கள் எனக்குப் பாகமாகக் கிடைத்தன;
உண்மையாகவே என் உரிமைச் சொத்து வளமானதே.
7 எனக்கு அறிவுரை வழங்கும் ஆண்டவரைப் போற்றுகின்றேன்;
இரவில்கூட என் மனச்சான்று என்னை எச்சரிக்கின்றது.
8 ஆண்டவரை எப்போதும்
என் கண்முன் வைத்துள்ளேன்;
அவர் என் வலப்பக்கம் உள்ளார்;
எனவே, நான் அசைவுறேன்.
9 என் இதயம் அக்களிக்கின்றது;
என் உள்ளம் மகிழ்ந்து துள்ளுகின்றது;
என் உடலும் பாதுகாப்பில் நிலைத்திருக்கும்.
10 ஏனெனில்,
என்னைப் பாதாளத்திடம் ஒப்பவிக்கமாட்டீர்;
உம் அன்பனைப் படுகுழியைக் காண விடமாட்டீர்.
11 வாழ்வின் வழியை நான் அறியச் செய்வீர்;
உமது முன்னிலையில்

எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு;
உமது வலப்பக்கத்தில்
எப்போதும் பேரின்பம் உண்டு.

திருப்பாடல் 16:1-11

**சிந்தனைக்கு**

மேசியாவைக் குறித்த இறைவாக்குகள் அடங்கிய ஒரு திருப்பாடல். தாவீதின் புகழ்ப்பா, பேதுருவின் முதல் அருளுரைக்கு அடிப்படையாக அமைந்தது (திருத்தூதர் பணிகள் 2:14-40). துன்புறும் ஊழியர் (எசாயா 53), மரித்தாலும் உயிரோடு எழுப்பப்படுவார் என்கிற இறைவாக்கு இத்திருப்பாடலின் அடிப்படையில் அமைகிறது.

திருப்பாடல் 15 முதல் 24 வரை ஒரு தொகுப்பு என்று பார்த்தோம். இந்தத் திருப்பாடல், 23ம் திருப்பாடலோடு ஒப்பிடத் தக்கது (குறிப்பாக, 16:2 > 23:1; 16:5 > 23:5; 16:7-8 > 23:4; 16:11 > 23:6). இரண்டு பாடல்களும், ஆண்டவரிடத்தில் அடைக்கலம் பெற்றவரின் இனிய வாழ்க்கை குறித்துப் பேசுகின்றன.

தலைப்பில் ஒரு புதிய சொல் இடம் பெறுகிறது: மிக்டாம், mik-tam; பொருள் குறித்த தெளிவான கருத்து இல்லை. திருப்பாடல்கள் 56 ~ 60ன் தலைப்புகளிலும் இந்தச் சொல் இடம் பெற்றுள்ளது. பாடல்களின் பொருள் அடிப்படையில், கழுவாய்ப் பாடல் / பாவம் போக்கும் பலிக்குப் பிறகு பாடிய பாடல் / Song for Atonement என்று சொல்லுகிறார்கள்.

அமைப்பு:
வ.1-3, அறிக்கையும் மன்றாட்டும்
வ.4, தீயோரைக் கடிந்துரைத்தல்
வ.5-8, ஆண்டவரோடு உள்ள உறவை மகிழ்ந்து கொண்டாடுதல்
வ.9-11, தாவீதை ஆண்டவர் மரணத்திலிருந்து விடுவித்து ஆசி வழங்குவார் என்ற திடமனதை அறிக்கை செய்தல்

வசனம் 16:1
"இறைவா" -
"El". எலோஹிம் என்ற பன்மைச் சொல் கடவுள் என்றும், ஏல் என்ற ஒருமைச் சொல் இறைவர் என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

"அடைக்கலம் புகுந்திருக்கிறேன்" -
OV, "நம்பியிருக்கிறேன்"
khaw-saw, என்ற எபிரேயப் பதம், அடைக்கலம் தேடல், பாதுகாப்பை நாடல், நம்பி ஒப்படைத்தல் என்று பொருள் படும்.

மேலும் பார்க்க, 11:1, குறிப்பு.
ஆண்டவரிடம் அடைக்கலம் பெற்றவரின் மனநிலையே இனிவரும் வசனங்களில் வெளிப்படுகிறது.

வசனம் 16:2
"தலைவர்" -
ad-o-noy, அடொனய், மனிதர்களின் தலைவர், அரசர், எஜமானர்.

*எஹோவா / யாவே என்று அழைக்கத் தங்களுக்கு அருகதை இல்லை என்று கருதிய இஸ்ரயேலர், பயன்படுத்திய சொல் (மலாக்கி 1:6).*

வசனம் 16:3
*இந்த வசனத்தின் விளக்கமாகத் திருப்பாடல் 101 அமைந்துள்ளது.*

"தூயோர்" -
*தூயோராய் வாழ நம்மை அழைத்தவர் கடவுளாகிய ஆண்டவர்; பார்க்க, லேவியர் 19:2 & மத்தேயு 5:8. இறைமக்கள் என்போர் - பழைய ஏற்பாட்டில், இஸ்ரயேலர்; புதிய ஏற்பாட்டில், திருச்சபை மக்கள் (திருத்தூதர் பணிகள் 9:13). திருச்சபை மக்களாகிய நாம், தூயோராக வாழ்கிறோமா?*

வசனம் 16:4
"வேற்றுத் தெய்வங்களுக்கு ... இரத்தப் பலிகள்" -
*பார்க்க, எசாயா 57:6; எரேமியா 7:18.*
*தாவீதின் நாள்களில் வேற்றுத் தெய்வங்களின் வழிபாடு இஸ்ரயேலருக்குள் இல்லை. எனினும் சிலை வணக்கத்திற்கு எதிராகத் தாவீது தனது உறுதியான மனதை வெளிப்படுத்துகிறார்.*

வசனம் 16:5
"கிண்ணம்" -
*விருந்தினருக்கு அளிக்கப்படும் கிண்ணம், அவருக்கு வழங்கப்படும் மரியாதையைக் குறிக்கிறது. தம்மில் அன்பு கொண்டோருக்கு ஆண்டவர் அருளும் கிண்ணம், களிப்பின் கிண்ணம்; நன்மைகளின் கிண்ணம்; நிரம்பி வழியும் கிண்ணம் (23:5).*

"உரிமைச் சொத்து" -
OV, "என் சுதந்திரம்"
*பழைய ஏற்பாட்டில் இஸ்ரயேலரின் உரிமைச் சொத்து, ஆண்டவர் வழங்கிய பாலும் தேனும் ஓடும் நிலப் பகுதி; இது நிபந்தனைகளுக்கு உட்பட்ட உரிமைச் சொத்து (இணைச் சட்டம் 6:1-3). இதனிலும் மேலான உரிமைச் சொத்தை ஆண்டவர் லேவியருக்கு வழங்கினார், ஆண்டவரே அவர்களின் உரிமைச் சொத்து. தாவீதுக்கு யூதாவின் வழியில் உரிமைச் சொத்து இருந்தது; அரசராக அவருக்கு உரிமைகளும், உரிமைச் சொத்துகளும் இருந்தன; ஆனால் அவரது உரிமைச் சொத்து ஆண்டவரே என்று நம்பி, அனைத்திற்கும் மேலாக ஆண்டவரோடு தனக்கு உள்ள உறவை முன்னிலைப்படுத்துகிறார் (மத்தேயு 6:33). இன்றைக்கு நமது உரிமைச் சொத்து எது?*
*பவுலடிகளின் சவாலை நாம் எதிரொலிக்கிறோமா?*
*"கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக் கூடியது எது?"*

வசனம் 16:6
*ஆண்டவரையே தன் உரிமைச் சொத்தாகக் கொண்டவர்க்கு, இவ்வுலகின் ஆசிகளும் மறுக்கப்படுவதில்லை; அதே வேளையில், அவர்களின் உள்ளம் இவ்வுலக ஆசிகளில் விருப்பம் கொள்வதில்லை என்பதை நாம் மறக்கக்கூடாது.*

வசனம் 16:7
"இரவில் கூட என் மனச்சான்று என்னை எச்சரிக்கின்றது" -
*ஆண்டவரோடு உள்ள உறவின் உன்னத நிலை; விழிப்பு நிலையில் நடப்பவற்றை சுயவுணர்வோடு கட்டுப்படுத்த இயலும்; ஆனால் உறக்க நிலையிலும் தாவீது கடவுளோடு இணைந்து இருந்து, அவர்தம் பாதுகாப்பை உணர்ந்தார்.*

*வசனம்* 16:8
*பார்க்க,* 73:23, 109:31, 110:5, 121:5.
*அரசராகிய தாவீது போற்றுதற்குரிய தனது வலது பக்கத்தில் கடவுளை வைத்திருந்தார்; வடிவமாக அல்ல; தன் உடன் உறையும் கடவுளாக. அதனால் அவர், பாதுகாப்போடு இருப்பதாக, ஆற்றல் மிக்கவராக உணர்ந்தார்.*

*வசனம்* 16:10
"*பாதாளம்*" -
"hell", KJV. *ஷியோல், எபிரேயம். கீழுலகம், கல்லறை, படுகுழி, திரும்பி வர இயலாத இடம்* (*யோபு* 7:9). *கடவுளின் துதி அங்குக் கேட்பதில்லை* (*திருப்பாடல்* 6:5).

"*என்னைப் பாதாளத்திடம் ஒப்புவிக்க மாட்டீர்*" -
"*என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்*" - OV.
Neh-fesh, *என்னை / ஆத்துமாவை / உள்ளத்தை / உயிரை / வாஞ்சையை, என்றெல்லாம் பொருள் படும். சூழலுக்கு ஏற்ப "என்னை" என்று "முழுமையான ஆளைக்" குறிப்பதாக, பல இடங்களிலும் பொது மொழிபெயர்ப்பில் இச் சொல் இடம் பெறுகிறது.*

*இந்த வசனத்தைப் பவுல், திருத்தூதர் பணிகள் நூலில்* (13:35) *செப்டுவஜின்ட் அடிப்படையில் எடுத்தாளுகிறார்.*

*வசனம்* 16:11
"*வாழ்வின் வழி*" -
*தாவீதின் வாழ்க்கையில் அவர் சாவுக்குத் தப்பிய நிகழ்வுகள் நிறைய உண்டு; ஆனால் இங்கு அவர், ஆண்டவரை அண்டிக் கொண்ட நமக்கு இருக்கின்ற நிலைவாழ்வைக் குறித்தும், நாம் அந்த நாளில் கடவுளின் வலது பக்கத்தில் களிப்போடு இருப்பதைக் குறித்தும் முன்னறிவிக்கிறார்* (*மத்தேயு* 25:31-40).

*வசனம்* 16:8-11
*பார்க்க, திருத்தூதர் பணிகள்* 2:25-28.
*இந்தத் திருப்பாடல் வரிகள், இஸ்ரயேலர் நடுவில் எத்தகைய தாக்கத்தைக் கொண்டிருந்தன என்பது பேதுருவின் அருளுரையில் வெளிப்படுகிறது. இந்த வசனங்களை அவர் கிறிஸ்து இயேசுவின் மரணத்தோடும், உயிர்த்தெழுதலோடும் ஒப்பிட்டுச் சிறப்பாகக் காட்சிப் படுத்தினார். அதன் வழியாக, கிறிஸ்து இயேசுவே தாவீதின் வழியில் வந்த மேசியா என்றும் தாவீது உரைத்த இறைவாக்கு அவரில் நிறைவடைந்தது என்றும் நிறுவினார்.*

*தாவீதின் இந்த இறைவாக்கின் நிறைவேறுதலை உணர்ந்து கொண்ட மூவாயிரம் பேர் அன்றே கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர் என்பதிலிருந்து, இந்த வசனங்களின் ஆற்றலை நாம் உணர்ந்து கொள்ளலாம்.*

✝

## 19 திருப்பாடல் 17

(மாசற்றவனின் மன்றாட்டு)

*தாவீதின் மன்றாட்டு*
1 ஆண்டவரே,
என் வழக்கின் நியாயத்தைக் கேட்டருளும்;
என் வேண்டுதலை உற்றுக் கேளும்;
வஞ்சகமற்ற உதட்டினின்று எழும்
என் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்.
2 உம் முன்னிலையினின்று
எனக்கு நீதி கிடைக்கட்டும்;
உம் கண்கள் நேரியன காணட்டும்.
3 என் உள்ளத்தை ஆய்ந்தறியும்;
இரவு நேரத்தில் எனைச் சந்தித்திடும்;
என்னைப் புடமிட்டுப் பார்த்திடும்;
தீமை எதையும் என்னிடம் காணமாட்டீர்;
என் வாய் பிழை செய்யக்கூடாதென
உறுதி கொண்டேன்.
4 பிற மானிடர் செய்வது போல் அல்லாமல்,
நீர் உரைத்த வாக்கிற்கிணங்க,
வன்முறையாளரின் வழிகளை
விட்டு விலகியுள்ளேன்.
5 என் நடத்தை
உம் பாதைகளில் அமைந்துள்ளது;
என் காலடிகள்
உம் வழியினின்று பிறழவில்லை.
6 இறைவா,
நான் உம்மை நோக்கிக் கூப்பிடுகின்றேன்;
ஏனெனில்,
நீர் எனக்குப் பதில் அளிப்பீர்.
என் பக்கம் உம் செவியைத் திருப்பியருளும்;
என் விண்ணப்பத்திற்குச் செவி சாய்த்தருளும்.
7 உமது வியத்தகு பேரன்பைக் காண்பித்தருளும்;
உம்மிடம் அடைக்கலம் புகுவோரை
அவர்களுடைய எதிரிகளிடமிருந்து
உமது வலக்கரத்தால் விடுவிப்பவர் நீரே!
8 உமது கண்ணின் மணியென
என்னைக் காத்தருளும்;
உம்முடைய சிறகுகளின் நிழலில்
என்னை மூடிக்கொள்ளும்.
9 என்னை ஒழிக்கத் தேடும் பொல்லாரிடமிருந்தும்
என்னைச் சூழ்ந்து கொண்ட எதிரிகளிடமிருந்தும்
என்னை மறைத்துக் கொள்ளும்.
10 அவர்கள் ஈவு இரக்கமற்ற கல்நெஞ்சர்கள்.
தங்கள் வாயினால் இறுமாப்புடன் பேசுபவர்கள்.
11 அவர்கள் என்னைப் பின் தொடர்கின்றனர்;
இதோ! என்னை வளைத்துக் கொண்டனர்;
அவர்கள் என்னைத் தரையில் வீழ்த்துவதற்கு,

வைத்த கண் வாங்காது காத்திருக்கின்றனர்.
12 பீறிப்போடத் துடிக்கும் சிங்கத்திற்கும்
அவர்கள் ஒப்பாவர்;
மறைவிடத்தில் பதுங்கியிருக்கும்
இளஞ்சிங்கத்திற்கு நிகராவர்.
13 ஆண்டவரே,
எழுந்து வாரும்;
அவர்களை நேருக்குநேர்
எதிர்த்து முறியடையும்;
பொல்லாரிடமிருந்து
உமது வாளால் என்னைக் காத்தருளும்.
14 ஆண்டவரே,
மாயும் மனிதரிடமிருந்து -
இவ்வுலகமே தங்கள் கதியென
வாழ்ந்து மாயும் மனிதரிடமிருந்து -
உமது கைவலிமையினால்
என்னைக் காப்பாற்றும்.
அவர்களுக்கென நீர் ஒதுக்கி வைத்துள்ளவற்றால்
அவர்கள் வயிற்றை நிரப்பும்;
அவர்களின் மைந்தர்
வேண்டிய மட்டும் நிறைவு பெறட்டும்;
எஞ்சியிருப்பதைத் தங்கள் பிள்ளைகளுக்கு
விட்டுச்செல்லட்டும்;
15 நானோ நேர்மையில் நிலைத்திருந்து
உமது முகம் காண்பேன்;
விழித்தெழும்போது,
உமது உருவம் கண்டு நிறைவு பெறுவேன்.

திருப்பாடல் 17:1-15

**சிந்தனைக்கு**

தாவீதின் மன்றாட்டு (tef-il-law / டெஃபில்லா) என்பது மட்டுமே தலைப்பிலிருந்து நாம் பெறும் செய்தி. இதர மன்றாட்டுத் திருப்பாடல்கள்: 86, 90, 102 & 142; மேலும் பார்க்க, அபக்கூக்கு 3:1.

திருப்பாடல் 15 முதல் 24 வரை ஒரு தொகுப்பு என்று பார்த்தோம். அதன் அடிப்படையில் இந்தத் திருப்பாடல், 22ம் திருப்பாடலோடு ஒப்பிடத் தக்கது. இவ்விரு பாடல்களின் சூழல் ஒன்று; இப்பாடல் மன்றாட்டு அல்லது வழக்காடுதல் நடையிலும், 22ம் திருப்பாடல் புலம்பல் நடையிலும் அமைந்துள்ளன.

மாசற்ற தன்மையை விளக்கி, நேரிய உள்ளத்தை வெளிப்படுத்தி, தன் எதிரிகளிடமிருந்து பாதுகாப்பை வேண்டும் பாடல்; இத்தகைய இதர திருப்பாடல்கள்: 26, 35, 43, 69.

அமைப்பு:
வ.1-2, மன்றாட்டு
வ.3-5, தன் நேரிய உள்ளத்தை வெளிப்படுத்துதல்
வ.6-9, பற்றுறுதி அறிக்கையும், பேரன்பை வேண்டுதலும்

வ.10-12, எதிரிகளைக் குறித்த விளக்கம்
வ.13-15, மன்றாட்டும், நம்பிக்கையில் உறுதியும்

வசனம் 17:1
"... நியாயம்... வேண்டுதல்... மன்றாட்டு..." -
நியாயத்திற்காகக் கடவுளிடம் மன்றாட வேண்டிய நிலை தாவீதுக்கு ஏன் வந்தது என்பது தெரியவில்லை.
அதேபோல, திருப்பாடல் 22லும், அத்தகைய புலம்பலுக்கான நிலை தாவீதுக்கு இருந்ததாக நாம் பைபிள் படிச் சொல்ல முடியாது.
ஆண்டவரிடம் அறிக்கையிடாத மறைமுகப் பாவம் ஏதோ தாவீதிடம் இருந்திருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். அப்படிப்பட்ட கருதுகோள்களை நாம் நம்பாதிருப்பது நல்லது.
எவர் ஒருவருக்கும் ஆண்டவருக்கும் இடையே, நீங்களோ நானோ நியாயதிபதியாக ஒருக்காலும் இருக்க முடியாது.

வசனம் 17:2
"உம் கண்கள் நேரியன காணட்டும்" -
நமக்குள் இருக்கும் எண்ணங்களை அறிந்திருக்கிற ஆண்டவர், தாவீதின் நேர்மையை அறிந்திருக்க மாட்டாரா? ஏதோவொரு விதத்தில், ஆண்டவரின் சகாயமற்ற, மறுமொழியற்ற நிலையில் தாவீது இவ்வாறு மன்றாடுகிறார்.

வசனம் 17:3-5
தனது மாசற்ற தன்மையைத் தாவீது உறுதியான சொற்களில் அறிக்கை செய்கிறார்.

வசனம் 17:4
"... வாக்கிற்கிணங்க ... விலகியுள்ளேன்" -
கடவுளின் வார்த்தை,
- விளக்கு, 119:105
- கண்ணாடி, யாக்கோபு 1:23-25
- அழிவற்ற வித்து, 1 பேதுரு 1:23
- போர்வாள், எபேசியர் 6:17
- திட உணவு, எபிரேயர் 5:12-14.
அத்தகைய இறைவார்த்தை நம்மைச் சீர்படுத்துகிறது; உணர்த்தித் திருத்துகிறது.

எனவேதான், இறைவார்த்தையை அனுதினமும் வாசிப்பதும், தியானிப்பதும் இன்றியமையாதது.

வசனம் 17:6-9
தாவீதின் விண்ணப்பம்.
ஆண்டவர் தனக்கு மறுமொழி தருவார் என்ற உறுதியான நம்பிக்கையோடு தாவீது மன்றாடுகிறார். ஒருபோதும் கைவிடாத ஆண்டவர் இப்போதும் தமது பாதுகாப்பை அருளுவார் அல்லவா!

வசனம் 17:8
"கண்ணின் மணியென என்னைக் காத்தருளும்" -
பார்க்க, இணைச் சட்டம் 32:10; நீதிமொழிகள் 7:2; செக்கரியா 2:8.
கண்மணி, கண்ணின் மெல்லிய பகுதி.

*படைப்பின் அதிசயங்களில் ஒன்று, இமைகள். கண்களுக்கு ஓர் ஆபத்து என்றால், அனிச்சையாக அவை கண்களை மூடிக் கொள்ளும். கடவுளின் பாதுகாப்பும் அத்தகையதே; ஆபத்தை நாம் உணரும் முன்பே, அவர் நம்மைத் தப்புவிக்கிறார்.*

"*சிறகுகளின் நிழல்*" -
*மேலும்*, 36:7, 57:1, 61:4, 63:7.
*நிழல், எபிரேயத்தில்* tsale. *தொடக்க நூல்* 19:8 *மற்றும் எண்ணிக்கை* 14:9 *வசனங்களில் இந்தச் சொல் பாதுகாப்பு என்று சூழலின் படி பொருள் கொள்ளப்பட்டுள்ளது. இங்கும் அது பாதுகாப்பையே குறிக்கிறது; எத்தகைய பாதுகாப்பு என்றால், நீண்டு விரிந்த பாதுகாப்பு. மரத்தின் நிழல் அதனடியில் நிற்கும் வரைதான்; பறக்கும் பறவையின் நிழல், அந்தப் பறவையை ஒருவர் பின்தொடரும் வரை. கடும் வெயில் காலத்தில் தாவீது நிழலின் அருமையை உணர்ந்தவர். எனவே இந்த உவமையைக் கடவுளின் பாதுகாப்புக்குப் பொருத்துகிறார்.*

*வசனம்* 17:10-12
*யார் என்று குறிப்பிடாமல், தன் எதிரிகளைக் குறித்த குற்றச்சாட்டு. அவர்கள் எவ்வளவு கொடூரமானவர்கள் என்பதைத் தாவீது விளக்குகிறார்.*

*வசனம்* 17:13-14
*பார்க்க*, 9:19, 10:12.
*தன்னுடைய எதிரிகளுக்கு எதிராகப் போரிட ஆண்டவர் எழுந்து வருமாறு தாவீது மன்றாடுகிறார்.*

*வசனம்* 17:14
*விண்ணகத்தில் இருக்கும் கடவுளை அவர்கள் தேடுவதில்லை. இவ்வுலக வாழ்வுக்கே முதன்மையான இடம் கொடுத்து, தங்களுக்காகவும், தங்கள் பிள்ளைகளுக்காகவும் மட்டுமே அவர்கள் வாழ்கிறார்கள். இவ்வுலகிலேயே அவர்களுக்குரிய பங்கினைக் கொடுத்து விடுமாறு தாவீது வேண்டுகிறார்.*

*வசனம்* 17:15
*பார்க்க*, 16:9-11.
"*நானோ*" *என்று, தனது எதிரிகளிடமிருந்து தன்னைத் தாவீது வேறுபடுத்திக் காட்டுகிறார். நீதி வேண்டிய (வ.2) தாவீது, தான் விரும்பும் நீதித் தீர்ப்பை இங்கு வெளிப்படுத்துகிறார்; அவருடைய வாஞ்சையோ ஆண்டவரின் முகத்தைக் காண்பதில் இருக்கிறது. சாவால் கண்களை மூடி, மகிமையோடு விழிக்கும் போது, பேரொளி வீசும் ஆண்டவரின் முகத்தைத் தரிசித்து நிலைவாழ்வை அடைவதில், தனது உறுதியைத் தாவீது வெளிப்படுத்துகிறார்.*

*அத்தகைய வாஞ்சையும் உறுதியும் நம்மிடம் இருக்கிறதா?*

✝

## 19 திருப்பாடல் 18

(அரசரின் வெற்றிப் பாடல்)

*பாடகர் தலைவர்க்கு; ஆண்டவரின் அடியாராகிய தாவீது, தன் எதிரிகள் கையினின்றும், சவுலின் கையினின்றும், அவர் தன்னை விடுவித்த நாளில் அவரை நோக்கிப் பாடியது*

1 அவர் உரைத்தது:
என் ஆற்றலாகிய ஆண்டவரே!
உம்மிடம் நான் அன்புகூர்கின்றேன்.
2 ஆண்டவர் என் கற்பாறை;
என் கோட்டை;
என் மீட்பர்;
என் இறைவன்;
நான் புகலிடம் தேடும் மலை அவரே;
என் கேடயம்,
எனக்கு மீட்பளிக்கும் வல்லமை,
என் அரண்.
3 போற்றற்குரிய ஆண்டவரை நோக்கி
நான் மன்றாடினேன்;
என் எதிரிகளிடமிருந்து நான் மீட்கப்பட்டேன்.
4 சாவின் கயிறுகள் என்னை இறுக்கின;
அழிவின் சுழல்கள் என்னை மூழ்கடித்தன.
5 பாதாளக் கயிறுகள்
என்னைச் சுற்றி இறுக்கின;
சாவின் கண்ணிகள்
என்னைச் சிக்க வைத்தன.
6 என் நெருக்கடிவேளையில்
நான் ஆண்டவரிடம் மன்றாடினேன்;
என் கடவுளை நோக்கிக் கதறினேன்;
தமது கோவிலினின்று
அவர் என் குரலைக் கேட்டார்;
என் கதறல்
அவர் செவிகளுக்கு எட்டியது.
7 அப்பொழுது,
மண்ணுலகம் அசைந்து அதிர்ந்தது;
மலைகளின் அடித்தளங்கள் கிடுகிடுத்தன;
அவர்தம் கடுஞ்சினத்தால்
அவை நடுநடுங்கின.
8 அவரது நாசியினின்று புகை கிளம்பிற்று;
அவரது வாயினின்று எரித்தழிக்கும் தீ மூண்டது;
அவரிடமிருந்து நெருப்புக்கனல் வெளிப்பட்டது.
9 வானைத் தாழ்த்தி
அவர் கீழிறங்கினார்;
கார் முகில் அவரது காலடியில் இருந்தது.
10 கெருபுமீது அவர் ஏறிப் பறந்து வந்தார்;
காற்றை இறக்கைகளாகக் கொண்டு
விரைந்து வந்தார்.
11 காரிருளைத் தமக்கு அவர்

மூடுதிரை ஆக்கிக்கொண்டார்;
நீர்கொண்ட முகிலைத் தமக்குக் கூடாரம் ஆக்கிக்கொண்டார்.
12 அவர்தம் திருமுன்னின் பேரொளியில்,
மேகங்கள் கல் மழையையும்
நெருப்புக் கனலையும் பொழிந்தன.
13 ஆண்டவர் வானங்களில் இடியென முழங்கினார்;
உன்னதர் தம் குரலை அதிரச்செய்தார்.
கல் மழையையும் நெருப்புக் கனலையும் பொழிந்தார்.
14 தம் அம்புகளை எய்து
அவர் அவர்களைச் சிதறடித்தார்;
பெரும் மின்னல்களைத் தெறித்து
அவர்களைக் கலங்கடித்தார்.
15 ஆண்டவரே,
உமது கடிந்துரையாலும்
உமது மூச்சுக் காற்றின் வலிமையாலும்
நீர்த்திரளின் அடிப்பரப்பு தென்பட்டது;
நிலவுலகின் அடித்தளம் காணப்பட்டது.
16 உயரத்தினின்று அவர்
என்னை எட்டிப் பிடித்துக் கொண்டார்;
வெள்ளப்பெருக்கினின்று
என்னைக் காப்பாற்றினார்.
17 என் வலிமைமிகு எதிரியிடமிருந்து
அவர் என்னை விடுவிடுத்தார்;
என்னைவிட வலிமைமிகு பகைவரிடமிருந்து
என்னைப் பாதுகாத்தார்;
18 எனக்கு இடுக்கண் வந்த நாளில்
அவர்கள் என்னை எதிர்த்தார்கள்;
ஆண்டவரோ
எனக்கு ஊன்றுகோலாய் இருந்தார்.
19 நெருக்கடியற்ற இடத்திற்கு
அவர் என்னைக் கொணர்ந்தார்;
நான் அவர் மனத்திற்கு உகந்தவனாய் இருந்ததால்,
அவர் என்னை விடுவித்தார்.
20 ஆண்டவர்
எனது நேர்மைக்கு உரிய பயனை எனக்களித்தார்;
என் மாசற்ற செயலுக்கு ஏற்பக்
கைம்மாறு செய்தார்.
21 ஏனெனில்,
நான் ஆண்டவர் காட்டிய நெறியைக் கடைப்பிடித்தேன்;
பொல்லாங்கு செய்து
என் கடவுளை விட்டு அகலவில்லை.
22 அவர்தம் நீதிநெறிகளை எல்லாம்
என் கண்முன் வைத்திருந்தேன்;
அவர்தம் விதிமுறைகளை
நான் ஒதுக்கித் தள்ளவில்லை.
23 அவர் முன்னிலையில்
நான் மாசற்றவனாய் இருந்தேன்;
தீங்கு செய்யாவண்ணம்
என்னைக் காத்துக் கொண்டேன்.

24 ஆண்டவர்,
என் நேர்மைக்கு உரிய பயனை அளித்தார்;
அவர்தம் பார்வையில்
நான் குற்றம் அற்றவனாய் இருந்தேன்.
25 ஆண்டவரே,
மாறா அன்பர்க்கு மாறா அன்பராகவும்
மாசற்றோர்க்கு மாசற்றவராகவும்
நீர் விளங்குவீர்.
26 தூயோருக்குத் தூயவராகவும்
வஞ்சகர்க்கு விவேகியாகவும்
உம்மை நீர் காட்டுகின்றீர்.
27 எளியோருக்கு நீர் மீட்பளிக்கின்றீர்;
செருக்குற்றோரை
ஏளனத்துடன் நீர் பார்க்கின்றீர்.
28 ஆண்டவரே,
நீர் என் விளக்குக்கு ஒளியேற்றுகின்றீர்.
என் கடவுளே,
நீர் என் இருளை ஒளிமயமாக்குகின்றீர்.
29 உம் துணையுடன்
நான் எப்படையையும் நசுக்குவேன்;
என் கடவுளின் துணையால்
எம்மதிலையும் தாண்டுவேன்.
30 இந்த இறைவனின் வழி நிறைவானது;
ஆண்டவரின் வாக்கு நம்பத்தக்கது;
அவரிடம் அடைக்கலம் புகும் அனைவர்க்கும்
அவரே கேடயமாய் இருக்கின்றார்.
31 ஏனெனில்,
ஆண்டவரைத் தவிர
வேறு கடவுள் யார்?
நம் கடவுளைத் தவிர
நமக்கு வேறு கற்பாறை ஏது?
32 வலிமையை அரைக்கச்சையாக
அளித்த இறைவன் அவரே;
என் வழியைப்
பாதுகாப்பானதாய்ச் செய்தவரும் அவரே.
33 அவர் என் கால்களை
மான்களின் கால்களைப் போல் ஆக்குகின்றார்;
உயர்ந்த இடத்தில்
என்னை நிலை நிறுத்துகின்றார்.
34 போருக்கு என்னை
அவர் பழக்குகின்றார்;
எனவே, வெண்கல வில்லையும்
என் புயங்கள் வளைக்கும்.
35 ஆண்டவரே,
பாதுகாக்கும் உம் கேடயத்தை
நீர் எனக்கு வழங்கினீர்;
உமது வலக்கரத்தால்
என்னைத் தாங்கிக் கொண்டீர்;
உமது துணையால்

என்னைப் பெருமைப்படுத்தினீர்.
36 நான் நடக்கும் வழியை
அகலமாக்கினீர்;
என் கால்கள் தடுமாறவில்லை.
37 என் எதிரிகளைத் துரத்திச்சென்று
நான் அவர்களைப் பிடித்தேன்;
அவர்களை அழித்தொழிக்கும் வரையில்
திரும்பவில்லை.
38 அவர்கள் எழுந்திருக்க முடியாதபடி
அவர்களை நான் வெட்டித்தள்ளினேன்;
அவர்கள் என் காலடியில் வீழ்ந்தார்கள்.
39 போரிடும் ஆற்றலை
நீர் எனக்கு அரைக்கச்சையாக அளித்தீர்;
என்னை எதிர்த்தவர்களை
எனக்கு அடிபணியச் செய்தீர்.
40 என் எதிரிகளைப்
புறமுதுகிடச் செய்தீர்;
என்னை வெறுத்தோரை
நான் அழித்துவிட்டேன்.
41 உதவி வேண்டி
அவர்கள் கதறினார்கள்;
ஆனால், அவர்களுக்கு உதவுவார்
யாருமில்லை.
அவர்கள் ஆண்டவரை நோக்கி
மன்றாடினார்கள்;
ஆனால், அவர்களுக்கு அவர்
பதிலளிக்கவில்லை.
42 எனவே, நான்
அவர்களை நொறுக்கிக்
காற்றடித்துச் செல்லும்
புழுதிபோல் ஆக்கினேன்;
தெருச் சேறென அவர்களைத்
தூர எறிந்து விட்டேன்.
43 என் மக்களின் கலகத்தினின்று
என்னை விடுவித்தீர்;
பிற இனங்களுக்கு
என்னைத் தலைவன் ஆக்கினீர்;
நான் முன்பின் அறியாத மக்கள்
எனக்குப் பணிவிடை செய்தனர்.
44 அவர்கள் என்னைப்பற்றிக் கேள்விப்பட்டவுடன்
எனக்குப் பணிந்தனர்;
வேற்று நாட்டவர் என்னிடம்
கூனிக் குறுகி வந்தனர்.
45 வேற்று நாட்டவர் உள்ளம் தளர்ந்தனர்;
தம் அரண்களிலிருந்து
நடுங்கிக் கொண்டு வெளியே வந்தனர்.
46 ஆண்டவர் உண்மையாகவே வாழ்கின்றார்!
என் கற்பாறையாம் அவர்
போற்றப் பெறுவராக!

என் மீட்பராம் கடவுள் மாட்சியுறுவராக!
47 எனக்காகப் பழிவாங்கும் இறைவன் அவர்;
மக்களினங்களை எனக்குக்
கீழ்ப்படுத்தியவரும் அவரே!
48 என் பகைவரிடமிருந்து
என்னை விடுவித்தவரும் அவரே!
ஆண்டவரே!
என் எதிரிகளுக்கு மேலாக
என்னை உயர்த்தினீர்!
என்னைக் கொடுமைப் படுத்தியவரிடமிருந்து
நீர் என்னைக் காத்தீர்!
49 ஆகவே, பிற இனத்தாரிடையே
உம்மைப் போற்றுவேன்;
உம் பெயருக்குப் புகழ்மாலை சாற்றுவேன்.
50 தாம் ஏற்படுத்திய அரசருக்கு
மாபெரும் வெற்றியை அளிப்பவர் அவர்;
தாம் திருப்பொழிவு செய்த தாவீதுக்கும்
அவர்தம் மரபினருக்கும்
என்றென்றும் பேரன்பு காட்டுபவரும் அவரே.

திருப்பாடல் 18:1-50

**சிந்தனைக்கு**

சில சிறிய வேறுபாடுகளுடன், இந்தத் திருப்பாடல், 2 சாமுவேல் 22ம் அதிகாரத்தில் இடம் பெறுகிறது.

திருப்பாடல் 15 முதல் 24 வரை ஒரு தொகுப்பு என்று பார்த்தோம். அதன் அடிப்படையில், இத்திருப்பாடல், 20 மற்றும் 21ம் திருப்பாடல்களோடு ஒப்பிடத் தக்கது. தனது கடுமையான எதிரிகளிடமிருந்து தன்னைக் காக்குமாறு, ஆண்டவரிடம் தாவீது வைத்த மன்றாட்டை ஏற்றுக் கொண்டு, விடுவித்த ஆண்டவருக்கு நன்றிப் பாடல்களாக இவை அமைந்துள்ளன.

வரலாற்றுக் குறிப்பைத் தலைப்பாகக் கொண்ட மூன்றாவது பாடல். 2 சாமுவேல் 22ம் அதிகாரத்தின் முதல் வசனமே, இத்திருப்பாடலின் தலைப்பாக அமைந்துள்ளது. ஆனால் கூடுதலாக, "ஆண்டவரின் அடியாராகிய தாவீது" என்ற சொற்கள் சேர்க்கப்பட்டுள்ளன (மேலும் 36ம் திருப்பாடல் தலைப்பிலும்). இவ்வாறு தாவீது, இறைமக்களாகிய இஸ்ரயேலரை வழிநடத்திய, தலைசிறந்த இறையடியார்களின் / ஊழியர்களின் வழியில் சேர்க்கப்படுகிறார்; அந்தப் பட்டியலை நாம் பார்க்கலாம்:
* மோசே, விடுதலைப் பயணம் 14:31
* யோசுவா, யோசுவா 24:29
* எலியா, 2 அரசர்கள் 9:36
* யோனா, 2 அரசர்கள் 14:25
* எசாயா, எசாயா 20:3
* தானியேல், தானியேல் 6:20

"என் ஊழியன் தாவீது" என்று ஆண்டவரே இறைவாக்கினர் நாத்தானிடம் உரைக்கிறார் (2 சாமுவேல் 7:5). இதன் வழியாக, தமது மக்களை நேரிய வழியில் நடத்தும் அரசர் தாவீது என்பதை ஆண்டவர் அங்கீகரித்தார். இந்த உண்மையை ஆசாபும் (78:70), ஏத்தானும் (89:3,20,39), பிற திருப்பாடல் இயற்றியோரும் (132:10, 144:10) நன்கு அறிந்திருந்தனர்.

மேற்கண்ட இறையடியாரின் வாழ்க்கை உணர்த்தும் உண்மை என்னவென்றால், கடவுளோடு சிறந்த ஐக்கியத்தில் இல்லாத எவரும் சிறந்த தலைவராக முடியாது.

2 சாமுவேல் 8:1-14ன் வெற்றிக்குப் பிறகு தாவீது இத்திருப்பாடலை எழுதினார் என்று கருதப்படுகிறது.
🕎

அமைப்பு:
வ.1-6, பற்றுறுதி அறிக்கையும், மீட்புக்கான மன்றாட்டும்
வ.7-15, ஆண்டவரின் பேராற்றல்
வ.16-19, எதிரிகளிடமிருந்து மீட்பு
வ.20-24, தாவீதின் நேர்மை
வ.25-27, நேர்மையானவர்களுக்கு ஆண்டவரின் ஆசி
வ.28-36, துதி
வ.37-45, ஆண்டவரின் வெற்றிகளை நினைவு கூறல்
வ.46-50, மீட்பிற்காக நன்றியும் துதியும்
🕎

வசனம் 18:1
இந்த வசனம், 2 சாமுவேல் 22ம் அதிகாரத்தில் இல்லை.

"உம்மிடம் நான் அன்பு கூர்கின்றேன்" -
மேலும், 116:1.
ஆண்டவரில் அன்பை வெளிப்படுத்தும் இரண்டு வசனங்கள் திருப்பாடல்களில் இவை மட்டுமே.

அன்பு என்ற சொல்லுக்கு இரண்டு இடங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் வேறு வேறு.

இங்கு பயன்படுத்தப்பட்ட சொல், raw-kham என்பது, அன்பு, கருணை, இரக்கம், கரிசனை என்று பொருள் படும். குறிப்பாக ஒரு தாய் செலுத்தும் அன்பு. கடவுளாகிய ஆண்டவர் வழங்கிய விதிமுறைகளின் மீது தாவீது கொண்டிருந்த அன்பை இவ்வாறு வெளிப்படுத்துகிறார்.

இறைவார்த்தைகளை எந்த அளவுக்கு நாம் நேசிக்கிறோம்?

வசனம் 18:2
இந்த வசனத்தில் "பாறை" என்று பொருள் படும் இரண்டு சொற்கள் வருகின்றன: seh-lah என்ற சொல் பாறை (OV, கன்மலை) இந்த வசனத்தில் அப்படியே குறிப்பிடப்பட்டுள்ளது; tsoor என்ற சொல், KJV மரபில் my strength என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது. பொது மொழிபெயர்ப்பில் "மலை" என்றும், OVயில் "துருகம்" (மதில் / கோட்டை) என்றும் பொருள் கொள்ளப்பட்டுள்ளது.

பாறை என்பது கடவுளைக் குறிக்கும் ஒரு சொல் (இணைச் சட்டம் 32:31&37; எசாயா 44:8).
ஆண்டவரின் தளர்வற்ற ஆற்றல், பாறை (எசாயா 26:4),
அடைக்கலம், பாதுகாப்பைத் தருவது, பாறை (18:31&46, 31:2-3, 42:9, 62:7, 71:3, 94:22; எசாயா 17:10);
ஆண்டவர் அருளும் மீட்பின் அடையாளம், பாறை (19:14, 62:2, 78:35, 89:26, 95:1; இணைச் சட்டம் 32:15);

இடுக்கண் மிகுந்த வேளைகளில் தாவீதின் அனுபவம், பாறை (1 சாமுவேல் 23:14&25, 24:2&22).

வசனம் 18:4-6
*தனது வாழ்க்கையில் எந்த அளவுக்கு ஆபத்துகள் சூழ்ந்துள்ளன என்று தாவீது சித்தரிக்கிறார்; ஆண்டவரின் உதவிக்காகக் கதறி மன்றாடிய அவர், ஒருபோதும் மனம் தளரவில்லை.*

வசனம் 18:4
"*சாவின் கயிறுகள்*' -
2 *சாமுவேல்* 22:5*ல், சாவின் அலைகள்.*

வசனம் 18:5
*பார்க்க*, 116:3.
"*பாதாளக் கயிறுகள்... சாவின் கண்ணிகள் ...*" -
*மரணத்தின் விளிம்பில் நிற்கும் துயரத்தைத் தாவீது நம் கண் முன் நிறுத்துகிறார்.*

வசனம் 18:6
"*கோவில்*" -
*பார்க்க*, 11:4
*தாவீதின் நாட்களில் எருசலேமில் ஆலயம் எழுப்பப்படவில்லை. என்றென்றைக்கும் ஆண்டவர் வீற்று அரசாளும் விண்ணகம் இங்கு கோவில் / ஆலயம் என்று சொல்லப்பட்டுள்ளது* (113:5).

வசனம் 18:7-15
*தாவீதின் கொடூரமான எதிரிகள் மீது அச்சுறுத்தும் ஆற்றல் மிக்க போராளியாக ஆண்டவர் வெளிப்படுகிறார். தாம் படைத்த இயற்கை ஆற்றல்களாகிய காரிருள் சூழ, புயலோடு சேர்ந்த மின்னல் இடி மழையாக, அவர் தாவீதின் எதிரிகளை வாரிச் சுருட்டி வீசி எறிந்தார்.*

*ஆண்டவரின் போர்கள், மேலும் வாசிக்க*: 68:1-3, 77:16-19; *யோசுவா* 10:11; *நீதித் தலைவர்கள்* 5:20-22; 1 *சாமுவேல்* 7:10; 2 *சாமுவேல்* 5:24; *எசாயா* 29:6; *மீக்கா* 1:3-4; *நாகூம்* 1:2-6; *அபக்கூக்கு* 3:3-15.

வசனம் 18:9
"*வானைத் தாழ்த்தி, அவர் கீழிறங்கினார்*" -
*இதுபோன்ற ஒரு காட்சியை நாம் விடுதலைப் பயணம்* 19:16-19 *மற்றும்* 20:18-21 *பகுதிகளில் வாசித்து அறிந்தோம்.*

வசனம் 18:10
"*கெருபு மீது*" -
*கெருபுகளை முதலாவதாக நாம் ஏதேன் தோட்டத்தில் பார்த்தோம் (தொடக்க நூல்* 3:24). *பொன்னால் செய்யப்பட்ட இரண்டு கெருபுகளை இரக்கத்தின் இருக்கையின் இரண்டு புறங்களிலும் வைக்குமாறு ஆண்டவர் மோசைக்குக் கட்டளையிட்டார் (விடுதலைப் பயணம்* 25:18). *உண்மையில் கெருபுகள் எப்படி இருக்கின்றன, அவை எவ்வளவு பயங்கரமாகச் செயல்படுகின்றன என்பதை எசேக்கியேல் (அதி.*1 & 10) *காட்சிகளாகக் கண்டு எழுதியுள்ளார்.*

வசனம் 18:13
*ஆண்டவரின் இடி முழக்கம் போன்ற குரல், பார்க்க*, 29:3-9; *விடுதலைப் பயணம்* 19:19; *யோபு* 37:2-5.

வசனம் 18:14
*ஆண்டவரின் மின்னலாகிய அம்புகள் -*
77:17, 144:5-6; *அபக்கூக்கு* 3:11.

வசனம் 18:15
*பார்க்க,* விடுதலைப் *பயணம்* 14:21-30.
*கடலின் ஆழத்தில் உலர்ந்த தரையில் நடந்து வந்த, இஸ்ரயேலரின் அனுபவத்தை நினைவூட்டும், ஆண்டவரின் ஆற்றல்.*

வசனம் 18:16-19
*எதிரிகளிடமிருந்து ஆண்டவரால் மீட்கப்பட்ட தாவீது.*

வசனம் 18:16
வெள்ளப் பெருக்கு, 32:6.
*பெரு வெள்ளம் எத்தகைய அச்சுறுத்தும் அழிவுகளை ஏற்படுத்துகிறது என்பதைக் கடந்த சில ஆண்டுகளாக நாம் பார்த்து வருகிறோம். மலைப்பாங்கான பகுதிகளில், ஒரு புறத்தில் இருந்து மட்டுமல்லாமல் பலமுனைத் தாக்குதல் நடத்தும் வெள்ளமும் ஏற்படுகிறது. எதிரிகளால் சுற்றி வலைக்கப்பட்ட அப்படியோரு நிலையில் இருந்த தாவீதை ஆண்டவர் எட்டிப் பிடித்துக் காத்தார்.*

வசனம் 18:19
*நெருக்கடியற்ற இடம் / அகண்ட இடம் / விசாலமான இடம்.*
*நமக்கு முன் விரிந்து பரந்த நிலம் கிடக்கிறது; ஆனால் எதிரிகளின் நெருக்குதலால்* (வ.4-6) *தாவீது ஒடுகலான இடத்தை விட்டு நகர முடியவில்லை. இப்போதோ தாவீது முற்றிலும் விடுவிக்கப்பட்டார்* (வ.16-18).

"*நான் அவர் மனதிற்கு உகந்தவன்*" -
*தமது மனதிற்கு உகந்தவனாகத் தாவீதை ஆண்டவர் தெரிந்து கொண்டார்* (1 *சாமுவேல்* 13:14&15:28). *பின்னாட்களில் அதைச் சாட்சியாக வெளிப்படுத்தினார்* (1 *அரசர்கள்* 14:8&15:5). *தன்னைப் பற்றி ஆண்டவர் வெளிப்படுத்தியதைத் தாவீது நம்பி, அதற்கேற்ற மனிதராக வாழ்ந்தார்.*

வசனம் 18:20-24
*தாவீதின் நேர்மை,* 17:3-5; *ஆண்டவர் அருளிய நேர்மைக்குரிய பரிசு, மீட்பு.*

*தாவீதைப் போல தங்கள் நேர்மையை அறிவித்தோர்:*
*யோபு, யோபு* 13:23, 27:6&31;
*சாமுவேல்,* 1 *சாமுவேல்* 12:3;
*எசேக்கியா,* 2 *அரசர்கள்* 20:3.
*தான் நேர்மையானவன் என்று தாவீது பெருமைப்படவில்லை* (51:5); *மாறாகத் தனது வாழ்க்கையை ஆண்டவரின் வழிகளில் நடப்பதற்கும், அரசர் என்ற பொறுப்பை அவருக்கு ஏற்புடைய வகையில் நிறைவேற்றுவதற்கும் ஒப்புக் கொடுத்ததன் விளைவாக இதனைப் பார்க்க வேண்டும்; இதுதான் தாழ்மையின் உள்ளத்தை அவருக்குள் உயிர்ப்போடு வைத்திருந்தது* (51:10-12).

வசனம் 18:25-27
*ஒருவர் நடக்கும் வழிகளுக்கு ஏற்ப ஆண்டவர் கைமாறு அளிக்கிறார்* (*நீதிமொழிகள்* 3:34).

*உண்மையுள்ளோருக்கு அவர் உண்மையாய் இருக்கிறார். மத்தேயு* 25:14-30 *பகுதியில், கிறிஸ்து இயேசு இதையே உவமை வழியாக விளக்குகிறார்.*

வசனம் 18:27
*சவுலின் வாழ்க்கை புரட்டிப் போடப்பட்டு, அந்த இடத்தின் உயரத்திற்குத் தாவீது எழுந்ததன் சுருக்கமாக இந்த உண்மை விளங்குகிறது.*
"*வலியோரின் வில்கள் உடைபடுகின்றன! தடுமாறினோர் வலிமை பெறுகின்றனர்!*"
(1 *சாமுவேல்* 2:4)

வசனம் 18:28-36
*ஆண்டவரின் ஆசியால் எத்திக்கும் வெற்றி பெற்று தனது ஆட்சியை நிலைநிறுத்தி, அமைதி கண்ட தாவீது, கடவுளாகிய ஆண்டவரைத் துதித்தார்.*

வசனம் 18:28
"*என் விளக்குக்கு ஒளி ஏற்றுகிறீர்*" -
*தலைமுறைகளை வாழ வைக்கும் ஆண்டவர்.*

வசனம் 18:29
மேலும், வ.33.
*இத்திருப்பாடலை எழுதும் போது, தாவீதுக்கு அகவை* 45 *அல்லது அதற்கு மேல் இருக்கலாம். இருபது ஆண்டுகளுக்கு மேலாகக் களத்தில் ஓடிக்கொண்டிருந்த தாவீது, இப்போதும் ஆண்டவரை, அவர் கடந்த காலங்களில் தனக்குச் செய்தவற்றை எண்ணும் போது, இளைஞனுக்கு ஏற்படும் உற்சாகம் கொண்டார். துள்ளி ஓடும் மானின் கால்கள் போல தனது கால்களில் ஓர் ஆற்றலை உணர்ந்த அவர், தன்னால் ஒரு மதிலையும் தாண்ட முடியும் என்று உற்சாகம் அடைந்தார்.*

*ஆண்டவரை நம்புவோருக்கு வயது ஒரு பொருட்டே அல்ல; எந்த வயதிலும், உடலையும் உள்ளத்தையும் உற்சாகமாக வைத்திருக்க நாம் செய்ய வேண்டியது, கடந்த காலங்களில் கடவுள் நமக்குச் செய்த அருஞ்செயல்களை எண்ணி, அவற்றிலிருந்து ஆற்றல் பெருவது தான்!*

வசனம் 18:30
"... *நிறைவானது* ... *நம்பத் தக்கது* ... (*பாதுகாப்பானது*)." -
*கடவுளின் வார்த்தையைக் குறித்த தாவீதின் சாட்சி.*
*பொருட்களை வாங்கும் போது,* "Tested OK" "Amazon fulfilled" *என்று பார்த்து வாங்குகிறோமே! அதுபோல, தான் அனுபவித்து உணர்ந்த இறைவார்த்தையின் மேன்மையை தாவீது முத்திரையிட்டார்.* Packed, sealed and delivered!

வசனம் 18:30, 35
"கேடயம்" -
*ஆண்டவரின் வாக்கு ஆபிராமுக்கு ஒரு காட்சி வழியாக ஏற்பட்டது:* "*ஆபிராம்! அஞ்சாதே. நான் உனக்குக் கேடயமாக இருப்பேன். உனக்குப் பெரும் கைம்மாறு கிடைக்கும்.*"
(தொடக்கநூல் 15:1).
*போரிடும் வீரருக்குக் கேடயம் எதிரியிடமிருந்து பாதுகாப்பு அளிக்க வல்லது. அத்தகைய பாதுகாப்பைத் தாமே வழங்குவதாக கடவுள் நம்பிக்கை அளிக்கிறார். தொடக்க நூலில், ஆபிராமிடம் தொடங்கிய இந்த வாக்குறுதி, எபேசியர்* 6:16*ல் நம்மிடம் வந்து நிற்கிறது; அது நம்பிக்கை என்னும் கேடயம்; தீயோனின் தீக்கணைகளை முறியடிக்க, நம்பிக்கை எனும் கேடயத்தைப் பிடித்திருக்கிறீர்களா?*

வசனம் 18:34
மேலும், 144:1.
"போருக்கு என்னை அவர் பழக்குகின்றார்" -
இதன் உண்மையை உணர வேண்டுமானால், 1 சாமுவேல் 17:39 மற்றும் கோலியாதைத் தாவீது வீழ்த்திய நிகழ்வை நினைவு கூருங்கள். ஆடு மேய்க்கும் இளைஞனை, ஒரு நாளில் நாடே கொண்டாடும் அளவுக்கு நுண்ணறிவைத் தந்து, தாவீதை ஆண்டவர் மாவீரனாக உயர்த்தினார்.

வசனம் 18:35
"துணை" -
OV, காருணியம்.
KJV, gentleness
எபிரேயத்தில், an-vaw - condescension, gentleness, humility - இவ்வாறு பொருள் கொள்ளலாம். புரியும் வகையில், கருணை எனலாம்.

வசனம் 18:37-42
கடவுளின் துணையால், எவ்வாறு தனது எதிரிகளைத் தாவீது அழித்தொழித்தார் என்பதை விவரிக்கிறார். போரிடும் ஆற்றலை ஆண்டவரே அருளியதாகக் குறிப்பிடுகிறார் (வ.39).
தன் எதிரிகளைக் களத்திலிருந்து புறமுதுகிட்டு ஓடச் செய்தவரும் ஆண்டவரே! (வ.40).
தாவீதுக்குத் துணை நின்று ஆண்டவர் போரிடுவதை உணர்ந்த எதிரிகள், ஆண்டவரை நோக்கி மன்றாடினார்கள்; அவரோ அவர்களுக்கு மறுமொழி தரவில்லை (வ.41).

வசனம் 18:43-45
ஆழங்களில் விழுந்த தாவீதை (வ.16), சாவின் விளிம்பு வரை சென்ற தாவீதை (வ.4-5), ஆண்டவர் மீட்டெடுத்து, நாடுகளும் ஏற்றுக் கொள்ளும் அரசனாக ஆக்கினார் (2 சாமுவேல் 8:1-12). அந்த நாட்டின் மக்கள், தாவீதோடு சேர்ந்து கடவுளைத் துதிப்போராக இருந்தனர் (வ.43&49; 67:4).

வசனம் 18:43
"... பிற இனங்களுக்கு... தலைவன்..." -
இவ்வசனம் தாவீதுக்கு உரியதாக மட்டும் இல்லாமல், தாவீதின் வழி வந்த ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவின் அரசாட்சியைக் குறிப்பதாக உள்ளது.

வசனம் 18:46-50
பாடலின் நிறைவுப் புகழ்ச்சி.
* என்றென்றும் வாழ்கிறார் மீட்பராம் கடவுள், வ.46
* மக்களினங்களை ஆள்பவர் கடவுள், வ.47
* கொடுமைகளுக்கு எதிராகப் போரிடுபவர் கடவுள், வ.48.
* அவர் திருப்பொழிவு செய்த (1 சாமுவேல் 16:13) அரசருக்கு மாபெரும் வெற்றிகளை அருளியவர் கடவுள், வ.50.
* தலைமுறைகளையும் ஆசீர்வதித்து நடத்துபவர் கடவுள், வ.50.
அத்தகைய கடவுள், தாவீதின் கடவுள். அவரை வேற்றின மக்களிடையே தாவீது போற்றினார்; யாவே என்னும் உடன்படிக்கைப் பெயருக்குப் புகழ்மாலை செலுத்தும் இந்தப் பாடலை இயற்றினார்.

பழைய ஏற்பாட்டின் ஊழிய வசனமாக 18:50 (2 சாமுவேல் 22:50) பார்க்கப்படுகிறது. இந்த வசனத்தைப் பவுலடிகள் உரோமையர் 15:9ல் எடுத்தாளுகிறார். இவ்வாறு மிஷனரி ஊழியத்தைத் தாவீதே தொடங்கி விட்டார் (117:1).

நம் ஒவ்வொருவரையும் ஆண்டவர் பெயர் சொல்லி அழைத்தார்; ஆவியின் அருட்பொழிவைத் தருகிறார்; இறுதி மட்டும் நடத்துகிறார்; என்றும் வாழும் கடவுளுக்காக இறுதி வரை வாழ்வோமா!

## 19 திருப்பாடல் 19

(படைப்பில் கடவுளின் மாட்சி)

*பாடகர் தலைவர்க்கு; தாவீதின் புகழ்ப்பா*

1 வானங்கள்
இறைவனின் மாட்சிமையை
வெளிப்படுத்துகின்றன;
வான்வெளி
அவர்தம் கைகளின் வேலைப்பாட்டை
விவரிக்கின்றது.
2 ஒவ்வொரு பகலும் அடுத்த பகலுக்கு
அச்செய்தியை அறிவிக்கின்றது;
ஒவ்வோர் இரவும் அடுத்த இரவுக்கு
அதைப்பற்றிய அறிவை வழங்குகின்றது.
3 அவற்றுக்குச் சொல்லுமில்லை,
பேச்சுமில்லை;
அவற்றின் குரல் செவியில் படுவதுமில்லை.
4 ஆயினும்,
அவற்றின் அறிக்கை
உலகெங்கும் சென்றடைகின்றது;
அவை கூறும் செய்தி
உலகின் கடையெல்லைவரை
எட்டுகின்றது,
இறைவன்
அங்கே கதிரவனுக்கு
ஒரு கூடாரம் அமைத்துள்ளார்.
5 மணவறையிலிருந்து புறப்படும்
மணமகனைப் போல
அது வருகின்றது;
பந்தயத்தில் ஓடும் வீரரைப்போல்
அது தன் பாதையில் ஓடுகின்றது.
6 அது வானத்தின் ஒரு முனையிலிருந்து
புறப்படுகின்றது;
அதன் பாதை
மறுமுனை வரையிலும் செல்கின்றது;
அதன் வெப்பத்திற்கு
மறைவானது ஒன்றுமில்லை.
7 ஆண்டவரின் திருச்சட்டம் நிறைவானது;
அது புத்துயிர் அளிக்கின்றது.
ஆண்டவரின் ஒழுங்குமுறை நம்பத்தக்கது;
எளியவருக்கு அது ஞானம் அளிக்கின்றது.

8 ஆண்டவரின் நியமங்கள் சரியானவை;
அவை இதயத்தை மகிழ்விக்கின்றன.
ஆண்டவரின் கட்டளைகள் ஒளிமயமானவை;
அவை கண்களை ஒளிர்விக்கின்றன.
9 ஆண்டவரைப் பற்றிய அச்சம் தூயது;
அது எந்நாளும் நிலைத்திருக்கும்.
ஆண்டவரின் நீதிநெறிகள் உண்மையானவை;
அவை முற்றிலும் நீதியானவை.
10 அவை பொன்னினும்,
பசும் பொன்னினும்
மேலாக விலைமிக்கவை;
தேனினும்
தேனடையினின்று சிந்தும் தெளிதேனினும்
இனிமையானவை.
11 அவற்றால்
அடியேன் எச்சரிக்கப்படுகின்றேன்;
அவற்றைக் கடைப்பிடிப்போர்க்கு
மிகுந்த பரிசுண்டு.
12 தம் தவறுகளை உணர்ந்து கொள்பவர் யார்தாம்?
என் அறியாப் பிழைக்காக என்னை மன்னியும்.
13 மேலும்,
ஆணவமிக்கோரிடமிருந்து உம் அடியானைக் காத்தருளும்.
அவர்கள் என்னை ஆட்டிப் படைக்காதிருக்கட்டும்;
அப்பொழுது,
நான் மாசற்றிருப்பேன்;
பெரும்பிழை எதையும் செய்யாதிருப்பேன்.
14 என் கற்பாறையும் மீட்பருமான ஆண்டவரே!
என் வாயின் சொற்கள்
உமக்கு ஏற்றவையாய் இருக்கட்டும்;
என் உள்ளத்தின் எண்ணங்கள்
உமக்கு உகந்தவையாய் இருக்கட்டும்.

திருப்பாடல் 19:1-14

**சிந்தனைக்கு**

திருப்பாடல்கள் 15 முதல் 24 வரை உள்ள பாடல்கள் ஒரு தொகுப்பு என்றால், அவற்றில் நடுநாயகமாக வீற்றிருப்பது, திருப்பாடல் 19 (பார்க்க, திருப்பாடல் 15ன் முன்னுரை).

வெவ்வேறு பொருள்பட இப்பாடல்கள் அமைந்திருந்தாலும், அனைத்திலும் பொதுவாக இருப்பது, ஆண்டவரைப் புகழ்தல். இத்திருப்பாடலில், கடவுளைப் புகழ்தல் முழுமை பெறுகிறது: படைப்பில் வெளிப்படும் இறைவரின் மாட்சிக்காகப் புகழ்ச்சி; வாழ்க்கையைப் புதுப்பித்துப் பண்படுத்தும் அவர்தம் வார்த்தைக்காகப் புகழ்ச்சி; கடவுளின் பேரன்பை வெளிப்படுத்தும், அவரது மன்னிப்பிற்காகப் புகழ்ச்சி.

சுருக்கமாகச் சொன்னால், படைப்பிலும், வார்த்தையிலும் வெளிப்படும் வாழ்வளிக்கும் ஆண்டவரைத் துதித்தலே இப்பாடல்.

அமைப்பு:
வ.1-6, படைக்கப்பட்ட இயற்கை, பொது வெளிப்பாடு
வ.7-11, கொடுக்கப்பட்ட இறைச்சட்டம், சிறப்பான வெளிப்பாடு
வ.12-14, பெற்றுக் கொண்ட மன்னிப்பும் வாழ்வும், தனிப்பட்ட வெளிப்பாடு.

புகழ்பெற்ற வசனமாக, 19:14 திகழ்கிறது. படைப்பாளரிடம் தொடங்கி மீட்பரிடம் நிறைவடைகிறது.

வசனம் 19:1
படைப்புகள் அனைத்தும் ஆண்டவரின் மாட்சியை வெளிப்படுத்துகின்றன. அவற்றுள் வான்வெளி சிறப்பிடம் பெறுகிறது. ஏனெனில் உலகின் எந்த மூலையில் ஒருவர் வாழ்ந்தாலும், வான்வெளியின் சிறப்புகளைக் கண்டு உணர முடியும். பூகோள அடிப்படையில், தாவரங்கள் மற்றும் விலங்குகள், இடத்திற்கு இடம் வேறுபடுகின்றன; ஆனால் காற்று, மழை, இடி, மின்னல், கதிரவன், நிலவு, விண்மீன்கள் என அனைத்தும், தமிழ்நாட்டில் வாழ்பவருக்கும் கனடாவில் வாழ்பவருக்கும் ஒன்றே. நலமான எதுவும் விண்ணிலிருந்து வருவதால், ஆதி மனிதர்கள் கதிரவன், நிலவு, விண்மீன்கள், இடி, மழை போன்றவற்றை வழிபட்டு வந்தனர். ஆனால் பைபிள் நமக்குத் தெளிவாகப் போதிக்கிறது - இவற்றில் இறைத்தன்மை எதுவும் கிடையாது (தொடக்க நூல் 1:16; இணைச் சட்டம் 4:19, 17:3); மேலும் அவை யாருடைய எதிர்காலத்தையும் தீர்மானிப்பதில்லை (எசாயா 47:13; எரேமியா 10:2; தானியேல் 4:7). காலங்கள் கடவுளின் கரங்களில் இருக்கின்றன.

வசனம் 19:2-4ஆ
வான்வெளி தரும் செய்தி, முடிவின்றித் தொடர்ந்து கொண்டே இருக்கிறது; அதற்கு மொழி கிடையாது; வெவ்வேறு மொழிகளைப் பேசும் மனிதர்களுக்கு அது வழங்கும் அறிவு ஒன்றே! அப்பல்லோ விண்கலமானாலும், சந்திராயன் ஆனாலும், அவை ஆய்ந்து அறியும் உண்மை ஒன்றே! சென்று ஆய்வு செய்ய முடியாத அந்தக் காலத்தில், விண்வெளி குறித்த செய்திகளை அவையே உலகிற்கு அறிவித்தன; அந்தச் செய்தி, 'அற்புதமாகப் படைத்த, கடவுளைப் போற்றுங்கள்' என்பதே!

பவுல் அடிகளார் இந்த வசனத்தை, நற்செய்தி அறிவிக்கும் பணியோடு இணைத்துப் பயன்படுத்துகிறார் (உரோமையர் 10:18).

வசனம் 19:4இ-6
கதிரவனைத் தாவீது வியந்து பார்க்கிறார். இஸ்ரயேலைச் சுற்றியிருந்த மக்களினங்கள், கதிரவனைத் தெய்வமாக வழிபட்டனர் (இணைச் சட்டம் 4:19). ஆனால், தாவீதோ அதனைக் கடவுளின் சிறந்த படைப்பாகக் கண்டு வியக்கிறார். கடவுளின் மாட்சி விளங்கும் மாபெரும் படைப்பு, கதிரவன் (மேலும் பார்க்க, எசாயா 60:19-20).

இஸ்ரயேலரின் வாழ்க்கையில் மணமகனின் வருகை சிறப்பானதொரு நிகழ்வு; மணமகளை நிச்சயித்த பிறகு, மணமகன் திருமணத்திற்கும் அதற்குப் பிந்தைய வாழ்வின் அடிப்படைத் தேவைக்கும் ஆகக்கூடிய பொருளைச் சேர்த்து, தானும் தன் வருங்கால மனைவியும் வாழ்வதற்கான இடத்தை ஆயத்தம் செய்த பிறகே, அவன் வந்து மணமுடித்து தன் மனைவியைத் தான் ஆயத்தம் செய்த இல்லத்திற்கு அழைத்துச் செல்வான். எனவே மணமகனின் வருகை மணமகளுக்கு மிகுந்த எதிர்பார்ப்பையும், ஏக்கத்தையும், புதிய கனவுகளையும் தரக் கூடியது. ஆயத்தங்களைச் சிறப்பாகச் செய்த மணமகன் எவ்வாறு கம்பீரமாகப் பெருமையோடு வருவானோ, அவ்வாறு தாவீது கதிரவனின் வருகையைப் பார்க்கிறார். நமக்கு ஓரிடத்தை

ஆயத்தம் செய்து வருவதாகக் கூறிச் சென்ற கிறிஸ்துவாகிய மணவாளன் வானில் தம் மாட்சியோடு வர நாம் காத்திருக்கிறோம்.

"வெப்பத்திற்கு மறைவானது" -
கதிரவனின் வெம்மைக்கு மறைவானது எதுவும் இல்லை; நுண்ணுயிர்கள் அதனாலேயே தோன்றுகின்றன, வாழ்கின்றன, பின்னர் அழிகின்றன. உயிரினச் சமநிலையைப் பேணுவதாகக் கதிரவனின் வெப்பம் உள்ளது.

வசனம் 19:7-11
இறைவார்த்தையைப் புகழும் பாடல். மேலும் பார்க்க, 119.
படைப்பில் வெளிப்படுவது, இறைமாட்சி; வார்த்தையில் வெளிப்படுவது, மீட்கும் கிருபை.
திருச்சட்டம்,
ஒழுங்குமுறை,
நியமம்,
கட்டளை,
அச்சம்,
நீதிநெறி
- இத்தனையும் இங்கு இறைவார்த்தையைக் குறிப்பன.

நிறைவு,
நம்பகம்,
சரி,
தூய்மை,
நிலைத்தன்மை,
உண்மை
- இறைவார்த்தையின் தன்மையைக் குறிப்பன.

புத்துயிர்,
ஞானம்,
மகிழ்வு,
ஒளிர்விப்பு,
இனிமை,
எச்சரிக்கை
- இவையெல்லாம் இறைவார்த்தை நமக்கு அருளும் ஆசிகள்.

இறைவார்த்தைகளைக் கடைப்பிடிப்போருக்கு இம்மையில் கிடைக்கும் நன்மைகள் மட்டுமல்ல, மறுமையிலும் வெற்றியின் மணிமுடி பரிசாகக் காத்திருக்கிறது (2 திமொத்தேயு 4:8) (4:7, OV).

வசனம் 19:8
"ஆண்டவரின் கட்டளைகள் ஒளிமயமானவை" -
OV, கர்த்தருடைய கற்பனை தூய்மையானது.
இங்கு பயன்படுத்தப்பட்ட எபிரேயச் சொல், bar; இதற்குத் தூய்மை / தெளிவு / வெறுமை / சுத்தம் என்று பொருள் கொள்ளலாம். இந்தச் சொல், ஞான இலக்கிய நூல்களில் மட்டும் ஏழு முறை இடம்பெறுகிறது (யோபு 11:4; திருப்பாடல் 19:8, 24:4, 73:1; நீதிமொழிகள் 14:4; இனிமைமிகு பாடல் 6:9&10). பொதுவாக, உளத் தூய்மையோடு தொடர்புபடுத்தி இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசனத்தில், கண்களை ஒளிர்விப்பதாக ஆண்டவரின் கட்டளை திகழ்கிறது (நீதிமொழிகள் 4:18).

வசனம் 19:12-13
*பத்சேபா, உரியா மற்றும் தாவீதின் தொடர்பில், இவ்வசனங்களை இணைத்து விளக்குவோர் உண்டு; இறைவாக்கினர் நாத்தான் வழியாகக் கடவுள் தாவீதுக்கு அந்தப் பாவத்தை வெளிப்படுத்திய பிறகு, அது இனியும் மறைமுகப் பாவம் அல்ல.*

*எனவே இந்த வசனங்கள் நமக்கு எச்சரிக்கையாகவே வைக்கப்பட்டுள்ளன. தான் அறியாமல் செய்த தவறுகளுக்கு மன்னிப்பைத் தாவீது வேண்டுகிறார். தான் தவறு என்று உணர்ந்தவைகளைச் செய்யத் தன்னை வலியுறுத்தும் ஆணவமிக்கோரிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள ஆண்டவரிடம் வேண்டுகிறார்.*

வசனம் 19:14
*எண்ணங்களும் சொற்களும் தூய்மையாக இருந்து விட்டால், நமது செயல்கள் அனைத்தும் ஆண்டவருக்கு ஏற்புடையதாக இருக்கும் அன்றோ!*

*அதற்கு, பாவத்தில் விழாதபடி நம்மைக் காக்கும் கன்மலையாகவும், பாவத்தில் வீழ்ந்து விட்டால், மன்னித்துத் தூக்கி எடுத்து மீட்பவராகவும் ஆண்டவரே இருக்கிறார். எனவே அந்த ஆண்டவரிடம் தாவீதைப் போல நாமும் மன்றாடுவோம்!*

✝

## 19 திருப்பாடல் 20

(அரசரின் வெற்றிக்காக வேண்டல்)

*பாடகர் தலைவர்க்கு; தாவீதின் புகழ்ப்பா*
1 நெருக்கடி வேளையில்
உமக்கு ஆண்டவர் பதிலளிப்பாராக!
யாக்கோபின் கடவுளது பெயர்
உம்மைப் பாதுகாப்பதாக!
2 தூயகத்திலிருந்து அவர்
உமக்கு உதவி அனுப்புவாராக!
சீயோனிலிருந்து அவர்
உமக்குத் துணை செய்வாராக!
3 உம் உணவுப் படையலை எல்லாம்
அவர் நினைவில் கொள்வாராக!
உமது எரி பலியை
ஏற்றுக்கொள்வாராக!
4 உமது மனம் விரும்புவதை
அவர் உமக்குத் தந்தருள்வாராக!
உம் திட்டங்களையெல்லாம்
நிறைவேற்றுவாராக!
5 உமது வெற்றியைக் குறித்து
மகிழ்ச்சியில் ஆர்ப்பரிப்போமாக!
நம் கடவுளின் பெயரால்
வெற்றிக்கொடி நாட்டுவோமாக!
உம் விண்ணப்பங்களையெல்லாம்
ஆண்டவர் நிறைவேற்றுவாராக!

6 ஆண்டவர்
தாம் திருப்பொழிவு செய்தவருக்கு
வெற்றி தருகின்றார்.
தமது தூய வானத்திலிருந்து
அவருக்குப் பதிலளிக்கின்றார்.
வெற்றியளிக்கும் தமது வலக்கையின்
ஆற்றலைக் காட்டுகின்றார் என்று
இப்பொழுது நான் அறிந்து கொள்கிறேன்.
7 சிலர் தேர்ப்படையிலும்,
சிலர் குதிரைப் படையிலும்
பெருமை கொள்கின்றனர்;
நாமோ நம் கடவுளாகிய ஆண்டவரின் பெயரில்
பெருமை கொள்கின்றோம்.
8 அவர்கள் தடுமாறி வீழ்ந்தார்கள்;
நாமோ நிமிர்ந்து உறுதியாய் நிற்கின்றோம்.
9 ஆண்டவரே,
அரசருக்கு வெற்றியருளும்;
நாங்கள் கூப்பிடும் வேளையில்
எங்களுக்குப் பதிலளியும்.

திருப்பாடல் 20:1-9

**சிந்தனைக்கு**

போரில் தங்கள் அரசரின் வெற்றியை வேண்டிப் பாடப்பட்ட பாடல் என்றாலும், வாழ்வின் எத்தகைய சவாலையும் மேற்கொள்ள, பொதுவான வேண்டுதலாக இந்தப் பாடலை நினைவில் கொள்ளலாம். வ.7 மிகச்சிறந்த விசுவாச அறிக்கையாக விளங்குகிறது.

அரசருக்குரிய இத்திருப்பாடல், 2 சாமுவேல் 10ம் அதிகார நிகழ்வுகளின் பின்னணியில் பாடப்பட்டிருக்கலாம்.

15 முதல் 24 வரை அடங்கிய திருப்பாடல்கள் தொகுப்பில், பாடல் 18 அரசரின் குரலாக ஒலிக்கிறது என்றால், பாடல்கள் 20&21, மக்களின் குரல்களாக முழங்குகின்றன.

அமைப்பு:
வ.1-5, போரில் இறையாசி வேண்டல்
வ.6, வெற்றி தரும் ஆண்டவர்
வ.7-9, கடவுள் மீதுள்ள ஆழ்ந்த நம்பிக்கை

வசனம் 20:1
"நெருக்கடி வேளையில்" -
இங்கு போர் நெருக்கடியாக இருப்பினும், பற்றுறுதியாளரின் வாழ்க்கையில் வரக்கூடிய எந்த நெருக்கடியோடும் இப்பாடலைப் பொருத்திப் பார்க்கலாம்.

"யாக்கோபின் கடவுள்" -
தனி ஒருவரைக் குறிக்காமல், இஸ்ரயேல் என்னும் நாட்டைக் குறிக்கிறது.

வசனம் 20:2
"சீயோனிலிருந்து" -
இந்தப் பாடல் பாடப்பட்ட காலத்தில், ஆண்டவரின் இல்லம் சீயோனில் எழுப்பப்படவில்லை.

வசனம் 20:5
"உமது வெற்றியை" -
OV, உமது இரட்சிப்பினால்;
எபிரேயத்தில், Yeshoo-aw, இரட்சிப்பு, மீட்பு, நன்மை, செழிப்பு, வெற்றி. அரசரின் வெற்றி, ஆண்டவரின் இரட்சிப்பு!

வசனம் 20:6
ஆண்டவரின் திருப்பொழிவைப் பெற்றவர் தாவீது, 18:50.
அரசர்களுக்கெல்லாம் அரசரான ஆண்டவரால் ஆட்சியில் அமர்த்தப்பட்ட, அரசர் தாவீது.

"வெற்றியளிக்கும் தமது வலக்கையின் ஆற்றல்" -
பார்க்க, 17:7, 44:3, 118:16; விடுதலைப் பயணம் 15:6.
எகிப்தியப் படைகளை வீழ்த்திய, கடவுளாகிய ஆண்டவரின் ஆற்றல் மிக்க வலக்கரம்.

"நான் அறிந்து கொள்கிறேன்" -
பாடலின் இந்த அடியைப் பாடியவர், படைகள் அணிவகுத்து நிற்க, அங்கு எக்காளம் முழக்க வந்த ஒரு குருவாகவோ, லேவியராகவோ இருக்கலாம்.

வசனம் 20:7
மேலும் பார்க்க, 33:16-17.
தேர்கள் மற்றும் குதிரைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில், பண்டைய நாடுகளின் படைபலம் மதிப்பிடப்பட்டது.

ஆனால் தாவீதோ, தேர்ப்படைக்கோ, குதிரைப்படைக்கோ, ஒருபோதும் சிறப்பிடம் கொடுத்ததில்லை. எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய தேர்களைக் கூட, தாவீது அரசர் உடைத்தெறிந்தார் (2 சாமுவேல் 8:4). கடவுளின் மீதான நம்பிக்கையில் அவர் அந்த அளவுக்கு உறுதியாக இருந்தார் (பார்க்க, 1 சாமுவேல் 17:45-47). மேலும் குதிரைகளை மிகுதியாகச் சேர்க்க வேண்டாம் என்பது மோசே வழியாக அரசருக்கு வழங்கப்பட்ட கட்டளை (இணைச் சட்டம் 17:16).

இந்த வசனத்தை நாம் தியானிக்கும் இந்த நாளில், ஆஃப்கனிலிருந்து அமெரிக்கப் படைகள் முற்றிலுமாக வெளியேறிக் கொண்டுள்ளன. உலகின் மகா பெரிய வல்லரசு, நவீன போர்க் கருவிகளைக் கொண்ட வலிமை மிக்க நாடு - அவை அனைத்தின் வல்லமையாலும் தீவிரவாதக் குழுக்களை வெல்ல முடியாமல், வெளியேறிக் கொண்டுள்ளது. 20 ஆண்டுகளில் இந்தப் போருக்கு அமெரிக்கா விரயம் செய்த தொகையைக் கொண்டு, ஆண்டவருக்கு மாட்சிமை உண்டாக, உலகெங்கிலும் வறுமையில் வாழும் மக்களின் துயர்களைத் துடைத்திருக்கலாம். அந்த அளவுக்குப் பெரும் பொருளைச் செலவழித்தும் அமெரிக்காவுக்குக் கிடைக்காதது வெற்றி! "கடவுளில் நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம்" என்று பிரகடனம் செய்த நாடே ஆனாலும், கடவுளுக்குப் பிரியமில்லாத செயல்களைச் செய்தால், அவர் வெற்றி அருள மாட்டார்.

வசனம் 20:9
முதல் வசனத்தைப் பிரதிபலிக்கும் இறுதி வசனம்.

"போர் நாளுக்கென்று குதிரையை ஆயத்தமாக வைத்திருக்கலாம்; ஆனால் வெற்றி கிடைப்பது ஆண்டவராலேயே." (நீதிமொழிகள் 21:31)

## 19 திருப்பாடல் 21

(அரசரின் வெற்றிக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துதல்)

*பாடகர் தலைவர்க்கு; தாவீதின் புகழ்ப்பா*

1 ஆண்டவரே, உமது வல்லமையில்
அரசர் பூரிப்படைகின்றார்;
நீர் அளித்த வெற்றியில்
எத்துணையோ அவர் அக்களிக்கின்றார்!
2 அவர் உள்ளம் விரும்பியதை
நீர் அவருக்குத் தந்தருளினீர்;
அவர் வாய்விட்டுக் கேட்டதை
நீர் மறுக்கவில்லை.
3 உண்மையில்
நலமிகு கொடைகள் ஏந்தி
நீர் அவரை எதிர்கொண்டீர்;
அவர் தலையில்
பசும்பொன்முடி சூட்டினீர்.
4 அவர் உம்மிடம்
வாழ்வுவேண்டி நின்றார்;
நீரும் முடிவில்லா நீண்ட ஆயுளை
அவருக்கு அளித்தீர்.
5 நீர் அவருக்கு வெற்றியளித்ததால்
அவரது மாட்சிமை பெரிதாயிற்று;
மேன்மையையும் மாண்பையும்
அவருக்கு அருளினீர்,
6 உண்மையாகவே,
எந்நாளும் நிலைத்திருக்கும் ஆசிகளை
அவர் பெற்றுள்ளார்;
உமது முகத்தை
அவர் மகிழ்ச்சியுடன் கண்டு
களிக்கச் செய்தீர்.
7 ஏனெனில்,
அரசர் ஆண்டவரில்
நம்பிக்கை வைக்கின்றார்;
உன்னதரின் பேரன்பினால்
அவர் அசைவுறாதிருப்பார்.
8 உமது கை
உம் எதிரிகளையெல்லாம்
தேடிப்பிடிக்கும்;
உமது வலக்கை
உம்மை வெறுப்போரை எட்டிப்பிடிக்கும்.
9 நீர் காட்சியளிக்கும் பொழுது,
அவர்களை நெருப்புச்சூளை ஆக்குவீர்;
ஆண்டவர் சினங்கொண்டு

*அவர்களை அழிப்பார்;*
*நெருப்பு அவர்களை விழுங்கிவிடும்.*
10 *அவர்கள் தலைமுறையைப்*
*பூவுலகினின்று ஒழித்துவிடுவீர்;*
*அவர்கள் வழிமரபை*
*மனுமக்களிடமிருந்து எடுத்துவிடுவீர்.*
11 *உமக்கெதிராய்ச் சூழ்ச்சி செய்தாலும்,*
*சதித்திட்டம் தீட்டினாலும்,*
*அவர்களால் வெற்றிபெற இயலாது.*
12 *நீரோ அம்புகளை நாணேற்றி*
*அவர்களது முகத்தில் எய்வீர்;*
*அவர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்வீர்.*
13 *ஆண்டவரே,*
*உமது வலிமையோடு எழுந்து வாரும்;*
*நாங்கள் உமது வல்லமையைப்*
*புகழ்ந்து பாடுவோம்.*

திருப்பாடல் 21:1-13

**சிந்தனைக்கு**

*அரசருக்குரிய திருப்பாடல். இருபதாம் திருப்பாடலின் மறுபாதி; அது அரசரின் வெற்றிக்கான மன்றாட்டுப் பாடல் எனில், இது அரசரின் வெற்றிக்கான நன்றி மற்றும் துதிப் பாடல். திருப்பாடல் 20ல், அரசரின் மன்றாட்டு மக்களின் மன்றாட்டாக மாறுகிறது; இங்கு ஆண்டவரில் களிகூரும் அரசரின் துதி (வ.1), இறுதியில் மக்களின் துதியாக உயர்வடைகிறது (வ.13).*

*திருப்பாடல் 20, ஆண்டவர் பதிலளிக்க வேண்டி, அவ்வாறே முடிகிறது; இப்பாடல், ஆண்டவரின் வல்லமையில் மகிழ்ந்து, வல்லமையைப் புகழ்ந்து நிறைவடைகிறது.* 🕎

*அமைப்பு:*
வ.1-2, *ஆண்டவரில் களிகூரும் அரசர்; அரசரிடம் அன்பு கொண்ட ஆண்டவர்*
வ.3-7, *அரசருக்கு ஆசி அருளும் ஆண்டவர்*
வ.8-12, *அரசரின் இறுதி வெற்றிக்காக வேண்டல்*
வ.13, *துதித்தலுக்கான மக்களின் அர்ப்பணிப்பு*
🕎

வசனம் 21:1
*அரசர்கள் தங்கள் பலத்தில், படைத் திரளில் பெருமை கொள்வர்; ஆனால் தாவீதோ ஞானமுள்ள அரசர், ஆண்டவரின் வல்லமையில் மகிழ்கிறார். அதனைத் தாவீது இங்கு அறிவிக்கவில்லை; அவருக்குச் சாட்சியாக, மக்கள் அறிவிக்கிறார்கள்!*

*இன்றைக்கு நாம் பணிபுரியும் இடங்களில், நம்மைக் குறித்த மற்றவர்களின் சாட்சி என்ன?*

வசனம் 21:2
"*உள்ளம் விரும்பியது*" -
*பார்க்க,* 20:4.
*கடவுளின் புகழுக்கும் மாட்சிக்குமுரிய செயல்களை நாம் விரும்பி வேண்டினால், அவர் நிச்சயமாக நமது உள்ளம் விரும்பியதை நிறைவேற்றுவார்* (37:4; 145:19).

*நமது தினசரி ஜெபங்களில், கடவுளின் மாட்சிக்குரியவைகளை வேண்டுகிறோமா?*

*வசனம்* 21:3
"*நலமிகு கொடைகள்*" -
*தாவீதின் வாழ்க்கையில் ஆண்டவரிடமிருந்து அவர் பெற்றுக் கொண்ட யாவும் அருள் கொடைகளே! தாவீதின் வாழ்க்கையைச் சற்று யோசிப்போம்: எப்போதாவது தான் முடிசூட்டப்பட அவர் ஆண்டவரை வேண்டினாரா? இரண்டு முறை சவுல் அரசரை ஆண்டவர் தாவீதின் கையில் கொடுத்தார்; இரண்டு முறையும் உலக வழக்கப்படி தாவீது நடக்கவில்லை. அவருடைய நீதி உயர்ந்து இருந்ததால், ஆண்டவரே அவரை உயர்த்தி, சுற்றிலும் இருந்த நாடுகளையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினார். அவருக்கு என்றுமுள வாழ்வையும் அளித்து, இன்றைக்கும் தாவீதின் பெயரை ஆண்டவர் பெருமைப்படுத்துகிறார்.*

*வசனம்* 21:4
*தாவீது வேண்டியது வாழ்வு; அதை மட்டுமல்லாமல், நிலை வாழ்வை ஆண்டவர் அவருக்கு அருளினார்.*

*வசனம்* 21:5
*பார்க்க,* 96:2-3.
*ஆண்டவரை நாம் துதித்து மேன்மைப்படுத்த, அவர் நம்மை மென்மேலும் உயர்த்துகிறார்.*

*வசனம்* 21:6
"*நிலைத்திருக்கும் ஆசி*" -
*கடவுள் அருளும் ஆசியின் தன்மை; விலைமதிப்பற்றது; அழியாதது. என்றைக்கும் தொடர்ந்து வருவது.*

*ஆசீர்வாதம் என்று நாம் சொல்லுபவை இத்தன்மையைக் கொண்டிருக்கிறதா?*

*வசனம்* 21:8-12
*அரசரின் எதிரிகள் ஆண்டவரின் எதிரிகள்; ஆண்டவரின் எதிரிகள் அரசரின் எதிரிகள். எனவே அரசரின் போர், ஆண்டவரின் போர்; அவரே எதிரிகளை மேற்கொள்வார்.*

*நமது செயல்களை இந்த அளவுக்கு ஆண்டவரோடு இணைத்துப் பார்க்க முடியுமா?*

*வசனம்* 21:9
"*ஆண்டவரின் சினம்*" -
*அடையாளங்களாக வெளிப்படும் சினம்; அதுமட்டுமல்லாமல், தீர்ப்பின் நாளிலே இவ்வுலகில் வெளிப்படும் சினம்* (*யோவேல்* 2:1; *செப்பனியா* 1:14).

*வசனம்* 21:13
*தாவீது அரசரோடு சேர்ந்து, அவருடைய வெற்றிகளுக்காகத் தங்களையும் ஆண்டவரின் துதியில் அர்ப்பணிக்கும் மக்கள்.*

*உங்களுடைய வெற்றியைத் திருச்சபை கொண்டாடுகிறதா?*
*உங்கள் வாழ்க்கை, சபையோடு இணைந்த வாழ்க்கையாக இல்லாமல், தனிப்பட்ட வாழ்க்கையாக இருக்கிறதா?*
*சபை ஐக்கியத்தில் நீங்கள் எந்த இடத்தில் இருக்கிறீர்கள்?*

✝

## 19 திருப்பாடல் 22

(துயர் மிகு புலம்பல்)

*பாடகர் தலைவர்க்கு; "காலைப் பெண் மான்" என்ற மெட்டு; தாவீதின் புகழ்ப்பா*

1. என் இறைவா, என் இறைவா,
ஏன் என்னைக் கைவிட்டீர்?
என்னைக் காப்பாற்றாமலும்,
நான் தேம்பிச் சொல்வதைக் கேளாமலும்
ஏன் வெகு தொலையில் இருக்கின்றீர்?
2. என் கடவுளே,
நான் பகலில் மன்றாடுகின்றேன்;
நீர் பதில் அளிப்பதில்லை,
இரவிலும் மன்றாடுகின்றேன்;
எனக்கு அமைதி கிடைப்பதில்லை.
3. நீரோ தூயவராய் விளங்குகின்றீர்;
இஸ்ரயேலின் புகழ்ச்சிக்கு உரியவராய்
வீற்றிருக்கின்றீர்;
4. எங்கள் மூதாதையர்
உம்மில் நம்பிக்கை வைத்தனர்;
அவர்கள் நம்பியதால்
நீர் அவர்களை விடுவித்தீர்.
5. உம்மை அவர்கள் வேண்டினார்கள்;
விடுவிக்கப்பட்டார்கள்;
உம்மை அவர்கள் நம்பினார்கள்;
ஏமாற்றமடையவில்லை.
6. நானோ ஒரு புழு, மனிதனில்லை;
மானிடரின் நிந்தைக்கு ஆளானேன்;
மக்களின் இகழ்ச்சிக்கு உள்ளானேன்.
7. என்னைப் பார்ப்போர் எல்லாரும்
ஏளனம் செய்கின்றனர்;
உதட்டைப் பிதுக்கித் தலையசைத்து,
8. 'ஆண்டவர்மீது நம்பிக்கை வைத்தானே!
அவர் இவனை மீட்கட்டும்;
தாம் அன்பு கூர்ந்த இவனை
அவர் விடுவிக்கட்டும்'' என்கின்றனர்.
9. என்னைக் கருப்பையினின்று
வெளிக்கொணர்ந்தவர் நீரே;
என் தாயிடம் பால்குடிக்கையிலேயே
என்னைப் பாதுகாத்தவரும் நீரே!
10. கருப்பையிலிருந்தே
உம்மைச் சார்ந்திருந்தேன்;
நான் என் தாயின் வயிற்றில் இருந்தது முதல்
என் இறைவன் நீரே!
11. என்னைவிட்டுத்
தொலையில் போய்விடாதேயும்;
ஏனெனில், ஆபத்து நெருங்கிவிட்டது;
மேலும், உதவி செய்வார் யாருமில்லை.

12. காளைகள் பல
என்னைச் சூழ்ந்து கொண்டுள்ளன;
பாசானின் கொழுத்த எருதுகள்
என்னை வளைத்துக் கொண்டன.
13. அவர்கள் என்னை விழுங்கத்
தங்கள் வாயை அகலத் திறக்கின்றார்கள்;
இரை தேடிச் சீறி முழங்கும் சிங்கம்போல்
பாய்கின்றார்கள்.
14. நான் கொட்டப்பட்ட நீர்போல் ஆனேன்;
என் எலும்புகள் எல்லாம் கழன்று போயின;
என் இதயம் மெழுகுபோல் ஆயிற்று;
என் உள்ளுறுப்புகளின் நடுவே உருகிப் போயிற்று.
15. என் வலிமை ஓடுபோலக் காய்ந்தது;
என் நாவு மேலண்ணத்தோடு ஒட்டிக்கொண்டது;
என்னைச் சாவின் புழுதியிலே போட்டுவிட்டீர்.
16. தீமை செய்வோரின் கூட்டம்
என்னை வளைத்துக் கொண்டது;
நாய்கள் என அவர்கள்
என்னைச் சூழ்ந்து கொண்டார்கள்;
என் கைகளையும், கால்களையும்
துளைத்தார்கள்.
17. என் எலும்புகளை எல்லாம்
நான் எண்ணிவிடலாம்;
அவர்கள் என்னை முறைத்துப் பார்க்கின்றார்கள்.
18. என் ஆடைகளைத்
தங்களிடையே பங்கிட்டுக் கொள்கின்றனர்;
என் உடையின்மேல் சீட்டுப் போடுகின்றனர்.
19. நீரோ ஆண்டவரே!
என்னை விட்டுத்
தொலைவில் போய்விடாதேயும்;
என் வலிமையே!
எனக்குத் துணை செய்ய விரைந்து வாரும்.
20. வாளுக்கு இரையாகாதபடி
என் உயிரைக் காத்தருளும்;
இந்த நாய்களின் வெறியினின்று
என் ஆருயிரைக் காப்பாற்றும்;
21. இந்தச் சிங்கங்களின் வாயிலிருந்து
என்னைக் காப்பாற்றும்;
காட்டெருமைகளின் கொம்புகளில்
சிக்கியுள்ள என்னைக் காத்தருளும்.

(ஆண்டவருக்குப் புகழ்ச்சி)

22. உமது பெயரை
என் சகோதரருக்கு அறிவிப்பேன்;
சபை நடுவே உம்மைப் புகழ்ந்து பாடுவேன்.
23. ஆண்டவருக்கு அஞ்சுவோரே,
அவரைப் புகழுங்கள்;

யாக்கோபின் மரபினரே,
அனைவரும் அவரை மாட்சிமைப்படுத்துங்கள்;
இஸ்ரயேல் மரபினரே,
அனைவரும் அவரைப் பணியுங்கள்.
24. ஏனெனில், எளியோரின் சிறுமையை
அவர் அற்பமாக எண்ணவில்லை;
அதைக் கவனியாமல் இருந்துவிடவில்லை;
தமது முகத்தை
அவர்களுக்கு மறைக்கவுமில்லை;
தம்மை நோக்கி
அவர்கள் மன்றாடுகையில்
அவர்களுக்குச் செவிசாய்த்தார்.
25. மாபெரும் சபையில்
நான் செலுத்தும் புகழ்
உம்மிடமிருந்து எழுவதாக!
உமக்கு அஞ்சுவோர் முன்னிலையில்
என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்.
26. எளியோர் உணவு உண்டு நிறைவு பெறுவர்;
ஆண்டவரை நாடுவோர் அவரைப் புகழ்வராக!
அவர்கள் இதயம் என்றென்றும் வாழ்வதாக!
27. பூவுலகின் கடையெல்லைவரை
உள்ளோர் அனைவரும் இதை உணர்ந்து
ஆண்டவர் பக்கம் திரும்புவர்;
பிற இனத்துக் குடும்பத்தார் அனைவரும்
அவர் முன்னிலையில் விழுந்து பணிவர்.
28. ஏனெனில் அரசு ஆண்டவருடையது;
பிற இனத்தார்மீதும் அவர் ஆட்சி புரிகின்றார்.
29. மண்ணின் செல்வர் யாவரும்
அவரைப் பணிவர்;
புழுதிக்குள் இறங்குவோர் யாவரும்
தம் உயிரைக் காத்துக்கொள்ளாதோரும்
அவரை வணங்குவர்.
30. வருங்காலத் தலைமுறையினர்
அவரைத் தொழுவர்;
இனிவரும் தலைமுறையினருக்கு
ஆண்டவரைப்பற்றி அறிவிக்கப்படும்.
31. அவர்கள் வந்து,
அவரது நீதியை அறிவிப்பர்;
இனி பிறக்கப்போகும் மக்களுக்கு
"இதை அவரே செய்தார்" என்பர்.

*திருப்பாடல் 22:1-31*

**சிந்தனைக்கு**

திருச்சபைகளில் ஆண்டுக்கு ஒருமுறை, தூய வெள்ளிக்கிழமை அன்று வாசிக்கப்படும் திருப்பாடல். சவுல் அரசராலும், அவர் ஏவிவிட்ட தலைவர்களாலும் - அவர்களுக்குத் தாவீது எத்தீங்கும் செய்யவில்லை என்றபோதிலும் - நாள்தோறும் விரட்டி வேட்டையாடப்பட்ட அவர், தனது மீளாத் துயரில் பாடிய திருப்பாடல். இப்பாடல், திருப்பாடல் 69உடன் ஒப்புநோக்கத் தக்கது; ஆனால் அங்கு மன்றாடியது போல, தனது எதிரிகளுக்கு எதிரான மன்றாட்டு (69:16-

18,23-28) எதுவும் இங்கு இல்லை. இவ்விரண்டு திருப்பாடல்களும் நற்செய்தி நூல்கள் நான்கிலும் கிறிஸ்து இயேசுவின் பாடுகளின் வேளையில் (குறிப்பாக: மத்தேயு 27:34-35,43,46; மாற்கு 15:24,29,34; லூக்கா 23:34; யோவான் 15:24, 19:28) எடுத்தாளப்பட்டுள்ளன. நற்செய்தி நூல்களில் மேற்கோள் காட்டப்பட்ட வசனங்களை தியானித்தால், தாவீது எழுதியிருந்த போதிலும், அவற்றுக்கு அவருடைய வாழ்க்கையின் நிகழ்வுகளோடு தொடர்பு இல்லை என்பது புரியும். சான்றாக, உடைகளின் மீது சீட்டுப் போடுதல் (வ.18), தாவீதின் வாழ்வில் நடந்திராத ஒன்று. இதுபோலவே, வ.1,6-8,14-18ன் ஒவ்வொரு நிகழ்வையும் பார்க்க முடியும். தாங்கொண்ணா வேதனையில் தாவீது பாடிய / உணர்ந்த துயர்கள் அனைத்தும், கிறிஸ்து இயேசுவில்தான் நிறைவேறின என்பதை நாம் காண்கிறோம். பவுல் அடிகளார் கூறுவது போல, கிறிஸ்துவின் பங்காளிகள் நாம் என்றால், அவருடைய துன்பங்களில் நாம் பங்கு பெற வேண்டும் (உரோமையர் 8:17). அப்படிப் பங்குபெற்றவராகத் தாவீது இருக்கிறார். கிறிஸ்துவின் துயர், மாட்சிமிகு உயிர்த்தெழுதலின் களிப்பாக முடிவது போல, இந்தப் பாடலும் கடவுளைப் புகழ்ந்து முடிகிறது.

பாடலின் தலைப்பில், "காலைப் பெண் மான்" மெட்டில் என்ற கூடுதல் செய்தி உள்ளது.
🕎

அமைப்பு:
வ.1-21, வலிமிகு இறப்பின் விவரிப்பு (மேசியாவின் பாடுகளும் மன்றாட்டும்)
வ.22-31, பொருத்தனைகளும் கடவுளுக்குப் புகழ்ச்சியும் (மேசியாவின் மாட்சி)
🕎

வசனம் 22:1
பார்க்க, 38:21.
துன்ப வேளைகளில் ஆறுதலான மறுமொழி கடவுளிடமிருந்து கிடைக்கவில்லை என்பதால், முற்றிலும் கைவிடப்பட்ட உணர்வும் அதன் வேதனையும்.

சிலுவையில் அறையப்பட்ட இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லிக் கூக்குரல் இட்டதை நற்செய்தி நூல்களில் வாசிக்கிறோம் (மத்தேயு 27:46; மாற்கு 15:34).

வசனம் 22:4
மேலும், வ.30.
தலைமுறைகளைக் காக்கும் கடவுள்; முந்தைய காலங்களில் காத்தார்; இனியும் காப்பார் (வ.21).

வசனம் 22:6
"நானோ ஒரு புழு" -
புழு என்பதற்கு, rim-mah என்ற எபிரேயச் சொல்லைப் பயன்படுத்தாமல், to-law என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். மிகவும் சிறிய கிரிம்சன் அல்லது ஸ்கார்லெட் புழு என்று இதற்குப் பொருள் தருகிறார்கள். சவுல் அரசரின் செவிகள் கேட்க, இரண்டு முறை தன்னைத் தெள்ளுப்பூச்சி என்று தாவீது அழைத்தார் (1 சாமுவேல் 24:14; 26;20).

பாலைவெளியில் மோசேயால் உயர்த்தப்பட்ட வெண்கலப் பாம்பைப் போல (எண்ணிக்கை 21:9), மானுட மகன் உயர்த்தப்படும் வேளை குறித்து இயேசு முன்னுரைத்தார் (யோவான் 3:14-15). அந்தத் துயருறும் நிலை எப்படி இருக்கும் என்று இங்கு அற்பத்திலும் அற்பமான ஒரு புழுவின் நிலையோடு ஒப்பிட்டுச் சொல்லப்படுகிறது.
மேலும் பார்க்க, எசாயா 52:13-14.

*வசனம்* 22:6-8
*பார்க்க, மத்தேயு* 27:27-31, 39-44.
*கிறிஸ்துவின் விசாரணையும் பாடுகளும் முன்னறிவிக்கப்படுதல்.*

*நிந்தையும் இகழ்ச்சியும் தாவீதின் வாழ்க்கையில் முழுமையானதல்ல; மக்கள் தாவீதின் வீரத்தையும் ஆற்றலையும் கண்டிருந்தனர். சவுல் மற்றும் அவரைச் சேர்ந்தவர்களின் கூட்டத்திற்கு மட்டுமே அவர் விலகி ஓடினார்; ஓடிய இடங்களில் மக்களின் ஆதரவையும் பெற்றிருந்தார்.*

*எருசலேமில், வியாழன் இரவில் தொடங்கி, இயேசுவுக்கு நடந்த துயரமான நிகழ்வுகளில், அவருக்கு ஆதரவளிக்க ஒருவரும் இல்லை. முற்றிலும் கைவிடப்பட்ட நிலையில், நிந்தைகளைச் சுமந்து கொண்டு அவர் இருந்தார்.*

*வசனம்* 22:7
*பார்க்க, மத்தேயு* 27:39; *மாற்கு* 15:29.

*வசனம்* 22:8
*பார்க்க, மத்தேயு* 27:43.

*வசனம்* 22:10
"*கருப்பையிலிருந்தே உம்மைச் சார்ந்திருந்தேன்*" -
*தான் ஓர் உயிராக உருவானது முதல், உணர்வற்ற நிலையிலும் கூட, கடவுள் ஒருவரையே சார்ந்து, தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட தாவீது. மண்ணில் பிறந்த நாளில் இருந்து ஒருவரின் வாழ்க்கை தொடங்குகிறது; ஆனால் தாவீதின் இறை நம்பிக்கையின் வாழ்க்கையோ, அவர் கருவில் உருவான அன்றே தொடங்கியது. இந்த அளவில், தாவீதின் பற்றுறுதி அறிக்கையாக இதனைக் கருதலாம் என்றாலும், இந்த வசனம் கிறிஸ்து இயேசுவுக்கே முற்றிலும் பொருத்தமான ஒன்று.*

*வசனம்* 22:11-13
மேலும், வ.19.
*முதலாம் வசனத்தின் விளக்கமாக இந்த வசனங்கள் அமைகின்றன.*

*வசனம்* 22:14-18
*தன் வாழ்விலும் இந்த நிலைகளை, ஓர் அதிர்வில் அல்லது ஓரிரு நொடிகளுக்குத் தாவீது உணர்ந்திருப்பார்; ஆனால் இயேசுவுக்கோ, சில மணி நேரங்கள் தொடர்ந்த வலிமிகு அனுபவம். ஓர் இறைவாக்கினராகத் (திருத்தூதர் பணிகள்* 2:30) *தாவீது இவ்வார்த்தைகளை எழுதியுள்ளார்.*

*வசனம்* 22:15
*வயது முதிர்ந்த நிலையில், தன் படுக்கையில் தன் உயிரை விட்ட தாவீதை விடவும், கடவுளால் முற்றிலும் கைவிடப்பட்ட இயேசுவுக்கே இந்த வசனம் பொருந்தும்.*

"*நாவு மேலண்ணத்தோடு ஒட்டிக் கொண்டது*" -
"*தாகமாயிருக்கிறேன்*" *என்று இயேசு சொன்னது, இதன் நிறைவேற்றம்* (*யோவான்* 19:28).

*வசனம்* 22:16
*கெத்சமனே தோட்டத்தில் இருந்து, சிலுவையில் கை கால்களில் ஆணிகளால் அடித்துத் தொங்க விடப்பட்ட நிகழ்வுகள்* (*லூக்கா* 22:47 ~ 23:33).

"துளைத்தார்கள்" -
OV, உருவக் குத்தினார்கள்.
இங்கு இரண்டு எபிரேயச் சொற்கள் சேர்க்கப்பட்டுள்ளன: kaw-raw & are-ee; ஒரு பசித்த ஆக்ரோஷமான சிங்கம், தன் 'கூரிய பற்களால் கை / கால்களைக் கடித்து நொறுங்குவது போல' என்று பொருள் கொள்ளலாம். இதை விடவும் கொடிது, சிலுவை மரத்தில், கைகள் மற்றும் கால்களில் நீண்ட - கூரிய ஆணிகளைக் கொஞ்சம் கொஞ்சமாக அடித்து இறக்கி, பிறகு உயர்த்தி நிமிர்த்தப்பட்ட சிலுவையில் தொங்க விடுவது; எந்த உவமையாலும், கற்பனையாலும் விளக்க முடியாத ஒன்றை, மாசற்ற இயேசுவுக்குச் செய்தார்கள் (யோவான் 19:36-37).

வசனம் 22:17
எழும்புகளை எண்ணக்கூடிய நிலை, சிலுவையில் அறையப்பட்டுத் தொங்க விடப்பட்ட நிலைக்கு மட்டுமே இந்த வசனம் பொருந்தும்.

வசனம் 22:18
நற்செய்தி நூல்கள் நான்கிலும் சொல்லப்பட்ட, நிறைவேறிய நிகழ்வு, மத்தேயு 27:35; மாற்கு 15:24; லூக்கா 23:34; யோவான் 19:24.

வசனம் 22:19-21
கடவுளை நோக்கித் தாவீதின் மன்றாட்டு.

இப்பாடலில் கொடிய விலங்குகளோடு தனது எதிரிகளைத் தாவீது ஒப்பிடுகிறார்:
காளைகள், எருதுகள், வ.12;
சிங்கம், வ.13&21;
நாய்கள், வ.16&20;
காட்டெருமைகள், வ.21.

வசனம் 22:22-31
அழைத்த போதெல்லாம் தனக்கு மறுமொழி தருகிற ஆண்டவரை நோக்கிப் பாடிய புகழ்ச்சிப் பாடல்.

வசனம் 22:22
மேலும், வ.25.
தனித்து விடப்பட்ட தாவீது, சூழ்ந்துள்ள ஆபத்துகளுக்குத் தன்னை விளக்கிக் காத்து, தனது சகோதரர்களைக் காணும் போது, கடவுள் அருளிய விடுதலையை அவர்களுக்கு அறிவிப்பதாகப் பொருத்தனை செய்தார். மக்கள் திரண்ட சபையில், கடவுளைப் புகழ்வதாகப் பொருத்தனை செய்தார்.

உயிர்த்தெழுந்த கிறிஸ்து இயேசுவின் அறிக்கையே இவ்வசனம், எபிரேயர் 2:12.

வசனம் 22:24 & 26
இவ்வுலகோர் அற்பமாக எண்ணுகிற எளியோருக்கு, என்றும் சகாயராக ஆண்டவர் விளங்குகிறார். அவரே அவர்களைப் பாதுகாத்துப் பராமரிக்கிறார்.

வசனம் 22:27
ஒப்பிடுக, தொடக்க நூல் 12:3.
ஆபிரகாம் வழியாக, மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும் என்கிற இறைவாக்கு, ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தின் வழியாக அனைவருக்கும் மீட்பு என்கிற நற்செய்தியின் அடிப்படையில் நிறைவேறுகிறது.

வசனம் 22:31
"இதை அவரே செய்தார்" -
சிலுவையில் "முடிந்தது" என்னும் இயேசுவின் அறிக்கை (யோவான் 19:30).

வசனம் 22:27-31
கிறிஸ்து இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, இன்று வரை நிகழ்வனவற்றின் இறைவாக்கு.

தாவீதின் வெற்றிகளால் இது நடைபெறவில்லை என்பதும், இயேசுவின் உயிர்த்தெழுதலே கடவுளை உலகின் கடையெல்லை வரை கொண்டு சேர்த்தது என்பதும் இங்கு முன்னறிவிக்கப்படும் வரலாறு.

வ.3-5ல், கடந்த தலைமுறைகளின் இஸ்ரயேலர், எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து எவ்வாறு கடவுளால் மீட்கப்பட்டு, புதிதாக ஒரு நாட்டில் அமர்த்தப்பட்டனர் என்பதைச் சாட்சியாக அறிவித்தனர். ஆண்டவரைத் தொழுது கொள்ளும் இன்றைய தலைமுறையினர் (தாவீதின் வருங்காலத் தலைமுறையினர்!) தாங்கள் எப்படிக் கிறிஸ்துவின் பாடு மரணத்தில் சிந்தப்பட்ட இரத்தத்தால் மீட்கப்பட்டு, இறையரசுக்கு ஏற்புடையவர்களாக, நிலைவாழ்வைப் பெற்றோம் என்பதை இனிப் பிறக்கும் தலைமுறைக்கும் அறிவிப்பார்கள். அறிவிக்க வேண்டிய அந்தத் தலைமுறை நாமே என்பதை உணர்ந்து, நாம் அறிவிக்கிறோமா?

## 19 திருப்பாடல் 23

(ஆண்டவரே நம் ஆயர்)

*தாவீதின் புகழ்ப்பா*
1 ஆண்டவரே என் ஆயர்;
எனக்கேதும் குறையில்லை.
2 பசும்புல் வெளிமீது
எனை அவர் இளைப்பாறச் செய்வார்;
அமைதியான நீர்நிலைகளுக்கு
எனை அழைத்துச் செல்வார்.
3 அவர் எனக்குப் புத்துயிர் அளிப்பார்;
தம் பெயர்க்கேற்ப
எனை நீதிவழி நடத்திடுவார்;
4 மேலும், சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கில்
நான் நடக்க நேர்ந்தாலும்,
நீர் என்னோடு இருப்பதால்
எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்;
உம் கோலும் நெடுங்கழியும்
என்னைத் தேற்றும்.
5 என்னுடைய எதிரிகளின் கண் முன்னே
எனக்கொரு விருந்தினை ஏற்பாடு செய்கின்றீர்;
என் தலையில் நறுமணத் தைலம் பூசுகின்றீர்;
எனது பாத்திரம் நிரம்பி வழிகின்றது.
6 உண்மையாகவே,
என் வாழ்நாள் எல்லாம்

*உம் அருள் நலமும் பேரன்பும்*
*எனைப் புடைசூழ்ந்துவரும்;*
*நானும் ஆண்டவரின் இல்லத்தில்*
*நெடுநாள் வாழ்ந்திருப்பேன்.*

திருப்பாடல் 23:1-6

**சிந்தனைக்கு**

உலகோரால் பெரிதும் நேசிக்கப்படும் கவிதை, திருப்பாடல் 23. ஆண்டவரின் ஜெபத்துக்கு அடுத்து, அன்னையர் தங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுத் தருவது, திருப்பாடல் 23. உலகெங்கிலும், பல்வேறு மொழிகளிலும், கிறிஸ்து பிறப்புக்கு அடுத்து, அனேகப் பாடல்களுக்குக் கருப்பொருளாக விளங்குவது, திருப்பாடல் 23.

இப்பாடலின் தனிச்சிறப்பு, எனக்கும் ஆண்டவருக்குமான நேரடியான உறவின் அனுபவத்தைச் சொல்வதுதான். எனது அனுபவம் வேறு; எனது மகளின் அனுபவம் வேறு; ஆனால், எங்கள் இருவருக்கும் திருப்பாடல் 23ல் கிடைக்கும் ஆண்டவரின் அன்பு, கரிசனை, பராமரிப்பு, பாதுகாப்பு, ஐக்கியம், எதிர்பார்ப்பு, நம்பிக்கை, மகிழ்ச்சி, களிப்பு, உற்சாகம், ஊக்கம் - இவை உணர்வுகளில் வெவ்வேறு நிலைகளில் இருந்தாலும், புரிதலில் ஒன்றாக இருக்கும். இவ்வாறு தலைமுறைகளைக் கடந்தது, திருப்பாடல் 23. எல்லாத் தலைமுறைகளுக்கும், ஆண்டவரில் தனி உரிமையை, தனி உறவைத் தருவது, திருப்பாடல் 23. பாடலை இயற்றி 3000 ஆண்டுகள் கழிந்தாலும், ஒவ்வொரு நாளிலும் புதிதாக இருப்பது, திருப்பாடல் 23. கடவுளாகிய ஆண்டவரின் சீடர்களாக எப்படி நாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதை நமக்குக் கற்றுத் தருவது, திருப்பாடல் 23.

இப்பாடலின் அடிப்படையில், தமிழில் பண்ணிசைத்த எல்லாருக்கும் தலைவணங்குகிறேன்; எனது உணர்வுகளை வெளிப்படுத்த வழிவகுத்த ஆண்டவருக்கே எல்லாத் துதியும் மகிமையும் உண்டாவதாக!

மேய்ப்பனும் அரசனுமாகிய தாவீது, தனது மேய்ப்பரும், அரசருமாகிய ஆண்டவருக்கு மிகவும் களிப்பான நன்றியை வெளிப்படுத்தும் பாடல், திருப்பாடல் 23. தாவீதுக்கும், ஆண்டவரும் மீட்பருமாகிய கிறிஸ்து இயேசுவுக்கும் எவ்வளவு ஒற்றுமைகள்! இருவரும் திருப்பாடல் 22ல் சொல்லப்பட்ட துன்பியல் நிகழ்வுகளை, உணர்வுகளைக் கடந்து வந்தனர். அவ்வாறு, கிறிஸ்து இயேசுவின் முன்னடையாளமாகத் திகழும் தாவீது, கடவுளாகிய ஆண்டவரால் தனக்குக் கிடைத்த மாபெரும் மீட்பைக் களிப்போடு கொண்டாடுகிறார். அரசரும், இஸ்ரயேலரின் மேய்ப்பருமாகத் தாவீது திகழ்ந்தார். நல்மீட்பர் இயேசுவும், தாமே மெய்யான ஆயர் என்பதையும், மெய்யான ஆயரின் குணநலன்களையும், யோவான் 10ல் தெளிவுபடுத்துகிறார். உலகின் 360° பரப்பிலும், விரிந்து பரந்த அந்த மேய்ப்பரின் அன்பும் வளைதடியும், பெருந்திரள் மக்கள் கூட்டங்களை என்றென்றும் ஆளுகை செய்து வழிநடத்துகிறது. இதை எண்ணும் போது, நமது உள்ளங்கள் ஆண்டவருக்குள் களிகூருகின்றன.

ஒழுங்கின் படி, திருப்பாடல் 22, தமது மந்தைகளுக்காகத் தம் இன்னுயிரை ஈந்த ஆயரின் துயர்ப் பாடல். திருப்பாடல் 23, அவரது ஈடு இணையற்ற உயிர்ப்பலியால் மீட்கப்பட்ட ஆடுகளின் வெற்றிப் பாடல். திருப்பாடல் 24, மாட்சிமிகு அரசரான ஆண்டவரின் வெற்றிகரமான வருகைப் பாடல்.

அமைப்பு:
வ.1-3, நல்மீட்பரின் பராமரிப்பு
வ.4, நல்மீட்பரின் பாதுகாப்பு
வ.5, தம் அன்பரைப் பெருமைப்படுத்தும் நல்மீட்பர்
வ.6, நல்மீட்பர் அருளும் நிலைவாழ்வின் நம்பிக்கை.
🕎

வசனம் 23:1-3
கடவுளாகிய ஆண்டவரின் பராமரிப்பு; நம் கடவுள், நம் ஆண்டவராகிய கிறிஸ்து இயேசுவின் வழியாக, தம் ஒப்பற்ற செல்வத்தைக் கொண்டு, நமது தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்கிறார் (பிலிப்பியர் 4:19).

வசனம் 23:1
கடவுளாகிய ஆண்டவரில், நமது முழுமையான நம்பிக்கையை அறிக்கையிடும், அழகிய, அழுத்தமான வசனம்.

"ஆயர்" -
அரசருக்குரிய உருவகம், ஆயர். பார்க்க, 78:70-72. மேலும்: 2 சாமுவேல் 5:2; எசாயா 44:28; எரேமியா 3:15, 23:1-4; மீக்கா 5:4.

கடவுளாகிய ஆண்டவரே இஸ்ரயேலின் ஆயராக: தொடக்க நூல் 48:15; திருப்பாடல் 28:9, 79:13, 80:1, 95:7, 100:3; எசாயா 40:11; எரேமியா 31:10, 50:19; எசேக்கியேல் 34:11-16.

இங்கு, தனது ஆயரும் அரசருமாக ஆண்டவரைத் தாவீது ஏற்றுக் கொண்டதை வெளிப்படுத்துகிறார்.

நம்மைக் கடவுளின் மந்தையில் கூட்டிச் சேர்க்கின்ற, தூய ஆவியால் நம்மைக் கடவுளின் வழியில் நடத்துகின்ற கிறிஸ்து இயேசு, நல் ஆயராக:
யோவான் 10:11,14
எபிரேயர் 13:20
1 பேதுரு 5:4
திருவெளிப்பாடு 7:17.

பைபிள் எங்கிலும், சிங்கம், புலி போன்ற பலமான விலங்குகளோடு, விசுவாசிகள் ஒப்பிடப்படவே இல்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். செம்மறி ஆடுகள் மேய்ப்பனையே சார்ந்து வாழ்பவை. அவை மேய்ப்பனையே நம்பி அவருடைய முகம் பார்த்தே, கீழ்ப்படிந்து வாழ்வதால், அவற்றுக்கு பயமோ தேடலோ இருப்பதில்லை; நம் மேய்ப்பரை முற்று முழுதாக நாம் சார்ந்திருக்கிறோமா?
🕎

"எனக்கேதும் குறையில்லை" -
ஆண்டவரின் "அருள் நலமும் பேரன்பும் புடைசூழ்ந்து வரும்" போது (வ.6அ), எனக்கு என்ன குறை!

வசனம் 23:2
"இளைப்பாறச் செய்வார்" -
"to lie down"

திருப்தியாக மேய்ந்து, தண்ணீர் குடித்து, ஆபத்தற்ற இடம் என்று உணர்ந்தால் மட்டுமே, ஆடுகள் ஓரிடத்தில் அமர்வன. தன் சிறு வயதில் ஆடுகளை மேய்த்தறிந்த தாவீது (1 சாமுவேல் 16:11&19), சவுல் அரசரால் வேட்டையாடத் தேடப்பட்ட போதெல்லாம், ஆண்டவரின் பராமரிப்பையும் பாதுகாப்பையும் அனுபவித்தவராக இந்த வரிகளை இயற்றியுள்ளார்.

மேலும் பார்க்க, எரேமியா 33:12; எசேக்கியேல் 34:14-15; செப்பனியா 2:7, 3:13.

"பசும்புல் வெளி" -
வளமும் நலமும் நிறைந்த வாழ்க்கையின் உருவகம் (எசேக்கியேல் 34:14; யோவான் 10:9).

"அழைத்துச் செல்வார்" -
"leads me"; மேய்ப்பன் தன் ஆடுகளை வழிநடத்துவது போல.

"அமைதியான நீர்நிலைகள்" -
பார்க்க, எசாயா 49:10.
கலங்காத, ஆர்ப்பரிக்காத, ஊட்டமளிக்கும், நலம் பேணும் நீர்நிலைகள். ஆர்ப்பரிக்கும் நீரோடைக்கு அருகே செம்மறி ஆடுகள் செல்லா.

வசனம் 23:3
"எனக்குப் புத்துயிர் அளிப்பார்" -
புதுவாழ்வும், ஆவிக்குப் புத்துயிர்ப்பும். பார்க்க, 19:7; ரூத் 4:15; நீதிமொழிகள் 25:13; புலம்பல் 1:16.

"தம் பெயர்க்கேற்ப" -
மாண்பும் மாட்சியும் கொண்ட ஆண்டவரின் திருப்பெயர், 1 அரசர்கள் 8:41-42; எசாயா 48:9; எரேமியா 14:21; எசேக்கியேல் 20:9,14,22.

"நீதிவழி" -
அன்பும் அறனும் உடைய கடவுளின் வழி.
பார்க்க, நீதிமொழிகள் 8:18,20-21, 21:21; எசாயா 48:18.

"நடத்திடுவார்" -
மேய்ப்பன் தன் ஆடுகளை வழிநடத்துவது போல; பார்க்க, 77:20, 78:72.

வசனம் 23:4
"சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கு" -
இரவச்சம் மனிதர்களைக் கொல்கிறது. இங்கு இச்சொற்கள், கலங்கடிக்கும் சூழ்நிலைகளையும் (கடும் நோய், அச்சுறுத்தும் எதிர்ப்பு, விபத்து, சோதனை) குறிக்கின்றன. தனிப்பட்ட எனது உற்சாகத்தாலும் ஆற்றலாலும், நான் போராடினாலும், சாவே வெல்கிறது; ஆனால், சாவை வென்றவர், என்றைக்கும் வாழ்பவர், சாவாமை உடையவர், நிலை வாழ்வை அருள்பவர் - அவரை நான் பற்றிக் கொள்ளும் போது, எத்தகைய அச்சுறுத்தலையும் எதிர்கொள்ளும் ஆற்றலை அவர் அளிக்கிறார்.

"நீர் என்னோடு இருப்பதால்" -
நம்மை ஒருபோதும் கைவிடாத கடவுளாகிய ஆண்டவரிடம் நமது ஆற்றல் உள்ளது (94:14). நம்மோடு என்றும் அவர் இருக்கிறார் (118:6-7). தாம் தெரிந்து கொண்ட அனைவரோடும் அவர் என்றென்றும் இருக்கிறார் (தொடக்க நூல் 26:3, 31:3; விடுதலைப் பயணம் 3:12; யோசுவா 1:5; நீதித் தலைவர்கள் 6:16; 1 அரசர்கள் 11:38; எசாயா 43:2).

"உம் கோலும் நெடுங்கழியும் என்னைத் தேற்றும்" -
இத்திருப்பாடலின் மையக்கரு இதுவே; பைபிள் எங்கிலும் திருச்சட்டம், கடவுளின் நீதி நெறிமுறைகளை வாசிக்கிறோம்; ஆனால் நான் கடவுளின் வழியிலிருந்து விலகும் போது, என்னை அவர் எப்படித் தன் பாதைக்குத் திருப்புகிறார் என்னும் சிறப்பான விளக்கம் இங்கே இருக்கிறது. இதனைத் தன் வாழ்வில் உணராதவர், கடவுளையே உணராதவர். நாம் எடுக்கும் ஒவ்வொரு முடிவிலும், ஒவ்வொரு முயற்சியிலும், நமது நடையின் ஒவ்வொரு அடியிலும் கடவுள் இடைபடுகிறார். மேய்ப்பனின் கோல், ஒருபுறம் வளைந்த நீண்ட கோல். வழிமாறும் ஆட்டை வழிக்கு இழுக்கக் கோலின் வளைவு பயன்படுகிறது; அதுமட்டுமல்லாமல், நீண்ட மறுபகுதி, அடித்து உணர்த்தப் பயன்படுகிறது. மேய்ப்பரின் மெல்லிய குரலுக்குச் செவிகொடாமல், நாம் தவறுகிற வேளைகளில், மேய்ப்பரின் வளைதடி நம்மை இழுத்து அல்லது அடித்து உணர்த்துகிறது; அடித்து உணர்த்தப்பட்டோர் பாக்கியவான்கள், அவர்கள் தங்கள் வாழ்க்கையில் பெரிய உயரங்களைத் தொட்டிருப்பார்கள்; அவர்களுடைய சாட்சி வல்லமையானது. நாமெல்லாம் கரிசனையோடு வளைதடியால் இழுத்து நெறிப்படுத்தப்பட்டோர். அவர் அழைத்த பாதையில், பிறழாமல் கவனமாக வழி நடப்போம்.

"தேற்றுதல்" -
ஆற்றுப்படுத்துதல், உறுதிப்படுத்துதல், நிலைப்படுத்துதல். பார்க்க, 71:21, 86:17; ரூத் 2:13; எசாயா 12:1, 40:1, 49:13.

வசனம் 23:5
"எதிரிகளின் கண்முன்னே, எனக்கொரு விருந்து" -
மணவாளனாகிய மேசியா தரும் விருந்து (எசாயா 25:6; திருவெளிப்பாடு 19:9); தம் வழியில் நடப்பவர்களை ஆண்டவர் கனப்படுத்துகிறார்; பெருமைப்படுத்துகிறார்; தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்று அவர்களை உயர்நிலையில் அமர்த்தி, நறுமணத் தைலம் பூசி (2 சாமுவேல் 12:20; சபை உரையாளர் 9:8; தானியேல் 10:3; லூக்கா 7:46), அடையாளப் படுத்துகிறார். விருந்தில், தெரிந்து கொள்ளப்பட்டவரின் பாத்திரம் நிரம்பி வழிகிறது; அரசவைக்கு அழைக்கப்பட்ட சிறப்பு விருந்தினர் போல.

வசனம் 23:6
"அருள் நலமும் பேரன்பும்" -
உடன்படிக்கையின் ஆசிகள் (இணைச் சட்டம் 28:1-14; 2 சாமுவேல் 7:8:16). மேலும் பார்க்க, 25:21, 43:3, 79:8, 89:14, உருவகமாக நலன்கள்.

"நானும் ஆண்டவரின் இல்லத்தில் நெடுநாள் வாழ்ந்திருப்பேன்" -
யூத வழியில் வந்தவரான தாவீது, ஆண்டவரின் இல்லத்தில், ஓரிரவேனும் தங்கத் தகுதி உடையவர் அல்லர்; ஆண்டவரே தன்னுள் உறைந்த அனுபவத்தைப் பெற்ற தாவீது, எப்போதும் அந்த ஆசியோடு வாழ்கிறார். 🕎

திருப்பாடல் 23ன் சிறப்பு, அது வாசிப்பவரின் அறிக்கையாக, தன்னிலை - ஒருமையில் இருப்பதுவே! இப்படி நாம் ஒவ்வொரு திருப்பாடலையும், வாக்குத்தத்தத்தையும் உரிமையாக்கிக் கொள்ள முடியும்; நாங்கள் என்று பன்மையில் இருப்பதை நான் என்று ஒருமையில் மாற்றி வாசித்தால் அத்திருப்பாடல் அல்லது வாக்குத்தத்தம் என்னுடையது ஆகிவிடும். அவ்வாறு பயிற்சி செய்து, இறையாசியைப் பெற்றுக்கொள்ள கடவுள் நம்மை வழிநடத்துவாராக!
ஆமென்! அல்லேலூயா!

✝

## 19 திருப்பாடல் 24

(மாவேந்தரின் வருகை)

*தாவீதின் புகழ்ப்பா*
1. *மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை;*
*நிலவுலகும் அதில் வாழ்வனவும் அவருக்கே சொந்தம்.*
2. ஏனெனில், அவரே கடல்கள் மீது அதற்கு அடித்தளமிட்டார்;
ஆறுகள்மீது அதை நிலை நாட்டினவரும் அவரே.
3. *ஆண்டவரது மலையில் ஏறத் தகுதியுள்ளவர் யார்?*
*அவரது திருத்தலத்தில் நிற்கக் கூடியவர் யார்?*
4. *கறைபடாத கைகளும் மாசற்ற மனமும் உடையவர்;*
*பொய்த் தெய்வங்களை நோக்கித் தம் உள்ளத்தை உயர்த்தாதவர்;*
*வஞ்சக நெஞ்சோடு ஆணையிட்டுக் கூறாதவர்,*
5. இவரே ஆண்டவரிடம் ஆசி பெறுவார்;
தம் மீட்பராம் கடவுளிடமிருந்து நேர்மையாளர் எனத் தீர்ப்புப் பெறுவார்.
6. அவரை நாடுவோரின் தலைமுறையினர் இவர்களே;
#யாக்கோபின் கடவுளது முகத்தைத்# தேடுவோர் இவர்களே.
(சேலா)
7. *வாயில்களே, உங்கள் நிலைகளை உயர்த்துங்கள்;*
*தொன்மைமிகு கதவுகளே, உயர்ந்து நில்லுங்கள்;*
*மாட்சிமிகு மன்னர் உள்ளே நுழையட்டும்.*
8. *மாட்சிமிகு மன்னர் இவர் யாரோ?*
*வலிமையும் ஆற்றலும் கொண்ட ஆண்டவர் இவர்;*
*இவரே போரில் வல்லவரான ஆண்டவர்.*
9. *வாயில்களே, உங்கள் நிலைகளை உயர்த்துங்கள்;*
*தொன்மைமிகு கதவுகளே, உயர்ந்து நில்லுங்கள்;*
*மாட்சிமிகு மன்னர் உள்ளே நுழையட்டும்.*
10. *மாட்சிமிகு மன்னர் இவர் யாரோ?*
*படைகளின் ஆண்டவர் இவர்;*
*இவரே மாட்சிமிகு மன்னர்.*

திருப்பாடல் *24:1-10*

குறிப்பு:
24:6 #...# "யாக்கோபே! உனது முகத்தை" என்பது எபிரேயப் பாடம்.

**சிந்தனைக்கு**

இது ஒரு பவனித் திருப்பாடல் (ஏனைய பவனித் திருப்பாடல்கள்: 47; 68; 118; 132). சீயோன் நகருக்கு வரும் / நகரில் எழுந்தருளும் ஆண்டவரைத் துதித்துப் பாடிய திருப்பாடல்கள். கடவுளாகிய ஆண்டவரின் அடையாளமான உடன்படிக்கைப் பேழை சீயோனுக்கு வருகை தந்த வேளையில் (2 சாமுவேல் 6) பாடப்பட்ட திருப்பாடலாக இது இருக்கலாம்.

திருப்பாடல்களில், 15 முதல் 24 வரை உள்ள பாடல்கள் ஒரு தொகுப்பாக உள்ளன என்று பார்த்தோம்; 15:3ன் கேள்வியையும், 24:3ன் கேள்வியையும், அவற்றுக்கான பதில்களையும் கவனியுங்கள்; திருப்பாடல் 24, நமது மாசின்மையை மட்டும் குறிப்பிடாமல், ஆண்டவரை

முழு உள்ளத்தோடு நாம் ஏற்றுக் கொள்வதைக் குறித்தும், அவர் நம்மை ஏற்றுக் கொள்வதைக் குறித்தும் பேசுகிறது (வ.4-6).

அதுமட்டுமல்லாமல், ஆண்டவரின் இரண்டாம் வருகையையும் இறையாட்சியையும் பேசும், திருப்பாடல்கள் 2 மற்றும் 110 - இவற்றோடும் இணைத்து பார்க்கத் தக்கது, இத்திருப்பாடல்.

ஒரு நாடகம் போல இத்திருப்பாடலைப் பார்த்தால், ஆலய நுழைவாயிலில், முதல் இரு வசனங்களை லேவியரின் தலைவர் அறிவிக்க, அடுத்த மூன்று வசனங்களைத் தலைமைக் குரு அறிவிக்க, இறுதி நான்கு வசனங்களின் கேள்விகளை அரசர் தாவீது எழுப்ப, மறுமொழிகளை சபையின் அனைவரும் பாடுவதாக வகுக்கலாம்.

வாரத்தின் முதல் நாளில், சாலொமோன் கட்டிய ஆலய ஆராதனையில் இப்பாடல் பாடப்படுவது என்பது யூதப் பாரம்பரியம்.
🕎

அமைப்பு:
வ.1-2, படைத்து ஆளுகை செய்யும் ஆண்டவர்
வ.3-6, ஆண்டவர் முன் நிற்கக்கூடியவர் - ஓர் ஆய்வு
வ.7-10, மகிமையான ஆண்டவரின் வருகை
🕎

வசனம் 24:1
படைத்தவரே ஆளுகை செய்கின்றவர்!

"நில உலகும் அதில் வாழ்வனவும்" -
கடவுளையும் அவர்தம் ஆற்றலையும், ஏற்றுக் கொள்ளாதோரையும் ஆளுகை செய்பவர் அவரே!

பவுல் அடிகளார், 1 கொரிந்தியர் 10:26ல் இவ்வசனத்தை மேற்கோள் காட்டுகிறார்.

வசனம் 24:2
தொடக்க நூல் 1: 1-10ல் நடந்தவை, சுருக்கமாக, தாவீதின் பார்வையில்.

"அடித்தளமிடல்" -
எருசலேமை நகராக நிர்மாணித்த தாவீது அரசர், அதுபோல இந்த நில உலகைக் கடவுள் நிர்மாணித்ததாக உருவகப் படுத்துகிறார். இது போன்ற வேறு சில வருணிப்புகள்: 18:15, 82:5; 1 சாமுவேல் 2:8; நீதிமொழிகள் 8:29; எசாயா 24:18.

வசனம் 24:1-2
வானிலும் மண்ணிலும் உள்ளவை அனைத்தும் ஆண்டவருடையவை; நாம் அனைவரும் அதன் பயனாளர்கள்; அதுமட்டுமல்ல, இவற்றைப் பண்படுத்தி ஆண்டு கொள்ள, உக்கிராணக்காரர்களாக (stewards) நம்மை அமர்த்தியுள்ளார்; அப்படியானால், அவருக்குக் கணக்கு ஒப்புவிக்கப் பொறுப்புள்ளவர்களாக நாம் இருக்கிறோம். ஆனால் இந்தப் பொறுப்புமிக்க பணியை நாம் எவ்வாறு செய்து கொண்டிருக்கிறோம்? அடுத்த 30 முதல் 50 ஆண்டுகளில், புவிவெப்பமய விளைவால், மாலத்தீவுகள் உள்பட பல தீவுகள் மூழ்கும் அபாயம் உள்ளது; சென்னைப் பெருநகரின் தாழ்விடங்கள், கடல்நீர் ஏரிகளாக மாற வாய்ப்புள்ளது. இவையெல்லாம், ஆண்டவரின் படைப்பை ஆண்டு கொள்வதை விடுத்து, நாம் சுரண்டிச்

*செல்வம் குவித்ததன் விளைவு; ஆனால், நமது சுயநலமே, கடவுளின் படைப்பைச் சீர்குலைக்கிறது என்கிற பாவ உணர்ச்சி சிறிதாவது நமக்கு இருக்கிறதா?*

வசனம் 24:3-6
*ஆண்டவர் திருமுன் நிற்கத் தக்கவர்:*
* *கறைபடாத கைகளை உடையவர்;*
* *உள்ளத்தில் மாசில்லாதவர்;*
* *ஏக இறைவரை உளமார வணங்குபவர்;*
* *வஞ்சகமாக ஆணையிடாதவர்.*

வசனம் 24:3
"*கறைபடாத கைகளும் மாசற்ற மனமும்*" -
*செயல்களையும், எண்ணங்களையும் குறிப்பது; இரண்டும் ஒன்றில் ஒன்றானது.*

வசனம் 24:7-10
"*மாட்சிமிகு மன்னர்*" -
*மகிமையும் மாட்சிமையும் நிறைந்த கடவுளாகிய ஆண்டவர்; அவருடைய அருஞ் செயல்களை விவரிக்கும் திருப்பாடல்கள்:* 29, 33:6-11, 89:5-18, 93, 95:3-5, 96, 104. *அவரே துதிகளின் பாத்திரர்; துதிக்கத் தக்கவர்.*

*மீண்டும் மீண்டும் ஒலிக்கும் சொற்கள் இவ்வசனங்களில் உள்ளன; பொருளின் சிறப்புக்கு மேலும் செறிவூட்டவும், பாடலுக்கு இனிமை சேர்க்கவும் சொற்கள் அவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன.*

*கடவுளே படைகளின் ஆண்டவர்; அவர் வலிமையும் ஆற்றலும் நிறைந்தவர்; போர்களில் வல்லவர்; அவருடைய மகிமை மாட்சியின் உயரங்களை நோக்கி, நமது உள்ளங்களை உயர்த்தித் தொழுது கொள்ள நம்மைத் தாவீது அழைக்கிறார்.*

✝

## 19 திருப்பாடல் 25

(வழிகாட்டிப் பாதுகாக்குமாறு வேண்டல்)

*தாவீதின் புகழ்ப்பா*
1 ஆண்டவரே,
உம்மை நோக்கி,
என் உள்ளத்தை உயர்த்துகிறேன்.
2 என் கடவுளே,
உம்மில் நம்பிக்கை கொள்கின்றேன்;
நான் வெட்கமுற விடாதேயும்;
என் பகைவர்
என்னைக் கண்டு நகைக்க விடாதேயும்.
3 உண்மையிலேயே,
உம்மை நம்பும் எவரும்
வெட்கமுறுவதில்லை;
காரணமின்றித் துரோகம் செய்பவரோ
வெட்கத்திற்கு உள்ளாவர்.

4 ஆண்டவரே,
உம் பாதைகளை
நான் அறியச்செய்தருளும்;
உம் வழிகளை
எனக்குக் கற்பித்தருளும்.
5 உமது உண்மை நெறியில்
என்னை நடத்தி
எனக்குக் கற்பித்தருளும்;
ஏனெனில்,
நீரே என் மீட்பராம் கடவுள்;
உம்மையே நான்
நாள் முழுதும் நம்பியிருக்கின்றேன்;
6 ஆண்டவரே,
உமது இரக்கத்தையும்,
உமது பேரன்பையும் நினைந்தருளும்;
ஏனெனில், அவை தொடக்கமுதல் உள்ளவையே.
7 என் இளமைப் பருவத்தின் பாவங்களையும்,
என் குற்றங்களையும் நினையாதேயும்,
உமது பேரன்பிற்கேற்ப
என்னை நினைத்தருளும்;
ஏனெனில், ஆண்டவரே நீரே நல்லவர்.
8 ஆண்டவர் நல்லவர்;
நேர்மையுள்ளவர்;
ஆகையால், அவர்
பாவிகளுக்கு நல்வழியைக் கற்பிக்கின்றார்.
9 எளியோரை நேரிய வழியில்
அவர் நடத்துகின்றார்;
எளியோருக்குத்
தமது வழியைக் கற்பிக்கின்றார்.
10 ஆண்டவரது உடன்படிக்கையையும்
ஒழுங்குமுறையையும் கடைப்பிடிப்போர்க்கு,
அவருடைய பாதைகளெல்லாம்
பேரன்பும் உண்மையும்
உள்ளனவாய் விளங்கும்.
11 ஆண்டவரே,
உமது பெயரின் பொருட்டு
என் குற்றத்தை மன்னித்தருளும்;
ஏனெனில், என் குற்றம்
மிகப் பெரியது.
12 ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவர்
எவரோ அவருக்குத்
தாம் தேர்ந்து கொள்ளும் வழியை
அவர் கற்பிப்பார்.
13 அவர் நலமுடன் வாழ்வார்;
அவருடைய மரபினர்
நாட்டைச் சொந்தமாக்கிக்கொள்வர்.
14 ஆண்டவரின் அன்புறவு
அவருக்கு அஞ்சி நடப்போருக்கே உரித்தாகும்;
அவர் அவர்களுக்குத்

தமது உடன்படிக்கையை
வெளிப்படுத்துவார்;
15 என் கண்கள் எப்போதும்
ஆண்டவரை நோக்கியிருக்கின்றன;
அவரே என் கால்களை
வலையிலிருந்து விடுவிப்பார்.
16 என்னை நோக்கித் திரும்பி
என் மீது இரங்கும்;
ஏனெனில்,
நான் துணையற்றவன்; துயருறுபவன்.
17 என் வேதனைகள் பெருகிவிட்டன;
என் துன்பத்தினின்று
என்னை விடுவித்தருளும்.
18 என் சிறுமையையும்
வருத்தத்தையும் பாரும்;
என் பாவங்கள் அனைத்தையும் மன்னித்தருளும்.
19 என் எதிரிகள் பெருகிவிட்டதைப் பாரும்.
அவர்கள் எத்துணைக் கொடுமையாய்
என்னை வெறுக்கின்றனர்!
20 என் உயிரைக் காப்பாற்றும்;
என்னை விடுவித்தருளும்;
உம்மிடம் அடைக்கலம் புகுந்துள்ள
என்னை வெட்கமுற விடாதேயும்.
21 வாய்மையும் நேர்மையும்
எனக்கு அரணாய் இருக்கட்டும்;
ஏனெனில், நான்
உம்மையே நம்பியிருக்கின்றேன்.
22 கடவுளே, இஸ்ரயேலரை
அவர்கள் படும் துன்பங்கள்
அனைத்தினின்றும் மீட்டருளும்.

திருப்பாடல் 25:1-22

**சிந்தனைக்கு**

25 முதல் 33 வரை உள்ள திருப்பாடல்களை மன்றாட்டுத் திருப்பாடல்கள் என்று குழுப் படுத்துகிறார்கள் (பார்க்க: 25:2,4-7,11,16-22; 26:1-3,9&11; 27:7-9&11-12; 28:1,3-4&9; 29:11; 30:8&10; 31:1-4,9&15-17; 32:6; 33:22). மற்ற திருப்பாடல்களில் மன்றாட்டு இடம் பெறவில்லை என்பதல்ல, தொடர்ந்து வரும் திருப்பாடல்கள் ஒரே கருப்பொருளைப் பேசுகின்றன என்பதே குறிப்பு.

இந்த ஒற்றுமை இப்பாடல்களில் இருந்தாலும், ஒவ்வொரு திருப்பாடலும் தனிச்சிறப்பு வாய்ந்ததாகவும் உள்ளது. 🕎

திருப்பாடல் 25, துயர்மிகு மன்றாட்டுப் பாடலாகவும் இருக்கிறது. மன்றாட்டின் நாட்டமெல்லாம் ஆண்டவரின் வழிகள் வெளிப்படுத்தப்படுதலே! (வ.4,5,8-10&12).

வ.1-7, பொருளில் அதற்கு இணையான வ.16-22 ஆகியவை, பாதுகாப்பையும் மீட்பையும் வேண்டிக் கொள்வதாகவும், வ.8-15, கடவுளின் தன்மைகள் மற்றும் செயல்களைக் குறித்த உறுதி அறிக்கைகளாகவும் உள்ளன.

எபிரேய எழுத்துகளின் அகர வரிசையில் ஒவ்வொரு வசனமும் அமைந்த, அகர வரிசைப் பாடலாக திருப்பாடல் 25 உள்ளதெனக் கூறுவர். 🕎

அமைப்பு:
வ.1-3: துதியும் மன்றாட்டும்
வ.4-7: வழிநடத்துதலுக்கும் பிழை பொறுத்தருளவும் மன்றாட்டு
வ.8-15: ஆண்டவரின் உடன்படிக்கையின் உறுதித் தன்மைகளை அறிக்கை செய்தல் / உடன் வழிபடுவோருக்குப் போதித்தல்
வ.16-22: மன்றாட்டு

வ.24:4ஆ பகுதியும் வ.25:1ம் ஒப்புநோக்கல் தகும்; பொய்த் தெய்வங்களை நோக்கித் தன் உள்ளத்தை உயர்த்தாத தகுதியையுடைய தாவீது, உடன்படிக்கையின் ஆண்டவரை - மெய்க் கடவுளை நோக்கித் தன் உள்ளத்தை உயர்த்துகிறார்.
நம்பிக்கை, எதிர்நோக்கு, மதிப்பு, வழி நடத்துதல், சார்ந்து நடத்தல், வீழ்ச்சி, மன்னிப்பு, மீட்பு, உடன்படிக்கை - அதன்படி நடப்பதன் ஆசி, என்று பல உணர்வுகளை இத்திருப்பாடல் நமக்குள் கடத்தினாலும், "**ஆண்டவரே, உமது பெயரின் பொருட்டு**" (வ.11) என்பதே நாம் பற்றிக் கொள்ள வேண்டிய நிலைப்பாடு.
🕎

வசனம் 25:1-2அ
எதிர் 24:4.
தாவீதின் நம்பிக்கை கடவுளே! அவரையே தாவீது நோக்கிப் பார்த்தார். நமது நம்பிக்கை எதில் உள்ளது? ஏதோவொரு தெய்வத்தின் மீது? நேரம் காலம் மீது? சடங்கு சம்பிரதாயங்கள் மீது? நண்பர்கள் மீது? உயர் அலுவலர்கள் மீது? அல்லது தன் மீது?

வசனம் 25:2ஆ-3
வெட்கக் கேட்டைக் குறித்துத் திருப்பாடல்கள் மீண்டும் மீண்டும் பேசுகின்றன (வ.20; 31:1; 69:6; 71:1; 119:31). ஆனால், ஆண்டவரை நம்பும் எவரும் வெட்கமுறுவதில்லை (வ.3). தனது பகைஞரைக் குறித்த தன்மையை இங்கு தாவீது குறிப்பிடுகிறார்: அவர்கள் காரணமின்றி அவரைப் பகைக்கிறார்கள்.

வசனம் 25:4
மேலும் பார்க்க, 27:11 & 119:12.
"... அறியச் செய்தருளும்"
"... கற்பித்தருளும்"
அறிதல் என்பது என்ன? கடவுளின் வழிநடத்துதலை அறிதல். அதற்காக எதைக் கற்க வேண்டும்? இறைவார்த்தைகளைக் கற்க வேண்டும்! இறைவார்த்தையைக் குறித்த சிறப்பான கருத்துகளை திருப்பாடல் 119ல் காண்கிறோம். அந்த இறைவார்த்தை நம் கைகளில் உள்ள பைபிளே! அனுதின பைபிள் வாசிப்பும், தியானமும் நம்மைக் கடவுளை நோக்கி நகர்த்தி, ஞானத்தையும், நமது வாழ்க்கையை நல்வழியில் நடத்துவதற்கான வழிமுறைகளையும் கற்றுத் தருகின்றன. இவ்வசனத்தில், தாவீது கேள்விகளை எழுப்பிப் பதில் கேட்கவில்லை; மாறாக, தான் செல்ல வேண்டிய பாதையைக் காட்ட வேண்டுகிறார்.
"என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு! என் பாதைக்கு ஒளியும் அதுவே! (திருப்பாடல் 119:105)

வசனம் 25:5
ஆண்டவரின் வழிகள், பாதைகளைக் கற்பிக்க வேண்டிக் கொண்ட தாவீது, இங்கு ஆண்டவரது உண்மை நெறியில், அவர் நடக்கக் கற்றுத் தர வேண்டுகிறார். ஆண்டவரே வழியும் உண்மையும் வாழ்வும்! (யோவான் 14:6அ)

"உம்மையே ... நம்பியிருக்கிறேன்" -
மேலும் பார்க்க, 33:22 & 130:5-7.
கிறிஸ்தவ நம்பிக்கை என்பது நாம் விரும்புவது நடக்கும் என்று நம்பி, நாம் செயல்படுவது அல்ல; மாறாக ஆண்டவர் விரும்புவது நமது வாழ்க்கையில் நிறைவேறும் என்று எதிர்நோக்கி, ஏமாற்றங்களுக்கு இடமளிக்காமல், பொறுமையுடன் காத்திருத்தல் ஆகும். இதனை நாம் தாவீதின் வாழ்க்கையில் வாசிக்கிறோம்: இஸ்ரயேலின் அரசராக அமர, வாய்ப்புகள் வந்த போதும், தாவீது சவுல் அரசரைக் கொல்லவில்லை; மாறாக, தான் அரசராக ஆக வேண்டும் என்ற இறைத் திட்டம் தன்னில் நிறைவேற, பாடுகளின் நடுவே அவர் நம்பிக்கையோடு காத்திருந்தார். இது நமது வாழ்விற்கான பாடம்.

வசனம் 25:6-7
"... நினைந்தருளும்... நினையாதேயும்..." -
தமது அநாதியான குணங்களை (இரக்கம், பேரன்பு/கிருபை) ஆண்டவர் நினைந்து அருள வேண்டும்; தாவீதின் இளமைக்காலப் பாவங்களையோ அவர் நினையாதிருக்க வேண்டும்!

வசனம் 25:8-9
"ஆண்டவர் ... கற்பிக்கின்றார்." வ.8ல் பாவிகளுக்குக் கற்பிக்கும் ஆண்டவர், வ.9ல் எளியோருக்குக் கற்பிக்கின்றார். எல்லாம் வல்ல ஆண்டவரிடம் தங்களையே தாழ்த்துகிற பாவிகளுக்கு அவர் தமது நல்வழிகளைக் கற்பிக்கின்றார்.

வசனம் 25:9
"எளியோர்" -
"சிறுமைப்பட்டோர்" (OV) -
எபிரேயத்தில், aw-nawv; meek (KJV), humble (NKJV, NIV), lowly, poor என்று பொருள் படும்.

வசனம் 25:10
திருப்பாடகரின் பற்றுறுதி அறிக்கை. உடன்படிக்கையின் ஒழுங்குமுறை முன்வைக்கப்படுதல் (விடுதலைப் பயணம் 20:1-17) சிறப்பாகக் கவனிக்கத்தக்கது.

வசனம் 25:11
பார்க்க, 1 யோவான் 2:12.
பாவத்தை ஆண்டவர் மன்னிக்கிறார் என்பது, பாவிகளின் பொருட்டல்ல; அவருடைய இரக்கத்தின் பொருட்டு, அவருடைய திருப்பெயருக்கு மேன்மை உண்டாக, அவருடைய பேரருளால், அவர் நம்மை மன்னிக்கிறார்.

வசனம் 25:12-14
ஆண்டவரின் வழிகளைத் தனக்குக் கற்பிக்க மன்றாடிய தாவீது (வ.4-5&8-9), அந்த வழி ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர்க்கே வாய்க்கும் என்பதை அறிவிக்கிறார். அதுமட்டுமல்லாமல், இறையச்சத்தின் மேன்மை மிகு நன்மைகளை விளக்குகிறார்.

வசனம் 25:12
பார்க்க, 111:10; யோபு 28:28; நீதிமொழிகள் 1:7 & 9:10.

*ஆண்டவர்தம் வழிநடத்துதலைப் பேற, இறையச்சம் இன்றியமையாதது. இறையச்சம் என்பது கடவுள் தூயவர், எல்லாம் வல்லவர், நீதியுள்ளவர், ஞானத்தின் உறைவிடம், அனைத்தும் அறிந்தவர், பேராற்றல் மிக்கவர் என்ற அவரது தன்மைகளை அறிந்து அவரைப் போற்றுவதாகும். அவரைப் பற்றிய தெளிவு நமக்கு இருக்கும் போது, நாம் எவ்வளவு பாவி, எவ்வளவு பலவீனர், எவ்வளவு குறைவுள்ளவர்கள் என்ற புரிதல் நமக்கு ஏற்படுகிறது. இந்த மாபெரும் இடைவெளியை நிரப்ப, நம்மில் தோன்றும் தாழ்மையும், அர்ப்பணிப்பும், வேத வாசிப்பும், தியானமும் உதவுகின்றன. இவ்வாறு நாம் அவருடன் இணைந்திருக்கும் வேளைகளில், அவருடைய வழிகளை நமக்கு அவர் கற்பிக்கிறார்.*

*வசனம்* 25:13
"*அவருடைய மரபினர் நாட்டைச்*" -
*வாக்களிக்கப்பட்ட நாட்டில் ஒருவருடைய குடும்பத்தின் பங்கு அவருக்குத் தொடரும்* (37:9,11,18,22,29&34; 69:36; *எசாயா* 60:21).

*வசனம்* 25:14
"*ஆண்டவரின் அன்புறவு*" -
"*கர்த்தருடைய இரகசியம்*" (OV)
*இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேயச் சொல், ஸோட்* (sode) *என்பது, அமர்வு, நெருக்கமானவர்களின் ஆலோசனை, இரகசிய ஆலோசனை, கடவுளோடு நெருங்கிய தொடர்பில் இருத்தல் என்று பொருள்படும். ஆங்கில மொழிபெயர்ப்புகளில் இரண்டு விதமான பொருளிலும் இவ்வார்த்தை எடுத்தாளப்பட்டுள்ளது.*

*ஆண்டவர் இறையச்சமுடைய தம் அடியாருக்கு அருளும் ஆலோசனை நம் மீது அவர் கொண்ட அன்பால் ஆனது; வேறு ஒருவரும் அறிய முடியாதது. இறையச்சத்தின் அடிப்படையில் எழுந்த இந்த நட்புறவு, நாம் அவரையே பற்றிக் கொண்டு, வியந்தேத்தும் காலமட்டும் நீடித்து நிலைக்கும்.*

*வசனம்* 25:16-21
*பாவங்களை விட்டு விலகி, ஆண்டவரின் வழிகளில் நடக்கக் கற்றுத் தரும் படி வேண்டிய திருப்பாடகர் இப்போது தனது மன்றாட்டை ஆண்டவரிடம் முன்வைக்கிறார். வ.*16-18, *நோயுற்ற அல்லது உள்ளம் உடைந்த ஒருவரின் மன்றாட்டாகவும், வ.*19-21, *எதிரிகளால் துரத்தப்பட்டு, ஒடுக்கப்பட்ட ஒருவரின் விடுதலைக்கான மன்றாட்டாகவும் அமைகின்றன.*

*வசனம்* 25:19
"... *எதிரிகள்* ... *எத்துணைக் கொடுமையாய் என்னை வெறுக்கின்றனர்!*" -
*எதிரிகளைக் குறித்து* 72 *திருப்பாடல்களில் திருப்பாடகர் குறிப்பிடுவது ஒரு செய்தி.*

*தாவீதின் எதிரிகள் ஏன் அவரைக் கடுமையாக எதிர்க்கின்றனர்? உடன்படிக்கையின் ஆண்டவர் நடத்தும் வழிகளில் நடக்க தாவீது விழைகிறார்; எனவே அவரை எதிர்ப்பவர்கள் பெருகிவிட்டனர். இதுபோன்ற சூழலை இறைமகன் கிறிஸ்து இயேசுவும் நமக்குத் தெளிவாக எடுத்துரைக்கிறார்* (*யோவான்* 15:18-25).

*வசனம்* 25:20
"*வெட்கமுற விடாதேயும்*" -
*தொடக்கத்தில் வைத்த அதே மன்றாட்டு, வ.*2.
*ஆண்டவரின் எதிரிகளின் முடிவு அவர்களுக்கு வெட்கக் கேடானது* (35:26); *பற்றுறுதியாளரின் நிறைவோ ஆண்டவரில் அவர்கள் அடையும் மாட்சி!*

வசனம் 25:21
இணை, 51:10-12.
எதிரிகளிடமிருந்து பாதுகாப்பை வேண்டிய தாவீது, ஆண்டவரின் வாய்மையும் நேர்மையும் தனக்கு அரணாக விளங்க வேண்டுகிறார். ஆண்டவரே வழி, வாழ்வு, வாக்கு!

வசனம் 25:22
"இஸ்ரயேலரை" (NIV, NKJV) -
"இஸ்ரவேலை அவனுடைய" (OV), (KJV) -
தனது மக்களுக்கான, தனது நாட்டிற்கான வேண்டுதலோடு தனது மன்றாட்டைத் தாவீது நிறைவு செய்கிறார்.

இந்த மன்றாட்டை ஏறெடுக்கும் வேளையில், தாவீது அரசராக இருந்தாரா என்பதை உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால் தனது நலன் தன் நாட்டின் நலனோடு இணைந்தே இருப்பதைத் தாவீது எப்போதும் உணர்ந்து செயல்பட்டார்.

இன்றைக்கு நமது வேண்டுதல் எப்படி உள்ளது? நாம் எதற்காக வேண்டுகிறோம்? கிறிஸ்துமஸ் காலத்தில், ஒரு பள்ளியில் விளையாட்டுப் போட்டிகள் நடத்த முடியவில்லை; அதே பள்ளியில் சாரதா அம்மையாரின் படத்தை வைக்கச் சொல்கிறது ஒரு கூட்டம். வாராந்திர ஆராதனைகள் தடுத்து நிறுத்தப்படுகின்றன. எவ்வளவு காலத்திற்கு நாம் சுயநலமாக, தனக்காகவும் தன் குடும்ப நலன்களுக்காகவும் வேண்டிக் கொண்டு இருக்கப் போகிறோம்? நாட்டு நலனுக்காக முழங்காலில் நிற்போம்; அப்போது நாமும் ஆண்டவர் அருளும் நன்மைகளைப் பெறுவோம்!

✝

## 19 திருப்பாடல் 26

(நேர்மையாளரின் விண்ணப்பம்)

*தாவீதுக்குரியது*
1. ஆண்டவரே,
நான் குற்றமற்றவன் என்பதை அறிவியும்;
ஏனெனில்,
என் நடத்தை நேர்மையானது;
நான் ஆண்டவரை நம்பினேன்;
நான் தடுமாறவில்லை.
2. ஆண்டவரே,
என்னைச் சோதித்து ஆராய்ந்து பாரும்;
என் மனத்தையும் உள்ளத்தையும்
புடமிட்டுப் பாரும்;
3. ஏனெனில், உமது பேரன்பு
என் கண்முன் இருக்கின்றது;
உமக்கு உண்மையாக நடந்து வருகிறேன்.
4. பொய்யரின் நடுவில்
நான் அமர்வதில்லை;
வஞ்சகரோடு நான் சேர்வதில்லை.
5. தீயோரின் மன்றத்தை

நான் வெறுக்கின்றேன்;
பொல்லாரின் நடுவில்
நான் அமர்வதில்லை.
6. மாசற்றவனாய் என்
கைகளைக் கழுவுகின்றேன்;
ஆண்டவரே,
உம் பலிபீடத்தை வலம் வருவேன்.
7. உரத்த குரலில்
உமக்கு நன்றிப்பா பாடுகின்றேன்;
வியத்தகு உம் செயல்களை எல்லாம்
எடுத்துரைக்கின்றேன்;
8. ஆண்டவரே,
நீர் குடிகொள்ளும் இல்லத்தை
நான் விரும்பிகின்றேன்;
உமது மாட்சி தங்கியுள்ள இடத்தை
நான் விரும்புகின்றேன்;
9. பாவிகளுக்குச் செய்வது போல்
என் உயிரைப் பறித்துவிடாதீர்!
கொலை வெறியர்களுக்குச் செய்வதுபோல்
என் வாழ்வை அழித்து விடாதீர்!
10. அவர்கள் கைகளில் தீச்செயல்கள்;
அவர்கள் வலக்கையில் நிறையக் கையூட்டு.
11. நானோ மாசற்றவனாய்
நடந்து கொள்கின்றேன்;
என்னை மீட்டருளும்;
எனக்கு இரங்கியருளும்.
12. என் கால்கள் சமமான தளத்தில் நிற்கின்றன;
மாபெரும் சபையில்
ஆண்டவரைப் புகழ்ந்திடுவேன்.

திருப்பாடல் 26:1-12

**சிந்தனைக்கு**

தன் குற்றமற்ற தன்மையை முறையிட்டு (ஒப்பிடுக, திருப்பாடல் 17) இறைப் பாதுகாப்பை மன்றாடும் திருப்பாடகர். "தாவீதுக்குரியது" என்பதைத் தவிர வேறு செய்தி எதுவும் தலைப்பில் இல்லை.

12 வசனங்களில் ஒன்பது வேண்டுதல்கள், பத்துச் சாட்சிகள் மற்றும் எட்டுப் பொருத்தனைகள் உள்ளனவாக இத்திருப்பாடலை பைபிள் அறிஞர் டேக் பகுப்பாய்கிறார்.

அமைப்பு:
வ.1-2, தனது குற்றமற்ற தன்மையை முறையிடல்
வ.3-5, நேரிய நடத்தையை அறிவித்தல்
வ.26:6-8, பொருத்தனைகள்
வ.9-12, எதிரிகளின் குணங்களை எடுத்துரைத்து, நேர்மையான தன்னைப் பாதுகாக்க மன்றாட்டு.

வசனம் 26:1-3

*ஆராய்ந்து பார்த்துத் தன்னைக் குற்றமற்றவன் என்று அறிவிக்க மன்றாடிய தாவீது, தான் பாவமற்றவன் என்று எண்ணவில்லை; தான் உட்பட, மனிதர்கள் அனைவரும் பாவிகளே என்பதை அவர் நன்கு அறிவார். தனது எதிரிகள் தன் மீது வைக்கும் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் தன்னை ஆராய்ந்து பார்க்க, அவர் ஆண்டவரை அழைக்கிறார். மனிதர்கள் முன்பாக நாமும் குற்றமற்றவர்களாக விளங்கலாம்; ஆனால் தூயாதி தூயவரான கடவுள் முன்பாக நாம் பாவமற்றவர்களாக இருக்க முடியாது.*

வசனம் 26:2

சோதித்தல், ஆராய்தல், புடமிடுதல் - விலை மிகுந்த உலோகத்தைத் தெரிந்தெடுப்பது போல, *தனது உள்ளத்தை ஆய்ந்து பார்க்க ஆண்டவரிடம் தாவீது முறையிடுகிறார்.* இறைவழியில் நடப்பதில் தாவீதுக்கு இருந்த தெளிவையும் உறுதியையும் இது வெளிப்படுத்துகிறது.

வசனம் 26:4-5

*பார்க்க*, 1:1 & 101.

இறைவழி நடப்போர் பொல்லாரை முற்றிலும் தவிர்த்து விட வேண்டுமா?

*இறைப்பணி என்பதே அவர்கள் நடுவில் தானே உள்ளது! கிறிஸ்து இயேசுவும் அவர்தம் சீடர்களும் அவர்களிடமன்றோ தொண்டாற்றினர்! அப்படியாயின், நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் அவர்கள் நடுவே பணியாற்ற வேண்டும், பங்கேற்கக் கூடாது. காலத்தை அவர்களோடு செலவிடலாம், அவர்களுக்குள் கலந்து விடக் கூடாது. சுருங்கக் கூறின், கிறிஸ்தவன் என்கிற நமது சாட்சியை ஒருபோதும் நாம் இழந்து விடக்கூடாது.*

வசனம் 26:6 OV, 26:7

"*பலிபீடம்*" -

*தாவீதின் காலத்தில், பலிபீடம் இறைப் பிரசன்னத்தின் அடையாளம்.*

"*மாசற்றவனாய் என் கைகளைக் கழுவுகின்றேன்*" -

*பார்க்க*, 73:13.

*பாவத்திலிருந்தும் பாவிகளிடமிருந்தும் விலகி இருப்பதன் அடையாளமான தூய்மைச் சடங்கு. பழைய ஏற்பாட்டுக் காலச் சடங்காக அல்லாமல், கறை படாத கைகளும் மாசற்ற மனமும் உடையோரே ஆண்டவரிடம் வரத் தகுதி உடையோர் (24:4அ) என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும். அத்தகு மனவுறுதியை இங்கு தாவீது வெளிப்படுத்துகிறார்.*

வசனம் 26:7 OV, 26:6

"*வியத்தகு உம் செயல்கள்*" -

*கடவுளாகிய ஆண்டவரின் வியத்தகு செயல்கள், பொதுவாக எகிப்திலும் பிறகு பாலைவெளியிலும் அவர் செய்த அற்புதங்களைக் குறிப்பன. திருப்பாடல்களும் அவ்வருஞ் செயல்களை நினைவு கூர்கின்றன (சான்றாக,* 77:11&14, 78:12, 96:3, 105:5). *தாவீதின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் ஆண்டவர் வியத்தகு செயல்களைச் செய்துள்ளார்; அவற்றை மட்டுமன்றி, பொதுவான வியத்தகு செயல்களையும் பாடுவதாக, இங்கு தாவீது பொருத்தனை செய்கிறார்.*

வசனம் 26:8

"*குடி கொள்ளும் இல்லம்*" & "*மாட்சி தங்கியுள்ள இடம்*" -

*கடவுளின் உடன்படிக்கைப் பேழை தங்கியிருந்த இடம். இத்திருப்பாடல் பாடப்பட்ட வேளையில் பேழை எங்கிருந்தது என்பதைத் தெளிவாகக் கூற முடியாது. தாவீதின் காலத்தில்*

*பேழை, முதலில் கிரியத் எயாரிமிலும், பின்னர் மூன்று மாதங்கள் கீதோன் களத்திலும், அதன் பிறகு தாவீதின் நகரிலும் இருந்தது* (1 *குறிப்பேடு* 13 & 15).

*எந்த அளவுக்குத் தாவீது ஆண்டவரின் இல்லத்தில் அவரை வழிபட வாஞ்சித்தார் என்பதை அவர் இங்கு* (*பார்க்க*, 23:6; 27:4) *வெளிப்படுத்துகிறார்.*

*வசனம்* 26:9-10
*வ.*4-5*ல் அறிவித்தது போலவே, மீண்டும் இங்குத் திருப்பாடகர் தன்னைத் தீயோரிடமிருந்து பிரித்துக் காட்டுகிறார். தீயோர் என்று பொதுவாக உரைக்காமல்,* "*கொலை வெறி,*" "*கையூட்டு*" *என்று தீச்செயல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.*

*வசனம்* 26:11
*தான் மாசற்றவன் என்று அறிவியும்* (*வ.*1) *என்று தொடங்கிய திருப்பாடகர், தனது மாசின்மைக்காகத் தனக்கு இரங்குமாறு மன்றாடுகிறார்.*

*வசனம்* 26:12
"*சமமான தளத்தில்*" -
"*செம்மையான இடத்தில்*" (OV) -
mee-shore *என்கிற எபிரேயப் பதம், சமதளம், சீரான தளம் என்றும், உருவகப்படி நேரிய, நீதியுள்ள என்றும் பொருள் கொள்ளலாம்.*

"*மாபெரும் சபையில் ஆண்டவரைப் புகழ்ந்திடுவேன்*" -
*பார்க்க*, 22:25; 35:18.
*சிறப்பான பொருத்தனை!*
***தனித்து*** *விழித்து ஆண்டவரிடம் மன்றாட வேண்டும்;* ***நிறைந்த*** *சபையில் ஆண்டவரைப் புகழ்ந்திட வேண்டும்!*
*நாம் என்ன செய்கின்றோம்?*

✝

## 19 திருப்பாடல் 27

(*புகழ்ச்சிப் பாடல்*)

*தாவீதுக்குரியது*
1 *ஆண்டவரே என் ஒளி;*
*அவரே என் மீட்பு;*
*யாருக்கு நான் அஞ்சவேண்டும்?*
*ஆண்டவரே என் உயிருக்கு அடைக்கலம்;*
*யாருக்கு நான் அஞ்சி நடுங்க வேண்டும்?*
2 *தீயவர் என் உடலை விழுங்க*
*என்னை நெருங்குகையில்,*
*என் பகைவரும் எதிரிகளுமான*
*அவர்களே இடறி விழுந்தார்கள்.*
3 *எனக்கெதிராக*
*ஒரு படையே பாளையமிறங்கினும்,*

என் உள்ளம் அஞ்சாது;
எனக்கெதிராகப் போர் எழுந்தாலும்,
நான் நம்பிக்கையோடிருப்பேன்.
4 நான் ஆண்டவரிடம்
ஒரு விண்ணப்பம் செய்தேன்;
அதையே நான் நாடித் தேடுவேன்;
ஆண்டவரின் இல்லத்தில்
என் வாழ்நாள் எல்லாம்
நான் குடியிருக்க வேண்டும்,
ஆண்டவரின் அழகை
நான் காண வேண்டும்;
அவரது கோவிலில்
அவரது திருவுளத்தைக் கண்டறிய வேண்டும்.
5 ஏனெனில், கேடுவரும் நாளில்
அவர் என்னைத்
தம் கூடாரத்தில் மறைத்து வைப்பார்;
தம் கூடாரத்தினுள்ளே
என்னை ஒளித்து வைப்பார்;
குன்றின்மேல் என்னைப்
பாதுகாப்பாய் வைப்பார்.
6 அப்பொழுது, என்னைச் சுற்றிலுமுள்ள
என் எதிரிகளுக்கு எதிரில்
நான் தலைநிமிரச் செய்வார்;
அவரது கூடாரத்தில்
ஆர்ப்பரிப்புடன் பலிகளைச் செலுத்துவேன்;
ஆண்டவரைப் புகழ்ந்து
பாடல் பாடுவேன்.
7 ஆண்டவரே,
நான் மன்றாடும் போது
என் குரலைக் கேட்டருளும்;
என் மீது இரக்கங்கொண்டு
எனக்குப் பதிலளித்தருளும்.
8 "புறப்படு, அவரது முகத்தை நாடு"
என்றது என் உள்ளம்;
ஆண்டவரே,
உமது முகத்தையே நாடுவேன்.
9 உமது முகத்தை
எனக்கு மறைக்காதிரும்;
நீர் சினங்கொண்டு
அடியேனை விலக்கிவிடாதிரும்;
நீரே எனக்குத் துணை;
என் மீட்பராகிய கடவுளே,
என்னைத் தள்ளிவிடாதேயும்;
என்னைக் கைவிடாதிரும்.
10 என் தந்தையும் தாயும்
என்னைக் கைவிட்டாலும்
ஆண்டவர் என்னை ஏற்றுக்கொள்வார்.
11 ஆண்டவரே,
உமது வழியை
எனக்குக் கற்பித்தருளும்;

என் எதிரிகளை முன்னிட்டு,
என்னைச் செம்மையான பாதையில் நடத்தும்.
12 என் பகைவரின் விருப்பத்திற்கு
என்னைக் கையளித்துவிடாதிரும்;
ஏனெனில், பொய்ச்சாட்சிகளும்
வன்முறையை மூச்சாகக் கொண்டவர்களும்
எனக்கெதிராய்க் கிளம்பியுள்ளனர்.
13 வாழ்வோரின் நாட்டினிலே
ஆண்டவரின் நலன்களைக் காண்பேன் என்று
நான் இன்னும் நம்புகின்றேன்.
14 நெஞ்சே!
ஆண்டவருக்காகக் காத்திரு;
மன உறுதிகொள்;
உன் உள்ளம் வலிமை பெறட்டும்;
ஆண்டவருக்காகக் காத்திரு.

திருப்பாடல் 27:1-14

**சிந்தனைக்கு**

ஆண்டவரில் நம்பிக்கையோடு திருப்பாடகர் பாடிய பாடல். பாடப்பட்ட காலம் மற்றும் சூழல் குறித்த குறிப்புகள் எதுவுமில்லை. வாழ்க்கையின் எதிர்மறையான சூழலின் காரணிகளை ஒதுக்கித் தள்ளி, ஆண்டவரின் செயல்படும் ஆற்றலுக்கு முதலிடம் தர ஒருவரை உறுதிப்படுத்தும் பாடல். திருப்பாடல் 23க்கு அடுத்தபடியாக, பலரின் உள்ளத்திற்கும் நெருக்கமாக விளங்கும் பாடல். இறைப் பிரசன்னத்தை நாடித் தேடிக் காத்திருத்தலையே இப்பாடலெங்கும் நாம் உணர முடியும்.

திருப்பாடல் 31, இப்பாடலுக்கு இணையாக இருப்பதை நாம் உணரலாம் (சில சான்றுகள்: ஒளி 27:1 & 31:16; அடைக்கலம் 27:1 & 31:1; கூடாரத்தில் பாதுகாப்பு 27:5 & 31:20; நம்பிக்கையோடு காத்திருத்தல் 27:14 & 31:24). திருப்பாடல் 27 தனிமையில் திருப்பாடகரின் மன்றாட்டாகவும், திருப்பாடல் 31, இறையடியோரோடு (வ.19-24) திருப்பாடகரின் மன்றாட்டாகவும் இருக்கின்றன.

அமைப்பு:
வ.1-6, ஆண்டவரில் நம்பிக்கை
வ.7-12, ஆண்டவரிடம் மன்றாட்டு
வ.13-14, ஆண்டவரில் நம்பிக்கையோடு காத்திருத்தல்

[மொழிபெயர்ப்புக் குறிப்புகள்:
வ.8: OV "... என்று சொன்னீரே, ..." - இந்த இணைப்புச் சொற்கள் எபிரேய மூலத்தில் இல்லை.
வ.13: OV "... கெட்டுப் போயிருப்பேன்" - இந்தப் பொருளிலான சொற்கள் எபிரேய மூலத்தில் இல்லை.]

வசனம் 27:1-3
*வாழ்வின் அச்சாணி ஆண்டவரே என்பதை இங்கு தாவீது அறிக்கையிடுகிறார். ஆண்டவருடைய ஆற்றலுக்குள் பாதுகாப்பாக உள்ள தனது வாழ்வில், தனக்கு எதிராக யார் என்ன செய்துவிட முடியும் என்று தாவீது முழக்கமிடுகிறார்.*

*கடவுளைத் தன்னுள் கொண்டுள்ள ஒருவரின் முழக்கமே இது!*
*பவுலடிகளும் இவ்வாறு முழங்குவதை நாம் வாசிக்கிறோம் (உரோமையர் 8:31).*
*தங்கள் வாழ்க்கையை உலகெங்கும் நற்சாட்சிகளாக விட்டுச் சென்றுள்ள ஆயிரக்கணக்கான திருப்பணியாளர்களின் முழக்கமும் இதுவே!*
*அவருள் நம்பிக்கையுடைய நாமும் அவ்வாறே முழங்குவோம்!*

வசனம் 27:1
"ஒளி" -
*பார்க்க, 4:6; 18:28; 34:5; 43:3; 44:3; 112:4. நேர்மையாளருக்கே ஒளி, 97:11.*
*கடவுளின் மிகச் சிறந்த அருட்கொடை ஒளி. அதனிலும், அவருடைய முகத்தின் ஒளி!*
*இங்கு ஒளி மீட்கும் ஒளி என்று சொல்லப்பட்டுள்ளது; இருளின் ஆளுகையிலிருந்து மீட்கும் ஒளி!*

வசனம் 27:4-6
"ஆண்டவரின் இல்லம்," "கோயில்," "கூடாரம்," "குன்று" -
*எங்கு இருந்த போதிலும், இறைப் பிரசன்னத்தில் தான் பெற்ற பாதுகாப்பையும் பராமரிப்பையும் தாவீது இங்குத் தனது துதி பலிகளால் மேன்மைப்படுத்துகிறார்.*

வசனம் 27:4
"ஆண்டவரின் இல்லம்" & "அவரது கோயில்" -
*பார்க்க, 23:6; 26:8.*
*இறை இல்லமே தாவீதின் நாட்டம். இன்றைக்கு ஆண்டவரில் அன்புகூரும் நாம் எந்த அளவுக்கு அவரது திருச்சபையை வாஞ்சிக்கிறோம்?*

*திருச்சபை என்பது நாம் உறுப்பினராக உள்ள ஓர் அமைப்பு அல்ல; அது உலகளாவிய இறைமக்களின் ஒன்றிப்பு; ஐக்கியம். தான் உறுப்பினராக உள்ள சபையையே நேசிக்க முடியாத ஒருவர் - தன் சபையோடும் தனக்கு அருகமை திருச்சபைகளோடும் முரண்களைப் பேணும் ஒருவர் - ஆண்டவரின் உடலாக இருக்கும் ஒரே தூய திருச்சபையை (One Holy Catholic) வாஞ்சிப்பது எப்படி முடியும்?*

வசனம் 27:6
*தலை நிமிரச் செய்தல் -*
*தீங்கிலிருந்தும், தீயோரிடமிருந்தும் விடுபட்டு வெற்றி பெறுதல்.*
"ஆண்டவரைப் புகழ்ந்து பாடல் பாடுவேன்" -
*பார்க்க, புகழ்ச்சிப் பலி எபிரேயர் 13:15.*

வசனம் 27:7-12
*ஆண்டவரின் பிரசன்னம், இரக்கம், மீட்பு மற்றும் வழிநடத்துதலுக்கான மன்றாட்டு.*

வசனம் 27:7-10
*பொல்லார் ஆண்டவரைத் தேடார் (10:4); தேடினாலும், தன்னலத்தோடு தற்காலச் சுகங்களுக்காகவே தேடுவர் (78:31-36).*

ஆனால் இறைமக்கள் ஆண்டவரை எப்படித் தேடுகின்றனர்?
* பாலைவெளியில் தண்ணீரைத் தேடும் தாகத்தோடு ஆண்டவரைத் தேடுகின்றனர் (42:2; 63:1).
* இவ்வுலகின் நன்மைகள் அனைத்திற்கும் மேலாக ஆண்டவரைத் தேடுகின்றனர் (மத்தேயு 6:33)
* இடையறாது ஆண்டவரைத் தேடுகின்றனர் (105:4).
* முழுமனதோடு ஆண்டவரைத் தேடுகின்றனர் (119:2, 10 & 58).
* ஞானத்தோடு ஆண்டவரைத் தேடுகின்றனர் (34:10-15).
* சிக்கலான வேளைகளில், தீர்வுக்கான காத்திருப்போடு ஆண்டவரைத் தேடுகின்றனர் (34:4; 69:6; 77:2).

நம்பிக்கையோடு தேடுதலின் சிகரமாகத் திருப்பாடகரின் உறுதி வெளிப்படுகிறது (வ.10). இப்படிச் சொல்வது எளிதாயினும், இளம் வயதில் பெற்றோரைச் சார்ந்து வாழும் நம்மால், இந்த அளவுக்கு ஆண்டவரைச் சார்ந்து வாழ முடிகிறதா?

வசனம் 27:11
"உமது வழியை எனக்குக் கற்பித்தருளும்" -
திருப்பாடகரின் தொடரும் மன்றாட்டு: பார்க்க, 26:4-5. மேலும், 86:11; 143:10; 119ன் பல வசனங்கள்.
ஆண்டவரின் சித்தமறிந்து அவற்றின் வழி வாழ்வோருக்கே மன்றாட்டின் மறுமொழி கிடைக்கும். அதுமட்டுமன்றி, அவரின் சித்தத்தை அறிய அறிய, அவரது சித்தமே நமது மன்றாட்டாக ஆகிவிடும்!

வசனம் 27:13-14
இணை, புலம்பல் 3:24-26.
நம்பிக்கையோடு எதிர்நோக்கி இறைப் பிரசன்னத்தில் காத்திருக்கும் திருப்பாடகர்; ஆண்டவர் அருளும் நலன்கள் எத்தகையன என்கிற தெளிவோடு காத்திருத்தல்; காத்திருத்தல் இனிமையாக இருக்காது (42:2-3; 43:5); ஆனால் காத்திருத்தலின் விளைவு நலமானதும் பாதுகாப்பானதும் ஆகும்! (9:18; 37:9; 40:1; 130:7).
காத்திருக்கும் வேளைகளில், இறைச்சித்தம் என்னவென்று நமக்குள் தியானிப்பது நமக்குச் சிறந்த பாடமாகவும், ஆண்டவருக்குள் நம்மைப் புதுப்பிப்பதாகவும் அமையும் (எசாயா40:31).

வசனம் 27:14
"... காத்திரு... காத்திரு." -
தனக்குத் தானே சொல்லிக் கொண்ட தாவீது, இதனை முழுமையாகக் கடைப்பிடித்தார் என்பதை அவருடைய வாழ்க்கையில் நாம் காண்கிறோம். ஒருபோதும் தன் முனைப்பாக அவர் எதையும் செய்ததில்லை; தன் முனைப்பாக எடுத்த முடிவு எதுவும் அவருக்கு வெற்றியைத் தரவில்லை. எனவே, ஆண்டவர் செயல்படத் தன்னை ஒப்புக் கொடுத்து அவர் காத்திருந்தார்.
அவ்வாறு காத்திருத்தலின் அடிப்படை, தன் முனைப்பாகச் செயல்படும் உள்ளத்தைக் கட்டுப்படுத்துதல். எனவே, "... உறுதி கொள் ... வலிமை பெறு ... காத்திரு!" என்று தன் உள்ளத்திற்கு ஆணை விடுக்கிறார்.

வெற்றி பெற்ற ஒருவரின் ஆலோசனைகளைக் கடைப்பிடித்தால், நமது வெற்றி உறுதி அன்றோ!

## 19 திருப்பாடல் 28

(உதவிக்காக மன்றாடல்)

*தாவீதுக்குரியது*
1 ஆண்டவரே,
உம்மை நோக்கி மன்றாடுகின்றேன்;
என் கற்பாறையே,
என் குரலைக் கேளாதவர்போல் இராதேயும்;
நீர் மௌனமாய் இருப்பீராகில்,
படுகுழியில் இறங்குவோருள்
நானும் ஒருவனாகிவிடுவேன்.
2 நான் உம்மிடம் உதவி வேண்டுகையில்,
உமது திருத்தூயகத்தை நோக்கி
நான் கையுயர்த்தி வேண்டுகையில்,
பதில் அளித்தருளும்.
3 பொல்லாரோடு என்னை
ஒழித்து விடாதேயும்!
தீயவரோடு என்னை
அழித்து விடாதேயும்!
அவர்கள் தமக்கு அடுத்திருப்பாரோடு
பேசுவதோ சமாதானம்;
அவர்களது உள்ளத்தில்
உள்ளதோ நயவஞ்சகம்.
4 அவர்களின் செய்கைக்கேற்ப,
அவர்களின் தீச்செயலுக்கேற்ப,
அவர்களுக்குத் தண்டனை அளியும்;
அவர்கள் கைகள் செய்த
தீவினைகளுக்கேற்ப,
அவர்களுக்குத் தண்டனை வழங்கியருளும்,
அவர்களுக்குத் தகுந்த
கைம்மாறு அளித்தருளும்.
5 ஏனெனில், ஆண்டவரின் செயல்களையோ
அவர் கைகள் உருவாக்கியவற்றையோ
அவர்கள் மதிக்கவில்லை;
ஆகையால் அவர்
அவர்களைத் தகர்த்தெறிவார்;
ஒருபோதும் மீண்டும் கட்டி எழுப்பார்.
6 ஆண்டவர் போற்றி! போற்றி!
ஏனெனில், அவர்
என் கெஞ்சும் குரலுக்குச் செவிசாய்த்தார்.
7 ஆண்டவர் என் வலிமை,
என் கேடயம்;
அவரை என் உள்ளம் நம்புகின்றது;
நான் உதவி பெற்றேன்;
ஆகையால் என் உள்ளம் களிகூர்கின்றது;
நான் இன்னிசை பாடி
அவருக்கு நன்றி கூறுவேன்.
8 ஆண்டவர்தாமே

தம் மக்களின் வலிமை;
தாம் திருப்பொழிவு செய்தவர்க்கு
அவரே பாதுகாப்பான அரண்.
9 ஆண்டவரே,
உம் மக்களுக்கு விடுதலை அளித்தருளும்;
உமது உரிமைச் சொத்தான
அவர்களுக்கு ஆசி வழங்கும்;
அவர்களுக்கு ஆயராக இருந்து
என்றென்றும் அவர்களைத் தாங்கிக்கொள்ளும்.

திருப்பாடல் 28:1-9

**சிந்தனைக்கு**

தலைப்பில் செய்தி எதுவுமற்ற ஒரு திருப்பாடல். மன்றாட்டுக்குப் பதில் அளித்தருளும் என்று வேண்டுகிற (வ.2) திருப்பாடகர், தனது கெஞ்சும் குரலுக்குச் செவிசாய்த்த ஆண்டவரைப் போற்றுகிறார் (வ.6).

மன்றாட்டுத் திருப்பாடல்களின் குவியமான 25 முதல் 33 வரை உள்ள திருப்பாடல்களுள், திருப்பாடல் 27டன் ஒப்புநோக்கத்தக்கதொரு திருப்பாடல்:
வ.1 & 27:7, தன் குரல் கேட்க அழைப்பு;
வ.1 & 27:5, அடைக்கலமாகும் கற்பாறை / குன்று;
வ.6 & 27:7, இரக்கமிகு ஆண்டவர்
வ.7 & 27:6, புகழ்ந்து பாடும் திருப்பாடகர்.
ஆனால், பொல்லாரைக் குறித்த குற்றச்சாட்டு (வ.3-5), இப்பாடலின் தனித்துவமாகும்.

அமைப்பு:
வ.1-2, ஆண்டவரின் இரக்கத்திற்காக மன்றாட்டு
வ.3-5, ஆண்டவரை மதியாத பொல்லாருக்கு எதிரான மன்றாட்டு
வ.6-7, தனது நம்பிக்கையாகிய ஆண்டவருக்கு புகழ்ச்சி
வ.8-9, உடன்படிக்கையின் மக்களையும் திருப்பொழிவு பெற்றவரையும் ஆயராக வழிநடத்த மன்றாட்டு

வசனம் 28:1
"... மௌனமாய் இருப்பீராகில்..." -
இணை, 35:22; 50:3; 83:1; 109:1.
அவசரமாக உதவி தேவைப்படும் தனது நிலையை ஆண்டவருக்கு தாவீது உணர்த்துகிறார்.

"படுகுழி" -
உருவகமாக, சாவு (55:22; 143:7). ஆண்டவரின் நியாயத்தீர்ப்பு மற்றும் தண்டனையையும் படுகுழி குறிக்கிறது.

வசனம் 28:2
"... உமது திருத்தூயகத்தை நோக்கி..." -
பார்க்க, 134:2.

திருத் தூயகத்தில் / மகா பரிசுத்த ஸ்தலத்தில் ஆண்டவரின் மாட்சி இருந்தது என்பதால் உண்டான வழக்கம். பின்னர் இது எருசலேமின் திக்கு நோக்கிக் கைகளை நீட்டி வழிபடுவதாக மாறியது (தானியேல் 6:10). இன்றைக்கோ எங்கும் நிறைந்த ஆண்டவரை எவ்விடத்திலும் உள்ளம் திறந்து வழிபடுவதாக உள்ளது (யோவான் 4:21-24). நம் ஒவ்வொருவரின் தனிப்பட்ட வழிபாடு எப்படி இருக்கிறது? தினமும் ஒரு முறையாவது முழங்காலில் நிற்கிறோமா? நமது உள்ளம் திறந்து கிறிஸ்து இயேசு கற்பித்த வழியில் மன்றாடுகிறோமா?

"திருத் தூயகம்" -
"மகா பரிசுத்த ஸ்தலம்" OV -
தூயகத்தினுள் திரைக்குப் பின்னுள்ள, உடன்படிக்கைப் பேழை வைக்கப்பட்டுள்ள இடம் / கருவறை (விடுதலைப் பயணம் 26:33-34; 1 அரசர்கள் 6:16,19,23; 8:6).

"கையுயர்த்தி வேண்டுகையில்" -
பார்க்க, 134:2; 141:2.
உணர்வுப் பூர்வமான மன்றாட்டு. உள்ளம் கசிந்து மன்றாடும் வேளைகளில் தன்னியல்பாக நடப்பது.

வசனம் 28:5
"... அவர்கள் (பொல்லார்) மதிக்கவில்லை" -
இதற்கு ஒரு விரிவுரையைப் பவுலடிகள் எழுதியுள்ளார், பார்க்க உரோமையர் 1:18-32.

வசனம் 28:7
"ஆண்டவர் என் வலிமை; என் கேடயம்..." -
தாவீதின் நம்பிக்கை.

வசனம் 28:8
"ஆண்டவர்தாமே தம் மக்களின் வலிமை" -
வ.7ல், "ஆண்டவர் என் வலிமை" என்ற திருப்பாடகர், உடன்படிக்கையின் ஆண்டவராகிய அவரே தம்மக்களின் வலிமை என்று, அவரில் நம்பிக்கை கொள்ள மக்களை உற்சாகமூட்டுகிறார். தான் மட்டும் ஆண்டவரில் வளர்வது அல்ல, தன் நாட்டு மக்களும் இறை நம்பிக்கையில் தழைத்து வளர தாவீது விரும்புகிறார்.

"திருப்பொழிவு" -
ஆண்டவர் அருளிய திருப்பொழிவை தாவீது நினைவூட்டுகிறார். ஆண்டவர் உண்மையுள்ளவர்; தாம் அருளிய திருப்பொழிவை அவர் மேன்மைப்படுத்துவார்.

வசனம் 28:9
பார்க்க, 25:22; 29:11. நாட்டிற்கான மன்றாட்டு.

"அவர்களுக்கு ஆயர்" -
பார்க்க, 80:1; சபை உரையாளர் 12:11; எசாயா 40:11; எரேமியா 31:10; எசேக்கியேல் 34; மீக்கா 5:4.
தனக்கு மட்டுமல்லாமல் (23:1-6), ஆண்டவரின் மக்கள் அனைவருக்கும், ஆண்டவரே ஆசி வழங்கும் ஆயர்; அவரே தம்மக்களின் பாதுகாவலர்.

தாவீதின் இந்த மன்றாட்டும், ஆயர் குறித்த இறைவாக்குகளும், நல்மீட்பராம் கிறிஸ்து இயேசுவில் முழுமையாக நிறைவேறியதை (யோவான் 10:9-16) நாம் காண்கிறோம். தம்

இன்னுயிரை ஈந்து, தம் மந்தையாகிய நம்மை மீட்ட இறைமைந்தன் தாமே, நம்மைச் செம்மையான வழியில் இன்றும் என்றும் நடத்துவாராக!

✝

## 19 திருப்பாடல் 29

(புயல் நடுவே ஆண்டவரின் குரல்)

*தாவீதின் புகழ்ப்பா*
1 இறைவனின் மைந்தரே!
மாட்சியையும் வலிமையையும்
ஆண்டவருக்கு உரித்தாக்குங்கள்.
ஆம்! ஆண்டவருக்கே உரித்தாக்குங்கள்!
2 ஆண்டவரின் பெயருக்கேற்ற மாட்சியை
அவருக்கு உரித்தாக்குங்கள்;
தூய மாட்சி இலங்கும்
ஆண்டவரை வழிபடுங்கள்.
3 ஆண்டவரின் குரல்
கடல்மேல் ஒலிக்கின்றது;
மாட்சிமிகு இறைவன் முழங்குகின்றார்;
ஆண்டவர்
நீர்த்திரள்களின்மேல் வீற்றிருக்கின்றார்.
4 ஆண்டவரின் குரல்
வலிமைமிக்கது;
ஆண்டவரின் குரல்
மாட்சிமிக்கது.
5 ஆண்டவரின்குரல்
கேதுருமரங்களை முறிக்கின்றது;
ஆண்டவர்
லெபனோன் கேதுரு மரங்களை
முறித்துவிடுகின்றார்.
6 லெபனோனின் மலையைக்
கன்றுக் குட்டியெனத் துள்ளச் செய்கின்றார்;
சிரியோன் மலையைக்
காட்டெருமைக் கன்றெனக் குதிக்கச் செய்கின்றார்.
7 ஆண்டவரின் குரல்
மின்னலைத் தெறிக்கச் செய்கின்றது;
8 ஆண்டவரின் குரல்
பாலைவனத்தை அதிரச் செய்கின்றது;
ஆண்டவர்
காதேசு பாலைவனத்தை நடுங்கச் செய்கின்றார்.
9 ஆண்டவரின் குரல்
கருவாலி மரங்களை முறித்து விடுகின்றது;
காடுகளை வெறுமை ஆக்குகின்றது;
அவரது கோவிலில் உள்ள அனைவரும்
"இறைவனுக்கு மாட்சி"

என்று ஆர்ப்பரிக்கின்றனர்.
10 ஆண்டவர்
வெள்ளப் பெருக்கின்மீது வீற்றிருக்கின்றார்;
ஆண்டவர் என்றென்றும் அரசராக வீற்றிருக்கின்றார்.
11 ஆண்டவர் தம் மக்களுக்கு
ஆற்றல் அளிப்பாராக!
ஆண்டவர் தம் மக்களுக்கு
சமாதானம் அருள்வாராக!
ஆண்டவர் தம் மக்களுக்கு
ஆசி வழங்குவாராக!

திருப்பாடல் 29:1-11

**சிந்தனைக்கு**

தமது பேராற்றலால் இயற்கையை ஆளுகை செய்யும் ஆண்டவரைப் போற்றி, தாவீது பாடிய புகழ்ப் பாடல். திருப்பாடல் 104ம், 97ம், படைப்பில் ஆண்டவரின் மேன்மையைப் புகழ்கின்றன.

மன்றாட்டுத் திருப்பாடல்களின் குவியத்துள் (25-33) இப்பாடல் இருந்தாலும், பாடலின் கருப்பொருள் கடவுளின் இறையாண்மையைப் போற்றுவதே ஆகும். மன்றாட்டு மற்றும் துதிகளுக்கு நடுவே, பேராற்றல் மிக்க ஆண்டவரிடம் நாம் மன்றாடுகிறோம் என்பதை நமக்கு உணர்த்தும் திருப்பாடல்.

அமைப்பு:
வ.1-2, ஆண்டவரின் ஆற்றலை அறிக்கையிட அழைப்பு
வ.3-9, புயல்களின் மேல் ஆளுகை செய்யும் ஆண்டவர்
ல.10-11, உயர்ந்த அரியணையில் அமர்ந்திருக்கும் ஆண்டவர், தம் மக்களுக்கு வழங்கும் ஆசி

வசனம் 29:1
"இறைவனின் மைந்தரே" -
OV, "பலவான்களின் புத்திரரே" -
இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேயச் சொல், ஏல் (El) என்பது, கடவுளை ஒருமையில் குறிக்கும் சொல். மைந்தர்களைக் குறிக்க பேன் (Bane) என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதே இரண்டு சொற்களே, யோபு 1:6; 2:1 & 38:7 ஆகிய இடங்களில் மூலநூலில் இடம்பெற்றுள்ளன.

நான் இதனை எப்படி விளங்கிக் கொள்கிறேன் என்றால்:
"இறைவனின் மைந்தரே" என்பது பனிரெண்டு குலத்தவரான இஸ்ரயேலரை, அவர்களின் குலத் தலைவர்களை விளித்து, ஆண்டவரின் வல்லாண்மையே விவரித்து, தாவீது பாடிய புகழ்ப் பாடல். இஸ்ரயேலரின் அன்றைய வழிபாடு என்பது, தனி வழிபாடு மற்றும் குடும்ப வழிபாட்டிற்கு அடுத்த நிலையில், ஒரே மக்களினமாக, ஆண்டவர் குறிப்பிட்ட நாள்களில், ஆண்டவரின் இல்லத்தில் திரண்டு கூடி, ஏறெடுக்கும் வழிபாடு.

வசனம் 29:2ஆ
"தூய மாட்சி இலங்கும் ஆண்டவரை வழிபடுங்கள்" -

OV, "*பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள்*" -
KJV, "worship the LORD in the beauty of holiness".
*ஆண்டவரின் தூய தன்மையே இங்கு புகழ்ச்சிக்குரியது.*
*தூயாதி தூயவர் முன், தூயோராக நாம் நம்மைக் காட்டிக் கொள்ள முடியுமோ?*

*வசனம்* 29:3-9
"*ஆண்டவரின் குரல்*" -
OV, "*கர்த்தருடைய சத்தம்*" -
*குரல் என்பதும் சத்தம் என்பதும் எளிய சொற்கள்.* Kole *என்கிற மூலச் சொல்,* "*பேரிடி*" "*இடி முழக்கங்கள்*" (OV) *என்றும் சொல்லப்பட்டுள்ளது, விடுதலைப் பயணம்* 19:16; *கடவுளாகிய ஆண்டவரின் குரல் அல்லது தோற்றம் அல்லது பிரசன்னம் என்றால், நமது உள்ளத்தில் உதிக்க வேண்டியது, இந்த சீனாய் மலையில் வெளிப்பட்ட கற்பனைக்கெட்டா இறைமாட்சியே!*

*அதுமட்டுமல்லாமல், படைப்பின் அச்சுறுத்தும் சீற்றங்களும் பேரிடிகளும் ஆற்றல்மிகு ஆண்டவரின் மாட்சியை அன்றோ நமக்கு அறிவிக்கின்றன.*

*வசனம்* 29:3
"*கடல் மேல்*" -
OV, "*தண்ணீர்களின் மேல்*" -
*மூலச் சொல்,* mah-yim; *தண்ணீர் என்று ஒருமையிலும் தண்ணீர்கள் என்று பன்மையிலும் சூழலுக்கு ஏற்பப் பொருள் கொள்ளலாம்.*

*செங்கடல் மீது மட்டுமல்லாமல், ஆண்டவரின் ஆற்றல் யோர்தான் ஆற்றின் மீதும் வெளிப்பட்டது அல்லவா!*

*வசனம்* 29:5
"*லெபனோன் கேதுரு மரங்கள்*" -
*உயரமும்* (120 *அடி*) *பருமனும்* (30 *அடி*) *உறுதியுமிக்க மரங்கள்* (*எசாயா* 2:13). *அத்துணை பெரும் மரங்களையும் முறிக்க வல்லது, ஆண்டவரின் முழக்கம்.*

*வசனம்* 29:6
*பார்க்க* 114:4.
*லெபனோனின் மலை, நெடிதுயர்ந்ததோர் மலை.*
*சிரியோன் மலை என்பது இஸ்ரயேலின் உயர்ந்த மலையாகிய எர்மோன் மலை.*

*வசனம்* 29:8
*காதேசு பாலைவனம், யூதேயா நிலப்பரப்பின் தெற்கே உள்ளது. லெபனோனுக்கு வடக்காக* (*வ.*6), *காதேசு பாலைவனம் வரை என்பது மொத்த இஸ்ரயேலின் நிலமெங்கும் ஆண்டவர் முழங்குவதைக் குறிக்கும்.*

*வசனம்* 29:9
*இயற்கையின் மீது ஆண்டவரின் ஆளுகையைப் போற்றி, அவரது கோயிலில் திரண்டிருந்த பெருங்கூட்ட மக்கள் ஆர்ப்பரிக்கின்றனர்.*

*வசனம்* 29:10
"*வெள்ளப் பெருக்கின் மீது*" -
*சமீப காலங்களில் பெருவெள்ளம் எவ்வளவு அழிவை ஏற்படுத்தும் என்பதை நாம் கண்டு வருகிறோம். நமது ஆண்டவர் பெருவெள்ளத்தால் உலகை ஒருமுறை அழித்தவர்;*

*அந்நிலையிலும் நோவாவின் குடும்பத்தினரையும், வகை வகையான உயிரினங்களையும் அழியாது காத்தவர். இன்றைக்கும் வானவில் அவரது மீட்பின் அடையாளம் அல்லவா!*

வசனம் 29:11
*இயற்கையை ஆளுகை செய்பவர், மக்களுக்கு ஆசி வழங்க மன்றாட்டு.*

*"சமாதானம்" -*
*அமைதி அருளும் ஆண்டவர். அமைதி ஆண்டவரின் மாபெரும் ஆசி, மனிதனுக்கும், நாட்டிற்கும்.*

*தமது தூய இரத்தத்தினால், பாவத்திலிருந்து நம்மை மீட்டுக் கொண்ட கிறிஸ்து இயேசு, நமக்காக அருளிய வாக்கு: "அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்; என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன்." அந்த அன்பின் அமைதிக்குள் நாம் அடைக்கலம் அடைவோம்.*

✝

## 19 திருப்பாடல் 30

(நன்றி செலுத்துதல்)

*புகழ்ப்பா; திருக்கோயில் அர்ப்பணப்பா; தாவீதுக்குரியது*
1 ஆண்டவரே,
உம்மை ஏத்திப் புகழ்வேன்;
ஏனெனில், நீர் என்னைக்
கைதூக்கி விட்டீர்;
என்னைக் கண்டு
என் பகைவர் மகிழ
நீர் விடவில்லை.
2 என் கடவுளாகிய ஆண்டவரே,
உம்மிடம் உதவி வேண்டினேன்;
என்னை நீர் குணப்படுத்துவீர்.
3 ஆண்டவரே,
நீர் என்னைப்
பாதாளத்திலிருந்து ஏறிவரச் செய்தீர்;
சாவுக் குழியில் இறங்கிய
எனது உயிரைக் காத்தீர்.
4 இறையன்பரே,
ஆண்டவரைப் புகழ்ந்து பாடுங்கள்;
தூயவராம் அவரை நினைந்து
நன்றி கூறுங்கள்.
5 அவரது சினம்
ஒரு நொடிப் பொழுதுதான் இருக்கும்;
அவரது கருணையோ
வாழ்நாள் முழுதும் நீடிக்கும்;
மாலையில் அழுகை;
காலையிலோ ஆர்ப்பரிப்பு.
6 நான் வளமுடன் வாழ்ந்தபோது,

'என்னை ஒருபோதும்
அசைக்க முடியாது' என்றேன்.
7 ஆனால், ஆண்டவரே!
உமது கருணையினால்
மலையென உறுதியாக
என்னை நிலைநிற்கச் செய்தீர்;
உம் முகத்தை மறைத்துக் கொண்டீர்;
நான் நிலைகலங்கிப் போனேன்.
8 ஆண்டவரே,
உம்மைநோக்கி மன்றாடினேன்;
என் தலைவரிடம்
எனக்கு இரங்குமாறு வேண்டினேன்.
9 நான் சாவதால்,
படுகுழிக்குப் போவதால்,
உமக்கு என்ன பயன்?
புழுதியால் உம்மைப் புகழ முடியுமா?
உமது வாக்குப் பிறழாமையை
அறிவிக்க இயலுமா?
10 ஆண்டவரே!
எனக்குச் செவிசாயும்;
என்மீது இரங்கும்;
ஆண்டவரே,
எனக்குத் துணையாய் இரும்.
11 நீர் என் புலம்பலைக்
களிநடனமாக மாற்றிவிட்டீர்;
என் சாக்குத் துணியைக் களைந்துவிட்டு
எனை மகிழ்ச்சியால் உடுத்தினீர்.
12 ஆகவே என் உள்ளம்
உம்மைப் புகழ்ந்து பாடும்;
மௌனமாய் இராது;
என் கடவுளாகிய ஆண்டவரே,
உமக்கு என்றென்றும் நன்றி செலுத்துவேன்.

திருப்பாடல் 30:1-12

**சிந்தனைக்கு**

தலைப்புடைய திருப்பாடல்; தலைப்போ, ஆய்வுக்குரியது! இல்ல அர்ப்பணப் பாடலா? ஆண்டவரின் இல்ல அர்ப்பணப் பாடலா? ஆண்டவரின் இல்லத்திற்கான தள அர்ப்பணப் பாடலா? ஒவ்வொரு கேள்வியையும் ஆய்ந்து பார்ப்போம்.
(அதற்கு முன்பாக, 2 சாமுவேல் 24 மற்றும் 1 குறிப்பேடு 21:16-22:1 பகுதிகளை வாசித்தல் நலம். இன்றைக்குக் கரோனா முழு ஊரடங்கு நாள், வேதத் தியானத்திற்கும் இறைவேண்டலுக்கும் நேரம் கொடுப்பது நல்லது.)

முதலாவது, இல்ல அர்ப்பணப் பாடல் (OV, கிரகப் பிரதிஷ்டையின் பாட்டு) என்பது; தாவீதுக்குரிய திருப்பாடல் என்பதால், 2 சாமுவேல் 5:11ல் குறிப்பிடப்பட்டுள்ள தாவீதின் அரண்மனை பற்றிய செய்திகளோடு, இப்பாடலில் சொல்லப்பட்டுள்ள செய்திகளை ஒப்பிட்டுப்

பார்த்தால், அவை ஒத்திருக்கவில்லை. குறிப்பாக, சாவுக்கொப்பான நோய் எதையும் நாம் அங்கே காண இயலாது.

இரண்டாவதாக, களிநடனத்தோடு அரசர் தாவீது உடன்படிக்கைப் பேழையை தாவீதின் நகருக்கு எடுத்து வரும் நிகழ்வு, 2 சாமுவேல் 6:12-19. இப்பகுதியும் இத்திருப்பாடலின் செய்திகளோடு ஒப்புமையாக இல்லை.

மூன்றாவதாக, யோவான் 10:22ல் குறிப்பிடப்படும் கோயில் அர்ப்பண விழா; இது 1 மக்கபேயர் 4:52 மற்றும் 2 மக்கபேயர் 10:1 வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள, கி.மு. 165 அல்லது 164ம் ஆண்டில் நிகழ்ந்த, பலிபீட அர்ப்பணத்தோடு தொடர்புடையது; ஆனால் இந்த நிகழ்வு, தாவீதோடு தொடர்புடையது அல்ல என்பதால், இந்த வரலாற்று நிகழ்வோடு இத்திருப்பாடலைத் தொடர்புபடுத்த முடியாது.

இறுதியாக நாம் பார்க்க இருப்பது, 2 சாமுவேல் 24ம் அதிகாரத்திலும், 1 குறிப்பேடு 21:16 முதல் 22:1 வரையிலும் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகள். வீரர்களின் கணக்கெடுப்பை தாவீது அரசர் மேற்கொண்டதால் நேர்ந்த விளைவுகளை இப்பகுதிகளில் நாம் வாசிக்கிறோம். ஆண்டவரின் தூதர் எருசலேமை நோக்கித் தம் கையை நீட்டும் நிலையில், தாவீது அரவுனாவின் களத்தில் அவரைக் காண்கிறார்; தாவீதுக்கும் எருசலேமுக்கும் கொள்ளை நோய் தாக்காதபடி, ஆண்டவர் காக்கிறார். 2 சாமுவேல் 24:14&17ம், இங்கு வ.2ம் இசைந்திருக்கக் காண்கிறோம். தமது தூதரை ஆண்டவர் தடுத்ததினால், தாவீது நன்றி செலுத்துகிறார், வ.3. தாண் நிலப் பரப்பு தொடங்கி பெயேர்செபா வரை மாண்ட 70000 பேருக்காக (வீரர்களுக்காக) மாலையில் அழுகை; அரவுனாவிடமிருந்து அந்த நிலத்தை விலைக்கு வாங்கி, ஆண்டவரின் இல்லத்திற்கென அத்தளத்தை அர்ப்பணம் செய்ததால், காலையிலோ ஆர்ப்பரிப்பு (வ.5). இங்கு வ.11ம் சிறப்பாக நினைவுகூரத்தக்கது. வ.6, 2 சாமுவேல் 24:1-4 பகுதியோடும், அதன் பிறகு நடந்தவை வ.7ன் பின்பகுதியோடும் ஒப்புநோக்கத்தக்கவை. 2 சாமுவேல் 24:14ல் ஆண்டவரின் இரக்கத்திற்காக தாவீது மன்றாடுகிறார்; இந்த மன்றாட்டை அவர் வ.10ல் நினைவுகூருகிறார்.

எனவே திருக்கோயிற் தள அர்ப்பணப் பாடல் என்று, இத்திருப்பாடலை நாம் புரிந்து கொள்ளலாம்.

இவ்விதமாக, இத்திருப்பாடல் மீட்பின் புகழ்ப் பாடல்!

மன்றாட்டுத் திருப்பாடல்களின் குவியத்துள் (25-33) இப்பாடல் அமைவதும் பொருத்தமானதே! (வ.2&8-10) 🕎

அமைப்பு:
வ.1-3, மீட்பின் ஆண்டவருக்குப் புகழ்ச்சி
வ.4-7, ஆண்டவரின் இரக்கம் அவருடைய கோபத்தை விடப் பெரிது
வ.8-12, புலம்பலிலிருந்து களிநடனம்
🕎
வசனம் 30:1
"... ஏத்திப் புகழ்வேன்" -
34:1-3; 145:1.
"... கைதூக்கி விட்டீர்" -
30:3.
"... பகைவர் மகிழ நீர் விடவில்லை" -
26:9; 27:12; 28:3; 31:8.

ஆண்டவரின் நீதியின் நிமித்தமும், இரக்கத்தினாலும், தாவீதின் எதிரிகள் மகிழ அவர் விடவில்லை.

வசனம் 30:3
"பாதாளம்" -
பார்க்க, 16:10.
பாதாளத்திலிருந்து ஏறி வருதல் என்பது இங்கு உயிர்த்தெழுதல் அல்ல; பாதாளத்தில் இறங்குவதற்கு நெருக்கமான நிலையில் இருந்த தன்னை, ஆண்டவர் மீட்டதாக இங்கு தாவீது குறிப்பிடுகிறார்.

"குழி" "படுகுழி" (வ.9) -
பார்க்க, 28:1

வசனம் 30:4
ஆண்டவரைப் புகழ்ந்து போற்றவும், அவருக்கு நன்றிகளை ஏறெடுக்கவும் மீண்டும் மீண்டும் திருப்பாடகர் நம்மை அழைக்கிறார், 33:21; 97:12; 103:1; 105:1-3; 145:21.

"இறையன்பரே" -
OV, "கர்த்தருடைய பரிசுத்தவான்களே" -
மூலச் சொல், khaw-seed காஸீட், இறைப்பற்றாளர், கருணையாளர், ஆண்டவரின் தூயோர்.

வசனம் 30:5
இணை, எசாயா 54:7.
சினமோ நொடிப்பொழுது; கருணையோ நிலைவாழ்வு (உருவகமாக, 23:6ஆ).

அதேவேளையில், நொடிப்பொழுதே அவரது சினம் என்பது, எவ்வளவு சடுதியில் நாம் மனம் திருந்தி மன்னிப்பை வேண்டி அவரிடம் திரும்புகிறோம் என்பதைச் சார்ந்தது.

வசனம் 30:6-7
வ.6 இணை, 10:6

எல்லாம் நலமாக நடக்கும் போது நாமும் ஆண்டவரைத் தேடுவதில்லை தானே! அப்படி நாம் நடந்து கொண்டாலும், நாம் வீழ்ந்து விடும் வேளைகளில், நம்மீது அன்புகூர்ந்து, அவர் நம்மைத் தூக்கி நிலைநிறுத்துகிறார்.

எனவே, செல்வம், ஆற்றல், புகழ் எல்லாம் எனக்குரியது என்று, சுயசார்பு, சுயபலம் போன்றவற்றைச் சார்ந்து வாழ்தல் வேண்டாம்; இமைப் பொழுதில் எல்லாம் நிர்மூலமாகி விடும்.

வசனம் 30:9
"புழுதி" -
தொடக்க நூல் 2:7 & 3:19; சபை உரையாளர் 12:7.
மூலச் சொல், aw-fawr, அஃபர்; புழுதி > மண், சேறு, சாம்பல், (சுண்ணாம்புக்) காரை என்று பொருள் படும்.
மண்ணிலிருந்து உண்டாக்கப்பட்ட மனிதன், மண்ணுக்குத் திரும்பி, மண்ணாகிறான். மனிதன் என்ற இடைப்பட்ட நிலையில் இருக்கும் போது மட்டுமே ஆண்டவரைத் துதிக்க இயலும் என்பதை தாவீது நினைவூட்டுகிறார்; ஆண்டவர் அவரை மண்ணாகாமல் காத்தார்; தாவீது புகழ்ப் பாடல் பாடினார்.

நமது நிலை என்ன?
இரண்டாவது கரோனா அலை நம்மில் பலரையும் வாரிக் கொண்டது; ஆனாலும் ஆண்டவர் நம்மீது இரக்கம் பாராட்டி நம்மைக் காத்தார்; அதற்காக அவரைத் துதித்து நன்றிப் பலி செலுத்துகிறோமா?
ஆபத்து இன்னும் விலகவில்லையே; இன்றே, இப்பொழுதே படைத்தவரைப் பணிந்து தொழுவோம்.

வசனம் 30:10
"துணை" -
KJV, helper
OV, வ.9, "சகாயர்".
மூலச் சொல், aw-zar; காப்பவர், துணை நிற்பவர், சகாயர் (succour) என்று பொருள் படும்.
மனிதரின் துணையைச் சார்ந்து வாழ்வதை விட ஆண்டவரைச் சார்ந்து வாழ்தல் சிறப்பு. நமக்கு ஒரு துணையாளராகத் தூய ஆவியானவர் (யோவான் 14:16-17) என்றைக்கும் நம்மோடு இருக்கிறார். அவரையே பற்றிக் கொண்டு வாழ்வோம்!

வசனம் 30:11
"சாக்குத் துணி" -
OV, "இரட்டு" -
இங்கு உருவாகமாக, துயரம்.

வசனம் 30:12
"உள்ளம்" -
மூலச் சொல், khaw-bode, எடை; உருவகமாக, நல்லுணர்வு, புகழ், மாட்சி.

"மௌனமாய் இரேன்; புகழ்ந்து பாடுவேன்" என்று திருப்பாடகர் இங்கு சூளுரைக்கிறார். நாம் மௌனமாக இருந்த நாட்கள் எத்தனை?? நமது மௌனத்தை உடைப்போம்; அனுதினமும் கடவுளாகிய ஆண்டவர் செய்கிற எண்ணிலடங்கா நன்மைகளுக்காக நன்றியோடு துதித்துக் கொண்டே வாழ்வோம்!

✝

## 19 திருப்பாடல் 31

(இறைவனின் நம்பிக்கை)

*பாடகர் தலைவர்க்கு; தாவீதின் புகழ்ப்பா*
1 ஆண்டவரே,
உம்மிடம் நான்
அடைக்கலம் புகுந்துள்ளேன்;
நான் ஒருபோதும்
வெட்கமடைய விடாதேயும்;
உமது நீதிக்கேற்ப
என்னை விடுவித்தருளும்;
2 உம் செவிகளை
என் பக்கம் திருப்பியருளும்;
விரைவில் என்னை மீட்டருளும்;

எனக்கு அடைக்கலம் தரும்
கற்பாறையாய் இரும்;
என்னைப் பாதுகாக்கும்
வலிமை மிகு கோட்டையாய் இரும்.
3 ஆம், என் கற்பாறையும் கோட்டையும் நீரே;
உமது பெயரின் பொருட்டு
எனக்கு வழிகாட்டி
என்னை நடத்தியருளும்.
4 அவர்கள் எனக்கென விரித்து வைத்துள்ள
வலையிலிருந்து என்னை விடுவித்தருளும்;
ஏனெனில், நீரே எனக்கு அடைக்கலம்.
5 உமது கையில்
என் உயிரை ஒப்படைக்கின்றேன்;
வாக்குப் பிறழாத
இறைவனாகிய ஆண்டவரே,
நீர் என்னை மீட்டருளினீர்.
6 நானோ, பயனற்ற சிலைகளில்
பற்றுடையோரை வெறுத்து,
ஆண்டவர்மீது நம்பிக்கை வைக்கின்றேன்.
7 உமது பேரன்பில்
நான் களிகூர்வேன்;
அக்களிப்பேன்;
என் துன்பத்தை நீர் பார்த்திருக்கின்றீர்;
என் இக்கட்டுகளையும் நீர் அறிந்துள்ளீர்.
8 என் எதிரியின் கையில்
என்னை நீர் விட்டுவிடவில்லை;
அகன்ற இடத்தில்
காலூன்றி நிற்கவைத்தீர்.
9 ஆண்டவரே,
எனக்கு இரங்கும்;
ஏனெனில் நான்
இக்கட்டான நிலையில் உள்ளேன்; துயரத்தால்
என் கண்ணும் என் உயிரும் என் உடலும்
தளர்ந்து போயின.
10 என் வாழ்க்கை
வருத்தத்திலேயே கடந்து செல்கின்றது;
ஆம், என் வாழ்நாள்
புலம்புவதிலேயே கழிகின்றது;
துயரத்தால் என் வலிமை
குறைந்து போகின்றது;
என் எலும்புகள் தளர்ந்து போகின்றன.
11 என் பகைவர் அனைவரின்
இகழ்ச்சிக்கு உள்ளானேன்;
என்னை அடுத்திருப்போரின்
பேரிழிவுக்கு ஆளானேன்;
என் நண்பர்களுக்குப்
பேரச்சம் வருவித்தேன்;
என்னைத் தெருவில் பார்ப்போர்
என்னிடமிருந்து விலகி ஓடுகின்றனர்.

12 இறந்தோர் போல்
நினைவினின்று நான் அகற்றப்பட்டேன்;
உடைந்துபோன மட்கலம்போல் ஆனேன்.
13 பலர் என்மீது பழிசுமத்தியது
என் காதில் விழுந்தது;
எப்பக்கமும் பேரச்சம் சூழ்ந்தது.
அவர்கள் ஒன்றுகூடி
எனக்கெதிராய்ச் சூழ்ச்சி செய்தார்கள்;
என் உயிரைப் பறிக்கத்
திட்டம் தீட்டினார்கள்.
14 ஆண்டவரே,
நான் உம்மீது நம்பிக்கை வைத்துள்ளேன்;
"நீரே என் கடவுள்" என்று சொன்னேன்.
15 என் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும்
உமது கையில் உள்ளது;
என் எதிரிகளின் கையினின்றும்
என்னைத் துன்புறுத்துவோரின் கையினின்றும்
என்னை விடுவித்தருளும்.
16 உமது முகத்தின் ஒளி
அடியேன் மீது வீசும்படி செய்யும்;
உமது பேரன்பால் என்னை விடுவித்தருளும்.
17 ஆண்டவரே,
உம்மை நோக்கி மன்றாடினேன்;
என்னை வெட்கமுற விடாதேயும்;
பொல்லார் வெட்கிப்போவார்களாக!
பாதாளத்தில் வாயடைத்துப் போவார்களாக!
18 பொய்சொல்லும் வாய்
அடைபட்டுப் போவதாக!
செருக்கும் பழிப்புரையும் கொண்டு,
நேர்மையாளருக்கு எதிராக
இறுமாப்புடன் பேசும் நா
கட்டுண்டு கிடப்பதாக!
19 உமக்கு அஞ்சி நடப்போர்க்கு
நீர் வைத்திருக்கும் நன்மை
எத்துணைப் பெரிது!
உம்மிடம் அடைக்கலம் புகுவோர்க்கு
மானிடர் முன்னிலையில்
நீர் செய்யும் நன்மை
எத்துணை மிகுதி!
20 மனிதரின் சூழ்ச்சியினின்று
அவர்களைக் காப்பாற்றி
உமது முன்னிலையின்
மறைப்பினுள் வைத்துள்ளீர்!
நாவுகள் கிளப்பும் பூசலினின்று
அவர்களைப் பாதுகாத்து
உமது கூடாரத்தினுள் வைத்துக் காக்கின்றீர்!
21 ஆண்டவர் போற்றி! போற்றி!
ஏனெனில், முற்றுகையிடப்பட்ட நகரினில்,
அவர் தம் பேரன்பை
வியத்தகு முறையில் எனக்கு விளங்கச் செய்தார்.

22 நானோ, கலக்கமுற்ற நிலையில்,
'உமது பார்வையினின்று விலக்கப்பட்டேன்'
என்று சொல்லிக் கொண்டேன்;
ஆனால், நான் உம்மிடம்
உதவிக்காக வேண்டினபோது,
நீர் என் கெஞ்சும் குரலுக்குச் செவிசாய்த்தீர்.
23 ஆண்டவரின் அடியார்களே,
அவரிடம் அன்பு கொள்ளுங்கள்;
ஆண்டவர் பற்றுறுதியுடையோரைப்
பாதுகாக்கின்றார்;
ஆனால், இறுமாப்புடன் நடப்போர்க்கு
அவர் முழுமையாய்ப்
பதிலடி கொடுக்கின்றார்.
24 ஆண்டவருக்காக
நம்பிக்கையுடன் காத்திருப்போரே!
நீங்கள் அனைவரும்
உள்ளத்தில் வலிமையும்
உறுதியும் கொண்டிருங்கள்.

திருப்பாடல் 31:1-24

**சிந்தனைக்கு**

பின்னணி குறித்த குறிப்புகள் எதுவுமில்லாத் தலைப்பு. நல்ல உள்ளடக்கம் கொண்ட திருப்பாடல். பற்றுறுதியும் மன்றாட்டும் ஒன்றிணைந்திருக்க வேண்டும். அத்தகைய மன்றாட்டே சோதனைகளை மேற்கொள்ளும் மன்றாட்டு. ஊழிகள் கடந்தும், எக்காலத்திலும், வேதனையில் உழலும் எந்த மனிதருக்கும் பொருந்தக்கூடிய மன்றாட்டுத் திருப்பாடல்.

அமைப்பு:
வ.1-18, நம்பிக்கையோடு புலம்பலும் மன்றாட்டும்
வ.19-24, நம்பிக்கையோடு துதி
🕎

வசனம் 31:1-4
தனது வேண்டுதலுக்கு இணங்கச் செய்யும் நயமான மொழியில், தொடக்க மன்றாட்டு.

வசனம் 31:2
"விரைவில் என்னை மீட்டருளும்" -
அவசர அழைப்பு, 102:2.

"... அடைக்கலம்... கற்பாறை... கோட்டை..." -
ஒவ்வொரு முறையும் ஆண்டவரிடம் தஞ்சமடையும் தாவீது (18:2 & 144:2).

வசனம் 31:3
"... உமது பெயரின் பொருட்டு..." -
ஆண்டவரின் அன்பருக்கு நேரிடும் துயர் - அவருடைய வழிகளில் நடக்கும் ஒருவருக்கு வரும் இடையூறு - ஒருவரின் தனிப்பட்ட துன்பம் அல்ல; மாறாக, ஆண்டவரின் மாண்புக்கு வந்த

*சவால்; அவரே தாவீதுக்குத் தமது பராமரிப்பையும் பாதுகாப்பையும் வாக்களித்தவர்* (2 *சாமுவேல்* 7:8-11). *வாக்களித்தவர் தாமே அதனை நிறைவேற்றிட தாவீது மன்றாடுகிறார்.*

வசனம் 31:5
*நமது ஆண்டவர் கிறிஸ்து இயேசு மொழிந்த இறுதி மொழி, லூக்கா* 23:46; *கிறிஸ்துவுக்காக முதலில் தன் உயிரை ஈந்த ஸ்தேவான் உதிர்த்த இறுதி மொழி, திருத்தூதர் பணிகள்* 7:59. *பேதுரு வழங்கும் சான்றுள்ள அறிவுரை,* 1 *பேதுரு* 4:19. *லூதர் உள்பட பல அருளாளர்களின் இறுதி மொழி.*

வசனம் 31:6
"... *பயனற்ற சிலைகள்...*" -
OV, "*வீண் மாயைகள்*" -
*மூலச் சொல்,* hab-ale *ஹேப்ஏல், வீணானது, பயனற்றது, மாயை.*
KJV *நீங்கலாக ஏனைய மொழிபெயர்ப்புகள்* "*பயனற்ற சிலைகளைப் பற்றிக் கொண்டோர்*" *என்றே சொல்கின்றன. தாவீதின் ஆட்சியில் சிலை வழிபாடு ஒழிக்கப்பட்டிருந்தாலும், அதனை நாடின மக்கள் இருந்தனர்; அவருடைய எதிரிகளோடு இப்போது அவர்களும் சேர்ந்து கொண்டனர் என்பதை இது காட்டுகிறது.*

வசனம் 31:7
*அறிந்தோரே ஆயினும், ஒருவரிடம் ஓர் உதவியை நாடிச் செல்லும் வேளையில், தன் நிலையை எடுத்துரைத்தல் சங்கடத்தை ஏற்படுத்தும். ஆனால் ஆண்டவரோ நம் நிலையை அறிந்திருக்கிறார். அவரது கிருபையை நாம் அனுபவித்திருக்கிறோம். எனவே அவரிடம் நாம் வேண்டிக் கொள்வது எளிது.*

வசனம் 31:8
"*அகன்ற இடத்தில்...*" -
*பார்க்க* 18:19.

வசனம் 31:9-18
*துயர்மிகு தன் நிலையை எடுத்துரைத்து* (*வ.*9-13), *தனது பற்றுறுதியை அறிக்கையிட்டு* (*வ.*14-15), *எதிரிகள் மீது வெற்றியைக் கோரும் மன்றாட்டு.*

வசனம் 31:9-13
*நமக்கு ஒரு துயர் வரும் போது, அகமும் புறமும் நேரிடும் பாதிப்புகளைச் சுருக்கமாக உரைக்கும் பகுதி.*

*தாவீதுக்கு எதிராக அப்சலோம் கிளர்ச்சி செய்து எருசலேமைக் கைப்பற்றிய பிறகு நிகழ்ந்தவற்றை* (2 *சாமுவேல்* 15-17) *நினைவுறுத்தும் பகுதி.*

வசனம் 31:11-12
*நீரற்ற குளத்தை விட்டு விலகிச் செல்லும் பறவைகள் போல், துன்பம் நேரிடும் போது, நண்பர்களும் உறவினர்களும் விலகிச் சென்று விடுவர்.*

வசனம் 31:12
*முற்றிலும் கைவிடப்பட்ட நிலை; உடைந்த மண்பாண்டம் போல முடிந்து போன வாழ்க்கை; ஆனால் ஆண்டவர் இத்தகைய நிலையில் இருந்த தாவீதின் வாழ்க்கையை மாற்றினார்.*

வசனம் 31:13
*வாய்ப்புக்காகக் காத்திருந்து, இப்போது கையறு நிலையில் இருந்த தாவீதுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்யும் பொல்லார்.*

வசனம் 31:14-15
*ஆண்டவர் மீது உள்ள தனது நம்பிக்கையை மீண்டும் வெளிப்படுத்துதல்.*

வசனம் 31:15
*"என் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும்..." -*
*நம் வாழ்வின் ஒவ்வொரு படிநிலையும் ஆண்டவரின் கரங்களில் உள்ளன.*

வசனம் 31:16
*"உமது முகத்தின் ஒளி அடியேன் மீது வீசும் படிச் செய்யும்" -*
*பார்க்க* 4:6.

வசனம் 31:17-18
*பொல்லாருக்கு எதிரான மன்றாட்டு.*

வசனம் 31:19-20
*காக்கும் கடவுளின் துணையை நம்பிக்கையோடு எதிர்நோக்கும் திருப்பாடகர்.*

வசனம் 31:19
*ஆண்டவர் "வைத்திருக்கும் நன்மை" -*
*திருப்பாடகர் நாடுவதும், ஆண்டவர் அவருக்கு அருளியதும், அதற்காக அவருக்குத் திருப்பாடகர் நன்றி செலுத்துவதும், திருப்பாடல்களில் அதிகம் காணக் கிடைக்கிறது,* 13:6, 34:10, 65:4, 69:16, 84:11, 107:9, 116:7&12, 119:17,65&68, 125:4, 142:7, 145:9.

*ஆண்டவர் அருளும் நன்மைகளையே நாடி, வேண்டி, நாம் காத்திருக்கிறோமா?*
*அல்லது நன்மையான எதையும் அடையத் தேடி, நாம் ஓடுகின்றோமா?*

வசனம் 31:20
*நாவுகள் கிளப்பும் பூசல், இணை, இறுமாப்புடன் பேசும் நா* & *பொய் சொல்லும் வாய், வ.*18. *யாகாவாராயினும் நா காக்க; எதிரிகளைப் பற்றி மட்டுமல்ல; அறிந்தோர், தெரிந்தோர், நண்பர்கள், உறவினர்கள் - இப்படி யாரோடு உரையாடினாலும், இன்றைக்கு நம்மால் சில நிமிடங்களுக்கு மேல் நலமானதைப் பேச முடியவில்லை! நாம் உண்டுபண்ணும் எதிர்மறை ஆற்றல், நமக்கே எதிரானது. எனவே நமது உரையாடல்களில் கவனம் செலுத்துவோம்.*

வசனம் 31:21-24
*ஆண்டவரின் வியத்தகு மீட்புக்காக நன்றி!*

வசனம் 31:23-24
*காக்கும் கடவுளின் அருளுக்காக நம்பிக்கையோடு காத்திருக்கும் அடியாருக்கு ஊக்கமளித்தல்.*
*"மக்களே! எக்காலத்திலும் அவரையே நம்புங்கள்; அவர் முன்னிலையில் உங்கள் உள்ளத்தில் உள்ளதைத் திறந்து கொட்டுங்கள்; கடவுளே நமக்கு அடைக்கலம்,"* 62:8.

✝

## 19 திருப்பாடல் 32

(பாவ அறிக்கையும் மன்னிப்பும்)

*தாவீதின் அறப் பாடல்*
1 எவரது குற்றம் மன்னிக்கப்பட்டதோ,
எவரது பாவம் மறைக்கப்பட்டதோ,
அவர் பேறு பெற்றவர்.
2 ஆண்டவர் எந்த மனிதரின்
தீச்செயலை எண்ணவில்லையோ,
எவரது மனத்தில் வஞ்சம் இல்லையோ,
அவர் பேறுபெற்றவர்.
3 என் பாவத்தை அறிக்கையிடாதவரை,
நாள்முழுவதும் நான் கதறி அழுததால்,
என் எலும்புகள் கழன்று போயின.
4 ஏனெனில், இரவும் பகலும் உம் கை
எனக்கு எதிராக ஓங்கி நின்றது;
கோடையின் வறட்சிபோல
என் வலிமை வறண்டுபோயிற்று.
(சேலா)
5 'என் பாவத்தை
உம்மிடம் அறிக்கையிட்டேன்;
என் தீச்செயலை
நான் மறைத்ததில்லை;
ஆண்டவரிடம் என் குற்றங்களை
ஒப்புக்கொள்வேன்' என்று சொன்னேன்.
நீரும் என் நெறிகேட்டையும்
பாவத்தையும் போக்கினீர்.
6 ஆகவே, துன்ப வேளையில்
உம் அன்பர் அனைவரும்
உம்மை நோக்கி மன்றாடுவர்;
பெருவெள்ளம் பாய்ந்து வந்தாலும்
அவர்களை அது அணுகாது.
7 நீரே எனக்குப் புகலிடம்;
இன்னலினின்று என்னை
நீர் பாதுகாக்கின்றீர்;
உம் மீட்பினால் எழும் ஆரவாரம்
என்னைச் சூழ்ந்தொலிக்கச் செய்கின்றீர்.
8 நான் உனக்கு அறிவு புகட்டுவேன்;
நீ நடக்க வேண்டிய வழியை
உனக்குக் காட்டுவேன்;
உன்னைக் கண்ணோக்கி,
உனக்கு அறிவுரை கூறுவேன்.
9 கடிவாளம் பூட்டி
வாரினால் இழுத்தாலன்றி
உன்னைப் பின்தொடர்ந்து வராத
குதிரை போன்றோ
கோவேறு கழுதை போன்றோ
அறிவிலியாய் இராதே!
10 பொல்லாருக்கு வரும் துன்பங்கள் பல;

ஆண்டவரில் நம்பிக்கை கொள்வோரை
அவரது பேரன்பு சூழ்ந்து நிற்கும்.
11 நீதிமான்களே,
ஆண்டவரை முன்னிட்டு அகமகிழுங்கள்;
நேரிய உள்ளத்தோரே,
நீங்கள் அனைவரும் மகிழ்ந்து பாடுங்கள்.

திருப்பாடல் 32:1-11

**சிந்தனைக்கு**

திருப்பாடல் 6க்குப்பின் வரும் பிழை பொறுத்து அருள மன்றாடிப் பாடும் பாடல்; இவ்வரிசையில் அடுத்து வரும் பாடல்கள்: 38, 51, 102, 130 & 143. மன்றாட்டுத் திருப்பாடல்களின் குவியத்துள் (25-33), திருப்பாடல் 26க்கு மறுமொழியாக இப்பாடல் அமைகிறது.

"மன்னிப்பில் மகிழ்ச்சி" என்று இத்திருப்பாடலுக்குத் தலைப்பிடலாம். "என்ன என் ஆனந்தம்" என்று பாடித் துதிக்கத் தோன்றுகிறதா! "நான் ஆடிப் பாடி மகிழுவேன்" என்று பாடி ஆடத் தோன்றுகிறதா!

தலைப்பில் "மஸ்கீல்" என்று சொல்லப்பட்டுள்ளது. அதற்கு அறவுரை என்று பொருள் கொள்ளலாம். திருப்பாடல்கள் 32, 42, 44, 45, 52-55, 74, 78, 88, 89 & 142 ஆகியவை அறவுரைப் பாடல்கள் என்பது தலைப்புகள் தரும் செய்தி.

இந்தப் பாடல் கவித்துவமான மொழிநடையை உடையது:
"... மன்னிக்கப்பட்டதோ"
"... மறைக்கப்பட்டதோ"
வ.1;
"...எண்ணவில்லையோ"
"...வஞ்சமில்லையோ"
வ.2;
"...பாவம்"
"...தீச்செயல்"
"...நெறிகேடு"
வ.5;
"...துன்ப வேளை"
"...பெருவெள்ளம்"
வ.6;
"...புகலிடம்"
"...பாதுகாப்பு"
"...மீட்பு"
வ.7.

அமைப்பு:
வ.1-2, பாவமன்னிப்பு அருளும் ஆசி
வ.3-5, குற்ற உணர்வின் விளைவுகளும், அறிக்கையிடுதலின் விடுதலையும்
வ.6-7, மன்னிப்பைப் பெற்றவரின் நம்பிக்கை

வ.8-9, மன்னிப்பைப் பெற்றவருக்கு ஆண்டவர் அருளும் ஆற்றல்
வ.10-11, ஆண்டவருக்குள் ஆற்றல் அடைந்தவரின் நன்றிப்பா

வசனம் 32:1-2
நேர்மையாளர் பெறுவது போன்றே (1:1-2) பேறு பெறுவோர் பாவமன்னிப்பைப் பெற்றவர்! கடவுளோடு உள்ள உறவில் நேர்மையாளரே அவர்தம் மன்னிப்பைப் பெறுவர்!

நம்பிக்கையால் மட்டுமே நாம் நேர்மையாளர் ஆகிறோம் என்பதை உறுதிப்படுத்த, பவுலடிகளார் இவ்வசனங்களை எடுத்தாளுகிறார் (உரோமையர் 4:4-8).

இரக்கமும் பரிவும் பேரன்பும், மன்னிப்பும், சீனாய் மலையில் ஒலித்த ஆண்டவரின் பெருமுழக்கம்! (விடுதலைப் பயணம் 34:6-7)

வசனம் 32:3-4
பாவத்தை அறிக்கையிடாத வரையில், குற்றவுணர்வு மட்டுமல்லாமல், ஆண்டவரின் கரமும் பாவம் செய்தவருக்கு எதிராக இருக்கிறது, 38:1-8; 39:8-10.

வசனம் 32:5
78:38; 85:2.
மனம் திருந்தி அறிக்கையிடுவோரோடு மன்னித்து ஒப்புரவாவதே ஆண்டவரின் தன்மை. இதையே கிறிஸ்து இயேசு, மனம் திருந்திய மைந்தன் உவமை வழியாக விளக்குகிறார்.

இங்கு தாவீது செய்ததை யோவான், 1 யோவான் 1:9ல் அறிவுரையாகச் சொல்வதை நாம் வாசிக்கிறோம். பாவத்தை உணரும் ஒவ்வொருவரும் செய்ய வேண்டியது: அறிக்கையிடுவதும் அதனை விட்டு விலகுவதுமே!

வசனம் 32:6
"ஆகவே..." -
தாமதமின்றி கடவுளிடம் திரும்பி, மீறுதல்களை அறிக்கை செய்து, ஒப்புரவாகத் திருப்பாடகர் நம்மை அழைக்கிறார்.

வசனம் 32:7
கடவுளோடு ஒப்புரவானோருக்கு அவரே அடைக்கலம். பாவத்தின் பிடியில் முன்பு அச்சத்தில் நடுங்கியோருக்கு அங்கு விடுதலையின் ஆர்ப்பரிப்பு மிகுந்திருக்கும்.

வசனம் 32:8-9
தாவீதின் அறவுரையில் இடைபடும் இறை ஞானம் அல்லது இறைவெளிப்பாடாகத் தாவீது பற்றுறுதியாளரை நோக்கிக் கூறியது.

வசனம் 32:8
25:4-6, அங்கு மன்றாட்டு; இங்கு இறைவாக்கு.

வசனம் 32:9
எசாயா 1:3.
தமது விதிமுறைகளையும் ஒழுக்க நெறிமுறைகளையும் கைக்கொள்ளுமாறு ஆண்டவர் எவரையும் கடிவாளம் பூட்டி வாரினால் இழுத்து வர விரும்புவதில்லை; நாமாக ஆர்வத்தோடு

அவரைப் பின்பற்றி வாழ்வதையே அவர் விரும்புகிறார்; மேய்ப்பரின் வளைகோல் முனைமாற்றி ஓங்கப்படுவதை நாம் விரும்புகிறோமா?

வசனம் 32:10-11
எல்லாருக்கும் வாழ்க்கை இடுக்கண் மிகுந்ததுதான்; ஆனால் இறைப்பற்றுக் கொண்டோரை, அவரது அருள் சூழ்ந்து காக்கும்.
மகிழ்ச்சியோடு முழங்குவோம்:
"களிகூருவோம்,
கர்த்தர் நம் பட்சமே -
தம் இரத்தத்தால் நம்மை மீட்டார்!
அவர் நமக்கு யாவிலும் எல்லாமே,
எப்பாவம் பயம் நீக்குவார்!"

✝

## 19 திருப்பாடல் 33

(புகழ்ச்சிப் பாடல்)

1 நீதிமான்களே,
ஆண்டவரில் களிகூருங்கள்;
நீதியுள்ளோர் அவரைப் புகழ்வது
பொருத்தமானதே.
2 யாழிசைத்து
ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்;
பதின் நரம்பு யாழினால்
அவரைப் புகழ்ந்து பாடுங்கள்;
3 புத்தம்புதுப் பாடல் ஒன்றை
அவருக்குப் பாடுங்கள்;
திறம்பட இசைத்து
மகிழ்ச்சிக்குரல் எழுப்புங்கள்.
4 ஆண்டவரின் வாக்கு நேர்மையானது;
அவருடைய செயல்கள் எல்லாம்
நம்பிக்கைக்கு உரியவை.
5 அவர் நீதியையும் நேர்மையையும்
விரும்புகின்றார்;
அவரது பேரன்பால்
பூவுலகு நிறைந்துள்ளது.
6 ஆண்டவரது வாக்கினால்
வானங்கள் உண்டாயின;
அவரது சொல்லின் ஆற்றலால்
வான்கோள்கள் எல்லாம் உருவாயின.
7 அவர் கடல்நீரைக்
குவியல்போல் சேர்த்து வைத்தார்;
அந்நீரை ஆழ் நிலவறைகளில்
சேமித்து வைத்தார்.
8 அனைத்துலகும்

ஆண்டவருக்கு அஞ்சுவதாக!
உலகில் வாழ்வோர் அனைவரும்
அவருக்கு அஞ்சி நடுங்குவராக!
9 அவர் சொல்லி உலகம் உண்டானது;
அவர் கட்டளையிட,
அது நிலை பெற்றது.
10 வேற்றினத்தாரின் திட்டங்களை
ஆண்டவர் முறியடிக்கின்றார்;
மக்களினத்தாரின் எண்ணங்களைக்
குலைத்து விடுகின்றார்.
11 ஆண்டவரின் எண்ணங்களோ
என்றென்றும் நிலைத்திருக்கும்;
அவரது உள்ளத்தின் திட்டங்கள்
தலைமுறை தலைமுறையாய் நீடித்திருக்கும்.
12 ஆண்டவரைத் தன்
கடவுளாகக் கொண்ட இனம்
பேறு பெற்றது;
அவர் தமது உரிமைச் சொத்தாகத்
தெரிந்தெடுத்த மக்கள் பேறு பெற்றோர்.
13 வானினின்று ஆண்டவர் பார்க்கின்றார்;
மானிடர் அனைவரையும் காண்கின்றார்.
14 தாம் வீற்றிருக்கும் இடத்திலிருந்து
உலகெங்கும் வாழ்வோரைக்
கூர்ந்து நோக்குகின்றார்.
15 அவர்களின் உள்ளங்களை
உருவாக்குகின்றவர் அவரே!
அவர்களின் செயல்கள் அனைத்தையும்
உற்று நோக்குபவரும் அவரே!
16 தன் படைப் பெருக்கத்தால்
வெற்றி பெறும் அரசருமில்லை;
தன் வலிமையின் மிகுதியால்
உயிர் தப்பிய வீரருமில்லை.
17 வெற்றி பெறப்
போர்க்குதிரையை நம்புவது வீண்;
மிகுந்த வலுவுள்ளதாயினும்
அது விடுவிக்காது.
18 தமக்கு அஞ்சி நடப்போரையும்
தம் பேரன்புக்காகக் காத்திருப்போரையும்
ஆண்டவர் கண்ணோக்குகின்றார்.
19 அவர்கள் உயிரைச்
சாவினின்று காக்கின்றார்;
அவர்களைப் பஞ்சத்திலும் வாழ்விக்கின்றார்.
20 நாம் ஆண்டவரை நம்பியிருக்கின்றோம்;
அவரே நமக்குத்
துணையும் கேடயமும் ஆவார்.
21 நம் உள்ளம்
அவரை நினைத்துக் களிகூரும்;
ஏனெனில், அவரது திருப்பெயரில்
நாம் நம்பிக்கை வைத்துள்ளோம்.

22 உம்மையே நாங்கள் நம்பியிருப்பதால்,
உமது பேரன்பு எங்கள்மீது இருப்பதாக!

திருப்பாடல் 33:1-22

**சிந்தனைக்கு**

எந்த அறைகூவலோடு முந்தைய திருப்பாடல் முடிந்ததோ, அதே அறைகூவலோடு இந்தத் திருப்பாடல் தொடங்குகிறது; மன்னிக்கப்பட்டவரின் மகிழ்ச்சியான புகழ்ச்சிப் பாடல்; மன்றாட்டுத் திருப்பாடல்களின் குவியத்தின் இறுதிப் பாடலான இப்பாடல், ஆண்டவரின் பேரன்பை வேண்டி நிறைவடைகிறது.

தலைப்பு எதுவும் அற்ற நான்காவது திருப்பாடல் (முந்தையவை, 1, 2 & 10).

அமைப்பு:
வ.1-3, ஆண்டவரைத் துதிக்க அழைப்பு
வ.4-9, படைப்பில் ஆண்டவரின் அருஞ் செயல்கள்
வ.10-19, தாம் தெரிந்து கொண்ட மக்களுக்கு ஆண்டவரின் அருஞ் செயல்கள்
வ.20-22, ஆண்டவரில் தங்கள் நம்பிக்கையை வெளிப்படுத்துதல்

வசனம் 33:2
"யாழ்" -
இளைஞன் தாவீது யாழ் இசைப்பதில் வல்லவன் என்பதை நாம் அறிவோம் (1 சாமுவேல் 16:18). யாழிசை பற்றிய இந்த வசனத்தின் அடிப்படையில் இத்திருப்பாடல் தாவீதிற்குரியது என்று சொல்வோர் உளர்; வெளிப்படையான செய்தி எதுவுமற்ற நிலையில், நாம் அவ்வாறு முடிவு செய்வது சரியன்று.

வசனம் 33:3
"புத்தம்புதுப் பாடல்" -
40:3; 96:1; 98:1; 144:9; 149:1; எசாயா 42:10; திருவெளிப்பாடு 5:9; 14:3.
புதிய புதிய அருஞ் செயல்கள்; புதிய புதிய உற்சாகம்; இவை தருவது, புதிய புதிய பாடல்கள்.

வசனம் 33:4-11
படைப்பு குறித்த முதல் நூல் முதலாம் அதிகாரத்தின் செய்திகள், சின்னஞ்சிறு கவிதையாக.
படைப்பு குறித்த செய்திகள் திருப்பாடல் 8, 19, 104 & 145 ஆகிய திருப்பாடல்களிலும் காணப்படுகின்றன.

வசனம் 33:4&6
"ஆண்டவரின் வாக்கு" -
ஆண்டவரின் வாக்கு உண்மையானது; நம்பத்தக்கது; ஆற்றல் மிக்கது; செயலூக்கம் தருவது; - இவை எல்லாவற்றுக்கும் சான்றாக ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக இன்றும் உயிர்ப்போடு விளங்குவது. அந்த உயிர்ப்பான வாக்கு உங்களுக்குள் இருக்கிறதா?

வசனம் 33:8-10
அனைத்துலகும் உணர்ந்து அஞ்சும் ஆண்டவர் - ஏனெனில் அவர் இஸ்ரயேலைச் சூழ்ந்திருக்கும் நாடுகளின் எதிர்ப்புகளையும் திட்டங்களையும் முறியடித்தார், எசாயா 8:9-10.

வசனம் 33:11
இந்த வசனத்தைப் புரிந்து கொண்டு நாம் வாழத் தொடங்கினால், நாம் ஒவ்வொருவரும் தளராத நம்பிக்கையோடு வாழ்வோம் (வாசிக்க, யோபு 14:22-23).
இதையே யாக்கோபு (1:17) இவ்வாறு எழுதுகிறார்:
"நல்ல கொடைகள் அனைத்தும், நிறைவான வரமெல்லாம், ஒளியின் பிறப்பிடமான விண்ணகத் தந்தையிடமிருந்தே வருகின்றன. அவரிடம் எவ்வகையான மாற்றமும் இல்லை; அவர் மாறிக்கொண்டிருக்கும் நிழல் அல்ல."

கவலையோ கலக்கமோ கண்ணீரோ வேண்டாம்; அசைக்க முடியாத நம்பிக்கையோடு செயல்படுங்கள்; உங்களுக்கென்று அவர் வைத்துள்ள திட்டத்தை நிறைவேற்ற அவர் வல்லவர்!

வசனம் 33:12-19
தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரயேல் (விடுதலைப் பயணம் 19:5; திருத்தூதர் பணிகள் 13:17), ஆண்டவரின் ஆளுகைக்குள் இருக்கும் வரை, பாதுகாப்போடு இருக்கும் என்பது திருப்பாடகரின் நம்பிக்கை.

மக்களினங்களில் சிறப்பானோர் என்பதற்காக ஆண்டவர் இஸ்ரயேலரைத் தெரிந்து கொள்ளவில்லை; அவர்கள் மீது அவர் அன்புகூர்ந்ததால் அவர்களைத் தெரிந்து கொண்டார் (இணைச் சட்டம் 4:37, 7:6-8, 10:15). அவர் மனிதகுலம் அனைத்தையும் நேசிக்கிறார், 67:4.

இறையச்சம் கொண்டோரைத் தமது உரிமைச் சொத்தாக ஆண்டவர் தெரிந்தெடுத்தார். அவர்களுக்குள் இருந்த கலகக்காரரையோ அவர் அழித்தொழித்தார் (78:62-64).

வசனம் 33:13-15
பார்க்க, 14:2.

வசனம் 33:16-17
நீதிமொழி 21:31.
எந்தப் பெரும் படை பலத்தை விடவும் ஆற்றல் மிக்கவர் ஆண்டவர்; அத்தகைய ஆற்றலை மோசே வழியாகவும், யோசுவா வழியாகவும், இறைவாக்கினர் வழியாகவும் இஸ்ரயேலுக்கு அவர் நிகழ்த்திக் காட்டினார்.

வசனம் 33:18-19
இணைத்து வாசிக்க, எபிரேயர் 11:32-40.
பற்றுறுதி கொண்டோர் பஞ்சத்திற்கும் பட்டயத்திற்கும் வியத்தகு முறையில் தப்பினார்கள்; இனியும் தப்புவார்கள். அதேவேளையில், இறைத் திட்டம் எதுவோ அதுவே நம் ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் நிறைவேறும்.

பல்லாயிரவர்களான இரத்தச் சாட்சிகளின் மீதுதான் இன்றைய நமது நல்வாழ்வு கட்டப்பட்டுள்ளது என்பதை நாம் நினைவுகூருவது மட்டுமல்ல, முடிவு எப்படி அமையும் என்றாலும் நம்பிக்கையோடு வாழ்வதே ஆண்டவரோடு இணைக்கப்பட்ட வாழ்க்கை ஆகும். நம்மை அழைத்தவர் உண்மையானவர்; நமக்கான அவரது திட்டமே நம்மில் நிறைவேறும்.

வசனம் 33:18
"...கண்ணோக்குகின்றார்" -
ஆண்டவர் மானிடர் மீது கண்ணோக்கமாக இருக்கிறார், 11:4; 32:8; 34:15; 66:7; 139:16. ஆனால், "தமக்கு அஞ்சி நடந்து தம் பேரன்புக்காக நம்பிக்கையுடன் காத்திருப்போரிடம் அவர் மகிழ்ச்சி கொள்கின்றார்." (147:11)

வசனம் 33:20-22
*நம்பிக்கையை அறிக்கையிடும் பற்றுறுதியாளர், ஆண்டவரின் பேரன்பு தங்கள் மீது இலங்க வேண்டுமென மன்றாடுகின்றனர்.*

✝

## 19 திருப்பாடல் 34

(கடவுளின் கருணையைப் புகழ்தல்)

*தாவீதுக்குரியது; அபிமெலக்கின் முன் பித்துப் பிடித்தவர் போலத் தன்னை அவர் காட்டிய போது, அவன் அவரைத் துரத்தி விட, அவர் வெளியேறினார்; அப்போது அவர் பாடியது*

1 ஆண்டவரை நான்
எக்காலமும் போற்றுவேன்;
அவரது புகழ்
எப்பொழுதும் என் நாவில் ஒலிக்கும்.
2 நான் ஆண்டவரைப் பற்றிப்
பெருமையாகப் பேசுவேன்;
எளியோர் இதைக் கேட்டு அக்களிப்பர்.
3 என்னுடன் ஆண்டவரைப்
பெருமைப்படுத்துங்கள்;
அவரது பெயரை
ஒருமிக்க மேன்மைப்படுத்துவோம்.
4 துணைவேண்டி நான்
ஆண்டவரை மன்றாடினேன்;
அவர் எனக்கு
மறுமொழி பகர்ந்தார்;
எல்லா வகையான அச்சத்தினின்றும்
அவர் என்னை விடுவித்தார்.
5 அவரை நோக்கிப் பார்த்தோர்
மகிழ்ச்சியால் மிளிர்ந்தனர்;
அவர்கள் முகம்
அவமானத்திற்கு உள்ளாகவில்லை.
6 இந்த ஏழை கூவியழைத்தான்;
ஆண்டவர் அவனுக்குச் செவிசாய்த்தார்;
அவர் எல்லா நெருக்கடியினின்றும்
அவனை விடுவித்துக் காத்தார்.
7 ஆண்டவருக்கு அஞ்சி வாழ்வோரை
அவர்தம் தூதர்
சூழ்ந்து நின்று காத்திடுவர்.
8 ஆண்டவர் எத்துணை இனியவர்
என்று சுவைத்துப் பாருங்கள்;
அவரிடம் அடைக்கலம் புகுவோர்
பேறுபெற்றோர்.
9 ஆண்டவரின் தூயோரே,
அவருக்கு அஞ்சுங்கள்;
அவருக்கு அஞ்சுவோர்க்கு
எக்குறையும் இராது.

10 சிங்கக் குட்டிகள் உணவின்றிப்
பட்டினி இருக்க நேரிட்டாலும்,
ஆண்டவரை நாடுவோர்க்கு
நன்மை ஏதும் குறையாது.
11 வாரீர் பிள்ளைகளே!
நான் சொல்வதைக் கேளீர்!
ஆண்டவருக்கு அஞ்சுவதைப்பற்றி
உங்களுக்குக் கற்பிப்பேன்.
12 வாழ்க்கையில் இன்பம் காண விருப்பமா?
வாழ்வின் வளத்தைத் துய்க்குமாறு
நெடுநாள் வாழ நாட்டமா?
13 அப்படியெனில், தீச்சொல்லினின்று
உன் நாவைக் காத்திடு;
வஞ்சக மொழியை
உன் வாயைவிட்டு விலக்கிடு!
14 தீமையைவிட்டு விலகு;
நன்மையே செய்;
நல்வாழ்வை நாடு;
அதை அடைவதிலேயே கருத்தாயிரு.
15 ஆண்டவர் கண்கள்
நீதிமான்களை நோக்குகின்றன;
அவர் செவிகள்
அவர்களது மன்றாட்டைக் கேட்கின்றன.
16 ஆண்டவரின் முகமோ
தீமைசெய்வோர்க்கு எதிராக இருக்கின்றது;
அவர், அவர்களின் நினைவே
உலகில் அற்றுப்போகச் செய்வார்.
17 நீதிமான்கள் மன்றாடும்போது,
ஆண்டவர் செவிசாய்க்கின்றார்;
அவர்களை அனைத்து இடுக்கண்ணினின்றும்
விடுவிக்கின்றார்.
18 உடைந்த உள்ளத்தார்க்கு அருகில்
ஆண்டவர் இருக்கின்றார்;
நைந்த நெஞ்சத்தாரை
அவர் காப்பாற்றுகின்றார்.
19 நேர்மையாளருக்கு நேரிடும் தீங்குகள் பல;
அவை அனைத்தினின்றும்
ஆண்டவர் அவர்களை விடுவிக்கின்றார்.
20 அவர்களின் எலும்புகளை எல்லாம்
அவர் பாதுகாக்கின்றார்;
அவற்றுள் ஒன்றும் முறிபடாது.
21 தீயோரைத் தீவினையே சாகடிக்கும்;
நேர்மையாளரை வெறுப்போர்
தண்டனை பெறுவர்.
22 ஆண்டவர் தம் ஊழியரின்
உயிரை மீட்கின்றார்;
அவரிடம் அடைக்கலம் புகும் எவரும்
தண்டனை அடையார்.

திருப்பாடல் 34:1-22

**சிந்தனைக்கு**

*தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வை,* 1 *சாமுவேல்* 21:10-15*ல் வாசிக்கிறோம்; அங்கு காத் நிலப் பரப்பின் மன்னன் ஆக்கிசு என்று சொல்லப்பட்டுள்ளது; இங்கு பெலிஸ்திய மன்னர்களை அழைக்கப் பயன்படும் பொதுப் பெயரான அபிமெலக்கு* (*தொடக்க நூல்* 20; 21; 26) *என்பது பயன்படுத்தப்பட்டுள்ளது. தலைப்பில் இச்செய்தி குறிப்பிடப்பட்டாலும், பாடலில் இதுகுறித்த செய்தி எதுவும் இல்லை.*

22 *வசனங்களில் எபிரேய அகரமுதலி வரிசையில் அமைந்துள்ள திருப்பாடல். மேலும் இறை ஞானத்தை ஒருவர் அடைய அறிவுரை தரும் பாடலாகவும் உள்ளது.* 🕎

*அமைப்பு:*
*வ.*1-7, *மீட்புக்கு நன்றிப்பா பாட அழைப்பு*
*வ.*8-14, *ஞானத்தைக் கற்றுக் கொள்ள அழைப்பு*
*வ.*15-22, *நொறுங்குண்டோருக்கு ஆண்டவரின் மீட்பும் தீயோருக்கு அவரின் தண்டனைத் தீர்ப்பும்*

*டேக் அவர்களின் ஆர்வமூட்டும் பகுப்பு:*
*வ.*1-3, *மீட்கப்பட்டவரின் ஏழு துதிகள்*
*வ.*4-6, *மீட்பின் ஏழு அடையாளங்கள்*
*வ.*7-10, *மீட்பின் ஏழு வாக்குகள்*
*வ.*11-14, *மீட்பின் பத்து நிலைகள்*
*வ.*15:22, *மீட்பரின் பதினைந்து அருட் பணிகள்*
🕎

*வசனம்* 34:1
*இணை,* 1 *தெசலோனிக்கர்* 5:18.
*எக்காலத்திலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் ஆண்டவரைத் துதித்தல்; தாவீது மட்டுமல்ல, பவுலடிகளும் எல்லாச் சூழ்நிலைகளிலும் ஆண்டவரைத் துதித்தார். நாம் நமது கடவுளாகிய ஆண்டவரை எப்போதும் துதிக்கிறோமா?*

*வசனம்* 34:4-7
*தனது சாட்சியைப் பகிரும் தாவீது* (*வ.*4&6), *ஆண்டவருக்கு அஞ்சி வாழும் அனைவருக்கும் அவர்தம் மறுமொழி கிடைக்கும் என்று* (*வ.*5&7) *நம்பிக்கை அளிக்கிறார்.*

*வசனம்* 34:5
*மன்றாட்டுக்கு* (31:1) *மறுமொழி கிடைத்த மகிழ்ச்சியால் மிளிரும் முகங்கள். நமது முகங்கள் எந்த அளவுக்கு மிளிர்கின்றன? ஆண்டவரின் குரலை நாம் உணர்ந்திருக்கிறோமா?*

*வசனம்* 34:6
"*ஏழை*" -
*பொருள் ஏதுமற்றவர் என்று பொருளல்ல; தன்னைத் தானே காத்துக் கொள்ள வழிவகையற்ற நிலையில் உள்ளோர் என்ற பொருளில் சொல்லப்பட்டுள்ளது.*

*வசனம்* 34:7
"*அவர்தம் தூதர்*" -
91:11; *தொடக்க நூல்* 32:1-2; *மத்தேயு* 4:6.

ஆண்டவரின் தூதர் சில வேளைகளில் ஆண்டவராகவே இருப்பதை நாம் பார்க்கிறோம் (விடுதலைப் பயணம் 3). நம்மைச் சூழ இருப்போர் ஆண்டவரின் தூதர்கள் மட்டுமல்ல, ஆண்டவரே இருக்கிறார் என்கிற உணர்வோடு நாம் எப்போதும் நடந்து கொள்ள வேண்டும்.

வசனம் 34:8-14
இறையச்சமே ஆண்டவர் அருளும் ஞானத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரே வழி.

ஆண்டவருக்கு அஞ்சுதல், நீதிமொழிகள் 1:7; 9:10.
ஆண்டவர் அருளும் ஞானம், மூன்று பகுதிகளைக் கொண்டது:
இறையச்சம், வ.11
தீதை விலக்குதல், வ.13-14
நற்செயல்களை மேற்கொள்ளுதல், வ.14
சபை உரையாளர் (12:13) சொல்வது எப்போதும் மனதில் வைக்கத் தக்கது: "... கடவுளுக்கு அஞ்சி நட; அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படி; இதற்காகவே மனிதர் படைக்கப்பட்டனர்."

நம்முடன் வாழ்வோரிடம் நமக்கு ஏற்படும் அச்சம், அவர்களிடமிருந்து நம்மை விலக்கி வைக்கிறது; ஆனால் இறையச்சமோ, நம்மை அவருடைய வழிகளில் நடத்தி, எல்லாரோடும் அன்பு செலுத்தி வாழச் செய்து, கடவுளுக்கும் மனிதருக்கும் ஏற்ற மக்களாக நம்மை வாழச் செய்கிறது; எல்லாப் பயமும் நீங்கியவர்களாக (34:4), அன்பின் தூதர்களாக நாம் மாறுகிறோம்.

வசனம் 34:8
"சுவைத்துப் பாருங்கள்" -
பார்க்க, 119:103.
அறிதல், தொடுதல், கேட்டல் போல, எல்லா உணர்வுகளின் வழியாகவும் ஆண்டவரை இனிமையானவராக உணர்தல். மேலும் பார்க்க, எபிரேயர் 6:4-5; 1 பேதுரு 2:2-3.

வசனம் 34:10
மான்களையும் முயல்களையும் பாதுகாக்க உலகில் எந்தவொரு இயக்கமும் இல்லை; ஆனால் வலிமையான விலங்குகள் என்று சொல்லப்படுகிற சிறுத்தை, புலி, சிங்கம் போன்றவற்றையோ அழிவிலிருந்து பாதுகாக்க, சிறப்பான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன!
தன் வலிமையைச் சார்ந்து வாழ்கிறோமா?
அல்லது கடவுளாகிய ஆண்டவரைச் சார்ந்து வாழ்கிறோமா?

"நன்மை ஏதும் குறையாது" என்பதற்கு ஆசிகள் நிரம்பி வழியும் என்று பொருளல்ல; நமது தேவைகள் எவையோ அவை சந்திக்கப் படும் - சில வேளைகளில் நாம் எதிர்பாராத வகையில் கூட அவை நிறைவேறும். ஆண்டவர் நம்மோடு இருந்தால், தேவையான அனைத்தும் இருக்கிறது என்று தாவீது நம்பி வாழ்ந்தார் (23:1).
நமது முதல் தேடல் எதுவாக இருக்கிறது? (மத்தேயு 6:33)

வசனம் 34:12-22
திருப்பாடலுக்குள் நாடக வடிவில் ஓர் உரையாடல்:
வ.12, ஒரு கேள்வி
வ.13-14, அதற்கான மறுமொழி
வ.15-22, மறுமொழியின் அடிப்படையில் ஒருவர் வாழ்வதன் விளைவுகள்

வசனம் 34:12-16
இந்த அருள்மொழிகளை திருத்தூதர் பேதுரு அமைதியான வாழ்வுக்கு வழியாக அறிவுறுத்துகிறார் (1 பேதுரு 3:10-12).

வசனம் 34:15
"ஆண்டவர் கண்கள்" -
பார்க்க, 32:8; 33:18.
ஆண்டவர் நேர்மையாளரை நோக்குகிறார் என்பதைத் திருப்பாடகர் தொடர்ந்து வலியுறுத்துகிறார்.

வசனம் 34:16
நேரிய உள்ளத்தோர் நாடும் ஆண்டவரின் முகத்திற்கு (11:7; 17:15; 27:8) மாறான ஆண்டவரின் முகம் இங்கு சொல்லப்படுகிறது.

வசனம் 34:18
"உடைந்த உள்ளத்தார்" -
ஆழ்ந்த, மீளாத் துயரத்தில் இருப்போர்; செல்லும் வழி அறியாமல் திகைத்து நிற்போர்; திக்கற்றோருக்குத் தெய்வமே துணை!
கடவுளுக்கு ஏற்ற பலி (51:17) நொறுங்கிய நெஞ்சமே! தீயோரும் வஞ்சகரும் நெஞ்சம் நொறுங்குண்டோருக்கு எதிராக இருக்கின்றனர் (109:16); ஆனால் ஆண்டவரோ உடைந்த உள்ளத்தோரின் காயங்களைக் கட்டிக் குணமளிக்கிறார் (147:3; எசாயா 57:15).

வசனம் 34:19
நேர்மையாளருக்கு நம்பிக்கை தரும் அருள்வாக்கு.

வசனம் 34:20
யோவான் 19:36; பார்க்க, விடுதலைப் பயணம் 12:46.
பாஸ்கா பலியாக அடிக்கப்படும் ஆட்டின் எலும்புகள் ஒன்றும் முறிக்கப்படலாகாது; இது கிறிஸ்து இயேசுவில் முழுமையாக நிறைவேறியதை யோவான் 19:32-36ல் வாசிக்கிறோம். சொல்லொணாத் துன்பங்களை அவர் அனுபவித்த போதும், உரோமையச் சட்டங்களின் அடிப்படையில் சிலுவையில் அறையப்பட்டோரின் எலும்புகள் உடைக்கப்பட வேண்டும் என்ற போதிலும், அவருடைய எலும்புகள் ஒன்றும் முறிக்கப்படவில்லை. ஒரு புகழ்ச்சிப் பாடலில் வந்து விழுந்த இறைவாக்கு!

வசனம் 34:22
பார்க்க, 1 திமொத்தேயு 4:10.
நம்பிக்கை கொண்ட அனைவருக்கும் வாழ்வை அருளும் ஆண்டவர்!
நாம் நமது நம்பிக்கையில் தழைக்க அவரே அருள் புரிவாராக!

✝

## 19 திருப்பாடல் 35

(உதவிக்காக மன்றாடல்)

*தாவீதுக்குரியது*
1 ஆண்டவரே,
எனக்கெதிராய் வழக்காடுவோருடன் வழக்காடும்;
என்மீது போர் தொடுப்போரோடு
போர் புரியும்.
2 கேடயமும் படைக்கலமும் எடுத்துவாரும்;
எனக்குத் துணை செய்ய எழுந்து வாரும்.
3 என்னைத் துரத்திவரும் எதிரிகளைத்
தடுத்து நிறுத்தும்;
ஈட்டியையும் வேலையும் கையிலெடும்;
'நானே உன் மீட்பர்' என்று
என் உள்ளத்திற்குச் சொல்லும்.
4 என் உயிரைக் குடிக்கத் தேடுவோர்,
மானக்கேடுற்று இழிவடையட்டும்;
எனக்குத் தீங்கிழைக்க நினைப்போர்,
புறமுதுகிட்டு ஓடட்டும்.
5 _ஆண்டவரின் தூதர்_
அவர்களை விரட்டியடிக்க,
காற்றில் பறக்கும் பதர்போல
அவர்கள் சிதறட்டும்.
6 ஆண்டவரின் தூதர்
அவர்களைத் துரத்திட,
அவர்கள் வழி
இருளும் சறுக்கலும் ஆகட்டும்.
7 ஏனெனில், காரணமின்றி
எனக்குக் கண்ணி வைத்தனர்;
காரணமின்றி எனக்குக் குழிதோண்டினர்.
8 அவர்களுக்கு அழிவு
எதிர்பாராமல் வரட்டும்;
அவர்களுக்கு வைத்த கண்ணியில்
அவர்களே சிக்கிக் கொள்ளட்டும்;
அவர்கள் தோண்டிய குழியில்
அவர்களே விழட்டும்.
9 என் உள்ளம்
ஆண்டவரை முன்னிட்டுக் களிகூரும்;
அவர் அளிக்கும் மீட்பில் அகமகிழும்.
10 "ஆண்டவரே,
உமக்கு நிகரானவர் யார்?
எளியோரை வலியோரின் கையினின்றும்
எளியோரையும் வறியோரையும்
கொள்ளையடிப்போர் கையினின்றும்
விடுவிப்பவர் நீரே"
என்று என் எலும்புகள் எல்லாம் சொல்லும்.
11 பொய்ச்சான்று சொல்வோர்
எனக்கெதிராய் எழுகின்றனர்;

எனக்குத் தெரியாதவற்றைப் பற்றி
என்னிடம் வினவுகின்றனர்.
12 நான் அவர்களுக்கு
நன்மையே செய்தேன்;
அவர்களோ, அதற்குப் பதிலாக
எனக்குத் தீங்கிழைத்தனர்.
என் நெஞ்சைத்
துயரில் ஆழத்தினர்.
13 நானோ,
அவர்கள் நோயுற்றிருந்தபோது
சாக்கு உடுத்திக் கொண்டேன்;
நோன்பிருந்து என்னை வருத்திக் கொண்டேன்;
முகம் குப்புற வீழ்ந்து மன்றாடினேன்.
14 நண்பர்போலும்
உடன்பிறந்தோர் போலும்
அவர்களுக்காய் மன்றாடினேன்;
தாய்க்காகத் துக்கம் கொண்டாடுவோரைப்போல
வாட்டமுற்றுத் துயரத்தோடு நடமாடினேன்.
15 நான் தடுக்கி விழுந்தபோது
அவர்கள் ஒன்றுகூடி மகிழ்ந்தனர்;
எனக்கெதிராய் ஒன்று சேர்ந்தனர்;
யாதொன்றும் அறியாத என்னைச்
சின்னாபின்னமாக்கி
ஓயாது பழித்துரைத்தனர்.
16 இறைப்பற்று இல்லாரோடு சேர்ந்து
அவர்கள் என்னை இகழ்ந்தனர்;
எள்ளி நகையாடினர்;
என்னைப் பார்த்துப் பற்களை
நறநறவென்று கடித்தனர்.
17 என் தலைவரே,
இன்னும் எத்தனை நாள்
இதைப் பார்த்துக் கொண்டிருப்பீர்?
என் உயிரை
அவர்களது தாக்குதலினின்றும்
என் ஆருயிரைச்
சிங்கக் குட்டிகளினின்றும் மீட்டருளும்.
18 மாபெரும் சபையில்
உமக்கு நன்றி செலுத்துவேன்;
திரளான மக்களிடையே உம்மைப் புகழ்வேன்.
19 வஞ்சகரான என் எதிரிகள்
என்னைப் பார்த்துக் களிக்க இடமளியாதீர்;
காரணமின்றி என்னை வெறுப்போர்
கண்சாடை காட்டி இகழவிடாதீர்.
20 ஏனெனில், அவர்களது பேச்சு
சமாதானத்தைப் பற்றியதன்று;
நாட்டில் அமைதியை நாடுவோர்க்கு எதிராக
அவர்கள் வஞ்சகமாய்ச் சூழ்ச்சி செய்கின்றனர்.
21 எனக்கெதிராக அவர்கள் வாய் திறந்து,
"ஆ! ஆ! நாங்களே எங்கள் கண்ணால்

கண்டோம்" என்கின்றனர்.
22 ஆண்டவரே,
நீர் இதைக் கண்டும் மௌனமாய் இராதீர்;
என் தலைவரே,
என்னைவிட்டுத் தொலையில் போய்விடாதீர்.
23 என் கடவுளே,
கிளர்ந்தெழும்!
என் தலைவரே,
விழித்தெழுந்து என் வழக்குக்கு
நீதி கிடைக்கச் செய்யும்.
24 என் கடவுளாகிய ஆண்டவரே,
உமது நீதிக்கேற்ப
என் நேர்மையை நிலைநாட்டும்!
அவர்கள் என்னைப் பார்த்துக்
களிக்க இடமளியாதேயும்!
25 அவர்கள் தங்கள் உள்ளத்தில்
"ஆம், நாம் விரும்பினது இதுவே"
எனச் சொல்லாதபடி பாரும்!
"அவனை விழுங்கிவிட்டோம்" எனப்
பேசிக்கொள்ளாதபடி பாரும்!
26 எனக்கு நேரிட்ட தீங்கைப் பார்த்து
மகிழ்ச்சி அடைவோர்
எல்லாரும் கலக்கமுறட்டும்!
என்னைவிடத் தம்மைச்
சிறந்தோராய்க்
கருதுவோர்க்கு
வெட்கமும் மானக்கேடும்
மேலாடை ஆகட்டும்!
27 என் நேர்மை
நிலைநாட்டப்படுவதை விரும்புவார்
ஆரவாரத்துடன் அக்களிக்கட்டும்;
"ஆண்டவர் எத்துணைப் பெரியவர்!
அவர் தம் அடியாரின்
நல்வாழ்வைக் காண விரும்புவார்"
என்று எப்பொழுதும் சொல்லட்டும்.
28 அப்பொழுது, என் நா
உம் நீதியை எடுத்துரைத்து,
நாள்முழுதும் உம் புகழ் பாடும்.

திருப்பாடல் 35:1-28

**சிந்தனைக்கு**

தனது நாட்டிற்குள் இருக்கும் எதிரிகளிடமிருந்து தன்னைக் காக்க ஏறெடுக்கப்பட்ட மன்றாட்டு. இதே கருப்பொருளில் அமைந்த மற்ற திருப்பாடல்கள்: 36, 39, 71, 109. இதே சாயல், 7, 54, 55, 56, 140 போன்ற திருப்பாடல்களிலும் காணப்படுகின்றது. தீயோருக்கு நீதிமான் இடும் சாபம் என்றும் இப்பாடலைக் குறிப்பிடலாம்.
🕎

அமைப்பு:
வ.1-3, தனக்காக வழக்காட வருமாறு மன்றாடல்
வ.4-10, தீயோரின் திட்டங்களை முறியடிக்க அழைத்தல் மற்றும் துதி
வ.11-18, அடுத்த சுற்று மன்றாட்டும் பொருத்தனையும்
வ.19-28, இறுதிச் சுற்று மன்றாட்டும், துதியும்

மன்றாட்டும் துதியும் பொருத்தனைகளுமாக மூன்று சுற்றுகளில் அமைந்துள்ள பாடல் என்று இத்திருப்பாடலைப் பகுக்கலாம்.

வசனம் 35:1-2
வழக்கு, 17:1; 43:1. வழக்காடுவோரோடு வழக்காடத் தாவீது முனையவில்லை; மாறாக தனக்குத் துணையாக உடனே வருமாறு ஆண்டவரை அழைக்கிறார்; வாதிட மட்டுமல்லாமல், போரிட ஆயத்தமாக வருமாறு ஆண்டவரை அழைக்கிறார்.

நாம் எப்போது ஆண்டவரை அழைக்கிறோம்? நமது முயற்சிகள் அனைத்தும் வீண் என்று தெரிந்த பிறகா? இடுக்கண் தொடங்கும் போதேவா?

வசனம் 35:2
"கேடயம்" -
ஆண்டவரே திருப்பாடகரின் கேடயம், 3:3; 7:10; 18:2,30; 28:7; 33:20; 59:11; 84:9,11; 89:18; 119:114;144:2. இஸ்ரயேலருக்கும் ஆண்டவருக்கு அஞ்சி நடக்கும் அனைவருக்கும் ஆண்டவரே கேடயம், 115:9-11.

வசனம் 35:3
"ஈட்டி ... வேல்..." -
சிறிதும் பெரிதுமான ஈட்டி; ஆங்கிலத்தில் spear and lance அல்லது spear and javelin என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
வசனம் 35:4-8
தீயோராகிய எதிரிகள் அழிக்கப்பட மன்றாட்டு. எதிரிகளின் அழிவுக்காக மன்றாடுதல் என்பது திருப்பாடல்களில் பல இடங்களிலும் நாம் காணத்தக்க ஒன்று. நன்மைக்கும் தீமைக்குமான போராட்டத்தில், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் இத்தகைய வேண்டுதல் இயல்பான ஒன்று. இங்கும் கூட நாம் கவனிக்க வேண்டிய செய்தி: தன் எதிரிகளுக்கு எதிராகத் தானே செயல்பட தாவீது முனையவில்லை; மாறாகத் தனக்கு எதிராகத் தீட்டப்படும் சதிகள், தன் எதிரிகளுக்கே கேடாகத் திரும்ப அவர் ஆண்டவரின் அருஞ் செயலை வேண்டுகிறார்.

இதுபோன்ற சூழ்நிலைகளில், ஆண்டவராகிய கிறிஸ்து இயேசு நமக்கு ஒப்புவித்த கடமை வேறு: வாசிக்க, மத்தேயு 5:43-48, பகைவருக்காக இறை வேண்டல்.

வசனம் 35:6-8
தீயோரின் திட்டம் அவர்கள் அறியாத வேளையில் அவர்களுக்கே எதிராகத் திரும்புதல்.

வசனம் 35:6
இணை, 73:18.

வசனம் 35:7 & 35:19
"காரணமின்றி..." -
38:19, 69:4, 109:3, 119:161.

*தனக்கு எதிராக அவர்கள் செயல்பட தாவீது எக்கெடுதியும் அவர்களுக்குச் செய்யவில்லை; மாறாக அவர்களின் நலனை வேண்டுபவராக தாவீது இருந்தார்* (வ.12-14); *ஆயினும் அவருக்கு எதிராக அவர்கள் செயல்படுகின்றனர்.*

*மேலே குறிப்பிட்ட வசனங்களில், எந்த வசனத்தை யோவான்* (15:25) *தனது நற்செய்தி நூலில் குறிப்பிடுகிறார் என்று தெரியவில்லை; எதுவானாலும், திருப்பாடகரின் நிலை கிறிஸ்து இயேசுவின் பாடுகளோடு பொருத்திப் பார்க்கத் தக்கது.*

வசனம் 35:9-10
*மீட்கப்பட்டவரின் புகழ்ச்சிப் பாடல்.*

*ஒப்பாரும் மிக்காரும் இல்லா ஆண்டவர்*, 86:8, 89:6-8; *எசாயா* 40:18&25.

வசனம் 35:11-16
*தீயோரின் பல்வேறு முகங்களை எடுத்துரைக்கும் திருப்பாடகர். தாவீது அவர்களுக்கு நன்மை செய்த போதிலும், அவர்கள் அவருக்குத் தீமையே செய்கின்றனர். இனிச் செய்வதறியாத நிலையில், தாவீது ஆண்டவரை அழைக்கிறார்.*

வசனம் 35:15
"*நான் தடுக்கி விழுந்த போது*" -
*உள்ளத்தில் நேரிட்ட தடுமாற்றம் அல்ல; வீழ்ச்சிக்காகத் தீயோர் காத்திருந்தனர்; ஆனால் அப்படிப்பட்ட நிலைகளில் நேர்மையாளரைத் தூக்கி நிலைநிறுத்துகிறவர், ஆண்டவர்*, 37:24, 56:13.

வசனம் 35:17
*பொல்லாரின் தீச்செயல்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஆண்டவருக்கு எழுப்பப்பட்ட கேள்வி; தன் உயிரை எடுக்க முனைந்துள்ள அவர்களிடமிருந்து தன்னைப் பாதுகாக்க விரைந்து வருமாறு தாவீது வேண்டுகிறார்.*

வசனம் 35:18
"*மாபெரும் சபை...*" -
*பார்க்க*, 22:25, 26:12.
*ஒவ்வொரு ஆண்டும் மூன்று முறை இஸ்ரயேலின் ஆண் மக்கள் அனைவரும் ஆண்டவர் குறிப்பிட்ட ஓரிடத்தில் ஒன்று கூடி, அவருக்குப் பலி செலுத்தி, அவரைத் தொழுது கொள்ள வேண்டும்* (*இணைச் சட்டம்* 12:5-7). *அப்படி நிறைந்த சபையில் தனது உதடுகளின் நன்றிப் பலிகளை ஏறெடுப்பதாகத் திருப்பாடகர் பொருத்தனை செய்கிறார்.*

வசனம் 35:19-25
*இடுக்கண்கள் சூழ்ந்த நெருக்கடியான வேளையில், ஆண்டவரின் விரைவான மீட்புக்காக தாவீது மன்றாடுகிறார். ஆண்டவரே தன் சார்பில் நின்று நீதி வழங்க நீதிமான் காத்திருக்கிறான்; ஆண்டவரின் பொறுமையைத் தங்களுடைய தீய செயல்களுக்கான அங்கீகாரம் என்று எண்ணும் தீயோரோ, தைரியம் கொண்டு மேலும் மேலும் தீச்செயல்களில் தீவிரமாக ஈடுபடுகின்றனர்; நேர்மையாளர் இன்னும் கடுமையாக ஒடுக்கப்படுகின்றனர். மீட்பிற்கான அவர்களின் குரல் ஓங்குகிறது.*

வசனம் 35:26-28
*விடுதலையடைந்தோரின் களிப்பும் புகழ்ச்சியும்.*

வசனம் 35:26
இணை, வ.4-6; 40:14.
*முதல் சுற்று மன்றாட்டு போலவே, இறுதிச் சுற்றிலும்.*

வசனம் 35:27
*"என் ... விரும்புவோர்" -*
*தாவீது தனித்து இருக்கவில்லை; அவருடைய நலனை நாடுவோரும் இருந்தனர்; இப்போது தாவீதோடு கலங்கி நிற்போர், ஆண்டவர் அருளும் மீட்பைக் காணும் போது, ஆர்ப்பரித்து களிகூருவர்.*

*"... அவர்தம் அடியார்..." -*
*ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்ட, அவர் தெரிந்து கொண்ட ஊழியர் தான் என்பதில் தாவீது உறுதியோடு இருந்தார்; ஆண்டவருடைய திருப்பெயர் மாட்சியுற, அவர்தாமே செயல்பட தாவீது வேண்டுகிறார் (31:3).*

*துதியில் மட்டுமன்றி, மன்றாட்டிலும் ஆண்டவரது திருப்பெயரையே தாவீது முதன்மைப்படுத்துகிறார். தாவீதுக்குத் தமது பிரசன்னத்தையும் பாதுகாப்பையும் வாக்களித்தவர் (2 சாமுவேல் 7:8-11) ஆண்டவரே அன்றோ!*

✝

## 19 திருப்பாடல் 36

(மானிடரின் தீய குணம்)

*பாடகர் தலைவர்க்கு; ஆண்டவரின் ஊழியரான தாவீதுக்குரியது*
1 பொல்லாரின்* உள்ளத்தில்
தீமையின் குரல்
ஒலித்துக் கொண்டே இருக்கின்றது;
அவர்களின் மனக்கண்களில்
இறையச்சம் இல்லை.
2 ஏனெனில் அவர்கள்,
குற்றம் வெளிப்பட்டு
வெறுப்புக்கு உள்ளாகப் போவதில்லை என,
இறுமாந்து தமக்குத்தாமே
பெருமை பாராட்டிக் கொள்கின்றனர்.
3 அவர்கள் வாயின் சொற்கள்
தீமையும் வஞ்சகமும் நிறைந்தவை;
நல்லுணர்வோடு நற்செயல் ஆற்றுவதை
அவர்கள் அடியோடு விட்டுவிட்டனர்.
4 படுக்கையில் கிடக்கையில்
அவர்கள் சதித்திட்டங்களைத் தீட்டுகின்றனர்,
தகாத வழியை
உறுதியாகப் பற்றிக் கொள்கின்றனர்;
தீமையைப் புறம்பே தள்ளுவதில்லை.

(கடவுளின் கருணை)

5 ஆண்டவரே!
வானளவு உயர்ந்துள்ளது
உமது பேரன்பு;
முகில்களைத் தொடுகின்றது
உமது வாக்குப் பிறழாமை.
6 ஆண்டவரே,
உமது நீதி இறைவனின்
மலைகள்போல் உயர்ந்தது;
உம் தீர்ப்புகள்
கடல்போல் ஆழமானவை;
மனிதரையும் விலங்கையும் காப்பவர் நீரே;
7 கடவுளே, உமது பேரன்பு
எத்துணை அருமையானது!
மானிடர் உம் இறக்கைகளின் நிழலில்
புகலிடம் பெறுகின்றனர்.
8 உமது இல்லத்தின் செழுமையால்
அவர்கள் நிறைவு பெறுகின்றனர்;
உமது பேரின்ப நீரோடையில்
அவர்கள் தாகத்தைத் தணிக்கின்றீர்.
9 ஏனெனில், வாழ்வு தரும் ஊற்று
உம்மிடமே உள்ளது;
உமது ஒளியால்
யாமும் ஒளி பெறுகின்றோம்.
10 உம்மை அறிந்தோர்க்கு
உமது பேரன்பையும்,
நேரிய உள்ளத்தோர்க்கு
உமது நீதியையும்
தொடர்ந்து வழங்கியருளும்!
11 செருக்குற்றோரின் கால்
என்னை நசுக்க விடாதேயும்!
பொல்லாரின் கை
என்னைப் பிடிக்க விடாதேயும்!
12 தீங்கிழைப்போர் அதோ அங்கே
குப்புற வீழ்ந்து கிடக்கின்றனர்,
அவர்கள் நசுக்கப்பட்டனர்;
அவர்களால் எழவே இயலாது.

திருப்பாடல் 36:1-12

36:1 ...* "என்" என்பது எபிரேயப் பாடம்

**சிந்தனைக்கு**

இரு வேறு உலகங்கள்; தீயோரின் வஞ்சகம் நிறைந்த உலகம்; அதற்கு எதிராக, ஆண்டவரின் அன்பும் அருளும் ஞானமாக ஆளுகை செய்யும் உலகம். தன்னலத்தோடு ஆளுகை செய்யப் பொல்லார் முனைகின்றனர்; படைப்பு அனைத்திற்கும் பராமரிப்பை அருள ஆண்டவர் விரும்புகின்றார். இந்த முரண்கள் முற்றும் நிலையில், தமது நீதியை வழங்க ஆண்டவர் இடைபடுகிறார்; பொல்லார் அழிவையும், நீதிமான்கள் மீட்பையும் காண்கின்றனர்.

ஆண்டவரின் ஊழியர் என்று தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள செய்தி, இப்பாடலை இதற்கு முந்தைய திருப்பாடலுடன் (35:27) தொடர்பு படுத்துகிறது.
🕎

அமைப்பு:
வ.1-4, பொல்லாரின் இயல்புகள்
வ.5-9, ஆண்டவரின் மாட்சிமை
வ.10-12, மன்றாட்டு
🕎

வசனம் 36:1ஆ
பவுலடிகள் இதனைத் தன் உரோமையர் (3:18) மடலில் எடுத்தாளுகிறார்.

"மனக் கண்களில்" -
கண்களில் என்பது உருவகமாக மனக் கண்களில்.

"இறையச்சம் இல்லை" -
தீயோரின் உலகத்திலும் உள்ளங்களிலும், கடவுளுக்கு உரிய இடம் இருப்பதில்லை.

வசனம் 36:2-4
பார்க்க, 10:4-6&11. மேலும் அதி.37.
பொல்லா மனிதர்களின் உள இயல்புகள் விளக்கப்பட்டுள்ளன.

வசனம் 36:4
"படுக்கையில்..." -
இரவில் படுத்திருக்கும் போது எழும் எண்ணங்கள், பகற் பொழுதின் செயல்களை முடிவு செய்கின்றன. நேர்மையாளர் இறைச் சட்டத்தை உள்ளத்தில் வைத்து எண்ணுகின்றனர் (16:7); இரவும் பகலும் அவர்களின் உள்ளங்கள் திருச்சட்டத்தைச் சிந்திக்கின்றன, 1:2; 119:55.

ஆனால் பொல்லாரின் உள்ளங்கள் படுக்கையில் சதித்திட்டங்களைத் தீட்டுகின்றன.

வசனம் 36:5-9
படைப்பு அனைத்திற்கும் ஒழுங்கை ஏற்படுத்தி, குறையாத பேரன்போடும் மாறாத வாக்குப்படியும் உயர்ந்த நீதியோடும் ஆளுகை செய்கிறவர் கடவுள்.

வசனம் 36:5
"... பேரன்பு ... வாக்குப் பிறழாமை" -
அதாவது, ஆண்டவரின் அன்பும் உண்மையும், 57:3, 61:7, 85:10, 86:15, 89:14, 115:1, 138:2. கடவுளுக்குள் இவ்விரண்டு பண்புகளும் என்றென்றும் நிலைகொண்டு நம்மீது வெளிப்படுகின்றன.

அதே அன்பும் உண்மையும் நம்மில் நிலைத்திருந்தால், நாம் இறையச்சத்தோடு நேரிய வழியில் செயல்படுவோம், நீதிமொழிகள் 3:3-4, 20:28.

வசனம் 36:6
பார்க்க, 97:2; எசாயா 33:5; எரேமியா 9:24.
உயரமும் ஆழமுமான, வெவ்வேறு இரண்டு உவமைகள்; கடவுளின் நீதி மலை போல் உயர்ந்தது; அவரின் நீதித் தீர்ப்போ, கடலின் ஆழம் போலப் பொருள் பொதிந்தது!

வசனம் 36:7-10
பார்க்க, 33:4-5; படைப்பு அனைத்திற்கும் வியாபித்து நிற்கும் ஆண்டவரின் பேரன்பு.

காலப் போக்கில், யூத மக்களின் காலை மன்றாட்டின் ஓர் அங்கமாக இவ்வசனங்கள் மாறின.

வசனம் 36:7
"... உம் இறக்கைகளின் நிழலில்..." -
பார்க்க, 17:8, 57:1, 61:4, 63:7.
ஆண்டவரின் நிழலிலேயே பாதுகாப்போடு தங்கும் திருப்பாடகர், 91:1, 121:5.

வசனம் 36:9
"வாழ்வு தரும் ஊற்று" -
மீட்பருளும் ஊற்று; கடவுளின் முடிவில்லாக் கருணையை அருளும் ஊற்று, நீதிமொழிகள் 14:27; எசாயா 12:3; எரேமியா 2:13; வாழ்வருளும் ஊற்றாக ஆண்டவர் கிறிஸ்து இயேசு, யோவான் 4:10-14.

"ஆண்டவரின் ஒளி" -
18:25-28, 27:1
நீரைப் போலவே, ஆண்டவரின் ஒளியும், மீட்பை அருளும் ஒளியாகவும், உள்ளங்களை ஒளிர்வித்து மகிழ்வூட்டுவதாகவும் விளங்குகிறது; வாழ்வுக்கு வழி காட்டும் ஒளியாக, ஆண்டவர் கிறிஸ்து இயேசு விளங்குகிறார், யோவான் 8:12.

வசனம் 36:10-12
ஆண்டவரின் கிருபைக்காகவும், நீதிக்காகவும் மன்றாடும் திருப்பாடகர், தனது மன்றாட்டு நிறைவேறும் காட்சியையும் வெளிப்படுத்துகிறார்.

மன்றாடும் வேளைகளில், நமது நம்பிக்கை எவ்வாறு இருக்கிறது?
நாம் வேண்டிக் கொண்டவை நிறைவேறும் காட்சி நமது ஜெப வேளைகளில் தெரிகிறதா?

✝

## 19 திருப்பாடல் 37

(பொல்லார், நல்லாரின் முடிவுகள்)

*தாவீதுக்குரியது*
1 தீமை செய்வோரைக் கண்டு
மனம் புழுங்காதே;
பொல்லாங்கு செய்வாரைக் கண்டு
பொறாமைப்படாதே;
2 ஏனெனில், அவர்கள் புல்லைப் போல்
விரைவில் உலர்ந்து போவர்;
பசும் பூண்டைப்போல் வாடிப்போவர்.
3 ஆண்டவரை நம்பு;
நலமானதைச் செய்;
நாட்டிலேயே குடியிரு;

நம்பத் தக்கவராய் வாழ்.
4 ஆண்டவரிலேயே மகிழ்ச்சி கொள்;
உன் உள்ளத்து விருப்பங்களை
அவர் நிறைவேற்றுவார்.
5 உன் வழியை
ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு;
அவரையே நம்பியிரு;
அவரே உன் சார்பில் செயலாற்றுவார்.
6 உன் நேர்மையைக்
கதிரொளி போலும்,
உன் நாணயத்தை
நண்பகல் போலும்
அவர் விளங்கச் செய்வார்.
7 ஆண்டவர்முன்
அமைதியுடன் காத்திரு;
தம் வழியில்
வெற்றி காண்போரையும்
சூழ்ச்சிகள் செய்வோரையும்
பார்த்து எரிச்சல் கொள்ளாதே.
8 வெஞ்சினம் கொள்ளாதே;
வெகுண்டெழுவதை விட்டுவிடு;
எரிச்சலடையாதே;
அதனால் தீமைதான் விளையும்.
9 தீமை செய்வோர் வேரறுக்கப்படுவர்;
ஆண்டவருக்காகக் காத்திருப்போரே
நிலத்தை உடைமையாக்கிக் கொள்வர்.
10 இன்னும் சிறிதுகாலம்தான்;
பிறகு பொல்லார் இரார்;
அவர்கள் இருந்த இடத்தில்
நீ அவர்களைத் தேடினால்
அவர்கள் அங்கே இரார்.
11 எளியோர்
நிலத்தை உடைமையாகப் பெறுவர்;
அவர்கள் வளமிகு வாழ்க்கையில்
இன்பம் காண்பர்.
12 பொல்லார்
நேர்மையாளருக்குத்
தீங்கிழைக்கத் திட்டமிடுகின்றனர்;
அவர்களைப் பார்த்துப்
பல்லை நெரிக்கின்றனர்.
13 என் தலைவர் அவர்களைப் பார்த்து
எள்ளி நகைக்கின்றார்;
அவர்களது முடிவுகாலம் நெருங்குவதை
அவர் காண்கின்றார்.
14 எளியோரையும் வறியோரையும் வீழ்த்தவும்,
நேர்மையான வழியில் நடப்போரைக் கொல்லவும்
பொல்லார் வாளை உருவுகின்றனர்;
வில்லை நாணேற்றுகின்றனர்.
15 ஆனால், அவர்கள் வாள்

அவர்கள் நெஞ்சிலேயே பாயும்;
அவர்கள் வில்லும் முறிக்கப்படும்.
16 பொல்லாரின் திரளான செல்வத்தைவிட
நல்லாரின் சிறிதளவு பொருளே சிறந்தது.
17 பொல்லாரின் தோள்வலிமை முறிக்கப்படும்;
ஆனால் நேர்மையாளரை
ஆண்டவர் தாங்கிடுவார்.
18 சான்றோரின் வாழ்நாள்களை
ஆண்டவர் அறிவார்;
அவர்கள் உரிமைச் சொத்து
என்றும் நிலைத்திருக்கும்.
19 கேடுகாலத்தில் அவர்கள்
இகழ்ச்சி அடைவதில்லை;
பஞ்ச காலத்திலும் அவர்கள்
நிறைவடைவார்கள்.
20 ஆனால், பொல்லார்
அழிவுக்கு ஆளாவர்;
ஆண்டவரின் எதிரிகள்
கொழுத்த பலியாடுகளுக்கு ஒப்பாவர்.
அவர்கள் எரியுண்டு
புகையென மறைவர்.
21 பொல்லார் வாங்கிய கடனைத்
திருப்பிக் கொடுக்க மாட்டார்;
நேர்மையாளரோ மனமிரங்கிப்
பிறருக்குக் கொடுப்பர்.
22 இறைவனின் ஆசி பெற்றோர்
நிலத்தை உடைமையாக்கிக் கொள்வர்;
அவரால் சபிக்கப்பட்டோர்
வேரறுக்கப்படுவர்.
23 தாம் உவகைகொள்ளும்
நடத்தையைக் கொண்ட
மனிதரின் காலடிகளை
ஆண்டவர் உறுதிப்படுத்துகின்றார்.
24 அவர்கள் விழுந்தாலும்
வீழ்ந்து கிடக்கமாட்டார்கள்;
ஆண்டவர் அவர்களைத்
தம் கையால் தூக்கி நிறுத்துவார்.
25 இளைஞனாய் இருந்திருக்கிறேன்;
இதோ! முதியவன் ஆகிவிட்டேன்;
ஆனால், நேர்மையாளர் கைவிடப்பட்டதை
நான் கண்டதில்லை;
அவர்களுடைய மரபினர்
பிச்சை எடுப்பதை
நான் பார்த்ததில்லை.
26 நேர்மையாளர் எப்போதும்
மனமிரங்கிக் கடன் கொடுப்பர்;
அவர்களின் மரபினர்
இறையாசி பெற்றவராய் இருப்பர்.
27 தீமையினின்று விலகு;

நல்லது செய்;
எந்நாளும் நாட்டில் நிலைத்திருப்பாய்.
28 ஏனெனில், ஆண்டவர்
நேர்மையை விரும்புகின்றார்;
தம் அன்பரை
அவர் கைவிடுவதில்லை;
அவர்களை என்றும் பாதுகாப்பார்.
பொல்லாரின் மரபினரோ
வேரறுக்கப்படுவர்.
29 நேர்மையாளர் நிலத்தை
உடைமையாக்கிக் கொள்வர்;
அதிலேயே என்றென்றும் குடியிருப்பர்.
30 நேர்மையாளரின் வாய்
ஞானத்தை அறிவிக்கும்;
அவர்கள் நா
நீதிநெறியை எடுத்துரைக்கும்.
31 கடவுளின் திருச்சட்டம்
அவர்களது உள்ளத்தில் இருக்கின்றது;
அவர்களின் கால்கள் சறுக்குவதில்லை.
32 பொல்லார் நேர்மையாளரை
வேவு பார்த்துக் கொண்டிருப்பர்;
அவர்களைக் கொன்றுவிட வழிதேடுவர்.
33 ஆனால், ஆண்டவர் நேர்மையாளரை
அவர்களின் கையில் ஒப்புவிக்கமாட்டார்;
நீதி விசாரணையின்போது
அவர்களைத் தண்டனைத்தீர்ப்புக்கு
உள்ளாக்க மாட்டார்.
34 ஆண்டவருக்காகக் காத்திரு;
அவர்தம் வழியைப் பின்பற்று;
அப்பொழுது நீ
நிலத்தை உடைமையாக்கிக்கொள்ளும்படி
அவர் உன்னை உயர்த்துவார்.
பொல்லார் வேரறுக்கப்படுவதை
நீ காண்பாய்.
35 வளமான நிலத்தில்
தழைத்தோங்கும் மரம்போல்
கொடிய நெஞ்சங்கொண்ட
பொல்லார் செழித்திருக்கக் கண்டேன்.
36 ஆனால், அவர்கள் மறைந்துவிட்டார்கள்;
அந்தோ! அவர்கள் அங்கில்லை;
தேடிப் பார்த்தேன்;
அவர்களைக் காணவில்லை.
37 சான்றோரைப் பார்;
நேர்மையானவரைக் கவனி;
அமைதியையே நாடும் அம்மனிதருக்கு
வழிமரபினர் இருப்பர்.
38 அநீதியாளர் அனைவரும்
ஒன்றாக அழிக்கப்படுவர்;
பொல்லாரின் வழிமரபினர்

வேரறுக்கப்படுவர்.
39 நேர்மையாளருக்கு மீட்பு
ஆண்டவரிடமிருந்து வருகின்றது,
நெருக்கடியான நேரத்தில்
அவர்களுக்கு வலிமையும் அவரே.
40 ஆண்டவர் துணைநின்று
அவர்களை விடுவிக்கின்றார்;
பொல்லாரிடமிருந்து
அவர்களை விடுவிக்கின்றார்;
அவரிடம் அடைக்கலம் புகுந்ததால்,
அவர்களை மீட்கின்றார்.

திருப்பாடல் 37:1-40

**சிந்தனைக்கு**

புதிராகத் தோன்றும், பொல்லாரின் செழிப்பும் நல்லாரின் துயரும் - முரண்பட்ட இருவேறு நிலைகளைச் சித்திரங்களாக விவரிக்கும் திருப்பாடல். திருப்பாடல் 36:1-4 பகுதியில் சொல்லப்பட்டவற்றின் விளைவுகளை விளக்கி, நல்லோருக்குத் தெளிவூட்டும் அறவுரைப் பாடலாக இப்பாடல் உள்ளது. எபிரேய அகரமுதலி வரிசையில் அமைந்துள்ள திருப்பாடல். நல்லோருக்குத் தீயோரினால் ஏற்படும் மன அழுத்தத்திலிருந்து அவர்களை விடுவித்து (வ.1,7-8), நம்பிக்கையையும் உற்சாகத்தையும் வழங்குவதாக (வ.3-6, 16, 18-19, 23-24, 27, 30-31, 34, 39-40) இப்பாடல் விளங்குகிறது.
🕎

அமைப்பு:
வ.1-2, தடுமாறும் நல்லோரை ஆற்றுப் படுத்தல்
வ.3-7, ஆண்டவரில் நம்பிக்கை
வ.8-11, மீண்டும் ஆற்றுப் படுத்தல்
வ.12-15, திருப்பித் தாக்கும் தீயோரின் செயல்கள்
வ.16-22, நேர்மையாளர் (எதிர்) தீயோர்
வ.23-34, நேர்மையாளர் அடையும் பேறு
வ.35-40, இரு வேறு வாழ்க்கைகளில், நேர்மையாளரின் நம்பிக்கை
🕎

வசனம் 37:1 & 7ஆ-8
மேலும் 73:3.
அறிவுரைகளாக, நீதிமொழிகள் 23:17; 24:1&19.

தீமை செய்வோரைக் கடவுள் வெறுக்கிறார் - அப்படியானால் தீயோர் வளம் கொழிப்பது எப்படி? அவர்களின் வளமையைக் காணும் நல்லோரின் உள்ளத்தில் உதிக்கும் உணர்வுகள் என்ன?

எதிர்மறையான உணர்வுகள் நல்லாரின் உள்ளங்களில் தோன்றும்; அதையே இங்குத் திருப்பாடகர் உரைக்கிறார். எதிர்மறை எண்ணங்களுக்குக் காவல் வைக்க அவர் அறிவுறுத்துகிறார்; ஏனெனில் எதிர்மறை உணர்வுகள் நம்மையே அழிக்க வல்லவை; நமது மனநலத்தையும் உடல்நலத்தையும் சிதைக்கக் கூடியவை; எனவே பொல்லாரின் வாழ்வைக் கண்டு பொறாமை கொள்ள வேண்டாம் என்று தாவீது அறிவுரை தருகிறார்.

வசனம் 37:3-6

*எதைச் செய்யக்கூடாது என்று சொன்ன திருப்பாடகர், இங்கு என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறார்.*

*நல்லோரின் மனமெல்லாம் கடவுளைச் சுற்றி இருக்க வேண்டும்; செயல்கள் அனைத்தும் திருச்சட்டம் சார்ந்து இருக்க வேண்டும்; கடவுளுக்கும் மனிதருக்கும் உண்மையுள்ளோராக இருக்க வேண்டும்; பொல்லார் சூழ இருந்தாலும், அந்தச் சூழலிலும், வாழ்கிற அந்த இடத்திலேயே, நல்லவன் என்ற நற்சான்றோடு வாழ வேண்டும். ஆண்டவரின் மகிழ்ச்சியில் மகிழ்பவராக வாழ வேண்டும். அவரில் நம்பிக்கை உடையோராகப் பொறுமையோடு காத்திருக்க வேண்டும்.*

வசனம் 37:2, 10, 20, 35-36

*பொல்லாரின் அழிவு எப்படி இருக்கும் என்று தாவீது இவ்வசனங்களில் விளக்குகிறார். செழிப்பும் சிறப்புமாகத் தோன்றும் பொல்லாரின் வாழ்க்கை, சடுதியில் விழுந்து போகிறது; அவர்கள் மீண்டும் எழுவதில்லை (நீதிமொழிகள் 24:16).*

வசனம் 37:4

*சேர்த்து வாசிக்க,* 37:31

*"உன் உள்ளத்து விருப்பங்களை அவர் நிறைவேற்றுவார்" -*

*"கடவுளின் திருச்சட்டம் அவர்களது உள்ளத்தில் இருக்கின்றது" -*

*மனம் போன போக்கில் விருப்பங்களை வளர்த்துக் கொள்வதை நேர்மையாளர் ஒருபோதும் செய்ய மாட்டார்கள்; திருச்சட்டத்தை உள்ளத்தில் இருத்தியுள்ள அவர்கள், தங்களுக்கு என்ன வேண்டும் என்பதை விட, கடவுள் தங்களுக்கு வைத்துள்ளதையே நாடுவார்கள்.*

வசனம் 37:7

*"...அமைதியுடன் காத்திரு" -*

*பார்க்க,* 62:1&5, *மௌனமாய் காத்திருத்தல்;* 27:14, *ஆண்டவரின் வேளைக்காகப் பொறுமையோடு காத்திருத்தல்.*

*தாவீதின் அனுபவ அறிவுரை; தன் வழியில் வெற்றி காண அவர் விழையவில்லை; சவுலைக் கொல்ல இரண்டு முறைகள் வாய்ப்பிருந்தும், அவர் ஆண்டவரின் வேளை வருவதற்காகப் பொறுமையோடு காத்திருந்தார். காத்திருப்பதில் இடர்கள் இருக்கும், இடுக்கண்கள் தொடரும்; ஆனால் அவர் ஆண்டவருக்குள் வலிமை கொண்டார்.*

வசனம் 37:9, 11, 18, 22, 29, 34

*பொறுத்தார் பூமி ஆள்வார் என்பது ஓர் எளிமையான சொலவடை.*

*'நிலம் உடைமையாதல்,' 'உரிமைச் சொத்து' - இவற்றைப் பழைய ஏற்பாட்டுச் சூழலில் நாம் பார்க்க வேண்டும்; நிலம் - கடவுளுக்கு உரியது; பனிரெண்டு குலத்திற்கும் இடையே பகுக்கப்பட்டது; ஒவ்வொருவரின் உரிமைச் சொத்தாகத் தலைமுறை தோறும் தொடர்வது. இழக்க நேரிடினும், யூபிலி ஆண்டில் மீண்டும் வந்து சேரக் கூடியது (லேவியர் 25:13).*

வசனம் 37:11

*"எளியோர்" -*

*தாழ்மையுடையோர், நெருக்கப்பட்டோர். இந்த வசனத்தின் முதல் பகுதியைத் தமது மலைப் பொழிவில் கிறிஸ்து இயேசு எடுத்தாளுகிறார் (மத்தேயு 5:5).*

வசனம் 37:12-15

வ.12&14 (எதிர்) வ.13&15.

தங்கள் முரட்டாட்டத்தினால், தங்களுக்கு நேரப் போவதைப் பொல்லார் உணர்வதில்லை; அவர்கள் தீட்டிய சதித்திட்டங்களில் அவர்களே சிக்குமாறு கடவுள் செய்கிறார் (சபை உரையாளர் 3:16-17).

வசனம் 37:13
எதிர், வ.23.
ஆண்டவரின் நகைப்பு (எதிர்) ஆண்டவரின் உவகை.
பொல்லாரின் திட்டங்களை எண்ணி, ஆண்டவர் எள்ளி நகைக்கிறார் (பார்க்க, 2:4); நல்லாரின் நடத்தையிலோ அவர் உவகை கொள்கிறார், துணை நிற்கிறார்.

"என் தலைவர்" -
அடோனாய், இப்பாடலில் 17 முறை யாவே என்று ஆண்டவரின் திருப்பெயரே பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு மட்டும் அடோனாய் என்ற திருப்பட்டம் கொடுக்கப்பட்டுள்ளது.

வசனம் 37:16
இத்திருப்பாடலின் திறவுகோல் வசனம் இதுவே!
மேலும் பார்க்க, நீதிமொழிகள் 12:9, 15:16, 16:8&19, 17:1, 19:1&22, 28:6.
திரளான செல்வம் ஆண்டவருக்கு அருவருப்பு. 1 சாமுவேல் 8ம் அதிகாரம் நமக்கு எடுத்துரைப்பது இதுவே. திருப்பாடல் 49 வலியுறுத்தும் கருத்தும் இதுவே.

வசனம் 37:20
"புகையென மறைவர்" -
பார்க்க, 68:2. வாழ்ந்த சுவடே இல்லாமல் மறைந்து போதல்.

வசனம் 37:21ஆ
மேலும் வாசிக்க, 15:5; 112:5.
தம்மிடத்தில் இருப்பதைத் தமக்கு மட்டுமே என்று நல்லோர் எண்ணுவதில்லை; இருப்பதைக் கொண்டு இன்னும் சேர்ப்பதிலும் அவர்கள் விருப்பமாக இருப்பதில்லை. எந்த அளவையால் அளக்கிறோமோ, அதே அளவையால் அளக்கப்படும் என்பதை அவர்கள் அறிவர் (லூக்கா 6:38).

வசனம் 37:23-25
இடரும் இடுக்கணும் நேர்மையாளருக்கு நேரிடும்; ஆயினும் அவர்களும் அவர்களின் வழிமரபினரும் கைவிடப்படுவதில்லை. இதனைத் தானே தனது வாழ்நாளில் கண்டிருப்பதாக தாவீது சான்றளிக்கிறார்.

வசனம் 37:24
பார்க்க, நீதிமொழிகள் 24:16

வசனம் 37:27
"தீமையினின்று விலகு" -
இணை, 34:14.
நம்முன் இருப்பது இரண்டு வழிகள் - ஆண்டவரைப் பற்றிக் கொள்ளுதல்; அல்லது தீதை நாடிச் செல்லுதல். இதில் எதைச் செய்ய வேண்டும் என்று திருப்பாடகர் திடமாய் உரைக்கிறார்.

வசனம் 37:31
"கடவுளின் திருச்சட்டம் அவர்களது உள்ளத்தில்" -

திருப்பாடகர் மீண்டும் மீண்டும் வலியுறுத்துவது, திருச்சட்டம் இருக்க வேண்டிய இடம், நமது உள்ளம், 1:2; 19:7-11; 119. அப்போது அது, நம் காலடிக்கு விளக்கு, நம் பாதைக்கு ஒளி.

வசனம் 37:35-36
செழித்து வளர்ந்த மரம் போல் பொல்லார் தோன்றுவர்; ஆனால் உண்மையில், யார்தான் செழித்து ஓங்கி நிற்பர், 92:12-13 மற்றும் 52:8.

வசனம் 37:37 (எதிர்) 37:38
ஒன்றுக்கு ஒன்று எதிர் எதிர் நிலையில். நேர்மையாளருக்குத் தலைமுறைகளாகத் தொடரும் வாழ்க்கை; பொல்லாருக்கோ தலைமுறைகளின் அழிவு. இவற்றையும் தாவீது தான் கண்டிருப்பதாக, தனது அனுபவ அறிவால் சொல்கிறார்.

வசனம் 37:39-40
"நேர்மையாளருக்கு மீட்பு ஆண்டவரிடமிருந்து வருகிறது" -
மேலும், வ.40அ.
நல்லோருக்கு எதிராகப் பொல்லாரின் தீச்செயல்களை, நல்லோர் உணரும் முன்பே, அவற்றிலிருந்து ஆண்டவர் அவர்களை விடுவிக்கிறார். அதுமட்டுமல்லாமல், இவ்வுலகில் தீயன செய்ய நம் உள்ளங்களைத் தூண்டும் காரணிகள் எப்போதும் நம்மைச் சுற்றிலும் இருக்கின்றன. அவற்றிலிருந்தும் தம்மை நம்பியோரை ஆண்டவர் விடுவிக்கிறார்.

✝

## 19 திருப்பாடல் 38

(துன்புற்றவரின் மன்றாட்டு)

*தாவீதின் புகழ்ப்பா; நினைவுகூர்தலுக்காகப் பாடியது*
1 ஆண்டவரே, என்மீது சினங்கொண்டு
என்னைக் கண்டியாதேயும்;
என் மீது சீற்றம்கொண்டு
என்னைத் தண்டியாதேயும்;
2 ஏனெனில், உம் அம்புகள்
என்னுள் பாய்ந்திருக்கின்றன;
உமது கை என்னை
அழுத்திக் கொண்டிருக்கின்றது.
3 நீர் கடுஞ்சினங்கொண்டதால்
என் உடலில் நலமே இல்லை;
என் பாவத்தால்
என் எலும்புகளில் வலுவே இல்லை.
4 என் குற்றங்கள்
தலைக்குமேல் போய்விட்டன;
தாங்கவொண்ணாச் சுமைபோல
அவை என்னை வெகுவாய் அழுத்துகின்றன.
5 என் புண்கள்
அழுகி நாற்றமெடுக்கின்றன;
என் மதிகேடுதான்
இதற்கெல்லாம் காரணம்.

6 நான் மிகவும் ஒடுங்கிப்போனேன்;
நாளெல்லாம் துயருற்றுத் திரிகின்றேன்.
7 என் குடல்
முற்றிலும் வெந்து போயிற்று;
என் உடலில்
சற்றேனும் நலம் இல்லை.
8 நான் வலுவற்றுப் போனேன்;
முற்றிலும் நொறுங்கிப்போனேன்;
என் உள்ளக் கொதிப்பினால்
கதறுகின்றேன்.
9 என் தலைவரே,
என் பெருமூச்செல்லாம்
உமக்குத் தெரியும்;
என் வேதனைக் குரல்
உமக்கு மறைவாயில்லை.
10 என் உள்ளம்
வேதனையால் துடிக்கின்றது;
என் வலிமை
என்னைவிட்டு அகன்றது;
என் கண்களும்கூட ஒளி இழந்தன.
11 என் நண்பர்களும் தோழர்களும்
நான் படும் வாதை கண்டு
விலகி நிற்கின்றனர்;
என் உறவினரும் என்னைவிட்டு
ஒதுங்கி நிற்கின்றனர்.
12 என் உயிரைப் பறிக்கத்தேடுவோர்
எனக்குக் கண்ணி வைக்கின்றனர்;
எனக்குத் தீங்கிழைக்கத் துணிந்தோர்
என் அழிவைப் பற்றிப் பேசுகின்றனர்;
எப்போதும் எனக்கெதிராய்ச்
சூழ்ச்சி செய்கின்றனர்.
13 நானோ செவிடர்போல்
காது கேளாமலும்
ஊமைபோல்
வாய் திறவாமலும் இருக்கின்றேன்.
14 உண்மையாகவே, நான்
செவிப்புலனற்ற மனிதர்போலும்
மறுப்புரை கூறாத நாவினர் போலும் ஆனேன்;
15 ஏனெனில் ஆண்டவரே,
நான் உம்மையே நம்பியிருக்கின்றேன்;
என் தலைவராகிய கடவுளே,
செவிசாய்த்தருளும்.
16 'அவர்கள் என்னைப் பார்த்துக்
களிக்க விடாதேயும்;
என் கால் தடுமாறினால்
அவர்கள் பெருமை கொள்வர்'
என்று சொன்னேன்.
17 நான் தடுமாறி
விழும் நிலையில் இருக்கின்றேன்;

நான் எப்போதும்
வேதனையில் உள்ளேன்.
18 என் குற்றத்தை
நான் அறிக்கையிடுகின்றேன்;
என் பாவத்தின் பொருட்டு
நான் அஞ்சுகின்றேன்.
19 காரணமின்றி என்னைப் பகைப்போர்
வலுவாய் உள்ளனர்;
வீணாக என்னை வெறுப்போர்
பலராய் உள்ளனர்;
20 நன்மைக்குப் பதிலாக அவர்கள்
எனக்குத் தீமை செய்கின்றனர்;
நன்மையே நாடும்
என்னைப் பகைக்கின்றனர்;
21 ஆண்டவரே!
என்னைக் கைவிடாதேயும்;
என் கடவுளே!
என்னைவிட்டு அகன்றுவிடாதேயும்.
22 என் தலைவரே! மீட்பரே!
எனக்குத் துணைசெய்ய விரைந்து வாரும்.

திருப்பாடல் 38:1-22

**சிந்தனைக்கு**

தலைப்பு தரும் செய்தி, நினைவு கூர்தலுக்காகப் பாடியது. இதனை எழுதிய தாவீது, எதனை நினைவு கூர்ந்தார்? தனது பாவத்தை நினைவு கூர்ந்தார். புதிய பாவம் அல்ல; பழைய பாவத்தை நினைவு கூர்ந்தார் (25:7; யோபு 13:26). அப்படிப் பாவத்தை நினைவு கூர வேண்டிய அவசியம் என்ன? அவர் ஏதோ கடுமையான நோயினால் அவதிப்பட்டார். அந்த நோயையும், தனது பாடுகளையும் சொல்லி, தனது பாவத்தையும் நினைவு கூர்ந்தார். பாவத்தை மீண்டும் மீண்டும் நினைவு கூர வேண்டுமா? அது அவரது கண்முன் நிற்கிறது (51:3). ஆபேலின் இரத்தம் ஆண்டவரை நோக்கி முறையிடும் என்றால், உரியாவின் இரத்தம் முறையிடாதா?

நோய் அல்லது வேறு துன்பம் நேரிடும் போது, உள்ளத்தை ஆய்ந்து பார்த்து, கடவுளோடு ஒப்புரவாவது மனித இயல்பு. அதையே தாவீது செய்கிறார்.

தாவீது தனது பாவத்தை மட்டுமே நினைவுகூர்ந்தாரா? கூடவே, தனது நம்பிக்கையை அறிக்கையிட்டு, ஆண்டவரின் அருளுக்காக மன்றாடுகிறார்.

இதே தலைப்பை உடைய மற்றுமொரு திருப்பாடல், 70. இவ்விரு திருப்பாடல்களும், இஸ்ரயேலின் திருநாளான பாவக் கழுவாய் நாளன்று பாடப்பட்டு வந்தன என்பர். சாம்பல் புதனன்று பாடப்படும் திருப்பாடல்களில் ஒன்று. குழுப்படுத்தப்பட்ட இதர பாவக் கழுவாய் திருப்பாடல்கள், 6; 32; 51; 102; 130; 143.

பவர் மொழிபெயர்ப்பில் (OV), லியாஸ்கர் என்ற சொல் உள்ளது; இது zah-kar (=நினைவுகூரல்) என்ற எபிரேயச் சொல்லின் வேற்றுமை உருபின் கூட்டுச் சொல்லாகும்.

அமைப்பு:
வ.1-8, மன்றாட்டும் தன் துன்புறு நிலை குறித்த முறையீடும்
வ.9-14, துணைக்கு அழைத்தலும், அறிந்தவர்களைக் குறித்த முறையீடும்
வ.15-20, மன்றாட்டும் எதிரிகளைக் குறித்த முறையீடும்
வ.21-22, நிறைவு மன்றாட்டு
🕎

வசனம் 38:1-10
தாவீதின் புலம்பல், யோபின் புலம்பலை ஒத்திருக்கிறது.

வசனம் 38:1
இணை, 6:1.
"என்னைக் கண்டியாதேயும்" என்று தாவீது வேண்டிக் கொள்ளவில்லை; மாறாக, "சினம் கொண்டு ... சீற்றம் கொண்டு என்னைத் தண்டியாதேயும்" என்று வேண்டுகிறார். ஒரு தந்தை தன் பிள்ளையைத் தண்டிப்பது போல!

அதேவேளையில், திருத்தூதர் பணிகள் (12:21-23) நூலில், ஆண்டவர் சினம் கொண்டு ஏரோதைத் தண்டிப்பதை வாசிக்கிறோம்.

வசனம் 38:2-4
நமது பாவத்தை ஆண்டவர் தண்டித்துத் திருத்துகிறார், அதற்காகவே வாதைகளை அனுப்புகிறார் என்று எல்லா வேளைகளிலும் சொல்லிவிட முடியாது, சான்றாக யோபு; அதேவேளையில், நாம் செய்யும் பாவத்தின் விளைவாக உடலோ உள்ளமோ அல்லது இரண்டுமோ துயருற வேண்டி வரும்; சிலரை அறிவுறுத்தியும் சிலரைக் கண்டித்தும் சிலரைத் தண்டித்தும் நல்வழியில் ஆண்டவர் மாற்றுகிறார்.

இவ்விதத்தில் எபிரேயர் 12:5-11 பகுதியை நாம் மனதிற் கொள்வது சிறந்தது.

வசனம் 38:2
"உம் அம்புகள்..." -
கடவுள் தண்டிப்பதைக் குறிக்கும் உருவகச் சொல், யோபு 6:4; புலம்பல் 3:12; எசேக்கியேல் 5:16.

வசனம் 38:3-10
தாவீதின் வாதைகள்; இவற்றைத் தொகுத்துப் பட்டியலிட்டு, பால்வினை நோயால் பாதிக்கப்பட்டு தாவீது துன்புற்றார் என்று சொல்வோர் உளர்; வெளிப்படையான குறிப்பு எதுவும் வரலாற்று நூல்களிலும் திருப்பாடல்களிலும் இல்லாத நிலையில், இப்படி முடிவு செய்வது சரியன்று.

தாவீதின் வாதைகள், யோபின் துயரோடு ஒப்புநோக்கத் தக்கவை. ஆண்டவரின் கரம் அழுத்தியதால் இந்த நிலை என்பதை விட, ஒருவரின் பாவ உணர்வே அவரது வேதனைகளுக்கு மூலமாக இருக்கிறது. தூய உள்ளத்தை நமக்குள் நிலைநிறுத்தக் கடவுளின் முயற்சி (32:3; 39:10; 40:12; 41:4); இது எப்போது முடியும்?

நாம் நமது பாவத்தை முற்றிலும் உணர்ந்து அறிக்கையிடும் போது (வ.18), அழுத்தும் ஆண்டவரின் கரம், அணைக்கும் அருட் கரமாக மாறும்.

வசனம் 38:3&4

*"... என் பாவத்தால் ... என் குற்றங்கள்..." -*
*பாவத்தைப் பொதுமைப்படுத்தும் மனநிலை தாவீதிடம் இல்லை; தன் பாவத்தை உணர்ந்த அவர் அவற்றுக்குப் பொறுப்பேற்று ஆண்டவரிடம் அறிக்கையிடுகிறார்.*

*"... செய்யத் தக்கவைகளைச் செய்யாமல், செய்யத் தகாதவைகளைச் செய்து..." என்றோ, "அறிந்தும் அறியாமலும்" என்றோ பொதுவாக வேண்டிக் கொள்வது பாவ அறிக்கை அல்ல; இவை பொதுவான மன்றாட்டுக்கு உகந்ததாக இருக்கலாம். ஆராதனையில் இப்படிப்பட்ட பொதுவான மன்றாட்டுக்கு முன்பே, நமது தனிப்பட்ட பாவங்களை நாம் அறிக்கை செய்து ஆண்டவரோடு ஒப்புரவாக வேண்டும் என்பதே சரியானது. தனியான இந்தப் பாவ அறிக்கையை, ஆலயத்தில் செய்ய வேண்டும் என நினைத்தால், 10 நிமிடங்கள் முன்பே செல்லுங்கள்; அல்லது வீட்டிலிருந்து ஆலயம் புறப்படுமுன், ஜெபித்து விட்டுப் புறப்படுங்கள்.*

வசனம் 38:8

*"... முற்றிலும் நொறுங்கிப் போனேன்" -*
*கடுமையான, வன்மையான விதத்தில் உடலிலும் உள்ளத்திலும் பாதிக்கப்பட்ட நிலையில் தாவீது இருந்தார். இப்படிப்பட்ட நிலை ஒருவருக்கு நேருவது அரிது; அந்நிலையிலும் ஆண்டவரைப் பற்றிக் கொள்வோர் உண்மையாகவே பேறு பெற்றோர்.*

வசனம் 38:9-11

*கடவுளோடு தனது உறவைச் சீர்படுத்த தாவீது விரும்புகிறார்; அது நடக்கவில்லை; மேலும் அவரது நண்பர்களும் அவரை விட்டு விலக, அவர் தனித்து விடப்பட்டார்.*

வசனம் 38:12-16

*நண்பர்கள் கைவிட்டனர் (31:11; 41:9; 88;8&18; யோபு 19:14-15); பகைவர் அவரை எதிர்க்கத் திரண்டனர். ஆண்டவரேயன்றி திருப்பாடகர் அண்டிச் சேர ஒருவரும் இல்லை.*

வசனம் 38:14

*கடும் துயரிலும் தாவீதின் சுய கட்டுப்பாடு. உடலிலும் உள்ளத்திலும் தாங்க முடியாத வேதனை; அவரை அறிந்தவர்களோ, அவரைப் புறக்கணித்தது மட்டுமல்லாமல், அவருடைய அழிவுக்கும் பகைவர் திட்டமிடுகின்றனர்; அவருடைய வீழ்ச்சியைக் கண்டு களிக்கக் காத்திருக்கின்றனர். எனவே தனது பாடுகளின் வலியை அவர் யாருக்கும் வெளிப்படுத்தாமல் தனக்குள் மறைத்து, ஆண்டவரிடம் முறையிடுகிறார்.*

வசனம் 38:17

*"... விழும் நிலையில்..." -*
*தோற்று விழும் நிலையில் அல்லது நோயின் தீவிரத்தால் உயிரை விடும் நிலையில்.*

வசனம் 38:18

*இதற்கு முந்தைய புலம்பலும் மன்றாட்டும், இறுதியாக ஆண்டவரிடம் மனம் திறந்து அறிக்கை செய்யவே.*

*தன்னை அறிந்தவர்கள் முன்பாகத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்ட தாவீது (வ.14), ஆண்டவருக்கு முன்பாக எதையும் மறைக்கவில்லை; பாவச் சுமையால் நொறுங்கிய தனது உள்ளத்தை ஆண்டவர் முன்பு திறந்து ஊற்றினார்.*

வசனம் 38:19-20
"*காரணமின்றி...*" & "*நன்மைக்குப் பதிலாக...*" -
*கடவுளின் பார்வையில் தாவீது பாவம் செய்தாரே அல்லாமல், அவரை எதிர்த்து நிற்போர் எவருக்கும் அவர் எந்தக் கெடுதலும் செய்ததில்லை,* 35:19, 69:4 & 109:3; *மேலும் பார்க்க,* 119:161.

வசனம் 38:22
"*...விரைந்து வாரும்*" -
*பல நேரங்களில் திருப்பாடகரின் மன்றாட்டு,* 22:19, 31:2, 40:13, 69:17, 70:1, 71:12, 79:8, 102:2, 141:1, 143:7.
*ஆனால், அனுபவமும் ஞானமும் நமக்குக் கற்றுத் தருவது, 'ஆண்டவருக்காகக் காத்திரு' என்பதே!* (27:14, 37:7&34, 42:11, 130:5-6, 147:11; *நீதிமொழிகள்* 20:22; *எசாயா* 8:17; *எரேமியா* 14:22; *புலம்பல்* 3:25-26; *மீக்கா* 7:7).

✝

## 19 திருப்பாடல் 39

(*மானிட வாழ்க்கையின் நிலையாமை*)

*பாடகர் தலைவர் எதுத்தூனுக்கு; தாவீதின் புகழ்ப்பா*
1 '*நான் என் நாவினால்*
*பாவம் செய்யாதவண்ணம்*
*என் நடைமுறைகளைக்*
*காத்துக்கொள்வேன்;*
*பொல்லார் என்முன்*
*நிற்கும் வரையில்,*
*என் வாய்க்குப் பூட்டுப் போட்டுக்*
*காத்துக் கொள்வேன்'*
*என்று சொன்னேன்.*
2 *நான் ஊமையைப்போல்*
*பேசாது இருந்தேன்;*
*நலமானதைக்கூடப் பேசாமல்*
*அமைதியாய் இருந்தேன்;*
*என் வேதனையோ பெருகிற்று.*
3 *என் உள்ளம் என்னுள்*
*எரியத் தொடங்கிற்று;*
*நான் சிந்தனையில் ஆழ்ந்தபோது*
*நெருப்பு மூண்டது;*
*அப்பொழுது என் நா பேசியதாவது:*
4 '*ஆண்டவரே!*
*என் முடிவு பற்றியும்*
*என் வாழ்நாளின் அளவு பற்றியும்*
*எனக்கு அறிவுறுத்தும்;*
*அப்போது, நான்*
*எத்துணை நிலையற்றவன்*
*என உணர்ந்து கொள்வேன்.*

5 என் வாழ்நாளைச்
சில விரற்கடை அளவாக்கினீர்;
என் ஆயுட்காலம்
உமது பார்வையில் ஒன்றுமில்லை;
உண்மையில், மானிடர் அனைவரும்
தம் உச்ச நிலையிலும்
நீர்க்குமிழி போன்றவரே!
(சேலா)
6 அவர்கள் நிழலைப்போல
நடமாடுகின்றனர்;
அவர்கள் வருந்தி உழைப்பது வீண்;
அவர்கள் சேமித்து வைக்கின்றனர்;
ஆனால் அதை அனுபவிப்பது
யாரென அறியார்.
7 என் தலைவரே,
நான் இப்போது
எதை எதிர்பார்க்கட்டும்?
நான் உம்மையே நம்பியிருக்கிறேன்.
8 என் குற்றங்கள் அனைத்தினின்றும்
என்னை விடுவித்தருளும்;
மதிகேடரின் பழிப்புரைக்கு
என்னை ஆளாக்காதேயும்.
9 நான் ஊமைபோல் ஆனேன்;
வாய் திறவேன்;
ஏனெனில், எனக்கு இந்நிலைமையை
வருவித்தவர் நீரே.
10 நீர் தந்த வாதையை
என்னிடமிருந்து நீக்கிவிடும்;
உமது கை அடித்த அடிகளால்
நான் அழிவுக்கு ஆளானேன்.
11 குற்றத்தின் பொருட்டு நீர்
மனிதரைத் தண்டிக்கும்போது
பூச்சி அரிப்பதுபோல்
அவர்களுக்கு விருப்பமானவற்றை
நீர் அழிக்கின்றீர்;
உண்மையில் மானிடர் அனைவரும்
நீர்க்குமிழி போன்றவரே!
(சேலா)
12 ஆண்டவரே,
என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்;
என்னுடைய மன்றாட்டுக்குச்
செவிசாய்த்தருளும்;
என் கண்ணீரைக் கண்டும்
மௌனமாய் இராதேயும்;
ஏனெனில், உமது முன்னிலையில்
நான் ஓர் அன்னியன்;
என் மூதாதையர் போன்று
நான் ஒரு நாடோடி!
13 நான் பிரிந்து மறையும் முன்பு

*சற்றே மகிழ்ச்சி அடையும்படி,*
*உம் கொடிய பார்வையை*
*என்னிடமிருந்து திருப்பிக்கொள்ளும்.*

திருப்பாடல் 39:1-13

**சிந்தனைக்கு**

*கருப்பொருளில் முற்றிலும் மாறுபட்ட (நிலையாமை) தன்மையைக் கொண்ட திருப்பாடல். உள்ளம் வெறுத்து இப்படியொரு பாடலைப் பாட தாவீதின் வாழ்க்கையில் என்ன நிகழ்ந்தது என்பதைப் பற்றிய குறிப்பு எதுவும் வரலாற்று நூல்களிலும் திருப்பாடல்களிலும் இல்லை.*

*தலைப்பில் முதன்முறையாக, எதுத்தூன் குறிப்பிடப்படுகிறார்; ஆசாப், ஏமான் என்பாரைப் போல, தாவீதின் பாடற்குழுவை அலங்கரித்தவர், எதுத்தூன் (1 குறிப்பேடு 16:37-42; 2 குறிப்பேடு 5:12; 35:15); இவர் ஏத்தான் (1 குறிப்பேடு 15:19) என்றும் குறிப்பிடப்படுகிறார். 62 மற்றும் 77 ஆகிய திருப்பாடல்களின் தலைப்புகளிலும் இவரது பெயர் இடம் பெற்றுள்ளது.*

*முந்தைய திருப்பாடலில் (38:13-14) பகைவர் முன் பேசாதிருப்பதைக் குறிப்பிட்ட தாவீது, இப்பாடலில் ஆண்டவர் முன்பு பேசாமையைக் குறித்துப் பேசுகிறார். இவ்விரண்டு திருப்பாடல்களும் நோய் குறித்தும், இறை நம்பிக்கை குறித்தும் பேசுகின்றன. அதேவேளையில், முன்பே குறிப்பிட்டது போல, வாழ்க்கையின் நிலையாமையைக் குறித்த தனித்துவமான திருப்பாடலாக இப்பாடல் விளங்குகிறது.*
🕎

*அமைப்பு:*
வ.1-3, *சொல்லொணா வேதனை*
வ.4-6, *வாழ்க்கையின் நிலையாமை*
வ.7-11, *பாவத்திலிருந்து மீள்வதில் இறை நம்பிக்கை*
வ.12-13, *முடிவு மன்றாட்டு*
*இந்தப் பாடலில் இடம்பெறும் இரண்டு "சேலா" அதாவது இடைநிறுத்தங்கள், இப்பாடலை மூன்று பகுதிகளாகப் பிரிக்கின்றன.*
🕎

வசனம் 39:1-3
*வாயை அடைத்துக் கொண்டாலும், உள்ளத்தை அடைத்து வைக்க முடியுமோ! சொற்களில் வெளிப்படாத வலியும் வேதனையும் உள்ளத்தை நிரப்பி, அது அனலாக எரியத் தொடங்கியது.*

வசனம் 39:4-6
*"நீர்க்குமிழி" "நிழல்" -*
*வாழ்வின் நிலையாமையைச் சுட்டிக் காட்டும் சொற்கள்; சேமிப்பைக் குறித்து இயேசுவும் வினா எழுப்புகிறார் (லூக்கா 12:20). நிலையா வாழ்க்கையைப் புகையோடு ஒப்பிடுகிறார் யாக்கோபு (4:14).*

*தனது முதிர் வயதில் தாவீது இப்பாடலை எழுதியிருக்கலாம். ஏனெனில் வாழ்க்கையின் கால அளவைக் குறித்தும், விட்டுச் செல்லும் சேமிப்புகளைக் குறித்தும் அவர் இங்கு பேசுகிறார்.*

*தாவீது கவலைப்பட்டது போல, அவரது வாழ்க்கை வீணா? மாயையா? வாழ்க்கை ஒரு நீர்க்குமிழி போன்றது என்பது உண்மையே; தோன்றி மறைவதே வாழ்க்கை; ஆனால் அது*

வீணோ மாயையோ அல்ல. வாழ்ந்த ஒவ்வொருவரும் தங்கள் சுவடுகளைப் பதித்துச் செல்கின்றனர். எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும், தங்கள் வாழ்க்கையில் எவற்றைத் தவிர்க்க வேண்டும் என்பதையும், வாழ்ந்து மறைந்தோரின் பதிவுகளிலிருந்து பின்வரும் தலைமுறையினர் கற்றுக் கொள்கின்றனர்.

இறைத் திட்டம் தன் வாழ்வில் நிறைவேற எவ்வாறு பொறுமையுடன் நம்பிக்கையோடு எதிர்நோக்கிக் காத்திருக்க வேண்டும் என்பதை தாவீதின் வாழ்க்கை அல்லாமல் வேறு எதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள முடியும்?

வசனம் 39:7-8
எந்த நிலையிலும், தாவீதின் நம்பிக்கை ஆண்டவரே! அவருடைய மன்றாட்டு, பாவத்திலிருந்து விடுதலையே!

வசனம் 39:9-11
தாவீதின் இரண்டு நம்பிக்கைகள்:
தன்னுடைய இன்றைய நிலையைத் தருவித்தவர் கடவுள், இந்த நிலையை மாற்ற வல்லவர் கடவுள். நோயோ முதுமையோ, எது தாவீதை வதைக்கிறது என்று தெரியாது; "மானிடர் அனைவரும் நீர்க்குமிழி போன்றோரே" என்பதை மீண்டும் முறையிடுகிறார்.

முதல் மூன்று வசனங்களில் சொன்னது போல, பேசாமையைக் குறித்து மீண்டும் பேசுகிறார்!

வசனம் 39:10
அடிக்கும் ஆண்டவரின் கை, 32:4; 38:2.

வசனம் 39:12
வாழும் போதே இவ்வுலகில் நாம் அன்னியர், நாடோடி! தன்னைத் தன் முன்னோரோடு தாவீது ஒப்பிடுகிறார். தான் மேய்ப்பராகத் திரிந்த போதல்ல, அரண்மனையில் வாழும் போது, இவ்வாறு உணர்ந்து சொல்கிறார்.

வாழும் நாட்களில் உரைக்காத இந்த உண்மை, வாழ்வின் இறுதி நாட்களில் மட்டுமே பலராலும் உணரப்படுகிறது. வலிமையோடு செயல்படும் நாட்களில் இதனை உணர்வோர், அறன் காத்து வாழ்வர்.

வசனம் 39:13
"... பிரிந்து மறையும் முன்பு..." -
சாவின் விளிம்பில் நிற்பதை உணர்ந்து பேசுதல்.

"... மகிழ்ச்சி அடையும்படி..." -
துயருற்ற யோபின் (யோபு 10:20) உணர்வு.

மேலும், தாவீது அவருடைய வழக்கத்திற்கு மாறாக எழுப்பிய மன்றாட்டு - பார்வையை என்னிடமிருந்து திருப்பிக் கொள்ளும்! யோபைத் தவிர (யோபு 7:19, 10:20, 14:6) வேறு எவரும் இப்படியொரு மன்றாட்டை ஏறெடுத்திருப்பார்களா?

"நான் உன்னை விட்டு விலகுவதும் இல்லை; உன்னைக் கைவிடுவதும் இல்லை" என்று நம்மைத் தேற்றுகிற கடவுள், அவரது பார்வையை நம்மிடமிருந்து விலக்குவாரா?

✝

## 19 திருப்பாடல் 40

(புகழ்ச்சிப் பாடல்)

*பாடகர் தலைவர்க்கு; தாவீதின் புகழ்ப்பா*
1 நான் ஆண்டவருக்காகப்
பொறுமையுடன் காத்திருந்தேன்;
அவரும் என் பக்கம் சாய்ந்து
எனது மன்றாட்டைக் கேட்டருளினார்.
2 அழிவின் குழியிலிருந்து என்னை
அவர் வெளிக்கொணர்ந்தார்.
சேறு நிறைந்த பள்ளத்தினின்று
தூக்கியெடுத்தார்;
கற்பாறையின்மேல் நான்
காலூன்றி நிற்கச் செய்தார்;
என் காலடிகளை உறுதிப்படுத்தினார்.
3 புதியதொரு பாடலை,
நம் கடவுளைப் புகழும் பாடலை
என் நாவினின்று எழச் செய்தார்;
பலரும் இதைப் பார்த்து
அச்சங்கொண்டு
ஆண்டவர் மீது நம்பிக்கை கொள்வர்;
4 ஆண்டவர்மீது
நம்பிக்கை கொண்டவரே பேறுபெற்றவர்;
அத்தகையோர் சிலைகளை நோக்காதவர்;
பொய்யானவற்றைச் சாராதவர்.
5 ஆண்டவரே!
எண்ணிறந்தவற்றை நீர்
எமக்கெனச் செய்துள்ளீர்;
உமக்கு நிகரானவர் எவரும் இலர்;
என் கடவுளே!
உம் அருஞ்செயல்களும்
திட்டங்களும் எங்களுக்காகவே;
அவற்றை நான்
எடுத்துரைக்க விரும்புவேனாகில்
அவை எண்ணிலடங்கா.
6 பலியையும் காணிக்கையையும்
நீர் விரும்பவில்லை;
எரிபலியையும்
பாவம் போக்கும் பலியையும்
நீர் கேட்கவில்லை;
ஆனால், என் செவிகள்
திறக்கும்படி செய்தீர்.
7 எனவே, 'இதோ வருகின்றேன்;
என்னைக் குறித்துத்
திருநூல் சுருளில் எழுதப்பட்டுள்ளது;
8 என் கடவுளே!
உமது திருவுளம் நிறைவேற்றுவதில்
நான் மகிழ்ச்சி அடைகின்றேன்;
உமது திருச்சட்டம்

என் உள்ளத்தில் இருக்கின்றது'
என்றேன் நான்.
9 என் நீதியை
நீர் நிலைநாட்டிய நற்செய்தியை
மாபெரும் சபையில் அறிவித்தேன்;
நான் வாயை
மூடிக் கொண்டிருக்கவில்லை;
ஆண்டவரே!
நீர் இதை அறிவீர்.
10 உமது நீதியை
நான் என் உள்ளத்தின் ஆழத்தில்
மறைத்து வைக்கவில்லை;
உம் வாக்குப்பிறழாமையைப் பற்றியும்
நீர் அருளும் மீட்பைப்பற்றியும்
கூறியிருக்கின்றேன்;
உம் பேரன்பையும் உண்மையையும்
மாபெரும் சபைக்கு நான் ஒளிக்கவில்லை.
11 ஆண்டவரே!
உமது பேரிரக்கத்தை
எனக்குக் காட்ட மறுக்காதேயும்;
உமது பேரன்பும் உண்மையும்
தொடர்ந்து என்னைப் பாதுகாப்பனவாக!
12 ஏனெனில், எண்ணிறிந்த தீமைகள்
எனைச் சூழ்ந்து கொண்டன;
என் குற்றங்கள் என்மீது கவிந்து
என் பார்வையை மறைத்துக்கொண்டன.
அவை என் தலைமுடிகளைவிட
மிகுதியானவை;
என் உள்ளம் தளர்ந்து
என்னைக் கைவிட்டது.
13 ஆண்டவரே,
என்னை விடுவிக்க
மனமிசைந்தருளும்;
ஆண்டவரே,
எனக்கு உதவி செய்ய
விரைந்து வாரும்.
14 என் உயிரைப் பறிக்கத்
தேடுவோர் அனைவரும்
அவமானமும் குழப்பமும் அடையட்டும்!
என் கேட்டில் மகிழ்வுறுவோர்
தலைகுனிந்து பின்னடையட்டும்!
15 என்னைப் பார்த்து "ஆ!ஆ!" என்போர்
தாம் அடையும் தோல்வியினால்
அதிர்ச்சியுறட்டும்!
16 உம்மைத் தேடுவோர் அனைவரும்
உம்மில் மகிழ்ந்து களிகூரட்டும்!
நீர் அருளும் மீட்பில் நாட்டங்கொள்வோர்,
"ஆண்டவர் எத்துணைப் பெரியவர்!"
என்று எப்போதும் சொல்லட்டும்!
17 நானோ ஏழை; எளியவன்;

என் தலைவர்
என்மீது அக்கறை கொண்டுள்ளார்;
நீரே என் துணைவர், என் மீட்பர்!
என் கடவுளே,
எனக்குத் துணை செய்ய
விரைந்து வாரும்.

திருப்பாடல் 40:1-17

**சிந்தனைக்கு**

1 முதல் 41 வரை உள்ள திருப்பாடல்கள் முதல் தொகுதி என்பதை நாம் அறிவோம்; இத்தொகுதியின் முதல் இரண்டு திருப்பாடல்களைப் போலவே (1:1 & 2:12), இறுதி இரண்டு திருப்பாடல்களும் (40:4 & 41:1), பேறுபெற்றோரைக் குறித்துப் பேசுகின்றன. புலம்பலும் மன்றாட்டுமான இரண்டு திருப்பாடல்களைத் தொடர்ந்து, ஆண்டவர் அருளிய விடுதலையை அறிவித்து, பாதுகாப்புக்காகத் தொடர்ந்து மன்றாடும் வகையில் இப்பாடல் அமைந்துள்ளது.

இத்திருப்பாடலின் கடைசி ஐந்து வசனங்கள் தனியொரு திருப்பாடலாக (70:1-5) அமைந்துள்ளன.

அமைப்பு:
வ.1-5, அடியாருக்கு ஆண்டவரின் நற்செயல்கள்
வ.6-10, சாட்சி பகரும் அடியார்
வ.11-17, அடியாரின் மன்றாட்டு

வசனம் 40:1-3
ஆண்டவரின் மீட்புக்காகப் பொறுமையுடன் காத்திருந்த தாவீதுக்கு, அவர் அருளிய விடுதலை:
* அழிவின் குழியிலிருந்து வெளியே எடுத்தார்;
* உறுதியான தளத்தில் நிறுத்தினார்;
* தளர்ந்த நடையை உறுதிப்படுத்தினார்;
* கடவுள்தம் புகழ் பாட புதியதொரு பாடலை தாவீதின் நாவில் வைத்தார்.

வசனம் 40:2
"அழிவின் குழி" -
சாவுக்கு நிகரான துயர்.

வசனம் 40:3
"... பலரும்... அச்சங்கொண்டு..." -
கடுந் துயரில் சாவை எதிர் நோக்கிய நிலையில் இருந்த அடியாரை ஆண்டவர் மீட்டதனால், அவரது ஆற்றல் மீது பகைவர்களுக்கு எழும் இறையச்சம்.

வசனம் 40:4-6
இந்த வசனங்கள், எபிரேயர் 10:5-7 பகுதியில் எடுத்தாளப்பட்டுள்ளன. புதிய ஏற்பாட்டில் மேசியாவோடு தொடர்புபடுத்தி எழுதப்பட்டுள்ளதால், இத்திருப்பாடலை மேசியாவின் திருப்பாடல் என்று சொல்லலாமா?

இந்தப் பகுதி உணர்த்துவது, பலிகளை அல்ல, தாழ்மையையே ஆண்டவர் விரும்புகிறார் என்பதையே (பார்க்க, 1 சாமுவேல் 15:22).

நம்முடைய ஊழியங்கள், மனதை உருக்கும் மன்றாட்டுகள், பரவசமூட்டும் ஆராதனைகள், கணக்கிலடங்காக் காணிக்கைகள் - இவை எதுவும் கடவுளுக்குத் தேவையில்லை. கடவுள் நம்மிடம் எதிர்பார்ப்பது, தாழ்மையும் எளிமையுமான உள்ளமே! (51:16-17)

வசனம் 40:7-8
"இதோ வருகின்றேன்..." -
இணை, எசாயா 6:8.
அழைக்கப்பட்ட ஊழியனாக, அரசருக்குரிய பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு செயலற்ற முனைப்பாக இருக்கும் தாவீது.

"... என்னைக் குறித்துத் திருநூல் சுருளில்..." -
பார்க்க, இணைச் சட்டம் 17:18-20; 2 அரசர்கள் 11:12, இஸ்ரயேலின் அரசருக்குரிய திருச்சட்டச் சுருள்.

"உமது திருவுளம் நிறைவேற்றுவதில்..." -
திருநூல் சுருளில் அரசருக்கு ஆண்டவர் வகுத்த விதிமுறைகளைக் கைக்கொண்டு செயல்படுவதாக தாவீது உறுதிபட உரைக்கிறார்.

அதேவேளையில், இந்த வசனங்களைக் கிறிஸ்து இயேசு தமது வாழ்க்கைக்குப் பொருத்திக் காட்டுகிறார், யோவான் 4:34 & 5:30.

கடவுளின் திருவுளத்தை நாம் எப்படி நிறைவேற்றுவது?
கடவுளின் திருப்பெயருக்குப் புகழும் மாட்சியும் சேரும் வகையில், ஏனைய மக்கள் முன், நற்சான்றோடு வாழ்வதே அவருடைய திருவுளத்தை நிறைவேற்றுவது ஆகும்.

வசனம் 40:9-10
"மாபெரும் சபையில் அறிவித்தேன்" -
பொருத்தனையை நிறைவேற்றுதல், 35:18. தனது வேண்டுதலுக்குச் செவிசாய்த்து ஆண்டவர் இரக்கமாக அருளிய மீட்பை, கொஞ்சமும் உள்ளத்தின் ஆழத்தில் மறைக்காமல் திரள் மக்களறியத் தாவீது அறிவித்தார்.

வசனம் 40:11-17
முந்தைய இரு திருப்பாடல்களிலும் வெளிப்பட்ட பாவ அறிக்கை, நேரிட்ட துன்பங்கள் போன்றவற்றை எடுத்துரைத்து, புதுப்பிக்கப்படும் மன்றாட்டு. இறைவேண்டலின் மறுமொழியாகத் துன்பம் துயர் நீங்கினாலும், இடைவேளை ஏதுமின்றி, புதிதாக முளைக்கும் சிக்கல்கள்; இவையே நம்மை நமது மீட்பரின் அடைக்கலத்தை விடாது நாடச் செய்கின்றன.

வசனம் 40:16-17
துயர்மிகு வேளையிலும் பற்றுறுதியை வெளிப்படுத்தும் சிறப்பான அறிக்கை:
ஆண்டவரைத் தேடுவோர் அனைவரும் அவரில் மகிழ்ந்து களிகூரட்டும்!

✝

## 19 திருப்பாடல் 41

(நோயுற்றவரின் மன்றாட்டு)

*பாடகர் தலைவர்க்கு; தாவீதின் புகழ்ப்பா*

1 எளியோரின் நலனில்
அக்கறை கொள்பவர் பேறுபெற்றவர்;
துன்ப நாளில்
ஆண்டவர் அவரை விடுவிப்பார்.
2 ஆண்டவர் அவரைப் பாதுகாப்பார்;
நெடுங்காலம் வாழவைப்பார்;
நாட்டில் பேறுபெற்றவராய்
விளங்கச் செய்வார்;
எதிரிகளின் விருப்பத்திற்கு
அவரைக் கையளிக்க மாட்டார்.
3 படுக்கையில் அவர் நோயுற்றுக் கிடக்கையில்
ஆண்டவர் அவருக்குத் துணை செய்வார்;
நோய் நீங்கிப் படுக்கையினின்று
அவர் எழும்பும்படிச் செய்வார்.
4 'ஆண்டவரே,
எனக்கு இரங்கும்;
என்னைக் குணப்படுத்தும்;
உமக்கு எதிராகப்
பாவம் செய்தேன்'
என்று மன்றாடினேன்.
5 என் எதிரிகள்
என்னைப்பற்றித் தீயது பேசி,
'அவன் எப்போது சாவான்?
அவன் பெயர் எப்போது ஒழியும்'
என்கின்றனர்.
6 ஒருவன் என்னைப் பார்க்கவந்தால்,
நயவஞ்சகமாகப் பேசுகின்றான்;
என்னைப்பற்றிய
தவறான செய்திகளை சேகரித்துக்கொண்டு,
வெளியே போய் அவற்றைப் பரப்புகின்றான்.
7 என்னை வெறுப்போர்
அனைவரும் ஒன்றுகூடி
எனக்கு எதிராய்க்
காதோடு காதாய்ப் பேசுகின்றனர்.
எனக்குத் தீங்கிழைக்கத் திட்டமிடுகின்றனர்.
8 'தீயது ஒன்று
அவனை உறுதியாய்ப் பற்றிக்கொண்டது;
படுக்கையில் கிடக்கின்ற அவன்
இனி எழவே மாட்டான்'
என்று சொல்கின்றனர்.
9 என் உற்ற நண்பன்,
நான் பெரிதும் நம்பினவன்,
என் உணவை உண்டவன்,
எனக்கு இரண்டகமாகத்

தன் குதிகாலைத் தூக்குகின்றான்.
10 ஆண்டவரே!
என் மீது இரங்கி,
நான் அவர்களுக்குப்
பதிலடி கொடுக்கும்படித் தூக்கிவிடும்.
11 என் எதிரி என்னை வென்று
ஆர்ப்பரிக்கப் போவதில்லை;
இதனால், நீர் என்னில் மகிழ்வுறுகின்றீர்
என்பதை அறிந்து கொள்கின்றேன்.
12 நானோ நேர்மையில்
உறுதியாய் இருக்கின்றேன்;
நீர் எனக்கு ஆதரவளிக்கின்றீர்;
உமது முன்னிலையில்
என்னை என்றும்
நிலைநிற்கச் செய்கின்றீர்.
13 இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர்
புகழப் பெறுவராக!
ஊழி ஊழியாய்ப் புகழப் பெறுவராக!
ஆமென்! ஆமென்!

திருப்பாடல் 41:1-13

**சிந்தனைக்கு**

தாவீதைப் பீடித்திருந்த நோயும், பிடித்திருந்த கயமையான நட்புமே, இத்திருப்பாடலின் கருப்பொருள். அவ்விதத்தில் ஒன்றோடொன்று தொடர்புடைய நான்காவது திருப்பாடல். முதல் தொகுதியின் முதலாம் பாடல் போலவே, இறுதிப் பாடலும் பேறு பெற்றோர் குறித்தே தொடங்குகிறது.

அமைப்பு:
வ.1-3, பரிவுடையோரின் பேறு
வ.4-12, பரிவுடையோரின் முறையீடும், மன்றாட்டும், பற்றுறுதியும்
வ.13, புகழ்ச்சிப் பா

வசனம் 41:1
"உன் சகோதரனுக்கும், உன் நாட்டிலுள்ள வறியவர்க்கும், தேவையுள்ளோர்க்கும் உன் கையைத் தாராளமாய்த் திற" (இணைச் சட்டம் 15:11ஆ) என்பது திருச்சட்டம்.
"ஏழைக்கு இரங்கி உதவிசெய்கிறவர் ஆண்டவருக்குக் கடன் கொடுக்கிறார்" (நீதிமொழிகள் 19:17அ) என்பது இறைவாக்கு.

கடவுளுக்கே கடன் கொடுக்க நமக்குள்ள வாய்ப்பை நாம் ஏன் மறுக்க வேண்டும்?

ஏழை என்போர் யார்?
தேவையில் இருப்போர் - பொருளோ, அன்போ, பரிவோ, ஆறுதலோ, அடைக்கலமோ, நம்பிக்கையோ, அறிவோ, இறை ஞானமோ - எதில் குறைவுள்ளவர் என்றாலும், அதனை நிறைவு செய்வோரை ஆண்டவர் விரும்புகிறார்.

*அக்கரை கொள்ளுதல் என்பது தேவையில் இருப்போரை உடனுறை மனிதராக ஏற்பதில் தொடங்குகிறது; குடிமகனாக உங்களுக்கு இருக்கும் உரிமைகளை அவர்களுக்கும் வழங்கும் போது அது செயல் வடிவம் பெறுகிறது; அவர்களுடைய துயரங்களைத் துடைத்தெறியும் போது நிறைவடைகிறது.*

*கருணை நம் உள்ளங்களில் பிறக்கட்டும்; நம் எளிமையான வாழ்க்கையால் அது வளரட்டும்.*

*வசனம்* 41:1-3
*எளியோரின் நலனில் அக்கறை கொள்பவர் எவ்வாறெல்லாம் பேறுபெற்றவர்?*
*இந்த வசனங்களில் ஏழுவிதமான ஆசிகள் சொல்லப்பட்டுள்ளன.*

*நோயின் வலி உணராதோர் நோயற்ற வாழ்வின் ஆசியை உணரமாட்டார்!*

*வசனம்* 41:3-4
*எளியோரின் நலனில் ஓர் அரசரின் அக்கரை, பார்க்க*: 72:2,4,12-14, 82:3-4. *மேலும், நீதிமொழிகள்* 29:14, 31:8-9.

*முதல் மூன்று வசனங்களை தாவீது தனக்கே நன்மை உண்டாக எழுதினாரோ என்று தோன்ற வைக்கின்றன அடுத்து வரும் வசனங்கள்!*

*வசனம்* 41:4
*பாவம் குறித்த தொடர் அறிக்கைகள்*, 38:3-5, 39:8&11, 40:12, 41:4. *தன்னை நேரியவன் என்று தாவீது உறுதியாகக் கூறுவதால்* (*வ*.12), *ஏற்கனவே மன்னிக்கப்பட்ட பாவத்தையே அறிக்கையிடுகிறார்.*

"*என்னைக் குணமாக்கும்*" -
neh-fesh *என்ற மூலச் சொல்லின் பின்னைக் காலப் பொருட்படி*, "*என் ஆன்மாவைக் குணமாக்கும்.*"
*நோய் உடலைப் பாதிக்கும் எனில், பாவம் உள்ளத்தையும் அதன் விளைவாக உடலையும் பாதிக்கும். நமது பாவத்திலிருந்து நாமே விடுதலை அடைய முடியாது; விடுவிப்பவர் ஆண்டவரே! அவர்தம் காயங்களால் நாம் நலம் பெறுகிறோம்.*

"*உமக்கு எதிராகப் பாவம் செய்தேன்*" -
*ஆண்டவர் விரும்பும் எளிய பாவ அறிக்கை; விடுதலை அருளும் பாவ அறிக்கை* (1 *யோவான்* 1:9).
*பொதுவாக இருப்பினும், சூழ்நிலை மீதோ, ஏனையோர் மீதோ பழிபோடாத, நிபந்தனையற்ற பாவ அறிக்கை.*

*வசனம்* 41:5-9
*நண்பர்களாகத் தோற்றமளிக்கும் எதிரிகள்!*

*அத்தகையோரின் தன்மைகள், வஞ்சகத் திட்டங்கள், முணுமுணுப்பாக பொய்யை உண்மை போல் பரப்பும் செயல்பாடு - என அனைத்தையும் திருப்பாடகர் ஆண்டவரிடம் தெளிவாக முறையிடுகிறார்.*

*தாவீதுக்கு மட்டுமல்லாமல், இத்தகைய "நண்பர்கள்" நம் அனைவருக்கும் இருப்பர்; இன்றைய போட்டிகள் நிறைந்த உலகில், இது தவிர்க்க முடியாத ஒன்று.*

வசனம் 41:6
*பிணியாளர் யோபின் அனுதாபமற்ற பார்வையாளர்கள் போல.*
*தாவீதுக்கு அகிதோபல் போன்றோர்* (2 *சாமுவேல்* 15:12&31).

வசனம் 41:9
*இவ்வசனத்தின் ஒரு பகுதியை மட்டும் கிறிஸ்து இயேசு எடுத்தாளுகிறார்* (*யோவான்* 13:18), (*மேலும் பார்க்க, மத்தேயு* 26:23; *மாற்கு* 14:18; *லூக்கா* 22:21). *யூதாஸில் நிறைவேறிய இறைவாக்கு. இதனைப் பேதுரு நினைவுகூர்ந்தார்* (*திருத்தூதர் பணிகள்* 1:16).

*யூதாஸைத் தோழன் என்று சொன்ன* (*மத்தேயு* 26:50) *இயேசு,* "*தாம் நம்பினவன்*" *என்று ஒருபோதும் அவனைச் சொல்லவில்லை; மனித உள்ளங்களில் உள்ளதை அவர் அறிவார்* (*யோவான்* 2:24-25).

வசனம் 41:10
*தாவீதின் மன்றாட்டு. நோய்ப் படுக்கையிலிருந்து* (*வ.*3) *தன்னைத் தூக்கி விடும்படி அவர் வேண்டுகிறார்.*

வசனம் 41:11-12
*தாவீதின் பற்றுறுதி அறிக்கை!*
*பாவ அறிக்கையின் விளைவு* (*வ.*4), *மன்னிப்பின் மகிழ்ச்சி.*

*ஆண்டவரில் நாம் மகிழ்வுருதல் உவகை!*
*நம்மில் ஆண்டவர் மகிழ்கிறார் என்பதை நாம் உணர்வது ஆற்றல் தரும் பேருவகை!* (*நெகேமியா* 8:10, *திருவிவிலியம் / KJV*)

வசனம் 41:12
*நெடுங்கால வாழ்வை விரும்பிய தாவீது* (*வ.*2), *கடவுள் முன்னிலையில் என்றும் இருக்க நிலைவாழ்வை வேண்டுகிறார்* (23:6).

வசனம் 41:13
*திருப்பாடல்கள் முதலாம் தொகுதியின் நிறைவான வாழ்த்து!*
*ஒவ்வொரு தொகுதியும் இப்படியொரு துதியோடு நிறைவடைகிறது. ஒவ்வொரு தொகுதியும் ஒன்றில் ஒன்று இயைந்து தொடர்கிறது.*

*ஆசிகளின் உறைவிடமும் ஊற்றுமாகத் திகழும், அகரமும் னகரமுமான, தொடக்கமும் முடிவுமற்ற கடவுளாகிய ஆண்டவருக்குப் புகழ்ச்சி!*

*உறுதியாக அப்படியே ஆகக் கடவது!*
*ஆமென்! ஆமென்!*

# தொகுதி 2

**(திருப்பாடல் 42 முதல் திருப்பாடல் 72 முடிய)**

## 19 திருப்பாடல் 42

(நாடு கடத்தப்பட்டோரின் மன்றாட்டு)

*பாடகர் தலைவர்க்கு; கோராகியரின் அறப் பாடல்*

1 கலைமான் நீரோடைகளுக்காக
ஏங்கித் தவிப்பது போல், கடவுளே!
என் நெஞ்சம்
உமக்காக ஏங்கித் தவிக்கின்றது.
2 என் நெஞ்சம் கடவுள்மீது,
உயிருள்ள இறைவன்மீது
தாகம் கொண்டுள்ளது;
எப்பொழுது நான்
கடவுள் முன்னிலையில்
வந்து நிற்கப் போகின்றேன்?
3 இரவும் பகலும் என் கண்ணீரே
எனக்கு உணவாயிற்று;
'உன் கடவுள் எங்கே?' என்று
என்னிடம் தீயோர் கேட்கின்றனர்.
4 மக்கள் கூட்டத்தோடு சேர்ந்து
பவனியாகக் கடவுளின்
இல்லத்திற்குச் சென்றேனே!
ஆர்ப்பரிப்பும் நன்றிப்பாடல்களும் முழங்க
விழாக்கூட்டத்தில் நடந்தேனே!
இவற்றையெல்லாம்
நான் நினைக்கும்போது,
என் உள்ளம்
வெகுவாய் வெதும்புகின்றது.
5 என் நெஞ்சே!
நீ நம்பிக்கை இழப்பது ஏன்?
நீ கலக்கமுறுவது ஏன்?
கடவுளையே நம்பியிரு;
என் கடவுளின்
மீட்புச் செயல்களை முன்னிட்டு
இன்னும் நான் அவருக்கு
நன்றி செலுத்துவேன்.
6 என் நெஞ்சம்
மிகவும் தளர்ந்துள்ளது;
ஆகவே யோர்தான் நிலப்பகுதியிலும்,
எர்மோன், மீசார் மலைப்பகுதிகளிலும்
உம்மை நான் நினைத்துக்கொண்டேன்.
7 உம் அருவிகள் இடியென முழங்கிட
ஆழ்கடல் ஆழ்கடலை அழைக்கின்றது;
உம் சிற்றலைகளும் பேரலைகளும்
என்மீது புரண்டோடுகின்றன.
8 நாள்தோறும் ஆண்டவர்
தமது பேரன்பைப் பொழிகின்றார்;
இரவுதோறும் நான்
அவரைப் பாடுவேன்;

எனக்கு வாழ்வளிக்கும்
இறைவனை நோக்கி மன்றாடுவேன்.
9 என் கற்பாறையாகிய இறைவனிடம்
'ஏன் என்னை மறந்தீர்;
எதிரியால் ஒடுக்கப்பட்டு
நான் ஏன் துயருடன்
நடமாட வேண்டும்' என்கின்றேன்.
10 'உன் கடவுள் எங்கே?' என்று
என் பகைவர்
நாள்தோறும் என்னைக் கேட்பது,
என் எலும்புகளை
ஊடுருவும் வாள்போல
என்னைத் தாக்குகின்றது.
11 என் நெஞ்சே!
நீ நம்பிக்கை இழப்பது ஏன்?
நீ கலக்கமுறுவது ஏன்?
கடவுளையே நம்பியிரு.
என் மீட்பராம் கடவுளை
இன்னும் நான் போற்றுவேன்.
என் கடவுளின்
மீட்புச் செயல்களை முன்னிட்டு
இன்னும் நான்
அவருக்கு நன்றி செலுத்துவேன்.

திருப்பாடல் 42:1-11

**சிந்தனைக்கு**

இரண்டாம் தொகுதியின் முதல் திருப்பாடல்; முதலாம் தொகுதியும் இரண்டாம் தொகுதியும் அடிப்படையாக ஒருவிதத்தில் மாறுபடுகின்றன: முதல் தொகுதியில் ஆண்டவர் / யாவே என்ற சொல் 272 முறையும், கடவுள் / எலோஹிம் என்ற சொல் வெறும் 15 முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் தொகுதியில், ஆண்டவர் என்ற சொல் வெறும் 30 முறையும், கடவுள் என்ற சொல் 164 முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதல் தொகுதியில், தலைப்பில் தாவீதின் பெயர் உள்ள திருப்பாடல்கள், 41ல் 37; இரண்டாம் தொகுதியில், 31ல் 18. தலைப்பில் சாலமோன் ஒரு முறையும், ஆசாப் ஒரு முறையும், கோராகியர் ஏழு முறையும் குறிப்பிடப்படுகின்றனர்; நான்கு, பெயர்க் குறிப்பற்றவை. இத்தொகுதியின் பாடு பொருள், முதல் தொகுதியைப் போலவே, புலம்பல், அறிக்கையிடுதல், மன்றாட்டு; பல திருப்பாடல்கள், தனிநபர் குறித்ததாக அல்லாமல், குமுகாயமாக அதாவது கூட்டு வழிபாட்டுப் பாடல்களாக உள்ளன (44-48; 60; 65-68 & 72).

இரண்டாம் தொகுதியின் முதல் இரண்டு பாடல்களும் ஒரு காலத்தில் ஒரே பாடலாக இருந்திருக்கலாம் என்பர்; திருப்பாடல் 43, தலைப்பற்று இருப்பது நோக்கத்தக்கது. செப்டுவஜின்ட் மொழிபெயர்ப்புக்கு முன்பாகவே அவை இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கலாம். இவ்விரு திருப்பாடல்களையும் ஒன்றாகக் கருதி, பகுப்பாய்வு செய்தால், மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம் (42:1-5, 42:6-11, 43:1-5); ஒவ்வொரு பகுதியின் இறுதி வசனமும், இணையாக இருப்பதைக் காணலாம் (42:5, 42:11 & 43:5).

கோராகியரில் ஒருவர் எழுதினாரா, அல்லது தாவீதோ வேறு ஒருவரோ எழுதி, கோராகியர் பண் இசைத்தனரா என்பது தெரியவில்லை. கோராகியர் மோசேயின் காலமுதலே திருத்தல வாயிற்

காப்பாளர்களாக இருந்தனர். கடவுளின் சித்தத்திற்கு எதிராகக் கலகம் செய்ததால், கோராகு குடும்பத்தினரும் வேறு பலரும் பூமி விழுங்க மாண்டனர் (எண்ணிக்கை 16); ஆனால் ஆண்டவர் கோராகு வழிமரபில் சிலரை உயிரோடு வைத்தார் (எண்ணிக்கை 26:11). தாவீதின் காலமுதல் கோராகின் வழிமரபினர் திருத்தல வாயில் காப்பாளராகவும், பாடகர் குழுவினராகவும், அவரின் மிகுந்த நம்பிக்கைக்கு உரியவர்களாகவும் தொண்டாற்றினர் (1 குறிப்பேடு 6:22-38, 9:19-34, 12:6; 2 குறிப்பேடு 20:19). இவர்களின் தலைவராக இருந்தவர், ஏமான் (திருப்பாடல் 88 தலைப்பு). இவர்களுக்குரிய திருப்பாடல்கள்: இரண்டாம் தொகுதியில், 42, 44-49; மூன்றாம் தொகுதியில், 84-85 & 87-88.

கோராகியரின் தலைப்பில் உள்ள திருப்பாடல்கள் அனைத்தும், கட்டமைப்பில் சிறந்தவை; கவித்துவமானவை; பொருட் செறிவு மிக்கவை; உணர்ச்சிமயமானவை.

கடவுளின் இல்லம் இருக்கிற எருசலேமிலிருந்து விரட்டப்பட்ட ஒருவரின் துயர்மிகு பாடலாக இப்பாடல் உள்ளது.

திருப்பாடல் 32 போல, இப்பாடல் மஸ்கீல் என்னும் அறப் பாடல். இதர அறப் பாடல்கள், 44, 45, 52-55, 74, 78, 88, 89 & 142.
🕎

அமைப்பு:
வ.1-5, கடவுளின் திருமுன்னின்று பிரிக்கப்பட்ட அடியாரின் புலம்பல்
வ.6-11, கடவுளுக்குள் ஆறுதல் தேடும் இறையடியார்
11 வசனங்களில் 16 முறை நேரடியாக ஆண்டவர், கடவுள், இறைவன் என்ற சொற்களும், இரண்டு முறைகள் உம்மை என்ற சொல்லும், இப்பாடலை இயற்றியவர் கடவுளைத் தனக்கு எவ்வளவு நெருக்கமாக வைத்திருந்தார் என்பதற்குச் சான்று; சில இடங்களில் "என் கடவுள்" என்று உரிமையோடு அழைத்து, கடவுளைத் தனக்கே உரியவராகக் காட்டுகிறார், திருப்பாடகர்.
🕎

வசனம் 42:1
"கலைமான் நீரோடைகளுக்காக ஏங்கித் தவிப்பது போல" -
கடவுளுக்காக ஏங்கித் தவிக்கும் திருப்பாடகர்.

உணவின்றிப் பல நாட்கள் வாழ்ந்தோர் உளர்; ஆனால் நீரின்றி?
இதனை நம்மால் எண்ணிப் பார்க்கவே இயலாது; ஏனெனில் கையில் குடிநீர்ப் புட்டி இல்லாமல் நாம் வீட்டை விட்டு வெளியே வருவதேயில்லை. சில மணி நேரங்கள் கூட நீரின்றி இருத்தல் எவ்வுயிர்க்கும் இயலாது. ஓர் ஆடு அல்லது ஒரு மாடு என்று இங்கு சொல்லாமல், ஒரு மானை ஏன் குறிப்பிடுகிறார் திருப்பாடகர்? ஆடுகளின் தேவைகளை நிறைவேற்ற மேய்ப்பன் ஒருவன் உண்டு; ஆனால் கலைமானுக்கு? அஞ்சி அஞ்சி வாழும் வாழ்க்கை கலைமானுடையது. தன் தேவைக்கும் அச்சத்திற்கும் ஓடி அலையும் நிலையில், நீரைக் கண்டாலும் குடிக்க இயலாத அச்சுறுத்தல் அதற்கு இருக்கலாம். அதுபோன்ற நிலையில் வாடும் கலைமானைப் போல், இத்திருப்பாடகரின் நெஞ்சம் கடவுளுக்காக ஏங்கித் தவிக்கிறது.

"நீரோடைகள்" -
எபிரேயத்தில், aw-feek; தமிழில் நீரோடும் பாலம் என்று சொல்லலாம் (ஏதண்டம் அல்லது தொட்டிப் பாலம் அல்லது aqueduct என்று கூகுள் தேடுபொறியில் தட்டிப் பார்க்க). இத்தகைய நீரோடும் பாலங்கள், சில ஆயிரம் ஆண்டுகளைக் கடந்தும் இன்றும் பாலஸ்தீனத்தில் உள்ளன.

வசனம் 42:2
"என் நெஞ்சம் கடவுள் மீது ... தாகம் கொண்டுள்ளது" -
மேலும், 63:1. இதற்கான தேறுதல், மத்தேயு 5:6.

"உயிருள்ள இறைவன்" -
இணைச் சட்டம் 5:26; வாழும் கடவுள்; கேட்கும் கடவுள்; பேசும் கடவுள்.

"எப்பொழுது நான் கடவுள் முன்னிலையில்...?" -
கடவுளிடமிருந்து பிரித்துத் தூக்கி வீசப்பட்ட சூழல், வ.9, 43:1-2.

வசனம் 42:3
"உன் கடவுள் எங்கே?" -
தீயோரின் கேள்வி; கைவிடப்பட்ட நிலையில் திருப்பாடகர், 3:2, 10:11.

"கண்ணீரே ... உணவு" -
80:5, 102:9.
கடும் துயருற்ற நிலை. எதையும் உண்ணச் சற்றும் விருப்பமற்ற நிலை.

வசனம் 42:4
கடவுளின் இல்லத்து நினைவுகள். லேவியரில் பாடகராகத் திருத்தலத்தில் பவனியாகச் செல்லும் போதெல்லாம், அங்கு உற்சாகம், களிப்பு, கொண்டாட்டம்; இப்போதோ, அஞ்சி அஞ்சி அன்னிய மண்ணில் ஓடிக் கொண்டிருக்கும் நிலை.

வசனம் 42:5
பாடலின் பல்லவி போல மீண்டும், வ.11 & 43:5.

"ஏன்" -
வ.11, 43:5, 44:23-26.
கலங்கும் நெஞ்சைக் கடவுளுக்காகக் காத்திருக்க அறிவுறுத்தல் - மூன்று பாடல்களிலும் தொடர்ந்தாலும், திருப்பாடல் 44 கூட்டு வழிபாட்டிற்கு உரியது.

வசனம் 42:6
நாட்டிலிருந்து விரட்டி விடப்பட்டு வேற்று நிலப் பரப்பில் அலையும் நிலை.

"யோர்தான் நிலப் பகுதி" -
யூதா மற்றும் இஸ்ரயேல் நாடுகளின் வடகிழக்குப் பகுதி, வேற்று நாட்டின் நிலப்பகுதி.

"எர்மோன் மலை" -
இஸ்ரயேலின் வடகிழக்கில், லெபனானின் நிலப்பரப்பில் உள்ள மலைத்தொடர், இணைச் சட்டம் 3:8-9; யோசுவா 11:17, 13:11; 1 குறிப்பேடு 5:23.

"மீசார் மலைப் பகுதி" -
பொருள்படி, "சிறிய ஒன்று".
எர்மோன் மலையில் உள்ள ஒரு குன்றைக் குறிப்பதாக இருக்கலாம்.

திருப்பாடகர் நாடோடி போல, அன்னிய மண்ணில் அலைந்து திரிந்ததை இவ்வசனம் காட்டுகிறது.

வசனம் 42:7
*பார்க்க,* 93:3.

"*உம் அருவிகள் இடியென முழங்கிட"* -
*மலையிலிருந்து விழும் ஓர் அருவியின் ஓசை எப்படி இருக்கும்?*
*ஐந்தருவியின் ஓசை?*
*சிறிதும் பெரிதுமான பல அருவிகளின் ஓசை!*
*- அது ஓசையல்ல; இடியோசை போன்ற பெருமுழக்கம்! அவ்வாறு இருக்கிறது, எர்மோன் மலைத்தொடரிலிருந்து பேரிரைச்சலோடு விழும் மேல்-யோர்தான் ஆறு; அது விழுந்து எழும் போது மட்டுமல்லாமல், புரண்டு ஓடும் போதும் கலங்கலாக இருக்கிறது.*

"*...ஆழ்கடல் ஆழ்கடலை அழைக்கின்றது"* -
*அழகிய கற்பனை; கடல் வற்றுவதில்லை. யோர்தான் ஆறும் வற்றுவதில்லை; ஏனெனில், மேலுள்ள கடல் கீழுள்ள கடலை நோக்கி, அது தன்னை விரும்பி அழைப்பதால், பாய்ந்து ஓடுகிறது.*

"*உம் சிற்றலைகளும் பேரலைகளும் என்மீது புரண்டோடுகின்றன"* -
69:1-2 & 88:7 -> 32:6. *யோனா* 2:3-6.
*வசனத்தின் முன்பகுதியின் இனிமையான கற்பனை, பெரும் துயரின் வருணிப்பாக மாறுகிறது. உயர்ந்து விழும் கடல் அலை, நம்மீது விழுந்தால், அது நம்மை உடைப்பது போல இருக்கும்; அப்படிச் சிறிதும் பெரியதுமாகக் கடவுள் அனுப்பிய அலைகள், திருப்பாடகர் மீது விழுந்து விழுந்து அடிக்க, அவர் நொறுங்கிப் போனார்.*

*கடவுள் திருப்பாடகரைத் தம் திருமுன்னின்று தள்ளி விட்டார், வ.2; இப்போதோ அவரைப் பற்றிய நினைவும் கடவுளுக்கு இல்லை, வ.9; இப்படியெல்லாம் அவருக்கு நேருமளவுக்கு, அவர் குற்றம் எதுவும் செய்யவில்லை* (44:17). *நீரற்ற துயரைச் சொல்லித் தொடங்கிய* (வ.1-2) *திருப்பாடகர், மிகைநீரின் துயரை இப்போது காட்டுகிறார்.*

வசனம் 42:8
"இரவும் பகலும்" என்று திருப்பாடகர் புலம்பியதை மனதிற் கொள்க, வ.3.

*இப்போது மற்றுமொரு அழகிய வசனத்தின் வழியாகத் திருப்பாடகர் கடவுளின் கருணையை நம்பிக்கையோடு எதிர்நோக்குகிறார். இது தினமும் தொடரும் சுழற்சி! "நாள்தோறும் ஆண்டவர் தமது பேரன்பைப் (கிருபையைப்) பொழிகின்றார்; இரவுதோறும் துயில் கொள்ளுமுன் எனது படுக்கையில் நான் அவரை நன்றியோடு துதித்துப் பாடுவேன்; எனக்கு வாழ்வளிக்கும் இறைவனை நோக்கி மன்றாடுவேன்," என்கிறார் திருப்பாடகர்.*

வசனம் 42:9
வேறு சொற்களில், வ.2.
இணை, 22:1

வசனம் 42:10
*வ.3ல் எழுப்பிய அதே கேள்வி. இறுமாப்போடு தீயோர் எழுப்பிய அக்கேள்வி, திருப்பாடகரின் எழும்புகளை ஊடுருவித் தாக்கியது.*

வசனம் 42:11
இணை, வ.5.
*துயருற்ற திருப்பாடகர் மீண்டும் தனது நம்பிக்கையை அறிக்கையிடுகிறார்.* 🕎

அழகிய இத்திருப்பாடல் எனக்கும் உங்களுக்குமானது அல்ல; இறை இல்லத்திலேயே வாழ்ந்து சிறையில் போடப்பட்ட அருட்சகோதரி சகாய மேரி (மைக்கேல்பட்டி) போன்றவர்களுக்கானது.

காலையில் தவறாமல் வேதம் வாசித்து, தன் குடும்பத்திற்காக, தன் தொழிலுக்காக, கொஞ்சம் கூடப் போனால், தன் திருச்சபைக்காக, சில "இயேசு _____" ஊழியங்களுக்காக ஜெபித்து விட்டு, செல்பேசி மற்றும் தொலைக்காட்சித் தொடர்கள் பார்த்து விட்டு, தவறாமல் இரவு ஜெபித்து விட்டுத் தூங்கும் நமக்கான திருப்பாடல் இது அல்ல.

இது அருட்சகோதரி சகாயமேரி அவர்களுக்கானது! அருட்தந்தை ஸ்டேன்ஸ் ஸ்வாமி அவர்களுக்கானது!

"பாக்கிய வசனங்கள்" யாருக்கானது?
நமக்கானதா?
"நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது. என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாய் இருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே!" மத்தேயு 5:10-12 (OV).

45 ஆண்டுகளுக்கு மேல் கல்விப்பணியாற்றி, முதிர் வயதான அருட்சகோதரி சகாயமேரி அவர்களுக்காக நம்மில் ஜெபிக்கிறவர்கள் எத்தனை பேர்?
சதி வலை பின்னி, அமைதிப் பூங்காவை இன அழிப்பு அரசியலுக்கு ஏதுவாக மாற்றத் துடிக்கிறார்களே?
எங்கே உங்கள் ஜெபம்?
எங்கே உங்கள் கண்ணீர்?

சிறையில் வாடிய யோசேப்போடு கடவுள் இருந்தார். சிங்கத்தின் குகைக்குள் தள்ளப்பட்ட தானியேலோடு கடவுள் இருந்தார். எரி நெருப்பில் வாலிபர் மூவரோடு கடவுள் இருந்தார். அப்படிப்பட்ட சோதனைகளில் வாடுவோரோடு நாமும் இணைந்து இருப்போம். அப்போது கடவுள் நம்மோடும் இருப்பார். ஆமென்!

## 19 திருப்பாடல் 43

(நாடு கடத்தப்பட்டோரின் மன்றாட்டு)

1 கடவுளே,
என் நேர்மையை நிலைநாட்டும்;
இறைப்பற்றில்லா இனத்தோடு
என் வழக்குக்காக வாதிடும்;
வஞ்சகமும் கொடுமையும்
நிறைந்த மனிதர் கையினின்று
என்னை விடுவித்தருளும்.
2 ஏனெனில் கடவுளே!
நீரே என் ஆற்றல்;
ஏன் என்னை

ஒதுக்கித் தள்ளிவிட்டீர்?
எதிரியால் ஒடுக்கப்பட்டு
நான் ஏன் துயருடன் நடமாடவேண்டும்?
3 உம் ஒளியையும் உண்மையையும்
அனுப்பியருளும்;
அவை என்னை வழி நடத்தி,
உமது திருமலைக்கும்
உமது உறைவிடத்திற்கும்
கொண்டுபோய்ச் சேர்க்கும்.
4 அப்பொழுது, நான்
கடவுளின் பீடம் செல்வேன்;
என் மன மகிழ்ச்சியாகிய
இறைவனிடம் செல்வேன்;
கடவுளே! என் கடவுளே!
யாழிசைத்து ஆர்ப்பரித்து
உம்மைப் புகழ்ந்திடுவேன்.
5 என் நெஞ்சே!
நீ நம்பிக்கை இழப்பது ஏன்?
நீ கலக்கமுறுவது ஏன்?
கடவுளையே நம்பியிரு;
என் கடவுளின்
மீட்புச் செயல்களை முன்னிட்டு
இன்னும் நான்
அவருக்கு நன்றி செலுத்துவேன்.

திருப்பாடல் 43:1-5

**சிந்தனைக்கு**

திருப்பாடல் 42ன் தொடர்ச்சியாக, அதே கருப்பொருளில் அமைந்த திருப்பாடல்.

அமைப்பு:
வ.1-3, கடவுளிடம் மன்றாட்டு
வ.4, பொருத்தனை
வ.5, உள்ளத்தை ஆற்றுப் படுத்தல்
🕎

வசனம் 43:1
வழக்காடு மொழியில் மன்றாட்டு, 17:1-6.

வசனம் 43:2
இணை, 42:9.
"ஏன் என்னை ஒதுக்கித் தள்ளி விட்டீர்" -
மீண்டும் மீண்டும் திருப்பாடகர் எழுப்பும் கேள்வி / எதிர்கொண்ட நிலை, 44:9&23, 60:1, 74:1, 77:7, 88:14, 89:38, 108:11.

வசனம் 43:3
கடவுளின் மீட்பிற்குள், அவரது ஒளியும் வாய்மையுமே நம்மை வழிநடத்துபவை, 18:25-29, 27:1, 85:10-13, 89:14-18, 119:105.

வழியாக, வாக்காக, வாய்மையாக வந்த இறைமகனார், யோவான் 14:6; மேலும், ஒளியைப் பற்றிக் கொண்டு வாழ, எபேசியர் 5:8; 1 தெசலோனிக்கர் 5:5-7; 1 யோவான் 1:5.

"...உமது திருமலைக்கும் உமது உறைவிடத்திற்கும்..." -
சீயோன் மலையில் கடவுளின் இல்லம், 15:1, 99:5&9, 132:7.

வசனம் 43:4
பொருத்தனையோடு நிறைவடைந்த மன்றாட்டு.

ஒரு லேவியரும் பாடகர் குழுவில் ஒருவருமான, ஒரு கோராகியரால் நிறைவேற்றப்படக்கூடிய ஒரு பொருத்தனை; எந்த ஒன்றை நாம் சிறப்பாகவும், கடவுளுக்கே மேன்மை உண்டாகவும் நிறைவேற்ற முடியுமோ, அதுவே சிறந்த பொருத்தனை!

"என் மனமகிழ்ச்சியாகிய இறைவன்..." -
ஒரு லேவியரின் மனமகிழ்ச்சி கடவுளிடமே இருக்கிறது; இன்றைக்கு நாம் அனைவருமே தூய குருக்களே! (1 பேதுரு 2:5).

எச்சரிக்கை: நமது மனமகிழ்ச்சி வேறு எதிலாவது இருந்தால், நாம் காணப்படுவதை வழிபடுபவர்களாக ஆகிவிடுவோம்!

வசனம் 43:5
இணை, 42:5 & 11.
கடவுளால் புறக்கணிக்கப்பட்ட நிலையில் உருவான மனக் கலக்கம். தனித்து, ஆதரவின்றி விடப்பட்ட உணர்வு. கடவுளின் மறுமொழி கிட்டாத கையறு நிலை. இறைப் பிரசன்னத்தை இழந்த துயரமான நிலையிலும், மன்றாட்டும் நம்பிக்கையோடு காத்திருத்தலுமே மீண்டும் அவரோடு இணைவதற்கான ஒரே வழி.

திருப்பாடல்கள் 42-43, நாடுகடத்தப்பட்டோரின் புலம்பலாகவும் மன்றாட்டாகவும் இருக்கின்றன; விரும்பியோ விரும்பாமலோ, நமது ஊரைவிட்டுப் பிரிந்து செல்லும் நிலை நமக்கு ஏற்படுவதுண்டு. மதுரைக்காரன் மதுரையிலேயே வாழ்ந்து சாக வாஞ்சிக்கிறான்; அவ்வாறே ஒரு நெல்லைக்காரனும், தஞ்சாவூரானும்! இப்படி வாழ்கிற நாம், போர்ச் சூழலில் இருந்து தப்பிக்க ஏதிலிகளாக உலகெங்கும் சிதறுண்ட மக்களை நினைத்துப் பார்க்கிறோமா? குறிப்பாக இலங்கைத் தமிழர்கள் உலகெங்கும் சிதறுண்டு வாழ்கின்றனரே! பல நாடுகளிலும் அவர்கள் குடியுரிமை பெற்று அரசியல் அதிகாரத்தை அடையும் நிலையை எய்தியுள்ளனர். ஆனால், உறவுகள் என்று அடைக்கலம் தேடி வந்த இந்த நாட்டில் அவர்கள் இன்றைக்கும் ஏதிலிகளாகவே இருக்கின்றனர். தங்கள் நாடு என்ற உரிமையில் அவர்கள் திரும்பிச் செல்லவும் முடியாது, இங்கு இருக்கும் சிறிய தகரக் குடிசைகூட அங்குக் கிடைக்காது; இங்கோ சொந்த இடமோ குடியுரிமையோ கிடையாது!

ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, புறந்தள்ளப்பட்ட மனிதர்களிடம் அன்பு செலுத்துவதே அகாப்பே அன்பு! ஏனெனில் அத்தகைய அன்பை நாம் பெற்றதாலேயே கடவுளோடு இப்போது இணைந்திருக்கிறோம்; பெற்றுக் கொண்ட நாம், திருப்பித் தரக் கடமைப்பட்டிருக்கிறோம். கிறிஸ்துவின் அன்பு நம்மை நெருக்கி ஏவுவதாக!

✝

## 19 திருப்பாடல் 44

(பாதுகாப்புக்காக வேண்டல்)

*பாடகர் தலைவர்க்கு; கோராகியரின் அறப் பாடல்*
1 கடவுளே,
எங்கள் காதுகளால்
நாங்களே கேட்டிருக்கின்றோம்;
எங்கள் மூதாதையர்
அவர்கள் காலத்திலும்
அதற்குமுன்பும்
நீர் என்னென்ன செய்துள்ளீர்
என்று எங்களுக்கு எடுத்துரைத்தனர்.
2 உமது கையால்
வேற்றினத்தாரை விரட்டியடித்து,
எந்தையரை நிலைநாட்டினீர்;
மக்களினங்களை நொறுக்கிவிட்டு
எந்தையரைச் செழிக்கச் செய்தீர்.
3 அவர்கள் தங்கள் வாளால்
நாட்டை உடைமையாக்கிக் கொள்ளவில்லை;
அவர்கள் தங்கள் புயத்தால்
வெற்றி பெறவில்லை.
நீர் அவர்களில் மகிழ்ச்சியுற்றதால்
உமது வலக்கையும்
உமது புயமும்
உமது முகத்தின் ஒளியுமே
அவர்களுக்கு வெற்றியளித்தன.
4 நீரே என் அரசர்;
நீரே என் கடவுள்!
யாக்கோபுக்கு வெற்றி அளிப்பவர் நீரே.
5 எங்கள் பகைவர்களை
உமது துணையால்
தாக்கி வீழ்த்துவோம்;
எங்களுக்கு எதிராய் எழுந்தோரை
உமது பெயரால் மிதித்துப் போடுவோம்.
6 என் வில்லை நான் நம்புவதில்லை;
என் வாள் என்னைக் காப்பாற்றுவதுமில்லை.
7 நீரே பகைவரிடமிருந்து
எங்களைக் காப்பாற்றினீர்;
எங்களை வெறுப்போரை
வெட்கமுறச் செய்தீர்.
8 எந்நாளும் கடவுளாம் உம்மை
நினைத்துப் பெருமை கொண்டோம்.
என்றென்றும் உமது பெயருக்கு
நன்றி செலுத்திவந்தோம்.
(சேலா)
9 ஆயினும், இப்போது
நீர் எங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டீர்;
இழிவுபடுத்திவிட்டீர்;
எங்கள் படைகளுடன்

நீர் செல்லாதிருக்கின்றீர்.
10 எங்கள் பகைவருக்கு நாங்கள்
புறங்காட்டி ஓடும்படிச் செய்தீர்.
எங்களைப் பகைப்போர்
எங்களைக் கொள்ளையிட்டனர்.
11 உணவுக்காக வெட்டப்படும்
ஆடுகளைப்போல் எங்களை ஆக்கிவிட்டீர்.
வேற்றினத்தாரிடையே எங்களைச்
சிதறி ஓடச் செய்தீர்.
12 நீர் உம் மக்களை
அற்ப விலைக்கு விற்றுவிட்டீர்;
அவர்கள் மதிப்பை
மிகவும் குறைத்துவிட்டீர்.
13 எங்களை அடுத்து வாழ்வோரின் பழிப்புக்கு
எங்களை ஆளாக்கினீர்;
எங்கள் சுற்றுப்புறத்தாரின்
ஏளனத்துக்கும் இகழ்ச்சிக்கும்
எங்களை உள்ளாக்கினீர்.
14 வேற்றினத்தாரிடையே எங்களை
ஒரு பழிச்சொல்லாக்கினீர்;
ஏனைய மக்கள் எங்களைப்
பார்த்துத் தலையசைத்து நகைக்கின்றனர்.
15 எனக்குள்ள மானக்கேடு
நாள்முழுதும் என்கண்முன் நிற்கின்றது;
அவமானம் என் முகத்தை மூடியுள்ளது.
16 என்னைப் பழித்துத் தூற்றுவோரின்
குரலை நான் கேட்கும்போதும்,
என் எதிரிகளையும்,
என்னைப் பழிவாங்கத் தேடுவோரையும்
நான் பார்க்கும்போதும்
வெட்கிப்போகின்றேன்.
17 நாங்கள் உம்மை மறக்காவிடினும்,
உமது உடன்படிக்கையை மீறாவிடினும்,
இவையெல்லாம் எங்களுக்கு நேரிட்டன.
18 எங்கள் உள்ளம் பின்வாங்கவில்லை;
எங்கள் காலடிகள்
உம் வழியினின்று பிறழவில்லை.
19 ஆயினும், நீர் எங்களைக்
கொடிய பாம்புகள் உள்ள இடத்தில்
நொறுங்கும்படி விட்டுவிட்டீர்;
சாவின் இருள்
எங்களைக் கவ்விக்கொண்டது.
20 நாங்கள் எங்கள்
கடவுளின் பெயரை மறந்துவிட்டு,
வேற்றுத் தெய்வத்தைக் கைகூப்பி
வணங்கியிருந்தோமானால்,
21 கடவுளாம் நீர்
அதைக் கண்டுபிடித்திருப்பீர் அல்லவா?
ஏனெனில், உள்ளத்தில் புதைந்திருப்பவற்றை

நீர் அறிகின்றீர்.
22 உம் பொருட்டு நாள்தோறும்
கொல்லப்படுகின்றோம்;
வெட்டுவதற்கென நிறுத்தப்படும்
ஆடுகளெனக் கருதப்படுகின்றோம்.
23 என் தலைவா! கிளர்ந்தெழும்,
ஏன் உறங்குகின்றீர்? விழித்தெழும்;
எங்களை ஒருபோதும்
ஒதுக்கித் தள்ளிவிடாதேயும்.
24 நீர் உமது முகத்தை
ஏன் மறைத்துக் கொள்கின்றீர்?
எங்கள் சிறுமையையும் துன்பத்தையும்
ஏன் மறந்து விடுகின்றீர்?
25 நாங்கள் தரைமட்டும் தாழ்ந்துவிட்டோம்;
எங்கள் உடல்
மண்ணோடு ஒட்டிக்கொண்டுள்ளது.
26 எழுந்துவாரும்;
எங்களுக்குத் துணை புரியும்;
உமது பேரன்பை முன்னிட்டு
எங்களை மீட்டருளும்.

திருப்பாடல் 44:1-26

**சிந்தனைக்கு**

கோராகியரின் அறப் பாடல் (மஸ்கீல்) அதாவது அறிவுரைப் பாடல். வரலாற்றுப் பின்னணி குறித்த செய்தி ஏதுமில்லை. பைபிள் ஆய்வாளர்கள் மக்கபேயரின் காலம் என்றும் தாவீதின் காலம் என்றும் இவை இரண்டுக்கும் இடைப்பட்ட காலம் என்றும் பிரிந்து கிடக்கின்றனர். தாவீதின் காலம் என்பதே சரியாக இருக்கும்: வ.18ல், கடவுளின் வழிகளில் உறுதியாக இருப்பதைக் குறித்த இஸ்ரயேலரின் அறிக்கை உள்ளது. தாவீதுக்கு முன்பும் பின்பும் இத்தகைய உறுதியை இஸ்ரயேலின் வரலாற்றில் நாம் காண்பது அரிது.

இறையருளுக்காக நாட்டின் புலம்பல்; அத்தகைய இதர திருப்பாடல்கள், 74, 79, 80, 83, 85, 90. இவற்றில் எதுவும் தாவீதுக்கு உரியது அல்ல என்பது கூடுதல் செய்தி.

திருப்பாடல் 44, சபை கூடி வழிபடும் பாடலாக இருந்தாலும், வ.4,6,15-16 தன்னிலை ஒருமையில், வழிபாட்டை வழிநடத்துபவரின் குரலாக ஒலிக்கிறது; ஆனாலும் அது எவ்விதத்திலும் பாடலின் நடையை மாற்றவில்லை.

அமைப்பு:
வ.1-8, வரலாற்றைத் திரும்பிப் பார்த்தல்
வ.9-16, இன்றைய வரலாற்றைக் குறித்த புலம்பல்
வ.17-22, தங்கள் பிழையற்ற தன்மையை அறிக்கை செய்தல்
வ.23-26, வரும் கால வரலாற்றைக் குறித்த மன்றாட்டு

வசனம் 44:1-3
கடந்த காலங்களில் காத்த கடவுள்.

வசனம் 44:1
*"... நாங்களே கேட்டிருக்கிறோம்" -*
*கடவுளின் அருஞ்செயல்களைத் தலைமுறைகளுக்கு அறிவிக்க வேண்டும் என்பது இறைக் கட்டளை,* 78:3-4; *விடுதலைப் பயணம்* 10:1-2; 12:26-27; 13:14-15; *இணைச் சட்டம்* 6:20-25; *யோசுவா* 4:6-7.

வசனம் 44:2
*"...எந்தையரை நிலைநாட்டினீர்" -*
naw-taw, *பயிரை நடுவது போல, இஸ்ரயேலரை வாக்களிக்கப்பட்ட நாட்டில் நிலைநாட்டி, செழிக்கச் செய்தவர், கடவுளே!* (80:8-11; *எரேமியா* 12:2).

வசனம் 44:3
*பார்க்க, யோசுவா* 24:17-18.
*இறையருளின் அருஞ் செயல்களின் சுருக்கமான விளக்கம்.*

*"உமது முகத்தின் ஒளி..." -*
*பார்க்க,* 18:25-29, 27:1, 89:15.

வசனம் 44:4-8
*காக்கும் கடவுளின் ஆற்றல்; அவரே இஸ்ரயேலின் வெற்றி! அவரே அவர்களின் அரசர்!*

வசனம் 44:4
*"யாக்கோபுக்கு..." -*
*குலமூதுவரின் பெயர், கவித்துவமாக நாட்டின் தொடர்பில் கூறப்படுகிறது,* 14:7, 53:6, 78:5&22&71, 79:7, 85:1; *இன்னும் பல.*

வசனம் 44:5-8
*வ.3க்கான விளக்கம்; அதன் அடிப்படையில் எழுந்த நம்பிக்கை.*

வசனம் 44:9-16
*தோல்வியின் அனுபவமும், அது தந்த துயரும் இழிவும்.*

வசனம் 44:9
*"... எங்கள் படைகளுடன் நீர் செல்லாதிருக்கிறீர்" -*
*தோல்வியின் காரணம்.*
*இஸ்ரயேலின் படைகளின் ஆண்டவர், அவற்றின் முன் செல்லாமல், புறப்படாமல் இருந்து விட்டார்.*

*இறைப் போராளிகளின் வெற்றி கடவுளின் வெற்றி, அவர்களின் தோல்வியோ அடியாருக்கு அவர் அனுமதித்த இழப்பு.*

வசனம் 44:11-16
*நாட்டின் வீழ்ச்சியையும் இழிநிலையையும், போருக்கு உடன் வராத கடவுள், அமைதியாகப் பார்த்துக் கொண்டிருப்பதாக இங்கு திருப்பாடகர் குற்றம் சாட்டுகிறார்.*

வசனம் 44:11
*மேய்ப்பரும் அரசருமாகிய ஆண்டவர் தமது மந்தையைக் காக்கவில்லை என்று திருப்பாடகர் புலம்புகிறார்.*

வசனம் 44:12
"நீர் உம் மக்களை அற்ப விலைக்கு விற்று விட்டீர்" -
கடவுளின் திருச்சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடந்த போதிலும், இஸ்ரயேலரை எதிரிகளிடம் வீழ்ந்து விடுமாறு ஆண்டவர் விட்டு விட்டார் (ஒப்பிடுக, வ.17-22 & இணைச் சட்டம் 32:30).

வசனம் 44:17-21
கடவுள் தங்களைக் கைவிட்ட நிலையிலும், தங்களின் நம்பிக்கையாகிய அவர்தம் வழிகளில் தாங்கள் உறுதியாக நடக்கிறோம் என்று அறிக்கை செய்யும் திருப்பாடகர்; தங்கள் உள்ளங்களில் புதைந்திருப்பதையும் தங்கள் வழிகளையும் ஆய்ந்து உண்மையை அறிந்து கொள்ளுமாறு, திருப்பாடகர் கடவுளை வேண்டுகிறார்.

வசனம் 44:19
"... நொறுங்கும்படி விட்டு விட்டீர்" -
இவ்வாறு தங்களுக்கு நேர்ந்தது, தங்கள் குற்றத்தினால் அல்ல என்பது திருப்பாடகரின் திண்ணிய எண்ணம்.

வசனம் 44:22
உரோமையர் 8:36. மேலும் இவ்வசனங்களை அடிப்படையாகக் கொண்ட அறவுரை, மத்தேயு 5:10-12; 1 பேதுரு 3:13-17, 4:12-16.

பலியிடப் பிரித்தெடுக்கப்பட்ட ஆடுகள்; அவை பழுதற்றவை என்பதை நினைவில் கொள்க. பிழைகளற்ற இஸ்ரயேலர் தங்களைப் பழுதற்ற பலியாடுகளுக்கு ஒப்பிடுகின்றனர்.

வசனம் 44:23
இணை, 35:23, 73:20, 80:2.
இமைப் பொழுதும் தூங்காத (121:4) கடவுளைக் குறித்த நமது எண்ணம். வேற்றுத் தெய்வத்தின் தன்மை, 1 அரசர்கள் 18:27.

தெளிவான புரிதலுக்கு, மாற்கு 4:35-41 பகுதியையும் ஒப்பிடுக. அனைத்தையும் தமது கட்டுப்பாட்டுக்குள் அவர் வைத்திருக்கிறார்; நாமோ அவரைக் குறித்த உணர்வற்று, நம்பிக்கையின்றிப் பிதற்றுகிறோம்.

வசனம் 44:23-24
"ஏன்" என்ற கேள்விகள்; இணை, 42:5&11, 43:5.

வசனம் 44:26
"எழுந்து வாரும்" -
எண்ணிக்கை 10:35; மேலும், 3:7, 7:6.

"உமது பேரன்பை முன்னிட்டு..." -
உடன்படிக்கையின் ஆண்டவராகிய கடவுள், தங்கள் குற்றமற்ற தன்மைக்காக அல்லாது, அவருடைய பேரன்பின் பொருட்டு எழுந்தருள வேண்டுகின்றனர்.
🕎

ஒரு காலத்தில், நமது வழிபாட்டு முறைமைகளில், ஆயரின் அழைப்பு:
"கடவுளே, எங்கள் காதுகளால் நாங்களே கேட்டிருக்கின்றோம்; எங்கள் மூதாதையர் அவர்கள் காலத்திலும் அதற்குமுன்பும் நீர் என்னென்ன செய்துள்ளீர் என்று எங்களுக்கு எடுத்துரைத்தனர்." (44:1)

*சபையாரின் மறுமொழி:*
"எழுந்து வாரும், ஆண்டவரே! எங்களுக்குத் துணை புரியும்; உமது பேரன்பை முன்னிட்டு எங்களை மீட்டருளும்." (44:26)

இவ்வாறு இது இஸ்ரயேலரின் திருப்பாடல் மட்டுமல்ல; நமது தொன்மையான மரபு! (டெரக் கிட்னர்)

✝

## 19 திருப்பாடல் 45

(அரசரின் திருமணப் பாடல்)

*பாடகர் தலைவர்க்கு; லீலி மலர்கள் என்ற மெட்டு; கோராகியரின் அறப் பாடல்; காதல் பாடல்*
1 மன்னரைக் குறித்து
யான் கவிதை புனைகின்ற போழ்து,
இனியதொரு செய்தியால்
என் நெஞ்சம் ததும்பி வழிகின்றது;
திறன்மிகு கவிஞரின் எழுதுகோலென
என் நாவும் ஆகிடுமே!
2 மானிட மைந்தருள்
பேரழகுப் பெருமகன் நீர்;
உம் இதழினின்று
அருள்வெள்ளம் பாய்ந்துவரும்;
கடவுள் உமக்கு என்றென்றும்
ஆசி வழங்குகின்றார்.
3 வீரமிகு மன்ன!
மாட்சியொடு உம் மாண்பும் துலங்கிடவே,
உம் இடையினிலே வீரவாள் தாங்கி வாரும்!
4 உண்மையைக் காத்திட,
நீதியை நிலைநாட்டிட,
மாண்புடன் வெற்றிவாகை சூடி வாரும்!
உம் வலக்கை அச்சமிகு செயல்களை ஆற்றுவதாக!
5 உம்முடைய கணைகள் கூரியன;
மன்னர்தம் மாற்றாரின் நெஞ்சினிலே பாய்வன;
மக்களெல்லாம் உம் காலடியில் வீழ்ந்திடுவர்.
6 இறைவனே,
என்றுமுளது உமது அரியணை;
உமது ஆட்சியின் செங்கோல்
வளையாத செங்கோல்.
7 நீதியே உமது விருப்பம்;
அநீதி உமக்கு வெறுப்பு;
எனவே கடவுள், உமக்கே உரிய கடவுள்,
மகிழ்ச்சியின் நெய்யால்
உமக்குத் திருப்பொழிவு செய்து,
உம் அரசத் தோழரினும் மேலாய்
உம்மை உயர்த்தினார்.

8 நறுமணத் துகள்,
அகிலொடு இலவங்கத்தின்
மணங்கமழும் உம் ஆடையெலாம்;
தந்தம் இழைத்த மாளிகைதனிலே
யாழிசை உம்மை மகிழ்விக்கும்.
9 அருமைமிகு அரசிள மகளிர்
உம்மை எதிர்கொள்வர்;
ஓபீரின் பொன் அணிந்து
வடிவாக வலப்புறம்
நிற்கின்றாள் பட்டத்து அரசி!
10 கேளாய் மகளே!
கருத்தாய்க் காது கொடுத்துக் கேள்!
உன் இனத்தாரை மறந்துவிடு;
பிறந்தகம் மறந்துவிடு.
11 உனது எழிலில்
நாட்டங்கொள்வார் மன்னர்;
உன் தலைவர் அவரே;
அவரைப் பணிந்திடு!
12 தீர் நகர மக்கள்
பரிசில் பல ஏந்தி நிற்பர்;
செல்வமிகு சீமான்கள்
உன்னருள் வேண்டி நிற்பர்.
13 அந்தப்புரத்தினிலே மாண்புமிகு இளவரசி
தங்கமிழைத்த உடையணிந்து தோன்றிடுவாள்.
14 பலவண்ணப் பட்டுடுத்தி
மன்னரிடம் அவளை அழைத்து வருவர்;
கன்னித் தோழியர் புடைசூழ
அவள் அடியெடுத்து வந்திடுவாள்.
15 மன்னவரின் மாளிகைக்குள் நுழையும்போது
அவர்கள் மகிழ்ச்சியோடும் அக்களிப்போடும்
அழைத்து வரப்படுவர்.
16 உம் தந்தையரின் அரியணையில்
உம் மைந்தரே வீற்றிருப்பர்;
அவர்களை நீர் உலகுக்கெலாம்
இளவரசர் ஆக்கிடுவீர்.
17 என் பாடல் வழிவழியாய்
உம் பெயரை நிலைக்கச் செய்யும்;
ஆகையால், எல்லா இனத்தாரும்
உமை வாழ்த்திடுவர்.

திருப்பாடல் 45:1-17

**சிந்தனைக்கு**

*தலைப்பு தரும் செய்தி, அரசரின் திருமணப் பாடல். காதல் பாடல் என்றும் அறப் பாடல் என்றும் தலைப்பு குறிப்பிடுகிறது. தாவீது - மீக்காவின் திருமணமா? சாலமோன் - பரோவாவின் மகள் திருமணமா? பல திருமணங்களில் இப்பாடல் பாடப்பட்டு இருக்கலாம்; ஆனால் முதன்முறையாக யாருக்காகப் பாடப்பட்டது எனத் தெரியாது.*

தலைப்பில், லீலி மலர்கள் என்ற மெட்டு எனத் தரப்பட்டுள்ளது; அது எத்தகைய மெட்டு எனத் தெரியவில்லை. இதே மெட்டில் அமைந்ததுவே, திருப்பாடல் 69.
🕎

அமைப்பு:
வ.1, கவித்துவமான தொடக்கம்
வ.2-9, மணமகனாகிய அரசர்
வ.10-15, மணமகளாகிய இளவரசி
வ.16, மணமக்களின் இளவரசுத் தலைமுறையினர்
வ.17, கவித்துவமான முடிவு
🕎

வசனம் 45:1
நிறைந்த நெஞ்சம், வெளிப்படுத்தும் நா, திறன்மிகு எழுதுகோல் - இவை வடித்த சொற்சித்திரம்; உணர்ச்சிப் பெருக்கில் எழுதியவரின் மனநிலை. இதுபோன்ற மனநிலையைத் திருப்பாடல்கள் நூலில் வேறெங்கும் காணமுடியாது.

வசனம் 45:2
அரசராக அமர்வது மிகப்பெரிய இறையாசி; அது தலைமுறைகளுக்குக் கடந்து செல்வது, மாபெரும் பேறு (வ.16). யூதாவின் அரசருக்கோ, அது தாவீதிய உடன்படிக்கையின் ஆசி.

"மானிட மைந்தருள் பேரழகுப் பெருமகன்" -
எசாயா 33:17, அரசுப் பட்டத்திற்கான ஒரு தகுதி: சவுல், 1 சாமுவேல் 9:2, 10:23; தாவீது, 1 சாமுவேல் 16:12; அப்சலோம், 2 சாமுவேல் 14:25; அதோனியா, 1 அரசர்கள் 1:6.

"இதழினின்று அருள் வெள்ளம் பாய்தல்" -
கடவுளின் அருட் பொழிவு பெற்றவரின் ஓர் அடையாளம்; கிறிஸ்து இயேசுவில் நிறைவேறிய பண்பு, லூக்கா 4:22.

வசனம் 45:3-5
மணமகனான அரசர் தனது வீரத்தால் பல நாடுகளின் மீது பெரும் வெற்றிகளை ஈட்டியவர்.

வசனம் 45:3-4
மாட்சியும் மாண்பும் (வ.3) ஆண்டவருக்கு உரியன, 96:6, 111:3. அதுபோலவே உண்மையும் நீதியும், 72:1-4. ஆற்றல்மிகு அருஞ்செயல்களும் கடவுளுக்கே உரியன, 65:5, 96:3-4.

இவை அனைத்திலும் அரசன் கடவுளின் பிரதிநிதியாகவே அன்றைய காலங்களில் பார்க்கப் பட்டான் (வ.6-7).

வசனம் 45:6-7
மானிடர் நடுவே அரசன் கடவுளைப் போல மாண்பும் மாட்சியும் உடையவன்.
உடனே நிறைவேறிய இறைவாக்கு எனில், அது சாலமோனின் வாழ்வில், 1 குறிப்பேடு 28:5, 29:23.

கிறிஸ்து இயேசுவுக்கு நிறைவேறிய இறைவாக்கு: எபிரேயர் (1:8-9) திருமுகத்தை எழுதியவர், இவ்வசனங்களை எடுத்தாண்டு, இறைமகன் இயேசு வான்தூதரை விட மேலானவர் என்பதை மெய்ப்பிக்கிறார். தாவீதின் வழிவந்தோரில் கிறிஸ்து இயேசு சாலமோனை விடவும் மேலானவர் அல்லவா! (மத்தேயு 12:42).

வசனம் 45:7
"நீதியே உமது விருப்பம்; அநீதி உமக்கு வெறுப்பு" -
எதனை நாம் விரும்புகிறோமோ, அதற்கு எதிரானதை நாம் வெறுக்கிறோம். நீங்கள் நீதியை விரும்பினால், ஒடுக்குமுறையை எதிர்க்க வேண்டும். வாய்மையை விரும்பினால், கயமையை எதிர்க்க வேண்டும். இரக்கத்தை விரும்பினால், கொடுமை கண்டு பொங்க வேண்டும். நாட்டில் இன்றைக்கு நடப்பது, நீதியா? வாய்மை ஆள்கிறதா? இரக்கத்தின் செயல்கள் நடக்கின்றனவா? ஆதிக்க சக்திகள் நம்மையும் குறிவைத்து விட்டார்களே! நமது மறுமொழி என்ன?

வசனம் 45:8-9
அரசரின் திருமண மேன்மை.

வசனம் 45:9
"ஓபிர்" -
குறிப்பேடு நூலில் இது குறித்துப் பார்த்தோம் (2 குறிப்பேடு 8:17-19). இந்நிலப் பகுதி எங்கிருந்தது என்று தெரியவில்லை; அந்நாட்களில் தரமிக்க பொன் இங்கே கிடைத்தது.

வசனம் 45:10-12
பட்டத்து அரசியின் புதிய உயரிய நிலை; அவள் அரசரின் அடையாளம். அவருக்குரிய மாண்பும் புகழ்ச்சியும் அவளுக்கும் உரியவை. தாவீது மற்றும் சாலமோன் காலத்தில் சிறந்த வணிக நகரான தீர் இங்கு ஒரு குறியீடு; பன்னாட்டவரும் செல்வமிக்கோரும் அரசியின் ஒப்புதலுக்காகக் காத்திருப்பர். (இன்றைய கிச்சன் கேபினட் என்று சொல்லலாமா!!!)

வசனம் 45:10
மணமகளாக வரும் இளவரசி வேற்றினப் பெண்.
சாலமோன் வேற்று நாட்டுப் பெண்களை மணந்தவர் என்பது நினைவில் கொள்ளத்தக்கது (1 அரசர்கள் 11:1).

வசனம் 45:14
"பல வண்ணப் பட்டு" -
பல வண்ணப் பின்னலாடை.

எல்லாக் காலங்களிலும் மணமகளின் ஆடைகள் மேன்மைப் பட்டிருக்கின்றன; மணமகளின் பிறந்த வீட்டுப் பெருமையைப் பறைசாற்றுவன அவை. இதுபோன்ற தொன்மையான வழக்கங்களிலிருந்து நாம் மீட்படைவது எப்போது? பெருமை கடவுளுக்கு அருவருப்பு.

வசனம் 45:17
"என் பாடல் ... உம் பெயரை ..." -
எழுதியவர் யார் என்பதும் தெரியாது; யாரைக் குறித்து எழுதப்பட்டது என்பதும் தெரியாது. ஆனால், மேசியாவின் தொடர்பில் திருப்பாடல் நிலைத்து விட்டது! அதுவே இதன் சிறப்பு!

✝

## 19 திருப்பாடல் 46

*(நம்மோடு வாழும் கடவுள்)*

*பாடகர் தலைவர்க்கு; கோராகியரின் பாடல்; இளமகளிர் என்ற மெட்டு*

1 கடவுள் நமக்கு
அடைக்கலமும் ஆற்றலுமாய் உள்ளார்;
இடுக்கணுற்ற வேளைகளில்
நமக்கு உற்ற துணையும் அவரே.
2 ஆகையால்,
நிலவுலகம் நிலைகுலைந்தாலும்,
மலைகள் ஆழ்கடலில்
அதிர்ந்து நடுங்கினாலும்,
3 கடலின் அலைகள்
கொந்தளித்துப் பொங்கினாலும்,
அவற்றின் பெருக்கால் குன்றுகள்
அதிர்ந்து நடுங்கினாலும்
எங்களுக்கு அச்சமென்பதே இல்லை.
(சேலா)
4 ஆறு ஒன்று உண்டு,
அதன் கால்வாய்கள்
உன்னதரான கடவுளின்
திரு உறைவிடமான நகருக்குப்
பேரின்பம் அளிக்கின்றன.
5 அந்நகரின் நடுவில்
கடவுள் இருக்கின்றார்;
அது ஒருபோதும் நிலைகுலையாது;
வைகறைதோறும் கடவுள் துணை
அதற்கு உண்டு.
6 வேற்றினத்தார் கலக்கமுற்றனர்;
அரசுகள் ஆட்டம் கண்டன;
கடவுளின் குரல் முழங்கிற்று;
பூவுலகம் கரைந்தது.
7 படைகளின் ஆண்டவர்
நம்மோடு இருக்கின்றார்;
யாக்கோபின் கடவுளே
நமக்கு அரண். (சேலா)
8 வாரீர்!
ஆண்டவரின் செயல்களைக் காணீர்!
அவர் உலகில் ஆற்றியுள்ள
திகைப்பூட்டும் நிகழ்ச்சிகளைப் பாரீர்!
9 உலகின் கடையெல்லைவரை
போர்களைத் தடுத்து நிறுத்துகின்றார்;
வில்லை ஒடிக்கின்றார்;
ஈட்டியை முறிக்கின்றார்.
தேர்களைத் தீக்கு இரையாக்குகின்றார்.
10 "அமைதி கொண்டு,
நானே கடவுள்
என உணர்ந்து கொள்ளுங்கள்;

வேற்றினத்தாரிடையே
நான் உயர்ந்திருப்பேன்;
பூவுலகில் நானே
மாட்சியுடன் விளங்குவேன்."
11 படைகளின் ஆண்டவர்
நம்மோடு இருக்கின்றார்;
யாக்கோபின் கடவுளே
நமக்கு அரண்.

திருப்பாடல் 46:1-11

**சிந்தனைக்கு**

பாடலின் தலைப்பில் miz-more என்ற சொல்லுக்கு மாற்றாக, sheer என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது; இதுவும் பாடல் என்றே பொருள் படும்; இச் சொல், திருப்பாடல்கள் 18, 30, 68, 134 & 149 தலைப்புகளிலும் காணப்படுகிறது. தலைப்பில் காணப்படும் புதிய சொல்: al-aw-moth; இச்சொல் 1 குறிப்பேடு 15:20லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருளை உறுதி செய்ய முடியவில்லை; உச்ச தொனியில் இசைக்கப்படும் இசை என்று ஸ்பர்ஜின் பொருள் கொள்கிறார். இதற்குச் சிறுமியர் என்றும் பொருள் கொள்ளலாம்; அதன் அடிப்படையில், தம்புரு இசைத்துப் பெண்கள் பாடும் பாடல் என்று சிலர் கருதுகின்றனர். இது ஒரு பண் ஆகவும் இருக்கலாம்.

தூய கடவுளின் நகரான எருசலேமைக் கொண்டாடும் சீயோன் மலைத் திருப்பாடல்களில் இப்பாடலும் ஒன்று; இவ்வரிசையில் இதர பாடல்கள்: 48, 76, 84, 87 & 122.

46 முதல் 48 வரை அமைந்த திருப்பாடல்கள் இயற்கை மற்றும் எதிரிகளின் தாக்குதலிலிருந்து தங்களை விடுவிக்கிற கடவுளின் இறையாண்மையைப் போற்றும் பாடல்களாக உள்ளன. வரலாற்றுக் குறிப்பு ஏதும் தலைப்பில் இல்லை, எனினும் எசேக்கியா அரசரின் காலத்தில் நடந்த நிகழ்வுகளை (2 அரசர்கள் 18 ~ 19) வேத அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இயற்கைச் சீற்றங்கள் (வ.1-3) மற்றும் வேற்றின மக்களின் சீற்றம் (வ.6-9) இவற்றிலிருந்து பாதுகாப்பவராகத் தம் மக்களின் நடுவே வாழும் கடவுள் இருக்கிறார் என்பதே இத்திருப்பாடல் அறிவுறுத்தும் செய்தி.
🕎

அமைப்பு:
வ.1-3, அடைக்கலம் அருளும் வாழும் கடவுள் மீது பற்றுறுதி
வ.4-7, முன்னேறி வரும் எதிரிகள் நடுவே, தங்களைப் பாதுகாக்கும் கடவுள் மீது பற்றுறுதி
வ.8-11, தங்களைப் பாதுகாக்கும் கடவுளின் இறையாண்மையைப் போற்றுதல்.

இப்பாடலின் இடையே வரும் சேலா எனும் சொற்கள், இயல்பாகவே இப்பாடலை மூன்று பகுதிகளாகப் பிரிக்கின்றன. சில மூலப் படிகளில், இறுதியாக ஒரு சேலா இடம் பெறுகிறது.
🕎

வசனம் 46:1
"அடைக்கலமும் ஆற்றலும்..." -
வலுவற்றவைக்கு அடைக்கலம் மிக மிக அவசியம், வரையாடு, குழி முயல் (104:18); குறுமுயல் (நீதிமொழிகள் 30:26). அதுபோலவே, வலுவற்ற மனிதருக்கு ஆற்றல்மிகு ஆண்டவர், எசாயா 25:4.

இத்திருப்பாடலை அடியொற்றி "A Mighty Fortress is Our God" என்னும் பாமாலையை இயற்றிய மார்டின் லூத்தர், கடும் துயர வேளைகளில் சொல்வாராம்: "நாம் ஒருமித்து 46ம் திருப்பாடலைப் பாடுவோம்; அலகை தனக்கு இயன்ற மோசமானதைச் செய்யட்டும்" என்று! (ஜான் டிரெப் என்பாரின் குறிப்பு).

"உற்ற துணை" -
OV, அனுகூலமான துணை; KJV / ESV, very present help; எபிரேயத்தில் meh-ode & maw-tsaw என்கிற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன; விரைந்து செயல்படும் துணையாளர் என்று பொருள் கொள்ள முடியும். "என் அடி சறுக்குகின்றது" என்று நாம் சொன்ன போதே, நம்மைத் தாங்கும் பேரன்பர் அவரல்லவா!

வசனம் 46:2-3
பார்க்க, 23:4, 27:1.
பேரச்சமூட்டும் இயற்கைச் சீற்றங்கள்; என்ன நேரிடினும், "நானஞ்சேன், நானஞ்சேன், என் இயேசு என்னோடிருப்பதால்" என்று பாடிக் கொண்டே நாம் கடந்து செல்லலாம்.

வசனம் 46:4
உலகின் தொன்மையான நகர்கள் பேராறுகளின் கரைகளில் அமைந்தவை. குன்றுகளின் நகரான எருசலேமிலோ ஆறு எதுவும் கிடையாது.

ஆனால், கீஹோன் ஊற்றிலிருந்து சீலோவாம் குளத்திற்கு நீர் எடுத்து வரும் எசேக்கியா அரசரின் காலக் குகைக் கால்வாய் இங்குக் குறிப்பிடப்படுகிறது.

வசனம் 46:5
"வைகறை தோறும் கடவுள் துணை" -
பார்க்க, எசாயா 37:36: விடியல் தோறும் விடுதலை!

வசனம் 46:6
முழங்கும் கடவுளின் குரல், பார்க்க, திருப்பாடல் 29.

"பூவுலகம் கரைந்தது" -
பார்க்க, 97:4-5.

வசனம் 46:7 & 11
"யாக்கோபின் கடவுள்" -
உருவகமாக, நாடாகிய இஸ்ரயேலின் கடவுள்.

வசனம் 46:8
பாலைவெளியில் வேற்றின மக்கள் கண்டு அஞ்சும் வண்ணம், இஸ்ரயேலரிடையே கடவுள் நிகழ்த்திய அருஞ் செயல்கள் மீண்டும் நினைவூட்டப்படுகின்றன.

வசனம் 46:10
திருப்பாடகருக்கு முன்னுரைத்ததை (15:5), தமது வாய்மொழியால் உறுதி செய்யும் கடவுள்.

தம் மக்களின் துதிகளுக்கும் மன்றாட்டுகளுக்கும் கடவுள்தம் அருஞ் செயல்களால் மறுமொழி, 22:17, 47:9, 57:11, 64:9, 65:8, 66:1-7, 67:2-7, 89:13, 108:5-6, 118:16; மேலும், உலகின் அரசராகிய கடவுளின் திருப்பாடல், 47.

வசனம் 46:11
இணை வ.7
வ.7 முடிந்தவுடன் சேலா என்று வருகிறது; வ.11, இறுதி வசனமாக உள்ளது; இந்த அமைப்பைப் பார்க்கும்போது, இவ்விரு வசனங்களும், பாடகர் குழுவினர் உச்ச தொனியில் பாடும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்கலாம்; அல்லது சபையார் எல்லாரும் ஆர்ப்பரித்துப் பாடுவதாக அமைக்கப்பட்டிருக்கலாம்.

*ஆனந்த தொனியில் சபையார் அனைவரும் ஆர்ப்பரித்துப் பாடுவதே பெருமகிழ்ச்சி அன்றோ!*

✝

## 19 திருப்பாடல் 47

*(ஆண்டவரே உலகின் அரசர்)*

*பாடகர் தலைவர்க்கு; கோராகியரின் புகழ்ப்பா*
1 மக்களினங்களே,
களிப்புடன் கைகொட்டுங்கள்;
ஆர்ப்பரித்துக் கடவுளைப்
புகழ்ந்து பாடுங்கள்.
2 ஏனெனில், உன்னதராகிய ஆண்டவர்
அஞ்சுதற்கு உரியவர்;
உலகனைத்தையும் ஆளும்
மாவேந்தர் அவரே;
3 வேற்று மக்களை
நமக்கு அடிபணியச் செய்தவர்;
அன்னிய நாடுகளை
நம் தாள் பணிய வைத்தார்.
4 நம் உரிமைச் சொத்தை
அவர் நமக்குத் தேர்ந்து அளித்தார்;
அது அவர் அன்புகூரும்
யாக்கோபின் பெருமை ஆகும்.
(சேலா)
5 ஆரவார ஒலியிடையே
பவனி செல்கின்றார் கடவுள்;
எக்காளம் முழங்கிடவே
உயரே ஏறுகின்றார் ஆண்டவர்.
6 பாடுங்கள்;
கடவுளுக்குப் புகழ் பாடுங்கள்;
பாடுங்கள்,
நம் அரசருக்குப் புகழ் பாடுங்கள்.
7 ஏனெனில், கடவுளே
அனைத்து உலகின் வேந்தர்;
அருட்பா தொடுத்துப் புகழ் பாடுங்கள்.
8 கடவுள் பிறஇனத்தார் மீது
ஆட்சி செய்கின்றார்;
அவர்தம் திரு அரியணையில்

வீற்றிருக்கின்றார்.
9 மக்களினங்களின் தலைவர்கள்
ஆபிரகாமின் கடவுளுடைய
மக்களோடு ஒன்றுகூடுவர்;
ஏனெனில், மண்ணுலகின்
மன்னர் அனைவரும்
கடவுளின் கொற்றத்திற்கு உட்பட்டவர்;
கடவுளே அனைத்திற்கும் மேலானவர்.

திருப்பாடல் 47:1-9

**சிந்தனைக்கு**

எழுதியவர் குறித்த குறிப்பு எதுவும் தலைப்பில் இல்லை. அதுபோலவே, வரலாற்றுக் குறிப்பு ஏதும் இல்லை; மோவாபியரோடு அணிதிரண்ட அம்மோனியர், ஏதோமியர் மற்றும் ஏனைய படையினரை வென்ற யோசபாத்தின் வெற்றிப் பாடல் இது என்று பைபிள் ஆய்வாளர்கள் கருதுகின்றனர் (2 குறிப்பேடு 20). இப்போரில் லேவியரின் பங்களிப்பு சிறப்பான ஒன்று (2 குறிப்பேடு 20:13-19). படைகளோடு கோகாத்தியரும் கோராகியரும் இருந்ததை 2 குறிப்பேடு 20:19ல் வாசிக்கிறோம். கடவுளுக்குப் புகழ்ச்சிப் பாடல் பாடி, பெராக்கா பள்ளத்தாக்கிலிருந்து திரும்பி, இசைக்கருவிகள் இசைத்தவாறு ஆண்டவரின் இல்லம் நுழைந்தனர் என்று (வ.5 & 2 குறிப்பேடு 20:26-28) பார்க்கிறோம். பின்னாட்களில் யூதப் புத்தாண்டுக் கூடுகையில் ஏழு முறை (!) பாடப்படும் திருப்பாடலாக இப்பாடல் திகழ்ந்தது என்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். நமது திருச்சபையில், கிறிஸ்து இயேசுவின் பரமேறுதலின் நினைவில் பாடப்படும் திருப்பாடலாக இப்பாடல் விளங்குகிறது.

அமைப்பு:
வ.1-4, வெற்றி வேந்தராகக் கடவுள்
வ.5-9, அனைத்துலகை ஆள்பவராகக் கடவுள்.

9 வசனங்களில் மீண்டும் மீண்டும் வரும் சொற்கள் -
* மக்கள் / நாடுகள், வ.1, 3, 8 & 9
* உலகு, வ.2, 7 & 9
* அரசர் / வேந்தர், வ.2, 6, 7 & 8

- இவ்வாறு இறையாண்மையோடு உலகனைத்தையும் ஆளுகை செய்பவர் கடவுளே என்பதை இத்திருப்பாடல் அறிவுறுத்துகிறது. கடவுளே அனைத்து உலகின் அரசர் என்று புகழ்ந்து பாடும் இதர திருப்பாடல்கள், 93-99 & 145.

வசனம் 47:1
"மக்களினங்களே" -
OV, சகல ஜனங்களே
KJV, all ye people
- KJV நீங்கலாகப் பல மொழிபெயர்ப்புகளும் எல்லா மக்களினங்களையுமே (peoples) இங்குக் குறிப்பிடுகின்றன. இப்பாடல் இஸ்ரயேலுக்கு வெற்றியை அருளிய கடவுளையே புகழ் பாடுகிறது, பார்க்க, வ.3. இஸ்ரயேலின் வெற்றியில் தொடங்கி, கடவுளே அனைத்து உலகின் வேந்தர் என்று பயணிக்கிறது.

"*கைகொட்டுங்கள்*" -
*கடவுளைப் புகழ்ந்து பாட இயல்பான, எளிமையான, உற்சாகமான வழிமுறை.*

*வசனம்* 47:2
*இஸ்ரயேலரோடு கடவுள் செய்து கொண்ட உடன்படிக்கையின் பெயராகிய ஆண்டவர் / யாவே; திருப்பாடல்கள் நூலின் இரண்டாம் தொகுதியில் அருகிப் பயன்படுத்தப்படும் இத்திருப் பெயர், இத்திருப்பாடலில் இரண்டு முறை வருகிறது. இஸ்ரயேலின் அரசர் என்று வரும் அனைத்துப் பாடல்களிலும், இப்பெயரே சிறப்பிடம் பெறுகிறது.*

*வசனம்* 47:3-4
*வெற்றிக் களிப்பின் ஆரவார முழக்கம். வரலாற்றின் பல தருணங்களில், இஸ்ரயேலுக்குத் தமது ஆற்றல்மிகு செயல்களால் எதிரிகளிடமிருந்து மீண்டும் மீண்டும் விடுதலையை அருளி, தமது அன்பை ஆண்டவர் வெளிப்படுத்துகிறார்* (18:40-50).

*வசனம்* 47:4
"*அவர் அன்புகூரும்...*" -
*தாம் தேர்ந்து கொண்டோர் மீது கடவுள் அன்புகூர்ந்தார்* (135:4; *இணைச் சட்டம்* 7:6; *எபேசியர்* 1:4; 1 *பேதுரு* 1:2); *அந்த அன்பு, அவருடைய திருமைந்தர் மீது நம்பிக்கை கொள்ளும் அனைவருக்குமானது* (*யோவான்* 3:16).

"*நம் உரிமைச் சொத்து*" -
105:11, 135:12.
*வாக்களிக்கப்பட்ட கானான் நிலப் பரப்பு.*

*வசனம்* 47:5-6
*வெற்றி வேந்தராகத் தமது திருத்தூயகம் திரும்பும் கடவுள்; அவரது அடியாரின் களிப்பும் ஆர்ப்பரிப்பும் இசைக்கருவிகளின் ஓசையும் புகழ்ச்சிப் பாடல்களும் அவருடைய மாட்சியை அறிவிக்கின்றன.*

*வசனம்* 47:7
"*அருட்பா*" -
mas-keel; *அறவுரைப் பாடல்* (*பார்க்க,* 44 *மற்றும்* 12 *திருப்பாடல் தலைப்புகள்*).

*வசனம்* 47:8
"*அவர் தம் திரு அரியணையில் வீற்றிருக்கின்றார்*" -
*பார்க்க, எரேமியா* 17:12.

*திருவெளிப்பாடு நூலில்* (4:9&10, 5:1&7&13, 6:16, 7:10&15, 19:4) *மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தப்பட்ட காட்சி இதுவே.*

*வசனம்* 47:9
*ஆபிரகாமிய உடன்படிக்கையை* (*தொடக்க நூல்* 12:1-3) *நினைவூட்டும் இறைவாக்கு; கிறிஸ்து இயேசுவில் நிறைவேறிய இறைவாக்கு* (*தொடக்க நூல்* 15:5-6 & *கலாத்தியர்* 3:5-8; *உரோமையர்* 4:12).

*கடவுளுக்கு எதிராகவும், அவர் அருட் பொழிவு செய்தவருக்கு எதிராகவும் சீற்றம் கொண்டு திரண்ட பூவுலகின் அரசர்கள்* (2:1-3), *தங்கள் அனைவருக்கும் மேலானவர் கடவுளே என்பதை உணர்ந்து, திரு அரியணையில் வீற்றிருக்கும் அவரைப் பணிந்து கொள்ள ஒன்று கூடுவர்.*

*அத்தகைய இறையாட்சி இவ்வுலகில் நிலைபெற, நாம் மன்றாடுவதும் செயல்படுவதும் நமது கடமையாகும். நீங்கள் எதற்காக ஜெபிக்கிறீர்கள்?*

✝

## 19 திருப்பாடல் 48

*(கடவுளின் திருநகர்)*

*கோராகியரின் புகழ்ப்பா*
1 *ஆண்டவர் மாண்பு மிக்கவர்;*
*நம் கடவுளின் நகரில்,*
*அவரது திருமலையில்*
*மிகுந்த புகழுக்கு உரியவர்.*
2 *தொலை வடக்கில்*
*திகழும் சீயோன் மலை*
*அனைத்து உலகிற்கும்*
*மகிழ்ச்சியால் இலங்குகின்றது;*
*மாவேந்தரின் நகரும் அதுவே.*
3 *அதன் அரண்மனைகளில்*
*கடவுள் வீற்றிருந்து,*
*தம்மையே அதன் கோட்டை*
*எனக் காட்டியுள்ளார்.*
4 *இதோ! அரசர் அனைவரும்*
*ஒன்று கூடினர்;*
*அணிவகுத்து ஒன்றாக வந்தனர்;*
5 *அந்தோ! பார்த்ததும் திகைத்தனர்;*
*திகிலடைந்து ஓட்டம் பிடித்தனர்.*
6 *அங்கே அச்சம்*
*அவர்களை ஆட்கொண்டது;*
*பேறுகாலப் பெண்போல்*
*அவர்கள் துடிதுடித்தனர்.*
7 *தர்சீசுக் கப்பல்களைக்*
*கீழைக் காற்றினால்*
*நீர் தகர்த்தெறிகின்றீர்.*
8 *கேள்விப்பட்டவாறே*
*நேரில் யாம் கண்டோம்;*
*படைகளின் ஆண்டவரது நகரில்,*
*ஆம், கடவுளின் நகரினில் கண்டோம்;*
*கடவுள் அந்நகரை எந்நாளும்*
*நிலைத்திருக்கச் செய்வார்.*
(*சேலா*)
9 *கடவுளே!*
*உமது கோவிலின் நடுவில்*
*உம் பேரன்பை நினைந்து உருகினோம்.*
10 *கடவுளே!*
*உமது பெயரைப் போலவே*

உமது புகழும் பூவுலகின்
கடை எல்லைவரை எட்டுகின்றது;
உமது வலக்கை
நீதியை நிலைநாட்டுகின்றது.
11 சீயோன் மலை மகிழ்வதாக!
யூதாவின் நகர்கள்
உம் நீதித்தீர்ப்புகளை முன்னிட்டு
அக்களிப்பனவாக!
12 சீயோனை வலம் வாருங்கள்;
அதைச்சுற்றி நடைபோடுங்கள்;
அதன் காவல் மாடங்களை
எண்ணிக்கையிடுங்கள்.
13 அதன் மதில்களைக்
கவனித்துப் பாருங்கள்;
அதன் கோட்டைகளைச்
சுற்றிப் பாருங்கள்;
அப்பொழுது,
இனிவரும் தலைமுறைக்கு
இதை உங்களால் விவரிக்க இயலும்.
14 'இத்தகைய கடவுளே
என்றென்றும் நம் கடவுள்;
அவரே நம்மை
இறுதிவரை வழி நடத்துவார்.'

திருப்பாடல் 48:1-14

**சிந்தனைக்கு**

"பாடலைக்" குறிக்கத் தலைப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேயச் சொல், sheer, பாடல், பாடல்கள், இசை, பாடகர் என்றெல்லாம் பொருள் கொள்ளலாம்; பயன்பாட்டு அடிப்படையில், களிப்போடு பாடப்படும் புகழ்ச்சிப் பாடல் என்று இதனைச் சொல்ல முடியும் (சான்றாக, 18, 30, 68, 134 ஆகிய திருப்பாடல்களில், அவற்றின் தலைப்புகளில்; விடுதலைப் பயணம் 15:1; எண்ணிக்கை 21:17; நீதித் தலைவர்கள் 5:12; 2 சாமுவேல் 22:1).

திருப்பாடல் 46ன் நீட்சியாக இத்திருப்பாடல் விளங்குகிறது; "இஸ்ரயேலரோடு வாழும் கடவுள்" என்பதிலிருந்து "அவர் வாழும் திருநகர்" என்று தொடர்கிறது. திருப்பாடல் 47டனும் இப்பாடல் தொடர்புடையது: உலகின் மாவேந்தர் உறையும் திருநகர், சீயோன் நகர். இதர சீயோன் நகர்ப் பாடல்கள்: 46, 76, 87, 122.

அமைப்பு:
வ.1-3, கடவுளே எருசலேமின் பாதுகாப்பு
வ.4-7, நகரை முற்றுகையிட்ட எதிரிகளுக்கு நேர்ந்தவை
வ.8-13, திருநகரில் உறையும் கடவுள் அருளும் பாதுகாப்பு
வ.14, கடவுள் மீது பற்றுறுதி

சீயோன் மலையில் இலங்கும் திருநகராகிய எருசலேமை மேன்மைப்படுத்தும் பாடல் என்றாலும், அங்கு உறையும் ஆண்டவரின் புகழ்ச்சிப் பாடலாகவே தொடங்கி அவ்வாறே

நிறைவடைகிறது. இவ்வாறு, திருப்பாடல்கள் மூன்றும் (46, 47 & 48) கடவுளுக்கான புகழ்ப்பாக்களாக விளங்குகின்றன.

வசனம் 48:1
"மாண்பு மிக்கவர்" -
95:3, 145:3.
"நம் கடவுள்" -
தொடக்கமும் முடிவுமாக இத்திருப்பாடலில். ஒப்பிட்டுப் பார்க்க, 2:6.

வசனம் 48:2
"... சீயோன் மலை அனைத்து உலகிற்கும் மகிழ்ச்சி" -
திருப்பாடல்களில் வலியுறுத்தப்படும் கருப்பொருள், 68:29, 102:22, 122:6. எருசலேமின் பிந்தைய நிலையும் நினைவில் கொள்ளத் தக்கது, புலம்பல் 2. அதுபோலவே, கிறிஸ்து இயேசு எருசலேமைப் பற்றிக் கூறிய சொற்களை நாம் நினைவில் கொள்வதும், அந்நகருக்காக நாம் வேண்டுதல் செய்வதும், நமது கடமை (மத்தேயு 23:37; லூக்கா 13:34).

"மாவேந்தரின் நகர்" -
கிறிஸ்து இயேசுவின் சொற்களாக, மத்தேயு 5:35. மண்ணுலகில் இறைப் பிரசன்னத்தின் தளமாக, கடவுளின் இல்லம் இருந்த எருசலேம் சுட்டப்படுகிறது. இஸ்ரயேலர் குவிந்த எருசலேம், இறுதி நாட்களில் பற்றுறுதியாளர் அணிதிரளும் தளமாகவும் (எசாயா 2:2-22), அவர்கள் நடுவே கடவுள் வாழும் தளமாகவும் விளங்கும் (திருவெளிப்பாடு 21:2-3).

"தொலை வடக்கில் திகழும்..." -
வடக்கு என்பதற்கு இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேயச் சொல், Zaphon (tsaw-fone) / சாபோன்; வடக்கில் பாகால் குடியிருக்கும் மலை எனப்பட்ட ஒரு மலையின் பெயர். இறையியல் பார்வையில், கானானியத் தெய்வங்களுக்கு மேலாக எழுந்து, சீயோனில் அமர்ந்திருக்கும் கடவுளாகிய ஆண்டவர் எனப் பொருள் கொள்ளலாம். கூடுதலாக வாசிக்க, எசாயா 14:13.

வசனம் 48:3
எருசலேமின் மேன்மை அதன் அரண்மனைகளில் இல்லை; அதற்குப் பாதுகாப்பாக உறைந்துள்ள கடவுளில் உள்ளது.

வசனம் 48:4-7
எருசலேமுக்கு எதிராகத் திரண்டு, நகரை முற்றுகையிட்ட எதிரிகளுக்கு நேர்ந்தவை; வரலாறு இதற்குச் சான்று தரும் வேளையில், இக்காட்சி திருப்பொழிவு பெற்றவரையும், அதற்குப் பிந்தைய நிகழ்வுகளையும் (2 & 110) நினைவூட்டுகிறது.

வசனம் 48:6
"பேறு காலப் பெண் போல" -
அச்சமும் வலியும் திடீரென, தவிர்க்க முடியாதபடி, அளவற்றதாக எதிரிகளுக்கு நேர்ந்தது.

வசனம் 48:7
"தர்சீசுக் கப்பல்கள்" -
அரிய விலைமதிப்புடைய பெருமைக்குரிய செல்வங்களைச் சுமந்து வரும் கப்பல்கள். நெடுந் தொலைவு பயணிக்கும் வகையில் சிறந்த கப்பல்கள் அந்நாட்களில், தர்சீசு நகருக்கு வந்து

சென்றன; தர்சீசு மத்திய தரைக்கடலில் இருந்ததாக பைபிளில் பார்க்கிறோம் (எசாயா 23:1); ஆனால் அதன் அமைவிடத்தை உறுதிப்படுத்த வரலாற்றுச் சான்றுகள் இல்லை.

வசனம் 48:8
"கேள்விப்பட்டவாறே..."-
பார்க்க, 44:1.
படைகளின் ஆண்டவருடைய அருஞ்செயல்களை வழி வழியாகக் கேட்டு வளர்ந்த தலைமுறையினர், இப்போது தங்கள் கண்களால் கண்டனர்.

"கடவுள் அந்நகரை எந்நாளும் நிலைத்திருக்கச் செய்வார்" -
வரலாற்றில் மீண்டும் மீண்டும் அழிக்கப்பட்ட ஒரு நகர், மீண்டும் மீண்டும் கட்டி எழுப்பப்பட்ட நகர், எருசலேம். அந்நகர் நிலைத்திருக்கும் என்பது புதிய எருசலேமைக் குறித்தது (திருவெளிப்பாடு 21).

வசனம் 48:9
கடவுளின் அருஞ்செயல்களால் அவரது பேரன்பை உணர்ந்து அதற்குள் கரைந்து போன இறையடியார்.

வசனம் 48:10
பார்க்க, 2 குறிப்பேடு 20:29. கடவுளின் அருஞ்செயல் குறித்த செய்தி எவ்வளவு விரைவாகச் செல்கிறது!

வசனம் 48:11-13
நகர்கள் அனைத்திலும் எருசலேமே மிளிரும் விண்மீன்; ஏனெனில் அதுவே ஆண்டவரின் நகர்; கடவுளின் கண்கள் எப்போதும் அந்நகரை நோக்கி இருக்கின்றன. தூசும் சாம்பலுமாகத் தாழ்த்தப்பட்டாலும், பூவுலகின் சிறப்பான நகராக அது உயரும் (எசாயா 62:6-7; மீக்கா 4:8).

வசனம் 48:11
"யூதாவின் நகர்கள்" -
OV, யூதாவின் குமாரத்திகள்;
உருவகமாக, பல மொழிபெயர்ப்புகள் யூதாவின் நகர்கள் அல்லது ஊர்கள் என்று பொருள் கொண்டுள்ளன.

வாக்களிக்கப்பட்ட நாட்டின் தென்பகுதி யூதாவுக்கென்று பிரிக்கப்பட்டது (யோசுவா 15). யூதாவின் சிறப்புகள் மட்டுமே இங்கு பேசப்படுவதால், தென்னாடு தனித்த அரசாட்சி அமைப்பாகப் பிரிந்த பிறகு இப்பாடல் எழுதப்பட்டது என்று விளங்கிக் கொள்ளலாம்.

வசனம் 48:12-13
எதிரிகளின் முற்றுகைக்குப் பின்னர், நகர் எந்த அளவுக்குக் கடவுளால் பாதுகாக்கப்பட்டுள்ளது என்று கண்டு உணர அழைப்பு.

நமது வாழ்வின் இடர்களிலிருந்து கடவுள் நம்மை மீட்டுவரும் வேளைகளில், நாம் எத்தகைய ஆபத்துகளிலிருந்து பாதுகாப்பாகத் தப்பிப் பிழைத்துள்ளோம் என்பதை நாம் ஆய்வு செய்திருக்கிறோமா?

வசனம் 48:14
"இத்தகைய கடவுளே என்றென்றும் நம் கடவுள்" -

*ஒப்பாரும் மிக்காரும் இல்லா ஆண்டவர்,* 35:10, 71:19, 86:8, 89:6&8, 113:5; *எசாயா* 40:18&25.

"*இறுதிவரை வழி நடத்துவார்*" -
*மரணம் வரை; நமது மேய்ப்பராக அவர் நம்மை வழிநடத்துவார்,*
5:8, 23:2, 77:20, 95:7.

*இவ்வசனத்தை, சகோதரி சாராள் நெளரோஜி ஒரு பல்லவியாக எடுத்தாண்டதை நாம் அறிவோம். ஆம், மரண பரியந்தம் நம்மை நடத்திடுவார்! அதன் பிறகும் அவரோடு நிலைவாழ்வில் இணைந்திருப்போம்!*

✝

## 19 திருப்பாடல் 49

*(செல்வம் பயனற்றது)*

*பாடகர் தலைவர்க்கு; கோராகியரின் புகழ்ப்பா*
1 *மக்களினங்களே!*
*அனைவரும் இதைக் கேளுங்கள்;*
*மண்ணுலகில் வாழ்வோரே,*
*யாவரும் செவிகொடுங்கள்.*
2 *தாழ்ந்தோரே, உயர்ந்தோரே,*
*செல்வர்களே, ஏழைகளே,*
*அனைவரும் ஒருங்கே செவிகொடுங்கள்.*
3 *என் வாய்*
*ஞானமிகு சொற்களை உரைக்கும்;*
*என் மனம்*
*விவேகமானவற்றை*
*ஆழ்ந்து சிந்திக்கும்.*
4 *நீதிமொழிக்குச் செவிசாய்ப்பதில்*
*நான் கருத்தாய் உள்ளேன்;*
*யாழிசைத்து அதன் புதிரை விடுவிப்பேன்.*
5 *துன்பக்காலத்தில் நான் அஞ்சுவானேன்?*
*என்னை வளைத்துக்கொண்டு*
*கொடுமைப்படுத்தும் வஞ்சகர்க்கு*
*நான் அஞ்சுவானேன்?*
6 *தம் செல்வத்தில்*
*நம்பிக்கை வைத்திருக்கின்றவரோ*
*தம் செல்வப்பெருக்கைக் குறித்துப்*
*பெருமையாகப் பேசுகின்றனர்.*
7 *உண்மையில்,*
*தம்மைத்தாமே மீட்டுக்கொள்ள*
*எவராலும் இயலாது;*
*தம் உயிரை மீட்க எதையும்*
*கடவுளுக்குத் தர இயலாது.*
8 *மனித உயிரின்*

ஈட்டுத் தொகை மிகப் பெரிது;
எவராலும் அதனைச் செலுத்த இயலாது.
9 ஒருவரால் என்றென்றும் வாழ்ந்திடமுடியுமா?
படுகுழியைக் காணாமல் இருந்திட முடியுமா?
10 ஏனெனில்,
அறிவிலிகளும் மதிகேடரும்
மாண்டழிவதுபோல,
ஞானமுள்ளோரும் உயிர் துறப்பதை
நாம் காண்கின்றோம் அன்றோ!
அவர்கள் எல்லாருமே
தத்தம் செல்வத்தைப்
பிறருக்கு விட்டுச்செல்கின்றனர்.
11 கல்லறைகளே அவர்களுக்கு
நிலையான வீடுகள்!
அவையே எல்லாத் தலைமுறைக்கும்
அவர்கள் குடியிருப்பு!
அவர்களுக்குத் தங்கள் பெயரில்
நிலபுலன்கள் இருந்தும் பயனில்லை.
12 ஒருவர் தம் மேன்மையிலேயே
நிலைத்திருக்க முடியாது;
அவர் விலங்குகளைப் போலவே
மாண்டழிவார்.
13 தம்மையே மதியீனமாக
நம்பியிருப்போரின் முடிவு இதுவே;
தம் சொத்திலேயே மகிழ்ச்சி
கொள்வோரின் கதி இதுவே.
(சேலா)
14 பலியாடுகளைப் போலவே
அவர்களும் சாவுக்கெனக்
குறிக்கப்பட்டுள்ளனர்;
சாவே அவர்களின் மேய்ப்பன்;
அவர்கள் நேரடியாகக்
கல்லறைக்குள் செல்வர்;
அப்பொழுது அவர்களது உருவம்
மாய்ந்து போகும்;
பாதாளமே அவர்களது குடியிருப்பு.
15 ஆனால், கடவுள்
என்னுயிரை மீட்பது உறுதி;
பாதாளத்தின் பிடியினின்று விடுவித்து
என்னைத் தூக்கி நிறுத்துவார்.
(சேலா)
16 சிலர் செல்வர் ஆனாலோ,
அவர்களின் குடும்பச் செல்வம் பெருகினாலோ,
அவர்களைக் கண்டு நிலைகுலையாதே!
17 ஏனெனில் சாகும்போது அவர்கள்
எதையும் எடுத்துப் போவதில்லை;
அவர்களது செல்வமும்
அவர்கள்பின் செல்வதில்லை.
18 உயிரோடிருக்கையில்

அவர்கள் தம்மை ஆசிபெற்றோர்
என்று கருதினாலும்,
'நீங்கள் நன்மையையே நாடினீர்கள்'
என மக்கள் அவர்களைப் புகழ்ந்தாலும்,
19 அவர்கள் தம் மூதாதையர் கூட்டத்தோடு
சேர்ந்து கொள்வர்;
ஒருபோதும் பகலொளியைக்
காணப் போவதில்லை.
20 மனிதர் தம் மேன்மையிலேயே
நிலைத்திருக்க முடியாது;
அவர்கள் விலங்குகளைப் போலவே
மாண்டழிவர்.

திருப்பாடல் 49:1-20

**சிந்தனைக்கு**

திருப்பாடல்களில், சபை உரையாளர் நூலை ஒத்த அறவுரைப் பாடல். திருப்பாடல் 73டுடன் ஒப்புநோக்கத் தக்க பாடல். இவ்விரு திருப்பாடல்களையும் வாசிக்கும் போது, எடுத்துக் கொள்ளப்பட்ட ஏனோக்கை நினைவூட்டும் வகையில் இருப்பதைக் காணலாம். திருப்பாடல் 37ம் இப்பாடலை ஒத்திருப்பதைக் காணலாம்.

தேடித் தேடிச் சேர்க்கும் புகழ், பெருமை மற்றும் செல்வத்தின் பயனற்ற தன்மையைக் குறித்து எழுதப்பட்ட இத்திருப்பாடலை எழுதியவர் யார் என்றோ எப்போது எழுதப்பட்டது என்றோ தலைப்பில் எந்தக் குறிப்பும் இல்லை.

அமைப்பு:
வ.1-4, மனிதர் அனைவருக்கும் அழைப்பு
வ.5-9, பயனற்ற செல்வம்
வ.10-12, சார்ந்திருக்க முடியாத செல்வம்
வ.13, அழிவுக்கு இரண்டு வழிகள்
வ.14-15, பற்றுறுதி கொண்டோரின் நிலைவாழ்வு
வ.16-20, பெற்ற அறிவின் பயன்பாடு

வசனம் 49:1-2
இனம் கடந்து, மொழி கடந்து, வகுப்பு கடந்து, எவ்வித வேறுபாடுமின்றி, அனைவரும் கேட்டுப் பயனுற அழைப்பு. கேட்கிற எவரும் தெளிந்த அறிவைப் பெறுகிறார் (நீதிமொழிகள் 1:5,8&33).

வசனம் 49:1
"மண்ணுலகில்" -
OV, பூமியின் குடிகளே.
எபிரேயத்தில் cheled, குறுகிய கால மண்ணுலக வாழ்க்கையைக் குறிக்க பைபிளில் பயன்படுத்தப்பட்டுள்ள சொல். வாழ்வுக் காலம் (யோபு 11:17), வாழ்நாள் (39:5), இவ்வுலகம் (17:14), மண்ணுலகு (49:1) & குறுகியது (89:47) - இவ்வைந்து வசனங்களையும் வாசித்துப்

பார்த்தால், எபிரேய பைபிளில் cheled என்ற சொல்லின் சிறப்பான பயன்பாட்டை உணர இயலும்.

வசனம் 49:4
"நீதிமொழி ... புதிர்" -
ஞானத்தை எடுத்துரைக்கும் மொழி;
மேலும், 78:2 (நீதிமொழி... மறைபொருள்) & நீதிமொழிகள் 1:5-6.
முன்னைச் சொல், அறவுரை, பின்னைச் சொல், அதில் உள்ள சிக்கல்.

வசனம் 49:5
இயல்பாக எழுகின்ற அச்சம்; ஆனால் அதனால் ஆவதென்ன? எனவே அந்த அச்சம் பயனற்றது; தேவையற்றது. மேலும் பார்க்க, வ.16.

வசனம் 49:6-8
செல்வப் பெருக்கில் அதைக் கொண்டவர் பெருமை கொள்ளலாம்; ஆனால் பெரும் செல்வத்தின் பயன் என்ன? இன்று இரவில் அச்செல்வனின் உயிர் எடுத்துக் கொள்ளப்படும் என்றால், அச்செல்வத்தைக் கொண்டு, அவன் தன் வாழ்நாளை நீட்டித்துக் கொள்ள முடியுமா? (லூக்கா 12:20). கடவுள் இல்லை என்ற கொள்கையை உடைய வால்டேர் தனது இறுதி நாட்களில் புலம்பிய புலம்பல் இது.

வசனம் 49:9-10
வ.9ல் எதைக் காணாமல் இருக்க முடியாதோ அதனை வ.10ல் காண்கிறோம்!
திருப்பாடல் 10ல் பொல்லாரைக் குறித்த திருப்பாடகரின் எண்ணங்கள், இங்கு ஒப்புநோக்கத் தக்கவை.

சில ஆங்கிலப் பொன்மொழிகள்:
சாவுக்கு எதிரான போர்க்கருவி ஏதுமுண்டோ? மாமன்னன் மீதும் தன் உறைந்த கரத்தை வைக்கிறதே!
செல்வத்தைக் குறித்த பெருமை அனைத்தும் வீணே! வாழ்நாள் முழுதும் குவித்த செல்வத்தால், கூடுதலாக ஒரு நாள் வாழ முடியாது!
அரிய செல்வங்களாலும், உயர்ந்த பரம்பரையினாலும், பெருமையோடு வாழ்ந்தவனும், சாதாரண விலங்கு போல் சாகிறான்!

வசனம் 49:9
இவ்வசனத்திற்கு OV முற்றிலும் மாறுபட்ட மொழிபெயர்ப்பைத் தருகிறது.
"That He should still live forever, and not see corruption." KJV
"That he should live on forever and never see the pit." ESV
"அவர்கள் ஆத்துமமீட்பு மிகவும் அருமையாயிருக்கிறது; அது ஒருபோதும் முடியாது." OV
"ஒருவரால் என்றென்றும் வாழ்ந்திடமுடியுமா? படுகுழியைக் காணாமல் இருந்திட முடியுமா?" (பொது)

வசனம் 49:10
Death is the greatest leveller என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். சமரசம் உலாவும் இடமே இடுகாடு என்பர். உலகின் போர்களில் வென்று நாடுகளைப் பிடித்த அலெக்சாந்தர், தனது சவப் பெட்டிக்கு வெளியே வெறுங் கைகளைக் காட்டிக் கொண்டு இறுதி ஊர்வலம் சென்றதாகச் சொல்வர். செல்வருக்கு எச்சரிக்கைச் சாவு! (லூக்கா 12:20)

'பிறந்த மேனியனாய் வந்தேன், பிறந்த மேனியனாய் செல்வேன்' என்றார் யோபு. மதிகேடருக்கும் ஞானியருக்கும் முடிவு சாவே! தவிர்க்கவே முடியாத உறுதியான இறுதியான உண்மை, சாவு.

வசனம் 49:11
செல்வர் ஒருவர் தான் வாழும் போது தன் பெயரில் ஒரு வீதியை அல்லது ஒரு நகரையே உருவாக்கிப் பெருமைப் படலாம்; ஆனால் நிலைத்திருப்பது என்னவோ கல்லறையில் பொறிக்கப்பட்ட கல்வெட்டே! - இக்கருத்தே அடுத்த இரண்டு வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

வசனம் 49:13
கடவுள் மீது நம்பிக்கை கொள்ளாது தன்னையே நம்பியிருப்போர்; கொடுப்பதில் மகிழாமல், பயனின்றிச் சேர்த்து வைத்து மகிழ்ச்சி அடைவோர்; அழிவுக்கு அழைத்துச் செல்லும் இரண்டு வழிகள்.

"கிருபை வழிவழிச் சொத்தல்ல; அழிவுறும் உலகச் செல்வங்களோ, வழிவழியாய் செல்லும். முட்டாள்களின் பந்தயம் ஒருபோதும் முடிவதில்லை!" (ஸ்பர்ஜின்)

வசனம் 49:14
"பலியாடுகள்" -
மூலப் பொருள், செம்மறியாடுகள் அல்லது வெள்ளாடுகள் அல்லது அவற்றின் மந்தை; உருவகமாக மனிதர்கள் அல்லது மனிதக் கும்பல்.
இங்குப் பலியாடுகள் என்று சொல்லப்பட்டுள்ளது சிறப்பு. சாவின் விளிம்பில் நிற்கும் ஆடும், மனிதனும் ஒரே நிலையில் இருக்கிறார்கள்; அது செய்வதறியாத நிலை. உண்மையில் அடுத்து வருவதை அறியாத நிலை!

"அவர்கள் நேரடியாகக் கல்லறைக்குள் செல்வர்" -
"நீதிமான்கள் வைகறையில் அவர்கள் மேல் வெற்றி கொள்வர் என்பது எபிரேயப் பாடம்.

"பாதாளமே அவர்களது குடியிருப்பு" -
அவர்கள் வாழ்வு அங்கேயே ஒரு முடிவுக்கு வந்து விட்டது என்று கூறும் திருப்பாடகர், இறையடியாருக்கு அருளப்படும் நிலைவாழ்வைக் குறித்து அடுத்து எடுத்துரைக்கிறார் (வ.15&19).

வசனம் 49:15
வ.7க்குரிய மறுமொழி. எதனை எந்தவொரு மனிதனும் செய்ய முடியாதோ, அதனைச் செய்ய ஆண்டவர் ஆற்றலுள்ளவர்.

வசனம் 49:16
இணை, 37:1.
சிலரது செல்வம் பெருகும் போது அச்சம் வருகிறதா?
கொடியவர்களே வளர்ச்சி காணும் இன்றைய நமது சூழ்நிலையில் அச்சம் வரவேயில்லை என்று சொல்லி விட முடியாது.
- நல்லோரிடம் குவியும் செல்வம் நன்மைக்குப் பயன்படும், ஆனால் தீயோரிடம் குவியும் செல்வம்???
- நாம் வாழும் மண்ணுலகில், அவர்கள் நினைப்பதே நடக்கிறது என்பதால் அச்சம் மேலிடுகிறது.

- *அருளில்லார்க்கு அவ்வுலகில்லை, ஆனால் பொருளில்லாருக்கு இவ்வுலகு இடுக்கணும் துயரும் தானே???*

*ஆனாலும் அவ்வச்சம் தேவையற்ற ஒன்று எனத் திருப்பாடகர், வ.*17-18*ல் ஆற்றுப் படுத்துகிறார்.*

*வசனம்* 49:19
*பாதாளத்தின் இருளைக் காணாத மனிதர் ஏனோக்கு, தொடக்க நூல்* 5:24, *எபிரேயர்* 11:5.
*அழிவுக்குரிய தந்தையை உடையோர் அழிவடைவர்!* (*ஸ்பர்ஜின்*)

*வசனம்* 49:20
*இணை, வ.*12.
"*விலங்குகள்*" -
behemah, *கொடிய விலங்கு* (not animals but beasts).

*செழிப்பில் வாழும் மனிதர் இவ்வுலகில் அதிகாரம் மிக்கோராக, தங்கள் பெயருக்கு முன்னும் பின்னும் சிறப்புப் பட்டம் பெற்றோராக வாழ்கின்றனர்; ஆனால் பாதாளத்திலோ அவர்கள் சேர்த்த செல்வத்துக்கும் பெற்ற பெருமைக்கும் பயன் ஏதுமில்லை!*

*“பாதாளத்தின் பிடியினின்று அவர்களை விடுவிப்பேனோ? சாவிலிருந்து அவர்களை மீட்பேனோ? சாவே! உன் கொள்ளை நோய்கள் எங்கே? பாதாளமே! உன் அழிவு வேலை எங்கே? தற்போது இரக்கம் என்னிடம் இல்லை.”* (*ஒசேயா* 13:14)

*“செல்வர் ஒருவர் இறையாட்சிக்கு உட்படுவதை விட, ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது!”* (*லூக்கா* 18:25)

✝

## 19 திருப்பாடல் 50

*(உண்மை வழிபாடு)*

*ஆசாபின் புகழ்ப்பா*
1 *தெய்வங்களுக்கெல்லாம் இறைவனாம்*
*ஆண்டவர் பேசினார்;*
*கதிரவன் எழும் முனையினின்று*
*மறையும் முனைவரை*
*பரந்துள்ள உலகைத்*
*தீர்ப்புப் பெற அழைத்தார்.*
2 *எழிலின் நிறைவாம் சீயோனின்று,*
*ஒளிவீசி மிளிர்கின்றார் கடவுள்.*
3 *நம் கடவுள் வருகின்றார்;*
*மௌனமாய் இருக்கமாட்டார்;*
*அவருக்கு முன்னே,*
*சுட்டெரிக்கும் தழல் நெருப்பு!*
*அவரைச் சுற்றிலும்,*
*கடுமையான புயற்காற்று!*
4 *உயர் வானங்களையும்*

பூவுலகையும் அவர் அழைத்து,
தம் மக்களுக்குத்
தீர்ப்பு வழங்குகின்றார்.
5 'பலியிட்டு என்னோடு
உடன்படிக்கை செய்துகொண்ட
என் அடியார்களை
என்முன் ஒன்று கூட்டுங்கள்.'
6 வான்வெளி அவரது நீதியை
எடுத்தியம்பும்; ஏனெனில்,
கடவுள்தாமே நீதிபதியாய் வருகின்றார்!
(சேலா)
7 என் மக்களே, கேளுங்கள்;
நான் பேசுகின்றேன்;
இஸ்ரயேலே! உனக்கு எதிராய்ச்
சான்றுகூறப் போகின்றேன்;
கடவுளாகிய நானே உன் இறைவன்;
8 நீங்கள் கொண்டுவரும்
பலிகளை முன்னிட்டு
நான் உங்களைக் கண்டிக்கவில்லை;
உங்கள் எரிபலிகள் எப்போதும்
என் முன்னிலையில் உள்ளன.
9 உங்கள் வீட்டின் காளைகளையோ,
உங்கள் தொழுவத்தின் ஆட்டுக்கிடாய்களையோ,
நான் ஏற்றுக் கொள்வதில்லை.
10 ஏனெனில், காட்டு விலங்குகளெல்லாம்
என் உடைமைகள்;
ஓராயிரம் குன்றுகளில் மேயும்
கால்நடைகளும் என்னுடையவை.
11 குன்றத்துப் பறவை
அனைத்தையும் நான் அறிவேன்;
சமவெளியில் நடமாடும் யாவும்
என்னுடையவை.
12 எனக்குப் பசியெடுத்தால் நான்
உங்களைக் கேட்கப் போவதில்லை;
ஏனெனில், உலகும்
அதில் நிறைந்துள்ள யாவும்
என்னுடையவையே.
13 எருதுகளின் இறைச்சியை
நான் உண்பேனோ?
ஆட்டுக் கிடாய்களின் குருதியைக்
குடிப்பேனோ?
14 கடவுளுக்கு நன்றிப்பலி செலுத்துங்கள்;
உன்னதர்க்கு உங்கள் நேர்ச்சைகளை
நிறைவேற்றுங்கள்.
15 துன்ப வேளையில்
என்னைக் கூப்பிடுங்கள்;
உங்களைக் காத்திடுவேன்;
அப்போது, நீங்கள்
என்னை மேன்மைப்படுத்துவீர்கள்.

16 ஆனால், கடவுள்
பொல்லாரைப் பார்த்து
இவ்வாறு கூறுகின்றார்:
"என் விதிமுறைகளை ஓதுவதற்கு
உங்களுக்கு என்ன தகுதி?
என் உடன்படிக்கை பற்றிப் பேசுவதற்கு
உங்களுக்கு என்ன அருகதை?
17 நீங்களோ ஒழுங்குமுறையை
வெறுக்கின்றீர்கள்;
என் கட்டளைகளைத்
தூக்கியெறிந்து விடுகின்றீர்கள்.
18 திருடர்களைக் கண்டால்
அவர்களோடு விருப்புடன்
சேர்ந்து கொள்கின்றீர்கள்;
கற்பு நெறி தவறியவர்களோடும்
உங்களுக்கு உறவு உண்டு.
19 உங்கள் வாய் உரைப்பது தீமையே;
உங்கள் நா புனைவதும் பொய்ம்மையே.
20 உங்கள் சகோதரரைப் பற்றி
இழிவாகப் பேசுகின்றீர்கள்;
உங்கள் தாயின் மக்களைப்பற்றி
அவதூறு பேசுகின்றீர்கள்.
21 இவ்வாறெல்லாம் நீங்கள் செய்தும்,
நான் மௌனமாய் இருந்தேன்;
நானும் உங்களைப் போன்றவர்
என எண்ணிக் கொண்டீர்கள்;
ஆனால், இப்பொழுது
உங்களைக் கண்டிக்கின்றேன்;
உங்கள் குற்றங்களை
உங்கள் கண்முன் ஒவ்வொன்றாய்
எடுத்துரைக்கின்றேன்.
22 கடவுளை மறந்தோரே!
இதைக் கண்டுணருங்கள்;
இல்லையேல், நான்
உங்களைப் பீறிப் போடுவேன்;
உங்களை விடுவிக்க யாரும் இரார்.
23 நன்றிப்பலி செலுத்துவோர்
என்னை மேன்மைப்படுத்துவர்.
தம் வழியைச் செம்மைப்படுத்துவோர்
கடவுளாம் நான் அருளும்
மீட்பைக் கண்டடைவர்.

திருப்பாடல் 50:1-23

**சிந்தனைக்கு**

கடவுள் ஏற்கும் வழிபாடு; ஆண்டவர் மொழியும் அறவுரைப் பாடல்; பின்னாட்களில், திருப்பாடல்கள் 81 மற்றும் 95 போல, உடன்படிக்கையைப் புதுப்பிக்கும் விழாவில் பாடப்படும் பாடல். தாவீதுடன்வாழ் லேவியராகிய ஆசாப் எழுதிய புகழ்ப்பா; இரண்டாம்

தொகுதியில் உள்ள ஒரே ஆசாப்பின் திருப்பாடல் (ஏனையவை திருப்பாடல்கள் 73 ~ 83); இந்தவொரு திருப்பாடல் மட்டும் தனித்து இரண்டாம் தொகுதியில் சேர்க்கப்பட்டதற்கு, முந்தைய இரண்டு திருப்பாடல்கள் போல, இது ஓர் அறவுரைப் பாடல் என்பதாக இருக்கலாம். மேலும் கடவுளுக்கு ஏற்புடைய பலிகளை, திருப்பாடல் 51ல் தாவீது பேசுவது போல, இப்பாடலில் ஆசாப் இறைவாக்காகப் பாடுகிறார்.

யார் இந்த ஆசாப்?
தாவீதின் காலத்தில் வாழ்ந்த லேவியரும், பாடகர் தலைவருமான ஆசாப் (1 குறிப்பேடு 6:39, 15:17-19, 16:5-7, 25:6; ஆசாப்பும் அவரது மைந்தர்களும் இறைவாக்கினராக, 1 குறிப்பேடு 25:1-2; 2 குறிப்பேடு 29:30).

இத்திருப்பாடலை எழுதியவராக, ஆசாப் இருக்க வாய்ப்பில்லை என்ற கருத்து உள்ளது; பலிகளை விடத் தாழ்மையே சிறப்பானது என்று சொன்னவர் சாமுவேல் (1 சாமுவேல் 15:22); அரசர்கள் தாவீது மற்றும் சாலமோன் காலத்தில் பலிகள் சிறப்பிடம் பெற்றிருந்தன; அதே காலத்தில் ஒருவர் அரசரின் செயல்களுக்கு எதிராக எழுதியிருப்பாரா என்று ஐயம் எழுப்புகின்றனர். பலிகளைக் கடவுள் விரும்புவதில்லை என்ற கருத்து இறைவாக்கினர் காலத்திற்குரியது என்பது நினைவில் கொள்ளத்தக்கது என்றும் ஆசாபின் மைந்தர்களுள் ஒருவர் இறைவாக்காகப் பிற்காலத்தில் (அரசர் யோசியா அல்லது அதற்குப் பிறகு) பாடியிருக்கலாம் என்றும் அறிஞர்கள் சிலர் கூறுகின்றனர். 2 குறிப்பேடு 29:30 வசனத்தின் அடிப்படையில், இத்திருப்பாடலை எழுதியவர் ஆசாப் என்பதே சரியானது என்று நாம் ஏற்றுக் கொள்வதே நலம்.

நெகேமியா (12:46) தாவீதோடு சிறப்பான இடத்தை ஆசாபுக்குத் தருகிறார்.

கடவுளைச் சிறப்பாகக் குறிப்பிடும் திருப்பாடல்:
- தெய்வங்களுக்கெல்லாம் கடவுளாம் ஆண்டவர் (ale eloheem yehovaw / the mighty God even the Lord), வ.1;
- உன்னதர் (elyone / the most High), வ.14; மற்றும்
- கடவுள் (eloah / God), வ.22.

கடவுளைக் குறிப்பிடாத அல்லது கடவுள் உரைப்பதாக அல்லாத எந்த வசனமும் இப்பாடலில் இல்லை. கடவுள் சொல்கிறார்: "நான் மௌனமாய் இருந்தேன்; நானும் உங்களைப் போன்றவர் என எண்ணிக் கொண்டீர்கள்!"
- நம்மை நோக்கிக் கடவுள் எழுப்பும் கேள்வியாக இதனை அனுதினமும் எண்ணி, நாம் நமது செயல்களைச் சீர்தூக்கிப் பார்த்தல் நன்று. ஏனெனில் அவர் எப்போதும் மௌனமாய் இரார்!
🕎

அமைப்பு:
வ.1-6, தம் மக்களைத் தீர்ப்புப் பெற அழைக்கும் ஆற்றல்மிகு ஆண்டவர்
வ.7-15, சடங்காகச் செய்வோரைச் சாடும் ஆண்டவர்
வ.16-21, பொல்லாரைக் கடிந்து கொள்ளும் ஆண்டவர்
வ.22-23, சீர்பொருந்த அழைக்கும் ஆண்டவர்
🕎

வசனம் 50:1
"தெய்வங்களுக்கெல்லாம் இறைவனாம் ஆண்டவர்" -
ale eloheem yehovaw;
இணை, யோசுவா 22:22.

படைப்பின் இறைவரான கடவுள் மற்றும் உடன்படிக்கையின் இறைவரான பேரன்பின் ஆண்டவர் - இரண்டும் ஒரு சேரக் குறிப்பிடப்பட்டுள்ளது. பேசும் கடவுளாகிய ஆண்டவர்.

ஒருமுனை தொடங்கி மறுமுனை வரை, பரந்த உலகைத் தமது தீர்ப்புக்குக் கடவுள் அழைத்தாலும், இங்கு இஸ்ரயேலுக்கு எதிரான தீர்ப்பே குறிப்பிடப்படுகிறது (வ.7).

வசனம் 50:2-3
கடவுளின் வெவ்வேறான இரு தோற்றங்கள்: சீயோனில் வீற்றிருக்கும் கடவுள் எழிலோடு மிளிரும் கடவுள்.
தீர்ப்புச் செய்ய வரும் கடவுள், புயல் காற்றோடும் சுட்டெரிக்கும் நெருப்போடும் வரும் கடவுள் (விடுதலைப் பயணம் 19:16-19 தரும் சீனாய் மலைக் காட்சியை நாம் மறக்கக்கூடாது).

அமைதலான கடவுளையே கண்டு, இறுமாப்போடு வாழ வேண்டாம்!

வசனம் 50:3 & 21
நாம் உணர வேண்டியதும், கடவுளின் இயல்பும்.
"நம் கடவுள் வருகின்றார், மௌனமாய் இருக்க மாட்டார்" என்பது நாம் உடனடியாக உணர வேண்டியது.

தமது பேரன்பையும் இரக்கங்களையும் முன்னிட்டு, நாம் நம்மை மாற்றிக் கொண்டு, அவரோடு சீர்பொருந்தி வாழ, நமக்கு வாய்ப்பளித்து, கடவுள் மௌனமாய் இருக்கிறார் என்பது அவர்தம் இயல்பு (2 பேதுரு 3:9; எசேக்கியேல் 33:11).

வசனம் 50:4-5
உலகுவாழ் மக்கள் அனைவரும் கடவுளின் தீர்ப்புக்கு உரியோர். உடன்படிக்கையின்படி வாழ்வோர், உடனடியான தீர்ப்புக்கு உரியோர். எனவே சீர்பொருந்தத் தாமதம் வேண்டாம்.

மறக்க வேண்டாம்:
உலகோரின் கண்கள் கடவுள் மீது இருக்கின்றன; அவரின் கண்களோ, உடன்படிக்கையில் அவரோடு இணைந்து இருப்போரின் மீது இருக்கின்றன - இதில் நாம் பெருமை கொள்ள முடியாது; மாறாக எச்சரிக்கை உணர்வோடு நாம் செயல்பட வேண்டும்.

வசனம் 50:5
விடுதலைப் பயணம் 19:5-6 மற்றும் 24:5-8 பகுதிகளில் நடந்தவற்றை இங்குத் திருப்பாடகர் நினைவுறுத்துகிறார். அதன் நீட்சியாக நாமும் உடன்படிக்கையின் படி கடவுளின் மக்களே என்பதையும், மக்கள் அனைவரும் தீர்ப்புக்கு உட்பட்டவர்களே என்பதையும் நினைவுகூர்வோம் (1 பேதுரு 2:9-10, 4:17).

வசனம் 50:6
மேலும், 19:1.
பூவுலகில் மனிதர்களின் செயல்கள் அனைத்திற்கும் சாட்சியாக இயற்கை உள்ளது, இணைச் சட்டம் 4:26, 31:28, 32:1. சாட்சிகளின்றித் தீர்ப்பு இருக்கக்கூடாது அல்லவா!

வசனம் 50:7
கடவுளாகிய நானே உன் "இறைவன்" அல்ல கடவுள்; அழுத்தம் திருத்தமாகக் கடவுள் உரைக்கிறார்: எனவே கேட்டுக் கீழ்ப்படிவோம். எகிப்திலிருந்து விடுவித்து அழைத்து வந்த போதே, "நானே உன் கடவுளாகிய ஆண்டவர்" என்று உரைத்தவர் அவரே!
(விடுதலைப் பயணம் 19:3-6; லேவியர் 19:2-4,10,25,31,34&36; 20:7&24; 22:33; 23:22).

வசனம் 50:8
"பலிகள்" -
பார்க்க, லேவியர் 1:1 ~ 6:7.
பலிகளுக்கான கட்டளைகளை மோசேயின் வழியாகத் தந்தவர் அவரே! எனவே அவர் பலி செலுத்துதலைக் குற்றமாகப் பார்க்கவில்லை. அவை கடவுளின் முன்பாக எப்போதும் இருக்கின்றன; பலிகளே கடவுளுக்கு முதன்மையானது என்றும், அவர் அவற்றைச் சார்ந்து இருப்பதாகவும் வேற்றின மக்கள் அவர்களின் தெய்வங்களைக் குறித்து எண்ணுவது போல இஸ்ரயேலரும் கருதினர். அதனால் அவைகளை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை, வ.9.

கட்டளைகளின் சாரத்தை விட்டு விட்டுச் சடங்கைப் பற்றிக் கொண்ட இறைமக்கள்.

வசனம் 50:10-12
உழைப்பால் சேகரித்த தன் கால்நடைகளைத் தன் செல்வம் என்று மனிதன் எண்ணுகிறான்; அவற்றை விட மேன்மையான விலங்குகள் வனங்களில் வாழ்கின்றன!
மனிதன் ஒவ்வொருவனின் மந்தைகளும் எண்ணிக்கைக்கு உட்பட்டவை; வனவிலங்குகளோ எண்ணிறந்தவை!
தன்னுடையவை என்று மனிதன் பெருமைப்பட என்ன இருக்கிறது?

நாம் கடவுளில் நம்பிக்கை வைக்காமல், அவருக்குச் செலுத்திய பலிகளில் / காணிக்கைகளில் நம்பிக்கை வைக்கிறோம்!

வசனம் 50:10
"ஓராயிரம் குன்றுகளில் மேயும் கால்நடைகளும் என்னுடையவை" -
பழைய மொழிபெயர்ப்பு மாறுபட்டிருக்கிறது.
பொது மொழிபெயர்ப்பில், கால்நடைகள் என்று சொல்லப்பட்டுள்ளதை விலங்குகள் (behemah, பெரிய விலங்குகள்) என்று சொல்வது நன்று.

வசனம் 50:12
"எனக்குப் பசியெடுத்தால் நான் உங்களைக் கேட்கப் போவதில்லை" -
"பதாகைகளும் இசையும் நறுமணப் புகையும் நயமான பட்டும் ஆண்டவருக்குத் தேவையென மனிதர் விரும்புகின்றனரோ? அப்படி விரும்பினால், விண்மீன்கள் அவரது தன்மையை ஒளிர்விக்கும், காற்றும் அலைகளும் ஆர்ப்பரித்து இசைக்கும், பல்லாயிரம் பூக்கள் பல்லாயிரம் முறைகள் நறுமணத்தைச் சுவாசிக்கும், வெண்பனி அவரின் வெள்ளங்கி ஆகும், வானவில் அவரது இடைக்கச்சை ஆகும், மிளிரும் வெண்மேகம் அவரது மேலங்கி ஆகும். ஓ மூடர்களே! மந்தமனம் கொண்டோரே! நீங்கள் வழிபடுபவர் யார் என்பதை அறிந்து கொள்ளவில்லையே!" (ஸ்பர்ஜின்)

"உலகும் அதில் நிறைந்துள்ள யாவும் என்னுடையவை" -
எவ்வளவு மெய்யான வாக்கு! ஆழ்ந்து சிந்தித்து உணர வேண்டிய வாக்கு!

மனிதர்கள் (இயற்கை வளங்களைச் சூறையாடும் பன்னாட்டு நிறுவனங்களின் தலைவர்கள்) "தங்களுக்கே சொந்தம்" என்று தன்வயப்படுத்திக் கொண்ட வளங்கள் அனைத்திற்கும் பிறகும், இவ்வுலகில் இயற்கை வளங்கள் மீந்திருக்கின்றன!
ஆனாலும், பேராசையால் பெருங் குவியல்களாய் செல்வங்களைக் குவித்தும், மனிதர்களின் ஆசையோ அழிவதில்லை! அவர்களின் உள்ளங்களோ உணர்வதில்லை!

வசனம் 50:14-15
பலியிடும் சடங்குகளா கடவுள் நாடுவது?

நன்றியால் நிறைந்த நெஞ்சம், கீழ்ப்படிந்த வாழ்க்கை, நம்பிக்கையில் நல்வாழ்வு அல்லவா அவர் நம்மில் தேடுவது! (டேவிட் கூஷிக்)

அப்போது நொறுங்கிய உள்ளத்தோடு ஏறேடுக்கும் நமது மன்றாட்டைக் கேட்டு அவர் நமது துன்பங்களை நீக்குவார். மென்மேலும் நாம் அவரை மேன்மைப்படுத்துவோம்.

வசனம் 50:16-20
பத்துக் கட்டளைகளின் முதல் பகுதியாகிய, கடவுளோடு இருக்க வேண்டிய உறவைக் குறித்து முந்தைய வசனங்களில் சாடிய கடவுள், அடுத்த இப்பகுதியில், மனிதர்களுக்குள் நிலவும் மீறல்களைக் குறித்துச் சாடுகிறார்.

இவை பொல்லாருக்குக் கடவுளின் கேள்விகள்.
ஒவ்வொரு இரவும் இக்கேள்விகளை நமக்குள் எழுப்பி, நமக்குள் பொல்லாங்கு உள்ளதா என்று தற்பரிசோதனை செய்வோம்.

வசனம் 50:16
"என் விதிமுறைகளை ஓதுவதற்கு..." -
வாயால் உச்சாடனம்; உள்ளத்திலோ வஞ்சம், பொல்லா எண்ணங்கள்.
மேலும், வ.19 & 5:9.

வசனம் 50:17
கிறிஸ்து இயேசுவின் சாடல், மத்தேயு 23:23-24.

வசனம் 50:18
"... விருப்புடன் சேர்ந்து கொள்கின்றீர்கள்" -
திருட்டு மட்டுமல்ல; இலஞ்சம் வாங்குதல், கையூட்டு பெறுதல், ஊழலுக்குத் துணை நிற்றல், இவை அனைத்தும் தெரிந்தும் தெரியாதது போல இருத்தல் - இவையே இன்றைய சமுதாயத்தில் பெரும் தீங்குகள். இவற்றிலெல்லாம் கடைநிலை ஊழியரில் தொடங்கி, முதுநிலை உயர் அலுவலர் மற்றும் அமைச்சர்கள் வரை கூட்டுச் சேர்கிறார்கள், அமைதியாக உடன்பட்டு இருக்கிறார்கள். நேரடியான திருட்டு நமது நாட்டில் ஒரு நாளில் சில இலட்சங்கள் என்றால், மறைமுகத் திருட்டு தினந்தோறும் கோடிகளில் நடக்கிறது. இவர்கள் அனைவரும் பொல்லாரே.

வசனம் 50:21
"நானும் உங்களைப் போன்றவர் என எண்ணிக் கொண்டீர்கள்" -
பொல்லாரின் தலைவரா கடவுள்?
அவர் தூயாதி தூயவர் அல்லவா!
கடவுளோடு நமது உறவை இப்படிக் கொச்சைப்படுத்த முடியுமா?
இந்த அளவுக்கு நமது மனங்கள் கேடானதா?
நமது பாவங்களைப் பாராதவரா அவர்?

வசனம் 50:22
பொல்லார் திருந்த இறுதி அழைப்பும் எச்சரிப்பும்.

பீறிப்போடும் கடவுள், எசாயா 31:4.

வசனம் 50:23
முடிவுரை.

*சடங்குகளைக் கைவிட்டு, உள்ளங்களை அர்ப்பணித்து, கடவுள் ஏற்கும் நன்றிப் பலி செலுத்துவோர், அவரை மேன்மைப்படுத்துவோர்.*
*தங்கள் வழிகளைச் சீர்படுத்துவோரே கடவுள் அருளும் மீட்பைக் கண்டடைவோர்.*

✝

## 19 திருப்பாடல் 51

*(பாவமன்னிப்புக்காக மன்றாடல்)*

*பாடகர் தலைவர்க்கு; தாவீதின் புகழ்ப்பா; தாவீது பத்சேபாவிடம் முறைதவறி நடந்த பின், இறைவாக்கினர் நாத்தான் அவரிடம் வந்த போது அவர் பாடியது*
1 கடவுளே!
உமது பேரன்புகேற்ப
எனக்கு இரங்கும்;
உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப
என் குற்றங்களைத் துடைத்தருளும்.
2 என் தீவினை
முற்றிலும் நீங்கும்படி
என்னைக் கழுவியருளும்;
என் பாவம் அற்றுப்போகும்படி
என்னைத் தூய்மைப்படுத்தியருளும்;
3 ஏனெனில், என் குற்றங்களை
நான் உணர்கின்றேன்;
என் பாவம் எப்போதும்
என் மனக் கண்முன் நிற்கின்றது.
4 உமக்கு எதிராக
நான் பாவம் செய்தேன்;
உம் பார்வையில் தீயது செய்தேன்;
எனவே, உம் தீர்ப்பினால்
உம் நீதியை வெளிப்படுத்தியுள்ளீர்;
உம் தண்டனைத் தீர்ப்பில்
நீர் மாசற்றவராய் விளங்குகின்றீர்.
5 இதோ! தீவினையோடு
என் வாழ்வைத் தொடங்கினேன்;
பாவத்தோடே என் அன்னை
என்னைக் கருத்தாங்கினாள்.
6 இதோ! நீர் விரும்புவது
உள்ளத்து உண்மையையே;
மெய்ஞானத்தால் என் மனத்தை நிரப்பும்.
7 ஈசோப்பினால் என்னைக் கழுவியருளும்;
நான் தூய்மையாவேன்.
என்னைக் கழுவியருளும்;
உறைபனியிலும் வெண்மையாவேன்.
8 மகிழ்வொலியும் களிப்போசையும்
நான் கேட்கும்படி செய்யும்;
நீர் நொறுக்கிய
என் எலும்புகள் களிகூர்வனவாக!

9 என் பாவங்களைப் பாராதபடி
உம்முகத்தை மறைத்துக்கொள்ளும்;
என் பாவக்கறைகளை எல்லாம்
துடைத்தருளும்.
10 கடவுளே!
தூயதோர் உள்ளத்தை
என்னுள்ளே படைத்தருளும்;
உறுதிதரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை
என்னுள்ளே உருவாக்கியருளும்.
11 உமது முன்னிலையிலிருந்து
என்னைத் தள்ளிவிடாதேயும்;
உமது தூய ஆவியை
என்னிடமிருந்து எடுத்துவிடாதேயும்.
12 உம் மீட்பின் மகிழ்ச்சியை
மீண்டும் எனக்கு அளித்தருளும்;
தன்னார்வ மனம் தந்து
என்னைத் தாங்கியருளும்.
13 அப்பொழுது, குற்றம் செய்தோர்க்கு
உம் வழிகளைக் கற்பிப்பேன்;
பாவிகள் உம்மை நோக்கித் திரும்புவர்.
14 கடவுளே! எனது மீட்பின் கடவுளே!
இரத்தப் பழியினின்று
என்னை விடுவித்தருளும்;
அப்பொழுது, என் நா
உமது நீதியை முன்னிட்டுப் பாடும்.
15 என் தலைவரே!
என் இதழ்களைத் திறந்தருளும்;
அப்பொழுது, என் வாய்
உமக்குப் புகழ் சாற்றிடும்.
16 ஏனெனில், பலியினால்
உம்மை மகிழ்விக்க முடியாது;
நான் எரிபலி செலுத்தினாலும்
நீர் அதில் நாட்டங்கொள்வதில்லை.
17 கடவுளுக்கேற்ற பலி
நொறுங்கிய நெஞ்சமே;
கடவுளே!
நொறுங்கிய, குற்றமுணர்ந்த உளத்தை
நீர் அவமதிப்பதில்லை.
18 சீயோனுக்கு இன்முகம் காட்டி
நன்மை செய்யும்;
எருசலேமின் மதில்களை
மீண்டும் கட்டுவீராக!
19 அப்பொழுது, எரிபலி,
முழு எரிபலியெனும்
முறையான பலிகளை விரும்புவீர்;
மேலும், இளங்காளைகள்
உமது பீடத்தில்
பலியாகச் செலுத்தப்படும்.

திருப்பாடல் 51:1-19

**சிந்தனைக்கு**

திருப்பாடல் 51 முதல் திருப்பாடல் 65 வரை உள்ள தாவீதியத் திருப்பாடல்கள் ஒரு குவியமாக உள்ளன. திருப்பாடல் 51, அவருடைய தனிப்பட்ட பாவத்தை அறிக்கையிட்டு, மன்னிக்கும் கடவுளுக்கு நன்றி செலுத்துவது. அடுத்த பதின்மூன்று திருப்பாடல்களில், தன் வாழ்க்கையில் தான் எதிர்கொண்ட தீங்குகளை விவரித்துப் பாடும் தாவீது, திருப்பாடல் 65ல், எல்லாத் தீங்குக்கும் தன்னைக் காத்து மீட்ட கடவுளுக்குப் புகழ்ச்சிப் பாடலாக இறுதிப்பாடலை அமைத்துள்ளார். இந்தப் பதினைந்து திருப்பாடல்களில், எட்டுத் திருப்பாடல்களின் தலைப்புகளில் (51, 52, 54, 56, 57, 59, 60 & 63) வரலாற்றுக் குறிப்புகள் இடம்பெறுகின்றன. தலைப்புகளில் வரலாற்றுக் குறிப்புகள் உள்ள இதர திருப்பாடல்கள்: 3, 7, 18, 30, 34 & 142.
🕎

திருப்பாடல் 51, மனிதனின் இருமைத் தன்மைகளைத் தோலுரிக்கும் திருப்பாடல்: அனைவருக்கும் தெரிந்த வெண் பக்கம், யாருமறியா அல்லது மிகமிகச் சிலரே அறிந்த கரும் பக்கம். அதேவேளையில், மனிதனின் வாழ்க்கையில் வெளிப்படும் ஆன்மீக வளர்ச்சியின் மெல்லுணர்வுகளைத் தேர்ந்த சொற்களால் சித்தரிக்கும் திருப்பாடல்.

பைபிளை நேசிக்கும் ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கையில் தான் செய்யும் சிறியதும் பெரிதுமான பாவத்திலிருந்து விடுதலை பெற ஏறெடுக்கும் ஒரு வழிபாட்டுத் திருப்பாடல். கடவுளின் மேன்மை மற்றும் மாட்சிக்குச் சற்றும் குறைவு ஏற்பட்டு விடாமல், அதேவேளையில் மிகவும் நேசிக்கும் நண்பனிடம் பாவத்தை ஒறுத்துத் தன் உறவைக் காத்துக் கொள்ள உரிமையோடு கோரும் கவிநயமிக்க திருப்பாடல். தனது குடிகள் அனைவருக்கும் மேலாக உயர்ந்த இடத்தில் நிற்கும் தனது பெருமையைக் காக்கச் சற்றும் முனையாமல், அரசனான தனது வாழ்க்கையில் நேர்ந்த மிகப் பெரும் சறுக்கலை அன்றைய உலகுக்கே வெளிப்படுத்தி, கொடுமையான பாவங்களையும் மன்னித்து ஏற்றுக் கொண்டு, சீரிய வழிகளில் நடத்திப் பெருமைப்படுத்தும் உன்னதக் கடவுள் இங்கே இருக்கிறார் என்பதை முன்னிருத்தும் திருப்பாடல்.

திருப்பாடல் 23றை விடவும் மேலான திருப்பாடல் இது, ஏனெனில் இத்திருப்பாடலின் வழியில் நாம் நடவாவிட்டால், நமக்கு நல்லாயரின் மந்தையில் இடம்பெறத் தகுதியோ வாய்ப்போ இல்லை. விழுந்த மனிதனைப் புதிய உயரங்களுக்கு எடுத்துச் செல்லும் திருப்பாடல். விலகித் தொலைவில் அழிவின் விளிம்பில் திரிந்த உள்ளத்தைத் தட்டியெழுப்பி, கடவுளிடம் கொண்டு சேர்த்து, சீரிய வழிகளில் நடக்கப் பயிற்றும் திருப்பாடல். மொழி கடந்து, இனம் கடந்து, தலைமுறைகள் கடந்து, ஊழி கடந்து பாவ அறிக்கையின் இன்றியமையாமையையும், மன்னிப்பின் உறுதியையும், மீட்பின் மகிழ்ச்சியையும் இத்திருப்பாடல் வழங்குகிறது.

கிறிஸ்து இயேசு உரைத்த, மனம் திருந்திய மைந்தனின் உவமை ஒரு கதை என்றால், மன்னிப்பு அருளும் தந்தையாம் கடவுளுக்கு ஒரு வரலாற்றுச் சான்றாக, திருப்பாடல் 51 விளங்குகிறது. பிறன்மனை நோக்கல், வஞ்சகம், குற்றமற்ற இரத்தத்தைச் சிந்துதல், கணவனை இழந்த பெண்ணை எடுத்துக் கொள்ளுதல் - இப்படி அடுக்கடுக்கான பாவங்கள்; ஆனாலும் கருணைக் கடலான கடவுளால் மன்னிக்க முடியாத பெரிய பாவம் என்று ஏதும் இல்லை என்பதற்கு இந்தத் திருப்பாடல் சான்று. "பெரிதும் கலங்கிய உள்ளத்தின் (மன்றாட்டுத்) திருப்பாடல் இது" என்கிறார் ஸ்பர்ஜின்.

கடவுள் தாம் சீர்படுத்த நினைக்கும் ஒருவரின் வாழ்க்கையில், தண்டித்து உணர்த்தித் திருத்துமுன், ஒரு நல்வாய்ப்பாகத் தமது மென்குரலால் எச்சரிக்கிறார்; அந்த மென்குரலுக்குக் கீழ்ப்படிவோர் பேறுபெற்றோர். 🕎

பாவக் கழுவாய்த் திருப்பாடல்களில் ஒன்று (ஏனையவை: 6, 32, 38, 102, 130 & 143). திருப்பாடல் 32டுடன் பொருத்தப்பாடு உள்ள பாடல்; காலத்தால் அப்பாடல் சற்றுப் பிந்தியதாக இருக்கக் கூடும்; இப்பாடலின் மெல்லுணர்வுகளை நாம் திருப்பாடல் 32ல் காண இயலாது.

"... இறைவாக்கினர் நாத்தான் தாவீதிடம் வந்த போது..." என்பது ஒரு வரலாற்றுக் குறிப்பு; தாவீதின் மீறுதல் 2 சாமுவேல் 11:2ல் தொடங்கி எழுதப்பட்டுள்ளது; அடுத்த அதிகாரத்தின் முதல் வசனம், நாத்தானை ஆண்டவர் தாவீதிடம் அனுப்புவதில் தொடங்குகிறது. உவமையாக நாத்தான் உரையாடலைத் தொடங்குகிறார்; உரையாடல் முடியும் போது, உடனடியாக, நேரடியாக, தான் செய்த பாவத்தை தாவீது அறிக்கை செய்தார்.

கவனம் பெற வேண்டிய மற்ற செய்திகள்: வேற்றினத்தாரான, கானானின் ஆதிக் குடிகளில் ஒன்றான இத்தியர் வழிவந்த (தொடக்க நூல் 10:15, 15:20, 23:3) உரியாவுக்காகத் தாம் அருட்பொழிவு செய்த தாவீதைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் கடவுள் சற்றும் தயங்கவில்லை, தாமதிக்கவில்லை; ஓர் ஆணால் பாதிக்கப்பட்ட பெண்ணின் மகனைத் தமக்கு விருப்பமான அரசனாக அரியணையில் கடவுள் அமர்த்தி, அப்பெண்ணை அரசத் தாயாக (ராஜமாதா) உயர்த்தினார்.

திருப்பணிகளின் தந்தையான வில்லியம் கேரி, தனது இறுதிச் சடங்கின் அருளுரையின் கருப்பொருளாக, தான் உயிரோடு இருக்கும் போதே இத்திருப்பாடலைத் தெரிவு செய்து தந்தார் என்பது கூடுதல் சிறப்பு.

அமைப்பு:
வ.1-2, இரக்கத்திற்காக மன்றாட்டு
வ.3-4, பாவ அறிக்கை
வ.5-9, தாவீதின் ஆன்மத் தேடல்
வ.10-13, மீட்பின் மகிழ்ச்சியில் மன்றாட்டு
வ.14-17, மீட்கப்பட்டவரின் புகழ்ச்சிப் பாடல்
வ.18-19, அரசாட்சி கட்டப்படுதல்

வசனம் 51:1-2
"... எனக்கு இரங்கும்"
"... என் குற்றங்களைத்..."
"என் தீவினை..."
"என் பாவம்..." -
தெளிவாகத் தன் பாவத்தை உணர்ந்த தாவீதின் அறிக்கை; சொல் சாமர்த்தியமோ, சமாளித்தலோ, காரணம் சொல்லுதலோ எதுவும் துளியேனும் இல்லை.

"உமது பேரன்பு"
"உமது அளவற்ற இரக்கம்" -
கடவுளை அவர்தம் உன்னத நிலையில் வைத்துத் தன்னை முற்றிலும் கீழ்ப்படுத்தி, அரசர் தாவீதின் மன்றாட்டு.

வசனம் 51:1
"உமது அளவற்ற இரக்கம்" -
KJV, "... multitude of thy tender mercies..."

*தான் செய்த திரளான பாவங்களை மன்னிக்க ஆண்டவரின் திரளான இரக்கங்களை வேண்டிய தாவீது. கடவுளின் நியாயத்தீர்ப்பைப் பாவியான ஒருவர் வேண்டினால், அது அவரின் அழிவு.*

"*என் குற்றங்களைத் துடைத்தருளும்*" -
*தாவீதின் உள்ளத்தில் அவர் உணர்ந்த குற்றங்கள், கடவுளின் கணக்கிலிருந்த* (*விடுதலைப் பயணம்* 32:32-33) *தாவீதின் குற்றங்கள் - என்று அனைத்துக் குற்றங்களையும் துடைத்தெறிய கடவுளின் இரக்கங்களை வேண்டுகிறார் தாவீது.*

"*துடைத்தல்*" -
மேலும், வ.9.
*கறை ஏதும் இல்லாதபடித் துடைத்தல்.*

*வசனம்* 51:2
"*என் தீவினை முற்றிலும் நீங்கும் படி என்னைக் கழுவும்*" -
KJV, "wash me thoroughly" -
*மூலச் சொல்,* raw-baw, *தொடர்ந்து பலமுறை* (*கழுவுதல்*) / (wash) multiple times. *நிலைமையின் தீவிரத்தை மனதில் கொண்டு, அலசித் துவைப்பது போலல்லாமல், அடித்துக் கசக்கித் துவைத்தல் என்று பொருள் உணரலாம். அந்த அளவுக்குத் தன்னுள் பாவம் இருப்பதாக தாவீது உணர்ந்தார்.*

*வசனம்* 51:3
*உள்ளத்தில் எண்ணும் போது தாவீது உணர்ந்த தனது இழிநிலை.*

*தனது குற்றங்களை நியாயப்படுத்த தாவீது முனையவில்லை; வேறு எவர் மீதும் பழிசுமத்தவில்லை; எவ்வித மனச் சமாதானமும் செய்து கொள்ளவில்லை. புறக்காரணிகளைச் சொல்லித் தப்பிக்கும் முயற்சி, ஆண்டவரின் நீதிமன்றத்தில் எடுபடாது.*

"*என் பாவம் எப்போதும் என் மனக்கண் முன் நிற்கின்றது*" -
2 *சாமுவேல்* 11:2*க்கும்* 12:1*க்கும் இடையே எவ்வளவு காலம் இருந்தது என்பது சொல்லப்படவில்லை; போரின் காலத்தை வைத்து, ஒன்பது மாதங்கள் என்று அனுமானிக்கலாம். முழு விருப்பத்தோடு தனது மீறுதல்களை தாவீது செய்திருந்தாலும், அவருக்குள் இருந்த பாவ உணர்வை இங்கு வெளிப்படுத்துகிறார்.*
*ஆண்டியோ அரசனோ - பாவம் செய்யும் எவரும் குற்றவுணர்ச்சிகளைப் பிறருக்கு மறைத்துக் கொண்டு வாழலாம்; ஆனால் குற்றவுணர்விலிருந்து தப்ப முடியாது.*

*வசனம்* 51:4
*பார்க்க, 2 சாமுவேல் 12:13.* மேலும் பார்க்க, தொடக்க நூல் 39:9; லூக்கா 15:18.
*எவ்விதப் பாவமும் கடவுளுக்கு எதிரான கலகமே; அது கடவுள் கற்பிக்கும் வாழ்க்கை வழிக்கு எதிரானது.*

*ஒருவருக்கு எதிராக ஒரு பாவத்தைச் செயலில் செய்யத் தொடங்கும் முன்னரே, கடவுளுக்கு எதிரான பாவம் உள்ளத்தில் தொடங்கிவிடுகிறது. "பாவத்தின் அலங்கோலங்கள் அவ்வளவும், ஆண்டவரின் பார்வையில் செய்ததை தாவீது உணர்ந்தார்; கடவுளின் குழந்தையாகிய எவரும் கடவுளின் பார்வையிலிருந்து விலக முடியாது."* (*ஸ்பர்ஜின்*)

"*உம் தீர்ப்பினால் உம் நீதி...*" -
*கடவுள் நாத்தான் வழியாக வழங்கிய தீர்ப்பு* (2 *சாமுவேல்* 12:10-12).

இப்பகுதி வசனத்தை, செப்டுவஜின்ட் மொழிபெயர்ப்பில் உள்ளபடி, பவுலடிகள் உரோமையர் 3:4ல் எடுத்தாளுகிறார்.

வசனம் 51:5-6
தனது நிலைமையை எடுத்துச் சொல்லி, மெய் ஞானத்தை ஆண்டவர் அருளுமாறு தாவீது வேண்டினார்.

வசனம் 51:5
"பாவத்தோடே என் அன்னை என்னைக் கருத்தாங்கினாள்" -
நாம் ஏற்றுக் கொண்டாலும் மறுத்தாலும், பெண்ணினத்தை இழிவு செய்வதாக இவ்வசனம் உள்ளது. பலுகிப் பெருகுதல் மனித குலத்திற்கு மட்டுமல்லாமல், அனைத்து உயிர்களுக்கும் கடவுள் அருளிய ஆசி. பிள்ளைப் பேற்றின் வேதனையை மட்டுமே பெண்ணுக்குக் கூடுதலாக அளித்தாரே அல்லாமல் அதில் கடவுள் அன்னையருக்குக் கூடுதலாக எந்தத் தண்டனையையும் தரவில்லை. ஆனாலும் பாவம் செய்த ஆதாம் மற்றும் ஏவாவின் வழிவந்த மனிதன், மரபணுவியலின் அடிப்படையில் பிறப்பிலேயே பாவியாக இருக்கிறான்.

வசனம் 51:6
எளிமையான மனோதத்துவ வழியில் ஓர் உண்மை. 'எனக்கு மட்டுமே தெரிந்த நான்' என்ற நிலையிலிருந்து, 'எல்லாருக்கும் தெரிந்த நான்' என்கிற திறந்த மனநிலையை அடைதல் (from dark area of mind to the open area of mind). தனது உள்ளத்து உண்மையான நிலையை ஆண்டவரின் முன்னிலையில் ஊற்றி வெறுமையாக்கிய தாவீது, இப்போது அந்த உள்ளத்தை இறைஞானத்தால் நிரப்ப வேண்டுகிறார்.

வசனம் 51:7
ஈசோப்பினால் தூய்மைப்படுத்துதல்:
பார்க்க, விடுதலைப் பயணம் 12:22 மற்றும் எண்ணிக்கை 19:18; மேலும் எபிரேயர் 9:19.

ஈசோப் (hyssop) என்பது புதர் போல இரண்டரை அடி உயரம் வளரக்கூடிய, சிறிய வெண்ணிற மலர்களைக் கொண்ட செடி. அதன் தண்டுகளை வெட்டிப் பதப்படுத்தி, துடைப்பதற்கும், பூசுவதற்கும், இலைகளைத் தண்ணீரில் தோய்த்துத் தெளிப்பதற்கும் பயன்படுத்துவர். எனவே இஸ்ரயேலரின் தூய்மைச் சடங்குகளில் ஈசோப்பு சிறப்பிடம் பெறுகிறது.

தானே தன்னில் தூய்மையடைய இயலாது என்பதை தாவீது அறிந்திருந்தார். மோசே கற்பித்த வழியில், இரத்தத்தாலும் தண்ணீராலும் தன்னைத் தூய்மையாக்க ஆண்டவரிடம் தாவீது வேண்டுகிறார்.

"உறைபனியிலும் வெண்மை" -
பார்க்க, எசாயா 1:18; திருவெளிப்பாடு 7:14.

வசனம் 51:8 & 12
பார்க்க, 32:7-8.
மன்னிப்பில் மகிழும் மனம். கடவுள் அருளிய மகிழ்ச்சி.

"நீர் நொறுக்கிய என் எழும்புகள்" -
பார்க்க, 6:2.
பாவத்தினாலும் சஞ்சலத்தினாலும் தாவீதின் எழும்புகள் தளர்ந்து போயின. கடவுள் அருளும் ஆவியின் விளைவு அது.

வசனம் 51:9
*பார்க்க,* 32:1

வசனம் 51:10
*பாவக் கறைகளைத் துடைத்தால் மட்டும் போதாது; தூய உள்ளத்தை தாவீது வேண்டுகிறார்; புதுப்பித்து நிலைப்படுத்தும் ஆவியைத் தன் உள்ளத்தில் உருவாக்க மன்றாடுகிறார்* (*ஆவியை அருளும் இறைவாக்கு, எசேக்கியேல்* 36:26).

"*உறுதி தரும் ஆவி*' -
*பொல்லாங்கனின் இழுவைகளில் ஈர்க்கப்படாத உறுதியான ஆவி.*

"*படைத்தருளும்*" -
*எபிரேயச் சொல்,* baw-raw. *தொடக்க நூலில் படைத்தலுக்குப் பயன்படுத்திய அதே சொல். கடவுளால் மட்டுமே செய்யக்கூடிய ஒரு செயலை தாவீது கேட்கிறார்.*

வசனம் 51:11
*பார்க்க, எசேக்கியேல்* 39:29

"*உமது முன்னிலையிலிருந்து என்னைத் தள்ளி விடாதேயும்*" -
*பாவத்தில் விழுந்த ஆதாமும் ஏவாவும் ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தி விடப்பட்டனர். இப்போது தாவீது மனம் திருந்தி ஆண்டவரோடு ஒப்புரவாகினார்; ஆனால் பாவத்தினால் தோன்றிய அச்சமும் வெறுமையும் அவரிடம் இருந்தன. எனவே மென்மேலும் கடவுளோடு நெருங்கி வாழ விரும்பினார்.*

*பாவம் செய்பவரே கடவுளை விட்டு விலகிச் செல்கிறார்; கடவுளோ நல் ஆயராக, காணாமல் போன ஆட்டைத் தேடித் தம் மந்தையில் சேர்க்கிறார்.*

"*உமது தூய ஆவியை என்னிடமிருந்து எடுத்து விடாதேயும்*" -
*சவுலுக்கு நேர்ந்தது தனக்கு நேர்ந்து விடாதபடிப்* (1 *சாமுவேல்* 16:14) *பொறுத்தருள தாவீது மன்றாடுகிறார். சவுலைத் தீய ஆவி ஆட்கொண்ட வேளைகளில் தாவீது உடன் இருந்தவராயிற்றே!* (1 *சாமுவேல்* 16:23)

"*தூய ஆவி*" -
*இச்சொற்கள் இத்திருப்பாடல் தவிர, பழைய ஏற்பாட்டில், எசாயா* 63:10-11 *வசனங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன.*

குறிப்பு:
*பழைய ஏற்பாட்டில் ஆவி அருளப்படுதலும் எடுத்துக் கொள்ளப்படுதலும் உண்டு; புதிய ஏற்பாட்டிலோ, நமக்கு அருளப்படுவது உடன்படிக்கையின் ஆண்டவராகிய ஆவியானவர். உடன்படிக்கையின் அடிப்படையில், தூய ஆவியானவர் நம்மிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட மாட்டார்.*

வசனம் 51:12-13
*மீட்பின் களிப்பு.*

*இத்திருப்பாடலின் நோக்கம், மீட்கப்பட்ட நாம் நற்சான்றோடு மீட்பின் வழிகாட்டிகளாக வாழ்வதுவே!*
*நற்சாட்சியை நாம் காத்துக் கொண்டு மற்றவர்களுக்கு வழிகாட்டி வாழ்கிறோமா?*

*வசனம்* 51:14
*பார்க்க*, 9:12; *எசாயா* 1:15-16.
*உரியாவைக் கொன்ற தாவீதின் பாவம் திட்டமிட்டுக் கருக் கொண்டு உருவாகிச் செயல்படுத்தப்பட்டது.*

*உரியாவின் மனைவியை எடுத்துக் கொண்ட பாவம் இங்கே சொல்லப்படவில்லை; ஆனால் சதி செய்து உரியாவைக் கொன்றது நினைவூட்டப்படுகிறது.* (*திருப்பாடல்களின் தலைப்புகள் ஒரு பிற்காலச் சேர்க்கை என்பதை மனதில் கொள்ளுங்கள். பாடல்களை இயற்றியவர்கள் தலைப்புகளைத் தரவில்லை*!)

*மண்ணில் சிந்தப்பட்ட குற்றமற்ற இரத்தம் ஆண்டவரை நோக்கி முறையிடுமன்றோ*!

*வசனம்* 51:15-17
*மீட்கப்பட்டவரின் புகழ்ச்சிப் பாடல்.*

*கடவுள் ஏற்கும் பலி எது என்பதை தாவீது இங்கு பறைசாற்றுகிறார். முந்தைய திருப்பாடலின் தொடர்ச்சியாக இப்பகுதி இருக்கிறது.*

*வசனம்* 51:17
*நொறுங்கிய நெஞ்சின் விளைவு என்ன*?
*நொறுங்கிய பானையின் பயனென்னவோ அது போன்றதே நொறுங்கிய நெஞ்சம்* (*ஸ்பர்ஜின்*). *இனி அதில் 'தான்' என்பது இராது; கடவுளுக்கு ஏற்புடையவைகளைச் சிந்தித்துச் செயல்படுவதாக அது இருக்கும்.*

*இத்தகைய மறு உருவாக்கத்தை நம்மால் எண்ணிப் பார்க்க முடிகிறதா*?
*மனிதனால் முடியாதது கடவுளால் ஆகும்.*

*வசனம்* 51:18-19
*சீயோன் பாதுகாக்கப் படுதலும், கடவுளின் இல்லம் நேர்மையாளரின் பலிகளால் நிறைதலும்.*

*இது சிறை மீண்டோரின் குரல் என்ற கருத்து உள்ளது.* baw-naw *என்கிற எபிரேயப் பதம்* build - building - built *என்று பொருள் படும்; அரிதாக,* repair *என்றும் பொருள் கொள்ளலாம். சில மொழிபெயர்ப்புகள்* rebuild *என்று இந்த எபிரேயச் சொல்லைப் பொருள் கொண்டுள்ளன; அதன் விளைவே, கடைசி இரண்டு வசனங்கள் பிற்காலத்தியச் சேர்க்கை என்கிற கருத்தாக்கம்.*

*ஆனால், அது சரியன்று; ஒரு கணவனாக, ஒரு தந்தையாக அல்லது ஒரு குடும்பத் தலைவனாக மட்டும் தாவீது குற்றம் செய்யவில்லை; அவர் இஸ்ரயேலின் அரசராகக் தன் குடிகளைக் காக்கும் கடமையிலிருந்து தவறினார்; அரசருக்கு உரிய அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, குற்றமற்ற இரத்தத்தைச் சிந்தி ஒரு பெண்ணைக் கவர்ந்து கொண்டார். இப்போது பிழை உணர்ந்து திருந்திய நிலையில், தனது அரசாட்சி கட்டப்படவும், இஸ்ரயேல் பாதுகாக்கப் படவும், தனது மக்களுக்காக அவர் மன்றாடினார். தனது இறுதிக் காலத்தில்,* "*நானே குற்றவாளி... இந்த ஆடுகள் என்ன செய்தன*?" *என்று கேட்டவர் தாவீது அல்லவா*! (2 *குறிப்பேடு* 21:17)
🕎

*பாவம் செய்த பலரையும் பைபிளில் நாம் பார்க்கிறோம். ஒருசேர,* 2 *சாமுவேல்* 11&12 *அதிகாரங்களை இத்திருப்பாடலோடு சேர்த்து வாசியுங்கள். மனம் நொறுங்கித் திருந்தி மன்னிக்க மன்றாடிய தாவீதைப் போல நாம் வேறு ஒருவரையும் காண இயலாது; திருந்தி வருவோரை உடனே ஏற்றுக்கொள்ளக் கடவுள், இரக்கமும், கரிசனையும், கிருபையும்*

நிறைந்தவராக இருக்கிறார். அவரால் மன்னிக்கக் கூடாத பெரிய பாவம் என்று எதுவும் இல்லை. கடவுளின் மன்னிப்பை நாம் நாடுகிறோம் எனில், நம்மில் நொண்டிச் சமாதானம் இருக்கலாகாது; அரை மனதுடன் மனந்திரும்புதல் இருக்கலாகாது; மாறாக, பாவம் செய்ததன் துயரையும், அறிக்கை செய்தலில் நம்பிக்கையையும் கடவுள் நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார்.

மனம் திருந்திய மைந்தன் உவமையை கிறிஸ்து இயேசு சொல்ல நாம் வாசித்திருக்கிறோம். அதற்குச் சரியான வரலாற்றுச் சான்றாக தாவீதின் வாழ்க்கையில் இந்நிகழ்வு இருக்கிறது. ஆண்டவரிடமிருந்து வெகு தொலைவு சென்று விட்டீர்களா? மகன் திருந்தி வருவான் என்று எதிர்பார்த்து நம் விண்ணகத் தந்தை காத்திருக்கிறார். உங்கள் முடிவு என்ன?

## 19 திருப்பாடல் 52

(இறைவனின் தீர்ப்பும் திருவருளும்)

*பாடகர் தலைவர்க்கு; அகிமெலக்கின் வீட்டுக்கு தாவீது போனாரென்று ஏதோமியன் தோயேகு சவுலுக்கு அறிவித்த போது தாவீது பாடிய அறப் பாடல்*

1 வலியோனே! தீமை செய்வதில்
ஏன் பெருமை கொள்கின்றாய்?
இறைவனின் பேரன்பு
எந்நாளும் உள்ளது.
2 கேடுவிளைவிக்க
நீ திட்டமிடுகின்றாய்;
உனது நா
தீட்டிய கத்தி போன்றது;
வஞ்சகத்தில் தேர்ந்தோன்
நீ அன்றோ!
3 நன்மை செய்வதைவிடத்
தீமை செய்வதையே விரும்புகின்றாய்;
உண்மை பேசுவதைவிட
பொய் பேசுவதையே விரும்புகின்றாய்.
(சேலா)
4 நரம்பில்லா நாவுடையோனே!
நீ விரும்பும் சொற்கள் அனைத்தும்
கேடு விளைவிப்பனவே!
5 ஆகவே! கடவுள் உன்னை
என்றும் மீளாதபடி நொறுக்கிவிடுவார்;
உன்னைத் தூக்கி எறிவார்;
கூடாரத்தினின்று உன்னைப்
பிடுங்கி எறிவார்;
உயிர் வாழ்வோரின் உலகினின்று
உன்னை வேரோடு களைந்துவிடுவார்.
(சேலா)
6 நேர்மையாளர் அதன்
கடுமையைக் கண்டு திகிலடைவர்;

மேலும், உன்னை
எள்ளி நகையாடிக் கூறுவர்;
7 'இதோ! பாருங்கள்;
இவன் தான் கடவுளைத்
தன் புகலிடமாய்க் கொள்ளாதவன்;
தன் செல்வப் பெருக்கில்
நம்பிக்கை வைத்தவன்;
அழிவுச் செயலையே
புகலிடமாய்க் கொண்டவன்!'
8 நானோ, கடவுளின் இல்லத்தில்
பச்சை ஒலிவமரக்கன்றுபோல்
இருக்கின்றேன்;
கடவுளின் பேரன்பில்
எப்போதும் நிலையாக
நம்பிக்கை வைத்திருக்கின்றேன்.
9 கடவுளே! நீர் இவ்வாறு
எனக்குச் செய்துள்ளதால்
உமக்கு என்றென்றும்
நன்றி கூறுவேன்;
உம் அன்பரின் முன்னிலையில்
உம் பெயர்மீது
நம்பிக்கை கொள்வேன்;
இதுவே நன்று.

திருப்பாடல் 52:1-9

**சிந்தனைக்கு**

திருப்பாடல் 51 தொடங்கி அடுத்த 15 திருப்பாடல்களும் தாவீதுக்கு உரியன என்று பார்த்தோம். அவற்றில், 52 முதல் 64 வரை உள்ள ஒவ்வொரு திருப்பாடலிலும், தாவீதுக்கு நேர்ந்த கேடு குறிப்பிடப்பட்டிருப்பதையும், தாவீதின் புலம்பலையும் மன்றாட்டையும் உணரலாம். 52 முதல் 55 வரை உள்ளவை மஸ்கீல் என்னும் அறவுரைப் பாடல்கள். தீயோரின் வாழ்க்கையோடு, ஆண்டவரின் அடியாரின் வாழ்க்கையை ஒப்பிட்டு, தாவீது இத்திருப்பாடலை எழுதியுள்ளார்.

1 சாமுவேல் 21 ~ 22 பகுதியில், இத்திருப்பாடல் தொடர்புடைய செய்திகள் உள்ளன. கடும் அதிர்ச்சி தரும் வகையில் ஏதோமியனும், சவுலின் மந்தைகளை மேய்ப்பவனுமான தோயேகு, சவுலின் ஆணைப்படி, லேவியரில் குருக்கள் வழிமரபில் வந்த, தலைமைக்குரு உள்பட ஏபோது தரித்திருந்த 85 பேரையும் பெண்களையும் சிறுவர்களையும் அவர்களுக்குரிய மந்தைகள் அனைத்தையும் வெட்டிக் கொன்றான். இவ்வளவு பெரிய இழப்புக்குப் பிறகு தாவீது எழுதிய புலம்பல், பேரிழப்பு ஒன்றின் ஆழத்தை வெளிக்காட்டும் அளவில் இல்லை எனலாம். மேலும் 1 சாமுவேல் 22:22ல், குருக்கள் கொல்லப்படத் தானே காரணம் என்று சொன்ன தாவீது, அந்த உணர்வு ஏதும் இல்லாத வகையில் இத்திருப்பாடலை எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.
🕎

அமைப்பு:
வ.1-4, பொய்மையையும் பொல்லாங்கையும் விரும்பும் தீயோன்
வ.5-7, தீயோரின் முடிவு
வ.8-9, தாவீதின் நம்பிக்கையும் நன்றியும் 🕎

வசனம் 52:1
மேலும், வ.7.

"வலியோனே! தீமை செய்வதில் ஏன் பெருமை..." -
தாவீதின் கிண்டல்; போர்க் கருவிகளை ஏந்தாத குருக்களையும் பெண்களையும் சிறுவர்களையும், அதிலும் அரசரின் ஆதரவோடு, கொன்று குவிப்பதில் என்ன வலிமை உள்ளது? அவன் உண்மையில் வலியோன் அல்லன் - கொடூரன்!

"இறைவனின் பேரன்பு எந்நாளும் உள்ளது" -
ael என்ற மூலச் சொல் தமிழில் இறைவன் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அது வல்லமை உடையவர், ஆற்றல் மிக்கவர் என்றும் பொருள்படும். "வலியோனுக்கு" எதிராக வல்லவரின் பேரன்பே நிலைத்தது என்கிறார் திருப்பாடகர்.

வசனம் 52:2-4
எண்ணம் > திட்டமிடல் > சொல் > செயல் > என தீயோனின் விருப்பம் எல்லாம் கேடு விளைவிப்பதாக உள்ளது.

"உனது நா தீட்டிய கத்தி போன்றது" -
தீயோரின் நாவைக் குறித்து: பார்க்க, 31:18, 55:21, 57:4, 64:3, 59:7, 140:3; யாக்கோபு 3:5.
குருக்களுக்குக் கேட்டைத் தந்தது, காலம் பார்த்து சவுலிடம் காட்டிக் கொடுத்த தீயோனின் நாவு.

வசனம் 52:5
தீயோருக்குக் கடவுள் செய்வது:
- மீளாதபடி நொறுக்குவார்
- தூக்கி எறிவார்
- பிடுங்கி எறிவார்
- வேரோடு களைவார்.
இவ்வாறு கொடியவன் அவன் எதிர்பாராத ஒரு நாளில், கடுமையான வழியில் தண்டிக்கப்படுவான்.

வசனம் 52:6-7
தீயோருக்கு நேரிடும் அழிவைக் காணும் நேர்மையாளரின் கூற்றுகள்.

"நேர்மையாளர் ... திகிலடைவர்" -
படிப்பினையான நியாயத்தீர்ப்பு.
கடவுளின் கடுமையான தீர்ப்பைத் தீயோர் பெறும் போது, நேர்மையாளர் மென்மேலும் தீங்குக்கு அஞ்சுகின்றனர்; ஆனால் அதைக் காணும் மற்ற தீயோர்? - அவனது அழிவிலிருந்து எந்தப் படிப்பினையையும் பெறுவதில்லை.

வசனம் 52:7
தீயோனின் இயல்புகள்.
- கடவுளை நாடாதவன்;
- செல்வப் பெருக்கில் நம்பிக்கை வைப்பவன்;
- கொடிய வழிகளில் அழிவைத் தந்து, அதனால் ஏனையோர் அவன் மீது கொள்ளும் அச்சத்தில் வாழ்பவன்;
- இவை அனைத்தும் தோயேகுக்குப் பொருந்துவன.

வசனம் 52:8
பார்க்க, 92:12-13
ஒலிவ மரம் நெடுங்காலம் வாழ்வது (சராசரி ஆயுட்காலம், 500 ஆண்டுகள்!); அதிலும் தாவீது, கடவுளின் இல்லத்தில் பசுமையாக வாழும் ஒலிவ மரத்தோடு தன்னை ஒப்பிடுகிறார்.

வசனம் 52:8-9
நன்று என்பது யாது?
* கடவுளின் இல்லத்தில் வளர்வது
* கடவுளின் பேரன்பில் நிலைத்திருப்பது
* கடவுளின் கருணைக்கு நன்றி செலுத்துவது
* நம்பிக்கையில் இறை அன்பரோடு இணைந்து வாழ்வது
🕎

தாவீது தீயோனாகிய தேயேகோடு தன்னை ஒப்பிட்டு இத்திருப்பாடலைப் பாடியுள்ளார்.

இப்போது, "வளமான நிலத்தில் தழைத்தோங்கும் மரம்போல் கொடிய நெஞ்சங்கொண்ட" தேயோகு செழித்திருக்கலாம் (37:35).

ஆனாலும், "ஆண்டவரின் இல்லத்தில் நடப்பட்டோர் நம் கடவுளின் கோவில் முற்றங்களில் செழித்தோங்குவர். அவர்கள் முதிர் வயதிலும் கனிதருவர்; என்றும் செழுமையும் பசுமையுமாய் இருப்பர்" (92:13-14) என்று தாவீது முடிக்கிறார்.

நாம் எங்கே வேர் கொண்டிருக்கிறோம்?
ஆண்டவருடைய வாக்கில் வேர் கொண்டு வாழ்ந்தோமானால், பயனடைவோம்; பயன்தரும் கனிகளைத் தருவோம்.

✝

## 19 திருப்பாடல் 53

(இறைப் பற்று இல்லார்)
(திருப்பாடல் 14)

*பாடகர் தலைவர்க்கு; 'நோயுற்று' என்ற மெட்டு; தாவீதின் அறவுரைப் பாடல்*
1 "கடவுள் இல்லை" என
அறிவிலிகள் தம் உள்ளத்தில்
சொல்லிக் கொள்கின்றனர்;
அவர்களுள் சிலர் கெட்டு
அருவருப்பான செயல்களில்
ஈடுபடுகின்றனர்;
நல்லது செய்வார் யாரும் இல்லை.
2 கடவுள் விண்ணகத்தினின்று
மானிடரை உற்றுநோக்குகின்றார்;
மதிநுட்பமுள்ளவர்,
கடவுளை நாடுபவர்
எவராவது உண்டோ

என்று பார்க்கின்றார்.
3 எல்லோரும் நெறிபிறழ்ந்தனர்;
ஒருமிக்கக் கெட்டு போயினர்;
நல்லது செய்வார் யாரும் இல்லை;
ஒருவர் கூட இல்லை.
4 'தீங்கிழைக்கும் யாவரும்
அறிவை இழந்துவிட்டார்களோ?
உணவை விழுங்குவதுபோல்
என் மக்களை விழுங்கப் பார்க்கின்றார்களே!'
5 எனவே அவர்கள்
இதுவரை கண்டிராத முறையில்
பேரச்சத்தால் நடுநடுங்குவர்;
இறைமக்களை ஒடுக்கியோரின் எலும்புகளைக்
கடவுள் சிதறடிப்பார்;
கடவுள் அவர்களைக் கைவிட்டதால்
அவர்கள் மானக்கேடு அடைவர்.
6 சீயோனிலிருந்து இஸ்ரயேலருக்கு
மீட்பு வருவதாக!
கடவுள் தம் மக்களுக்கு
மீண்டும் வளமான வாழ்வை அருளும்போது,
யாக்கோபின் இனத்தார் களிகூர்வராக!
இஸ்ரயேல் மக்கள் அகமகிழ்வராக!

திருப்பாடல் 53:1-6

**சிந்தனைக்கு**

சில மாற்றங்கள் இருப்பினும், திருப்பாடல் 14ன் வேறொரு வடிவமே இப்பாடல். இருக்கும் சிறிய மாற்றங்களில் பெரிய மாற்றம்: இப்பாடலின் வ.5, கூடுதல் சொற்றொடரோடு அங்கு வ.5 மற்றும் வ.6 என்று இருக்கிறது. எனவே திருப்பாடல் 14ன் எளிய வடிவமே திருப்பாடல் 53 எனலாம். இசைநயம் மற்றும் பொருட் செறிவுக்காகத் திருப்பாடல் 14 இவ்வாறு எளிமையாக்கப்பட்டிருக்கலாம்.

மற்றபடி, திருப்பாடல் 14ல், யாவே என்பது இப்பாடலில் (வ.2&6) எலோஹீம் என்று காணப்படுகிறது. இது அடிப்படையில் தொகுதி 1 மற்றும் தொகுதி 2 - இவற்றுக்கு இடையில் உள்ள மாறுபாடே அன்றி வேறில்லை.

மேலும் குறிப்புகளுக்கு, திருப்பாடல் 14ன் சிந்தனைக்கு பகுதியைப் பாருங்கள்.

✝

## 19 திருப்பாடல் 54

*(எதிரியிடமிருந்து காக்க வேண்டுதல்)*

*பாடகர் தலைவர்க்கு; நரம்பிசைக் கருவிகளுடன்; தாவீது தங்களிடம் ஒளிந்து கொண்டிருப்பதாகச் சிப்பியர் சவுலிடம் தெரிவித்த போது, தாவீது பாடிய அறவுரைப் பாடல்*

1 கடவுளே,
உமது பெயரின் வல்லமையால்
என்னைக் காப்பாற்றும்;
உமது ஆற்றலினால்
எனது நேர்மையை நிலைநாட்டும்.
2 கடவுளே,
என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்;
என் வாயின் சொற்களுக்குச்
செவிகொடுத்தருளும்.
3 ஏனெனில், செருக்குற்றோர்
எனக்கு எதிராய் எழுந்துள்ளனர்;
கொடியவர் என் உயிரைப்
பறிக்கப் பார்க்கின்றனர்;
அவர்கள் கடவுளை
அறவே நினைப்பதில்லை.
(சேலா)
4 இதோ! கடவுள் எனக்குத்
துணைவராய் இருக்கின்றார்;
என் தலைவர் என் வாழ்வுக்கு
ஆதரவாய் உள்ளோருடன் இருக்கின்றார்;
5 என் எதிரிகள்
எனக்குச் செய்ய விரும்பும் தீமையை
அவர்கள் மேலேயே
அவர் திருப்பிவிடுவாராக!
'உம் வாக்குப் பிறழாமைக்கு ஏற்ப
அவர்களை அழித்தொழியும்!
6 தன்னார்வத்தோடு
உமக்குப் பலி செலுத்துவேன்;
ஆண்டவரே,
உமது பெயருக்கு
நன்றி செலுத்துவேன்;
இதுவே நன்று.'
7 ஏனெனில், அவர் என்னை
எல்லா இன்னல்களினின்றும் விடுவித்துள்ளார்;
என் எதிரிகளின் வீழ்ச்சியை
நான் கண்ணாராக் கண்டுள்ளேன்.

திருப்பாடல் 54:1-7

**சிந்தனைக்கு**

தலைப்பில் காணப்படும் நெகீனாத் என்னும் சொல் விளக்கத்திற்கு, திருப்பாடல் 4, சிந்தனைக்கு பகுதியை வாசிக்கவும்.

தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகள், 1 சாமுவேல் 23:19-28 பகுதியில் உள்ளன. இதற்குப் பின்னரும் ஒருமுறை சிப்பியர் தாவீதை சவுலிடம் காட்டிக் கொடுத்தனர் (1 சாமுவேல் 26). இப்பாடல் முதல் முறை காட்டிக் கொடுத்தபோது எழுதப்பட்டது என்ற கருத்தே சூழ்நிலைகளின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளத் தக்கது. சிப்பியர் என்போர் யூதாவின் மலைப் பகுதியில், எபிரோனுக்கு அருகே, சீபு (Ziph) (யோசுவா 15:24) என்ற நகர்வாசிகள். அந்நகரை ஒட்டிய மலைப் பகுதியில், சிறுகூட்டத்தோடு தாவீது பதுங்கி இருந்தார். சிப்பியர் அளித்த செய்தியின் அடிப்படையில், சவுலின் வீரர்கள் சூழ்ந்து தாவீதை நெருங்கிய வேளையில், எல்லையில் பெலிஸ்தியர் தாக்க வரவே, தேடலைக் கைவிட்டு சவுல் திரும்பிச் சென்றார். அப்போது தாவீது பாடிய பாடல்.

அமைப்பு:
வ.1-3, சுற்றி வளைக்கப்பட்ட வேளையில் தாவீதின் மன்றாட்டு
வ.4, நம்பிக்கையை அறிக்கை செய்தல்
வ.5-7, மீட்பின் களிப்பில் நன்றிப் பாடல்

வசனம் 54:1
"உமது பெயரின் வல்லமையால்" -
தன்னையும் தன் ஆற்றலையும் சாராமல், கடவுளின் திருப்பெயரையும் வல்லமையையும் சார்ந்து வாழ்ந்த தாவீது. நெருக்கடியில் இருந்தாலும், "கடவுளே" என்று அழைத்து மன்றாடி நாம் முன்னேறிச் செல்ல, அப்பெயரே போதுமன்றோ!
- நெருக்கத்தில் தம்மை அழைத்த தாவீதை கடவுளும் விடுவித்தாரே!

"நேர்மையை நிலைநாட்டும்" -
தனக்காக வழக்காடும் தாவீது. நேர்மையற்ற வழியில் சவுல் தாவீதை வேட்டையாடத் தேடுகிறார்; தாவீதின் யூதா வழிமரபினரான சிப்பியரோ, நெறிமுறைகளைப் பாராமல் குற்றமற்ற தாவீதை சவுலிடம் காட்டிக் கொடுத்தனர். எனவே தனது நேர்மையை நிலைநாட்டுமாறு கடவுளிடம் தாவீது வேண்டுகிறார்.

வசனம் 54:3
"செருக்குற்றோர்" -
பார்க்க, 86:14.
மூலச் சொல் zoor என்பதன் அடிப்படையில் அன்னியர்.

யூதா வழிமரபினரான சிப்பியர், தாவீதுக்கும் இறைத்திட்டத்திற்கும் எதிராக தாவீதை சவுலிடம் காட்டிக் கொடுக்க முனைந்தனர்; அதனால் அவர்களைச் செருக்குற்றோர் என்று தாவீது கடவுளிடம் முறையிட்டார்.
"...ஆனால் அவரைக் காட்டிக் கொடுக்கிறவனுக்குக் கேடு!" (மாற்கு 14:21)

வசனம் 54:4
"கடவுள் எனக்குத் துணைவர்..." -
பார்க்க, 33:20, 44:26, 124:8.
வேட்டையாடப்பட்டார்; சுற்றி வளைக்கப்பட்டார்; ஆயினும் தாவீது கடவுளையே பற்றிக் கொண்டார். தன்னைச் சூழும் எதிரிகளின் மீது தனது கவனத்தை அவர் செலுத்தவில்லை; அவருடைய நாட்டமெல்லாம் கடவுளின் பாதுகாப்பே!
"என் தலைவர் என் வாழ்வுக்கு ஆதரவாய் உள்ளோருடன் இருக்கிறார்" -

இன்னல்கள் நடுவே தாவீதுக்கு ஆதரவாகக் கரம் கோர்த்தோருக்காக, தாவீதின் மன்றாட்டு. இதற்கு முன்னர், தாவீதுக்கு உதவி செய்த தலைமைக் குருவும் ஏனைய குருக்களும் கொல்லப்பட்ட நிலையில் (திருப்பாடல் 52) தனக்கு ஆதரவளிப்போருக்கான தாவீதின் மன்றாட்டு.

நமக்கு உதவியாக நம்முடன் இருப்போருக்காக நாம் மன்றாடுகிறோமா?

வசனம் 54:5
"என் எதிரிகள் எனக்குச் செய்ய விரும்பும் தீமையை அவர்கள் மேலேயே அவர் திருப்பிவிடுவாராக!" -
பார்க்க, நீதிமொழிகள் 26:27.
தாவீதை சவுல் சுற்றி வளைத்த வேளையில், எல்லைகளைச் சூழ்ந்து கொண்ட பெலிஸ்தியர் (1 சாமுவேல் 23:27).

"உம் வாக்குப் பிறழாமைக்கு ஏற்ப அவர்களை அழித்தொழியும்!" -
சவுலின் சாவு வரை தனது இந்த மன்றாட்டில் தாவீது உறுதியாக இருந்தார். இறைத்திட்டம் தாவீது அரசராக வேண்டும் என்பது; சவுலின் திட்டங்கள் அனைத்தும் தாவீதை அழிக்க வேண்டும் என்பது; இந்த நிகழ்வுக்குப் பிறகு இரண்டு முறை சவுலைக் கொல்ல வாய்ப்புகள் வந்த போதிலும், தாவீது அவரைக் கொல்லவில்லை; அது மட்டுமல்லாமல், தன்னோடிருந்தோரும் அவரைக் கொல்ல அனுமதிக்கவில்லை. அருட்பொழிவு செய்து, அழைத்தவர் உண்மையுள்ளவர்! தம் வாக்கை அவரே நிறைவேற்றுவார்!

வசனம் 54:6
பலி செலுத்துதலைக் குறித்துத் தொடர்ந்து ஒவ்வொரு திருப்பாடலும் பேசுகிறது.

எது நன்று?
வ.6 & 52:9
 * நன்றிப் பலி
 * தன்னார்வப் பலி
 * இறையன்பர் முன்னிலையில் திருப்பெயரில் நம்பிக்கையை அறிக்கை செய்தல்

வசனம் 54:7
நம்பிக்கையின் வெற்றி முழக்கம். சுற்றி வளைக்கப்பட்டார், ஆயினும் மயிரிழையில் தப்பினார் அல்லவா!
(1 சாமுவேல் 23:26-28)

இறைமீட்பைத் தன் கண்களால் கண்டார்; அதனைச் சான்று பகர்கின்றார்.
நிறைந்த அவையில் மீட்பை அறிவிக்க மறவோம்!

✝

## 19 திருப்பாடல் 55

*(காட்டிக் கொடுக்கப்பட்டவரின் மன்றாட்டு)*

*பாடகர் தலைவர்க்கு; நரம்பிசைக் கருவிகளுடன்; தாவீதின் அறவுரைப் பாடல்*
1 கடவுளே!
என் மன்றாட்டுக்குச்
செவி சாய்த்தருளும்;
நான் முறையிடும் வேளையில்
உம்மை மறைத்துக் கொள்ளாதேயும்.
2 என் விண்ணப்பத்தைக் கேட்டு
மறுமொழி அருளும்;
என் கவலைகள்
என் மன அமைதியைக்
குலைத்துவிட்டன.
3 என் எதிரியின் கூச்சலாலும்,
பொல்லாரின் ஒடுக்குதலாலும்
நடுங்குகின்றேன்;
ஏனெனில், அவர்கள் எனக்கு
இடையூறு பல செய்கின்றனர்;
சினமுற்று என்னைப் பகைக்கின்றனர்.
4 கடுந்துயரம் என் உள்ளத்தைப் பிளக்கின்றது;
சாவின் திகில் என்னைக் கவ்விக்கொண்டது.
5 அச்சமும் நடுக்கமும்
என்னை ஆட்கொண்டன;
திகில் என்னைக் கவ்விக்கொண்டது.
6 நான் சொல்கின்றேன்:
'புறாவுக்கு உள்ளது போன்ற
சிறகுகள் எனக்கு யார் அளிப்பார்?
நான் பறந்து சென்று இளைப்பாறுவேனே!
7 இதோ! நெடுந்தொலை சென்று,
பாலை நிலத்தில் தஞ்சம் புகுந்திருப்பேனே!
(சேலா)
8 பெருங்காற்றினின்றும்
புயலினின்றும் தப்பிக்கப்
புகலிடம் தேட விரைந்திருப்பேனே!
9 என் தலைவரே!
அவர்களின் திட்டங்களைக் குலைத்துவிடும்;
அவர்களது பேச்சில் குழப்பத்தை உண்டாக்கும்;
ஏனெனில், நகரில்
வன்முறையையும் கலகத்தையும்
காண்கின்றேன்'.
10 இரவும் பகலும் அவர்கள்
அதன் மதில்கள் மேல் ஏறி
அதைச் சுற்றி வருகின்றனர்;
கேடும் கொடுமையும்
அதில் நிறைந்திருக்கின்றன.
11 அதன் நடுவே இருப்பது அழிவு;
அதன் தெருக்களில் பிரியாதிருப்பன

கொடுமையும் வஞ்சகமுமே!
12 என்னை இழித்துரைக்கின்றவன்
என் எதிரியல்ல;
அப்படியிருந்தால் பொறுத்துக் கொள்வேன்;
எனக்கெதிராய்த் தற்பெருமை கொள்பவன்
எனக்குப் பகைவன் அல்ல;
அப்படியிருந்தால், அவனிடமிருந்து
என்னை மறைத்துக் கொள்வேன்.
13 ஆனால், அவன் வேறு யாரும் அல்ல;
என் தோழனாகிய நீயே;
என் நண்பனும்
என்னோடு நெருங்கிப்
பழகினவனுமாகிய நீதான்.
14 நாம் ஒன்று சேர்ந்து உரையாடினோம்;
கடவுளின் இல்லத்தில்
பெருங்கூட்டத்தினிடையே நடமாடினோம்;
15 என் எதிரிகளுக்குத் திடீரெனச் சாவு வரட்டும்;
அவர்கள் உயிரோடு பாதாளத்தில் இறங்கட்டும்;
ஏனெனில் அவர்கள் தங்குமிடத்தில்
அவர்கள் நடுவிலேயே தீமை புகுந்து விட்டது.
16 நான் கடவுளை நோக்கி மன்றாடுவேன்;
ஆண்டவரும் என்னை மீட்டருள்வார்.
17 காலை, நண்பகல், மாலை வேளைகளில்
நான் முறையிட்டுப் புலம்புகின்றேன்;
அவர் என் குரலைக் கேட்டருள்வார்.
18 அணிவகுத்து என்னை
எதிர்த்து வந்தோர் மிகப் பலர்;
என்னோடு போரிட்டோர் கையினின்று
அவர் என்னை விடுவித்துப் பாதுகாத்தார்.
19 தொன்றுதொட்டு
அரியணையில் வீற்றிருக்கும் கடவுள்
எனக்குச் செவிசாய்ப்பார்;
அவர்களைத் தாழ்த்திவிடுவார்;
(சேலா)
ஏனெனில், அவர்கள்
தம் நெறிமுறையை மாற்றிக் கொள்ளவில்லை;
கடவுளுக்கு அஞ்சுவதும் இல்லை.
20 தன்னோடு நட்புறவில் இருந்தவர்களை
எதிர்த்து அந்த நண்பன்
தன் கையை ஓங்கினான்;
தன் உடன்படிக்கையையும் மீறினான்.
21 அவன் பேச்சு
வெண்ணெயிலும் மிருதுவானது;
அவன் உள்ளத்திலோ போர்வெறி;
அவன் சொற்கள்
எண்ணெயிலும் மென்மையானவை;
அவையோ உருவிய வாள்கள்.
22 ஆண்டவர் மேல்
உன் கவலையைப் போட்டுவிடு;

அவர் உனக்கு ஆதரவளிப்பார்;
அவர் நேர்மையாளரை
ஒருபோதும் வீழ்ச்சியுற விடமாட்டார்.
23 கடவுளே, நீர் அவர்களைப்
படுகுழியில் விழச்செய்யும்;
கொலைவெறியரும் வஞ்சகரும்
தம் ஆயுள் காலத்தில்
பாதிகூடத் தாண்டமாட்டார்;
ஆனால், நான்
உம்மையே நம்பியிருக்கின்றேன்.

திருப்பாடல் 55:1-23

**சிந்தனைக்கு**

தலைப்பில் வரலாற்றுக் குறிப்பு ஏதும் இல்லை. ஆனால் பாடலில் ஒரு வரலாற்றுக் குறிப்பு உள்ளது: வ.9-15 பகுதியில், தாவீதுக்கு உற்ற துணையாக இருந்த ஒருவர், அவருக்கு எதிராக இறங்கி நகரில் கலவரம் செய்வதாக வருகிறது; ஆனால் அவர் யார் என்பதற்கு எந்தக் குறிப்பும் இல்லை. சிலர் தாவீது இங்குக் குறிப்பிடுவது, அப்சலோம் (2 சாமுவேல் 15 ~ 18) என்கின்றனர்; அப்சலோமின் சாவை தாவீது ஒருபோதும் விரும்பியதில்லை என்பதால், இந்த முன்மொழிவை ஏற்க முடியாது. அகிதோபல் பெயரைச் சிலர் குறிப்பிடுகின்றனர்; ஆனால் தாவீதுக்கு அவன் அவ்வளவு நெருக்கமானவன் என்று சொல்ல முடியாது. எனவே, எதிரியாக மாறிய பெயரற்ற ஒரு நண்பனைக் குறிக்கும் பாடல் என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

அமைப்பு:
வ.1-3, ஒடுக்கப்பட்டவரின் துயரில் முறையீடு
வ.4-8, அச்சத்திற்கு எதிரான போராட்டம்
வ.9-11, எதிரிகளின் செயல்களை விவரித்து ஏறெடுத்த மன்றாட்டு
வ.12-14, காட்டிக் கொடுத்த நண்பனைக் குறித்த கசப்புணர்வு
வ.15, எதிரிகளின் சாவைக் காணும் விருப்பம்
வ.16-19, துன்ப வேளையில் கடவுள் மீது நம்பிக்கை
வ.20-21, நண்பனின் வஞ்சனைகள்
வ.22-23, நம்பிக்கையோடு கடவுளிடம் கவலைகளைக் கையளித்தல்

வசனம் 55:2
"என் கவலைகள் என் மன அமைதியைக் குலைத்து விட்டன" -
கவலைகளின் தன்மை.

வசனம் 55:3
"...எதிரி... பொல்லார்..." -
எதிரியும் அவனோடு சேர்ந்து கொண்ட பொல்லார் பலரும் இருந்தாலும், இப்பாடலின் புலம்பல் எதிரி என்னும் ஒற்றை மனிதனான முன்னால் நண்பனைக் குறித்தே உள்ளது.

வசனம் 55:4
எதிரிகளோடு தன் நண்பன் சேர்ந்து கொண்ட பிறகு தாவீதின் கடுந்துயர்.

"சாவின் திகில்" -
இனம் புரியாத, முன்னர் எப்போதும் அறிந்திராத அச்சமூட்டும் நிலை. திகில், இதற்கு இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேயச் சொல், ay-maw "ஏய்மா" என்பது. இச்சொல், தொடக்க நூல் 15:12லும், விடுதலைப் பயணம் 15:16லும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வசனங்களின் ஆழத்தை உணர்ந்தால், தாவீதின் துயரின் ஆழத்தை உணர இயலும்.

வசனம் 55:6-8
"புறாவுக்கு உள்ளது போன்ற சிறகுகள்" -
தாவீதின் வேடிக்கையான கற்பனை. தப்பிச் செல்லப் பறவையின் சிறகுகள் வேண்டும் என்று கேட்டதற்கு மாறாக, எதிரியை மேற்கொள்ள காட்டெருதின் ஆற்றல் வேண்டும் என்று தாவீது கேட்டிருக்கக் கூடாதா! (ஸ்பர்ஜின்)

ஓரிடம் விட்டு வேறிடம் சென்றாலும், சிக்கல்கள் விடாமல் துரத்திக்கொண்டு வருவதை தாவீதின் வாழ்க்கையிலேயே நாம் பார்க்கிறோம். எனவே தப்பிச் செல்ல விரும்ப வேண்டாம்; ஆற்றலை நாடுவோம். நாம் வேண்டிக் கொள்ளும் கடவுள் வல்லமை உடையவர், ஆற்றல் மிக்கவர். மறவாதீர்கள்: ஈசபேலுக்கு அஞ்சி, சீனாய் மலைக்கு ஓடிப்போன எலியாவை, வந்த வழியே திரும்பிப் போகச் சொன்னவர் நமது ஆண்டவர். (1 அரசர்கள் 19)

வசனம் 55:9
"அவர்களது பேச்சில் குழப்பத்தை உண்டாக்கும்" -
ஒப்பிடுக, 2 சாமுவேல் 17, அகிதோபலின் திட்டத்தை குலைத்த ஊசாய்.
பாபேல் கோபுரத்தைக் கட்டும் முயற்சியை ஆண்டவர் குலைத்துப் போட்டது போல (தொடக்க நூல் 11:1-9), இப்போது செய்யுமாறு தாவீது வேண்டுகிறார்.

வசனம் 55:9-11
"நகரில் வன்முறை, கலகம்" -
தாவீதோடும் அவரைச் சேர்ந்தோரோடும் துன்பங்கள் நிற்கவில்லை; கடவுளின் இல்லம் இருக்கும் தூய நகராம் எருசலேமில் அதிகம் அதிகமாக இன்னல்கள் தொடர்கின்றன. அமைதியும் மேன்மையும் கொண்ட நகர், இப்போது கொடுமையும் வஞ்சகமும் உலாவும் நகராக ஆகிவிட்டது. இந்த இழிநிலை அன்னியரின் படையெடுப்பால் நிகழ்ந்ததல்ல; ஆனால் உடன்படிக்கையின் மக்களின் மீறுதல்களால் நேரிட்டது.

நமது திருச்சபைகள் இன்றைக்கு எப்படி இருக்கின்றன?
திருச்சபை எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால் வெளியிலிருந்து வருவதில்லை; உள்ளே இருப்போரே உருவாக்குகிறோம்!
- நமது தவறுகளை உணர்வோமா?

வசனம் 55:12-14
நண்பன் செய்த துரோகம். மிகவும் கசப்பானதும் சகித்துக் கொள்ள முடியாததுமானது நண்பரொருவன் எதிரியாதல். "பொய்யான நண்பனை விடப் பெரிய எதிரி எவனும் இருக்க முடியாது!" (ஸ்பர்ஜின்)

எதிரியின் கசந்த உணர்வுகளை வெளிப்படுத்தும் தாவீது நட்பின் நலமான காலங்களையும் நினைவு கூர்ந்தார் (வ.13-14). அது துன்பத்தைக் கூட்டும் கொடுமையான அனுபவம்.

மேசியாவுக்குரிய இறைவாக்காக இவ் வசனங்கள் உள்ளன (மத்தேயு 26:20-25).

வசனம் 55:15
*பழைய நண்பனான புதிய எதிரிக்கும் அவனை ஆதரிப்பவர்களுக்கும் கடும் தண்டனை அளிக்க தாவீது கடவுளிடம் வேண்டுதல்.*

"*அவர்கள் உயிரோடு பாதாளத்தில் இறங்கட்டும்*" -
*மோசேக்கு எதிராகக் கலகம் செய்த கோராகியருக்கு நேர்ந்தது போன்ற* (*எண்ணிக்கை* 16:28-33) *தண்டனையை தாவீது தன் எதிரிகளுக்கு வேண்டினார்.*

*இப்படிப்பட்ட தண்டனையைப் பெறும் அளவுக்கு அவர்கள் நடுவே தீமை மிகுந்துவிட்டது என்று தாவீது உரைக்கிறார்.*

*ஆனால் பழிவாங்குவதும் கைம்மாறு அளிப்பதும் ஆண்டவருக்கு உரியன அன்றோ!*

வசனம் 55:16-17
"...*மன்றாடுவேன்*... *மீட்டருள்வார்*. ... *முறையிடுவேன்* ... *கேட்டருள்வார்*.' -
*தனது உள்ளத்தின் கசப்பான உணர்வுகளை இறைப்பற்றாக வெளிப்படுத்தும் தாவீது.*

*இதுவே தாவீதின் சிறந்த பண்பு. பல ஆண்டுகள் துரத்தப்பட்டு துன்புறுத்தப்பட்ட அவர், தனது இறைமன்றாட்டு வேளைகளில், அத்துன்பங்களில் அமிழ்ந்து போனதில்லை; இறை அனுபவங்களால் தனது ஆற்றலை அவர் புதுப்பித்துக் கொண்டே வாழ்ந்தார்.*

*நமது ஜெப அனுபவம் எப்படி இருக்கிறது? ஜெபம் முடித்து எழும் போது, நம்பிக்கையோடு எழுகிறோமா? புலம்பலோடு எழுகிறோமா?*

வசனம் 55:17
*மூவேளையும் தொழும் தாவீது.*
*மூவேளையும் தொழும் தானியேல்* (6:10).

*நாம் ஆண்டவரைத் தொழுவது, ஒரு நாளில் எத்தனை முறை?*

வசனம் 55:18
*தனது வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு, கடவுள் அருளிய நன்மைகளை தாவீது நினைவு கூர்தல்.*

*மிகவும் இளைஞனாக கோலியாதை எதிர்கொண்ட போதே தாவீதுக்கு இருந்த பண்பு*, 1 *சாமுவேல்* 17:34-37.

*அனுதினமும் ஆண்டவர் அருளும் நன்மைகளை உணர்ந்து அவருக்கு நன்றி சொல்ல நமது இல்லங்களில் இளையோரைப் பயிற்றுவிக்கிறோமா?*

வசனம் 55:19
*தாவீதின் எதிரிகள் கடவுளுக்கு அஞ்சுவதில்லை; தங்கள் தவறான நெறிமுறையை அவர்கள் மாற்றிக் கொள்ளாததனால், இது உறுதியாகிறது.*

"*தொன்று தொட்டு அரியணையில் வீற்றிருக்கும் கடவுள்*" -
*பார்க்க*, 93:1-2.

வசனம் 55:20
எதிரிகளோடு சேர்ந்து கொண்ட நண்பனை மீண்டும் நினைவு கூரும் தாவீது.

"தன் உடன்படிக்கையையும் மீறினான்" -
உடன்படிக்கை செய்து தாவீதோடு நட்புறவு கொண்டவர், சவுலின் மகனான யோனத்தான் மட்டுமே (1 சாமுவேல் 20:16&42).

வசனம் 55:21
எந்த அளவுக்குக் கொடியவனாகத் தன் நண்பன் மாறிவிட்டான் என்பதை தாவீது விளக்குகிறார்.

வசனம் 55:23
"கொலைவெறியரும் வஞ்சகரும் தம் ஆயுள் காலத்தில் பாதிகூடத் தாண்டமாட்டார்" -
நினைவில் கொள்க:
அகிதோபலின் தற்கொலை, 2 சாமுவேல் 17:23;
அப்சலோமின் இளவயதுச் சாவு, 2 சாமுவேல் 18:9-15.

வசனம் 55:22
வாட்டும் கவலைகளில் உழல்வோருக்கு வாழ்வளிக்கும் வாக்கு:
"ஆண்டவர் மேல் உன் கவலையைப் போட்டுவிடு; அவர் உனக்கு ஆதரவளிப்பார்; அவர் நேர்மையாளரை ஒருபோதும் வீழ்ச்சியுற விடமாட்டார்."

கவலை, சோர்வு, துயரம் - இப்படி எதுவானாலும் நாம் செய்வது என்ன என்று கடவுள் நம்மைக் கவனிக்கிறார்; நமது துன்பங்களை நாம் சுமக்க முயன்றால், அது நம்மை அமிழ்த்துவதாக இருக்கிறது; அவற்றை அவரிடம் விட்டு விடும் போதோ, எளிதாக அவற்றை நாம் கடந்து செல்லும் ஆற்றலை ஆண்டவர் அளிக்கிறார்.

"பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். ஆம், என் நுகம் அழுத்தாது; என் சுமை எளிதாயுள்ளது" (மத்தேயு 11:28-30).

ஆண்டவரின் அழைப்புக்குச் செவி மடுப்போமா?

## 19 திருப்பாடல் 56

*(பற்றுறுதியும் நம்பிக்கையும்)*

*பாடகர் தலைவர்க்கு; 'தொலையில் வாழும் மௌன மாடப்புறா' என்ற மெட்டு; பெலிஸ்தியர் தாவீதை காத்து என்னும் இடத்தில் பிடித்த வேளை அவர் பாடிய கழுவாய் பாடல்*
1 கடவுளே,
எனக்கு இரங்கியருளும்;
ஏனெனில், மனிதர்
என்னை நசுக்குகின்றனர்;
அவர்கள் என்னுடன்

நாள்தோறும் சண்டையிட்டுத்
துன்புறுத்துகின்றனர்.
2 என் பகைவர் நாள்தோறும்
கொடுமைப்படுத்துகின்றனர்;
மிகப் பலர் என்னை
ஆணவத்துடன் எதிர்த்துப் போரிடுவோர்.
3 அச்சம் என்னை
ஆட்கொள்ளும் நாளில்,
உம்மையே நான் நம்பியிருப்பேன்.
4 கடவுளின் வாக்கை
நான் புகழ்கின்றேன்;
கடவுளையே நம்பியிருக்கின்றேன்;
எதற்கும் அஞ்சேன்;
அற்ப மனிதர்
எனக்கென்ன செய்ய முடியும்?
5 என் எதிரிகள்
எந்நேரமும் என்
சொற்களைப் புரட்டுகின்றனர்;
அவர்கள் திட்டங்கள் எல்லாம்
என்னைத் துன்புறுத்தவே.
6 அவர்கள் ஒன்றுகூடிப்
பதுங்கி இருக்கின்றனர்;
என் உயிரைப் போக்குவதற்காக
என் காலடிச் சுவடுகளைக்
கவனித்துக்கொண்டே இருக்கின்றனர்.
7 அவர்கள் தீமைகளைச்
செய்துவிட்டுத் தப்பமுடியுமோ?
கடவுளே,
சினம் கொண்டெழுந்து
இந்த மக்களினங்களைக்
கீழே வீழ்த்தும்.
8 என் துன்பங்களின்
எண்ணிக்கையை நீர் அறிவீர்;
உமது தோற்பையில்
என் கண்ணீரைச் சேர்த்து வைத்துள்ளீர்;
இவையெல்லாம் உம்
குறிப்பேட்டில் உள்ளன அல்லவா?
9 நான் உம்மை நோக்கி
மன்றாடும் நாளில் என் எதிரிகள்
புறமுதுகிட்டு ஓடுவர்;
அப்போது, கடவுள் என் பக்கம்
இருக்கின்றார் என்பதை
நான் உறுதியாய் அறிவேன்.
10 கடவுளின் வாக்கை
நான் புகழ்கின்றேன்;
ஆண்டவனின் வாக்கை
நான் புகழ்கின்றேன்.
11 கடவுளையே நம்பியிருக்கின்றேன்;
எதற்கும் அஞ்சேன்;
மானிடர் எனக்கெதிராய்

என்ன செய்ய முடியும்?
12 கடவுளே,
நான் உமக்குச் செய்த
பொருத்தனைகளை மறக்கவில்லை;
உமக்கு நன்றிப்பலி செலுத்துவேன்.
13 ஏனெனில், சாவினின்று
என் உயிரை நீர் மீட்டருளினீர்;
வாழ்வோரின் ஒளியில்,
கடவுளின் முன்னிலையில்
நான் நடக்கும் பொருட்டு
என் அடிகள் சறுக்காதபடி
காத்தீர் அன்றோ!

திருப்பாடல் 56:1-13

**சிந்தனைக்கு**

யோனத் ஏலெம் ரெக்கோகீம் (yonath aelam rechoqiym) தொலைவில் வாழும் மௌன மாடப் புறா என்பது தலைப்பில் உள்ள செய்தி, அன்றைக்கு வழக்கத்தில் இருந்ததொரு பாடலின் மெட்டு என்கிறார்கள்; சிலர் அன்னிய மண்ணில் அலையும் அமைதியான மாடப் புறா என்று தாவீது உணர்ந்ததால் (55:6-8) வைக்கப்பட்ட தலைப்பு என்கின்றனர். mik-tawm என்பது பாடல் வகைகளில், கழுவாய் / பிராயச்சித்தப் பாடல்; திருப்பாடல்கள் 16 & 56-60 ஆகியன கழுவாய் பாடல்கள்.

தலைப்பில் உள்ள வரலாற்றுக் குறிப்பு, பெலிஸ்தியரின் காத்து நகரில் தாவீது பிடிபட்ட வேளையில் என்பது 1 சாமுவேல் 21:10-15ல் சொல்லப்பட்டுள்ள நிகழ்வு. இளம் தாவீது மிகவும் குழப்பமான மனநிலையிலேயே செய்வதறியாமல் அன்னிய எல்லைக்குள் நுழைந்து இருக்கக் கூடும் என்றும் அதனால் இயல்பாகவே மனநிலை பிறழ்ந்தவர் போன்று தோன்றியிருக்கலாம் என்றும் கருதுகின்றனர். இதே பின்னணியில் எழுதப்பட்ட மற்றுமொரு திருப்பாடல், 34. அந்த நிகழ்வினால் மனம் நொந்த தாவீது, அதன் விளைவாக இரண்டு திருப்பாடல்களை எழுதினார் எனலாம். மனிதன் ஒருவனைக் குறித்து தாவீது அஞ்சினார் என்று இந்நிகழ்வில் நாம் வாசிக்கிறோம் (1 சாமுவேல் 21:12). தன் எதிரிகளைக் குறித்த தாவீது அஞ்சியதாக வேறு எங்கும் நாம் காண முடியாது. அதன் விளைவே இந்த இரண்டு திருப்பாடல்கள். புறாவைப் போலச் சிறகுகள் இருந்தாலும் (55:6-8) இவ்வுலகில் தப்பிக்க இயலாது என்பதை தாவீது உணர்ந்திருக்கக் கூடும்!

அமைப்பு:
வ.1-2, துணையற்ற தாவீதின் மன்றாட்டு
வ.3-4, பற்றுறுதி அறிக்கை
வ.5-7, தன் எதிரிகளைக் குறித்த விளக்கம்
வ.8-11, இறைப் பற்றுக்கான விளக்கம்
வ.12-13, இடரிலிருந்து மீண்டவரின் துதி

வசனம் 56:1-2
எதிரிகளால் சுற்றி வளைக்கப்பட்ட நிலை; இஸ்ரயேலின் எல்லைகளிலும் தாவீது வாழ முடியாது; அதற்காக அஞ்சி அன்னிய மண்ணுக்குள் நுழைய முடியாது. மனிதர்களால் அச்சுறுத்தலுக்கு உள்ளான தாவீது, துணைக்காக மன்றாடுகிறார்.

"... பகைவர் ... ஆணவத்துடன்..." -
பெலிஸ்தியர் ஆயினும், சவுல் ஆயினும் தங்கள் பதவியால் பெருமை கொண்டு திட்டம் தீட்டுகின்றனர்; கடவுளுக்குரிய மாட்சியை அவர்கள் உணர்வதில்லை.

வசனம் 56:3-4
"அச்சம்... அஞ்சேன்...." -
முதலைக்குப் பயந்து கரடியிடம் மாட்டிக் கொண்ட நிலை; அப்படிச் சிக்கிக் கொண்ட நிலையில், தான் எப்படி கடவுளையே நம்பித் தப்பித்தார் என்பதை தாவீது குறிப்பிடுகிறார்; கடும் அச்சத்தில் இருந்த வேளையில், தப்பிக்கும் வழியைக் காட்டிய கடவுளைப் புகழ்கிறார். சோதனைகளிலிருந்து விடுபட வழி ஏற்படுத்துபவர் கடவுள் அல்லவா! (1 கொரிந்தியர் 10:13)

"அவர் அஞ்சினார்; ஆனால் அவ்வச்சம் அவருடைய மனதை ஆக்கிரமித்துவிடவில்லை; அதில் கடவுளை நம்புவதற்கு இடம் இருந்தது." (ஸ்பர்ஜின்)
எனவே அச்சம் கொண்டாலும், நமது நம்பிக்கையை விடாது பற்றிக் கொள்வோம்.

வசனம் 56:4
"கடவுளின் வாக்கை நான் புகழ்கின்றேன்" -
பார்க்க, 50:15, 91:15, 119:74&81.
கடவுளை நாம் நம்புகிறோம் என்றால் எப்படி நம்புகிறோம்?
நாம் கடவுளை நம்புகிறோம் என்பது அவர் நமக்களித்த வாக்கை நம்புவது; ஆற்றல்மிக்க வாக்கு; ஆற்றல்தரும் வாக்கு. நம் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே வெளிப்படும் வாக்கு. தாவீதுக்கான வாக்கு இறைவாக்கினர் சாமுவேல் வழியாக அருளப்பட்டது, 1 சாமுவேல் 16:1-13. அந்த வாக்கை நம்பியே தாவீது செயல்பட்டார்; அந்த வாக்கையே அவர் புகழ்ந்தார்.

"அற்ப மனிதர் எனக்கு என்ன செய்துவிட முடியும்?" -
எபிரேயர் (13:6) திருமுகத்தை ஆக்கியோரின் அறைகூவல்.

வசனம் 56:5-7
திட்டம் தீட்டிச் செயல்படக் காத்திருக்கும் தாவீதின் எதிரிகள்.

வசனம் 56:5
"... சொற்களைப் புரட்டுகின்றனர்" -
பேசிய சொற்களுக்கு இதுவரை இல்லாத புதிய பொருளை அல்லது நோக்கத்தைக் கற்பிக்கும் எதிரிகள்.

ஓர் எதிரி தனக்கு எதிரியான ஒருவருக்கு எதிராகப் பலரை உருவாக்கக் கடைப்பிடிக்கும் முறை (2 சாமுவேல் 15:1-6).

வசனம் 56:7
"தீமைகளைச் செய்து விட்டுத் தப்பமுடியுமோ?" -
நீதியுள்ள கடவுளின் முன்பாகத் தீயோர் தப்பிக்க முடியுமோ என்று கடவுள் சினந்தெழ தாவீது அழைக்கிறார்.

வசனம் 56:8
தம் அடியார் மீது நோக்கமாக இருக்கும் கடவுள்; துன்பங்களைக் காணும் கடவுள் (விடுதலைப் பயணம் 3:7). எண்ணிறந்த துன்பங்கள், அளவற்ற கண்ணீர்.

இறந்தவரை நினைத்து நினைத்துக் கண்ணீர் விடும் அன்பிற்குரிய ஒருவர், தான் விடும் கண்ணீரை குடுவை அல்லது குப்பியில் சேகரித்து, இறந்தவரின் கல்லறையில் ஊற்றுவது மத்திய தரைக்கடல் நாடுகளில் ஒரு தொன்மையான பழக்கம்; அதனைத் தனது துயரமான நிலைக்குப் பொருத்தி தாவீது நினைவூட்டுகிறார்; குப்பியிலோ குடுவையிலோ அல்ல தாவீது சிந்திய கண்ணீர், திராட்சை இரசம் ஊற்றும் தோற்பை நிறைய உள்ளது என்கிறார்.

"... உமது குறிப்பேட்டில்..." -
கடவுளின் குறிப்பேடு, 69:28, 87:6, 139:16; விடுதலைப் பயணம் 32:32-33; தானியேல் 7:10; மலாக்கி 3:16.

வசனம் 56:9
பார்க்க, 118:6-7; உரோமையர் 8:31.
துயருறும் மனிதராக, அளவற்ற கண்ணீருடன் மன்றாடும் மனிதராக தாவீது இருந்தார்; கடவுள் அவருக்கு எதிராக இருந்ததால், இவையெல்லாம் நடக்கவில்லை. அதேவேளையில், அவர் நம்பியிருக்கும் கடவுள், தாவீதின் எதிரிகளை விரட்டியடிப்பார்; கடவுள் தாவீதின் பக்கம் இருக்கிறார் என்பது அப்போது மென்மேலும் உறுதிப்படும்.

வசனம் 56:10-11
பார்க்க, வ.4.
வாக்கு என்பதை, ஒருமுறை அல்ல இரண்டு முறை அல்ல, மூன்று முறை உரைத்து, கடவுளின் வாக்கின் மீது தனக்கு உள்ள பற்றுறுதியை தாவீது பறைசாற்றுகிறார்.

பேரரசரும் போப்பரசரும் தன் உயிரை எடுக்க உறுதி பூண்டுள்ளனர் என்று சொல்லப்பட்ட போது, லூத்தர் சொன்னது: "இவ்விருவரையும் நான் பொருட்படுத்தேன்; யாரை நான் நம்புகிறேன் என்பதை நான் அறிவேன்."

வசனம் 56:12-13
கடவுளின் பலிபீடத்திலிருந்து நெடுந்தொலைவு வந்து விட்ட நிலையிலும், கடவுளுக்குப் பலி செலுத்துவது தாவீதின் உள்ளத்துக்கு அருகில் இருக்கிறது. அது என்ன பலி? திரண்ட சபை நடுவே அவர் கடவுளுக்கு ஏறெடுக்கும் நன்றி பலி! நன்றிப்பலி என்பது, அப்பங்கள், அடைகளாகவும் இருக்கும் (லேவியர் 7:12); உரத்த குரலில் உதடுகள் உதிர்க்கும் நன்றிப்பாடலாகவும் இருக்கும் (26:7).

நமது நன்றிப்பலி என்னவாக இருக்கிறது?
பொருளாதார நெருக்கடியும், கொள்ளை நோயும் அச்சுறுத்தும் இந்த நாட்களில் நம்மை எல்லாத் தீமைகளுக்கும் விலக்கிப் பாதுகாத்து வழிநடத்தும் ஆண்டவர் முன்பு, வாய்மூடி மௌனமாக மட்டும் இருந்து விட வேண்டாம். நம்மில் அவர் விரும்புவது உள்ளத்தின் நிறைவால் நாம் செலுத்தும் நன்றிப் பலியே!

வசனம் 56:13
"வாழ்வோரின் ஒளி" -
மேலும் பார்க்க, 36:9.
மீண்டும் இயேசு மக்களைப் பார்த்து, "உலகின் ஒளி நானே; என்னைப் பின்தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார்; வாழ்வுக்கு வழி காட்டும் ஒளியைக் கொண்டிருப்பார்" என்றார். (யோவான் 8:12)

அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளியை நாம் பற்றிக் கொண்டோமா?

## 19 திருப்பாடல் 57

*(உதவிக்காக வேண்டல்)*

*பாடகர் தலைவர்க்கு; 'அழிக்காதே' என்ற மெட்டு; சவுலுக்குத் தப்பி ஓடிக் குகையில் ஒளிந்து கொண்டு இருந்தபொழுது, தாவீது பாடிய கழுவாய்ப் பாடல்*

1 கடவுளே!
எனக்கு இரங்கும்,
எனக்கு இரங்கும்;
நான் உம்மிடம்
தஞ்சம் புகுகின்றேன்;
இடர் நீங்கும்வரை
உம் இறக்கைகளின் நிழலையே
எனக்குப் புகலிடமாகக் கொண்டுள்ளேன்.
2 உன்னதரான கடவுளை நோக்கி,
எனக்காக யாவையும் செய்து முடிக்கும்
இறைவனை நோக்கியே
நான் மன்றாடுகின்றேன்.
3 வானகத்தினின்று அவர்
எனக்கு உதவி அனுப்பி
என்னைக் காத்தருள்வார்;
என்னை நசுக்குவோரை இழிவுப்படுத்துவார்.
(சேலா)
கடவுள் தம் பேரன்பையும்
வாக்குப் பிறழாமையையும்
வெளிப்படுத்துவார்.
4 மனிதரை வெறியோடு விழுங்கும்
சிங்கங்கள் போன்றவரிடையே
நான் கிடக்கின்றேன்;
அவர்களின் பற்கள்
ஈட்டியும் அம்பும் போன்றவை;
அவர்களின் நா
கூர்மையான வாள் போன்றது.
5 கடவுளே!
வானங்களுக்கு மேலாக
நீர் உயர்த்தப்பெறுவீராக!
பாரெங்கும் உமது
மாட்சி விளங்குவதாக!
6 நான் நடக்கும் வழியில்
எனக்குக் கண்ணி வைக்கின்றனர்;
நான் மனம் ஒடிந்து போனேன்;
என் பாதையில் குழி வெட்டினர்;
அவர்களே அதில் விழுந்தனர்.
7 என் உள்ளம் உறுதியாயிருக்கின்றது;
கடவுளே!
என் உள்ளம் உறுதியாயிருக்கின்றது;
நான் பாடுவேன்;
உம்மைப் புகழ்ந்து பாடுவேன்.
8 என் நெஞ்சே, விழித்தெழு!

வீணையே, யாழே, விழித்தெழுங்கள்;
வைகறையை நான் விழித்தெழச் செய்வேன்.
9 என் தலைவரே!
மக்களினங்களிடையே
உமக்கு நன்றி செலுத்துவேன்;
எல்லா இனத்தாரிடையேயும்
உம்மைப் புகழ்ந்து பாடுவேன்.
10 ஆண்டவரே!
உமது பேரன்பு வானளவு உயர்ந்துள்ளது!
உமது வாக்குப்பிறழாமை
முகில்களைத் தொடுகின்றது!
11 கடவுளே!
வானங்களுக்கு மேலாக
நீர் உயர்வு பெறுவீராக;
பாரெங்கும் உமது மாட்சி விளங்குவதாக.

திருப்பாடல் 57:1-11

**சிந்தனைக்கு**

தலைப்பில் புதிதாகக் காணப்படும் எபிரேயச் சொல் al tash-kayth / அல் டாஷ்கேய்த்; இதற்கு 'அழிக்காதே' என்று பொருள் சொல்கிறார்கள். இது ஒரு பாடலின் மெட்டு என்பதில் பைபிள் ஆய்வாளர்கள் யாரும் மாறுபடவில்லை. இதே பண்ணில் அமைந்த இதர திருப்பாடல்கள்: 58, 59 & 75. இந்தத் திருப்பாடல்கள் அனைத்திலும் நேர்மையாளர் அழியக் கூடாது என்பதே கருப்பொருளாக உள்ளது. முந்தைய திருப்பாடலைப் போலவே, இதுவும் ஒரு கழுவாய்ப் பாடல்.

"சவுலுக்குத் தப்பியோடிக் குகையில் ஒளிந்து கொண்டு இருந்தபொழுது" என்பது வரலாற்றுக் குறிப்பு. தாவீதின் ஓட்டத்தில் இரண்டு குகைகள் இடம்பெறுகின்றன: அதுல்லாம், 1 சாமுவேல் 22:1; ஏன்கேதி, 1 சாமுவேல் 24:1. தலைப்பில் குறிப்பிடப்படும் குகை எது என்பதில் ஆய்வாளர்கள் இடையே ஒருமித்த கருத்து இல்லை; நோபு நகரில் குரு அகிமெலக்கிடம் தாவீது சென்றபோது, சில இளைஞர்களுடன் செல்கிறார் (1 சாமுவேல் 21:4). ஆனால் அதன்பிறகு பெலிஸ்திய மண்ணில் அலைந்த போது தனி ஒருவராக இருந்தார் (1 சாமுவேல் 21:10-15; திருப்பாடல் 56). அதுல்லாம் குகைக்கு வந்த பிறகு, அவரோடு 400 பேர் அளவுக்கு அணி திரண்டார்கள் (1 சாமுவேல் 22:2). ஏன்கேதிப் பாலைநிலத்தில் ஒரு குகைக்குள் தனித்து இருந்த சவுலைக் கொல்ல விரும்பிய தாவீதின் உடனிருந்தோரிடம் அவர், "சவுலை 'அழிக்காதே'" என்று சொல்லிப் பாடிய பாடலாக இருக்கக்கூடுமோ!? திருப்பாடல் 142, அதுல்லாம் குகை குறித்துப் பாடப்பட்டது என்பதை நினைவில் கொள்வோம்.

திருப்பாடல் 51 தொடங்கி 62 முடிய எல்லாத் திருப்பாடல்களும் பாடகர் தலைவர்க்குக் கொடுக்கப்பட்டவை. இதன் பொருள் என்னவெனில், குழுப்பாடலாகக் கூட்டு வழிபாட்டில் பாடுவதற்கென எழுதப்பட்ட திருப்பாடல்கள் இவை.

அமைப்பு:
வ.1-3, இரக்கத்திற்கான மன்றாட்டு
வ.4-6, ஆழ்ந்த துயரின் நடுவே நம்பிக்கை
வ.7-11, வேற்றினத்தாரிடையே கடவுளுக்குப் புகழ்ச்சிப் பாடல்

இப்பாடலில் கவித்துவமான ஒரு நடையை நாம் காண இயலும்:
எனக்கு இரங்கும்
எனக்கு இரங்கும்
- வ.1
கடவுளை நோக்கி
இறைவனை நோக்கி
- வ.2
- மேலும் இதுபோலவே, வ.7 & 8 வசனங்களிலும் இனிமையாக எதிரொலிக்கும் சொற்களை நாம் காணலாம்.
🕎

வசனம் 57:1-3
தப்பிக்கத் தனித்து அலைந்து திரிந்த தாவீது கடவுளை மட்டுமே துணையாகக் கொண்டு வாழ்ந்தார். அந்த உணர்வை இங்கு அவர் வெளிப்படுத்துகிறார்.

வசனம் 57:1
"... எனக்கு இரங்கும், எனக்கு இரங்கும்" -
நெருக்கடியான நிலையில் உதவியை நாடி எழும் கதறல். நோபு நகரில் தொடங்கி, காத்து நகர் சென்று, இப்போது அதுல்லாம் குகைக்கு வந்துசேரும் வரை, பெலிஸ்திய மன்னன் ஆக்கிசை மட்டுமல்லாமல், இன்னும் எத்தனை அச்சுறுத்தும் இடர்களைச் சந்தித்திருப்பார் என்பதை நாம் அறியோம். அதனையே இவ்வசனத்தின் அடுத்த பகுதியில் அவர் வெளிப்படுத்தி, தனது புகலிடம் கடவுள்தம் இறக்கைகளின் நிழலே என்கிறார் (17:8, 36:7 & 63:7). தாவீதின் ஆறுதல், வலுவான குகையின் சுவரல்ல, தாய் போல அடைக்கலம் அருளும், மிருதுவான இறக்கைகளின் கதகதப்பான நிழல்!

"தாவீதுக்கு மாடப்புறாவைப் போலச் சிறகுகள் இருந்தாலும் போதா (55:6); துன்பங்கள் அகன்று போகுமட்டும், கடவுளின் இறக்கைகளே போதுமானவை!" (மோர்கன்)

"கடவுளையே நம்பி இருப்போருக்கு இறையருள் இல்லாது போமோ! நமது பற்றுறுதி குறைவுடையதானாலும் அதனைத் தமது கிருபையால் நிறைவாக்க மாட்டாரோ!" (ஸ்பர்ஜின்)

வசனம் 57:2
"எனக்காக யாவையும் செய்து முடிக்கும் இறைவன்" -
நம்மில் பலருக்கும் பிடித்தமான ஒரு வசனம். நமக்குரிய அழைப்புக்கு இணங்கி, நாம் கடவுளுக்காக, இறையரசு இம்மண்ணில் மலர்ந்திட ஒரு நாளில் ஒரு வேளை ஜெபிக்கக்கூட மாட்டோம், ஆனால் "எனக்காக யாவையும் அவர் செய்து முடிப்பார்" என்று சொல்லிக் கொள்வோம். என்ன மடமை!

சவுலுக்குப் பிறகு அரசராக தாவீது திருப்பொழிவு பெற்றார்; அதுமுதல் ஆண்டவரின் ஆவி அவரோடு நிறைவாக இருந்தது. அரசர் உயிரோடு இருக்கும் போதே, இன்னொரு அரசரா என்கிற போட்டியும் பொறாமையும் சவாலாக வருகிறது. அந்தச் சூழலில், கடவுளுடைய குறிப்பிட்ட வேளை வரும்வரை, பாடுகள் அனைத்தையும் பொறுமையோடு சகித்து, தானோ தன்னைச் சேர்ந்தவர்களோ சவுலைக் கொன்று இறைத்திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள முனையாமல், கடவுளின் திருப்பெயருக்கு மேன்மை சேர்த்த தாவீது சொல்லலாம், "எனக்காக யாவையும் ஆண்டவர் செய்து முடிப்பார்" என்று. இவ்வுலகில் தனக்கு வரும் வாய்ப்புகளை எல்லாம் விடாமல் கைப்பற்றி, "நான் வாழ்ந்தால் போதும்" என்று நினைக்கும் எவரும் இந்த

வாக்குக்கு உரிமை கோர முடியாது. அதுவே, இவ்வாக்கை உரைத்த தாவீதின் வாழ்க்கை உணர்த்தும் பாடம்.

வசனம் 57:3
"வானகத்தினின்று ... உதவி" -
இணை, 43:3.
மண்ணில் பிறந்த எவரும் கைவிட்டு விலகித் தன்னைத் தனியனாய்த் தவிக்க விட்டாலும், எவ்விதத்திலாவது கடவுள் தனக்கு உதவி செய்வார் என்னும் தாவீதின் உறுதி.

"கடவுள் தம் பேரன்பையும் வாக்குப் பிறழாமையையும் வெளிப்படுத்துவார்" -
வாக்குப் பிறழாமை, பார்க்க, 54:5; மீண்டும் வ.10. தனக்குத் திருப்பொழிவு செய்த கடவுள், தமது வாக்கை நிறைவேற்றுவார் என்னும் தாவீதின் நம்பிக்கை.

வசனம் 57:4
இணை, 7:2.
ஈவிரக்கமற்ற தனது எதிரிகளைக் குறித்த விளக்கம். சிங்கங்கள் நடுவே மான் போல.

வசனம் 57:5
பார்க்க, 46:10.
எதிரிகளின் கொடூரமான செயல்களை விவரிக்கும் முன் (வ.6), இடர்களில் துணைநிற்கும் கடவுளுக்குப் புகழ்ச்சி.

இவ்வசனமே புகழ்ச்சியாக, வ.11.

வசனம் 57:6
தாவீதுக்கு எதிரிகள் வெட்டிய குழியில் அவர்களே விழுதல்.
பார்க்க, 7:15, 9:15. வினை விதைத்தவன் வினை அறுப்பான்.

வசனம் 57:7-11
இணை, 108:1-5.

வசனம் 57:7
தான் எதிர்கொள்ளும் கொடிய செயல்களைச் சொன்ன பிறகு, தன் பற்றுறுதியை தாவீது அறிக்கையிடுதல்.

தன்னைச் சுற்றி வளைத்துள்ள சிக்கல்களில் மட்டும் தாவீது கவனம் வைக்கவில்லை; அதற்கு அப்பாலும் தனக்காக வைக்கப்பட்டிருந்த இறைத்திட்டத்திலேயே அவர் உறுதியாக இருந்தார்.

நமது வாழ்க்கையின் துன்ப வேளைகளில், 'எனக்கு இப்படிச் செய்து விட்டார்களே' என்று கழிவிரக்கமோ, 'எனக்கா இப்படிச் செய்தாய்' என்று ஆத்திரமோ கொள்ளாமல், தாவீதைப் போல கடவுள் மீது நம்பிக்கையோடு உறுதியாக இருத்தல் நலம்.

வசனம் 57:8
வைகறையின் ஆர்ப்பரிப்பு;
பார்க்க, 30:5, 46:5, 59:16 & 90:14.
ஆபத்தான இரவு முடிந்தது, புதிய கிருபையின் வைகறை இதோ!

இனிய கற்பனை!

*தனித்த உள்ளத்துள் ஒலிக்கும் இசைக்குழு!*
*விடியல் வர, விழித்தெழும் நெஞ்சம் புகழ் பாட, வீணையும் யாழும் இசை சேர்க்கட்டும்!*

*வசனம்* 57:9
"... *மக்களினங்களிடையே* ... *எல்லா இனத்தாரிடையே* ..." -
*பார்க்க,* 18:49; *பவுலடிகள் இவ்வசனத்தை எடுத்தாளுதல், உரோமையர்* 15:9.

*கடவுளின் இல்லத்தில், திரண்ட இஸ்ரயேலர் நடுவில் மட்டுமல்லாது, வேற்று நாட்டு மக்கள் நடுவேயும், படைப்பனைத்திற்கும் அரசரான கடவுளின் புகழைப் பாடுவதாக தாவீது உறுதி பூண்டார்.*

*வசனம்* 57:10
*எங்கோ ஏன்கேதி / அதுல்லாமில் ஒரு குகைக்குள் முடங்கிக் கிடந்தார் தாவீது; ஆனால் அவரது தரிசனமோ வானளவு உயர்ந்திருந்தது! குகையின் முகட்டளவு அல்ல, வானின் உயரம் வரை நிறைந்த கிருபையை அவர் கண்டார்.*

*நமது பார்வை எங்கு இருக்கிறது?*
*சுற்றி வளைக்கும் சிக்கல்கள் மீதா?*
*விண்ணளவு நமக்காக வைக்கப்பட்டுள்ள கிருபையின் மீதா?*
*நமது பற்றுறுதி எதிலோ அதை நாம் பெறுவோம்!*
*ஆமென்!*

✝

## 19 திருப்பாடல் 58

*(பொல்லாரின் தண்டிப்புக்காக வேண்டல்)*

*பாடகர் தலைவர்க்கு; "அழிக்காதே" என்ற மெட்டு; தாவீதின் கழுவாய்ப் பாடல்*
1 *ஆட்சியாளரே!*
*நீவிர் வழங்கும் தீர்ப்பு*
*உண்மையில் நீதியானதா?*
*மாந்தர்க்கு நேர்மையுடன்*
*தீர்ப்பு வழங்குகின்றீரா?*
2 *இல்லை; அநீதியானவற்றைச்*
*செய்வதற்கே நீங்கள் திட்டமிடுகின்றீர்கள்;*
*நாட்டில் நடக்கும் அநீதிக்கு*
*நீங்கள் உடந்தையாய் இருக்கின்றீர்கள்.*
3 *பொல்லார் கருவிலிருந்தே*
*நெறிதவறிச் செல்கின்றனர்;*
*பிறப்பிலிருந்தே*
*பொய் பேசித் திரிகின்றனர்.*
4 *அவர்களது நச்சுத்தன்மை*
*நாகத்தின் நஞ்சு போன்றது;*
*செவிட்டு விரியன் தன் காதை அடைத்துக்கொள்வதுபோல,*

அவர்களும் தங்களைச்
செவிடாக்கிக் கொள்கின்றனர்.
5 பாம்பாட்டியின் மகுடியோசை
அவ்விரியனின் காதில் விழாது;
அவன் திறமையுடன் ஊதினாலும்
அதற்குக் கேளாது.
6 கடவுளே, அவர்கள் வாயின்
பற்களை நொறுக்கிவிடும்;
ஆண்டவரே, அந்த இளஞ்சிங்கங்களின்
கடைவாய்ப் பற்களை உடைத்துவிடும்.
7 காட்டாற்று நீர்போல
அவர்கள் மறைந்தொழியட்டும்;
அவர்கள் தம் வில்லை நாணேற்றியவுடன்
அம்புகள் முறிந்து போகட்டும்!
8 ஊர்ந்து ஊர்ந்து தேய்ந்து போகும்
நத்தைபோல் ஆகட்டும்;
பிறந்தும் கதிரொளி காணாத
பெண்வயிற்றுப் பிண்டம்போல் ஆகட்டும்.
9 முள் நெருப்பினால்
உங்கள் பானை சூடேறுமுன்னே,
பச்சையானதையும் வெந்து கொண்டிருப்பதையும்
சுழற்காற்றினால் அவர்
அடித்துக் கொண்டு போவார்.
10 தீயோர் தண்டிக்கப்படுவதை
நேர்மையாளர் காணும்போது மகிழ்வர்;
அவர்கள் தம் பாதங்களைப்
பொல்லாரின் இரத்தத்தில் கழுவுவர்.
11 அப்போது மானிடர்:
'உண்மையிலேயே நேர்மையாளருக்குக்
கைம்மாறு உண்டு;
மெய்யாகவே பூவுலகில்
நீதியுடன் ஆளும் கடவுள்
ஒருவர் இருக்கின்றார்'
என்று சொல்வர்.

திருப்பாடல் 58:1-11

**சிந்தனைக்கு**

சிறந்த ஆட்சியின் அடையாளம், சிறந்த நீதி பரிபாலனம். நீதி குலையும் போது, ஆட்சி வல்லாதிக்கம் செலுத்தும் ஆட்சியாக மாறி விடுகிறது. இஸ்ரயேலின் அரசருக்குரிய பொறுப்புகளை மோசே வழியாக ஆண்டவர் வகுத்துரைத்தார் (இணைச் சட்டம் 17:14-20). அதன்படி, திருச்சட்டத்தையும் அதன் எல்லா நீதிமுறைகளையும் அரசன் நிறைவேற்ற வேண்டும். சவுலின் ஆட்சியில், நீதிமுறை வழுவிய போது, அதினால் பாதிப்புக்குள்ளான தாவீது பாடிய திருப்பாடல்.

ஆதித் திருச்சபையினர் இத்திருப்பாடலைத் தலைமைச் சங்கத்தில் கிறிஸ்து இயேசு விசாரிக்கப்பட்ட நிகழ்வோடு (மத்தேயு 26:57-68) பொருத்திப் பார்த்தனர் என்ற கூற்று உள்ளது.

அமைப்பு:
வ.1-2, அநீதி இழைக்கும் ஆட்சியாளர்கள்
வ.3-5, தீயோர் குறித்த சித்தரிப்பு
வ.6-8, பொல்லார் தண்டிக்கப்பட வேண்டுதல்
வ.9-11, நீதியோடு ஆளும் கடவுள்
🕎

வசனம் 58:1அ
"ஆட்சியாளர்களே" -
OV, மவுனமாயிருக்கிறவர்களே
KJV, O congregation
ESV / NRSV, you gods
NKJV, you silent ones
NIV / NLT, rulers.
எபிரேய மூலத்தில், ay-lem; இச்சொல் இந்த ஓரிடத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. (சட்டத்தின்) மௌனம், (நீதி விசாரிக்கக் கூடிய) சபை என நீதியின் தொடர்பில் இச்சொல் பயன்படுவது என்று ஸ்ட்ராங்க் வரையறுக்கிறார்.

"ஆட்சியாளரே! நீவிர் வழங்கும் தீர்ப்பு உண்மையில் நீதியானதா?" -
இத்திருப்பாடல் எழுதப்பட்ட வரலாற்றுப் பின்னணி எதுவும் குறிப்பிடப்படவில்லை; இச்சொற்றொடர் இது எழுதப்பட்ட நோக்கத்தைச் சற்று விளக்குகிறது எனலாம். தாவீதைக் குறித்து சவுலின் உள்ளம் என்ன எண்ணம் கொண்டுள்ளது என்று அறிய யோனத்தான் முனைகிறார் (1 சாமுவேல் 20:25-34). அப்போது அரசப் பந்தியில் சபையின் நடுவே யோனத்தானை சவுல் கடும் சொற்களால் சாடி, கொல்ல முற்படுகிறார். அது யோனத்தானுக்கு மிகவும் விசனத்தைத் தந்தது. தாவீது சாகத்தான் வேண்டும் என்ற அரசரின் விருப்பம் பந்தியில் இருந்த அனைவருக்கும் தெரியவருகிறது. இதற்குப் பிறகு, அரச அவையில் நீதி விசாரிப்போர், அரசருக்கு எதிரான கலகக்காரன் தாவீது என்றும் அதற்காக அவன் கொல்லப்பட வேண்டும் என்றும் தீர்ப்பை அறிவித்திருக்கக் கூடும். இதனைச் செவியுற்ற தாவீது, தன்னை விசாரிக்காமலேயே தீர்ப்பிட்டு அநீதி இழைத்தவர்களுக்கு எதிராக, இத்திருப்பாடலை எழுதியிருக்கலாம்.

வசனம் 58:1ஆ-2
அரசவையினரின் தீர்ப்பு நேர்மையற்றது; ஏனெனில் அவர்கள் தாவீதை விசாரிக்கவே இல்லை; சாட்சிகள் எதையும் பதிவு செய்யவில்லை. அரசரை மகிழ்விக்கத் திட்டம் தீட்டி, தாவீதை வஞ்சித்து எழுதப்பட்ட தீர்ப்பு. இவ்வாறு ஓர் உயிரைப் பறிக்கும் நோக்கோடு, அநீதி இழைக்கும் வகையில் எழுதப்பட்ட தீர்ப்பு.

வசனம் 58:3-5
தீயோரின் தன்மைகளை தாவீது விவரிக்கிறார்.

வசனம் 58:3
"... பிறப்பிலிருந்தே பொய் பேசி..." -
பார்க்க, 51:5.
பேசத் தொடங்கும் குழந்தைகளுக்கு பொய் பேச யார் கற்றுக் கொடுத்தது? பெற்றோராக நாம் ஒவ்வொருவரும் நமது குழந்தைகள் நற்பண்புகளோடு வளர அனைத்து முயற்சிகளையும் எடுக்கிறோம். ஆனால் பொய் பேச அவர்கள் எப்படிக் கற்கிறார்கள்? யாரிடமிருந்து கற்கிறார்கள்?

வசனம் 58:4

*"...நச்சுத்தன்மை..." -*

*பார்க்க,* 140:3; *மேலும், யாக்கோபு* 3:8.

*பொல்லாரின் சொற்கள் நாகப் பாம்பின் நஞ்சு போல், நச்சுத்தன்மை உடையவை. தீயோர் தீர்ப்பளிக்கும் நிலையில், உயிரை எடுக்கும் நச்சுத்தன்மை அவர்களின் தீர்ப்புகளுக்கு வந்துவிடுவதால், ஒடுக்கப்படும் நேர்மையாளர் துன்புறுகின்றனர்.*

வசனம் 58:4-5

*"...செவிட்டு விரியன்..." -*

*தீயோர் நீதி வழங்கும் நிலையில், அவர்களின் நீதி வழங்கும் முறையை தாவீது இங்கு விவரிக்கிறார். நல்லுரைகள் அங்கு ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.*

*இதற்கு விளக்கம் தரும் நிகழ்வு ஒன்றை நாம் கடந்த ஆண்டு கண்டோம். அருட்தந்தை ஸ்டேன்ஸ் ஸ்வாமி அவர்களுக்கு, உறிஞ்சு குழல் இணைக்கப்பட்ட குவளை வழங்குவது குறித்த நிகழ்வு அது. நரம்புத் தளர்ச்சி நோய் பீடித்த முதியவர் ஒருவருக்கான அடிப்படைத் தேவையை வழங்க, அந்த நீதிமன்றத்திற்குச் சில நாள்கள் தேவைப்பட்டன.*

*இன்றைக்கு நாம் இப்படிப்பட்ட செவிட்டு விரியன்களை, தலையைப் பொந்திற்குள் நுழைத்துக் கொண்டு, ஓராண்டுக்கும் மேல் விவசாயிகளின் துயர்களைப் பாராத விரியன்களை நாம் கண்டிருக்கிறோம்.*

*"மகுடியோசை" -*

*நீதி தவறும் தலைவர்களுக்கு அறிவுரை கூறும் இறைவாக்கினர் அல்லது குருக்கள்.*

வசனம் 58:6-8

*துயருறும் மனிதராக, ஆதரவற்ற நிலையில் தனித்து விடப்பட்ட தாவீதின் மன்றாட்டு.*

வசனம் 58:6அ

*"...பற்களை நொறுக்கி விடும்" -*

*விரியனின் நச்சுப் பற்களை நொறுக்க தாவீதின் மன்றாட்டு.*

*நச்சுத்தன்மை கொண்ட பாம்பின் பற்களைப் போலவே, கொடிய விலங்கான இளஞ்சிங்கத்தின் கடுமை அதன் கோரைப் பற்களில் உள்ளது (பார்க்க,* 57:4). *எனவே அவற்றின் பற்களை நொறுக்கிப் போட தாவீது வேண்டுகிறார்.*

வசனம் 58:7

*வறண்ட காட்டாற்றில் வெள்ளம் பாய்வதும், உடனே உலர்ந்து நீரற்றுப் போதலும் எப்போது நிகழும் என்று சொல்ல முடியாது. அந்த அளவுக்கான குறைந்த காலத்தில், சடுதியில் தீயோர் அழிந்து போவதை தாவீது நாடுகிறார்.*

வசனம் 58:8

*ஊர்வதினால் நத்தை தேய்ந்து போவதில்லை; அது ஊர்ந்து வந்த தடம் உலர்ந்து மறைவதை இங்கு தாவீது குறிப்பிடுகிறார் என்று பொருள் கொள்ளலாம்.*

*"பிறந்தும் கதிரொளி காணா... பிண்டம்..." -*

*தீயோரின் அழிவை விரும்பி, தாவீது இவ்வாறு மன்றாடுகிறார். இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாஸ் தேடிக் கொண்ட சாவுக்கு, அவன் பிறவாதிருந்தால் நலமன்றோ!*

வசனம் 58:9-10
*கடவுளின் நீதித் தீர்ப்பைக் குறித்த தாவீதின் நம்பிக்கை.*

வசனம் 58:9
"*முள் நெருப்பு*" -
*பார்க்க*, 118:12.
*உலர்ந்த முட்செடிகள் விரைந்து எரியக் கூடியவை; அதேபோல துரிதமாகச் செயல்படக்கூடியவர் நீதித் தீர்ப்பளிக்கும் கடவுள்.*

வசனம் 58:10
*பார்க்க*, 68:3.
*பொல்லாரின் தண்டனையில் மகிழும் நல்லோர்.*

*மனிதரின் துயர்மிகு தண்டனையில் மகிழ்பவர் நல்லவராக இருக்க முடியுமா?*
நல்ல கேள்வி; தீயோர் தீயவராகவே மடிய வேண்டும் என்பது இறைத்திட்டம் அல்ல; மீட்பின் திட்டம் அவர்களையும் உள்ளடக்கியதே! தண்டிப்பதில் அல்லாமல், ஒருவரின் மீட்பிலேயே கடவுள் மகிழுவார்; நேர்மையாளரும் மகிழ்வர். நமது மன்றாட்டுகள் அனைத்தும், தெரிந்தும் தெரியாமலும் தவறிழைக்கும் யாராயினும், அவர் நேர்மையாளராக மீட்கப்பட வேண்டும் என்பதாகவே இருக்கவேண்டும் (*மத்தேயு* 5:43-48; *லூக்கா* 23:34).

வசனம் 58:11
*தாவீதின் பற்றுறுதி அறிக்கை.*

"*...நீதியுடன் ஆளும் கடவுள்...*" -
மேலும், 82:8, 98:9.
*நமது நம்பிக்கையும் இதுவே. அநீதி நிறைந்த உலகு; நீதியைப் புரட்டும் ஒவ்வொருவரும், அதையே நீதி என்கின்றனர்! யாரும் ஒடுக்கப்பட்ட மக்களின் கண்ணீரைக் காண்பதில்லை. நீதியுடன் ஆளுகை செய்ய வாரும் ஆண்டவரே!*

✝

## 19 திருப்பாடல் 59

*(பாதுகாப்புக்காக மன்றாடல்)*

*பாடகர் தலைவர்க்கு; 'அழிக்காதே' என்ற மெட்டு; தாவீதின் வீட்டருகே காத்திருந்து அவரைக் கொல்வதற்கென்று சவுல் ஆள்களை அனுப்பிய போது, தாவீது பாடிய கழுவாய்ப் பாடல்*
1 என் கடவுளே!
என் எதிரிகளினின்று
என்னை விடுவித்தருளும்;
என்னை எதிர்த்து எழுவோரிடமிருந்து
எனக்குப் பாதுகாப்பளித்தருளும்.
2 தீமை செய்வோரிடமிருந்து
எனக்கு விடுதலை அளித்தருளும்;
கொலைவெறியரிடமிருந்து
என்னைக் காத்தருளும்.

3 ஏனெனில், அவர்கள்
என்னைக் கொல்வதற்காகப் பதுங்கியுள்ளனர்;
கொடியவர்
என்னைத் தாக்கத் திட்டமிட்டுள்ளனர்;
நானோ, ஆண்டவரே!
குற்றம் ஏதும் இழைக்கவில்லை;
பாவம் ஏதும் செய்யவில்லை;
4 என்னிடம் குற்றமில்லாதிருந்தும்,
அவர்கள் ஓடிவந்து
என்னைத் தாக்க முனைகின்றனர்;
என்னை எதிர்கொள்ளுமாறு எழுந்தருளும்;
என்னைக் கண்ணோக்கும்,
5 படைகளின் கடவுளாகிய ஆண்டவரே!
நீர் இஸ்ரயேலின் கடவுள்!
பிற இனத்தார் அனைவரையும்
தண்டிக்க எழுந்துவாரும்;
தீங்கிழைக்கும் அந்தத் துரோகிகளுள்
எவருக்கும் இரக்கம் காட்டாதேயும்.
(சேலா)
6 அவர்கள் மாலைவரை காத்திருந்து,
அதன்பின் நாய்களைப் போலக்
குரைத்து கொண்டு
நகரினுள் சுற்றித் திரிகின்றனர்.
7 அவர்கள் வாய் பேசுவதைக் கவனியும்;
அவர்களின் நாவின் சொற்கள்
வாள் போன்றவை;
'நாங்கள் பேசுவதை கேட்கிறவர்
யார்?' என்கின்றார்கள்.
8 ஆனால், ஆண்டவரே,
நீர் அவர்களைப் பார்த்து
எள்ளி நகைக்கின்றீர்;
பிற இனத்தார் எல்லாரையும் பார்த்து
நீர் ஏளனம் செய்கின்றீர்;
9 நீரே என் ஆற்றல்!
உமது உதவியை எதிர்பார்க்கின்றேன்;
ஏனெனில், கடவுளே!
நீரே என் அரண்.
10 என் கடவுள் தமது பேரன்பால்
என்னை எதிர்கொள்ள வருவார்;
கடவுள் என் எதிரிகளின் வீழ்ச்சியை
நான் கண்ணாரக் காணும்படி செய்வார்.
11 அவர்களை ஒரேயடியாய்க்
கொன்று விடாதேயும்;
இல்லையேல், உம் வல்லமையை
என் மக்கள் மறந்துவிடுவர்;
என் தலைவரே! எங்கள் கேடயமே!
அவர்களை உமது வலிமையால்
நிலைகுலையச் செய்யும்.
12 அவர்களின் வாய் பேசுவதும்

*நா உரைப்பதும் பாவமே;*
*அவர்கள் தற்பெருமை*
*அவர்களைச் சிக்கவைப்பதாக!*
*அவர்கள் சபிக்கின்றனர்;*
*அடுக்கடுக்காய்ப் பொய் பேசுகின்றனர்.*
13 *ஆகவே, வெகுண்டெழுந்து*
*அவர்களை அழித்துவிடும்;*
*இனி இராதபடி*
*அவர்களை ஒழித்துவிடும்;*
*அப்பொழுது, கடவுள்*
*யாக்கோபின் மரபினரை*
*ஆள்கின்றார் எனவும்*
*அவரது அரசு உலகின்*
*எல்லைவரைக்கும் உள்ளது எனவும்*
*அவர்கள் உணர்ந்து கொள்வார்கள்.*
(*சேலா*)
14 *அவர்கள் மாலைவரை காத்திருந்து,*
*அதன்பின், நாய்களைப்போல*
*குரைத்துக் கொண்டு*
*நகரினுள் சுற்றித்திரிகின்றார்கள்.*
15 *அவர்கள் இரைதேடி அலைகின்றனர்;*
*வயிறு நிறையாவிடில் முறுமுறுக்கின்றனர்.*
16 *நானோ உமது ஆற்றலைப்*
*புகழ்ந்து பாடுவேன்;*
*காலையில் உமது பேரன்பைப் பற்றி*
*ஆர்ப்பரித்துப் பாடுவேன்;*
*ஏனெனில், நெருக்கடியான வேளையில்*
*நீர் எனக்கு அரணும்*
*அடைக்கலமுமாய் இருந்தீர்.*
17 *என் ஆற்றல் நீரே!*
*உம்மைப் போற்றிப் பாடுவேன்;*
*ஏனெனில், கடவுள் எனக்கு அரண்;*
*கடவுளே எனக்குப் பேரன்பு!*

திருப்பாடல் 59:1-17

**சிந்தனைக்கு**

*தானும் தாவீதும் இருக்கும் வேளைகளில், மூன்று முறை தாவீதை ஈட்டி எறிந்து கொல்ல சவுல் முயற்சித்தார்* (1 *சாமுவேல்* 18:11 & 19:10). *பெலிஸ்தியர் தாவீதைக் கொன்று போட சவுல் திட்டம் தீட்டினார், ஆனால் தாவீது பெலிஸ்தியரை வென்று திரும்பினார்* (1 *சாமுவேல்* 18:17&25). *தன்னுடைய உள்ளத்தில் இருந்த வஞ்சக எண்ணத்தை, யோனத்தானிடமும், அரச அலுவலர்களிடமும் முதல் முறையாக சவுல் வெளிப்படுத்தினார்* (1 *சாமுவேல்* 19:1). *ஏவலாட்களை வைத்து தாவீதைக் கொல்ல வெளிப்படையான முதல் முயற்சியை சவுல் எடுத்தார்* (1 *சாமுவேல்* 19:11-17). *இங்கிருந்து தொடங்குகிறது தாவீதின் ஓட்டமும் சவுலின் துரத்தல்களும். மீக்காலின் இல்லத்தில் வைத்து தாவீதைக் கொல்ல சவுல் முயன்ற பொழுது* (1 *சாமுவேல்* 19:11), *இத்திருப்பாடலை தாவீது எழுதினார் என்று இப்பாடலின் தலைப்பு குறிப்பிடுகிறது. பாடலுள், பிற இனத்தார் என்கிற குறிப்பு இடம் பெற்றுள்ளது* (*வ.*5&8). *அதனால், இஸ்ரயேலருக்குள் தாவீதுக்கு ஆதரவும் செல்வாக்கும் இருந்ததால், சவுல் தாவீதைக் கொல்ல வேற்றினக் கூலிப்படையை ஏவினார் என்று புரிந்து கொள்ளலாம். தனக்கு நேரிட்ட*

இந்த இடரிலிருந்து, மீக்காலின் அன்பாலும், துணிச்சலான செயல்பாட்டாலும் தாவீது சவுலிடமிருந்து தப்பினார்.

வ.6&14ன் அடிப்படையில், எசேக்கியா அரசரின் காலத்தில், வேற்று நாட்டினர், எருசலேமைச் சூழ்ந்து கொண்ட வேளையில் (2 அரசர்கள் 18) எழுதப்பட்ட பாடல் என்கிற கருத்தும் உள்ளது.
🕎

அமைப்பு:
வ.1-4, கூக்குரலும் மன்றாட்டும்
வ.5-7, தீயோரைக் குறித்த விவரிப்பு
வ.8-10, கடவுள் மீது நம்பிக்கை
வ.11-13, எதிரிகளை அழிக்க மன்றாட்டு
வ.14-15, தீங்கிழைக்கும் எதிரிகள்
வ.16-17, இடர்களின் நடுவே இறைவருக்குப் புகழ்ப்பா
கடவுளே அரண், கேடயம் என்ற கருத்து இத்திருப்பாடலில் வலியுறுத்தப்படுகிறது (வ.9, 11, 16, 17).

கடவுள் மற்றும் தாவீது - இவ்விருவருக்குமான நெருங்கிய உறவு இப்பாடலில் வெளிப்படுகிறது.
என் கடவுள், வ.1,10
என் ஆற்றல், வ.9,17
என் அரண், வ.9,17
என் தலைவர், வ.11
🕎

வசனம் 59:1-2
தாவீதைச் சுற்றிலும் எதிரிகள். இதுவரை இல்லாத புதிய அனுபவத்திற்குள் அவர் நுழைகிறார். இஸ்ரயேலின் புகழ்பெற்ற இளைஞர், பதினாயிரங்களில் எதிரிகளை வீழ்த்திய மாவீரர், இப்போது தன் இல்லத்தில் தன் உயிருக்கே பாதுகாப்பற்ற நிலையில் இருக்கிறார். உடன் வீரர்களும் இல்லை, போர்க் கருவிகள் எதுவும் இல்லை. இத்தகைய நிலையிலிருந்து தன்னைப் பாதுகாக்க, தன்னை உயர்ந்த அடைக்கலத்தில் வைக்க, அவர் கடவுளிடம் மன்றாடுகிறார்.

வசனம் 59:2
"கொலைவெறியர்" -
உயிரை எடுப்பது மட்டுமே தாவீதைச் சூழ்ந்து கொண்டுள்ள எதிரிகளின் இலக்கு.

வசனம் 59:3-4
தாவீதின் குற்றமற்ற நிலை. சூழ்ந்து கொண்டுள்ள எதிரிகள் எவருக்குமோ அல்லது அவர்களை ஏவிவிட்டுள்ள சவுலுக்கோ எதிராக தாவீது எந்தக் குற்றமும் இழைக்கவில்லை; இருப்பினும் அவருடைய உயிரை எடுக்க அவர்கள் அவருடைய இல்லத்தைச் சூழ்ந்து பதுங்கியுள்ளனர்.

வசனம் 59:4
"அவர்கள் ஓடிவந்து என்னைத் தாக்க முனைகின்றனர்" -
தீயோர் தீமை செய்வதில் கொண்டுள்ள வேட்கையும் ஆர்வமும் முனைப்பும், நன்மை செய்வதில் நல்லோர்க்கு இருப்பதில்லை; அன்றைக்கு மட்டுமல்லாமல், இன்றைக்கும் இது எவ்வளவு கசப்பான உண்மை!

"என்னை எதிர்கொள்ளுமாறு" -
"எனக்குத் துணை செய்ய" (OV) என்பது, மூலச் சொல்லின் பொருள்படி இல்லா விட்டாலும், சரியான பொருள் தரும் மொழிபெயர்ப்பு.

வசனம் 59:5
 * படைகளின் கடவுள் -
விண்ணகப் படைகளின் தலைவராகிய கடவுள், எலோஹிம் ஷபா (Eloheem Tsah-bah); இப்போது தாவீது படைக்கலங்கள் ஏதுமற்ற ஒற்றை மனிதர்.
 * ஆண்டவர் -
யெஹோவா, உடன்படிக்கையின் கடவுளுக்குரிய திருப்பெயர் (yeh-ho-vah); தாவீதைத் திருப்பொழிவு செய்து, அவரோடு தம் உடன்படிக்கையை ஏற்படுத்தியவர்.
 * இஸ்ரயேலின் கடவுள் -
எலோஹி இஸ்ரயேல், (Elohi Israel); தன்னை அழிக்க வந்துள்ள வேற்றின வீரர்களுக்கு எதிராகச் செயல்பட.
 - இவ்வாறு, தனது மிகுந்த தேவைகளுக்கு ஏற்ப, கடவுளின் பொருத்தமான திருப்பெயர்களை உச்சரித்து தாவீது ஏறெடுக்கும் மன்றாட்டு.

வ.11ல், மேலும் "என் தலைவர்" (அதோனாய் / ad-o-noy, immediate boss, எஜமான்) என்று விளிப்பது கவனிக்கத் தக்கது.

நமது மன்றாட்டுகளில் நாம் தாவீதைப் போல, கடவுள்தம் திருப்பெயர்களைச் சொல்லி ஜெபிக்கிறோமா?

வசனம் 59:6
மீண்டும் வ.14.
பார்க்க, 55:10
தீமை செய்ய வேட்கை கொள்வோர், இருளுக்காகக் காத்திருக்கின்றனர்; நாய்களைப் போல ஒலியெழுப்பித் தங்களுக்குள் பேசிக்கொள்கின்றனர்; ஏற்ற சமயம் வரக்காத்திருந்து, தெருக்களில் சுற்றி அலைகின்றனர்.

வசனம் 59:7
அகந்தையும் அனல் கக்குவதுமான தீயோரின் பேச்சு.
ஒப்பிடுக, 57:4 பின் பகுதி.

"...கேட்கிறவர் யார்?" -
கடவுளுக்கு எதிரான அகந்தைப் பேச்சு. கடவுள் கேளார், மானிடர் செய்வதைப் பாரார் என்னும் எண்ணம், துணிந்து மற்ற மனிதர்க்கு எதிராகக் குற்றங்கள் செய்யத் தூண்டுகிறது; ஆனால் கடவுளின் கண்கள் பூவுலகின் மீது நோக்கமாக இருக்கின்றன.

வசனம் 59:8
அகந்தை கொண்ட எதிரிகள், தாவீதின் பார்வையில், வன்மையில் வல்லோராக இருக்கலாம்; ஆனால் பேராற்றல் மிக்க ஆண்டவரின் பார்வையில்! எனவே அவர் அவர்களைப் பார்த்து எள்ளி நகைக்கிறார்.

"பிற இனத்தார்..." -
ஒப்பிடுக, வ.11: "...என் மக்கள்..."

பாடகர் தலைவர்க்கு என்று தலைப்பிடப்பட்ட திருப்பாடல்கள் அனைத்தும், அரசர் தாவீது தனது வாழ்க்கைப் பக்கங்களைத் திரும்பிப் பார்த்து, தன் வாழ்வில் கடவுள் அருளிய சொல்லி முடியாத நன்மைகளை நினைவுகூர்ந்து எழுதிய புகழ்ப்பாக்கள். இவற்றைப் படைக்குமுன், அவர் இஸ்ரயேலைச் சுற்றியுள்ள பல நாடுகளின் மீது தங்கள் கடவுளாகிய ஆண்டவரின் ஆற்றலை உணரச் செய்திருந்தார். "ஆண்டவரின் ஆவி என் மூலம் பேசினார்; அவரது வார்த்தை என் நாவில் ஒலித்தது" என்று இதைக் குறித்தும், தனது இறைவாக்குகள் குறித்தும் அவரே கூறியுள்ளார் (2 சாமுவேல் 23:2).

வசனம் 59:9-10
தாவீதின் தளரா நம்பிக்கை.

வசனம் 59:9
சற்று மாறுபட்ட வடிவத்தில், வ.17.
கடவுளே தாவீதின் ஆற்றல், சகாயர், அரண்.
OV, இவ்வசன மொழிபெயர்ப்பில் வேறாக உள்ளது கவனிக்கத்தக்கது.

வசனம் 59:10
"என் கடவுள் தமது பேரன்பால் என்னை எதிர்கொள்ள வருவார்" -
விண்ணகத்தில் உறையும் கடவுளாக அல்ல; தமது அன்பிற்குரியவர்க்கு ஏற்ற வேளையில் உற்ற துணையாக, நம்பத்தக்க தமது அளவற்ற இரக்கங்களால் அவர்களைச் சந்திக்கும் கடவுள் (100:5).

வசனம் 59:11
தனது இல்லத்தைச் சூழ்ந்து கொண்டவர்களின் பேச்சுகள் எவ்வாறு இருந்தன என்பதை தாவீது விளக்குகிறார். ஒருவேளை, மாவீரரான தாவீதுக்கு தாங்கள் என்ன செய்ய விரும்புவதாக அவர்கள் பேசியிருக்கலாம். எதையும் தங்கள் வாழ்க்கையில் சாதித்திராத அவர்கள், அந்தத் தற்பெருமையிலேயே அழியட்டும் என்று தாவீது வேண்டுகிறார்.

மக்களின் மறதி, 78:11, 106:13.
தாவீதின் விசித்திரமான வேண்டுதல்; ஆனால் சான்று பகரும் வேண்டுதல்.

பிற இனத்தாரான தாவீதின் எதிரிகள் நிலைகுலைந்து சிதறிப் போகவேண்டும்; கடவுளின் பேராற்றலுக்குச் சான்றாக, இஸ்ரயேல் முழுமைக்கும் அவர்கள், போரில் பிடிபட்ட அடிமைகளாக அனுப்பப்பட வேண்டும். அவர்களைக் காணும் வேளைகளில் எல்லாம், அவர்கள் யாராக இருந்தார்கள் என்பதையும், கடவுள் அவர்களின் நிலைமையை எப்படிப் புரட்டிப் போட்டார் என்பதையும் கண்டு, அவருக்கு அஞ்சி மக்கள் வாழ்வார்கள்.

இவ்வாறு தனது தனிப்பட்ட வேண்டுதலில் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களின் இறைப் பற்றை வளர்க்க தாவீது விரும்புகிறார். (மேத்யூ பூலே)

வசனம் 59:13
"...அழித்துவிடும்... ஒழித்துவிடும்..." -
வ.11க்கு மாறான தாவீதின் வேண்டுதல்!
ஒருவேளை எதிரிகளின் தற்பெருமைக்கு ஏற்றவாறு அவர்கள் தண்டிக்கப்பட தாவீது வேண்டியிருக்கலாம்.

ஆனால் இங்கும் கூட, உலகின் கடை எல்லை வரை, இறையாட்சியின் ஆளுகை விளங்க மன்றாடுகிறார். மேலும் பார்க்க, 58:11.

வசனம் 59:14-15
கூடுதல் அழுத்தமாக, வ.6 மீண்டும் தரப்பட்டு, அதன் தொடர்ச்சியாக வ.15 அமைகிறது.

இரத்தவெறி கொண்ட நாய்கள் போலத் தாவீதின் எதிரிகள் அவருடைய இல்லத்தைச் சூழ்ந்து பதிவிருக்கிறார்கள்.

வசனம் 59:16
மனநிறைவற்ற, கொடிய எதிரிகள் தன்னைச் சூழ்ந்திருந்தாலும், தாவீதோ, தனக்குக் கோட்டையும், அரணும், அடைக்கலமும், புகலிடமும், மீட்பளிக்கும் வல்லமையும், கற்பாறையுமாகிய கடவுளைப் புகழ்ந்து பாடி மகிழ்கிறார் (18:2). இதற்கு முன்பு, நெருக்கடியான வேளையில், தனக்கு அரணும் அடைக்கலமுமாக இருந்த கடவுளின் பேரன்புக்கு நன்றிப்பாடல் பாடுகிறார்.

இடர்மிகு இரவு, விடுதலையின் விடியல். புதிய விடியல், தனக்குப் புதியதான கிருபையைக் கொண்டு வரும் என்கிற நம்பிக்கையோடு தாவீது முடிக்கிறார்.
"...மாலையில் அழுகை...
காலையிலோ ஆர்ப்பரிப்பு!"
(30:5)

## 19 திருப்பாடல் 60

*(விடுதலைக்காக மன்றாடல்)*

*பாடகர் தலைவர்க்கு; 'சான்று பகர் லீலி மலர்' என்ற மெட்டு; ஆராம் நகராயிம், ஆராம் சோபா என்ற அரசுகளோடு தாவீது போர் புரிகையில், யோவாபு திரும்பி வந்து, உப்புப் பள்ளத்தாக்கில் பன்னீராயிரம் ஏதோமியரை வெட்டி வீழ்த்திய போது, படிப்பினையாக தாவீது பாடிய கழுவாய்ப் பாடல்*
1 கடவுளே!
நீர் எங்களை
வெறுத்து ஒதுக்கிவிட்டீர்;
எங்களை நொறுக்கிவிட்டீர்;
எங்கள்மீது சீற்றம் கொண்டீர்;
இப்பொழுதோ,
எங்களை நோக்கித் திரும்பியருளும்.
2 நிலத்தை நீர் அதிரச் செய்தீர்;
அதில் பிளவு உண்டாகச் செய்தீர்;
அதன் வெடிப்புகளைச் சீர்ப்படுத்தும்,
அது ஆட்டம் கண்டுள்ளது;
3 உம் மக்களைக்
கடும் துன்பத்தைக் காணச் செய்தீர்;
மதியை மயக்கும் மதுவை
எங்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர்.
4 உமக்கு அஞ்சி நடப்போர்
எதிரிகளின் அம்பினின்று
தப்பித்துக்கொள்ளுமாறு

அவர்களுக்கெனக்
கொடி ஒன்றை ஏற்றிவைத்தீர்.
(சேலா)
5 உம் அன்பர்கள் விடுதலை பெறுமாறு,
உமது வலக்கரத்தால்
எங்களுக்குத் துணை செய்யும்;
எங்கள் விண்ணப்பத்திற்குப் பதிலளியும்!
6 கடவுள் தமது தூயகத்தினின்று
இவ்வாறு உரைத்தார்:
"வெற்றிக் களிப்பிடையே
செக்கேமைப் பங்கிடுவேன்;
சுக்கோத்துப் பள்ளத்தாக்கை
அளந்து கொடுப்பேன்.
7 கிலயாது என்னுடையது;
மனாசேயும் என்னுடையதே;
எப்ராயிம் என் தலைச்சீரா;
யூதா என் செங்கோல்!
8 மோவாபு எனக்குப்
பாதம்கழுவும் பாத்திரம்;
ஏதோமின்மீது
என் மிதியடியை எறிவேன்;
பெலிஸ்தியாவை வென்று ஆர்ப்பரிப்பேன்.
9 அரண்சூழ் நகரினுள்
என்னை இட்டுச் செல்பவர் யார்?
ஏதோம்வரை என்னைக்
கூட்டிச் செல்பவர் யார்?"
10 கடவுளே!
நீர் எங்களைக்
கைவிட்டு விட்டீர் அன்றோ!
கடவுளே!
நீர் எங்கள் படைகளோடு
புறப்படவில்லை அன்றோ!
11 எதிரியை மேற்கொள்ள
எங்களுக்கு உதவும்;
மனிதர் தரும் உதவியோ வீண்.
12 கடவுளின் துணையால்
வீரத்துடன் போரிடுவோம்;
அவரே நம் எதிரிகளை மிதித்து விடுவார்.

திருப்பாடல் 60:1-12

**சிந்தனைக்கு**

வரலாற்று இடங்கள் பலவற்றையும் எடுத்துரைக்கும் திருப்பாடல்.

தலைப்பில் சுட்டப்படும் ஆராம் நஹராயிம் என்பது, யூப்ரடீஸ் மற்றும் டைக்ரிஸ் ஆறுகளுக்கு இடையே அமைந்துள்ள மெசபடோமியா நிலப்பரப்பின் வட பகுதி (தொடக்க நூலில் ஆபிரகாம் விட்டு வந்த பாதான் ஆராம் அல்லது ஆரான் என்று அழைக்கப்பட்ட பகுதி); ஆராம்

ஸோபா என்பது, இஸ்ரயேலின் வடகிழக்கில், தமஸ்கு முதல் ஆராம் நஹராயிம் வரை உள்ள பகுதி.

வ.8ல் குறிப்பிட்டுள்ள மோவாபு இஸ்ரயேலுக்குக் கிழக்கிலும், ஏதோம் தென் கிழக்கு மற்றும் தெற்கிலும், பெலிஸ்தியா மேற்கிலும் உள்ளன.

தாவீதின் ஆட்சிக் காலத்தில், இந்த நாடுகளோடு நடந்த போர்கள், 2 சாமுவேல் நூலில், 8:1-8, 10:1-19 மற்றும் 1 குறிப்பேடு 18:11-13 ஆகிய பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உப்புப் பள்ளத்தாக்கு நிகழ்வு, 2 சாமுவேல் 8:13 மற்றும் 1 குறிப்பேடு 18:11-13ல் குறிப்பிடப்பட்டுள்ளது. வரலாற்று நூல்களில், ஒன்றில் தாவீது என்றும், மற்றதில் அபிசாய் என்றும் எழுதப்பட்டிருக்க, இங்கு தலைப்பில் யோவாபின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், கொல்லப்பட்ட ஏதோமியரின் எண்ணிக்கையிலும் வேறுபாடு உள்ளது.

வ.7ல் சொல்லப்பட்டுள்ள கிலயாது, இஸ்ரயேலின் வடகிழக்குப் பகுதி; மனாசே, வடமேற்குப் பகுதி; எப்ராயிம், மையப் பகுதி; யூதா தென் பகுதி. தாவீதின் நாட்களில், எப்ராயிம் தொடங்கி வடக்கு இஸ்ரயேல், பிரிந்து நிற்கத் தலைப்படுவது உண்டு. இத்திருப்பாடலின் வழியே, செங்கோல் யூதாவிடம் இருந்தாலும், யாக்கோபின் எல்லா வழிமரபினரும் தம்முடையவர்களே என்று கடவுள் உறுதியாக உரைக்கிறார்.

தலைப்பில் shushan eduth என்பது சான்று பகர் லீலி மலர் என்ற, அன்றைக்குப் புகழ்பெற்ற பாடலின் மெட்டு; இதே மெட்டில் அமைந்த மற்றொரு திருப்பாடல், திருப்பாடல் 80. கூடுதலாக, திருப்பாடல் 45ன் தலைப்பையும் பார்க்க.

தலைப்பில் இடம்பெற்றுள்ள சிறப்பான சொல், "படிப்பினையாக" என்பது. ஏனைய 149 திருப்பாடல்களிலும் இடம்பெறாத சொல், இந்த ஒரு திருப்பாடலின் தலைப்பில் இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அந்தப் படிப்பினை, 10 தொடங்கி 12 வரையுள்ள வசனங்களில் அடங்கியுள்ளது. "எந்தவொரு செயலிலும் கடவுளின் துணையின்றி இறங்கக் கூடாது; கடவுள் விரும்பும் எந்தவொரு செயலே ஆனாலும் வெற்றி பெற, மனிதர் தரும் உதவியோ வீண்; கடவுளின் துணையோடு, முனைப்புடன் செயல்பட்டால் மட்டுமே, வெற்றியை அவர் அளிப்பார்" என்பதே தாவீது நமக்கு வெளிப்படுத்தும் படிப்பினை!

🕎

அமைப்பு:
வ.1-3, தோல்வியுற்ற இஸ்ரயேலின் மனநிலை
வ.4-5, கடவுளின் மீட்பில் நம்பிக்கை
வ.6-8, நாடுகளின் மீது கடவுள் தம் வெற்றியை உரைத்தல்
வ.9-12, வெற்றியை அருளும் கடவுள்

🕎

வசனம் 60:1-3 & 10
பார்க்க, 44:1-26, 89:38-45.

அண்டை நாடுகளுடன் ஏற்பட்ட போரில், தாவீதும் அவரது படையினரும், குறிப்பிடத்தக்க அளவில் பின்னடைவைச் சந்தித்தனர். வரலாற்று நூல்களில் இதுபோன்ற நிகழ்வு சொல்லப்படவில்லை. ஒருவேளை நாம் இப்படிக் கருதலாம்: தாவீது தன் முழுப் படைகளோடு அரமேயரோடு வடக்கில் போர் புரிந்து கொண்டிருந்த வேளையில், மோவாபியரும்

*ஏதோமியரும் தெற்கு மற்றும் தென்கிழக்கு எல்லையில் இஸ்ரயேலுக்குள் நுழைந்திருக்கக் கூடும். அந்தச் சூழலில் இத்திருப்பாடலை அவர் எழுதியிருக்கலாம். பின்னர் படையின் ஒரு பகுதியைப் பிரித்து, யோவாபின் தலைமையில் ஏதோமியரை எதிர்கொள்ள அனுப்பி இருக்கலாம்.*

*இந்தச் சூழ்நிலையில், ஆண்டவரைத் தலைவராகக் கொண்ட தனது படைக்குப் பின்னடைவா என்று தாவீது கலக்கமுற்றார். தனது கவலையைக் கடவுளிடம் முறையிட்டார். தனது படைகளோடு கடவுள் இல்லை என்கிற உணர்வு, அவருக்குள் பெரும் அதிர்வலைகளையும், மனமயக்கத்தையும் ஏற்படுத்தியது.*

வசனம் 60:4
*தங்களோடு போருக்குக் கடவுள் வரவில்லை என்பதைப் பின்னடைவின் வழியே உணர்ந்த போதிலும், வெற்றியை அருளும் கடவுளின் திருப்பெயரைத் தாங்கியே தாங்கள் போருக்கு வந்திருப்பதையும், கடந்த காலங்களில் இஸ்ரயேலுக்கு அவர் செய்த அருஞ்செயல்கள் மீது தங்களுக்குள்ள நம்பிக்கை சற்றும் குறையவில்லை என்பதையும் தாவீது குறிப்பிடுகிறார்.*

*தாவீது குறிப்பிடும் கொடி அல்லது பதாகை, யெஹோவா நிஸி* (*ஆண்டவரே பதாகை*) *என்னும் அவருடைய திருப்பெயர் ஆகும்* (*விடுதலைப் பயணம்* 17:15).

*இந்த வசனத்தில்,* ko-shet *என்கிற எபிரேயச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது; அதற்குச் சரியான பொருள் தெரியவில்லை.* KJV, NKJV, Tamil OV *போன்றவை* truth / *சத்தியம் என்றும், பல மொழிபெயர்ப்புகள்* "*எதிரிகளின் அம்புக்குத் தப்பிக்க*" *என்றும் பொருள் கொண்டுள்ளன.*

வசனம் 60:5-12
இணை, 108:6-13.

வசனம் 60:5
"*உம் அன்பர்கள் விடுதலை பெறுமாறு...*" -
*போரில் இறங்கிப் பின்னடைவைக் கண்ட நிலையில், உடன்படிக்கையின் மக்களை விடுவிக்க வருமாறு தாவீது கடவுளிடம் வேண்டுகிறார்.*

*உமது அன்பர் என்பதற்கு இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள சொல்,* yed-eed *என்பதாகும்; மிகுந்த நெருக்கத்தை உணர்த்தும் ஒரு சொல்* (108:6, 127:2; *எசாயா* 5:1; *எரேமியா* 11:15).

வசனம் 60:6-8
"*வெற்றிக் களிப்பிடையே...*" -
*வாக்களிக்கப்பட்ட நாட்டில், தங்களின் மூதாதையருக்குக் கடவுள் அருளிய வெற்றிகளையும், அவற்றில் ஆண்டவர் எவ்வளவாகக் களிகூர்ந்தார் என்பதையும் உணர்ந்தவராக, தாவீது வெளிப்படுத்தும் இறைவாக்கு.*

*மோசே மற்றும் யோசுவாவின் காலங்கள் தொடங்கி, இஸ்ரயேலுக்கு இவ்வளவு வெற்றிகளை அருளி, தம் மக்களில் களிகூர்ந்த கடவுள், இனியும் இஸ்ரயேலருக்கு வெற்றியளிக்காது இருப்பாரோ!*

*இவ்வசனங்களில் மீண்டும் மீண்டும் ஒலிக்கும்* "*என்*" *என்கிற சொல்லை அவதானிக்க; யாக்கோபின் வழிமரபை மட்டுமல்லாமல், அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலப்பரப்பையும் தம்முடையது என்று கடவுள் உணர்த்துகிறார். தம் அன்புக்குரியவர்களும், அவர்களுக்கு உரிமையாகத் தாமே வழங்கியதுமான நிலமும் கொள்ளை போவதை அவர் அனுமதிப்பாரா!*

வசனம் 60:6
"... செக்கேம்... சுக்கோத்து..." -
*யோர்தான் ஆற்றுக்கு மேற்கிலும் கிழக்கிலும் கடவுள் இஸ்ரயேலுக்கு வழங்கிய பகுதிகள். மேலும் பார்க்க, தொடக்க நூல் 33:17-18; யாக்கோபு கைப்பற்றி, யோசேப்பிற்குக் கூடுதலாக வழங்கிய பங்கு (தொடக்க நூல் 48:22).*

வசனம் 60:7
"கிலயாது... மனாசே..." -
*யோர்தான் ஆற்றுக்குக் கிழக்கிலும் மேற்கிலும் மனாசே வழிமரபினரின் பங்கு.*

"எப்ராயிம்... யூதா..." -
*யாக்கோபின் வழிமரபினரில், இரண்டு பெரிய வழிமரபினர். யோசேப்பின் மகன்களில், தலைமகன் மனாசேயை விடப் பெரிதான ஆசியை இளையவன் எப்ராயிமுக்கு யாக்கோபு வழங்கினார் (தொடக்க நூல் 48:19). அதுபோலவே, தனது மகன்களுக்குள் சிறப்பான ஆசியை, யூதாவுக்கு யாக்கோபு வழங்கினார் (தொடக்க நூல் 49:8-12). பின்னாட்களில், இவர்களே இஸ்ரயேலரின் அடையாளம் ஆகினர் (செக்கரியா 9:13).*

வசனம் 60:8
*மோவாபு மற்றும் பெலிஸ்தியா நாடுகள் தாவீது அரசருக்குக் கப்பம் கட்டும் நாடுகள் ஆகின; ஏதோமோ, இஸ்ரயேலின் அரசர் அமர்த்துபவரால் ஆளப்படும் நாடாக மாறியது. இவற்றை உணர்த்துவதாக இவ்வசனம் உள்ளது.*

"...என் மிதியடியை எறிவேன்" -
*பொருள் எதையும் உடைமையாக்கும் போது, இஸ்ரயேலரிடையே நிலவிய தொன்மையான வழக்கம், ரூத் 4:7-8.*

"பெலிஸ்தியாவை வென்று ஆர்ப்பரிப்பேன்" -
OV, "பெலிஸ்தியாவே, என்னிமித்தம் ஆர்ப்பரித்துக் கொள்"
*பெலிஸ்தியா வென்று ஆர்ப்பரிப்பது கடவுளின் பொருட்டு நடக்க முடியுமா? ஒரு நகைமுரண் போல எபிரேயத்தில் சொல்லப்பட்டு இருக்கலாம்; பெலிஸ்தியாவை நோக்கிக் கடவுள் எழுப்பிய கேள்வி போல இருந்திருக்கலாம்.*

வசனம் 60:9
*தற்போதைய கையறுநிலையைக் கடவுளிடம் தாவீது வெளிப்படுத்துகிறார். கைவிடப்பட்டது போலத் தோன்றினாலும், படைகளின் ஆண்டவராகிய கடவுளே அல்லாமல், எதிரியின் கோட்டைக்குள் தங்களை வழிநடத்திச் செல்பவர் வேறு யார்?*
(*விடுதலைப் பயணம்* 13:21-22, 33:2; *இணைச் சட்டம்* 9:3, 31:8; *யோசுவா* 1:5&9).

வசனம் 60:10
*இஸ்ரயேலின் பின்னடைவுக்குக் காரணம்.*
*தாவீது படைகளைத் திரட்டினார்; போருக்கான ஆயத்த நிலையில், நிச்சயமாகக் கடவுளிடம் அவர் மன்றாடி இருப்பார்; ஏனெனில் தாங்கள் போரிட்டு அடைவது வெற்றி அல்ல என்றும், தங்களுக்காகப் போரிடுபவர் கடவுளே என்பதையும் அவர் அறிவார். இப்போது தங்களுடன் போருக்கு வராத கடவுள், தங்கள் சார்பில் எழுந்து இனிப் போரிட அவரை அழைக்கிறார்.*

வசனம் 60:11-12
*தாவீதின் தெளிவான புரிதல், மனிதர் தரும் உதவியோ வீண்* (208:12-13, 121:1-2). *தற்போதைய பின்னடைவிலிருந்து மீள, அவர் கூடுதல் படைகளைத் திரட்டவில்லை; எந்த நாடு தனக்கு*

உதவிக்கு வரும் என்று எண்ணவில்லை. மாறாக, முழுவதும் கடவுளைச் சார்ந்து முன்னேற முடிவு செய்கிறார்.

இஸ்ரயேல் தோற்க வேண்டும் என்பது கடவுளின் விருப்பமாக நிச்சயம் இராது. அவரைச் சார்ந்து கொண்டு, முனைப்போடு போரிட்டால், உறுதியாகக் கடவுளே இஸ்ரயேலின் எதிரிகளை முறியடிப்பார் என்பதுவே தாவீதின் நம்பிக்கை.

"கடவுளின் துணையால் வீரத்துடன் போரிடுவோம்" -
இரவிலும் அதிகாலையிலும் ஜெபித்து விட்டு, பகல் நேரத்தில் செயலற்று இருப்பது வேற்றியைத் தராது; அது கடவுளின் விருப்பமும் இல்லை. கடவுள் அருளிய விவேகத்தோடு, முனைந்து செயல்பட்டு, வெற்றியைக் காண்பதே இறைவழியிலான சிறந்த செயல்பாடு ஆகும். உயிர் இல்லாத உடல் போல, செயல் இல்லாத நம்பிக்கையும் செத்தது அன்றோ! (யாக்கோபு 2:26)

✝

## 19 திருப்பாடல் 61

*(பாதுகாப்புக்காக மன்றாடல்)*

*பாடகர் தலைவர்க்கு; நரம்பிசைக் கருவிகளுடன்; தாவீதுக்கு உரியது*
1 கடவுளே!
என் கூக்குரலைக் கேளும்;
என் விண்ணப்பத்திற்குச் செவிசாயும்.
2 பூவுலகின் கடைமுனையினின்று
உம்மைக் கூப்பிடுகின்றேன்;
என் உள்ளம் சோர்வுற்றிருக்கின்றது;
உயரமான குன்றுக்கு
என்னை அழைத்துச் செல்லும்.
3 ஏனெனில் நீரே என் புகலிடம்;
எதிரியின்முன் வலிமையான கோட்டை.
4 நான் உமது கூடாரத்தில்
எந்நேரமும் தங்கியிருப்பேன்;
உமது இறக்கைகளின் பாதுகாப்பில்
தஞ்சம் புகுவேன்.
(சேலா)
5 ஏனெனில், கடவுளே!
நான் செய்த பொருத்தனைகளை
நீர் அறிவீர்;
உமது பெயருக்கு அஞ்சுவோர்க்குரிய
உடைமையை எனக்குத் தந்தீர்.
6 அரசரைப் பல்லாண்டு வாழச் செய்யும்;
அவரது ஆயுள்
தலைமுறை தலைமுறையாக நீடிக்கட்டும்!
7 கடவுள் முன்னிலையில்
அவர் என்றென்றும் வீற்றிருப்பாராக!
பேரன்போடும் உண்மையோடும்

அவரைக் காத்தருளும்!
8 உமது பெயரை
என்றென்றும் புகழ்ந்து பாடுவேன்;
நாள்தோறும் என் பொருத்தனைகளை
நிறைவேற்றுவேன்.

திருப்பாடல் 61:1-8

**சிந்தனைக்கு**

ஆறாவது வசனத்தை அடிப்படையாக வைத்து, இந்தத் திருப்பாடல் தாவீது எழுதியது அல்ல என்று சொல்பவர்கள் உளர். தனது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடிய போதிலும், சவுலுக்கு எதிராக தாவீது எந்தவொரு செயலிலும் ஈடுபடவில்லை; சவுலின் உயிர் தனது கைகளில் அளிக்கப்பட்ட வேளையிலும், சவுலுக்கு எத்தீங்கையும் தாவீது இழைக்கவில்லை. எனவே தனது உயிரைக் காக்கப் போராடிய தாவீது, அரசர் சவுலை வாழ்த்தி எழுதியதில் வியப்பேதும் இல்லை என்பது என் கருத்து.

வேறு சிலர், அப்சலோமுக்கு அஞ்சி ஓடியபோது எழுதப்பட்ட திருப்பாடல் இது என்கின்றனர். அப்சலோமுக்கு அஞ்சி எருசலேமை விட்டு வெளியேறும்போதே, அவனுக்கு எதிரான போர் குறித்த ஏற்பாடுகளைச் செய்தவாறேதான் தாவீது வெளியேறினார்; அப்சலோம் கிளர்ச்சி செய்தது, சாமுவேல் வழியாகத் திருப்பொழிவு பெற்ற தாவீதுக்கு எதிராக என்பதால், அது கடவுளின் திட்டமன்று என்பதை அறிந்திருந்த தாவீது, அவனை வாழ்த்தி இந்த வசனத்தை எழுதியிருக்க வாய்ப்பில்லை.

இன்னும் சிலர், அரசரான தாவீது, கடவுள் தன்னோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் அடிப்படையில் (2 சாமுவேல் 7:8-16), அதனைக் கடவுளுக்கு நினைவூட்டும் வகையில், அப்சலோமுக்கு அஞ்சி ஓடிய போது, இந்த வசனங்களைத் தானே எழுதிக் கொண்டார் என்றும், அவ்வாறு எழுதுவது ஓர் இலக்கிய வடிவம் (சாலமோனின் மன்றாட்டு, திருப்பாடல் 72) என்றும் சொல்கிறார்கள்.

எழுதிய பின்னணி எதுவும் நமக்குத் தெரியவில்லை என்பதற்காக, இந்தத் திருப்பாடலை தாவீது எழுதவில்லை என்று சொல்லி விட முடியாது. இப்பாடலை தாவீதுதான் எழுதினார், அரசர் சவுலை அவர் வாழ்த்தி எழுதினார் என்று கருத இடமுள்ளது.

வசனம் 2 மற்றும் வரலாற்று நூல்களின் அடிப்படையில், எருசலேமுக்குத் தொலைவாக தாவீது இருந்தது, அவர் யூப்ரடீஸ் ஆற்றுக்கு அருகில் போரிடச் சென்றதுதான் என்றும் (2 சாமுவேல் 8:3), இந்தத் திருப்பாடல் அப்போது எழுதப்பட்ட ஒன்று என்றும் சிலர் சொல்கிறார்கள். அரசராக ஒரு போர்ச் சூழலில் இருக்கும் தாவீது, தான் மட்டும் விடுபட்டால் போதும் என்று நினைத்திருக்க வாய்ப்பில்லை. எனவே தாவீதின் இளம் வயதின் அனுபவங்களின் அடிப்படையில் அமைந்த மற்றொரு திருப்பாடல் இது என்றே சொல்லலாம்.

தலைப்பில் neginah என்ற சொல் உள்ளது; இச்சொல், neginoth (திருப்பாடல்கள் 4, 6, 54, 55, 67, 76 ஆகியவற்றின் தலைப்புகள்) என்பதன் ஒருமைச் சொல் ஆகும். இதன் பொருள் நரம்பிசைக் கருவி என்பது. 🕎

அமைப்பு:
வ.1-2, பாதுகாக்க மன்றாட்டு
வ.3-4, கடவுளே அரண்

வ.5-7, அரசருக்காக மன்றாட்டு
வ.8, கடவுளுக்குப் புகழ்ச்சி

வசனம் 61:1
கதறும் தனது குரலைக் கேட்குமாறு தாவீதின் மன்றாட்டு, 5:2-3, 17:1, 55:2, 86:6, 142:6.

வசனம் 61:2
"பூவுலகின் கடைமுனையினின்று..." -
அவ்வளவு தொலைவாக தாவீது வந்து விடவில்லை; ஆனால், கடவுளிடமிருந்து மறுமொழி கிடைக்காததால், கடவுளுக்குத் தனது குரல் கேட்காத அளவுக்கு, அவருக்குத் தொலைவாகத் தான் வந்து விட்டதாக அவர் தன் உள்ளத்தில் உணர்ந்தார்.
கடவுளின் மறுமொழி தாமதமாவதால், மிகவும் சோர்வுற்றார்.

"உயரமான குன்றுக்கு..." -
யூதேயாவின் குன்றுகளில் தப்பி அலைந்த தாவீது, மனிதர்களால் பின்தொடர முடியாத அளவுக்கு, இன்னும் உயர்ந்த அடைக்கலத்தில் தன்னை வைக்குமாறு, கடவுளிடம் மன்றாடினார்.
தான் நிற்கும் நிலையான கற்பாறை ஆண்டவர் என்பது எப்போதும் திருப்பாடகரின் நம்பிக்கையாக இருக்கிறது, 62:2, 71:3, 94:22, 144:1.

வசனம் 61:3
பார்க்க, 18:2, 31:1-4, 46:1, 62:7-8, 71:7, 91:2&9, 94:22, 142:5.
கடந்த காலங்களில், தனக்கு அரணும் அடைக்கலமுமாக இருந்த கடவுளை தாவீது நினைவு கூர்ந்தார்.

வசனம் 61:4
"உமது கூடாரத்தில் எந்நேரமும்..." -
பார்க்க, 23:6, 27:5
கடவுளின் இல்லத்தில் எப்போதும் தங்கியிருக்க எவரும் வாஞ்சிக்கலாம்; ஆனால் அது நமக்கான இறைத்திட்டமா? அல்லது அரசராக அருட்பொழிவு பெற்ற தாவீது, அவ்வாறு கடவுளின் இல்லத்திலேயே தங்கிவிட முடியுமா? தற்போதைய வாழ்க்கையின் சிக்கல்கள், அமைதிக்காக இவ்வாறு தாவீதை ஏங்கச் செய்தன.

"உமது இறக்கைகளின் பாதுகாப்பில் தஞ்சம்..." -
பார்க்க, 17:8, 63:7, 91:4.
கடவுளே தாவீதின் அரண், கேடயம், கோட்டை என்பது போல, திருப்பாடல்களில் இடம்பெறும் உருவகக் காட்சி, தாய்ப் பறவை போன்ற கடவுளின் இறக்கைகள்.

வசனம் 61:5
வேறு விதமாக இதே கருத்து, வ.8.

வசனம் 61:6-7
பார்க்க, முன்னுரையாகத் தரப்பட்டுள்ள குறிப்புகள்.

வசனம் 61:7
தாவீதிய உடன்படிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ள மன்றாட்டு; என்றென்றும் அரியணையில் வீற்றிருக்கும் அரசராக, தாவீதின் வழியில் வரும் மேசியா குறித்த வெளிப்பாடு என்றும் இவ்வசனம் கருதப்படுகிறது.

வசனம் 61:8
தாவீதின் பொருத்தனைகள், 22:22, 50:14, 56:12, 66:13-14.
நாள்தோறும் பொருத்தனைகளை நிறைவேற்ற வாக்களிக்கும் தாவீது; கடவுளின் கிருபைகள் நாள்தோறும் புதியன எனில், அவற்றை அனுதினமும் பெற்றுக் கொள்ளும் நமது நன்றித் துதியும் நாள்தோறும் புதியனவாக இருக்கவேண்டும் அல்லவா! அரண்மனையில் வாழும்போது மட்டுமன்றி, துயர்மிகு இடர்களின் நடுவே வாழும்போதும், தாவீது தன் நன்றிப்பலிகளைச் செலுத்தத் தவறியதில்லை என்பது அவரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய படிப்பினை! நன்றிப் பலிகளைச் செலுத்த நாம் கற்றுத் தேரும்போது, நமது உள்ளம் வாழ்வின் சிக்கல்களிலிருந்து விடுபட்டு, இறை நம்பிக்கையில் ஊன்றிக் கட்டப்படுகிறது! நமது எண்ணக் குவியம் சிக்கல்களிலிருந்து நம்பிக்கையோடு தீர்வுகளை நோக்கி இடம்பெயர்கிறது!
🕎

நேர்ச்சை / பொருத்தனை -
பார்க்க, இணைச் சட்டம் 23:21-23; திருப்பாடல் 50:14. சாலொமோனின் எச்சரிக்கை, சபை உரையாளர் 5:2&4-5.

பொருத்தனை செய்யும் நாளில், அந்தப் பொருத்தனை நம்மால் நிறைவேற்றக்கூடியதே என்று உண்மையாகவே நம்பலாம். ஆனால் அந்த ஆசி உறுதிப்படும்போது, அது இயலாமற் போகலாம். இன்றைய உலகில், எவரும் நீதித் தலைவர் இப்தா போல மகளைப் பலியிட முடியாது (நீதித் தலைவர்கள் 11).

நேர்ச்சை, பொருத்தனை என்று பெயர் சொல்லப்பட்டாலும் அதுவும் நன்றிப்பலிதான். பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட பலிகள் அனைத்தையும், மகத்தான, இணையற்ற, தமது ஒரே உயிர்ப்பலியின் வழியே கிறிஸ்து இயேசு செய்து முடித்து விட்டார் (எபிரேயர் 7:27). அந்தப் பலியின் வழியே மட்டுமே நாம் ஒவ்வொருவரும் மீட்கப்பட்டு, பேராற்றல் மிக்க கடவுளோடு, அவராலும், அவருக்கென்றும் ஒப்புரவாக்கப்பட்டோம் (1 கொரிந்தியர் 5:18-20). எல்லாப் பலிகளையும் கிறிஸ்து இயேசு சிலுவையில் நிறைவேற்றியிருக்க, நேர்ச்சையும் பொருத்தனையும் செய்து, மாசற்ற இரத்தத்தை நாம் குற்றப்படுத்தக் கூடாது.

அப்படியானால், நேர்ச்சையோ பொருத்தனையோ செய்யக் கூடாதா? இதற்கு நேர்மையான பதில்: பொருத்தனை செய்யுங்கள். 'தினமும் ஜெபம் செய்வேன்' என்று பொருத்தனை செய்யுங்கள்; 'தினமும் பைபிள் படிப்பேன்' என்று நேர்ச்சை செய்யுங்கள். 'தவறாமல் ஆலயம் செல்வேன்' என்று பொருத்தனை செய்யுங்கள்; 'விஷ்வவானி, ஆசீர்வாத இயக்கம், கிதியோன் போன்ற திருப்பணி இயக்கங்களோடு இணைந்து திருப்பணி செய்வேன்' என்று நேர்ச்சை செய்யுங்கள். 'ஆலயப் பணிகளை ஆர்வத்தோடு நேர்மையான வழியில் செய்வேன்' என்று பொருத்தனை செய்யுங்கள்.

ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் அவருக்கென்று செயல்படவே ஆதாயப்படுத்தி உள்ளார்; அப்படியிருக்க, அவர் அருளிய சொல்லி முடியாத ஆசியில் ஒரு சிறு பகுதியை நேர்ச்சையாகச் செலுத்துவதில் உங்களுக்கு என்ன பெருமை!

✝️

## 19 திருப்பாடல் 62

(கடவுளின் பாதுகாப்பில் நம்பிக்கை)

*பாடகர் தலைவர் எதுத்தூனுக்கு; தாவீதின் புகழ்ப்பா*
1 கடவுளின் செயலுக்காக
நான் மௌனமாய்க் காத்திருக்கின்றேன்;
எனக்கு மீட்பு கிடைப்பது அவரிடமிருந்தே;
2 உண்மையாகவே
என் கற்பாறையும் மீட்பும் அவரே;
என் கோட்டையும் அவரே;
எனவே நான் சிறிதும் அசைவுறேன்.
3 ஒருவரைக் கொல்லவேண்டுமென்று
நீங்கள் அனைவரும்
எவ்வளவு காலம்
வெறியுடன் தாக்குவீர்?
நீங்கள் எல்லாரும்
இடிந்த மதிலுக்கும்
சிதைந்த வேலிக்கும் ஒப்பாவீர்.
4 அவர் இருக்கும் உயர்நிலையிலிருந்து
அவரைத் தள்ளிவிடத் திட்டமிடுகின்றனர்;
பொய் சொல்வதில்
இன்பம் காண்கின்றனர்;
அவர்களது வாயில் ஆசிமொழி;
அவர்களது உள்ளத்திலோ சாபமொழி.
(சேலா)
5 நெஞ்சே! கடவுளுக்காக
மௌனமாய்க் காத்திரு;
ஏனெனில், நான் எதிர்பார்க்கும் நலன்
வருவது அவரிடமிருந்தே;
6 உண்மையாகவே,
என் கற்பாறையும் மீட்பும் அவரே.
எனவே, நான் சிறிதும் அசைவுறேன்.
7 என் மீட்பும் மேன்மையும்
கடவுளிடமே இருக்கின்றன;
என் வலிமைமிகு கற்பாறையும்
புகலிடமும் கடவுளே.
8 மக்களே! எக்காலத்திலும்
அவரையே நம்புங்கள்;
அவர் முன்னிலையில்
உங்கள் உள்ளத்தில் உள்ளதைத்
திறந்து கொட்டுங்கள்;
கடவுளே நமக்கு அடைக்கலம்.
(சேலா)
9 மெய்யாகவே, மானிடர்
நீர்க்குமிழி போன்றவர்;
மனிதர் வெறும் மாயை;
துலாவில் வைத்து நிறுத்தால்,

அவர்கள் மேலே போகின்றார்கள்;
எல்லாரையும் சேர்த்தாலும்
நீர்க்குமிழியை விட
எடை குறைகின்றார்கள்.
10 பிறரைக் கசக்கிப் பிழிவதில்
நம்பிக்கை வைக்காதீர்;
கொள்ளையடிப்பதில் குறியாய் இராதீர்;
செல்வம் பெருகும்போது,
உள்ளத்தை அதற்குப் பறிகொடுக்காதீர்.
11 'ஆற்றல் கடவுளுக்கே உரியது!'
என்று அவர் ஒருமுறை மொழிய,
நான் இருமுறை கேட்டேன்.
12 'என் தலைவரே!
உண்மைப் பேரன்பு
உமக்கே உரியது!'
ஏனெனில், ஒவ்வொரு மனிதருக்கும்
அவர்தம் செயல்களுக்குத் தக்க கைம்மாறு
நீரே அளிக்கின்றீர்.

திருப்பாடல் 62:1-12

**சிந்தனைக்கு**

எதுத்தூன், பார்க்க திருப்பாடல் 39. அந்தத் திருப்பாடலோடு ஓர் ஒற்றுமை என்னவெனில், இரண்டிலும் கூறப்பட்ட அறவுரை (39:4-6,11 & 62:9). கூடுதலாக, வ.10ம் நோக்கத்தக்கது.

தலைப்பில் எந்தவொரு வரலாற்றுக் குறிப்பும் இல்லை; ஆனால் வ.4ல் "... உயர்நிலையிலிருந்து அவரைத் தள்ளிவிட..." என்று எழுதப்பட்டுள்ளதை வாசிக்கிறோம்; எனவே தாவீது அரசராக ஆனபிறகு அவருக்கு எதிராகச் சிலர் செயல்பட்டதையும், அது அவரது ஆரம்ப கால அரசாட்சியாக இருக்கலாம் என்பதையும் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர் (2 சாமுவேல் 3:1).

இந்தத் திருப்பாடலில் உள்ள ஏகாரச் சொற்கள் கவனிக்கத் தக்கவை:
வ.1, அவரிடமிருந்தே
வ.2, அவரே
வ.5, நெஞ்சே மற்றும் அவரிடமிருந்தே
வ.6, அவரே
வ.7, கடவுளிடமே மற்றும் கடவுளே
வ.8, மக்களே மற்றும் கடவுளே
வ.9, மெய்யாகவே
வ.11, கடவுளுக்கே
வ.12, தலைவரே மற்றும் நீரே -
சொல்ல வேண்டிய கருத்தை ஏகாரம் ஒருமைப்படுத்துகிறது; கூர்மைப்படுத்துகிறது; ஒப்பற்ற உயர்வைத் தருகிறது.

தெளிந்த ஞானத்தை அடைந்த ஒருவரின் பாடலாக இந்தத் திருப்பாடல் விளங்குகிறது.

முந்தைய அதிகாரத்தின் தொடர்ச்சியாக இப்பாடலைக் கருதலாம்; கடவுளே புகலிடம், கோட்டை, அடைக்கலம், புகலிடம் என்பது இவ்விரு திருப்பாடல்களிலும் காணப்படும் கருப்பொருள் (வ.1,2,6,7 & 61:3,4).
🕎

அமைப்பு:
வ.1-2, கடவுளுக்காகத் தளர்வின்றிக் காத்திருத்தல்
வ.3-4, எதிரிகள் குறித்த தாவீதின் முறையீடு
வ.5-7, உள்ளத்திற்கு அமைதிதரும் உரை
வ.8-10, வழிபாட்டில் இணைந்தோர்க்கு அறவுரை
வ.11-12, பற்றுறுதி அறிக்கை
🕎

வசனம் 62:1-2
பார்க்க, 37:7

"... மௌனமாய்... அசைவுறேன்" -
பொருள் பொதிந்த சொற்கள். சலனமற்ற நிலையை எட்டிய ஆழ்மன நிலை. இதனிலும் முதிர்ச்சி அடைந்த நிலையை வ.6ல் பேசுகிறார் தாவீது.

கண் போன போக்கில் போகும் மனம்; எனவே பலவற்றையும் எண்ணி எண்ணி நிலைகொள்ளா உள்ளம். மாறாக, கடவுளே அனைத்தும் என்று உணர்ந்து, அவரைப் பற்றிக் கொண்ட மனம், அந்தப் பற்றுறுதியால் சலனமற்ற நிலையை எய்திய உள்ளம். இவ்வாறு எண்ணும் வேளையில், ஒரு திருக்குறள் நினைவிற்கு வருகிறது:
பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் | பற்றுக பற்று விடற்கு.

வசனம் 62:3
(NIV / NLT / NRSV / ESVல் இந்த வசனம் வேறுவிதமாக உள்ளது.)
தாவீதின் எதிரிகள் குறித்த சித்தரிப்பு. கடவுளையே பற்றிக் கொண்ட தாவீதின் மனதில், சந்தேகமோ கவலையோ அச்சமோ இல்லை. வெறிகொண்டு எதிரிகள் தாவீதைத் தாக்கினாலும், அழியப் போவது என்னவோ அவர்களே என்று இறைத்திட்டத்தை உணர்ந்த தாவீது பேசுகிறார்.

"...எவ்வளவு காலம்..." -
எதிரிகள் முன் வைக்கப்பட்ட கேள்வி.
ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த பிறகும், சவுலின் உறவினர்களோடு தொடரும் பகை (கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள், பார்க்க 2 சாமுவேல் 1&3 அதிகாரங்கள்).

வசனம் 62:4
தாவீது தன்னைப் பற்றி உரைத்த சொற்கள்.
மீண்டும் எதிரிகள் குறித்த விளக்கம்: அகமொன்று வைத்துப் புறமொன்று பேசுவோர்; பொய்யுரையில் இன்பம் காண்போர். அவ்வாறு செய்வதன் வழியே, தாவீதின் உயரிய நிலையிலிருந்து அவரைத் தள்ளிவிட முடியும் என்று திட்டமிடுகின்றனர்.

வசனம் 62:5
சற்று மாறுபட்ட வடிவத்தில் வ.1.
எதிரிகளின் திட்டத்தைக் குறித்துச் சற்றும் எண்ண வேண்டாம் என்று தனது மனதிற்கு தாவீது அறிவுறுத்தி, கடவுளின் கிருபையை மட்டுமே சார்ந்திருக்க நினைவூட்டுகிறார்.

வசனம் 62:6
*ஒப்பிடுக, வ.2, முற்றிலும் உறுதியான மனநிலையில்.*

வசனம் 62:7
*நமது தொல்லை துயரிலிருந்து நம்மை மீட்பவர் மட்டுமல்ல, நமது மேன்மையும் கடவுளே! அவரோடு இணைந்த நிலையிலேயே நமது மேன்மை இருக்கிறது (யோவான் 15:5-8).*

வசனம் 62:8-10
*மக்களுக்கான தாவீதின் அறவுரை.*

வசனம் 62:8
*கடவுளையே நம்பி, நமது உள்ளத்தில் உள்ளவற்றை அவரிடம் கொட்டி (142:2; புலம்பல் 2:19), அவ்வாறு நம் உள்ளத்தை வெறுமையாக்கி, அந்த உள்ளத்தை இறை வார்த்தைகளால் நிறைத்து, அவரையே முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ள தாவீது அழைக்கிறார்.*

வசனம் 62:9
*மானிட வாழ்க்கையின் நிலையாமை குறித்த விளக்கம். பார்க்க, 39:4-6 குறிப்புகள்.*

*இவ்வசனத்தின் மொழிபெயர்ப்பில் உள்ள சிக்கல்: எபிரேய மரபுவழிப் பாடம்* (Masoretic Text) *"மானிடர்" என்பதை கீழ் மக்கள் மற்றும் மேல் மக்கள் என்று பகுத்துள்ளது; பொருளளவில் இரண்டு பகுப்புகளும், அதாவது மானிடர் அனைவரும் ஒன்றே என்பது நினைவில் கொள்ளத்தக்கது.*

*"துலாவில் வைத்து நிறுத்தால்" -*
*இப்போது பல நகர்களிலும் மின் மயானங்கள் வந்து விட்டன. ஆறடியில் எண்பது கிலோ எடையுள்ள ஓர் உடலை எரியூட்டக் கொடுத்தால், கொஞ்ச நேரத்தில் சில கலசங்களில் எடை குறைந்த வெறும் சாம்பலாகக் கொடுத்து விடுவார்கள்; ஆடக் கூடாத ஆட்டமெல்லாம் ஆடிய மனித உடல் இதுதான்!*

வசனம் 62:10
*ஒரு மேய்ப்பனாக உழைத்துத் தன் வாழ்வைத் தொடங்கிய தாவீது, மக்களுக்குக் குறைந்த பட்ச அறிவுரையாக உரைத்தது. உழைப்பு இல்லை எனில் ஏது செல்வம்? வாக்களிக்கப்பட்ட நிலம் கடவுள் கொடுத்தது; மழையும் அவருடைய அருட்கொடை; தானும் தன் குடும்பத்தினரும் அடிமைகள் உட்பட ஏனையோரும் தந்தது உழைப்பு; இவற்றின் விளைவான செல்வம் எப்படி ஒருவனுக்கே உரியதாகும்? அப்படியானால் செல்வப்பெருக்கில் ஒருவன் மேட்டிமை கொள்ள என்ன இருக்கிறது? சமுதாயமாகப் பலரும் இணைந்து உருவாக்கி, ஒரே ஒருவன் அடைந்த செல்வத்தில், அவனுக்கு என்ன பெருமை?*

*"செல்வம் பெருகும் போது, உள்ளத்தை அதற்குப் பறிகொடுக்காதீர்" -*
*செல்வப் பெருக்கில் மனம் வைப்போர் யார்?*
*- பொருட்கள் தரும் மகிழ்ச்சியில் திளைத்து, வாழ்வின் களிப்பே அவற்றில் தான் உள்ளது என்போர்;*
*- பணமே பாதுகாப்பு, அதுவே எதிர்காலத்தை எதிர்கொள்ள நம்பிக்கை என்போர்;*
*- அளவற்ற செல்வத்தால் பெருமையும் மூர்க்கமும் அடைவோர்.*

வசனம் 62:11-12
*கடவுளின் மூன்று தன்மைகளை தாவீது இவ்வசனங்களில் விளக்குகிறார்:*

* எல்லையற்ற ஆற்றல், வ.11
* அளவற்ற பேரன்பு, வ.12அ
* வழுவாத நீதி, வ.12ஆ; (இப்பகுதியை பவுலடிகள் எடுத்தாளுகிறார், உரோமையர் 2:6)

வசனம் 62:11
*உணரப்படும் அளவற்ற ஆற்றல் அனைத்தும் கடவுளுக்கே உரியன; ஆற்றலை வேறெங்கும் அல்லது வேறெவரிடமும் எதிர்பார்ப்பானேன்? இந்த ஆழமான உண்மையை ஒருமுறை கடவுள் சொல்லக் கேட்டார் தாவீது; மற்றுமொரு முறை தானே தனது உள்ளத்திற்கு அறிவுறுத்தினார் (பார்க்க, யோபு 33:14).*

*பல அருளுரைகள், அருள்வாக்குகள் - நாமும் ஒருமுறை கேட்கிறோம்; நமது உள்ளத்துள் ஏற்றினோமா?*

வசனம் 62:12
*பார்க்க, 130:3-7.*
*ஆற்றல் மட்டுமா கடவுளுக்கே உரியது? பேரன்பு / கிருபையும் கடவுளுக்கே உரியது. கடவுள் ஆற்றல் மிக்கவர்; அதேவேளையில் ஆற்றலற்ற நம்மீது கிருபை உள்ளவர். அவரது ஆற்றலை நமக்கு வழங்குவதாக என்றுமுளது அவரின் பேரன்பு!*

*எப்படி இப்பூவுலகு முழுமையும் அவரது ஆற்றல் விளங்குகிறதோ அதுபோலவே, அவரது பேரன்பும் விளங்குகிறது. அந்தப் பேரன்பு கிறிஸ்துவின் வழியே வெளிப்பட்டதால்தான், நாம் நல்வாழ்வைப் பெற்றிருக்கிறோம். ஆற்றலைவிடப் பேரன்பு பெருகுவதால்தான், நமது பாவங்களுக்காக நாம் தண்டிக்கப்படாமல், கிறிஸ்துவின் வழியே மன்னிப்பையும் வாழ்வையும் பெறுகிறோம். இந்த உணர்வே நம்மை ஆட்கொண்டு, நம்மை என்றுமுள நீதியின் வழியில் நடத்தட்டும்.*

✝

## 19 திருப்பாடல் 63

*(கடவுளுக்காக ஏங்குதல்)*

*யூதாவின் பாலைநிலத்தில் இருந்த போது, தாவீது பாடிய புகழ்ப்பா*
1 கடவுளே!
நீரே என் இறைவன்!
உம்மையே நான் நாடுகின்றேன்;
என் உயிர் உம்மீது
தாகம் கொண்டுள்ளது;
நீரின்றி வறண்ட தரிசு நிலம் போல
என் உடல் உமக்காக ஏங்குகின்றது.
2 உம் ஆற்றலையும் மாட்சியையும்
காண விழைந்து
உம் தூயகம் வந்து
உம்மை நோக்குகின்றேன்.
3 ஏனெனில், உமது பேரன்பு
உயிரினும் மேலானது;

*என் இதழ்கள்*
*உம்மைப் புகழ்கின்றன.*
4 *என் வாழ்க்கை முழுவதும்*
*இவ்வண்ணமே உம்மைப் போற்றுவேன்;*
*கைகூப்பி உமது பெயரை ஏத்துவேன்.*
5 *அறுசுவை விருந்தில் நிறைவடைவதுபோல*
*என் உயிர் நிறைவடையும்;*
*என் வாய் மகிழ்ச்சிமிகு இதழ்களால்*
*உம்மைப் போற்றும்.*
6 *நான் படுத்திருக்கையில்*
*உம்மை நினைப்பேன்;*
*இரா விழிப்புகளில்*
*உம்மைப் பற்றியே ஆழ்ந்து சிந்திப்பேன்.*
7 *ஏனெனில், நீர்*
*எனக்குத் துணையாய் இருந்தீர்;*
*உம் இறக்கைகளின் நிழலில்*
*மகிழ்ந்து பாடுகின்றேன்.*
8 *நான் உம்மை*
*உறுதியாகப் பற்றிக் கொண்டேன்;*
*உமது வலக்கை*
*என்னை இறுகப் பிடித்துள்ளது.*
9 *என்னை அழித்துவிடத் தேடுவோர்*
*பூவுலகின் ஆழத்திற்குள் செல்வர்.*
10 *அவர்கள் வாளுக்கு இரையாவர்;*
*நரிகளுக்கு விருந்தாவர்.*
11 *அரசரோ*
*கடவுளை நினைத்துக் களிகூர்வார்;*
*அவர்மேல் ஆணையிட்டுக் கூறுவோர்*
*அனைவரும் பெருமிதம் கொள்வர்;*
*பொய் சொல்வோரின் வாய் அடைக்கப்படும்.*

திருப்பாடல் 63:1-11

**சிந்தனைக்கு**

*யூதாவின் பாலைநிலம்:*
*எருசலேமிலிருந்து (கடல் மட்டத்திலிருந்து சுமார் 2200 அடி உயரம்) கிழக்காக சாக்கடல் (கடல் மட்டத்திற்குக் கீழ் சுமார் 1200 அடி தாழ்வு) வரை உள்ள வறண்ட நிலப் பகுதி; அழகும் ஆபத்துகளும் நிறைந்த பாலைநிலப் பகுதி; மடுக்களும் முகடுகளும் நிறைந்த மலைப்பகுதி. உலகின் குறைந்த மழைப்பொழிவுடைய பகுதி; ஆண்டு சராசரி மழையளவு 10 செமீ! (தமிழ்நாடு, 96 செமீ; கேரளா, 300 செமீ). இப்பாலைவெளியின் நகர்கள் - எருசலேம், எபிரோன், எரிகோ, பெத்லகேம்; யூதேயாவில் இயேசு வாழ்ந்த ஊரான பெத்தானியாவும் இந்த நிலப் பரப்பின் மேற்கே உள்ளது.*

*சவுலுக்கு அஞ்சி ஓடிய தாவீது பதுங்கியிருந்த ஏன்கேதி (1 சாமுவேல் 24) இப்பகுதியில் உள்ள ஒரு பாலைவனச் சோலை ஆகும். மீண்டும் தனது முதிர் வயதில், அப்சலோமுக்கு அஞ்சி ஓடிய போது இதே பாலைநிலத்தைக் கடந்து சென்றார் (2 சாமுவேல் 15:12 ~ 16:14). கிறிஸ்து இயேசுவும் இந்தப் பாலைவெளியில் 40 நாள்கள் நோன்பிருந்தார் (மத்தேயு 4:1-11). இதே*

பாலைவெளியின் தென் பகுதியில், எத்தியோப்பிய நிதியமைச்சரைப் பிலிப்பு சந்தித்தார் (திருத்தூதர் பணிகள் 8:26-39). சாக்கடல் சுருள்கள் கண்டெடுக்கப்பட்ட கும்ரான் குகைகள் இங்குதான் உள்ளன. பொது ஊழி எட்டாம் நூற்றாண்டு வரை சிறிதும் பெரிதுமான பல கிறிஸ்தவத் தவப்பள்ளிகள் இப்பாலைவெளியில் செயல்பட்டு வந்தன. தூய நிலம் என்ற பெயரில், சுற்றுலா வணிகத்தால் யூதேயாவின் பாலைவெளி இன்றைக்குச் சூறையாடப்பட்டு வருகிறது.

இந்தத் திருப்பாடல் தாவீதின் வாழ்நாளில், எந்தப் பருவத்தோடு தொடர்புடையது என்பது கேள்விக்குரியது; நண்பர்களோடு பாலைவெளியில் அலைந்த தாவீது இளைஞர்; படையோடும் வீட்டாரோடும் கடந்து சென்ற தாவீது, முதிய அரசர். கடந்து சென்ற தாவீதுக்கு உணவும் திராட்சை இரசமும் சீபா கழுதைகளில் ஏற்றிக் கொண்டு வந்தான்; ஆனால் அலைந்து திரிந்த இளைஞர் தாவீதே, நீரின்றி வறண்ட தரிசு நிலம் போலத் தாகம் கொண்டிருப்பார்.

இளைஞர் தாவீதே இந்தத் திருப்பாடலை எழுதினார் என்று முடிவு செய்ய, "அரசரோ கடவுளை நினைத்துக் களிகூர்வார்" (வ.11அ) என்ற சொற்றொடர் தடையாக உள்ளது; ஆவிக்குள்ளான இளைஞர் தாவீது, தன்மீதுள்ள திருப்பொழிவின் உறுதியால் (1 சாமுவேல் 16:13) அவ்வாறு எழுதினார் என்பது இளைஞர் தாவீதுக்கு ஆதாரமாக உள்ளது. தலைப்பு உறுதி செய்வதும் அதுவே!

திருச்சபையின் தொடக்கத்தில் இருந்தே, காலை வழிபாட்டின் பாடலாக இந்தத் திருப்பாடல் திகழ்கிறது.

அமைப்பு:
வ.1-2, இறைப்பிரசன்னத்திற்காக ஏங்கும் உள்ளம்
வ.3-6, தனித்து விடப்பட்டாலும், உறுதிபூண்ட உள்ளம்
வ.7-8, தனக்கு நேர்வதை அறிந்த உள்ளம்
வ.9-10, எதிரிகளுக்கு நேர இருப்பதை அறிவிக்கும் உள்ளம்
வ.11, கடவுள் செய்ய இருப்பதை அறிக்கையிடும் உள்ளம்

வசனம் 63:1-2
இணை, 42:1-4.

வசனம் 63:1
"கடவுளே! நீரே என் இறைவன்!" -
கடவுள் என்பது எபிரேயத்தில் Eloheem; இறைவன் என்பது Ale ஆகும் (நூலின் தொடக்கத்திலுள்ள "முன்னுரையாகச் சில எண்ணங்கள்" பார்க்க). ஏல் என்பது, ஆற்றல் மிக்கவர் (the Almighty) என்று பொருள்படும். பாலைவெளியில் அலைந்து தனது ஆற்றல் அனைத்தையும் இழந்து சோர்வுற்ற தாவீது, இறை ஆற்றலுக்காகத் தவித்தார்.

"உம்மையே நான் நாடுகிறேன்" -
'அதிகாலமே' என்கிற சொல் பழைய மொழிபெயர்ப்பிலும் KJV / NKJV பைபிள்களிலும் காணப்படுகிறது; எபிரேய மூலத்தில் அதுபோன்ற சொல் ஏதுமில்லை.

அதிகாலையில் மட்டுமல்லாமல், இரா விழிப்புகளிலும் கூட தாவீது கடவுளைப் பற்றியே ஆழ்ந்து சிந்தித்தார் என்பது (வ.6) நினைவில் கொள்ளத்தக்கது.

"என் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது" -
*தீராத தாகம்; வறண்ட பாலைவெளியில் தண்ணீருக்காகத் தவிக்கும் உடலுக்குத் தண்ணீரால் தாகம் தீரும்; நாம் கடவுள் மீது கொள்ளும் தாகமோ, தீருவதில்லை. இன்னும் இன்னும் அவரோடு நெருங்கிச் சேருவதையே நம் உள்ளம் நாடும்.*

வசனம் 63:2
*தூயகத்துள் உறையும் கடவுள், பெருந்திரள் கூட்டமாகிய இஸ்ரயேலரின் தேவைகளை நிறைவு செய்து வழிநடத்தியவர்; அக்கடவுளின் ஆற்றலையும் மாட்சியையும் தனது தற்போதைய நிலையில் காண தாவீது விழைகிறார்.*

வசனம் 63:3அ
"உமது பேரன்பு உயிரினும் மேலானது" -
*பழைய ஏற்பாட்டில், இங்கு மட்டுமே உயிருக்கும் மேலான மதிப்பீடு; புதிய ஏற்பாட்டில் பார்க்க, திருத்தூதர் பணிகள் 20:24; பிலிப்பியர் 1:21.*

உண்மையாகவே அனைத்திற்கும் மேலாகப் போற்றத்தக்கது கடவுளின் பேரன்பு!

*தனது உயிரைவிடக் கடவுளின் பேரன்பைப் பெரிதாக மதித்த தாவீது, தனது உயிரைக் காத்துக் கொண்டார்; இஸ்ரயேலுக்கு அரசரானார்; சுற்றிலுமிருந்த எல்லா நாட்டு மன்னர்களுக்கும் மேலான மேன்மையைப் பெற்றார்; அவருடைய வழிமரபினர் அரசர்கள் ஆயினர்; அனைத்திற்கும் மேலாக, உலகின் மீட்பரைக் கடவுள் தாவீதின் வழிமரபில் தோன்றச் செய்து, மென்மேலும் தாவீதை ஆசீர்வதித்தார்.*

நமது வாழ்க்கையில், நமது உயிரினும் மேலாக எதை நாம் கருதுகிறோம்? உயிர் வாழச் சலித்துக் கொள்ளும் பலரும் நம்மிடையே உளர்; ஆனால் உயிரினும் மேலாகக் கடவுள் மீது அன்பு செலுத்துவோர் எவரும் உண்டோ?

வசனம் 63:3ஆ-4
*கடவுளைப் புகழும் தாவீது; இப்போதைய மன்றாட்டுக்கு மறுமொழி வரவில்லையானாலும், கடந்த காலங்களின் ஆசிகள் அளிக்கும் உறுதியான பேரன்பின் பொருட்டு தாவீது கடவுளைப் புகழ்கிறார்.*
நமது வாழ்க்கையில் கடவுளுக்கான புகழ்ச்சி ஏன் குறைகிறது?
*என் அப்பா எனக்கு இதைச் செய்தார், என் அக்கா எனக்கு இதைச் செய்தார், என் நண்பன் எனக்கு இதைச் செய்தான், என் உயர் அலுவலர் எனக்கு இதைச் செய்தார், என் திறமையால் நான் இதனைச் செய்தேன் - இப்படிக் காரணிகளைத் தேடி நாம் பெருமைப் படுகிறோம். ஆனால், நம்மைச் சுற்றிலும் ஏற்ற ஆள்களை நிறுத்தி, நமக்கு நன்மைகள் கிடைக்கச் செய்யும் கடவுளை நாம் நினைவில் கொள்ளத் தவறுகிறோம்! அவர்களுக்காகவும் சேர்த்துக் கடவுளைத் துதிப்பதும், அவர்களின் நலன்களுக்காக வேண்டுவதும் நமது கடமை அல்லவா?* நமது உலகப் பார்வை, கடவுளின் அருட்செயல்களைக் காணாதவாறு நம் கண்களை மறைக்கிறது. கடவுளோடு இணைந்து இவ்வுலகைப் பார்ப்போம்; எல்லா உறவுகளையும் போற்றுபவர்களாக நாம் மாறுவோம்.

வசனம் 63:5
*கடவுளின் பேரன்பை ருசித்துப் பார்த்த தாவீதின் புகழ்ச்சி!*

*கடவுளின் விருந்து, பார்க்க எசாயா 25:6.*

"அறுசுவை விருந்தில் நிறைவடைவது போல..." -
OV, "நிணத்தையும் கொழுப்பையும் உண்டது போல..."

பொது மொழிபெயர்ப்பாளர் வீகன் உணர்வாளரோ!!!
இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேயச் சொற்களை, "நிறைவான உச்சிதமான உணவால்" என்றும் மொழிபெயர்க்கலாம். இது உணவு மற்றும் திராட்சை இரசம் குறித்த தாவீதின் மகிழ்ச்சி அல்ல; வாயும் வயிறும் நிறைவான உணவில் மகிழ்ச்சி அடைவது போல, கடவுளின் பேரன்பால் தனது உள்ளம் நிறைந்தது என்று தாவீது குறிப்பிடுகிறார்.

வசனம் 63:6
"நான் படுத்திருக்கையில் உம்மை நினைப்பேன்" -
பார்க்க, 119:55 & 148.

இன்றைக்கு நமது திருச்சபைகளில் சாட்சி சொல்ல முன்வருவோர் குறைந்து விட்டனர்; அதற்குக் காரணம், அன்றாடம் நாம் படுக்கும்போது அன்றைய நாளில் ஆண்டவர் செய்த நன்மைகளை நினைவுகூர்ந்து நன்றி சொல்வதில்லை. கண் அயரும் வரை, கைபேசியில் வேண்டாத "சேட்டிங்க்"!

கண் விழித்தது முதல், கண் மூடுவது வரை தொ(ல்)லைபேசியோடு வாழ்ந்தால், தொல்லையற்ற நற்தருணங்களை எப்போது அனுபவிப்பது? நல்லாசிகளை அருளும் ஆண்டவருக்கு எப்போது சாட்சியாக இருப்பது?

வசனம் 63:7-10
வ.7-8 எதிர் வ.9-10.
தாவீதின் எதிர்காலம் (எதிர்) அவருடைய எதிரிகளின் எதிர்காலம்

வசனம் 63:7
"உம் இறக்கைகளின் நிழலில்..." -
மீண்டும் மீண்டும் வெளிப்படும் தாவீதின் வாஞ்சை, பார்க்க 17:8, 36:7, 61:4, 91:4.

வசனம் 63:8
"... உறுதியாகப் பற்றிக் கொண்டேன்" -
நமக்கும் கடவுளுக்கும் இடையே உள்ள உறவைக் குறித்து தாவீது சொல்கிறார்; பற்றிக் கொள்ளுதலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள சொல், தொடக்க நூல் 2:24ல் பயன்படுத்தப்பட்டுள்ள அதே சொல். மேலும் பார்க்க, இணைச் சட்டம் 10:20, 13:4, 30:20; யோசுவா 22:5, 23:8. கடவுளோடு தனக்கு உள்ள ஐக்கியத்தை இவ்வாறு தாவீது வெளிப்படுத்துகிறார். கூடுதலாக நாம் இங்குக் கொடுத்துள்ள வசனங்களை இணைத்து வாசித்தால், கடவுளைப் பற்றிக் கொள்வதன் முழுமையை நாம் புரிந்து கொள்ள முடியும்.

நமது பார்வையில் நாம் கடவுளை நமது உள்ளத்தின் உறுதியோடு பற்றிக்கொண்டதை முதன்மைப்படுத்தினாலும், உலகத் தோற்றத்திற்கு முன்பே நமக்கான திட்டத்தை முன்குறித்து, நம்மைக் கரிசனையோடு வழிநடத்துபவர் ஆண்டவர் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. நாம் அவரைப் பற்றிக் கொள்ளாத வேளைகளிலும், நம்மைத் தமது வல்ல கரத்தால் காத்து வழிநடத்துபவர் அவரே.

வசனம் 63:9-10
தனக்கு எதிராக வஞ்சகமாகத் திட்டம் தீட்டி, தன்னை அழிக்க வாளேந்தி வருவோர், வாளுக்கு இரையாக தாவீது வேண்டுகிறார்.

"...நரிகளுக்கு விருந்தாவர்" -
ஒப்பிடுக, வ.5, எதிர் எதிரான இரண்டு தோற்றங்கள்.

போரில் பலியாகும் உடல்களுக்கு இறுதியில் நிகழும் இழிநிலை, தன் எதிரிகளுக்கு நேரிட தாவீது விழைந்தார்.

வசனம் 63:11
"அரசரோ கடவுளை நினைத்துக் களிகூர்வார்" -
திருப்பொழிவு செய்யப்பட்ட அரசரான தாவீது தன்னைக் குறித்தே சொன்னது. போர்க்களத்தில் சவுலுக்கும் அவரது மகன்களுக்கும் என்ன ஆகும் என்று அறிந்திருந்த அவர், அதன் பிறகு தனக்கு நடக்கப் போவதையும் அறிந்திருந்தார்.

"அவர்மேல் ஆணையிட்டுக் கூறுவோர்..." -
மொழிபெயர்ப்புகள் பலவும், அவர் என்பதை அரசர் அதாவது தாவீது என்றே கற்பிக்கின்றன. பைபிளில் நாம் காண்பதன் அடிப்படையில், அரசர் மீது ஆணையிடுதல் எகிப்தில் வழங்கிய பழக்கம் (தொடக்க நூல் 42:15-16). இஸ்ரயேலரோ கடவுளின் பெயரால் மட்டுமே ஆணையிட வேண்டும் / ஆணையிடுவர் (இணைச் சட்டம் 6:13, 10:20; எசாயா 45:23, 48:1, 65:16).

ஆணையிடுவதில் நமக்கு கிறிஸ்து இயேசு அளித்த கட்டளையை நாம் கடைப்பிடித்தலே சரியானது (மத்தேயு 5:33-37): "ஆகவே நீங்கள் பேசும்போது 'ஆம்' என்றால் 'ஆம்' எனவும் 'இல்லை' என்றால் 'இல்லை' எனவும் சொல்லுங்கள். இதைவிட மிகுதியாகச் சொல்வது எதுவும் தீயோனிடத்திலிருந்து வருகிறது."

✝

## 19 திருப்பாடல் 64

*(பாதுகாப்புக்காக வேண்டல்)*

*பாடகர் தலைவர்க்கு; தாவீதின் புகழ்ப்பா*
1 கடவுளே!
என் விண்ணப்பக்
குரலைக் கேட்டருளும்;
என் எதிரியினால்
விளையும் அச்சத்தினின்று
என் உயிரைக் காத்தருளும்.
2 பொல்லாரின் சூழ்ச்சியினின்றும்
தீயோரின் திட்டத்தினின்றும்
என்னை மறைத்துக் காத்திடும்.
3 அவர்கள் தங்கள் நாவை
வாளைப் போலக் கூர்மையாக்குகின்றார்கள்;
நஞ்சுள்ள சொற்களை
அம்புபோல் எய்கின்றார்கள்;
4 மறைவிடங்களில் இருந்துகொண்டு
மாசற்றோரைக் காயப்படுத்துகின்றார்கள்;
அச்சமின்றி அவர்களைத்
திடீரெனத் தாக்குகின்றார்கள்;

5 தீங்கு இழைப்பதில்
உறுதியாய் இருக்கின்றார்கள்;
'நம்மை யார் பார்க்க முடியும்'
என்று சொல்லி மறைவாகக்
கண்ணிகளை வைப்பதற்குச்
சதித்திட்டம் தீட்டுகின்றார்கள்;
6 நேர்மையற்ற செயல்களைச்
செய்யத் திட்டமிடுகின்றார்கள்;
"எங்கள் திறமையில்
தந்திரமான சூழ்ச்சியை
உருவாக்கியுள்ளோம்" என்கின்றார்கள்;
மனிதரின் உள்ளமும் உள்நோக்கமும்
மிக ஆழமானவை.
7 ஆனால், கடவுள்
அவர்கள்மேல் அம்புகளை எய்ய,
அவர்கள் உடனே காயமுற்று வீழ்வார்கள்.
8 தங்களது நாவினாலேயே
அவர்கள் அழிவார்கள்;
அவர்களைப் பார்ப்போர்
அனைவரும் எள்ளி நகைப்பார்கள்.
9 அப்பொழுது எல்லா மனிதரும்
அச்சம் கொள்வர்;
கடவுளின் செயல்களை எடுத்துரைப்பர்;
அவரது அருஞ்செயலைப்பற்றிச் சிந்திப்பர்.
10 நேர்மையாளர் ஆண்டவரில் அகமகிழ்வர்;
அவரிடம் அடைக்கலம் புகுவர்;
நேரிய உள்ளத்தோர் அவரைப் போற்றிடுவர்.

திருப்பாடல் 64:1-10

**சிந்தனைக்கு**

52 தொடங்கி 64 முடிய உள்ள திருப்பாடல்கள், தாவீதின் வாழ்க்கையில் அவர் சந்தித்த இன்னல்களின் அடிப்படையில், அவருடைய புலம்பலுடன் கூடிய மன்றாட்டுப் பாடல்களாகும். இந்தத் திருப்பாடலின் தலைப்பில் வரலாற்றுக் குறிப்பு ஏதும் இல்லை. பாடல் வரிகளை ஆய்ந்து, தாவீதின் வாழ்க்கையின் எந்தவொரு நிகழ்வோடும் உறுதியாகப் பொருத்திச் சொல்ல முடியாது. இன்னலுற்றவரின் பொதுவான மன்றாட்டுத் திருப்பாடல்.

நேர்மையாளருக்குத் தீயோரால் நேரிடும் இன்னல்களை விவரித்து, கடவுள் அத்தீயோரை அழிக்கும் போது நல்லோரின் களிப்பைக் கூறி, இவற்றைக் காணும் எவரும் கடவுளுக்கு அஞ்சி அவரிடம் நம்பிக்கை கொள்வர் என்ற கருப்பொருளை உடைய ஞானப் பாடல் என்று இந்தத் திருப்பாடலைச் சொல்லலாம்.

அமைப்பு:
வ.1-6, தீயோரின் திட்டங்கள்
வ.7-10, தீயோரை வீழ்த்தும் கடவுளின் ஆற்றல்

வசனம் 64:1
*"... விண்ணப்பக் குரல்..." -*
*கதறும் குரலில் தாவீது ஏறெடுத்த மன்றாட்டு. குரலெழுப்பி ஏறெடுக்கும் விண்ணப்பத்தையே கடவுள் கேட்பாரா? அப்படியல்ல; அவர் கண்ணீரைக் காணும் கடவுள்; நமது உள்ளத்தின் உணர்வுகளையும் அவர் அறிந்திருக்கிறார் (அன்னா, 1 சாமுவேல் 1:10&13). ஆனால் அச்சுறுத்தும் எதிரிகளின் நிமித்தம், தாவீது குரலெழுப்பி மன்றாடுகிறார். கொடிய வேதனையில் இருப்பவரின் குரல் தெளிவாக இருக்க வேண்டும் என்பதல்ல; வேதனையின் வெளிப்பாடு அது என்பதே போதுமானது.*

*"...எதிரியினால் விளையும் அச்சம்..." -*
*இறையச்சம் ஒருவருடைய வாழ்க்கையைச் சீரமைக்கும். ஆனால் எதிரிகளால் ஏற்படும் அச்சம் - ஒருவரை முடக்கி விடும்; எண்ணங்களில் குழப்பத்தை ஏற்படுத்தும்; செயல்களில் தடுமாற்றத்தைத் தரும்; தன்னம்பிக்கையைக் குலைத்து விடும். எனவே எதிரிகளால் ஏற்பட்ட அச்சத்தைத் தன்னுள் இருந்து அகற்றுமாறு தாவீது வேண்டுகிறார்.*

வசனம் 64:2-6
*நியாயமற்ற தாக்குதலை நடத்தும் தாவீதின் எதிரிகள்.*

*சூழ்ச்சி, சதித்திட்டம், நஞ்சுள்ள சொற்கள், மறைந்திருந்து தாக்குதல், திடீரெனத் தாக்குதல், தீங்கிழைப்பதில் உறுதி, மறைவாகக் கண்ணிகள் வைத்தல், நேர்மையற்ற செயல்கள், தந்திரமான சூழ்ச்சி - கடவுளுக்கு அஞ்சாத தாவீதின் எதிரிகளின் செயல்களை இவ்வாறெல்லாம் அவர் விளக்குகிறார்.*

வசனம் 64:2
*நேரடியாக மோதிக் கொள்ளும் போர் சூழ்நிலைகளில் தாவீது இல்லை; அப்படிப்பட்ட போர்களில் வெற்றிகளைக் குவித்தவர் தான் தாவீது. இளம் வயது தாவீது, இதுவரையில் தான் எதிர்கொண்டிராத தீயோரின் சூழ்ச்சிகளிலிருந்தும் வஞ்சகத் திட்டங்களிலிருந்தும் தன்னைக் காக்குமாறு தாவீது வேண்டுகிறார்.*

வசனம் 64:3
*கடவுளுக்கு அஞ்சாத தாவீதின் எதிரிகள், பொய்யும் புனைவுமான சொற்களை விதைத்து அவருக்கு எதிராக அணிதிரள்கிறார்கள்.*

வசனம் 64:5
*"நம்மை யார் பார்க்க முடியும்" -*
*கடவுள் பார்க்க முடியும். அவருடைய பார்வைக்கு எதுவும் தப்பாது* (*யோபு* 12:22; *எசேக்கியேல்* 21:24; *மத்தேயு* 6:4,6&18; 1 *கொரிந்தியர்* 4:5). *மேலும், "வெளிப்படாது மறைந்திருப்பது ஒன்றுமில்லை. வெளியாகாமல் ஒளிந்திருப்பது ஒன்றுமில்லை."* (*மாற்கு* 4:22)

வசனம் 64:7-9
*தீயோரைத் தண்டிக்கும் கடவுள்.*

வ.3-6 *மற்றும்* வ.7-9 *பகுதிகளை ஒப்பிடுவது நன்று:*
* ***திடீரெனத்*** *தாக்கும் எதிரிகள்* (வ.4) *கடவுளின் அம்புகளுக்கு* **உடனே** *வீழ்வார்கள்* (வ.7).
* *வாளைப் போலக் கூர்மையான* ***நாவை உடைய*** *தீயோர்* (வ.3), *தங்களது* ***நாவினாலேயே*** *அழிவார்கள்* (வ.8).
* *"நம்மை* ***யார் பார்க்க முடியும்****"* (வ.5) *என்று சொன்ன தாவீதின் எதிரிகளின் அழிவு,* ***அனேகர் பார்த்து*** *நகைக்கும் வண்ணம் இருக்கும்* (வ.8).

* ***அச்சமின்றி*** *மாசற்றோரைத் தாக்கும் தீயோரின் அழிவில்* (வ.4), **எல்லாரும் அச்சம் கொண்டு** (வ.9), *கடவுளுக்கு ஏற்றோராய் வாழ்வர்.*
- *இவ்வாறு எதிரிகளையும், கடவுள் அவர்களுக்குத் தரும் தண்டனைத் தீர்ப்பையும், வார்த்தைகளில் விளக்கி தாவீது குறிப்பிடுகிறார்.*

வசனம் 64:10
*தீயோரைக் கடவுள் அழித்ததைக் காணும் எல்லா மனிதரும் அச்சம் கொள்வர்; ஆனால், அதனைக் காணும் நேர்மையாளர் ஆண்டவரில் களிகூருவர். கடவுளையே அடைக்கலமாகக் கொண்ட அவர்கள், கடவுளின் ஆற்றல்மிகு அருஞ்செயல்களைப் புகழ்ந்து போற்றுவர்.*

✝

## 19 திருப்பாடல் 65

*(நன்றிப் புகழ்ப்பா)*

*பாடகர் தலைவர்க்கு; தாவீதின் புகழ்ப்பா*
1 *கடவுளே,*
*சீயோனில் உம்மைப் புகழ்ந்து*
*பாடுவது ஏற்புடையது!*
*உமக்குப் பொருத்தனைகள்*
*செலுத்துவதும் சால்புடையது!*
2 *மன்றாட்டுக்களைக் கேட்கின்றவரே!*
*மானிடர் யாவரும் உம்மிடம் வருவர்.*
3 *எங்கள் பாவங்களின் பளுவை*
*எங்களால் தாங்கமுடியவில்லை;*
*ஆனால் நீர் எங்கள்*
*குற்றப் பழிகளைப் போக்குகின்றீர்.*
4 *நீர் தேர்ந்தெடுத்து உம்மருகில்*
*வைத்துக்கொள்ளும் மனிதர்*
*பேறு பெற்றோர்;*
*உம் கோவிலின் முற்றங்களில்*
*அவர்கள் உறைந்திடுவர்;*
*உமது இல்லத்தில்,*
*உமது திருமிகு கோவிலில்*
*கிடைக்கும் நன்மைகளால்*
*நாங்கள் நிறைவு பெறுவோம்.*
5 *அஞ்சத்தகு செயல்களை*
*நீர் புரிகின்றீர்;*
*எங்கள் மீட்பின் கடவுளே!*
*உமது நீதியின் பொருட்டு*
*எங்கள் மன்றாட்டுக்கு*
*மறுமொழி பகர்கின்றீர்;*
*உலகின் கடையெல்லைவரை*
*வாழ்வோர் அனைவருக்கும்*
*தொலையிலுள்ள தீவுகளில்*
*உள்ளோருக்கும் நம்பிக்கை நீரே!*
6 *வல்லமையை இடைக்கச்சையாகக்*

கொண்ட நீர் உமது ஆற்றலால்
மலைகளை உறுதிப்படுத்துகின்றீர்.
7 கடல்களின் இரைச்சலையும்
அவற்றின் அலைகளின் ஓசையையும்
மக்களினங்களின் அமளியையும்
அடக்குகின்றீர்!
8 உலகின் கடையெல்லைவரை வாழ்வோர்
உம் அருஞ் செயல்களைக்
கண்டு அஞ்சுவர்;
கிழக்கு முதல்
மேற்குவரை உள்ளோரைக்
களிகூரச் செய்கின்றீர்!
9 மண்ணுலகைப் பேணி
அதன் நீர்வளத்தையும்
நிலவளத்தையும் பெருக்கினீர்!
கடவுளின் ஆறு கரைபுரண்டோடியது;
அது தானியங்களை
நிரம்ப விளையச் செய்தது;
நீரே அவற்றை
இவ்வாறு விளையச் செய்துள்ளீர்.
10 அதன் படைசால்களில்
தண்ணீர் நிறைந்தோடச் செய்தீர்;
அதன் கரையோர
நிலங்களைப் பரம்படித்து
மென்மழையால் மிருதுவாக்கினீர்;
அதன் வளமைக்கு ஆசி வழங்கினீர்.
11 ஆண்டு முழுவதும்
உமது நலத்தால் முடிசூட்டுகின்றீர்;
உம்முடைய வழிகள் எல்லாம்
வளம் கொழிக்கின்றன.
12 பாலைநிலத்தில்
மேய்ச்சல் நிலங்கள்
செழுமை பொங்குகின்றன;
குன்றுகள் அக்களிப்பை
இடைக்கச்சையாய் அணிந்துள்ளன.
13 புல்வெளிகள் மந்தைகளை
ஆடையெனக் கொண்டுள்ளன;
பள்ளத்தாக்குகள் தானியங்களால்
தங்களைப் போர்த்திக் கொண்டுள்ளன.
அவற்றில் எங்கும் ஆரவாரம்!
எம்மருங்கும் இன்னிசை!

திருப்பாடல் 65:1-13

**சிந்தனைக்கு**

51 தொடங்கி 65 வரை உள்ள திருப்பாடல்கள் தாவீதின் திருப்பாடல் குவியம். திருப்பாடல் 51 நாம் நன்கு அறிந்துள்ளபடி, பாவ அறிக்கை செய்து மன்னிப்பை வேண்டும் பாடல். கடவுளுடன் நமக்கு உள்ள உறவைச் செம்மை செய்வதே முதன்மையான ஒன்று. நன்றி உணர்வோடு கடவுளின் புகழைப் பாடித் தொழுது வாழ்வதே கடவுளோடு உள்ள நமது நிலைத்து

நீடித்திருக்கும் உறவின் அடிப்படை. அப்படிப்பட்ட ஒரு பாடலே இத்திருப்பாடல். இவற்றுக்கு இடையே, 52 தொடங்கி 64 முடிய உள்ள பாடல்கள் தாவீதுக்கு நேரிட்ட இடர்களை முறையிட்டு, கடவுள் இடைபட மன்றாடும் திருப்பாடல்கள். அடுக்கான அமைப்பாக இந்தத் திருப்பாடல் குவியம் விளங்குகிறது.

65 தொடங்கி 67 வரை உள்ள மூன்று திருப்பாடல்களும், சிறு குவியமாக நன்றிப் புகழ்ப்பாக்களாக உள்ளன.

இத்திருப்பாடலின் தலைப்பில், மூலச் சொற்களாக திருப்பாடல் என்று சொல்லப்பட்டுள்ள miz-more மற்றும் பாடல் என்று சொல்லப்பட்டுள்ள shee-rah இரண்டும் இடம்பெற்றுள்ளன; இந்த இரண்டில் ஒன்று என்ற பொருளில் திருப்பாடல்கள் 66 மற்றும் 67 உள்ள நிலையில், இரண்டுமே பொருந்துவதாக இத்திருப்பாடல் உள்ளது. ஆகவே இதனைக் கவித்துவமான பாடல் என்று சொல்லலாமோ? பாடலைப் பற்றி அப்படிச் சொல்லலாமோ இல்லையோ, பொது மொழிபெயர்ப்பில் இத்திருப்பாடலை நிச்சயமாகக் கவித்துவமான பாடல் என்று சொல்லலாம்; குறிப்பாக இறுதி நான்கு வசனங்கள் சுவையுறு மொழிபெயர்ப்பாக உள்ளன; வ.13, மொழிபெயர்ப்பின் மணிமகுடமாகத் திகழ்கிறது. மொழிபெயர்ப்பாளர்களுக்கு இத்தகைய ஆவியை வழங்கிய கடவுளின் திருப்பெயர் மாட்சியுறுக!

இந்த நன்றிப் பாடல் முதன்முறையாகப் பாடப்பட்ட நிகழ்ச்சி எதுவென அறியோம்; ஆகச் சிறந்த நன்றிப் பாடலான இத்திருப்பாடல், அறுவடைத் திருநாளின் பாடலாக இருந்திருக்கலாம் (பார்க்க, வ.13); வ.11ன் படி, கடந்து சென்ற ஆண்டின் நன்மைகளுக்கான நன்றிப்பாடல் என்றும் சொல்லலாம். இந்த இரண்டு நாள்களும், யூத நாட்காட்டியில், இரண்டு வார இடைவெளியில் வருபவையே என்பது குறிப்பிடத்தக்கது.

கடவுளுடைய படைப்பின் நன்மைகளைக் குறித்துப் பாடப்பட்டதால் படைப்புப் பாடல் என்றும், கடவுளின் அருள் செயல்களைப் போற்றிப் பாடுவதால் ஞானப் பாடல் என்றும் இத்திருப்பாடலைக் குறிப்பிடலாம்.

அமைப்பு:
வ.1-5, ஆவிக்குரிய நன்மைகளை அருளும் ஆண்டவர் போற்றி!
வ.6-13, இயற்கையை நன்மைகளால் நிரப்பி அருளும் ஆண்டவர் போற்றி!

வசனம் 65:1
சீயோன் மலையில் எழுந்தருளும் கடவுளுக்கே புகழ்ச்சியும் பொருத்தனை செலுத்துவதும் சாலச் சிறந்தது! 'சீயோன் மலை' என்பது தாவீதின் நகரைக் குறிப்பது என்றாலும், பின்னர் எருசலேம் மலை நகரையே குறிப்பதாக மாறியது (3:4, 9:12, 24:3, 48:2, 68:5, 87:2).

இன்றைக்கு சீயோன் என்பது, பன்னாட்டு அளவில் யூத அரசியலின் மேலாதிக்கத்தைக் குறிப்பதாக உள்ளது என்பதும், அது கடவுளின் இறையாண்மைக்கு எதிராக உள்ளது என்பதும் நாம் நினைவில் கொள்வது நல்லது; நமது கடவுள் ஒடுக்கப்படுவோரின் ஆண்டவர்; அவர் பெருமையை எதிர்க்கிறார் என்பது நாம் பைபிளில் பயிலும் பாடம்.

"...பொருத்தனைகள்..." -
56:12, 61:8.
நிறைவான அறுவடைக்காக வேளாண் மக்களின் பொருத்தனைகள்.

"...உம்மைப் புகழ்ந்து பாடுவது ஏற்புடையது" -
OV, "... உமக்காகத் துதியானது அமைந்து காத்திருக்கிறது"

இங்கு doomiyah என்கிற எபிரேயச் சொல் தரப்பட்டுள்ளது; இதற்கு stillness, silence, waiting என்று பொருள் கொள்ளலாம். 'போற்றுதல் உமக்கே உரியது,' 'போற்றுதல் உமக்காகக் காத்திருக்கிறது,' 'போற்றுதல் உமக்காக உறைந்திருக்கிறது' என்றெல்லாம் பொருள் கொள்ளலாம். மனிதனின் மீறுதலினால் நிலம் சபிக்கப்பட்டது (தொடக்க நூல் 3:17-19). கிறிஸ்து இயேசுவின் வழியே மனிதர் மீட்பைப் பெற்று விட்டனர்; ஆனால் படைப்பு அனைத்தும் விடுதலைக்காகத் தவிக்கிறது (உரோமையர் 8:19-22). வானின்று மழையும், நிலத்தின் செழுமையான அறுவடையும், கடவுளின் அருட்கொடை; அவற்றில் கடவுள் களிகூருகிறார். ஆனாலும் படைப்பின் மீட்பு இன்னும் எதிர்நோக்கு நிலையில் இருக்கும் வரையில், இன்றைய நன்மைகளுக்காக நாம் கடவுளைப் போற்றுகிறோம் என்றாலும், மேலான நன்மைகள் வெளிப்படுவதற்காக, போற்றுதல் உறைந்திருக்கிறது.

வசனம் 65:2
"மன்றாட்டுகளைக் கேட்கிறவர்" -

நமது ஆண்டவரின் புகழ்ப்பெயர்களில் நாம் என்றும் நினைவில் கொள்ள வேண்டிய திருப்பெயர். குறிப்பாக, அவர் அழுகுரலைக் கேட்கிறவர்; கண்ணீரைக் காண்கிறவர். எனவே ஒடுக்கப்பட்டோரும் துயருற்றோரும் கட்டுகளிலிருந்து விடுதலை பெற்றோரும் அவரையே நாடி வருவர்.

வசனம் 65:3
பார்க்க, 32:1-2, 78:38, 79:9.
பரிகாரியான ஆண்டவர், யோவான் 3:16, எபேசியர் 1:7. மேலும், எபிரேயர் 9:11-12. அதேவேளையில், அவருக்கு ஏற்புடைய பலி, நொறுங்கிய நமது உள்ளம் அல்லவா!

பைபிளில் நாம் வாசிக்கும் வரலாறு, கடவுளின் மன்னிப்பின் வரலாறு அன்றோ! சிறிதெனினும் பெரிதெனினும் மீறுதல் அனைத்தும் பாவமே! சிறிதெனினும் பெரிதெனினும் பாவம் எதையும் மன்னிக்கும் இரக்கமும் தயையும் உடையவர் கடவுளே! இன்றைக்கும் அவர் மன்னிப்பை அருளும் மாபெரும் கடவுள்! கிருபையின் நாள்களைப் பயன்படுத்திக் கொள்வோம். அவரிடத்தில் திரும்புவோம்! அவரையே பற்றிக் கொள்வோம்!

வசனம் 65:4
நாம் நமது கடவுளைத் தெரிந்து கொள்ளவில்லை; மாறாகத் தம் மக்களாக அவரே நம்மைத் தெரிந்து கொண்டார்.
நமது தகுதிகளைப் பார்த்து அவர் நம்மைத் தெரிந்து கொள்ளாமல், நமது தகுதியின்மையைத் தமது இரக்கங்களாலும் மன்னிப்புகளினாலும் பரிகரித்து நம்மைத் தெரிந்து கொண்டார். இவ்வாறு அவர் அருகில் வாழத் தெரிந்து கொள்ளப்பட்ட நாம் பேறு பெற்றோர்.

கடவுளின் இல்லத்தில் அவரோடு இணைந்து வாழ்வது திருப்பாடகர் மீண்டும் மீண்டும் விழையும் விருப்பம்!

"...கோவிலின் முற்றங்களில்..." -
கடவுளின் இல்லத்துள் நுழைவது லேவியருக்கே உரியது என்பதால், தாவீது இவ்வாறு குறிப்பிடுகிறார். ஆனால் கிறிஸ்து இயேசுவின் வழியே, பிளவை ஏற்படுத்தும் நடுச்சுவர் தகர்க்கப்பட்டதனால், இன்று தாவீது பெற்றுக்கொள்ள முடியாத பேறையும், நாம் பெற்றிருக்கிறோம் (எபேசியர் 2:13-14).

"உமது திருமிகு கோவிலில் கிடைக்கும் நன்மைகள்..." -
பார்க்க, 23:5-6, 36:7-8.
அரசரின் விருந்தினர் என்பதே எவ்வளவு பெரிய பேறு! அதுவே கடவுளின் விருந்தினர் என்றால், கற்பனைக்கும் எட்டாத பெரும் பேறு!

வசனம் 65:5
மலை நிலத் தெய்வம், பாலை நிலத் தெய்வம், நெய்தல் நிலத் தெய்வம் - இவ்வாறு மண்ணுக்கு ஒரு தெய்வம், மரத்துக்கு ஒரு தெய்வம் என்றெல்லாம் அல்ல; நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்றுமல்ல!

மனிதர் கண்டதும் இனிக் கண்டறிய இருப்பதுமான ஆற்றல் அனைத்திற்குமான பேராற்றலாளர், பேரருளாளர், காணக் கூடாத பேரொளியில் உறையும் கடவுள்! உலகின் ஓர் எல்லை தொடங்கி, மறு எல்லை வரை வாழும் மானிடர் அனைவருக்கும் அவரே கடவுள்!

வசனம் 65:6-8
பார்க்க, யோபு 26; திருப்பாடல் 33:6-11, 93:1-4, 95:4-5, 104:6-9.
மனிதரிலும் இயற்கையிலுமான தமது படைப்பில் கடவுள் செய்ததும், செய்து கொண்டிருப்பதுமான ஆற்றல்நிறை அருஞ்செயல்கள்!

வசனம் 65:8ஆ
"கிழக்கு முதல் மேற்குவரை உள்ளோரைக் களிகூரச் செய்கின்றீர்!" -
ஒப்பிடுக:
OV, "காலையையும் மாலையையும் களிகூரப்பண்ணுகிறீர்."

வசனம் 65:9
ஒப்பிடுக, இணைச் சட்டம் 28:12; எசாயா 55:10-11.
கடவுள் மனிதருக்கு அருளியுள்ள நிறைவானதும், வாழ்வதும், வளர்வதுமான ஆசிகள்.

நினைவு கொள்ளத்தக்க ஓர் உண்மை:
1900 ஆண்டில், உலகின் மக்கள் தொகை, 165 கோடி;
அதுவே, 2000 ஆண்டில், 614 கோடி. அவ்வளவு மக்களுக்கும் தேவையான அனைத்தும் இப்பூவுலகில் நிறைந்து இருக்கின்றன. எல்லாம் நிறைந்த இவ்வுலகில், இல்லாமையும் போதாமையுமே, மனிதர்களாகிய நாம் ஏற்படுத்தியவை.

காந்தியடிகள் சொன்ன ஒன்று நினைவுக்கு வருகிறது: 'மனித குலத்திற்குத் தேவையான அனைத்தும் இப்பூவுலகில் நிறைந்து இருக்கின்றன; ஆனால் மனிதனின் பேராசைக்குப் போதுமான எதுவும் இவ்வுலகில் இல்லை.' உலகின் இழிநிலைக்கும் அழிவுக்கும் காரணம் வணிகப் பேராசையே!

வசனம் 65:10-12
நினைக்க நினைக்க நமது உள்ளங்கள் பூரிக்கும் நன்மைகள்!

நாம் பயணம் செல்கையில், வழியில், நிறைந்த நீர்நிலைகளை, செழிப்பான நிலங்களைக் காணும் போது அவற்றின் உரிமையாளர்களைக் குறித்து எண்ணுவதில்லை; மாறாக நாம் கடவுளுக்கே நன்றி செலுத்துகிறோம்.

வசனம் 65:13
பார்க்க, 67:5-6, 96:11-13; எசாயா 55:12-13.

செழிப்பான விளைநிலங்களையும், பசும்புல்வெளிகளையும், பெரும் மந்தைகளையும் காணும் உள்ளம், கடவுளுக்கு நன்றி சொல்லித் துள்ளிக் குதிக்கிறதா!

நமது உள்ளங்கள் மட்டுமல்ல, படைப்பும் கடவுளுக்கு நன்றி சொல்லிக் களிநடனம் ஆடுகிறது!

தவிப்போடு எதிர்நோக்கிக் காத்திருக்கும் முழுமையான மீட்பு வரும்போது (வ.1 குறிப்பு), படைப்பு இன்னும் எவ்வளவாகக் களிகூரும்!

கடவுள் அருளும் நன்மைகள் அனைத்திலும், ஆர்ப்பரிப்போடு அவருக்கே நன்றி சொல்லிப் பாடுவோம்!
"ஆண்டவரின் ஆட்சித் தலத்தில் வாழும், அனைத்துப் படைப்புகளே! ஆண்டவரைப் போற்றுங்கள்! என்னுயிரே! ஆண்டவரைப் போற்றிடு!" (103:22)

✝

## 19 திருப்பாடல் 66

(நன்றிப் புகழ்ப்பா)

*பாடகர் தலைவர்க்கு; நன்றிப்பா*
1 அனைத்துலகோரே!
கடவுளைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்!
2 அவரது பெயரின் மாட்சியைப்
புகழ்ந்து பாடுங்கள்;
அவரது புகழை மேன்மைப்படுத்துங்கள்.
3 கடவுளை நோக்கி,
'உம் செயல்கள்
எவ்வளவு அஞ்சத்தக்கவை;
உமது மாபெரும்
ஆற்றலின் காரணமாக
உம் எதிரிகள் உமது முன்னலையில்
கூனிக் குறுகுவர்;
4 அனைத்துலகோர்
உம்மைப் பணிந்திடுவர்;
அவர்கள் உம் புகழ் பாடிடுவர்;
உம் பெயரைப் புகழ்ந்து பாடிடுவர்'
என்று சொல்லுங்கள்.
(சேலா)
5 வாரீர்! கடவுளின் செயல்களைப் பாரீர்!
அவர் மானிடரிடையே ஆற்றிவரும்
செயல்கள் அஞ்சுவதற்கு உரியவை.
6 கடலை உலர்ந்த தரையாக
அவர் மாற்றினார்;
ஆற்றை அவர்கள் நடந்து கடந்தார்கள்.
அங்கே அவரில் நாம் அகமகிழ்ந்தோம்.
7 அவர் தமது வலிமையால்

என்றென்றும் அரசாள்கிறார்!
அவர்தம் கண்கள்
வேற்றினத்தாரைக் கவனித்து வருகின்றன;
கலகம் செய்வோர் அவருக்கு எதிராய்த்
தலைதூக்காதிருப்பராக!
(சேலா)
8 மக்களினங்களே!
நம் கடவுளைப் போற்றுங்கள்;
அவரைப் புகழ்ந்துபாடும்
ஒலி கேட்கச் செய்யுங்கள்.
9 நம்மை உயிர்வாழச் செய்தவர் அவரே;
அவர் நம் கால்களை இடற விடவில்லை.
10 கடவுளே! எங்களை ஆய்ந்து,
வெள்ளியைப் புடமிடுவதுபோல் புடமிட்டீர்;
11 கண்ணியில் எங்களை
விழும்படி செய்தீர்;
பளுவான சுமைகளை
எங்கள் முதுகின் மீது சுமத்தினீர்.
12 மனிதரை எங்கள் தலைகள்மீது
நடந்துபோகச் செய்தீர்;
நெருப்பிலும் தண்ணீரிலும்
அகப்பட்டிருந்தோம்;
ஆயினும், நீர் எங்களைப்
பாதுகாப்பான இடத்திற்குக்
கொண்டுவந்து சேர்த்தீர்.
13 எரிபலியுடன்
உமது இல்லத்தினுள் செல்வேன்;
என் பொருத்தனைகளை
உமக்குச் செலுத்துவேன்.
14 அவற்றை என் துன்ப வேளையில்
என் நா உரைத்தது;
என் வாய் உறுதி செய்தது.
15 கொழுத்த கன்றுகளை,
செம்மறிக்கிடாய்களின் நறும்புகையோடு,
உமக்கு எரிபலியாகச் செலுத்துவேன்;
காளைகளையும் வெள்ளாட்டுக் கிடாய்களையும்
உமக்குப் பலியிடுவேன்.
(சேலா)
16 கடவுளுக்கு அஞ்சி நடப்போரே!
அனைவரும் வாரீர்!
கேளீர்! அவர் எனக்குச் செய்ததனை
எடுத்துரைப்பேன்.
17 அவரிடம் மன்றாட என் வாய்திறந்தது;
அவரை ஏத்திப் புகழ என் நா எழுந்தது.
18 என் உள்ளத்தில்
தீய எண்ணங்களை வளர்த்திருந்தேனாகில்,
என் தலைவர்
எனக்குச் செவிசாய்த்திருக்கமாட்டார்.
19 ஆனால், உண்மையில் கடவுள்

எனக்குச் செவிகொடுத்தார்;
என் விண்ணப்பக் குரலை
உற்றுக் கேட்டார்.
20 என் மன்றாட்டைப்
புறக்கணியாத கடவுள்போற்றி!
தம் பேரன்பை என்னிடமிருந்து
நீக்காத இறைவன் போற்றி!

திருப்பாடல் 66:1-20

**சிந்தனைக்கு**

பதினைந்து திருப்பாடல்களுக்குப் பிறகு, தலைப்பில் தாவீதின் பெயர் குறிப்பிடப்படாமல் உள்ள திருப்பாடல். ஆனால் தாவீதியத் திருப்பாடல்களின் பாடுபொருட்களின் ஒரு தொடர்ச்சியை இதில் நாம் பார்க்க முடியும்:
* வேற்றின மக்களுக்கு அழைப்பு
* கடவுளின் இல்லத்தின் மீது நாட்டம்
* மன்றாட்டு
* மறுமொழி தந்த கடவுளுக்கு நன்றிப் பாடல்

குழு வழிபாடாகத் தொடங்கும் திருப்பாடல், 13ம் வசனம் தொடங்கித் தனியொருவரின் வழிபாட்டுப் பாடலாக மாறுவதை நாம் காணலாம். அதே அடிப்படையில், வ.5ம் வ.16ம் ஒப்பிட்டுப் பார்த்தல் நன்று. கடவுளைப் போற்றி வழிபட அறைகூவலோடு தொடங்கும் திருப்பாடல், திருப்பாடகரின் போற்றுதலோடு நிறைவடைகிறது. கடவுளின் இல்லத்தில், ஒவ்வொருவரின் துதியும் (வ.20) இயைந்துதானே ஆர்ப்பரிப்பாக (வ.1) மாறுகிறது!

எழுதப்பட்ட காலம் குறித்து ஆய்வாளர்களுக்குள் ஒத்த கருத்து இல்லை; அரசர்கள் ஆளுகை, பாபிலோனியத் திரும்புதல், மக்கபேயரின் ஆளுகை எனச் சில காலங்களை அவர்கள் முன்வைக்கின்றனர்.

கிரேக்க பைபிளில் உயிர்த்தெழுதலின் திருப்பாடல் என்று குறிப்பிடப்பட்டுள்ள இப்பாடல், கிரேக்கத் திருச்சபையில் உயிர்த்தெழுந்த திருநாளில் பாடப்படுவதாகவும் சொல்லப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் ஆண்டவர் கற்பித்த பொது மன்றாட்டு போல, பழைய ஏற்பாட்டில் உள்ள பொதுவான மன்றாட்டு என்றும் சொல்லப்படுகிறது; ஆனால் யூத வழிபாட்டு முறையில் அதற்கான சான்று ஏதும் இல்லை.

"அனைத்துலகோர்," வ.1,4,
"மானிடர்," வ.5
"மக்களினங்கள்," வ.8
- இதுபோன்ற வசனங்கள் கிறிஸ்துவின் வருங்காலத்தை (எசாயா 2:2-4; பிலிப்பியர் 2:10-11) முன்னுரைப்பதால், இறைவாக்குத் திருப்பாடல் எனலாம்.

அமைப்பு:
வ.1-12, அஞ்சத்தக்க அருஞ்செயல்களுக்காக உலகோர் போற்றும் கடவுள்
வ.13-20, நன்றியுணர்ந்த உள்ளத்தின் புகழ்ப்பா

வசனம் 66:1-2
*பார்க்க*, 22:27-31, 100:1-2, 117:1-2.
*பூவுலகின் மக்கள் அனைவரும் கடவுளைப் போற்றி வழிபட அழைப்பு.*

வசனம் 66:3-4
*பார்க்க*, 18:44, 81:15.
"*கடவுளை நோக்கி ... என்று சொல்லுங்கள்*" -
*ஆண்டவராகிய கடவுளை வழிபடும் முறைகளை வேற்றின மக்களுக்குக் கற்றுத்தரும் திருப்பாடகர்.*

வசனம் 66:4
"...*உம் பெயரைப் புகழ்ந்து*..." -
*ஏற்புடைய வழிபாடு என்பது கடவுளின் திருப்பெயர்களைச் சொல்லி வழிபடுதல். தெரியாத அல்லது அறியாத கடவுளை* (*திருத்தூதர் பணிகள்* 17:23) *வணங்குதல் வழிபாடு அல்ல.* (*ஸ்பர்ஜின்*)

வசனம் 66:5
*பார்க்க*, 65:5

வசனம் 66:6
"*கடல்*... *ஆறு*..." -
*செங்கடல் மற்றும் யோர்தான் ஆறு.*
*பார்க்க*, *விடுதலைப் பயணம்* 14 & *யோசுவா* 3.

வசனம் 66:7
*என்றென்றும் அரசாள்கிறார்*, 47:2&7.
*படைப்பாளராகக் கடவுள் உலகின் அரசர்; அடிமை மக்களான இஸ்ரயேலரை எகிப்திலிருந்து விடுதலைப் பாதையில் நடத்தி வந்து, அவர் வரலாற்றை இடைமறித்தார்; பகை உணர்வு கொண்ட பல நாடுகளுக்கும் நடுவே, இஸ்ரயேல் என்ற அரசை அமைத்துத் தமது இறையாண்மையை உறுதி செய்தார். பேரரசுகளுக்குப் பின் பேரரசுகளை எழுப்பினார்; இப்போதும் அவருடைய கண்கள் பூவுலகை நோக்கிக் கொண்டுள்ளன; இடைப்பட வேண்டிய வேளையில், எந்த நாட்டிலும் தாம் விரும்பும் மாற்றத்தை ஏற்படுத்த அவர் ஆற்றல் மிக்கவர்.*

வசனம் 66:8
*படைப்பின் கடவுள்; வரலாற்றில் செயல்படும் கடவுள்; இதனை உணர்ந்து கொள்ளும் உலகோர் ஒருமித்துக் கடவுளைப் புகழ்ந்து பாடுவர்.*

வசனம் 66:9
*நமது ஒவ்வொரு நாளிலும், நாம் பலரும் உணராத அடிப்படை உண்மைகள் இரண்டு! விடிந்தால் விழித்து எழுவது தினமும் நடப்பதுதானே, இதையெல்லாம் சாட்சியாக அறிவிக்க வேண்டுமா என்று திருப்பாடகர் நினைக்கவில்லை! உடலில் மட்டுமல்லாமல் ஆன்மாவிலும் அவர் விழிப்புணர்வோடு வாழ்ந்தார்.*

வசனம் 66:10-12
வேறு சொற்களில், எபிரேயர் 12:7-11; 1 பேதுரு 1:6-7, 4:12.
*இவ்வுலக வாழ்க்கையில், நம்மையே நமக்கு உணர்த்த, நம் ஒவ்வொருவரையும் சோதித்து உறுதிப்படுத்தும் கடவுள். துன்பங்களின் வழியே நமது நம்பிக்கையில் நாம் உறுதியாகிறோம். நமது உள்ளங்கள் தெளிவடைகின்றன. நமது செயல்கள் பார்ப்போருக்குப் பாடமாகின்றன.*

இதனையே யோசேப்பு, தாவீது, பவுல் போன்ற மாமனிதர்களின் வாழ்க்கை வரலாறுகள் வெளிப்படுத்துகின்றன.

துன்பங்கள் துயரங்கள் நேரிட்டாலும், தேர்ந்த கொல்லன் சூட்டைக் குறைக்க வேண்டிய நேரத்தை அறிந்திருப்பதைப் போல, எப்போது நம்மைப் பாதுகாப்பான இடத்திற்கு வரச் செய்ய வேண்டும் என்பதை ஆண்டவர் அறிந்திருக்கிறார் (1 பேதுரு 5:10; மேலும் பார்க்க, உரோமையர் 8:17-18; 2 கொரிந்தியர் 4:17; எபிரேயர் 12:11; யாக்கோபு 1:3-4).

வசனம் 66:11-12
இவ்வசனங்கள் வரலாற்றுக் குறிப்புகள்; இஸ்ரயேலரின் எகிப்திய அடிமைத் தனத்தையும், செங்கடல் வழியாக அவர்களை நடத்தி வந்ததையும், அவர்களுக்கு நிழலாகவும் ஒளியாகவும் மேகத்தூண் வழியாக வாக்களிக்கப்பட்ட நாட்டுக்குப் பாதுகாப்பாக நடத்தி வந்ததையும் திருப்பாடகர் இங்குக் குறிப்பிடுகிறார்.

வசனம் 66:13-15
காரணமும் விளைவும்;
வ.14, காரணம்;
வ.13&15, விளைவு.
வென்றெடுத்த பாடு, போற்றுதலுக்குரியது. பாடுகளின் வழியே செயல்பட்ட கடவுளின் கரத்தை உணர்ந்த உள்ளம் களிகூர்ந்து நன்றிப் பாடல் பாடுகிறது; பொருத்தனைகளை நிறைவேற்றுகிறது (56:12, 61:8, 65:1).

வசனம் 66:16-20
பார்க்க, 71:15-16, 107:1-2.
கடவுளின் இல்லத்தில் குழுமியிருந்தோரிடம் சான்று பகர்தல். துன்ப துயர வேளைகளில் கடவுளிடம் பேசுங்கள் (எந்த ஓர் ஊழியக்காரரிடமும் அல்ல!); வெற்றிக் களிப்பில் மற்றோரிடம் சான்று பகருங்கள்.

வசனம் 66:18
"...தீய எண்ணங்களை வளர்த்திருந்தேனாகில்..." -
பார்க்க, நீதிமொழிகள் 15:29; எசாயா 1:15, 59:2-3; யோவான் 9:31.
மன்றாட்டின் அடித்தளம், பாவ அறிக்கை; உதடுகளால் அறிக்கை செய்து, பாவ உணர்வில் மகிழும் உள்ளம் ஜெப வாழ்க்கைக்குப் பெரும் தடையாகும். இத்தகைய கபட உள்ளத்தைக் கடவுள் ஒருபோதும் விரும்பார்.

வசனம் 66:20
தனது உள்ளம் உண்மையோடு வாழ்வதால், தனக்குக் கடவுள் செவிகொடுத்தார் என்று சொன்ன திருப்பாடகர், அதற்காகத் தன்னைப் பெருமைப்படுத்திக் கொள்ளவில்லை; மாறாகக் கடவுளையே போற்றுகிறார். நமது தகுதியின்மையே கடவுளின் இரக்கத்தைப் பெறப் போதுமானது. இந்த உணர்வோடு நாம் கடவுளைப் போற்றிப் புகழும் போது, கடவுளுக்கும் நமக்கும் உள்ள உறவு நிறைவு பெறுகிறது. தமது பேரன்பை நீக்காத ஆண்டவர் போற்றப் பெறுவாராக!

## 19 திருப்பாடல் 67

(நன்றிப் புகழ்ப்பா)

*பாடகர் தலைவர்க்கு; நரம்பிசைக் கருவிகளுடன்; புகழ்ப் பாடல்*
1 கடவுளே!
எம்மீது இரங்கி,
எமக்கு ஆசி வழங்குவீராக!
உம் திருமுக ஒளியை
எம்மீது வீசுவீராக!
(சேலா)
2 அப்பொழுது, உலகம்
உமது வழியை அறிந்துகொள்ளும்;
பிற இனத்தார் அனைவரும்
நீர் அருளும் மீட்பை உணர்ந்து கொள்வர்.
(சேலா)
3 கடவுளே!
மக்களினத்தார் உம்மைப் புகழ்வார்களாக!
மக்கள் எல்லாரும்
உம்மைப் போற்றுவார்களாக!
4 வேற்று நாட்டினர் அக்களித்து
மகிழ்ச்சியுடன் பாடிடுவராக!
ஏனெனில், நீர் மக்களினங்களை
நேர்மையுடன் ஆளுகின்றீர்;
உலகின் நாடுகளை வழிநடத்துகின்றீர்.
(சேலா)
5 கடவுளே! மக்களினத்தார்
உம்மைப் புகழ்வார்களாக!
மக்கள் எல்லாரும்
உம்மைப் போற்றுவார்களாக!
6 நானிலம் தன் பலனை ஈந்தது;
நம் கடவுள்
நமக்கு ஆசி வழங்கினார்.
7 கடவுள் நமக்கு ஆசி வழங்குவாராக!
உலகின் கடையெல்லைவரை வாழ்வோர்
அவருக்கு அஞ்சுவராக!

திருப்பாடல் 67:1-7

**சிந்தனைக்கு**

மூன்று நன்றித் திருப்பாடல்களின் தொடரில் இறுதித் திருப்பாடல்.

உலகம், வ.2
பிற இனத்தார் அனைவரும், வ.2
மக்களினத்தார், வ.3&5
மக்கள் எல்லாரும், வ.3&5
வேற்று நாட்டினர், வ.4

மக்களினங்கள், வ.4
உலகின் நாடுகள், வ.4
நானிலம், வ.6
உலகின் கடையெல்லை வரை வாழ்வோர், வ.7
- ஏழே வசனங்களில் (அவற்றில், வ.3ம் வ.5ம், ஒன்றே) பதினோரு முறை பன்முகத் தன்மையை, உலகோர் எல்லாருக்குமான கடவுளின் பேரன்பைப் பாடும் அரிய பாடல். வியப்பு என்னவென்றால், யூதரல்லாத பல பைபிள் ஆய்வாளர்களும் இப்பாடலுக்குரிய சிறப்பிடத்தைத் தரவில்லை என்பதே! சான்றாக, ஐந்து தொகுதிகளாகத் திருப்பாடல் விளக்கவுரையை ஜெர்மானியத்தில் எழுதிய மார்டின் லூத்தர், திருப்பாடல் 67ஐக் கண்டு கொள்ளவேயில்லை!

ஆனால் இத்திருப்பாடலை எழுதியவரோ, தான் அனுபவித்து உணர்ந்த கடவுளின் மீட்பை உலகோர் அனைவரும் பெற்றுக் கொள்ள வேண்டுமே என்ற வாஞ்சையோடு இப்பாடலை இயற்றியுள்ளார். இன்றைக்கு இத்திருப்பாடலை, திருப்பணித் (மிஷனரி ஊழியத்) திருப்பாடல் என்று அறிவித்து, ஆண்டு தோறும் திருப்பணி ஞாயிறு அன்று வாசிக்கச் செய்யலாம்.

திருப்பாடல் 54 போலவே, நரம்பிசைக் கருவிகளுடன் பாடப்படும் திருப்பாடல்.

அமைப்பு:
வ.1-2, கடவுளின் திருப்பெயர் வியாபிக்க அவர் வழங்கும் ஆசி
வ.3-4, நேரிய ஆளுகைக்காகக் கடவுளைத் துதிக்கும் மக்கள்
வ.5-7, இறையாட்சி வரத் துதிக்கும் உலகம்

வசனம் 67:1
இணை, எண்ணிக்கை 6:24-26.
இஸ்ரயேலருக்கு ஆரோனிய ஆசியாக மோசே வழியாக ஆண்டவர் கற்பித்த திருவார்த்தைகள், இங்கு மன்றாட்டு வடிவில்! அங்கு உடன்படிக்கையின் ஆண்டவரின் திருப்பெயரில் இருப்பது இங்கு கடவுளின் திருப்பெயரில் இயற்றப்பட்டுள்ளது.

வசனம் 67:2
பிற இனத்தார் அனைவருக்கும் ஆசி என்பது ஆபிரகாமின் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்திற்கும் அருளப்பட்ட ஆசி ஆகும், தொடக்க நூல் 12:3. அதுவே உலகத் திருப்பணிக்கு ஆண்டவரின் அறைகூவல் (96:1-3; மத்தேயு 28:18-20; திருத்தூதர் பணிகள் 1:8).

வசனம் 67:3-5
சிறப்பானதும் கவித்துவமானதுமான நடுப்பகுதி. வ.4கை மையமாக வைத்து, அதனால் கடவுளுக்கு புகழ்ச்சியும் போற்றுதலும் வருவதாக உள்ள பாடல் அமைப்பு.

வசனம் 67:4
உலகளாவிய உண்மை:
மக்களினங்கள் அனைத்தையும் கடவுளே நேர்மையோடு நீதி விசாரிக்கிறார், 96:10, 98:9; உலக நாடுகளை ஆளுகை செய்கிறார் (பார்க்க, 66:7 குறிப்பு).

வசனம் 67:5
கடவுளின் வழிநடத்துதலில் நாடுகளின் மக்கள் அனைவரும் அவரைப் போற்றிப் புகழ்கின்றனர்.

எல்லோரும் தம்மைப் புகழ வேண்டும் என்று கடவுள் நாடுகிறாரா?

அப்படியல்ல; நன்றி மறத்தல் பெரும் பாவம்; எனவே நன்றி பொங்கும் உள்ளத்தோடு நாம் அவரைப் போற்றித் துதித்தல் நன்று! மேலும் நமது இறைவழிப் பயணம் துதித்தலின்றி முழுமை அடையாது.

வசனம் 67:6
இவ்வசனத்தின் அடிப்படையில், இத்திருப்பாடலும் திருப்பாடல் 65 போலவே ஓர் அறுவடைத் திருநாள் திருப்பாடல் என்று கருதுகின்றனர்.

நிலத்தின் செழுமையான அறுவடை, ஆண்டவரின் அருள். மானிடரின் மீட்பின் வழியே, படைப்பின் மீட்பு நிறைவடையும் வேளையில் (தொடக்க நூல் 3:17-19 & உரோமையர் 8:22) கடவுளின் நலம் தரும் ஆண்டில், பாலை நிலத்தில் மேய்ச்சல் நிலங்கள் செழுமை பொங்குகின்றன (65:11-12).

"...கடவுள், நம் கடவுள்..." -
வழிபடும் குழுவாகக் கடவுளை நமது கடவுள் என்று உணராதவரை நமது அன்பு உண்மையானதல்ல; அவர்மீது நமது அன்பு பெருகப் பெருக, அவர் நம்முடையவர் என்ற வாஞ்சை பெருகுகிறது. (ஸ்பர்ஜின்)

வசனம் 67:7
"உலகின் கடை எல்லை வரை" -
திருத்தூதர் பணிகள் 1:8

ஆசி வழங்கும் கடவுளை வேண்டித் தொடங்கிய திருப்பாடல், அதே வெளிப்பாட்டோடு நிறைவடைகிறது!
ஆசிகளின் வழியாக அவரை அறிந்து கொள்ளும் உலகோர், அவருக்கு அஞ்சி அவரைத் தொழுவர் என்று தொடங்கியவாறே முடிகிறது!

கடவுளுக்கு அஞ்சுதல் என்பதன் வெளிப்பாடு, அவரைத் தொழுது கொள்ளுதலே! அவர் அருளும் ஆசி, அவரையே நாம் சார்ந்து வாழவே! திருச்சபைகளில் இறைமக்கள் பெறும் ஆசி, திருச்சபைக்கு வெளியே இருப்போரையும் கடவுளை நோக்கி ஈர்க்கிறது!

## 19 திருப்பாடல் 68

*(கடவுளின் வெற்றிப் பவனி)*

*பாடகர் தலைவர்க்கு; தாவீதின் புகழ்ப் பாடல்*
1 கடவுள் எழுந்தருள்வார்;
அவருடைய எதிரிகள் சிதறடிக்கப்படுவார்கள்;
அவரை வெறுப்போர்
அவர் முன்னிலையினின்று ஓடிப்போவர்;
2 புகை அடித்துச் செல்லப்படுவது போல
அடித்துச் செல்லப்படுவர்;
நெருப்புமுன் மெழுகு உருகுவது போலக்
கடவுள்முன் பொல்லார் அழிந்தொழிவர்.
3 நேர்மையாளரோ மகிழ்ச்சியடைவர்;

கடவுள் முன்னிலையில் ஆர்ப்பரிப்பர்;
மகிழ்ந்து கொண்டாடுவர்.
4 கடவுளைப் புகழ்ந்து பாடி
அவரது பெயரை போற்றுங்கள்;
மேகங்கள்மீது வருகிறவரை
வாழ்த்திப் பாடுங்கள்;
'ஆண்டவர்' என்பது அவர்தம் பெயராம்;
அவர்முன் களிகூருங்கள்.
5 திக்கற்ற பிள்ளைகளுக்குத் தந்தையாகவும்
கணவனை இழந்தாளின் காப்பாளராகவும்
இருப்பவர், தூயகத்தில் உறையும் கடவுள்!
6 தனித்திருப்போர்க்குக் கடவுள்
உறைவிடம் அமைத்துத் தருகின்றார்;
சிறைப்பட்டோரை விடுதலை வாழ்வுக்கு
அழைத்துச் செல்கின்றார்;
ஆனால், அவருக்கு எதிராகக் கிளம்புவோர்
வறண்ட நிலத்தில் வாழ்வர்.
7 கடவுளே!
நீர் உம்முடைய மக்கள் முன்சென்று
பாலைவெளியில் நடைபோட்டுச் செல்கையில்,
(சேலா)
8 சீனாயின் கடவுள் வருகையில்,
பூவுலகு அதிர்ந்தது;
இஸ்ரயேலின் கடவுள் வருகையில்
வானம் மழையைப் பொழிந்தது.
9 கடவுளே!
உம் உரிமையான நாட்டின்மீது
மிகுதியாக மழைபொழியச் செய்தீர்;
வறண்டுபோன நிலத்தை
மீண்டும் வளமாக்கினீர்.
10 உமக்குரிய உயிர்கள்
அதில் தங்கியிருந்தன;
கடவுளே! நீர் நல்லவர்;
எனவே ஒடுக்கப்பட்டோர்க்கு
மறுவாழ்வு அளித்தீர்.
11 என் தலைவர் செய்தி அறிவித்தார்;
அச்செய்தியைப் பரப்பினோர்
கூட்டமோ பெரிது;
12 'படைகளையுடைய அரசர்கள்
ஓடினார்கள் புறங்காட்டி ஓடினார்கள்'!
வீட்டில் தங்கியிருக்கும் பெண்கள்
கொள்ளைப்பொருள்களைப்
பகிர்ந்து கொண்டார்கள்.
13 நீங்கள் தொழுவங்களின் நடுவில்
படுத்துக்கொண்டீர்களோ?
வெள்ளியால் மூடிய புறாச் சிறகுகளும்,
பசும்பொன்னால் மூடிய அதன் இறகுகளும்
அவர்களுக்குக் கிடைத்ததே!
14 எல்லாம் வல்லவர்

அங்கே அரசர்களைச் சிதறடித்தபோது,
சல்மோன் மலையில் பனிமழை பெய்தது.
15 ஓ மாபெரும் மலையே!
பாசானின் மலையே!
ஓ கொடுமுடி பல கொண்ட மலையே!
பாசானின் மலையே!
16 ஓ பல முடி கொண்ட மலைத் தொடரே!
கடவுள் தம் இல்லமாகத் தேர்ந்துகொண்ட
இந்த மலையை நீ ஏன்
பொறாமையோடு பார்க்கின்றாய்?
ஆம், இதிலேதான்
ஆண்டவர் என்றென்றும் தங்கி இருப்பார்.
17 வலிமைமிகு தேர்கள்
ஆயிரமாயிரம், பல்லாயிரம் கொண்ட
என் தலைவர்
சீனாய் மலையிலிருந்து
தம் தூயகத்தில் எழுந்தருள வருகின்றார்.
18 உயர்ந்த மலைக்கு நீர் ஏறிச் சென்றீர்;
சிறைப்பட்ட கைதிகளை இழுத்துச் சென்றீர்;
மனிதரிடமிருந்தும்
எதிர்த்துக் கிளம்பியவரிடமிருந்தும்
பரிசுகள் பெற்றுக் கொண்டீர்;
கடவுளாகிய ஆண்டவர்
அங்கேதான் தங்கியிருப்பார்.
19 ஆண்டவர் போற்றி! போற்றி!
நாளும் நம்மை அவர் தாங்கிக் கொள்கின்றார்;
இறைவனே நம் மீட்பு.
(சேலா)
20 நம் இறைவனே மீட்பளிக்கும் கடவுள்;
நம் தலைவராகிய ஆண்டவர்தாம்
இறப்பினின்று விடுதலை தர வல்லவர்.
21 அவர் தம் எதிரிகளின் தலையை உடைப்பார்;
தம் தீய வழிகளில் துணிந்து நடப்போரின்
மணிமுடியை நொறுக்குவார்.
22 என் தலைவர் 'பாசானிலிருந்து
அவர்களை அழைத்து வருவேன்;
ஆழ்கடலிலிருந்து அழைத்து வருவேன்.
23 அப்பொழுது, உன் கால்களை
இரத்தத்தில் தோய்ப்பாய்;
உன் நாய்கள் எதிரிகளிடம்
தமக்குரிய பங்கைச் சுவைக்கும்'
என்று சொன்னார்.
24 கடவுளே! நீர் பவனி செல்வதை,
என் கடவுளும் அரசருமானவர்
தூயகத்தில் பவனி செல்வதை,
அனைவரும் கண்டனர்.
25 முன்னால் பாடகரும்
பின்னால் இசைக்கருவிகளை வாசிப்போரும்,
நடுவில் தம்புரு வாசிக்கும்

பெண்களும் சென்றனர்.
26 மாபெரும் சபை நடுவில்
கடவுளைப் போற்றுங்கள்;
இஸ்ரயேலர் கூட்டத்தில்
ஆண்டவரை வாழ்த்துங்கள்.
27 அதோ! இளையவன் பென்யமின்,
அவர்களுக்கு முன்னே செல்கின்றான்;
யூதாவின் தலைவர்கள்
கூட்டமாய்ச் செல்கின்றார்கள்;
செபுலோன் தலைவர்களும்
நப்தலியின் தலைவர்களும் அங்குள்ளார்கள்.
28 கடவுளே!
உம் வல்லமையைக் காட்டியருளும்;
என் சார்பாகச் செயலாற்றிய கடவுளே!
உம் வல்லமையைக் காட்டியருளும்!
29 எருசலேமில் உமது கோவில் உள்ளது;
எனவே, அங்கு அரசர்
உமக்குக் காணிக்கை கொணர்வர்.
30 நாணலிடையே இருக்கும்
விலங்கினைக் கண்டியும்;
மக்களினங்களாகிய கன்றுகளோடு வருகிற
காளைகளின் கூட்டத்தையும் கண்டியும்;
வெள்ளியை நாடித் திரிவோரை
உமது காலடியில் மிதித்துவிடும்;
போர்வெறி கொண்டு
மக்களினங்களைச் சிதறடியும்.
31 எகிப்திலிருந்து அரச தூதர் அங்கே வருவர்;
கடவுள்முன் எத்தியோப்பியர்
கைகூப்பி நிற்க விரைவர்.
32 உலகிலுள்ள அரசர்களே!
கடவுளைப் புகழ்ந்தேத்துங்கள்;
ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள்.
(சேலா)
33 வானங்களின்மேல்,
தொன்மைமிகு வானங்களின்மேல்,
ஏறிவரும் அவரைப் புகழுங்கள்;
இதோ! அவர் தம் குரலில்
தம் வலிமைமிகு குரலில் முழங்குகின்றார்.
34 கடவுளுக்கே ஆற்றலை உரித்தாக்குங்கள்;
அவரது மாட்சி இஸ்ரயேல் மேலுள்ளது;
அவரது வலிமை
மேக மண்டலங்களில் உள்ளது.
35 கடவுள் தம் தூயகங்களில்
அஞ்சுவதற்கு உரியவராய் விளங்குகின்றார்;
இஸ்ரயேலின் கடவுள்
தம் மக்களுக்கு வலிமையையும்
ஊக்கத்தையும் அளிக்கின்றார்;
கடவுள் போற்றி! போற்றி!

திருப்பாடல் 68:1-35

**சிந்தனைக்கு**

எபிரேயக் கவிதை இலக்கியத்தின் மிகச் சிறந்த கவிதைகளில் ஒன்றாகத் திருப்பாடல் 68 சொல்லப்படுகிறது. அதேவேளையில், ஆங்கில மொழிபெயர்ப்புகளில் எந்த மொழிபெயர்ப்பும் சரியான விதத்தில் அமையவில்லை என்றும் ஆய்வறிஞர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். தமிழ் மொழிபெயர்ப்புகளும் இதற்கு விதிவிலக்கல்ல!

தமது கூடாரத்திலிருந்து கடவுளாகிய ஆண்டவர் புறப்படும் போதெல்லாம் ஏறெடுத்த மோசேயின் சிறப்பான பாடலான, எண்ணிக்கை 10:35தை, வேறு தொனியில் பாடித் தொடங்கும் தாவீதின் இத்திருப்பாடல், 2 சாமுவேல் 6ம் அதிகாரத்தின் பின்னணியில் எழுதப்பட்டது. எகிப்திலிருந்து விடுவித்து அழைத்து வந்து தாவீதின் அன்றைய நாள்கள் வரை, வெற்றி வேந்தராக முழங்கும் கடவுளின் ஆற்றல் குறித்த மெல்லுணர்வு பாடல் முழுவதும் ததும்பி வழிகிறது. வெவ்வேறு கால வரலாறுகளின் நினைவூட்டலாக மட்டும் இராமல், பருவநிலை மற்றும் நிலப்பரப்பின் பல்வேறு சூழல்களில் இப்பாடல் பயணிக்கிறது என்பது இத்திருப்பாடலின் கவித்துவமான அழகியல் சிறப்பு. இந்த ஒரு பாடலுக்காகவே, இஸ்ரயேலின் கடவுளுக்கு ஆகச் சிறந்த இனிமையான திருப்பாடகர் தாவீது என்று இறை ஊழியர் தாவீதுக்கு மகுடம் சூட்டலாம்.

சீனாயிலிருந்து சீயோனில் எழுந்தருளும் இஸ்ரயேலின் கடவுள்,
* பாலைநிலத்தின் வழியே வந்தார், வ.7;
* சீனாய் மலையில் தங்கினார், வ.8;
* வெற்றிகளைக் குவித்துக் கானானுக்குள் நுழைந்தார், வ.12&14;
* தமது உறைவிடமாக சீயோன் மலையைத் தெரிந்து கொண்டார், வ.16;
* பெருமைமிகு சீயோன் மலைக்கு ஏறிச் சென்றார், வ.18;
* ஆற்றலோடும் மாட்சியோடும் அங்கிருந்து பூவுலகை ஆளுகிறார், வ.18, 21, 31-35.

- இவ்வாறு இத்திருப்பாடல் இஸ்ரயேலின் வரலாற்றோடு கடவுளைத் தொடர்புபடுத்தி, மக்களுக்கும் அவருக்குமான ஐக்கியத்தை விவரிக்கிறது.

பைபிளில் முதன்முறையாக Yeh-ho-vah எனும் பெயர் சுருக்கமாக YAH என்று குறிப்பிடப்பட்டுள்ளது (வ.4). மேலும் இத்திருப்பாடலில், கடவுள் (Eloheem), ஆண்டவர் (Yeh-ho-vah) என்பவை தவிர, கடவுளாகிய ஆண்டவர் (வ.18, Eloheem Yeh-ho-vah), தலைவர் (வ.11, 17, 20 & 22, Ad-o-noy), எல்லாம் வல்லவர் (வ.14, Shad-dahee), இறைவன் (வ.19 & 20, El), தலைவராகிய ஆண்டவர் (வ.20, Yeh-ho-vah ad-o-noy), அரசர் (வ.24, Meh-lek) போன்ற திருப்பெயர்களில் கடவுள் அழைக்கப்படுகிறார்.

அமைப்பு:

வ.1-6, நமது கடவுளின் பொதுத் தன்மைகளுக்கான புகழ்ச்சி

வ.7-10, சீனாய் மலையிலும் பாலைவெளியிலும் ஆற்றலாக வெளிப்பட்ட கடவுளுக்குப் புகழ்ச்சி

வ.11-14, வாக்களிக்கப்பட்ட நாட்டைத் தம் மக்களுக்குப் பெற்றுத் தந்த கடவுளுக்குப் புகழ்ச்சி

வ.15-18, சீயோன் மலையைத் தமது உறைவிடமாகத் தெரிந்தெடுத்த கடவுளுக்குப் புகழ்ச்சி

வ.19-23, தமது எதிரிகள் அனைவரையும் முடக்கி வைத்த கடவுளுக்குப் புகழ்ச்சி

வ.24-27, தமது தூயகத்தில் போற்றப்படும் கடவுளுக்குப் புகழ்ச்சி

வ.28-31, பலவான்களைத் தமது காலடியில் வீழ்த்தும் கடவுளுக்குப் புகழ்ச்சி

வ.32-35, பூவுலகின் மக்கள் அனைவரின் போற்றுதலுக்குரிய, பேராற்றல் மிக்க கடவுளுக்குப் புகழ்ச்சி

வசனம் 68:1-3
*தீயோரை வீழ்த்தும் கடவுள்; தீயோர் நேர்மைக்கு எதிரானவர்கள்; தூய வாழ்வுக்கு எதிரானவர்கள்; நலமான எதற்கும் எதிரானவர்கள்; ஏனெனில் அவர்கள் கடவுளுக்கே எதிரானவர்கள்; எனவே அவர்கள் புகை போலக் காணாமல் அழிக்கப்படுவர்.*

வசனம் 68:1
*ஒப்பிடுக, எண்ணிக்கை 10:35. அங்கு உடன்படிக்கையின் ஆண்டவர் என்று சொல்லப்பட்டுள்ளது, இங்கு அனைவருக்குமான கடவுள் என்று சொல்லப்படுகிறது. அங்கும் இங்கும் எதிர்காலத்தைச் சுட்டும் வினைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன; இந்த வசனத்தின் எபிரேய மூலம் எதிர்காலத்தைக் குறிப்பதாக இல்லை என்கிறார்கள் மொழி அறிஞர்கள்; இவ்வசனம் நிகழ்கால நடையில் அமைவதே சிறப்பு என்பதை நாமும் உணர முடியும்.*

"கடவுள் எழுந்தருள்வார்" -
*கோவில் அர்ப்பணிப்பில் சாலமோன் அரசரின் மன்றாட்டு, 2 குறிப்பேடு 6:41அ. மோசே, தாவீது, சாலமோன் என, இந்த இறைவார்த்தைகளின் பாரம்பரியத் தொடர்ச்சி போற்றுதலுக்குரியது.*

வசனம் 68:2
"நெருப்பு முன் மெழுகு உருகுவது போல..." -
*எதிரிகளின் நிலை, யோசுவா 2:11, 7:5.*
*மெழுகு என்பதை விடவும், அரக்கு என்பது சிறப்பாக இருக்கும்.*
*'உறுதியான அரக்கு நெருப்பில் மென்மையான ஒன்றாக ஆகிக் கரைந்து போகிறது. திமிர் பிடித்த தீயோரும் ஆண்டவர் முன் அச்சத்தால் ஒடுங்குவர்; ஆண்டவரது சினத்தின் ஆற்றல் அத்தகையது.' (ஸ்பர்ஜின்)*

வசனம் 68:3
*நேர்மையாளரின் மகிழ்ச்சி, 52:6, 58:10, 64:7-10, 118:15, 140:13.*

வசனம் 68:4
*மேகங்கள் மீது வருகிறவர், 104:3; மத்தேயு 24:30; திருவெளிப்பாடு 1:7.*

வசனம் 68:5-6
*தனித்து விடப்பட்ட, ஆதரவற்ற துயருறும் மாந்தருக்குப் பாதுகாப்பும் பராமரிப்பும் அருளும் நம் கடவுள், 10:14; விடுதலைப் பயணம் 22:22-24; இணைச் சட்டம் 10:18. மேலும் பார்க்க, யாக்கோபு 1:27.*

"சிறைப்பட்டோரை விடுதலை வாழ்வுக்கு..." -
69:33, 102-19-20, 107:14, 146:7.
*சிறைப்பட்ட குற்றமற்ற யோசேப்பு போன்றோர்.*
*இந்தச் சொற்களின் அடிப்படையில், இத்திருப்பாடல் சிறையிருப்பிலிருந்து மீண்ட இஸ்ரயேலரின் காலத்தில் எழுதப்பட்டது என்று சொல்வோர் உளர்.*

வசனம் 68:7
*பாலைவெளியில் மேகத்தூணாக நடை போட்ட ஆண்டவர், விடுதலைப் பயணம் 13:21.*

வசனம் 68:8
*சீனாயின் கடவுள் வருகை, விடுதலைப் பயணம் 19:18-19*

வசனம் 68:9
*மிகுதியாக மழை,* லேவியர் 26:4; இணைச் சட்டம் 11:12.

*தெளிவிற்காக, 'உம் உரிமையான நாட்டின் மீது' என்ற சொற்கள் பொது மொழிபெயர்ப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.*

வசனம் 68:11-12
*அன்றைக்கு நற்செய்தி என்பது போரில் வெற்றி, எதிரிகளின் செல்வங்களைக் கொள்ளையிடுதல் குறித்த செய்திகள்; பார்க்க,* 2 சாமுவேல் 18:24-31; 2 அரசர்கள் 7:9.

*இது போன்ற வசனங்களின் அடிப்படையில் பலரும் இன்றைக்கு அவற்றின் சூழலை மாற்றிச் செய்தி கொடுக்கிறார்கள்; அது சரியல்ல.*

"*அச்செய்தியைப் பரப்பினோர் கூட்டம்...*" -
*இப்பகுதியின் வினைச்சொல் பெண்பாலில் முடிவதாகச் சொல்கின்றனர்.*
*போரின் வெற்றியைக் கொண்டாடி வரவேற்கும் பெண்களின் கூட்டம்,* 1 சாமுவேல் 18:6-7.
*நீதித் தலைவர்கள்* 11:33 *வசனமும் குறிப்பிடத்தக்கது.*

வசனம் 68:13
*புறா இங்கு இஸ்ரயேலைக் குறிக்கிறது* (74:19 & ஒசேயா 7:11); *வெள்ளியால் மூடிய அதன் சிறகுகளும், பொன்னால் மூடிய அதன் இறகுகளும் என்பது தோற்றுப் போன கானானியரிடமிருந்து பெற்ற கொள்ளைப் பொருளைக் குறிக்கும்.*

வசனம் 68:14
*சல்மோன் மலை என்பது இஸ்ரயேல் நாட்டின் மையப் பகுதியில், செக்கேமுக்கு அருகில் உள்ள, மரங்கள் நிறைந்த ஏபால் மலையின் வேறு பெயர். மலை என்பதை விட குன்று என்பதே சரி (நீதித் தலைவர்கள் 9:48). ஆனால் அங்குப் பனிமழை பொழிவது வழக்கமான ஒரு நிகழ்வு அல்ல; அந்த அளவுக்கு மோசமான பருவநிலை என்று புரிந்து கொள்ளலாம். அல்லது 2 அரசர்கள் 7:15ன் அடிப்படையில், தோற்றோடிய எதிரிகள் மலைமீது விட்டுச் சென்ற போர்க் கருவிகள் மேலே பட்டுத் தெறிக்கும் கதிரொளியின் எதிரொளி, கரும்பாறைகள் கொண்ட சல்மோன் மலை மீது வெண்பனி பொழிந்தது போன்ற தோற்றம் தருகிறது என்றும் சொல்லலாம்.*

*எல்லாம் வல்லவர் சிதறடித்த மன்னர்கள்:*
யோசுவா 11:1-9; *நீதித் தலைவர்கள்* 3:10, 4:14-16, 11:30-33, 15:14-16; 1 சாமுவேல் 7:10-11, 11:11-13; *இன்னும் பல சான்றுகள். இந்த இடத்தில், தெபோரா மற்றும் பாராக்கு பாடிய கடவுளின் வெற்றிப் பாடல் நினைவுகூரத் தக்கது.*

வசனம் 68:15-16
*பாசான் மலை, இஸ்ரயேலின் வடகிழக்குப் பகுதியில் உள்ள மலைத்தொடர். பல உயரமான முகடுகளையும் வியத்தகு வளங்களையும் கொண்ட செழிப்பான மலைப்பகுதி. ஒப்பீட்டளவில், சிறந்தது என்று கருதப்பட்டாலும், கடவுளோ தமது உறைவிடமாக அதைவிடச் சிறியதும் வளம் குன்றியதுமான சீயோன் மலையைத் தெரிந்து கொண்டார்,* 132:13-18. *மேலும், கடவுள் வழிநடத்த, ஈசாக்கைப் பலியிட ஆபிரகாம் வந்த தளமும் சீயோன் மலையே ஆகும், தொடக்க நூல்* 22:2&9. *பாசான் மலை உயர்ந்ததாக இருக்கலாம், ஆனால் கடவுளின் தெரிந்தெடுப்பால் சீயோன் மலை சிறந்ததாகிறது!*

*கடவுள் தெரிந்து கொண்டதற்கு எதிரான மற்றோரின் எண்ணங்களால் பயன் என்ன?*

வசனம் 68:17
இங்கு விளக்கப்படுவது, கடவுளின் விண்ணகப் படை.
ஒப்பிடுக, இணைச் சட்டம் 33:2; 2 அரசர்கள் 6:17; அபக்கூக்கு 3:8.

வசனம் 68:18
கிறிஸ்து கீழிறங்கி மேலேறியதைக் குறிப்பிடும் பவுலடிகள், இந்த வசனத்தைத் தனது திருமடலில் எடுத்தாளுகிறார், எபேசியர் 4:8-11. அப்போது பவுல் 'மனிதரிடமிருந்து... பரிசுகளைப் பெற்றுக் கொண்டார்' என்று சொல்லாமல் 'மனிதருக்குப் பரிசுகளை வழங்கினார்' என்று குறிப்பிடுகிறார். மனிதரிடமிருந்து கடவுள் பெற்றுக்கொள்ள என்ன இருக்கிறது? அப்படியே மனிதர் கடவுளுக்குக் கொடுத்தாலும், அவரிடமிருந்து பெற்றுக் கொண்டதைத்தானே மனிதர் திருப்பிக் கொடுக்கின்றனர்!

வசனம் 68:19
எபிரேய மூலத்தின் படி, 'நம்மேல் பாரம் சுமத்தினாலும்...' (பார்க்க, OV) என்று வருகிறது. அவரல்லவா நம்மையே சுமப்பவர், எசாயா 46:4.

வசனம் 68:21
"...மணிமுடியை நொறுக்குவார்" -
OV, "...மயிருள்ள உச்சந்தலையையும் உடைப்பார்"
எபிரேய மூலச் சொல்லின் படி, நீண்ட முடி வளர்த்த மண்டை; மத்திய தரைக்கடல் நாடுகளில், தொன்மைக் காலங்களில், நீண்ட முடி வளர்த்தல் என்பது போரில் வல்லோருக்கான ஓர் அடையாளம்; இதுபோன்ற வழக்கத்தைக் குறிப்பிடும் நாசிர் நோன்பையும் (எண்ணிக்கை 6:1-5), சாம்சன் வரலாறையும் (நீதித் தலைவர்கள் 13 ~ 16) நினைவில் கொள்க.

வசனம் 68:22-23
ஒப்பிடுக, ஆமோஸ் 9:2-4. எதிரிகள் எவ்விதத்திலும் கடவுளிடமிருந்து தப்பவே இயலாது; இறை மக்களின் கரங்களால் அவர்கள் வீழும்படி, அவர்களைத் தம் மக்களிடம் கடவுள் கொண்டு வந்து நிறுத்துவார்.

வசனம் 68:24-26
ஆண்டவரின் பேழை பவனியாகத் தூயகத்துள் வரும் காட்சி.

வசனம் 68:27
யாக்கோபின் வழிமரபினர் பனிரெண்டு பேர் எனினும், நான்கு வழிமரபினர் மட்டும், வடக்கு மற்றும் தெற்கு நிலப்பரப்பின் பிரதிநிதிகள் போலக் குறிப்பிடப்பட்டுள்ளனர்; வடக்கிலும் தெற்கிலும், சிறிய பென்யமீனும் ஆற்றல் மிக்க யூதாவும்.

செபுலோன் மற்றும் நப்தலி வழிமரபினரின் சிறப்பிடம், நீதித் தலைவர்கள் 4:6&10, 5:18.

இளையவன் பென்யமீன் -
பென்யமீன் யாக்கோபின் மகன்களில் இளையவன்; பென்யமீன் சிறியவன், இஸ்ரயேலின் வழிமரபில் சிறிய கூட்டம் (1 சாமுவேல் 9:21); எருசலேம் நிலப்பகுதி, பென்யமீன் வழிமரபுக்கு வழங்கப்பட்டது; இஸ்ரயேலின் முதல் அரசரான சவுல், அவ்வழிமரபினர்.

வசனம் 68:28-35
எருசலேம் மலையில் உலகோர் அனைவரும் மேசியாவின் அரசாட்சியில் மகிழ்ந்து தொழுவதை இப்பகுதி புகழ்ந்து பாடுகிறது, எசாயா 2:2-4, 18:7, 45:14, 60:3-7; எசேக்கியேல் 40 ~ 48; ஆகாய் 2:7; செக்கரியா 2:11-13, 6:15, 8:21-22, 14:16-19.

வசனம் 68:30
*"வெள்ளியை நாடி..." -*
*'ஏனைய நாடுகளைக் கீழ்ப்படுத்திக் கப்பம் கட்டுதலை விரும்பி...' என்று பொருள் படும்.*

*"போர் வெறி கொண்ட மக்களினங்களைச் சிதறடியும்" -*
*இணை, வ.1*

*மறைபொருளாகச் சில குறிப்புகள் இவ்வசனத்தில் தரப்பட்டுள்ளன:*
*- நாணலிடையே இருக்கும் விலங்கு, எசேக்கியேல் 29:3,*
*- காளைகளின் கூட்டம்,*
*- மக்களினங்களாகிய கன்றுகள்*
*இவை முறையே, எகிப்து, அசீரியா மற்றும் கானானைக் குறிப்பன என்கிறார்கள் பைபிள் ஆய்வாளர்கள்.*

வசனம் 68:31
*எகிப்து, எத்தியோப்பியா -*
*பல நாடுகளும், வேற்றின மக்களும் கடவுளுக்கு எதிராகச் செயல்பட்டனர் என்றாலும், இந்த இரண்டு நாடுகளும் அவற்றின் மக்களும் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளனர்; இந்நாடுகளுக்கு எதிராக இறைவாக்கும் வெளிப்படுத்தப்பட்டது (எசாயா 43:3, 45:14; எரேமியா 13:23). ஆனால் இவர்கள் கடவுளின் எதிரிகளாக அல்ல, கடவுளைத் தொழுது கொள்ள எருசலேமுக்கு வருவார்கள் என்று தாவீது இங்கு முன்னுரைக்கிறார்.*

வசனம் 68:32-35
*வருகின்ற இறையாட்சியைக் குறித்த இறைவாக்கு.*
*மேலும் பார்க்க, செப்பனியா 3:14-17.*

*ஆப்பிரிக்க நாடுகள் இரண்டைக் குறித்து இறைவாக்குரைத்த தாவீது, இப்போது உலக நாடுகள் குறித்த இறைவாக்கை வெளிப்படுத்தினார்.*

வசனம் 68:33
*தம் வலிமைமிகு குரலில், 29:3-4.*

வசனம் 68:34-35
*கடவுளுக்கே ஆற்றலை உரித்தாக்குங்கள் -*
*உலகின் மன்னர்களுக்கு தாவீது விடுக்கும் அழைப்பு.*
*தம் மக்களைப் பாதுகாக்கவும், தமக்கு எதிர் நிற்கும் பகையை முறியடிக்கவும், கடவுள் ஆற்றல் உடையவர். ஆற்றல்மிக்கவர் என்பதால் புகழ்ச்சியும் மாட்சியும் அவருக்கே உரியன. எனவே அச்சத்தோடும் நடுக்கத்தோடும் அவரைப் பணிந்து தொழுது கொள்ளுங்கள் (2:10-11). தம்மை அடைக்கலமாகக் கொண்டோருக்கு வலிமையையும் ஊக்கத்தையும் அருளும் கடவுளுக்கே துதி!*

## 19 திருப்பாடல் 69

*(உதவிக்காக வேண்டல்)*

*பாடகர் தலைவர்க்கு; லீலிமலர் என்ற மெட்டு; தாவீதுக்கு உரியது*
1 கடவுளே!
என்னைக் காப்பாற்றும்;
வெள்ளம் கழுத்தளவு வந்துவிட்டது.
2 ஆழமிகு நீர்த்திரளுள்
அமிழ்ந்திருக்கின்றேன்;
நிற்க இடமில்லை;
நிலைக்கொள்ளாத நீருக்குள்
ஆழ்ந்திருக்கின்றேன்;
வெள்ளம் என்மீது புரண்டோடுகின்றது.
3 கத்திக் கத்திக் களைத்துப்போனேன்;
தொண்டையும் வறண்டுபோயிற்று;
என் கடவுளாம் உமக்காகக் காத்திருந்து
என் கண்கள் பூத்துப்போயின;
4 காரணமில்லாமல் என்னை வெறுப்போர்
என் தலைமுடியைவிட
மிகுதியாய் இருக்கின்றனர்;
பொய்க்குற்றம் சாட்டி
என்னைத் தாக்குவோர் பெருகிவிட்டனர்.
நான் திருடாததை எப்படித் திருப்பித் தரமுடியும்?
5 கடவுளே!
என் மதிகேடு உமக்குத் தெரியும்;
என் குற்றங்கள்
உமக்கு மறைவானவை அல்ல.
6 ஆண்டவரே! படைகளின் தலைவரே!
உமக்காகக் காத்திருப்போர்
என்னால் வெட்கமுறாதபடி செய்யும்;
இஸ்ரயேலின் கடவுளே!
உம்மை நாடித் தேடுகிறவர்கள் என்பொருட்டு
மானக்கேடு அடையாதபடி செய்யும்.
7 ஏனெனில், உம் பொருட்டே
நான் இழிவை ஏற்றேன்;
வெட்கக்கேடு என் முகத்தை மூடிவிட்டது.
8 என் சகோதரருக்கு
வேற்று மனிதனானேன்;
என் தாயின் பிள்ளைகளுக்கு
அயலான் ஆனேன்.
9 உமது இல்லத்தின்மீது
எனக்குண்டான ஆர்வம்
என்னை எரித்துவிட்டது;
உம்மைப் பழித்துப் பேசினவர்களின்
பழிச்சொற்கள் என்மீது விழுந்தன.
10 நோன்பிருந்து நான்
நெக்குருகி அழுதேன்;
அதுவே எனக்கு இழிவாய் மாறிற்று.

11 சாக்குத் துணியை
என் உடையாகக் கொண்டேன்;
ஆயினும், அவர்களது
பழிச்சொல்லுக்கு உள்ளானேன்.
12 நகர வாயிலில் அமர்வோர்
என்னைப் பற்றிப் புறணி பேசுகின்றனர்;
குடிகாரர் என்னைப்பற்றிப்
பாட்டுக் கட்டுகின்றனர்.
13 ஆண்டவரே!
நான் தக்க காலத்தில்
உம்மை நோக்கி விண்ணப்பம் செய்கின்றேன்;
கடவுளே!
உமது பேரன்பின் பெருக்கினால்
எனக்குப் பதில் மொழி தாரும்;
துணை செய்வதில் நீர் மாறாதவர்.
14 சேற்றில் நான் அமிழ்வதிலிருந்து
என்னைக் காத்தருளும்;
என்னை வெறுப்போரிடமிருந்தும்
ஆழ்கடலிலிருந்தும் என்னை விடுவித்தருளும்.
15 பெருவெள்ளம் என்னை
அடித்துக் கொண்டு போகாதிருப்பதாக!
ஆழ்கடல் என்னை விழுங்காதிருப்பதாக!
படுகுழி தன்வாய் திறந்து
என்னை மூடிக் கொள்ளாதிருப்பதாக!
16 ஆண்டவரே!
எனக்குப் பதில்மொழி தாரும்;
உம் பேரன்பு நன்மை மிக்கது;
உமது பேரிக்கத்தை முன்னிட்டு
என்னை நோக்கித் திரும்பும்.
17 உமது முகத்தை
அடியேனுக்கு மறைக்காதேயும்;
நான் நெருக்கடியான நிலையிலிருக்கிறேன்;
என் மன்றாட்டுக்கு
விரைவில் பதில்மொழி தாரும்.
18 என்னை நெருங்கி,
என்னை விடுவித்தருளும்;
என் எதிரிகளிடமிருந்து
என்னை மீட்டருளும்.
19 என் இழிவும், வெட்கக்கேடும்,
மானக்கேடும் உமக்குத் தெரியும்;
என் பகைவர் அனைவரும்
உம் முன்னிலையில் இருக்கின்றனர்.
20 பழிச்சொல் என்
இதயத்தைப் பிளந்து விட்டது;
நான் மிகவும் வருந்துகிறேன்;
ஆறுதல் அளிப்பாருக்காகக் காத்திருந்தேன்;
யாரும் வரவில்லை;
தேற்றிடுவோருக்காகத் தேடிநின்றேன்;
யாரையும் காணவில்லை.

21 அவர்கள் என் உணவில்
நஞ்சைக் கலந்து கொடுத்தார்கள்;
என் தாகத்துக்குக் காடியைக்
குடிக்கக் கொடுத்தார்கள்.
22 அவர்களுடைய விருந்துகளே
அவர்களுக்குக் கண்ணியாகட்டும்!
அவர்களுடைய படையல் விருந்துகளே
அவர்களுக்குப் பொறியாகட்டும்!
23 அவர்களின் கண்கள்
காணாதவாறு ஒளியிழக்கட்டும்!
அவர்களின் இடைகள்
இடையறாது தள்ளாடட்டும்!
24 உமது கடுஞ்சினத்தை
அவர்கள்மேல் கொட்டியருளும்;
உமது சினத்தீ
அவர்களை மடக்கிப் பிடிப்பதாக!
25 அவர்களின் பாசறை பாழாவதாக!
அவர்களின் கூடாரங்களில்
ஒருவனும் குடிபுகாதிருப்பானாக!
26 நீர் அடித்தவர்களை அவர்கள்
இன்னும் கொடுமைப்படுத்துகின்றார்கள்;
நீர் காயப்படுத்தினவர்களின்
நோவைப்பற்றித் தூற்றித் திரிகின்றார்கள்.
27 அவர்கள்மீது
குற்றத்தின்மேல் குற்றம் சுமத்தும்!
உமது நீதித் தீர்ப்பினின்று
அவர்களைத் தப்ப விடாதேயும்!
28 மெய்வாழ்வுக்குரியோரின்
அட்டவணையிலிருந்து அவர்களுடைய
பெயர்களை நீக்கிவிடும்!
அவற்றை நேர்மையாளரின்
பெயர்களோடு சேர்க்காதேயும்!
29 எளியேன் சிறுமைப்பட்டவன்;
காயமுற்றவன்;
கடவுளே!
நீர் அருளும் மீட்பு எனக்குப்
பாதுகாப்பாய் இருப்பதாக!
30 கடவுளின் பெயரை நான்
பாடிப் புகழ்வேன்;
அவருக்கு நன்றி செலுத்தி,
அவரை மாட்சிமைப்படுத்துவேன்;
31 காளையைவிட இதுவே
ஆண்டவருக்கு உகந்தது;
கொம்பும் விரிகுளம்பும் உள்ள
எருதைவிட இதுவே அவருக்கு உகந்தது.
32 எளியோர் இதைக் கண்டு
மகிழ்ச்சி அடைவார்கள்;
கடவுளை நாடித் தேடுகிறவர்களே,
உங்கள் உள்ளம் ஊக்கமடைவதாக.

33 ஆண்டவர் ஏழைகளின்
விண்ணப்பத்திற்குச் செவிசாய்க்கின்றார்;
சிறைப்பட்ட தம் மக்களை
அவர் புறக்கணிப்பதில்லை.
34 வானமும் வையமும்
கடல்களும் அவற்றில் வாழும்
யாவும் அவரைப் புகழட்டும்.
35 கடவுள் சீயோனுக்கு மீட்பளிப்பார்;
யூதாவின் நகரங்களைக் கட்டி எழுப்புவார்;
அப்பொழுது அவர்களுடைய மக்கள்
அங்கே குடியிருப்பார்கள்;
நாட்டைத் தங்களுக்குச்
சொந்தமாக்கிக் கொள்வார்கள்.
36 ஆண்டவருடைய அடியாரின் மரபினர்
அதைத் தம் உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்;
அவரது பெயர்மீது அன்பு கூர்வோர்
அதில் குடியிருப்பர்.

திருப்பாடல் 69:1-36

**சிந்தனைக்கு**

தலைப்பில், "லீலிமலர்" - பார்க்க, திருப்பாடல் 45. வரலாற்றுக் குறிப்பு ஏதும் இல்லை.

அத்துணை திருப்பாடல்களிலும், கடவுளின் பொருட்டு ஆர்வம் கொண்ட, அதேவேளையில் கைவிடப்பட்ட, கடுந்துயருற்றதோர் உள்ளத்தின் அழுகுரலை இந்த அளவுக்கு வேறெங்கும் கேட்க முடியாது. கடவுளின் வழிகளில் வாழும், அதேவேளையில் நிந்தையையும், துயரையும், இழிவையும் சகிக்கும் ஒவ்வொரு உள்ளத்தின் குரலாகப் பல நூற்றாண்டுகளாக ஒலிப்பது இந்தத் திருப்பாடல்.

22, 25 மற்றும் 40 போன்ற தாவீதியத் திருப்பாடல்களுடன் இத்திருப்பாடல் ஒப்பிடத் தக்கது. தாவீதுக்கு உரியது என்று தலைப்பில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், எரேமியா எழுதியது என்று சொல்வோர் உளர்; அதற்குச் சான்றாக எரேமியாவின் இறைவாக்கு நூலில் எழுதப்பட்டுள்ள பல புலம்பல் மற்றும் மன்றாட்டு வசனங்களை அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர், அவற்றிலும் குறிப்பாக, எரேமியா 15:15. தாவீதைப் போலவே பல்வேறு துன்பங்களை இறைவார்த்தையின் பொருட்டு ஏற்றுக் கொண்ட எரேமியா, தாவீதின் திருப்பாடலை தனக்கு ஓர் அகத்தூண்டலாக (inspiration) ஏன் எடுத்துக் கொண்டிருக்கக் கூடாது? பவுலடிகளும் இத்திருப்பாடலை இயற்றியவர் தாவீது என்று ஏற்றுக் கொண்டுள்ளார், உரோமையர் 11:10.

மேலும் வ.33-36 பகுதியை வாசிக்கும் போது, சிறைமீண்ட இஸ்ரயேலரின் குரலாக அது ஒலிக்கிறது என்றும், எனவே இப்பகுதி எஸ்ரா போன்ற இறைமனிதரால் பிற்சேர்க்கையாக இணைக்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது.

இத்திருப்பாடலின் வ.21, மேசியாவுக்கு உரியது. இந்த இறைவாக்கு, நற்செய்தி நூல்கள் நான்கிலும் இடம்பெற்றுள்ளது. அதுமட்டுமின்றி, திருப்பாடல் 22 மற்றும் 110 போல, புதிய ஏற்பாட்டு நூல்களில் அதிகமாக மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ள சில வசனங்கள் இத்திருப்பாடலில் உள்ளன. சில வசனங்கள் மட்டுமே புதிய ஏற்பாட்டில்

எடுத்தாளப்பட்டுள்ளன என்றாலும், பல வசனங்களும் கிறிஸ்து இயேசுவின் பாடுகளோடு பொருத்திப் பார்க்கத் தக்கவை.

ஸ்பர்ஜின் அவர்களின் விளக்கங்களைத் தழுவி, இத்திருப்பாடல் நினைவுறுத்தும் கிறிஸ்து இயேசுவின் இறுதி நாள் காட்சிகள்:

வசனம் 69:1-2

தமது பாடுகளுள் அமிழ்ந்து போன கிறிஸ்து இயேசு.

வசனம் 69:3

வியாகுல வியாழனின் இரவில், கெத்சமனித் தோட்டத்தில், திகிலும் மனக்கலக்கமும் அடைந்தவராக, வியர்வையும் குருதியும் வழிந்தோட, தரையில் விழுந்து, கண்ணீரோடு குரலெழுப்பி கிறிஸ்து இயேசு மன்றாடிய காட்சி.

வசனம் 69:4

கிறிஸ்து இயேசு மீது பொய்க் குற்றம் சாட்டிய யூதத் தலைவர்கள் (யோவான் 15:18,24-25).

வசனம் 69:6

பாவச் சின்னமாம் சிலுவையை அவர் பொருட்டு அனுதினமும் தங்கள் கரங்களில் ஏந்தி, அவரின் வழி நடப்போருக்காக கிறிஸ்து இயேசுவின் மன்றாட்டு.

வசனம் 69:7

விண்ணகத் தந்தையின் பொருட்டு, சிலுவையில் நிந்தையைச் சுமந்த கிறிஸ்து இயேசு.

வசனம் 69:8

ஊழியத்தில் அவர் தெரிந்து ஏற்றுக்கொண்ட சகோதரர்களுக்கும், அவருடைய தாயின் சகோதரர்களுக்கும் வேற்று மனிதரான கிறிஸ்து இயேசு.

வசனம் 69:9

கடவுளுக்கு எதிரான மனிதர்கள் ஒவ்வொருவரின் சொல்லும் செயலும், கிறிஸ்து இயேசுவின் மீது சுமந்தன.

வசனம் 69:12

நகர் வீதிகளின் வழியாக இழுத்துச் செல்லப்பட்டு, நகருக்கு வெளியே நெடுஞ்சாலையில் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து இயேசுவின் பாடுகளைக் கண்டு அவரை இகழ்ந்த, வீதிகளில் இருந்தோரும், போவோரும், வருவோரும்.

வசனம் 69:13-20

கெத்சமனித் தோட்டத்திலும், சிலுவைப் பாதையிலும், சிலுவையிலும் கிறிஸ்து இயேசு தம் மனதிற்குள் ஏறெடுத்த மன்றாட்டு.

வசனம் 69:21

நேரடியாக கிறிஸ்து இயேசுவுக்கு, அவருடைய சாவுக்கு முன் நடந்தது.

வசனம் 69:25

யூதாசுக்கு நேரிட்டது.

- அப்படியானால், இந்தத் திருப்பாடலில் எந்த நிகழ்வு தாவீதுக்கு உரியது? எந்த நிகழ்வு கிறிஸ்து இயேசுவுக்கு உரியது? ஒருவேளை இவையெல்லாம் இருவருக்குமே நடந்தனவா?

பழைய ஏற்பாடு வாசிப்பில் பதிலளிக்க இயலாத கேள்வி; ஏனெனில் பழைய ஏற்பாடு வாசிப்பில், கிறிஸ்து இயேசுவைத் தேடுவதே வாசிப்பின் இலக்காக இருக்க வேண்டும்.

அமைப்பு:

வ.1-4, இறையடியாரின் தன்னிலை உணர்த்தல்

வ.5-6, இறையடியாரின் மன்றாட்டு

வ.7-12, துயருக்கான காரணத்தை எடுத்துரைத்தல்

வ.13-18, அமிழ்ந்து கொண்டிருப்பவரின், ஆழமான மன்றாட்டு
வ.19-21, இறையடியாரின் துயர்மிகு நிலை
வ.22-28, தீயோருக்கு எதிராக வேண்டுதல்
வ.29-32, மீட்பின் நம்பிக்கையில் மகிழும் உள்ளம்
வ.33-36, மீட்பின் காட்சி.

வசனம் 69:1-3, 14-15
இடர்மிகு வாழ்க்கையின் நெருக்கடி, பெருகும் எதிரிகளின் சினம், அச்சத்தில் மூச்சு முட்டும் நிலை, துயரில் போகும்வழி தெரியாத நிலை - இவை தண்ணீரில் மூழ்கடிக்கப்பட்டவனோடு ஒப்பீடு, 88:7&16-17, 124:3-5; இழுத்துச் செல்லும் தண்ணீர், ஆழங்களில் மூழ்கடிக்கும் தண்ணீர், மூச்சைத் திணறடிக்கும் தண்ணீர், ஆழங்களின் இருளில் கண்களில் பார்வையிருந்தும் எதையும் பார்க்க முடியாத தண்ணீர், உருவகமாக.

சாவின் நிலைக்குச் சென்ற இயேசு, ஆண்டவரா?
இதே கேள்வியை அன்றும் எழுப்பினார்கள் (மத்தேயு 27:39-43; மாற்கு 15:29-32; லூக்கா 23:36-37&39). அதற்கான விடையை இயேசுவே சொன்னார் (யோவான் 5:19); பவுலடிகளும் விளக்கினார் (பிலிப்பியர் 2:5-8); மேலும் பார்க்க, எபிரேயர் 5:8.

ஆழங்களின் அழுத்தத்திலிருந்து இறையருளால் பிழைத்தல், 32:6, 66:12, 124:4-6, யோனா 2:6.

சிலுவைச் சாவைத் தந்து வென்று விட்டோம் என்று மகிழ்ந்த யூதத் தலைவர்களின் எண்ணங்களுக்கு மாறாக, கிறிஸ்து இயேசுவும் உயிரோடு எழுந்தார், எபிரேயர் 5:7.

வசனம் 69:4
பார்க்க 35:19.
இந்த வசனத்தைக் கிறிஸ்து இயேசு மேற்கோள் காட்டினார், யோவான் 15:25.

வசனம் 69:5,
பார்க்க 32:5, 51:1-4.
துன்புறும் நேர்மையாளரின் முறையீடு; தனது பாவங்களை தாவீது ஆண்டவரிடம் அறிக்கை செய்து மன்னிப்பைப் பெற்று விட்டார்; தான் துன்புறும் நிலை நேரிட்டதற்குத் தனது செயல்கள் காரணமல்ல என்பதை அவர் உணர்ந்தார்; அதனையே வ.7-9ன் வழியே அவர் வெளிப்படுத்துகிறார்.

கிறிஸ்து இயேசுவுக்கு இந்த வசனம் பொருந்தாது, யோவான் 8:46; எபிரேயர் 4:15, 7:26; 1 பேதுரு 2:21-22.

வசனம் 69:6
தனது நண்பர்களுக்காக, உடன் போராளிகளுக்காக மன்றாடிய தலைவர் தாவீது.
கிறிஸ்துவை நம்புகிறவர்களுக்கோ வெட்கமுறும் நிலை ஏற்படுவதில்லை, உரோமையர் 9:33, 10:11.

வசனம் 69:7-8
பார்க்க, 31:11-12

கிறிஸ்து இயேசுவின் வாழ்வில், மத்தேயு 9:24ஆ, 27:29&41; மாற்கு 3:21&30, 6:6; லூக்கா 23:26; யோவான் 1:11, 7:5, 8:48.

வசனம் 69:9
பார்க்க, யோவான் 2:17, உரோமையர் 15:3.
சுயபெருமை, சுயசம்பாத்தியம், மேன்மையான அதிகாரம், சொத்துச் சேர்த்தல் - இப்படிப் பலவற்றில் பலரும் ஆர்வம் கொள்கின்றனர். ஆனால் மிகச் சிலரே கடவுளின் மீது பேரார்வம் கொள்கின்றனர். அவர்களுக்கு இந்தச் சமூகம், பைத்தியம் என்று பட்டம் கொடுக்கிறது; கடவுளின் இல்லம், கடவுளுக்காகப் பெருமை கொள்ளுதல், கடவுளுக்காகச் செயல்படுதல் போன்றவற்றை இவ்வுலகோர் புரிந்து கொள்வது அவ்வளவே!

இன்றைக்கு இத்தகையோர் ஆலயத்திற்கு வருவார்கள், ஆலயப் பதவிகளை அலங்கரிப்பார்கள், கூடுகைகளில் ஊக்கமாகச் செயல்படுவார்கள்; இவ்வுலக வாழ்க்கையில், தங்களுடைய பெருமைகளில் இதுவும் ஒன்று என்பதே இவற்றுக்கெல்லாம் அடிப்படை! கடவுளுக்காக ஆர்வம் கொள்தல் என்பது ஏதும் இவர்களிடம் இராது.

நூலிழை வேறுபாடு தான்; நமது செயல்களை ஆராய்ந்து பார்த்து, நமது உள்ளங்களில் ஆண்டவருக்கே முதலிடம் கொடுத்துச் செயல்படுவோம்.

வசனம் 69:10-11
தாழ்மையோடு மன்றாடுதலும் பழிப்புக்கு உள்ளானது. இறையடியாரை ஏளனம் செய்வோர், கடவுளையே ஏளனம் செய்கின்றனர்.

வசனம் 69:12
"நகர வாயிலில்..." -
பார்க்க, தொடக்க நூல் 19:1; ரூத் 4:1.
ஊர்ப் பெரியோரின் அவை, பொருள் விற்போர் வாங்குவோர், நேரம் போக்குவோர், சோம்பேறிகள், குடிகாரர் என்று பலரும் கூடும் இடம்.

வசனம் 69:13-18
கடவுள் அருளும் பாதுகாப்பிற்காக மன்றாட்டு, 22:19-21

வசனம் 69:15
கிறிஸ்து இயேசுவுக்கு நிறைவேறிய மன்றாட்டு; சாவு அவரைத் தனது கட்டுக்குள் வைத்திருக்க முடியவில்லை, திருத்தூதர் பணிகள் 2:24.

வசனம் 69:19
பார்க்க, 22:6,12-13&16.
இயேசுவின் பகைவர், கடவுளுக்கு எதிரான கும்பல் - யூதத் தலைவர்கள், குருக்கள், பிலாத்து, ஆணையை நிறைவேற்றும் உரோமைப் படைவீரர்கள்.

வசனம் 69:20
இயேசுவின் இறுதிநாள் நிகழ்வுகளில், அவருக்கு ஆறுதலாக எவரும் இல்லை; தேற்றுவார் ஒருவரும் இல்லை. ஆதரவற்ற, கைவிடப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட மனிதராக அவர் தமது இறுதிநாளைக் கழித்தார்.

வசனம் 69:21
பசியோடும் தாகத்தோடும் வாடிய ஆண்டவருக்கு அளிக்கப்பட்ட, சகிக்க முடியாத உணவு; இயேசுவின் சாவுக்கு முன்பாக நிறைவேறிய கடைசி இறைவாக்கு, மத்தேயு 27:48; மாற்கு 15:36; லூக்கா 23:36; யோவான் 19:28-29.

வசனம் 69:22-28
எதிர், லூக்கா 23:34, எதிரிகளுக்கு எதிராக தாவீதின் மன்றாட்டும், கிறிஸ்து இயேசுவின் மன்றாட்டும்.

இயேசு தமது எதிரிகளை மன்னித்தார்; அவர்களைக் கடவுளும் மன்னிக்க மன்றாடினார். அவ்வாறே நமக்கும் கற்பித்தார், மத்தேயு 5:43-48; லூக்கா 6:27-28&32-36.

வசனம் 69:22-23
நம்பிக்கையற்ற யூதர்களுக்கு, இவ்வசனங்களைப் பவுலடிகள் எடுத்தாளுகிறார், உரோமையர் 11:9-10

வசனம் 69:25
எருசலேமுக்கு எதிரான தமது புலம்பலில் இயேசு இவ்வாக்கைக் குறிப்பிடுகிறார், மத்தேயு 23:38; லூக்கா 13:35.

காட்டிக் கொடுத்த யூதாசைக் குறித்து, இவ்வசனத்தைப் பேதுரு எடுத்தாளுகிறார், திருத்தூதர் பணிகள் 1:20.

வசனம் 69:26
எசாயாவின் இறைவாக்கு, 53:4-6&10.

வசனம் 69:29
பொய்யான குற்றச்சாட்டுகளைத் தன்மீது புனையும் தன் எதிரிகள் மீது, அவர்கள் இழைத்த குற்றங்களை வெளிக்கொணர தாவீதின் மன்றாட்டு.

வசனம் 69:28
"மெய்வாழ்வுக்கு உரியோரின் அட்டவணை" -
திருவெளிப்பாடு நூலில் (3:5, 20:12&15) குறிப்பிடப்படும் வாழ்வின் நூல் இதுவல்ல.

வசனம் 69:29
"...சிறுமைப்பட்டவன், காயமுற்றவன்" -
விரிவாக, 22:11-21.

வசனம் 69:30-31
புகழ்ச்சியைவிடச் சிறந்த பலி எது? (50:23)

வசனம் 69:32
இணை 22:26.
எளியோர், மத்தேயு 5:3.

வசனம் 69:33
"ஆண்டவர் ஏழைகளின் விண்ணப்பத்திற்குச் செவிசாய்க்கிறார்" -
எளிமையும் தாழ்ச்சியும் உடைய ஏழைகள்; தீய எண்ணமுடைய, தீயோருக்குத் துணை நிற்கும் ஏழைகள் அல்லர்.

"சிறைப்பட்ட தம் மக்களை..." -
பார்க்க, 68:6

வசனம் 69:34
படைப்பின் கடவுளைப் புகழும் படைப்பு, 96:11, 98:7, 148:3-10.

வசனம் 69:35-36
பார்க்க, 25:13, 51:18.

இவ்விரு வசனங்களும், எசேக்கியா அரசரின் காலத்தில் இணைக்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது (2 அரசர்கள் 18 ~ 20; 2 குறிப்பேடு 29 ~ 32).

வசனம் 69:36
கடவுளின் மக்கள், தலைமுறை தலைமுறையாக நாட்டைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்வர். அவர்களுடைய நகர்கள் ஒருபோதும் கைவிடப்பட்ட, வாழத் தகுதியற்ற இடமாக இராது. இவ்வாறு துயருறும் மாந்தரின் எதிர்நோக்கோடு திருப்பாடல் நிறைவடைகிறது.

✝

## 19 திருப்பாடல் 70

(உதவிக்காக வேண்டல்)
(திருப்பாடல் 40:13-17)

*பாடகர் தலைவர்க்கு; நினைவு கூர்தலுக்காகத் தாவீது பாடியது*
1 கடவுளே!
என்னை விடுவித்தருளும்;
ஆண்டவரே!
எனக்கு உதவி செய்ய
விரைந்து வாரும்!
2 என் உயிரைப்
பறிக்கத் தேடுவோர் அனைவரும்
வெட்கமும் குழப்பமும் அடைவராக!
எனக்குத் தீங்கு வருவதை விரும்புவோர்
வெட்கத்தால் தலைகுனிந்து
பின்னிட்டுத் திரும்புவராக!
3 என்னைப் பார்த்து,
'ஆ! ஆ!' என்று ஏளனம் செய்வோர்
பெருங்கலக்கமுற்றுப் பின்னிடுவாராக!
4 உம்மை நாடித் தேடும் அனைவரும்
உம்மில் மகிழ்ந்து களிகூர்வராக!
நீர் அருளும் மீட்பில் நாட்டம் கொள்வோர்
"கடவுள் மாட்சி மிக்கவர்" என்று
எப்போதும் சொல்வர்.
5 நான் சிறுமையுற்றவன், ஏழை;
கடவுளே!
என்னிடம் விரைந்து வாரும்;
நீரே எனக்குத் துணை;
என்னை விடுவிப்பவர்;

என் கடவுளே!
காலந்தாழ்த்தாதேயும்.

திருப்பாடல் 70:1-5

**சிந்தனைக்கு**

திருப்பாடல் 40ன் இறுதி ஐந்து வசனங்கள் தனியொரு திருப்பாடலாக, சில மாறுதல்களுடன் தொகுக்கப்பட்டுள்ளது; வழிபாட்டு முறைமைகளுக்காக அப்படிச் செய்யப்பட்டதா என்று தெரியவில்லை. முதலாம் தொகுதியின் வழக்கப்படி திருப்பாடல் 40:13 மற்றும் 40:16 வசனங்களில் ஆண்டவர் என இருப்பது, இரண்டாம் தொகுதியின் வழக்கப்படி, இத்திருப்பாடலில் "கடவுளே" என்று உள்ளன; 40:17ல் "தலைவர்" (அடோனாய்) என்று இருப்பது, 70:5ல் "கடவுள்" என்று மாற்றப்பட்டுள்ளது. வேறு சில சிறிய மாற்றங்களும் உள்ளன என்றாலும், பொருளில் பெரிய மாறுதல் ஏதுமில்லை. தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது போல, திருப்பாடல் 40:13-17, நினைவுகூரலாக (திருப்பாடல் 38ன் தலைப்பு) மீண்டும் பாடப்பட்டுள்ளது. அதேவேளையில், "விரைந்து வாரும்" (வ.1&5) என்ற அவசர அழைப்பை வலியுறுத்துவது போல, திருப்பாடல் 17:13-17ன் சில சொற்கள் நீக்கப்பட்டுள்ளன.

அமைப்பு:
வ.1, விடுவிக்க மன்றாட்டு
வ.2-3, எதிரிகளுக்கு எதிரான மன்றாட்டு
வ.4, கடவுளை நாடுவோருக்காக மன்றாடல்
வ.5, கடவுள் விரைந்து வர மன்றாட்டு

வசனம் 70:1
"...விடுவித்தருளும்" -
40:13ல், "விடுவிக்க மனமிசைந்தருளும்." விடுவிக்க வேண்டியதன் உடனடித் தேவையை வலியுறுத்துவது போல இந்த மாறுதல் உள்ளது.

வசனம் 70:2-3
அடுத்த திருப்பாடலோடு (குறிப்பாக, 71:10-13) தொடர்புடைய வசனங்கள். தலைப்பற்ற திருப்பாடல் 71, இத்திருப்பாடலோடு இணைந்து இருந்திருக்கலாம் என்றும் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர் (திருப்பாடல்கள் 42 & 43 போலவே).

வசனம் 70:5
சிறுமையுற்றவன், ஏழை என்பதன் அடிப்படையில், திருப்பாடல் 69துடன் (69:29,32&33) தொடர்கிறது.

"விரைந்து வாரும்" மற்றும் "காலம் தாழ்த்தாதேயும்" என்று தனது உடனடித் தேவையை தாவீது வலியுறுத்துகிறார்.

"...என் மீது அக்கறை கொண்டுள்ளார்" - என்று 40:17ல் கூடுதலாக உள்ள சொற்றொடர் இங்கு நீக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சில சொற்கள் 40:13-17 பகுதியிலிருந்து எடுக்கப்பட்டு, இத்திருப்பாடல் அமைக்கப்பட்டுள்ளது. வழிபாட்டில் பாடும் போது, சுருக்கமாக அமைவதற்காக இத்தகைய

மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கலாம். சிறியவனும் எளியவனுமாகிய தனது உயிரை எடுக்கத் தேடுவோரிடமிருந்து காக்க, மாட்சிமை மிக்க கடவுள் தாமதமின்றி விரைந்து வர தாவீது இத்திருப்பாடல் வழியாக வேண்டுகிறார்.

✝

## 19 திருப்பாடல் 71

*(முதியோரின் மன்றாட்டு)*

1 ஆண்டவரே!
உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்;
ஒருபோதும் நான் வெட்கமுற விடாதேயும்.
2 உமது நீதிக்கேற்ப
என்னை விடுவித்தருளும்;
எனக்கு நீர் செவிசாய்த்து
என்னை மீட்டுக் கொள்ளும்.
3 என் அடைக்கலப் பாறையாக
நீர் இருந்தருளும்;
கோட்டை அரணாயிருந்து
என்னை மீட்டருளும்;
ஏனெனில், நீர் எனக்குக்
கற்பாறையாகவும் அரணாகவும் இருக்கின்றீர்.
4 என் கடவுளே,
பொல்லார் கையினின்று
என்னைக் காத்தருளும்;
நெறிகேடும் கொடுமையும் நிறைந்தோர்
பிடியினின்று என்னைக் காத்தருளும்.
5 என் தலைவரே, நீரே என் நம்பிக்கை;
ஆண்டவரே, இளமைமுதல்
நீரே என் நம்பிக்கை.
6 பிறப்பிலிருந்து நான்
உம்மைச் சார்ந்துள்ளேன்;
தாய் வயிற்றிலிருந்து
நீர் என்னைப் பிரித்தெடுத்தீர்;
உம்மையே நான் எப்போதும்
புகழ்ந்து போற்றுவேன்.
7 பலருக்கு நான் ஒரு
புதிராய்க் காணப்படுகின்றேன்;
நீரே எனக்கு உறுதியான அடைக்கலம்.
8 என் நாவில் உள்ளதெல்லாம் உமது புகழே;
நாளெல்லாம் நான் பேசுவது
உமது பெருமையே.
9 முதிர் வயதில் என்னைத் தள்ளிவிடாதேயும்;
என் ஆற்றல் குன்றும் நாளில்
என்னைக் கைவிடாதேயும்.
10 ஏனெனில், என் எதிரிகள் பேசுவதெல்லாம்

என்னைப் பற்றியே;
என் உயிரைப் பறிக்கத் தேடுவோர்
ஒன்றுகூடிச் சதி செய்கின்றனர்;
11 "கடவுள் அவனைக் கைவிட்டு விட்டார்;
அவனைப் பின்தொடர்ந்து பிடியுங்கள்;
அவனைக் காப்பாற்ற ஒருவருமில்லை"
என்று அவர்கள் சொல்கின்றார்கள்.
12 கடவுளே! என்னைவிட்டுத்
தொலைவில் போய்விடாதேயும்;
என் கடவுளே!
எனக்குத் துணை செய்ய விரைந்து வாரும்.
13 என்னைப் பழிப்பவர்கள்
வெட்கி அழிவார்களாக!
எனக்குத் தீங்கு செய்யத் தேடுகிறவர்களை
இழிவும் மானக்கேடும் சூழட்டும்!
14 ஆனால், நான் என்றும்
நம்பிக்கையோடு இருப்பேன்;
மேலும் மேலும் உம்மைப்
புகழ்ந்து கொண்டிருப்பேன்.
15 என் வாய் நாள்தோறும்
உமது நீதியையும்
நீர் அருளும் மீட்பையும் எடுத்துரைக்கும்;
உம் அருட் செயல்களை
என்னால் கணிக்க இயலாது.
16 தலைவராகிய ஆண்டவரே!
உமது வலிமைமிகு
செயல்களை எடுத்துரைப்பேன்;
உமக்கே உரிய
நீதிமுறைமையைப் புகழ்ந்துரைப்பேன்.
17 கடவுளே, என் இளமைமுதல்
எனக்குக் கற்பித்து வந்தீர்;
இனிவரும் நாள்களிலும்
உம் வியத்தகு செயல்களை அறிவிப்பேன்.
18 கடவுளே,
உம் கைவன்மையையும் ஆற்றலையும்
இனிவரும் தலைமுறைக்கு
நான் அறிவிக்குமாறு
வயது முதிர்ந்த, முடி நரைத்துவிட்ட
என்னைக் கைவிடாதேயும்.
19 கடவுளே,
உமது நீதி
வானம் வரைக்கும் எட்டுகின்றது;
மாபெரும் செயல்களை
நீர் செய்திருக்கிறீர்;
கடவுளே, உமக்கு நிகர் யார்?
20 இன்னல்கள் பலவற்றையும் தீங்குகளையும்
நான் காணுமாறு செய்த நீரே,
எனக்கு மீண்டும் உயிரளிப்பீர்;
பாதாளத்தினின்று என்னைத் தூக்கி விடுவீர்.

21 என் மேன்மையைப் பெருகச் செய்து
மீண்டும் என்னைத் தேற்றுவீர்.
22 என் கடவுளே,
நான் வீணையைக் கொண்டு உம்மையும்
உமது உண்மையையும் புகழ்வேன்;
இஸ்ரயேலின் தூயரே,
யாழிசைத்து உம்மைப் புகழ்ந்து பாடுவேன்.
23 நான் உமக்குப் புகழ்பாடுகையில்
என் நா அக்களிக்கும்;
நீர் மீட்டுள்ள என் ஆன்மாவும் அக்களிக்கும்.
24 என் வாழ்நாளெல்லாம் என் நா
உமது நீதியை எடுத்துரைக்கும்.
ஏனெனில் எனக்குத்
தீங்குசெய்யப் பார்த்தவர்கள்
வெட்கமும் மானக்கேடும் அடைந்து விட்டார்கள்.

திருப்பாடல் 71:1-24

**சிந்தனைக்கு**

முந்தைய திருப்பாடல் நினைவு கூர்தலுக்கான திருப்பாடல் என்றால், இத்திருப்பாடல் முதியோரின் மன்றாட்டு; முதியோரின் மன்றாட்டும் நினைவுகூர்தல் தானே! இத்திருப்பாடலுக்குத் தலைப்பு இல்லை என்பதால் முந்தைய திருப்பாடலின் தொடர்ச்சியாக இப்பாடலைக் கருதலாம்.

புகழ்ச்சி, முறையீடும் மன்றாட்டும், புகழ்ச்சியும் நன்றியுரைத்தலும் என்கிற தாவீதிய அடுக்கில் இத்திருப்பாடலும் அமைந்துள்ளது; எனவே தாவீது இப்பாடலை இயற்றி இருக்கலாம் என்கிற கருத்து உள்ளது. எந்தப் பின்னணியில் இத்திருப்பாடல் எழுதப்பட்டது என்று முடிவு செய்ய யாதொரு குறிப்பும் பாடலுள் காணப்படவில்லை. வயது முதிர்ந்தவரின் பாடல் (வ.9&18) என்பதால், அதோனியா அரியணைக்காகச் செய்த கலகத்தின் வேளையில் (1 அரசர்கள் 1:5-10), தாவீது அரசர் பாடிய பாடலாக இருக்கக்கூடும். கைவிடப்பட்ட முதியவரின் அங்கலாய்ப்பாக இல்லாமல், வாழ்வின் அனுபவங்களின் அடிப்படையில் ஒருவர் பெற்ற இறை நம்பிக்கையையும் எதிர்நோக்கையும் வெளிப்படுத்துவதாக இத்திருப்பாடல் உள்ளது.

திருப்பாடல் 70 எப்படித் திருப்பாடல் 40:13-17ன் பிரதிபலிப்பாக உள்ளதோ அதுபோலவே, இத்திருப்பாடல் வேறு சில திருப்பாடல்களின் வசனங்களை எதிரொளிப்பதாக அமைந்துள்ளது. அவற்றை வசனக் குறிப்புகளில் காணலாம்.

அமைப்பு:
வ.1-3, நம்பிக்கையும் மன்றாட்டும்
வ.4-13, முதுமையின் இன்றைய சிக்கலுக்கு நடுவே நிழலாடும் கடந்த கால நினைவலைகள்
வ.14-24, முதிர் வயதிலும் வெற்றி தரும் பற்றுறுதி

திருப்பாடலின் சிறப்பான பாடுபொருள், கடவுளின் நீதி (வ.2, 15, 16, 19 & 24).

எப்போதும், வ.6; நாளெல்லாம், வ.8; என்றும், வ.14; நாள்தோறும், வ.15; வாழ்நாளெல்லாம், வ.24 - இவ்வாறு இடைவிடாமல் தான் கடவுளின் பெருமைகளையே எடுத்துரைப்பதாகத் திருப்பாடகர் உரைக்கிறார்.

வசனம் 71:1-3
இணை, 31:1-3.
பாதுகாப்பையும், வெற்றியையும், விடுதலை வாழ்வையும் அருளுவது, நம்மைப் படைத்தவராகிய கடவுள் மீது நாம் வைக்கும் நம்பிக்கையே. இதுவே திருப்பாடகரின் அறிக்கை.

வசனம் 71:3
"பாறை" -
உயிர்ப்பிக்கும் பாறை, எண்ணிக்கை 20:8. மோசேயின் பாடலின் கருப்பொருள் பாறை, இணைச் சட்டம் 34. பழைய ஏற்பாட்டில், கடவுளின் வலிமை, ஆற்றல், பாதுகாப்பு, அடைக்கலம், மறைவிடம், அசையா உறுதி, இறைப் பற்றின் அடித்தளம் - என்ற பொருள்களில் "பாறை" குறிப்பிடப்படுகிறது. குறிப்பாக, திருப்பாடல் நூலில், கடவுளாகிய ஆண்டவரின் திருப்பெயராகப் பாறை விளங்குகிறது. வலிமையாக (62:7), புகலிடமாக (94:22), மீட்பாக (89:26, 95:1) கடவுளைக் குறிப்பதாகப் "பாறை" இலங்குகிறது. புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவே "பாறை" என்று அழைக்கப்படுகிறார் (அடிக்கப்பட்ட பாறை, 1 கொரிந்தியர் 10:4, விடுதலைப் பயணம் 17:6ன் அடிப்படையில்).

வசனம் 71:4
இறைவழி நடக்கும் நேரியோருக்கு எதிராக எப்போதும் செயல்படும் பொல்லாரிடமிருந்து பாதுகாக்க மன்றாட்டு, பார்க்க: 17:13, 22:20, 35:17, 59:2, 140:1&4.

வசனம் 71:5-6
இணை, 22:9-10.

வசனம் 71:5
"நீரே என் நம்பிக்கை" -
39:7, 146:5; எரேமியா 17:7&13.
கடவுள் மட்டுமே தன் நம்பிக்கை என்பதை உறுதியோடு அறிக்கையிடும் திருப்பாடகர்; வ.14ம் குறிப்பிடத்தக்கது.

வசனம் 71:6
"பிறப்பிலிருந்து ... தாய் வயிற்றிலிருந்து..." -
பார்க்க 22:10; எசாயா 46:3; எரேமியா 1:5.

தாய் வயிற்றில் இருக்கும் போதே தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டவராக திருமுழுக்கினர் யோவான், லூக்கா 1:13.

வசனம் 71:7-13
கடவுளுக்கும் தனக்கும் உள்ள ஐக்கியத்தில் திளைக்கும் முதியவர் ஒருவரின் உணர்ச்சிக் குவியலின் உச்சம். நினைவு தெரிந்த நாள் முதல், கடவுளின் கிருபையைக் கண்டு களிகூரும் ஒருவரின் பாடல்.

*இறையடியாருக்கும் கடவுளுக்கும் இடையே உள்ள நல்லுறவு, ஏனைய மனிதர்களால் புரிந்து கொள்ள முடியாதது; அதிலும், இறையடியாரின் எதிரிகளோ அதனைத் தவறாகப் புரிந்துகொள்வர். இந்த உண்மை நிலையை, இங்கு திருப்பாடகர் வெளிப்படுத்துகிறார்.*

வசனம் 71:9
மேலும், வ.18.
*சிறுவயது முதல் காக்கும் கடவுள், முதிர் வயதில் காப்பாரோ என்னும் ஐயமோ அச்சமோ தேவையில்லை; ஏனெனில் இறைமக்களுக்குக் கடவுள் அருளிய இறைவாக்கு அவரது பாதுகாப்பு, எசாயா* 46:3-4.

வசனம் 71:11
*பார்க்க,* 3:2, 31:13, 56:5-6, 83:2-3.

வசனம் 71:12
"… தொலைவில் போய்விடாதேயும் ... துணை செய்ய விரைந்து வாரும்" -
*பார்க்க,* 10:1, 22:11, 35:22, 38:21-22, 40:13, 70:1,5.

வசனம் 71:13
*எதிரிகளின் தலைக்குனிவு, பார்க்க* 35:4, 40:14, 70:2.

வசனம் 71:14-16
*எண்ணிலடங்கா ஆசிகள், ஆற்றல்மிகு அருஞ்செயல்கள் - அதனால் தளராத நம்பிக்கையோடு இடைவிடாத நன்றிப்பலிகள்.*

வசனம் 71:17-18
*கற்பிப்பவர் கடவுளே எனில் அது அளப்பரிய பேறு! படைத்தவரைத் தன் இளமைப் பருவத்தில் தனது குருவாகக் கொண்டவனின் ஞானம் எவ்வளவு சிறப்பாக இருக்கும்!*
*கடவுள் அன்றோ திருப்பாடகருக்குக் கற்பிப்பவர்!*
(25:4-5, 119:102)
*அன்றைக்கு மட்டுமல்லாமல், நமக்கும் நமது தலைமுறையினருக்கும் கற்றுத் தருபவர் கடவுளே அன்றோ!*
(*எசாயா* 54:13; *யோவான்* 6:45)
*கடவுள் கற்றுத் தருபவர் மட்டுமல்ல; ஏற்ற வேளையில் அவற்றை நினைவூட்டுபவர்.*
(*யோவான்* 14:26)

*கடவுளிடம் கற்றுக் கொள்ள விரும்புவோர் முழங்காலில் நிற்க வேண்டும்; கிரமமாக பைபிளை ஆர்வத்துடன் வாசிக்க வேண்டும். நமது முதலாம் முழங்கால் போர், இறைவார்த்தைகளைப் புரிந்து கொள்வதற்காக இருக்க வேண்டும்.*

வசனம் 71:19
"...உமது நீதி ... மாபெரும் செயல்கள் ... உமக்கு நிகர்..." -
*பார்க்க,* 35:10; *இணைச் சட்டம்* 3:24; *எசாயா* 40:18-26; *மீக்கா* 7:18.

வசனம் 71:20-21
*கடவுள்தம் பிள்ளைகளின் வாழ்வில், இன்னல்களும் தீங்குகளும் நேரிட அனுமதிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் நமக்கு இருக்கும் உறுதிப்பாடு அவை அனைத்திலிருந்தும் கடவுளுக்கு மேன்மை உண்டாக நாம் மீட்கப்படுவோம் என்பதே! இந்தப் புரிதலை அனுபவித்து உணர்ந்த, முதிர் வயதினரான திருப்பாடகர், தமது எதிர்நோக்கை இங்கு வெளிப்படுத்துகிறார்.*

வசனம் 71:22-23
இசைத்துப் பாடித் துதித்தலின் களிப்பு!
கடவுள் அருளிய நன்மைகளுக்குள் மூழ்கித் திளைக்கும் மனம் மகிழ்ச்சியோடு நன்றிப்பலி செலுத்தும் தருணம்!

வசனம் 71:22
"இஸ்ரயேலின் தூயர்" -
பார்க்க, 78:41, 89:18. இந்தத் திருப்பெயர் எசாயா நூலில் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வசனம் 71:24
பார்க்க, 35:28
மேலும், வ.13ன் வேண்டுதலுக்கான மறுமொழியாக இவ்வசனம் அமைந்துள்ளது. "...வெட்கமுற விடாதேயும்" என்று தொடங்கும் திருப்பாடல், எதிரிகளின் வெட்கமுறுதலில் முடிவடைகிறது. கடவுளின் பிள்ளைகளுக்கு எவரும் ஒருபோதும் வெட்கத்தைப் பரிசளிக்க முடியாதே!

✝

## 19 திருப்பாடல் 72

*அரசருக்காக மன்றாடல்; சாலமோனுக்குரியது*
1 கடவுளே,
அரசருக்கு உமது நீதித்தீர்ப்பை
வழங்கும் ஆற்றலை அளியும்;
அரச மைந்தரிடம்
உமது நீதி விளங்கச் செய்யும்.
2 அவர் உம் மக்களை நீதியோடு ஆள்வாராக!
உம்முடையவரான எளியோர்க்கு
நீதித்தீர்ப்பு வழங்குவாராக!
3 மலைகள் மக்களுக்குச்
சமாதானத்தைக் கொடுக்கட்டும்;
குன்றுகள் நீதியை விளைவிக்கட்டும்.
4 எளியோரின் மக்களுக்கு
அவர் நீதி வழங்குவாராக!
ஏழைகளின் பிள்ளைகளைக் காப்பாராக;
பிறரை ஒடுக்குவோரை
நொறுக்கி விடுவாராக!
5 கதிரவனும் நிலாவும் உள்ளவரையில்,
உம் மக்கள் தலைமுறை தலைமுறையாக
உமக்கு அஞ்சி நடப்பார்களாக.
6 அவர் புல்வெளியில் பெய்யும்
தூறலைப்போல் இருப்பாராக;
நிலத்தில் பொழியும்
மழையைப் போல் விளங்குவாராக.
7 அவர் காலத்தில்
நீதி தழைத்தோங்குவதாக;

நிலா உள்ள வரையில்
மிகுந்த சமாதானம் நிலவுவதாக.
8 ஒரு கடலிலிருந்து அடுத்த கடல்வரைக்கும்
அவர் ஆட்சி செலுத்துவார்;
பேராற்றிலிருந்து
உலகின் எல்லை வரைக்கும்
அவர் அரசாள்வார்.
9 பாலைவெளி வாழ்வோர்
அவர்முன் குனிந்து வணங்குவர்;
அவர் எதிரிகள் மண்ணை நக்குவார்கள்.
10 தர்சீசு அரசர்களும்
தீவுகளின் அரசர்களும்
காணிக்கைகளைக் கொண்டு வருவார்கள்;
சேபாவிலும் செபாவிலுமுள்ள அரசர்கள்
நன்கொடைகளைக் கொண்டுவருவார்கள்.
11 எல்லா அரசர்களும்
அவர்முன் தரைமட்டும்
தாழ்ந்து வணங்குவார்கள்;
எல்லா இனத்தவரும்
அவருக்கு ஊழியம் செய்வார்கள்.
12 தம்மை நோக்கி மன்றாடும்
ஏழைகளையும் திக்கற்ற எளியோரையும்
அவர் விடுவிப்பார்.
13 வறியோர்க்கும் ஏழைகட்கும்
அவர் இரக்கம் காட்டுவார்;
ஏழைகளின் உயிரைக் காப்பாற்றுவார்.
14 அவர்கள் உயிரைக்
கொடுமையினின்றும் வன்முறையினின்றும்
விடுவிப்பார்;
அவர்கள் இரத்தம்
அவர் பார்வையில் விலைமதிப்பற்றது.
15 அவர் நீடுழி வாழ்க!
சேபாவின் பொன்
அவருக்குக் கொடுக்கப்படும்;
அவருக்காக இடையறாது
வேண்டுதல் செய்யப்படுவதாக!
அவர்மீது ஆசிகள் வழங்கப்பெறுமாறு
நாள் முழுதும் மன்றாடப்படுவதாக!
16 நாட்டில் தானியம் மிகுந்திடுக!
மலைகளின் உச்சிகளில்
பயிர்கள் அசைந்தாடுக!
லெபனோனைப்போல்
அவை பயன் தருக!
வயல்வெளிப் புல்லென
நகரின் மக்கள் பூத்துக் குலுங்குக!
17 அவர் பெயர்
என்றென்றும் நிலைத்திருப்பதாக!
கதிரவன் உள்ளவரையில்
அவர் பெயர் நிலைப்பதாக!
அவர்மூலம் மனிதர் ஆசிபெற விழைவராக!

எல்லா நாட்டினரும் அவரை
நற்பேறு பெற்றவரென வாழ்த்துவராக!
18 ஆண்டவராகிய கடவுள்,
இஸ்ரயேலின் கடவுள் போற்றி! போற்றி!
அவர் ஒருவரே
வியத்தகு செயல்களைப் புரிகின்றார்!
19 மாட்சி பொருந்திய அவரது பெயர்
என்றென்றும் புகழப்பெறுவதாக!
அவரது மாட்சி
உலகெல்லாம் நிறைந்திருப்பதாக!
ஆமென், ஆமென்.
20 (ஈசாயின் மகனாகிய
தாவீதின் மன்றாட்டுகள் நிறைவுற்றன.)

திருப்பாடல் 72:1-20

**சிந்தனைக்கு**

சாலமோனுக்கு உரியது (OV, சாலொமோனைப் பற்றிய சங்கீதம்) - இந்தத் தலைப்பு உணர்த்துவது, சாலமோன் அரசரானதைக் குறித்து வேறு ஒருவர் (வ.1) எழுதிய திருப்பாடல் என்பது. அவ்வாறு எழுதியவர் தாவீதா (1 அரசர்கள் 2:1-9 பகுதிக்குப் பிறகு) அல்லது வேறு ஒருவரா (1 அரசர்கள் 1:47 குறிப்பிடுவோரில் ஒருவர்) என்பது குறித்துக் கேள்விகள் உள்ளன. இரண்டாம் தொகுப்பின் இறுதி வசனம், "ஆமென் ஆமென்" என்று முடியும் வ.19 (மேலும் பார்க்க, 41:13, 89:52, 106:48). பிற்காலத்தில் திருப்பாடலைத் தொகுத்தவர் சேர்த்த கூடுதல் குறிப்பே வ.20 என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து. இத்தொகுப்பில் வேறு சிலர் எழுதிய திருப்பாடல்களும் உள்ளன என்றாலும், மன்றாட்டு என்ற அளவில் தாவீதே இத்திருப்பாடலை எழுதியவர் என்பதை இந்த வசனத்தின் அடிப்படையில் சொல்லலாம்.

இத்திருப்பாடல் மேசியாவின் திருப்பாடலா என்பதில் கேள்வி எழுப்புவோர் உளர். யூதர்களின் எபிரேய பைபிளின் அரமேய மொழிபெயர்ப்பான Targum (கி. பி. முதல் மூன்று நூற்றாண்டுகளுக்குள் எழுதப்பட்டவை), இத்திருப்பாடலின் முதலாம் வசனத்தில் வரும் அரசர் என்பதை, மேசியாவாகிய அரசர் என்றே சொல்கிறது! அதே காலத்திய கிறிஸ்தவ அறிஞர்களும் இத்திருப்பாடல் மேசியாவின் திருப்பாடல் என்றே அழைத்தனர். 'யூதாவை விட்டுச் செங்கோல் நீங்குவதில்லை' மற்றும் 'தாவீதின் அரியணை என்றுமே நிலைத்திருக்கும்' போன்ற இறையாசிகள் (தொடக்க நூல் 49:10; 2 சாமுவேல் 7:16), மேசியாவை யூதா வழியில் வரும் அரசர் என்றே உறுதிப்படுத்துகின்றன. திருப்பாடல்கள் 2 மற்றும் 110 போல, இத்திருப்பாடல் வரலாற்று அடிப்படையில் சாலமோனுக்கும் பின்னர் அவர் வழிமரபில் அரியணை ஏறிய அனைவருக்கும் பாடப்பட்டு வந்தாலும், அதே வழியில் அரசராக வரவிருக்கும் மேசியாவுக்கு உரியது இத்திருப்பாடல் என்றே சொல்லலாம்.

நேர்மையான நீதியையும் (வ.2), எளிய, ஒடுக்கப்பட்ட, துயருற்ற மக்களுக்குப் பாதுகாப்பையும் (வ.4,12-14) அரசரிடமிருந்து எதிர்பார்க்கும் திருப்பாடகர், கதிரவனும் நிலவும் உள்ளவரை அழியாப் புகழையும் நீண்ட வாழ்க்கையையும் (வ.5,15,17), அகண்ட ஆட்சிப் பரப்பையும் (வ.8), பணிந்து வணங்கும் மன்னர்களையும் (வ.10) தன் அரசர் பெற்று விளங்க வேண்டுகிறார்.

தமக்கு மகனாக இருப்பான் என்று கடவுளால் சொல்லப்பட்ட (2 சாமுவேல் 7:14) சாலமோன், பல நூறு பாடல்களை எழுதியதாகக் கூறப்பட்டாலும் (1 அரசர்கள் 4:29-34), திருப்பாடல்களில் அவருடைய பெயர் குறிப்பிடப்பட்டுள்ள திருப்பாடல்கள் 72ம், 127ம் மட்டுமே ஆகும்.
🕎

அமைப்பு:
மேசியாவின் திருப்பாடலாக:
வ.1-7, ஆண்டவரின் ஆளுகையில் நீதியும் சமாதானமும்
வ.8-11, பூவுலகெங்கும் பரந்து விரிந்த அரசாட்சி
வ.12-14, ஒடுக்கப்பட்டோருக்கு அருளும் ஆண்டவர்
வ.15-19, ஆண்டவரின் அரசாட்சியில் வளமையும் செழிப்பும்
🕎

வசனம் 72:1-4
பார்க்க, சாலமோனின் மன்றாட்டு, 1 அரசர்கள் 3:6-9. ஒப்பிடுக, எசாயா 11:1-9.

வசனம் 72:1
"நீதித் தீர்ப்பை வழங்கும் ஆற்றல்" -
இஸ்ரயேலின் ஆட்சி, இறையாட்சி; கடவுள் அமர்த்திய ஆளுநரே அரசர். அவர் கடவுள் அருளிய நீதிச் சட்டங்களின் வழியில் ஆளுகை செய்ய வேண்டும் (இணைச் சட்டம் 17:14-20). இதற்கு மாறாக ஆட்சி செய்தோரைக் குறித்த எச்சரிக்கையை எரேமியா (22:3&15-16) விடுத்தார்.

இங்கு தாவீது மன்றாடியது போன்றே சாலமோனும் மன்றாட, கடவுள் சாலமோனுக்கு நேர்மையாக நீதி வழங்கும் ஞானத்தை அருளினார் (1 அரசர்கள் 3:5-14).

வசனம் 72:2
நீதியோடு ஆளும் சாலமோன், நிறைவேறிய மன்றாட்டு, 1 அரசர்கள் 3:28. மேலும் நீதிமொழிகள் 16:13

இறையாட்சியின் இறைவாக்காக, எசாயா 9:7, 11:2-5, 32:1; எரேமியா 33:15.

வசனம் 72:3
மேலும், வ.7
தனது பெயரிலேயே 'சமாதானம்' உடையவர் சாலமோன். நீதியின் விளைவே சமாதானம், எசாயா 32:17.

மேசியாவின் ஆட்சியில் சமாதானம், எசாயா 2:4, 9:5-6; மீக்கா 4:3-4.

வசனம் 72:5-7
மேசியாவின் ஆளுகைக்கே பொருந்தும் திருமொழிகள்.

வசனம் 72:8-11
"ஒரு கடலிலிருந்து அடுத்த கடல் வரை..." -
பார்க்க 1 அரசர்கள் 4:24.
இஸ்ரயேல் நிலப்பரப்பு, மத்திய தரைக்கடல் தொடங்கி, செங்கடல் வரை விரிந்தது.

ஆயினும், மேற்சொன்ன நிலப்பரப்பு சிறியதே. பேராற்றிலிருந்து என்பது யூப்ரடீஸ் ஆற்றைக் குறிக்கும்; அங்கிருந்து உலகின் எல்லைவரை என்பது நிச்சயம் எந்தவொரு பேரரசையும் குறிப்பது அல்ல. அத்தகைய பேரரசு, சாலமோனிலும் பெரியவருக்கே உரியது.

வசனம் 72:10
சேபாவிலிருந்து... நன்கொடை -
பார்க்க 1 அரசர்கள் 10:1-2.

வசனம் 72:11
எல்லா நாடுகளும் அவற்றை ஆள்வோரும் மேசியாவாகிய அரசருக்கு அடிபணிய வேண்டும் (2:10-11; 1 கொரிந்தியர் 15:25). அதுவரை அவர்தம் மாட்சியை மக்களினங்கள் அனைத்திற்கும் அறிவிக்க வேண்டும் (96:1-3). அதற்கு நமது பங்களிப்பு என்ன?

வசனம் 72:12-14
ஒடுக்கப்பட்டோருக்கு நீதி அருளும் கடவுள் (10:14&17, 68:5).

விளிம்பு நிலை மக்களுக்காகக் கடவுள் இவ்வளவு ஆழமான அன்பை, கரிசனையை வெளிப்படுத்துகிறார். அவர்களின் வாழ்க்கை மேம்பட நமது பங்களிப்பு என்ன?

வசனம் 72:15-17
வாழ்வு / உயிர்ப்பு மேசியாவுக்கே உரியது (16:10-11, 91:16, 118:17-18). என்றென்றைக்கும் வாழ்பவர் மட்டுமல்லாமல், வாழ்வை அருள்பவரும் அவரே, யோவான் 11:25.

வசனம் 72:17
"அவர் பெயர் என்றென்றைக்கும் நிலைத்திருப்பதாக" -
பார்க்க, பிலிப்பியர் 2:9-10.

"எல்லா நாட்டினரும்..." -
ஆபிரகாமிய இறைவாக்கின் நிறைவேறுதல், தொடக்க நூல் 12:2-3, 18:18, 22:18, 26:4, 28:14.

வசனம் 72:20
தாவீதியத் திருப்பாடல்கள் முடிந்ததாக இங்குக் குறிப்பிடப்படவில்லை; அவருடைய வாழ்க்கையின் துயர்மிகு வேளைகளில் அவர் பாடிய மன்றாட்டுத் திருப்பாடல்களின் தொகுப்பு முடிவடைந்தது என்றே பொருள் கொள்ள வேண்டும். அரசராக இருந்த போதிலும், கடவுளின் ஊழியராகவே வாழ்ந்த தாவீதின் திருப்பாடல்கள் இனிவரும் தொகுப்புகளிலும் தொடர்கின்றன.

✝

# தொகுதி 3

**(திருப்பாடல் 73 முதல் திருப்பாடல் 89 முடிய)**

## 19 திருப்பாடல் 73

(கடவுளின் நீதிமுறை)

*ஆசாபின் புகழ்ப்பா*
1 உண்மையாகவே, இஸ்ரயேலர்க்குக்
கடவுள் எவ்வளவு நல்லவர்!
தூய உள்ளத்தினர்க்கு
ஆண்டவர் எவ்வளவோ நல்லவர்!
2 என் கால்கள்
சற்றே நிலைதடுமாறலாயின;
நான் அடிசறுக்கி விழப்போனேன்.
3 ஆணவம் கொண்டோர்மேல்
நான் பொறாமை கொண்டேன்;
பொல்லாரின் வளமிகு வாழ்வை
நான் கண்டேன்.
4 அவர்களுக்குச் சாவின் வேதனை
என்பதே இல்லை;
அவர்களது உடல்,
நலமும் உரமும் கொண்டது.
5 மனிதப் பிறவிகளுக்குள்ள வருத்தம்
அவர்களுக்கு இல்லை.
மற்ற மனிதர்களைப் போல்
அவர்கள் துன்புறுவதில்லை.
6 எனவே, மணிமாலைபோல்
செருக்கு அவர்களை அணி செய்கிறது;
வன்செயல் அவர்களை
ஆடைபோல மூடிக்கொள்கிறது.
7 அவர்களின் கண்கள்
கொழுப்பு மிகுதியால் புடைத்திருக்கின்றன;
அவர்களது மனத்தின் கற்பனைகள்
எல்லை கடந்து செல்கின்றன.
8 பிறரை எள்ளி நகையாடி
வஞ்சகமாய்ப் பேசுகின்றனர்;
இறுமாப்புக்கொண்டு
கொடுமை செய்யத் திட்டமிடுகின்றனர்.
9 விண்ணுலகை எதிர்த்து
அவர்கள் வாய் பேசுகின்றது;
மண்ணுலகமெங்கும் அவர்கள் சொல்
விரிந்து பரவுகின்றது.
10 ஆதலால், கடவுளின் மக்களும்
அவர்களைப் புகழ்ந்து பின்பற்றுகின்றனர்;
இவ்வாறு, கடல் முழுவதையும்
உறிஞ்சிக் குடித்துவிட்டார்கள்.
11 'இறைவனுக்கு எப்படித் தெரியும்?
உன்னதர்க்கு அறிவு இருக்கிறதா?'
என்கின்றார்கள்.
12 ஆம்; பொல்லார்

இப்படித்தான் இருக்கின்றனர்;
என்றும் வளமுடன் வாழ்ந்து
செல்வத்தைப் பெருக்கிக்கொள்கின்றனர்.
13 அப்படியானால், நான் என் உள்ளத்தை
மாசற்றதாய் வைத்துக் கொண்டது வீண்தானா?
குற்றமற்ற நான் என் கைகளைக்
கழுவிக்கொண்டதும் வீண்தானா?
14 நாள்தோறும் நான் வதைக்கப்படுகின்றேன்;
காலைதோறும் கண்டிப்புக்கு ஆளாகின்றேன்.
15 "நானும் அவர்களைப்போல் பேசலாமே"
என்று நான் நினைத்திருந்தால்,
உம் மக்களின் தலைமுறைக்கு
நம்பிக்கைத் துரோகம் செய்தவனாவேன்.
16 ஆகவே, இதன் உண்மை என்னவென்று
கண்டறிய முயன்றேன்;
ஆனால், அது பெரிய புதிராயிருந்தது.
17 நான் இறைவனின் தூயகத்திற்குச்
சென்றபின்புதான்
அவர்களுக்கு நேரிடப்போவது என்ன
என்பதை உணர்ந்துகொண்டேன்.
18 உண்மையில் அவர்களை நீர்
சறுக்கலான இடங்களில் வைப்பீர்;
அவர்களை விழத்தாட்டி
அழிவுக்கு உள்ளாக்குவீர்.
19 அவர்கள் எவ்வளவு விரைவில்
ஒழிந்து போகிறார்கள்!
அவர்கள் திகில் பிடித்தவர்களாய்
அடியோடு அழிந்து போகிறார்கள்!
20 விழித்தெழுவோரின் கனவுபோல்
அவர்கள் ஒழிந்து போவார்கள்;
என் தலைவராகிய ஆண்டவரே,
நீர் கிளர்ந்தெழும்போது
அவர்கள் போலித்தனத்தை இகழ்வீர்.
21 என் உள்ளம் கசந்தது;
என் உணர்ச்சிகள்
என்னை ஊடுருவிக் குத்தின.
22 அப்பொழுது நான்
அறிவிழந்த மதிகேடனானேன்;
உமது முன்னிலையில்
ஒரு விலங்கு போல நடந்து கொண்டேன்.
23 ஆனாலும், நான் எப்போதும்
உமது முன்னிலையிலேதான் இருக்கின்றேன்;
என் வலக்கையை ஆதரவாய்ப் பிடித்துள்ளீர்.
24 உமது திருவுளப்படியே
என்னை நடத்துகின்றீர்;
முடிவில் மாட்சியோடு
என்னை எடுத்துக் கொள்வீர்.
25 விண்ணுலகில் உம்மையன்றி
எனக்கிருப்பவர் யார்?

மண்ணுலகில் வேறுவிருப்பம்
உம்மையன்றி எனக்கேதுமில்லை.
26 எனது உடலும் உள்ளமும்
நைந்து போயின;
கடவுளே என் உள்ளத்திற்கு அரணும்
என்றென்றும் எனக்குரிய பங்கும் ஆவார்.
27 உண்மையிலேயே, உமக்குத்
தொலைவாய் இருப்பவர்கள் அழிவார்கள்;
உம்மைக் கைவிடும்
அனைவரையும் அழித்துவிடும்.
28 நானோ கடவுளின் அண்மையே
எனக்கு நலமெனக் கொள்வேன்;
என் தலைவராகிய ஆண்டவரை
என் அடைக்கலமாய்க் கொண்டு
அவர்தம் செயல்களை எடுத்துரைப்பேன்.

திருப்பாடல் 73:1-28

**சிந்தனைக்கு**

திருப்பாடல்கள் நூலின் மூன்றாம் தொகுப்பு, 73 தொடங்கி 89 முடிய உள்ள, 17 திருப்பாடல்கள். இவற்றுள் ஆசாப் எழுதியவை, 11; கோராகியர், 3; தாவீது, 1; ஏமான், 1; ஏத்தான், 1. 🕎

திருப்பாடல்கள் 37 மற்றும் 49ல் சொல்லப்பட்டுள்ள வாழ்க்கைச் சிக்கலே இத்திருப்பாடலின் கருப்பொருள்: பொல்லாரின் செழிப்பான வாழ்க்கை! (ஒப்பிடுக, 37:1, 49:16 & 73:3). சிக்கலுக்குத் தீர்வு என்று இம்மூன்று திருப்பாடல்களும் ஒரே தீர்வையே சுட்டுகின்றன: அது சடுதியில் நிகழும் பொல்லாரின் அழிவு (37:2&10, 49:12-14, 73:18-20); அதேவேளையில், கடவுளாகிய ஆண்டவர் நல்லவர் (34:8, 73:1, மேலும் பல) என்பதை நாம் அறிவோம்; நல்லோருக்கும் தீயோருக்கும் அவர் நல்லவர் (145:9; மத்தேயு 5:45); தீயோர் தங்கள் பொல்லாத வழிகளை விட்டு விலகி, மனம் திருந்தி, தம்மிடம் வந்து சேர, கடவுள் நீடிய பொறுமையோடு, அவர்களுக்கும் நல்லவராகவே இருக்கிறார் (உரோமையர் 2:4; 2 பேதுரு 3:9).

மூன்று திருப்பாடல்களும் வெவ்வேறு அடியார்களால், வெவ்வேறு மொழி நடையில், வெவ்வேறு பார்வையில் எழுதப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இம்மூன்று திருப்பாடல்களையும் ஒருசேர வாசித்து ஆண்டவரின் கிருபையைப் போற்றுவோம்! 🕎

கதை போன்ற நடையில் ஒரு ஞானப் பாடலான திருப்பாடல் 73 தொடங்கி, 11 பாடல்களை எழுதியவர், இசைஞரும், பாடகரும், இறைவாக்கினருமான ஆசாப்; அதோடு இரண்டாம் தொகுதியில், திருப்பாடல் 50ம் அவர் இயற்றியதே; அவரைப் பற்றிய அறிமுகக் குறிப்பு, திருப்பாடல் 50 முன்னுரையில்.
🕎

அமைப்பு:
வ.1-14, பொல்லாரின் செழிப்பில் அதிர்ச்சியடைந்த திருப்பாடகர்
வ.15-28, கடவுளின் இல்லத்தில் தெளிவு பெற்ற திருப்பாடகர்
🕎

வசனம் 73:1-3

*இஸ்ரயேலின் தூய உள்ளத்தோர்க்கு ஆண்டவர் நல்லவர்; ஆனால் ஆசாபின் தூய உள்ளத்திலோ தடுமாற்றம்! அதற்குக் காரணம், அவருள் ஏற்பட்ட பொறாமை!*
*கடவுளோடு இணைந்த வாழ்க்கையில், நமது கால்களை மட்டுமல்ல* (66:9), *நமது எண்ணங்களையும் தள்ளாட்டம் இன்றிக் காக்க வல்லவர் கடவுள்* (19:9-11).

வசனம் 73:4-9

*இவ்வுலக வாழ்க்கையில், திருப்பாடகரால் நேர்த்தியாக வருணிக்கப்பட்ட பொல்லாரின் செழிப்பும் பெருமைகளும். லேவியரும், கடவுளே அல்லாமல் வேறு சொத்துகள் ஏதுமற்ற* (இணைச் சட்டம் 10:9, 18:1-2), *இறைமக்களின் பலிகளைப் பெற்று வாழும் திருப்பாடகர், செழிப்பான பொல்லாரோடு தன்னை ஒப்பிட்டுப் பார்க்கிறார்* (வ.13-14). *அதுவே அவருடைய உள்ளத்தில் பொறாமையை ஏற்படுத்தியது.*

*இன்றைக்கு ஆண்டவரின் அழைப்பைப் பெற்று இறை ஊழியத்தில் தங்களை இணைத்துக் கொண்ட எவருக்கும் ஆசாப் ஒரு முன்மாதிரி; கடவுளின் இல்லத்தில் தன்னைத் திடப்படுத்திக் கொண்ட ஆசாப் போல, இறைவார்த்தையில் பலப்படுவோம்!*

*பொறாமை, பார்க்க, யோபு* 5:2; *நீதிமொழிகள்* 14:30, 27:4; *யாக்கோபு* 3:14-16.

வசனம் 73:6

"*மணிமாலை*" -
*சமுதாயத்தில் முதன்மையான நிலைக்கும், உயர் அதிகாரத்திற்கும் அடையாளம், தானியேல்* 5:29.

வசனம் 73:7

"...*மனத்தின் கற்பனைகள் எல்லை கடந்து செல்கின்றன*" -
*ஆடம்பர வாழ்க்கையை எப்படி வாழவேண்டும் என்பதில் எல்லை மீறிச் செயல்படும் திட்டங்கள்; பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்த வளர்ப்பு மகன் ஒருவரின் திருமணம்; வார்ப்புச் சிலைகள், விலையுயர்ந்த ஆடைகள், அணிகலன்கள், பல கோடி மக்கள் இரவு உணவின்றி உறங்கச் செல்லும் நாட்டில், பல ஆயிரம் கோடி ரூபாயில் தனி சொகுசு விமானங்கள், கோடிக் கணக்கான மக்கள் தெருவில் தூங்கும் நாட்டிற்கு, பல்லாயிரம் கோடி ரூபாயில் புதிய நாடாளுமன்றக் கட்டடம் - இப்படி நிறையச் சொல்லலாம்.*

வசனம் 73:9

"*மண்ணுலகமெங்கும் அவர்கள் சொல் விரிந்து பரவுகின்றது*" -
*வஞ்சனையான திட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்த, இனிமையான சொற்களால் அவற்றை உலகின் எல்லைகள் எங்கும் தீயோர் பரப்புகிறார்கள்.*

வசனம் 73:10

*செழிப்பான வாழ்க்கை வாழும் தீயோரைப் பின்பற்றும் கடவுளின் மக்கள்.*
*இன்றைக்கும் திருச்சபை மக்களின் நாட்டம், செல்வம் சேர்ப்பதில் தானே இருக்கிறது. குறுக்கு வழியில் குறைந்த காலத்தில் செல்வம் சேர்க்கும் வணிகர்கள், அரசு அலுவலர்கள், இன்னும் இப்படிப்பட்டோர் நம்மிடையே இருக்கிறார்களே! பிடிபடும் போது எல்லாரும் எள்ளி நகைக்கிறார்களே! ஆண்டவரின் திருப்பெயர் அல்லவா இவர்களால் களங்கப்படுகிறது!*

"*கடல் முழுவதையும் உறிஞ்சிக் குடித்து விட்டார்கள்*" -
*சமுதாயத்திற்குரிய அனைத்து வளங்களையும், தீயோர் சிலர் தங்களுடையதாக்கிக் கொண்டு விட்டார்கள் என்பதை நயம்படத் திருப்பாடகர் உரைக்கிறார்.*

வசனம் 73:11
"இறைவனுக்கு எப்படித் தெரியும்? உன்னதர்க்கு அறிவு இருக்கிறதா?" -
பார்க்க, 10:11, 14:1; எசாயா 29:15; எசேக்கியேல் 8:12.

தீயோர் மட்டுமல்லாமல், செல்வம் சேர்க்கும் ஆர்வத்தில் திருச்சபை மக்களில் சிலரும் இவ்வாறுதானே எண்ணுகிறார்கள்!

எச்சரிக்கை: கடவுள் அனைத்தையும் கவனித்துக் கொண்டிருக்கிறார், 44:21, 139:1-12; ஒசேயா 7:2; எபிரேயர் 4:13.

வசனம் 73:13-14
நேரிய உள்ளத்தோரின் குழப்பமான நிலை.

"குற்றமற்ற நான் என் கைகளைக் கழுவிக்கொண்டதும் வீண்தானா?" -
பார்க்க, 26:6; கைகளைக் கழுவுதல் குற்றமற்ற தன்மையை உறுதிப்படுத்தும் ஒரு சடங்கு, இணைச் சட்டம் 21:6-8.

"நான் என் உள்ளத்தை மாசற்றதாய் வைத்துக் கொண்டது வீண் தானா?" -
தூயோராய் வாழ்வது எதற்காக? ஆவிக்குரிய வாழ்வின் மேன்மை என்ன? கடவுள் தண்டிப்பார் என்ற பயத்திலா?
அல்லவே; ஆவியோடும் உண்மையோடும் கடவுளோடு இணைந்து வாழ்வது எவ்வளவு மகிழ்ச்சியானது! ஆண்டவரோடு நல்லுறவு என்பதற்கு இவ்வுலகில் எது ஒப்பாக முடியும்?
- இந்த முடிவுக்கு ஆசாப் வந்து விட்டார், வ.25. நாம் தெளிவு பெறுவது எப்போது?

வசனம் 73:15-16
தனது கேள்விகளால் இறைமக்களுக்கு மேலும் குழப்பத்தை ஏற்படுத்தாமல், தான் உணர்ந்த உண்மைகளுக்கு அவர்கள் செவிமடுக்க ஏற்ற விதமாகப் பாடலின் போக்கைத் திருப்பாடகர் மாற்றுகிறார்.

வசனம் 73:17-20
லேவியரான ஆசாப், கடவுளின் தூயகத்தில் பெற்றுக் கொண்ட தெளிவு - தீயோருக்குக் காத்திருக்கும் இழிவும், திகிலும், அழிவும் (மேலும், 37:10 & 36).

மாளிகைகளில் உல்லாசமாக வாழ்வோரும் ஒரே நாளில் வீதியில் நிற்பதை இன்றைக்கும் காண்கிறோமே!

வசனம் 73:21-22
கடவுளைப் புகழ்ந்து களிப்போடு பாட அழைக்கப்பட்ட ஆசாப் (1 குறிப்பேடு 15:16-17), தனது கேள்விகளுக்காக விசனமுற்றார்; அவருடைய உள்ளம் கசந்தது; இறைப் பிரசன்னத்தில் அவருடைய உணர்ச்சிகள் அவரை ஊடுருவிக் குத்தின.

"ஒரு விலங்கு போல" -
கடவுளுக்கு எதிராகச் செயல்படுவோர், 2 பேதுரு 2:12; யூதா 1:10.

வசனம் 73:23
வலக்கரத்தைப் பிடித்துப் பாதுகாக்கும் கடவுள், 63:8; எசாயா 41:10&13, 42:6.

"ஆனாலும்" -
ஆசாபின் உள்ளத்து உணர்வுகளை ஆண்டவர் அறிவார்; தனது கேள்விகளின் உணர்வுகளோடு கடவுளின் இல்லம் நுழைந்த ஆசாப், தனது வலக்கரத்தைப் பிடித்துத் தன்னை வழிநடத்தும் ஆண்டவரை அறிந்து கொண்டார்; கடவுள் நடத்திவரும் வழி அவருக்குத் தெளிவைத் தந்தது; தனக்காக வைக்கப்பட்டுள்ள மாட்சி அவருக்கு வெளிப்பட்டது.

நமது மனதிலும் இத்தகைய கேள்விகள் இருக்கலாம். ஆனாலும் ஆசாபுக்கு வெளிப்பட்ட இறைவார்த்தை நமக்கு வெளிப்படவில்லையா? தாவீதுக்கு வெளிப்பட்ட இறைவார்த்தை (37:3-6) நமக்கு வெளிப்படவில்லையா?

வசனம் 73:24-26
பார்க்க, உரோமையர் 8:17; எபேசியர் 1:14&18-19; 1 பேதுரு 1:3-4.
ஆண்டவரையே தன் உரிமைச் சொத்தாகக் கொண்ட லேவியரான ஆசாப், தனது ஆவிக்குரிய நிலையை உணர்ந்தார். இன்றைக்கு நாமே தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர், அரச குருக்களின் கூட்டத்தினர், தூய மக்களினத்தினர், அவரது உரிமைச் சொத்தான மக்கள் (1 பேதுரு 2:9அ). பூவுலகில் நாம் வாழும் நாட்களில் அவரே அன்றி நமக்கு வேண்டுவது என்ன?

வசனம் 73:27
"உம்மைக் கைவிடும் அனைவரையும்" - பொருள் அடிப்படையில்; OV, "உம்மை விட்டுச் சோரம் போகிற அனைவரையும்" - எபிரேய மூலச் சொல்லின் படி.

வசனம் 73:28
பார்க்க, 1 பேதுரு 2:9.
கடவுளாகிய ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமரபினர் செய்ய வேண்டிய திருப்பணி - நம்மை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ளவரின் மேன்மைமிக்க செயல்களை அறிவிப்பது! இறைப் பிரசன்னத்தில் களிகூரும் ஆசாபைப் போல, ஆண்டவரால் ஆட்கொள்ளப்பட்ட நாமும் அவருக்கென்று வாழ அர்ப்பணிப்போமா!

✝

## 19 திருப்பாடல் 74

(நாட்டின் விடுதலைக்காக மன்றாடல்)

*ஆசாபின் அறப் பாடல்*
1 கடவுளே!
நீர் ஏன் எங்களை
முற்றிலுமாக ஒதுக்கிவிட்டீர்?
உமது மேய்ச்சல் நில ஆடுகள்மேல்
உமது சினம் ஏன் புகைந்தெழுகின்றது?
2 பண்டைக் காலத்திலேயே
நீர் உமக்குச் சொந்தமாக்கிக் கொண்ட
சபைக் கூட்டத்தை நினைத்தருளும்;
நீர் மீட்டு உமக்கு உரிமையாக்கிக் கொண்ட
இனத்தாரை மறந்துவிடாதேயும்;
நீர் கோவில் கொண்டிருந்த
சீயோன் மலையையும் நினைவுகூர்ந்தருளும்.

3 நெடுநாள்களாகப் பாழடைந்து கிடக்கும்
பகுதிகளுக்குச் சென்று பார்வையிடுவீராக!
எதிரிகள் உமது தூயகத்தில்
அனைத்தையும் பாழ்படுத்திவிட்டார்கள்.
4 உம்முடைய எதிரிகள்
உம் திருத்தலத்தில்
வெற்றி முழக்கம் செய்கின்றார்கள்;
தங்கள் கொடிகளை
வெற்றிக்கு அடையாளமாக நாட்டுகின்றார்கள்.
5 அவர்கள் மேற்கு வாயிலில்
அமைக்கப்பட்ட மரப்பின்னல் வேலைப்பாடுகளைக்
கோடரிகளால் சிதைத்தார்கள்.
6 மேலும் அங்கிருந்த
மர வேலைப்பாடுகள் அனைத்தையும்
சிற்றுளியும் சுத்தியலும் கொண்டு
தகர்த்தெறிந்தார்கள்;
7 அவர்கள் உமது தூயகத்திற்குத் தீ வைத்தார்கள்;
அவர்கள் உமது பெயருக்குரிய
உறைவிடத்தைத் தீட்டுப்படுத்தினார்கள்.
8 "அவர்களை அடியோடு அழித்து விடுவோம்"
என்று தங்கள் உள்ளங்களில்
சொல்லிக் கொண்டார்கள்;
கடவுளின் சபையார் கூடும் இடங்களையெல்லாம்
நாடெங்கும் எரித்தழித்தார்கள்.
9 எங்களுக்கு நீர் செய்து வந்த
அருஞ்செயல்களை இப்போது
நாங்கள் காண்பதில்லை;
இறைவாக்கினரும் இல்லை;
எவ்வளவு காலம் இந்நிலை நீடிக்குமென்று
அறியக் கூடியவரும் எங்களிடையே இல்லை.
10 கடவுளே!
எவ்வளவு காலம் பகைவர் இகழ்ந்துரைப்பர்?
எதிரிகள் உமது பெயரை
எப்போதுமா பழித்துக் கொண்டிருப்பார்கள்?
11 உமது கையை
ஏன் மடக்கிக் கொள்கின்றீர்?
உமது வலக்கையை
ஏன் உமது மடியில் வைத்துள்ளீர்?
அதை நீட்டி அவர்களை அழித்துவிடும்.
12 கடவுளே!
முற்காலத்திலிருந்தே நீர் எங்கள் அரசர்;
நீரே உலகெங்கும் மீட்புச் செயலைச்
செய்து வருகின்றீர்.
13 நீர் உமது வல்லமையால்
கடலைப் பிளந்தீர்;
நீரில் வாழும் கொடும் பாம்புகளின்
தலைகளை நசுக்கிவிட்டீர்.
14 லிவியத்தானின் தலைகளை
நசுக்கியவர் நீரே;
அதைக் காட்டு விலங்குகளுக்கு

இரையாகக் கொடுத்தவர் நீரே;
15 ஊற்றுகளையும் ஓடைகளையும்
பாய்ந்து வரச்செய்தவர் நீரே;
என்றுமே வற்றாத ஆறுகளைக்
காய்ந்துபோகச் செய்தவரும் நீரே.
16 பகலும் உமதே; இரவும் உமதே;
கதிரவனையும் நிலவையும்
தோற்றுவித்தவர் நீரே.
17 பூவுலகின் எல்லைகளையெல்லாம்
வரையறை செய்தீர்;
கோடைக் காலத்தையும்
மாரிக் காலத்தையும் ஏற்படுத்தினீர்.
18 ஆண்டவரே,
எதிரி உம்மை இகழ்வதையும்
மதிகெட்ட மக்கள்
உமது பெயரைப் பழிப்பதையும்
நினைத்துப்பாரும்!
19 உமக்குச் சொந்தமான புறாவின் உயிரைப்
பொல்லாத விலங்கிடம் ஒப்புவித்து விடாதேயும்!
சிறுமைப்படுகிற உம் மக்களின் உயிரை
ஒரேயடியாக மறந்து விடாதேயும்!
20 உமது உடன்படிக்கையை நினைத்தருளும்!
நாட்டின் இருளான இடங்களில்
கொடுமை நடக்கும் குடியிருப்புகள்
நிறைந்திருக்கின்றன.
21 சிறுமையுற்றோர்
மீண்டும் வெட்கமுறாதபடி செய்யும்;
எளியோரும் வறியோரும்
உமது பெயரைப் புகழ்வராக!
22 கடவுளே! எழுந்துவாரும்;
உமக்காக நீரே வழக்காடும்;
மதிகேடரால் நாடோறும்
உமக்கு வரும் இகழ்ச்சியை நினைத்துப்பாரும்.
23 உம்முடைய பகைவர் செய்யும்
முழக்கத்தை மறவாதேயும்;
உம் எதிரிகள் இடைவிடாது எழுப்பும்
அமளியைக் கேளும்.

திருப்பாடல் 74:1-23

**சிந்தனைக்கு**

*ஆசாபின் அறப் பாடல் என்பதை ஆசாபின் ஆழமான சிந்தனை எனலாம்.*

*இத்திருப்பாடல் கடவுளின் இல்லத்தின் அழிவை மட்டுமல்லாமல், அதற்கு எதிரிகள் செய்த இழிவு குறித்தும் பாடுகிறது; "நீர் கோவில் கொண்டிருந்த சீயோன் மலை" என்று பாடுவதால் (வ.2) தாவீது மற்றும் சாலமோனின் காலத்திற்குப் பிந்தையது என்று உறுதியாகச் சொல்லலாம். அதற்குப் பிறகு கோவில் பாழ்பட்டது, கல்தேயரின் படையெடுப்பில் (2 அரசர்கள் 25; 2 குறிப்பேடு 36), நெபுகத்னேசரின் மெய்க்காப்பாளர் தலைவன் நெபுசரதான் தலைமையில்*

(கி.மு. 587-586). ஆனால் இந்தக் கோவில் அழிப்பை இத்திருப்பாடல் குறிப்பிடவில்லை என்பதற்கு வேறு சில குறிப்புகள் திருப்பாடலில் உள்ளன:
- வ.7ல், தரை மட்டும் "இடித்து" என்று OV மற்றும் KJV (casting down) மொழிபெயர்ப்புகளில் காணப்படும் சொற்கள், எபிரேய மூலத்தில் இல்லை. எனவே தரை மட்டமாக இடிக்கப்பட்டது என்பதை இவ்வசனம் உறுதி செய்யவில்லை.
- வ.9, இறைவாக்கினர் இல்லாத காலத்தைக் குறித்துப் பேசுகிறது. நெபுகத்நேசர் படையெடுப்பின் போது இறைவாக்கினர் எரேமியா பாபிலோனுக்குச் சிறைப்பட்டுச் சென்றார் என்பதும், அவருக்கு அப்போதும் இறைவாக்கு அருளப்பட்டது என்பதும் வரலாறு (எரேமியா 39:11-18).

சிரியாவின் மன்னனாக, கி.மு. 166ல் அந்தியோகு எபிபனஸ் என்பவன் இருந்தான்; இவன் தனது ஆட்சிப் பரப்பெங்கும் ஹெலனிய வழிபாடு மற்றும் கலாச்சாரத்தை நிறுவ முனைந்தான். கி.மு. 166ல், யூதேயாவை அவன் கைப்பற்றி, தன் தெய்வமான சீயஸ் ஒலிம்பியோஸின் சிலையை (Zeus Olympios) நிறுவினான் (வ.7; மேலும் பார்க்க, 2 மக்கபேயர் 6:1-10). யூதேயா முழுவதும் இருந்த, யாவே வழிபாட்டுக்குரிய யூத சபைகள் (Synagogues) தீக்கிரையாக்கப்பட்டன, வ.8. எனவே, இந்தத் திருப்பாடல் கி.மு. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. [இதற்குப் பிறகு மக்கபேயர் போர்களும், யூதர்களின் தன்னாட்சியும் (Hasmonean Dynesty) பல ஆண்டுகள் யூதேயாவில் நடந்தன.]

அப்படியானால், தாவீது - சாலமோனின் காலத்தில் வாழ்ந்த ஆசாப் இப்பாடலை எழுதியிருக்க வாய்ப்பில்லை; கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆசாபின் வழிமரபினரில் ஒருவர் இத்திருப்பாடலை எழுதியிருக்கலாம். 🕎

இத்திருப்பாடலை ஆசாபே எழுதினார் என்று சொல்வோர், இறைவாக்கினரான (1 குறிப்பேடு 25:1 & 2 குறிப்பேடு 29:30) அவர், இறைவாக்காக அன்று உரைத்தது, பின்னாட்களில் நிறைவேறியது என்று சொல்கின்றனர். உடன்படிக்கைப் பேழை இஸ்ரயேலிடமிருந்து சிறைப்பிடிக்கப்பட்டதை 1 சாமுவேல் 4ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம்; இத்துயரை நினைவுகூரும் பாடலை எழுதுமாறு ஆசாபை தாவீது பணிக்க, அப்போது ஆசாப் எழுதிய திருப்பாடல் என்று சொல்வாரும் உண்டு. 🕎

துயரை முறையிடும் திருப்பாடல்களில், பாவ அறிக்கை இல்லாத திருப்பாடல்.
🕎

அமைப்பு:
வ.1-11, துயரை முறையிடுதல்
வ.12-17, கடவுளின் அருஞ்செயல்களை நினைவுகூருதல்
வ.18-23, மீட்டு உருவாக்க மன்றாடுதல்

மொழிபெயர்ப்புச் சிக்கல் உள்ள வசனங்கள்: வ.5,7&15.
🕎

வசனம் 74:1
இணை, 44:9.
கடவுளை நோக்கித் தொடுக்கப்பட்ட வினா.

எதிர்பாராத நிகழ்வுகளை எதிர்கொள்ளும் வேளையில், இயல்பாக நமக்கு இதுபோன்ற கேள்விகள் எழுவதுண்டு. அவருடைய திட்டங்களையும், நோக்கங்களையும் அறிந்தவர் யார்?

"*உமது ... ஆடுகள்...*" -
*பார்க்க*, 23:1, 79:13, 95:7, 100:3.

*வசனம்* 74:2
"...*மீட்டு உரிமையாக்கிக் கொண்ட இனம்*..." -
*மோசே தன் மக்களுக்கு மீண்டும் மீண்டும் அறிவுறுத்திய உண்மை, விடுதலைப் பயணம்* 15:13&16; *இணைச் சட்டம்* 32:9.

*வசனம்* 74:3-9
*கடவுளின் இல்லம் பாழடைதலும் (எரேமியா* 52) *தீட்டுறுதலும்.*

*வசனம்* 74:4
*எரேமியாவின் சொற்களில், புலம்பல்* 2:7.

*இவ்வசனம், ஆலயத்தை இடிப்பது எதிரிகளின் நோக்கமல்ல என்பதையும், அவர்களின் அடையாளங்களைப் பதித்து, அதனைத் தங்களின் வெற்றிச் சின்னமாக மாற்ற அவர்கள் முனைந்தார்கள் என்பதையும் காட்டுகிறது.*

*வசனம்* 74:5-6
*மரவேலைப்பாடு மிகுந்த கதவுகளை முற்றிலும் அழிக்கவில்லை என்பதையும், எதிரிகளின் நம்பிக்கைக்கும் பண்பாட்டிற்கும் எதிரான வடிவங்களைச் சிதைத்து எடுத்தெறிந்தனர் என்பதையும் இங்குப் பார்க்கிறோம்.*

*வசனம்* 74:8
*எரேமியாவின் சொற்களில், புலம்பல்* 2:2&5.

*அரசர்கள் மற்றும் குறிப்பேடு நூல்களில் சபை கூடும் இடங்கள் இருந்ததாகக் குறிப்பு ஏதும் இல்லை. பலி செலுத்துவதற்குத் தொழுகை மேடுகள் இருந்ததாக வாசிக்கிறோம். சபை கூடும் இடங்கள், அரசர்கள் காலத்திற்குப் பிந்தைய ஏற்பாடாக இருக்கக்கூடும்.*

*வசனம்* 74:9
*எரேமியாவின் சொற்களில், புலம்பல்* 2:9.

*வசனம்* 74:10-11
"...*எவ்வளவு காலம்*...?" -
*திருப்பாடல்களில் மீண்டும் மீண்டும் ஒலிக்கும் கேள்வி*, 6:3, 13:1-2, 35:17, 80:4, 89:46, 90:13. *நாமும் இதுபோன்ற கேள்விகளை ஆண்டவரிடம் எழுப்புகிறோம்; அவருடைய அனாதி திட்டங்களை அறிந்தவர் யார்? (பார்க்க, எசாயா* 55:8-9; *உரோமையர்* 11:33-36). *பொறுமையோடு சகித்தலும், காத்திருத்தலும் அல்லாமல் நாம் செய்யக்கூடியது என்ன! (திருப்பாடல்* 27:13-14).

*சாலொமோன் கட்டிய திருக்கோவிலுக்குப் பின்னர் எழுதப்பட்ட திருப்பாடல் என்று கொண்டால், இங்கு எழுப்பப்படும் கேள்விக்கு மறுமொழி தரும் இறைவாக்கினர், எரேமியா* 25:11-12.

*வசனம்* 74:11
*கடவுள் செயலற்று இருப்பவரா?*

*முடிவற்ற சோதனைகளுக்கு நடுவே, நாம் ஒன்றும் செய்ய இயலாத நிலையில் நாம் அவ்வாறு உணர்கிறோம். ஏனெனில் மூர்க்கமான எதிரிகளை மேற்கொள்ள, அவரேயல்லாமல் நமக்குத் துணை நிற்போர் வேறொருவரும் இல்லை.*

வசனம் 74:12-17
*தாம் படைத்த பூவுலகை ஆளுகை செய்யும் கடவுள். இஸ்ரயேலுக்குக் கடவுள் அருளிய அருஞ்செயல்களை நினைவுகூரும் திருப்பாடகர்.*
*எகிப்திலிருந்து விடுவித்து அழைத்து வந்ததை வ.13-14ம், பாலைவெளியில் வாழ்வளித்து, யோர்தான் ஆற்றைக் கடந்து அழைத்து வந்ததை வ.15ம் நினைவூட்டுகின்றன.*

வசனம் 74:12
*"...உலகெங்கும் மீட்புச் செயல்..." -*
*எகிப்திலிருந்து மட்டுமல்லாமல், பாபிலோனிலிருந்தும் இஸ்ரயேலரை மீட்டு வந்த கடவுள். அதேவேளையில், இஸ்ரயேலருக்கு மட்டுமல்லாமல், மக்களினங்கள் அனைத்திற்கும் மீட்பின் கடவுளாகச் செயல்படுபவர் அவரே என்பதை நாம் நினைவுகூருவோம்.*

வசனம் 74:16-17
*படைத்துப் பராமரிக்கும் கடவுள்.*

வசனம் 74:18
*எதிர், வ.22-23.*

வசனம் 74:19
*நயமான உவமை; கடவுளின் உரிமையான கபடற்ற புறாவைக் கொடிய விலங்குகளிடம் விட்டுவிடாதபடி அவரிடம் திருப்பாடகர் மன்றாடுகிறார்.*

வசனம் 74:20
*"உமது உடன்படிக்கையை..." -*
*ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகிய குலமூதுவருக்குக் கொடுத்த வாக்கு: அவர்களுடைய வழிமரபினருக்குக் கானான் நாட்டை உரிமையாகத் தந்து காப்பார் என்பது.*

வசனம் 74:21
*எளியோரிடம் கரிசனையுள்ள கடவுள், 34:6*

வசனம் 74:22-23
*தண்டித்து அழிக்கும் கடவுள், 2 அரசர்கள் 19:20-28.*
*எதிரிகள் கடவுளை இகழ்கின்றனர், வ.18. எனவே, தமது ஆற்றலை வெளிப்படுத்தி, பகைஞரை வேரறுத்து, தமது ஆளுகையை உறுதி செய்யுமாறு கடவுளுக்கு அழைப்பு.*

*அவர் வாக்கு மாறாதவர். அவரே உடன்படிக்கையின் கடவுள். உடன்படிக்கையின்படி வாழாத நாம் தகுதியற்றவர்களாக இருந்தாலும், அவர் கிருபையால் தமது உடன்படிக்கையை நினைவுகூர்ந்து, தமது நீதியின் பொருட்டு, தம் மக்களுக்கு மீட்பருளுவார்.*

✝

## 19 திருப்பாடல் 75

*(நீதி வழங்கும் கடவுள்)*

*பாடகர் தலைவர்க்கு; 'அழிக்காதே' என்ற மெட்டு; ஆசாபின் புகழ்ப் பாடல்*
1 உமக்கு நன்றி செலுத்துகின்றோம்;
கடவுளே, உமக்கு நன்றி செலுத்துகின்றோம்;
உமது பெயரைப் போற்றுகின்றோம்;
உம் வியத்தகு செயல்களை
எடுத்துரைக்கின்றோம்.
2 நான் தகுந்த வேளையைத்
தேர்ந்துகொண்டு,
நீதியோடு தீர்ப்பு வழங்குவேன்.
3 உலகமும் அதில் வாழ்வோர் அனைவரும்
நிலைகுலைந்து போகலாம்;
ஆனால், நான் அதன் தூண்களை
உறுதியாக நிற்கச் செய்வேன்.
(சேலா)
4 வீண் பெருமை கொள்வோரிடம்,
'வீண் பெருமை கொள்ள வேண்டாம்' எனவும்,
பொல்லாரிடம், 'உங்கள் வலிமையைக்
காட்ட வேண்டாம்;
5 உங்கள் ஆற்றலைச்
சிறிதளவும் காட்டிக்கொள்ள வேண்டாம்;
தலையை ஆட்டி இறுமாப்புடன்
பேச வேண்டாம்' எனவும் சொல்வேன்.
6 கிழக்கிலிருந்தோ மேற்கிலிருந்தோ,
பாலைவெளியிலிருந்தோ, மலைகளிலிருந்தோ,
உங்களுக்கு எதுவும் வராது.
7 ஆனால், கடவுளிடமிருந்தே தீர்ப்பு வரும்;
அவரே ஒருவரைத் தாழ்த்துகின்றார்;
இன்னொருவரை உயர்த்துகின்றார்.
8 ஏனெனில், மதிமயக்கும் மருந்து கலந்த
திராட்சை மது பொங்கிவழியும் ஒரு பாத்திரம்
ஆண்டவர் கையில் இருக்கின்றது;
அதிலிருந்து அவர் மதுவை ஊற்றுவார்;
உலகிலுள்ள பொல்லார் அனைவரும்
அதை முற்றிலும் உறிஞ்சிக் குடித்துவிடுவர்.
9 நானோ எந்நாளும் மகிழ்ந்திருப்பேன்;
யாக்கோபின் கடவுளைப் புகழ்ந்து பாடுவேன்;
10 பொல்லாரை அவர் வலிமை இழக்கச் செய்வார்;
நேர்மையாளரின் ஆற்றலோ உயர்வு பெறும்.

திருப்பாடல் 75:1-10

**சிந்தனைக்கு**

"உம்முடைய பகைவர் செய்யும் முழக்கத்தை மறவாதேயும்; உம் எதிரிகள் இடைவிடாது எழுப்பும் அமளியைக் கேளும்" என்ற மன்றாட்டோடு முந்தைய திருப்பாடல் முடிந்த நிலையில், கடவுள் நீதி வழங்குவதாக இத்திருப்பாடல் அமைவது சிறப்பு.

வரலாற்றுக் குறிப்பு ஏதும் தலைப்பிலோ, பாடலிலோ இல்லை; "அழிக்காதே" என்ற மெட்டில் அமைந்த இதர திருப்பாடல்கள், 57, 58 & 59.

அமைப்பு:
வ.1, கடவுளுக்கு நன்றி
வ.2-5, தமது நீதி குறித்துக் கடவுள் உரைப்பது
வ.6-7, தாழ்மை குறித்த அறிவுரை
வ.8-10, பொல்லாரின் வீழ்ச்சியும் நல்லாரின் மகிழ்ச்சியும்

வசனம் 75:1
"உமது பெயரைப் போற்றுகின்றோம்" -
பொது மொழிபெயர்ப்பில், இங்கு qârôb என்ற மூலச்சொல் விடுபட்டு உள்ளது; இதற்கு "அண்மையில் / அருகில் / கைவசம்" என்கிற வகையில் பொருள்கொள்ளலாம்; எதிரிகளால் சூழப்பட்ட நிலையில், நெருங்கிவரும் மீட்பு அல்லது கடவுளின் நீதித் தீர்ப்பில் உறுதியான நம்பிக்கையோடு பாடப்பட்ட திருப்பாடல் என்பதால், இந்தச் சொல் இங்கு மிகவும் அவசியமானது.

வசனம் 75:2-5
தமக்கு எதிராக மண்ணுலகில் எழும் கிளர்ச்சிகளையும், தமது மக்களின் துயரங்களையும் காணும் கடவுளின் ஆறுதலான அருள் மொழிகள்.

வசனம் 75:2
"...தகுந்த வேளை..." -
நிகழ்வுகளின் காலங்களை முன்குறித்தவர் கடவுள்; பார்க்க, தானியேல் 8:19, 11:27&35; அபக்கூக்கு 2:3; யோவான் 7:30; திருத்தூதர் பணிகள் 17:31; கலாத்தியர் 4:4 (OV, 4:5).

வசனம் 75:3
இறைச்சித்தத்திற்கு எதிரான செயல்கள் நடக்கும் வேளைகளில், மண்ணுலகில் வாழும் மக்கள் நிலைகுலைந்து போகிறோம்; திகிலடைகிறோம். உலகே அழிவுறுவது போல நமக்குத் தோன்றினாலும், தம் நீதித் தீர்ப்பு வெளிப்படும் நாளுக்காக, உலகைக் கடவுள் தொடர்ந்து நிலைப்படுத்திக் காக்கிறார்.

வசனம் 75:4-5
பொல்லாரின் வலிமை மற்றும் ஆற்றல் உயர்வது என்பது வீழ்வதற்கே!
அவர்கள் வலிமை பெறும்போது, அவர்களைக் கடவுள் எச்சரிக்கிறார்; அவர்களோ கடவுளின் அறிவுறுத்தலை ஏற்றுக்கொள்வதில்லை; எனவே அவர்களின் வீழ்ச்சிக்குக் கடவுள் காலத்தைக் குறிக்கிறார்.

வசனம் 75:6-8
கடவுளின் அருள் வார்த்தைகளின் நீட்சியாக, திருப்பாடகரின் ஆறுதலான சொற்கள்.

வசனம் 75:6
"... எதுவும் வராது" -
OV, "ஜெயம் வராது".
மூலத்தில், rûm என்கிற சொல்; இது, உயர்வு, எழுச்சி, ஏற்றம் என்று பொருள் படும். "எதுவும்" என்கிற பொதுச் சொல் சரியன்று.

வசனம் 75:7
அன்னாவின் பாடலில் விரிவாக, 1 சாமுவேல் 2:6-8. மேலும் பார்க்க, 113:7-8.

வசனம் 75:8
பார்க்க, நீதிமொழிகள் 23:30-35.
தண்டனைக்கு முன் குற்றவாளிகளுக்கு உணர்வு மயக்கத்திற்கென மருந்து கலந்த மது கொடுக்கும் வழக்கம் உண்டு; இதையே இங்குத் திருப்பாடகர் குறிப்பிடுகிறார் எனலாம். பொல்லாரின் தண்டனைக்கு நாள் நெருங்கி வருவதை இங்கு திருப்பாடகர் வெளிப்படுத்துகிறார்.

வசனம் 75:9
தனது மீட்பையும், இறைத் தீர்ப்பையும் உறுதியாக எதிர்நோக்கும் ஒருவரின் மகிழ்ச்சி, திருப்பாடகரின் நேரடியான சொற்களில்.

வசனம் 75:10
இறையாற்றலால் உந்தப்பட்ட திருப்பாடகரின் நேரடியான சொற்களில் இவ்வசனம் பல மொழிபெயர்ப்புகளிலும் இடம் பெற்றுள்ளது.

"நேர்மையாளரின் ஆற்றலோ உயர்வு பெறும்" -
எபிரேய மூலத்தின் அடிப்படையில் உயர்த்துதலைக் குறிக்கும் சொற்கள் வ.4, 5, 6, 7 மற்றும் 10 ஆகியவற்றில் இடம் பெற்றுள்ளன; கடவுள் யாரை உயர்த்துவார் என்பது முழுக்க முழுக்க அவரது சித்தத்தின் வழியே நடக்கிறது (வ.7). ஆனாலும் நேர்மையாளரின் ஆற்றலோ உயர்வு பெறும் என்பது திருப்பாடகரின் சிறப்பான ஆழமான பார்வை; செல்வத்திலோ, பதவியிலோ, சமூகப் பார்வையிலோ நேர்மையாளரின் உயர்வைக் குறித்துப் பேசாமல், வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்வதற்கான, எதிர்நின்று செயல்படுவதற்கான அவர்தம் ஆற்றல் உயர்வு பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. சாவு வரை அயராது இறையரசுக்காகப் பாடுபட்டோரின் சாட்சிகளும் இதனையே நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. நமக்குள் அந்த இறையாற்றல் பெருக வாஞ்சிப்போமா!

✝

## 19 திருப்பாடல் 76

*(வெற்றிப் பாடல்)*

*பாடகர் தலைவர்க்கு; நரம்பிசைக் கருவிகளுடன்; ஆசாபின் புகழ்ப் பாடல்*
1 *யூதாவில் கடவுள்*
*தம்மையே வெளிப்படுத்தியுள்ளார்;*
*இஸ்ரயேலில் அவரது பெயர்*
*மாண்புடன் திகழ்கின்றது.*
2 *எருசலேமில் அவரது கூடாரம் இருக்கின்றது;*
*சீயோனில் அவரது உறைவிடம் இருக்கின்றது.*
3 *அங்கே அவர்*
*மின்னும் அம்புகளை முறித்தெறிந்தார்.*
*கேடயத்தையும் வாளையும்*
*படைக்கலன்களையும் தகர்த்தெறிந்தார்.*
(சேலா)
4 *ஆண்டவரே, நீர் ஒளிமிக்கவர்;*
*உமது மாட்சி*
*என்றுமுள மலைகளினும் உயர்ந்தது.*
5 *நெஞ்சுறுதி கொண்ட வீரர்*
*கொள்ளையிடப்பட்டனர்;*
*அவர்கள் துயிலில் ஆழ்ந்துவிட்டனர்;*
*அவர்களின் கைகள்*
*போர்க்கலன்களைத் தாங்கும் வலுவிழந்தன.*
6 *யாக்கோபின் கடவுளே!*
*உமது கடிந்துரையால்*
*குதிரைகளும் வீரர்களும் மடிந்து விழுந்தனர்.*
7 *ஆண்டவரே, நீர் அஞ்சுதற்கு உரியவர்;*
*நீர் சினமுற்ற வேளையில்*
*உம் திருமுன் நிற்கக்கூடியவர் யார்?*
8 *கடவுளே! நீதித் தீர்ப்பளிக்க நீர் எழுந்தபோது,*
*மண்ணுலகில் ஒடுக்கப்பட்டோரைக்*
*காக்க விழைந்தபோது,*
*வானின்று தீர்ப்பு முழங்கச் செய்தீர்;*
9 *பூவுலகு அச்சமுற்று அடங்கியது.* (சேலா)
10 *மாறாக, சினமுற்ற மாந்தர்*
*உம்மைப் புகழ்ந்தேத்துவர்;*
*உமது கோபக் கனலுக்குத் தப்பியோர்*
*உமக்கு விழாக் கொண்டாடுவர்;*
11 *உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்குப்*
*பொருத்தனை செய்து*
*அதை நிறைவேற்றுங்கள்;*
*அவரைச் சுற்றிலுமிருக்கிற அனைவரும்*
*அஞ்சுதற்குரிய அவருக்கே*
*காணிக்கைகளைக் கொண்டுவருவராக!*
12 *செருக்குற்ற தலைவர்களை*
*அவர் அழிக்கின்றார்;*
*பூவுலகின் அரசர்க்குப் பேரச்சம் ஆனார்.*

திருப்பாடல் 76:1-12

**சிந்தனைக்கு**

சீயோன் மலைத் திருப்பாடல் (இதர சீயோன் மலைப் பாடல்கள்: 46, 48, 84, 87 மற்றும் 122); கடவுள் அருளிய (வ.8-9) நீதித் தீர்ப்பைக் கொண்டாட வேறு சிறந்த இடம் உண்டோ?

நீதித் தீர்ப்பு அண்மையில் வந்து விட்டதை உணர்ந்து பாடிய திருப்பாடல் 75க்குப் பிறகு, அவருடைய நீதித் தீர்ப்பைக் கொண்டாடி, பொருத்தனைகளை சீயோனில் நிறைவேற்றுவதாக இத்திருப்பாடல் அமைகிறது.

தலைப்பில் இடம்பெற்றுள்ள, 'நரம்பிசைக் கருவிகளுடன்' (நெகினோத்) என்ற குறிப்பு, 4, 6, 54, 61 மற்றும் 67 ஆகிய திருப்பாடல்களிலும் காணப்படுகிறது. வரலாற்றுக் குறிப்புகள் ஏதும் தலைப்பில் இல்லை.
🕎

அமைப்பு:
வ.1-3, சாலேமுக்கு எதிரான பகைவர்களின் படைகளை முறியடிக்கும் கடவுள்
வ.4-6, குதிரைகளையும் குதிரை வீரர்களையும் வீழ்த்தும் கடவுள்
வ.7-9, நீதித் தீர்ப்புகளின் வழியே அச்சுறுத்தும் கடவுள்
வ.10-12, பொருத்தனைகளை நிறைவேற்றிப் போற்றப்படும் கடவுள்
🕎

வசனம் 76:1
"யூதாவில் ... இஸ்ரயேலில் ..." -
நாட்டின் ஒற்றுமையைக் குறிப்பிடும் கவித்துவமான நடை (34:3).
மேலும் இவ்வசனம் வரலாற்று அடிப்படையில், நாட்டின் ஒற்றுமையை நிலைநாட்ட முயற்சித்த, எசேக்கியா அரசரின் காலத்தைக் குறிப்பதாக (பார்க்க, 2 குறிப்பேடு 30:1), பைபிள் ஆய்வாளர்கள் சிலர் கருதுகின்றனர்.

வசனம் 76:2
"எருசலேமில்..." -
மூலநூலின்படி, எருசலேமின் தொன்மைப் பெயரான, மெல்கிசெதேக்கு அரசாண்ட சாலேம், தொடக்க நூல் 14:18; மேலும் பார்க்க, தொடக்க நூல் 33:18.

"...அவரது கூடாரம் ... அவரது உறைவிடம்..." -
மனிதர்களின் நடுவில் வாழ்வதைத் தெரிந்து கொண்ட கடவுள், அதற்கான மனித இனமாக இஸ்ரயேலையும், தலமாக சீயோன் மலையையும் தெரிந்து கொண்டார். கடவுள் மெய்யாகவே பூவுலகில் தமது உறைவிடத்தைத் தெரிந்து கொண்டாரா என்பது இங்கு எழும் கேள்வி! அவரது உறைவிடம் விண்ணகம் என்பதை மோசேயும் (இணைச் சட்டம் 26:15) சாலமோனும் வலியுறுத்துகின்றனர் (1 அரசர்கள் 8:30,39,43&49; 2 குறிப்பேடு 6:21&30). மேலும் இறைவாக்கு நூல்களிலும் இத்தகைய குறிப்புகள் உள்ளன, எசாயா 63:15; எரேமியா 25:30. ஆனால் கடவுளின் மாட்சி பூவுலகில் அவரது உறைவிடத்தை நிரப்பியது, விடுதலைப் பயணம் 40:35; எசேக்கியேல் 11:22.
அதேவேளையில், நாமே கடவுளின் உறைவிடம் என்பதைப் பவுலடிகள் வலியுறுத்துகிறார், எபேசியர் 2:22. மேலும் இது ஓர் இறைவாக்காகவும் அறிவிக்கப்பட்டுள்ளது, எசேக்கியேல் 37:26-27; திருவெளிப்பாடு 21:3.

வசனம் 76:3
அமைதியின் உறைவிடமாகிய சாலேமில், அதற்கு எதிரான போர்க்கருவிகளைக் கடவுள் முறித்து எறிந்தார்.

"மின்னும் அம்புகள்" -
மின்னலைப் போன்று சடுதியில் பாய்ந்து வரும் அம்புகள். வலிமையான போர்க்கருவிகளைக் கடவுள் முறித்துப் போடுகிறார்.

வசனம் 76:4-6
கடவுளின் அச்சமூட்டும் ஆற்றல்மிகு செயல்கள்.

வசனம் 76:4
"ஆண்டவரே! நீர் ஒளி மிக்கவர்" -
1 யோவான் 1:5; மேலும் பார்க்க, அணுக முடியாத ஒளி, 1 திமொத்தேயு 6:16; ஒளியின் பிறப்பிடம், யாக்கோபு 1:17.

வசனம் 76:6
கடவுளின் அருஞ்செயல் நினைவு கூரப்படுதல், விடுதலைப் பயணம் 15:1.

"...மடிந்து விழுந்தனர்" -
OV, ... உறங்கி விழுந்தது.
சில ஆங்கில மொழிபெயர்ப்புகள், விடுதலைப் பயணம் 15:16ரை நினைவூட்டும் வகையில், stand still என்று சொல்கின்றன. இதனோடு வ.5ம் இணைத்துப் பார்க்கத் தக்கது.

வசனம் 76:7
ஆண்டவருக்கு அஞ்சுதல், 34:11-14, 111:10.
ஆண்டவரே அஞ்சுதற்கு உரியவர்; அரசர்களின் அரசர்; இவ்வுலகில் பிறந்த எந்தவொரு மாமனிதனையும் நீதி விசாரிக்கிறவர் அவரே. அத்தகைய கடவுளுக்கு நாம் தரும் மரியாதை என்ன? பேரருளும் மன்னிப்பும் அவருடைய மாறாத குணங்கள் என்பதால் பலரும் இன்றைக்கு அவருக்குரிய கணத்தைத் தருவதில்லை; ஊழியர்களும் இதற்கு விதிவிலக்கல்லர். நமது உள்ளத்தில் ஆண்டவருக்கு உரிய இடம் எத்தகையது?

"உம் திருமுன் நிற்கக் கூடியவர் யார்?" -
பார்க்க, எஸ்ரா 9:15; நாகூம் 1:6; மலாக்கி 3:2; திருவெளிப்பாடு 6:17.

அச்சுறுத்தும் சினம் கடவுளின் எதிரிகள் மீது ஏன் வருகிறது? அது எளியோரைக் காக்கும் நீதித் தீர்ப்பின் பொருட்டே வருகிறது, வ.8-9.

வசனம் 76:8-9
மன்றாட்டுக்குக் கடவுளின் மறுமொழி, 74:21-23. எழுந்து வருதல், வழக்காடுதல் / தீர்ப்பிடல், சிறுமையுற்றோர் / ஒடுக்கப்பட்டோர், முழக்கம் - இவ்வாறு இவ்விரு பகுதிகளின் சொற்பயன்பாடும் ஒப்புநோக்கத்தக்கவை.

வசனம் 76:10
இந்த எபிரேய வசனத்தின் புரிதலில் தடுமாற்றம் இருப்பதை பல ஆங்கில மொழிபெயர்ப்புகளிலும் காண முடிகிறது; செப்டுவஜின்ட் அடிப்படையில் பொது மொழிபெயர்ப்பும் சில ஆங்கில மொழிபெயர்ப்புகளும் உள்ளன. NIV, எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் உள்ளது:

"Surely your wrath against men brings you praise, and the survivors of your wrath are restrained."
*பொல்லாருக்கு எதிரான கடவுளின் வெஞ்சினம் அவருக்குப் புகழ்ச்சியைக் கொண்டு வருகிறது; வெஞ்சினத்திற்குத் தப்பியோரும் கட்டுக்குள் அடங்குவர்.*

*வசனம்* 76:11
*பார்க்க*, 50:14, 68:29.

*வசனம்* 76:12
*பார்க்க*, 47:2.
*கடவுள் குறித்த அச்சம், ஒப்பிடுக, வ.*7. *இணை, திருப்பாடல்* 2.
*வ.*7*ல், பொதுவான இறையச்சம் குறித்துப் பேசிய திருப்பாடகர், இங்கு உலகை ஆளுவோரில் செருக்குற்றோரைக் குறித்துப் பேசுகிறார். இன்றைக்கும் இறுமாப்புடன் நாடுகளை ஆளும் தலைவர்கள் இருக்கின்றனர்; கடந்த காலங்களில் அத்தகையோரின் கேவலமான வீழ்ச்சிகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளாத அவர்களுக்குக் கடவுள் தரும் முடிவு அதிர்ச்சியையும் அச்சத்தையும் தருவதாக இருக்கும்.*

## 19 திருப்பாடல் 77

*(துன்ப நாளில் ஆறுதல்)*

*பாடகர் தலைவர் எதுத்தூனுக்கு; ஆசாபின் புகழ்ப்பா*
1 *கடவுளை நோக்கி*
*உரத்த குரலில் மன்றாடுகின்றேன்;*
*கடவுள் எனக்குச்*
*செவிசாய்த்தருள வேண்டுமென்று*
*அவரை நோக்கி மன்றாடுகின்றேன்.*
2 *என் துன்ப நாளில்*
*என் தலைவரை நாடினேன்;*
*இரவில் அயராது கைகூப்பினேன்;*
*ஆனாலும் என் ஆன்மா*
*ஆறுதல் அடையவில்லை.*
3 *கடவுளை நினைத்தேன்;*
*பெருமூச்சு விட்டேன்;*
*அவரைப்பற்றி சிந்தித்தேன்;*
*என் மனம் சோர்வுற்றது.*
(*சேலா*)
4 *என் கண் இமைகள்*
*மூடாதபடி செய்துவிட்டீர்;*
*நான் கலக்கமுற்றிருக்கிறேன்;*
*என்னால் பேச இயலவில்லை.*
5 *கடந்த நாள்களை*
*நினைத்துப் பார்க்கின்றேன்;*
*முற்கால ஆண்டுகளைப்பற்றிச்*

சிந்திக்கின்றேன்.
6 இரவில் என் பாடலைப்பற்றி
நினைத்துப் பார்த்தேன்;
என் இதயத்தில் சிந்தித்தேன்;
என் மனம் ஆய்வு செய்தது;
7 'என் தலைவர்
என்றென்றும் கைவிட்டுவிடுவாரோ?
இனி ஒருபோதும்
ஆதரவளிக்க மாட்டாரோ?
8 அவரது பேரன்பு
முற்றிலும் மறைந்துவிடுமோ?
அவரது வாக்குறுதி
தலைமுறைதோறும் அற்றுப்போய்விடுமோ?
9 கடவுள் இரக்கங்காட்ட மறந்துவிட்டாரோ?
அல்லது சினங்கொண்டு
தமது இரக்கத்தை நிறுத்திவிட்டாரோ?'
(சேலா)
10 அப்பொழுது நான்,
'உன்னதரின் வலக்கை
மாறுபட்டுச் செயலாற்றுவதுபோல்
என்னை வருத்துகின்றது' என்றேன்.
11 ஆண்டவரே,
உம் செயல்களை என் நினைவுக்குக்
கொண்டு வருவேன்;
முற்காலத்தில் நீர் செய்த
வியத்தகு செயல்களை
நினைத்துப் பார்ப்பேன்.
12 உம் செயல்கள் அனைத்தையும்
பற்றித் தியானிப்பேன்!
உம் வலிமைமிகு செயல்களைப்
பற்றிச் சிந்திப்பேன்.
13 கடவுளே,
உமது வழி தூய்மையானது!
மாபெரும் நம் கடவுளுக்கு
நிகரான இறைவன் யார்!
14 அரியன செய்யும் இறைவன் நீர் ஒருவரே!
மக்களினங்களிடையே உமது ஆற்றலை
விளங்கச் செய்தவரும் நீரே;
15 யாக்கோபு, யோசேப்பு என்போரின்
புதல்வரான உம் மக்களை நீர்
உமது புயத்தால் மீட்டுக் கொண்டீர்.
(சேலா)
16 கடவுளே,
வெள்ளம் உம்மைப் பார்த்தது;
வெள்ளம் உம்மைப் பார்த்து நடுக்கமுற்றது;
ஆழ்கடல்களும் கலக்கமுற்றன.
17 கார்முகில்கள் மழை பொழிந்தன;
மேகங்கள் இடிமுழங்கின;
உம் அம்புகள் எத்திக்கும் பறந்தன.

18 உமது இடிமுழக்கம்
கடும்புயலில் ஒலித்தது;
மின்னல்கள் பூவுலகில் ஒலி பாய்ச்சின;
மண்ணுலகம் நடுங்கி அதிர்ந்தது.
19 கடலுக்குள் உமக்கு வழி அமைத்தீர்;
வெள்ளத்திரளிடையே
உமக்குப் பாதை ஏற்படுத்தினீர்;
ஆயினும் உம் அடிச்சுவடுகள்
எவருக்கும் புலப்படவில்லை.
20 மோசே, ஆரோன் ஆகியோரைக் கொண்டு
உம் மக்களை மந்தையென
அழைத்துச் சென்றீர்.

திருப்பாடல் 77:1-20

**சிந்தனைக்கு**

எதுத்தூன், பார்க்க திருப்பாடல் 39 குறிப்புகள். தன்னைக் குறித்த, அல்லது தன் நாட்டைக் குறித்த ஒருவரின் அங்கலாய்ப்பாக இத்திருப்பாடல், நல்ல கவிநடையில் அமைந்திருக்கிறது. தலைப்பிலும் பாடலிலும் வரலாற்றுக் குறிப்பு ஏதுமில்லை.

கடந்தகால நடையும், நிகழ்கால நடையும் கலந்த ஒரு கவிதையாக இத்திருப்பாடல் உள்ளது; எனவே சில மொழிபெயர்ப்புகள் கடந்தகால நடையிலும், சில நிகழ்கால நடையிலும் உள்ளன.

வ.16-19, அபக்கூக்கு 3:8-10 பகுதியோடு இசைந்து செல்கிறது; அதனால், இத்திருப்பாடல் முடியாட்சியின் பிற்பகுதியில் எழுதப்பட்டிருக்கலாம் என்ற கருத்து உள்ளது. ஆனால் இந்த இரு பகுதிகளின் ஒப்புமையே தவறு என்பதை நமது வாசிப்பில் உணரலாம்.

அமைப்பு:
வ.1-9, துயர நினைவலைகள்
வ.10-12, சலிப்புற்ற மனதின் நல்மாற்றம்
வ.13-20, கடவுளின் கடந்தகால அருஞ்செயல்களால் பிறக்கும் நம்பிக்கை

வசனம் 77:1-3
கடவுளின் மறுமொழிக்காக ஏங்கிப் புலம்பும் உள்ளம்.

வசனம் 77:4-6
கடவுளோடு துதியில் இணைந்து மகிழ்ந்திருந்த நாள்களை அசைபோடும் உள்ளம், மறுமொழி கேளாத இந்நாட்களின் இரவுகளில், உறக்கமின்றித் துயரடைகிறது. துயில் கொள்ளத் தன் கண் இமைகளை மூடவிடாமல் கடவுள் திறந்து வைத்திருப்பதாக அவரைச் சாடுகிறது.

வசனம் 77:4
வேறு மொழிகளில், யோபு 7:13-15.

வசனம் 77:7-9
*சோர்வுற்ற மனதில் எழும் அலை அலையான, வேதனை நிறைந்த கேள்விகள்; துயரக் கடலில் மூழ்கிய ஒருவராக, கடவுள், தம் இயல்பான இரக்கத்தையே மறந்து விட்டாரோ என்று திருப்பாடகர் வினவுகிறார்* (வ.9).

வசனம் 77:7
*ஆசாபியத் திருப்பாடல்களில் ஆங்காங்கு காணப்படும் அங்கலாய்ப்பு*, 74:1-2, 80:3-4, 83:1 *மற்றும்* 88:14. *மேலும் பார்க்க, புலம்பல்* 3:1-18.

*தாமதமாகும் மறுமொழி, கடவுள் நம்மை வெறுப்பதாக அல்லது கைவிட்டதாக எண்ணத் தூண்டுகிறதா?*
*எச்சரிக்கை: மன உறுதியோடு ஆண்டவருக்காகக் காத்திருப்பதே நமக்கான திட்டத்தை உணரும் வழி.*

வசனம் 77:10-12
*தன் துயர வலையிலிருந்து மீண்டு, கடந்த காலங்களில் தமது கிருபையை விளங்கச் செய்த கடவுளை நோக்கித் திரும்பி, நம்பிக்கை கொள்ளும் திருப்பாடகரின் உள்ளம். வரலாற்றில் அவருக்கு நிகரான ஆற்றல் மிக்கவர் யார்?* (வ.13-14)

வசனம் 77:10
*மொழிபெயர்ப்புச் சிக்கல் உள்ள வசனங்களில் ஒன்று; கவிதை நடையில் எழுதும் போது, சில சொற்களைச் சொல்லாது விடல் புதிதன்று; அதுபோன்ற ஒரு வசனம். விளைவு, வெவ்வேறு பொருள்படும் மொழிபெயர்ப்புகள்.*

*கடவுளின் வலது கை அவரது செயல்படும் ஆற்றலைக் குறிக்கிறது*, 60:5.

வசனம் 77:13-20
*நான், எனது என்ற எண்ணங்கள் அகன்ற நிலை!*
*புலம்பலுக்குப் பிறகு புகழ்ப்பா!*
*மன அழுத்தத்தைத் துடைத்தெறிய கடந்தகால வெற்றிகளில் நம்பிக்கை!*
*கடவுளிடம் திரும்பும் மனம், புதுவாழ்வு பெறும்!*

*எகிப்திலும், விடுதலைப் பயணத்திலும் வெளிப்பட்ட கடவுளின் எல்லையற்ற ஆற்றல், அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் அவரது பிரசன்னம், காலங்கள் கடந்த ஞானம், உன்னதமான நிலை; இவை அனைத்திற்கும் மேலாக, என்றும் மாறாத அவருடைய கிருபை, கருணை, இரக்கம். ஒப்பாரும் மிக்காரும் இல்லாத கடவுளிடம், சிறியோராகிய நம்மை இணைப்பது அவருடைய கிருபை அல்லவா!*

வசனம் 77:15
"*உமது புயம்*" -
44:3, 89:13, 98:1, 118:15.

"யோசேப்பு" -
*யாக்கோபு என்பது நாட்டின் பெயராக, எல்லா வழிமரபையும் உள்ளடக்கினாலும், சிறப்புச் செய்யும் வகையில், பன்னிரு மகன்களில் ஒருவரான யோசேப்பு இங்கு தனித்துக் குறிப்பிடப்படுகிறார்; இதுபோன்றே பிற ஆசாபியத் திருப்பாடல்களிலும் - பார்க்க*, 78:67, 80:1, 81:5.

வடநாட்டின் பெரிய குலமான எப்ராயிமைக் குறிக்க யோசேப்பு என்ற பெயர் வழங்கப்பட்டது என்றும் பொருள் கொள்ளலாம் (2 சாமுவேல் 19:20; 1 அரசர்கள் 11:28; எசேக்கியேல் 37:16&19; ஆமோஸ் 5:6&15; செக்கரியா 10:6). அதேவேளையில், யாக்கோபு யோசேப்பைத் தனது முதற்பேறாக அங்கீகரித்தார் (தொடக்க நூல் 48:5; 1 குறிப்பேடு 5:2); இவ்வாறு யாக்கோபு என்ற சொல்லுக்கு நிகரான பொருளில், அனைத்து வழிமரபுகளையும் குறிப்பதாக, யோசேப்பு என்ற சொல்லும் உள்ளது.

வசனம் 77:16-18
மேலும் பார்க்க, 74:12-15, 93:3-4.
தண்ணீரின் தொடர்பில் கடவுளின் கட்டுப்பாட்டையும், இறையாண்மையையும் வெளிப்படுத்தும் இறைமொழிகள்:
* வெள்ளம்
* ஆழ்கடல்
* கார்முகில் / மேகங்கள்
* இடிமுழக்கம்
* மின்னல்கள் / அம்புகள்
- இவ்வாறு கடவுளின் கட்டளைகளை நிறைவேற்றும் போர்க்கருவிகள் கொண்டதாக இயற்கை விளங்குகின்றது.

வசனம் 77:19
செங்கடல் மற்றும் யோர்தான் ஆற்றில் கடவுள் நிகழ்த்திய அருஞ்செயல்கள்.

கவித்துவமான உண்மை:
வெட்டாந்தரையில் இஸ்ரயேலர் நடந்து வந்தனர்; அவர்களோடு நடந்து வந்த ஆண்டவரின் காலடிச்சுவடுகள் அவர்களுக்குப் புலப்படவில்லை.

நமது துன்ப வேளைகளில், இன்றைக்கும் நாமும் நம்மைத் தாங்கி வழிநடத்தும் கடவுளை உணராமல் இருக்கிறோமே!

வசனம் 77:20
"மந்தை" -
கடவுளின் மக்களைக் குறிக்கும் ஆசாபிய உருவகம், 78:52, 80:1.

மந்தையை நடத்திய ஆயர்கள், மோசேயும் ஆரோனும்; தங்கள் ஆயர்களையே தடுமாறச் செய்த, முரட்டாட்டம் கொண்ட ஆடுகளே இஸ்ரயேலர்; அதனால் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் அந்த ஆயர்கள் நுழைய முடியாமல், அந்தத் தலைமுறையினரோடு பாலைவெளியில் மாண்டனர்.

நம் ஒவ்வொருவரையும் தமது மந்தையின் ஆடுகளாக இன்றைக்குத் தெரிந்து கொண்ட நல்ல மேய்ப்பர் நமது ஆண்டவர்; நல்மேய்ப்பரின் குரலுக்குச் செவிமடுக்கும் நல்ல ஆடுகளாக வாழ்வோமா?

✝

## 19 திருப்பாடல் 78

(கடவுளும் அவர்தம் மக்களும்)

*ஆசாபின் அறப் பாடல்*
1 என் மக்களே,
என் அறிவுரைக்குச் செவிசாயுங்கள்;
என் வாய்மொழிகளுக்குச் செவிகொடுங்கள்.
2 நீதிமொழிகள் மூலம் நான் பேசுவேன்;
முற்காலத்து மறைசெய்திகளை எடுத்துரைப்பேன்.
3 நாங்கள் கேட்டவை,
நாங்கள் அறிந்தவை,
எம் மூதாதையர் எமக்கு விரித்துரைத்தவை
-இவற்றை உரைப்போம்.
4 அவர்களின் பிள்ளைகளுக்கு
நாங்கள் அவற்றை மறைக்க மாட்டோம்;
வரவிருக்கும் தலைமுறைக்கு ஆண்டவரின்
புகழ்மிகு, வலிமைமிகு செயல்களையும்
அவர் ஆற்றிய வியத்தகு செயல்களையும்
எடுத்துரைப்போம்.
5 யாக்கோபுக்கென அவர்
நியமங்களை வகுத்தார்;
இஸ்ரயேலுக்கெனத்
திருச்சட்டத்தை ஏற்படுத்தினார்;
இதனையே தம் பிள்ளைகளுக்கும் கற்பிக்குமாறு
நம் மூதாதையர்க்கு அவர் கட்டளையிட்டார்.
6 வரவிருக்கும் தலைமுறையினர்
இவற்றை அறிந்திடவும்,
இனிப் பிறக்கவிருக்கும் பிள்ளைகள்
-இவர்கள் தம் புதல்வர்களுக்கு
ஆர்வத்துடன் கற்றுக்கொடுக்கவும்,
7 அதனால், அவர்கள்
கடவுள்மீது நம்பிக்கை வைக்கவும்,
இறைவனின் செயல்களை மறவாதிருக்கவும்,
அவர்தம் கட்டளைகளைக் கடைப்பிடிக்கவும்,
8 தங்கள் மூதாதையரைப்போல்,
எதிர்ப்பு மனமும், அடங்காக் குணமும்
கொண்ட தலைமுறையாகவும்,
நேரிய உள்ளமற்றவர்களாகவும்
இறைவன்மீது உண்மைப் பற்று அற்றவர்களாகவும்
இராதபடி அவர் கட்டளையிட்டார்.
9 வில் வீரரான எப்ராயிம் மக்கள்,
போரில் புறங்காட்டி ஓடினர்.
10 அவர்கள் கடவுளோடு செய்துகொண்ட
உடன்படிக்கையைக் கடைப்பிடிக்கவில்லை;
அவரது திருச்சட்டத்தைப் பின்பற்ற மறுத்துவிட்டனர்.
11 அவர்தம் செயல்களையும்
அவர் ஆற்றிய அருஞ்செயல்களையும்
அவர்கள் மறந்தனர்.

12 எகிப்து நாட்டில்,
சோவான் சமவெளியில்
அவர்களின் மூதாதையர் காணுமாறு
அவர் வியத்தகு செயல்கள் பல புரிந்தார்;
13 கடலைப் பிரித்து அவர்களை வழிநடத்தினார்;
தண்ணீரை அணைக்கட்டுப்போல
நிற்கும்படிச் செய்தார்;
14 பகலில் மேகத்தினாலும்
இரவு முழுவதும் நெருப்பின் ஒளியாலும்
அவர்களை வழி நடத்தினார்.
15 பாலைநிலத்தில் பாறைகளைப் பிளந்தார்;
ஆழத்தினின்று பொங்கிவருவது போன்ற நீரை
அவர்கள் நிறைவாகப் பருகச் செய்தார்;
16 பாறையினின்று நீரோடைகள் வெளிப்படச் செய்தார்;
ஆறுகளென நீரை அவர் பாய்ந்தோடச் செய்தார்.
17 ஆயினும், அவர்கள் அவருக்கெதிராகத்
தொடர்ந்து பாவம் செய்தனர்;
வறண்ட நிலத்தில்
உன்னதருக்கு எதிராய் எழுந்தனர்.
18 தம் விருப்பம்போல் உணவு கேட்டு
வேண்டுமென்றே இறைவனைச் சோதித்தனர்.
19 அவர்கள் கடவுளுக்கு எதிராக
இவ்வாறு பேசினார்கள்:
'பாலை நிலத்தில் விருந்தளிக்க
இறைவனால் இயலுமா?
20 உண்மைதான்!
அவர் பாறையை அதிரத் தட்டினார்;
நீர் பாய்ந்து வந்தது;
ஆறுகள் கரைபுரண்டு ஓடின.
ஆயினும், அப்பமளிக்க இயலுமா அவரால்?
தம் மக்களுக்கு இறைச்சி தர முடியுமா?'
21 எனவே, இதைக் கேட்ட ஆண்டவர் சினங்கொண்டார்;
நெருப்பு யாக்கோபுக்கு எதிராய்க் கிளர்ந்தெழுந்தது;
இஸ்ரயேல்மீது அவரது சினம் பொங்கியெழுந்தது.
22 ஏனெனில், அவர்கள்
கடவுள்மீது பற்றுறுதி கொள்ளவில்லை;
அவர் காப்பார் என்று நம்பவில்லை.
23 ஆயினும், மேலேயுள்ள வானங்களுக்கு
அவர் கட்டளையிட்டார்;
விண்ணகத்தின் கதவுகளைத் திறந்துவிட்டார்.
24 அவர்கள் உண்பதற்காக
மன்னாவை மழையெனப் பொழியச் செய்தார்;
அவர்களுக்கு வானத்து உணவை வழங்கினார்.
25 வான தூதரின் உணவை மானிடர் உண்டனர்;
அவர்களுக்கு வேண்டியமட்டும்
உணவுப் பொருளை அவர் அனுப்பினார்.
26 அவர் விண்ணுலகினின்று
கீழ்க்காற்றை இறங்கிவரச் செய்தார்;

தம் ஆற்றலினால் தென்காற்றை அழைத்துவந்தார்.
27 அவர் இறைச்சியைத்
துகள்துகளென அவர்கள்மீது பொழிந்தார்;
இறகுதிகழ் பறவைகளைக்
கடற்கரை மணலென வரவழைத்தார்.
28 அவற்றை அவர்தம் பாளையத்தின் நடுவிலும்
கூடாரத்தைச் சுற்றிலும் விழச்செய்தார்.
29 அவர்கள் உண்டனர்;
முற்றிலுமாய் நிறைவடைந்தனர்;
அவர்கள் விரும்பியவற்றையே அவர்
அவர்களுக்கு அளித்தார்.
30 அவர்களது பெருந்தீனி வேட்கை தணியுமுன்பே,
அவர்கள் வாயிலில் உணவு இருக்கும் பொழுதே,
31 கடவுளின் சினம்
அவர்களுக்கு எதிராக மூண்டெழுந்தது;
அவர்களுள் வலியோரை அவர் கொன்றார்;
இஸ்ரயேலின் இளைஞரை வீழ்த்தினார்.
32 இவையெல்லாம் நிகழ்ந்த பின்னும்,
அவர்கள் தொடர்ந்து பாவம் செய்தார்கள்;
அவர்தம் வியத்தகு செயல்களில்
நம்பிக்கை கொள்ளவில்லை.
33 ஆகையால், அவர்களது வாழ்நாளை
மூச்சென மறையச் செய்தார்;
அவர்களது ஆயுளைத்
திடீர்த் திகிலால் முடிவுறச் செய்தார்.
34 அவர்களை அவர் கொன்றபோது
அவரைத் தேடினர்;
மனம் மாறி
இறைவனைக் கருத்தாய் நாடினர்.
35 கடவுள் தங்கள் கற்பாறை என்பதையும்
உன்னதரான இறைவன் தங்கள் மீட்பர் என்பதையும்
அவர்கள் நினைவில் கொண்டனர்.
36 ஆயினும், அவர்கள்
உதட்டளவிலேயே அவரைப் புகழ்ந்தார்கள்;
தங்கள் நாவினால் அவரிடம் பொய் சொன்னார்கள்.
37 அவர்கள் இதயம்
அவரைப் பற்றிக் கொள்வதில் உறுதியாய் இல்லை;
அவரது உடன்படிக்கையில்
அவர்கள் நிலைத்து நிற்கவில்லை.
38 அவரோ இரக்கம் கொண்டவராய்,
அவர்கள் குற்றத்தை மன்னித்தார்;
அவர்களை அழித்துவிடவில்லை,
பலமுறை தம் கோபத்தை அடக்கிக்கொண்டார்.
தம் சினத்தையெல்லாம்
அவர்களுக்கு எதிராய் மூட்டவில்லை.
39 அவர்கள் வெறும் சதையே என்பதையும்
திரும்பி வராத காற்று என்பதையும்
அவர் நினைவுகூர்ந்தார்.
40 பாலை நிலத்தில் அவர்கள் எத்தனையோமுறை

அவருக்கெதிராய்க் கிளர்ந்தெழுந்தனர்!
வறண்ட நிலத்தில் அவர் மனத்தை வருத்தினர்!
41 இறைவனை அவர்கள் மீண்டும் மீண்டும் சோதித்தனர்;
இஸ்ரயேலின் தூயவருக்கு எரிச்சலூட்டினர்.
42 அவரது கைவன்மையை மறந்தனர்;
எதிரியிடமிருந்து அவர்
அவர்களை விடுவித்த நாளையும் மறந்தனர்;
43 அந்நாளில் எகிப்தில் அவர் அருஞ்செயல்கள் செய்தார்;
சோவான் சமவெளியில் வியத்தகு செயல்கள் புரிந்தார்.
44 அவர்களின் ஆறுகளைக் குருதியாக மாற்றினார்;
எனவே, தங்கள் ஓடைகளினின்று
அவர்களால் நீர் பருக இயலவில்லை.
45 அவர்களை விழுங்குமாறு அவர்கள்மீது ஈக்களையும்,
அவர்களது நாட்டை அழிக்குமாறு தவளைகளையும்
அவர் அனுப்பினார்.
46 அவர்களது விளைச்சலைப் பச்சைப் புழுக்களுக்கும்
அவர்களது உழைப்பின் பயனை
வெட்டுக்கிளிகளுக்கும் அவர் கொடுத்தார்.
47 கல்மழையினால் அவர்களுடைய
திராட்சைக் கொடிகளையும்
உறைபனியால் அவர்களுடைய
அத்தி மரங்களையும் அவர் அழித்தார்.
48 அவர்களுடைய கால்நடைகளைக் கல்மழையிடமும்
அவர்களுடைய ஆடுமாடுகளை இடி மின்னலிடமும்
அவர் ஒப்புவித்தார்.
49 தம் சினத்தையும், சீற்றத்தையும்
வெஞ்சினத்தையும் இன்னலையும்
-அழிவு கொணரும் தூதர் கூட்டத்தை-
அவர் ஏவினார்.
50 அவர் தமது சினத்திற்கு வழியைத் திறந்துவிட்டார்;
அவர்களைச் சாவினின்று தப்புவிக்கவில்லை;
அவர்களின் உயிரைக்
கொள்ளை நோய்க்கு ஒப்புவித்தார்.
51 எகிப்தின் அனைத்துத் தலைப்பேறுகளையும்
"காம்" கூடாரங்களில் ஆண் தலைப்பேறுகளையும்
அவர் சாகடித்தார்.
52 அவர்தம் மக்களை
ஆடுகளென வெளிக்கொணர்ந்தார்;
பாலைநிலத்தில் அவர்களுக்கு
மந்தையென வழி காட்டினார்.
53 பாதுகாப்புடன் அவர்களை
அவர் அழைத்துச் சென்றார்;
அவர்கள் அஞ்சவில்லை;
அவர்களுடைய எதிரிகளைக்
கடல் மூடிக்கொண்டது.
54 அவர் தமது திருநாட்டுக்கு,
தமது வலக்கரத்தால் வென்ற மலைக்கு,
அவர்களை அழைத்துச் சென்றார்.
55 அவர்கள் முன்னிலையில்

வேற்றினத்தாரை அவர் விரட்டியடித்தார்;
அவர்களுக்கு நாட்டைப் பங்கிட்டு
உரிமைச் சொத்தாகக் கொடுத்தார்;
இஸ்ரயேல் குலங்களை
அவர்கள் கூடாரங்களில் குடியேற்றினார்.
56 ஆயினும், உன்னதரான கடவுளை
அவர்கள் சோதித்தனர்;
அவருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தனர்;
அவர்தம் நியமங்களைக் கடைப்பிடிக்கவில்லை.
57 தங்கள் மூதாதையர்போல் அவர்கள் வழி தவறினர்;
நம்பிக்கைத் துரோகம் செய்தனர்;
கோணிய வில்லெனக் குறி மாறினர்.
58 தம் தொழுகை மேடுகளால் அவருக்குச் சினமூட்டினர்;
தம் வார்ப்புச் சிலைகளால் அவருக்கு ஆத்திரமூட்டினர்.
59 கடவுள் இதைக் கண்டு சினம் கொண்டார்;
இஸ்ரயேலை அவர் முழுமையாகப் புறக்கணித்தார்;
60 சீலோவில் அமைந்த
தம் உறைவிடத்தினின்று வெளியேறினார்;
மானிடர் நடுவில்
தாம் வாழ்ந்த கூடாரத்தினின்று அகன்றார்;
61 தம் வலிமையை
அடிமைத் தனத்திற்குக் கையளித்தார்;
தம் மாட்சியை எதிரியிடம் ஒப்புவித்தார்;
62 தம் மக்களை வாளுக்குக் கையளித்தார்;
தம் உரிமைச் சொத்தின் மீது கடுஞ் சினங் கொண்டார்.
63 அவர்களுடைய இளைஞரை நெருப்பு விழுங்கியது;
அவர்களுடைய கன்னியர்க்குத்
திருமணப் பாடல் இல்லாது போயிற்று.
64 அவர்களுடைய குருக்கள் வாளால் வீழ்த்தப்பட்டனர்;
அவர்களுடைய கைம்பெண்டிர்க்கு
ஒப்பாரி வைக்க வழியில்லை.
65 அப்பொழுது, உறக்கத்தினின்று எழுவோரைப்போல்,
திராட்சை மதுவால் களிப்புறும் வீரரைப்போல்
எம் தலைவர் விழித்தெழுந்தார்.
66 அவர் தம் எதிரிகளைப் புறமுதுகிடச் செய்தார்;
அவர்களை என்றென்றும் இகழ்ச்சிக்கு உள்ளாக்கினார்.
67 அவர் யோசேப்பின் கூடாரத்தைப் புறக்கணித்தார்;
எப்ராயிம் குலத்தைத் தேர்வு செய்யவில்லை.
68 ஆனால், யூதாவின் குலத்தைத்
தமக்கு விருப்பமான சீயோன் மலையை
அவர் தேர்ந்துகொண்டார்.
69 தம் திருத்தலத்தை உயர் விண்ணகம் போல்
அவர் அமைத்தார்;
மண்ணுலகத்தில் என்றும்
நிலைத்திருக்குமாறு எழுப்பினார்.
70 அவர் தாவீதைத் தம் ஊழியராய்த் தேர்ந்தெடுத்தார்;
ஆட்டு மந்தைகளினின்று அவரைப் பிரித்தெடுத்தார்.
71 இறைவன் தம் மக்களான யாக்கோபை,

*தம் உரிமைச் சொத்தான இஸ்ரயேலை,*
*பால் கொடுக்கும் ஆடுகளைப் பேணிய*
*தாவீது மேய்க்குமாறு செய்தார்.*
72 *அவரும் நேரிய உள்ளத்தோடு*
*அவர்களைப் பேணினார்;*
*கைவன்மையாலும் அறிவுத்திறனாலும்*
*அவர்களை வழிநடத்தினார்.*

திருப்பாடல் 78:1-72

**சிந்தனைக்கு**

*அருஞ்செயல்களை மறக்கும் கடவுள்தம் மக்கள் என்பது இத்திருப்பாடலுக்குச் சிறப்பான தலைப்பாக இருக்கும்; கடவுளின் எல்லையற்ற கிருபையும் ஆற்றல்மிகு அருஞ்செயல்களும், இஸ்ரயேலரின் ஓயாக் கலகங்களும் தீராத மீறுதல்களும் என்பதே இத்திருப்பாடலின் கருப்பொருள் எனலாம். வரலாற்றிலிருந்து கற்றுத் தெளிவு பெற இத்திருப்பாடல் நம்மை அழைக்கிறது.*

*ஆயினும்* (OV, *என்றாலும் / ஆனாலும்) என்று தொடங்கும் மூன்று வசனங்கள்* (17, 36, 56) *மனித இயல்பை வெளிப்படுத்துவனவாக உள்ளன. புதிய நன்மைகளை நாடும் மனித மனம், பழைய நன்மைகளை மறப்பது இயல்பாகத் தோன்றலாம்; ஆனால் நன்றி மறப்பது நன்றன்று. அது சுயநல வேட்கை.*

*கடவுள் மோசே வழியாக எகிப்தில் நிகழ்த்திய அருஞ்செயல்களை நினைவூட்டித் தொடங்கும் திருப்பாடல், தாவீது அரசராவதில் முடிகிறது; இவ்வாறு இஸ்ரயேல் முழுமைக்குமான தலைவராக மோசேக்குப் பிறகு தாவீதை முன்னிறுத்துகிறது.*

*திருப்பாடல்* 119*க்கு அடுத்து நீண்ட திருப்பாடல்; வரலாற்றுத் திருப்பாடல்களில் நீண்ட திருப்பாடல். மோசே மற்றும் ஆரோனின் தலைமையைக் குறிப்பிட்டுத் திருப்பாடல்* 77 *முடிகிறது; அதன் தொடர்ச்சியாக இத்திருப்பாடல் அமைகிறது. அவ்விதத்தில், இப்பாடல், திருப்பாடல்* 105, 106 *மற்றும்* 107 *ஆகியவற்றுடன் நெருங்கிய தொடர்புடையது.*

*வடநாடு தென்னாடு குறித்த அரசியலையும் இத்திருப்பாடல் முன்வைக்கிறது, வ.*9-11 & 67; *தலைமை ஏன் எப்ராயிமிடமிருந்து யூதாவுக்கு மாறியது என்பதன் விளக்கத்தை இங்கே பார்க்கலாம்; அதன் வழியாக, கடவுளின் தெரிந்தெடுப்பின் சிறப்பை முதன்மைப்படுத்துகிறது.*

*"குழந்தைகளுக்குப் பெற்றோர் சொல்லித்தர வேண்டிய பாடங்கள்" என்று நேர்மறையாக இத்திருப்பாடலுக்குத் தலைப்பிடலாம்* (வ.4). *நம்மில் எத்தனை பேர் இத்திருப்பாடலைக் குழந்தைகளோடு வாசித்திருக்கிறோம்?*

*மஸ்கீல் என்னும் அறப்பாடல், பார்க்க, திருப்பாடல்* 32 *குறிப்புகள்.*
🕎

*அமைப்பு:*
வ.1-8, *திருப்பாடலின் நோக்கம்*
வ.9-11, *எப்ராயிமின் நம்பிக்கைத் துரோகம்*
வ.12-31, *விடுதலைப் பயணத்தில் கடவுளும் அவர்தம் மக்களும்*
வ.32-39, *கடவுளின் நீதித் தீர்ப்பும், இஸ்ரயேலரின் உதட்டளவிலான அறிக்கையும்*
வ.40-55, *பாலை நிலத்தில் இஸ்ரயேலரின் கிளர்ச்சி*

வ.56-64, வாக்களிக்கப்பட்ட நாட்டில் இஸ்ரயேலரின் நம்பிக்கைத் துரோகமும் கடவுளின் நீதித் தீர்ப்பும்
வ.65-72, தாவீதை அரசராக நிலைநிறுத்திய கடவுளின் கருணைச் செயல்

வசனம் 78:1-8
தான் சொல்வதைக் கேட்க அழைப்பும், தான் சொல்ல விளையும் செய்திகள் எத்தகையவை, அவற்றின் மூலச் சான்றுகள் எவை என்கிற விளக்கமும்.

முந்தைய தலைமுறைகளின் தவறுகளை அறிந்துணர்ந்து, இன்றைய தலைமுறையினர் செம்மையான வழிகளில் வாழ அறவுரை. "கடவுளின் அருஞ்செயல்களை மறப்போர், நிச்சயமாகத் தங்கள் செயல்பாடுகளில் தோல்வி அடைவர்." (ஸ்பர்ஜின்)

வசனம் 78:1
பாடலைத் தொடங்கும் திருப்பாடகர், கவனத்தை ஈர்க்கும் வகையில் முதலில் மக்களை அழைக்கிறார்.

வசனம் 78:2
பார்க்க, மத்தேயு 13:35; மேலும், மாற்கு 4:33-34.

"நீதிமொழிகள்" -
OV, உவமைகள்.
எபிரேயச் சொல் mâshâwl, உவமை, பழமொழி என்று பொருள் படும். (KJV பைபிளில், உவமை / உவமைகள் என்று 18 முறையும், நீதிமொழி / நீதிமொழிகள் என்று 19 முறையும் பொருள் கொள்ளப்பட்டுள்ளது.) உவமைகள் வாயிலாகப் பேசும் கிறிஸ்து இயேசுவைக் குறிக்க, மத்தேயு நற்செய்தி நூலில் எடுத்தாளப்பட்டுள்ள இந்த வசனத்தை வேறு விதமாக மொழிபெயர்ப்பது சரியன்று.

வசனம் 78:3
பார்த்தல் அறிதலுக்குரிய ஒரு செயல் எனில், கேட்டல் மற்றொரு செயல். எழுதப்பட்ட வார்த்தைக்கு முன்பு, கேட்டலே வரலாற்றை அறியும் பெரும் அறிவுக் கருவியாக இருந்தது. யாரிடமிருந்து கேட்கிறோம் என்பது முக்கியமான ஒன்று; தந்தையர் தங்கள் வழிமரபுக்குக் கற்றுத் தந்தனர்; அவர்கள் நலமானதையே கற்றுத் தருவர், நீதிமொழிகள் 2:1-2&10.

வசனம் 78:4
வரும் தலைமுறைக்குக் கடவுளைக் குறித்த செய்திகளைப் பகிர வேண்டும் என்பது இறைக் கட்டளை, விடுதலைப் பயணம் 12:26-27, 13:8-9; இணைச் சட்டம் 4:9, 6:7&20-25, 11:19, 32:46. தலைமுறை தலைமுறையாக இறைவார்த்தையைக் கடத்துவதும், ஆண்டவருக்கேற்ற முறையில் கண்டித்துத் திருத்தி, அறிவு புகட்டி வளர்ப்பதும் பெற்றோரின் கடமை, எபேசியர் 6:4.

வசனம் 78:5
வேறு சொற்களில், எசாயா 8:20.

அருஞ்செயல்களால் இஸ்ரயேலரை மீட்டுக் கொண்ட கடவுள் (வ.4ஆ), அவர்கள் என்றைக்கும் தம் மக்களாகத் திகழ, திருச்சட்டத்தையும் நியமங்களையும் ஏற்படுத்தினார்.

வசனம் 78:6-8

*தங்கள் மூதாதையரைப் போலன்றி, தம்முடைய அருஞ்செயல்களைக் கேட்டு நம்பி, தாம் வழங்கிய திருச்சட்டங்களைக் கடைப்பிடித்து நேரிய வழியில் இனிவரும் தலைமுறையினர் வாழ வேண்டும் என்பதே கடவுளின் விருப்பமும் எதிர்பார்ப்பும் ஆகும். கடைப்பிடித்து வாழவும், கவனமாகத் தவிர்க்கவும், நல்லவையும் தீயவையுமான வாழ்க்கைப் பாடங்கள் பலவும் பைபிளில் நமக்காக வைக்கப்பட்டுள்ளன. கற்றுத் தெளிவடைவோம்.*

வசனம் 78:9-11

*எப்ராயிமுக்கு யாக்கோபு வழங்கிய சிறப்பான ஆசி, தொடக்க நூல்* 48:13-20.

*எப்ராயிமியர் வடநாட்டின் பெரிய குலமாக விளங்கினர்; போர்க் கருவிகள் ஏந்தி, ஆற்றல் மிக்கோராகத் திகழ்ந்தனர் (நீதித் தலைவர்கள்* 8:1-3). *யோசுவாவும் கிதியோனும் அக்குலத்தில் உதித்த மாண்புறு மாந்தர்.*

*போர்களின் அடிப்படையில், எப்ராயிமியரின் தோல்வியை, நீதித் தலைவர்கள்* 12:1-6 *பகுதியில் வாசிக்கிறோம். கடவுளின் படையோடு இணைந்து போரிடத் தகுதியற்றவர்களாக, அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டதை,* 2 *குறிப்பேடு* 25:6-10 *பகுதியில் வாசிக்கிறோம்.*

*ஆனால் திருப்பாடலின் இந்த வசனங்கள் சொல்வது போல, போரில் தோற்று ஓடிய எப்ராயிமியரைக் குறிக்கும் அளவிலான நிகழ்வு ஏதும் பழைய ஏற்பாட்டில் இல்லை என்பதே பைபிள் ஆய்வாளர்கள் பலரின் கருத்து. கடவுளின் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், அவருக்கே எதிராகக் கலகம் செய்யும் வழிமரபினராக அவர்கள் வாழ்ந்தனர் என்பதையே திருப்பாடகர் இங்குக் குறிப்பிடுகிறார்.*

*எப்ராயிமியர் என்ற சொல்லால், வடநாட்டினரான இஸ்ரயேலர் அனைவரும் குறிப்பிடப்படுவதை* 2 *குறிப்பேடு* 25:7*ல் வாசிக்கிறோம்.*

வசனம் 78:12 & 43

*"சோவான்" -*

*நைல் ஆற்றுப் படுகையில் அமைந்த எகிப்தின் முதன்மையான நகர்களில் ஒன்று (எண்ணிக்கை* 13:22); *பின்னாட்களில் எகிப்தியத் தலைநகர், எசாயா* 19:11&13, 30:4; *எசேக்கியேல்* 30:14.

வசனம் 78:13

*இஸ்ரயேலர் செங்கடலைக் கடத்தல், விடுதலைப் பயணம்* 14:21-22, 15:8.

வசனம் 78:14

*பகலில் மேகத்தின் நிழலிலும் இரவில் நெருப்பின் ஒளியிலும் வழிநடத்திய கடவுள், விடுதலைப் பயணம்* 14:19-20, 40:36-38.

வசனம் 78:15-16

*பாறைகளைப் பிளந்து நீர் - ஓரேபிலும் மெரிபாவிலும் நிகழ்ந்தவை, விடுதலைப் பயணம்* 17:1-7; *எண்ணிக்கை* 20:7-11; *திருப்பாடல்* 105:41, 114:8, 107:35.

வசனம் 78:17-20

*இணைச் சட்டம்* 6:16. மேலும், 95:9, 106:14.

*கடவுளுக்கும் அவர்தம் ஊழியர் மோசேக்கும் எதிராக இஸ்ரயேலரின் கலகம்.*

*கலகத்தன்மை, மீண்டும், வ.*36-37 & *வ.*56-58; மேலும், 95:8-9.

வசனம் 78:19-20
*கேள்விகளை எழுப்பும் பற்றுறுதி அற்ற உள்ளம்.*
*மாறாக, பற்றுறுதியில் களிகூரும் உள்ளம்,* 23:5.

வசனம் 78:21-22
*நெருப்பாக எழுந்த கடவுளின் சினம், எண்ணிக்கை* 11:1-3; *திருப்பாடல்* 90:7-11.

வசனம் 78:23-25
"*விண்ணகத்தின் கதவுகள்*" -
*உருவகமாக, தொடக்க நூல்* 7:11; 2 *அரசர்கள்* 7:2; *மலாக்கி* 3:10.

*வானவரின் உணவாகிய மன்னாவை அருளிய கடவுள், விடுதலைப் பயணம்* 16:4-31.

வசனம் 78:25
"*வான தூதர்*" -
*வலிமை மிக்கோர்/மிக்கவை எனப் பொருள்படும் எபிரேயச் சொல்* - abbîyr, *இங்கு மட்டுமே வான தூதர் என்ற பொருளில்.*

வசனம் 78:26-31
*இறைச்சி உண்ண முறுமுறுத்த இஸ்ரயேலருக்கு உண்ண இறைச்சியும், முறுமுறுப்புக்குத் தண்டனையும்: எண்ணிக்கை* 11:18-20,31-34.

வசனம் 78:26
*பார்க்க, எண்ணிக்கை* 11:31, "... *ஒரு காற்று* ...". *காற்றின் திசைகளை விரிவாக விவரிக்கும் திருப்பாடகர்.*

வசனம் 78:33
*கடவுளின் சினத்தின் விளைவு, சடுதியில் அழியும் வாழ்க்கையும், சாவச்சமும்.*

*கடவுளின் சினத்தின் விளைவாக, ஒரு தலைமுறையே பாலைவெளியில் அழிந்தனர் என்பதை மனதில் கொள்ள வேண்டும்* (*எண்ணிக்கை* 14:22-23 & 28-35).

வசனம் 78:34
*கடினப்பாடுகளில் கடவுளைத் தேடும் மனிதர்.*
*எதற்காக நாம் கடவுளைத் தேடுகிறோம்?*
*அவரை நேசிப்பதாலா? நேர்மையற்ற நமக்கு நேரிட்ட விளைவுகளினாலா?*

வசனம் 78:35
*கற்பாறையும் மீட்பருமான, உன்னதரான கடவுள்:* 18:31, 19:14; *தொடக்க நூல்* 49:24; *இணைச் சட்டம்* 32:4&15.

வசனம் 78:36-37 -எதிர்- 78:38-39
*நிலையற்ற மனித மனநிலையும், என்றென்றும் நீடித்திருக்கும் கடவுளின் இரக்கமும் மன்னிப்பும், விடுதலைப் பயணம்* 34:6-7; *எண்ணிக்கை* 14:18-20. *மேலும் பார்க்க, எசாயா* 48:9.

வசனம் 78:42
*கடவுளின் கிருபைகளை நினைவுகூர மறுக்கும் மனம், நீதித் தலைவர்கள்* 3:7 & 8:33-34.

வசனம் 78:43-51
*நினைவுகூரப்படும் எகிப்திய வாதைகள், விடுதலைப் பயணம் 7 ~ 12.*

வசனம் 78:51
*"காம் கூடாரங்கள்" -*
*நோவாவின் மகனாகிய காமின் வழிவந்த எகிப்தியர், 105:23&27, 106:21-22; தொடக்க நூல் 10:6.*

வசனம் 78:52-53
*"...ஆடுகள்... மந்தை..." -*
*ஆசாபிய உருவகம், 77:20, 80:1. கடவுளே ஆயராக, 80:1 மற்றும் இங்கும்.*

*பிளந்த செங்கடலின் வழியே, இஸ்ரயேலர் நடந்து வந்த காட்சியை (விடுதலைப் பயணம் 14:21-22) எண்ணி ஆய்ந்து பாருங்கள். இன்றைக்குக் கண்ணாடிச் சுவர்களால் தடுக்கப்பட்ட தண்ணீருக்கு அடியில் நாம் நடந்து செல்ல முடியும்; அதிலும் நடந்து செல்ல அஞ்சுவோர் உண்டு; ஆனால் பிளக்கப்பட்ட தண்ணீரே சுவர்கள் போல இருபுறமும் நிற்க, அவற்றின் இடையே இஸ்ரயேலர் நடந்து வந்தனர்; கடவுள் மீது நம்பிக்கை, கடவுள், தம் மக்கள் மீது கொண்ட மாறாக் கிருபை - இவைதானே அந்தப் பேரச்சத்தை வெல்ல அடிப்படை. கடலில் ஆண்டவரோடு நடந்த பேதுருவுக்கு நேரிட்டது போலல்லாமல், அச்சம் மேலிடாதவாறு இஸ்ரயேலரைக் காத்தவர் கடவுள் அல்லவா!*

வசனம் 78:54
*சீயோன் மலையைக் கைப்பற்றிய தாவீதின் காலத்திய நிகழ்வு (யோசுவா 15:63; நீதித் தலைவர்கள் 1:21; 2 சாமுவேல் 5:6-7) முன்னரே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வோடு ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட நாட்டை அவருடைய வழிமரபினருக்கு உரிமையாக்கும் இறைவாக்கு முழுமையாக நிறைவேறியது.*

வசனம் 78:55
*வாக்களிக்கப்பட்ட இஸ்ரயேலருக்கு நாடு கையளிக்கப்படுதலும், குலங்கள் நடுவே பங்கிடப்படுதலும், யோசுவா 6 ~ 22. ஒரே வசனத்தில் யோசுவா நூல், சுருக்கமாக!*

வசனம் 78:60
*எப்ராயிமின் நிலப்பகுதியான சீலோவிலே கடவுளின் உறைவிடம், யோசுவா 18:1.*

வசனம் 78:61-64
*கடவுளின் ஆற்றல் மற்றும் மாட்சியின் அடையாளமான உடன்படிக்கைப் பேழை, போர்க்களங்களில் முன்னெடுத்துச் செல்லப்பட்டது (யோசுவா 6:6-14). இஸ்ரயேலரின் எதிரிகள் அதற்கு அஞ்சினர் (1 சாமுவேல் 4:7-8).*

*ஆனால் அத்தகைய உடன்படிக்கைப் பேழை எதிரிகளால் கைப்பற்றப்படக் கடவுள் அனுமதித்தார்; அதன் தொடர்பான நிகழ்வுகள், இஸ்ரயேலருக்குக் கடவுள் வழங்கிய துயர்மிகு தண்டனைகள், 1 சாமுவேல் 4 ~ 6 பகுதியில்.*

வசனம் 78:65
*தங்கள் வேளைக்குக் காத்திருக்கும் ஆற்றல்மிகு போர் வீரரைப் போல் கடவுள் என ஆசாபின் உருவகம்; இதேபோன்ற உருவகங்கள் இறைவாக்கினர் எசாயாவின் மொழிகளில், எசாயா 42:13-16 & 51:9-11.*

வசனம் 78:67-69
மேலும் பார்க்க வ.9-11.

யோசேப்பின் கூடாரம் என்பது மனாசே மற்றும் எப்ராயிமின் குலத்தினர்; அதிகமாக ஆசீர்வதிக்கப்பட்ட எப்ராயிமையே கடவுள் மீண்டும் மீண்டும் கேள்விக்கு உட்படுத்துகிறார்.

தம் உறைவிடமாக எப்ராயிமின் எல்லைகளுக்குள் சீலோவை ஆண்டவர் தெரிந்து கொண்டார், யோசுவா 16:6 & 18:1. ஆற்றல்மிக்க எப்ராயிமியர் பேழையைக் காக்கும் தங்கள் கடமையிலிருந்து கேவலமாகத் தவறினர்; இறைவார்த்தையை அவர்கள் கடைப்பிடிக்கவில்லை. அதன் விளைவாக, அவர்களை விட்டு விலகிய கடவுள், இப்போது யூதா குலத்தைத் தெரிந்து கொண்டு, தமது உறைவிடமாக சீயோன் மலையைத் தெரிந்து கொண்டார்.

வசனம் 78:70-72
தாவீதின் எளிமையான பின்னணியை விளக்கும் ஆசாப், அவரைக் கடவுள் உயர்த்திய உயரங்களைக் குறிப்பிடாமல், அவர் வழங்கிய பொறுப்புகளைக் குறிப்பிடுகிறார். கடவுள் நம்மை உயர்த்தும் வேளையில், நாம் அதனை எவ்வாறு பார்க்கிறோம்? ஆசி என்றா? பொறுப்பு என்றா?

தாவீதின் காலத்தில் வாழ்ந்த ஆசாப், ஒரு சாட்சியாக, ஆண்டவர் அருளிய பொறுப்பை தாவீது நிறைவேற்றிய சிறப்பைக் கூறி, தனது வரலாற்றுத் திருப்பாடலை நிறைவு செய்கிறார்.

"பெற்றோரின் கூடுதலான கற்பித்தலே சிறந்தது; தாயின் கண்ணீருக்கும் தந்தையின் ஜெபத்திற்கும், ஆயர்கள், ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியர்களின் போதனைகள் ஒரு காலத்திலும் ஈடாக மாட்டா." (ஸ்பர்ஜின்)

வரலாற்று நிகழ்வுகள் இன்னும் பெரிய அளவில் மீண்டும் நிகழும் என்பதே விதி; வரலாற்றுத் தவறுகளிலிருந்து நாம் கற்றுக்கொண்டு, அவைகளிலிருந்து விடுபட்டு, முற்றுமுழுதாகக் கடவுளைச் சார்ந்து வாழ எழுதப்பட்ட இத்திருப்பாடலின் போதனைகளுக்கு ஏற்ப - நம் வாழ்க்கையை, நமது குழந்தைகளின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்த ஒப்புக் கொடுப்போமா!

## 19 திருப்பாடல் 79

1 கடவுளே, வேற்று நாட்டினர்
உமது உரிமைச் சொத்தினுள் புகுந்துள்ளனர்;
உமது திருக்கோவிலைத் தீட்டுப்படுத்தியுள்ளனர்;
எருசலேமைப் பாழடையச் செய்தனர்.
2 உம் ஊழியரின் சடலங்களை
வானத்துப் பறவைகளுக்கு உணவாகவும்
உம் பற்றுமிகு அடியாரின் உடல்களைக்
காட்டு விலங்குகளுக்கு உணவாகவும்
அவர்கள் அளித்துள்ளார்கள்;
3 அவர்களின் இரத்தத்தைத் தண்ணீரென
எருசலேமைச் சுற்றிலும் அள்ளி இறைத்தார்கள்;

அவர்களை அடக்கம் செய்ய எவரும் இல்லை.
4 எங்களை அடுத்து வாழ்வோரின்
பழிச்சொல்லுக்கு இலக்கானோம்;
எங்களைச் சூழ்ந்துள்ளோரின்
நகைப்புக்கும் ஏளனத்திற்கும் ஆளாகிவிட்டோம்.
5 ஆண்டவரே! இன்னும் எவ்வளவு காலம்
நீர் சினம் கொண்டிருப்பீர்?
என்றென்றுமா?
உமது வெஞ்சினம் நெருப்பாக எரியுமோ?
6 உம்மை அறியாத வேற்று நாட்டினர்மீது,
உமது பெயரைத் தொழாத அரசர்கள் மீது
உம் சினத்தைக் கொட்டியருளும்.
7 ஏனெனில், அவர்கள்
யாக்கோபை விழுங்கிவிட்டார்கள்;
அவரது உறைவிடத்தைப் பாழாக்கி விட்டார்கள்.
8 எம் மூதாதையரின் குற்றங்களை
எம்மீது சுமத்தாதேயும்!
உம் இரக்கம் எமக்கு விரைவில் கிடைப்பதாக!
நாங்கள் மிகவும் தாழ்த்தப்பட்டிருக்கின்றோம்.
9 எங்கள் மீட்பராகிய கடவுளே!
உமது பெயரின் மாட்சியை முன்னிட்டு
எங்களுக்கு உதவி செய்தருளும்;
உமது பெயரை முன்னிட்டு
எங்களை விடுவித்தருளும்;
எங்கள் பாவங்களை மன்னித்தருளும்.
10 'அவர்களின் கடவுள் எங்கே?' என்று
அண்டை நாட்டினர் ஏன் சொல்லவேண்டும்?
உம்முடைய ஊழியரின் இரத்தத்தைச் சிந்தியதற்காக
நீர் அவர்களை, என் கண்ணெதிரே, பழிதீர்த்தருளும்.
11 சிறைப்பட்டோரின் பெருமூச்சு
உம் திருமுன் வருவதாக!
கொலைத் தீர்ப்புப் பெற்றோரை
உம் புயவலிமை காப்பதாக.
12 ஆண்டவரே, எம் அண்டை நாட்டார்
உம்மைப் பழித்துரைத்த இழிச்சொல்லுக்காக,
ஏழு மடங்கு தண்டனை
அவர்கள் மடியில் விழச்செய்யும்.
13 அப்பொழுது உம் மக்களும்,
உமது மேய்ச்சலின் மந்தையுமான நாங்கள்
என்றென்றும் உம்மைப் போற்றிடுவோம்!
தலைமுறைதோறும் உமது புகழை எடுத்துரைப்போம்.

திருப்பாடல் 79:1-13

**சிந்தனைக்கு**

கல்தேயரின் படையெடுப்போடு (கி.மு. 587-586) தொடர்புடைய திருப்பாடல் (2 அரசர்கள் 25:8-10; 2 குறிப்பேடு 36:17-19; எரேமியா 39:1-10 & 52:12-14). தாவீதின் காலத்தில் வாழ்ந்த ஆசாப் இப்பாடலை எழுதியிருக்க வாய்ப்பில்லை; ஆசாபிய வழிமரபில் பின்னாட்களில்

வாழ்ந்த ஒருவர் அல்லது ஆசாப் என்று பெயர் கொண்ட ஒருவர் எழுதியிருக்கக் கூடும் (2 குறிப்பேடு 35:15). இங்கு ஓர் அறிக்கையாக விளங்கும் வ.3, ஓர் இறைவாக்காக 1 மக்கபேயர் 7:17ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

கல்தேயரின் கொடுஞ்செயல்கள் மற்றும் மூதாதையரின் குற்றங்கள் குறித்துப் பேசும் திருப்பாடகர், தன் காலத்திய இஸ்ரயேலரின் மீறுதல்கள் குறித்து எதுவும் அறிக்கையிடவில்லை என்பது வியப்பாக உள்ளது. வ.9ல் மன்னித்தருள மிகச் சுருக்கமான வேண்டுதலை மட்டுமே ஏறெடுக்கிறார். கடும் பஞ்சம், கொடிய கொள்ளை நோய் போலவே, நாட்டின் முற்றுகை மற்றும் மக்களின் சிதறடிப்பும் கடவுள் எச்சரித்த கீழ்ப்படியாமையின் பின்விளைவுகள் அல்லவா! (பார்க்க, லேவியர் 26:23-46; இணைச் சட்டம் 28:47-68). மேலும் நமது உள்ளங்கள் பதறும் வகையில், இறைவாக்கினர் ஒருவர் இந்த வரலாற்று நிகழ்வைப் பதிவு செய்யும் முறையை அறியப் பார்க்க, எரேமியாவின் புலம்பல் 1:8-9.

திருப்பாடல் 74டன் ஒப்பிடத்தக்க திருப்பாடல்.

அமைப்பு:
வ.1-4, எருசலேமின் அழிவுக்காகப் புலம்பல்
வ.5-7, எதிரிகளைத் தண்டிக்க மன்றாடல்
வ.9-11, மன்னிப்பு மற்றும் மீட்புக்காக மன்றாடல்
வ.12-13, நிறைவு மன்றாட்டும் பொருத்தனையும்

வசனம் 79:1
"...உமது உரிமைச் சொத்து..." -
வாக்களிக்கப்பட்ட நாடு மட்டுமல்லாமல் இஸ்ரயேலரும்; பார்க்க, 78:62&71.

வசனம் 79:2-3
இஸ்ரயேலரின் பாரம்பரிய சவ அடக்கம் என்பது உடலைத் துணியில் சுற்றி, பாதுகாப்பாக மூதாதையரின் கல்லறைகளுக்கு அருகில் புதைப்பது; இறுதிச்சடங்கு ஏதுமற்றுப் போவது உள்ளத்தை அறுக்கும் அவமானமும் வேதனையும் ஆகும்.

வசனம் 79:3
மனிதரின் உயிர் இரத்தத்தில் உள்ளது (தொடக்க நூல் 9:4-6). எருசலேம் நகரில், கல்தேயர் படையெடுப்பில் நிகழ்ந்தவை கடவுள் முற்றிலும் வெறுக்கும் செயல்கள் என்று அவரிடம் திருப்பாடகர் முறையிடுகிறார்.

வசனம் 79:5 & 10
கடவுள் முன் எழுப்பப்பட்ட கேள்விகள்.

வசனம் 79:6
இஸ்ரயேலரின் மீது கடவுள் கொண்ட சினத்திற்கு எதிராக வினாத் தொடுத்த திருப்பாடகர், அந்தச் சினத்தை வேற்று நாட்டினர் மீது கொட்ட அவரிடம் மன்றாடுகிறார்.

ஆண்டவரை அறியாதவர்கள் என்பதால் வேற்றின மக்கள் மீது பாவம் சுமராது; அவரை அறிந்தவர்கள் என்பதால், அறிந்தே மீறும் நம்மீது அதிகமான பாவம் சுமரும் (யோவான் 15:22-24).

வசனம் 79:7
இஸ்ரயேலரின் பேரழிவு குறிப்பிடப்படுகிறது.

வசனம் 79:8
"எம் மூதாதையரின் குற்றங்களை எம்மீது சுமத்தாதேயும்..." -
இதே காலத்தில், எரேமியா உரைத்த இறைவாக்கு, எரேமியா 31:29-30. மேலும் பார்க்க, எசேக்கியேல் 18:2-4.

வசனம் 79:9
"...உமது பெயரின் மாட்சியை முன்னிட்டு..." -
இரக்கமும் அருளும் கிருபையும் நிறைந்த ஆண்டவர், 86:15, 103:8.

வசனம் 79:12-13
பொருத்தனையை நிறைவேற்ற உறுதி பூணும் திருப்பாடகர்.

"...உமது மேய்ச்சலின் மந்தை..." -
ஆசாபியத் திருப்பாடல்களில் காணப்படும் உருவகம், 77:20, 78:72, 80:1.
🕎

"... வேற்று நாட்டினர் மீது ... உம் சினத்தைக் கொட்டியருளும்" (வ.6)
"... நீர் அவர்களை என் கண்ணெதிரே பழிதீர்த்தருளும்" (வ.10)
"... ஏழு மடங்குத் தண்டனை அவர்கள் மடியில் விழச் செய்யும்" (வ.12)
- பழிவாங்க விழையும் உள்ளத்தின் வெளிப்பாடு.

இன்றைக்கும் நம்மில் பலரது உள்ளத்தின் வேண்டுதல்கள் இவ்வாறாக இருக்கலாம்; ஆனால் கிறிஸ்து இயேசுவில் பற்றுறுதி கொண்டோருக்கான அறைகூவல் வேறு:
"நான் உங்களுக்குச் சொல்கிறேன்: உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள். ஏனெனில் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார். ... உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்."
(மத்தேயு 5:44,45&48)

✝

## 19 திருப்பாடல் 80

*(நாட்டின் புதுவாழ்வுக்காக மன்றாடல்)*

*பாடகர் தலைவர்க்கு; 'சான்று பகர் லீலி மலர்' என்ற மெட்டு; ஆசாபின் புகழ்ப்பா*
1 இஸ்ரயேலின் ஆயரே, செவிசாயும்!
யோசேப்பை மந்தையென நடத்திச் செல்கின்றவரே!
கேருபுகளின் மீது வீற்றிருப்பவரே, ஒளிர்ந்திடும்!
2 எப்ராயிம், பென்யமின், மனாசேயின் முன்னிலையில்
உமது ஆற்றலைக் கிளர்ந்தெழச் செய்து

எம்மை மீட்க வாரும்!
3 கடவுளே, எங்களை
முன்னைய நன்னிலைக்குக் கொணர்ந்தருளும்!
எம்மை மீட்குமாறு உமது முக ஒளியைக் காட்டியருளும்!
4 படைகளின் கடவுளாம் ஆண்டவரே!
உம் மக்களின் வேண்டுதலுக்கு எதிராக
எத்தனை நாள் நீர் சினம் கொண்டிருப்பீர்?
5 கண்ணீராம் உணவை அவர்கள் உண்ணச் செய்தீர்;
கண்ணீரை அவர்கள் பெருமளவு பருகச் செய்தீர்.
6 எங்கள் அண்டை நாட்டாருக்கு
எங்களைச் சர்ச்சைப்பொருள் ஆக்கினீர்;
எங்கள் எதிரிகள் எம்மை ஏளனம் செய்தார்கள்.
7 படைகளின் கடவுளே! எங்களை
முன்னைய நன்னிலைக்குக் கொணர்ந்தருளும்;
எம்மை மீட்குமாறு உமது முக ஒளியைக் காட்டியருளும்.
8 எகிப்தினின்று திராட்சைச்செடி
ஒன்றைக் கொண்டுவந்தீர்;
வேற்றினத்தாரை விரட்டிவிட்டு அதனை நட்டு வைத்தீர்.
9 அதற்கென நிலத்தை ஒழுங்குபடுத்திக் கொடுத்தீர்;
அது ஆழ வேரூன்றி நாட்டை நிரப்பியது.
10 அதன் நிழல் மலைகளையும்
அதன் கிளைகள்
வலிமைமிகு கேதுரு மரங்களையும் மூடின.
11 அதன் கொடிகள் கடல்வரையும்
அதன் தளிர்கள் பேராறுவரையும் பரவின.
12 பின்னர், நீர் ஏன்
அதன் மதில்களைத் தகர்த்துவிட்டீர்?
அவ்வழிச்செல்வோர் அனைவரும்
அதன் பழத்தைப் பறிக்கின்றனரே!
13 காட்டுப் பன்றிகள் அதனை அழிக்கின்றன;
வயல்வெளி உயிரினங்கள் அதனை மேய்கின்றன.
14 படைகளின் கடவுளே! மீண்டும் வாரும்!
விண்ணுலகினின்று கண்ணோக்கிப் பாரும்;
இந்த திராட்சைக் கொடிமீது பரிவு காட்டும்!
15 உமது வலக்கை நட்டுவைத்த கிளையை,
உமக்கென நீர் வளர்த்த மகவைக் காத்தருளும்!
16 அவர்கள் அதற்குத் தீ மூட்டினார்கள்;
அதை வெட்டித்; தள்ளிவிட்டார்கள்;
உமது முகத்தின் சினமிகு நோக்கினால்,
அவர்கள் அழிந்துபோவார்களாக!
17 உமது வலப்பக்கம் இருக்கும் மனிதரை
உமது கை காப்பதாக!
உமக்கென்றே நீர் உறுதிபெறச் செய்த
மானிட மைந்தரைக் காப்பதாக!
18 இனி நாங்கள் உம்மைவிட்டு அகலமாட்டோம்;
எமக்கு வாழ்வு அளித்தருளும்;
நாங்கள் உமது பெயரைத் தொழுவோம்.
19 படைகளின் கடவுளான ஆண்டவரே!

எங்களை முன்னைய நன்னிலைக்குக்
கொணர்ந்தருளும்!
நாங்கள் விடுதலை பெறுமாறு
உமது முக ஒளியைக் காட்டியருளும்!

திருப்பாடல் 80:1-19

**சிந்தனைக்கு**

"யோசேப்பை மந்தையென" (வ.1) மற்றும் "எப்ராயிம், பென்யமின், மனாசே" (வ.2) - இவை வடநாடாகிய சமாரியாவைக் குறிப்பவை. இந்த அடிப்படையில், வடநாட்டின் அழிவைக் குறித்து (கி.மு. 724-722) (2 அரசர்கள் 17:1-6), எருசலேமில் வாழ்ந்த ஆசாபின் வழிமரபினரில் ஒருவர் எழுதிய திருப்பாடல் என்று சொல்லப்படுகிறது. தங்கள் சகோதரர்களாகிய வடநாட்டினர் துன்புற்ற வேளையில், அவர்களின் மீட்புக்காக, நல்வாழ்வுக்காகத் தென்னாட்டினர் கடவுளிடம் மன்றாடினர் என்பது உற்று நோக்கத்தக்கது.

கடவுளை ஆயர் (வ.1) என்று ஆசாபிய வழியில் உருவகப்படுத்தும் அதேவேளையில், அவரை ஒரு தோட்டக்காரராகவும் (வ.8-16) சித்தரிக்கிறார் இப்பாடலை இயற்றியவர். அதன் அடிப்படையில், "கடவுளாகிய ஆண்டவரின் திராட்சைக் கொடி" எனல் சிறப்பு.

'சான்று பகர் லீலி மலர்' - பார்க்க, திருப்பாடல் 45, குறிப்பு.

அமைப்பு:
வ.1-3, உதவிக்காக வேண்டல்
வ.4-7, செவிமடுக்க மன்றாடல்
வ.8-17, கடவுள் நாட்டிய கொடியைக் காக்க வேண்டல்
வ.18-19, பற்றுறுதி அறிக்கையும் மன்றாட்டும்

வசனம் 80:1
"இஸ்ரயேலின் ஆயரே" -
பார்க்க, 23:1&121:4.
முந்தைய திருப்பாடலின் (79:13) தொடர்ச்சியாக அமைந்த அழைப்பு.

"யோசேப்பை மந்தையென" -
யோசேப்பின் மைந்தர்களான மனாசே மற்றும் எப்ராயிமின் குலத்தினர் வடநாட்டின் மிகப்பெரிய வழிமரபினர்.

"கெருபுகளின் மீது வீற்றிருப்பவரே" -
ஆற்றல் மிக்க ஓர் அரசரைப் போன்ற உருவகம், 18:10, 99:1.

"ஒளிர்ந்திடும்" -
ஆண்டவரின் மாட்சி, விடுதலைப் பயணம் 24:16-17. நினைவூட்டலாக, இணைச் சட்டம் 33:2.
அநீதிக்குப் பழிவாங்க அழைப்பு, 94:1.

வசனம் 80:2
*வடநாட்டின் குலங்களைக் குறித்த குறிப்பு. இவற்றில் பென்யமின் குலத்தினர், தென்னாட்டின் எல்லைகளை ஒட்டி வாழ்ந்தோர்.*

வசனம் 80:3
*இணை, வ.7, 19.*

*"...உமது முக ஒளியைக் காட்டியருளும்" -*
*வழிபாட்டின் நிறைவில், ஆண்டவரின் ஆணைப்படி, குருக்கள் இஸ்ரயேலருக்கு வழங்கும் ஆசி, இங்கு கடவுள் முன் நினைவுகூரப்படுகிறது, எண்ணிக்கை 6:25.*

வசனம் 80:4
*"படைகளின் கடவுள்" -*
*எதிரிகளோடு தங்களுக்காகப் போர் புரிந்த கடவுளை நினைவு கூர்ந்து, உதவிக்கு அழைத்தல். மீண்டும், வ.7,14&19.*

*"...எத்தனை நாள்..." -*
*இணை, 79:5.*
*சமாரியா மூன்று ஆண்டுகள் அசீரியாவின் முற்றுகையில் இருந்தது, 2 அரசர்கள் 17:5. அத்துணை காலமும், வடநாட்டினருக்காக தென்னாட்டினர் வேண்டிக் கொண்டதை இவ்வசனம் உணர்த்துகிறது.*

வசனம் 80:5
*கண்ணீரே உணவாக, நீராக -*
*பார்க்க, 42:3.*
*பாலைவெளியில் இஸ்ரயேலர் உண்ண, வானவரின் உணவாகிய மன்னாவைத் தந்தவர் (விடுதலைப் பயணம் 16:4), குடிக்கப் பாறைகளிலிருந்து நீரோடைகளைப் புறப்படச் செய்தவர் (எண்ணிக்கை 20:2-11), கடவுளாகிய ஆண்டவர். ஆனால் அதே இஸ்ரயேலரின் இன்றைய அவலநிலையைத் திருப்பாடகர் எடுத்துரைக்கிறார்.*

வசனம் 80:8-16
*கடவுளே தோட்டக்காரர், எரேமியா 1:10, 12:10. அவர் நாட்டிய திராட்சைக் கொடியே இஸ்ரயேல்.*

*"யோசேப்பு கனி தரும் கொடி" (தொடக்க நூல் 49:22). இது யோசேப்புக்கும் அவரின் வழிமரபினருக்கும் உரித்தான ஆசி. ஆனால் அந்த யோசேப்பின் வழிமரபினரோ, திராட்சைக் கனிகளைத் தராமல், காட்டுக் கனிகளைத் தந்தனர் (எசாயா 5:1-7). வேற்றின மக்களின் வழிபாடுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர் (ஓசேயா 10:1). இன்றைக்குத் திருப்பாடகர் குறிப்பிடும் அவலநிலையை எசேக்கியேலும் இறைவாக்காக உரைத்தார் (எசேக்கியேல் 17:1-10 & 19:10-14). இவ்வாறு கடவுளுக்கேற்ற கனி தராத நிலை இஸ்ரயேலில் நிலவியது.*

☦ *நமக்கோ தெளிவான போதனை உண்டு; மெய்யான திராட்சைச் செடியாகிய ஆண்டவர் கிறிஸ்து இயேசுவோடு இணைந்து, நாம் கொடிகளாகத் தழைத்து வாழும் போது, நல்ல கனிகளைத் தருவோம்; அந்த இணைப்பு அறும் போதோ, கனியற்ற கொடிகளாக வெட்டி எறியப்படுவோம் (யோவான் 15:1-8).*

வசனம் 80:10
*தாவீது மற்றும் சாலமோன் அரசர்களின் காலத்தில் இஸ்ரயேல் நாட்டின் செழிப்பும் செல்வாக்கும் நினைவுகூரப்படுகிறது.*

வசனம் 80:11
*மத்திய தரைக்கடல் தொடங்கி யூப்ரதீஸ் ஆறு வரை பரந்து விரிந்த, சாலமோன் அரசரின் ஆட்சிப் பரப்பைத் திருப்பாடகர் நினைவுகூருகிறார்.*

வசனம் 80:12-13
*அசீரியப் படைகளால் இஸ்ரயேல் இன்று சிதைக்கப்படும் நிலையைக் கடவுளிடம் திருப்பாடகர் முறையிடுகிறார்.*

வசனம் 80:12
"*மதில்கள்*" -
*பார்க்க,* யோபு 1:10;
*தமது மக்களுக்குக் கடவுள் அருளும் பாதுகாப்பு. மக்களின் மீறுதல்களின் பொருட்டு, தமது பாதுகாப்பை அவர் இப்போது விலக்கிக் கொண்டு விட்டார்.*

வசனம் 80:14-15
*கண்ணோக்கிப் பார்த்து, பரிவு காட்டி, காத்தருள வேண்டுதல், எசாயா* 63:15-16.

வசனம் 80:15
"...வலக்கை நட்டு வைத்த கிளை..." -
பென்யமின் (வலக்கரத்தின் மகன்) என்ற எபிரேயப் பதத்தைக் கொண்டு ஒரு சொல்லாடல்.

வசனம் 80:17
"உமது வலப்பக்கம் இருக்கும் மனிதர்..." -
*பார்க்க,* 110:1.
*நாட்டின் அரசரைப் பாதுகாக்க மன்றாடல்.*

☦ *இன்றைக்கு மாட்சிமை தங்கிய கடவுளின் வலது பக்கத்தில், ஆற்றலும் அதிகாரமும் உடையவராக வீற்றிருக்கும் ஆண்டவர்,* எபிரேயர் 1:3.

வசனம் 80:19
வ.3, 7 - *மீண்டும்.*
'விடுதலையின் *அம்புகள் போன்ற ஜெபங்கள், மீண்டும் மீண்டும் எய்யப்பட வேண்டும்* (2 *அரசர்கள்* 13:16-19); *அப்போது அவை நிறைவான பலனைத் தரும்.*' (ஜான் டிரேப்)

☦

## 19 திருப்பாடல் 81

*(திருவிழாப் பாடல்)*

*பாடகர் தலைவர்க்கு; காத்து நகர்ப் பண்; ஆசாபுக்கு உரியது*
1 நமது வலிமையாகிய கடவுளை
மகிழ்ந்து பாடுங்கள்;
யாக்கோபின் கடவுளைப்
புகழ்ந்து ஏத்துங்கள்.
2 இன்னிசை எழுப்புங்கள்;
மத்தளம் கொட்டுங்கள்;
யாழும் சுரமண்டலமும் இசைந்து
இனிமையாய்ப் பாடுங்கள்.
3 அமாவாசையில், பௌர்ணமியில்,
நமது திருவிழாநாளில் எக்காளம் ஊதுங்கள்.
4 இது இஸ்ரயேல் மக்களுக்குரிய விதிமுறை;
யாக்கோபின் கடவுள் தந்த நீதிநெறி.
5 அவர் எகிப்துக்கு எதிராகச் சென்றபொழுது
யோசேப்புக்கு அளித்த சான்று இதுவே.
அப்பொழுது நான் அறியாத மொழியைக் கேட்டேன்.
6 தோளினின்று உன் சுமையை அகற்றினேன்;
உன் கைகள் கூடையினின்று விடுதலை பெற்றன.
7 துன்ப வேளையில் என்னை நோக்கி மன்றாடினீர்கள்;
நான் உங்களை விடுவித்தேன்;
இடிமுழங்கும் மறைவிடத்தினின்று நான்
உங்களுக்கு மறுமொழி கூறினேன்;
மெரிபாவின் நீரூற்று அருகில்
உங்களைச் சோதித்தேன்.
8 என் மக்களே, எனக்குச் செவிகொடுங்கள்;
நான் உங்களுக்கு எச்சரிக்கை விடுக்கின்றேன்;
இஸ்ரயேலரே, நீங்கள் எனக்குச் செவிசாய்த்தால்,
எவ்வளவு நலமாயிருக்கும்!
9 உங்களிடையே வேற்றுத் தெய்வம் இருத்தலாகாது;
நீங்கள் அன்னிய தெய்வத்தைத் தொழலாகாது.
10 உங்களை எகிப்து நாட்டினின்று
அழைத்துவந்த கடவுளாகிய ஆண்டவர் நானே;
உங்கள் வாயை விரிவாகத் திறங்கள்;
நான் அதை நிரப்புவேன்.
11 ஆனால் என் மக்கள்
என் குரலுக்குச் செவிசாய்க்கவில்லை;
இஸ்ரயேலர் எனக்குப் பணியவில்லை.
12 எனவே, அவர்கள்
தங்கள் எண்ணங்களின்படியே நடக்குமாறு,
அவர்களின் கடின இதயங்களிடமும்
அவர்களை விட்டுவிட்டேன்.
13 என் மக்கள் எனக்குச் செவிசாய்த்திருந்தால்,
இஸ்ரயேலர் நான் காட்டிய வழியில் நடந்திருந்தால்,
எவ்வளவோ நலமாயிருந்திருக்கும்.

*14 நான் விரைவில்
அவர்கள் எதிரிகளை அடக்குவேன்,
என் கை அவர்களின் பகைவருக்கு
எதிராகத் திரும்பும்.
15 ஆண்டவரை வெறுப்போர்
அவர்முன் கூனிக்குறுகுவர்;
அவர்களது தண்டனைக் காலம்
என்றென்றுமாய் இருக்கும்.
16 ஆனால், உங்களுக்கு
நயமான கோதுமையை உணவாகக் கொடுப்பேன்;
உங்களுக்கு மலைத் தேனால் நிறைவளிப்பேன்.*

திருப்பாடல் 81:1-16

**சிந்தனைக்கு**

*இஸ்ரயேலின் புத்தாண்டாகிய ஏழாம் மாதத்தின் முதல் நாளில் கொண்டாடப்படும் எக்காளத் திருவிழாவில் (மற்றும் ரோஷ் ஹாஷானா) (லேவியர் 23:23-25) பாடப்படும் பாடல்; தங்கள் வேலைகள் அனைத்தையும் நிறுத்திவிட்டு, கடவுளுக்குகந்த ஓய்வுநாளாக அனுசரிக்க வேண்டிய பண்டிகை; படைக்க வேண்டிய காணிக்கைகள் குறித்த விளக்கம், எண்ணிக்கை 29:1-6. தங்கள் கடந்த நாள்களை நினைவுகூர்ந்து, கடவுளோடு ஒப்புறவாகி, ஒவ்வொருவரும் தங்களை மறு அர்ப்பணம் செய்து கொள்ளும் நாள். செம்மறிக் கிடாவின் கொம்பாலான எக்காளம் ஊதுவது என்பது செயல்பட அழைப்பு (விடுதலைப் பயணம் 19:13). அது போருக்கு மட்டுமல்லாமல், கடவுளோடு சீர்பொருந்தி ஒவ்வொருவரும் வாழ்வதற்கான அழைப்பு.*

*ரோஷ் ஹாஷானா என்றும் அழைக்கப்படும் அந்த நாள், கடவுளின் வருகையை யூதர்கள் எதிர்நோக்கும் திருநாள்; நமது ஆண்டவரின் இரண்டாம் வருகைக்கான, ஏழாவது எக்காளம் முழங்கக் காத்திருக்கும் நாமும், ஒவ்வொரு நாளும் இத்திருநாளை நமது உள்ளங்களில் உணர்ந்து கொண்டாடலாம்! கடவுளின் வழிகளில் சீர்பொருந்தி வாழலாம்!*

*81:3 சொல்வதன் அடிப்படையில் யூதர்களின் கூடாரத் திருநாளோடு இத்திருப்பாடலை இணைத்துச் சொல்வதுண்டு; ஏழாம் மாதத்தின் அமாவாசை அன்று மாதத்தின் முதல் நாளன்று தொடங்கி 14 நாள்கள் முடிந்த பிறகு, அதாவது முழுநிலவு நாளில் கூடாரத் திருநாள்; இந்தத் திருவிழாக் காலத்தை இவ்வசனம் சுட்டிக் காட்டுகிறது.*

*வ.5அ சொல்வதன் அடிப்படையில் பாஸ்காத் திருநாளோடும் தொடர்பு செய்வோர் உண்டு. வரலாற்றில் எந்தத் திருநாளோடு இந்தத் திருப்பாடல் தொடர்புடையது என்பதைவிட, திருப்பாடல் வழியாக கடவுள் கண்டித்து உணர்த்தும் செய்தியில் கவனம் குவிப்பது நன்று.*

*வசனங்கள் 81:5ஆ-16, விழாக் கொண்டாடும் இஸ்ரயேலரோடு கடவுளே பேசுவதாக இருக்கிறது. இந்தப் பகுதியை எழுதிய திருப்பாடகர், பழைய ஏற்பாட்டு நூல்களில் தேர்ந்த புலமை பெற்றவராக இருந்துள்ளார்; மோசேயின் வழியாக வந்த கடவுளின் அருள்வாக்குகளின் சிறு தொகுப்பாக, அன்றைய இஸ்ரயேலருக்கு மிகவும் அவசியமான, பயனுள்ள போதனையாக இப்பகுதி அமைந்துள்ளது.*

தலைப்பில் தரப்பட்டுள்ள கித்தித் என்ற சொல்லுக்கு, திருப்பாடல் 8 குறிப்பைப் பார்க்கவும்.
🕎

அமைப்பு:
வ.1-5அ, திருவிழாக் கொண்டாட அழைப்பு
வ.5ஆ-16, தம் மக்களைக் கண்டித்து உணர்த்தும் கடவுளின் வாக்கு
🕎

வசனம் 81:1-4
திருநாளைக் கொண்டாட அழைப்பு; களிப்போடு போற்றிப் புகழ்ந்து பாடச் சபை மக்களுக்கும், இசைக்கருவிகளை இனிமையாக இசைத்துப் பாட லேவியருக்கும், கொம்பு / எக்காளம் ஊதிப் பலிகளைத் தொடங்கக் குருக்களுக்கும் அழைப்பு. இதுவே இஸ்ரயேலருக்குக் கடவுள் தந்த கட்டளை (எண்ணிக்கை 10:10; 2 குறிப்பேடு 5:12-13; எஸ்ரா 3:10-11; மேலும் பார்க்க, 1 குறிப்பேடு 15:28). கடவுளிடம் கீழ்ப்படிதல் இல்லையேல், உள்ளத்திற்கு மகிழ்ச்சி இல்லை.

வசனம் 81:5அ
ஆசாபியத் திருப்பாடல்களில் யோசேப்பு மீண்டும் குறிப்பிடப்படுதல், 77:15, 78:67, 80:1. வடக்கில் வாழ்ந்த இஸ்ரயேலரும் திருநாள்களில் பங்கெடுத்ததை இது குறிக்கிறது:
* இத்திருப்பாடல் எசேக்கியா அரசரின் காலத்தில் பாடப்பட்டதாக இருக்கலாம், 2 குறிப்பேடு 30:5-14.
* அசீரியர் சமாரியாவை முற்றுகையிட்ட போது (2 அரசர்கள் 17:5), வடநாட்டினர் பலரும் தப்பி வந்து யூதேயாவில் தஞ்சமடைந்தனர். அந்த நாட்களில் இத்திருப்பாடல் எழுதப்பட்டிருக்கலாம்.

வசனம் 81:5ஆ
கடவுள் தம் மக்களுக்கு திருப்பாடகர் வழியாக வழங்கிய அருளுரையின் தொடக்கம்.

"...அறியாத மொழியைக் கேட்டேன்" -
எகிப்திய மொழியைக் கடவுள் அறியவில்லை என்பது இதன் பொருள் அல்ல; சில நூறு ஆண்டுகளாகத் தங்களோடு வாழ்ந்து வரும் இஸ்ரயேலரை எகிப்தியர் நடத்திய விதத்தின் அடிப்படையில், எகிப்தியரை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

வசனம் 81:6-7
விடுதலைப் பயணம் 1:8-14, 2:23-25.
இஸ்ரயேலரின் எகிப்திய அடிமை வாழ்க்கை, சுருக்கமாக.

வசனம் 81:6
சுமைகளிலிருந்து விடுவிக்கும் கடவுள், மத்தேயு 11:28.

"உன் கைகள் கூடையினின்று விடுதலை பெற்றன" -
தங்கள் நகர்களைக் கட்டச் செங்கல்கள் அறுக்குமாறு இஸ்ரயேலரை எகிப்தியர் கட்டாயப் படுத்தினர் (விடுதலைப் பயணம் 1:14, 5:14). களிமண் மற்றும் செங்கல்களை வைத்துத் தூக்கப் பயன்பட்ட கூடைகள்.

வசனம் 81:7
"மெரிபாவின் நீருற்று அருகில்..." -
பார்க்க, விடுதலைப் பயணம் 17:1-7.

வசனம் 81:8
*தமது வார்த்தைகளுக்குச் செவிமடுக்க இஸ்ரயேலருக்கு அழைப்பு.*

வசனம் 81:9-10
*பத்துக் கட்டளைகளில் முதல் கட்டளையை நினைவூட்டுதல், விடுதலைப் பயணம்* 20:2-4; *இணைச் சட்டம்* 5:6-7.

*இஸ்ரயேலரின் வழிபாட்டுப் பழக்க வழக்கங்கள் கண்டிக்கப்படுதல், எசாயா* 2:6-8.

வசனம் 81:10
"... *கடவுளாகிய ஆண்டவர்* ***நானே***" -
*தொடக்க நூல்* 28:13; *விடுதலைப் பயணம்* 6:7, 29:46; *லேவியர் நூலின் பல வசனங்கள்; எண்ணிக்கை* 15:41; *இணைச் சட்டம்* 5:6, 29:26; *எசாயா* 41:13, 48:17, 51:15; *எசேக்கியேல்* 20:5,7,19-20; *ஒசேயா* 12:9, 13:4; *செக்கரியா* 10:6.
*உன் கடவுளாகிய ஆண்டவர் நானே என்னும் கடவுளின் முழக்கம் / அறிக்கை.*

*கடவுள்தம் நேரடியான வாக்காக அல்லது இறைவாக்கினர் வழியாக உரைத்த வாக்காக, இந்த அறிக்கை பழைய ஏற்பாடு நெடுகிலும் காணப்படுகிறது. சிறப்பான வகையில், இந்தச் சொற்றொடரை இங்கு திருப்பாடகர் எடுத்தாளுகிறார்.*

"*உங்கள் வாயை விரிவாகத் திறங்கள்; நான் அதை நிரப்புவேன்*" -
*நன்மையால் மட்டுமா* (103:5) *நம்மைக் கடவுள் நிரப்புவார்?*
*ஆண்டவரின் நீதி நெறிமுறைகள் நம்மிடமிருந்து வெளிப்படவும் அவர் நம் வாயைத் திறக்கிறார்* (*எசேக்கியேல்* 2:8 *மற்றும்* 3:27; *மேலும் நீதிமொழிகள்* 31:8-9; *மத்தேயு* 7:7-11).

வசனம் 81:11-12
*பாலைவெளியில் மட்டுமல்ல* (*விடுதலைப் பயணம்* 32:9); *வாக்களிக்கப்பட்ட நாட்டின் வளமான வாழ்க்கையிலும் இஸ்ரயேலர் கடின உள்ளம் கொண்டவர்களாக, கடவுளின் கட்டளைகளுக்கு இணங்கி வாழாதவர்களாக இருந்தனர்* (2 *அரசர்கள்* 17:14-17; *எரேமியா* 7:23-26).

வசனம் 81:13
*கடவுளின் கற்பனைகளைக் கைக்கொண்டு நேரிய வழியில் நடக்கும் தம் மக்களைக் காண ஏங்கும் கடவுள்.*

வசனம் 81:14-15
*தம் கற்பனைகளைக் கைக்கொண்டு வாழ்வோருக்கு ஆண்டவரின் வாக்குறுதி.*
*தமக்கு எதிராகச் செயல்படுவோருக்குக் கடவுளின் எச்சரிக்கை.*

வசனம் 81:14
"...*விரைவில்*..." -
*நமது வாழ்வில் விரைந்து செயல்படக் கடவுள் விழைகிறார்; நமது மனக்கடினமோ, அவரது செயல்பாட்டைத் தாமதிக்கச் செய்கிறது.*

வசனம் 81:16
"...*நயமான கோதுமை* ... *மலைத் தேன்*..." -
*இணை, வ.*10.
*கடவுள் அருளும் வளமான, செழிப்பான வாழ்க்கை, இணைச் சட்டம்* 32:13-14.

இஸ்ரயேலருக்கு அன்று கடவுளாகிய ஆண்டவர் உரைத்த அருள்வாக்கு இன்றைக்கும் அதே உயிர்ப்போடு நம்மிடம் கேள்விகளை எழுப்புகிறது: மாசற்ற இரத்தத்தால் மீட்கப்பட்டு நல்வாழ்வு என்ற நிறைவான ஆசிக்குள் வாழ்கின்ற நாம், இன்னும் நமக்குள் சுமந்து கொண்டிருக்கும், ஆண்டவர் அருவருக்கும் செயல்கள் எத்தனை?

வேற்றுத் தெய்வ வழிபாட்டினர் போல, கிறிஸ்தவர்களுக்குள் ஜாதிப் பாகுபாடுகள்; ஜாதகம் பார்த்து வரன் தேடுதல்; நாள் பார்த்து, நேரம் பார்த்து மணநாள் குறித்தல்; நாள் பார்த்து, நேரம் பார்த்து, அறுவை செய்து குழந்தை பெறுதல்; பணி செய்யக் கையூட்டு; வணிகத்தில் கள்ளத் தராசு - இவ்வாறெல்லாம் இஸ்ரயேலரை விடவும் கொடிய பாவங்களை நாம் செய்து கொண்டிருக்கிறோமே! உணர்வற்றவர்களாக ஆவியை அவித்துப் போட்டு விட்டீர்களா?

உணர்வடையுங்கள்; அன்னிய நுகத்தை ஆண்டவர் அகற்றி விட்டார்; ஆனால் அதன் அடிமைத்தனத்திலிருந்து இப்போதே விடுபடுங்கள். மேலான ஆசிகளை ஆண்டவர் அருளுவார்.

✝

## 19 திருப்பாடல் 82

*(அனைத்து உலகின் அரசர்)*

*ஆசாபின் புகழ்ப்பா*
1 தெய்வீக சபையில்
கடவுள் எழுந்தருளியிருக்கின்றார்;
தெய்வங்களிடையே
அவர் நீதித்தீர்ப்பு வழங்கின்றார்.
2 'எவ்வளவு காலம்
நீங்கள் நேர்மையற்ற தீர்ப்பு வழங்குவீர்கள்?
எவ்வளவு காலம்
பொல்லாருக்குச் சலுகை காட்டுவீர்கள்?
(சேலா)
3 எளியோர்க்கும் திக்கற்றவர்க்கும்
நீதி வழங்குங்கள்;
சிறுமையுற்றோர்க்கும் ஏழைகட்கும்
நியாயம் வழங்குங்கள்!
4 எளியோரையும் வறியோரையும் விடுவிங்கள்!
பொல்லாரின் பிடியினின்று
அவர்களுக்கு விடுதலை அளியுங்கள்!
5 உங்களுக்கு அறிவுமில்லை; உணர்வுமில்லை;
நீங்கள் இருளில் நடக்கின்றீர்கள்;
பூவுலகின் அடித்தளங்கள்
அனைத்துமே அசைந்துவிட்டன.
6 'நீங்கள் தெய்வங்கள்;
நீங்கள் எல்லாரும் உன்னதரின் புதல்வர்கள்.
7 ஆயினும், நீங்களும் மனிதர்போன்று மடிவீர்கள்;
தலைவர்களுள் ஒருவர்போல வீழ்வீர்கள்' என்றேன்.
8 கடவுளே, உலகில் எழுந்தருளும்,
அதில் நீதியை நிலைநாட்டும்;
ஏனெனில், எல்லா நாட்டினரும் உமக்கே சொந்தம்.

திருப்பாடல் 82:1-8

**சிந்தனைக்கு**

*"அநீதியான நீதித் தலைவர்களும் ஆட்சியாளரும்" என்று இத்திருப்பாடலுக்குத் தலைப்பிடல் சிறப்பாக இருக்கும். அந்த வகையில், கடவுள் விரும்பும் "நீதியில் சிறந்த ஆளுகை எது?" என்பதை நமக்கு அறிவிப்பதாக இப்பாடல் விளங்குகிறது. நீதித் தலைவர்களை ஏற்படுத்திய மோசே அவர்களுக்கு அறிவுறுத்தியது: "...விருப்பு வெறுப்பின்றித் தீர்ப்பிடுங்கள்; உயர்ந்தோனுக்கும் தாழ்ந்தோனுக்கும் ஒன்றுபோல் செவிகொடுங்கள்; எந்த மனிதனுக்கும் அஞ்ச வேண்டாம், ஏனெனில், நீதித்தீர்ப்பு கடவுளுக்கே உரியது."* (இணைச் சட்டம் 1:17)

*நீதித் தீர்ப்பைக் குறித்து ஆசாபியத் திருப்பாடல்கள் தொடர்ந்து பேசுவதைப் பார்க்கிறோம், திருப்பாடல்கள் 50, 75, 81. அந்த வகையில், இத்திருப்பாடல் நீதியைக் குறித்தும் நீதி வழங்குவோரைக் குறித்தும் பாடுகிறது. ஆசாபியத் திருப்பாடல்கள் 50, 75 மற்றும் 81 போலவே, கடவுளின் வாக்காக இத்திருப்பாடல் (வ.2-7) அமைந்துள்ளது.*

*அமைப்பு:*
வ.1-5, *நீதித் தலைவர்களைக் கடிந்துரைக்கும் கடவுள்*
வ.6-7, *தீர்ப்பிடும் கடவுள்*
வ.8, *நீதியை நிலைநாட்டக் கடவுளுக்கு அழைப்பு*

*வசனம்* 82:1 & 6
"...*தெய்வங்கள்*..." -
*எலோஹிம் என்கிற எபிரேயச் சொல் நீதித் தலைவர்கள் / நியாயாதிபதிகள்* (OV) *என்றும் பொருள்படும், பார்க்க,* KJV / OV, *விடுதலைப் பயணம்* 21:6 & 22:8-9. *இதே பொருளில், கிறிஸ்து இயேசுவும், யோவான்* 10:34-35 *வசனங்களில், வ.6ஐ எடுத்தாளுகிறார். தீர்ப்பிடுதல் கடவுளுக்கே உரியது என்பதால், மண்ணுலகில் நீதி வழங்கும் பொறுப்பில் இருப்போரைத் தெய்வங்கள் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.*

*வசனம்* 82:1
"*தெய்வீகசபை*..." -
*யோபு நூலில்* (1:6 & 2:1) *விண்ணகத்தில் நடந்தது போன்ற காட்சிப்படுத்தல். இறைவாக்கினர் கண்ட காட்சிகள்,* 1 *அரசர்கள்* 22:19-22; *எசாயா* 6:1-7.

*அரசர்களின் அரசராகிய கடவுள், தமது சபையைக் கூட்டிய நோக்கம், இஸ்ரயேலருக்கு நீதி செய்ய ஏற்படுத்தப்பட்ட தலைவர்களின் நீதி மேலாண்மையை வெளிப்படுத்தி, இப்போதும் இனிமேலும் அந்தப் பொறுப்புக்கு வருவோரை அதன் வழியாக எச்சரிப்பது; பார்க்க,* 94:2; 1 *சாமுவேல்* 2:10. *மேலும் பார்க்க, நீதியை விரும்பும் கடவுள்,* 99:4; *நாடுகளை நியாயம் தீர்க்கும் கடவுள்,* 9:8, 96:13, 98:9.

"...*நேர்மையற்ற தீர்ப்பு*..." -
*பார்க்க,* 1 *சாமுவேல்* 8:1-3; *எசாயா* 1:16-17, 3:13-15; *எரேமியா* 21:12, 22:3; *எசேக்கியேல்* 34:4,21; *மீக்கா* 3:1-3,7:3.

*வசனம்* 82:2
"*எவ்வளவு காலம்*..." -
*எதிர்,* 79:5, 80:4.

*மனிதர்கள் கடவுளை நோக்கி எழுப்பிய கேள்வியை, மனிதர்களை நோக்கி எழுப்பும் கடவுள். அநீதியாகச் செயல்படுவோரை நோக்கி இன்றைக்கும் உயிர்ப்போடு எழும்பும் கேள்வி!*

வசனம் 82:3-4
*கடவுள் விரும்பும் நீதி,* 72:2 & 12-14; *நீதிமொழிகள்* 29:7&14, 31:8-9; *எசாயா* 10:1-3, 11:4; *எரேமியா* 22:3&16; *ஆமோஸ்* 5:11-15; *மீக்கா* 6:8.

*ஏழைகளுக்கு எதிராக நீதியைப் புரட்டுவோருக்கு எச்சரிக்கை,* 12:5; *சபை உரையாளர்* 5:8.

வசனம் 82:5-7
*பார்க்க, விடுதலைப் பயணம்* 9:15-16; *எசாயா* 44:28; *எரேமியா* 3:15, 9:23-24, 27:6; *தானியேல்* 2:21, 4:17&32, 5:18.
*தலைவர்களையும், ஆட்சியாளர்களையும் எச்சரிக்கும் கடவுள்; அவர்கள் அனைவரும் தாங்கள் அழியக் கூடிய மானிடரே என்கிற உணர்வின்றிச் செயல்படுகின்றனர் என்பதை அவர்களுக்கு நினைவூட்டுகிறார்.*

வசனம் 82:8
*அநீதியான நீதித் தலைவர்களிடமிருந்தும், நியாயமற்ற ஆட்சியாளர்களிடமிருந்தும் தம் மக்களைக் காக்கக் கடவுள் எழுந்தருள மன்றாடி அழைக்கும் திருப்பாடகர்.*

"...*எல்லா நாட்டினரும் உமக்கே சொந்தம்*" -
*எல்லா நாட்டு ஆட்சியாளர்களையும் நியாயம் தீர்க்கும் கடவுள்; பார்க்க, மேலேயுள்ள வ.*5-7 *குறிப்பு.*
🕎

*கிறிஸ்தவர்கள் நிறைந்த அல்லது அருகிய நாடாக இருந்தாலும், நீதிபதிகளை மிலார்ட் / மை லார்ட் என்று அழைக்கும் வழக்கம் உள்ளது. கடவுளுக்கு நிகராகப் போற்றப்படும் நீதிபதிகள் கடவுளைப் போல நீதி செய்கிறார்களா? உறிஞ்சு குழல் பொருத்திய டம்ளர் கேட்ட முதுபெரும் அருள் தந்தை ஸ்டேன்ஸ் சுவாமிக்கு நீதி கிடைத்ததா?*
*இந்த நாட்டில் வழிபாட்டுத் தளங்களைக் குறித்து புதிய சர்ச்சை எதுவும் செய்யக்கூடாது என்று* 1991*ல் சட்டம் இயற்றினார்கள்; ஆனால் இன்றைக்கு நீதிமன்றங்களில் நடப்பது என்ன?*

*திருச்சபைகளிலும் நமது குடும்பங்களிலும் சிக்கல்களைத் தீர்க்கும் பொறுப்பில் உள்ள ஊழியர்களும் மூப்பர்களும் பாரபட்சமின்றி நீதி வழங்குகிறார்களா?*
*உறவுகளில் நாம் ஒவ்வொருவரும் நீதி நியாயம் நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கிறோமா?*
*இல்லாவிட்டால், கடவுள் நம்மை நியாயம் தீர்ப்பார் என்ற உணர்வோடு நடக்க நாம் உறுதி பூணுவோம்.*

✝

## 19 திருப்பாடல் 83

*(இஸ்ரயேலின் எதிரிகளது வீழ்ச்சிக்காக மன்றாடல்)*

*ஆசாபின் புகழ்ப் பாடல்*
1 கடவுளே! மௌனமாய் இராதேயும்;
பேசாமல் இராதேயும்;

இறைவனே! அமைதியாய் இராதேயும்.
2 ஏனெனில், உம் எதிரிகள் அமளி செய்கின்றார்கள்;
உம்மை வெறுப்போர் தலைதூக்குகின்றார்கள்.
3 உம் மக்களுக்கு எதிராக
வஞ்சகமாய்ச் சதி செய்கின்றார்கள்;
உம் பாதுகாப்பில் உள்ளோர்க்கு எதிராகச்
சூழ்ச்சி செய்கின்றார்கள்.
4 அவர்கள் கூறுகின்றார்கள்:
'ஓர் இனமாக அவர்களை
இல்லாதவாறு ஒழித்திடுவோம்;
இஸ்ரயேலின் பெயரை
எவரும் நினையாதவாறு செய்திடுவோம்.
5 அவர்கள் ஒருமனப்பட்டுச் சதி செய்கின்றார்கள்;
உமக்கு எதிராக உடன்படிக்கை செய்து கொண்டார்கள்.
6 ஏதோமின் கூடாரத்தார், இஸ்மயேலர்,
மோவாபியர், அக்ரியர்,
7 கெபாலியர், அம்மோனியர், அமலேக்கியர்,
பெலிஸ்தியர் மற்றும் தீர்வாழ் மக்களே அவர்கள்.
8 அவர்களோடு அசீரியரும் சேர்ந்துகொண்டு,
லோத்தின் மைந்தருக்கு வலக் கையாய் இருந்தனர்.
9 மிதியானுக்கும், கீசோன் ஆற்றின் அருகே
சீசராவுக்கும் யாபீனுக்கும் செய்தது போல,
அவர்களுக்கும் செய்தருளும்.
10 அவர்கள் ஏந்தோரில் அழிக்கப்பட்டார்கள்;
அவர்கள் மண்ணுக்கு உரமானார்கள்.
11 ஓரேபுக்கும் செயேபுக்கும் செய்தது போல்
அவர்களின் உயர்குடி மக்களுக்கும் செய்தருளும்!
செபாருக்கும் சல்முன்னாவுக்கும் செய்ததுபோல்
அவர்களின் தலைவர்களுக்கும் செய்தருளும்.
12 ஏனெனில், 'கடவுளின் மேய்ச்சல் நிலத்தை
நமக்கு உரிமையாக்கிக் கொள்வோம்'
என்று அவர்கள் கூறினார்கள்.
13 என் கடவுளே! சூறாவளியில் புழுதியென
காற்றில் பதரென அவர்களை ஆக்கியருளும்.
14 நெருப்பு காட்டை எரிப்பது போலவும்,
தீக்கனல் மலைகளைச் சுட்டெரிப்பது போலவும்
அவர்களுக்குச் செய்தருளும்.
15 உமது புயலால் அவர்களைத் துரத்திவிடும்!
உமது சூறாவழியால்
அவர்களைத் திகிலடையச் செய்யும்.
16 ஆண்டவரே, மானக்கேட்டினால்
அவர்கள் முகத்தை மூடும்;
அப்பொழுதுதான் அவர்கள்
உமது பெயரை நாடுவார்கள்.
17 அவர்கள் என்றென்றும்
வெட்கிக் கலங்குவார்களாக!
நாணமுற்று அழிந்து போவார்களாக!
18 'ஆண்டவர்' என்னும் பெயர் தாங்கும் உம்மை,

உலகனைத்திலும் உன்னதரான உம்மை,
அவர்கள் அறிந்து கொள்வார்களாக!

திருப்பாடல் 83:1-18

**சிந்தனைக்கு**

இஸ்ரயேலுக்கு எதிராக அதனைச் சுற்றிலும் உள்ள நாடுகளின் சதியின் பொருட்டு, அவைகளை அழித்தொழிக்குமாறு கடவுளை அழைக்கும், குமுகாய (community) வழிபாட்டுத் திருப்பாடல். இத்திருப்பாடல் நினைவூட்டும் வேறு சில திருப்பாடல்கள், 46, 47, 48 & 76.

அசீரியாவின் துணையோடு இஸ்ரயேலுக்கு எதிராக வேற்றின அரசுகளின் சதித்திட்டம் குறித்து 2 குறிப்பேடு 20:1-30 பகுதியில் நாம் வாசிக்கிறோம். ஆசாபிய வழிமரபில் வந்த யாகசியேல் இந்தத் திருப்பாடலை எழுதியிருக்க வாய்ப்புண்டு (2 குறிப்பேடு 20:14-17).

தாவீது அரசரின் காலத்தில் நடந்த போர்களோடு இத்திருப்பாடல் தொடர்புடையது என்றும் சொல்லப்படுகிறது (2 சாமுவேல் 10:1-19; 1 குறிப்பேடு 19:1-19).

வலிமையான கூட்டுப் படைகளுக்கு எதிராக ஆண்டவர் தமது முழு ஆற்றலோடு செயல்பட அழைக்கும் போது, படைப்பின் கடவுளான எலோஹிம் (வ.1,12&13), இறைவர் என்னும் ஏல் (வ.1), விடுதலையின் நாயகரான யெஹோவா (வ.16&18), உலகனைத்திலும் உன்னதர் எனும் எல்-யோன் (வ.18) என்று கடவுளின் வெவ்வேறு ஆற்றல்களை வெளிப்படுத்தும் திருப்பெயர்களைத் திருப்பாடகர் இப்பாடலில் பயன்படுத்துகிறார்.

அமைப்பு:
வ.1-4, இஸ்ரயேலுக்கு வந்த சிக்கல்
வ.5-8, கூட்டணி அமைத்துள்ள எதிரிகளின் வலிமை
வ.9-17, எதிர்நோக்கும் எதிரிகளின் அழிவு
வ.18, உறுதியான இறுதி வெற்றி ஆண்டவருக்கே

வசனம் 83:1
"...மௌனமாய் ... பேசாமல்... அமைதியாய் இராதேயும்" -
பார்க்க, 35:22, 109:1.
கடவுள் செயல்பட அழைப்பு. தம் மக்களுக்கு ஆபத்து நெருங்கும் வேளையில், தமது நேரம் வரக் கடவுள் காத்திருக்கிறார்; அப்போது அவருடைய அமைதியில் நம்மால் அமைதி கொள்ள முடிவதில்லை!

மேலும் பிழை பொறுத்தருள எந்த வேண்டுதலையும் திருப்பாடகர் முன்வைக்கவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது.

வசனம் 83:2
தங்கள் எதிரிகளைக் கடவுளின் எதிரிகளாக இனம் காணுதல். எல்லா நிலைகளிலும், நம் எதிரிகள் கடவுளுக்கும் எதிரிகளாக இருக்க முடியுமா?

உம் எதிரிகளின் அமளி -
கடல் கொந்தளிப்பது போன்ற ஆரவாரம் செய்யும் எதிரிகள்.

வசனம் 83:4
இஸ்ரயேலுக்கு வரும் பேரழிவு தெளிவாக மன்றாட்டில் வைக்கப்படுதல்.

வசனம் 83:6-8
இஸ்ரயேலுக்கு எதிராக உடன்படிக்கை செய்து, சதித்திட்டம் தீட்டி, கடவுளின் மக்களை அழிக்க ஒன்று கூடிய நாட்டினர். இவர்களோடு போருக்கு இணையும் அசீரியர். போர்த் தலைமையேற்றுத் தங்களுக்காகப் போரிட அசீரியர் வரவில்லை; இஸ்ரயேலின் முதன்மை எதிரிகளான மோவாபியர் மற்றும் அம்மோனியர் சார்பாகப் போர் புரிய அவர்கள் வந்தனர்.

இஸ்ரயேலுக்கு எதிராக இத்தனை நாடுகள் இணைந்து போரிட வந்ததாக வரலாற்று நூல்களில் குறிப்பு ஏதும் இல்லை; ஆனால் இஸ்ரயேலுக்கு எதிரான மனநிலை என்பது எப்போதும் நிலவி வந்தது என்பதன் அடிப்படையில் திருப்பாடகர் இம்மன்றாட்டை ஏறெடுப்பதாகப் பொருள் கொள்ளலாம்.

வசனம் 83:6
"அக்ரியர்" -
OV, ஆகாரியர்.
ஆகாரின் வழி வந்தவர்கள் அல்லது அரமேயக் கூட்டத்தினரின் ஒரு பிரிவினர், 1 குறிப்பேடு 5:10&18-22, 27:31.

வசனம் 83:8
"...லோத்தின் மைந்தர்..." -
மோவாபியரும் அம்மோனியரும், தொடக்க நூல் 19:37-38. இவர்களே இஸ்ரயேலுக்கு எதிராக முனைந்து செயல்பட்டவர்கள், 2 குறிப்பேடு 20:1.

வசனம் 83:9-12
நீதித் தலைவர்களின் காலத்தில் இஸ்ரயேலின் எதிரிகளுக்கு ஆண்டவர் செய்தது போல, இப்போதும் செயல்பட அழைக்கும் திருப்பாடகர்.

வசனம் 83:9-10
மிதியானியருக்கு செய்தது போல என்பது கிதியோன் அவர்களுக்குச் செய்ததைக் குறிப்பதாக இருக்கலாம் (நீதித் தலைவர்கள் 7:19-25 & 8:1-12).

கீசோன் ஆற்றின் அருகே என்பது இறைவாக்கினர் தெபோரா, பாராக்கு என்பாரின் வழியாக நிகழ்த்திய போராக இருக்கலாம், நீதித் தலைவர்கள் 4:4-24.

ஏந்தோர், தெபோராவின் போரில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் தெபோராவின் புகழ்ப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள தானாக்கு, மெகிதோ என்னும் நிலங்களுக்கு அருகில் அமைந்துள்ள நகர், ஏந்தோர் (நீதித் தலைவர்கள் 19:5 & யோசுவா 17:11).

வசனம் 83:11
ஓரேபுக்கும் செயேபுக்கும் செய்தது போல என்பது, இவ்விரு மிதியானியத் தலைவர்களுக்கும் எப்ராயிமியர் செய்ததைக் குறிக்கிறது, நீதித் தலைவர்கள் 7:25.

செபாகுக்கும் சல்முன்னாவுக்கும் செய்தது என்பது, அந்த மிதியானியத் தலைவர்களுக்கு கிதியோன் செய்ததை நினைவூட்டுகிறது, நீதித் தலைவர்கள் 8:21.

வசனம் 83:12
வ.4, வேறு சொற்களில்.

*கடவுளால் இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்டதும் வழங்கப்பட்டதுமான கடவுளின் மேய்ச்சல் நிலத்தை (23:2) அடைய நினைக்கும் எதிரிகளை அழிக்குமாறு திருப்பாடகர் வேண்டுகிறார்.*

வசனம் 83:13-15
*சூறாவளியில் புழுதி... காற்றில் பதர்... காட்டை எரிக்கும் நெருப்பு... மலைகளைச் சுட்டெரிக்கும் தீக்கனல் -*
*கடவுளின் சீற்றம்*, 18:7-15, 50:3, 107:24-30.

*கடவுளின் பேராற்றலின் முன்பாக, எதிரிகளின் நிலைமையைத் திருப்பாடகர் சித்தரிக்கிறார்.*

வசனம் 83:16-17
*படுதோல்வியை எதிரிகளுக்குப் பரிசாகக் கடவுள் அளிக்க, அவர்கள் மானக் கேடு அடையட்டும்; பிழைத்திருக்கச் செய்வாரானால், கடவுளுடைய பேராற்றலையும் பெருங்கருணையையும் உணர்ந்து, அவர்களுடைய உள்ளங்களைக் கடவுளை நோக்கித் திரும்பச் செய்ய வேண்டுதல்.*

வசனம் 83:18
*உன்னதர் -*
*பார்க்க, தொடக்க நூல்* 14:19.

*அழித்தல் மற்றும் மன்னித்துப் புதுவாழ்வு அளித்தல் என்னும் தமது அருஞ்செயல்கள் வழியாக உலகனைத்தையும் ஆளும் உன்னதரை வேற்றினத்தார் அறிந்து தொழுது கொள்ளும் வகையில், இஸ்ரயேலின் வரலாற்றில் கடவுள் இடைபடத் திருப்பாடகரின் மன்றாட்டு.*

*இவ்வசனத்தோடு, வ.16ல் வரும் "... உமது பெயரை நாடுவார்கள்" என்பதையும் இணைத்துப் புரிந்து கொள்ளுதல் சிறப்பு. மேலும் பார்க்க,* 40:9, 47:9, 58:11, 59:13. *எதிரிகளைப் பழிவாங்கக் கடவுளை அழைக்கும் மன்றாட்டு போலத் தோன்றினாலும், உலகோர் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் திருப்பெயராக அவருடைய பெயர் விளங்க வேண்டும் என்ற மன்றாட்டாகவே இத்திருப்பாடல் அமைகிறது.*

✝

## 19 திருப்பாடல் 84

*(திருக்கோவிலுக்காக ஏங்குதல்)*

*பாடகர் தலைவர்க்கு; காத்து நகர்ப் பண்; கோராகியரின் புகழ்ப்பா*
1 படைகளின் ஆண்டவரே!
உமது உறைவிடம்
எத்துணை அருமையானது!
2 என் ஆன்மா
ஆண்டவரின் கோவில் முற்றங்களுக்காக
ஏங்கித் தவிக்கின்றது;
என் உள்ளமும் உடலும்
என்றுமுள இறைவனை

மகிழ்ச்சியுடன் பாடுகின்றது.
3 படைகளின் ஆண்டவரே!
என் அரசரே! என் கடவுளே!
உமது பீடங்களில்
அடைக்கலான் குருவிக்கு
வீடு கிடைத்துள்ளது;
தங்கள் குஞ்சுகளை வைத்திருப்பதற்குச்
சிட்டுக் குருவிகளுக்குக்
கூடும் கிடைத்துள்ளது.
4 உமது இல்லத்தில் தங்கியிருப்போர்
நற்பேறு பெற்றோர்;
அவர்கள் எந்நாளும்
உம்மைப் புகழ்ந்து கொண்டேயிருப்பார்கள்.
5 உம்மிடருந்து வலிமை பெற்ற மானிடர்
பேறு பெற்றோர்;
அவர்களது உள்ளம்
சீயோனுக்குச் செல்லும் நெடுஞ்சாலைகளை
நோக்கியே உள்ளது.
6 வறண்ட "பாக்கா" பள்ளத்தாக்கை
அவர்கள் கடந்து செல்கையில்,
அது நீரூற்றுகள் உள்ள இடமாக மாறுகின்றது;
முதல் பருவமழை
அதனை நீர்நிலைகள் நிறைந்த இடமாக்கும்.
7 அவர்கள் நடந்து செல்கையில்
மேலும் மேலும் வலிமை பெறுகின்றார்கள்;
பின்பு, சீயோனின்
தெய்வங்களின் இறைவனைக் காண்பார்கள்.
8 படைகளின் ஆண்டவரே,
என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்!
யாக்கோபின் கடவுளே!
எனக்குச் செவிசாய்த்தருளும்!
(சேலா)
9 எங்கள் கேடயமாகிய கடவுளே, கண்ணோக்கும்!
நீர் திருப்பொழிவு செய்தவரின் முகத்தைக்
கனிவுடன் பாரும்!
10 வேற்றிடங்களில் வாழும் ஆயிரம் நாள்களினும்
உம் கோவில் முற்றங்களில் தங்கும்
ஒருநாளே மேலானது;
பொல்லாரின் கூடாரங்களில் குடியிருப்பதினும்,
என் கடவுளது இல்லத்தின் வாயிற்காவலனாய்
இருப்பதே இனிமையானது.
11 ஏனெனில், கடவுளாகிய ஆண்டவர்
நமக்குத் கதிரவனும் கேடயமுமாய் இருக்கின்றார்;
ஆண்டவர் அருளையும் மேன்மையையும் அளிப்பார்;
மாசற்றவர்களாய் நடப்பவர்களுக்கு
நன்மையானவற்றை வழங்குவார்.
12 படைகளின் ஆண்டவரே!
உம்மை நம்பும் மானிடர் நற்பேறு பெற்றோர்!

திருப்பாடல் 84:1-12

**சிந்தனைக்கு**

*காத் நகர்ப் பண் - பார்க்க, திருப்பாடல் 8 குறிப்பு.*

*கோராகியர் - பார்க்க, திருப்பாடல் 42ன் குறிப்பு. திருப்பாடல்கள் மூன்றாம் தொகுதியின் இறுதி ஆறு பாடல்களில், 86 மற்றும் 89 நீங்கலாக அனைத்தும் கோராகியருக்கு உரியன. பாதுகாப்பு மற்றும் நற்பேறு அருளும் சீயோனில் உறையும் கடவுளின் நல்லுறவுக்காக ஏங்கும் திரு அடியாரின் பாடல்களாக இவை விளங்குகின்றன.*

*திருப்பாடல்களின் முத்து என்று திருப்பாடல் 84கை ஸ்பர்ஜின் குறிப்பிடுகிறார். லேவி வழிமரபில் கோகாத்தியரை முற்றாக அழித்து விடாமல், சிலரைப் பிழைக்க விட்ட கடவுளாகிய ஆண்டவருக்கு அவர்களும், அவர்களின் வழிமரபில் வந்த கோராகியரும், கடவுளுக்கு என்றென்றும் நன்றி உடையோராக, பற்று மிக்கோராக அர்ப்பணிப்போடு வாழ்ந்தனர் என்பதற்கு இத்திருப்பாடல் சாட்சியாக உள்ளது.*

*கடவுளின் இல்லத்தில் உறையும் இறைவர் ஒருவரே எனினும், அவருடைய வெவ்வேறு திருப்பெயர்கள் இத்திருப்பாடலில் சொல்லப்பட்டுள்ளன:*
* *படைகளின் ஆண்டவர், வ.1,3,8&12*
* *ஆண்டவர், வ.2&11*
* *இறைவன், வ.2*
* *அரசர், வ.3*
* *கடவுள், வ.3,9&10*
* *யாக்கோபின் கடவுள், வ.8*
* *கடவுளாகிய ஆண்டவர், வ.11*

*எழுதப்பட்ட காலம் உறுதியாகத் தெரியவில்லை. கடவுளின் கோவில் இருந்ததை வ.1-4&10 வெளிப்படுத்துவதால், சிறையிருப்புக்கு முன்னர் எழுதப்பட்டது என்று சொல்லலாம். மேலும் திருப்பொழிவு செய்தவரின் நல்வாழ்வுக்கான மன்றாட்டு (வ.9), யூதேயாவில் இன்னும் தாவீதின் வழிவந்த அரசர் ஆண்டதை உணர்த்துகிறது. இவற்றின் அடிப்படையில், சிறையிருப்புக்கு முன்னர் பாடல் பாடப்பட்டது எனலாம். அப்படியானால், நாம் அறியாத காரணங்களால் திருக்கோவிலைப் பிரிந்து வாடிய லேவியர் ஒருவர், இப்பாடலை எழுதியிருக்கலாம்.*

*அமைப்பு:*
*வ.1-4, கடவுளின் இல்லத்தில் வாழும் நற்பேறு*
*வ.5-7, கடவுளோடு நல்லுறவு என்னும் நற்பேறு*
*வ.8-9, அரசரின் நல்வாழ்வுக்காக மன்றாட்டு*
*வ.10-12, கடவுளை நம்புதல் என்னும் நற்பேறு*

*வசனம் 84:1*
*"...எத்துணை அருமையானது" -*
yedîyd, *மிகவும் நேசிக்கத் தக்கது, மனதிற்கினியது என்றும் பொருள் படும்.*

வசனம் 84:2
"...ஏங்கித் தவிக்கிறது" -
எளிதான பொருளில் இதனை நாம் புரிந்து கொள்ளக்கூடாது.
திருக்கோவிலின் முற்றங்களை நாடிச் செல்ல முடியாத நிலை, தனது உயிரே போவது போல தனது ஆன்மாவை வேதனைப்படுத்துவதாகத் திருப்பாடகர் குறிப்பிடுகிறார்.

என்றுமுள இறைவன் -
வாழும் கடவுள், இணைச் சட்டம் 5:26.

வசனம் 84:3
குருவிகள் மனிதர்களின் இருப்பிடங்களில் வாழ்பவை; அவைகளின் இனம் பெருக, கோவிலே அவைகளுக்கு மிகவும் பாதுகாப்பான இடம். தடையேதுமின்றிக் கடவுளின் இல்லத்தில் வாழும் அவைகளோடு தன்னையும் ஒப்பிட்டு ஏங்குகின்றார் திருப்பாடகர்.

வசனம் 4, 5, & 12
இணை, 65:4.
நற்பேறு என்பது குறித்து வ.4-5 மற்றும் 12 பேசுகின்றன. பாடுபொருளின் அடிப்படையில், பலவிதமான நற்பேறுகள் திருப்பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன (சான்றாக, 2:12, 33:12, 34:8, 94:12, 106:3, 112:1, 119:1-3).

இங்கு இம்மூன்று வசனங்களும் லேவியருக்கே உரித்தான நற்பேறு குறித்துப் பேசுகின்றன:-
* லேவியர் கடவுள்தம் கோவிலில் தங்குவோர்;
* எந்நாளும் அவர்கள் ஆண்டவரைப் புகழ்வோர்;
* கடவுளே அவர்களின் வலிமை;
* கடவுளே அவர்களின் ஒரே நம்பிக்கை.

"... எந்நாளும் ... புகழ்..." -
1 குறிப்பேடு 9:33.
கடவுளுக்கான இடைவிடாத புகழ்ச்சி, உள்ளத்தை நிறைப்பது; உதடுகளுக்கு அணிகலன் போன்றது.
ஆள்வோரைப் புகழ்தல் சலித்துப் போகும்; ஆண்டவரைப் புகழ்தலோ ஊக்கம் தரும்.

வசனம் 84:6
"பாக்கா பள்ளத்தாக்கு" என்பது உறுதியாக எது என்று தெரியவில்லை; பாக்கா என்பது கண்ணீர்த் துளி போலப் பிசின் வடிக்கும் பால்சம் மரங்களைக் குறிக்கும் - இந்த மரங்கள் அடர்ந்த பள்ளத்தாக்கு; அல்லது அழுகையின் பள்ளத்தாக்கு. இது இன்னோம் பள்ளத்தாக்காக இருக்கலாம் என்கின்றனர் ஆய்வாளர்கள் (2 குறிப்பேடு 28:3, 33:6; எரேமியா 7:32). மோலெக்கு சிலைக்கு நெருப்பில் பலியிடப்பட்ட குழந்தைகள் மற்றும் அன்னையரின் அழுகையால் நிறைந்த பள்ளத்தாக்கு. அதுவோ இப்போது முன்மாரியால் நீருற்றுகள் நிறைந்த இடமாக உள்ளது. பயணமாகக் கடப்போருக்கு, புத்துணர்ச்சியும் ஆற்றலும் தருவதாக உள்ளது.

வசனம் 84:7
"...மேலும் மேலும் வலிமை..." -
பார்க்க, எசாயா 40:31.

வசனம் 84:9

கடவுள் திருப்பொழிவு செய்த அரசருக்கு, அவரின் பாதுகாப்பை வேண்டுதல். இந்த வசனத்தின் அடிப்படையில், இத்திருப்பாடல் எசேக்கியா அரசரின் காலத்தில், அசீரிய மன்னன் சனகெரிப் முற்றுகையிட்ட வேளையில் (2 அரசர்கள் 18:13) எழுதப்பட்டிருக்கலாம் என்று கருத்து உள்ளது.

வசனம் 84:10-11
திருப்பாடகரின் தெளிவான தெரிவு.

பொல்லார் நடுவே இவ்வுலக இன்பங்களோடு வாழ்வதைவிட, கடவுளின் இல்லத்தில் வாயிற்காவலனாக வாழ்வதே மேலானது என்னும் திருப்பாடகரின் புரிதல். அதிலும், மாசற்றவர்களாக வாழக் கடவுள் அருள்கிறார்.

வசனம் 84:12
இணை, 40:4.
🕎

இன்றைக்கு நமது ஆலய வாஞ்சை எப்படி இருக்கிறது?
இன்றைக்கு இஸ்ரயேலர் மட்டுமல்ல - கடவுளை ஏற்றுக் கொண்ட அனைவருமே அவர்தம் மக்கள்.
இன்றைக்கு லேவியர் மட்டுமல்ல - நாம் அனைவருமே அரசகுருக்களின் கூட்டத்தினர் (1 பேதுரு 2:9).

ஆனால் நமது ஆலய வாஞ்சை எப்படி இருக்கிறது?
கரோனா தளர்வுகளுக்குப் பிறகு, திரையரங்குகள் நிரம்பி வழிகின்றன; மால்கள் நிரம்பி வழிகின்றன; உணவகங்கள் நிரம்பி வழிகின்றன; மசூதிகள் நிரம்பி வழிகின்றன; ஆனால் திருச்சபைகள்?
தமது அன்பிற்குரிய மகள் / மகன் ஆலயத்திற்கு வருவதை எதிர்நோக்கி ஆண்டவர் காத்திருக்கிறார்.

✝️

## 19 திருப்பாடல் 85

(நாட்டின் நலனுக்காக மன்றாடல்)

*பாடகர் தலைவர்க்கு; கோராகியரின் புகழ்ப்பா*
1 ஆண்டவரே!
உமது நாட்டின்மீது அருள் கூர்ந்தீர்;
யாக்கோபினரை
முன்னைய நன்னிலைக்குக் கொணர்ந்தீர்.
2 உமது மக்களின் குற்றத்தை மன்னித்தீர்;
அவர்களின் பாவங்கள்
அனைத்தையும் மறைத்துவிட்டீர்.
(சேலா)
3 உம் சினம் முழுவதையும் அடக்கிக் கொண்டீர்;
கடும் சீற்றம் கொள்வதை விலக்கிக் கொண்டீர்.
4 எம் மீட்பராம் கடவுளே!
எங்களை முன்னைய

நன்னிலைக்குக் கொணர்ந்தருளும்;
எங்கள்மீது உமக்குள்ள சினத்தை
அகற்றிக் கொள்ளும்.
5 என்றென்றுமா எங்கள்மேல் நீர் சினம் கொள்வீர்?
தலைமுறைதோறுமா உமது கோபம் நீடிக்கும்?
6 உம் மக்கள் உம்மில் மகிழ்வுறுமாறு,
எங்களுக்குப் புத்துயிர் அளிக்கமாட்டீரோ?
7 ஆண்டவரே, உமது பேரன்பை
எங்களுக்குக் காட்டியருளும்;
உமது மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும்.
8 ஆண்டவராம் இறைவன்
உரைப்பதைக் கேட்பேன்;
தம் மக்களுக்கு, தம் பற்றுமிகு அடியார்க்கு
நிறைவாழ்வை அவர் வாக்களிக்கின்றார்;
அவர்களோ மடமைக்குத்
திரும்பிச் செல்லலாகாது.
9 அவருக்கு அஞ்சி நடப்போர்க்கு
அவரது மீட்பு
அண்மையில் உள்ளது என்பது உறுதி;
நம் நாட்டில் அவரது மாட்சி குடிகொள்ளும்.
10 பேரன்பும் உண்மையும் ஒன்றையொன்று சந்திக்கும்;
நீதியும் நிறைவாழ்வும் ஒன்றையொன்று முத்தமிடும்.
11 மண்ணினின்று உண்மை முளைத்தெழும்;
விண்ணினின்று நீதி கீழ்நோக்கும்.
12 நல்லதையே ஆண்டவர் அருள்வார்;
நல்விளைவை நம்நாடு நல்கும்.
13 நீதி அவர்முன் செல்லும்;
அவர்தம் அடிச்சுவடுகளுக்கு வழி வகுக்கும்.

திருப்பாடல் 85:1-13

**சிந்தனைக்கு**

பழைய மொழிபெயர்ப்பின்படி, வசனங்கள் 1 மற்றும் 4கை ஒப்பிடும்போது, ஓர் உண்மை நமக்குப் புலப்படும்: சிறையிலிருந்து எருசலேம் திரும்பிய கோராகியரில் ஒருவர், எருசலேம் நகரின் முன்னைய நன்னிலையை வாஞ்சித்துப் பாடிய திருப்பாடல் இது என்பதுவே அது. அந்த வகையில் இத்திருப்பாடல், செருபாபேல் (எஸ்ரா 3 ~ 4), எஸ்ரா (எஸ்ரா 9 ~ 10) அல்லது நெகேமியாவின் (நெகேமியா 2 ~ 6) காலத்தில், எருசலேம் நகரில் திருக்கோவிலையும் அலங்கத்தையும் கட்டுகிற காலங்களில் பாடப்பட்ட நன்றி மற்றும் மன்றாட்டுத் திருப்பாடலாக இருக்கலாம். நாட்டின் நலனுக்காகப் பாடப்பட்ட கூட்டு வழிபாட்டுப் பாடல்.

அமைப்பு:
வ.1-3, கடந்த நாட்களின் நன்மைகளுக்காக நன்றி
வ.4-7, இப்போது இறையருள் பெருக இறைஞ்சுதல்
வ.8-13, வருங்காலத்தின் வாக்குத்தத்தங்களின் மீது வாஞ்சை

வசனம் 85:1-3
*நன்றியோடு நினைவுகூரல்,* 22:3-5.
*கடவுள் செய்த சிறப்பான நன்மைகளை நினைவுகூர்ந்து நன்றி கூறுதல்:*
* *தமது நாட்டின் மீது அருள் கூர்ந்தார்.*
* *தமது மக்களின் குற்றத்தை மன்னித்தார்.*
* *தமது சீற்றத்தை விலக்கிக் கொண்டார்.*

வசனம் 85:4-7
*ஆண்டவர் இஸ்ரயேலரின் சிறையிருப்பை மாற்றினார்; ஆனால் இன்னும் நாடு முந்தைய நன்னிலைக்குத் திரும்பவில்லை; எனவே அவர்முன் மூன்று கேள்விகளை எழுப்புகிறார் திருப்பாடகர்:*
* *என்றென்றுமா ... சினம் கொள்வீர்?*
* *தலைமுறைதோறுமா உமது கோபம் நீடிக்கும்?*
* *... எங்களுக்குப் புத்துயிர் அளிக்க மாட்டீரோ?*
*இவற்றுக்கான பதில்கள் முதல் மூன்று வசனங்களிலேயே உள்ளன: சிறையிருப்பிலிருந்து விடுவித்த ஆண்டவர், தற்போதைய இன்னல்களிலிருந்தும் விடுவிப்பார். ஏனெனில் அவர் இஸ்ரயேலின் உடன்படிக்கையின் ஆண்டவர். வரலாறு நெடுகிலும், அவர் இஸ்ரயேலை விடுவிக்கிறவராகவும், வேற்றினங்களின் நடுவே அவர்களை உயர்த்துபவராகவும் இருந்து வருகிறார்.*

வசனம் 85:4
*முன்னைய நன்னிலை, இணை,* 80:3,7&19; *யோபு* 42:10.
வ.3ஆ *மற்றும்* வ.4ஆ - *இவற்றுக்கு இடையே உள்ள முரண் கவனிக்கத்தக்கது.*

*எல்லாம் நன்றாகப் போவது போல இருந்தாலும், ஒவ்வொரு நாளிலும் அடுத்த நாளைக் குறித்த கேள்வி எழுவது இயல்பு. அன்றைய வரலாற்றுச் சிக்கல்களோடு பொருத்திப் பார்க்கும் போது, திருப்பாடகரின் கவலையும் குழப்பமும் புரிந்து கொள்ளக்கூடியதே. ஆனால் நமக்கோ, "... நாளைய கவலையைப் போக்க நாளை வழி பிறக்கும்; அந்தந்த நாளுக்கு அன்றன்றுள்ள தொல்லையே போதும்."* (*மத்தேயு* 6:34)

வசனம் 85:5
*பார்க்க,* 74:1-2, 77:7-9, 80:4, 83:1, 88:14.
*சிறையிருப்பை ஆண்டவர் திருப்பியதே நல்லுறவின் உறுதி! இதைவிடவும் பேரின்பம் இவ்வுலகில் இருக்கவும் கூடுமோ!*
*நம்பிக்கையோடு பற்றுறுதிப் பயணத்தில் நிறைவாழ்வை அடைய நடை போடுவோம்.*

வசனம் 85:6
*பார்க்க,* 71:20 *மற்றும் எஸ்ராவின் மன்றாட்டு, எஸ்ரா* 9:8.

*மகிழ்ச்சியும் எழுச்சியும், பார்க்க, நெகேமியா* 12:27&43.

வசனம் 85:8-13
*சமாதானத்தை முன்னுரைக்கும் இறைவாக்கினராகத் திருப்பாடகர்.*

வசனம் 85:8
*"அவர்களோ மடமைக்குத் திரும்பிச் செல்லலாகாது" -*
*பார்க்க, எஸ்ராவின் மன்றாட்டு, எஸ்ரா* 9:10-14.

வசனம் 85:10-11
இணையும் இரட்டை ஆசிகள்:
* பேரன்பும் உண்மையும்
* நீதியும் நிறைவாழ்வும்
* உண்மையும் நீதியும்
- இவை இணைவதும் இசைந்து செல்வதும் திருப்பாடகர் அறியாத ஒன்று; நமக்கோ அந்த இணைப்பாக நமது ஆண்டவர் கிறிஸ்து இயேசு திகழ்கிறார். அவர் வழியாக, கீழ்ப்படிதலுடன் கூடிய நமது விசுவாசம், நமக்கு மென்மேலும் கிருபையை அருளட்டும்!

வசனம் 85:12-13
ஆண்டவர் அருளும் மீட்பிலும், நாட்டின் நலனிலும் நம்பிக்கையை வெளிப்படுத்தும் திருப்பாடகர்; *பார்க்க,* 43:3, 89:14, 96:6; *எசாயா* 30:23-25, 32:15-18, 40:10, 45:8, 55:10, 58:8, 61:11, 62:11; *ஆமோஸ்* 9:13.
🕎

*நாட்டின் நலனை நாடி, மக்கள் கடவுளை நோக்கி ஏறெடுக்கும் மன்றாட்டுத் திருப்பாடலாக இப்பாடல் உள்ளது.*

*வரலாற்றில் செயல்படும் கடவுள் - ஆனால் - வரலாறு முடிவுறுவதே இல்லை. இதனை நாம் எப்போதும் மனதில் கொண்டு, அவர்தம் செயல்பாடு நம் மண்ணில் தொடர வாஞ்சையோடு ஜெபிக்க வேண்டும்.*

*முதலாம் நூற்றாண்டு தொடங்கி இருபதாம் நூற்றாண்டு வரை, நமது நாட்டுக்கு மீட்பின் நற்செய்தியை திருப்பணியர் மேற்கிலிருந்து கொண்டு வந்தனர்; அவர்கள் தொடங்கி வைத்த பணி இன்றைக்கு நம்மீது உள்ளது. இதனை உணர்ந்தவர்களாக, எடுத்துக் கட்டும் பணியை நாம் தொடரவும், இத்திருப்பாடகர் வேண்டிக் கொண்டது போல, நாட்டின் புத்துயிர்ப்புக்காக கடவுளிடம் மன்றாடவும் நாம் ஆயத்தமா?*

✝

## 19 திருப்பாடல் 86

(உதவிக்காக வேண்டல்)

*தாவீதின் மன்றாட்டு*
1 ஆண்டவரே!
எனக்குச் செவிசாய்த்துப் பதிலளியும்;
ஏனெனில், நான் எளியவன்; வறியவன்.
2 என் உயிரைக் காத்தருளும்;
ஏனெனில், நான் உம்மீது பற்றுடையவன்;
உம் ஊழியனைக் காத்தருளும்;
நீரே என் கடவுள்!
நான் உம்மீது நம்பிக்கை கொண்டுள்ளேன்.
3 என் தலைவரே!
என் மேல் இரக்கமாயிரும்;
ஏனெனில், நான் முழுவதும்

உம்மை நோக்கி மன்றாடுகிறேன்.
4 உம் அடியானின் மனத்தை மகிழச் செய்யும்;
என் தலைவரே!
உம்மை நோக்கி
என் உள்ளத்தை உயர்த்துகின்றேன்.
5 ஏனெனில் என் தலைவரே!
நீர் நல்லவர்; மன்னிப்பவர்;
உம்மை நோக்கி மன்றாடும் அனைவருக்கும்
பேரன்பு காட்டுபவர்.
6 ஆண்டவரே,
என் வேண்டுதலுக்குச் செவிகொடும்;
உம் உதவியை நாடும் என் குரலைக் கேட்டருளும்.
7 என் துன்ப நாளில்
உம்மை நோக்கி மன்றாடுகின்றேன்;
நீரும் எனக்குப் பதிலளிப்பீர்.
8 என் தலைவரே!
தெய்வங்களுள் உமக்கு நிகரானவர் எவருமில்லை.
உமது செயல்களுக்கு ஒப்பானவை எவையுமில்லை.
9 என் தலைவரே!
நீர் படைத்த மக்களினத்தார் அனைவரும்
உம் திருமுன் வந்து உம்மைப் பணிவர்;
உமது பெயருக்கு மாட்சி அளிப்பர்.
10 ஏனெனில், நீர் மாட்சி மிக்கவர்;
வியத்தகு செயல்கள் புரிபவர்;
நீர் ஒருவரே கடவுள்!
11 ஆண்டவரே,
உமது உண்மைக்கேற்ப நான் நடக்குமாறு
உமது வழியை எனக்குக் கற்பியும்,
உமது பெயருக்கு அஞ்சுமாறு
என் உள்ளத்தை ஒருமுகப்படுத்தும்.
12 என் தலைவரே! என் கடவுளே!
என் முழு இதயத்தோடு உம்மைப் புகழ்வேன்;
என்றென்றும் உமது பெயருக்கு மாட்சி அளிப்பேன்.
13 ஏனெனில், நீர் என்மீது காட்டிய அன்பு பெரிது!
ஆழமிகு பாதாளத்தினின்று என்னுயிரை விடுவித்தீர்!
14 கடவுளே!
செருக்குற்றோர் எனக்கெதிராய் எழுந்துள்ளனர்;
கொடியோர் கூட்டம்
என் உயிரைப் பறிக்கப் பார்க்கின்றது;
அவர்களுக்கு உம்மைப்பற்றிய நினைவே இல்லை.
15 என் தலைவரே!
நீரோ இரக்கமிகு இறைவன்;
அருள் மிகுந்தவர்;
விரைவில் சினமுறாதவர்;
பேரன்பும் உண்மையும் பெரிதும் கொண்டவர்.
16 என்னைக் கண்ணோக்கி என்மீது இரங்கும்;
உம் அடியானுக்கு உம் ஆற்றலைத் தாரும்;
உம் அடியாளின் மகனைக் காப்பாற்றும்.

17 *நன்மைத்தனத்தின் அடையாளம் ஒன்றை*
*எனக்கு அருளும்;*
*என் எதிரிகள் அதைக் கண்டு நாணுவர்;*
*ஏனெனில், ஆண்டவராகிய நீர்தாமே*
*எனக்குத் துணைசெய்து ஆறுதல் அளித்துள்ளீர்.*

*திருப்பாடல்* 86:1-17

**சிந்தனைக்கு**

*அழிக்கத் தேடும் செருக்குற்றோரிடமிருந்து விடுபடத் துடிக்கும் எளிய உள்ளத்தின் மன்றாட்டுத் திருப்பாடல். துதியும்* (வ.5,8-10&15) *நன்றியும்* (வ.12&13) *பிணைந்து புனையப்பட்ட உணர்ச்சிமிகு மன்றாட்டுத் திருப்பாடல். நேரிட்ட இடரை விளக்குவதாக* வ.2,14&16 *விளங்குகின்றன.*

*தலைப்பில் தாவீதின் மன்றாட்டு என்ற குறிப்பு உள்ளது, பார்க்க, திருப்பாடல் 17 குறிப்பு; உம் ஊழியன்* (வ.2) *என்ற குறிப்பு தாவீது அரசரைக் குறிப்பிடுவதாக உள்ளது* (2 *சாமுவேல்* 7:5&8). *மூன்றாம் தொகுதியில் உள்ள ஒரே தாவீதியத் திருப்பாடல் இதுவாகும்.* "*என் தலைவரே*" (âdônây, *எஜமான்*) *என்று மீண்டும் மீண்டும் தாவீது கடவுளை அழைக்கிறார்* (வ.3,4,5,8,9,12&15); *அதேபோல, தான் கடவுளின் ஊழியன் / அடியான் என்பதை தாவீது மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்* (வ.2,4&16).

*மேலும் கடவுளின் உடன்படிக்கைத் திருப்பெயரான ஆண்டவர்* (yehôvâh, *கர்த்தர்*) வ.1,6,11&17*ல் தாவீது பயன்படுத்துகிறார். கடவுள்* (êlôhîm, *தேவன்,* வ.2,10,12&14) *என்கிற திருப்பெயரும், இறைவன்* (êl, *ஆண்டவர்,* வ.15) *என்கிற திருப்பெயரும் கூடப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த வகையில், இதற்கு முந்தைய திருப்பாடல்களின் வரிசையில் இத்திருப்பாடல் ஒன்றுபடுகிறது* (*பார்க்க, திருப்பாடல்கள்* 83 & 84 *குறிப்புகள்*).

*பல்வேறு தாவீதியத் திருப்பாடல்களிலிருந்து வசனங்களை அல்லது வார்த்தைகளை எடுத்துத் தொகுக்கப்பட்ட ஒரு திருப்பாடல் என்று சொல்வோரும் உள்ளனர். பின்வருமாறு வசனங்களை அவர்கள் ஒப்பிடுகின்றனர்:-*
வ.2, 25:20;
வ.3, 57:1-2;
வ.4ஆ, 25:1;
வ.6, 55:1-2;
வ.9, 22:27;
வ.11, 27:11;
வ.12, 57:9-10;
வ.14, 54:3;
வ.16, 25:16;
வ.17, 35:4.
*ஒத்த வசனங்கள் பலவும், பல்வேறு திருப்பாடல்களில் உண்டு என்பதால், இதனடிப்படையில் ஓர் ஆய்வு தேவையற்றது.*

*திருப்பாடலெங்கும் கோரிக்கைகளால் நிறைந்திருப்பதை நாம் உணரலாம்: பார்க்க,* வ.1-4,6,11,16,17. *இதன் வழியாக, அவற்றை நிறைவேற்ற ஆண்டவரை விரைவுபடுத்தும் ஓர் உத்தியைத் தாவீது கையாளுகிறார்.*

வரலாற்றுப் பின்னணி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

அமைப்பு:
வ.1-7, உதவிக்கு மன்றாடல்
வ.8-13, உதவி செய்ய வல்ல கடவுளின் ஆற்றலை உணர்ந்து துதித்தல்
வ.14-17, வந்த துன்பத்தை உரைத்து விடுவிக்க மன்றாடல்

வசனம் 86:1
"நான் எளியவன்; வறியவன்" -
பார்க்க, 6:2&6, 25:16, 38:6-8, 40:17, 69:19, 70:5, 109:22.
வாழ்நாள் முழுவதும் ஆண்டவர் திருமுன் தாவீதின் உள்ளத்திற்குள் விஞ்சியிருந்த உணர்வு.

ஆண்டவரின் சமூகத்தில் நாம் நம்மை எப்படி உணர்கிறோம்? முதலாளி? மேலாளர்? தொழிலதிபர்? மறைதிரு? அருள்திரு? சங்கைக்குரிய? ஆண்டகை? பேரருள்திரு? அய்யரம்மா? - இப்படியெல்லாம் நீங்கள் இருந்தால், இருந்து விட்டுப் போங்கள்; உங்களிடம் அவருக்கென்ன? ஏனெனில் அவரோ வெறுமையை நிரப்புகிறவர்; குறைவுகளை நிறைவாக்குபவர்; தேவைகளைச் சந்திப்பவர்.

வசனம் 86:2
"உம் ஊழியன்..." -
ebed, ஊழியன், அடிமை, பணியாளன், அடியான்.
வாழ்நாள் முழுவதும் தாவீதின் உணர்வு, பார்க்க, வ.4&16; 19:13, 35:27; 1 சாமுவேல் 23:10; 2 சாமுவேல் 7:25; மேலும் பல வசனங்கள்.

"...காத்தருளும்" -
தமது அடியாரின் உயிர்களைக் காப்பவர் கடவுள், 97:10. மேலும், 34:22.

வசனம் 86:5
மேலும், வ.15.
கடவுளிடம் ஏன் வேண்டுகிறோம்?
அவர் நல்லவர்; எத்தகைய குற்றத்தையும் தாயுள்ளத்தோடு மன்னித்து நம்மை ஏற்றுக் கொள்பவர். அவரை நோக்கி மன்றாடும் அனைவருக்கும் பேரன்பு (கிருபை) காட்டுபவர். தமது திருவாக்கில் என்றென்றும் உண்மையுள்ளவர்.

வசனம் 86:6
"என் வேண்டுதலுக்குச் செவிகொடும்" -
வ.1ல் சொல்லியதை வலியுறுத்தும் வகையில்.
மேலும் பார்க்க, 4:1, 17:1, 54:2 - இன்னும் பல தாவீதியத் திருப்பாடல்கள்.

வசனம் 86:7
வேண்டுதலுக்குச் செவிசாய்ப்பவர் கடவுள், 81:7, 91:15, 99:6. எனவே தாவீது அவரிடம் இறைஞ்சுகிறார், 3:4, 17:6, 118:5, 138:3.

வசனம் 86:8-10
மையமாக இடம் பெற்றுள்ள வசனங்களின் வழியே, திருப்பாடலின் மையக் கருத்து. அவரைப் போல் யாருண்டு? அவருக்கு ஒப்பானவர் யார்?

வசனம் 86:8
*பார்க்க, 95:3, 96:4, 97:7&9, 136:4; விடுதலைப் பயணம் 15:11; இணைச் சட்டம் 4:35; 2 சாமுவேல் 7:22; 1 அரசர்கள் 8:23; மீக்கா 7:18.*

வசனம் 86:9
*பார்க்க, 67:2-7, 87:3-7, 117:1-2;* மேலும், இறைவாக்காக, செப்பனியா 2:11; செக்கரியா 14:9&16; *திருவெளிப்பாடு 15:3-4.*

வசனம் 86:10
*"...வியத்தகு செயல்கள்..." -*
*பார்க்க, 72:18, 136:4.*

வசனம் 86:11
*"...எனக்குக் கற்பியும்" -*
*பார்க்க 25:4; 27:11.*

*"...உள்ளத்தை ஒருமுகப்படுத்தும்" -*
*வ.12ல், "...முழு இதயத்தோடு..." -*
*கடவுளின் பிள்ளைகளாக இப்பூவுலகில் எண்ணற்றோர் வாழ்கிறோம். நம் ஒவ்வொருவருக்கும் கடவுளின் அன்பு தனிப்பட்டது, முழுமையானது, நிறைவானது. ஆனால் நாம் ஒவ்வொருவரும் கடவுளிடம் செலுத்தும் அன்பு, தனித்துவமானதா? முழுமையானதா? நிறைவானதா? சிறப்பானதா?*
*கிறிஸ்து இயேசு கற்பித்ததையும் நினைவில் கொள்ளுங்கள் (மத்தேயு 6:24; லூக்கா 16:13). எனவேதான் கடவுள், புதியதான இதயத்தை அருள நமக்கு வாக்களிக்கிறார் (எசேக்கியேல் 11:19-20). அதையே தாவீது இங்கு வேண்டுகிறார்.*

வசனம் 86:13
*பாதாளம், பார்க்க, 6:5, 88:4&6; யோபு 33:28-30.*
*அது கடவுளிடமிருந்து நம்மை நிரந்தரமாகப் பிரிக்கும் இடம், எசாயா 38:18.*

வசனம் 86:14
*பார்க்க, 7:1-2, 17:13, 35:3-4 மற்றும் பல வசனங்கள்.*
*பாதாளத்திலிருந்து விடுவித்த ஆண்டவர் (வ.13), தன் உயிரைப் பறிக்கத் தேடும் கொடியோரிடமிருந்து இப்போதும் காக்குமாறு வேண்டுகிறார். ஏனெனில் கொடியோர் ஒருபோதும் கடவுளை நாடுவதில்லை, 19:13, 54:3.*

வசனம் 86:15
*கடவுளின் மிகச் சிறந்த தன்மைகளை மீண்டும் குறிப்பிடும் தாவீது.*
*மேலும் பார்க்க, விடுதலைப் பயணம் 34:6.*

வசனம் 86:16
*"...அடியாளின் மகன்..." -*
*தாவீதின் தாய் குறித்த எந்தவொரு செய்தியும் நமக்கு வரலாற்று நூல்களில் சொல்லப்படவில்லை. கடவுளின் அடியவரான தாவீது, அதேபோன்ற அடியவர் ஒருவரால் பெற்று வளர்க்கப்பட்டவர் என்பதை நாம் இவ்வசனத்தின் வழியாகப் புரிந்து கொள்ளலாம்.*

வசனம் 86:17
*நன்மை செய்வதில் கண்ணாயிருக்கும் கடவுள், எரேமியா 24:6.*

"*நன்மைத்தனத்தின் அடையாளம்...*" -
*அடையாளத்தைத் தாவீது தனக்கென்று கேட்கவில்லை; கடவுள் யாரென்று அவர் ஏற்கனவே கேட்டும் கண்டும் உணர்ந்தும் இருக்கிறார் (வ.5, 8-10, 15). தனது எதிரிகளும் அறியும் பொருட்டு தாவீது கடவுளின் அடையாளத்தைக் கேட்கிறார்.*
🕎

"*தாழ்மையோடும், பலவீனத்தால் மெல்லிய குரலிலும், அலைக்கழிப்பில் தடுமாற்றத்தோடும் நமது மன்றாட்டுகள் இருந்தால், கடவுள் அவற்றை நோக்கிப் பார்க்கிறார்; என்றென்றைக்கும் உயர்த்தப்படும் ஆண்டவர், அத்தகைய ஜெபங்களை ஏற்றுக் கொள்கிறார்.*" (ஸ்பர்ஜின்)
*எளிமையோடும் தாழ்மையோடும் தாவீது அத்தகைய முன்மாதிரியான மன்றாட்டை இங்கு ஏறெடுக்கிறார்.*

✝

## 19 திருப்பாடல் 87

*(பெருமைமிகு எருசலேம்)*

*கோராகியரின் புகழ்ப் பாடல்*
1 நகரின் அடித்தளம்
திருமலைகளின்மீது அமைந்துள்ளது.
2 யாக்கோபின் உறைவிடங்கள் அனைத்தையும்விட
ஆண்டவர் சீயோன் நகர வாயில்களை விரும்புகின்றார்.
3 கடவுளின் நகரே!
உன்னைப்பற்றி மேன்மையானவை பேசப்படுகின்றன.
(சேலா)
4 எகிப்தையும் பாபிலோனையும்
என்னை அறிந்தவைகளாகக் கொள்வேன்;
பெலிஸ்தியர், தீர் மற்றும்
எத்தியோப்பியா நாட்டினரைக் குறித்து,
'இவர்கள் இங்கேயே பிறந்தவர்கள்'
என்று கூறப்படும்.
5 'இங்கேதான் எல்லாரும் பிறந்தனர்;
உன்னதர்தாமே அதை நிலைநாட்டியுள்ளார்!'
என்று சீயோனைப்பற்றிச் சொல்லப்படும்.
6 மக்களினங்களின் பெயர்களைப் பதிவு செய்யும்போது,
'இவர் இங்கேதான் பிறந்தார்' என ஆண்டவர் எழுதுவார்.
(சேலா)
7 ஆடல் வல்லாருடன் பாடுவோரும் சேர்ந்து
'எங்கள் நலன்களின் ஊற்று உன்னிடமே உள்ளது;
எல்லாரின் உறைவிடமும் உன்னிடமே உள்ளது' என்பர்.

திருப்பாடல் 87:1-7

**சிந்தனைக்கு**

*முந்தைய திருப்பாடலின் தலைப்பைப் போலவே, எளிமையான தலைப்பு. வரலாற்றுக் குறிப்பு ஏதும் இல்லை; உள்ளே வசனங்களிலும் எத்தகைய வரலாற்றுக் குறிப்பும் இல்லை. ஆனால் வரலாற்றின் அடிப்படையில் நாம் ஒன்றைப் புரிந்து கொள்ளலாம்: இப்பாடல் அரசாட்சிக் கால சீயோனையோ, சிறையிருப்புக்குப் பிந்தைய சீயோனையோ குறிப்பிடவில்லை. அவ்விதத்தில், இது ஓர் இறைவாக்குத் திருப்பாடல் எனலாம்.*

*மொத்தத் திருப்பாடல்களிலும் சீயோனில் ஏற்றுக் கொள்ளப்படும் வேற்றினத்தார் குறித்துப் பாடும் தனித்துவமான திருப்பாடல் இது; எனினும்,* 86:9*ன் தொடர்ச்சியான விளக்கமாகவே வ.*4-6 *அமைதல் நோக்கத்தக்கது. மேலும்* 47:9*ம் மனதில் கொள்ளத்தக்கது. இவையெல்லாம் இறைவாக்கினர் உரைத்தவற்றின் தாக்கம் என்றும் சொல்லலாம் (எசாயா* 2:2-4, 19:19-25, 25:6, 45:22-24, 56:6-8, 66:15-20; *தானியேல்* 7:13-14; *மீக்கா* 4:1-3; *செக்கரியா* 8:23, 14:16.) *அதேவேளையில்,* 46, 48, 76, 125, 129 & 137 *போன்ற இதர சீயோன் திருப்பாடல்களிலிருந்து இந்தத் திருப்பாடல் உறுதியாக வேறுபட்டதே!*

*வரலாற்றில் வியப்புக்குரிய நகர் எருசலேம். எந்தவொரு பேராற்றின் கரையிலும் அது அமையவில்லை; கடற்கரையும் கிடையாது; குறிப்பிடத்தக்க வணிகமும் கிடையாது; பன்னாட்டு நெடுஞ்சாலையிலும் அது அமையவில்லை. நீர்வளமோ நிலவளமோ குன்றியது; ஆனால் கடவுள் அற்பமானவைகளைத் தமது மாட்சி விளங்கும்படி தெரிந்து கொள்கிறார்!*

*அமைப்பு:*
*வ.*1-3, *போற்றுதலுக்குரிய சீயோன்*
*வ.*4-6, *தொன்மையான எதிரிகள் சீயோனோடு ஒன்றிணைக்கப்படுதல்*
*வ.*7, *கொண்டாட்டங்களில் சீயோனில் எழும் பேரொலி*

*வசனம்* 87:1
*மொழிபெயர்ப்புச் சிக்கல் முதல் வசனத்திலேயே உள்ளது. அடித்தளம் என்பது எதன் அடித்தளம் என்று மூலமொழியில் சொல்லப்படவில்லை. எனவே அவரின் அடித்தளம்* (OV), *நகரின் அடித்தளம் (பொ.மொ.) என்னும் இரு வேறு பொருள்களில் ஆங்கிலத்தில் பற்பல மொழிபெயர்ப்புகள் உள்ளன. நேரடியான சொல் மூலநூலில் இல்லை என்பதால் சேர்க்கப்படும் சொல் அல்லது சொற்கள் சரியான பொருள் தருவதாக இருக்க வேண்டும். அந்த வகையில், அவரின் அடித்தளம் என்பது சரியாக இராது - ஏனெனில் பேரண்டப் பெருவெளியைப் படைத்த ஆற்றல்மிகு கடவுளைப் பூமிப்பந்தின் சிறிய புள்ளியில் அடைப்பதாக அது அமைகிறது. படைப்பா? படைத்தவரா? எது முதன்மையானது என்னும் இறையியல் கேள்வி எழுகிறது.*

RSV *(மற்றும்* ESV *போன்றவை) மொழிபெயர்ப்பு மிகவும் தெளிவாக உள்ளது: "திருமலைகளின் மீது ஆண்டவர் அடித்தளமிட்ட சீயோன் அமைந்துள்ளது" என்று அதனைப் பொருள் கொள்ளலாம் (மேலும் பார்க்க, எசாயா* 14:32, 28:16). *தமது உறைவிடமாக சீயோனை ஆண்டவர் தெரிந்து கொண்டு, இறைவாக்கினர் காத் வழியாக அதனை அரசர் தாவீதுக்கு வெளிப்படுத்தினார்* (2 *சாமுவேல்* 24:18-19). *அத்தளத்தைத் தமது மாட்சியால் நிரப்பி, தாம் முன்னமே சொன்னதை உறுதிப்படுத்தினார்* (1 *அரசர்கள்* 8:10-11).

படைக்கப்பட்ட யாதொன்றிலும் பெருமை பாராட்டாதபடி எச்சரிக்கை தேவை; ஏனெனில் நமது ஆண்டவர் கிறிஸ்து இயேசு நமக்குக் கற்பிக்கிறார்: "அம்மா, என்னை நம்பும். காலம் வருகிறது. அப்போது நீங்கள் தந்தையை இம்மலையிலோ எருசலேமிலோ வழிபடமாட்டீர்கள். ... காலம் வருகிறது; ஏன், வந்தேவிட்டது! அப்போது உண்மையாய் வழிபடுவோர் தந்தையை அவரது உண்மை இயல்புக்கேற்ப உள்ளத்தில் வழிபடுவர்..." (யோவான் 4:21&23).

வசனம் 87:2
வாயில்காப்பாளரான கோராகியர், தங்கள் ஊழியத்தில் கடவுளின் பிரசன்னத்தை உணர்ந்து பாடியது.

யாக்கோபின் உறைவிடங்கள் -
இஸ்ரயேலின் நகர்கள்.
எருசலேம் நகருக்குப் பேழை வருமுன்னர், அது சீலோவிலும், கிரியத்து எயாரிமிலும் இருந்தது.

வசனம் 87:3
இன்னும் வெளிப்படாத எருசலேமின் மேன்மை, பார்க்க, எசாயா 60.

வசனம் 87:4-6
இஸ்ரயேலரை அடிமைப்படுத்திய எகிப்து மற்றும் பாபிலோனியா, தொல்லையளித்த பெலிஸ்தியா மற்றும் தீரு, நலன் நாடிய எத்தியோப்பியா ஆகிய நாடுகளின் மக்கள், தம்மை ஏற்றுக் கொண்டவர்களாக இங்கு ஆண்டவர் அடையாளம் கண்டு வெளிப்படுத்துகிறார். எகிப்து போன்ற நாடுகளின் மாய நம்பிக்கைகள் யாவும் செயலற்றுப் போகும் (எசாயா 30:7). அனைவரும் ஆண்டவரோடு கடவுளுக்குள் ஒன்றாக இருக்கிறோம் (யோவான் 17:21-22).

வசனம் 87:5-6
"இங்கேதான் எல்லாரும் பிறந்தனர்" -
"அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார்" (யோவான் 1:12) என்பதை நாம் இங்கு நினைவில் கொள்வோம்.

மேலும், "மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காண இயலாது என மிக உறுதியாக உமக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 3:3) என்று கிறிஸ்து இயேசு கற்பித்ததையும் நினைவில் கொள்ளுங்கள். அவ்வாறு ஆவியில் மறுபடிப் பிறந்து, கடவுளின் பிள்ளைகள் என்ற உரிமையை உடைய நம்மில், வேற்றுமை ஏதுமில்லை (கலாத்தியர் 3:27-29).

பெயர்களைப் பதிவு செய்தல், பார்க்க, மலாக்கி 3:16.

வசனம் 87:7
"ஆடல் வல்லாருடன் பாடுவோர்..." -
KJV, Amplified Bible, NIV போன்றவை, பாடகரும் இசைக்கருவிகளை இசைப்போரும் என்று பொருள் கொண்டுள்ளன. மூலச் சொல் châlal என்பதற்கு வெவ்வேறு பொருள்கள் உள்ளன. அவற்றில் ஒன்று நரம்பிசைக் கருவியை இயக்குதல்.

"நலன்களின் ஊற்று" -
கடவுளிடமிருந்தே நலமான அனைத்தும் ஊற்றெடுத்து வருகின்றன (பார்க்க, 36:8, 46:4; எசேக்கியேல் 47:1-12; திருவெளிப்பாடு 22:1-2). அவரின் மாட்சி நிறைந்த எருசலேமிலிருந்தே எல்லா நன்மைகளும் வருவதாகத் திருப்பாடகர் உரைக்கிறார். 🕎

இன்றைய எருசலேம் நன்மைகள் நிறைந்த இடமாக இருக்கிறதா? சாலேமில் சமாதானம் நிலவுகிறதா? வணிக நலனுக்கான நகராக இன்றைய எருசலேம் உள்ளது; அந்த அளவுக்கு மட்டுமே அங்கு சமாதானம் உள்ளது. மக்களும் இனங்களாக, சமயங்களாகப் பிரிந்து கிடக்கின்றனர். எனவே மறக்க வேண்டாம்: "எருசலேமில் சமாதானம் நிலைத்திருக்கும்படி வேண்டிக் கொள்ளுங்கள்." (122:6அ)

## 19 திருப்பாடல் 88

(உதவிக்காக வேண்டல்)

*கோராகியரின் புகழ்ப்பாடல்; பாடகர் தலைவர்க்கு; நோயின் துயரில் என்ற மெட்டு; எஸ்ராகியரான ஏமானின் அறப்பாடல்*

1 ஆண்டவரே!
என் மீட்பின் கடவுளே!
பகலில் கதறுகிறேன்;
இரவில் உமது முன்னிலையில் புலம்புகின்றேன்.
2 என் மன்றாட்டு உம் திருமுன் வருவதாக!
என் கூக்குரலுக்குச் செவிசாய்த்தருளும்!
3 ஏனெனில், என் உள்ளம்
துன்பத்தால் நிறைந்துள்ளது;
என் உயிர் பாதாளத்தை நெருங்கிவிட்டது.
4 படுகுழிக்குள் இறங்குவோருள் ஒருவராக
நானும் கணிக்கப்படுகின்றேன்;
வலுவிழந்த மனிதரைப்போல் ஆனேன்.
5 இறந்தோருள் ஒருவராகக் கைவிடப்பட்டேன்;
கொலையுண்டு
கல்லறையில் கிடப்பவர்போல் ஆனேன்;
அவர்களை ஒருபோதும் நீர் நினைப்பதில்லை;
அவர்கள் உமது பாதுகாப்பினின்று
அகற்றப்பட்டார்கள்.
6 ஆழமிகு படுகுழிக்குள் என்னைத் தள்ளிவிட்டீர்!
காரிருள் பள்ளங்களுக்குள்
என்னைக் கைவிட்டு விட்டீர்.
7 உமது சினம் என்னை அழுத்துகின்றது;
உம் அலைகள் அனைத்தும்
என்னை வருத்துகின்றன.
(சேலா)
8 எனக்கு அறிமுகமானவர்களை
என்னைவிட்டு விலகச்செய்தீர்;
அவர்களுக்கு என்னை அருவருப்பாக்கினீர்;
நான் வெளியேற இயலாவண்ணம்
அடைபட்டுள்ளேன்.
9 துயரத்தினால் என் கண் மங்கிப்போயிற்று;
ஆண்டவரே!
நாள்தோறும் உம்மை மன்றாடுகின்றேன்;

உம்மை நோக்கி
என் கைகளைக் கூப்புகின்றேன்.
10 இறந்தோர்க்காகவா நீர்
வியத்தகு செயல்கள் செய்வீர்?
கீழுலகின் ஆவிகள்
எழுந்து உம்மைப் புகழுமோ?
(சேலா)
11 கல்லறையில் உமது பேரன்பு எடுத்துரைக்கப்படுமா?
அழிவின் தலத்தில் உமது உண்மை அறிவிக்கப்படுமா?
12 இருட்டினில் உம் அருஞ்செயல்கள் அறியப்படுமா?
மறதி உலகில் உம் நீதிநெறி உணரப்படுமா?
13 ஆண்டவரே!
நானோ உம்மை நோக்கிக் கதறுகின்றேன்;
காலையில் உம்மை நோக்கி மன்றாடுகின்றேன்.
14 ஆண்டவரே! என்னை ஏன் தள்ளிவிடுகின்றீர்?
உமது முகத்தை என்னிடமிருந்து
ஏன் மறைக்கின்றீர்?
15 என் இளமை முதல் நான்
துன்புற்று மடியும் நிலையில் உள்ளேன்;
உம்மால் வந்த பெருந் திகிலால்
தளர்ந்து போனேன்.
16 உமது வெஞ்சினம் என்னை மூழ்கடிக்கின்றது;
உம் அச்சந்தரும் தாக்குதல்கள் என்னை அழிக்கின்றன.
17 அவை நாள் முழுவதும்
வெள்ளப்பெருக்கென என்னைச் சூழ்ந்து கொண்டன;
அவை எப்பக்கமும் என்னை வளைத்துக்கொண்டன.
18 என் அன்பரையும் தோழரையும்
என்னைவிட்டு அகற்றினீர்;
இருளே என் நெருங்கிய நண்பன்.

திருப்பாடல் 88:1-18

**சிந்தனைக்கு**

துயர்மிகு மனிதர் என்றால் பைபிள் படித்த ஒவ்வொருவருக்கும் நினைவிற்கு வருபவர் யோபு. ஆடு, மாடு, ஒட்டகம் என்று அனைத்துச் செல்வங்களும் அழிந்தன. நிலத்தின் விளைச்சல்கள் அனைத்தும் அழிந்தன. தரித்திரம் அவரைச் சூழ்ந்தது. பெற்ற பிள்ளைகள் அனைவரையும் பறிகொடுத்தார். என்னவென்று சொல்லமுடியாத கொடிய நோய்களால் தாக்கப்பட்டார். உடல் நாற்றமெடுக்கும் நிலையில் மனைவியும் விலகி நின்றார். உற்றார் உறவினரும் நீதித் தலைவராகக் கொண்டாடிய ஊரும் அவரை ஒதுக்கித் தள்ளி வைத்தது. ஆறுதல் தர வந்த நண்பர்களும் அவர்மீது குற்றம்சாட்டினர். கையறு நிலையில் கடவுளும் தன்னைத் தள்ளி விட்டாரோ என்று தன் மனதில் ஐயுரு நிலையில் வாழ்ந்தார்.

- இவற்றுள் எந்தத் துயரில் இந்தத் திருப்பாடகர் இருந்தார் என்பதை நாம் அறியோம். ஆனால் இந்தத் திருப்பாடலை நாம் வாசிக்கும் வேளையில், யோபு நம் நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியாது! யோபு நூலின் வசனங்கள் பலவும் இத்திருப்பாடலின் வசனங்களோடு ஒத்திருப்பதைக் காணலாம்:

வ.3 > யோபு 33:22
வ.6 > யோபு 10:21-22

வ.8 > யோபு 19:13-19
வ.9 > யோபு 11:13
வ.10 > யோபு 28:22
வ.12 > யோபு 10:21
வ.14 > யோபு 13:24
வ.15-16 > யோபு 6:4
வ.18 > யோபு 19:13

நோயுற்றவரின் மன்றாட்டு என்ற அளவில், திருப்பாடல் 38 மற்றும் 41 ஆகியவற்றோடும் ஒப்பிடத்தக்கது. சிலர் பெரிய வெள்ளி ஆராதனைக்கு உகந்தது என்கின்றனர்; ஆனால் ஒப்பீட்டளவில், திருப்பாடல் 22ன் இறைவாக்குத் தன்மை ஏதும் இப்பாடலில் இல்லை; எனவே இந்தக் கருத்து ஏற்புடையதாக இல்லை.

மஹலாத் லெயனோத் எனத் தலைப்பில் காணப்படும் சொற்களுக்கு, நோயின் துயரில் என்ற பாடலின் மெட்டு என்று பொருள் கொள்கிறார்கள். இந்தத் திருப்பாடலை எழுதியவரான ஏமான், யூதாவுக்குத் தாமார் பெற்ற செராகு என்பவரின் வழியில் வந்தவர் (தொடக்க நூல் 38:29-30; 1 குறிப்பேடு 2:6). எஸ்ராகியர் / எசுராகியர் என்பது சேராகின் வழிவந்தவர்களைக் குறிக்கும் சொல் (1 அரசர்கள் 4:31).

அமைப்பு:
வ.1-2, தொடக்க மன்றாட்டு
வ.3-5, சாவின் விளிம்பில் நிற்கும் திருப்பாடகர்
வ.6-8, கடவுளைக் குறித்த முறையீடு
வ.9-12, மீட்பு தாமதிக்கையில் திருப்பாடகரின் நிலை
வ.13-14, இறுதி மன்றாட்டு
வ.15-18, நீண்ட காலத் துயரை வெளிப்படுத்தித் தனது கவலையை முறையிடுதல்

வசனம் 88:1
புலம்பலும், முறையீடும், வாதிடுதலும் (வ.10-12), பழிபோடுதலுமாக (வ.14) உள்ள இத்திருப்பாடலில், நம்பிக்கையை வெளிப்படுத்தும் ஒரேயொரு திருமொழி இந்த வசனமே!

அதிலேயே தனது முடிவறியாத் துயரிலிருந்து தன்னை மீட்க வல்லவர் ஆண்டவர் என்ற உணர்வு மிகுதியில், "ஆண்டவரே! என் மீட்பின் கடவுளே!" என்று திருப்பாடகர் அறிக்கை செய்கிறார்.

நோயால் நெடுங்காலம் (வ.15) துயருற்ற போதிலும், திருப்பாடகர் கடவுளின் மீது வைத்த பற்றுறுதியில் நிலைத்திருந்ததை இவ்வறிக்கை உணர்த்துகிறது.

சின்னச் சின்ன சோதனையிலும் சோர்ந்து போகும் நம்மில் பலருக்கு, இந்தப் படிப்பினை இன்றியமையாதது.

வசனம் 88:2
முந்தைய வசனத்தோடு நெருங்கிய தொடர்பில், இவ்வசனம் அமைகிறது. ஆண்டவர் திருமுன் தனது கதறல் இப்போதாவது கேட்கப்படட்டும் என்று திருப்பாடகர் மன்றாடுகிறார்.

வசனம் 88:3
"பாதாளம்" -
shéól; பார்க்க, 6:5, 30:3, 31:17, 49:14-15, 89:48; யோபு 7:9, 21:13, 24:19.

வசனம் 88:4
"படுகுழி" -
bôr, குழி, நிலவறை, கிணறு; பொதுவாக உயிரற்ற உடலுக்கான இடம். பார்க்க, 28:1, 30:3, 40:2, 143:7.

வசனம் 88:5
பொருத்தி வேறுபாட்டை உணர்க, 6:5.
இறந்தோர் ஆண்டவரை நினைப்பதில்லை; ஆண்டவரும் இறந்தோரை நினைப்பதில்லை! வாழும் நாள்களில் போராடும் ஒருவருக்கே ஆண்டவர் தேவைப்படுகிறார்!

வசனம் 88:6
"காரிருள்" -
கொஞ்சமும் ஒளியற்ற இருள்; ஏதாவது நல்லது ஒன்று நடக்கும் என்ற நம்பிக்கை சற்றும் இல்லாத நிலை.

வசனம் 88:7
வேறு சொற்களில், வ.16.
வருத்தும் அலைகள், பார்க்க, 42:7ஆ.

வசனம் 88:8
பார்க்க, 31:11; யோபு 19:13, 30:10.

"வெளியேற இயலாவண்ணம்" -
மோசேயின் திருச்சட்டப்படி (லேவியர் 13 ~ 14), இத்திருப்பாடகர் தூய்மையற்றவராக கண்டறியப்பட்டு விலக்கி வைக்கப்பட்டிருக்கலாம். நோய் குணமாக நெடுங்காலம் ஆகியிருக்கலாம்.

வசனம் 88:9
பார்க்க, யோபு 17:7 & 11:13.

"நாள்தோறும்" -
"நாள் முழுவதும்" என்றும் பொருள் கொள்ளலாம். துயருற்ற நிலையில், திக்கற்ற மனிதராக, தனது நிலை மாற மன்றாடிக் கொண்டேயிருக்கும் திருப்பாடகர்.

வசனம் 88:10-11
"...கீழுலகின் ஆவிகள்..." -
ஒப்பிட்டுப் பார்க்க, யோபு 26:5.
கீழுலகின் ஆவிகளும் கடவுளுக்கு அஞ்சி நடுங்குகின்றன; அப்படியானால், கடவுளின் பேராற்றல் எங்கும் செயல்படுகிறது.
நியாயத்தீர்ப்புக்கென அங்கு வைக்கப்பட்டுள்ள அடியாரின் ஆவிகள் கடவுளைத் துதிப்பன (லூக்கா 16:22-26).

வசனம் 88:12
வ.10, வேறு சொற்களில்.

வசனம் 88:13
உயிரற்ற உலகைக் குறித்துப் பேசிய திருப்பாடகர், உணர்வடைந்தவராக, மீண்டும் கடவுளை நோக்கிக் கதறுகிறார், வ.1&9.

வசனம் 88:14
"உமது முகத்தை என்னிடமிருந்து ஏன் மறைக்கின்றீர்?" -
திகிலூட்டும் நிலை, பார்க்க, 44:24; யோபு 13:24, 34:39.

வசனம் 88:15-17
யோபைப் போலக் கடவுளைக் குற்றம் சாட்டும் திருப்பாடகர், பார்க்க, யோபு 6:4, 9:34, 13:21. இதற்குப் பொருள், கடவுளை அவர் எதிர்த்து நிற்கிறார் என்பதல்ல; தனது போராட்டத்தில் சோர்ந்து போன திருப்பாடகர், இறையருள் தாமதிக்கும் வேளையில், தனது மனநிலையே வெளிப்படுத்தும் விதமாக இப்படிப் பேசுகிறார். ஆண்டவர் தம் ஆறுதலை அருள அவரைத் தூண்டுகிறார்.

வசனம் 88:18
திருப்பாடல் முழுமையும் துன்பம் துயரின் வெளிப்பாடாக இருந்தது போலவே, முடிவும் அமைகிறது. கடவுளுக்குப் பொருத்தனையோ புகழ்ச்சியோ இல்லாதிருப்பது கவனிக்கத்தக்கது.

ஆறுதல் தேடும் போதும் திருப்பாடகர் பெறுவது இருளே! அந்த வகையில் யோபு பல திருமொழிகளின் வழியே அவருடைய நம்பிக்கையை வெளிப்படுத்துகிறதை நாம் காணலாம்.
🕎

திருப்பாடகரின் துயர நாள்கள் முடிந்திருக்கும் என்று நாம் நம்புவோம். இங்குக் காண்பது போல, நம்பிக்கையற்ற நிலையில் நாம் ஒருபோதும் இருப்பதில்லை; ஆண்டவரின் வார்த்தையும், அவர் அருளிய தேற்றரவாளரும் நமக்கு உண்டு என்பதே நமது வலிமை. இத்தகைய ஆசிகளுக்காக நாம் எப்போதும் கடவுளைத் துதித்து வாழ்வோம்.

✝️

## 19 திருப்பாடல் 89

*(நாடு இடருற்றபோது பாடியது)*

*எஸ்ராகியரான ஏத்தானின் அறப் பாடல்*
1 ஆண்டவரின் பேரன்பைப்பற்றி
நான் என்றும் பாடுவேன்;
நீர் உண்மையுள்ளவர் எனத் தலைமுறைதோறும்
என் நாவால் அறிவிப்பேன்.
2 உமது பேரன்பு என்றென்றும் நிலைத்துள்ளது
என்று அறிவிப்பேன்;
உமது உண்மை வானைப்போல் உறுதியானது.
3 நீர் உரைத்தது:
'நான் தேர்ந்து கொண்டவனோடு
உடன்படிக்கை செய்துகொண்டேன்;

என் ஊழியன் தாவீதுக்கு
ஆணையிட்டு நான் கூறியது:
4 உன் வழிமரபை
என்றென்றும் நிலைக்கச் செய்வேன்;
உன் அரியணையைத் தலைமுறை தலைமுறையாக
நிலைத்திருக்கச் செய்வேன்.'
(சேலா)
5 ஆண்டவரே, வானங்கள்
உம் வியத்தகு செயல்களைப் புகழ்கின்றன;
தூயவர் குழுவினில் உமது உண்மை விளங்கும்.
6 வான்வெளியில் ஆண்டவருக்கு நிகரானவர் யார்?
தெய்வ மைந்தர் குழுவில்
ஆண்டவருக்கு இணையானவர் யார்?
7 தூயவர் குழுவில் அவர் அஞ்சுதற்குரிய இறைவன்;
அவரைச் சூழ்ந்துள்ள அனைவருக்கும் மேலாக
அஞ்சுதற்கு உரியவர்.
8 படைகளின் கடவுளாகிய ஆண்டவரே!
உம்மைப்போல் ஆற்றல் மிக்கவர் யார்?
ஆண்டவரே! உம் உண்மை உம்மைச் சூழ்ந்துள்ளது.
9 கொந்தளிக்கும் கடல்மீது நீர் ஆட்சி செலுத்துகின்றீர்;
பொங்கியெழும் அதன் அலைகளை அடக்குகின்றீர்.
10 இராகாபைப் பிணமென நசுக்கினீர்;
உம் எதிரிகளை உம் வலிய புயத்தால் சிதறடித்தீர்.
11 வானமும் உமதே!
வையமும் உமதே!
பூவுலகையும் அதில் நிறைந்துள அனைத்தையும்
நிலைநிறுத்தியவர் நீரே!
12 வடக்கையும் தெற்கையும் படைத்தவர் நீரே!
தாபோரும் எர்மோனும்
உம் பெயரைக் களிப்புடன் புகழ்கின்றன.
13 வன்மைமிக்கது உமது புயம்;
வலிமைகொண்டது உமது கை;
உயர்ந்து நிற்பது உம் வலக்கை;
14 நீதியும் நேர்மையும்
உம் அரியணைக்கு அடித்தளம்;
பேரன்பும் உண்மையும் உமக்கு முன்னே செல்லும்.
15 விழாவின் பேரொலியை
அறிந்த மக்கள் பேறுபெற்றோர்;
ஆண்டவரே! உம் முகத்தின் ஒளியில்
அவர்கள் நடப்பார்கள்.
16 அவர்கள் நாள்முழுவதும்
உம் பெயரில் களிகூர்வார்கள்;
உமது நீதியால் அவர்கள் மேன்மை அடைவார்கள்.
17 ஏனெனில், நீரே அவர்களது ஆற்றலின் மேன்மை;
உமது தயவால் எங்கள் வலிமை உயர்த்தப்பட்டுள்ளது.
18 நம் கேடயம் ஆண்டவருக்கு உரியது;
நம் அரசர் இஸ்ரயேலின் தூயவருக்கு உரியவர்.

*(கடவுள் தாவீதுக்கு அளித்த வாக்குறுதி)*

19 *முற்காலத்தில் உம் பற்றுமிகு அடியார்க்கு*
*நீர் காட்சி தந்து கூறியது:*
*"வீரன் ஒருவனுக்கு வலிமை அளித்தேன்;*
*மக்களினின்று தேர்ந்தெடுக்கப்பட்டவனை உயர்த்தினேன்.*
20 *என் ஊழியன் தாவீதைக் கண்டுபிடித்தேன்;*
*என் திருத்தைலத்தால்*
*அவனுக்குத் திருப்பொழிவு செய்தேன்.*
21 *என் கை எப்பொழுதும் அவனோடு இருக்கும்;*
*என் புயம் உண்மையாகவே அவனை வலிமைப்படுத்தும்.*
22 *எதிரி எவனாலும் அவனை வஞ்சிக்க முடியாது;*
*தீயவன் எவனாலும் அவனை ஒடுக்க இயலாது.*
23 *அவனுடைய எதிரிகளை*
*அவன் கண்முன் நசுக்குவேன்;*
*அவனை வெறுப்போரை வெட்டிக் கொல்வேன்.*
24 *என் வாக்குப் பிறழாமையும் பேரன்பும்*
*அவனோடு இருக்கும்;*
*என் பெயரால் அவனது வலிமை உயர்த்தப்படும்.*
25 *அவன் கையைக் கடல்வரைக்கும்*
*அவன் வலக்கையை ஆறுகள் வரைக்கும்*
*எட்டச் செய்வேன்.*
26 *'நீரே என் தந்தை, என் இறைவன்,*
*என் மீட்பின் பாறை' என்று*
*அவன் என்னை அழைப்பான்.*
27 *நான் அவனை என் தலைப்பேறு ஆக்குவேன்;*
*மண்ணகத்தின் மாபெரும் மன்னன் ஆக்குவேன்.*
28 *அவன்மீது கொண்ட பேரன்பு*
*என்றும் நிலைக்குமாறு செய்வேன்;*
*அவனோடு நான் செய்துகொண்ட உடன்படிக்கையும்*
*எப்பொழுதும் நிலைத்திருக்கும்.*
29 *அவனது வழிமரபை என்றென்றும் நிலைநிறுத்துவேன்;*
*அவனது அரியணையை*
*வான்வெளி உள்ளவரை நிலைக்கச் செய்வேன்.*
30 *அவன் புதல்வர் என் திருச்சட்டத்தைக் கைவிட்டாலோ,*
*என் நீதிநெறிகளின்படி நடக்காவிடிலோ,*
31 *என் விதிகளை மீறினாலோ,*
*என் கட்டளைகளைக் கடைப்பிடிக்காவிடிலோ,*
32 *அவர்களது குற்றத்திற்காக*
*அவர்களைப் பிரம்பினால் தண்டிப்பேன்;*
*அவர்களின் தீச்செயலுக்காக*
*அவர்களைக் கசையால் அடிப்பேன்;*
33 *ஆயினும், என் பேரன்பை*
*தாவீதைவிட்டு விலக்கமாட்டேன்;*
*என் வாக்குப்பிறாழாமையினின்று வழுவமாட்டேன்.*
34 *என் உடன்படிக்கையை நான் மீறமாட்டேன்.*
*என் வாக்குறுதியை நான் மாற்றமாட்டேன்.*
35 *ஒரே முறையாய் என் புனிதத்தின் மீது*

ஆணையிட்டுக் கூறினேன்;
ஒருபோதும் அவனுக்கு நான் பொய் உரைக்கமாட்டேன்.
36 அவனது வழிமரபு என்றென்றும் நிலைத்திருக்கும்;
அவனது அரியணை கதிரவன் உள்ளளவும்
என்முன் நிலைக்கும்.
37 அது விண்ணின்
உண்மையான சான்றென உறுதியாயிருக்கும்;
நிலாவென என்றென்றும் நிலைத்திருக்கும்."
(சேலா)

*(அரசரின் தோல்வி குறித்துப் புலம்பல்)*

38 ஆயினும், திருப்பொழிவு பெற்றவரை
இப்போது நீர் புறக்கணித்துத் தள்ளிவிட்டீர்;
அவர்மீது கடுஞ்சினம் கொண்டுள்ளீர்.
39 உம் ஊழியருடன் செய்துகொண்ட
உடன்படிக்கையை வெறுத்து ஒதுக்கினீர்;
அவரது மணிமுடியைப்
புழுதியில் தள்ளி இழிவுபடுத்தினீர்.
40 அவருடைய மதில்களைத் தகர்த்துவிட்டீர்;
அவருடைய அரண்களைப் பாழடையச் செய்தீர்.
41 வழிப்போக்கர் அனைவரும்
அவரைக் கொள்ளையிடுகின்றனர்;
அடுத்து வாழ்வோரின் பழிப்புக்கு அவர் ஆளானார்.
42 அவருடைய எதிரிகளின் கை ஓங்கச் செய்தீர்;
அவருடைய பகைவர் அனைவரும் அக்களிக்கச் செய்தீர்.
43 அவரது வாளின் முனையை வளைத்துவிட்டீர்;
போரில் அவரால் எதிர்த்து நிற்க முடியாதபடி செய்தீர்.
44 அவரது மாட்சி அவரைவிட்டு விலகச் செய்தீர்;
அவரது அரியணையைக் கீழே தள்ளிவிட்டீர்,
45 அவரது இளமையைச் சுருக்கிவிட்டீர்;
அவருக்கு வெட்கத்தை ஆடையாக்கினீர்.
(சேலா)

*(விடுதலைக்காக வேண்டல்)*

46 எவ்வளவு காலம் மறைந்திருப்பீர் ஆண்டவரே!
என்றென்றுமா? எவ்வளவு காலம்
உமது சினம் நெருப்பென எரிந்து கொண்டிருக்கும்?
47 எங்கள் ஆயுள் எவ்வளவு குறுகியது
என்பதை நினைத்தருளும்;
மானிடர் அனைவரையும் வீணாகவா படைத்துள்ளீர்?
48 என்றும் சாவைக் காணாமல் இருப்பவர் எவர்?
பாதாளத்தின் பிடியினின்று
தன்னைக் காத்துக் கொள்பவர் எவர்?
(சேலா)
49 என் தலைவரே!
தொடக்கக் காலத்தில் நீர் காட்டிய பேரன்பு எங்கே?

தாவீதுக்கு உமது வாக்குப் பிறழாமையை முன்னிட்டு
உறுதியாகக் கூறியது எங்கே?
50 என் தலைவரே!
உம் ஊழியர்மீது சுமத்தப்படும்
பழியை நினைத்துப்பாரும்;
மக்களினங்களின் பழிச்சொற்கள் அனைத்தையும்
என் நெஞ்சில் தாங்குகிறேன்.
51 ஆண்டவரே!
உம் எதிரிகள் அவர் மேல் பழி சுமத்துகின்றனர்;
அவர்கள் உம்மால் திருப்பொழிவு பெற்றவரைச்
சென்றவிடமெல்லாம் தூற்றுகின்றனர்.
52 ஆண்டவர் என்றென்றும் புகழப்பெறுவாராக!
ஆமென், ஆமென்.

திருப்பாடல் 89:1-52

**சிந்தனைக்கு**

திருப்பாடல் 89, மேசியாவின் திருப்பாடலா?
தாவீதோடு கடவுள் செய்து கொண்ட உடன்படிக்கையை, மன்றாட்டில் நினைவுகூர்தல் (வ.3-4,28-29,34-36) மேசியாவை நினைவூட்டுவதாகுமா?

திருப்பாடல் எழுதப்பட்ட காலம் குறித்த நேரடியான குறிப்பு ஏதுமில்லை; ஆனால் வரலாற்றுப் பின்னணியை உணர்த்துவதாக வ.38-45 இருக்கிறது. அப்சலோமுக்கு அஞ்சி தாவீது ஓடியதை (2 சாமுவேல் 15) நினைவூட்டுவதாக இந்தப் பகுதி உள்ளது என்று ஒரு கருத்து உள்ளது; அரண்மனையை விட்டு தாவீது ஓடினாலும், அவர் அரசராகத்தான் இருந்தார் என்பதையும், அரண்மனையும் நகரும் எந்தப் பாதிப்பும் அடையவில்லை என்பதையும் நாம் அறிவோம். செதேக்கியா அரசர் சிறைப்பட்டதை (2 அரசர்கள் 25:1-21; 2 குறிப்பேடு 36:17-20; எரேமியா 52:1-27) இந்த வசனங்கள் குறிப்பிடுகின்றன என்று வேறு ஒரு கருத்து உள்ளது. மேசியாவின் திருப்பாடல் அல்ல என்றாலும், அரசத் திருப்பாடல் என்பதில் எந்தவொரு ஐயமுமில்லை.

எஸ்ராகியரான (பார்க்க முந்தைய திருப்பாடலின் குறிப்பு) ஏத்தான், பார்க்க 1 அரசர்கள் 4:31; எருசலேம் நகரின் அழிவுக்குப் பிறகு, ஏத்தான் வழிமரபில் வந்த ஒருவர் இத்திருப்பாடலைப் பாடியிருக்கலாம். மஸ்கீல், பார்க்க திருப்பாடல் 32, குறிப்பு.

அமைப்பு:
வ.1-18, கடவுளின் பேரன்பும், தாவீதோடு உடன்படிக்கையும்
வ.19-37, தாவீதிய உடன்படிக்கை விளக்கப்படுதல்
வ.38-45, அரசரின் தோல்வி குறித்த புலம்பல்
வ.46-52, விடுதலைக்காக மன்றாட்டு

வசனம் 89:1-2
கடவுளின் பேரன்பையும் உண்மையையும் கொண்டாடும் திருப்பாடகர். மீண்டும் வ.14. பேரன்பு மற்றும் உண்மை - மீண்டும் மீண்டும் இத்திருப்பாடலில் நினைவுகூரப்படும் இறைத் தன்மைகள்.

வசனம் 89:3-4
*தாவீதிய உடன்படிக்கை, பார்க்க, 2 சாமுவேல் 7:8-16.*

"...தேர்ந்து கொண்டவனோடு..." -
மேலும் பார்க்க, 105:6, 106:5,23.
bâchîyr, தேர்ந்து கொண்டவன் அல்லது தெரிந்து கொள்ளப்பட்டவன் (OV), chosen one (KJV). எது சரி என்பதைவிட எது பொருத்தம் என்று பார்க்க வேண்டும். தெரிந்து கொள்ளப்பட்டவனோடு என்று இருத்தலே பொருத்தம்.

வசனம் 89:5
"...வியத்தகு செயல்கள்..." -
*பார்க்க, 26:7, 78:4,11-12, 106:7-8.*
*யாக்கோபை ஒரு நாடாகக் கட்டி எழுப்பிய கடவுளாகிய ஆண்டவர், நாடு அழிவுரும் நிலையில் நினைவூட்டப்படுகிறார்.*
*எகிப்தியத் தெய்வங்களுக்கு எதிராக மோசே வழியாக நிகழ்ந்த இறைச்செயல்களில் தொடங்கி (விடுதலைப் பயணம் 7:8), உடன்படிக்கைப் பேழை சீலோவில் நிலைகொண்டது வரை (யோசுவா 18:1) நடந்த அசாதாரண நிகழ்வுகள். இன்னும் கொஞ்சம் இந்தக் காலத்தை விரிவுபடுத்தி, வாக்களிக்கப்பட்ட நாட்டிலிருந்து இறுதியாக எபூசியரை வெளியேற்றி சீயோன் கோட்டையைக் கைப்பற்றியது வரை (2 சாமுவேல் 5:6-8) இஸ்ரயேலுக்குக் கடவுளின் வியத்தகு செயல்கள் எனலாம்.*

"தூயவர் குழு..." -
*வானதூதர், புனிதர், தூயோர் (இணைச் சட்டம் 33:2-3; யோபு 15:15; தானியேல் 4:13&17, 8:13; செக்கரியா 14:5, மாற்கு 8:38; திருத்தூதர் பணிகள் 10:22; 1 தெசலோனிக்கர் 3:13; யூதா 1:14; திருவெளிப்பாடு 14:10).*

"என் ஊழியன்..." -
*மீண்டும் மீண்டும் இத்திருப்பாடலில் வலியுறுத்தப்படும் கருத்து, வ.20,39,50.*

வசனம் 89:6
"தெய்வ மைந்தர் குழு..." -
*பார்க்க, விடுதலைப் பயணம் 15:11; தானியேல் 11:36.*

வசனம் 89:6&8
*நிகரானவர் யார்?*
*இணையானவர் யார்?*
*ஆற்றல் மிக்கவர் யார்? -*
*பார்க்க 18:31; விடுதலைப் பயணம் 15:11; எசாயா 40:18, 44:7.*

வசனம் 89:10
"இராகாபைப் ..." -
*பார்க்க, 87:4, யோபு 26:12; எசாயா 30:7, 51:9.*
rahab, *கடல் தெய்வமாக வழிபடப்பட்ட, பேருருக் கொண்ட கடல்வாழ் விலங்கு, உருவகமாக எகிப்து.*

வசனம் 89:11
*படைப்பின் கடவுளாக ஆண்டவர்.*

வசனம் 89:12
"*தாபோரும் எர்மோனும்...*" -
*தெற்கிலும் வடக்கிலும் உள்ள, அன்றைய இஸ்ரயேலின் மலைகள், மலைநகர்கள். தாபோர், பார்க்க நீதித் தலைவர்கள்* 4:6. *எர்மோன், பார்க்க* 133:3; *இணைச் சட்டம்* 3:8-9; *யோசுவா* 11:3,17.

*கடவுளின் மாட்சிமை விளங்க, இஸ்ரயேலின் அரசாட்சியில் மக்களின் களிப்பை, இவ்விரு மலைகளும் பறைசாற்றுகின்றன.*

வசனம் 89:14
*என்றும் மாறாத கடவுளின் தன்மைகள்.*

வசனம் 89:17
*இறைமொழியாக, வ.*24.

வசனம் 89:18
"*நம் அரசர் இஸ்ரயேலின் தூயவருக்கு உரியவர்*" -
*கடவுளுக்கு உரியவர் அரசர் என்பதை நிறுவி, அந்த அரசரைக் காக்க வருமாறு கடவுளைத் தூண்டும் திருப்பாடகர்.*

வசனம் 89:19-37
*வ.*3-4*ல் சுருக்கமாகச் சொல்லப்பட்ட தாவீதிய உடன்படிக்கை* (2 *சாமுவேல்* 7:14-16; 1 *குறிப்பேடு* 17:7-14) *தெளிவாகவும், விரிவாகவும், கொஞ்சம் கவித்துவமாகவும் விளக்கப்படுதல்.* "*நம் அரசர் இஸ்ரயேலின் தூயவருக்கு உரியவர்*" *என்று அரசரைப் பற்றிய முன்னுரையோடு வ.*18*ல் முந்தைய பகுதியை முடித்த திருப்பாடகர் அந்த உறவை இப்பகுதியில் விரிவாகப் பேசுகிறார்.*

வசனம் 89:19-20அ
*இறைவாக்கினருக்குக் கடவுள் அருளிய வெளிப்பாடு, பார்க்க* 1 *சாமுவேல்* 13:13-14, 16:12; 2 *சாமுவேல்* 7:4-16.

"*... தேர்ந்தெடுக்கப்பட்டவன்...*" -
bâchûr, *இளைஞன் / தெரிந்து கொள்ளப்பட்டவன். பார்க்க, வ.*3-4 *குறிப்பில்,* bâchîyr *விளக்கம்.*

வசனம் 89:20ஆ
"*என் திருத்தைலத்தால் ... திருப்பொழிவு...*" -
*சாமுவேல் வழியாகக் கடவுள் அருளிய திருப்பொழிவு, பார்க்க,* 1 *சாமுவேல்* 16:13.

*பெத்லகேமில் ஈசாயின் இல்லத்தில் தனிமையில் நடந்த இந்த முதல் திருப்பொழிவைத் தொடர்ந்து, யூதாவின் அரசராக முதல் முறையாக எபிரோனிலும்* (2 *சாமுவேல்* 2:4), *மொத்த இஸ்ரயேலின் அரசராக மீண்டும் அதே எபிரோனிலும்* (2 *சாமுவேல்* 5:1-3) *அவர் திருப்பொழிவு செய்யப்பட்டார்.*

வசனம் 89:21
*இந்த உண்மையை தாவீது உணர்ந்து அறிக்கை செய்கிறார்,* 18:35.

வசனம் 89:23
*பார்க்க,* 18:40.

வசனம் 89:25
*மத்திய தரைக்கடல் தொடங்கி யூப்ரதீஸ் ஆறு வரை பரந்து விரிந்த தாவீதின் ஆட்சிப் பரப்பு.*

வசனம் 89:26
*முற்றுமுழுதாகக் கடவுளைச் சார்ந்து வாழ்ந்த தாவீது,* 144:1-2.

வசனம் 89:27
"*தலைப்பேறு*" -
bekôr, *தலைமகன், மூத்த மகன்.*
*தந்தை தலைமகன் உறவு:*
*கடவுளின் தலைப்பேறு இஸ்ரயேலர், விடுதலைப் பயணம்* 4:22. *இங்கு தாவீதின் காலத்து அரசர்களில் அவரே கடவுளின் தலைப்பேறு, கடவுளின் இரட்டிப்பான ஆசிகளுக்கு உரிமை உடையவர்.*
*புதிய ஏற்பாட்டில் படைப்பு அனைத்திற்கும் தலைப்பேறானவர் கிறிஸ்து இயேசுவே, கொலோசையர்* 1:15; *எபிரேயர்* 1:6. *கடவுளின் பிள்ளைகளாக, சகோதர சகோதரிகளுள் அவரே தலைப்பேறு. இறந்து உயிர்த்தெழுந்தோரில் அவரே தலைப்பேறு, கொலோசையர்* 1:18.

"*மண்ணகத்தின் மாபெரும் மன்னன்*" -
*இஸ்ரயேலைச் சுற்றிலுமிருந்த நாடுகளின் மன்னர்களுக்கு மேலாக தாவீதைக் கடவுள் உயர்த்தினார். ஆனால் கிறிஸ்துவோ உலகனைத்தின் அரசர்களுக்கெல்லாம் அரசர், ஆண்டவர்க்கெல்லாம் ஆண்டவர்* (*திருவெளிப்பாடு* 17:14, 19:16).

வசனம் 89:28-29
*இறைவாக்கின் நிலைத்த தன்மை.*

வசனம் 89:30-32
*தாவீதுக்கு மட்டுமல்லாமல் தந்தையின் உள்ளத்தோடு தாவீதின் தலைமுறையினரைப் பராமரிக்கும் கடவுள்.*

*இன்றைக்கும் தந்தையின் உள்ளத்தோடே தம் பிள்ளைகளாகிய நமக்காகக் கடவுள் காத்திருக்கிறார்; ஆனால் நமது இதயக் கடினத்தால், தந்தையின் அன்பை நாம் உணர்வதில்லை. வாசிக்க, லூக்கா* 15:18-24.

வசனம் 89:33-34
*கடவுளின் வாக்கு, மாறாதது; மீறுதல்களாலோ குற்றங்களாலோ அவர், தாம் அருளிய வாக்கைத் தள்ளிவிடுவதில்லை* (*லேவியர்* 26:36-45). *தயையோடு அவர் பொறுமையாக இருந்தாலும், எல்லை மீறும் போது நமது மீறுதல்களுக்காக அவர் நம்மைத் தண்டித்தாலும், நமது மனமாற்றத்திற்காக வாஞ்சையோடு அவர் காத்திருக்கிறார்.*

வசனம் 89:35-37
*பார்க்க,* 2 *சாமுவேல்* 7:16, *கூடுதல் அழுத்தத்தோடு.*

*கடவுளை நோக்கித் தனது முறையீடுகளைத்* (*வ.*38-45) *தொடங்குமுன், அதற்கு முன்னுரையாக, கடவுள் அருளிய வாக்கை நினைவூட்டும் திருப்பாடகர்.*

வசனம் 89:36
"...*கதிரவன் உள்ளளவும்*..." -
*இணை,* 72:5&17.

வசனம் 89:38-45

*இஸ்ரயேலுக்குத் தமது வாக்கிலிருந்து கடவுள் தவறிவிட்டார் என்றும், தாவீதிய உடன்படிக்கையை அவரே முறித்துவிட்டார் என்றும் திருப்பாடகர் தெளிவாக இங்கு முன்வைக்கிறார். கடவுளைக் குற்றம் சாட்டும் அதேவேளையில், அதிலுள்ள கடுமையான தொனி நமக்கு அதிர்ச்சி தருகிறது. (பார்க்க, இஸ்ரயேல் மற்றும் யூதா மக்களின் கீழ்ப்படியாமையும் மீறுதல்களும், 2 அரசர்கள் 17:7-23, 24:3-4).*

*அரசராக ஆனபிறகு தனது முதிர் வயதில், உயிருக்கு அஞ்சித் தனது குடும்பங்களுடன் யோர்தான் ஆற்றுக்கு அப்பால் ஓடிய போதும், கடவுளுக்கு எதிராக தாவீது முறுமுறுத்ததில்லை என்பது நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம்.*

வசனம் 89:39

"*...வெறுத்து ஒதுக்கினீர்*" -

*பார்க்க, புலம்பல்* 2:7.

nâàr, *ஒரே சூழ்நிலையைக் குறிக்கும் இந்த இரண்டு வசனங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ள மூலச் சொல்; கடவுள் நம்மை ஒருபோதும் வெறுத்து ஒதுக்குவதில்லை என்பதற்கு இதுவே சான்று.*

வசனம் 89:39ஆ-40

"*...மணிமுடி... மதில்கள் ... அரண்கள்...*" -

*ஒப்பிடுக,* 74:7.

*தான் எடுத்துக் கொண்ட கருப்பொருளுக்கு ஏற்ப, தலைநகர் மற்றும் அரண்மனைகளின் தகர்ப்பைக் குறித்த திருப்பாடகரின் முறையீடு.*

வசனம் 89:41

*பார்க்க,* 2 *அரசர்கள்* 24:2. *மேலும், நெகேமியா* 1:3, 2:17. *இணை,* 44:13, 79:4.

வசனம் 89:42

*பகைமைச் சூழலில் எப்போதும் வாழ்ந்த நாடு, இஸ்ரயேல். இஸ்ரயேலின் எழுச்சி எதிரிகளின் துயர்; வீழ்ச்சியோ அவர்களுக்குக் கொண்டாட்டம்.*

*ஆனால் இன்றைக்கு நமக்கு உள்ள அழைப்போ, கிறிஸ்துவின் அன்பின் நற்செய்தியாக வாழ்தல் - பகைமை பாராட்டுதல் அல்ல.*

வசனம் 89:44ஆ

இணை, வ.39ஆ.

வசனம் 89:45

*கைதியின் ஆடை அணிவிக்கப்பட்ட செதேக்கியா,* 2 *அரசர்கள்* 25:6-7.

வசனம் 89:46-51

"*எவ்வளவு காலம் ... ஆயுள் குறுகியது ... தொடக்க காலத்தில்...*" -

*வேதனையின் நாள்களைக் குறித்த கேள்விகள்.*

*பல ஆண்டுகளாகத் தொடர்ந்தாலும், இன்ப நாட்களின் நீட்சியை நாம் உணர்வதில்லை; கடவுளுக்கு நன்றி செலுத்தி வாழ்வதில்லை; நமது சாமர்த்தியத்தில் பெருமை பாராட்டுவோம். ஆனால் துன்ப நாட்களில், கடவுளிடம் உடனே முறையிடத் தொடங்கி விடுவோம்!*

வசனம் 89:46
"*எவ்வளவு காலம்*" -
இணை, 79:5.
மேலும் பார்க்க, 13:1, 74:10.

வசனம் 89:47-48
*மனித வாழ்வின் நிலையாமையைக் குறித்த கேள்விகள்; ஒருவரது செயல்களின் விளைச்சலை அவர் தனது வாழ்நாளில் காணாது போகலாம். ஆனால் தலைமுறைகளைக் கடந்தும் அவரது செயல்களின் விளைவுகள் தொடரும். நாமெல்லாம் சீகன்பால்க் ஊழியத்தின் விளைச்சல் அல்லவா!*

வசனம் 89:49
திருப்பாடகர் எழுப்பும் கேள்விகளுக்கு மறுமொழி, எசாயா 55:3.

வசனம் 89:50-51
வேறு சொற்களில், 80:12-13.
*தாவீதின் வழிமரபில் வந்த அரசரின் வீழ்ச்சியும் அவமானமும், திருப்பாடகரின் உள்ளத்தை அறுக்கிறது. அந்த வேதனையை ஆண்டவர் முன்பு அவர் ஊற்றுகிறார்.*

வசனம் 89:52
*நிறைவு ஆசி! - திருப்பாடல்கள் நூலின் மூன்றாம் தொகுதி நிறைவு பெறுதற்கு உரியது.*

*திருப்பாடலில், தாவீதுக்குக் கடவுள் அருளிய உடன்படிக்கையின் திருவாக்கு விரிவாக நினைவூட்டப்படுகிறது; கடவுளின் நிபந்தனையோ ஒரேமுறை சொல்லப்பட்டு, அப்போதும் கடவுளின் வாக்குப் பிறழாமை அவருக்கே நினைவூட்டப்படுகிறது (வ.31-34). தாவீதின் நாட்களுக்கும், சிதேக்கியாவின் நாட்களுக்கும் இடையே வாழ்ந்த இறைவாக்கினர் எத்தனை பேர்? அவர்களின் வாக்குக்கு தாவீதைப் போல உடன்பட்ட அரசர்கள் யார் யார்? இதற்கு இந்தத் திருப்பாடலில் விடை இல்லை. தாவீதின் வழிமரபிலிருந்து அரியணை அகன்றதற்கு, அவர்களின் கீழ்ப்படியாமையே காரணம்.*

*கீழ்ப்படியாமையே முதல் பாவம் (Original Sin); அது நம்முள் ஆதிக்கம் செலுத்தும் வரை, இறையாசிக்குப் பெரும் தடை. உணர்த்தப்படும் வேளையில், தங்களைத் தாழ்த்திச் சீர்பொருந்துவோரைக் கடவுள் ஏற்ற வேளையில் உயர்த்துவார்.*

*கடவுளுக்குக் கீழ்ப்படிவோம்!
சிகரம் தொடுவோம்!*

# தொகுதி 4

**(திருப்பாடல் 90 முதல் திருப்பாடல் 106 முடிய)**

## 19 திருப்பாடல் 90

(மனிதரின் நிலையாமை)

*கடவுளின் அடியார் மோசேயின் மன்றாட்டு*
1 என் தலைவரே!
தலைமுறைதோறும் நீரே
எங்கள் புகலிடமாய் உள்ளீர்.
2 மலைகள் தோன்றுமுன்பே,
நிலத்தையும் உலகையும் நீர் உருவாக்குமுன்பே,
ஊழி ஊழிக்காலமாய் உள்ள இறைவன் நீரே!
3 மனிதரைப் புழுதிக்குத் திரும்பிடச் செய்கின்றீர்;
'மானிடரே! மீண்டும் புழுதியாகுங்கள்' என்கின்றீர்.
4 ஏனெனில், ஆயிரம் ஆண்டுகள்,
உம் பார்வையில் கடந்துபோன
நேற்றைய நாள் போலவும்
இரவின் ஒரு சாமம் போலவும் உள்ளன.
5 வெள்ளமென மானிடரை
வாரிக்கொண்டு செல்கின்றீர்;
அவர்கள் வைகறையில் முளைத்தெழும்
புல்லுக்கு ஒப்பாவர்;
6 அது காலையில் தளிர்த்துப் பூத்துக் குலுங்கும்;
மாலையில் வாடிக் காய்ந்து போகும்.
7 உமது சினத்தால் நாங்கள் அழிந்து போகின்றோம்;
உமது சீற்றத்தால் நாங்கள் திகைப்படைகின்றோம்.
8 எம் குற்றங்களை உம் கண்முன் நிறுத்தினீர்;
மறைவான எம் பாவங்களை
உம் திருமுக ஒளிமுன் வைத்தீர்.
9 எங்கள் அனைத்து வாழ்நாள்களும்
உமது சினத்தால் முடிவுக்கு வந்துவிட்டன;
எங்கள் ஆண்டுகள் பெருமூச்செனக் கழிந்துவிட்டன.
10 எங்கள் வாழ்நாள் எழுபது ஆண்டுகளே;
வலிமை மிகுந்தோர்க்கு எண்பது;
அவற்றில் பெருமைக்கு உரியன துன்பமும் துயரமுமே!
அவை விரைவில் கடந்துவிடுகின்றன.
நாங்களும் பறந்துவிடுகின்றோம்.
11 உமது சினத்தின் வலிமையை உணர்பவர் எவர்?
உமது கடுஞ்சீற்றத்துக்கு அஞ்சுபவர் எவர்?
12 எங்கள் வாழ்நாள்களைக் கணிக்க
எங்களுக்குக் கற்பியும்; அப்பொழுது
ஞானமிகு உள்ளத்தைப் பெற்றிடுவோம்.
13 ஆண்டவரே, திரும்பி வாரும்;
எத்துணைக் காலம் இந்நிலை?
உம் ஊழியருக்கு இரக்கம் காட்டும்.
14 காலைதோறும் உமது பேரன்பால்
எங்களுக்கு நிறைவளியும்;
அப்பொழுது வாழ்நாளெல்லாம்
நாங்கள் களிகூர்ந்து மகிழ்வோம்.

15 எங்களை நீர் ஒடுக்கிய நாள்களுக்கும்
நாங்கள் தீங்குற்ற ஆண்டுகளுக்கும் ஈடாக,
எம்மை மகிழச் செய்யும்.
16 உம் அடியார்மீது உம் செயலும்
அவர்தம் மைந்தர்மீது உமது மாட்சியும்
விளங்கச் செய்யும்.
17 எம் கடவுளாம் தலைவரின் இன்னருள்
எம்மீது தங்குவதாக!
நாங்கள் செய்பவற்றில் எங்களுக்கு வெற்றி தாரும்!
ஆம், நாங்கள் செய்பவற்றில் வெற்றியருளும்!

திருப்பாடல் 90:1-17

**சிந்தனைக்கு**

தொகுதி#4, அரசாளும் ஆண்டவரைக் குறித்துப் பாடப்படும் திருப்பாடல்களைக் கொண்டது எனலாம். இவற்றை வாசிக்கும் வேளையில், இவையெல்லாம் இஸ்ரயேலில் அரசர்கள் என ஒருவரும் இல்லாத காலத்தில், ஆண்டவரே அரசர் என்ற உணர்வோடு பாடப்பட்டவை என்பது விளங்கும்.

அதிகமாக விரும்பிப் பாடப்படும் "கர்த்தாவே யுகயுகமாய் எம் துணை ஆயினீர்" (O God Our Help in Ages Past) என்னும் பாமாலைப் பாடல், இந்தத் திருப்பாடலை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டது. இத்திருப்பாடல் நம்மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம் அத்தகையது. மேலும், மனித வாழ்வின் நிலையாமையைக் குறித்துப் பாடும் வகையில், இத்திருப்பாடல் 39ம் திருப்பாடலோடு ஒப்பிடத்தக்கது.

மோசேக்கு உரியதோர் திருப்பாடல். திருப்பாடல்கள் 17, 86 & 102 போல, இது ஒரு மன்றாட்டுத் திருப்பாடல். மோசேக்கு உரிய முதல் ஐந்து நூல்களின் சில திருமொழிகளை நாம் இத்திருப்பாடலில் நினைவுகூர முடியும்:
வ.1 < இணைச் சட்டம் 33:27
வ.2 < இணைச் சட்டம் 33:15 & 32:18
வ.3 < தொடக்க நூல் 3:19
வ.7-12 < தொடக்க நூல் 3
வ.10 < தொடக்க நூல் 47:9.
இந்த ஒரு திருப்பாடல் மட்டுமன்றி, நான்காம் தொகுதியில் உள்ள ஏனைய திருப்பாடல்களை வாசிக்கும்போதும், மோசேயின் நினைவு வருவதை நம்மால் தவிர்க்க முடியாது.

இத்திருப்பாடலை மோசே எழுதியிருக்க வாய்ப்பில்லை என்று சொல்வோர் உளர்; மோசேயின் நூல்களின் அடிப்படையில், தாவீதின் காலம் அல்லது அதற்குப் பிறகு லேவியர் எவரேனும் எழுதியிருக்கலாம் என்று அவர்கள் சொல்கிறார்கள்; ஆனால் இந்த வாதம் எந்தவொரு அடிப்படையும் அற்றது என்பது இத்திருப்பாடலை நாம் படிக்கும் போது உணர முடியும். அந்த வகையில், இத்திருப்பாடல் மிகவும் பழமையான திருப்பாடலாகும்; ஆயிரமாயிரம் ஆண்டுகளைக் கடந்தும் வாழும் திருப்பாடல் இதுவாகும்.

90 முதல் 100 வரை உள்ள திருப்பாடல்கள் கடவுளோடு தலைமுறைகளாக இணைந்து வாழ்வதைக் குறித்துப் பேசுகின்றன, 90:1, 91:2&9, 92:13, 93:5, 94:22, 95:6-7, 96:12, 97:1,

98:6, 99:2&5, 100:4. அறிக்கையில் தொடங்கி (90:1), துதியில் (100:5) நிறைவடைகிறது இப்பகுதி.

அமைப்பு:
வ.1-6, நிலையா மனிதனின் நிலைத்த அடைக்கலம் கடவுள்
வ.7-11, நிலையாமையை ஏற்படுத்திய மனிதனின் பாவமும், அதன் விளைவான கடவுள்தம் சினமும்
வ.12-17, நிலைத்துவிட்ட துன்ப நிலையை மாற்ற மன்றாட்டு

வசனம் 90:1
"என் தலைவரே" -
OV, "ஆண்டவரே"; âdônây; ஆபிரகாம் கடவுளை அழைக்கப் பயன்படுத்தினார், தொடக்க நூல் 15:2&8, 18:3,30&32; மோசே வழங்கிய அடைமொழியும் அதுவே, விடுதலைப் பயணம் 4:10&13, 5:22, 15:17, 34:9; எண்ணிக்கை 14:17; இணைச் சட்டம் 3:24, 9:26.

"புகலிடம்" -
OV, அடைக்கலம்; mâ'ôn, புகலிடம் / வாழ்விடம் / உறைவிடம். பெரும்பாலான ஆங்கில மொழிபெயர்ப்புகள், dwelling place, home என்று பொருள் கொண்டிருக்க, தமிழில் புகலிடம் / அடைக்கலம் என்று உள்ளது; இடையூறு மற்றும் இன்னல் காலங்களில் புகலிடமாக மட்டுமல்லாமல், என்றைக்கும் நமது வாழ்விடமாக இருப்பவர் கடவுள்.

சாவில் இறைவனடி சேர்பவர்களாக அல்ல, அவர் அருளிய மூச்சோடு வாழும் நாளெல்லாம், அவரோடு இணைந்து, இசைந்து, இயைந்து வாழ்பவர்களாக (in tandem, in harmony, in unison) நாம் இருக்கவேண்டும்.

வசனம் 90:2
கடவுளின் படைப்பாற்றலை நினைவுகூரல், தொடக்க நூல் 1.
படைப்பில் மலைகள் சிறப்பிடம் பெறுகின்றன, யோபு 15:7; நீதிமொழிகள் 8:22-31. படைப்பிற்கு முன்னரே ஊழி ஊழிகளாகத் தொடக்கமும் முடிவுமற்றவராக இலங்குபவர் கடவுள்.

வசனம் 90:3
புழுதியாக மாறும் மனிதன், தொடக்க நூல் 3:19. வ.2 மற்றும் வ.3க்கு இடையே, மாபெரும் வேறுபாட்டைச் சுட்டிக்காட்டும் திருப்பாடகர். மனித வாழ்வோ நிலையற்றது; அவன் காற்றுப் பறக்கடிக்கும் புழுதி என்பதே நிலையானது!

வசனம் 90:4-6
கடவுளுக்கு ஆயிரம் ஆண்டுகள் என்பது ஒரு நாளைப் போல; ஆனால் துன்ப துயரில் வாழு(டு)ம் மனிதனுக்கு, இன்னல்மிகு இரவு நகருவதும் பெரிது (யோபு 7:4). மேலும் இருவரைத் தவிர, தன்னோடு எகிப்திலிருந்து வெளியேறிய, இருபது வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் நாற்பது ஆண்டுகளுக்குள் பாரான் பாலைவெளியில் சாகக்கொடுத்த தலைவர் மோசே என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது. மனித வாழ்வோ சருகாகி உதிர்ந்து பறக்கிறது; கடவுளோ காலங் காலமாக நிலைத்திருக்கிறார்!

வசனம் 90:4
மேற்கோளாக, 2 பேதுரு 3:8.

வசனம் 90:5-6
குறுகிய மனித வாழ்க்கை, 37:2,20&36, 39:5&11, 62:9, 78:39, 89:47, 102:3&11, 103:15-16, 109:23, 144:4; யோபு 8:9, 14:1-2; சபை உரையாளர் 6:12; எசாயா 40:6-8; யாக்கோபு 1:10-11; 1 பேதுரு 1:24-25.

நீடுவாழ்வோரும் வருந்துகின்றனர், வ.10.
வாழ்நாள் குறுகியது என்று எண்ணி வாடுவதைவிட, இறைநோக்கறிந்து நிறைவாழ்வு வாழலாமே!

வசனம் 90:7-11
கீழ்ப்படியாமையும் மீறுதலும் கடவுளின் சினத்தையும், சாவு என்ற தண்டனையையும், சபிக்கப்பட்ட நிலத்தில் உழைப்பு என்ற உடல் வருத்தத்தையும் மனிதனுக்கு ஏற்படுத்தின (தொடக்க நூல் 3:17-19).

வசனம் 90:8
"திருமுக ஒளி" -
தூயவரின் திருமுக ஒளி, மறைந்திருக்கும் பாவங்களையும் வெளிப்படுத்த வல்லது.

வசனம் 90:10
யாக்கோபின் வார்த்தைகளை நினைவூட்டும் சொற்கள், தொடக்க நூல் 47:9.
147 ஆண்டுகள் சோதனைகள் பல கடந்து பெருவாழ்வு வாழ்ந்த யாக்கோபு, தன் வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்க்கையில், விஞ்சியிருப்பது துன்பமே என்று கண்டார். 120 ஆண்டுகள் வாழ்ந்த மோசே பல அருஞ்செயல்களைச் செய்த போதிலும், தன் வாழ்நாளில் பெருமைக்குரியன துன்பமும் துயரமுமே என்கிறார்.

வசனம் 90:11
கடவுளின் சினத்தின் வலிமை, வாசிக்க: லேவியர் 26:14-39; இணைச் சட்டம் 4:25-26, 28:15-68; எசாயா 24:1-6.
இனி வரவிருக்கும் சினம், 2 தெசலோனிக்கர் 1:7-9; திருவெளிப்பாடு 14:9-11, 16:1-21, 20:11-15, 21:8.
சினம் தணிய மன்றாடும் மோசே, விடுதலைப் பயணம் 32:11-13, 34:9; எண்ணிக்கை 14:13-19.

"என் அடியான் மோசே" என்று கடவுளாலேயே நற்சான்று பெற்ற மோசேயே, தனது மீறுதலால், வாக்களிக்கப்பட்ட நாட்டுக்குள் நுழைய முடியவில்லை; கடவுளின் சினம் அத்தகையது; அதனைக் குறைத்து மதிப்பிட்டு எளிதாகக் கடந்து செல்ல முடியாது. ஆனால் தவறு செய்வதையே இயல்பாகக் கொண்ட மனிதர்களாகிய நாம், ஏன் அதனை உணர்வதில்லை?

வசனம் 90:12-17
மனிதனின் மீறுதல், கடவுளின் சினம், மனிதனின் துயரம் குறித்துப் பேசிய திருப்பாடகர், மன்றாட்டோடு இத்திருப்பாடலை நிறைவு செய்கிறார். ஞானம், இரக்கம், கிருபை (பேரன்பு), மகிழ்ச்சி, இறைமாட்சி, இன்னருள் மற்றும் வெற்றியை நாடும் மிகச் சிறந்த வேண்டுதலை ஆண்டவரிடம் திருப்பாடகர் முன்வைக்கிறார்.

வசனம் 90:12
இறைஞானத்தை யாரும் அளவிட முடியாது, (எசாயா 40:13-14); இறையச்சமே இறைஞானத்தைப் பெற்றுக்கொள்ளும் வழி (111:10; நீதிமொழிகள் 1:7, 9:10); கடவுள் ஒருவரே நம்மை ஞானத்தின் வழிகளில் நடத்த வல்லவர், 25:4-6.

வசனம் 90:13
"உம் ஊழியர்...' -
கடவுளுக்குப் பணிந்து நடக்கும் அனைவரும் அவர்தம் ஊழியர்.

வசனம் 90:15
ஆண்டவரின் வியத்தகு செயல்கள்தாம் எத்துணை மகிழ்ச்சி, விடுதலைப் பயணம் 14:1-15:20; மகிழ்விக்கும் அத்தகு ஆற்றல் மீண்டும் வெளிப்பட மன்றாட்டு, 92:4-5.

வசனம் 90:16
"உம் செயல்... உம் மாட்சி..." -
பார்க்க, திருப்பாடல் 111.

வசனம் 90:17
பார்க்க, 44:1-4; மேலும், 127:1-2, 128:2 & 138:8.
மோசேயிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்போ பெரிது - கடவுள் தெரிந்து கொண்ட மக்களினத்தை வாக்களிக்கப்பட்ட நாட்டுக்கு வழிநடத்துவது. வரவிருக்கும் எதிர்ப்புகளை வென்றெடுக்க ஆண்டவரின் அருஞ்செயல்கள் வேண்டுமே!

எனவே, வெற்றிகளை அருள வல்ல கடவுளுடைய கிருபைக்காக அவர் மன்றாடுகிறார்.

✝

## 19 திருப்பாடல் 91

*(நம்மைப் பாதுகாக்கும் ஆண்டவர்)*

1 உன்னதரின் பாதுகாப்பில் வாழ்பவர்,
எல்லாம் வல்லவரின் நிழலில் தங்கியிருப்பவர்.
2 ஆண்டவரை நோக்கி,
"நீரே என் புகலிடம்; என் அரண்;
நான் நம்பியிருக்கும் இறைவன்"
என்று உரைப்பார்.
3 ஏனெனில், ஆண்டவர்
உம்மை வேடரின் கண்ணியினின்றும்
கொன்றழிக்கும் கொள்ளை நோயினின்றும் தப்புவிப்பார்.
4 அவர் தம் சிறகுகளால் உம்மை அரவணைப்பார்;
அவர்தம் இறக்கைகளின்கீழ் நீர் புகலிடம் காண்பீர்;
அவரது உண்மையே கேடயமும் கவசமும் ஆகும்.
5 இரவின் திகிலுக்கும்
பகலில் பாய்ந்துவரும் அம்புக்கும்
நீர் அஞ்சமாட்டீர்.
6 இருளில் உலவும் கொள்ளை நோய்க்கும்
நண்பகலில் தாக்கும் கொடிய வாதைக்கும்
நீர் அஞ்சமாட்டீர்.
7 உம் பக்கம் ஆயிரம் பேர் வீழ்ந்தாலும்,
உம் வலப்புறம் பதினாயிரம் பேர் தாக்கினாலும்,

எதுவும் உம்மை அணுகாது.
8 பொல்லார்க்குக் கிடைக்கும் தண்டனையை
நீரே பார்ப்பீர்; உம் கண்ணாலேயே நீர் காண்பீர்.
9 ஆண்டவரை உம் புகலிடமாய்க் கொண்டீர்;
உன்னதரை உம் உறைவிடமாக்கிக் கொண்டீர்.
10 ஆகவே, தீங்கு உமக்கு நேரிடாது;
வாதை உம் கூடாரத்தை நெருங்காது.
11 நீர் செல்லும் இடமெல்லாம் உம்மைக் காக்கும்படி,
தம் தூதர்க்கு அவர் கட்டளையிடுவார்.
12 உம் கால் கல்லின்மேல் மோதாதபடி,
அவர்கள் தங்கள் கைகளில்
உம்மைத் தாங்கிக்கொள்வர்.
13 சிங்கத்தின்மீதும்
பாம்பின்மீதும் நீர் நடந்து செல்வீர்;
இளஞ்சிங்கத்தின்மீதும் விரியன்பாம்பின்மீதும்
நீர் மிதித்துச் செல்வீர்.
14 'அவர்கள் என்மீது அன்புகூர்ந்ததால்,
அவர்களை விடுவிப்பேன்;
அவர்கள் என் பெயரை அறிந்துள்ளதால்,
அவர்களைப் பாதுகாப்பேன்;
15 அவர்கள் என்னை நோக்கி மன்றாடும்போது,
அவர்களுக்குப் பதிலளிப்பேன்;
அவர்களது துன்பத்தில் அவர்களோடு இருப்பேன்;
அவர்களைத் தப்புவித்து
அவர்களைப் பெருமைப்படுத்துவேன்;
16 நீடிய ஆயுளால் அவர்களுக்கு நிறைவளிப்பேன்;
என் மீட்பை அவர்களுக்கு வெளிப்படுத்துவேன்.'

திருப்பாடல் 91:1-16

**சிந்தனைக்கு**

உளம் கவர் திருப்பாடல் என்ற வகையில் திருப்பாடல் 23க்கு அடுத்த நிலையில் உள்ள திருப்பாடல் இது எனலாம். இந்தத் திருப்பாடலின் அடிப்படையில், அருட்சகோதரி சாராள் நௌரோஜி எழுதிய "உன்னதமானவரின் உயர்மறைவில் இருக்கிறவன்" என்ற பாடலை நம்மில் பாடாதவர் இருக்க முடியாது. இத்திருப்பாடலின் வசனங்களின் அடிப்படையில் நிறையப் பாடல்கள் உள்ளன என்பது இதன் சிறப்பாகும்.

திருப்பாடல் 46, இப்பாடலுடன் ஒப்பிடத்தக்கது. ஆனாலும், எளிமையாகவும், எல்லா வாழ்நிலைகளிலும் எவருக்கும் பொருந்துவதிலும், நம்பிக்கையில் மகிழ்ச்சியையும் விடுதலையில் களிப்பையும் வெளிப்படுத்துவதிலும், இத்திருப்பாடல் தனித்துவமானது.

மொழிபெயர்ப்புகளில், முன்னிலை ஒருமை/பன்மை (நீ, உன்/ நீர், உம்), படர்க்கை ஒருமை (அவன், அவனது) மற்றும் படர்க்கை பன்மை (அவர்கள், அவர்களோடு) பயன்பாடுகளில் சிக்கல்கள் இருந்தாலும், வாசிப்பு அனுபவத்திலும், விசுவாச வாழ்க்கையில் ஊக்கமூட்டுவதிலும் சிறந்த திருப்பாடலாக இது விளங்குகிறது.

இவற்றைக் குறித்து எண்ணும் வேளையில், சிறப்பான வாசிப்பு என்பது - நான், எனது, என்னுடைய என்று கடவுளை நம் ஒவ்வொருவருடைய சொந்தக் கடவுளாக உணர்ந்து வாசிப்பது - அதுவே மிகவும் தனிப்பட்ட அனுபவத்தைத் தரும்.

ஒவ்வொரு திருப்பாடலையும் இன்ன இன்ன சூழ்நிலையில் வாசிக்கலாம் என்ற கருத்து ஏற்கத்தக்கது அல்ல. மந்திரம் போல ஓதிக் கரங்களில் கட்டப்படும் தாயத்துகள் அல்ல இறைவார்த்தைகள். வாசித்து, மனதில் வைத்து, அதன் வலிமையில் நாம் நம்பிக்கையில் பலப்பட்டு, ஒவ்வொரு நாளும் வாழ்வதற்கு ஆற்றல் தருவனவே இறைவார்த்தைகள்.

திருப்பாடல் 71க்குப் பிறகு வரும் தலைப்பற்ற திருப்பாடல். இந்தத் திருப்பாடலையும் மோசே எழுதியிருக்கலாம் என்று சொல்கிறார்கள். அடிமைகளாகத் துன்பங்களை அனுபவித்து, பின்னர் எகிப்தியரின் வாதைகளைக் கண்ட இஸ்ரயேலர், ஆண்டவரையே அடைக்கலமாகக் கொண்டால், அவர்களை அவர் இன்றும் இனிமேலும், எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார் என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் மோசே எழுதியிருக்கலாம் (பார்க்க, இணைச் சட்டம் 32:1-43. மேலும் லேவியர் 26:3-13; இணைச் சட்டம் 7:12-24, 28:1-14).

திருப்பாடல்கள் 27 மற்றும் 31 போன்றவையோடு ஒப்பிட்டு, இத்திருப்பாடலை தாவீது எழுதியிருக்கலாம் என்று சொல்வோர் உளர்.

முதல் இரண்டு வசனங்களிலேயே, இறையைக் குறிக்கும் சொற்களாக, elyôn (உன்னதர்) shadday (வல்லவர்) yehôvâh (ஆண்டவர்) élôhîym (கடவுள்) ஆகியன வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அமைப்பு:
வ.1-2, பற்றுறுதி அறிக்கை
வ.3-13, கடவுளை நம்புவோருக்கு அருளப்படும் பாதுகாப்பு
வ.14-16, தம்மை நம்புவோருக்கு ஆண்டவர் அருளும் வாக்கு
* இத்திருப்பாடலை இரண்டு பாதிகளாகப் பிரித்தால், அவ்விரண்டு பாதிகளின் முதல் வசனங்கள் (வ.1&9) ஒரே பொருளைக் கொண்டிருப்பதை உணரலாம்.

வசனம் 91:1
"உன்னதரின் பாதுகாப்பில்" - கடவுளையே பற்றிக் கொண்டு வாழ்வோருக்கு இருக்கும் மறைவிடம், 27:5, 31:20, 32:7, 119:114.

"எல்லாம் வல்லவரின் நிழல்..." -
மறைவிடத்தை விடவும், கடவுளிடம் ஒருவரின் நெருக்கத்தை உணர்த்துவது. அதிலும் எசாயா, ஆண்டவர்தம் கையின் நிழலால் தன்னைக் காத்ததாகக் குறிப்பிடுகிறார் (எசாயா 49:2).

நமக்குக் கிடைத்துள்ள கடவுளின் அன்பு எத்தகையது?
கடவுளின் மறைவிடமா?
கடவுளின் நிழலா?
கடவுளின் கையின் நிழலா?
- இவற்றுக்கு வெளியே வாழ்ந்தாலும், இன்னும் நெருங்கி வர ஆண்டவர் நம்மை அழைக்கிறார்.

வசனம் 91:2
*ஆண்டவரைத் தன் சொந்தக் கடவுளாகக் கொண்ட திருப்பாடகரின் அறிக்கை. இந்த அறிக்கையில் நாம் வளர வளர, இன்னும் அதிகம் அதிகமாகக் கடவுள் நமக்கு வெளிப்படுகிறார். நாம் கடவுளுடைய பாதுகாப்பை மட்டுமல்லாமல், அவரது பராமரிப்பையும் உணர்கிறோம்.*

வசனம் 91:3
"*வேடரின் கண்ணி*" -
*பார்க்க*, 119:110, 140:5, 141:9, 142:3. *பறவைகளுக்காக வைக்கப்படுவது, உருவகமாக நமக்கு நமது வாழ்க்கைப் பயணத்தில் ஏற்படுத்தப்படும் இடையூறுகள்.*

"*கொள்ளை நோய்*" -
*விரைந்து உயிரைப் பறிக்கும் நோய்; உடன்படிக்கை மீறுதலுக்கான சாபம், இணைச் சட்டம்* 28:21.

வசனம் 91:4
"*அவர்தம் சிறகுகள்...*" -
*தாய்ப் பறவையின் இறக்கைகள்*, 17:8, 36:7, 57:1, 61:4, 63:7.

"*கேடயம்*" -
*தமது வாக்கில் உண்மையுள்ள ஆண்டவர், அதனாலேயே ஆபத்துக் காலத்தில் கேடயமாக தாம் தெரிந்து கொண்டோரைக் காக்கிறார்*, 3:3.

"*கவசம்*" -
sôchêrâh, *இங்கு மட்டுமே காணப்படும் ஒரு சொல்.* OV, *பரிசை* (*சிறிய கேடயம்*), *இன்றைக்குப் போட்டிகளில் பரிசாக வழங்கப்படுவது; ஆங்கிலத்தில்* buckler *என்று சொல்லப்பட்டுள்ளது.*

வசனம் 91:5-6
*நம்மைக் காக்கிறவர் உறங்கார்; இரவானாலும் பகலானாலும் இடைவிடாமல் நம்மீது கண்ணோக்கமாக இருக்கும் கடவுள்.*

வசனம் 91:7-8
*இறைமக்களின் மீட்பு மட்டுமல்லாமல், தீயோரின் அழிவும் உறுதி; அதன் வழியாக, கடவுள்தம் மக்கள் அமைதியாக வாழ வழிபிறக்கும்.*

வசனம் 91:9
"*உறைவிடம்*" -
*பார்க்க*, 71:3, 90:1.

வசனம் 91:10
"*வாதை*" -
*உடலை அச்சுறுத்தும், சாவைத் தோற்றுவிக்கும் நோய்.*

வசனம் 91:11
"...*தம் தூதர்*..." -
*கடவுளின் ஆணைப்படிச் செயல்படும் பணியாளர்கள்*, 43:3, 103:20-21; *தொடக்க நூல்* 24:7; *விடுதலைப் பயணம்* 23:20; *எபிரேயர்* 1:14. *தீங்கிலிருந்து இறைமக்களைக் காக்கப் பணிக்கப் பட்டவர்கள், தொடக்க நூல்* 19:10-11; *தானியேல்* 3:25&28, 6:22.

வசனம் 91:11-12
சாத்தானின் சொற்களாக, மத்தேயு 4:6; லூக்கா 4:10-11.

நம்மை வஞ்சிக்க சாத்தான் இறைமொழியை அறிந்திருக்கிறான் என்றால், வஞ்சிக்கப்படாதிருக்க நாம் எந்த அளவுக்கு இறைவார்த்தைகளை அறிந்திருக்க வேண்டும்!

இன்றைக்கு சாத்தான் நம்மை வஞ்சிக்க வேண்டியதில்லை, சத்தியத்தைப் புரட்டுபவர்கள் நம்மிடையேயே தோன்றியுள்ளார்கள்; வஞ்சிக்கப்படாதபடி, அனுதினமும் கருத்தாக ஜெபித்து வசனத்தில் ஆவியானவர் வழிநடத்தத் தெளிவு பெறுவோம்.

வசனம் 91:13
கொடிய விலங்குகளின் மீது இறையடியாருக்கு ஆற்றல், தானியேல் 6:16-22; திருத்தூதர் பணிகள் 28:1-6.
அலகையான கர்ச்சிக்கும் சிங்கமோ, உலகு முழுவதையும் ஏமாற்றும் அரக்கப் பாம்போ, அவற்றை வெல்லக்கூடிய ஆற்றல் நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது, மாற்கு 16:18 மற்றும் லூக்கா 10:19; யாக்கோபு 4:7.

வசனம் 91:14-16
தம்மைப் பற்றிக் கொண்டோருக்கு, ஆண்டவர் அருளும் வாக்கு:
* விடுவிப்பேன்
* பாதுகாப்பேன்
* பதிலளிப்பேன்
* உடனிருப்பேன்
* பெருமைப்படுத்துவேன்
* நிறைவளிப்பேன்
* வெளிப்படுத்துவேன்
இவற்றையெல்லாம் அவர் நிறைவேற்றுகிறார் என்பதற்கு, யோசேப்பு போன்ற பல சாட்சிகள் நமக்கு உள்ளன.

அதேவேளையில்,
- நாம் அவர்மீது அன்புகூர்ந்தோமா?
- அவர்தம் திருப்பெயரை அறிந்திருக்கிறோமா?
- அவரை நோக்கி அன்றாடம் மன்றாடுகிறோமா?
அவர் நம்மிடம் எதிர்பார்ப்பது சிறியதாகவும், நாம் அவரிடமிருந்து பெறுவது நிறைவாகவும் இருப்பதைப் பாருங்கள்.

வசனம் 91:14
"அவர்கள் என்மீது அன்புகூர்ந்ததால்..." -
நமது அன்றாட வாழ்வில், பலரிடமும் நமக்கு அன்பு உண்டாகிறது, நீடித்திருக்கிறது. நமக்கு ஆண்டவரிடம் இருப்பது அதுபோன்ற அன்பா?
அன்புக்கு இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை, சற்று அரிதானது; châshaq - பற்றிக் கொள்ளுதல், சரியாகப் பொருந்துதல், களிகூருதல், பேராவல் கொள்ளுதல், ஏங்குதல் என்றெல்லாம் இது பொருள் கொள்ளப்பட்டுள்ளது. நாம் கடவுள்மீது எத்தகைய அன்பு வைக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார் என்பதை அரிதான இந்த வார்த்தை நமக்கு உணர்த்துகிறது. சற்று எண்ணிப் பார்ப்போம்: கடவுள்மீது நாம் வைத்திருக்கும் அன்பு எத்தகையது?

## 19 திருப்பாடல் 92

(புகழ்ச்சிப் பாடல்)

*ஓய்வு நாளுக்கான புகழ்ப் பாடல்*
1 ஆண்டவருக்கு நன்றியுரைப்பது நன்று;
உன்னதரே! உமது பெயரைப் புகழ்ந்து பாடுவது நன்று.
2 காலையில் உமது பேரன்பையும்
இரவில் உமது வாக்குப் பிறழாமையையும்
3 பத்துநரம்பு வீணையோடும்
தம்புரு, சுரமண்டல இசையோடும்
எடுத்துரைப்பது நன்று.
4 ஏனெனில், ஆண்டவரே!
உம் வியத்தகு செயல்களால் என்னை மகிழ்வித்தீர்;
உம் வலிமைமிகு செயல்களைக் குறித்து
நான் மகிழ்ந்து பாடுவேன்.
5 ஆண்டவரே!
உம் செயல்கள் எத்துணை மேன்மையானவை;
உம் எண்ணங்கள் எத்துணை ஆழமானவை.
6 அறிவிலிகள் அறியாததும்
மூடர் உணராததும் இதுவே;
7 பொல்லார் புல்லைப்போன்று செழித்து வளரலாம்;
தீமை செய்வோர் அனைவரும் பூத்துக் குலுங்கலாம்!
ஆனால், அவர்கள் என்றும் அழிவுக்கு உரியவரே;
8 நீரோ ஆண்டவரே! என்றுமே உயர்ந்தவர்.
9 ஏனெனில், ஆண்டவரே!
உம் எதிரிகள் - ஆம், உம் எதிரிகள் - அழிவது திண்ணம்;
தீமை செய்வோர் அனைவரும் சிதறுண்டுபோவர்.
10 காட்டெருமைக்கு நிகரான வலிமையை
எனக்கு அளித்தீர்;
புது எண்ணெயை என்மேல் பொழிந்தீர்.
11 என் எதிரிகளின் வீழ்ச்சியை
நான் கண்ணாரக் கண்டேன்;
எனக்கு எதிரான பொல்லார்க்கு நேரிட்டதை
நான் காதாரக் கேட்டேன்.
12 நேர்மையாளர் பேரீச்சை மரமெனச் செழித்தோங்குவர்;
லெபனோனின் கேதுரு மரமெனத் தழைத்து வளர்வர்.
13 ஆண்டவரின் இல்லத்தில் நடப்பட்டோர்
நம் கடவுளின் கோவில் முற்றங்களில் செழித்தோங்குவர்.
14 அவர்கள் முதிர் வயதிலும் கனிதருவர்;
என்றும் செழுமையும் பசுமையுமாய் இருப்பர்;
15 'ஆண்டவர் நேர்மையுள்ளவர்; அவரே என் பாறை;
அவரிடம் அநீதி ஏதுமில்லை' என்று அறிவிப்பர்.

திருப்பாடல் 92:1-15

**சிந்தனைக்கு**

தனாக் (Tanakh) என்னும் யூத பைபிளின் அடிப்படையில், காலங்காலமாக யூத இரபிகளால் ஓதப்படும் போதனைகள் மிஷ்னா (mishnah) எனப்படும். அந்த மரபின்படி, தலைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு இத்திருப்பாடல், ஓய்வு நாளில் (அதாவது சனிக்கிழமையன்று; தொடக்க நூல் 2:3; விடுதலைப் பயணம் 20:8-11) ஓதப்படும் திருப்பாடல். மிஷ்னா மரபின்படி, இதர நாள்களுக்குரிய திருப்பாடல்கள்:

24 > ஞாயிற்றுக்கிழமை
48 > திங்கட்கிழமை
82 > செவ்வாய்க்கிழமை
94 > புதன்கிழமை
81 > வியாழக்கிழமை
93 > வெள்ளிக்கிழமை

இவை யூத மரபுவழிப் பழக்கங்கள்; நாமோ, இந்த இந்தச் செயலுக்கு அல்லது நோக்கத்துக்கு இந்த இந்தத் திருப்பாடல் என்று ஒதுக்கீடு எதையும் செய்ய வேண்டாம். பைபிள் முழுமையையும் ஆவியாரின் வழிநடத்துதலோடு உணர்ந்து வாசித்து வார்த்தையானவரை நமது உரிமையாக்கிக் கொள்வோம்.

வ.2ன் அடிப்படையில், புதிய நாளுக்காக ஆண்டவரின் கிருபையைக் காலையிலும், நமது செயற்பாடுகளில் அவர் அருளிய வெற்றிகளின் வாக்குப் பிறழாமையை மாலையிலும் நினைவுகூர்ந்து, அவரைப் போற்றித் துதிக்க, ஒவ்வொரு நாளும் நம்மை வழிநடத்தும் திருப்பாடல்.
பொல்லாரோடு நல்லாரை ஒப்பிட்டு நம்மைத் தெளிவுபடுத்துவதில், திருப்பாடல்கள் 37, 49 மற்றும் 73, ஆகியவற்றோடு ஒப்பிடத்தக்கது.
இத்திருப்பாடல் தொடங்கி இந்தத் தொகுதி முழுவதும், இஸ்ரயேலருக்கு வெளிப்பட்ட கடவுளின் திருப்பெயர் (ஆண்டவர், கர்த்தர், yehôvâh) மாட்சிமையோடு போற்றப்படுவதைக் காணலாம்.

உன்னதரையே உறைவிடமாகக் கொண்டோரைக் குறித்துப் பாடுவதில் (வ.12-15) முந்தைய திருப்பாடலின் தொடர்ச்சியாகவும் (91:9), இறையாட்சியின் செழிப்பைக் குறித்துப் பாடுவதால், இனிவரும் திருப்பாடல்களுக்கு (93 ~ 101) ஓர் இணைப்பாகவும் இத்திருப்பாடல் அமைகிறது.

எழுதியவர் மற்றும் எழுதப்பட்ட காலம் குறித்த நேரடியான குறிப்பு ஏதுமில்லை. ஊகங்கள் உண்டு எனினும் அறுதியிட்டுச் சொல்லக்கூடிய சான்று ஏதுமில்லை.

அமைப்பு:
வ.1-4, ஆண்டவரை இசைத்துத் துதித்தல் நன்று
வ.5-9, பொல்லாங்கைப் பொறுக்காத ஆண்டவர்
வ.10-11, ஆற்றலையும் வெற்றியையும் அருளும் ஆண்டவர்
வ.12-15, நேர்மையுள்ள ஆண்டவரின் இல்லத்தில் நேர்மையாளர் பெறும் ஆசிகள்

வசனம் 92:1-4
ஆண்டவரை நன்றியோடு புகழ்ந்து பாடுவது நன்று; அதிலும் அவரது திருப்பெயரை உச்சரித்துப் புகழ்ந்து பாட வேண்டும், (விடுதலைப் பயணம் 34:5-7); கருவிகளை இசைத்துப் புகழ்ந்து பாட வேண்டும்; காலையிலும் இரவிலும் புகழ்ந்து பாட வேண்டும்; வியத்தகு செயல்களில் மகிழ்ந்து புகழ்ந்து பாட வேண்டும்.

வசனம் 92:5-9
*"அறிவிலிகள்... மூடர் ... பொல்லார் ... தீமை செய்வோர் ..." -*
*இறைப்பற்றற்ற, கடவுளை உணராத, தங்கள் வாழ்க்கையின் முடிவைக் குறித்த சிந்தனையின்றி, திருச்சட்டத்தை மீறிச் செயல்படுகிற இவர்கள் அனைவரும் கடவுளின் எதிரிகள். தனக்கல்ல, இவர்கள் கடவுளுக்கே எதிரிகள் என்பதைத் திருப்பாடகர் அழுத்தமாகப் பதிவு செய்கிறார்.*

வசனம் 92:7&12
*பொல்லாரை இங்குப் பசும்புல்லுக்கு ஒப்பிடும் திருப்பாடகர், நேர்மையாளரைப் பேரீச்சை மற்றும் கேதுரு மரங்களுக்கு ஒப்பிடுகிறார்.*

வசனம் 92:7&9
*"...அழிவு ... சிதறுண்டு..." -*
*போர்க்களத்தில் அழிவதை அல்லது சிதறுண்டு போவதைப் பேசுவது போலத் தோன்றினாலும், தமக்கு எதிராகச் செயல்படுவோருக்குக் கடவுளின் நீதித் தீர்ப்பையும் திருப்பாடகர் இங்கு உணர்த்துகிறார்.*

வசனம் 92:8
*திருப்பாடலில் நடுநாயகமாக அமைந்திருக்கும் சுருக்கமான, பற்றுறுதி அறிக்கையான திருமொழி. உன்னதக் கடவுளை உயர்த்திப் போற்றுவதே, நமது வெற்றிக்கு வழி.*

வசனம் 92:10
*பணிக்கு அல்லது ஊழியத்திற்குத் திருப்பொழிவு அல்லது அருட்பொழிவு செய்கிறவர் ஆண்டவரே; நமக்காகத் தேர்ந்து தந்த பணியை நாம் நிறைவேற்ற நம்மை ஆற்றல் படுத்துகிறவரும் அவரே!*

வசனம் 92:11
*பவுலடிகளின் மொழியில்: "ஆயினும், நம்மேல் அன்பு கூர்ந்தவரின் செயலால் மேற்கூறியவை அனைத்திலும் நாம் வெற்றிமேல் வெற்றி அடைகிறோம்." (உரோமையர் 8:37)*

வசனம் 92:12-15
*நேர்மையாளரின் செழிப்பு இங்கு உறுதிபட உரைக்கப்பட்டுள்ளது. வறண்ட நிலத்திலும் பசுமையாகவும் கனி தருவதாகவும் இருக்கும் பேரீச்சை; பசுமை, அழகிய தோற்றம், நெடுங்காலம் நிலைத்திருக்கும் தன்மை, உறுதி மற்றும் சிறந்த பயன் தரும் லெபனோனின் கேதுரு என்று இரண்டு மரங்கள் இங்கு நேர்மையாளருக்கு உவமையாகச் சொல்லப்பட்டுள்ளன.*

*செழிப்பின் உபதேசமாக இன்றைக்கு இந்த வசனங்கள் போதிக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். அப்படிப்பட்டவர்கள் அழுத்தம் தர மறுக்கும் திருமொழி, வ.13: நாம் ஆண்டவரின் இல்லத்தில் நடப்பட்டோமா? நம் கடவுளின் கோவில் முற்றங்களிலா செழித்து இருக்கிறோம்? இந்தக் கேள்விகள் முதன்மையானவை, மிகவும் அவசியமானவை.*

*இன்றைக்கு நாம் கடவுளை எங்கும் தொழுது கொள்ளலாம் என்பது உண்மையே; நாம் ஒவ்வொருவருமே ஆண்டவரின் ராஜரீகமான ஆசாரியர் தான். ஆனால் நம்முடைய வாழ்க்கையின் நோக்கம் என்னவாக இருக்கிறது? நாம் உடல் வருத்திப் பாடுபடுவது யாருக்காக? இவற்றில் கடவுளாகிய ஆண்டவருக்கு நாம் கொடுத்திருக்கும் இடம் என்ன?*
*ஆண்டவரின் போதனையை ஒருபோதும் மறவாதீர்கள்: "அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்." (மத்தேயு 6:33)*

## 19 திருப்பாடல் 93

*(கடவுளின் அரசாட்சி)*

1 *ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்;*
*அவர் மாட்சியை ஆடையாய் அணிந்துள்ளார்;*
*ஆண்டவர் வல்லமையைக் கச்சையாகக் கொண்டுள்ளார்;*
*பூவுலகை அவர் நிலையப்படுத்தினார்;*
*அது அசைவுறாது.*
2 *உமது அரியணை*
*தொடக்கத்திலிருந்தே நிலைபெற்றுள்ளது;*
*நீர் தொன்றுதொட்டே நிலைத்துள்ளீர்.*
3 *ஆண்டவரே! ஆறுகள் குதித்தெழுந்தன;*
*ஆறுகள் இரைச்சலிட்டன;*
*ஆறுகள் ஆரவாரம் செய்தன.*
4 *பெருவெள்ளத்தின் இரைச்சலையும்*
*கடலின் ஆற்றல்மிகு பேரலைகளையும்விட*
*ஆண்டவர் வலிமை மிக்கவர்;*
*அவரே உன்னதத்தில் உயர்ந்தவர்.*
5 *உம்முடைய ஒழுங்குமுறைகள் மிகவும் உறுதியானவை;*
*ஆண்டவரே! என்றென்றும் தூய்மையே*
*உமது இல்லத்தை அழகு செய்யும்.*

திருப்பாடல் 93:1-5

**சிந்தனைக்கு**

*திருப்பாடல்* 93 *முதல் திருப்பாடல்* 99 *வரை உள்ள திருப்பாடல்கள், படைப்பனைத்தையும் அநாதி காலமாக முடிவின்றித் தமது அளவற்ற ஆற்றலோடு ஆளுகை செய்யும் ஆண்டவரைக் குறித்துப் பாடுகின்றன. தம்மை ஓர் அரசராக ஆண்டவர் முதன்முதலில் வெளிப்படுத்தியது ஒரு வேற்றினக் காட்சியாளனான பிலயாமுக்கு என்பது குறிப்பிடத்தக்கது (எண்ணிக்கை* 23:21)*. வேற்றினத் தெய்வங்களைப் போலன்றி, நமது கடவுள் படைப்பாளர்* (74:12-17, 96:5)*, காப்பாளராகத் தம் மக்களை ஆளுகை செய்கிறவர்* (44:4, 96:19)*, ஒவ்வொருவருக்கும் நீதி வழங்குபவர்* (94:2, 96:10)*, என்றுமுள அரசை ஏற்படுத்துகிறவர்* (96:13; *எசாயா* 2:2-4).

*தலைப்பற்ற திருப்பாடல்; எழுதப்பட்ட காலம் குறித்த நேரடியான குறிப்பு ஏதுமில்லை. சிரியா மற்றும் பாபிலோனிய ஆளுகைக்குப் பிறகு, சிறை மீண்ட லேவியர்களில் ஒருவரோ சிலரோ, அந்தத் தெய்வங்களோடு ஒப்புயர்வற்ற யெஹோவாவின் மாட்சியை வெளிப்படுத்த இந்தத் திருப்பாடல்களை எழுதியிருக்கலாம் என்று ஒரு கருத்து உள்ளது. அந்த அடிப்படையில், இந்தக் கருத்து, இன்னும் சிறப்பாக, எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரயேலருக்குப் பொருந்தும். ஏனெனில், மோசேயின் வழியாக எகிப்தில் ஆண்டவர் நிகழ்த்திய அருஞ்செயல்கள் ஒவ்வொன்றும் எகிப்தியர் வணங்கிய தெய்வங்கள் ஒவ்வொன்றையும் மேற்கொள்ளும் வகையில் நிகழ்த்தியவை (இது குறித்து நாம் ஏற்கனவே விடுதலைப் பயணம் நூலில் பார்த்தோம்).*

இந்தச் சிறிய ஆனால் மிகவும் தெளிவான திருப்பாடலில், ஆண்டவரின் சிறப்புத் தன்மைகளான, மாட்சி, வல்லமை, தொன்றுதொட்டு நிலைத்த தன்மை, தூய்மை ஆகியவற்றைத் திருப்பாடகர் குறிப்பிடுகிறார்.
🕎

அமைப்பு:
வ.1-2, ஆளுகை செய்யும் படைப்பின் ஆண்டவர்
வ.3-4, ஆற்றலோடு இயங்கும் படைப்பை நிலைப்படுத்தி ஆளும் ஆண்டவர்
வ.5, உறுதியான ஒழுங்கோடு ஆளும் ஆண்டவர்
🕎

வசனம் 93:1
"ஆண்டவர் ஆட்சி செய்கிறார்" -
இறையரசுத் திருப்பாடல்களின் மையக்கரு (95:3, 96:10, 97:1, 98:6, 99:1). மேலும் பார்க்க, 10:16, 47:2&6-8.

வசனம் 93:2
உலகில் தெய்வங்கள் என்று சொல்லப்படும் எதற்கும், அவை எப்போது தோற்றுவிக்கப்பட்டன என்ற காலக் கணிப்பை வரையறுக்க முடியும். ஆனால் படைப்பின் கடவுளான ஆண்டவரோ படைப்பிற்கும் முன்பே இருந்தவர், 90:2. அவர் என்றென்றும் வாழும் கடவுள்.

வசனம் 93:3-4
பெருந்திரள் நீரின் ஆற்றலுக்கும் மேலான ஆண்டவரின் பேராற்றல், 29:3, 65:7, 89:9.

வசனம் 93:5
ஒழுங்குமுறைகள் -
ஆண்டவர் அருளிய கட்டளைகள் (மாற்கு 12:29-31). அவை என்றும் நிலையானவை, மாறாதவை (யாக்கோபு 1:17).

"உம்முடைய இல்லம்" -
விண்ணகம், திருத் தூயகம், கோவில்.

உன்னத ஆண்டவரின் இல்லத்தைத் தூய்மையே அழகு செய்யும். நமது உடலே ஆண்டவர் உறையும் கோவில் (1 கொரிந்தியர் 6:29). எனவே நாம் நம்மையே அவருக்கு உகந்தவர்களாக, எண்ணங்களாலும் செயல்களாலும் தூய்மையால் அலங்கரிப்போம்!

✝

## 19 திருப்பாடல் 94

*(ஆண்டவரே உலகின் நீதிபதி)*

1 அநீதிக்குப் பழிவாங்கும் இறைவா! ஆண்டவரே!
அநீதிக்குப் பழிவாங்கும் இறைவா, ஒளிர்ந்திடும்!
2 உலகின் நீதிபதியே, எழுந்தருளும்;
செருக்குற்றோர்க்கு உரிய தண்டனையை அளியும்.

3 எத்துணைக் காலம், ஆண்டவரே!
எத்துணைக் காலம் பொல்லார் அக்களிப்பர்?
4 அவர்கள் இறுமாப்புடன் பேசுகின்றனர்;
தீமைசெய்வோர் அனைவரும் வீம்பு பேசுகின்றனர்.
5 ஆண்டவரே! அவர்கள் உம் மக்களை நசுக்குகின்றனர்;
உமது உரிமைச் சொத்தான அவர்களை ஒடுக்குகின்றனர்.
6 கைம்பெண்டிரையும் அன்னியரையும்
அவர்கள் வெட்டி வீழ்த்துகின்றனர்;
திக்கற்றவரை அவர்கள் கொலை செய்கின்றனர்.
7 'ஆண்டவர் இதைக் கண்டு கொள்வதில்லை;
யாக்கோபின் கடவுள் கவனிப்பதில்லை' என்கின்றனர்.
8 மக்களிடையே அறிவிலிகளாய் இருப்போரே, உணருங்கள்;
மதிகேடரே, எப்பொழுது நீங்கள் அறிவு பெறுவீர்கள்?
9 செவியைப் பொருத்தியவர் கேளாதிருப்பாரோ?
கண்ணை உருவாக்கியவர் காணாதிருப்பாரோ?
10 மக்களினங்களைக் கண்டிப்பவர்,
மானிடருக்கு அறிவூட்டுபவர் தண்டியாமல் இருப்பாரோ?
11 மானிடரின் எண்ணங்கள் வீணானவை;
இதனை ஆண்டவர் அறிவார்.
12 ஆண்டவரே! நீர் கண்டித்து
உம் திருச்சட்டத்தைப் பயிற்றுவிக்கும் மனிதர் பேறுபெற்றோர்;
13 அவர்களின் துன்ப நாள்களில்
அவர்களுக்கு அமைதி அளிப்பீர்.
பொல்லார்க்குக் குழி வெட்டப்படும்.
14 ஆண்டவர் தம் மக்களைத் தள்ளிவிடார்;
தம் உரிமைச் சொத்தாம் அவர்களைக் கைவிடார்.
15 தீர்ப்பு வழங்கும் முறையில் மீண்டும் நீதி நிலவும்;
நேரிய மனத்தினர் அதன்வழி நடப்பர்.
16 என் சார்பில் பொல்லார்க்கு எதிராக எழுபவர் எவர்?
என் சார்பில் தீமை செய்வோர்க்கு எதிராக நிற்பவர் எவர்?
17 ஆண்டவர் எனக்குத் துணை நிற்காதிருந்தால்,
என் உயிர் விரைவில் மௌன உலகிற்குச் சென்றிருக்கும்!
18 'என் அடி சறுக்குகின்றது' என்று நான் சொன்னபோது,
ஆண்டவரே! உமது பேரன்பு என்னைத் தாங்கிற்று.
19 என் மனத்தில் கவலைகள் பெருகும்போது,
என் உள்ளத்தை உமது ஆறுதல் மகிழ்விக்கின்றது.
20 சட்டத்திற்குப் புறம்பாகத் தீமை செய்யும்
ஊழல்மிகு ஆட்சியாளர்
உம்மோடு ஒன்றாக இணைந்திருக்க முடியுமோ?
21 நேர்மையாளரின் உயிருக்கு உலை வைக்க
அவர்கள் இணைகின்றனர்;
மாசற்றோர்க்குக் கொலைத்தீர்ப்பு அளிக்கின்றனர்.
22 ஆண்டவரோ எனக்கு அரண் ஆனார்;
என் கடவுள் எனக்குப் புகலிடம் தரும் பாறை ஆகிவிட்டார்.
23 அவர்கள் இழைத்த தீங்கை
அவர்கள் மீதே திரும்பிவிழச் செய்வார்;
அவர்கள் செய்த தீமையின் பொருட்டு

அவர்களை அழிப்பார்;
நம் கடவுளாம் ஆண்டவர்
அவர்களை அழித்தே தீர்வார்.

திருப்பாடல் 94:1-23

**சிந்தனைக்கு**

இவ்வுலகின் அரசராக, நீதியை நிலைநாட்டுதல் கடவுளின் பணி, 96:10&13, 97:8&10-12, 98:9, 99:4. வாழும் நாட்டில் நீதி மறுக்கப்பட்ட நேர்மையாளர் ஒருவர், எளிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உலகை நீதியோடு ஆளுகை செய்யும் ஆண்டவரிடம் நீதிக்காக மன்றாடுதலே இத்திருப்பாடல். செருக்குற்றோர் வேற்றினத்தோர் அல்ல என்பதை வ.7 உணர்த்துகிறது. அப்படியானால், எவர் அந்தச் செருக்குற்றோர்? இஸ்ரயேலின் அரசரா? இளவரசர்களா? குலத் தலைவர்களா? கோவில் குருக்களா? பொய்வாக்கினரா? அல்லது இவர்கள் அனைவருமே நீதிக்கு எதிராகக் கைகோர்த்தனரா? ஆண்டவரின் ஒழுங்குமுறைகளுக்கு எதிராக நிற்கும் அளவுக்கு இவர்கள் இணைந்து செயல்பட்டனரா? (வ.20-21).

தலைப்பற்ற திருப்பாடல்; எழுதியவர், எழுதப்பட்ட காலம், சூழல் குறித்த யாதொரு குறிப்பும் இல்லை. சாலமோனுக்குப் பிந்தைய அரசர்களின் காலம் தொடங்கி, மக்கபேயர் ஆட்சிக் காலம் வரை எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். மோசேயின் காலமாக இருக்க வாய்ப்பில்லை.

வ.2 மற்றும் வ.20, பிறகு வ.1 - இவ்வசனங்களை ஒப்பிட்டு, 2 தெசலோனிக்கர் 1 ~ 2 மற்றும் திருவெளிப்பாடு 18 ~ 19ன் அடிப்படையில், இறுதிப்போருக்கான பற்றுறுதியாளர்களின் மன்றாட்டே இத்திருப்பாடல் என்று பொருள் கொள்வோரும் உளர்.

நீதிக்காக மன்றாடும் வகையில், இத்திருப்பாடல், திருப்பாடல்கள் 72 மற்றும் 82 - ஆகியவற்றோடு ஒப்பிடத்தக்கது.

அமைப்பு:
வ.1-2, உலகின் நீதியரசர் எழுந்தருள மன்றாட்டு
வ.3-7, செருக்குற்ற மனிதர்களின் கொடுஞ்செயல்கள்
வ.8-11, செருக்குற்றோருக்கு அறிவுரை
வ.12-19, நேர்மையாளரின் நற்பேறு
வ.20-23, திருச்சட்டத்தை மீறும் ஆட்சியாளருக்குக் காத்திருக்கும் அழிவு

வசனம் 94:1-2
அன்பின் வடிவம், அருளுருவம், கருணைக் கடல் அல்லவோ கடவுள்! அவர் பழிவாங்கும் இறைவரா?

இறைவழி நடப்போர் பழிவாங்க இயலாது, லேவியர் 19:18; குற்றம் நிகழ்ந்தால், சாட்சிகளின் அடிப்படையில் பழிவாங்க வேண்டிய பொறுப்பு நீதித் தலைவருக்கு உரியது, விடுதலைப் பயணம் 21:20; இவற்றுக்கு மேல், மோசமான தீங்கை எதிர்கொள்ள நேரிட்டாலும், பழிவாங்குதல் தமக்கே உரியது என்கிறார் ஆண்டவர், 18:47, 99:8; இணைச் சட்டம் 32:35,41&43. எனவே பழிவாங்கும் கடவுள் எழுந்தருளுமாறு திருப்பாடகர் வேண்டுகிறார். மேலும் பார்க்க, எசாயா 35:4, 66:6; எரேமியா 51:6,11,36&56.

வசனம் 94:2
"உலகின் நீதிபதி" -
நாடுகள் அனைத்தின் மீதும், மக்களினங்கள் அனைத்தின் மீதும் கடவுளே நீதியரசர், 7:8, 58:11, 76:8, 82:8, 96:10 & 98:9.

வசனம் 94:2-7
தீயோர் யார்?
- செருக்குற்றோர்
- பொல்லாங்கு செய்வோர்
- இறுமாப்புடையோர்
- வீம்பு பேசுவோர்
- எளிய மக்களை நசுக்கி ஒடுக்குவோர்
- திக்கற்றோரை வெட்டிக் கொலை செய்வோர்.

அவர்கள் திருச்சட்டத்திற்கு எதிராகப் பேசி, அதன்படிச் செயல்படுவோர், இணைச் சட்டம் 14:29, 24:17&19.

சமுதாயத்தில், குரலற்ற - ஒடுக்கப்பட்ட - விளிம்பு நிலை மக்களைத் தீயோர் தொடர்ந்து மென்மேலும் ஒடுக்குவர்; ஆனால் கடவுளோ அவர்களுக்கு ஆதரவாக இருக்கிறார், 68:5, 146:8; விடுதலைப் பயணம் 22:21-27.

வசனம் 94:5
ஒப்பிட்டு, நம்பிக்கையில் வளர்க, வ.14.

வசனம் 94:6
"... கைம்பெண்டிர் ... அன்னியர் ... திக்கற்றவர்..." -
அடக்குமுறைக்கும் ஆதிக்கத்திற்கும் உள்ளாகும் நிலையில் உள்ள விளிம்பு நிலை மக்கள், 82:3-4; எசாயா 11:4; எரேமியா 5:26-29.

வசனம் 94:7
இணை, 10:11, 59:7, 73:11; எசாயா 29:15; எசேக்கியேல் 8:12, 9:9.

வசனம் 94:8-11
வ.7க்குப் பதிலளிப்பதாக இந்தப் பகுதி உள்ளது.

வசனம் 94:11
இவ்வசனத்தைப் பவுலடிகள் நையாண்டியோடு தனது திருமடலில் பயன்படுத்துகிறார், 1 கொரிந்தியர் 3:20.

வசனம் 94:12-15
ஆண்டவர் தெரிந்து கொண்டோருக்கும் அவரையே நம்பி அவர்மீது அன்பு கொண்டோருக்கும் கிடைக்கும் அரிய பேறு!

வசனம் 94:12
இணை, நீதிமொழிகள் 3:11-12; 1 கொரிந்தியர் 11:32; எபிரேயர் 12:6-7.

வசனம் 94:14
பவுலடிகளின் எடுத்தாளுகை, ரோமையர் 11:1.

"*தம் மக்கள்*" -
*தீயோரும் மக்களே, ஆனால் கடவுளை ஏற்றுக் கொண்டு வாழ்வோரே அவர்தம் மக்கள். அவர்களே கடவுளின் உரிமைச் சொத்து.*

வசனம் 94:15
"*தீர்ப்பு வழங்கும் முறையில் மீண்டும் நீதி நிலவும்*" -
*தீர்ப்பு, வழங்கப்படுவது; வழங்குபவர் எந்த அளவுக்கு நீதியுள்ளவரோ, அந்த அளவுக்கே தீர்ப்பில் நீதி விளங்கும். நீதியற்ற பல தீர்ப்புகளை இன்றும் நாம் பார்க்கிறோமே! நீதிமன்றங்கள் தீர்ப்பை எழுதுகின்றன, ஆனால் அவை நீதி வழங்குவதில்லை.*

*கடவுளே சிறந்த நீதித் தலைவர்; தம் மக்கள் மகிழ்வுறும் நீதி வழங்குபவர்,* 11:7, 19:8, 33:1&4, 92:15, 97:8-11.

வசனம் 94:16-22
*நல்லோர் அனைவருக்காகவும் பேசிய திருப்பாடகர், இப்போது தனது சொந்த அனுபவமாகத் தான் கண்டு உணர்ந்து அறிந்த ஆண்டவரின் பேரன்பைக் குறித்துப் பாடுகிறார்.*

வசனம் 94:16-17
*கேள்வியும் பதிலும்!*
*நம்மில் எத்தனை பேரின் வேண்டுதலாக இந்த வசனங்கள் உள்ளன?*

வசனம் 94:18
*ஆபத்து அல்லது விபத்துக்கு நெருக்கமாக இருந்த நிலையில், நூலிழையில் தப்பிய அனுபவம் நம்மில் பலருக்கும் உண்டு. அந்த நூலிழையில் இருப்பதுவே கடவுளின் பேரன்பு!*

வசனம் 94:19
*வ.*3-6 *பகுதியில் கவலைகள் விவரிக்கப்பட்டுள்ளன. கவலைகளில் ஆறுதலான நம்பிக்கை வ.*9-10*ல் வெளிப்படுகிறது. அந்த ஆறுதலின் அனுபவம் வ.*17-18*ல் உள்ளது.*

*துயர்மிகு வேளைகளில், ஆண்டவரின் ஆறுதலைக் கேட்டுப் பெற்றிருக்கிறீர்களா? அப்போது நமது உள்ளங்கள் பேரானந்தம் கொள்ளும்!*
*வ.*18&19, *நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட அனுபவமாக, அவற்றுக்கு நாம் ஒவ்வொருவரும் சாட்சியாக விளங்க வேண்டும்.*

வசனம் 94:20-21
"*சட்டத்திற்குப் புறம்பாகத் தீமை செய்யும் ஊழல்மிகு ஆட்சியாளர்*" -
OV, *தீமையைக் கட்டளையினால் பிறப்பிக்கிற கொடுங்கோலாசனம்; இருக்கும் கொடுங்கோல் சட்டங்களுக்கு மேல், இன்னும் கொடிய சட்டங்களைத் தீயோர் இயற்றுவர்.*

*இன்றைய நமது நாட்டை விடவும் மிகச் சிறந்த சான்று வேறு இதற்கு இருக்க முடியாது. முதியவருக்கு ஓர் உறிஞ்சு குழல் தராத நீதிமன்றம்; குற்றச்சாட்டு ஒரே சட்டப்பிரிவின் கீழ் எனினும், நூ(ல்)புர் சர்மாவுக்கு ஒரு நீதி, சுபேருக்கு வேறு நீதி; புல்டோசர் கொண்டு சாமானிய மக்களின் கனவுகளைத் தகர்ப்பது; மாதாமாதம் ஜிஎஸ்டி வரி வருவாய் கூடிய போதிலும், பேராசையோடு வரி விகிதங்களைத் தொடர்ந்து உயர்த்துவது; பிற சமயத்தினரின் வழிபாட்டுத் தலங்களைக் குறிவைப்பது - இப்படிச் சொல்லப் பல உண்டு. இத்தகைய தீயோரை நல்லோராக ஒருபோதும் ஆண்டவர் தீர்ப்பிட மாட்டார், இணைச் சட்டம்* 23:7.
*ஆனால் இவற்றுக்கு எதிரான நமது உபவாசங்கள் எங்கே? ஜெபங்கள் எங்கே?*

வசனம் 94:22-23
இதுபோன்ற காலங்களில் ஆண்டவரே நமக்கு அரண். இதில் ஐயம் ஏதுமில்லை. நமது மந்தைக்கு வெளியில் அனேகம் ஆடுகள் உண்டே! அவர்களும் அரணுக்குள் தஞ்சமடைய நமது பங்களிப்பு என்ன? நமது ஜெபச் சத்தம் எங்கே?

குடும்பத்திற்காக மட்டும் ஜெபிக்கும் குடும்ப ஜெபம் கேட்கப்படுமா?
தனது திருச்சபைக்காக மட்டும் ஜெபிக்கும் திருச்சபையை ஆண்டவர் விரும்புவாரா?
தங்களது ஊழியத் தேவைகளுக்காக ஜெபிக்க அறைகூவல் விடும் ஊழியங்கள் வளர்ந்திடுமா?

நமது நாட்டிற்காக ஜெபிக்க உறுதி ஏற்போம்; எகிப்தில் இஸ்ரயேலரின் அழுகுரலைக் கேட்ட ஆண்டவர், நமது ஜெபத்தைக் கேட்பார்; நாட்டிற்கு நலம் தருவார் (2 குறிப்பேடு 7:14).

✝

## 19 திருப்பாடல் 95

*(புகழ்ச்சிப் பாடல்)*

1 வாருங்கள்; ஆண்டவரைப் புகழ்ந்து பாடுங்கள்;
நமது மீட்பின் பாறையைப் போற்றி ஆர்ப்பரியுங்கள்.
2 நன்றியுடன் அவர் திருமுன் செல்வோம்;
புகழ்ப் பாக்களால் அவரைப் போற்றி ஆர்ப்பரிப்போம்.
3 ஏனெனில், ஆண்டவர் மாண்புமிகு இறைவன்;
தெய்வங்கள் அனைத்திற்கும் மேலான பேரரசர்.
4 பூவுலகின் ஆழ்பகுதிகள் அவர்தம் கையில் உள்ளன;
மலைகளின் கொடுமுடிகளும் அவருக்கே உரியன.
5 கடலும் அவருடையதே; அவரே அதைப் படைத்தார்;
உலர்ந்த தரையையும் அவருடைய கைகளே உருவாக்கின.
6 வாருங்கள்; தாள்பணிந்து அவரைத் தொழுவோம்;
நம்மை உருவாக்கிய ஆண்டவர்முன் முழந்தாளிடுவோம்.
7 அவரே நம் கடவுள்;
நாமோ அவரது மேய்ச்சலின் மக்கள்;
நாம் அவர் பேணிக்காக்கும் ஆடுகள்.
இன்று நீங்கள் அவரது குரலுக்குச் செவிகொடுத்தால்
எத்துணை நலம்!
8 அன்று மெரிபாவிலும், பாலை நிலத்தில்
மாசாவிலும் செய்ததுபோல்,
உங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள்.
9 அங்கே உங்கள் மூதாதையர் என்னைச் சோதித்தனர்;
என் செயல்களைக் கண்டிருந்தும்
என்னைச் சோதித்துப் பார்த்தனர்.
10 நாற்பது ஆண்டளவாய் அந்தத் தலைமுறை
எனக்கு வெறுப்பூட்டியதால், நான் உரைத்தது:
'அவர்கள் உறுதியற்ற உள்ளம் கொண்ட மக்கள்;
என் வழிகளை அறியாதவர்கள்'.
11 எனவே, நான் சினமுற்று,

'நான் அளிக்கும் இளைப்பாற்றியின் நாட்டிற்குள்
நுழையவே மாட்டார்கள்'
என்று ஆணையிட்டுக் கூறினேன்.

திருப்பாடல் 95:1-11

**சிந்தனைக்கு**

95 முதல் 100 வரை உள்ள திருப்பாடல்கள் முழுவதுமே கடவுளைப் போற்றி இயற்றப்பட்டவை. அவற்றுள், பாடிப் புகழ்வதற்கான வெளிப்படையான அழைப்பு, திருப்பாடல்கள் 95, 96, 98 மற்றும் 100 ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ளது. அனைத்துமே போற்றிப் பாடுவன என்றாலும், ஒவ்வொன்றும் உள்ளடக்கத்தில் மாறுபட்டவை.

மீண்டும் ஒரு தலைப்பற்ற திருப்பாடல். எழுதியவர் யார் என்பதற்கோ எக்காலத்தில் எழுதப்பட்டது என்பதற்கோ திருப்பாடலுள் எந்தக் குறிப்பும் இல்லை. எருசலேமில் இரண்டாம் கோவில் காலத்தில் எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அமைப்பு:
வ.1-7அ, ஆர்ப்பரித்து ஆண்டவரைத் தொழுது கொள்ள அழைப்பு
வ.7ஆ-11, ஆண்டவருக்குக் கீழ்ப்படிய எச்சரிப்பு

வசனம் 95:1-2
"... ஆர்ப்பரியுங்கள் ... ஆர்ப்பரிப்போம்" -
நமது ஆராதனைகளில் ஆர்ப்பரிப்பு இருக்கிறதா?
ஆர்ப்பரிப்பு என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு கடலலைகள். அவைகளைக் கவனித்துக் கேட்டால், வேறெந்த ஓசைக் கலப்பின்றி மிகவும் தெளிவாக இருக்கும்.
நாம் ஆலயத்தில் பாடும் பாடல்கள் தெளிவாக ஒருமிக்க ஒலிக்கிறதா? அல்லது இசைக்கருவிகள் ஆதிக்கம் செலுத்துகின்றனவா? அல்லது ஒலிபெருக்கி மூலம் யாரோ ஒருவர் அல்லது சிலர் தங்கள் குரல்களால் ஆதிக்கம் செலுத்துகிறார்களா?
சபையினரின் பெருமுழக்கமாகப் பாடல் பாடப்படுவதே சிறந்த ஆராதனை.

வசனம் 95:2
"நன்றியுடன் அவர் திருமுன்..." -
நன்றியை வெளிப்படுத்துவதில் சிறப்பானது சாட்சி சொல்லுதல், ஆனால் இன்றைக்கு சபைகளில் நமக்கு அதற்கெல்லாம் நேரம் இருப்பதில்லை!
செய்தி அவசியமா, சாட்சி அவசியமா என்றால் சாட்சியே சிறப்பானது; உயிர்ப்புள்ள ஒரு சாட்சி அனேகரைத் தொட்டு எழுப்பும்!

"...செல்வோம்" -
எப்படி நாம் ஆலயம் செல்கிறோம்? முதல் மணி அடிப்பது தான் அழைப்பு; ஆனால் நமது நேரக் கணக்கு, இரண்டாம் மணி அடித்த பிறகுதான் தொடங்குகிறது! நான் "வெளியே நிற்கும் கிறிஸ்தவனாக" இருந்த காலத்தில் கவனித்திருக்கிறேன் - சிலர் நேராகத் திருவிருந்துக்கு வருவார்கள்; இதனால் அவருக்குப் பயன் என்ன? செக்கரியா (8:21) சொல்கிறார்: "நாம் ஆண்டவரது அருளை மன்றாடவும், படைகளின் ஆண்டவரை வழிபடவும், தேடவும், நாடவும், விரைந்து செல்வோம்...".
ஞாயிற்றுக்கிழமை அதிகாலைகளில் நமது கால்கள் பதறி ஓடட்டும்.

வசனம் 95:3
"தெய்வங்கள் அனைத்திற்கும் மேலான பேரரசர்" -
பார்க்க, 82:3.

வசனம் 95:4-5
படைப்பின் ஆண்டவர் போற்றப்படுதல், திருவெளிப்பாடு 4:11.

வசனம் 95:6
கடவுளைத் தொழுவதில் யூத முறைமையில் முழங்காலில் நிற்றல் கிடையாது.
உடலில் நாம் வெளிப்படுத்தும் வழிபாட்டு முறை, உள்ளத்தால் நாம் எந்த அளவுக்கு ஆண்டவரின் திருமுன் நம்மைத் தாழ்த்துகிறோம் என்பதைப் பிரதிபலிக்கிறது.
நெடுமுழங்காலில் நின்று வழிபடுவது சிறந்த வழக்கம். ஆனால் இன்றைக்கு எத்தனை திருச்சபைகளில் முழங்கால் போட்டு வழிபட முடிகிறது? அப்படியே இடவசதி இருந்தாலும், எத்தனை பேர் முழங்கால் போடுகிறார்கள்?
கொதிக்கும் வெயிலில் தரையில் உருண்டு பிரகாரத்தைச் சுற்றி வந்து வழிபடுபவர்கள் வாழும் நாட்டில், வசதியாக அமர்ந்து வழிபடும் நமது முறைகள் எந்த அளவுக்கு ஆர்வத்தைத் தூண்டும்?

வசனம் 95:7அ
"...அவரது மேய்ச்சலின் மக்கள்" -
பார்க்க, 74:1, 79:13; எசேக்கியேல் 34:31.

வசனம் 95:7ஆ-11
கடவுளின் அருள்மொழிகளாக.
பாலைவெளியின் நிகழ்ச்சிகள் (14:21-35) சுருக்கமாக.
இதே பகுதியின் விளக்கவுரை, எபிரேயர் நூலில் (3:7-4:13) புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்காக அருளப்பட்டிருப்பதை நாம் வாசிக்கிறோம்.

வசனம் 95:7ஆ
"இன்று நீங்கள்..." -
கோவில் கட்டப்பட்ட பிறகு வழிபாட்டுக்கு வந்தோரைச் சுட்டுவதோடு நில்லாமல், இன்றைக்குக் கடவுளை வழிபடும் நம் ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் விரல் நீட்டி வினாவுகிறார்.

"...அவரது குரலுக்குச் செவிகொடுத்தால்..." -
மோசேயின் திருச்சட்ட வாசிப்பை உள்ளடக்கியதுதான் கோவிலில் ஆண்டவரைத் தொழுதல். எனவே செவிகொடுத்தலும் கீழ்ப்படிதலும் தொழுதலின் இன்றியமையாத பகுதிகள். மேலும் பார்க்க, நீதிமொழிகள் 4:20-23.

வசனம் 95:8
"...மெரிபா..." "...மாசா..." -
பார்க்க, விடுதலைப் பயணம் 17:1-7. வேறு விதமாக, 81:7 ஒப்பிடுக, வ.9

"...இதயக் கடினம்..." -
நம்பிக்கையற்ற வஞ்சக உள்ளம் இதயக் கடினத்தைப் பிறப்பிக்கும், எபிரேயர் 3:12-13. மேலும் பார்க்க, திருத்தூதர் பணிகள் 7:51.

வசனம் 95:9
பாலைவெளியில் பத்து முறை ஆண்டவரைச் சோதித்தனர், எண்ணிக்கை 14:22.

வசனம் 95:10
"...என் வழிகளை அறியாதவர்கள்" -
கடவுளின் வழிகளை அறிய, கூகுள் மேப்ஸ் எதுவும் கிடையாது!
தூய ஆவியாரின் வழிநடத்துதலோடு வார்த்தையை அறிதலும், உறுதியுள்ள உள்ளத்தோராய் அதில் நிலைத்து வாழ்தலுமே ஆண்டவர்தம் வழிகளில் நாம் விலகாமல் பயணிக்க உதவும்.

வசனம் 95:11
"...இளைப்பாற்றியின் நாடு..." -
பார்க்க, இணைச் சட்டம் 12:9.

கீழ்ப்படியாமை பாவம். எனவே அது தண்டனைக்குரியது. கடவுள் முகமுகமாகப் பேசிய மோசேயே அவரின் தண்டனைக்குத் தப்பவில்லை; நாமெல்லாம் எம்மாத்திரம்! எனவே வார்த்தைக்குச் செவிமடுத்து, ஆண்டவர் முன் நம்மைத் தாழ்த்தி, கீழ்ப்படிந்து நடந்தால், நமக்கு வைக்கப்பட்டுள்ள இளைப்பாறுதலை நாம் சென்றடைவோம்.

✝

## 19 திருப்பாடல் 96

*(அனைத்து உலகின் அரசர்)*
(1 குறிப்பேடு 16:23-33)

1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்;
உலகெங்கும் வாழ்வோரே,
ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள்;
2 ஆண்டவரைப் போற்றிப் பாடுங்கள்;
அவர் பெயரை வாழ்த்துங்கள்;
அவர் தரும் மீட்பை நாள்தோறும் அறிவியுங்கள்.
3 பிற இனத்தார்க்கு
அவரது மாட்சியை எடுத்துரையுங்கள்;
அனைத்து மக்களினங்களுக்கும்
அவர்தம் வியத்தகு செயல்களை அறிவியுங்கள்.
4 ஏனெனில், ஆண்டவர் மாட்சிமிக்கவர்;
பெரிதும் போற்றத் தக்கவர்;
தெய்வங்கள் அனைத்திற்கும் மேலாக
அஞ்சுதற்கு உரியவர் அவரே.
5 மக்களினங்களின் தெய்வங்கள் அனைத்தும்
வெறும் சிலைகளே;
ஆண்டவரோ விண்ணுலகைப் படைத்தவர்.
6 மாட்சியும் புகழ்ச்சியும் அவர் திருமுன் உள்ளன;
ஆற்றலும் எழிலும் அவரது திருத்தலத்தில் உள்ளன;
7 மக்களினங்களின் குடும்பங்களே,
ஆண்டவருக்குச் சாற்றுங்கள்.
மாட்சியையும் ஆற்றலையும்
ஆண்டவருக்குச் சாற்றுங்கள்.
8 ஆண்டவரின் பெயருக்குரிய மாட்சியை

அவருக்குச் சாற்றுங்கள்;
உணவுப்படையல் ஏந்தி
அவர்தம் கோவில் முற்றங்களுக்குள் செல்லுங்கள்.
9 தூய கோலத்துடன் ஆண்டவரை வழிபடுங்கள்;
உலகெங்கும் வாழ்வோரே, அவர் திருமுன் நடுங்குங்கள்.
10 வேற்றினத்தாரிடையே கூறுங்கள்:
'ஆண்டவரே ஆட்சி செய்கின்றார்;
பூவுலகு உறுதியாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது;
அது அசைவுறாது;
அவர் மக்களினங்களை நீதி வழுவாது தீர்ப்பிடுவார்.
11 விண்ணுலகம் மகிழ்வதாக;
மண்ணுலகம் களிகூர்வதாக;
கடலும் அதில் நிறைந்துள்ளனவும் முழங்கட்டும்.
12 வயல்வெளியும் அதில் உள்ள அனைத்தும் களிகூரட்டும்;
அப்பொழுது, காட்டில் உள்ள அனைத்து மரங்களும்
அவர் திருமுன் களிப்புடன் பாடும்.
13 ஏனெனில் அவர் வருகின்றார்;
மண்ணுலகிற்கு நீதித் தீர்ப்பு வழங்க வருகின்றார்;
நிலவுலகை நீதியுடனும்
மக்களினங்களை உண்மையுடனும் அவர் தீர்ப்பிடுவார்.

திருப்பாடல் 96:1-13

**சிந்தனைக்கு**

திருப்பாடல் 105 போலவே, திருப்பாடல் 96, 1 குறிப்பேடு நூலின் 16ம் அதிகாரத்தின் வசனங்களாக எடுத்துப் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்; ஆசரிப்புக் கூடாரம் எருசலேமில் அமைக்கப்பட்டு உடன்படிக்கைப் பேழை எருசலேமுக்கு எடுத்து வரப்பட்ட கொண்டாட்டங்களின் நடுவே, தாவீது அரசர் இந்தத் திருப்பாடலைப் பாடியதாகக் குறிப்பேட்டாளர் குறிப்பிடுகிறார். தாவீதின் திருப்பாடல்களில் இறைவாக்கு வெளிப்பாட்டை நாம் காண்பது போல, இத்திருப்பாடலிலும் நாம் காண்கிறோம்; ஆனால் அந்தப் பகுதி, குறிப்பேடு நூலில் இடம்பெறவில்லை. இந்த இறைவாக்கின் அடிப்படையிலேயே, அடுத்த மூன்று திருப்பாடல்களும் அமைகின்றன.

வ.1-3ன் அடிப்படையில், இந்தத் திருப்பாடல் நற்செய்தி ஊழியத் திருப்பாடலாக அமைகிறது. இதுவே விண்ணேற்றத்திற்கு முன் தம் சீடர்களுக்கு கிறிஸ்து இயேசுவின் இறுதி அறைகூவல். வ.10-13, பற்றுறுதியாளரின் ஒரே எதிர்நோக்கு!

திருப்பாடல் 67, இத்திருப்பாடலோடு ஒப்பிடத்தக்கது. இஸ்ரயேலர், மக்களினங்கள் குறித்த பார்வையில் அத்திருப்பாடல் அமைந்திருக்க, இத்திருப்பாடலோ படைப்பு முழுவதின் களிப்பைக் கொண்டாடுகிறது, வ.10ஆ-13; அந்த வகையில் மானுட மீட்போடு நின்று விடாமல், படைப்பு முழுமைக்குமான மீட்பை (உரோமையர் 8:18-23) இத்திருப்பாடல் கொண்டாடுகிறது.

இந்தத் திருப்பாடல் பல திருப்பாடல்களின் திருமொழித் தொகுப்பு என்று சொல்வதைவிட, இந்தத் திருப்பாடலின் திருமொழிகள், வேறு சில திருப்பாடல்கள் மற்றும் இறைவாக்கு நூல்களில் எடுத்தாளப்பட்டுள்ளன என்று சொல்லும் அளவுக்கு, இணை வசனங்களாக உள்ளன:-
வ.1 > 33:3, 40:3, 66:1, 98:1; எசாயா 42:10
வ.2 > எசாயா 52:7

வ.3 > 9:11, 105:1, 117:1-2; எசாயா 19:23-25, 60:6, 66:18-19
வ.4 > 48:1, 95:3, 97:7
வ.5 > 42:5, 115:4&15, 135:15; எசாயா 40:19, 42:5, 44:9, 46:5-7; எரேமியா 10:3-5&11-12
வ.6 > 50:2, 104:1
வ.7-9 > 29:1-2, 45:12
வ.10 > 93:1, 97:1, 99:1
வ.11 > 69:34, 97:1, 98:7, 148:3-4; எசாயா 35:1, 41:19, 49:13
வ.12 > 145:10; எசாயா 44:23, 55:12
வ.13 > 9:8, 98:9

தலைப்பற்ற திருப்பாடல்; குறிப்பேடு நூலின் அடிப்படையில், இந்தத் திருப்பாடல், உடன்படிக்கைப் பேழை எருசலேமுக்கு எடுத்து வரப்பட்ட நாளில், தாவீது பாடியது என அறிகிறோம். அதில் ஐயுற ஏதுமில்லை. மேலும் வ.6ல் வரும் திருத்தலம் / sanctuary / mik-dawsh என்கிற சொல்லும், சாலமோன் கட்டிய கோவிலுக்கு முந்தைய காலத்தை உணர்த்துகிறது.

அமைப்பு:
வ.1-6, உலகோருக்கு ஆண்டவரைத் தொழுது கொள்ள அழைப்பு
வ.7-13, நீதியோடு உலகை ஆள வருபவரைத் தொழுது கொள்ள அழைப்பு
முதல் பகுதியின் தொடக்கத்தில், "...பாடுங்கள் ...பாடுங்கள் ...பாடுங்கள்" என்றும், இரண்டாவது பகுதியின் தொடக்கத்தில், "...சாற்றுங்கள் ...சாற்றுங்கள் ...சாற்றுங்கள்" என்றும் அமைந்திருப்பது ஓர் இலக்கியச் சுவை.

வசனம் 96:1
புதிய நாளின் புதிய ஆசிகள்? புதிய ஆண்டின் புதிய நம்பிக்கைகள்? எதுவாயினும், ஆண்டவருக்குப் புதிய பாடல் பாட உலகோர் அனைவருக்கும் அழைப்பு.

புதிய புதிய பாடல்கள் இன்றைக்கும் இவ்வசனத்தின் சாட்சிகளாக எழுகின்றன. ஆனால் கேட்கும் நாம், அவை இறைவார்த்தையின் வழியில் உள்ளனவா என்று பார்க்க வேண்டும். அதற்கு எமில் ஜெபசிங், சாராள் நௌரோஜி எழுதிய பாடல்கள் நற்சான்றாக உள்ளன. கடவுளின் மலையில் குகைக்குள் நுழைந்த எலியா போல, இரத்தக் கோட்டைக்குள்ளாக நுழைந்து கொள்வது இறைவார்த்தையின் ஆற்றல் அல்ல - விலைமதிப்பற்ற இரத்தத்தால் மீட்பைப் பெற்ற நம்மைப் படைக்கலன்கள் தாங்கிப் போரிட அழைப்பதே இறைவார்த்தையின் ஆற்றல், எபேசியர் 6:13-17.

வசனம் 96:2
ஆண்டவரே விடுதலையை அருளுபவர், 3:8. தேவையுள்ள மக்களுக்கு மீட்பை அறிவிப்பது நமக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை அல்லவா! (மாற்கு 16:15-16)

வசனம் 96:4
தெய்வங்களைத் தீர்ப்பிடும் ஆண்டவர் என்னும் இறையியல் உண்மையைப் பறைசாற்றும் உயரிய வசனம், பார்க்க விடுதலைப் பயணம் 12:12; மேலும் விடுதலைப் பயணம் 15:11.

வசனம் 96:5
தெய்வங்கள் எல்லாம் மனிதர்களின் படைப்பாக இருக்க, கடவுளோ நம்மைப் படைத்தவராக இருக்கிறார். அதனால், அவரே போற்றுதலுக்குரியவர்.

வசனம் 96:7-8

"... *சாற்றுங்கள் ... சாற்றுங்கள் ... சாற்றுங்கள்*" -

*கடவுளுக்குரிய மாட்சியையும் மாண்பையும் வல்லமையையும் அவர் ஒருவருக்கே அளிக்க வேண்டும், திருவெளிப்பாடு* 4:11, 5:12.

வசனம் 96:7

"...*குடும்பங்களே*" -

*ஆணும் பெண்ணுமாக நம்மைப் படைத்த கடவுள், பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்ப ஆசி அருளினார், தொடக்க நூல்* 1:28. *ஆபிரகாம் வழியாக மண்ணுலகின் குடும்பங்கள்* அனைத்தும் ஆசி பெறும் என்று உறுதிப்படுத்தினார், தொடக்க நூல்* 12:3. *குடும்பங்களாக நம்மை ஆசீர்வதிக்கும் ஆண்டவர், குடும்பங்களாக நாம் அவரைப் பணிந்து தொழுது கொள்ள வாஞ்சிக்கிறார், வ.*22:27. *இணைந்து ஜெபிக்கும் குடும்பம், இணைந்து வாழும்!* (The family prays together, stays together!)

(* *தொடக்க நூல்* 12:3*ல், குடும்பங்கள் என்பதைக் குறிக்கும்* mish-paw-khaw *என்ற சொல், பொது மொழிபெயர்ப்பில் மக்களினங்கள் என்றும்* OV*ல், வம்சங்கள் என்றும் உள்ளது.*)

வசனம் 96:9

"...*அவர் திருமுன் நடுங்குங்கள்*" -

*மேலும்* 2:11, 33:8, 19:9, 34:9, 40:3, 64:9, 86:11, 97:4, 111:10, 114:7; *எசாயா* 66:2. *கடவுளுக்கு அஞ்சுதலே நிலையானது; உள்ளத்தின் எண்ணங்களை ஒருமுகப்படுத்துவது; ஞானத்தை அருள்வது; பிறரையும் நம்பிக்கை கொள்ளத் தூண்டுவது; அவருடைய இரக்கத்தையும் அருளையும் நமக்குத் தரவல்லது.*

வசனம் 96:10-13

*வ.*10*ஆ முதல் உள்ள பகுதி,* 1 *குறிப்பேடு* 16*ம் அதிகாரத்தில் எடுத்தாளப்படவில்லை.*

வசனம் 96:10

*'ஆண்டவரே ஆட்சி செய்கின்றார்' என்ற அறிக்கையும், அவர் 'நீதி வழுவாது தீர்ப்பிடுவார்' என்ற காத்திருப்பும். இறுதித் தீர்ப்பு, திருவெளிப்பாடு* 20:11-15.

வசனம் 96:13

*புதிய வாழ்வு தரும் புதிய எதிர்நோக்கு - உண்மையோடு நீதித் தீர்ப்பு வழங்க வரும் நீதி வழுவாத ஆண்டவர்.*

" ...*வருகின்றார் ... வருகின்றார் ... தீர்ப்பிடுவார்*" -

*வந்தால் அரசராகத்தான் வருவார் என்று இன்றும் யூதர்கள் காத்திருக்கின்றனர்; முதலாம் வருகையில் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவரை ஏற்றுக் கொண்ட நாமும் எக்காளம் முழங்கக் காத்திருக்கிறோம். மாரநாதா!*

✝

## 19 திருப்பாடல் 97

*(அனைத்து உலகின் அரசர்)*

1 *ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்; பூவுலகம் மகிழ்வதாக!*
*திரளான தீவுநாடுகள் களிகூர்வனவாக!*
2 *மேகமும் காரிருளும் அவரைச் சூழ்ந்துள்ளன;*
*நீதியும் நேர்மையும் அவரது அரியணையின் அடித்தளம்.*
3 *நெருப்பு அவர்முன் செல்கின்றது;*
*சுற்றிலுமுள்ள அவர்தம் எதிரிகளைச் சுட்டெரிக்கின்றது.*
4 *அவர்தம் மின்னல்கள் பூவுலகை ஒளிர்விக்கின்றன;*
*மண்ணுலகம் அதைக் கண்டு நடுங்குகின்றது.*
5 *ஆண்டவர் முன்னிலையில்,*
*அனைத்துலகின் தலைவர் முன்னிலையில்,*
*மலைகள் மெழுகென உருகுகின்றன.*
6 *வானங்கள் அவரது நீதியை அறிவிக்கின்றன;*
*அனைத்து மக்களினங்களும்*
*அவரது மாட்சியைக் காண்கின்றன.*
7 *உருவங்களை வழிபடுவோரும்*
*சிலைகள் பற்றிப் பெருமையடித்துக் கொள்வோரும்*
*வெட்கத்துக்கு உள்ளாவர்;*
*அனைத்துத் தெய்வங்களே!*
*அவரைத் தாழ்ந்து பணியுங்கள்.*
8 *ஆண்டவரே!*
*உம் நீதித்தீர்ப்புகளை சீயோன் கேட்டு மகிழ்கின்றது;*
*யூதாவின் நகர்கள் களிகூர்கின்றன.*
9 *ஏனெனில், ஆண்டவரே!*
*உலகனைத்தையும் ஆளும் உன்னதர் நீர்;*
*தெய்வங்கள் அனைத்திற்கும் மேலானவர் நீரே!*
10 *தீமையை வெறுப்போர்மீது*
*ஆண்டவர் அன்பகூர்கின்றார்.*
*அவர்தம் பற்றுமிகு அடியார்களின்*
*உயிரைப் பாதுகாக்கின்றார்;*
*பொல்லாரின் கையினின்று*
*அவர்களை விடுவிக்கின்றார்.*
11 *நேர்மையாளருக்கென ஒளியும்*
*நேரிய உள்ளத்தோர்க்கென மகிழ்ச்சியும்*
*விதைக்கப்பட்டுள்ளன.*
12 *நேர்மையாளர்களே! ஆண்டவரில் களிகூருங்கள்;*
*அவரது தூய்மையை நினைந்து அவரைப் புகழுங்கள்.*

திருப்பாடல் 97:1-12

**சிந்தனைக்கு**

*ஆளுகை செய்யும் ஆண்டவரைக் குறித்த அடுத்த திருப்பாடல்; படைப்புகள் வெளிப்படுத்தும் ஆண்டவரின் ஆற்றல் என்பதன் விவரிப்பு, இந்தத் திருப்பாடலின் தனித்துவம். மற்றுமொரு*

*தனித்துவம், நேர்மையாளரின் கடவுளாக ஆண்டவர் கொண்டாடப்படுகிறார். நிறைவுகாலத் திருப்பாடலாக இத்திருப்பாடலைக் கருதுவோரும் உண்டு.*

*மீண்டும் ஒரு தலைப்பற்ற திருப்பாடல். திருப்பாடலின் உள்ளும் காலக் குறிப்பு மற்றும் இயற்றியவர் குறிப்பு ஏதும் இல்லை. நிறைவுக்கால நிகழ்வின் நிழலாக வ.7 இருக்கிறது.*

*அமைப்பு:*
வ.1-6, *ஆண்டவரின் ஆளுகையை வெளிப்படுத்தும் படைப்பு*
வ.7, *அம்பலப்படும் உருவ வழிபாடு*
வ.8-12, *நேர்மையாளரை நேசிக்கும் ஆண்டவர்*

*வசனம்* 97:1
*ஆண்டவரின் ஆளுகை,* 93:1, 96:10, 99:1; *அதன் நோக்கம், பூவுலகில் மகிழ்ச்சி,* 96:11.

"...*தீவு நாடுகள்*..." -
*தொடர்பு குறைந்த தொலைவு நாடுகளைக் குறிக்கும் எபிரேய வழக்கம், எசாயா* 41:5, 42:4, 66:19; *எரேமியா* 31:10.

*வசனம்* 97:2-6
*சீனாய் மலையில் வெளிப்பட்ட மாட்சிமிகு ஆண்டவரின் பேராற்றல் குறித்த, சுடர்மிகு அருட்காட்சியை நினைவூட்டும் விவரிப்பு.*

*அவருடைய ஆளுகையில் நீதியும் நேர்மையும் அவர்தம் ஆட்சியின் அடித்தளம், வ.*2; *அதனை வானங்கள் முரசறைந்து அறிவிக்கின்றன, வ.*6. *அதில் நேர்மையாளர் மகிழ்ந்து களிகூருவர், வ.*11-12.

*வசனம்* 97:2
*மேகம் ஆண்டவரோடு மிகுந்த தொடர்பில் சொல்லப்பட்டுள்ளது; சான்றாகச் சில:*
* *கடவுளுக்கும் மண்ணுலகுக்குமான உடன்படிக்கையின் அடையாளமான வில், மேகத்தின் மீது, தொடக்க நூல்* 9:13-16
* *ஆண்டவரின் மாட்சி மேகத்தில், விடுதலைப் பயணம்* 16:10
* *ஆண்டவரின் வாகனம் மேகம், விடுதலைப் பயணம்* 34:5
* *மேகத்தின் வழியாக, இஸ்ரயேலரை பாதுகாத்து ஆண்டவர் வழிநடத்தினார்,* 105:39; *விடுதலைப் பயணம்* 13:21; *எண்ணிக்கை* 14:14; *ஓர் இறைவாக்காக, எசாயா* 4:5-6
* *ஆண்டவரின் பிரசன்னத்தின் அடையாளம், விடுதலைப் பயணம்* 23:15-16, 40:38

"*காரிருள்*" -
* *காரிருளுள் கடவுள், பார்க்க விடுதலைப் பயணம்* 20:21; *மோசேயின் நினைவுகூரல்,* 4:11, 5:22.
* *தாவீதின் திருக்காட்சியில் காரிருள்,* 18:9; 2 *சாமுவேல்* 22:10.
*மேலும் பார்க்க,* 1 *அரசர்கள்* 8:12; 2 *குறிப்பேடு* 6:1.
* *எதிர்நோக்கும் காலத்தில் காரிருள், எசாயா* 60:2; *எரேமியா* 13:16; *யோவேல்* 2:2; *செப்பனியா* 1:15.

வசனம் 97:3
"*நெருப்பு*" -
 * நெருப்பில் தோன்றும் ஆண்டவர், விடுதலைப் பயணம் 3:2.
 * நெருப்பு அவரது போர்க் கருவி, தொடக்க நூல் 19:23-24; விடுதலைப் பயணம் 9:23, 14:24.
 * நெருப்பு, அவருடைய பிரசன்னத்தின் அடையாளம், விடுதலைப் பயணம் 13:21-22, 19:18, 24:17, 40:38

வசனம் 97:4
"*மின்னல்கள்*" -
 * *மாட்சியின் ஆண்டவரின் காட்சியின் அடையாளம்,* விடுதலைப் பயணம் 19:16; *தானியேல்* 10:6.
 * *ஆண்டவரின் போர்க்கருவியாக,* 18:14, 144:6; 2 *சாமுவேல்* 22:15; *எசேக்கியேல்* 1:13
 * *ஆண்டவரின் படைப்பாற்றலாக,* 135:7

"*மண்ணுலகம் ... நடுங்குகிறது*" -
*பார்க்க,* 96:9, 99:1.

வசனம் 97:5
"*... மலைகள் மெழுகென உருகுகின்றன*" -
*பார்க்க, மீக்கா* 1:4. இணை, 46:6; *நீதித் தலைவர்கள்* 5:5; *ஆமோஸ்* 9:5.

வசனம் 97:6
*அறிவிக்கப்படும் ஆண்டவர்,* 19:1, 50:6, 96:3&10, 98:2.

வசனம் 97:7 & 9
*பார்க்க,* 96:4-5; விடுதலைப் பயணம் 12:12, 15:11. மேலும் *பார்க்க,* 86:8, 95:3; 2 குறிப்பேடு 2:5.
*கடவுளை ஏற்றுக் கொண்டோருக்குக் களிப்பு; பொய்மையை நாடுவோருக்கோ வெட்கம்.*

"*சிலைகள் பற்றிப் பெருமையடித்துக் கொள்வோர்*" -
*சிலைகள்,* el-eel *என்ற சொல்லுக்கு, ஒன்றுக்கும் உதவாதவை, வீணானவை, மதிப்பற்றவை என்று பொருள் - ஆனால் அவற்றின் தோற்றத்திலும், அலங்காரத்திலும் பெருமை கொள்வோர்.*

வசனம் 97:8
*நீதித் தீர்ப்புகள், நேர்மையாளரின் மகிழ்ச்சி, களிப்புக்கான மூலம்.*

வசனம் 97:10
*ஆண்டவர் அன்புகூரும் மனிதர், தீமையை வெறுப்போர்.*
*தீமையைக் கண்டும் காணாது இருப்போர் ஆண்டவரின் அன்பைப் பெற முடியாது.*

வசனம் 97:11-12
*வாக்கும் களிப்பும்.*

*வழிநடத்துவதும் நம்பிக்கை அளிப்பதும் ஒளி,* 27:1; *யோவான்* 1:9. *ஆண்டவரின் பிரசன்னத்தை வெளிப்படுத்துவது ஒளி, வ.*4, 77:18; *யோவான்* 1:5.

வசனம் 97:12
"*அவரது தூய்மையை நினைந்து அவரைப் புகழுங்கள்*" -

ஆண்டவரின் அன்பையும் அருளையும் ஆற்றலையும் அருஞ்செயல்களையும் மட்டுமல்ல, அவருடைய தூய்மையை நினைந்து அவரைப் புகழுங்கள். அவரது தூய்மையை நாம் அணிந்து கொள்வதே அவரைப் புகழ்வதற்கான அடிப்படைத் தகுதி.

கடவுளின் அன்பை நாம் மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பது எளிது; ஆனால் தூய்மையை அணிந்து கொண்டோமா?

✝

## 19 திருப்பாடல் 98

(அனைத்து உலகின் தலைவர்)

*புகழ்ப்பா*
1 ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்;
ஏனெனில், அவர் வியத்தகு செயல்கள் புரிந்துள்ளார்.
அவருடைய வலக்கரமும் புனிதமிகு புயமும்
அவருக்கு வெற்றியை அளித்துள்ளன.
2 ஆண்டவர் தம் மீட்பை அறிவித்தார்;
பிற இனத்தார் கண்முன்னே தம் நீதியை வெளிப்படுத்தினார்.
3 இஸ்ரயேல் வீட்டாருக்கு
வாக்களிக்கப்பட்ட தமது பேரன்பையும்
உறுதிமொழியையும் அவர் நினைவுகூர்ந்தார்.
உலகெங்குமுள அனைவரும்
நம் கடவுள் அருளிய விடுதலையைக் கண்டனர்.
4 உலகெங்கும் வாழ்வோரே!
அனைவரும் ஆண்டவரை ஆர்ப்பரித்துப் பாடுங்கள்!
மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரித்துப் புகழ்ந்தேத்துங்கள்.
5 யாழினை மீட்டி ஆண்டவரைப் புகழ்ந்தேத்துங்கள்;
யாழினை மீட்டி இனிய குரலில்
அவரை வாழ்த்திப் பாடுங்கள்.
6 ஆண்டவராகிய அரசரின் முன்னே
எக்காளம் முழங்கிக் கொம்பினை ஊதி
ஆர்ப்பரித்துப் பாடுங்கள்,
7 கடலும் அதில் நிறைந்தவையும்
உலகும் அதில் உறைபவையும் முழங்கிடுக!
8 ஆறுகளே! கைகொட்டுங்கள்;
மலைகளே! ஒன்றுகூடுங்கள்;
9 ஆண்டவர் முன்னிலையில் மகிழ்ந்து பாடுங்கள்;
ஏனெனில், அவர் உலகுக்கு நீதி வழங்க வருகின்றார்;
பூவுலகை நீதியுடன் ஆண்டிடுவார்;
மக்களினங்களை நேர்மையுடன் ஆட்சி செய்வார்.

திருப்பாடல் 98:1-9

**சிந்தனைக்கு**

தலைப்பில் புகழ்ப்பா (miz-more, A Psalm) என்ற ஒற்றைச் சொல் மட்டுமே உள்ளது. திருப்பாடலின் உள்ளும் காலக்குறிப்போ, ஆசிரியர் பற்றிய குறிப்போ ஏதுமில்லை. வ.9, சிறையிருப்பின் காலத்தில் பாபிலோனை நியாயம் தீர்க்கக் கடவுள் வருவார் என்ற எதிர்நோக்கை உணர்த்துகிறது என்று சொல்வோர் உளர்; ஆனால் ஏனைய அரசத் திருப்பாடல்களில் சொல்லப்பட்டுள்ளது போன்ற ஓர் இறைவாக்காகவே அதனை நாம் பார்க்க முடிகிறது.

இத்திருப்பாடலின் தொடக்கமும் முடிவும், திருப்பாடல் 96டன் இணைந்து செல்வதைக் காணலாம்.

ஆண்டவர் அருளும் மீட்பைக் கொண்டாடும் திருப்பாடலாக, இத்திருப்பாடல் எசாயா இறைவாக்கு நூலில் வெளிப்படுவதைக் காணலாம். சான்றாக,
வ.1 > எசாயா 12:5, 52:10, 63:5
வ.2 > எசாயா 52:10, 61:1
வ.3 > எசாயா 63:7
வ.4 > எசாயா 12:6
வ.5 > எசாயா 51:3
வ.6 > எசாயா 12:6
வ.8 > எசாயா 44:23, 55:12
இஸ்ரயேலுக்கு அருளப்பட்ட மீட்பு, எல்லையற்ற அனைத்து மக்களுக்கும், பிறகு படைப்பு அனைத்திற்குமாக விரிவடைவதை இந்தத் திருப்பாடலில் காணலாம்.

அமைப்பு:
வ.1-3, இஸ்ரயேலால் தொழப்படும் ஆண்டவர்
வ.4-6, உலகோர் அனைவராலும் தொழப்படும் ஆண்டவர்
வ.7-9, படைப்பு அனைத்தாலும் தொழப்படும் ஆண்டவர்

வசனம் 98:1
"...புதியதொரு பாடல்..." -
பார்க்க, 33:3, 40:3, 96:1, 144:9, 149:1; எசாயா 42:10; திருவெளிப்பாடு 14:3.

வசனம் 98:2
மீட்பை அறிவிக்கும் ஆண்டவர், லூக்கா 4:18; இறைவாக்காக, எசாயா 61:1.

"பிற இனத்தார் கண் முன்னே..." -
பவுலடிகள் இந்த வாக்கை உரோமையர் திருமடலில் (1:18-19) எடுத்தாளுகிறார். தம் நீதியை வெளிப்படுத்திய ஆண்டவர், பூவுலகை நீதியுடன் ஆள வருகிறார், வ.9.

"...வெளிப்படுத்தினார்" -
மேலும், 111:6. கடவுள் வெளிப்படுத்தும் ஆண்டவர். தம்மைத் தேடுவோர்க்கு அவர் வெளிப்படுகிறார்; மேலும் எதையும் நமக்கு அவர் மறைப்பதில்லை (தொடக்க நூல் 18:17).

வசனம் 98:3
"...நினைவுகூர்ந்தார்" -
தமது உடன்படிக்கையை எப்போதும் நினைவுகூரும் ஆண்டவர். எனவே நம்பிக்கையோடு ஜெபித்து, வெற்றி பெறுவோம்.

வசனம் 98:4 & 6
"...ஆர்ப்பரித்து..." -
வெற்றிக் களிப்பில் வெளிப்படுவது; ஆண்டவரின் மீட்பின் வேளையிலும், ஆளுகையிலும் நேர்மையாளருக்காக வைக்கப்பட்டிருப்பது. இன்றைக்கும் நாம் நம்மை அவருடைய ஆளுகைக்கு அர்ப்பணித்தால், இந்தப் பொல்லாத நாட்களிலும், ஆர்ப்பரிப்போடு நம்மை வழிநடத்த அவர் வல்லவர்!

வசனம் 98:6
"...எக்காளம்..." -
எபிரேயத்தில், khats-o-tser-aw;
திருப்பாடல்கள் நூலில் இங்கு மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ள இசைக்கருவி. ஊதப்படும் "கொம்பு" (sho-far, horn) என்ற இசைக் கருவி பல இடங்களில் trumpet / எக்காளம் என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது.

வசனம் 98:7
இணை, 96:11.

வசனம் 98:7-9
இப்போது மீட்புக்காகக் காத்திருக்கும் படைப்பு, நீதி வழங்க வரும் ஆண்டவரைப் போற்றி மகிழ அழைப்பு.

கிறிஸ்து இயேசுவின் நற்செய்தி அறிவிப்பின் விளைவாக உலகெங்கும் வாழ்வோர் மீட்கப்பட்டு வருகின்றனர்; மீட்கப்பட்டோராக நாம் திரண்டு கடவுளைப் போற்றித் தொழுகிறோம். ஆனால் சபிக்கப்பட்ட நிலத்தின் மீட்புக்கு நமது பங்களிப்பு என்ன? (உரோமையர் 8:19-23).

கடல், ஆறுகள், மலைகள், காற்று, ஒலி என்று நாம் மாசுபடுத்தாத படைப்பு ஏதும் இருக்கிறதா? நெகிழிப் பயன்பாடு முதல், வாகன ஒலிப்பான் வரை, நாம் என்னென்ன செய்கிறோம்? சற்று எண்ணிப் பார்ப்போம்; படைப்போடு இயைந்து வாழ முயல்வோம். நீதியின் அரசர் வருகையில், நம்மோடு ஆர்ப்பரித்துப் பாட அவையும் உயிர்ப்போடு இருக்க வேண்டுமே!

## 19 திருப்பாடல் 99

*(அனைத்து உலகின் அரசர்)*

1 ஆண்டவர் ஆட்சி செய்கின்றார்;
மக்களினத்தார் கலங்குவராக!
அவர் கெருபுகள்மீது வீற்றிருக்கின்றார்;
மண்ணுலகம் நடுநடுங்குவதாக!
2 சீயோனில் ஆண்டவர் மேன்மையுடன் விளங்குகின்றார்;
எல்லா இனத்தார் முன்பும் மாட்சியுடன் திகழ்கின்றார்.
3 மேன்மையானதும் அஞ்சுதற்கு உரியதுமான
அவரது பெயரை அவர்கள் போற்றுவார்களாக!
அவரே தூயவர்.
4 வல்லமைமிக்க அரசரே!

நீதியை நீர் விரும்புகின்றீர்;
நேர்மையை நிலைக்கச் செய்கின்றீர்;
யாக்கோபினரிடையே நீதியையும் நேர்மையையும்
நீர்தாமே நிலைநாட்டுகின்றீர்.
5 நம் கடவுளாகிய ஆண்டவரைப் பெருமைப்படுத்துங்கள்;
அவரது அரியணைமுன் தாள் பணிந்து வணங்குங்கள்;
அவரே தூயவர்!
6 மோசேயும் ஆரோனும் அவர்தம் குருக்கள்;
அவரது பெயரால் மன்றாடுவோருள் சாமுவேலும் ஒருவர்;
அவர்கள் ஆண்டவரை நோக்கி மன்றாடினர்;
அவரும் அவர்களுக்குச் செவிசாய்த்தார்.
7 மேகத் தூணிலிருந்து அவர்களோடு பேசினார்;
அவர்கள் அவருடைய ஒழுங்கு முறைகளையும்
அவர் அவர்களுக்குத் தந்த நியமங்களையும்
கடைப்பிடித்தார்கள்.
8 எங்கள் கடவுளாகிய ஆண்டவரே!
நீர் அவர்களுக்குச் செவிசாய்த்தீர்;
மன்னிக்கும் கடவுளாக உம்மை வெளிப்படுத்தினீர்;
ஆயினும், அவர்களுடைய தீச்செயல்களுக்காய்
நீர் அவர்களைத் தண்டித்தீர்.
9 நம் கடவுளாகிய ஆண்டவரைப் பெருமைப்படுத்துங்கள்;
அவரது திருமலையில் அவரைத் தொழுங்கள்.
ஏனெனில், நம் கடவுளாகிய ஆண்டவரே தூயவர்.

திருப்பாடல் 99:1-9

**சிந்தனைக்கு**

தலைப்போ வரலாற்றுக் குறிப்போ இல்லாத திருப்பாடல். தூயவராகிய அனைத்து உலகின் அரசர் என்ற தலைப்பு இந்தத் திருப்பாடலுக்குப் பொருத்தமானது. ஆண்டவரைத் தவிர வேறு யார்தாம் தூயவர்! ஒருவரும் இல்லையே! அவர்தம் பிரசன்னமுமே தூயது! (விடுதலைப் பயணம் 3:5). போற்றுதலுக்குரிய அவர்தம் பண்புகளில் முதன்மையானதும் சிறப்பானதும் அவர் தூயவர் என்பதே! (எசாயா 6:3; திருவெளிப்பாடு 15:4). தூயவராகிய ஆண்டவரைத் தொழுது போற்றுவதே இத்திருப்பாடலின் மையக்கரு, வ.3,5&9. அழுத்தம் திருத்தமாக மும்முறை தூயவர் என்று வலியுறுத்துதல், எபிரேயக் கவிதை மரபு.

அமைப்பு:
வ.1-3, மாட்சிமிகு தூயவர்
வ.4-5, நீதியை நிலைநாட்டும் தூயவர்
வ.6-9, மன்னிக்கும் கடவுளாகிய தூயவர்

வசனம் 99:1
"ஆண்டவர் ஆட்சி செய்கிறார்" -
பார்க்க, 47:8, 93:1, 96:10, 97:1, விடுதலைப் பயணம் 15:18; 1 குறிப்பேடு 16:31; எசாயா 52:7.

"மக்களினத்தார் கலங்குவராக" -
பார்க்க, விடுதலைப் பயணம் 15:11-16.

"அவர் கெருபுகள் மீது வீற்றிருக்கிறார்" -
கெருபுகள் மீது என்பது சரியல்ல; கெருபுகள் இடையே என்பதே சரி (பார்க்க, விடுதலைப் பயணம் 25:10-22).
ஏதாவது ஒன்றின் மீது ஏறி வரும் நிலையில் கடவுள் இல்லை!

"மண்ணுலகம் நடுநடுங்குவதாக" -
குறிப்பு பார்க்க, 96:9.

வசனம் 99:2
சீயோனில் -
வ.9, திருமலையில் -
பார்க்க 48:1.

ஆண்டவரின் மாட்சி -
பார்க்க, 46:10, 113:4, 148:13.

வசனம் 99:3
"அவரே தூயவர்" -
மேலும் வ.5 & 9;
பார்க்க, 97:12, 111:9; திருவெளிப்பாடு 15:4.

வசனம் 99:4
ஆண்டவரின் அடிப்படைக் குணங்களாகிய, நீதி மற்றும் நேர்மை. நீதியை அவர் விரும்புகிறார்; நம்மில் நேர்மையை அவரே நிலைநிறுத்துகிறார்.

மேலும் ஒப்பிடுக, தொடக்க நூல் 18:19. நம் நம்பிக்கையின் படி, ஆபிரகாமின் வழிமரபினராகிய நாம், நமது விசுவாசத் தந்தையாகிய ஆபிரகாமின் நீதி வழுவாத வழியில் நடக்கும்படி, அவரால் பயிற்றுவிக்கப்பட்டோர்.

வசனம் 99:6-9
கடவுள்தம் மக்களாகிய நம்மோடு அவருக்கு உள்ள தொடர்பில் அவர் தூயவர் என்பதை இஸ்ரயேலின் வரலாற்றின் அடிப்படையில் இந்த வசனங்கள் காட்டுகின்றன.

வசனம் 99:6
மோசேயும் ஆரோனும் அவர்தம் குருக்கள் -
பார்க்க, 91:5; விடுதலைப் பயணம் 24:6, 28:1.

மன்றாட்டாளர் சாமுவேல் -
பார்க்க, 1 சாமுவேல் 7:5.
மன்றாட்டாளர் பலர் உண்டு என்றாலும், அவர்களுள் சிறந்தோராக, மோசே, ஆரோன் மற்றும் சாமுவேலை இங்கு திருப்பாடகர் குறிப்பிடுகிறார்.

அடியவர்தம் மன்றாட்டுக்குச் செவிசாய்க்கும் நம் கடவுள், இன்று நமது மன்றாட்டுகளுக்கும் செவிமடுப்பார்.

வசனம் 99:7-8
*ஒரு கூட்ட மக்களை ஒரு நாடாக மாற்றிய கடவுளின் செயலை இந்த வசனங்கள் பேசுகின்றன.*

*பேசும் கடவுள் -*
*பார்க்க, விடுதலைப் பயணம்* 13:21-22, 19:9, 33:9-10; *எண்ணிக்கை* 11:25.

"...*மன்னிக்கும் கடவுள்*..." -
*பார்க்க, எண்ணிக்கை* 14:20.

*தண்டிக்கும் கடவுள் -*
*பார்க்க, லேவியர்* 26:18.

*ஒழுங்குமுறைகளையும் நியமங்களையும் இஸ்ரயேலருக்கு விதித்த ஆண்டவர், அவர்கள் அவற்றைக் கடைப்பிடிக்கத் தவறிய வேளைகளில் தண்டித்தார்; தம் அடியார்கள் மக்களுக்காக வேண்டுதல் செய்யும் போதோ, அவர்களின் மன்றாட்டை ஏற்று, மன்னித்தருளினார்.*
🕎

*மனிதர்களோடு உள்ள தொடர்பில் ஆண்டவரோடுள்ள உறவைக் குறிப்பிடச் சிறந்தோராக, மோசே, ஆரோன் மற்றும் சாமுவேல் ஆகியோரைத் திருப்பாடகர் சுட்டுகிறார். அவருக்கு உகந்தோராக வாழும் வாய்ப்பு இன்றைக்குக் கிறிஸ்து இயேசுவின் வழியாக நம் ஒவ்வொருவருக்கும் அருளப்பட்டுள்ளது. கடவுளின் மக்களாக எப்படி வாழ வேண்டும் என்பதற்கான உயர்ந்த முன்மாதிரியாகக் கிறிஸ்து இயேசு திகழ்கிறார். தூய்மையற்றோராய் நாம் ஆண்டவரைப் பின்தொடர இயலாது என்பதை உணர்ந்து, தூயாதி தூயவரை நாம் தொடர்ந்து பற்றிக் கொண்டு முன்னேறுவோம்.*

✝

## 19 திருப்பாடல் 100

*(புகழ்ச்சிப் பாடல்)*

*நன்றி நவில்வதற்கான புகழ்ப்பா*
1 *அனைத்துலகோரே!*
*ஆண்டவரை ஆர்ப்பரித்து வாழ்த்துங்கள்!*
2 *ஆண்டவரை மகிழ்ச்சியுடன் வழிபடுங்கள்!*
*மகிழ்ச்சிநிறை பாடலுடன் அவர் திருமுன் வாருங்கள்!*
3 *ஆண்டவரே கடவுள் என்று உணருங்கள்!*
*அவரே நம்மைப் படைத்தவர்!*
*நாம் அவர் மக்கள், அவர் மேய்க்கும் ஆடுகள்!*
4 *நன்றியோடு அவர்தம் திருவாயில்களில் நுழையுங்கள்!*
*புகழ்ப்பாடலோடு அவர்தம் முற்றத்திற்கு வாருங்கள்!*
*அவருக்கு நன்றி செலுத்தி,*
*அவர் பெயரைப் போற்றுங்கள்!*
5 *ஏனெனில், ஆண்டவர் நல்லவர்;*
*என்றும் உள்ளது அவர்தம் பேரன்பு;*
*தலைமுறைதோறும் அவர் நம்பத்தக்கவர்.*

சிந்தனைக்கு

ஆண்டவர் குறித்த எளிமையான - ஆனால் - ஆழமான உண்மைகளை வெளிப்படுத்தும் அழகிய புகழ்ப்பாடல். அதனையே தலைப்பும் தெரிவிக்கிறது. தலைமுறைகள் கொண்டாடும் (90:1 முதல் 100:5 வரை) நன்றியும் புகழ்ச்சியுமான திருப்பாடல்களின் வரிசையில் கடைசித் திருப்பாடல்.
🕎

வசனம் 100:1-2
ஆர்ப்பரித்து ஆண்டவரை வாழ்த்துதலும் வழிபடுதலும்.

வசனம் 100:1
அனைத்துலகோரே -
49:1, 66:1, 96:1, 98:4. அனைத்து உலகின் அரசரைப் போற்றி வாழ்த்த, உலகின் மக்கள் அனைவருக்குமான அழைப்பு.

வசனம் 100:3
ஐந்து வசனங்களில் மையமான வசனம், பல திருப்பாடல்களிலும் மையக்கரு போல விளங்குவதை நாம் பார்க்கலாம், சான்றாக, 54:4, 74:12.
தொகுக்கப்பட்ட முதல் நான்கு கட்டளைகளின் கவித்துவமான வெளிப்பாடு, இணைச் சட்டம் 6:4-5; மாற்கு 12:29-30.

"நாம் ... அவர் மேய்க்கும் ஆடுகள்" -
பார்க்க, 74:1, 79:13, 95:7; நம்மைத் தம் ஆடுகள் என்று ஆண்டவரே உரைப்பது, எரேமியா 23:1; எசேக்கியேல் 34:31.

வசனம் 100:4
கடவுளின் இல்லத்திற்குள் வர, நான்கு விதமான அழைப்பு: நுழையுங்கள் ... வாருங்கள் ... செலுத்தி ... போற்றுங்கள்.
அதற்கான ஆயத்தங்கள் மூன்று:
* நன்றி
* புகழ்ப்பாடல்
* நன்றி செலுத்துதல்
இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய அடிப்படை, ஆலயத்திற்கு நன்றியோடு வந்து, நன்றியைச் செலுத்திப் போற்றுங்கள். காணிக்கை, பலிகள் என்று எதையும் திருப்பாடகர் குறிப்பிடவில்லை. எது ஆண்டவர் விரும்புவதோ, எது சிறப்பானதோ அதையே இத்திருப்பாடல் வலியுறுத்துகிறது.

வசனம் 100:5
ஆண்டவர் பேரன்பு கொண்டவர்; நம்பத் தக்கவர். திருப்பாடல்களில் வலியுறுத்தப்படும் ஆண்டவரின் நிலையான தன்மைகள், 36:5, 40:10, 89:1-2,24,33&49, 92:2-3. அவர் நம்பத் தக்கவர் என்னும் அதே வேளையில், ஆண்டவர் மீதிருக்கும் நமது அன்பு நம்பத் தக்கதா? (யோவான் 21:15-17)

✝

## 19 திருப்பாடல் 101

*(அரசரின் வாக்குறுதி)*

*தாவீதின் புகழ்ப்பா*
1 *இரக்கத்தையும் நீதியையும் குறித்துப் பாடுவேன்;*
*ஆண்டவரே, உமக்கே புகழ் சாற்றிடுவேன்.*
2 *மாசற்ற வழியே நடப்பதில்*
*நான் கருத்தாயிருக்கிறேன்;*
*எப்பொழுது நீர் என்னிடம் வருவீர்?*
*தூய உள்ளத்தோடு*
*என் இல்லத்தில் வாழ்வேன்.*
3 *இழிவான எதையும் என் கண்முன் வைக்கமாட்டேன்.*
*நெறிதவறியவரின் செயலை நான் வெறுக்கின்றேன்;*
*அது என்னைப் பற்றிக்கொள்ளாது.*
4 *வஞ்சக நெஞ்சம்*
*எனக்கு வெகு தொலைவில் இருக்கும்;*
*தீதான எதையும் நான் அறியேன்.*
5 *தமக்கு அடுத்திருப்போரை*
*மறைவாகப் பழிப்போரை நான் ஒழிப்பேன்;*
*கண்களில் இறுமாப்பும் உள்ளத்தில் செருக்கும்*
*உள்ளோரின் செயலை*
*நான் பொறுத்துக்கொள்ள மாட்டேன்;*
6 *நாட்டில் நம்பிக்கைக்குரியோரைக்*
*கண்டுபிடித்து என்னோடு வாழச் செய்வேன்;*
*நேரிய வழியில் நடப்போரை*
*எனக்குப் பணிவிடை புரியச் செய்வேன்;*
7 *வஞ்சனை செய்வோருக்கு*
*என் மாளிகையில் இடமில்லை.*
*பொய் உரைப்போர்*
*என் கண்முன் நிலைப்பதில்லை.*
8 *நாட்டிலுள்ள பொல்லார் அனைவரையும்*
*நாள்தோறும் அழிப்பேன்;*
*ஆண்டவரின் நகரினின்று*
*தீங்கிழைப்போரை ஒழிப்பேன்.*

திருப்பாடல் 101:1-8

**சிந்தனைக்கு**

*"பூவுலகில் உள்ள தூயோர் எவ்வளவோ உயர்ந்தோர்! அவர்களோடு இருப்பதே எனக்குப் பேரின்பம்"* (16:3) *என்ற தாவீதின் அறிக்கையின் வெளிப்பாடே இத்திருப்பாடலில் வெளிப்படும் அவரின் வாக்குறுதி. திருப்பாடல்* 15*ம் இத்திருப்பாடலோடு தொடர்புடையது. அரசரின் வாக்குறுதி என்கிற வகையில்,* 2 *அரசர்கள்* 23:1-3 *பகுதியையும் பாருங்கள்.*

*நாம் அறிந்துள்ளபடி, தாவீது மூன்று முறை இஸ்ரயேலின் தலைவராகத் திருப்பொழிவு செய்யப்பட்டார். முதலாவதாக பெத்லகேம் ஊரில் சாமுவேல் இறைவாக்கினரால்* (1 *சாமுவேல்* 16:13). *அடுத்து எபிரோனில் தென்னாட்டுக் குலங்களின் அரசராக* (2 *சாமுவேல்* 2:4).

இறுதியாக, மொத்த இஸ்ரயேல் மீதும் அரசராக (2 சாமுவேல் 5:3). வ.6ல் தாவீது சொல்லும் தெரிந்தெடுப்பு மூன்றாவது திருப்பொழிவிற்குப் பிறகு இருக்கவே அதிக வாய்ப்பு உள்ளது; தன் மீது பற்றுடையோர் என்பதைத் தாண்டி, விரிந்து பரந்த இஸ்ரயேலுக்கு நலம் தரும் அடிப்படையில், ஆட்சிக்கு உறுதுணையாக ஆள்களைத் தெரிவு செய்ய வேண்டிய அவசியமும் பொறுப்பும் இந்தக் காலத்தில் தாவீதுக்கு இருந்தது; அதனடிப்படையில் யோர்தான் ஆற்றின் அக்கரை வரை அவர் தனக்கானவர்களைத் தேடிக் கண்டுகொண்டதை தாவீதின் வரலாறு காட்டுகிறது. 🕎

தலைப்பில் குறிப்பிட்டுள்ளபடி, இத்திருப்பாடல் தாவீதுக்கு உரியது. அரசராவதற்கு முன் இடர்கள், துயர்கள் வழியாக அவர் கடந்து வந்த பாதையில், ஆண்டவர் கற்றுக் கொடுத்த பாடங்களின் வழியாக இந்த வாக்குறுதித் திருப்பாடல் பிறந்தது என நாம் புரிந்து கொள்ளலாம். மேலும் கடவுளின் ஆட்சியைப் பாடும் திருப்பாடல்களுக்கு அடுத்து, அரசரின் வாக்குறுதித் திருப்பாடல் அமைவது சிறப்பு. நான்காம் தொகுதியில் வரும் முதல் தாவீதியத் திருப்பாடல் இது.
🕎

அமைப்பு:
வ.1, ஆண்டவரைப் போற்றுவதில் உறுதி
வ.2, விவேகத்தோடு வாழ்வதில் உறுதி
வ.3-5, தீமைக்கு விலக உறுதி
வ.6-8, பொல்லாரை வெறுத்து நல்லாரை உயர்த்துதலில் உறுதி
🕎

வசனம் 101:1
பார்க்க, ஒசேயா 12:6; மீக்கா 6:8; செக்கரியா 7:9.
கடவுளின் ஆளுகையின் சிறப்பான தன்மைகளான இரக்கத்தையும் நீதியையும் முன்னிட்டு, அரசர் தாவீது ஆளுகையின் முன்மாதிரியான அவரைப் போற்றுகிறார்.

வசனம் 101:2
"மாசற்ற வழியே நடப்பதில் நான் கருத்தாயிருக்கிறேன்" -
பார்க்க, யோபு 1:1&8, 2:3.
இறைவார்த்தையின் அடிப்படையில் ஒவ்வொரு நாளும் நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி; அதுவே நமது தனிப்பட்ட வாழ்க்கையையும், சமுதாய வாழ்க்கையையும் நெறிப்படுத்தும்.

"எப்பொழுது நீர் என்னிடம் வருவீர்?" -
இந்தக் கேள்வியின் அடிப்படையில், உடன்படிக்கைப் பேழை ஓபேது - ஏதோமின் இல்லத்தில் விடப்பட்ட காலத்தில் (2 சாமுவேல் 6:10) இந்தத் திருப்பாடல் பாடப்பட்டது என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது.

"தூய உள்ளத்தோடு என் இல்லத்தில் வாழ்வேன்" -
இத்தகைய நிறைவான வாழ்க்கையை தாவீது வாழ முடியவில்லை என்பதை நாம் பார்க்கிறோம்; ஆனால் தூயதோர் வாழ்க்கை, நேர்மையான வாழ்க்கை அவருடைய இலக்காக இருந்தது. நமது வாழ்க்கையின் இலக்கு என்ன? நமது பயணம் அந்த இலக்கை நோக்கி அமைந்துள்ளதா? (பிலிப்பியர் 3:13-14).

வசனம் 101:3
"அது என்னைப் பற்றிக் கொள்ளாது" -

*மீண்டும் தாவீதின் தெளிவான உறுதியான மனநிலை. இழிவான யாதொன்றையும் உணர்வுப் பூர்வமாக உறுதியோடு நாம் விலக்கி வைக்கிறோமா?*

வசனம் 101:4
*தாவீதின் வாக்குறுதி ஓர் இறைவேண்டலாக,* 120:2.

"*தீதான எதையும் நான் அறியேன்*" -
*தீயவற்றை உணர்ந்து, தொடர்ந்து நாள்தோறும் அவற்றை விலக்க விலக்க ஏற்படும் உயர்ந்த நிலை.*

வசனம் 101:5
*இந்த உறுதியின் அடியொற்றி, தாவீதின் மன்றாட்டு, பார்க்க* 140:8-11.

வசனம் 101:6
*நேர்மையாளரைப் பாதுகாக்கவும், அவர்களின் வாழ்க்கையை உயர்த்தவும் தாவீது மேற்கொள்ளும் முயற்சி.*

வசனம் 101:7
*தாவீது அறவே தவிர்க்க விரும்பும் பொய்யும் வஞ்சனையும்; வஞ்சகத்துக்கு எதிராக தாவீதின் அறச்சீற்றம், பார்க்க* 52:2-3.

வசனம் 101:8
"...*நாள்தோறும்*..." -
OV, *அதிகாலமே*; KJV, early; *மூலச் சொல்லான* bo-ker, *விடியலைக் குறிப்பது; காலை, நாள், விரைவில் என்ற பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.*
🕎

*இஸ்ரயேலின் அரசராக தாவீது எடுத்துக் கொண்ட இந்த வாக்குறுதிகள், நீதிபதியாக, ஆட்சியாளராக, அரசு அலுவலராக, பணியாளராக, நிறுவன மேலாளராக, தொழிலதிபராக, வணிகராக என எந்தத் தளத்தில் ஆண்டவர் நம்மை அமர்த்தியிருந்தாலும் நம் ஒவ்வொருவருக்கும் பொருந்துவன. உங்கள் தொழிலில் அல்லது பணியில் உங்களுக்கு ஒத்தாசையானவராக யாரை நீங்கள் வைத்திருக்கிறீர்கள்? அவர் எத்தகையவர்? நம் தொழில் அல்லது பணியில் நம்மை வழிநடத்தும் கோட்பாடாக வ.*6 *அமைந்தால், நமது ஆட்சியோ, தொழிலோ, பணியோ, நேரிய வழியில் சிறக்கும். அது உங்கள் கையில்தான் உள்ளது!*

✝

## 19 திருப்பாடல் 102

(*துன்புறுவோரின் மன்றாட்டு*)

*துன்புறும் ஒருவர் மனம் தளர்ந்து ஆண்டவரை நோக்கி தம் உள்ளக் குமுறலை வெளிப்படுத்தும் மன்றாட்டு*
1 *ஆண்டவரே! என் மன்றாட்டைக் கேட்டருளும்!*
*என் அபயக்குரல் உம்மிடம் வருவதாக!*
2 *நான் இடுக்கண் உற்ற நாளிலே*

உமது முகத்தை மறைக்காதீர்!
உமது செவியை என் பக்கமாகத் திருப்பியருளும்!
நான் மன்றாடும் நாளில்
விரைவாய் எனக்குப் பதிலளியும்!
3 என் வாழ்நாள்கள் புகையென மறைகின்றன;
என் எலும்புகள் தீச்சூழையென எரிகின்றன.
4 என் இதயம் புல்லைப்போலத் தீய்ந்து கருகுகின்றது;
என் உணவையும் நான் உண்ண மறந்தேன்.
5 என் பெருமூச்சின் பேரொலியால்,
என் எலும்புகள் சதையோடு ஒட்டிக் கொண்டன.
6 நான் பாலைநிலப் பறவைபோல் ஆனேன்;
பாழ் நிலத்தின் ஆந்தைபோல் ஆனேன்.
7 நான் தூக்கமின்றித் தவிக்கின்றேன்;
கூரைமேல் தனிமையாய் இருக்கும்
பறவைபோல் ஆனேன்.
8 என் எதிரிகள் நாள்முழுதும்
என்னை இழித்துரைக்கின்றனர்;
என்னை எள்ளி நகையாடுவோர்
என் பெயரைச் சொல்லிப் பிறரைச் சபிக்கின்றனர்.
9 சாம்பலை நான் உணவாகக் கொள்கின்றேன்;
என் மதுக்கலவையோடு கண்ணீரைக் கலக்கின்றேன்.
10 ஏனெனில், உமது சினத்திற்கும்
சீற்றத்திற்கும் உள்ளானேன்;
நீர் என்னைத் தூக்கி எறிந்துவிட்டீர்.
11 மாலை நிழலைப்போன்றது எனது வாழ்நாள்;
புல்லென நான் உலர்ந்து போகின்றேன்.
12 ஆண்டவரே! நீர் என்றென்றும் கொலுவீற்றிருக்கின்றீர்;
உமது புகழ் தலைமுறைதோறும் நிலைத்திருக்கும்.
12 ஆண்டவரே! நீர் என்றென்றும் கொலுவீற்றிருக்கின்றீர்;
உமது புகழ் தலைமுறைதோறும் நிலைத்திருக்கும்.
13 நீர் எழுந்தருளி, சீயோனுக்கு இரக்கம் காட்டும்;
இதோ! குறித்த காலம் வந்துவிட்டது.
14 அதன் கற்கள்மீது உம் ஊழியர் பற்றுக்கொண்டுள்ளனர்;
அதன் அழிவை நினைத்துப் பரிதவிக்கின்றனர்.
15 வேற்றினத்தார் ஆண்டவரின் பெயருக்கு அஞ்சுவர்;
பூவுலகின் மன்னர் யாவரும்
அவரது மாட்சியைக் கண்டு மருள்வர்.
16 ஏனெனில் ஆண்டவர் சீயோனைக் கட்டியெழுப்புவார்;
அங்கு அவர் தம் மாட்சியுடன் திகழ்வார்.
17 திக்கற்றவர்களின் வேண்டுதலுக்கு அவர் செவிகொடுப்பார்;
அவர்களின் மன்றாட்டை அவமதியார்.
18 இனி வரவிருக்கும் தலைமுறைக்கென
இது எழுதி வைக்கப்படட்டும்;
படைக்கப்படவிருக்கும் மக்கள்
ஆண்டவரைப் புகழட்டும்.
19 ஆண்டவர் தம் மேலுலகத் திருத்தலத்தினின்று கீழே நோக்கினார்;
அவர் விண்ணுலகினின்று வையகத்தைக் கண்ணோக்கினார்.
20 அவர் சிறைப்பட்டோரின் புலம்பலுக்குச் செவிசாய்ப்பார்;

சாவுக்கெனக் குறிக்கப்பட்டவர்களை விடுவிப்பார்.
21 சீயோனில் ஆண்டவரின் பெயர் போற்றப்படும்;
எருசலேமில் அவர்தம் புகழ் அறிவிக்கப்படும்.
22 அப்போது, மக்களினங்களும் அரசுகளும்
ஒன்றுதிரண்டு ஆண்டவரை வழிபடுவர்.
23 என் வாழ்க்கைப் பாதையின் நடுவில்
ஆண்டவர் என் வலிமையைக் குன்றச் செய்தார்;
அவர் என் ஆயுளைக் குறுக்கிவிட்டார்.
24 நான் உரைத்தது:
"என் இறைவா! என் வாழ்நாளின் இடையில்
என்னை எடுத்துக் கொள்ளாதேயும்;
உமது காலம் தலைமுறை தலைமுறையாய் உள்ளதன்றோ?
25 முற்காலத்தில் நீர் பூவுலகுக்கு அடித்தளமிட்டீர்;
விண்ணுலகம் உமது கைவினைப் பொருள் அன்றோ!
26 அவையோ அழிந்துவிடும்;
நீரோ நிலைத்திருப்பீர்;
அவையெல்லாம் ஆடைபோல் பழமையாகும்;
அவற்றை நீர் உடையென மாற்றுகின்றீர்;
அவையும் மறைந்துபோம்.
27 நீரோ மாறாதவர்!
உமது காலமும் முடிவற்றது.
28 உம் அடியாரின் பிள்ளைகள் பாதுகாப்புடன் வாழ்வர்;
அவர்களின் வழிமரபினர் உமது திருமுன் நிலைத்திருப்பர்!

திருப்பாடல் 102:12-28

**சிந்தனைக்கு**

நீண்டதொரு தலைப்பு இந்தத் திருப்பாடலுக்கு இருந்தாலும், பாடியவர் அல்லது பாடிய சூழல் மற்றும் காலம் குறித்த குறிப்பு ஏதும் தலைப்பில் இல்லை. அதேவேளையில், உற்ற துயரைப் பேசுவதாக வ.14 மற்றும் வ.20 உள்ளன; சீயோனின் அழிவு குறித்தும், மீண்டும் அதனைக் கட்டியெழுப்புதல் குறித்தும் பேசுவதால் சிறையிருப்பின் பிந்தைய காலத்தில் பாடப்பட்ட திருப்பாடல் என்று சொல்லலாம். திருப்பாடல்கள் 17, 86 & 90 போல, இது ஒரு மன்றாட்டுத் திருப்பாடல்.

வ.4-10ன் அடிப்படையில், திருப்பாடகர் தனது சொந்தத் துயர் அல்லது நோயுற்ற நிலையில் பாடியுள்ளார் என்று சொல்வோர் உளர்; மொர்தக்காய் மற்றும் நெகேமியா போன்றோர், தங்கள் மக்களின் துயரைத் தங்களுக்கே நேர்ந்த துயராகக் கருதிச் செயல்பட்டனர் என்பது வரலாற்று உண்மை; அத்தகையோரே நம் கடவுள் விரும்பும் தலைவர் என்பதை நாம் உணர்ந்து செயல்பட வேண்டும்.

வ.1-11 மற்றும் வ.23-24 திருப்பாடகரின் தனிப்பட்ட உணர்விலும், ஏனைய வசனங்கள் பொதுவாகவும் உள்ளன. பொதுவாக உள்ள வசனங்கள், நாட்டின் நிலைமையை வெளிப்படுத்துவனவாகவும் துயரின் வேராகவும் மன்றாட்டின் அடிப்படையாகவும் உள்ளன.

*இரண்டு தாவீதியத் திருப்பாடல்களுக்கு நடுவே இத்திருப்பாடல் அமைகிறது; தாவீதிய உடன்படிக்கையை நினைவுகூர்ந்து நாட்டின் விடுதலையை வேண்டிய திருப்பாடல்* 89*டன் ஒப்புமை கொண்டது.*

*மன்னிப்பை வேண்டும் தாவீதின் திருப்பாடல்களோடும்* (6, 32, 38 & 51), *அதே தொனியில் அமைந்துள்ள ஏனைய திருப்பாடல்களோடும்* (130 & 143) *ஒப்பிடத்தக்கது. அதேவேளையில், பாவ அறிக்கையோ மன்னிப்பை வேண்டுதலோ இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.*

*சில வசனங்கள், முந்தைய திருப்பாடல்கள் மற்றும் நூல்களின் வசனங்களுக்கு ஒத்த வசனங்களாக இருப்பதைக் காணலாம்:*
வ.1 > 4:1; 18:6
வ.2 > 22:24, 27:9, 31:2, 69:17
வ.3 > 31:10, 37:20; *யோபு* 30:30
வ.4 > 37:2, 90:5-6
வ.5 > 6:6; *யோபு* 19:20
வ.7 > 77:4
வ.8 > 42:10
வ.9 (OV, வ.10) > 6:6, 42:3
வ.10 (OV, வ.9) > 30:7
வ.11 > *சபை உரையாளர்* 6:12; *எசாயா* 40:6-7
வ.12 > 9:7, 135:13; *புலம்பல்* 5:19
வ.13 > 44:26, 119:126
வ.14 > 79:1
வ.15 (OV, வ.17) > 67:7, 76:12
வ.16 (OV, வ.15) > 51:18; *எசாயா* 60:1-2
வ.18 > 22:31
வ.19 (OV, வ.20) > 14:2, 33:13, 53:2
வ.20 (OV, வ.19) > 68:6, 79:11
வ.21 (OV, வ.22) > 22:22
வ.22 (OV, வ.21) > 22:27
வ.23 > 39:5
வ.24 > 90:2; *எசாயா* 38:10
வ.25 > 8:3
வ.26 > *எசாயா* 13:10, 34:4, 51:6
வ.27 > 9:7
வ.28 > 69:35

*அமைப்பு:*
வ.1-2, *உதவிக்கான மன்றாட்டு*
வ.3-11, *திருப்பாடகரின் கடுந்துயர் நிலை*
வ.12-22, *சீயோனுக்கு உதவக் காத்திருக்கும் ஆண்டவர்*
வ.23-28, *நிலைபெறும் ஆண்டவரின் ஆளுகை*

*வசனம்* 102:1-2
*நன்மைகளை அருளும் ஆண்டவரை நோக்கித் தொடக்க மன்றாட்டு.*

வசனம் 102:2
"... *உமது முகத்தை மறைக்காதீர்*" -
இணை, 13:1, 27:9, 30:7, 44:24, 69:17, 88:14, 143:7. *ஆண்டவரின் திருமுகம் நமக்கு அருளையும் அமைதியையும் தருவது, எண்ணிக்கை* 6:24-26. *அதன் மறைப்பு, நமக்குத் திகிலூட்டுவது, நம்மைக் கலங்கடிப்பது. இதைச் சொல்லும் அதேவேளையில், அந்த நிலை ஏற்படாது நம்மைக் காப்பது நம் கையில்தான் உள்ளது என்பதை நாம் மறக்கலாகாது. கீழ்ப்படிதலே சிறந்தது!*

வசனம் 102:3
இணை, வ.11 & 23.

"*என் வாழ்நாள்கள் புகையென மறைகின்றன*" -
*இத்தொகுதியின் முதல் திருப்பாடல் தரும் அடிப்படைச் செய்தி*, 90:5-6&9-10. *பொல்லாருக்கு நேரிடுவது*, 37:20, 68:2. *மோசேயின் வேண்டுதல்*, 90:12.

வசனம் 102:3-4
"...*என் எழும்புகள் ... என் இதயம் ...*" -
*உடல் வாட்டம் மட்டுமல்ல, உடலும் உள்ளமும் நெருப்பில் எறியப்பட்டது போன்ற உணர்வு. ஒப்பிடுக*, 22:14; *நீதிமொழிகள்* 14:30, 15:30; *எசாயா* 66:14.

வசனம் 102:4
"... *உண்ண மறந்தேன்*" -
*துயரின் விளைவு, யோபு* 33:20. *மேலும்*, 1 *சாமுவேல்* 1:7; 2 *சாமுவேல்* 12:17.

வசனம் 102:5
"... *பெருமூச்சின் பேரொலி*..." -
*துக்க மிகுதியால், மன அயர்ச்சியால் நேர்வது*, 6:6, *யோபு* 3:24.

வசனம் 102:6
*பாலைநிலப் பறவை* -
OV, *வனாந்தர நாரை*; KJV, pelican of the wilderness, *கூழைக்கடா அல்லது நீர்க் காகம்; எபிரேயத்தில்* kaw-ath, *என்ன பறவை என்பது தெளிவாக இல்லை.*

"*பாழ்நிலத்தின் ஆந்தை*..." -
*எபிரேயத்தில்* koce, *கோப்பை, பறவைகளில் ஆந்தை போன்ற பறவை. ஆந்தை, காகம், கூழைக்கடா போன்ற பறவைகள் யூதர்களுக்குத் தீட்டானவை (லேவியர்* 11:15-18).

*நீர் இருக்கும் இடங்களில் பறவைகள் கூட்டமாக வாழ்வன; ஆனால் பாலைவெளிகளில் வாழும் பறவைகள் தனித்து அல்லது சிறு சிறு கூட்டமாக வாழ்வன. இது மனிதனுக்கும் பொருந்தும்; மகிழ்ச்சியான காலங்களில் சுற்றமும் நட்பும் ஒருவனைச் சூழ்ந்திருக்கும். துயர் அவனைச் சூழும் போது அவன் தனித்து விடப்பட்டு விடுவான்! அப்படிக் கைவிடப்பட்ட நிலையைக் குறிக்கவே, பாலைநிலம், பாழ்நிலம் என்ற சொற்களைத் திருப்பாடகர் குறிப்பிடுகிறார். மேலும் பார்க்க வ.7ஆ.*

வசனம் 102:7
"...*தூக்கமின்றித் தவிக்கிறேன்*" -

*நல்லுறக்கம் ஆண்டவரின் அருட்கொடை,* 3:5, 4:8, 127:2. *ஆனால் துயருற்ற திருப்பாடகரால், மனதில் கேள்விகள் எழும் நிலையில், தூங்க இயலவில்லை.*

*வசனம்* 102:8
"... *என் பெயரைச் சொல்லிப் பிறரைச் சபிக்கின்றனர்*" -
*நம் ஊரில் என்றோ வாழ்ந்த எட்டப்பன் என்னும் பெயரைக் காட்டிக் கொடுப்பவனுக்கு இன்றும் சொல்வது போல்; பார்க்க,* 79:4, 109:25.

*வசனம்* 102:9
*இணை,* 42:3.
*துயர்மிகு வேளைகளில், துக்கம் கடைப்பிடித்தலின் அடையாளம் சாம்பல், எஸ்தர்* 4:1&3; *யோபு* 2:8.

*வசனம்* 102:10
"*நீர் என்னைத் தூக்கி எறிந்து விட்டீர்*" -
*கீழ்ப்படியாமையின் விளைவாகக் கடவுளால் கைவிடப்பட்ட நிலையில் அவரை நேசிப்பவரின் உணர்வு,* 51:11; 2 *அரசர்கள்* 17:19-20.

*வசனம்* 102:11
"...*மாலை நிழல்*..." -
*இருளால் விரைவில் விழுங்கப்படும் மாலை நிழல்,* 109:25, 144:4; *யோபு* 8:9, 14:2; *சபை உரையாளர்* 6:12.

***நிலையற்ற, துயருறும் மானிட வாழ்க்கை குறித்து முதல் பதினோரு வசனங்களில் புலம்பிய திருப்பாடகர், இப்போது முற்றிலும் வேறுபட்ட நிலையில், என்றென்றும் மாறாதவரும் அநாதி காலமாக நிலைத்திருப்பவருமான ஆண்டவரைக் குறித்துப் பாடுகிறார்.***

*வசனம்* 102:12
"... *என்றென்றும் கொலு வீற்றிருக்கின்றீர்*" -
*ஆண்டவரின் தனித்தன்மை, நிலைத்த ஆளுகை. ஆண்டவரின் ஆளுகை குறித்த, இந்தத் தொகுப்பின் ஏனைய திருப்பாடல்களோடு* (93 ~ 99) *இந்தத் திருப்பாடல் இயைந்து செல்கிறது.*

*வசனம்* 102:13-14
*சீயோனின் அழிவு,* 89:38-45.

"...*குறித்த காலம்*..." -
*சிறையிருப்பு முடியும் காலம், எரேமியா* 25:11.

*மேலும் பார்க்க, நாளையும் நேரத்தையும் நிர்ணயிக்கும் ஆண்டவர்,* 75:2; *விடுதலைப் பயணம்* 9:5; 2 *சாமுவேல்* 24:15; *தானியேல்* 11:27&35.

*வசனம்* 102:14
"...*பற்று ... பரிதவிப்பு ...*" -
*பார்க்க, புலம்பல்* 4:1.
*எருசலேமின் ஒவ்வொரு சிறு பொருளும், சிறு நினைவும் சிறைப்பட்ட இஸ்ரயேலரைப் பெரிதும் பரிதவிக்கச் செய்கிறது.*

அவர்களின் மிகப்பெரிய பெருமையைக் குறித்து ஆண்டவர் இயேசு கிறிஸ்து சொன்னதை நினைவில் கொள்ளுங்கள், மாற்கு 13:1-2; மத்தேயு 24:1-2; லூக்கா 21:5-6. யூதர்களை அதிரச் செய்யும் ஓர் இறைவாக்கை அவர் தம் சீடர்களுக்குக் கூறியபோது, பரிதவிப்போடோ பதைபதைப்போடோ சொல்லவில்லை; இறைத் திட்டம் நிறைவேறும் என்கிற உறுதியோடு சொன்னார்.

ஆலயம் உட்பட, இந்த உலகில் எதன் மீதும் பற்று வைக்க வேண்டாம்; இங்கு நாமும் நிலையானவர்கள் அல்ல; நாம் பற்று வைப்பவையும் நிலையானவை அல்ல.

வசனம் 102:15 (OV வ.17)
வேற்றினத்தார் அஞ்சும் ஆண்டவர், 67:7, 76:12, 96:9.

வசனம் 102:16 (OV வ.15)
தாவீதின் நகர் என்னும் சீயோனைக் கட்டி எழுப்பும் ஆண்டவர்; இஸ்ரயேலின் நம்பிக்கை, 51:18, 69:35.

வசனம் 102:17 (OV வ.16)
ஆதரவற்றோருக்கு ஆறுதல் தரும் ஆண்டவர், 10:14&18, 146:9; இணைச் சட்டம் 10:18.

"திக்கற்றவர்கள்..." -
எபிரேயத்தில் ar-awr, இந்த ஓரிடத்தில் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ள சொல், KJV, destitute; ஒன்றுமற்ற, ஒருவருமற்ற நிலை.
இங்கு இவ்வாறு குறிப்பிடப்படுவோர், வ.14ல் குறிப்பிடப்பட்டுள்ள "உம் ஊழியர்", அதாவது சிறைப்பட்ட திருப்பாடகரும் அவரைப் போன்றோரும்.

வசனம் 102:18-22
சீயோனின் எழுச்சி குறித்த எதிர்நோக்கு.

வசனம் 102:18
"...எழுதி வை..." -
பழைய ஏற்பாட்டில் இறையடியாருக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை, விடுதலைப் பயணம் 17:14, 34:27; இணைச் சட்டம் 6:9, 27:3&8; எசாயா 8:1, 30:8; அபக்கூக்கு 2:2.

"...படைக்கப்படவிருக்கும் மக்கள்..." -
இறை வார்த்தையால் பயன்பெறும் வருங்கால மக்கள், 22:30-31, 145:4; இணைச் சட்டம் 29:14-15. இது நமக்கான இறைவாக்கு என்பதில் நாம் மகிழ்வோம்.

வசனம் 102:19 (OV வ.20)
பார்க்க, 14:2, 33:13, 53:2.

வசனம் 102:20 (OV வ.21)
பார்க்க, 79:11,146:7; எசாயா 49:9.

"...சிறைப்பட்டோர்..." -
பாபிலோனுக்குச் சிறைப்பிடித்து இழுத்துச் செல்லப்பட்டோர், 2 அரசர்கள் 24:11,18-19.

"...புலம்பலுக்குச் செவி சாய்ப்பார்" -
பார்க்க, 12:5, 107:6,13,19&28.

வசனம் 102:21-22
இணை, 22:27; எசாயா 2:2-4; மீக்கா 4:1-3; செக்கரியா 8:20-23.

வசனம் 102:23-28
தன் நிலையாமை குறித்துப் புலம்பும் திருப்பாடகர், ஆண்டவருடைய முடிவற்ற ஆளுகையில், தங்கள் வழிமரபினரின் நீடித்து நிலைக்கும் நன்மைகள் குறித்த எதிர்நோக்கோடு நிறைவு செய்கிறார்.

வசனம் 102:25-27
தொடக்கமும் முடிவுமற்ற, படைப்பிற்கு முன்னரே தொடங்கி, என்றென்றைக்குமான ஆண்டவரின் ஆளுகை; எபிரேயருக்கான திருமடலை எழுதியவரின் எடுத்தாளுகை, பார்க்க, எபிரேயர் 1:10-12.

வசனம் 102:27-28
"நீரோ மாறாதவர் ... உம் அடியாரின் பிள்ளைகள் பாதுகாப்புடன் வாழ்வர்" -
ஒப்பிடுக, மலாக்கி 3:6. அவர் வாக்கு மாறாதவர், முடிவற்று நிலைத்திருப்பவர் என்பதால், நாம் மட்டுமல்லாமல், நமக்குப் பின்வரும் நம்முடைய வழிமரபினரும் பாதுகாப்போடு அவரால் பராமரிக்கப்பட்டு களிப்போடு வாழ்வர்.

✝

## 19 திருப்பாடல் 103

*(கடவுளின் அன்பு)*

*தாவீதுக்கு உரியது*
1 என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு!
என் முழு உளமே! அவரது திருப்பெயரை ஏத்திடு!
2 என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு!
அவருடைய கனிவான செயல்கள் அனைத்தையும் மறவாதே!
3 அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கின்றார்;
உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றார்.
4 அவர் உன் உயிரைப் படுகுழியினின்று மீட்கின்றார்;
அவர் உனக்குப் பேரன்பையும் இரக்கத்தையும்
மணிமுடியாகச் சூட்டுகின்றார்.
5 அவர் உன் வாழ்நாளை நலன்களால் நிறைவுறச் செய்கின்றார்;
உன் இளமை கழுகின் இளமையெனப் புதிதாய்ப் பொலிவுறும்.
6 ஆண்டவரின் செயல்கள் நீதியானவை;
ஒடுக்கப்பட்டோர் அனைவருக்கும்
அவர் உரிமைகளை வழங்குகின்றார்.
7 அவர் தம் வழிகளை மோசேக்கு வெளிப்படுத்தினார்;
அவர் தம் செயல்களை இஸ்ரயேல் மக்கள் காணும்படி செய்தார்.
8 ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்;
நீடிய பொறுமையும் பேரன்பும் உள்ளவர்.
9 அவர் எப்பொழுதும் கடிந்து கொள்பவரல்லர்;
என்றென்றும் சினங்கொள்பவரல்லர்.

10 அவர் நம் பாவங்களுக்கு ஏற்ப நம்மை நடத்துவதில்லை;
நம் குற்றங்களுக்கு ஏற்ப நம்மைத் தண்டிப்பதில்லை.
11 அவர் தமக்கு அஞ்சுவோர்க்குக் காட்டும் பேரன்பு
மண்ணினின்று விண்ணளவுபோன்று உயர்ந்தது.
12 மேற்கினின்று கிழக்கு எத்துணைத் தொலைவிலுள்ளதோ,
அத்துணைத் தொலைவிற்கு
நம் குற்றங்களை நம்மிடமிருந்து அவர் அகற்றுகின்றார்.
13 தந்தை தம் பிள்ளைகள்மீது இரக்கம் காட்டுவதுபோல்
ஆண்டவர் தமக்கு அஞ்சுவோர் மீது இரங்குகிறார்.
14 அவர் நமது உருவத்தை அறிவார்;
நாம் தூசி என்பது அவர் நினைவிலுள்ளது.
15 மனிதரின் வாழ்நாள் புல்லைப் போன்றது;
வயல்வெளிப் பூவென அவர்கள் மலர்கின்றார்கள்.
16 அதன்மீது காற்றடித்ததும் அது இல்லாமல் போகின்றது;
அது இருந்த இடமே தெரியாமல் போகின்றது.
17 ஆண்டவரது பேரன்போ
அவருக்கு அஞ்சுவோர்மீது என்றென்றும் இருக்கும்;
அவரது நீதியோ
அவர்களின் பிள்ளைகளின் பிள்ளைகள்மீதும் இருக்கும்.
18 அவருடைய உடன்படிக்கையைக் கடைப்பிடித்து
அவரது கட்டளையின்படி நடப்பதில்
கருத்தாய் இருப்போர்க்கு அது நிலைக்கும்.
19 ஆண்டவர் தமது அரியணையை
விண்ணகத்தில் நிலைநிறுத்தியுள்ளார்;
அவரது அரசு அனைத்தின்மீதும் பரவியுள்ளது.
20 அவர்தம் சொற்கேட்டு நடக்கும் வலிமைமிக்கோரே!
ஆண்டவரின் தூதர்களே!
அவரைப் போற்றுங்கள்.
21 ஆண்டவரின் படைகளே!
அவர் திருவுளப்படி நடக்கும் அவர்தம் பணியாளரே!
அவரைப் போற்றுங்கள்.
22 ஆண்டவரின் ஆட்சித் தலத்தில் வாழும்
அனைத்துப் படைப்புகளே! ஆண்டவரைப் போற்றுங்கள்!
என்னுயிரே! ஆண்டவரைப் போற்றிடு!

திருப்பாடல் 103:1-22

**சிந்தனைக்கு**

களிப்பூட்டும் திருப்பாடல், மகிழ்ச்சி தரும் திருப்பாடல் என்று மட்டுமே ஸ்பர்ஜின் உட்படப் பலரும் இந்தத் திருப்பாடல் குறித்துச் சொல்கின்றனர். தொடுவானம் வரை எங்கும் மேகமே இல்லை; இசையில் துன்பத்தின் சாயலில் எந்தக் குறியீடும் இல்லை என்கிறார் மெக்லெரென். வேறெந்த உணர்வுக்கும் இடமற்ற முழுமையான அந்த மகிழ்ச்சிதான் என்ன? மன்னிப்பின் மகிழ்ச்சியே முழுமையான மகிழ்ச்சி! (வ.3,8-12&17) பாரத்தையும் அழுத்தத்தையும் உண்டாக்கும் பாவத்திலிருந்து முழுமையாக மன்னிப்பைப் பெற்ற உள்ளத்தின் மகிழ்ச்சி - அந்த மகிழ்ச்சிக்கு ஈடு இணை எதுவும் இல்லை. இதை ஆன்மாவில் உணர்ந்தவர்கள் இந்தப் பாடலில் களிகூருங்கள்!

இந்தத் தொகுப்பில் உள்ள இரண்டாம் மற்றும் இறுதி தாவீதிய திருப்பாடல். தன் வாழ்நாளின் இறுதி வரை, கடவுளின் மன்னிப்பில் மகிழ்ந்த தாவீதைப் போல வேறு எவரும் இருக்கக் கூடுமோ! தன்னால் முடிக்க முடியாமல், சாலமோனுக்குக் கையளித்த காரியங்கள் தாவீதுக்கு உண்டு; ஆனால் ஆண்டவரோடு அவருக்கு இருந்த எல்லையற்ற அன்பின் நல்லுறவில் பூரண நிறைவே இருந்தது. எனவே தாவீது தனது உள்ளத்திற்கு உறுதியோடு முதலிரு வசனங்களை உரைக்கிறார். நமது ஜெபங்களின் நிறைவாக இந்த இரண்டு வசனங்களை நாம் தவறாமல் சொல்கிறோம்; நாம் ஒவ்வொருவரும் அவரவர் உள்ளத்திற்குச் சொல்கிறோமா?

தாவீதுக்கு உரியது என்ற சுருக்கமான தலைப்பு; காலம் மற்றும் நோக்கம் குறித்த செய்தி ஏதும் தலைப்பில் இல்லை. நிலையாமை குறித்துப் பேசும் தாவீது, தனது வாழ்க்கையின் பிற்பகுதியில் இந்தப் பாடலை எழுதி இருக்கிறார் என்பது ஒரு கருத்து. மேலும் எந்தப் பாவம் மன்னிக்கப்பட்ட பிறகு எழுதினார் அல்லது இவ்வாறு மன்னிப்பில் மகிழ்ந்த தாவீது பிறகு பாவம் செய்யவில்லையா போன்ற கேள்விகள் பொருளற்றவை; உயிருள்ள வரை எல்லா மனிதரும் விழக்கூடியவர்களே; ஆனால் ஆண்டவரோ விழுந்த எவரையும் தூக்கி நிலைநிறுத்த வல்லவர்; இதனையே தாவீதின் வாழ்க்கை நமக்குக் கற்றுத் தருகிறது. எனவே இறுதி வரை கடவுளைப் பற்றிக் கொண்டு வாழ்தலே நம்மை அவருக்குள் நிலைநிறுத்தும்.

நேரடியாக மோசேயின் பெயர் (வ.7) குறிப்பிடப்பட்டுள்ளது போக, மோசேயின் வழியாக வெளிப்பட்ட இறைத் தன்மைகள் பலவும் இத்திருப்பாடலில் நினைவுகூரப்பட்டுள்ளன, வ.3, 8, 11-14, 17-18.

அமைப்பு:
வ.1-5, கடவுள் அருளிய எண்ணி முடியாத நன்மைகளுக்காக அவரைப் போற்ற உள்ளத்திற்கு அழைப்பு
வ.6-12, அவர்தம் மக்களான இஸ்ரயேலருக்கு அருளப்பட்ட இரக்கம்
வ.13-18, கடவுளின் பிள்ளைகளுக்கு எப்போதும் அருளப்படும் இரக்கம்
வ.19-22, ஆண்டவரின் அரசில் வாழும் அனைவரும் அவரைப் போற்ற அழைப்பு

வசனம் 103:1-5
நமக்கு ஆசி அருளும் ஆண்டவருக்கு (வ.3-5), நாம் ஆசி வழங்கல் (வ.1-2).

போற்றிடு, OV - ஸ்தோத்திரி, KJV - bless; எபிரேயத்தில் baw-rak; இந்தச் சொல், வாழ்த்து, துதி, வணங்கு, பாராட்டு என்று பொருள்படும். ஆங்கில மொழிபெயர்ப்புகள் பலவும், "Bless the Lord" என்றே சொல்கின்றன. நாம் ஆண்டவருக்கு ஆசி வழங்க முடியுமா? "உம்முடைய ராஜ்யம் வருவதாக" என்று சொல்லும் போது அது ஆசியா, அல்லவா!

வசனம் 103:1
"என் உயிரே" -
எபிரேயத்தில் neh-fesh, உயிர், மூச்சு, ஆன்மா என்று பொருள்படும்.

"என் முழு உளமே" -
ஆங்கில மொழிபெயர்ப்புகள் பலவும், keh-reb (within / among) என்ற எபிரேயச் சொல்லை, "என்னுள் உள்ள எல்லாம்" என்றே பொருள் கொண்டுள்ளன.

"மனம் ஆர்வமுடையதுதான்; ஆனால் உடல் வலுவற்றது" (மத்தேயு 26:41) என்பதால் நமக்குள் சோர்வுறும் அனைத்துக் கருவிகளும் வலுவடைய ஆண்டவரைப் போற்றித் தொழுதல் நன்று.

வசனம் 103:2
"...மறவாதே" -
தேவைகள் நிறைந்த உலகில் ஆண்டவர் அருளும் நன்மைகளை மறத்தல், நமது மிகப்பெரும் குறை; அன்றே மீண்டும் மீண்டும் எச்சரித்த மோசே, இணைச் சட்டம் 4:9, 6:12, 8:11.
தாவீது தனது உள்ளத்திற்கு கொடுத்த எச்சரிக்கையைப் போல, நாம் எச்சரிக்கிறோமா?

வசனம் 103:3-5
தாவீது நினைவூட்டும் ஆண்டவர் அருளும் ஆசிகள் -
* மன்னிப்பு
* குணப்படுத்தல்
* தப்புவித்தல்
* வெற்றியளித்தல்
* நாள்தோறும் நலன் தருதல்
* முதுமையிலும் ஆற்றலளித்தல்
முதலிரு வசனங்களை மனனம் செய்து வாழ்நாளெல்லாம் சொல்லும் நாம், கூடவே இந்த மூன்று வசனங்களையும் மனனம் செய்து சொல்லுதல் சிறப்பாகும்.

வசனம் 103:3
"...மன்னிக்கின்றார்" -
இஸ்ரயேலரை மன்னித்த ஆண்டவர், விடுதலைப் பயணம் 34:7. ஆசிகளில் முதன்மையானது மன்னிப்பே!

"...குணமாக்குகின்றார்" -
விடுதலைப் பயணம் 15:26.

வசனம் 103:4
முடிசூட்டும் ஆண்டவர், 8:5, 65:11.

வசனம் 103:5
"உன் இளமை கழுகின் இளமையெனப் புதிதாய்ப் பொலிவுறும்" - இணை, எசாயா 40:30-31.

வசனம் 103:6-18
தம் மக்கள் மீது வெளிப்பட்ட ஆண்டவரின் அன்பும் அருளும்.

வசனம் 103:6-8
மோசேயுடன் ஆண்டவர் செய்த உடன்படிக்கையின் நலன்கள் (விடுதலைப் பயணம் 34:6-7அ):-
* இஸ்ரயேலுக்கு நீதி
* ஒடுக்கப்பட்டோருக்கு உரிமைகள்
* மோசேயின் வழியாக தமது இரக்கம், அருள், நீடிய பொறுமை, பேரன்பு போன்றவற்றை வெளிப்படுத்தினார்.

வசனம் 103:6
இணை, 12:5, 97:2, 146:7.

வசனம் 103:7
மோசேயின் வேண்டுதல், விடுதலைப் பயணம் 33:13. ஆபிரகாமுக்கும் மோசேக்கும் தமது வழிகளை வெளிப்படுத்திய ஆண்டவர், நமக்கும் அவ்வாறே செய்வார், 25:4, 27:11, 86;11.

வசனம் 103:8
இணை, 86:15, 111:4, 145:7; விடுதலைப் பயணம் 34:6; நெகேமியா 9:17; யோவேல் 2:13.

வசனம் 103:9-12
மன்னிப்பில் சிறப்பான தமது குணநலன்களை வெளிப்படுத்தும் ஆண்டவர்:
* தமது சினம் வெளிப்படத் தாமதிக்கிறார்;
* வெளிப்பட்ட தமது சினம் நீடிக்க அவர் ஒருபோதும் விடுவதில்லை;
* நமது குற்றங்கள் பெரிதாயினும், அதைவிட அவரது இரக்கம் மிகவும் பெரியது;
* வருந்துவோரின் குற்றங்களை அகற்றுகிறார்.

வசனம் 103:10
இணை, எஸ்ரா 9:13.

வசனம் 103:11-12
நமது பாவங்களைத் துடைத்தெறியும் கடவுள், எசாயா 1:18, 43:25; எரேமியா 50:20; மீக்கா 7:18-20. அழகிய கவிதையாக, எசாயா 55:6-9.

வசனம் 103:13-18
நிலையற்ற நம்மோடு, வலிமையற்ற நம்மோடு, இரக்கம் கொண்டவராக ஆண்டவர் ஏற்படுத்திய நிலையான உடன்படிக்கை.

வசனம் 103:13
மனதுருக்கம் கொண்ட தந்தையாகத் திகழும், பேராற்றலும் பேரருளும் கொண்ட கடவுள், விடுதலைப் பயணம் 4:22-23; இணைச் சட்டம் 8:5; 2 சாமுவேல் 7:14; நீதிமொழிகள் 3:12; மலாக்கி 2:10.

"தந்தையே" என்று என்றுமுள கடவுளை அழைத்த கிறிஸ்து இயேசு, நமது விண்ணகத் தந்தை என்றே அவரை அழைக்க நமக்குக் கற்பிக்கிறார், மத்தேயு 6:1&9.

வசனம் 103:14
"தூசி" -
பார்க்க, 90:3.
சாவைத் தருவித்த முதலாம் பாவத்தின் சாபத்தை (தொடக்க நூல் 3:19) நினைவுகூரும் தாவீது.

வசனம் 103:15-16
"புல்" -
மனித வாழ்வின் நிலையாமையைக் குறிப்பது, 90:5-6, 92:7, 102:4&11.

வசனம் 103:17
"பேரன்பு" -
OV, கிருபை; KJV, mercy.
பொதுவாக, கிருபை அல்லது பேரன்பு என்று சொல்லப்படுவது, khane என்ற எபிரேயச் சொல்; மூலத்தில் இங்கு உள்ள சொல், kheh-sed; இரக்கம், கருணை, பரிவு என்று பொருள்படும்.

இந்தத் திருப்பாடலின் பாடுபொருளே இரக்கம் என்று சொல்லலாம், வ.4, 8 & 13. எனவே இங்கு இரக்கம் என்ற பொருளே சிறப்பு.

"என்றென்றும்" -
ஊழி ஊழியாய் என்றிருத்தல் சிறப்பு, 41:13, 90:2, 106:48. எபிரேய மொழியில், o-lawm என்பது, மறைந்து போன, மனதில் எண்ணமுடியாத அளவுக்கு, முந்தைய அல்லது பிந்தைய காலம்.

வசனம் 103:18
ஒப்பிடுக, விடுதலைப் பயணம் 19:5; இணைச் சட்டம் 7:9.

வசனம் 103:19-22
கடவுளின் அன்பர்களும் வானவரும் படைப்பு அனைத்தும் போற்றுகின்ற அவரைப் போற்ற, தன் ஆன்மாவிற்கு அறிவுறுத்தும் தாவீது.

வசனம் 103:19
"அவரது அரசு அனைத்தின் மீதும் பரவியுள்ளது" -
படைப்பு அனைத்தையும் ஆளுகை செய்யும் ஆண்டவர்.

வசனம் 103:20-21
"வலிமை மிக்கோர்... வான் தூதர்... ஆண்டவரின் படைகள்..." -
பார்க்க, 78:25, 104:4, 148:2; தொடக்க நூல் 32:1-2; யோசுவா 5:13-15; 1 அரசர்கள் 22:19; கடவுளைத் தொழுது கொள்வோரின் எல்லைகளை விண்ணகம் வரை விரிவுபடுத்தும் தாவீது.

வசனம் 103:22
"ஆண்டவரின் ஆட்சித் தலத்தில் வாழும் அனைத்துப் படைப்புகள்" -
அடுத்து வரும் திருப்பாடலுக்கு முன்னுரை. தொடங்கிய வண்ணம் நிறைவுறும் திருப்பாடல் (வ.1அ & வ.22ஆ).

சுடரொளி வீசும் இந்தத் திருப்பாடலின் முதலிரு வசனங்களும் நமது சிறுவயதிலேயே நமக்குக் கற்பிக்கப்பட்டவை. எசாயா 6 மற்றும் திருவெளிப்பாடு 4ல் நாம் காண்கிறபடி வானவர் போற்றும் புகழ்ப்பாடல் இதுவல்ல; மாறாக, இந்த உலகப் பயணத்தில், அலைக்கழிக்கும் வாழ்க்கையில், கடவுளின் பேரிரக்கத்தால் மீட்கப்பட்டவரின் பாடல். ஓட்டத்தின் இறுதிமட்டும், அந்த இரக்கத்தின் உறுதியில் அலைபாயக் கூடிய தன் உள்ளத்தை நம்பிக்கையின் அமைதியில் அமரச் செய்யும் பாடல். நல் நம்பிக்கையால் அவருடைய கிருபையின் வழியே மீட்கப்பட்டோம்; அதே நம்பிக்கையால் ஒவ்வொரு நாளும் காக்கப்படுகிறோம்; விண்ணரசின் எதிர்நோக்கில் வாழ அழைக்கப்பட்டோம்; ஆதலால் பாடுவோம்: "என் ஆத்துமாவே! கர்த்தரை ஸ்தோத்திரி!"

## 19 திருப்பாடல் 104

*(படைப்பின் மேன்மை)*

1 என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு!
என் கடவுளாகிய ஆண்டவரே!
நீர் எத்துணை மேன்மைமிக்கவர்!
நீர் மாண்பையும் மாட்சியையும் அணிந்துள்ளவர்.
2 பேரொளியை ஆடையென அணிந்துள்ளவர்;
வான்வெளியைக் கூடாரமென விரித்துள்ளவர்;
3 நீர்த்திரள்மீது உமது உறைவிடத்தின்
அடித்தளத்தை அமைத்துள்ளவர்;
கார் முகில்களைத் தேராகக் கொண்டுள்ளவர்;
காற்றின் இறக்கைகளில் பவனி வருகின்றனவர்!
4 காற்றுகளை உம் தூதராய் நியமித்துள்ளவர்;
தீப்பிழம்புகளை உம் பணியாளராய்க் கொண்டுள்ளவர்.
5 நீவீர் பூவுலகை அதன் அடித்தளத்தின்மீது நிலைநாட்டினீர்;
அது என்றென்றும் அசைவுறாது.
6 அதனை ஆழ்கடல் ஆடையென மூடியிருந்தது;
மலைகளுக்கும் மேலாக நீர்த்திரள் நின்றது;
7 நீவீர் கண்டிக்கவே அது விலகி ஓடியது;
நீவீர் இடியென முழங்க, அது திகைப்புற்று ஓடியது;
8 அது மலைகள்மேல் ஏறி,
பள்ளத்தாக்குகளில் இறங்கி,
அதற்கெனக் குறித்த இடத்தை அடைந்தது;
9 அது மீறிச்செல்லாதவாறு அதற்கு எல்லை வகுத்தீர்;
பூவுலகை அது மீண்டும் மூடிவிடாதபடி செய்தீர்;
10 பள்ளத்தாக்குகளில் நீருற்றுகள் சுரக்கச் செய்கின்றீர்;
அவை மலைகளிடையே பாய்ந்தோடும்;
11 அவை காட்டு விலங்குகள் அனைத்திற்கும் குடிக்கத் தரும்;
காட்டுக் கழுதைகள் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளும்;
12 நீருற்றுகளின் அருகில்
வானத்துப் பறவைகள் கூடுகட்டிக் கொள்கின்றன;
அவை மரக்கிளைகளினின்று
இன்னிசை இசைக்கின்றன;
13 உம் மேலறைகளினின்று
மலைகளுக்கு நீர் பாய்ச்சுகின்றீர்;
உம் செயல்களின் பணியால்
பூவுலகம் நிறைவடைகின்றது.
14 கால்நடைகளுக்கெனப் புல்லை முளைக்கச் செய்கின்றீர்;
மானிடருக்கெனப் பயிர்வகைகளை வளரச் செய்கின்றர்;
இதனால் பூவுலகினின்று
அவர்களுக்கு உணவு கிடைக்கச் செய்கின்றீர்;
15 மனித உளத்திற்கு மகிழ்ச்சியூட்டத் திராட்சை இரசமும்,
முகத்திற்குக் களையூட்ட எண்ணெயும்
மனித உள்ளத்திற்குப் புத்துணர்வூட்ட அப்பமும் அளிக்கின்றீர்.
16 ஆண்டவரின் மரங்களுக்கு
- லெபனோனில் அவர் நட்ட கேதுரு மரங்களுக்கு -

நிறைய நீர் கிடைக்கின்றது.
17 அங்கே பறவைகள் கூடுகள் கட்டுகின்றன;
தேவதாரு மரங்களில் கொக்குகள் குடியிருக்கின்றன.
18 உயர்ந்த மலைகள் வரையாடுகளுக்குத் தங்குமிடமாகும்;
கற்பாறைகள் குழிமுயல்களுக்குப் புகலிடமாகும்.
19 காலங்களைக் கணிக்க நிலவை நீர் அமைத்தீர்;
ஆதவன் தான் மறையும் நேரத்தை அறிவான்.
20 இருளை நீர் தோன்றச் செய்யவே, இரவு வருகின்றது;
அப்போது, காட்டு விலங்குகள் அனைத்தும் நடமாடும்.
21 இளஞ்சிங்கங்கள் இரைக்காகக் கர்ச்சிக்கின்றன;
அவை இறைவனிடமிருந்து தங்கள் உணவைத் தேடுகின்றன.
22 கதிரவன் எழவே அவை திரும்பிச் சென்று
தம் குகைகளுக்குள் படுத்துக்கொள்கின்றன.
23 அப்பொழுது மானிடர் வேலைக்குப் புறப்பட்டுச் செல்கின்றனர்;
அவர்கள் மாலைவரை உழைக்கின்றனர்.
24 ஆண்டவரே! உம் வேலைப்பாடுகள் எத்தனை எத்தனை!
நீர் அனைத்தையும் ஞானத்தோடு செய்துள்ளீர்!
பூவுலகம் உம் படைப்புகளால் நிறைந்துள்ளது.
25 இதோ! பரந்து விரிந்து கிடக்கும் கடல்கள்;
அவற்றில் சிறியனவும் பெரியனவுமாக வாழும்
உயிரினங்கள் எண்ணிறந்தன.
26 அங்கே கப்பல்கள் செல்கின்றன;
அங்கே துள்ளிவிளையாட லிவியத்தானைப் படைத்தீர்!
27 தக்க காலத்தில் நீர் உணவளிப்பீர்
என்று இவையெல்லாம் உம்மையே நம்பியிருக்கின்றன.
28 நீர் கொடுக்க, அவை சேகரித்துக் கொள்கின்றன;
நீர் உமது கையைத் திறக்க,
அவை நலன்களால் நிறைவுறுகின்றன.
29 நீர் உமது முகத்தை மறைக்க, அவை திகிலடையும்;
நீர் அவற்றின் மூச்சை நிறுத்திவிட்டால்,
அவை மாண்டு மறுபடியும் புழுதிக்கே திரும்பும்.
30 உமது ஆவியை நீர் அனுப்ப,
அவை படைக்கப்பெறுகின்றன;
மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர்.
31 ஆண்டவரின் மாட்சி என்றென்றும் நிலைத்திருப்பதாக!
அவர் தம் செயல்களைக் குறித்து மகிழ்வாராக!
32 மண்ணுலகின்மீது அவர்
தம் பார்வையைத் திருப்ப, அது நடுங்கும்;
மலைகளை அவர் தொட, அவை புகை கக்கும்.
33 நான் வாழும் நாளெல்லாம்
ஆண்டவரைப் போற்றிப் பாடுவேன்;
என்னுயிர் உள்ளவரையிலும்
என் கடவுளுக்குப் புகழ் சாற்றிடுவேன்.
34 என் தியானப் பாடல் அவருக்கு உகந்ததாய் இருப்பதாக!
நான் ஆண்டவரில் மகிழ்ச்சி கொள்வேன்.
35 பாவிகள் பூவுலகினின்று ஒழிந்து போவார்களாக!
தீயோர்கள் இனி இல்லாது போவார்களாக!

என் உயிரே! நீ ஆண்டவரைப் போற்றிடு! அல்லேலூயா!

திருப்பாடல் 104:1-35

**சிந்தனைக்கு**

இனிமைமிகு திருப்பாடலுக்கு அடுத்து ஓர் எழில்மிகு திருப்பாடல். முந்தைய திருப்பாடலில் இரக்கத்தின் ஆண்டவராக வெளிப்பட்டவர், இப்போது படைப்பின் ஆண்டவராக வெளிப்படுகிறார்; தொடர்ந்து வரும் அடுத்த திருப்பாடலில் வரலாற்றின் ஆண்டவராக வெளிப்படுகிறார்.

செப்டுவஜிண்ட் மற்றும் வல்கேட் (மேலும் எத்தியோப்பிய, அரேபிய, சிரியாக்) மொழிபெயர்ப்புகள், இத்திருப்பாடலை தாவீதுக்கு உரியது என்று சொல்கின்றன. ஆனால் எபிரேய மூலத்திலும் கல்தேய மொழிபெயர்ப்பிலும், தலைப்பு ஏதும் இல்லை (ஆடம் கிளார்க்). முந்தைய திருப்பாடலின் தொடக்கமும் முடிவும், இந்தத் திருப்பாடலின் தொடக்கமும் முடிவும் ஒத்து அமைகின்றன. 103:22ன் முழு விரிவாக இந்தத் திருப்பாடல் அமைகிறது.

படைப்பின் ஒழுங்கைத் தொடக்க நூல் பேசுகிறது என்றால் அதன் அழகை இந்தத் திருப்பாடல் பேசுகிறது. உலகம் உயிர் பெற்றதன் உரைநடை தொடக்க நூல் 1 என்றால், அந்த உயிர்ப்பின் கவிதை இந்தத் திருப்பாடல். இரண்டுக்கும் இடையே உள்ள ஒற்றுமை எதுவென்றால், படைக்கப்பட்ட அனைத்தும் கடவுளின் கைவேலைப்பாடு என்பதே! படைப்பை வழிபடும் உலகில், இந்தத் திருப்பாடல் வழியாக, படைத்தவரை முதன்மைப்படுத்துகிறார் திருப்பாடகர். 🕎

அமைப்பு:
வ.1-4, விண்ணகத்தில் வீற்றிருக்கும் ஆண்டவர்
வ.5-12, நீர் மற்றும் நிலத்தின் தோற்றம்
வ.13-18, பசுமைத் தாவரங்களின் பராமரிப்பு
வ.19-23, இரவு பகலின் இயக்கம்
வ.24-26, கடல்களில் இயக்கம்
வ.27-30, உயிரினங்களோடு ஆண்டவரின் உறவு
வ.31-32, உயிரற்றவையோடு ஆண்டவரின் உறவு
வ.33-34&35இ, படைத்தவரைப் போற்றும் திருப்பாடகர்
வ.35அ&ஆ, படைத்தவரோடும் படைப்போடும் முரண்படும் மனிதர்
🕎

வசனம் 104:1
"என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு!" -
இணை, 103:1அ&22இ; மேலும் வ.35இ.

"...மாண்பையும் மாட்சியையும்..." -
ஆண்டவருக்கும் அவருடைய சாயலில் ஆளுகை செய்யும் அரசருக்கும் குறிப்பிடப்படுவன, 21:5, 45:3, 96:6, 111:3, 145:5-12.

வசனம் 104:2
"பேரொளி" -
காரிருளைத் தமக்குத் திரையாக ஆக்கிக் கொண்ட ஆண்டவர் (18:11), ஒளியை ஆடையாக உடுத்திக் கொண்டிருக்கிறார் (1 தீமொத்தேயு 6:16).

"...வான்வெளியைக் கூடாரமென விரித்துள்ளீர்" -
இணை, எசாயா 40:22.

வசனம் 104:3
விண்ணகத்தைத் தமது உறைவிடமாக அமைத்துக் கொண்ட ஆண்டவர், ஆமோஸ் 9:6; மேலும், 115:16; 1 அரசர்கள் 8:27.

"கார்முகில்களைத் தேராக..." -
இணை, 68:4.

வசனம் 104:4
வான்தூதரை விட இறைமகன் இயேசு மேன்மையானவர் என்று உறுதிப்படுத்த, மேற்கோளாக எபிரேயர் 1:7.

"தீப்பிழம்புகள் உம் பணியாளர்..." -
பார்க்க, 1 அரசர்கள் 18:24&38; 2 அரசர்கள் 1:10. இறைவாக்காக, எசாயா 66:15. இறைப் பிரசன்னமாக, விடுதலைப் பயணம் 3:2.

வசனம் 104:5
"அடித்தளம்" -
24:2.

என்றென்றும் அசைவுறாது -
93:1. நிலம் என்றென்றும் அசையாமல் நிற்கும் என்று இதற்குப் பொருள் அல்ல; இந்த நிலம் என்றென்றும் நிலையானது என்றும் பொருள் அல்ல. ஆண்டவர் இந்த நிலத்தைப் படைத்தவராதலால், என்றென்றும் அதனைப் பாதுகாப்பார் என்பதுவே இங்கு சொல்லப்படுவது.

வசனம் 104:6-8
நீர்த் திரள் ஆறுகளாக உருவெடுத்து நிலமெங்கும் ஓடுதல்.

வசனம் 104:6
பார்க்க, தொடக்க நூல் 1:2&9-10.

வசனம் 104:7
இயற்கையின் மீது ஆளுகை செய்யும் ஆண்டவர், 18:15, 77:16-19, 106:9.
இயற்கையைக் கடிந்து கொள்ளும் ஆண்டவர், மத்தேயு 8:26; மாற்கு 4:39; லூக்கா 8:25.

வசனம் 104:9
நீர்த்திரளுக்கு எல்லை வைத்த ஆண்டவர், யோபு 38:8-11.

மீண்டும் நிலத்தை நீர் மூடிவிடாதபடி செய்த ஆண்டவர்: நீரால் நிறைந்த உலகு என்ற பழைய நிலைக்குத் திரும்பிவிடாதவாறு எல்லைகளை வரையறுத்தார், தொடக்க நூல் 1:2&9-10. அதேபோல, பெருவெள்ளம் வடிந்த பிறகு, தொடக்க நூல் 9:11-15.

வசனம் 104:10-13
நிலத்தில் திரண்டுள்ள நீருக்கு எல்லைகளை வகுத்த ஆண்டவர், உயிருள்ள அனைத்திற்கும் அதுவே ஆதாரம் என்பதால், எல்லாத் தேவைகளுக்கும் அதனைப் பகிர்ந்து அளிக்கிறார்.

வசனம் 104:11
"...*காட்டு விலங்குகள்... காட்டுக் கழுதைகள்...*" -
*மனிதரால் வளர்க்கப்படும் விலங்குகளை அவர்களே பராமரிப்பர்; ஆனால் காட்டு விலங்குகள் தங்களது நீர்த் தேவைக்கு என்ன செய்யும்? அவற்றைப் பராமரிக்கும் ஆண்டவரே அவற்றின் நீர்த் தேவையைத் தீர்த்து வைக்கிறார்.*

வசனம் 104:13
"...மேலறைகள்..." -
*வானில் மிதக்கும் மேகங்கள். மலைகளுக்கு அவையே நீர் பொழிகின்றன. நிலத்தைப் பண்படுத்தி நீர் பாய்ச்சும் விவசாயியின் பணியோடு இங்கு ஆண்டவர் ஒப்பிடப்படுகிறார்.*

வசனம் 104:14-16
*விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் உணவாகும் தாவரங்களை வளரச் செய்யும் ஆண்டவர்.*

வசனம் 104:15
"...*முகத்திற்குக் களையூட்ட எண்ணெய்*..." -
*ஒலிவ எண்ணெய்.*

வசனம் 104:17-18
*உணவும் உறைவிடமும் தந்து எண்ணற்ற உயிரினங்களைப் பாதுகாத்துப் பராமரிக்கும் ஆண்டவர்.*

"...கொக்கு ...*குழி முயல்*..." -
*தீட்டானவை என்று சொல்லப்படும்* (லேவியர் 11:5&19; *இணைச் சட்டம்* 14:7&18) *உயிரினங்களைப் பாராமரிக்கும் ஆண்டவர்.*

வசனம் 104:18
"...*வரையாடு*..." -
*மனிதரிடமிருந்து தனித்து வாழும் விலங்கினம்.*

வசனம் 104:19-23
*நான்காம் நாளின் படைப்பு, தொடக்க நூல்* 1:14-19.
*விலங்கினங்கள் நடமாட இரவும், மனிதர் பணிபுரியப் பகலும் அமைக்கப்படுகின்றன. பகலாயினும் இரவாயினும் தமது தனித்துவமான ஆளுமையில் வெளிப்படும் ஆண்டவர், எசாயா* 45:7; *ஆமோஸ்* 5:8.

வசனம் 104:21 & 27-28
*குடிமைப்படுத்தப்பட்ட உயிரினங்கள் மனிதருடையவை எனில், எண்ணிலடங்கா ஏனைய உயிரினங்கள் அனைத்தும் ஆண்டவருடையவை; அவரே அவற்றைப் பராமரிக்கிறார், பாதுகாக்கிறார், மத்தேயு* 6:26-30. மேலும் *பார்க்க,* 145:15, 147:9.

வசனம் 104:23
"... *உழைக்கின்றனர்*" -
*உழவு, சேவைகள், அடிமைப் பணிகள், இதர வேலைகள், ஊழியம் என மனிதரின் அனைத்து வேலைகளையும் குறிக்கும் சொல்.*

வசனம் 104:24
*படைப்பில் ஆண்டவரின் ஞானம், நீதிமொழிகள்* 3:19, 8:22-31; *எரேமியா* 10:12, 51:15.

*ஆண்டவரது படைப்பின் பரிமாணங்கள் அனைத்தையும் உணர்ந்தவராக திருப்பாடகரின் புகழ்ச்சி.*

வசனம் 104:25-26
*பரந்து விரிந்த கடல் உலகு.*

வசனம் 104:27-29
"*...நீர் ...நீர் ...நீர் ...நீர் ...நீர்*" -
*நம்மைப் பொல் இல்லாமல், கடவுளையே சார்ந்து, இயற்கையின் ஒழுங்கின்படி வாழும் உயிரினங்கள் என்பதைத் திருப்பாடகர் உணர்த்துகிறார்.*

வசனம் 104:30
"*உமது ஆவி...*" -
*பார்க்க,* 51:10-11. *மண்ணுலகில் உயிரினங்கள் புதுப்பிக்கப்பட, தமது ஆவியை அருளும் ஆண்டவர்.*

வசனம் 104:31
*தமது படைப்பில் நிறைவோடு மகிழ்வுறும் ஆண்டவர், தொடக்க நூல்* 1:31; *நீதிமொழிகள்* 8:30.

வசனம் 104:32
*ஆண்டவரது பார்வையில் நடுங்கும் மண்ணுலகு, தொட்டால் புகையும் மலைகள் - படைப்பின் ஆண்டவர் மட்டுமல்ல, அவரே வியப்பூட்டும் திகைப்பூட்டும் அச்சுறுத்தும் ஆண்டவர்; சீனாய் மலையில் காட்சி தரும் ஆண்டவர்,* 144:5; *விடுதலைப் பயணம்* 19:18.

வசனம் 104:34
*தியானப் பாடல்* -
*திருப்பாடகரின் தியானம், ஆண்டவரின் வியத்தகு படைப்பின் மீது; அது ஆண்டவர் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் இருக்க வேண்டும் என்று அர்ப்பணிக்கிறார்.*

*நமது தியானம் ஆண்டவர் ஏற்கும் வகையில் இருக்கிறதா?*

வசனம் 104:35
*இனிமையும் எழிலும் நலன்களும் நிறைந்த மண்ணுலகில் பாவிகளுக்கும் தீயோருக்கும் இடமேது?*

"*அல்லேலூயா*" -
*பைபிளில் முதன் முதலாவதாக இங்கு இடம்பெறும் அல்லேலூயா, அடுத்த இரண்டு திருப்பாடல்களிலும் தொடர்ந்து இடம் பெறுகிறது!*

🕎

*படைப்பின் கடவுளான ஆண்டவர், இயற்கையில் எல்லாருக்கும் எல்லாவற்றையும் வைத்திருக்கிறார்; ஆனால் தனக்கே எல்லாம் என்னும் ஒவ்வொருவரின் பேராசையே மண்ணுலகைச் சூறையாடுகிறது. திருப்பாடகரின் இறுதிச் சொற்கள் போல, நமக்கும் அவ்வாறே தோன்றுகிறது: பாவம் நுழையாத ஏதேன் தோட்டம் - இதுவே திருப்பாடகரின் விருப்பமாக இறுதியில் வெளிப்படுகிறது.*
*படைப்பில் அனைத்தும் மிகவும் நன்றாக இருக்க, பாவமும் தீமையும் இல்லாத வாழ்க்கை வாழ, படைப்பில் சிறப்பிடம் பெற்ற மனிதர்களாகிய நாம் எடுக்கும் முனைப்புதான் என்ன?*

✝

## 19 திருப்பாடல் 105

(கடவுளும் அவர்தம் மக்களும்)
(1 குறிப்பேடு 16:8-22)

1 ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்!
அவர்தம் பெயரைச் சொல்லி வழிபடுங்கள்!
அவர்தம் செயல்களை மக்களினங்கள் அறியச் செய்யுங்கள்.
2 அவருக்குப் பாடல் பாடுங்கள்;
அவரைப் புகழ்ந்தேத்துங்கள்!
அவர்தம் வியத்தகு செயல்கள்
அனைத்தையும் எடுத்துரையுங்கள்!
3 அவர்தம் திருப்பெயரை மாட்சிப்படுத்துங்கள்;
ஆண்டவரைத் தேடுவோரின் இதயம் அக்களிப்பதாக!
4 ஆண்டவரையும் அவரது ஆற்றலையும் தேடுங்கள்!
அவரது திருமுகத்தை இடையறாது நாடுங்கள்!
5 அவர் செய்த வியத்தகு செயல்களை நினைவு கூருங்கள்!
அவர்தம் அருஞ்செயல்களையும்,
அவரது வாய் மொழிந்த நீதித் தீர்ப்புகளையும்
நினைவில் கொள்ளுங்கள்.
6 அவரின் ஊழியராம் ஆபிரகாமின் வழிமரபே!
அவர் தேர்ந்துகொண்ட யாக்கோபின் பிள்ளைகளே!
7 அவரே நம் கடவுளாகிய ஆண்டவர்!
அவரின் நீதித்தீர்ப்புகள் உலகம் அனைத்திற்கும் உரியன.
8 அவர் தமது உடன்படிக்கையை
என்றென்றும் நினைவில் கொள்கின்றார்;
ஆயிரம் தலைமுறைக்கெனத்
தாம் அளித்த வாக்குறுதியை நினைவுகூர்கின்றார்.
9 ஆபிரகாமுடன் தாம் செய்து கொண்ட உடன்படிக்கையையும்
ஈசாக்குக்கு தாம் ஆணையிட்டுக் கூறியதையும்
அவர் நினைவில் கொண்டுள்ளார்.
10 யாக்கோபுக்கு நியமமாகவும்
இஸ்ரயேலுக்கு என்றுமுள உடன்படிக்கையாகவும்
அதை அவர் உறுதிப்படுத்தினார்.
11 'கானான் நாட்டை உங்களுக்கு அளிப்பேன்;
அப்பங்கே உங்களுக்கு உரிமைச் சொத்தாய் இருக்கும்'
என்றார் அவர்.
12 அப்போது, அவர்கள் மதிப்பிலும்
எண்ணிக்கையிலும் குறைந்தவராய் இருந்தார்கள்;
அங்கே அவர்கள் அன்னியராய் இருந்தார்கள்.
13 அவர்கள் ஒரு நாட்டினின்று மற்றொரு நாட்டிற்கும்
ஓர் அரசினின்று மற்றொரு மக்களிடமும்
அலைந்து திரிந்தார்கள்.
14 யாரும் அவர்களை ஒடுக்குமாறு
அவர் விட்டு விடவில்லை;
அவர்களின் பொருட்டு
மன்னர்களை அவர் கண்டித்தார்.
15 'நான் அருள்பொழிவு செய்தாரைத் தொடாதீர்!

என் இறைவாக்கினர்க்குத் தீங்கிழைக்காதீர்'
என்றார் அவர்.
16 நாட்டில் அவர் பஞ்சம் வரும்படி செய்தார்;
உணவெனும் ஊன்றுகோலை முறித்துவிட்டார்.
17 அவர்களுக்கு முன் ஒருவரை அனுப்பிவைத்தார்;
யோசேப்பு என்பவர் அடிமையாக விற்கப்பட்டார்.
18 அவர்தம் கால்களுக்கு விலங்கிட்டு
அவரைத் துன்புறுத்தினர்.
அவர்தம் கழுத்தில்
இரும்புப் பட்டையை மாட்டினர்.
19 காலம் வந்தது;
அவர் உரைத்தது நிறைவேறிற்று;
ஆண்டவரின் வார்த்தை
அவர் உண்மையானவரென மெய்ப்பித்தது.
20 மன்னர் ஆளனுப்பி அவரை விடுதலை செய்தார்;
மக்களினங்களின் தலைவர் அவருக்கு விடுதலை அளித்தார்;
21 அவர் அவரைத்
தம் அரண்மனைக்குத் தலைவர் ஆக்கினார்;
தம் உடைமைகளுக்கெல்லாம்
பொறுப்பாளராக ஏற்படுத்தினார்.
22 அவர் அரச அலுவலரைப் பயிற்றுவித்தார்;
அவருடைய அவைப்பெரியோருக்கு நல்லறிவு புகட்டினார்.
23 பின்னர், இஸ்ரயேல் எகிப்துக்கு வந்தார்;
யாக்கோபு காம் நாட்டில் அன்னியராய் வாழ்ந்தார்.
24 ஆண்டவர் தம் மக்களைப் பல்கிப் பெருகச் செய்தார்;
அவர்களின் எதிரிகளைவிட
அவர்களை வலிமைமிக்கவர்கள் ஆக்கினார்.
25 தம் மக்களை வெறுக்கும்படியும்,
தம் அடியார்களுக்கு எதிராகச்
சூழ்ச்சி செய்யும்படியும்
அவர் எகிப்தியரின் மனத்தை மாற்றினார்.
26 அவர்தம் ஊழியராகிய மோசேயையும்,
தாம் தேர்ந்தெடுத்த ஆரோனையும் அனுப்பினார்.
27 அவர்கள் எகிப்தியரிடையே
அவர்தம் அருஞ்செயல்களைச் செய்தனர்;
காம் நாட்டில்
வியத்தகு செயல்களைச் செய்து காட்டினர்.
28 அவர் இருளை அனுப்பி
நாட்டை இருட்டாக்கினார்;
அவருடைய சொற்களை எதிர்ப்பார் இல்லை.
29 அவர்களுடைய நீர்நிலைகளை
அவர் இரத்தமாக மாற்றினார்;
அவற்றிலிருந்த மீன்களைச் சாகடித்தார்.
30 அவர்களது நாட்டிற்குள் தவளைகள் ஏறிவந்தன;
மன்னர்களின் பள்ளியறைகளுக்குள்ளும் அவை நுழைந்தன.
31 அவர் கட்டளையிட, அவர்களுடைய நாடு முழுவதிலும்
ஈக்களும் கொசுக்களும் திரண்டு வந்தன.
32 அவர் நீருக்குப் பதிலாகக் கல்லை மழையாகப் பொழிந்தார்;

அவர்களது நாடெங்கும் மின்னல் தெறிக்கச் செய்தார்.
33 அவர் அவர்களின் திராட்சைச் செடிகளையும்
அத்திமரங்களையும் அழித்தார்;
அவர்களது நாடெங்குமுள்ள மரங்களை முறித்தார்.
34 அவரது சொல்லால் வெட்டுக் கிளிகளும்
எண்ணற்ற வெட்டுப்புழுக்களும் அங்கே தோன்றின.
35 அவை அவர்களது நாட்டின்
பயிர் பச்சைகளைத் தின்று தீர்த்தன;
அவர்களது நிலத்தின் விளைச்சல்களை விழுங்கிவிட்டன.
36 அவர் அவர்களது நாட்டின்
தலைப்பேறுகள் அனைத்தையும் தாக்கினார்;
அவர்களது ஆண்மையின் முதற்பேறுகள்
அனைத்தையும் வீழ்த்தினார்.
37 அவர் இஸ்ரயேலரை வெள்ளியோடும்
பொன்னோடும் புறப்படச் செய்தார்;
அவர்கள் குலங்களில் எவரும் தளர்ந்து போகவில்லை.
38 அவர்கள் வெளியேறுகையில்
எகிப்தியர் அகமகிழ்ந்தனர்;
ஏனெனில், இஸ்ரயேலர் பற்றிய பேரச்சம்
அவர்களை ஆட்கொண்டிருந்தது.
39 அவர் அவர்களைப் பாதுகாக்க
மேகத்தைப் பரப்பினார்;
இரவில் ஒளிதர நெருப்பைத் தந்தார்.
40 அவர்கள் கேட்டதால்
அவர் காடைகளை வரச்செய்தார்;
வானினின்று வந்த உணவால்
அவர்களை நிறைவுறச் செய்தார்.
41 அவர் கற்பாறையைப் பிளந்தார்;
தண்ணீர் பொங்கி வழிந்தது;
அது பாலைநிலங்களில் ஆறாய் ஓடிற்று.
42 ஏனெனில், தம் அடியார் ஆபிரகாமுக்கு அளித்த
தமது தூய வாக்குறுதியை அவர் நினைவுகூர்ந்தார்.
43 அவர் தம் மக்களை
மகிழ்ச்சியோடு வெளிக்கொணர்ந்தார்;
அவர்தாம் தெரிந்தெடுத்தவர்களை
ஆரவாரத்தோடு கூட்டிச் சென்றார்.
44 அவர் வேற்றினத்தாரின் நாடுகளை
அவர்களுக்கு அளித்தார்;
மக்களினங்களது உழைப்பின் பயனை
அவர்கள் உரிமையாக்கிக் கொள்ளுமாறு செய்தார்.
45 அவர்கள் அவருடைய
கட்டளைகளைக் கடைப்பிடிக்கவும்,
அவருடைய சட்டங்களின்படி ஒழுகவுமே
அவர் இவ்வாறு செய்தார்.
அல்லேலூயா!

திருப்பாடல் 105:1-45

**சிந்தனைக்கு**

படைப்பின் கடவுள் இப்போது வரலாற்றைப் படைக்கும் கடவுளாக; ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்கிற தனிமனிதர்களின் வழியே, இஸ்ரயேல் என்ற நாட்டை எழுப்பிய கடவுளாக இந்தத் திருப்பாடலில் அவர் போற்றப்படுகிறார்.

திருப்பாடல் 106 இத்திருப்பாடலோடு பொருத்தப்பாடுடையது; இவ்விரு திருப்பாடல்களும், திருப்பாடல் 78டோடு பொருந்திப் போவன. யோசுவா 24:2-15 மற்றும் நெகேமியா 9:7-25 போன்ற பகுதிகளும் இத்திருப்பாடல் போல, ஆண்டவர் அருளிய நன்மைகளை நினைவுகூர்பவை.

இந்தத் திருப்பாடல், குறிப்பேட்டாளரால், 96 மற்றும் 106ம் திருப்பாடல்களோடு எடுத்தாளப்பட்டுள்ளது, 1 குறிப்பேடு 16:8-22.

ஆபிரகாமிய உடன்படிக்கை மற்றும் அதனை நிறைவேற்றுவதில் உண்மையுள்ள ஆண்டவர் என்பதுவே திருப்பாடலின் மையக்கரு, வ.8-11; அதன் நிறைவேற்றம் வ.42-45. இவற்றுக்கு இடையே நடந்த வரலாற்று நிகழ்வுகள் வ.12-41 பகுதியில். ஆக, விடுதலைப் பயண நிகழ்வுகள், கடவுளை, உடன்படிக்கையை நிறைவேற்றும் ஆண்டவராக, தம் வாக்கில் உண்மையுள்ள ஆண்டவராக நிறுவத் தேவையானவை என்று திருப்பாடகர் முன்னிருத்துகிறார்.

தலைப்பற்ற திருப்பாடல்; எனவே எழுதியவர், எழுதப்பட்ட காலம், சூழல் மற்றும் நோக்கம் குறித்து எதுவும் அறியமுடியவில்லை. நாட்டை விட்டுச் சிறைப்பட்ட காலத்தில், தலைமுறைகளுக்கும் நிலைத்த உடன்படிக்கையை மோசேயோடு ஏற்படுத்திய வாக்கு மாறா ஆண்டவரில், சிறைப்பட்டோர் தங்கள் பற்றுறுதியில் உறுதியாக எழுப்பப்படும் நோக்கத்தோடு இந்தத் திருப்பாடல் எழுதப்பட்டிருக்கலாம் என்றொரு கருத்து உள்ளது.

ஆனால் குறிப்பேட்டாளரின் கூற்றுப்படி (1 குறிப்பேடு 16:1-7), இந்தத் திருப்பாடல் தாவீதுக்கு உரியது என்றே கொள்ளலாம். தாவீதின் நாள்களில் இயற்றப்பட்டு, பெந்தகோஸ்து திருநாள் போன்ற ஆண்டுதோறும் நடைபெறும் விழாக்களில் பாடப்பட்டிருக்கலாம்.

அமைப்பு:
வ.1-7, போற்றித் தொழுது கொள்ள அழைப்பு
வ.8-11, உடன்படிக்கையை நினைவுகூரும் ஆண்டவர்
வ.12-15, யாக்கோபின் நாட்களில் அலைக்கழிக்கப்பட்ட சிறு கூட்டமான உடன்படிக்கையின் மக்கள்
வ.16-23, உண்மையுள்ள ஆண்டவர் யோசேப்பை உயர்த்துதல்
வ.24-36, பெரிய மக்களினமாக உருவான இஸ்ரயேலரை வெளியே கொண்டுவரும் ஆண்டவர்
வ.37-41, விடுதலைப் பயணத்தில் ஆண்டவர்
வ.42-45, உடன்படிக்கையை நிறைவேற்றும் ஆண்டவர்

வசனம் 105:1-15
இணை, 1 குறிப்பேடு 16:8-22.

வசனம் 105:1-7
இங்கு நமக்குத் திருப்பாடகர் விடுக்கும் ஏழு ஆணைகள்:

** நன்றி செலுத்துங்கள்*
** வழிபடுங்கள்*
** மக்களினங்கள் அறியச் செய்யுங்கள்*
** பாடல் பாடுங்கள்*
** மாட்சிப்படுத்துங்கள்*
** தேடுங்கள்*
** நினைவில் கொள்ளுங்கள்*

வசனம் 105:1
*"ஆண்டவரைப் போற்றிடு" என்று தொடங்கிய திருப்பாடல்கள் 103 & 104க்குப் பிறகு, "ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்" என்று தொடங்கும் மூன்று திருப்பாடல்கள்.*

*"அவர்தம் செயல்களை மக்களினங்கள் அறியச் செய்யுங்கள்" -*
*ஆண்டவரைத் தொழுது கொள்ளும் இஸ்ரயேலருக்கு அழைப்பு. இன்றைக்கும் ஆண்டவருக்குச் சான்று பகர நமக்கான அழைப்பு.*

வசனம் 105:2
*"அவர்தம் வியத்தகு செயல்கள்..." -*
*மீண்டும், வ.5;*
*நினைவுகூரவும், எடுத்துரைக்கவும் திருப்பாடல்களில் விடுக்கப்படும் அழைப்பு,* 9:1, 26:7, 71:17, 72:18, 75:1, 77:11, 78:4,12,32&43, 86:10, 92:4, 96:3, 98:1, 106:7&22, 107:24, 111:4, 119:27, 139:14, 145:5.
*அவை இஸ்ரயேலரின் மூதாதையர், எகிப்திலும் பாலைவெளியிலும் கானானிலும், தங்கள் கண்களால் கண்ட, தலைமுறைகளுக்கு எடுத்துரைத்த, ஆண்டவரின் அருஞ் செயல்கள், இணைச் சட்டம்* 29:3. *இத்திருப்பாடலில் இவையே இனிச் சுருக்கமாகச் சொல்லப்படுபவை.*

வசனம் 105:3-4
*"...ஆண்டவரைத் தேடுவோர் ... அவரது... திருமுகத்தை ... நாடுவோர்..." -*
*வழிபாட்டில் ஆண்டவரோடு ஐக்கியத்தில் இணைந்து தொழ அழைப்பு,* 27:8, 119:10.
*அதுவே நலன் தரும் வழிபாடு,* 34:10,119:2.
*அதுவே மோசேயின் வழிநடத்துதல், இணைச் சட்டம்* 4:29.
*அதுவே அரசர் தாவீதின் ஆணை,* 1 *குறிப்பேடு* 22:19.

வசனம் 105:5
*"...நினைவுகூருங்கள் ... நினைவில் கொள்ளுங்கள்" -*
*நினைவுகூர அழைப்பு; ஏனெனில் இஸ்ரயேலரின் மூதாதையர் ஆண்டவரின் வியத்தகு செயல்களை நினைவுகூரவில்லை,* 106:7.

வசனம் 105:6
*"அவரின் ஊழியர் ... அவர் தேர்ந்து கொண்ட ..." -*
*இறைமக்கள், வ.*26,42-43.

வசனம் 105:7
*"அவரின் நீதித் தீர்ப்புகள் உலகம் அனைத்திற்கும் உரியன" -*
*பார்க்க,* 10:5, 36:6; *உலகோர் உணர்கின்றனரோ அல்லவோ, ஒவ்வொருவரின் வாழ்விலும், ஒவ்வொரு நாட்டிலும், கடவுளின் நீதியே நிறைவேறுகிறது.*

வசனம் 105:8-11
"... உடன்படிக்கை ... வாக்குறுதி... என்றுமுள உடன்படிக்கை..." -
ஆபிரகாமிய உடன்படிக்கை, தொடக்க நூல் 15:18-21, 17:1-14.
ஈசாக்குக்கு ஆண்டவர் தந்த வாக்குறுதி, 26:2-5.
இவை யாக்கோபுக்கும் உறுதிப்படுத்தப்பட்டன, தொடக்க நூல் 28:13-15, 46:3-4. இது தலைமுறைகள் தோறும் தொடருவது, தொடக்க நூல் 17:7-9; விடுதலைப் பயணம் 6:3-8; இணைச் சட்டம் 34:4; யோசுவா 21:43.

ஈசாக்கின் பெயர் சொல்லப்பட்டுள்ள ஒரே திருப்பாடல் இதுவாகும்; இத்திருப்பாடல் தவிர, ஆபிரகாமின் பெயர் ஒரு திருப்பாடலில் மட்டுமே இடம்பெற்றுள்ளது (47:9).

வசனம் 105:8
"... என்றென்றும் நினைவில் கொள்கிறார்" -
ஆண்டவர் தாம் அளித்த வாக்குறுதியை என்றென்றும் நினைவில் வைத்திருக்கிறார்; அது நிறைவேறும் காலமட்டும் அவர் உண்மையுள்ளவர்; வாக்கு மாறாதவர் (100:5, 103:17, 106:1&45, 107:1, 111:5, 118:1&29, 136:1-26). தாம் சொன்னதை நிறைவேற்றுமட்டும், அவர் நம்மை விட்டு விலகுவதுமில்லை, நம்மைக் கைவிடுவதுமில்லை.

வசனம் 105:8-9
லூக்கா இவ்வசனங்களை எடுத்தாளுகிறார், லூக்கா 1:72-73.

வசனம் 105:11
"கானான் நாட்டை உங்களுக்கு அளிப்பேன்" -
ஆபிரகாம் தொடங்கி மூதாதையருக்கு அளிக்கப்பட்ட வாக்கு, தொடக்க நூல் 13:15, 15:18-21, 17:8, 28:13, 35:12; விடுதலைப் பயணம் 6:8; எண்ணிக்கை 14:23&30; இணைச் சட்டம் 34:4.

வசனம் 105:12-15
குல மூதுவராகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்போர் வாழ்ந்த காலம், சுருக்கமாக நினைவுகூரப்படல்.

வசனம் 105:12
"... மதிப்பிலும் எண்ணிக்கையிலும் குறைந்தவராய் ... அன்னியராய்..." -
சிறு கூட்ட நாடோடிகளாக, பெருங் கூட்ட மக்களால் அச்சுறுத்தப்படும் நிலையில் வாழ்க்கை, தொடக்க நூல் 14:14, 23:4, 34:30; இணைச் சட்டம் 7:7.
எனவே கடவுள் இஸ்ரயேலருக்கு வழங்கிய ஆணை, விடுதலைப் பயணம் 22:21; இணைச் சட்டம் 10:19.

வசனம் 105:14
"அவர்களின் பொருட்டு மன்னர்களை அவர் கண்டித்தார்" -
வரலாறின் மீது மிகவும் சுருக்கமான மீள்பார்வை எனினும், நிகழ்வுகளில் மிகவும் சிறப்பான ஒன்றாக, ஆபிரகாமின் பொருட்டு மன்னர்களை ஆண்டவர் கண்டித்தமை இங்கு நினைவுகூரப்படுகிறது, தொடக்க நூல் 12:17, 20:3&6-7. மேலும் பார்க்க, தொடக்க நூல் 26:11.

வசனம் 105:15
இறைவாக்கினர் என்று ஆபிரகாமைக் குறிப்பிட்ட ஆண்டவர், தொடக்க நூல் 20:7.
ஈசாக்கின் இறைவாக்கு, தொடக்க நூல் 27:27-29.
யாக்கோபின் இறைவாக்கு, தொடக்க நூல் 49:1-28.

வசனம் 105:16-17
*தாம் தெரிந்து கொண்ட மக்களுக்காக, நலமானவைகளை முன்னரே திட்டமிடும் ஆண்டவர், தொடக்க நூல் 41:57&42:5; யோசேப்பு அதனைப் புரிந்து கொண்டு வெளிப்படுத்துதல், 45:5-8, 50:20.*

வசனம் 105:18
*சிறைப்பட்ட யோசேப்பு, தொடக்க நூல் 39:20.*

*யோசேப்பின் காலத்தில் இரும்பு புழக்கத்தில் இருந்திருக்க வாய்ப்பில்லை. நீதித் தலைவர்களின் (16:21) காலத்திலும், வெண்கலச் சங்கிலிகளே பயன்படுத்தப்பட்டன. கேட்போர் புரிந்து கொள்ள, தனது கால வழக்கத்தைப் பாடலில் திருப்பாடகர் ஏற்றிக் கூறியுள்ளார் என்று புரிந்து கொள்ளலாம்.*

வசனம் 105:19
*இன்றைக்கு நமது வாழ்வில் சில இடர்கள் நேரிடும் வேளைகளில், "எனக்கு ஏன் இப்படி" என்று கலங்கிப் போகிறோம், கண்ணீர் விடுகிறோம், கடவுளிடம் கேள்விகளை எழுப்புகிறோம்; ஆனால் அடிமையாக விற்கப்பட்ட யோசேப்பு, பாடுகளைச் சகித்தார்; பொறுமையுடன் காத்திருந்தார். அவருக்கு வெளிப்படுத்திய காட்சிகளை ஆண்டவர் நிறைவேற்றினார், தொடக்க நூல் 37:6-8.*

வசனம் 105:21-22
*அடிமையாக விற்கப்பட்ட யோசேப்பு, எகிப்து நாட்டில் எட்டிய உயரம், தொடக்க நூல் 41:38-45.*

வசனம் 105:23 & 27
*"...காமின் நாட்டில்..." -*
*எகிப்து நாட்டில், பார்க்க, தொடக்க நூல் 10:6.*

வசனம் 105:24
*எழுபதின்மராக இருந்த இஸ்ரயேலின் மக்கள் எண்ணிறந்த இனமாக மாறுதல், விடுதலைப் பயணம் 1:1-7. 430 ஆண்டுகளுக்குப் பிறகு, எகிப்திலிருந்து வெளியேறிய, நடந்து செல்லக் கூடிய ஆண்கள் மட்டும் ஆறு இலட்சம் பேர் (விடுதலைப் பயணம் 12:37&40).*

வசனம் 105:25-38
*விடுதலைப் பயணம் 1:8 - 12:51 பகுதியில் நாம் விரிவாக வாசிக்கும் நிகழ்வுகள் மிகவும் சுருக்கமாக.*

வசனம் 105:25
*"...அடியார்களுக்கு எதிராகச் சூழ்ச்சி ..." -*
*யோசேப்புக்கு எதிராக அவரது சகோதரர்கள் செய்த சூழ்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்ட அதே மூலச் சொல் இங்கு சொல்லப்பட்டுள்ளது. மிகவும் கடுமையான ஒடுக்குமுறைகளும், பிறக்கும் ஆண் குழந்தைகளைக் கொல்வதன் வழியாக இன அழித்தொழிப்பும் இஸ்ரயேலருக்கு எதிராக எகிப்தில் நிகழ்த்தப்பட்டன (விடுதலைப் பயணம் 1:9-22).*

வசனம் 105:28-36
*பார்க்க, விடுதலைப் பயணம் 7 ~ 12.*

எகிப்தியருக்கு ஆரோன் மோசே வழியாக ஆண்டவர் வருவித்த வாதைகள்; பத்தில் எட்டு மட்டும் இங்கு நினைவுகூரப்பட்டுள்ளன. அந்த எட்டும் அதே வரிசையில் நினைவுகூரப்படவில்லை.

வசனம் 105:37
"...வெள்ளியோடும் பொன்னோடும்..." -
அடிமை நிலையில், கடும் உழைப்புச் சுரண்டலுக்கு ஆட்படுத்தப்பட்ட இஸ்ரயேலருக்கு இழப்பீடு வழங்கப்பட்டது போன்ற ஒரு நிலையை ஆண்டவர் ஏற்படுத்தினார் (விடுதலைப் பயணம் 11:2, 12:35).

வசனம் 105:38
பார்க்க, விடுதலைப் பயணம் 12:33.

வசனம் 105:39-41
பாலை நிலவெளியில் இஸ்ரயேலரின் பயணம், விடுதலைப் பயணம் 13:17 - 17:7.

வசனம் 105:39
பார்க்க, விடுதலைப் பயணம் 13:21-22.

மேகத்தூண் வழியாக, ஆண்டவர் இஸ்ரயேலரை
- எகிப்தியரிடமிருந்து காத்தார், 14:19-20;
- வழிநடத்தினார், எண்ணிக்கை 9:16;
- தாய்ப் பறவையின் இறக்கைகள் போல மழை வெயிலிலிருந்தும் காத்தார், 17:8.

வசனம் 105:42-44
வ.11 முதல் வ.41 வரை குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகளின் இலக்கு; "...அளிப்பேன்" என்ற ஆண்டவரின் வாக்கோடு வ.11ல் தொடங்கிய திருப்பாடகர், "அளித்தார்" என்று சான்று பகன்று நிறைவு செய்கிறார்; சிறு கூட்டமாக எகிப்து சென்ற இஸ்ரயேலர், ஒரு நாடாக வளர்ந்து, தங்களுக்கு வாக்களிக்கப்பட்ட நிலத்தையும் பெற்றுக் கொண்டதில் திருப்பாடல் முடிவடைகிறது (இணைச் சட்டம் 6:10-12; யோசுவா 24:13).

வசனம் 105:44
இணை, யோசுவா 21:43.

வசனம் 105:45
பார்க்க, இணைச் சட்டம் 6:13&17-18; 24:14-18.
ஆபிரகாமின் காலத்தில் தொடங்கி, யோசுவாவின் காலம் வரை ஆண்டவர் நிகழ்த்திய வியத்தகு செயல்களுக்கான நோக்கம். நம் ஒவ்வொருவரின் தெரிந்தெடுப்பின் நோக்கமும் இதுவே (தொடக்க நூல் 1:26-28; விடுதலைப் பயணம் 19:6; லேவியர் 19:2; இணைச் சட்டம் 6:21-25; உரோமையர் 8:29; 1 பேதுரு 2:5&9.)

ஆண்டவரது அருஞ்செயல்களும் வியத்தகு செயல்களும் யோசுவாவின் காலத்தோடு முடிந்து விடவில்லை; அவை நீதித் தலைவர்களோடும் இஸ்ரயேலின் அரசர்களோடும் இறைவாக்கினரோடும் தொடர்ந்தன; இன்றைக்கும் நம் ஒவ்வொருவரோடும் அவருடைய அற்புதங்களும் அடையாளங்களும் தொடர்கின்றன. அவற்றின் நோக்கத்தை நாம் புரிந்து கொள்வது சிறந்தது: நாம் "அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிக்கவும், அவருடைய சட்டங்களின்படி ஒழுகவுமே அவர் இவ்வாறு" செய்கிறார். அல்லேலூயா!

# 19 திருப்பாடல் 106

*(கடவுள் தம் மக்களுக்குக் காட்டிய கருணை)*

1 அல்லேலூயா!
ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்;
ஏனெனில் அவர் நல்லவர்!
என்றென்றுமுள்ளது அவரது பேரன்பு!
2 ஆண்டவரின் வலிமைமிகு செயல்களை
யாரால் இயம்ப இயலும்?
அவர்தம் புகழை யாரால் விளம்பக் கூடும்?
3 நீதிநெறி காப்போர் பேறு பெற்றோர்!
எப்போதும் நேரியதே செய்வோர் பேறுபேற்றோர்!
4 ஆண்டவரே!
நீர் உம்மக்கள்மீது இரக்கம் காட்டும்போது
என்னை நினைவு கூரும்!
அவர்களை நீர் விடுவிக்கும்போது
எனக்கும் துணைசெய்யும்!
5 நீர் தேர்ந்தெடுத்த மக்களின் நல்வாழ்வை
நான் காணும்படி செய்யும்;
உம்முடைய மக்களின் மகிழ்ச்சியில்
நானும் பங்கு கொள்ளும்படிச் செய்யும்!
அப்போது, உமது உரிமைச் சொத்தான மக்களோடு
உம்மைப் போற்றிட இயலும்.
6 எங்கள் மூதாதையரின் வழிநடந்து,
நாங்களும் பாவம் செய்தோம்;
குற்றம் புரிந்தோம்; தீமை செய்தோம்.
7 எங்கள் மூதாதையர் எகிப்தில் நீர்செய்த
வியத்தகு செயல்களைப் பற்றிச் சிந்திக்கவில்லை;
உமது மாபெரும் பேரன்பை
அவர்கள் நினைவில் கொள்ளவில்லை;
மாறாக உன்னதமானவரை எதிர்த்துச்
செங்கடல் ஓரத்தில் கலகம் செய்தனர்.
8 அவரோ தமது பெயரின் பொருட்டு அவர்களை விடுவித்தார்;
இவ்வாறு அவர் தமது வலிமையை வெளிப்படுத்தினார்.
9 அவர் செங்கடலை அதட்டினார்;
அது உலர்ந்து போயிற்று;
பாலை நிலத்தில் நடத்திச் செல்வது போல்
அவர்களை ஆழ்கடல் வழியே நடத்திச்சென்றார்.
10 எதிரியின் கையினின்று அவர்களை விடுவித்தார்;
பகைவரின் பிடியினின்று அவர்களை மீட்டார்.
11 அவர்களுடைய எதிரிகளைக் கடல்நீர் மூழ்கடித்தது;
அவர்களுள் ஒருவர்கூட எஞ்சியிருக்கவில்லை.
12 அப்பொழுது, அவர்கள்
அவருடைய வாக்குறுதிகளில்
நம்பிக்கை வைத்தார்கள்;
அவரைப் புகழ்ந்து பாடினார்கள்.
13 ஆயினும், அவர் செய்தவற்றை

அவர்கள் விரைவிலேயே மறந்துவிட்டார்கள்;
அவரது அறிவுரைக்காக
அவர்கள் காத்திருக்கவில்லை.
14 பாலைநிலத்தில் அவர்கள்
பெருவிருப்புக்கு இடங்கொடுத்தார்கள்.
பாழ்வெளியில் அவர்கள் இறைவனைச் சோதித்தார்கள்.
15 அவர்கள் கேட்டதை அவர் அவர்களுக்குச் கொடுத்தார்;
அவர்களின் உயிரை அழிக்குமாறு
அவர்கள்மீது நோயை அனுப்பினார்.
16 பாளையத்தில் இருக்கும்போது மோசேயின்மீதும்,
ஆண்டவருக்காகத் திருநிலைபெற்ற ஆரோன்மீதும்,
அவர்கள் பொறாமை கொண்டார்கள்.
17 நிலம் பிளந்து தாத்தானை விழுங்கியது;
அபிராமின் கும்பலை அப்படியே புதைத்து விட்டது.
18 அக்கும்பலிடையே நெருப்பு கொழுந்துவிட்டு எரிந்தது;
தீயோரைத் தீப்பிழம்பு எரித்தது.
19 அவர்கள் ஓரேபில் ஒரு கன்றுக் குட்டியைச் செய்துகொண்டனர்;
வார்ப்புச் சிலையை விழுந்து வணங்கினர்;
20 தங்கள் "மாட்சி"க்குப் பதிலாகப் புல்தின்னும்
காளையின் உருவத்தைச் செய்து கொண்டனர்;
21 தங்களை விடுவித்த இறைவனை மறந்தனர்;
எகிப்தில் பெரியன புரிந்தவரை மறந்தனர்;
22 காம் நாட்டில் அவர் செய்த வியத்தகு செயல்களை மறந்தனர்;
செங்கடலில் அவர் செய்த அச்சுறுத்தும் செயல்களையும் மறந்தனர்.
23 ஆகையால், அவர்களை அவர் அழித்துவிடுவதாகக் கூறினார்;
ஆனால், அவரால் தேர்ந்து கொள்ளப்பட்ட மோசே,
அவர்முன் உடைமதில் காவலர் போல் நின்று
அவரது கடுஞ்சினம் அவர்களை அழிக்காதவாறு தடுத்தார்.
24 அருமையான நாட்டை அவர்கள் இகழ்ந்தார்கள்;
அவரது வாக்குறுதியில் நம்பிக்கை கொள்ளவில்லை.
25 அவர்கள் தங்களின் கூடாரங்களில் முறுமுறுத்தார்கள்;
ஆண்டவரின் குரலுக்குச் செவிகொடுக்கவில்லை.
26 ஆகவே அவர் அவர்களுக்கு எதிராகத்
தம் கையை ஓங்கி 'நான் உங்களைப்
பாலைநிலத்தில் வீழ்ச்சியுறச் செய்வேன்;
27 உங்கள் வழிமரபினரை வேற்றினங்களிடையிலும்
அன்னிய நாடுகளிலும் சிதறடிப்பேன்' என்றார்.
28 பின்னர் அவர்கள் பாகால்பெயோரைப் பற்றிக் கொண்டார்கள்.
உயிரற்ற தெய்வங்களுக்குப் பலியிட்டவற்றை உண்டார்கள்;
29 இவ்வாறு தங்கள் செய்கைகளினால்
அவருக்குச் சினமூட்டினார்கள்;
ஆகவே, கொள்ளைநோய் அவர்களிடையே பரவிற்று.
30 பினகாசு கொதித்தெழுந்து தலையிட்டதால்
கொள்ளைநோய் நீங்கிற்று.
31 இதனால், தலைமுறை தலைமுறையாக
என்றென்றும், அவரது செயல் நீதியாகக் கருதப்பட்டது.
32 மெரிபாவின் ஊற்றினருகில் அவருக்குச் சினமூட்டினார்கள்.

அவர்களின் பொருட்டு மோசேக்கும் தீங்கு நேரிட்டது.
33 மோசேக்கு அவர்கள் மனக்கசப்பை ஏற்படுத்தியதால்
அவர் முன்பின் பாராது பேசினார்.
34 ஆண்டவர் இட்ட கட்டளைக்கு மாறாக,
மக்களினங்களை அவர்கள் அழிக்கவில்லை.
35 வேற்றினத்தாரோடு கலந்துறவாடி,
அவர்களின் வழக்கங்களைக் கற்றுக்கொண்டனர்;
36 அவர்களின் தெய்வச் சிலைகளைத் தொழுதனர்;
அவையே அவர்களுக்குக் கண்ணிகளாயின.
37 அவர்கள் தங்கள் புதல்வர், புதல்வியரைப்
பேய்களுக்குப் பலியிட்டனர்;
38 மாசற்ற இரத்தத்தை,
தங்கள் புதல்வர் புதல்வியரின் இரத்தத்தைச் சிந்தினர்;
கானான் நாட்டுத் தெய்வங்களின் சிலைகளுக்கு அவர்களைப் பலியிட்டார்கள்;
அவர்களின் இரத்தத்தால் நாடு தீட்டுப்பட்டது.
39 அவர்கள் தங்கள் செயல்களால்
தங்களைக் கறைப்படுத்திக் கொண்டனர்;
தங்கள் செயல்கள் மூலம் வேசித்தனம் செய்தனர்.
40 எனவே, ஆண்டவரின் சினம்
அவர்தம் மக்களுக்கெதிராகப் பற்றியெரிந்தது;
தமது உரிமைச் சொத்தை அவர் அருவருத்தார்.
41 வேற்றினத்தாரின் கையில் அவர் அவர்களை ஒப்படைத்தார்;
அவர்களை வெறுத்தோரே அவர்களை ஆட்சி செய்தனர்.
42 அவர்கள் எதிரிகள் அவர்களை ஒடுக்கினர்;
தங்கள் கையின்கீழ் அவர்களைத் தாழ்த்தினர்.
43 பன்முறை அவர் அவர்களை விடுவித்தார்;
அவர்களோ திட்டமிட்டே அவருக்கு எதிராகக் கலகம் செய்தனர்;
தங்கள் தீச்செயல்களினால் அவர்கள் தாழ்நிலை அடைந்தனர்.
44 எனினும் அவர் அவர்களது மன்றாட்டுக்குச் செவிசாய்த்து,
அவர்களது துன்பத்தைக் கண்டு மனமிரங்கினார்.
45 அவர்களுக்கு உதவுமாறு,
அவர் தமது உடன்படிக்கையை நினைவு கூர்ந்தார்;
தமது பேரன்பிற்கேற்பக் கழிவிரக்கம் கொண்டார்;
46 அவர்களைச் சிறைசெய்த அனைவர் முன்னிலையிலும்
அவர்கள் இரக்கம் பெறும்படி செய்தார்.
47 எங்கள் கடவுளாகிய ஆண்டவரே!
எங்களை விடுவித்தருளும்;
வேற்று நாடுகளினின்று எங்களை ஒன்று சேர்த்தருளும்;
அப்பொழுது நாங்கள் உமது திருப்பெயருக்கு நன்றி செலுத்துவோம்;
உம்மைப் புகழ்வதில் பெருமை கொள்வோம்.
48 இஸ்ரயேலின் கடவுளான ஆண்டவர்
ஊழி ஊழியாய்ப் புகழப் பெறுவாராக!
மக்கள் அனைவரும் "ஆமென்" எனச் சொல்வார்களாக!
அல்லேலூயா!

திருப்பாடல் 106:1-48

**சிந்தனைக்கு**

முதல் முறையாக, திருப்பாடல் 104ன் தொடக்கத்திலும், 105ம் திருப்பாடலின் முடிவிலும் அல்லேலூயா என்ற சொல் இடம் பெற்றிருந்தாலும், முதல் மற்றும் இறுதிச் சொற்களாக அல்லேலூயா இடம் பெறுவது இந்தத் திருப்பாடலில் தான்; அல்லேலூயா திருப்பாடல்களில் முதல் திருப்பாடலாக இப்பாடல் கருதப்படுகிறது. அதேவேளையில், நான்காம் தொகுதியின் கடைசித் திருப்பாடல் இதுவாகும்.

நாணயத்தின் இரு பக்கங்கள் என்பது போல, 105ம் திருப்பாடலின் மறுபக்கமாக இத்திருப்பாடல் அமைகிறது. வரலாறு நெடுகிலும் கடவுளின் வரலாறு, ஒளிவீசும் பேரருளின் வரலாறு எனில், மனிதரின் வரலாறோ கருப்புப் பக்கங்களால் ஆன மீறுதல்களின் வரலாறு. என்றுமுள மாட்சிமிகு கடவுள் உண்மையுள்ளவர் என்பதை முந்தைய திருப்பாடல் அழகுற எடுத்துரைத்தால், அழிவுக்குரிய, தடுமாறக் கூடிய மனிதர் பாவிகள், கடவுளுக்கு உண்மையற்றோர் என்பதையும், வரலாற்றில் மீட்பின் கடவுளாக ஆண்டவர் திகழ்வதையும் இந்தத் திருப்பாடல் சித்தரிக்கிறது.

கடவுளோடு தங்களுக்கு உள்ள உறவில் மீண்டும் மீண்டும் மனிதர் தோல்வியுற்றோர் என்பதை இத்திருப்பாடல் அம்பலப்படுத்துகிறது.

முந்தைய திருப்பாடல் "அவர் செய்த வியத்தகு செயல்களை நினைவுகூருங்கள்" என்று அழைப்பு விடுத்தால், இந்தத் திருப்பாடல் "எங்கள் மூதாதையர் எகிப்தில் நீர் செய்த வியத்தகு செயல்களைப் பற்றிச் சிந்திக்கவில்லை" என்கிற பாவ அறிக்கையாக உள்ளது.

திருப்பாடல் 105 மற்றும் 106 - இரண்டின் கலவையாகத் திருப்பாடல் 78 விளங்குகிறது.

தலைப்பற்ற திருப்பாடல்; 1 குறிப்பேடு 16:34-36 வசனங்களாக இத்திருப்பாடலின் முதல் மற்றும் இறுதி இரு வசனங்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. அவை வேற்று நாடுகளில் சிதறிக் கிடக்கும் இஸ்ரயேலரை ஒன்றுசேர்த்தருள கடவுளிடம் மன்றாடுவதாக அமைந்துள்ளன. அதனடிப்படையில், சிறை மீண்ட லேவியர்களில் ஒருவரோ சிலரோ இத்திருப்பாடலைப் பாடியிருக்கலாம்.

அமைப்பு:
வ.1-5, பேறுபெற்றோர் ஆண்டவரைப் போற்றுதல்
வ.6-12, இறையாசியும் இறைமக்களின் பாவமும்
வ.13-23, வெளிப்பட்ட பாவங்களும் தண்டனைகளும்
வ.24-27, ஆசிகளை இகழ்ந்த இஸ்ரயேலர்
வ.28-33, கலகம் செய்யும் மக்களும் தண்டனைகளும்
வ.34-43, பாவத்தின் பெருக்கமும் தண்டனையும்
வ.44-47, துயரிலிருந்து பெருமைமிகு நிலைக்கு மாறுதல்
வ.48, நிறைவுப் புகழ்ச்சி

வசனம் 106:1
"அல்லேலூயா!" -
முந்தைய திருப்பாடலின் முடிவு, இந்தத் திருப்பாடலின் தொடக்கம். அங்கு கடவுளின் வியத்தகு செயல்களுக்காகத் துதி; இங்கு மன்னிப்பு அருளும் ஆண்டவருக்கு நன்றி.

இவ்வசனம் "அல்லேலூயா" நீங்கலாக 1 குறிப்பேடு 16:34ல்.

"ஏனெனில் அவர் நல்லவர்! என்றென்றுமுள்ளது அவரது பேரன்பு!" -
ஐந்தாம் தொகுதியில் தொடரும் புகழ்ச்சி, 107:1, 118:1&29, 136:1. அதுவே சுருக்கமான வடிவில், திருப்பாடல் 136 முழுவதும்.

வசனம் 106:2
கேள்விகளில் புகழ்ச்சியின் உச்சம், 18:31, 71:19, 76:7, 77:13, 89:6&8, 113:5, 147:17.

வசனம் 106:3
யார் பேறுபெற்றோர்?
நீதிநெறி காப்போர், நேரியதே செய்வோர்; இதுவே இந்தத் திருப்பாடலுக்கான முன்னுரை.

ஆண்டவரின் நீதியுள்ள ஆளுகை, இந்தத் தொகுப்பில் உள்ள திருப்பாடல்களின் கருப்பொருள் (பார்க்க, திருப்பாடல் 93 ~ 99). நீதியுள்ள ஆண்டவரை நாம் நமது வாழ்க்கையில் பிரதிபலிப்பதுவே நமக்குரிய அழைப்பு, 105:45.

வசனம் 106:4-5
இரட்சிப்பு தனி ஒருவருக்கானது மட்டுமல்ல; அது மக்களுக்கானது, விடுதலைப் பயணம் 19:3-6. மக்களை மீட்கவே அவர் மோசேயைத் தெரிந்து கொண்டார்; நோக்கம் மோசேயின் மீட்பு அல்ல. தனது மக்களின் மீட்புக்கான மன்றாட்டோடு தன்னையும் திருப்பாடகர் இங்கு பிணைத்துக் கொள்கிறார்.

வசனம் 106:4
"ஆண்டவரே! ... நினைவு கூரும்!" -
நாம் நினைவுகூர வேண்டியவை, கடவுளின் வியத்தகு செயல்கள், அருஞ் செயல்கள், 105:5.
அவர் அருளோடு நினைவுகூர்வது, தமது வாக்குறுதிகளை, உடன்படிக்கையை, வ.45, 105:8&42.

வசனம் 106:5
"...நல்வாழ்வு ... மகிழ்ச்சி ... போற்றுதல்" -
கடவுள் அருளும் ஒவ்வொரு நன்மையிலும் மகிழ்ந்து அவரைத் துதிக்கிறோமா?

வசனம் 106:6
பாவ அறிக்கையின் தொடக்கம்; இணை, எஸ்ரா 9:6-15; நெகேமியா 9:5-37; தானியேல் 9:4-19.

"எங்கள் ... நாங்கள்..." -
தலைமுறைகளாகத் தொடரும் தனது மூதாதையரின் பாவங்களோடு தன்னையும் தங்கள் தலைமுறையினரையும் இணைத்துக் கொண்டு, மன்னிப்பை வேண்டும் திருப்பாடகர்.

"...பாவம் செய்தோம்; குற்றம் புரிந்தோம்; தீமை செய்தோம்" -
சாலமோன் கற்பித்த வழியில் விண்ணப்பம், 1 அரசர்கள் 8:47.

வசனம் 106:7-43
வரலாற்றில் இஸ்ரயேலின் பாவங்கள் சுருக்கமாக:-
வ.7, எகிப்தில்;
வ.14-33, பாலைநிலத்தில்;
வ.34-43, வாக்களிக்கப்பட்ட நாட்டில்.

மேலும், பாவங்களில் -
- மறதியால் விளைந்த பாவம், வ.7,13&21;
- கலகத்தால் நேர்ந்த பாவம், வ.7,32&43
- சிலைகளை வழிபட்டதால் வந்த பாவம், வ.19,28&36.

வசனம் 106:7
மக்கள் மறந்தவை, ஆண்டவரின் வியத்தகு செயல்கள், கடவுளின் மாபெரும் பேரன்பு.

"...செங்கடல் ஓரத்தில்..." -
பார்க்க, விடுதலைப் பயணம் 14:10-12.
மற்ற மக்களினங்களிலிருந்து பிரித்த பிறகு, கடவுளின் நேரடியான ஆளுகையின் கீழ் ஒன்றிணைந்த மக்களாக, இஸ்ரயேலரின் முதல் அவநம்பிக்கை.
எகிப்தில் நிகழ்ந்த வாதைகளிலிருந்து காக்கப்பட்ட இஸ்ரயேலரின் நம்பிக்கை எங்கே?

வசனம் 106:8-11
எகிப்திலிருந்து வெளிக் கொணரப்பட்ட இஸ்ரயேலருக்கு முதல் வியத்தகு செயல், விடுதலைப் பயணம் 14:21-28.

வசனம் 106:10
"...விடுவித்தார் ... மீட்டார்" -
தம் மக்கள் நம்பிக்கையில் வளர விரும்பும் ஆண்டவர், துன்பங்களிலிருந்து அவர்களை விடுவிக்கிறார். ஆனால் மனிதரின் நம்பிக்கை வளர்கிறதா?

வசனம் 106:12
விடுதலைப் பாடல், விடுதலைப் பயணம் 15:1-21.

வசனம் 106:13
"...விரைவிலேயே..." -
அடுத்த சில நாட்களில் இஸ்ரயேலரின் சலிப்பு, பார்க்க, விடுதலைப் பயணம் 15:24.

வசனம் 106:14-15
இறைச்சி உண்ணும் பெரும் ஏக்கமும் பேரழிவும், எண்ணிக்கை 11:4-34;
கடவுளின் பராமரிப்பில் குறை காணும் மக்கள்.

வசனம் 106:15
"அவர்கள் கேட்டதை அவர் அவர்களுக்குக் கொடுத்தார்" -
எச்சரிக்கை! கிடைத்துக் கொண்டிருக்கும் உயரிய ஒன்றை விட்டு விட்டு, கேட்கத் தகுதியற்ற ஒன்றைக் கேட்காதீர்கள். அன்றைக்கு உடல்கள் விழுந்த இடம், சீனாய் பாலைநிலத்தில் கிப்ரோத் ஹட்டாவா (Kibroth Hattaavah, பெருவிருப்பின் கல்லறைகள்) என்ற பெயரில் இருப்பதாகக் கருதப்படுகிறது.

முறையற்ற ஒன்றைக் கேட்கும்போது, கேட்பவரின் விருப்பத்திற்குக் கடவுள் அவரை விட்டு விடுவார், உரோமையர் 1:24-32.

வசனம் 106:16-18
ஆண்டவர் தெரிந்து கொண்ட தலைவர்களுக்கு எதிரான கலகம், எண்ணிக்கை 16:1-35.

**எச்சரிக்கை! தனிப்பட்ட மனமாச்சரியங்களுக்கு இடம் கொடுத்து திருச்சபையில் குழப்பம் செய்கிறீர்களா?**

வசனம் 106:19-23
வரலாற்றில் பின்னோக்கிச் சென்று ஒரு நினைவுகூரல், பொன் கன்றுக் குட்டி, விடுதலைப் பயணம் 32:1-14. தாங்கள் பாவத்தில் விழுந்தது மட்டுமல்லாமல், தங்கள் தலைவர் ஆரோனையும் இஸ்ரயேலர் பாவத்தில் வீழ்த்தினர்.

**ஆண்டவரின் தெரிந்தெடுப்பு என்பதற்கு மேலாக, எச்சூழ்நிலையிலும் மக்களின் தலைவனாக இருப்பதில் மகிழ்ந்த ஆரோன், இன்றைய திருச்சபைத் தலைவர்களுக்கு ஓர் எச்சரிக்கை.**

வசனம் 106:20
"தங்கள் மாட்சிக்குப் பதிலாக, புல் தின்னும் காளை..." -
பார்க்க, எரேமியா (2:11) எழுப்பும் கேள்வி. சிலை வணக்கத்திற்கு எதிராக, பவுலடிகளாரும் நம்மை எச்சரிக்கிறார், உரோமையர் 1:23.

வசனம் 106:21
"...மறந்தனர்...மறந்தனர்" -
மனித மனநிலை, மறத்தல். நமது கண் முன்னே நேற்று இருந்த ஒருவர் இன்று இல்லை; நமக்கு அளிக்கப்படும் ஒவ்வொரு நாளும் இறை ஆசி! இதை ஒவ்வொரு நாளிலும் தூங்குவதற்கு முன்பும், எழுந்த பின்பும் நினைவில் கொண்டு நன்றியோடு வாழ்தல் சிறப்பு!

"...உடைமதில் காவலர் போல் நின்று..." -
ஆண்டவரின் சினத்திற்கு எதிராகத் திறப்பின் வாயிலே நின்ற மோசே, விடுதலைப் பயணம் 32:11-14; எண்ணிக்கை 11:2; இணைச் சட்டம் 9:19.

வசனம் 106:24-26
வாக்களிக்கப்பட்ட நாட்டை உளவு பார்த்துத் திரும்பியோரின் நம்பிக்கையற்ற செய்திகளால் உண்டான கலகமும் விளைவும், எண்ணிக்கை 14:1-35.
அவிசுவாசம் பாவம் எனில், மக்கள் மனதில் அவிசுவாசத்தை விதைப்பது பெரும் பாவம்.

வசனம் 106:24
"அருமையான நாடு..." -
ஆண்டவர் அருளியதால் அருமையான இனிய நாடு, எரேமியா 3:19, 12:10; செக்கரியா 7:14.

வசனம் 106:27
பிற்காலத்தில் நடக்கவிருப்பது ஓர் இறைவாக்காக, லேவியர் 26:33; இணைச் சட்டம் 28:36-37&64. இதனை நினைவுகூரும் எசேக்கியேல் (20:23).

வசனம் 106:28-31
மோவாபியப் பெண்களால் இழுப்புண்டு, பெகோரின் பாகாலை வழிபட்ட இஸ்ரயேலின் பாவமும் பேரழிவும், எண்ணிக்கை 25:1-13.

வசனம் 106:31
"... நீதியாகக் கருதப்பட்டது" -
ஆபிரகாமின் நம்பிக்கையை அவருக்கு நீதியாக ஆண்டவர் கருதியது போல (தொடக்க நூல் 15:6), இஸ்ரயேலின் தலைமுறைகளும் பினகாசின் செயலை (எண்ணிக்கை 25:7-8) நீதியாக

*எண்ணியதைத் திருப்பாடகர் குறிப்பிடுகிறார். பினகாசின் செயலை ஆண்டவர் அன்பின் வெறி என்று சொல்லி அமைதி அடைந்தார், எண்ணிக்கை* 25:11.
*அதுபோலவே, ஆண்டவர் நோவாவை நேர்மையாளர் என்று சான்று பகன்றார் (தொடக்க நூல்* 7:1).

வசனம் 106:32-33
*சீன் பாலைநிலத்தில், காதேசில் நீருக்காக மோசேயிடம் வாதாடி, அவருக்குச் சினமூட்டிய இஸ்ரயேலர், எண்ணிக்கை* 20:2-13. *தன்னிலை இழந்த தலைவர் மோசேயும் ஆண்டவரின் தண்டனைக்கு உள்ளானார்.*

வசனம் 106:34-36
*வாக்களிக்கப்பட்ட நாட்டில் வேற்றின மக்களை அழிக்காமல் வாழ விட்ட இஸ்ரயேலர் மற்றும் அதனால் விளைந்த பின்னடைவு, நீதித் தலைவர்கள்* 2:1-3, 3:5-8.

வசனம் 106:37-43
*தங்கள் பிள்ளைகளின் மாசற்ற இரத்தத்தைச் சிந்திப் பாவத்தில் விழுந்த இஸ்ரயேலர், எண்ணிக்கை* 35:33; 2 *அரசர்கள்* 17:7-17. *இத்தகைய மீறுதல்களின் பொருட்டு முன்னரே வடநாடாகிய இஸ்ரயேல் தண்டிக்கப்பட்டது; அதன் நிலையைக் கண்டும் யூதேயா தன்னை மாற்றிக் கொள்ளவில்லை; இறைவாக்கினர் சொல்லுக்கும் கீழ்ப்படியவில்லை. கடவுள் அருளிய கிருபையின் காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. தொடர்ந்த இத்தகைய மீறுதல்களின் விளைவாக, பாபிலோனிய முற்றுகையில் நாடு வீழ்ந்தது; அரசரும் அவரது குடும்பத்தினரும் திரளான மக்களும் சிறைப்பட்டனர். ஏழைகள் மட்டுமே யூதேயாவில் விட்டு வைக்கப்பட்டனர்,* 2 *அரசர்கள்* 25:12.

வசனம் 106:37
"பேய்கள்" -
OV, *பிசாசுகள்;* shade *என்ற மூலச் சொல், இங்கும் இணைச் சட்டம்* 32:17*ல் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது.*

வசனம் 106:39
"...வேசித்தனம்..." -
*சிலை வழிபாடு, விடுதலைப் பயணம்* 34:15; *நீதித் தலைவர்கள்* 2:17, 8:33; *எரேமியா* 3:1-9; *எசேக்கியேல்* 6:9; *ஓசேயா* 1:2, 4:10-18.

வசனம் 106:41
"*வேற்றினத்தாரின் கையில் அவர் அவர்களை ஒப்படைத்தார்*" -
*மக்களினமாக இஸ்ரயேலுக்கு மீறுதல்களுக்காக ஆண்டவர் வழங்கிய தண்டனை, நீதித் தலைவர்கள்* 2:14; 2 *அரசர்கள்* 17:20; *அபக்கூக்கு* 1:5-11.

வசனம் 106:44-46
*கடவுள் இரக்கமும் மனவுருக்கமும் உள்ளவர்; அவரது சினம் நொடிப் பொழுதுதான், அவரது கருணையோ வாழ்நாள் முழுவதும் நீடிக்கும். தமது வாக்குறுதிகளையும், தமது அடியார்கள் வழியாக ஏற்படுத்திய உடன்படிக்கையையும் கடவுள் நினைவுகூர்ந்து, இஸ்ரயேலரின் சிறையிருப்பை மாற்றினார்.*

வசனம் 106:44
*மக்களின் கூக்குரலுக்குச் செவி மடுக்கும் ஆண்டவர், நீதித் தலைவர்கள்* 3:9, 4:3&23, 6:7-10, 10:10&16.

வசனம் 106:47
சிதறடித்த ஆண்டவர் தாமே இஸ்ரயேலரை வெவ்வேறு நாடுகளிலிருந்து ஒன்று சேர்த்தருள மன்றாட்டு.

வசனம் 106:48
"...*ஊழி ஊழியாய்*..." -
தொடக்கமும் முடிவுமற்றவராக என்றென்றும் ஆளுகை செய்யும் கடவுளாகிய ஆண்டவர், நான்காம் தொகுதியில் வலியுறுத்தப்படும் செய்தி, 90:2, 103:17.

"ஆமென்" - ஒவ்வொரு தொகுதியின் முடிவிலும் இடம்பெறும் ஆமோதிப்பின் சொல்.
🕎

*கடவுளின் அருளாசிகளையும், இஸ்ரயேலின் தகுதியின்மையையும் இந்தத் திருப்பாடல் வெளிச்சம் பாய்ச்சிக் காட்டுகிறது. சிறு கூட்ட மக்களைத் தமக்கே உரிய மக்களாக, ஓர் ஆற்றல்மிக்க நாடாக தாவீதின் காலத்தில் ஆண்டவர் உருவாக்கினார்; அந்த மக்களோ, அந்த விலைமதிப்பற்ற ஆசியை மறந்து, அவருடைய கட்டளைகளை மீறிச் செயல்பட்டு, பெரும் பாவத்தைத் தொடர்ந்து செய்தனர். ஓய்வுநாள் மற்றும் யூபிளி ஆண்டுக்கான கற்பனைகளை மீறினர்; ஏழைகளை, ஒடுக்கப்பட்டோரை, அந்நியரைத் தொடர்ந்து வஞ்சித்துப் பாவம் செய்தனர்.*

*இன்றைக்கு நாம் நமது நாட்டில் கோடிக்கணக்கான மக்களாக உள்ளோம். கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட, ஆசி பெற்ற மக்களாக உயர்ந்த நிலையில் வாழ்கிறோம். ஆனால் இந்த நாட்டின் நல்வாழ்வுக்கு நமது பங்களிப்பு என்ன? புறக்கணிக்கப்பட்ட எளிய மக்களின் உரிமைகளுக்கான நமது குரல் எங்கே? படைப்பிற்கு எதிரான அணு உலை போன்ற திட்டங்களில் நமது பங்களிப்பு என்ன? கடவுளின் பார்வையில் நமது செயல்கள் எப்படி இருக்கின்றன என்பதை நாம் சற்றேனும் சிந்திக்கிறோமா?*

✝

# தொகுதி 5

**(திருப்பாடல் 107 முதல் திருப்பாடல் 150 முடிய)**

## 19 திருப்பாடல் 107

*(கடவுளின் கருணையைப் புகழ்தல்)*

1 ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்;
ஏனெனில், அவர் நல்லவர்;
என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு.
2 ஆண்டவரால் மீட்படைந்தோர்,
எதிரியின் கையினின்று அவரால் மீட்கப்பட்டோர்,
3 கிழக்கினின்றும், மேற்கினின்றும்,
வடக்கினின்றும் தெற்கினின்றும்,
பல நாடுகளினின்றும்
ஒன்று சேர்க்கப்பட்டோர் சொல்வார்களாக.
4 பாலைநிலத்தில் பாழ் வெளியில்
சிலர் அலைந்து திரிந்தனர்;
குடியிருக்குமாறு ஒரு நகருக்குச் செல்ல
அவர்கள் வழி காணவில்லை;
5 பசியுற்றனர்; தாகமுற்றனர்;
மனச்சோர்வுற்றுக் களைத்துப்போயினர்.
6 தம் நெருக்கடியில் ஆண்டவரைக் கூவியழைத்தனர்;
அவர்களுக்குற்ற துன்பங்களிலிருந்து
அவர்களை அவர் விடுவித்தார்.
7 நேரிய பாதையில் அவர்களை வழிநடத்தினார்;
குடியிருக்கும் நகரை அவர்கள் அடையச் செய்தார்.
8 ஆண்டவரின் பேரன்பை முன்னிட்டு,
மானிடர்களுக்காக அவர் செய்த
வியத்தகு செயல்களை முன்னிட்டு,
அவர்கள் அவருக்கு நன்றி செலுத்துவார்களாக!
9 ஏனெனில், தாகமுற்றோர்க்கு அவர் நிறைவளித்தார்;
பசியுற்றோரை நன்மையால் நிரப்பினார்.
10 சிலர் காரிருளிலும் சாவின் நிழலிலும் கிடந்தனர்;
விலங்கிடப்பட்டுத் துன்பத்தில் உழன்றனர்.
11 ஏனெனில், அவர்கள்
இறைவனின் கட்டளைகளை எதிர்த்து நின்றனர்;
உன்னதரின் அறிவுரைகளைப் புறக்கணித்தனர்.
12 கடும் வேலையால் அவர் அவர்களின்
உள்ளத்தைச் சிறுமைப்படுத்தினார்;
அவர்கள் நிலைகுலைந்து போயினர்;
அவர்களுக்குத் துணைசெய்வார் எவருமிலர்.
13 அவர்கள் தம் நெருக்கடியில்
ஆண்டவரைக் கூவியழைத்தனர்;
அவர் அவர்களைத் துன்பங்களிலிருந்து விடுவித்தார்.
14 காரிருளிலும் சாவின் நிழலிலும்
கிடந்த அவர்களை அவர் வெளிக்கொணர்ந்தார்.
அவர்களைப் பிணித்திருந்த தளைகளைத் தகர்த்தெறிந்தார்.
15 ஆண்டவரின் பேரன்பை முன்னிட்டு,
மானிடரான அவர்களுக்கு
அவர் செய்த வியத்தகு செயல்களை முன்னிட்டு,

அவர்கள் அவருக்கு நன்றி செலுத்துவார்களாக!
16 ஏனெனில், வெண்கலக் கதவுகளை
அவர் தகர்த்துவிட்டார்;
இரும்புத் தாழ்ப்பாள்களை உடைத்துவிட்டார்.
17 சிலர் தங்கள் தீயநெறிகளை முன்னிட்டு
நோய்களுக்கு உள்ளாயினர்;
அவர்களுடைய தீச்செயல்களின் பொருட்டுத்
துன்பங்களுக்கு உள்ளாயினர்.
18 எல்லா உணவையும் அவர்களின் மனம் வெறுத்தது;
சாவின் வாயில்களை அவர்கள் நெருங்கினார்கள்.
19 அவர்கள் தம் நெருக்கடியில் ஆண்டவரைக் கூவியழைத்தனர்;
அவர் அவர்களைத் துன்பங்களினின்று விடுவித்தார்.
20 தம் வார்த்தையை அவர் அனுப்பி
அவர்களைக் குணப்படுத்தினார்;
அழிவினின்று அவர்களை விடுவித்தார்.
21 ஆண்டவரின் பேரன்பை முன்னிட்டு,
மானிடரான அவர்களுக்கு
அவர் செய்த வியத்தகு செயல்களை முன்னிட்டு,
அவர்கள் அவருக்கு நன்றி செலுத்துவார்களாக!
22 நன்றிப் பலிகளை அவர்கள் செலுத்துவார்களாக!
அக்களிப்போடு அவர்தம் செயல்களைப் புகழ்ந்தேத்துவார்களாக!
23 சிலர் கப்பலேறிக் கடல்வழிச் சென்றனர்;
நீர்த்திரள்மீது வாணிகம் செய்தனர்.
24 அவர்களும் ஆண்டவரின் செயல்களைக் கண்டனர்;
ஆழ்கடலில் அவர்தம் வியத்தகு செயல்களைப் பார்த்தனர்.
25 அவர் ஒரு வார்த்தை சொல்ல, புயல் காற்று எழுந்தது;
அது கடலின் அலைகளைக் கொந்தளிக்கச் செய்தது.
26 அவர்கள் வானமட்டும் மேலே வீசப்பட்டனர்;
பாதாளமட்டும் கீழே தள்ளப்பட்டனர்;
அவர்கள் உள்ளமோ இக்கட்டால் நிலைகுலைந்தது.
27 குடிவெறியரைப் போல் அவர்கள் தள்ளாடித் தடுமாறினர்;
அவர்களின் திறனெல்லாம் பயனற்றுப் போயிற்று.
28 தம் நெருக்கடியில் அவர்கள் ஆண்டவரைக் கூவியழைத்தனர்;
அவர்களுக்குற்ற துன்பங்களிலிருந்து
அவர் அவர்களை விடுவித்தார்.
29 புயல்காற்றை அவர் பூந்தென்றலாக மாற்றினார்;
கடல் அலைகளும் ஓய்ந்துவிட்டன.
30 அமைதி உண்டானதால் அவர்கள் மகிழ்ச்சியுற்றனர்;
அவர்கள் விரும்பிய துறைமுகத்திற்கு
அவர் அவர்களைக் கொண்டு போய்ச் சேர்த்தார்.
31 ஆண்டவரின் பேரன்பை முன்னிட்டு,
மானிடரான அவர்களுக்கு
அவர் செய்த வியத்தகு செயல்களை முன்னிட்டு
அவர்கள் அவருக்கு நன்றி செலுத்தவார்களாக!
32 மக்களின் பேரவையில் அவரைப் புகழ்ந்தேத்துவார்களாக!
பெரியோரின் மன்றத்தில் அவரைப் போற்றுவார்களாக!
33 ஆறுகளை அவர் பாலை நிலமாக்கினார்;
நீரோடைகளை அவர் வறண்ட தரையாக்கினார்.

34 செழிப்பான நிலத்தை உவர் நிலமாக்கினார்;
அங்குக் குடியிருந்தோரின்
தீச்செயலை முன்னிட்டு இப்படிச் செய்தார்.
35 பாலை நிலத்தையோ நீர்த் தடாகமாக மாற்றினார்;
வறண்ட நிலத்தை நீருற்றுகளாகச் செய்தார்.
36 பசியுற்றோரை அங்கே குடியேற்றினார்;
அவர்கள் அங்கே குடியிருக்க நகரொன்றை அமைத்தனர்.
37 அங்கே அவர்கள் வயலில் விதைத்தனர்;
திராட்சைத் தோட்டங்களை அமைத்தனர்;
அறுவடைக்கான கனிகளை அவை ஈன்றன.
38 அவர் ஆசி வழங்கினார்;
அவர்கள் மிகுதியாகப் பல்கிப் பெருகினர்;
அவர்களின் கால்நடைகளைக் குறைந்துபோக விடவில்லை.
39 பின்பு, அவர்களின் தொகை குறைந்தது;
அவர்கள் ஒடுக்கப்பட்டு, துன்புறுத்துப்பட்டு
இகழ்ச்சிக்கு உள்ளாயினர்.
40 தலைவர்கள்மேல் இகழ்ச்சியைக் கொட்டி,
அவர்களைப் பாதையற்ற பாழ் வெளியில்
அலையச் செய்தார் அவர்.
41 ஆனால், எளியோரை அவர்
துன்ப நிலையினின்று தூக்கிவிட்டார்,
அவர்கள் குடும்பங்களை
மந்தை போல் பெருகச் செய்தார்.
42 நேர்மையுள்ளோர் இதைப் பார்த்து மகிழ்கின்றனர்;
தீயோர் யாவரும் தங்கள் வாயை மூடிக்கொள்கின்றனர்.
43 ஞானமுள்ளோர் இவற்றைக் கவனத்தில் கொள்ளட்டும்!
அவர்கள் ஆண்டவரின் பேரன்பை உணர்ந்து கொள்ளட்டும்!

திருப்பாடல் 107:1-43

**சிந்தனைக்கு**

தொகுதி 5, முதலிரு தொகுதிகளைப் போல, கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்ட அரசரை நினைவூட்டும் தாவீதியத் திருப்பாடல்கள் மிகுந்த தொகுதியாக உள்ளது (108 ~ 110 & 138 ~ 145). தாவீதின் வழியில் மேசியாவை எதிர்நோக்கி வாழ்ந்த இஸ்ரயேலருக்கு அரசரின் வழியில் மீட்பர் என்பது மிகுந்த நம்பிக்கை தருவதாகும். இறைவாக்கு நூல்களில் பெரிதும் விதைக்கப்பட்டது இந்த நம்பிக்கையே ஆகும் (எசாயா 11:1-10; எரேமியா 23:5-6; எசேக்கியேல் 34:23-24; ஒசேயா 3:5; ஆமோஸ் 9:11).

புதிய தொகுதி, ஆனால் முந்தைய திருப்பாடலின் தொடர்ச்சியான திருப்பாடல் (ஒப்பிடுக, வ.1&106:1; வ.2-3&106:47). அந்த வகையில், தொகுதி-4லிருந்து தொகுதி-5க்குள் நுழைவது தனித்தன்மையான தொடர்ச்சியாக விளங்குகிறது. திருப்பாடல் 106 எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்ட மக்களின் மீட்பைப் பாடியது போல, திருப்பாடல் 107 சிறைப்பட்ட மக்களின் மீட்பைப் பாடுகிறது.

சிறையிருப்பு குறித்து வரலாற்று நூல்களில் சொல்லப்படாத புதிய செய்திகளை இத்திருப்பாடல் நமக்குத் தருகிறது. இக்கட்டான சூழ்நிலைகளில் கடவுளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு குறித்த நன்றிப் பாடலாக இத்திருப்பாடல் விளங்குகிறது. இத்திருப்பாடலில்

சொல்லப்பட்டுள்ள நான்கு இடர்கள், எகிப்திலிருந்து வாக்களிக்கப்பட்ட நாட்டுக்கு வரும் வழியில் ஏற்பட்ட நிகழ்வுகளின் நினைவுகூரலே என்று சொல்லப்படுவதும் உண்டு.

துணையின்றி அல்லது ஆதரவின்றித் தவிப்போரின் நான்கு நிலைகளைக் குறித்து இத்திருப்பாடல் சொல்கிறது - பாலைநிலத்தில் வழியற்று அலைதல், வ.4-9; சிறையில் அடைக்கப்பட்டு வாடுதல், வ.10-16; கடும் நோயில் துன்புறுதல், வ.17-22; கடும் புயலில் சிக்கிய படகிலிருந்து மீட்கப்படல், வ.23-32. ஒவ்வொரு பகுதியிலும், துன்புற்றோரின் மன்றாட்டும் (வ.6,13,19&28), மீட்கப்பட்டோரின் நன்றி செலுத்துதலும் (வ.8,15,21&31) மீண்டும் மீண்டும் பாடப் படுகின்றன.

தலைப்பற்ற திருப்பாடல்; பாடலை ஆக்கியோர் குறித்த குறிப்பு ஏதுமில்லை. சிறை மீண்டோரின் வியத்தகு அனுபவங்களை இத்திருப்பாடல் குறிப்பிடுவதால், வெவ்வேறு நாடுகளிலிருந்து வெவ்வேறு காலகட்டங்களில் எருசலேமில் ஒன்றுசேர்ந்த இஸ்ரயேலரில் ஒருவரோ சிலரோ இத்திருப்பாடலை இயற்றி இருக்கலாம்.

சிறை மீண்டோரின் முதல் கூடாரப் பெருவிழாவில் இத்திருப்பாடல் பாடப்பட்டு (எஸ்ரா 3:1-7), பிறகு இரண்டாவது திருக்கோவில் காலத்தில், வழிபாடுகளில் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அமைப்பு:
வ.1-3, நன்றியும் போற்றுதலும்
வ.4-9, வழிதவறியோரும் வழிகாட்டியும்
வ.10-16, சிறையில் துன்புற்றோரும் விடுதலையாளரும்
வ.17-22, நோயுற்றோரும் மருத்துவரும்
வ.23-31, கடலில் பயணம் சென்றோரும் காப்பாளரும்
வ.32-43, மீட்பும் அதன் தொடர்ச்சியான ஆசிகளும்

வசனம் 107:1
அளவற்ற அருளாளரான ஆண்டவருக்கு நன்றி! முந்தைய திருப்பாடல்களின் தொடர்ச்சியான தொடக்கம், 105:1, 106:1. மேலும் பார்க்க 118:1, 136:1&29; எரேமியா 33:11.

பேரன்பு -
OV, கிருபை; மூலச் சொல், kheh-sed, இரக்கம், கருணை, கிருபை, நன்மை, அருள், தயவு என்று பொருள்படும். இந்தத் திருப்பாடலில் இச்சொல், வ.1,8,15,21,31,43 ஆகிய வசனங்களில் இடம்பெற்றுள்ளது. அதன் அடிப்படையில், கைவிடாத பேரன்பின் திருப்பாடல் என்று இத்திருப்பாடலைச் சொல்லலாம்.

வசனம் 107:2-3
"...மீட்படைந்தோர் ... மீட்கப்பட்டோர் ... ஒன்று சேர்க்கப்பட்டோர் ..." -
இறைவேண்டலுக்கு ஆண்டவரின் மறுமொழி, ஒப்பிடுக, 106:47.

"எதிரி" - OV, சத்துரு; இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எபிரேயச் சொல், வ.6,13,19&28ல், துன்பம் (OV, ஆபத்து) என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது.

வசனம் 107:3
*அசீரியராலும் பாபிலோனியராலும் சிறைப்பிடிக்கப்பட்டு சிதறடிக்கப்பட்ட இஸ்ரயேலர்* (2 *அரசர்கள்* 17:6 & 24~25; *எஸ்தர்* 8:5,9&13; *எரேமியா* 52:28-30), *மீண்டும் இஸ்ரயேலில் ஒன்று சேர்க்கப்படுவர் என்ற இறைவாக்கின் நிறைவேற்றம், எசாயா* 43:5-6, 56:8; *எசேக்கியேல்* 11:17, 20:34&41. மேலும் *பார்க்க நெகேமியா* 1:8-9.

"...சொல்வார்களாக" -
*இறையாசி பெற்ற மக்கள், அதுகுறித்துப் பேச வேண்டும்,* 9:11, 73:28, 118:17. *புதிய ஏற்பாட்டுப் பற்றுறுதியாளரான நமக்கு அதுவே கட்டளை, மத்தேயு* 10:32; *திருத்தூதர் பணிகள்* 1:8; *உரோமையர்* 1:15-16. *நற்செய்தி அறிவிக்கும் திருப்பணி குறித்து இங்கு சொல்லப்படவில்லை; உரையாடல் வழியே நாம் ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய கடமை குறித்தே இங்கு பேசப்படுகிறது.*

வசனம் 107:4-5
*தங்கள் மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்ட இஸ்ரயேலருக்கு நேர்ந்த துயரங்கள்.*

வசனம் 107:4,7&36
"...*குடியிருக்குமாறு ஒரு நகர்*..." -
*தொன்மையான நகர்கள் நீர் வளமும், செழிப்பும் நிறைந்த இடங்களில் அமைந்தன என்பது நினைவில் கொள்ளத்தக்கது. பசியுற்றோர் தாகமடைந்தார் அத்தகைய வாழ்விடத்தைத் தேடிப் பாழ்வெளியில் அலைந்து திரிந்தனர்.*

வசனம் 107:6
இணை, வ.13,19&28.
*சிறைப்பட்ட இஸ்ரயேலரின் துன்பங்களை நான்கு வகைப்படுத்தும் திருப்பாடகர், அவைகளிலிருந்து ஆண்டவரால் மீட்கப்பட்டதை நினைவுகூர்கிறார்.*

"...ஆண்டவரைக் கூவியழைத்தனர்" -
*கலகம் செய்யும் இஸ்ரயேலர் (திருப்பாடல்* 106), *வரலாற்றில் மீட்பராக இடைப்படும் ஆண்டவரிடம் (திருப்பாடல்* 105) *முறையிடுதல், விடுதலைப் பயணம்* 2:23; *நீதித் தலைவர்கள்* 3:9&15, 6:6-8; 1 *சாமுவேல்* 9:16; நெகேமியா 9:27-28. மேலும் பார்க்க, 34:6&17, 50:15, 91:14-16.

வசனம் 107:7
*எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரயேலருக்கு ஏற்படுத்தப்பட்ட வழியைப் போல, சிறையிருப்பிலிருந்து மீண்ட இஸ்ரயேலருக்கு வழி ஏற்படும் என்ற இறைவாக்கின் நிறைவேற்றம், எசாயா* 11:16. மேலும் *பார்க்க, எசாயா* 35:8-10, 49:5,9-12,22-26, 52:7-12.

வசனம் 107:8
*மீண்டும் மீண்டும் இத்திருப்பாடலில் தொடரும் இணைப்பு வசனம்,* வ.15,21&31.

வியத்தகு செயல்கள் -
*கடவுளின் வியத்தகு செயல்களை நினைவுகூர அழைப்பு,* 105:5.

வசனம் 107:9
*சிறைப்பிடிக்கப்பட்ட இஸ்ரயேலருக்கு நேர்ந்த துன்பம்; எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரயேலரைப் பராமரித்த ஆண்டவர்* (105:40-41; *விடுதலைப் பயணம்* 15:25, 16:13-35) *சிறைப்பிடிக்கப்பட்ட இஸ்ரயேலரையும் பராமரித்தார்.*

வசனம் 107:10 OV 11
பண்டைய காலத்தில் சிறைகள் நிலவறைகளில் அமைக்கப்பட்டன, எரேமியா 37:16. அவை நிலமட்டத்திற்குக் கீழே அமைக்கப்பட்டதால், இயல்பாகவே ஒளியும் காற்றோட்டமும் இல்லாமல் இருந்தன; இருள் என்பது இறைப் பிரசன்னத்தின் இழப்பு, சாவை நினைவூட்டுவது, 35:6; எசாயா 5:30, 8:22, 59:9.

வசனம் 107:11 OV 10
மனிதர்கள் தங்கள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சோதனைகளைச் சகிப்பதில்லை; மாறாக ஆண்டவருக்கு எதிராகக் கலகம் செய்து பாவத்தில் விழுகின்றனர்; ஆனால் விதிவிலக்காக நாம் சிறப்புற வாழ முன்மாதிரியாக வாழ்ந்த யோபு போன்றோரையும் பார்க்கிறோம். நாம் பவுலடிகள் சொன்னதை என்றும் நினைவில் வைப்போம்: "கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கக் கூடியது எது?" (உரோமையர் 8:35-39)

வசனம் 107:12
"...துணை செய்வார் எவருமிலர்" -
துணையற்ற நிலை என்பது ஆதரவற்ற, அனைவராலும் கைவிடப்பட்ட, தனித்து விடப்பட்ட நிலை, துன்பத்தின் உச்ச நிலை, 22:11; 2 அரசர்கள் 14:26; யோபு 30:13; புலம்பல் 1:7.

வசனம் 107:14-15
சிறையிருப்பை மாற்றிய ஆண்டவர்; மேலும் பார்க்க, 86:13; எரேமியா 30:8; நாகூம் 1:13.

வசனம் 107:16
இணை, எசாயா 45:2.

"வெண்கலக் கதவுகள்..." -
தொன்மைக் கால உறுதியான கதவுகள் மரத்தால் அமைந்தவை; பின்னர் அவை வெண்கலக் கதவுகளாக மாறின, 1 அரசர்கள் 4:13; இரும்பு கண்டுபிடிக்கப்பட்ட பிறகு உறுதிக்கு அதுவே பயன்பட்டது, எரேமியா 1:18, 15:12.

வசனம் 107:17
"சிலர்" -
OV, நிர்மூடர்; evîyl என்ற மூலச் சொல், வேறு பல இடங்களில், மூடர், அறிவிலி என்றே பொது மொழிபெயர்ப்பில் பொருள் கொள்ளப்பட்டுள்ளது; ஆனால் அதற்கு மாறாக இங்கு "சிலர்" என்று பொருள் கொள்வது விநோதமானது. பாவத்திற்கு வழிவகுப்பது மூடத்தனம், 38:4-5, 69:5; நீதிமொழிகள் 1:7.

வசனம் 107:18
மனதிற்கு ஊக்கத்தையும் உடலுக்கு ஆக்கத்தையும் தருவது உணவு, சபை உரையாளர் 2:24-25, 3:12-13, 5:18-20. அத்தகைய உணவை வெறுக்கச் செய்யும் நோயுற்ற நிலை.

வசனம் 107:20
கடவுளின் வாக்கு அனைத்தையும் படைத்தது; அது உயிரூட்ட ஆற்றல் மிக்கது, எசேக்கியேல் 37:7-10. அதுவே மூடருக்கும் உணர்வூட்டுவது, 119:11&105. விரைந்து செயல்படுவது, 147:15.

வசனம் 107:22
மூடத்தனத்திலிருந்து மீட்கப்பட்டோர், விழிப்புணர்வோடு செயல்படும் முறையை அறிவுறுத்தும் திருப்பாடகர்; மேலும் பார்க்க, 50:14, 116:17.

வசனம் 107:23-24
அழிவைத் தரும் கட்டுக்கடங்காத ஆற்றல் கடல்; அதையும் ஆளுகை செய்யும் ஆண்டவர், 93:3-4; விடுதலைப் பயணம் 14:21-30; யோபு 38:8-11; மாற்கு 4:35-41.

கடல் வணிகம் செய்த இஸ்ரயேலர், தொடக்க நூல் 49:13; நீதித் தலைவர்கள் 5:17; 1 அரசர்கள் 9:26-28, 10:22.

வசனம் 107:25-30
இயற்கையின் ஆற்றல்கள் அனைத்தின் மீதும் ஆளுகை செய்யும் ஆண்டவர், யோபு 37:9-12.

வசனம் 107:32-42
நிறைவாக ஆண்டவருக்குப் புகழ்ப் பாடல்.

வசனம் 107:32
"...பெரியோர்..." -
மூத்தோர்; அவர்கள் தங்கள் குலச் சிக்கல் தீர்க்கும் நீதித் தலைவர்கள் மட்டுமல்ல (விடுதலைப் பயணம் 3:16, 18:21-22; இணைச் சட்டம் 22:15); போரில் வழிநடத்தும் தலைவர்கள் மட்டுமல்ல (யோசுவா 8:10); வழிபாட்டிலும் அவர்கள் மக்களுக்கு உற்சாகமூட்டி வழிநடத்த வேண்டும். இன்றைக்குத் திருச்சபையில் மூத்தோர் பங்களிப்பு எவ்வாறு இருக்கிறது?

வசனம் 107:33&35
இணை, எசாயா 35:6-7, 41:18, 43:19-20

வசனம் 107:34
இணை, எசாயா 42:15, 50:2.
பாவம் சாபத்தைக் கொண்டு வருகிறது, தொடக்க நூல் 3:14-19.

வசனம் 107:35-36
ஒப்பிடுக, வ.4. தங்கள் தவறுகளுக்காக வருந்தி, கடவுளைக் கூவி அழைப்போருக்கு அவர் அருளும் மறுவாழ்வு.

வசனம் 107:37-38
ஆண்டவர் அருளும் நலன்கள், இணைச் சட்டம் 28:11-12. மேலும் பார்க்க, தொடக்க நூல் 1:28, 9:1-2&7.

வசனம் 107:39-41
பார்க்க, 113:7-8.
நமது ஆண்டவர் ஏழைகளுக்கான, ஒடுக்கப்பட்ட, துன்புறுத்தப்பட்ட மக்களின் கடவுள். பைபிள் வாசிப்பின் நெடுகிலும் நாம் வாசித்து உணரும் உண்மை இதுவே (மேலும் படித்து உணர, God of the Poor, a Biblical vision of God's Present Rule by Dewi Hughes).

வசனம் 107:40
தலைவர்களை இகழும் ஆண்டவர், யோபு 12:21&24. மேலும் பார்க்க, இணைச் சட்டம் 32:10&15; தானியேல் 4:29-33.

வசனம் 107:42
நேர்மையாளர் - தீயோர் முரண் என்பது திருப்பாடல்கள் நூலின் அடிநாதம்.

வசனம் 107:43
ஒப்பிடுக, இணைச் சட்டம் 32:29; ஒசேயா 14:9.
🕎

இந்தத் திருப்பாடல் துயருறும் மாந்தர்க்கு நம்பிக்கை தருவது; மெய்யாகவே தம்மைக் கூவி அழைப்போரை அவர்களுடைய துன்பங்கள் அனைத்திலிருந்தும் விடுவிக்க அருளும் ஆற்றலும் நிறைந்தவர் கடவுள் என்பதை வலியுறுத்துவது (வ.6,13,19&28). "ஞானமுள்ளோர் இவற்றைக் கவனத்தில் கொள்ளட்டும்! அவர்கள் ஆண்டவரின் பேரன்பை உணர்ந்து கொள்ளட்டும்!" (வ.43)

✝

## 19 திருப்பாடல் 108
(திருப்பாடல் 57:7-11 & 60:5-12)

(பகைவரிடமிருந்து விடுவிக்குமாறு வேண்டல்)

*தாவீதின் புகழ்ப் பாடல்*
1 என் உள்ளம் உறுதியாய் இருக்கின்றது;
கடவுளே! என் உள்ளம் உறுதியாய் இருக்கின்றது;
நான் பாடுவேன். உம்மைப் புகழ்ந்து பாடுவேன்.
என் நெஞ்சே! விழித்தெழு!
2 வீணையே! யாழே! விழித்தெழுங்கள்!
வைகறையை விழித்தெழச் செய்வேன்.
3 ஆண்டவரே, மக்களினங்களிடையே
உமக்கு நன்றி செலுத்துவேன்;
எல்லா இனத்தாரிடையேயும்
உம்மைப் புகழ்ந்து பாடுவேன்.
4 ஏனெனில், வானளவு உயர்ந்துள்ளது உமது பேரன்பு!
முகில்களைத் தொடுகின்றது உமது உண்மை!
5 கடவுளே! வானங்களுக்கு மேலாக
நீர் உயர்வு பெறுவீராக!
பாரெங்கும் உமது மாட்சி விளங்குவதாக!
6 உம் அன்பர்கள் விடுதலை பெறுமாறு
உமது வலக்கையால் அவர்களுக்குத் துணை செய்யும்!
என் விண்ணப்பத்திற்குப் பதிலளியும்!
7 கடவுள் தமது தூயகத்தினின்று இவ்வாறு உரைத்தார்:
"வெற்றிக் களிப்பிடையே செக்கேமைப் பங்கிடுவேன்;
சுக்கோத்துப் பள்ளத்தாக்கை அளந்து கொடுப்பேன்!
8 கிலயாது என்னுடையது;
மனாசேயும் என்னுடையதே;
எப்ராயிம் என் தலைச்சீரா,
யூதா என் செங்கோல்!
9 மோவாபு எனது பாதங்கழுவும் பாத்திரம்;
ஏதோமின்மீது எனது மிதியடியை எறிவேன்;
பெலிஸ்தியாவை வென்று ஆர்ப்பரிப்பேன்!"

10 அரண்சூழ் நகரினுள் என்னை இட்டுச் செல்பவர் யார்?
ஏதோம்வரைக்கும் என்னைக் கூட்டிச் செல்பவர் யார்?
11 கடவுளே! நீர் எங்களைக் கைவிட்டு விட்டீர் அன்றோ?
கடவுளே! நீர் எங்கள் படைகளோடு
புறப்படவில்லை அன்றோ?
12 எதிரியை மேற்கொள்ள எங்களுக்கு உதவும்;
மனிதர் தரும் உதவியோ வீண்;
13 கடவுளின் துணையால் வீரத்துடன் போரிடுவோம்;
அவரே நம் எதிரிகளை மிதித்துவிடுவார்.

திருப்பாடல் 108:1-13

**சிந்தனைக்கு**

சொல்லுக்குச் சொல் இத்திருப்பாடல் இரண்டு தாவீதியத் திருப்பாடல்களின் இணைப்பு. 57:7-11, வ.1-5 ஆகவும், 60:5-12, வ.6-13 ஆகவும் இத்திருப்பாடலில் அமைகின்றன.

இரண்டு திருப்பாடல்களும் வெவ்வேறு சூழல்களில் தாவீதால் இயற்றப்பட்டவை. இரண்டின் கலவையான இத்திருப்பாடல், திருப்பாடல் 60ன் சூழலுக்குப் பாடப்பட்டது போன்ற தோற்றம் தருகிறது. அவ்விரண்டு திருப்பாடல்களின் எதிர்மறையான கருத்துகள் இத்திருப்பாடலில் இல்லாமை, இப்பாடலுக்கு ஓர் இனிமையான சிறப்பைத் தருகிறது.

ஆண்டவரின் பேரன்பைக் / கிருபையைக் குறித்துப் பாடுவதில், இத்திருப்பாடல் (வ.4) இதற்கு முந்தைய திருப்பாடலோடு தொடர்புடையது (107:1,8,15,21,31&45).

அமைப்பு:
வ.1-6, மீட்பின் கடவுளைத் தொழுதல்
வ.7-9, கடவுள்தம் வாக்கை நினைவூட்டல்
வ.10-13, ஏதோம் மீது கடவுள் வெற்றி அருள்வார் என்னும் நம்பிக்கை

வசனம் 108:3
57:9ல், "யாவே" என்ற பெயர்ச்சொல்லுக்கு மாறாக, "அதோனாய்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.

வசனம் 108:6
இங்கு "அவர்களுக்கு" என்று உள்ளது, 60:5ல் "எங்களுக்கு" என்று உள்ளது. இங்கு "என் விண்ணப்பம்" என்பது அங்கு "எங்கள் விண்ணப்பம்" என்று உள்ளது.

இந்த வேறுபாடுகளைத் தவிர, வேறெந்த வேறுபாடும் 57 மற்றும் 60 திருப்பாடல்களின் குறிப்பிட்ட வசனங்களோடு இந்தத் திருப்பாடலுக்கு இல்லை. எனவே ஏனைய வசனக் குறிப்புகளுக்கு திருப்பாடல் 57 மற்றும் 60ன் குறிப்புகளைப் பாருங்கள்.

இரண்டு திருப்பாடல்களின் வசனங்களைத் தெரிந்தெடுத்து தாவீதே இத்திருப்பாடலை இயற்றினாரா அல்லது பிற்காலத்தில் தானாக யாரும் செய்தனரா என்பது தெரியவில்லை.

பாடலின் கருப்பொருளை வைத்துப் பார்த்தால், ஏதோமுக்கு எதிரான போரின் வேளையில் பாடப்பட்டது என்பது உறுதி. எனவே தாவீதுக்குப் பிறகு, ஏதோமோடு ஏற்பட்ட ஒரு போர்ச் சூழலிலும் கூட, இந்தப் பாடல் உருவாக்கப் பட்டிருக்கலாம்.

எதுவாயினும், இத்திருப்பாடல் தனியாகத் தன்னில் சிறப்பான ஒன்றாக உள்ளது. புதிய பாடல் பாடுவதில் மட்டுமல்ல, ஆண்டவருக்காகப் பாடப்பட்ட பழைய பாடல்களும் என்றென்றும் வாழும் ஆண்டவருக்கு, எல்லாக் காலங்களிலும் உயிர்ப்போடு விளங்குகின்றன.

## 19 திருப்பாடல் 109

(துன்புற்றவரின் முறையீடு)

*பாடகர் தலைவர்க்கு; தாவீதின் புகழ்ப்பா*

1 என் புகழ்ச்சிக்குரிய இறைவா,
மௌனமாய் இராதேயும்.
2 தீயோரும் வஞ்சனை செய்வோரும்
எனக்கெதிராய்த் தம் வாயைத் திறந்துள்ளனர்;
எனக்கெதிராய் அவர்கள் பொய்களைப் பேசியுள்ளனர்.
3 பகைவரின் சொற்கள் என்னைச் சூழ்ந்துள்ளன;
அவர்கள் காரணமின்றி என்னைத் தாக்குகின்றனர்.
4 நான் காட்டிய அன்புக்குக் கைம்மாறாக
என்மேல் குற்றம் சாட்டினர்;
நானோ அவர்களுக்காக மன்றாடினேன்.
5 நன்மைக்குப் பதிலாக அவர்கள்
எனக்குத் தீமையே செய்தனர்;
அன்புக்குப் பதிலாக அவர்கள்
வெறுப்பையே காட்டினர்;
6 அவர்கள் கூறியது:
"அவனுக்கு எதிராகத் தீயவனை எழும்பச் செய்யும்!
'குற்றம் சாட்டுவோன்' அவனது வலப்பக்கம் நிற்பானாக!
7 நீதி விசாரணையின்போது
அவன் தண்டனை பெறட்டும்!
அவன் செய்யும் வேண்டுகோள்
குற்றமாகக் கருதப்படுவதாக!
8 அவனது வாழ்நாள் சொற்பமாகட்டும்;
அவனது பதவியை
வேறோருவன் எடுத்துக் கொள்ளட்டும்!
9 அவனுடைய பிள்ளைகள் தந்தை இழந்தோர் ஆகட்டும்!
அவனுடைய மனைவி கைம்பெண் ஆகட்டும்!
10 அவனுடைய பிள்ளைகள்
அலைந்து திரிந்து பிச்சை எடுக்கட்டும்!
பாழான தங்கள் வீடுகளிலிருந்து
அவர்கள் விரட்டப்படட்டும்!
11 அவனுக்கு உரியவற்றை எல்லாம்

கடன் கொடுத்தவன் பறித்துக் கொள்ளட்டும்!
அவனது உழைப்பின் பயனை
அன்னியர் கொள்ளையடிக்கட்டும்!
12 அவனுக்கு இரக்கங்காட்ட
ஒருவனும் இல்லாதிருக்கட்டும்!
தந்தையை இழந்த, அவனுடைய பிள்ளைகள்மேல்
யாரும் இரங்காதிருக்கட்டும்!
13 அவன் வழி மரபு அடியோடு அழியட்டும்!
அடுத்த தலைமுறைக்கு
அவர்களுடைய பெயர் இல்லாது போகட்டும்!
14 அவனுடைய மூதாதையரின் குற்றத்தை
ஆண்டவர் நினைவில் கொள்ளட்டும்!
அவனுடைய தாய் செய்த பாவத்தை
அவர் மன்னியாது இருக்கட்டும்!
15 அவை என்றும் ஆண்டவர் திருமுன்னே இருக்கட்டும்!
அவனது நினைவை பூவுலகினின்று
அடியோடு அவர் அகற்றட்டும்!
16 ஏனெனில், அவன் இரக்கம் காட்ட நினைக்கவில்லை;
எளியோரையும் வறியோரையும் கொடுமைப்படுத்தினான்;
நெஞ்சம் நொறுங்குண்டோரைக்
கொலைசெய்யத் தேடினான்.
17 சபிப்பதையே அவன் விரும்பினான்;
விரும்பிய அதுவே அவன்மீது விழட்டும்!
ஆசி வழங்குவதை அவன் விரும்பவில்லை;
ஆகவே அது அவனைவிட்டுத் தொலைவில் செல்லட்டும்!
18 சாபமே அவன் அணிந்த ஆடை;
தண்ணீரென அவன் உடலையும்
எண்ணெயென அவன் எலும்புகளையும்
அது நனைக்கட்டும்!
19 அது அவனைப் போர்த்தும் ஆடைபோல் இருக்கட்டும்!
நாள்தோறும் அவன் கட்டும் கச்சைபோல் இருக்கட்டும்!"
20 என்னைக் குற்றம் சாட்டுவோருக்கும்,
எனக்கு எதிராகத் தீயன பேசுவோருக்கும்
ஆண்டவர் அளிக்கும் கைம்மாறாக அது இருப்பதாக!
21 ஆனால், என் தலைவராகிய கடவுளே!
உமது பெயரை முன்னிட்டு என் சார்பாகச் செயல்படும்!
உமது பேரன்பின் இனிமைபொருட்டு
என்னை மீட்டருளும்!
22 நானோ எளியவன்; வறியவன்;
என் இதயம் என்னுள் புண்பட்டுள்ளது.
23 மாலைநேர நிழலைப்போல்
நான் மறைந்து போகின்றேன்;
வெட்டுக் கிளியைப் போல
நான் காற்றில் அடித்துச் செல்லப்படுகின்றேன்.
24 நோன்பினால் என் முழங்கால்கள் தளர்வுறுகின்றன;
என் உடல் வலிமை இழந்து மெலிந்து போகின்றது.
25 நானோ அவர்களது பழிச்சொல்லுக்கு உள்ளானேன்;
என்னைப் பார்க்கின்றோர் தலையை ஆட்டுகின்றனர்.
26 ஆண்டவரே! என் கடவுளே!

எனக்கு உதவியருளும்!
உமது பேரன்பிற்கேற்ப மீட்டருளும்!
27 இது உம் ஆற்றலால் நிகழ்ந்தது
என அவர்கள் அறியட்டும்!
ஆண்டவரே! இதைச் செய்தவர் நீரே
என அவர்கள் உணரட்டும்.
28 அவர்கள் என்னைச் சபித்தாலும்
நீர் எனக்கு ஆசி வழங்கும்!
எனக்கு எதிராக எழுவோர் இழிவுறட்டும்!
உம் ஊழியனாகிய நான் அகமகிழ்வேன்.
29 என்னைக் குற்றஞ்சாட்டுவோர்க்கு
மானக்கேடு மேலாடை ஆகட்டும்!
அவர்களின் வெட்கம் அவர்களுக்கு
மேலங்கி ஆகட்டும்!
30 என் நாவினால்
ஆண்டவரைப் பெரிதும் போற்றிடுவேன்;
பெரும் கூட்டத்திடையே அவரைப் புகழ்ந்திடுவேன்.
31 ஏனெனில், வறியோரின் வலப்பக்கம்
அவர் நிற்கின்றார்;
தண்டனைத் தீர்ப்பிடுவோரிடமிருந்து
அவர்களது உயிரைக் காக்க நிற்கின்றார்.

திருப்பாடல் 109:1-31

**சிந்தனைக்கு**

*தாவீதின் புகழ்ப்பா என்கிற தலைப்பு நீங்கலாக, வரலாற்றுச் செய்தி ஏதும் தலைப்பில் இல்லை. உள்ளே பாடலிலும் வரலாற்றுக் குறிப்பு ஏதுமில்லை. துன்பத்தில் இருந்த திருப்பாடகர் என்பது பாடல் வழியாக நாம் அறியும் செய்தி; திருப்பாடகருக்கு எதிரான குரலாக, வ.6-19 ஒலிக்கிறது. சவுல் அல்லது அவரைச் சார்ந்தவர்கள், தாவீதுக்கு எதிராக இவ்வளவு வஞ்சம் கொண்டிருந்ததாக நாம் வரலாற்று நூல்களில் ஏதும் பார்க்க முடியாது; ஆனால் அப்சலோமோடு இருந்த கலவையான எதிரிகளில் யாரோ ஒருவர் (அகிதோபல், சிமயி போன்றோர்), இந்த அளவுக்கு தாவீதின் மீது வன்மம் உடையவராக இருந்திருக்கக் கூடும்.*

*இந்த வாதத்திற்கு எதிர்வாதம் செய்வோர், 'அந்த அளவுக்கு தாவீது எளியவரா? வறியவரா?' என்று கேள்வி எழுப்புகிறார்கள். வடக்கு நோக்கி ஓடிய தாவீது அரசராக ஓடினார்; ஆனால் அதிகாரமோ அரண்மனையோ அவரிடம் இல்லை; எந்தச் செல்வமும் செல்வாக்கும் அவரிடம் இல்லை; மேலும் தாவீது எப்போதும் ஆண்டவரின் முன் தன்னை எளியவராகத் தாழ்த்திக் கொண்டவர் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.*

*கருப்பொருளின் அடிப்படையில், திருப்பாடல் 35 மற்றும் 102 ஆகியவற்றோடு இத்திருப்பாடல் ஒப்பிடத்தக்கது. வ.6-19 மற்றும் இதர வசனங்களை நோக்கினால், தாவீது தனி ஒருவராகவும், எதிரிகளோ பலராகவும் இருப்பதைக் காணலாம்.*

*திருப்பாடல் 69 போலவே, இந்தத் திருப்பாடலும் ஒரு சாபத் திருப்பாடல். திருச்சட்ட முறிவின் விளைவே சாபம் (இணைச் சட்டம் 27:14-26; கலாத்தியர் 3:10&13). தாவீதின் மீது எதிரிகள் உரைத்த சாபங்கள் மற்றும் தன் எதிரிகள் மீது தாவீது திருப்பி விட்ட சாபங்கள் என்று இத்திருப்பாடல் அமைந்துள்ளது.*

அமைப்பு:
வ.1-5, உதவிக்கு இறை வேண்டல்
வ.6-19, குற்றம் சாட்டும் எதிரிகளின் கூற்று
வ.20-29, உதவி வேண்டி வலியுறுத்தல்
வ.30-31, பெரும் கூட்டத்தில் ஆண்டவரைப் புகழ உறுதி
🕎

வசனம் 109:1-2
"...மௌனமாய் இராதேயும் ... பொய்களைப் பேசியுள்ளனர்" -
ஆண்டவர் அமைதியாக இருக்கிறார்; ஆனால் தீயோர் தீயவற்றைப் பேசிக்கொண்டும் செய்து கொண்டும் இருக்கின்றனர். கெடுதல், தீமை, நோய், பிணி, மூப்பு - என்று எதுவும் 'ஆண்டவர் நல்லோர் பக்கம் இருக்கிறார்' என்பதற்காக நம்மை விட்டு வைப்பதில்லை! ஆனால் ஆண்டவரோ நமது மன்றாட்டுக்கு மறுமொழி தராமல், அமைதியாக இருக்கிறார்!

தாவீதின் எதிரிகளின் பேச்சு, வ.6-19. ஆண்டவரின் அமைதி, 'அவர்தம் அடியவரை அவர் கைவிட்டு விட்டார்' என்று தீயோர் ஊக்கம் பெறச் செய்து விட்டது.

வசனம் 109:3
ஒப்பிடுக 35:7; மேலும் பார்க்க, 7:3-5, 38:19, 59:3-4, 69:5, 119:161.
நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் நமக்கு எதிராக நடக்கும் எதுவும் காரணமின்றி நடப்பதாக நாம் புலம்புகின்றோம். ஆனால் சோதனைகளின் வழியாக அவர் நம்மைச் சுத்திகரிக்கிறார்; தகுதிப்படுத்துகிறார் (இணைச் சட்டம் 8:5; நீதிமொழிகள் 3:11-12; எசாயா 48:10; எரேமியா 9:7; எபிரேயர் 12:5-11).

வசனம் 109:4-5
ஒப்பிடுக, 35:12-13.
தனக்கு எதிராகத் தீவிரமாகச் செயல்பட்டோரையும், நாட்டின் அமைதிக்காக தாவீது மன்னித்து ஏற்றுக் கொண்டார் (2 சாமுவேல் 3:12-13&20).
ஆனால் தாவீது அரசரின் நன்மைகளைப் பெற்றுக் கொண்டோர், அவருக்கு எதிராகச் செயல்பட்டனர்.

வசனம் 109:6-19
தாவீதின் மீது சாபங்களை விடுக்கும் எதிரிகள்; இவற்றைத் தனது எதிரிகளுக்கே திருப்பிவிட மன்றாடும் தாவீது, வ.20. இங்கு எதிரிகள் பலராகவும், தாவீது தனித்து விடப்பட்டவராகவும் இருக்கின்றனர். (பலரும் இதே வசனங்களை தாவீதின் மன்றாட்டு என்று பார்க்கின்றனர். அவ்வாறு கருதத் தேவையான பொருத்தப்பாடு இல்லை.)

பேதுரு இவற்றுள் சில வசனங்களை யூதாசைக் குறித்த இறைவாக்காக வெளிப்படுத்துகிறார் (திருத்தூதர் பணிகள் 1:15-16; மேலும் ஒப்பிடுக, யோவான் 17:12).

எச்சரிக்கை!
எதிரிகளுக்கு எதிராகச் சாபங்களை ஏறெடுக்கப் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்குக் கட்டளை கொடுக்கப்படவில்லை; நமக்கு எதிராக இருப்போரை மன்னிக்கவும், அவர்களுக்காக மன்றாட மட்டுமே அழைக்கப்படுகிறோம் (மத்தேயு 5:43-48). மன்னிப்பது கட்டளை மட்டுமல்ல, நம்மைக் கடவுள் ஏற்றுக் கொள்ள, நம்மால் தவிர்க்கவே முடியாத வரையறையாக, நிபந்தனையாக இருக்கிறது (மத்தேயு 6:12).

வசனம் 109:6
"...தீயவன் ... குற்றம் சாட்டுபவன்..." -
இரண்டுமே சாத்தானைக் குறிப்பன.

வசனம் 109:7
"நீதி விசாரணை..." -
மண்ணுலகின் நீதி விசாரணை, லேவியர் 19:15; இணைச் சட்டம் 25:1.
விண்ணுலகின் நீதி விசாரணை, 7:8&11, 9:5&8, 96:13, 98:9.

"...வேண்டுகோள் குற்றமாகக் கருதப்படுவதாக" -
ஒருவர் தவறாகப் பயன்படுத்தும் சொற்கள் தண்டனைத் தீர்ப்புக்கு வாய்ப்பாக அமையும், மத்தேயு 12:36-37.

வசனம் 109:8
"...வாழ்நாள் சொற்பமாகட்டும்" -
இறை ஆசிக்கு முரண், தொடக்க நூல் 15:15, 25:7-8; விடுதலைப் பயணம் 20:12-13; இணைச் சட்டம் 6:2, 34:7.

வசனம் 109:10
"...அலைந்து திரிந்து பிச்சை எடுக்கட்டும்" -
காயினுக்கு ஆண்டவர் வழங்கிய தண்டனைத்தீர்ப்பை நினைவூட்டுவது, தொடக்க நூல் 4:12-14.

வசனம் 109:11
உடன்படிக்கை மீறலால் உண்டாகும் சாபம், இணைச் சட்டம் 28:15&33; எரேமியா 20:5; எசேக்கியேல் 23:28-29.

வசனம் 109:12-15
விண்ணிலும் மண்ணிலும் தாவீதின் மூதாதையரும் வழிமரபினரும் வாழ்வற்றுப் போக அவருடைய எதிரிகள் விரும்புகின்றனர்.

வசனம் 109:20
வ.18&19ல் எதிரிகள் சாபத்தை ஆடையாக தாவீதிற்குப் போர்த்த விரும்புகின்றனர்; அதே சாபத்தை அவர்களுக்கு ஆண்டவர் கைம்மாறாக வழங்க தாவீது மன்றாடுகிறார் (54:5, 94:23; எசாயா 3:11)
இதுபோன்ற ஒரு மன்றாட்டைப் பவுலடிகள் ஏறெடுக்கிறார்! (2 திமொத்தேயு 4:14)
பகைவரிடமும் அன்பாயிருக்க கிறிஸ்து இயேசு நம்மை அழைக்கிறார், மத்தேயு 5:43-48.

வசனம் 109:21
"உமது பெயரை முன்னிட்டு..." -
நமக்கு நீதி நிச்சயமாகக் கிடைக்கும் என்கிற உறுதி, ஆண்டவர் என்னும் பெயரால் ஏற்படுகிறது; இது அவரால் கிடைக்கும் ஆசிகளுக்கும் பொருந்தும், 23:3, 25:11, 31:3; விடுதலைப் பயணம் 9:16; எசாயா 48:9; எசேக்கியேல் 20:14,22&44, 36:22-23.

வசனம் 109:22
"நானோ எளியவன், வறியவன்" -
எதிரிகளின் கூற்றுக்கு மாறாக (வ.16), தன்னைத் தேவையில் வாடும் மக்களோடு இனம் காணும் தாவீது; இந்நிலவுலகில் வாழ்ந்த நாட்களில், இறைமகன் இயேசு இப்படித்தான் வாழ்ந்தார் என்பதை நினைவுகூருவோம்.

வசனம் 109:23
*மனித வாழ்வின் நிலையாமையைக் குறித்துப் பாடும் திருப்பாடகர், 102:11, 144:4.*

வசனம் 109:24-25
*திருப்பாடகரின் உண்ணாநோன்பு உடலைத் தளர்ந்து போகச் செய்தது; மன்றாட்டுக்கு மறுமொழி இல்லை என்பது உள்ளத்தில் சோர்வை ஏற்படுத்தியது. தாவீதின் தளர்ந்த நிலையைக் கண்ட எதிரிகள், மேலும் ஊக்கம்கொண்டு, அவரை இகழ்ந்தனர்.*

வசனம் 109:26-29
*எதிரிகளிடமிருந்து தன்னை மீட்கவும், அவரே தன்னை மீட்டார் என்பதை உணர்ந்து தனது எதிரிகள் மானக்கேடுர தாவீதின் நிறைவு மன்றாட்டு.*

*தனது எதிரிகள் காண, தனக்கு ஆண்டவரின் ஆசி என்று தாவீது வேண்டுவது புதிதொன்றும் அல்ல, 23:5.*
*'நாலு பேர் பார்க்க நல்லா வாழணும்' என்று பலரும் பேசக் கேட்டிருப்போம். அதில் தவறு இல்லை; ஆனால் ஆண்டவரின் அருள், காட்சிப் பொருளா? ஒருவரின் பெருமையா?*

வசனம் 109:30
*கூட்டு வழிபாட்டில் ஒருங்கிணையும் தனி வழிபாடு, 42:4, 107:32, 111:1.*

வசனம் 109:31
*ஒப்பிடுக, வ.6: எதிரிகளின் விருப்பம் (எதிர்) இறைச்சித்தம். இதுவே தாவீதின் அசைக்க முடியாத நம்பிக்கை, 16:8.*

✝

## 19 திருப்பாடல் 110

*(ஆண்டவரும் அவர் தேர்ந்து கொண்ட அரசரும்)*

*தாவீதின் புகழ்ப்பா*
1 ஆண்டவர் என் தலைவரிடம்,
'நான் உம் பகைவரை
உமக்குப் கால்மணையாக்கும்வரை
நீர் என் வலப்பக்கம் வீற்றிரும்'
என்று உரைத்தார்.
2 வலிமைமிகு உமது செங்கோலை
ஆண்டவர் சீயோனிலிருந்து ஓங்கச் செய்வார்;
உம் எதிரிகளிடையே ஆட்சி செலுத்தும்!
3 நீர் உமது படைக்குத் தலைமை தாங்கும் நாளில்
தூய கோலத்துடன் உம் மக்கள் தம்மை உவந்தளிப்பர்;
வைகறை கருவுயிர்த்த பனியைப்போல
உம் இளம் வீரர் உம்மை வந்தடைவர்.
4 'மெல்கிசெதேக்கின் முறைப்படி
நீர் என்றென்றும் குருவே'
என்று ஆண்டவர் ஆணையிட்டுச் சொன்னார்;

அவர் தம் மனத்தை மாற்றிக் கொள்ளார்.
5 என் தலைவர் உம் வலப்பக்கத்தில் உள்ளார்;
தம் சினத்தின் நாளில் மன்னர்களை நொறுக்குவார்.
6 வேற்று நாடுகளுக்கு அவர் தீர்ப்பளித்து
அவற்றைப் பிணத்தால் நிரப்புவார்;
பாருலகெங்கும் தலைவர்களை அவர் நொறுக்குவார்.
7 வழியில் உள்ள நீரோடையிலிருந்து அவர் பருகுவார்;
ஆகவே அவர் தலைநிமிர்ந்து நிற்பார்.

திருப்பாடல் 110:1-7

**சிந்தனைக்கு**

அரசரும் குருவுமான மேசியாவுக்குரிய திருப்பாடல். மிகவும் அதிகமாகப் புதிய ஏற்பாட்டில் எடுத்தாளப்பட்ட, நினைவுகூரப்பட்ட திருப்பாடல் வரிகள், இத்திருப்பாடலின் வரிகளே!

ஆண்டவரே உரைக்கும் இரண்டு இறைவாக்குகள், வ.1&4; அவற்றின் நிறைவேற்றமாகத் தொடரும் விளக்க வரிகள் என்றமைந்த சுருக்கமான திருப்பாடல்.

வரலாற்றில் அரசரின் முடிசூட்டு விழாவில் பாடப்பட்ட ஒரு திருப்பாடல்; அதேவேளையில், இது மேசியாவுக்கு உரிய திருப்பாடல் என்பதை யூதர்களும் உணர்ந்தே இருந்தனர்.

கடவுள் இறைவாக்கினர் நாத்தான் வழியாக தாவீது அரசரோடு தமது உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார், 2 சாமுவேல் 7. அப்போதோ அல்லது தன் முதிர்வயதிலோ (பார்க்க, 2 சாமுவேல் 23:2), தாவீது என்றும் மாறாத கடவுளின் உடன்படிக்கையை நினைவுகூர்ந்து, ஆண்டவரைப் போற்றி இயற்றிய திருப்பாடல் எனலாம். வரலாறும் வாக்குமான திருப்பாடல்!

தாவீது இந்தத் திருப்பாடலை எழுதியிருக்க வாய்ப்பில்லை என்றும் இறைவாக்கினர் காத் அல்லது நாத்தான் அல்லது வேறு ஒருவர் எழுதியிருக்கலாம் என்றும் சொல்வோர் உள்ளனர். நற்செய்தி நூல்களில் இந்தத் திருப்பாடலின் முதல் வசனத்தை எடுத்துப் பேசும் கிறிஸ்து இயேசு, தாவீதையே குறிப்பிடுகிறார் (மத்தேயு 22:43-45; மாற்கு 12:36-37; லூக்கா 20:42-44).

அமைப்பு:
வ.1-3, ஆட்சியில் அமரும் மேசியா
வ.4, என்றென்றும் மேசியாவே குரு
வ.5-7, ஆட்சியை உறுதி செய்யும் மேசியா

வசனம் 110:1
பார்க்க, மத்தேயு 22:44; மாற்கு 12:36; லூக்கா 20:42-43; திருத்தூதர் பணிகள் 2:35; எபேசியர் 1:20-22; எபிரேயர் 1:13, 10:12-13. முதலாம் இறைவாக்கு; இன்றைக்கு விண்ணுலகில் கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கும் ஆண்டவரின் ஆளுகை.

"ஆண்டவர் (எஹோவா) என் தலைவரிடம் (அடோனாய்)..." -
இங்கு எஹோவா மேசியாவிடம் என்று பொருள்.

"நீர் என் வலப்பக்கம் வீற்றிரும்" -
மாட்சிக்குரிய இடம், 1 அரசர்கள் 2:19.

மேசியாவுக்குரியது, பார்க்க, மத்தேயு 26:64; மாற்கு 14:62, 16:19; லூக்கா 22:69; திருத்தூதர் பணிகள் 2:33, 5:31, 7:56; உரோமையர் 8:34; எபேசியர் 1:20; கொலோசையர் 3:1; எபிரேயர் 1:3, 8:1, 10:12, 12:2. நமது பற்றுறுதி அறிக்கையும் இதுவே!

"உம் பகைவரை உமக்குக் கால்மணை ஆக்கும் வரை..." -
இதுபோன்ற ஒரு காட்சியை யோசுவா நூலில் (10:24-27) நாம் வாசிக்கிறோம்.

வசனம் 110:2
பார்க்க, 2:6, 45:6, 72:8; தொடக்க நூல் 49:10.

வசனம் 110:3
பார்க்க, எசாயா 26:19. ஆவிக்குரிய போர், தானியேல் 12:1; திருவெளிப்பாடு 12:7-9.

"மேசியா தமது படைக்குத் தலைமை தாங்கும் நாளில் தூய கோலத்துடன் உம் மக்கள் தங்களை உவந்தளிப்பார்கள்" -
சேனைத் தலைவராம் இயேசுவின் பொறுத்தளத்தில் பரிசுத்தப் படைவீரர்களாக அழகாய் அணிவகுத்து நிற்க, நாம் ஆயத்தமா? தாமாகவே முன்வந்து தங்களைக் கொடுப்பவர்களே மேசியாவின் படையில் இடம்பெற இயலும். அவ்வாறு தூய, உயிருள்ள பலியாக நம்மை அர்ப்பணிக்கப் பவுலடிகள் அழைக்கிறார், உரோமையர் 12:1; 2 கொரிந்தியர் 8:5; பிலிப்பியர் 2:17.

வசனம் 110:4
இரண்டாம் இறைவாக்கு, எபிரேயர் 6:16-18, 7:20-22.

சாலேமின் அரசராகிய மெல்கிசெதேக்கு ஆபிரகாமின் குரு, தொடக்க நூல் 14:18. மேசியாவின் நிழலுரு, எபிரேயர் 6 ~ 7. மேலும் பார்க்க செக்கரியா 6:13.

தாவீதிய உடன்படிக்கையின் வழியில், அரசராக அமர்ந்தோர், அரசருக்குரிய குருத்துவப் பணிகளை நிறைவேற்றினர், 2 சாமுவேல் 6:1-15&17-19; 1 அரசர்கள் 8:1-66; 2 அரசர்கள் 22:3~23:25. ஆனால் அவர்கள் எவரும், ஆரோனியக் குருத்துவப் பணிகளை மேற்கொள்ள இயலாது; தம்மையே பலியாக ஈந்து பலிகளை நிறைவேற்றிய மேசியாவே அரசரும் குருவுமாகிறார்; மெல்கிசெதேக்கின் முறைப்படி என்றென்றும் குருவாக இருக்கிறார்.

வசனம் 110:5-7
கடவுளாகிய ஆண்டவரை நோக்கி தாவீது உரைப்பது போல, இவ்வசனங்கள் அமைகின்றன.

வசனம் 110:5
மேசியாவின் ஆளுகை, 2:5, 68:21, 76:12; தானியேல் 2:44.

வசனம் 110:6
மேசியாவின் நீதித் தீர்ப்பு, எசாயா 66:24; உரோமையர் 2:5. திருவெளிப்பாடு 6:17, 11:18, 19:11-21.

வசனம் 110:7
ஒப்பிடுக, யோவான் 4:4-32, 19:28.
தமது போர்க் களத்தில், மேசியாவுக்கு அயர்வு நீக்கும் பானம்.

அயர்ந்த எலியாவுக்கு உணவூட்டியது போல. ஆவிக்குரிய ஓட்டத்தில் அயர்வுறும் ஒவ்வொருவருக்கும், சோர்வகற்றி அவர்கள் தொடர்ந்து ஓட, வழியோரங்களில் நீரோடைகளைக் கடவுள் அமைத்துள்ளார். அவை நாம் இளைப்பாறி அமர அல்ல, வலுப்பெற்றுத் தொடர்ந்து ஓட!

## 19 திருப்பாடல் 111

(ஆண்டவரைப் போற்றுதல்)

1 அல்லேலூயா!
நெஞ்சார ஆண்டவருக்கு நன்றி செலுத்துவேன்;
நீதிமான்களின் மன்றத்திலும் சபையிலும்
அவருக்கு நன்றி செலுத்துவேன்.
2 ஆண்டவரின் செயல்கள் உயர்ந்தவை;
அவற்றில் இன்பம் காண்போர் அனைவரும்
அவற்றை ஆய்ந்துணர்வர்.
3 அவரது செயல் மேன்மையும் மாண்பும் மிக்கது;
அவரது நீதி என்றென்றும் நிலைத்துள்ளது.
4 அவர் தம் வியத்தகு செயல்களை
என்றும் நினைவில் நிலைக்கச் செய்துள்ளார்;
அருளும் இரக்கமும் உடையவர் ஆண்டவர்.
5 அவர் தமக்கு அஞ்சி நடப்போர்க்கு
உணவு அளிக்கின்றார்;
தமது உடன்படிக்கையை
என்றும் நினைவில் கொள்கின்றார்;
6 வேற்றினத்தாரின் உரிமைச் சொத்தைத்
தம் மக்களுக்கு அளித்தார்;
இவ்வாறு ஆற்றல்மிக்க தம் செயல்களை
அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.
7 அவர்தம் ஆற்றல்மிகு செயல்கள்
நம்பிக்கைக்குரியவை; நீதியானவை;
அவர்தம் கட்டளைகள் அனைத்தும் நிலையானவை.
8 என்றென்றும் எக்காலமும் அவை நிலைமாறாதவை;
உண்மையாலும் நீதியாலும் அவை உருவானவை.
9 தம் மக்களுக்கு அவர் மீட்பை அளித்தார்;
தம் உடன்படிக்கை
என்றென்றும் நிலைக்குமாறு செய்தார்;
அவரது திருப்பெயர் தூயது;
அஞ்சுதற்கு உரியது.
10 ஆண்டவர்பற்றிய அச்சமே ஞானத்தின் தொடக்கம்;
அவர்தம் கட்டளைகளைக் கடைப்பிடிப்போர் நல்லறிவுடையோர்;
அவரது புகழ் என்றென்றும் நிலைத்துள்ளது.

திருப்பாடல் 111:1-10

**சிந்தனைக்கு**

திருப்பாடல்கள் 9 மற்றும் 10 போலவே, 111 மற்றும் 112ம் எபிரேயத்தில் அகரவரிசைத் திருப்பாடல்கள். இவ்விரு திருப்பாடல்களும் சம எண்ணிக்கையில் வசனங்களைக் கொண்டவை; எபிரேய பைபிளில், சமமான நீளமுடைய வசனங்களைக் கொண்டவை என்று சொல்லப்படுகிறது.

தலைப்பற்ற திருப்பாடல்; எழுதியவர், எழுதப்பட்ட காலம், சூழல் மற்றும் நோக்கம் குறித்த செய்தி ஏதும் இல்லை.

தொடக்கமும் முடிவுமற்று என்றென்றும் நிலைத்திருக்கும் ஆண்டவர் என்பதுவே திருப்பாடலின் மையக்கரு (பார்க்க, என்றும், என்றென்றும், எக்காலமும், நிலை போன்ற சொற்கள்). அதேபோல, நிலைத்து நிற்பவையாக அறிவுறுத்தப் படுபவை, கடவுளின் உடன்படிக்கையும், ஆற்றல் மிக்க அவர்தம் செயல்களும்.

அமைப்பு:
வ.1-4, வியத்தகு செயல்களுக்காக ஆண்டவரைப் போற்றுதல்
வ.5-9, பேரருளுக்காக ஆண்டவரைப் போற்றுதல்
வ.10, இறையச்சமும் இறைச்சட்டத்தைக் கடைப்பிடித்தலுமே நல்லறிவு

வசனம் 111:1
நீதிமான்களின் கூடுகையில் நெஞ்சார ஆண்டவருக்கு நன்றி சொல்லித் தொழுது கொள்ள அழைப்பு, 33:1, 109:30, 140:13.

அல்லேலூயா, பார்க்க 104:35, 105:45, 106:1&48.

வசனம் 111:2
"... செயல்கள்..." -
படைப்பிலும் மீட்பிலும் கடவுளின் அருஞ்செயல்கள், 26:7.

"அவற்றில் இன்பம் காண்போர் அனைவரும் அவற்றை ஆய்ந்துணர்வர்" -
கடவுளின் வியத்தகு செயல்கள் அவர்தம் மக்களுக்கு மகிழ்ச்சியின் ஊற்று; அவர்கள் அவற்றை எண்ணி எண்ணி மகிழ்வர். நாம் எப்படி வாழ்கிறோம்? ஆண்டவர் நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் அருளிய நன்மைகளை எண்ணி எண்ணி மகிழ்கிறோமா?

வசனம் 111:3
நிலைத்தன்மை குறித்த முதல் வசனம், எபிரேயர் 1:12, 13:8; அவரது நீதி என்றென்றும் நிலைத்துள்ளது.

வசனம் 111:4
ஆண்டவர் ஆற்றிய அருஞ்செயல்களை நமது நினைவில் நிலைக்கச் செய்துள்ளார் (42:6, 71:16-18; விடுதலைப் பயணம் 17:14; யோசுவா 4:7). அவற்றால் அவருடைய அடிப்படைத் தன்மைகளான அவருடைய அருளும் இரக்கமும் நமக்கு விளங்கும் (விடுதலைப் பயணம் 34:6).

வசனம் 111:5 & 9
நிலைத்தன்மை கொண்ட தமது உடன்படிக்கையை என்றும் நினைவில் கொள்கின்றார் (98:3, 105:8, 106:45; தொடக்க நூல் 9:15-16; விடுதலைப் பயணம் 2:24, 6:5). அதனால் அவரருளும் மீட்பு (இணைச் சட்டம் 7:8, 9:26, 15:15, 21:8, 24:18) நம்மில் நிலைத்திருக்கிறது.

வசனம் 111:5
உணவளிக்கும் ஆண்டவர், 37:25; விடுதலைப் பயணம் 16:13-35.

வசனம் 111:6
தாம் அளித்த வாக்கை ஆண்டவர் நிறைவேற்றுகிறார், 78:54-55; தொடக்க நூல் 12:7, 15:18-21.

வசனம் 111:7-8
நிலைத்தன்மை கொண்ட அவர்தம் கட்டளைகள்; அவற்றைக் கடைப்பிடிப்பதால் நாம் வாழ்வடைகிறோம், 19:7-8.

வசனம் 111:9-10
ஆண்டவரது திருப்பெயர் தூயது; அஞ்சுதற்குரியது, 19:9-11, 34:11-14; அந்த அச்சமே ஞானத்தின் தொடக்கம் (யோபு 28:28; நீதிமொழிகள் 1:7, 9:10). அதனால் நாம் நல்லுணர்வடைகிறோம்; சான்றோர் ஆகிறோம்.

அவர்தம் புகழ் நிலைத்தன்மை உடையது; அதனை என்றென்றும் போற்றி மகிழ்வோம்.

## 19 திருப்பாடல் 112

(கடவுளுக்கு அஞ்சி நடப்போர்)

1 அல்லேலூயா!
ஆண்டவருக்கு அஞ்சிநடப்போர் பேறுபெற்றோர்;
அவர்தம் கட்டளைகளில் அவர்கள் பெருமகிழ்வு அடைவர்.
2 அவர்களது வழிமரபு
பூவுலகில் வலிமைமிக்கதாய் இருக்கும்;
நேர்மையுள்ளோரின் தலைமுறை ஆசிபெறும்.
3 சொத்தும் செல்வமும் அவர்களது இல்லத்தில் தங்கும்;
அவர்களது நீதி என்றென்றும் நிலைத்திருக்கும்.
4 இருளில் ஒளியென
அவர்கள் நேர்மையுள்ளவரிடையே மிளிர்வர்;
அருளும் இரக்கமும் நீதியும் உள்ளோராய் இருப்பர்.
5 மனமிரங்கிக் கடன் கொடுக்கும் மனிதர் நன்மை அடைவர்;
அவர்கள் தம் அலுவல்களில் நீதியுடன் செயல்படுவர்.
6 எந்நாளும் அவர்கள் அசைவுறார்;
நேர்மையுள்ளோர் மக்கள் மனத்தில் என்றும் வாழ்வர்.
7 தீமையான செய்தி எதுவும் அவர்களை அச்சுறுத்தாது;
ஆண்டவரில் நம்பிக்கை கொள்வதால்
அவர்கள் இதயம் உறுதியாய் இருக்கும்.

8 அவர்கள் நெஞ்சம் நிலையாய் இருக்கும்;
அவர்களை அச்சம் மேற்கொள்ளாது;
இறுதியில் தம் எதிரிகள் அழிவதை
அவர்கள் காண்பது உறுதி.
9 அவர்கள் வாரி வழங்கினர்;
ஏழைகளுக்கு ஈந்தனர்;
அவர்களது நீதி என்றென்றும் நிலைத்திருக்கும்;
அவர்களது வலிமை மாட்சியுடன் மேலோங்கும்.
10 தீயோர் அதைப் பார்த்து எரிச்சல் அடைவர்;
பல்லை நெரிப்பர்; சோர்ந்து போவர்;
தீயோரின் விருப்பமெல்லாம் வீணாய்ப்போம்.

திருப்பாடல் 112:1-10

**சிந்தனைக்கு**

இறையச்சம் குறித்து முந்தைய திருப்பாடலில் வாசித்தோம் (111:5&10); அதன் தொடர்ச்சியாக இறையச்சம் கொண்டோர் அடையும் பேறு குறித்து இந்தத் திருப்பாடல் அமைகிறது.

இந்த இரண்டு திருப்பாடல்களும் அமைப்பு அடிப்படையில் இணையானவை என்று ஏற்கனவே பார்த்தோம். அதுமட்டுமின்றி, முந்தைய திருப்பாடல் ஆண்டவரைக் குறித்துப் பேசுகிறது எனில், இந்தத் திருப்பாடல் அவருக்கு அஞ்சும் அவர்தம் அடியார் குறித்துப் பேசுகிறது. பேசுபொருள் ஆண்டவராகவும் அடியாராகவும் இருந்தாலும், இரண்டு திருப்பாடல்களின் மூன்றாம் வசனங்கள் ஒரே மாதிரியாக இருப்பது ஆச்சரியமான உண்மை. அதேபோன்ற ஒற்றுமையை இரண்டு திருப்பாடல்களின் நான்காம் மற்றும் எட்டாம் வசனங்களில் நாம் பார்க்க முடியும். இது இவ்விரு திருப்பாடல்களுக்கு இடையே உள்ள ஒற்றுமை மட்டும் அல்ல; ஆண்டவருக்கும், அவருக்கு அஞ்சி நடப்போருக்கும் இடையிலான ஒற்றுமைகள் என்பதை நாம் உணர்ந்து நமது செயல்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் நமது விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல, நாமும் நிறைவுள்ளவர்களாய் வாழ, கிறிஸ்து இயேசு நம்மை ஊக்கமூட்டுகிறார் (மத்தேயு 5:48).

தலைப்பற்ற திருப்பாடல்; பாடலை ஆக்கியோர், பாடலின் பின்னணி குறித்த குறிப்பு ஏதுமில்லை. மேலும் ஞானத் திருப்பாடல்களில் ஒன்றாக இத்திருப்பாடல் கருதப்படுகிறது.

அமைப்பு:
வ.1-5, ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் அடையும் பேறு
வ.6-9, ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் அடையும் நிலைத்தன்மை
வ.10, தீயோர் அடையும் கேடு

வசனம் 112:1
அவர்தம் கட்டளைகளில் அவர்கள் பெருமகிழ்வு அடைவர், இணை, 111:2.

வசனம் 112:2-9
ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் அடையும் பேறு:
* வலிமைமிக்க வழிமரபு
* தலைமுறை ஆசி பெறும்

* சொத்தும் செல்வமும் தங்கும்
* அவர்களது நீதி நிலைத்திருக்கும்
* இருளில் ஒளியென மிளிர்வர்
* அருளும் இரக்கமும் நீதியும் உள்ளோராய் இருப்பர்
* மனமிரங்கிக் கடன் கொடுப்பர்
* தங்கள் செயல்களில் நீதியுடன் செயல்படுவர்
* மக்கள் மனதில் என்றும் வாழ்வர்
* தீமையான செய்தி எதுவும் அவர்களை அச்சுறுத்தாது
* அவர்கள் இதயம் உறுதியாய் இருக்கும்
* தங்கள் எதிரிகள் அழிவதை அவர்கள் காண்பர்
* அவர்களது வலிமை மாட்சியுடன் மேலோங்கும்
* ஏழைகளுக்கு வாரி வழங்குவர்

வசனம் 112:2
*தலைமுறையினர் பெரும் ஆசி; தலைமுறை என்பதே ஆசி,* 37:26, 127:3-5, 128:3.

வசனம் 112:3
"சொத்தும் செல்வமும்..." -
*இவை பழைய ஏற்பாட்டின் ஆசிகள் என்பதை நினைவில் வையுங்கள், நீதிமொழிகள்* 3:16, 8:18. *ஒப்பிடுக, மத்தேயு* 6:19-20; *லூக்கா* 6:20&24, 12:33; 1 *திமொத்தேயு* 6:7-9.

*இவ்வசனத்தின் பின்பகுதி, வ.*9*ன் பின்பகுதிக்கு இணையாக உள்ளது.* 111:3*ம் வசனத்தின் இணை இவ்வசனம் என்பதை ஏற்கனவே பார்த்தோம்; இறைமக்கள் இறைத்தன்மையைப் பிரதிபலிக்கின்றனர்; பார்க்க, லேவியர்* 19:2; *எபேசியர்* 4:24; *எபிரேயர்* 12:10; 1 யோவான் 3:2.

*இவ்வசனத்தோடு பவுலடிகளின் சொந்த அனுபவத்தை வாசித்துப் பலன் பெறுவோம், பிலிப்பியர்* 3:8-9.

வசனம் 112:5
*சகோதரர்களுக்குள் கடன் கொடுக்கும் விதிகளை மோசேயின் வழியாக ஆண்டவர் அருளுகிறார்,* லேவியர் 25:35-37; இணைச் சட்டம் 15:7-11. தேவையில் இருப்போருக்கு உதவி என்பதுவே இங்கு கட்டளை; *அவர்களின் நிலைமையை வைத்துச் செல்வம் சேர்ப்பது அல்ல.*

வசனம் 112:5-6
*நீதி மற்றும் நேர்மை குறித்துப் பேசும் வசனங்கள்; இவை இரண்டும் இறையடியாரின் இரட்டைப் பண்புகள், தொடக்க நூல்* 18:19. மேலும் பார்க்க, 106:3; 2 சாமுவேல் 8:15; *நீதிமொழிகள்* 21:3; *எசாயா* 5:7, 56:1; *எரேமியா* 22:15; *எசேக்கியேல்* 18:5&21, 33:14,16&19; *ஆமோஸ்* 5:24, 6:12;

வசனம் 112:7-8
*உடலை மட்டுமல்லாமல் ஆன்மாவையும் அழிக்க வல்லவருக்கு அஞ்சுவோர், இவ்வுலகில் எதற்கும் அஞ்சார், மத்தேயு* 10:28; *லூக்கா* 12:4-5.

*ஆண்டவரில் பற்றுறுதி என்பது, இவ்வுலகில் அச்சத்திற்கு மருந்து, எசாயா* 12:2. *மேலும் பார்க்க,* 34:8-14.

*புதிய ஏற்பாட்டு விசுவாசியின் அறைகூவல், "ஆண்டவரே எனக்குத் துணை, நான் அஞ்சமாட்டேன்; மனிதர் எனக்கு எதிராக என்ன செய்யமுடியும்?" எபிரேயர்* 13:6.

வசனம் 112:9
"ஏழைகளுக்கு ஈந்தனர்" -
பார்க்க, 82:3-4.
எருசலேமில் ஏழைகளுக்கு உதவுமாறு கொரிந்தியரை அழைக்கும் பவுலடிகள் இந்த வசனத்தை மேற்கோள் காட்டுகிறார், 2 கொரிந்தியர் 9:9.

வசனம் 112:10
இணை, நீதிமொழிகள் 10:28. மேலும் பார்க்க, திருப்பாடல் 37.
தீயோரோடு ஓர் ஒப்பீடு. பேறுபெற்றோர் யார் என்பதை விவரிக்கும் முதலாவது திருப்பாடலில் உள்ளது போல, தீயோரோடு ஓர் ஒப்பீட்டுடன் திருப்பாடகர் நிறைவு செய்கிறார்.

## 19 திருப்பாடல் 113

(ஆண்டவரின் கருணை)

1 அல்லேலூயா!
ஆண்டவரின் ஊழியர்களே,
அவரைப் புகழுங்கள்.
அவரது பெயரைப் போற்றுங்கள்.
2 ஆண்டவரது பெயர் வாழ்த்தப் பெறுவதாக!
இப்பொழுதும் எப்பொழுதும் வாழ்த்தப் பெறுவதாக!
3 கீழ்த்திசை முதல் மேற்றிசைவரை
ஆண்டவரது பெயர் போற்றப்படுவதாக!
4 மக்களினங்கள் அனைத்திற்கும் ஆண்டவர் மேலானவர்;
வானங்களையும்விட உயர்ந்து அவரது மாட்சி.
5 நம் கடவுளாகிய ஆண்டவருக்கு நிகர் யார்?
அவர்போல வானளாவிய உயரத்தில் வீற்றிருப்பவர் யார்?
6 அவர் வானத்தையும் வையகத்தையும் குனிந்து பார்க்கின்றார்;
7 ஏழைகளைத் தூசியிலிருந்து
அவர் தூக்கி நிறுத்துகின்றார்;
வறியரைக் குப்பை மேட்டிலிருந்து
கைதூக்கி விடுகின்றார்;
8 உயர்குடி மக்களிடையே
- தம் மக்களுள் உயர்குடி மக்களிடையே -
அவர்களை அமரச் செய்கின்றார்.
9 மலடியை அவள் இல்லத்தில் வாழ வைக்கின்றார்;
தாய்மைப்பேறு பெற்று மகிழுமாறு அவளுக்கு அருள்கின்றார்.
அல்லேலூயா!

திருப்பாடல் 113:1-9

**சிந்தனைக்கு**

திருப்பாடல் 113 முதல் 118 வரை உள்ள திருப்பாடல்கள் ஆறும் எகிப்திய அல்லேல் திருப்பாடல்கள் என்றும் பாஸ்காத் திருப்பாடல்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. இவை இஸ்ரயேலரின் திருவிழாக்களில் (பாஸ்காப் பெருவிழா, வாரங்களின் திருவிழா, கூடாரத் திருவிழா, கோவில் அர்ப்பணத் திருவிழா, மாதப் பிறப்பு நாள்) பாடப்படும் திருப்பாடல்கள். குறிப்பாக, பாஸ்கா உணவுக்கு முன் பாடப்படுவனவாக திருப்பாடல் 113 மற்றும் 114ம் ஏனையவை பாஸ்கா உணவுக்குப் பிறகு பாடப்படுவனவாகவும் உள்ளன. மத்தேயு 26:30 மற்றும் மாற்கு 14:26 வசனங்களில் அருள் நாதர் இயேசுவும் அவருடைய சீடர்களும் பாடிய புகழ்ப்பாடல், திருப்பாடல் 118டாக இருக்கலாம். 🕎

தலைப்பற்ற திருப்பாடல்; எழுதியவர், எழுதப்பட்ட காலம் குறித்த நேரடியான குறிப்பு ஏதுமில்லை. ஆய்வாளர்கள் பலரும் சிறையிருப்புக்குப் பிந்தைய திருப்பாடலாக இதனைக் கருதுகின்றனர்.
🕎

அமைப்பு:
வ.1-3, ஆண்டவரைத் தொழுது கொள்ள அழைப்பு
வ.4-6, ஆண்டவரின் ஒப்பற்ற தன்மை
வ.7-9, தாழ்நிலையில் இருக்கும் மானிடரை நினைவுகூரும் ஆண்டவர்
🕎

வசனம் 113:1-3
போற்றிப் புகழ அழைக்கும் வேளையில், எதை - எப்பொழுது - எங்கு - போற்றிப் புகழ வேண்டும் என்று இந்த வசனங்கள் போதிக்கின்றன. போற்றப்படுவது யாவே என்கிற திருப்பெயர் - மூன்று வசனங்களிலும் "ஆண்டவரது பெயர்" இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

வசனம் 113:1
"ஆண்டவரின் ஊழியர்களே..." -
கோவிலின் குருக்களும் லேவியரும், 134:1, 135:1.

வசனம் 113:2
எப்பொழுதும் உண்மையுள்ள, மாறாத பேரன்பு கொண்ட ஆண்டவரைத் தொழுது கொள்ள அழைப்பு.

வசனம் 113:3
பரவி வாழ்ந்த இஸ்ரயேலர் நடுவே ஆண்டவருடைய திருப் பெயரைப் போற்றிப் பாட அழைப்பு.

வசனம் 113:4-5
எங்கும் பரவி இருப்பவர் ஆண்டவர்; உயரங்களில் உறைபவர்; படைக்கப்பட்ட அனைத்திற்கும் மேலாக, உருவாக்கப்பட்ட தெய்வங்களுக்கும் மேலாக, படைப்பின் கடவுளான ஆண்டவர் தனித்துவமானவர், உயர்ந்தவர் (விடுதலைப் பயணம் 15:11; எசாயா 55:9).

வசனம் 113:7-8
1 சாமுவேல் 2:8ன் ஒரு பகுதியாக இவ்வசனம். மேலும் பார்க்க, 9:18, 35:10, 68:10, 107:41, 138:6;

வசனம் 113:7
"ஏழைகளை ... வறியவரை..." -
சிறியவன், எளியவன் போன்ற மனநிலையைக் குறிக்கும் சொற்கள் சரியானவை அல்ல. எபிரேய மூலச் சொற்களின்படி, சமுதாயத்தின் அடித்தட்டில் புறக்கணிக்கப்பட்டோராக வாழும் ஏழைகளை, வறியோரைக் குறித்த சொற்கள்.

நமது ஆண்டவர், ஏழைகளின் ஆண்டவர், தேவையில் வாடுவோரின் ஆண்டவர், ஒடுக்கப்பட்டோரின் ஆண்டவர்.

வசனம் 113:8
ஏழைகளும் வறியோரும் உயர்த்தப்படும் உயரத்தை இங்கு திருப்பாடகர் குறிப்பிடுகிறார். இவர்களில் மிகுந்த உயரத்தை எட்டியவர்களாக யோசேப்பு, தானியேல் போன்றோர் விளங்குகின்றனர்.

வசனம் 113:9
மலடி என்பது பெண்களுக்கு கடுந்துயர் தருவது; குடும்பத்திலும், சமூகத்திலும் அத்தகைய பெண்கள் மிகவும் இழிவாகப் பார்க்கப் பட்டனர் (தொடக்க நூல் 16:4). இந்த இடத்தில், சாமுவேலின் தாயாகிய அன்னா நமது நினைவிற்கு வருவதைத் தவிர்க்க முடியாது, 1 சாமுவேல் 1 ~ 2.

இவ்வாறு தேவையில் தவிப்போரின் அடைக்கலமாகவும், ஆறுதலாகவும், பராமரிப்பாளராகவும், உயர்த்துபவராகவும், மறுவாழ்வு அருளுபவராகவும் ஆண்டவர் விளங்குகிறார்.

"உயர்ந்தவரும் உன்னதரும் காலம் கடந்து வாழ்பவரும், 'தூயவர்' என்ற பெயரைக் கொண்டவரும் கூறுவது இதுவே: உயர்ந்த தூய இடத்தில் நான் உறைகின்றேன்; நொறுங்கிய, நலிந்த நெஞ்சத்தினரோடும் நான் வாழ்கின்றேன்; நொறுங்கிய உள்ளத்தினரை ஊக்குவிக்கவும் நலிந்த நெஞ்சத்தினரைத் திடப்படுத்தவும் நான் குடியிருக்கின்றேன்." (எசாயா 57:15)

✝

## 19 திருப்பாடல் 114

*(பாஸ்காப் பாடல்)*

1 எகிப்து நாட்டைவிட்டு
இஸ்ரயேலர் வெளியேறியபொழுது,
வேற்று மொழி பேசிய மக்களை விட்டு
யாக்கோபின் குடும்பம் புறப்பட்டபொழுது,
2 யூதா அவருக்குத் தூயகம் ஆயிற்று;
இஸ்ரயேல் அவரது ஆட்சித்தளம் ஆனது.
3 செங்கடல் கண்டது; ஓட்டம் பிடித்தது;
யோர்தான் பின்னோக்கிச் சென்றது.
4 மலைகள் செம்மறிக் கிடாய்கள் போலும்
குன்றுகள் ஆட்டுக்குட்டிகள் போலும் துள்ளிக் குதித்தன.
5 கடலே! நீ விலகி ஓடும்படி உனக்கு நேர்ந்தது என்ன?

யோர்தானே! நீ பின்னோக்கிச் சென்றது ஏன்?
6 மலைகளே! நீங்கள்
செம்மறிக் கிடாய்கள்போல் குதித்தது ஏன்?
குன்றுகளே! நீங்கள்
ஆட்டுக் குட்டிகள் போல் துள்ளியது ஏன்?
7 பூவுலகே! தலைவர் முன்னிலையில் நடுநடுங்கு!
யாக்கோபின் கடவுள் முன்னிலையில் நடுக்கமுறு!
8 அவர் பாறையைத் தண்ணீர்த் தடாகம் ஆக்குகின்றார்;
கற்பாறையை வற்றாத நீர்ச்சுனை ஆக்குகின்றார்.

திருப்பாடல் 114:1-8

**சிந்தனைக்கு**

படைப்பு, படைப்பின் அழகியல், படைப்பின் ஆற்றல், படைப்பு அனைத்தின் மீதும் ஆண்டவரின் ஆளுகை - இவற்றைப் பேசும் அழகிய எபிரேயக் கவிதை போன்ற திருப்பாடல். பேரலைகள் எழும் கடலுக்கு முன் நின்று பார்க்கும் போது, அது ஒரு பிரமாண்டம். மலையடிவாரத்தில் நின்று மலையின் உயரத்தைப் பார்க்கும் போது, அது ஒரு பிரமாண்டம். ஆனால் சில கிலோமீட்டர்கள் உயரத்திலிருந்து கீழே பார்க்கும்போது மலைகளின் உயரம் தெரியாது. கடலின் இறைச்சல் தெரியாது. ஆண்டவரின் உறைவிடம் உயரங்களில் இருக்கிறது என்று பார்த்தோம் (113:5). ஆண்டவருக்கு மலைகள் மற்றும் குன்றுகளின் அதிர்வு, செம்மறிக் கிடாய்களின் அல்லது ஆட்டுக் குட்டிகளின் துள்ளல் போல உள்ளது என்பது திருப்பாடகரின் அழகிய கற்பனை (வ.6). நம்மில் பலருக்கும் முழுவதுமாக வளர்ந்த செம்மறிக் கிடாயின் தோற்றமே அச்சமூட்டக் கூடும்!

எகிப்திய அல்லேல் திருப்பாடல்களில் எகிப்து என்னும் குறிப்பு இடம்பெறும் ஒரே திருப்பாடல். ஆனால் அல்லேலூயா என்ற சொல் இடம்பெறாத அல்லேல் திருப்பாடல்களில் ஒன்று (மற்றவை, 115 மற்றும் 118). விடுதலைப் பயணத்தில் படைப்பின் மீது செயல்பட்ட கடவுளின் பேராற்றலைக் கொண்டாடும் திருப்பாடல். யாக்கோபோடு எகிப்துக்குச் சென்ற ஆண்டவர், எருசலேமைத் தமது தூயகமாகத் தெரிந்து கொண்டு, தமது மாட்சி அங்கு இலங்கச் செய்தார்; இஸ்ரயேலருக்குத் தங்கள் கொண்டாட்டங்களின் அங்கமாகத் திகழ்வது ஆண்டவரின் தூயகம். பாஸ்காத் திருப்பாடல்களில் இதனை நினைவுகூரும் திருப்பாடல்.

தலைப்பற்ற திருப்பாடல்; எழுதியவர், எழுதப்பட்ட காலம் குறித்த நேரடியான குறிப்பு ஏதுமில்லை. சிறையிருப்புக்குப் பிந்தைய காலத்தில் எழுதப்பட்ட ஒரு திருப்பாடல் என்று பைபிள் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அமைப்பு:
வ.1-2, இஸ்ரயேலே ஆண்டவரின் ஆட்சித் தளம்
வ.3-6, இயற்கைக்கு மாறான இயற்கை
வ.7-8, படைப்பை ஆளும் ஆண்டவருக்கு அஞ்சி நடக்க அழைப்பு

வசனம் 114:1-2
எகிப்திலிருந்து இஸ்ரயேலர் விடுவிக்கப்பட்டு, வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறி, தாவீதின் காலத்தில் எருசலேமில் சீயோன் மலையை ஆண்டவர் தெரிந்து கொண்டு, அங்கு அமர்ந்த காலம் வரை, சுமார் 460 ஆண்டுகள் சுருக்கமாக நினைவுகூரப்படுகிறது.

*"...வேற்று மொழி பேசிய மக்களை விட்டு..." -*
*மேலும் பார்க்க* 81:5; *எசாயா* 28:11, 33:19. *வேற்று மொழியைக் கற்றுக் கொள்வதில் உள்ள சிக்கல் இங்கு நினைவுகூரப்படுகிறது.*

*"...இஸ்ரயேலர் ... யாக்கோபின் குடும்பம்..." -*
*இஸ்ரயேலின் வழிமரபைக் குறிக்கும் சொற்கள்.*

*"யூதா ... இஸ்ரயேல்..." -*
*தென்னாடு வடநாடு என்ற இரண்டு ஆட்சிப் பரப்பைக் குறிப்பன. ஆனால் முழுமையாக அவை உடன்படிக்கையின் அடிப்படையில் ஆண்டவரின் ஆளுகைக்கு உட்பட்டவை* (*விடுதலைப் பயணம்* 19:3-6).

*வசனம்* 114:3-6
*படைப்பை ஆளுகை செய்யும் ஆண்டவர்; மேலும் பார்க்க,* 18:7-15, 29:6, 68:7-8, 77:16-19; *நீதித் தலைவர்கள்* 5:4-5; *அபக்கூக்கு* 3:3-11.

*வசனம்* 114:3
*இணை,* 66:5-6.

*செங்கடல் பிளந்த அருஞ்செயல், விடுதலைப் பயணம்* 14 ~ 15.

*யோர்தான் ஆறு விலகி வழி விட்ட அருஞ்செயல், யோசுவா* 3.

*வசனம்* 114:4
*"மலைகள் ... குன்றுகள் துள்ளிக் குதித்தன" -*
*இணை,* 29:6.

*வசனம்* 114:7
*கடல், ஆறு, மலைகள், குன்றுகளை நோக்கி வினாக்களை எழுப்பிய திருப்பாடகர், அவைகள் அமைந்துள்ள பூவுலகை ஆண்டவர் முன்னிலையில் நடுநடுங்க அழைக்கிறார். இது பூவுலகுக்கு மட்டும் விடுக்கப்பட்ட அழைப்பு அல்ல; அதில் உணர்வுள்ளோராக வாழும் நமக்கு விடுக்கப்பட்ட அழைப்பு* (96:9; 1 *குறிப்பேடு* 16:30; *எபிரேயர்* 12:25-29). *ஏனெனில் அவர் யாக்கோபின் கடவுள்; யாக்கோபு புனிதர் என்பதனால் அவருடைய பெயரை ஆண்டவர் தெரிந்து கொள்ளவில்லை; அவரும் அவருடைய சந்ததியினரும் மீண்டும் மீண்டும் வழி விலகினர், பாவத்தில் விழுந்தனர். ஆனால் உண்மையுள்ள ஆண்டவர் ஒருபோதும் அவர்களைக் கைவிடவில்லை. அந்த ஆண்டவரே பாவியாகிய நம்மைத் தேடி வந்த கடவுள்; நம்மைத் தெரிந்துகொண்ட கடவுள்; நம்மைக் கைவிடாத கடவுள்* (*இணைச்சட்டம்* 7:6-9; *எபேசியர்* 1:4-5).

*வசனம்* 114:8
*வறண்ட நிலங்களில் தண்ணீரை அருளும் ஆண்டவர், விடுதலைப் பயணம்* 17:1-7; *எண்ணிக்கை* 20:7-11; 1 *கொரிந்தியர்* 10:1-4.
*யாருக்கு அருளுகிறார்? மீறுதலும் பாவமும் நிறைந்த மக்களுக்குத் தமது மாறாத அன்பையும் இரக்கத்தையும் வெளிக் காட்டும் வகையில், உயிரை மீட்கும் நீரை அருளிப் புது வாழ்வு அளிக்கிறார் ஆண்டவர்.*

# 19 திருப்பாடல் 115

(ஆண்டவரே உண்மையான கடவுள்)

1 எங்களுக்கன்று, ஆண்டவரே! எங்களுக்கன்று;
மாட்சியை உம் பெயருக்கே உரித்தாக்கும்;
உம் பேரன்பையும் உண்மையையும் முன்னிட்டு
அதை உமக்கே உரியதாக்கும்.
2 'அவர்களுடைய கடவுள் எங்கே' எனப்
பிற இனத்தார் வினவுவது ஏன்?
3 நம் கடவுளோ விண்ணுலகில் உள்ளார்;
தம் திருவுளப்படி அனைத்தையும் செய்கின்றார்.
4 அவர்களுடைய தெய்வச்சிலைகள்
வெறும் வெள்ளியும் பொன்னுமே,
வெறும் மனிதக் கைவேலையே!
5 அவற்றுக்கு வாய்கள் உண்டு;
ஆனால் அவை பேசுவதில்லை;
கண்கள் உண்டு; ஆனால் அவை பார்ப்பதில்லை;
6 செவிகள் உண்டு; ஆனால் அவை கேட்பதில்லை;
மூக்குகள் உண்டு; ஆனால் அவை முகர்வதில்லை.
7 கைகள் உண்டு; ஆனால் அவை தொட்டுணர்வதில்லை;
கால்கள் உண்டு; ஆனால் அவை நடப்பதில்லை;
தொண்டைகள் உண்டு; ஆனால் அவை குரல் எழுப்புவதில்லை.
8 அவற்றைச் செய்கின்றோரும்
அவற்றில் நம்பிக்கை கொள்ளும் அனைவரும்
அவற்றைப்போல் ஆவர்.
9 இஸ்ரயேலரே!
ஆண்டவர்மீது நம்பிக்கைக் கொள்ளுங்கள்;
அவரே உங்களுக்குத் துணையும் கேடயமும் ஆவார்.
10 ஆரோனின் குலத்தாரே!
ஆண்டவர்மீது நம்பிக்கைக் கொள்ளுங்கள்;
அவரே உங்களுக்குத் துணையும் கேடயமும் ஆவார்.
11 ஆண்டவருக்கு அஞ்சி நடப்போரே!
அவர்மீது நம்பிக்கை கொள்ளுங்கள்;
அவரே உங்களுக்குத் துணையும் கேடயமும் ஆவார்.
12 ஆண்டவர் நம்மை நினைவு கூர்ந்துள்ளார்;
நமக்குத் தம் ஆசியை அளிப்பார்.
இஸ்ரயேல் குடும்பத்தாருக்கு ஆசி வழங்குவார்;
ஆரோனின் குடும்பத்தாருக்கு ஆசி வழங்குவார்;
13 தமக்கு அஞ்சிநடப்போர்க்கு
ஆண்டவர் ஆசி வழங்குவார்;
சிறியோர்க்கும் பெரியோர்க்கும் ஆசி வழங்குவார்.
14 ஆண்டவர் உங்கள் இனத்தைப் பெருகச் செய்வார்;
உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் வளரச் செய்வார்.
15 நீங்கள் ஆண்டவரிடமிருந்து ஆசி பெறுவீர்களாக!
விண்ணையும் மண்ணையும் உருவாக்கியவர் அவரே!
16 விண்ணகமோ ஆண்டவருக்கு உரியது;

மண்ணகத்தையோ அவர் மானிடர்க்கு வழங்கியுள்ளார்.
17 இறந்தோர் ஆண்டவரைப் புகழ்வதில்லை;
மௌன உலகிற்குள் இறங்குவோர் எவருமே
அவரைப் புகழ்வதில்லை;
18 நாமோ ஆண்டவரை வாழ்த்துகின்றோம்;
இப்பொழுதும் எப்பொழுதும் வாழ்த்துகின்றோம்.

திருப்பாடல் 115:1-18

**சிந்தனைக்கு**

குரு, பாடகர் குழு, சபையார் என்று மாறி மாறிப் பாடத் தக்க அருமையான திருப்பாடல். பாஸ்காத் திருப்பாடல்களில் மூன்றாவது திருப்பாடல். திருப்பாடல் 135ன் பல வசனங்கள் இத்திருப்பாடலோடு இணைந்து செல்வன.

தலைப்பற்ற திருப்பாடல்; எழுதியவர் குறித்த யாதொரு குறிப்பும் இல்லை. வ.3-8 திருப்பாடல் எழுதப்பட்ட காலம் குறித்து விளக்குவதாக உள்ளது; சிறையிருப்பிலிருந்து திரும்பிய இஸ்ரயேலரின் நடுவே சிலைகளை அகற்ற வேண்டிய தேவையில் பாடப்பட்ட திருப்பாடல். இரண்டாம் கோவில் கட்டப்பட்ட பிறகு, கோவில் அர்ப்பணத் திருநாளில் (எஸ்ரா 6:16) பாடப்பட்ட திருப்பாடலாக சிறப்பிடம் பெற்றிருக்கக் கூடும்.

அமைப்பு:
வ.1-2, தேசத்தின் ஆண்டவரை வழிபடல்
வ.3-8, மற்ற தேசங்களின் தெய்வங்களிலிருந்து வேறுபடும் ஆண்டவர்
வ.9-11, ஆண்டவரில் பற்றுறுதி வைக்க அழைப்பு
வ.12-15, தம் மக்களை நினைவுகூரும் ஆண்டவரும், ஆசி பெறும் அவர்தம் மக்களும்
வ.16-18, விண்ணில் வாழும் ஆண்டவரை வாழ்த்தும் அவர்தம் மக்கள்

வசனம் 115:1-2
வழக்கமான போற்றுதல் இன்றி எதிர்பாராத தொடக்கம். தங்கள் தகுதியின்மையைப் பறைசாற்றி அறிக்கையிடும் தொடக்கம். பார்க்க, தானியேல் 9:18-19. மேலும் பார்க்க, விடுதலைப் பயணம் 34:6.

வசனம் 115:2
நாடற்ற, கோவிலற்ற இஸ்ரயேலரை நோக்கி, ஏனைய மக்களினங்கள் முன்வைக்கும் வினா, 79:10-11; யோவேல் 2:17.

வசனம் 115:3
"நம் கடவுளோ விண்ணுலகில் உள்ளார்" -
சிலைகள் மண்ணுலகில் இருக்க, நம் கடவுளோ விண்ணுலகில் இருக்கிறார்; விண்ணிலும் மண்ணிலும் தம் விருப்பப்படி எதையும் செய்ய வல்லவர் அவர், 135:6; நீதிமொழிகள் 21:1; எசாயா 14:27.

"தம் திருவுளப்படி..." -
இறைமக்கள் மட்டுமல்லாமல், வேற்றின மக்களும் ஆண்டவரின் தனித்தன்மையை உணர்ந்தனர்; நெபுகத்னேசர் உரைத்த அறிக்கை, தானியேல் 4:35; யோனாவோடு கப்பலில் இருந்தோரின் அறிக்கை, யோனா 1:14.

வசனம் 115:4-8
வ.2ல் வேற்றின மக்களின் வினா, இங்கு அதற்கான மறுமொழி.

பைபிளின் அடிப்படையான இறையியல் தர்க்கம் இதுவே; மக்களினங்களோடும், குழப்பத்தில் இருக்கும் தன் மக்களோடும், வாழும் ஆண்டவரின் அடியாரால், தொடர்ந்து செய்யப்படும் இறையியல் விவாதம்; இணை, 135:15-18. மேலும் பார்க்க, 96:5, 97:7; இணைச் சட்டம் 4:28, 28:36; எசாயா 40:18-19, 42:17, 44:9-20, 46:1-9, 65:2; எரேமியா 10:3-5, 16:18-20; அபக்கூக்கு 2:18; திருத்தூதர் பணிகள் 19:26; திருவெளிப்பாடு 9:20. இந்த வகையில், பொற்சிலையை வணங்காத தானியேலின் நண்பர்கள் மூவரின் உறுதியை நாம் நினைவில் வைப்பது சிறந்தது, தானியேல் 3:14-18.

இந்த இறையியல் விவாதம் என்றைக்கும் தேவையான ஒன்று; எல்லாக் காலங்களிலும் சிலை வழிபாடு சூழவே நாம் வாழ்கிறோம்; சிலை வழிபாட்டிற்கு எதிராக பைபிளில் வலுவான கோட்பாடு இருந்தாலும், உலகில் சிலைகள் உள்ள தேவாலயங்களே மிகுந்துள்ளன. அங்கு சென்று வழிபடும் கிறிஸ்தவர்களே உலகில் பெரும்பான்மையாக உள்ளனர். இதுவே மற்றொரு ஆபிரகாமிய சமயமான இஸ்லாமின் பிறப்புக்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாக உள்ளது என்பதும் சிந்தனைக்கு உரியது.

உங்கள் வீட்டில் இறைமகன் இயேசுவின் படம் கொண்ட நாட்காட்டி இருக்கிறதா?

வசனம் 115:8
சிலை வழிபாட்டாளர் தாங்கள் வழிபடும் சிலைகளிடமிருந்து எதையும் கேட்க முடியாது; எனவே இறைவாக்காக எதையும் சொல்ல முடியாது; இவ்வாறு அவர்களும் தங்கள் தெய்வங்களைப் போல மாறுகின்றனர்.

வசனம் 115:9-11
ஒன்று போல ஒலிக்கும் மூன்று வசனங்கள்; மற்ற தேசங்கள் சிலைகளை வணங்கினாலும், இஸ்ரயேல் தங்கள் துணையும் பாதுகாப்புமான ஆண்டவரை நம்ப, உறுதி கொள்ள அழைப்பு. அதேபோன்ற அழைப்பு, ஆண்டவருக்கு அஞ்சி நடக்கும் அனைவருக்கும். இதுபோன்ற அடுக்கு வசனங்கள், பார்க்க 118:2-4, 135:19-20.

"...துணையும் கேடயமும்..." -
பார்க்க 28:7, 33:20.

வசனம் 115:11 & 13
ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் -
பார்க்க, 1 அரசர்கள் 8:41-43; எஸ்ரா 6:21; நெகேமியா 10:28.

வசனம் 115:12-13
வ.9-11 போன்ற அதே அடுக்கில் அமைந்த வசனங்கள்.

வசனம் 115:12
நம்மை நினைவில் வைத்துள்ள உடன்படிக்கையின் ஆண்டவர், தொடக்க நூல் 9:15-16; விடுதலைப் பயணம் 6:5; எசேக்கியேல் 16:60.

ஆசி வழங்கும் உடன்படிக்கையின் ஆண்டவர், தொடக்க நூல் 12:1-3; இணைச் சட்டம் 28:1-2.

வசனம் 115:14-15
*ஆண்டவர் அருளும் ஆசிகள், இணைச் சட்டம்* 28:1-14.

வசனம் 115:16
*மண்ணுலகை மானிடருக்கு வழங்கிய ஆண்டவர்,* 8:6-8; *தொடக்க நூல்* 1:26-28.

வசனம் 115:17
*இறந்தோர் ஆண்டவரைப் புகழ்வதில்லை,* 6:5, 30:9, 88:10-11.

வசனம் 115:18
*இணை,* 113:2.
*சிலைகளை வழிபடுவோர் அந்தச் சிலைகளைப் போலவே உயிரற்றவர்களாக ஆகின்றனர்; ஆனால் வாழும் கடவுளை வணங்குவோர், என்றென்றும் வாழ்பவர்களாய், அவரைப் போற்றி வாழ்த்துகின்றனர்.*

(*பொது மொழிபெயர்ப்பில், இந்த வசனத்தில், மூலப் படிகளில் உள்ள, "அல்லேலூயா" விடுபட்டுள்ளது.*)

✝

## 19 திருப்பாடல் 116

*(சாவினின்று தப்பியவர் பாடியது)*

1 *அல்லேலூயா!*
*ஆண்டவர்மீது அன்புகூர்கின்றேன்;*
*ஏனெனில், எனக்கு இரங்குமாறு*
*நான் எழுப்பிய குரலை அவர் கேட்டருளினார்.*
2 *அவரை நான் மன்றாடிய நாளில்,*
*எனக்கு அவர் செவிசாய்த்தார்.*
3 *சாவின் கயிறுகள் என்னைப் பிணித்துக் கொண்டன;*
*பாதாளத்தின் துன்பங்கள் என்னைப் பற்றிக் கொண்டன;*
*துன்பமும் துயரமும் என்னை ஆட்கொண்டன.*
4 *நான் ஆண்டவரது பெயரைத் தொழுதேன்;*
*'ஆண்டவரே! என் உயிரைக் காத்தருளும்'*
*என்று கெஞ்சினேன்.*
5 *ஆண்டவர் அருளும் நீதியும் கொண்டவர்;*
*நம் கடவுள் இரக்கம் உள்ளவர்.*
6 *எளிய மனத்தோரை ஆண்டவர் பாதுகாக்கின்றார்;*
*நான் தாழ்த்தப்பட்டபோது எனக்கு மீட்பளித்தார்.*
7 *'என் நெஞ்சே! நீ மீண்டும் அமைதிகொள்;*
*ஏனெனில், ஆண்டவர் உனக்கு நன்மை செய்தார்'.*
8 *என் உயிரைச் சாவினின்று விடுவித்தார்;*
*என் கண் கலங்காதபடியும்*
*என் கால் இடறாதபடியும் செய்தார்.*
9 *உயிர் வாழ்வோர் நாட்டில்,*

*நான் ஆண்டவர் திருமுன் வாழ்ந்திடுவேன்.*
10 *'மிகவும் துன்புறுகிறேன்!' என்று சொன்னபோதும்*
*நான் நம்பிக்கையோடு இருந்தேன்.*
11 *'எந்த மனிதரையும் நம்பலாகாது'*
*என்று என் மனக்கலக்கத்தில் நான் சொன்னேன்.*
12 *ஆண்டவர் எனக்குச் செய்த*
*எல்லா நன்மைகளுக்காகவும்*
*நான் அவருக்கு என்ன கைம்மாறு செய்வேன்?*
13 *மீட்பின் கிண்ணத்தைக் கையில் எடுத்து,*
*ஆண்டவரது பெயரைத் தொழுவேன்.*
14 *இதோ! ஆண்டவருடைய மக்கள் அனைவரின் முன்னிலையில்*
*அவருக்கு என் பொருத்தனைகளை நிறைவேற்றுவேன்.*
15 *ஆண்டவர்தம் அன்பர்களின் சாவு*
*அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது.*
16 *ஆண்டவரே! நான் உண்மையாகவே உம் ஊழியன்;*
*நான் உம் பணியாள்; உம் அடியாளின் மகன்;*
*என் கட்டுகளை நீர் அவிழ்த்துவிட்டீர்.*
17 *நான் உமக்கு நன்றிப் பலி செலுத்துவேன்;*
*ஆண்டவராகிய உம் பெயரைத் தொழுவேன்;*
18 *இப்பொழுதே உம் மக்கள்*
*அனைவரின் முன்னிலையில்,*
*ஆண்டவரே! உமக்கு*
*என் பொருத்தனைகளை நிறைவேற்றுவேன்;*
19 *உமது இல்லத்தில் முற்றங்களில்,*
*எருசலேமின் நடுவில், ஆண்டவரே!*
*உமக்கு என் பொருத்தனைகளை நிறைவேற்றுவேன்.*
*அல்லேலூயா!*

திருப்பாடல் 116:1-19

**சிந்தனைக்கு**

*தொடர்ந்து தேசியத் திருநாள் திருப்பாடல்கள்; அவற்றுக்கு இடையே ஒரு தனிப்பட்ட திருப்பாடல்! சிறையிருப்பு என்பது தனிப்பட்டோருக்கான இடரும் தானே! சிறை மீண்ட பலருக்கும் இது பொதுவான அனுபவமாக இருந்திருக்கும் அல்லவா!*

*சாவிலிருந்து மீட்கப்பட்டவரின் நன்றிப்பாடல்! எனவே களிப்புமிகு திருப்பாடல்! இறந்தோர் ஆண்டவரைப் புகழ்வதில்லை (115:17); சாவிலிருந்து மீட்கப்பட்டவர் பெருமகிழ்ச்சி பொங்கப் பாடிய திருப்பாடல்.*

*செப்டுவஜிண்ட் மற்றும் வல்கேட் மொழிபெயர்ப்புகளில் இத்திருப்பாடல் இரண்டு பாடல்களாகப் பிரிக்கப்பட்டு இடம்பெற்றுள்ளது (வ.1-9 & வ.10-19). தாவீதியத் திருப்பாடல்களின் சில வசனங்கள் எடுத்தாளப்பட்டு, வாசிப்போருக்கு ஒரு தாவீதியத் திருப்பாடலின் அனுபவத்தை இத்திருப்பாடல் தருகிறது.* 🕎

*தலைப்பற்ற திருப்பாடல்; எழுதியவர், எழுதப்பட்ட காலம், சூழல் மற்றும் நோக்கம் குறித்த நேரடியான குறிப்பு ஏதுமில்லை. திராட்சை இரசம் அருந்தப் பயன்படும் கிண்ணம் இத்திருப்பாடலை பாஸ்கா உணவின் வேளையோடு இணைக்கிறது.* 🕎

அமைப்பு:
வ.1-2, மறுமொழி அருளும் ஆண்டவர் மீது அன்புகூர்தல்
வ.3-4, சாவின் நிழலில் மன்றாட்டு
வ.5-7, காக்கும் கடவுள் மீது நம்பிக்கை
வ.8-14, உயிர்பெற்றவரின் நற்சாட்சியும் நன்றியும்
வ.15-19, ஆண்டவருக்கு அர்ப்பணிப்போடு வாழ்தல்

வசனம் 116:1-2
ஆண்டவர் மீது அன்புகூர்தல் என்பதே தலைசிறந்த முதன்மையான கட்டளை, இணைச் சட்டம் 6:5, 11:1; மத்தேயு 22:37; மாற்கு 12:29; லூக்கா 10:27; யோவான் 21:15-17.

ஆண்டவரில் நாம் அன்புகூர, அவர் நமக்குச் செவிமடுத்திருக்க வேண்டுமா?

வசனம் 116:1
பார்க்க, 6:9,18:1.

வசனம் 116:2
பார்க்க, 18:6.

வசனம் 116:3
பார்க்க, 18:4-5.
இதுபோன்ற ஒரு நிலையை யோனா விவரிக்கிறார், யோனா 2:5. சாவின் கயிற்றால் கிறிஸ்து இயேசுவின் உயிரைக் கட்ட இயலவில்லை என்று பேதுரு உரைக்கிறார், திருத்தூதர் பணிகள் 2:24.

வசனம் 116:4
வாழ்வளிக்கத் தொழுது மன்றாடுதல், 18:3, 80:18. மேலும் பார்க்க, யோவேல் 2:32; உரோமையர் 10:13.

வசனம் 116:5
இரக்கம், அருள், நீதி - கடவுளின் முதன்மையான நற்குணங்கள்; மேலும் பார்க்க, 86:15, 103:8, 111:4, 112:4; விடுதலைப் பயணம் 34:6.

வசனம் 116:6
"எளிய மனத்தோர்" -
குழந்தை உள்ளம் கொண்டோர்; எளிதில் எதையும் நம்பக் கூடியோர்; பார்க்க மத்தேயு 18:3-4.

வசனம் 116:7
ஆண்டவரில் அமைதி கொள்ளும் உள்ளம், 62:1.

வசனம் 116:8
கண் கலங்காதபடி, கால் இடறாதபடி, சாவினின்று விடுவிக்கும் ஆண்டவர், பார்க்க 56:13.

வசனம் 116:9
"உயிர் வாழ்வோர் நாட்டில்..." -
பார்க்க, 27:13, 142:5.

வசனம் 116:10
பவுலடிகள் இந்த வசனத்தை மேற்கோள் காட்டுகிறார், 2 கொரிந்தியர் 4:13.
துன்பத்திலும் நம்பிக்கை கொள்ளும் உள்ளம்.
நம்பிக்கை கொள்வதாலேயே துன்புறவும் நேரிடலாம், சான்றாக தானியேலும் அவருடைய நண்பர்களும். மேலும் பார்க்க, யோவான் 15:19-20; திருத்தூதர் பணிகள் 14:22; உரோமையர் 8:17; 2 கொரிந்தியர் 1:4-6; பிலிப்பியர் 1:29; 1 பேதுரு 4:12-16.

வசனம் 116:11
கடவுளே நம்பத்தக்கவர் என்றுரைக்கும் பவுலடிகள் இந்த வசனத்தை எடுத்தாளுகிறார், உரோமையர் 3:4.

வசனம் 116:12-19
ஒரு கேள்வி, அதற்கு அர்ப்பணிப்புள்ள இரண்டு பதில்கள், வ.13-14 மற்றும் வ.17-19.
அவற்றுள், வலியுறுத்தப்படும் பொருத்தனைகளை நிறைவேற்றுதல், வ.14, 18 & 19. மற்றவை, ஆண்டவருக்கு ஊழியம் செய்தல், நன்றிப்பலி செலுத்துதல், ஆண்டவரைத் தொழுதல்.

வசனம் 116:13
கிண்ணம், கடவுளின் ஆசியைக் குறிக்கும் ஒன்று, 16:5, 23:5.

வசனம் 116:15
"...சாவு ...மிக மதிப்புக்குரியது" -
பார்க்க, 72:13-14; எசாயா 43:4.

வசனம் 116:16
"உம் அடியாளின் மகன்" -
இணை, 86:16.

வசனம் 116:17-18
இணை, வ.13-14; பொருத்தனைகளை நிறைவேற்றுவதில் முனைப்புடன் இருக்கும் திருப்பாடகர்.

சாவிலிருந்து மீட்கப்பட்டவரின் திருப்பாடல்; எகிப்திய அல்லேல் திருப்பாடல்களில் ஒன்று என்பதால் வியாகுல வியாழன் இரவில் தமது இறுதி இராவுணவில் கிறிஸ்து இயேசு உணர்ச்சி மிகுந்த நிலையில் இதனைப் பாடியிருப்பார் என்பது உறுதி. அந்த இரவில், விண்ணகத் தந்தைக்கு விருப்பமானால் இத்துன்பக் கிண்ணத்தைத் தம்மிடமிருந்து அகற்ற வேண்டினார் (லூக்கா 22:42). கைது செய்யப்பட்ட அந்த வேளையில், "தந்தை எனக்கு அளித்த துன்பக் கிண்ணத்திலிருந்து நான் குடிக்காமல் இருப்பேனோ!" (யோவான் 18:11) என்றும் பேதுருவிடம் கூறினார். ஆனால் ஆண்டவர்தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது; எனவே சாவின் கட்டுகளிலிருந்து கடவுள் அவரை விடுவித்தார். மாட்சியோடே மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.
அல்லேலூயா!

## 19 திருப்பாடல் 117

*(ஆண்டவர் போற்றி)*

1 *பிற இனத்தாரே!*
*நீங்கள் அனைவரும் ஆண்டவரைப் போற்றுங்கள்!*
*மக்களினத்தாரே!*
*நீங்கள் அனைவரும் அவரைப் புகழுங்கள்!*
2 *ஏனெனில், ஆண்டவர் நமக்குக் காட்டும்*
*மாறாத அன்பு மிகப்பெரியது;*
*அவரது உண்மை என்றென்றும் நிலைத்துள்ளது.*
*அல்லேலூயா!*

திருப்பாடல் 117:1-2

**சிந்தனைக்கு**

*மொத்த பைபிளில் சிறிய அதிகாரம்; திருப்பாடல்களில் மிகவும் சிறிய திருப்பாடல். இதற்கு முந்தைய அல்லது பிந்தைய திருப்பாடலின் ஒரு பகுதி என்று இதனைச் சொல்ல முடியாத அளவுக்கு, இத்திருப்பாடலின் கருப்பொருள் முற்றிலும் வேறானது. சிறிய திருப்பாடல் என்றாலும், அதற்குள்ளேயே இத்திருப்பாடல் முழுமையானது.*

*வரலாறு நெடுகிலும் இஸ்ரயேலுக்கு ஆண்டவர் அருளும் ஆசிகள், எல்லா மக்களினங்களுக்கும் பெரிய நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது. இரண்டே வசனங்களில் இதனை அறிவுறுத்துவதாக இத்திருப்பாடல் விளங்குகிறது.*

*தலைப்பற்ற திருப்பாடல்; எழுதியவர், எழுதப்பட்ட காலம், சூழல் மற்றும் நோக்கம் குறித்த நேரடியான குறிப்பு ஏதுமில்லை. எகிப்திய அல்லேல் திருப்பாடல்களில் ஒன்று. சிறையிருப்பிலிருந்து இஸ்ரயேலர் மீண்டு வந்த காலத்தில், இஸ்ரயேலில் வேற்றின மக்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் அனைவரின் கண்கள் காண, தங்களின் சுயமுயற்சியால், இஸ்ரயேலர், வாழும் கடவுளான தங்கள் ஆண்டவருக்கு இரண்டாம் கோவிலையும், எருசலேம் நகரையும் நிர்மாணித்தனர். அதன் மகிழ்ச்சியில் பங்கேற்று, என்றென்றும் உண்மையுள்ள ஆண்டவர், ஏதுமற்ற தங்களுக்கு அருளிய மாறாத அன்பைப் போற்றிப் புகழ, ஏனைய மக்களினங்களுக்கு இஸ்ரயேலர் அழைப்பு விடுப்பது போல, இத்திருப்பாடல் அமைந்துள்ளது. கோவில் அர்ப்பணத் திருநாளில் (எஸ்ரா 6:16) முதன்முறையாகப் பாடப்பட்டு, பின்னர் பாஸ்காத் திருப்பாடல்களில் ஒன்றாக மாறி இருக்கலாம்.*

*வசனம்* 117:1
*பூவுலகின் ஆண்டவர் என்பது மட்டுமல்ல,* 114:3-8, 115:15-16; *அனைத்து நாடுகளின், எல்லா மக்களினங்களின் கடவுளாகிய ஆண்டவர்,* 22:27, 47:1-2, 66:4, 67:1-7, 86:9, 98:4, 100:1.

*வசனம்* 117:2
*ஆண்டவரின் அன்பு மிகப்பெரியது, பார்க்க* 103:11. *என்றென்றும் மாறாதது,* 107:1. *உண்மையுள்ள ஆண்டவர்,* 25:10, 85:10, 100:5, 119:90, 138:2; *இணைச் சட்டம்* 7:9.

கிறிஸ்து இயேசுவின் நற்செய்தி யூதர்களுக்கு மட்டுமல்லாமல், அனைத்து மக்களினங்களுக்குமானது என்ற உண்மையை உறுதிப்படுத்த, பவுலடிகள் இந்தத் திருப்பாடலைச் சான்றாக முன்வைக்கிறார் (உரோமையர் 15:11). அந்த வகையில், இது மேசியாவின் திருப்பாடல் என்று சொல்வோர் உள்ளனர். இஸ்ரயேலின் ஆண்டவர், உண்மையில் உலகோர் அனைவருக்கும் ஆண்டவர் என்பது கிறிஸ்து இயேசுவில் நிறைவடைகிறது. இஸ்ரயேலைச் சுற்றிலுமிருந்த நாடுகளின் தெய்வங்கள் எல்லாம் வெறுமையாக வீழ்ந்த காலத்தில், நம்பிக்கை அருளும் ஆண்டவராக கிறிஸ்து இயேசு வெளிப்பட்டார்.

வீழ்ச்சி அடைந்த நாடு, ஆனால் மக்களினங்களை வெற்றி கொண்ட ஆண்டவர்! அல்லேலூயா!

## 19 திருப்பாடல் 118

(நன்றிப் புகழ் மாலை)

1 ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்,
ஏனெனில் அவர் நல்லவர்;
என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு.
2 'என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு'
என இஸ்ரயேல் மக்கள் சாற்றுவார்களாக!
3 'என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு'
என ஆரோனின் குடும்பத்தார் சாற்றுவார்களாக!
4 'என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு'
என ஆண்டவருக்கு அஞ்சுவோர் அனைவரும் சாற்றுவார்களாக!
5 நெருக்கடியான வேளையில்
நான் ஆண்டவரை நோக்கி மன்றாடினேன்;
ஆண்டவரும் எனக்குச் செவி கொடுத்து
என்னை விடுவித்தார்.
6 ஆண்டவர் என் பக்கம் இருக்க
நான் ஏன் அஞ்ச வேண்டும்?
மனிதர் எனக்கு எதிராக என்ன செய்ய முடியும்?
7 எனக்குத் துணை செய்யும் ஆண்டவர்
என் பக்கம் உள்ளார்;
என்னை வெறுப்போர்க்கு நேர்வதைக்
கண்ணாரக் காண்பேன்.
8 மனிதர்மீது நம்பிக்கை வைப்பதைவிட
ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம்!
9 உயர்குடியினர் மீது நம்பிக்கை வைப்பதைவிட,
ஆண்டவரிடம் அடைக்கலம் புகுவதே நலம்!
10 வேற்றினத்தார் அனைவரும் என்னைச் சூழ்ந்து கொண்டனர்;
ஆண்டவர் பெயரால் அவர்களை அழித்து விட்டேன்.
11 எப்பக்கமும் அவர்கள்
என்னைச் சுற்றி வளைத்துக்கொண்டனர்;
ஆண்டவர் பெயரால் அவர்களை அழித்து விட்டேன்.
12 தேனீக்களைப்போல் அவர்கள்

என்னைச் சூழ்ந்து கொண்டனர்;
நெருப்பிலிட்ட முட்களைப்போல்
அவர்கள் சாம்பலாயினர்;
ஆண்டவரின் பெயரால்
அவர்களை அழித்துவிட்டேன்.
13 அவர்கள் என்னை வலுவுடன் தள்ளி வீழ்த்த முயன்றனர்;
ஆனால், ஆண்டவர் எனக்குத் துணை நின்றார்.
14 ஆண்டவரே என் ஆற்றல்; என் பாடல்;
என் மீட்பும் அவரே.
15 நீதிமான்களின் கூடாரங்களில்
வெற்றியின் மகிழ்ச்சிக்குரல் ஒலிக்கின்றது;
ஆண்டவரது வலக்கை வலிமையாய்ச் செயலாற்றியுள்ளது.
16 ஆண்டவரது வலக்கை உயர்ந்தோங்கி உள்ளது;
ஆண்டவரது வலக்கை வலிமையாய்ச் செயலாற்றியுள்ளது.
17 நான் இறந்தொழியேன்; உயிர் வாழ்வேன்;
ஆண்டவரின் செயல்களை விரித்துரைப்பேன்;
18 கண்டித்தார், ஆண்டவர் என்னைக் கண்டித்தார்;
ஆனால் சாவுக்கு என்னைக் கையளிக்கவில்லை.
19 நீதிமான்கள் செல்லும் வாயில்களை
எனக்குத் திறந்து விடுங்கள்;
அவற்றினுள் நுழைந்து
நான் ஆண்டவருக்கு நன்றி செலுத்துவேன்.
20 ஆண்டவரது வாயில் இதுவே!
இது வழியாய் நீதிமான்களே நுழைவர்.
21 என் மன்றாட்டை நீர் கேட்டதால்,
எனக்கு நீர் வெற்றி அளித்ததால்,
உமக்கு நான் நன்றி செலுத்துகின்றேன்.
22 கட்டுவோர் புறக்கணித்த கல்லே
கட்டடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று!
23 ஆண்டவரால் இது நிகழ்ந்துள்ளது!
நம் கண்களுக்கு இது வியப்பாயிற்று!
24 ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே;
இன்று அக்களிப்போம்; அகமகிழ்வோம்.
25 ஆண்டவரே! மீட்டருளும்!
ஆண்டவரே! வெற்றிதாரும்!
26 ஆண்டவரின் பெயரால் வருபவர் ஆசி பெற்றவர்!
ஆண்டவரது இல்லத்தினின்று உங்களுக்கு ஆசி கூறுகிறோம்.
27 ஆண்டவரே இறைவன்;
அவர் நம்மீது ஒளிர்ந்துள்ளார்;
கிளைகளைக் கையிலேந்தி
விழாவினைத் தொடங்குங்கள்;
பீடத்தின் கொம்புகள்வரை
பவனியாகச் செல்லுங்கள்.
28 என் இறைவன் நீரே!
உமக்கு நான் நன்றி செலுத்துகின்றேன்;
என் கடவுளே!
உம்மைப் புகழ்ந்தேத்துகின்றேன்.
29 ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்;

ஏனெனில், அவர் நல்லவர்;
என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு.

திருப்பாடல் 118:1-29

**சிந்தனைக்கு**

குருத்தோலை ஞாயிறு மற்றும் கிறிஸ்து இயேசுவின் இறுதிப் பாஸ்காவின் நிகழ்வுகளை நிழலோட்டமாக வெளிப்படுத்தும் திருப்பாடல். "ஆண்டவரே! விடுவியும்" என்று எருசலேம் தெருக்களில் கேட்ட ஓசன்னா முழக்கத்தை நினைவூட்டும் திருமொழிகள் உள்ளன, வ.5, 14, 21 & 25. தெருக்களில் பவனியாகக் கிறிஸ்து இயேசு வந்ததை நினைவூட்டும் திருமொழிகள் உள்ளன, வ.26-27. பாஸ்கா இராவுணவின் இறுதித் திருப்பாடல் இது என்பதால், தமது சிலுவை மரணத்திற்கு முன், அவர் இறுதியாகப் பாடிய திருப்பாடல், மத்தேயு 26:30; மாற்கு 14:26. எகிப்திய அல்லேலெ திருப்பாடல்களில் இறுதித் திருப்பாடல்.

மேசியாவுக்கு உரிய திருமொழிகள் நீங்கலாக, பல வசனங்களும், நாம் ஒவ்வொருவரும், நம் ஒவ்வொருவரின் தனிப்பட்ட அனுபவமாக உரிமை கொண்டாடத் தக்கவை. அந்த வகையில் திருப்பாடல் 23க்கு அடுத்தபடியாக, இந்தத் திருப்பாடல் உள்ளத்திற்கு உகந்ததாக உள்ளது. அதனடிப்படையில், கிறிஸ்துவத்தின் பிற்போக்குத்தனங்களுக்கு எதிராகப் போரிட்ட, புரட்சியாளர் மார்டின் லூதர், இத்திருப்பாடலைத் தனது சொந்தத் திருப்பாடல் என்றும், தனது நேசத்திற்குரிய திருப்பாடல் என்றும் சொல்கிறார். "பைபிளின் எல்லா எழுதப்பட்ட வாக்கும் திருப்பாடல்களின் திருமொழிகளும், எனது வாழ்விற்கும் எனது ஆறுதலுக்கும் அருமையானவை என்பது உண்மையே; ஆயினும், இந்தத் திருப்பாடல் சிறப்பான உணர்வில் எனக்குப் பிடித்தமானதும், எனக்கு உரிமையானதும் ஆகும். எனது கடினப் பாடுகளின் நடுவே, பேரரசரும், அரசர்களும், ஞானிகளும், அறிவாளிகளும், இவர்களுக்கு மேலான புனிதர்களும் எனக்குத் துணை நிற்க முடியாத நிலையில், என்னோடு இருந்தது இத்திருப்பாடலின் திருமொழிகளே" என்று அவர் உறுதிபட உரைக்கிறார்.

வசனங்களின் சிறு சிறு தொகுப்புகளில், மீண்டும் மீண்டும் சொல்லப்படும் சொற்சேர்க்கைகள் உள்ளன; சொல்ல முனைந்த கருத்துகளுக்கு வலுச்சேர்க்க இத்தகைய இலக்கிய மரபு கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

தலைப்பற்ற திருப்பாடல்; எழுதியவர், எழுதப்பட்ட காலம், சூழல், மற்றும் நோக்கம் குறித்த குறிப்புகள் எதுவுமில்லை. தாவீதின் திருப்பாடல் என்றும், வாழும் காலம் நீட்டிக்கப்பட்ட எசேக்கியா அரசரின் காலத்துத் திருப்பாடல் என்றும், யோசபாத்தின் காலத்தில் போரில் ஆண்டவர் அருளிய வெற்றிக்குப் பிறகு பாடப்பட்ட திருப்பாடல் என்றும் (2 குறிப்பேடு 20:27-29), செருபாபேலின் காலத்தில் இரண்டாம் கோவில் அடித்தளம் இடப்பட்ட போது (எஸ்ரா 3:10-11) பாடப்பட்ட திருப்பாடல் என்றும், அதற்கும் பிந்தைய யூதா மக்கபேயரின் காலத் திருப்பாடல் என்றும் சொல்வோர் உளர். இருப்பினும், வரலாற்றுப் பின்னணியாக, நெகேமியா 12:27-45 (சேர்த்து வாசிக்க, நெகேமியா 8:14-18) நிகழ்வுகளின் அடிப்படையில், எஸ்ரா பாடியிருக்க அதிக வாய்ப்புண்டு.

அமைப்பு:
பகுதி - 1 அரசரின் பவனிப் பாடல்
வ.1-4, ஆண்டவரின் பேரன்புக்கு நன்றி
வ.5-9, உறுதியாகவே விடுவிக்கும் ஆண்டவரில் பற்றுறுதி
வ.10-14, சூழ்ந்திருக்கும் எதிரிகளிடமிருந்து விடுவிக்கும் ஆண்டவர்

வ.15-18, சாவுக்கு மீட்கப்பட்டவரின் களிப்பு
பகுதி - 2 கோவிலின் வாயில் மற்றும் திருமுன் பாடப்படும் பாடல்
வ.19-20, நீதிமான்களின் வாயில்
வ.21-24, வியப்பூட்டும் மூலைக்கல்
வ.25-27, பலிபீடத்தில் பிணைக்கப்பட்ட பாஸ்காப்பலி
வ.28-29, நன்றிப்பாடல்

வசனம் 118:1-4
கவிநயமிக்க நடையில், மீண்டும் மீண்டும் ஒலிக்கும், 'என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு'!

வசனம் 118:1
இணை, 107:1 மற்றும் குறிப்பு.

வசனம் 118:2-4
ஆண்டவரைப் போற்றும் இறை அன்பர்கள்; இணை, 115:9-11.
மும்முறை உரைத்தல் இந்தத் திருப்பாடலின் சிறப்பு.

வசனம் 118:5
நெருக்கடியில், இடுக்கத்தில் சிக்கிக்கொண்ட தம் அன்பரை மீட்கும் ஆண்டவர், 3:3-4, 4:1, 17:6, 18:19, 27:7, 86:7, 91:15, 99:6, 102:2, 120:1, 138:3. மேலும் பார்க்க, 1 அரசர்கள் 18:24&36-38; எசாயா 65:24; எரேமியா 33:3; யோனா 2:2.

வசனம் 118:6
சாவு, பொருளாதார இழப்பு, எதிரிகள் தரும் துயர், இயற்கையின் இடர் - எதுவாயினும், அச்சத்தை விரட்டி அடிக்கும் ஆண்டவரின் பிரசன்னம், இணைச் சட்டம் 20:3-4. எபிரேயர் (13:6) திருமடலை எழுதியவர் இவ்வசனத்தை அருமையான மேற்கோளாக, நமக்கு ஊக்கமூட்டும் வண்ணம் எடுத்தாளுகிறார்.

வசனம் 118:7
"...துணை செய்யும் ஆண்டவர்..." -
தமது மக்களின் சார்பில் செயல்படும் ஆண்டவர், 20:2,115:9-11,121:2,124:8; விடுதலைப் பயணம் 18:4; இணைச் சட்டம் 33:7; 1 சாமுவேல் 7:12; எசாயா 41:10-13.

எதிர்ப்போர் மீது வெற்றி அருளும் ஆண்டவர், 108:7-13, 109:26-31, 110:1-3&5-6, 114:1-2.

வசனம் 118:8-9
ஜேம்ஸ் போய்ஸ் என்னும் பைபிள் அறிஞர் தரும் புள்ளிவிபரம்: KJV பைபிளில் மொத்தம் 31174 வசனங்கள் உள்ளன; அதன்படி 15587 மற்றும் 15588 ஆகிய வசனங்கள் நடு வசனங்களாக உள்ளன; இவையே அவ்வசனங்கள்.

பற்றுறுதி வாழ்க்கையில் வெற்றி நடை போட ஊக்குவிக்கும் சிறப்பான திருமொழிகள். நம்மைப் பாதுகாப்பவரும் நமக்கு வாழ்வளிப்பவரும் அவரே! பார்க்க, 3:3-6, 4:8, 5:11, 7:1, 9:9-10, 11:1, 14:6, 16:1, 17:7, 18:1-2, 33:16-19, 62:5-8, 146:1-7. மேலும் பார்க்க, 2 சாமுவேல் 22:3&31; எசாயா 14:32.

வசனம் 118:10-12

சுற்றி வளைத்துச் சூழ்ந்து கொண்ட வேற்றினத்தாருக்கு ஆற்றலோடு வெளிப்படும் ஆண்டவர், 2:1-6, 67:1-7, 117:1.

இந்த வசனங்களைக் கவனியுங்கள்: "...சூழ்ந்து கொண்டனர் ... சுற்றி வளைத்துக் கொண்டனர் ... சூழ்ந்து கொண்டனர்." ஆனால் ஆண்டவரை விடாது பற்றிக் கொண்டோர் சொல்வது: "... அழித்து விட்டேன் ... அழித்து விட்டேன் ... அழித்து விட்டேன்."

சிக்கல்கள் நம்மைச் சுற்றி வளைக்கலாம்; சூழ்ந்து கொள்ளலாம்; நோகடிக்கலாம்; ஆனால் அவற்றால் நம்மை மூழ்கடிக்க முடியாது! ஆண்டவரின் துணையால், நாமே வெற்றி கொள்வோம்!

மூன்று வசனங்களிலும், "ஆண்டவர் பெயரால்" என்பது வலியுறுத்தப்படுவதையும் உணருங்கள்: "ஜெயம் அல்லேலூயா, அவர் நாமத்துக்கே!"

வசனம் 118:13-14

வலுவுடன் தள்ளி வீழ்த்த எதிரிகள் முயன்றாலும், நம்முடைய ஆற்றல் ஆண்டவரே! நம் துணையும், மீட்பரும், வெற்றிப் பாடலும் அவரே! (விடுதலைப் பயணம் 15:2; எசாயா 12:2)

வசனம் 118:15-16

போர்க்களத்தின் கூடாரங்களில் ஒலிக்கும் வெற்றிக் களிப்பு.

நமது தனிப்பட்ட வாழ்க்கையில், ஒவ்வொரு நாளிலும், சிக்கல்களை மேற்கொள்ளும் வேளைகளில், நம் உள்ளத்தில் தொனிக்கும் வெற்றிக் களிப்பு! அத்தருணங்களில் ஆண்டவரின் அருளை நினைவுகூருங்கள்!

ஏனெனில், இவ்வுலகில் எதுவும் தற்செயலானது அல்ல; நமது தனிப்பட்ட முயற்சியும் அல்ல.

*

மூன்று முறை நினைவூட்டப்படும் "ஆண்டவரது வலக்கை," நமது வெற்றிகளில் நிச்சயமாக நம்மோடு இருப்பது, 18:35, 20:6, 45:4, 63:8, 80:15, 89:13, 138:7; மேலும் பார்க்க, விடுதலைப் பயணம் 15:12.

வசனம் 118:17-18

நமது குற்றங்களுக்கு நம்மைக் கண்டிக்கும் ஆண்டவர்; அவர் அருளும் வாழ்வை வலியுறுத்தும் மூன்று விதமான சொற்கள்: "... இறந்தொழியேன் ... உயிர் வாழ்வேன் ... சாவுக்கு என்னைக் கையளிக்கவில்லை."

எனவே ஆண்டவரால் கண்டிக்கப்பட்டால் சோர்ந்து போகாதீர்கள், 94:12-14; எபிரேயர் 12:5-7; ஒப்புரவான அடுத்த நகர்வுகளில், ஆண்டவர் அருளும் வெற்றி நமக்காகக் காத்திருக்கிறது!

வசனம் 118:19-20

வெற்றி வேந்தரின் பவனி நகருக்குள் நுழைதல், பார்க்க திருப்பாடல் 24. மேலும் பார்க்க, எசாயா 26:2

நீதிமான்களின் நுழைவாயில் என்பது ஆண்டவருடன் ஐக்கியப்படுதல்; பைபிள் வாசிக்கும் வேளைகளில், அதிகாலை ஜெபங்களில், ஆலய வழிபாடுகளில், ஆண்டவரோடு ஐக்கியத்தை உணர முடிகிறதா?

வசனம் 118:21
இரட்சிப்பு / மீட்பை வெளிப்படுத்தும் மற்றுமொரு வசனம்; ஏனையவை, வ.5, 14 & 25.

நன்றி செலுத்துதல், வ.1, 19, 28, 29. ஒவ்வொரு நன்மையையும் நினைவுகூர்ந்து ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் திருப்பாடகர்.

வசனம் 118:22-23
மூலைக்கல், மத்தேயு 21:42; மாற்கு 12:10-11; லூக்கா 20:17; திருத்தூதர் பணிகள் 4:11; 1 பேதுரு 2:7.

திருப்பாடலின் தொடர்ச்சியில், தனித்த வசனங்களாக இருந்தாலும், கிறிஸ்து இயேசுவின் வாழ்க்கையில் மிகவும் தொடர்புடைய வசனம்.
 * தாவீதின் வழியில் இயேசு வந்தவர் என்பதை யூதர்கள் ஒப்புக் கொள்ளவில்லை, யோவான் 7:52.
 * முறையான இறையியல் கல்லாத இயேசுவை யூதர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை, யோவான் 7:15.
 * மரபுகளுக்கு எதிரான இயேசுவை யூதர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை, லூக்கா 6:2.
 * இயேசு ஏற்றுக் கொண்டோரின் பொருட்டு அவரை யூதர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை, மத்தேயு 9:11.

மேலும், கிறிஸ்து இயேசு
 * தம் சமயத் தலைவர்களால் ஒதுக்கப் பட்டார்.
 * ஆள்பவரால் சிலுவையில் அடிக்கத் தீர்க்கப்பட்டார்.
 * யூதர்கள் அவரைச் சிலுவையில் அறையும்படிக் கட்டாயப்படுத்தினர்.
 * அச்சமுற்ற திருத்தூதர்கள் அவரைக் கைவிட்டு ஓடினர்.
 * அன்பு கொண்ட அவருடைய பெண் சீடர்கள் ஏதும் செய்ய இயலாத நிலையில் இருந்தனர்.
அனைவராலும் கைவிடப்பட்டு, கடவுள் மட்டுமே அவரை உயர்த்தும் நிலையில் கிறிஸ்து இயேசு இருந்தார். (இணைத்துப் பார்க்க, வ.6-8.)

மேலும் வாசிக்க, எசாயா 28:14-17; செக்கரியா 10:3-5.

திருப்பாடல் எழுதப்பட்ட காலத்தில், இஸ்ரயேலே புறக்கணிக்கப்பட்ட மூலைக்கல்; சுற்றிலும் இருந்த பலம் பொருந்திய நாடுகளால் சிறுமைப் படுத்தப்பட்ட இஸ்ரயேல். ஆனால் மீண்டும் மீண்டும் அதனை ஆற்றல்மிக்க நாடாக எழுப்பும் ஆண்டவர்.

வசனம் 118:24
குதூகலம் தரும் திருமொழி! இந்த வசனத்தின் அடிப்படையில் அமைந்த ஆங்கிலம் மற்றும் தமிழ் பல்லவி நினைவில் உள்ளதா? ஓய்வு நாள் பாடசாலையில் நாம் கற்பது, பின்னாட்களில் நமக்கு நல்லனுபவமாக அமையவே! எனவே சோர்விலும் தளர்விலும் இந்தப் பல்லவியைப் பாடித் துள்ளி எழுங்கள்!

ஆழ்ந்த பொருள்தரும் வசனம்; அந்த நன்னாள் புறக்கணிக்கப்பட்ட கல் மூலைக்கல்லாக உயர்த்தப்பட்ட நாள்; இதுவே புதிய ஏற்பாட்டு விசுவாசிகளின் ஆசி!

வசனம் 118:25-26
எருசலேமில் கிறிஸ்து இயேசுவின் வெற்றி பவனி, மத்தேயு 21:9, 23:39; மாற்கு 11:9; லூக்கா 13:35, 19:38; யோவான் 12:13.

வசனம் 118:25
"ஆண்டவரே! மீட்டருளும்!" -
கர்த்தாவே, இரட்சியும் (OV); yâsha, யாஷா; ஓசன்னா என்பதன் மூலச் சொல்; அதோடு anna என்ற சொல் இணைந்து வருவது ஓசன்னா; இதன் பொருள், காக்க வேண்டுகிறேன் (I beseech to save).

வசனம் 118:27
ஒப்பிட்டு வாசிக்க:
பொருள் பொதிந்த பொது மொழிபெயர்ப்பு!

நம்மீது ஒளிரும் ஆண்டவர், எண்ணிக்கை 6:25.

"கிளைகளைக் கையிலேந்தி..." -
ஆண்டவரின் பராமரிப்பில் களிகூர்தல், லேவியர் 23:40.

கிறிஸ்து இயேசுவுக்கு மக்கள் திரள் எருசலேமில் அளித்த வரவேற்பு, மத்தேயு 21:8; யோவான் 12:13.

நிறைவுக்கால நிகழ்வு, திருவெளிப்பாடு 7:9-10.

வசனம் 118:28
"என் இறைவன் நீரே!" -
உடன்படிக்கையை அறிக்கை செய்தல், தொடக்க நூல் 17:8; விடுதலைப் பயணம் 6:7, 29:45-46; லேவியர் 26:12; இணைச் சட்டம் 29:13; திருவெளிப்பாடு 21:7.

வசனம் 118:29
தொடங்கிய வசனத்தோடு நிறைவுறும் திருப்பாடல்.

கிறிஸ்து இயேசு கெத்சமனித் தோட்டத்திற்குள் நுழையுமுன் பாடிய திருப்பாடல். "எனது உள்ளம் சாவு வருமளவுக்கு ஆழ்துயரம் கொண்டுள்ளது" என்று சொன்னார். வியாகுல நள்ளிரவில், இந்தத் திருப்பாடலின் திருமொழிகளால் தம்மை ஜெபத்துள் தேற்றிக் கொண்டிருப்பார். தம்மைத் தம் தந்தை சாவுக்குக் கையளிக்க மாட்டார் (வ.18) என்ற உறுதியில் நிலைபெற்றிருப்பார். மூன்றாம் நாளான ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் திருநாளை எதிர்நோக்கி, பாடுகளை எதிர்கொள்ள அவர் தம்மை ஆயத்தம் செய்துகொண்டார்.

நம்மை உயிர்ப்பிக்கும் திருமொழிகளில் இரவுகளில் பலப்படுங்கள்; கயமையும் வஞ்சகமும் கக்குவோரை பகலில் வெல்லுங்கள்!

# 19 திருப்பாடல் 119

### முன்னுரை

பைபிளின் நீண்ட அதிகாரம். திருப்பாடல்களில் மிகவும் பெரிய திருப்பாடல். மொத்தம் 176 வசனங்கள். சிறிய இறைவாக்கினரின் சில நூல்களை விடவும், புதிய ஏற்பாட்டின் சில திருமடல்களை விடவும், நீண்டதொரு திருப்பாடல். எனவே சற்றே நீண்ட முன்னுரை.

திருச்சட்டத்தின் மேன்மை, அதனைப் பயில்வதில் அடையும் இன்பம், அதன் வழியே நடப்பதால் கிடைக்கும் பேறு - இதுபோன்ற செய்திகளை நமக்குத் தரும் திருப்பாடல். கருப்பொருள், அதன் வளர்ச்சி என்ற வழக்கமான நடையிலிருந்து மாறுபட்டு, முழுக்க முழுக்கத் திருச்சட்டம் குறித்துப் பாடப்பட்டுள்ள திருப்பாடல். அதனால் நம்மில் பலரும் இத்திருப்பாடலைச் சலிப்பூட்டுவதாக, ஒரே செய்தியை மீண்டும் மீண்டும் பேசுவதாக, ஆர்வமூட்டும் கூறுகள் அற்றதாக உணர்ந்திருக்கக் கூடும். எனக்கு ஒரு கேள்வி உண்டு: நம்மில் எத்தனை பேர் இந்தத் திருப்பாடலை முழுமையாக மீண்டும் மீண்டும் வாசித்திருப்போம்?

புகழ்ச்சி, மன்றாட்டு, தியானம், ஞானவுரை என்ற அடுக்குகள் கொண்ட ஒரு திருப்பாடல்; வியப்பூட்டும் செய்தி எதுவென்றால், நாட்டின் குரலாக / கூட்டு வழிபாட்டின் குரலாக ஐந்தாம் தொகுப்பின் பல திருப்பாடல்கள் ஒலிக்க, முழுக்க முழுக்கத் தனி ஒருவரின் தனிப்பட்ட அனுபவமாகவே முழுத் திருப்பாடலும் அமைந்துள்ளது.

வியப்பூட்டும் எபிரேயக் கவிதை அமைப்பு; அகரவரிசைத் திருப்பாடல்களாக அமைந்துள்ள ஏனைய (9, 10, 25, 34, 37, 111, 112 & 145) திருப்பாடல்களை விடவும், கூடுதல் சிறப்புள்ள திருப்பாடல்: 176 திருமொழிகள் எட்டு எட்டாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு எட்டு வசனமும் ஒரே எபிரேய எழுத்தில் தொடங்குவதாகப் படைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு 22 எழுத்துகளில் தொடங்கும் எட்டு எட்டு வசனங்கள் என்பதாலேயே 176 வசனங்கள் கொண்ட நீண்ட திருப்பாடலாக வடிவெடுத்துள்ளது. இறைவாக்கினர் எரேமியா அகரவரிசையில் எழுதும் ஆற்றல் பெற்றவர்; அகரவரிசையில் எழுதப்பட்ட புலம்பல் நூலின் மூன்றாம் அதிகாரத்தில், அகரவரிசையில் மும்மூன்று வசனங்களாக 22 எழுத்துகளில் 66 வசனங்களை அவர் எழுதியுள்ளார். பைபிளை மொழிபெயர்த்த யாரும் அந்த அந்த மொழிகளில், அகரவரிசையில் எழுதி வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை; இதுவே இத்திருப்பாடலின் தனித்துவமாகும்.

சிறப்பிடம் பெற்றுள்ள சொற்கள்:
எட்டு எட்டு வசனங்களாக அகரவரிசை அமைப்பில் எழுதியது மட்டுமல்லாமல், இறை வார்த்தை என்பதைக் குறிக்கும் எட்டு எபிரேயச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று ஆலன் ரோஸ் என்பார் குறிப்பிடுகிறார்:

* tôrâ / தோரா / law / திருச்சட்டம், சட்டம் (25 முறை)
* êdâh / ஏய்தா / testimonies / ஒழுங்குமுறைகள் (24 முறை)
* piqqûd / பிக்கூட் / precepts / நியமங்கள் (21 முறை)
* chôq / கோக் / statutes / விதிமுறைகள் (21 முறை)
* mitsvâh / மிட்ஸ்வா / commandments /கட்டளைகள் (23 முறை)
* mishpât / மிஷ்பாட் / judgements / நீதிநெறிகள், நீதி, நெறிமுறைகள், நீதித் தீர்ப்புகள் (22 முறை)
* dâbâr, imrâh / தாபார், இம்ரா / வாக்கு, சொற்கள், வார்த்தைகள் (24 முறை)
* âmar, dâbâr, imrâh / ஆமர், தாபார், இம்ரா / saying, promise / வாக்குறுதிகள் (14 முறை)

மேலும், மேற்குறிப்பிட்ட சொற்கள் இடம் பெறாத வசனங்கள் 84, 90, 121, 122 மற்றும் 132 மட்டுமே; மறைமுகமாக இறைவார்த்தையைக் குறிக்கும் சொற்கள் இந்த ஐந்து வசனங்களில் இருப்பதன் அடிப்படையில் பார்த்தால், வ.122 மட்டுமே இறைவார்த்தையைக் குறிக்கும் எந்தச் சொல்லும் இடம்பெறாத ஒரே வசனம்.

நேரடியான இந்தச் சொற்கள் தவிர, வழி, பாதை போன்ற சொற்களும் இறைவார்த்தையைக் குறிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு எட்டு வசனங்களும் சொல்ல வரும் செய்தி, முதல் வசனங்களில் குறிப்பிடப்படுகிறது. இறைவார்த்தைக்காக கடவுளைத் தொழுதல், கீழ்ப்படிதலோடு இறையன்பரான திருப்பாடகர் திருச்சட்டத்தைக் கடைப்பிடிக்கும் ஆற்றல் பெற மன்றாடல், கடினப் பாடுகளின் நடுவே நடந்தாலும் இறைவார்த்தையின் இன்பத்தோடு கடக்க வேண்டுதல், திருச்சட்டத்தைக் கற்றுத் தேர மன்றாடல், நீதி நெறிகளின் படி வாழ மன்றாடல், மன்னித்தருள வேண்டல் - இவையே இத்திருப்பாடல் வெளிப்படுத்தும் செய்திகள்.

திருப்பாடல் முழுமையும் தன்னிலை ஒருமையில், திருப்பாடகரின் தனிப்பட்ட அனுபவமாகவே எழுதப்பட்டுள்ளது. வ.4, கூட்டு வழிபாட்டில் உள்ள வசனம் போல் தோன்றினாலும், நாங்கள் என்று குறிப்பிடும் சொல் ஏதும் எபிரேய மூலத்தில் இல்லை. எனவே இந்தத் திருப்பாடல் முழுவதும் ஒருவரின் தனிப்பட்ட அனுபவமாகவே எழுதப்பட்டுள்ளது.

நம் வாழ்வில் நம்மீது 24*7 ஆதிக்கம் செலுத்தவல்ல இறைவார்த்தை:
* பொழுது புலருமுன், வ.147,
* எல்லா வேளைகளிலும், வ.97
* ஒவ்வொரு நாளில் ஏழு முறை, வ.164
* இரவுகளில், வ.55
* நள்ளிரவில், வ.62 & 148

தலைப்பற்ற திருப்பாடல்; எழுதியவர் எழுதப்பட்ட காலம், சூழல் மற்றும் நோக்கம் குறித்த நேரடியான குறிப்பு ஏதுமில்லை. முழுக்க முழுக்கத் திருச்சட்டத்தைப் போற்றிப் புகழும் திருப்பாடல்; அப்படியானால், இறைவார்த்தைக்கு மதிப்புக் குறைந்த ஒரு காலத்தில் திருப்பாடகர் வாழ்ந்திருக்க வேண்டும்; இறைவார்த்தை நம்மில் இயங்குவது, நம்மை இயக்குவது என்பதை உணர்ந்தவராக அவர் இருந்திருக்க வேண்டும்; இறைவார்த்தையில் மட்டுமல்லாமல், எபிரேய மொழியில் புலமை பெற்றவராக இருந்திருக்க வேண்டும். வ.174-176ன் அடிப்படையில், சிறையிருப்பின் காலத்தில் எழுதப்பட்ட திருப்பாடலாக இருக்கலாம். இந்த வகையில், சிறையிருப்பில் இருந்த, எரேமியா அல்லது எஸ்ரா இந்தத் திருப்பாடலை எழுதியிருக்கலாம். எஸ்ரா மற்றும் நெகேமியா நூல்களை வாசிக்கும் போது, இறைவார்த்தையின் தேவை மிகுந்த காலமது என்பதை உணர முடியும். எனவே எஸ்ரா இத்திருப்பாடலை இயற்றியிருக்கலாம்.

அமைப்பு:
வ.1-8, இறைவார்த்தை வழி நடப்போரின் பேறு
வ.9-16, இறைவார்த்தையும் அகத் தூய்மையும்
வ.17-24, இறைவார்த்தையில் இன்பம்
வ.25-32, வாழ்வளிக்கும் இறைவார்த்தை
வ.33-40, மெய்யுணர்வு தரும் இறைவார்த்தை
வ.41-48, மீட்பளிக்கும் இறைவார்த்தை

வ.49-56, ஆற்றல் தரும் இறைவார்த்தை
வ.57-64, உள்ளம் விழையும் இறைவார்த்தை
வ.65-72, துன்பத்தில் இன்பம் தரும் இறைவார்த்தை
வ.73-80, படைத்தவரின் வாக்கில் மகிழும் மனம்
வ.81-88, துன்பத்தில் துவளும் போது, விடுவிக்கும் இறைவார்த்தை
வ.89-96, நிலைத்து வாழும் வாக்கு
வ.97-104, இறைவார்த்தையை நேசிக்கும் உள்ளம்
வ.105-112, பாதையில் ஒளிரும் இறைவார்த்தை
வ.113-120, நிலை நிறுத்தும் இறைவார்த்தை
வ.121-128, வார்த்தையை வாஞ்சிக்கும் இறையன்பர்
வ.129-136, வழி நடத்தும் இறைவார்த்தை
வ.137-144, நீதியுள்ள இறைவார்த்தை
வ.145-152, வார்த்தையை அருளும் ஆண்டவரிடம் மன்றாட்டு
வ.153-160, வாழ்வளிக்க வேண்டுதல்
வ.161-168, இறைவார்த்தையில் காத்திருக்கும் உள்ளம்
வ.169-176, வாக்குறுதியின்படி விடுவிக்க மன்றாட்டு

## *1. ஆலெப் / aleph*

(ஆண்டவரின் திருச்சட்டம்)

1 மாசற்ற வழியில் நடப்போர் பேறுபெற்றோர்;
ஆண்டவர் திருச்சட்டப்படி நடப்போர் பேறுபெற்றோர்.
2 அவர் தந்த ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிப்போர் பேறுபெற்றோர்;
முழுமனத்தோடு அவரைத் தேடுவோர் பேறுபெற்றோர்.
3 அநீதி செய்யாமல்
அவரது வழியில் நடப்போர் பேறுபெற்றோர்.
4 ஆண்டவரே! நீர் உம் நியமங்களைத் தந்தீர்;
அவற்றை நாங்கள் முழுமையாய்க் கடைப்பிடிக்க வேண்டும் என்றீர்.
5 உம்முடைய விதிமுறைகளை நான் கடைப்பிடிக்க,
என் நடத்தை உறுதியுள்ளதாய் இருந்தால் எவ்வளவோ நலம்!
6 உம் கட்டளைகளை எல்லாம்
கருத்தில் கொண்டிருந்தால், இகழ்ச்சியுறேன்;
7 உம் நீதிநெறிகளை நான் கற்றுக்கொண்டு
நேரிய உள்ளத்தோடு உம்மைப் புகழ்வேன்.
8 உம் விதிமுறைகளை நான் கடைப்பிடிப்பேன்;
என்னை ஒருபோதும் கைவிட்டுவிடாதேயும்.

திருப்பாடல் 119:1-8

**சிந்தனைக்கு**

வசனம் 119:1-8
நீண்ட திருப்பாடலுக்கு முன்னுரை போன்ற பகுதி.

வசனம் 119:1-3
1:1-2 வசனங்களை நினைவூட்டும் வசனங்கள்.

வசனம் 119:1
"மாசற்ற வழியில் நடப்போர்..." -
ஆபிரகாமுக்குக் கடவுள் விடுத்த அழைப்பு, தொடக்க நூல் 17:1. ஈசாக்கின் வாழ்க்கைக்கு ஊக்கமூட்டும் வண்ணம், கடவுள் ஆபிரகாமைக் குறித்த நற்சான்றாக அவருக்கு அறிவித்தார், தொடக்க நூல் 26:5.

வசனம் 119:2
"முழு மனத்தோடு அவரைத் தேடுவோர்..." -
திருச்சட்டம் நம்மீது திணிக்கப்பட்ட ஒன்று அல்ல, செவிகொடுக்க நமக்கு அழைப்பு விடுப்பதன் வழியே, முழு உள்ளத்தோடு ஏற்றுக்கொள்ள அழைப்பது, இணைச் சட்டம் 4:29, 6:1-6; எரேமியா 29:13.

வசனம் 119:4-8
திருச்சட்டத்திற்குக் கீழ்ப்படிவோர், அவர்தம் துணையைப் பெறுவர்.

வசனம் 119:5
ஒப்பிடுக, இணைச் சட்டம் 6:2. நிலைவாழ்வுக்கு வழிகாட்டும் ஆண்டவரின் விதிமுறைகள்.

வசனம் 119:7
பார்க்க, 36:10, 64:10.

வசனம் 119:8
உயர்வு தரும் திருச்சட்டத்தைக் கடைப்பிடிக்க உறுதி பூணும் திருப்பாடகர், தனக்குத் துணை நிற்குமாறு ஆண்டவரிடம் மன்றாடுகிறார். மேலும் பார்க்க, 37:28.
🕎

## 2. பேத் / beth

(திருச்சட்டப்படி நடத்தல்)

9 இளைஞர் தம் நடத்தையை
மாசற்றதாய்க் காத்துக் கொள்வது எவ்வாறு?
உம் வாக்கைக் கடைப்பிடிப்பதால் அன்றோ?
10 முழுமனத்தோடு நான் உம்மைத் தேடுகின்றேன்;
உம் கட்டளைகளைவிட்டு என்னை விலகவிடாதேயும்.
11 உமக்கெதிராய் நான் பாவம் செய்யாதவாறு
உமது வாக்கை என் இதயத்தில் இருத்தியுள்ளேன்.
12 ஆண்டவரே, நீர் போற்றுதற்கு உரியவர்;
எனக்கு உம் விதிமுறைகளைக் கற்பித்தருளும்.
13 உம் வாயினின்று வரும் நீதித்தீர்ப்புகளை எல்லாம்
என் இதழால் எடுத்துரைக்கின்றேன்.
14 பெருஞ்செல்வத்தில் மகிழ்ச்சி அடைவதுபோல்,
நான் உம் ஒழுங்குமுறைகளின்படி நடப்பதில் மகிழ்ச்சியுறுகின்றேன்.
15 உம் நியமங்களைக் குறித்து நான் சிந்திப்பேன்;

உம் நெறிகளில் என் சிந்தையைச் செலுத்துவேன்;
16 உம் விதிமுறைகளில் நான் மகிழ்ச்சியுறுகின்றேன்;
உம் வாக்குகளை நான் மறக்கமாட்டேன்.

திருப்பாடல் 119:9-16

**சிந்தனைக்கு**

வசனம் 119:9
தம்மைத் தேட இளையோரை அழைக்கும் ஆண்டவர், 34:11. மேலும் பார்க்க, நீதிமொழிகள் 1:4; சபை உரையாளர் 11:9 & 12:1.

சிறப்பாக இளைஞருக்கு உரைக்கப்பட்ட அறிவுரை; படைத்தவரை இளமைப் பருவத்தில் நினைக்க வேண்டும். வாசிக்காவிட்டால் எப்படி அறிவார்கள்? பிள்ளைகள் மருத்துவராக வேண்டும், பொறியாளராக வேண்டும் என்று திட்டமிடும் நம்மில் எத்தனை பேர், பிள்ளைகள் பைபிளில் தெளிவுற வேண்டும் என்று வாஞ்சிக்கிறோம்?

நீங்கள் குடும்பமாகச் சில நிமிடங்கள் ஜெபம் செய்யலாம்; ஆனால் உங்கள் பிள்ளைகளோடு அமர்ந்து பைபிள் வாசித்திருக்கிறீர்களா?

இந்தத் திருமொழி இளைஞருக்கு மட்டுமானதா? பணிச் சுமை, கலாச்சார அறநெறித் தாக்குதல் நிறைந்த இந்நாட்களில் உள்ளத் தூய்மை அனைவருக்குமானது.
இன்று பைபிள் வாசித்தீர்களா?

வசனம் 119:10
இந்த வசனத்தின் முதல் பகுதி, இரண்டாம் வசனத்தின் இறுதிப் பகுதி.

"உம் கட்டளைகளை விட்டு விலக விடாதேயும்" -
தற்செயலாகவோ, ஒரு விபத்து போன்றோ, அறியாமையினாலோ, ஒருவர் தவறு செய்தால், அதற்கு ஆண்டவர் பொறுப்பா? நல்லது எது என அவர் நமக்குக் காட்டியிருக்கிறாரே! வார்த்தையையும், அதில் தெளிவுற ஆவியானவரையும், நமக்கு அருளியிருக்கிறாரே!

வசனம் 119:11
உள்ளத்துள் உறையும் வாக்கு, பாவத்திற்கு எதிரான காப்பு!

வசனம் 119:12
கற்பிக்கும் கடவுள் போற்றுதலுக்குரியவர்!
கற்பிக்கத் தெரிந்து கொள்ளப்பட்டவர், பேறு பெற்றவர்!

"...கற்பித்தருளும்" -
இணை, வ.26,29,33,64,66,68,108,124,135&171. மேலும் பார்க்க, 27:11.

வசனம் 119:13
ஆண்டவர் நீதியுள்ளவர் என்று எடுத்துரைத்தல்.
அறிவித்தல் முதன்மையாகக் குடும்பத்திலிருந்து தொடங்குகிறது, இணைச் சட்டம் 6:7.

வசனம் 119:14
இணை, வ.72,111&162.

வசனம் 119:15
இணை, வ.95.

"...சிந்திப்பேன்" -
மீண்டும் மீண்டும் இறைவார்த்தைகளைச் சிந்திக்கச் சிந்திக்க, நாம் தெளிவடைவோம், வ. 23,27,48,78&148. மேலும் பார்க்க, 1:2.

வசனம் 119:16
விதிமுறைகளில் மகிழ்ச்சி, வ.24,47,70,77,111,143,162&174.

## *3. கிமெல் / gimel*

(திருச்சட்டம் தரும் இன்பம்)

17 உம் அடியானுக்கு நன்மை செய்யும்;
அப்பொழுது, நான் உம் சொற்களைக் கடைப்பிடித்து வாழ்வேன்.
18 உம் திருச்சட்டத்தில் வியப்பானவற்றை
நான் கண்டுணருமாறு என் கண்களைத் திறந்தருளும்.
19 இவ்வுலகில் நான் அன்னியனாய் உள்ளேன்;
உம் கட்டளைகளை என்னிடமிருந்து மறைக்காதேயும்.
20 எந்நேரமும் உம் நீதிநெறிகளை முன்னிட்டு
என் உள்ளம் ஏங்கி உருகுகின்றது.
21 செருக்குற்றோரைக் கண்டிக்கின்றீர்;
உம் கட்டளைகளைப் புறக்கணிப்போர் சபிக்கப்பட்டவரே.
22 பழிச்சொல்லையும், இழிவையும் என்னிடமிருந்து அகற்றியருளும்;
ஏனெனில், உம் ஒழுங்குமுறைகளை நான் கடைப்பிடித்துள்ளேன்.
23 தலைவர்கள் ஒன்றுகூடி எனக்கெதிராய்ச் சூழ்ச்சி செய்தாலும்,
உம் ஊழியன் உம்முடைய விதிமுறைகளைக் குறித்தே சிந்திக்கின்றேன்.
24 ஏனெனில், உம் ஒழுங்குமுறைகள் எனக்கு இன்பம் தருகின்றன;
அவையே எனக்கு அறிவுரையாளர்.

திருப்பாடல் 119:17-24

**சிந்தனைக்கு**

வசனம் 119:17
இறையாசி நம்மை ஆண்டவரோடு பிணைப்பது என்பதை இங்குத் திருப்பாடகர் உரைக்கிறார். எந்தவொரு நன்மையையும் நாம் பெறும் போது, அது விண்ணகத்திலிருந்து வருவது என்கிற உணர்வு நமக்கு உண்டா?

வசனம் 119:18
விலக்கப்பட்ட கனியை உண்ணும் வேளையில், ஆதாம் - ஏவாவின் கண்கள் திறக்கப்படும் என்பது சாத்தான் உரைத்தது; நன்மைகளை மட்டுமே அறிந்திருந்த நாம் அன்று முதல் தீமையையும் அறிந்தோம்; நன்மை - தீமை என்பதைப் பகுப்பதில் குழப்பம் அன்று தொடங்கியது. அந்தக் குழப்பம் அகல வேண்டுமெனில், இறைவார்த்தையின் உண்மையைக்

கண்டுணர ஆவியானவர் வழியாக ஆண்டவர் நமது அறிவுக் கண்களைத் திறந்தருள வேண்டும். கிறிஸ்து இயேசு தமது உபதேசங்களின் வழியாக, உண்மையைக் கண்டறிய - பழைய ஏற்பாட்டின் போதனைகளை நாம் சரியாகப் புரிந்து கொள்ளக் கற்பிக்கிறார்.

வசனம் 119:19
"...இவ்வுலகில் அன்னியன்..." -
ஆபிரகாம் முதலாக அனைவரும் உணர்ந்து ஏற்றுக் கொண்ட வாழ்க்கை, எபிரேயர் 11:13-16. அரசர் தாவீது உரைத்தது, 39:12. நமது உணர்வு எப்படி இருக்கிறது?

வசனம் 119:19ஆ-20
அறிந்து தெளிவதில் பிறந்த ஏக்கம், அதனால் பிறந்த மன்றாட்டு. நமது ஜெபத்தின் நோக்கம் என்னவாக இருக்கிறது?

வசனம் 119:21
கடவுளின் இயல்பு, பெருமைக்கு எதிர்த்துச் செயல்படுதல், 31:23; அதனால் அவர் பார்வோனை வியத்தகு முறையில் அழித்தார், விடுதலைப் பயணம் 14:23-28; அதேபோன்று அழிக்கப்பட்ட இன்னொரு மன்னன், அசீரியனான சனகெரிபு, 2 அரசர்கள் 18 ~ 19. மேலும் பார்க்க, வ.51, 69, 78, 85 & 122.

வசனம் 119:22
இறைவரின் ஒழுங்கு முறைகளை மெய்யாகவே நாம் கடைப்பிடிக்கும் போது, உலகோரின் பழிப்பும் இழிவும் வந்துசேரும். கிறிஸ்து இயேசுவுக்கும் இதுவே நிகழ்ந்தது; அவருடைய உயிர்த்தெழுதலில் கடவுள் அவர்மீது சுமத்தப்பட்ட பழிச் சொல்லையும் இழிவையும் அகற்றினார். அவற்றிலிருந்து விடுபடாத அன்றைய நிலையில், திருப்பாடகர் இவ்வாறு வேண்டுகிறார்.

"உம் ஒழுங்கு முறைகளை நான் கடைப்பிடித்துள்ளேன்" -
மேலும் பார்க்க, வ.31,44,51,56,67,69,87,100,101,102,129,146,167&168.

வசனம் 119:23
நேர்மையாளருக்கு எதிராகத் திரளும் தலைவர்கள், வ.161.
கிறிஸ்து இயேசுவுக்கு எதிராக யூதர்களின் தலைவர்கள் ஒன்று கூடிச் சூழ்ச்சி செய்தனர்; ஆனாலும் கடவுளின் திட்டம் தம்மில் நிறைவேற, அவர் முழுமையாக அவருக்குக் கீழ்ப்படிந்தார்.

வசனம் 119:24
இணை, வ.16 மற்றும் சில வசனங்கள்.
"...அறிவுரையாளர்" -
ஒப்பிடுக, வ.105.
நமது அறிவுரையாளர் யார்?

## 4. டாலெத் / daleth

(திருச்சட்டத்தின் படி நடக்க உறுதி கொள்ளல்)

25 நான் புழுதியில் வீழ்ந்து கிடக்கின்றேன்;
உம் வாக்கின்படி எனக்கு வாழ்வளித்தருளும்.

26 என் வழிமுறைகளை உமக்கு எடுத்துச் சொன்னேன்;
நீர் என் மன்றாட்டைக் கேட்டருளினீர்;
உம் விதிமுறைகளை எனக்குக் கற்றுத்தாரும்.
27 உம் நியமங்கள் காட்டும் வழியை என்றும் உணர்த்தியருளும்;
உம் வியத்தகு செயல்கள்பற்றி நான் சிந்தனை செய்வேன்.
28 துயரத்தால் என் உள்ளம் கலக்க முற்றுள்ளது;
உமது வாக்கின்படி என்னைத் திடப்படுத்தும்.
29 பொய் வழியை என்னைவிட்டு விலக்கியருளும்;
உமது திருச்சட்டத்தை எனக்குக் கற்றுத்தாரும்.
30 உண்மையின் பாதையை நான் தேர்ந்துகோண்டேன்;
உம் நீதிநெறிகளை என் கண்முன் நிறுத்தியுள்ளேன்.
31 உம் ஒழுங்குமுறைகளை நான் உறுதியாய்ப் பற்றிக்கொண்டுள்ளேன்;
ஆண்டவரே! என்னை வெட்கமடையவிடாதேயும்.
32 நீர் என் அறிவை விரிவாக்கும்போது,
உம் கட்டளைகள் காட்டும் வழியில் நான் விரைந்து செல்வேன்.

திருப்பாடல் 119:25-32

**சிந்தனைக்கு**

வசனம் 119:25
துயரில் வாடும் திருப்பாடகரின் நிலை, 44:25. மேலும் பார்க்க, வ.28,50,71,75,83,92,107,143&153. துன்பத்தில் துணை வார்த்தையே, வ.42,69,78,95,110,134,141,154&157.

வாழ்வளிக்கும் ஆண்டவர், வ.37,40; எசேக்கியேல் 33:6.

வசனம் 119:26
வழிகளைக் கற்றுத் தர வேண்டலும், கற்றுத் தரும் ஆண்டவரும், வ.29,33&102.

வசனம் 119:27
நியமங்கள் காட்டும் வழி, நிறைவானது; விசாலமானது; எல்லையற்றது; ஆழமானது. வ.96, 92:5.

"வியத்தகு செயல்கள்" -
பெருந்திரள் மக்களை எகிப்திலிருந்து மீட்டு, வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேற்றிய இறைச் செயல்கள்.

வசனம் 119:28-29
கலங்கிய உள்ளத்தைத் திடப்படுத்த மன்றாடல்.

வார்த்தையால் திடப்படுத்தும் ஆண்டவர், எசாயா 57:15; எசேக்கியேல் 34:16.

வசனம் 119:29-30
"பொய் வழியை என்னை விட்டு விலக்கியருளும்" -
உண்மை போன்ற பொய்மை இன்று பிரசங்க பீடங்களை நிறைத்து வருகிறது; நாம் ஒவ்வொருவரும் ஆர்வத்தோடும், ஆவியாரின் துணையோடும், இறைவார்த்தையை இறையருளால் கற்காவிடில், இத்தகைய பிரசங்கங்களுக்கு இறையாவோம்.
வார்த்தையில் வளர்தலே நாம் செல்ல வேண்டிய உண்மையின் பாதை, யோவான் 14:6.

வசனம் 119:31
"உம் ஒழுங்கு முறைகளை நான் உறுதியாய்ப் பற்றிக் கொண்டுள்ளேன்" -
விடுவித்துக் கொள்ள முடியாத பிணைப்பு; மரங்களில் வேர்பிடித்து வளரும் கொடிகளை நம்மில் பலரும் பார்த்திருப்போம். அதுபோன்றதொரு பிணைப்பு. மேலும் பார்க்க, யோவான் 15:1-8.

வசனம் 119:32
திருப்பாடகரின் உறுதியான அறிக்கை.
கட்டளைகள் காட்டும் வழியில் விரைந்து செல்ல நாம் ஆயத்தமா?
🕎

## 5. ஹெ / he

(நுண்ணறிவுக்காக வேண்டல்)

33 ஆண்டவரே!
உம் விதிமுறைகள் காட்டும் வழியை
எனக்குக் கற்றுத்தாரும்;
நான் அவற்றை இறுதிவரை கடைப்பிடிப்பேன்.
34 உம் திருச்சட்டத்தின்படி நடக்க
எனக்கு மெய்யுணர்வுதாரும்.
அதை நான் முழு உள்ளத்தோடு கடைப்பிடிப்பேன்.
35 உம் கட்டளைகள் காட்டும் நெறியில் என்னை நடத்தும்;
ஏனெனில், அதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.
36 உம் ஒழுங்குமுறைகளில்
என் இதயம் நாட்டங்கொள்ளச் செய்யும்;
தன்னலத்தை நாடவிடாதேயும்.
37 வீணானவற்றை நான் பாராதபடி
என் கண்களைத் திருப்பிவிடும்;
உம் வழிகளின் வாயிலாய்
எனக்கு வாழ்வளித்தருளும்.
38 உமக்கு அஞ்சி நடப்போர்க்கு அளித்த வாக்குறுதியை
உம் ஊழியனுக்கும் நிறைவேற்றியருளும்.
39 என்னை அச்சுறுத்தும் பழிச்சொல் எதற்கும்
என்னை உள்ளாக்காதேயும்;
ஏனெனில், உம் நீதிநெறிகள் நலமார்ந்தவை.
40 உம் நியமங்களைப் பெரிதும் விரும்பினேன்;
நீர் நீதியுள்ளவராய் இருப்பதால் எனக்கு வாழ்வளியும்.

திருப்பாடல் 119:33-40

**சிந்தனைக்கு**

வசனம் 119:33-36
நேரிய வாழ்வுக்கு ஏற்ற இறைநெறிகளைப் போதிக்க மன்றாடல்.

வசனம் 119:33
பார்க்க, வ.12 - குறிப்பு. மேலும் வாசிக்க, யோவான் 14:15-21.

*கற்றல் கடைப்பிடிக்கவே!*
*"கற்க, கசடற, கற்பவை - கற்றபின் - நிற்க அதற்குத் தக" என்பது நம் தமிழ் மரபு. ஆனால் பைபிளை நாம் இன்றைக்குக் கற்றலும் குறைகள் நிறைந்தது; எனவே கடைப்பிடித்தலும் குறைகளோடே இருக்கிறது. உபதேசங்கள் எத்தகையன என்ற அறிவின்றி நாம் கேட்கிறோம், நம்புகிறோம். அப்படியல்லாமல், "நாம் கண்டு உணருமாறு நம் கண்களைத் திறந்தருளும்" என்கிற ஜெபத்தோடே பைபிள் வாசிக்க வேண்டும்* (வ.18). *தூய ஆவியாரின் துணையோடு நாம் தெளிவாகக் கற்றுக் கொள்ள வேண்டும்* (யோவான் 16:13-14).

வசனம் 119:34
*திருச்சட்டத்தின்படி நடக்க மெய்யுணர்வை வேண்டல்; நாம் இவ்வாறு வேண்டுதல் மட்டும் போதாது; கடைப்பிடிக்க வேண்டும் என்ற உணர்வை, உளத் தெளிவோடு நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.*

வசனம் 119:35
இணை, வ.16.
*ஆண்டவரின் கட்டளைகள் காட்டும் நெறியில் நடப்பதில் மகிழ்ச்சி என்றால், அந்த வழியில் நடக்கத் தடை என்ன? வாசிக்க,* யோவான் 16:33.

வசனம் 119:36
*பார்க்க,* வ.10 *மற்றும் குறிப்பு.*
*இங்கு தன்னலம் என்று சொல்லப்படுவதை, பொருளாசை, பேராசை என்றும் மொழிபெயர்க்கலாம்; ஆனால் இவற்றுக்கு அடிப்படை தன்னலம் என்பதே. "தன்னைத் தான் வெறுத்து" என்று கிறிஸ்து இயேசு போதிப்பதன் பொருள் இதுதான், மாற்கு* 8:34, 10:21.

*"என் இதயம் ... நாட விடாதேயும்" -*
*தம் சட்டத்தை நம் உள்ளத்தில் பதிக்க வாக்களிக்கும் ஆண்டவர், எரேமியா* 31:33; *மேலும் வாசிக்க, எசேக்கியேல்* 11:19-20 & 36:26-27.

வசனம் 119:37-40
*வாழ்வளிக்கும் வார்த்தையை வாஞ்சித்தல்.*

வசனம் 119:37
*வாழ்வளிக்கும் வழியில் நாம் நடக்கத் தடையாக இருப்பவை - செல்வம், அதிகாரம், பெருமை, புகழ்ச்சியை விரும்புதல் போன்றவை. மேலும் வாசிக்க, நீதிமொழிகள்* 23:5; *எசாயா* 33:15-16.

*"வீணானவற்றை நான் பாராதபடி என் கண்களைத் திருப்பி விடும்" -*
*பார்க்க, எண்ணிக்கை* 15:39. *நாம் கடைப்பிடிக்க வேண்டிய யோபின் சான்று, யோபு* 31:1.

வசனம் 119:38
*கடவுளுக்கு அஞ்சி நடப்போருக்கு அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதி, கலக்கத்தை, கடினப்பாடுகளை நாம் கடந்து வர ஆண்டவரின் துணை,* 130:4; 1 *அரசர்கள்* 8:39-40; *எரேமியா* 33:8-9.

வசனம் 119:39
*பழிச் சொல் எதனால் ஏற்படுகிறது?*
*ஆண்டவரின் நலமான நீதி நெறிகளை மீறி நடப்பதால் நேரிடுவது. அத்தகைய நிலை தனக்கு நேராதபடிக் காக்கத் திருப்பாடகர் மன்றாடுகிறார்.*

வசனம் 119:40
இணை, வ.20,131.
"நீதிநிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர்; ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர்." (மத்தேயு 5:6)

## 6. *வெள/waw*

(திருச்சட்டத்தின் மீது நம்பிக்கை)

41 ஆண்டவரே!
உமது பேரன்பு எனக்குக் கிடைக்கச் செய்யும்;
உமது வாக்குறுதியின்படி நீர் என்னை மீட்பீராக!
42 அப்போது, என்னைப் பழிப்போர்க்கு
நான் ஏற்ற பதில் கூறுவேன்;
ஏனெனில், உமது வாக்கில் எனக்கு நம்பிக்கை உண்டு.
43 என் வாயினின்று உண்மையின் சொற்கள் நீங்கவிடாதேயும்;
ஏனெனில், உம் நீதிநெறிகள்மீது நான் நம்பிக்கை வைத்துள்ளேன்.
44 உமது திருச்சட்டத்தை நான் எப்போதும் கடைப்பிடித்தேன்;
என்றென்றும் எக்காலமும் அதைப் பின்பற்றுவேன்.
45 உம் நியமங்களை நான் நாடியுள்ளதால்
பரந்த பாதையில் தடையின்றி நான் நடப்பேன்.
46 உம் ஒழுங்குமுறைகளைப் பற்றி
நான் அரசர் முன்னிலையிலும் பேசுவேன்;
வெட்கமுறமாட்டேன்.
47 உம் கட்டளைகளில் நான் மகிழ்ச்சியுறுகின்றேன்;
அவற்றைப் பெரிதும் விரும்புகின்றேன்.
48 நான் விரும்பும் உம் கட்டளைகளை நோக்கி
என் கைகளை உயர்த்துகின்றேன்;
உம் விதிமுறைகளைப் பற்றி நான் சிந்திப்பேன்.

திருப்பாடல் 119:41-48

**சிந்தனைக்கு**

வசனம் 119:41-48
ஆற்றலூட்டும் இறைவார்த்தை.

வசனம் 119:41
"உமது வாக்குறுதியின் படி நீர் என்னை மீட்பீராக" -
மீட்பு ஆண்டவர் அருளும் வாக்குறுதி, இணைச் சட்டம் 30:1-14.

வசனம் 119:42
வ.22ல் பழிச் சொல்லை அகற்ற மன்றாடிய திருப்பாடகர், தனக்கு நம்பிக்கை அருளும் வாக்கின் துணையால், பழிப்போர்க்கு மறுமொழி கூறும் ஆற்றல் பெறுகிறார்.

வசனம் 119:43
எபிரேய மொழியில் ad / அட் என்ற சொல், (தொலைவு) வரை, (காலம்) வரை, (உள்ள) வரை என்று பொருள் கொள்ளலாம்; உள்ளவரை என்பதை ‘‘முற்றிலும்’’ (OV) என்று பொருள் கொள்ளலாம். பொது மொழிபெயர்ப்பில் இந்தப் பொருள்படும் சொல் எதுவும் இடம்பெறவில்லை.

எவ்வளவு தான் பைபிளைக் கற்றுத் தேறியவர் எனினும், பதற்றமான சூழ்நிலையில் சொல் வாய்க்கு வராது! இதையே கிறிஸ்து இயேசு நமக்கு வாக்காக அருளுகிறார்: "இப்படி அவர்கள் உங்களை (அரசர்களிடம், ஆளுநர்களிடம்) ஒப்புவிக்கும்பொழுது, 'என்ன பேசுவது, எப்படிப் பேசுவது' என நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் என்ன பேச வேண்டும் என்பது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்." (மத்தேயு 10:19).

வசனம் 119:44
"... எப்போதும் ... என்றென்றும் எக்காலமும்..." -
தன் வாழ்நாளின் இறுதிவரை, திருச்சட்டத்தைக் கடைப்பிடிக்க உறுதி ஏற்கும் திருப்பாடகர்.

வசனம் 119:45
ஆண்டவரின் நியமங்களை நாடியுள்ளதால் விசாலத்தில் / பரந்த பாதையில் நடப்பேன் என்று தன் நம்பிக்கையை வெளிப்படுத்தும் திருப்பாடகர். பரந்த பாதையில் நடப்பேன் என்பதற்குச் சுதந்திரமாக நடப்பேன் என்று பொருள்.

வசனம் 119:46
வ.31ல் வெட்கமடைய விடாதேயும் என்ற வேண்டுதல்; இங்கு வெட்கமுற மாட்டேன் என்று உறுதிபட அறிக்கையிடும் திருப்பாடகர். நற்செய்தியின் பொருட்டுக் கைதியாக இருந்த நிலையிலும், பவுலடிகள் உரோமாபுரியில் சீசரின் நடுவர் மன்றத்தில் தன்னை விசாரிக்க வேண்டும் என்று உறுதியோடு கோரிக்கை வைத்ததை நினைவில் கொள்ளுங்கள், (திருத்தூதர் பணிகள் 25:10; அகிரிப்பா முன் அவர் வாதிட்டது, திருத்தூதர் பணிகள் 26:1-29).

வசனம் 119:47
கட்டளைகளில் மகிழ்ச்சி, வ.16 & 35 மற்றும் குறிப்புகள்.

விரும்புதல் / (OV) பிரியமாயிருத்தல்; எபிரேய மொழியில், aw-habe / அஹாபே. தன் உயிர் போல நேசித்தல்; இணை, வ.47,48,97,113,119,127,132,140,159,163,165&167.
அந்த அளவுக்கு இறைவார்த்தையை நாம் நேசிக்கிறோமா?

வசனம் 119:48
கைகளை உயர்த்துதல் சிறப்பான தொழுகையின் அடையாளம், 28:2, 63:4, 88:9, 134:2, 141:2; 1 அரசர்கள் 8:22; யோபு 11:13 புலம்பல் 2:19, 3:41.
இறைவரைத் தொழுது கொள்ள மட்டுமல்ல, இறைவார்த்தையைத் தொழுது கொள்ளவும் தன் கைகளை உயர்த்தும் திருப்பாடகர்; அவரோடு நாமும் நமது கைகளை உயர்த்தித் தொழுவோம்.

## *7. சாயீன் / zayin*

*(திருச்சட்டத்தின் மீது நம்பிக்கை)*

49 உம் ஊழியனுக்கு நீர் தந்த வாக்கை நினைவுகூரும்;

அதனால் எனக்கு நம்பிக்கை அளித்தீர்.
50 உம் வாக்கு என் துன்பத்தில் எனக்கு ஆறுதல் அளிக்கின்றது;
ஏனெனில், அது எனக்கு வாழ்வளிக்கின்றது.
51 செருக்குற்றோர் என்னை அளவின்றி ஏளனம் செய்கின்றனர்;
ஆனால், உம் திருச்சட்டத்தினின்று நான் விலகவில்லை.
52 ஆண்டவரே! முற்காலத்தில் நீர் அளித்த
நீதித் தீர்ப்புகளை நான் நினைவு கூர்கின்றேன்;
அவற்றால் நான் ஆறுதல் அடைகின்றேன்.
53 உம் திருச்சட்டத்தைக் கைவிடும்
தீயோரைப் பார்க்கும்போது
சீற்றம் என்னைக் கவ்விக் கொள்கின்றது.
54 என் வாழ்க்கைப் பயணத்தில்
உம் விதிமுறைகள் எனக்குப் புகழ்ப் பாக்களாய் உள்ளன.
55 ஆண்டவரே!
இரவிலும் நான் உமது பெயரை நினைவு கூர்கின்றேன்;
உமது திருச்சட்டத்தை கடைப்பிடிப்பேன்.
56 நான் இந்நிலையை அடைந்துள்ளது
உமது நியமங்களைக் கடைப்பிடிப்பதால்தான்.

திருப்பாடல் 119:49-56

**சிந்தனைக்கு**

வசனம் 119:49-56
துன்பத்தில் ஆறுதல் தரும் இறைவார்த்தை.

வசனம் 119:49
"உம் ஊழியனுக்கு நீர் தந்த வாக்கு..." -
தாவீதுக்கு ஆண்டவர் நாத்தான் வழியாக அருளிய வாக்கு, 2 சாமுவேல் 7:5-16.
சாலமோனுக்கு ஆண்டவர் கனவின் வழியாக அருளிய வாக்கு, 1 அரசர்கள் 3:11-14.
திருப்பாடலை எழுதியவர் யார் என்று தெரியாத நிலையில், அவருக்கு ஆண்டவர் அருளிய வாக்கு என்ன என்று நாம் முடிவு செய்ய முடியாது; அந்தத் தனிப்பட்ட ஐக்கியத்தை நினைவூட்டி திருப்பாடகர் இங்கு மன்றாடுகிறார்.

நம்பிக்கையில் வளர ஊக்கமூட்டும் ஆண்டவர், வ.74,81,114&147.

வசனம் 119:50-52
துன்புறுத்தும் செருக்குற்றோரின் ஏளனங்களுக்கு நடுவே திருச்சட்டத்தின்படி நடக்கும் திருப்பாடகர், இறைவாக்கின் வழியாக ஆறுதல் பெறுகிறார்.

வசனம் 119:51
நேர்மையாளரை ஏளனம் செய்வோர், 35:16; யோபு 30:1&9. வ.31ல் வெட்கமடைய விடாதேயும் என்று மன்றாடிய திருப்பாடகர், வார்த்தையின் பொருட்டு, தான் ஏளனத்துக்கு ஆளாவதையும், அப்படியிருந்தபோதிலும், திருச்சட்டத்திலிருந்து விலகாத தனது உளவுறுதியையும் இங்கு வெளிப்படுத்துகிறார். மேலும் பார்க்க, வ.61,83&87.

வசனம் 119:52
பொல்லாருக்கு எதிராகக் கடவுளின் நீதித் தீர்ப்பை அறிந்திருந்த திருப்பாடகர், அதனால் ஆறுதல் அடைகிறார், 1:4-6; உரோமையர் 15:4.

"முற்காலத்தில்..." -
அன்பு, கருணை, இரக்கம், மன்னிப்பு - இவற்றின் அடிப்படையில் அமைந்துள்ள கடவுளின் நீதித் தீர்ப்புகள், சமகாலத்தில் உருவானவை அல்ல; மாறாக தொன்மைக்கால முதலே, என்றும் மாறாதவராக அவர் திகழ்கிறார். அதுவே இவ்வுலகில் நீடித்து நிலைபெற்றது. பார்க்க, வ.89,144,152&160.

வசனம் 119:53
பார்க்க, வ.113&158.

திருச்சட்டத்தை மீறுவோரைப் பார்க்கும் எஸ்ரா, எஸ்ரா 9:1-3. மேலும் பார்க்க, வ.136&139; விடுதலைப் பயணம் 32:19; எரேமியா 8:18-22; லூக்கா 19:41-44; திருத்தூதர் பணிகள் 17:16.

இந்த வசனத்தில் வரும் zal-aw-faw / ஷலாஃபா என்ற எபிரேயச் சொல்லை, நடுக்கம் என்றும், சீற்றம் என்றும் பொருள் கொள்ளும் இரண்டு ஆங்கில மொழிபெயர்ப்பு மரபுகள் உள்ளன.

வசனம் 119:54
பாடும் இறையன்பர், வ.62&172. மேலும் வாசிக்க, 101:1, 138:5; எபேசியர் 5:19.
நம் ஒவ்வொருவரது உள்ளங்களிலும், நமது இல்லங்களிலும், கடவுளின் அன்பு, உண்மை, இரக்கம், மன்னிப்பைப் போற்றும் இறைப்பாடல்கள் ஒலிக்கின்றனவா?

வசனம் 119:55
தீயோரின் இரவுகள், யோபு 24:14-16. இரவுகளில் நினைவுகூரப்படும் ஆண்டவர், வ.62 மற்றும் 42:8 & 63:6.

நமது இரவுகள் எப்படி அமைகின்றன? நமது உள்ளங்களில் நிலை கொள்ளும் சிந்தை எது?

வசனம் 119:56
நியமங்களைக் கடைப்பிடிப்பதால் அடையும் மேன்மையை திருப்பாடகர் அறிவிக்கிறார்.

## 8. கேத் / cheth

(திருச்சட்டத்தின் மீது ஆர்வம்)

57 ஆண்டவரே!
நீரே எனக்குரிய பங்கு;
உம் சொற்களைக் கடைப்பிடிப்பதாக
நான் வாக்களித்துள்ளேன்.
58 என் முழுமனத்தோடு உம் திருமுகத்தை நாடினேன்;
உமது வாக்குறுதிக்கேற்ப எனக்கு அருள்கூரும்.
59 நான் நடக்கும் வழிகளை நன்கு ஆய்ந்தேன்;
உம் ஒழுங்குமுறைகளின் பக்கமாய்
அடியெடுத்து வைத்தேன்.
60 உம் கட்டளைகளைக் கடைப்பிடிக்க
நான் விரைகின்றேன்;
காலம் தாழ்த்தவில்லை.
61 தீயோரின் கட்டுகள் என்னை இறுக்குகின்றன;

ஆயினும், உம் திருச்சட்டத்தை நான் மறவேன்.
62 நீதிநிறை உம் தீர்ப்புகளைக் குறித்து,
உம்மைப் புகழ்ந்துபாட நள்ளிரவில் எழுகின்றேன்.
63 உமக்கு அஞ்சி நடப்போர் யாவர்க்கும்
உம் நியமங்களைக் கடைப்பிடிப்போர்க்கும்
நான் நண்பன்.
64 ஆண்டவரே!
உமது பேரன்பால் பூவுலகு நிறைந்துள்ளது;
உம் விதிமுறைகளை எனக்குக் கற்பியும்!

திருப்பாடல் 119:57-64

**சிந்தனைக்கு**

வசனம் 119:57-64
கடவுளின் உரிமைச் சொத்தான அவர்தம் மக்களுக்கு, பூவுலகெங்கும் நிறைந்துள்ள அவரின் கிருபை.

வசனம் 119:57
"நீரே எனக்குரிய பங்கு" -
ஒப்பிடுக, 73:26, 106:5, 142:5; யோசுவா 13:33; புலம்பல் 3:24.
பங்கு அல்லது உரிமைச் சொத்து என்பது வழிவழியாக வருவது.

'கடவுளின் உரிமைச் சொத்து அவர்தம் மக்களே' என்று மோசே தனது பாடலில் அறிவுறுத்துகிறார், இணைச் சட்டம் 32:9.
'லேவியரின் பங்கும் உரிமைச் சொத்தும் ஆண்டவரே' என்று அவரே ஆரோனிடம் உரைத்து, உப்பு உடன்படிக்கையை ஏற்படுத்துகிறார், எண்ணிக்கை 18:20.
இதனையே இங்கு திருப்பாடகர் ஆண்டவருக்கு நினைவூட்டுகிறார்.

வசனம் 119:58
தம் திருமுகத்தை நம் பக்கம் திருப்பி, ஒளிரச் செய்பவர் ஆண்டவர், 67:1; எண்ணிக்கை 6:25-26.
நம்மை ஒளிர்விக்கும் அவர்தம் திருமுகத்தை நாம் இடையறாது நாட வேண்டும், 105:4.

வசனம் 119:59-60
திருச்சட்டத்தைக் கற்றுக்கொள்ள, கருத்தில்கொள்ள, கடைப்பிடிக்க, அதன் வழியில்நடக்க உறுதியேற்ற (வ.1-8) திருப்பாடகர், தான் நடக்கும் வழிகளை மீளாய்வு செய்கிறார். இன்னும் உறுதியாக அவர்தம் வழிகளில் நடக்க மீண்டும் உறுதி பூணுகிறார்.

வசனம் 119:61
தீயோரின் கடுமையான நெருக்குதலுக்கு நடுவிலும், திருச்சட்டத்தில் நிலைத்து நிற்கும் திருப்பாடகர், வ.23 & 157.

வசனம் 119:62
இணை, வ.7 & 55 மற்றும் குறிப்புகள்.

வசனம் 119:63
வேறு மொழிகளில், 1:1.
நாம் யார் யாருக்கு நண்பராக இருக்கிறோம்?

வசனம் 119:64
ஆண்டவரின் பேரன்பால் நிறைந்துள்ள பூவுலகு, 33:5.
நம் பேராசையால் விளைகின்ற தீச்செயல்களால் சீர்கெட்டு வெப்பமயமாகும் பூவுலகு; இவ்வளவுக்குப் பிறகும், இந்தப் புவியில் நம்மைப் பாதுகாக்கும், பராமரிக்கும் கடவுளின் பேரன்பு.

"... கற்பியும் -
திருப்பாடகரின் மன்றாட்டு, பார்க்க, வ.12 & 26 மற்றும் குறிப்புகள்.
தம்மை நாடுவோர்க்கு கற்பிக்க ஆண்டவர் ஆயத்தம்; கற்றுக் கொள்ள நாம் ஆயத்தமா?

## 9. *டேத் / Teth*

*(திருச்சட்டத்தின் பயன்)*

65 *ஆண்டவரே! உமது வாக்குறுதிக்கேற்ப,*
*உம் ஊழியனுக்கு நன்மையை செய்துள்ளீர்!*
66 நன்மதியையும் அறிவாற்றலையும் எனக்குப் புகட்டும்;
ஏனெனில், உம் கட்டளைகள் மீது நம்பிக்கை வைக்கின்றேன்.
67 *நீர் என்னைத் தண்டிக்குமுன்பு நான் தவறிழைத்தேன்;*
*ஆனால், இப்போது உம் வாக்கைக் கடைப்பிடிக்கின்றேன்.*
68 நீர் நல்லவர்! நன்மையே செய்பவர்;
எனக்கு உம் விதிமுறைகளைக் கற்பியும்.
69 செருக்குற்றோர் என்னைப்பற்றிப் பொய்களைப் புனைகின்றார்கள்;
நானோ முழுமனத்துடன் உம் நியமங்களைக் கடைப்பிடிக்கின்றேன்.
70 அவர்கள் இதயம் கொழுப்பேறிப் போயிற்று.
நானோ உம் திருச்சட்டத்தில் மகிழ்ச்சியுறுகின்றேன்.
71 *எனக்குத் துன்பம் விளைந்தது என் நன்மைக்காகவே;*
*அதனால், உம் விதிமுறைகளை நான் கற்றுக்கொண்டேன்.*
72 *நீர் திருவாய் மலர்ந்த சட்டம்,*
*ஆயிரக்கணக்கான பொன், வெள்ளிக் காசுகளைவிட*
*எனக்கு மேலானது.*

திருப்பாடல் 119:65-72

**சிந்தனைக்கு**

வசனம் 119:65-72
துன்பங்களின் வழியே கற்றுத்தரும் வார்த்தை. முன்னும் பின்னுமாக இசைவாகத் தொடுக்கப்பட்ட வசனங்கள் கொண்ட ஒரு பகுதி.

வசனம் 119:65
வேண்டுதலைக் கேட்டு, நலமாக நடத்தும் ஆண்டவர், வ.41,58&170.

"உமது வாக்குறுதிக்கேற்ப..." -
பார்க்க, வ.38 & 41 மற்றும் குறிப்புகள்.

வசனம் 119:66
இறைவார்த்தையில் நம்பிக்கை வைத்து, வாசிப்பில் வளர்தலே நல்லறிவு பெறும் வழி. அதுவே நாம் செயல்படுவதற்கு வேண்டிய ஆற்றலையும் அளிக்க வல்லது. ஒப்பிடுக, வ.105; நீதிமொழிகள் 1:7 & 9:10.

வசனம் 119:67 & 71
தனது மெய்யுணர்வோடு திருப்பாடகர் இங்கு, தன் தவறின் விளைவாக, தான்பெற்ற தண்டனையை அறிவிக்கிறார். மேய்ப்பர் தம் வளைதடியால் நம்மை நல்வழிக்கு இழுத்து வருவார்; தேவைப்படும்போது, அதே தடியால் தட்டி நெறிப்படுத்துவார். மேலும் பார்க்க, 118:18 மற்றும் குறிப்பு.

வசனம் 119:68
"நல்லவர் ... நன்மையே செய்பவர்" -
ஆண்டவர் நல்லவர், நன்மையே செய்பவர் என்பதை நன்றியோடு நினைவுகூரும் திருப்பாடகர், வ.65.

வசனம் 119:69-70
முதலாம் திருப்பாடல் போன்று, நல்லார் - பொல்லார் ஒப்பீடு.

பழிப்போருக்கும் சூழ்ச்சி செய்வோருக்கும் நடுவேதான் நமது வாழ்க்கை பயணிக்கிறது, வ.22,23,42,78&150. அவர்களின் நிலையற்ற செழிப்பில் நாம் கவனம் செலுத்தாமல், ஆண்டவரின் திருச்சட்டத்தில் கவனம் குவித்து நடந்து அதில் மகிழ்ந்திருத்தலே மேன்மையானது. மேலும் வாசிக்க, 37:1-9.

வசனம் 119:72
இவ்வுலகில் வாழும் காலத்தில், நலமானவற்றையே அருளும் ஆண்டவரின் திருச்சட்டத்தை விடவும் உயர்ந்த செல்வம் ஏதுமில்லை. துன்பங்களைக் கடந்து வந்த பிறகு, நாம் பெறும் தெளிவு இதுவே!

## *10. யோட் / jod*

*(திருச்சட்டத்தின் ஒழுங்குமுறை)*

73 உம் கைகளே என்னை உருவாக்கின;
என்னை வடிவமைத்தன;
உம் கட்டளைகளை நான் கற்றுக்கொள்ள
எனக்கு மெய்யுணர்வு தாரும்.
74 உமக்கு அஞ்சுவோர், உமது வாக்கை
நான் நம்பினதற்காக என்னைக் கண்டு மகிழ்ச்சியுறுவர்.
75 ஆண்டவரே!
உம் நீதித்தீர்ப்புகள் நேரியவை என அறிவேன்;
நீர் என்னைச் சிறுமைப்படுத்தியது சரியே.
76 எனக்கு ஆறுதலளிக்குமாறு
உமது பேரன்பு எனக்குக் கிடைக்கட்டும்;
உம் ஊழியனுக்கு வாக்குறுதி அளித்தீர் அன்றோ!
77 நான் பிழைத்திருக்கும்படி

உமது இரக்கம் என்னை வந்தடையட்டும்;
ஏனெனில், உமது திருச்சட்டமே எனக்கு இன்பம்.
78 செருக்குற்றோர் வெட்கிப்போவார்களாக!
அவர்கள் பொய்யுரை கூறி என்னை ஒடுக்கினார்கள்;
நானோ உம் நியமங்கள்பற்றிச் சிந்தனை செய்வேன்.
79 உமக்கு அஞ்சிநடப்போர்,
உம் ஒழுங்குமுறைகளைப்பற்றிய அறிவுடையோர்
என் பக்கம் திரும்புவராக!
80 உம் நியமங்களைப் பொறுத்தமட்டில்
என் உள்ளம் மாசற்றதாய் இருப்பதாக!
அதனால், நான் வெட்கமுறேன்.

திருப்பாடல் 119:73-80

**சிந்தனைக்கு**

வசனம் 119:73-80
ஆண்டவர் வனைந்து வடிவமைத்த இறையன்பரை, வெட்கமுறாதபடி வழி நடத்தும் இறைவார்த்தை.

வசனம் 119:73
"உம் கைகளே என்னை உருவாக்கின; என்னை வடிவமைத்தன" -
தனது பாடலில் மோசே வெளிப்படுத்திய உண்மை, இணைச் சட்டம் 32:6.
யோபு உணர்ந்து உரைத்தது, யோபு 10:8.
உருவாக்கி வனைந்த ஆண்டவர், மெய்யுணர்வைத் தமது திருச்சட்டத்தின் வழியே அருளுவார், 33:15. அப்போது அவருக்குள் படைக்கப்பட்டோராக நாம் முழுமை அடைகிறோம்.

வசனம் 119:74
இறைவார்த்தையின் பொருட்டு சாட்சியாக வாழும் மெய்யன்பர்கள், புதிய சாட்சியாக எழும்பிய திருப்பாடகரைத் தங்களில் ஒருவனாக ஏற்றுக்கொண்டு மகிழ்வர்; பவுலடிகளின் வாழ்க்கையில் இந்த அனுபவம் நிகழ்ந்ததை நாம் அறிவோம், திருத்தூதர் பணிகள் 9:10-21. தாமதமாக ஆண்டவரை ஏற்றுக் கொள்ளும் ஒவ்வொருவருக்கும் இதே அனுபவம், அவர்களின் மீட்புக்காக ஜெபித்தவர்கள் நடுவே ஏற்படும்.

வசனம் 119:75
வேறு சொற்களில், வ.71. மேலும் வாசிக்க, எபிரேயர் 12:5-11.

வசனம் 119:76
துன்பத்தில் ஆறுதல் அளிக்கும் பேரன்பு, வ.41&50.

உம் ஊழியனுக்கு வாக்குறுதி அளித்தீர், வ.38&41 மற்றும் குறிப்புகள்.

வசனம் 119:77
"நான் பிழைத்திருக்கும்படி..." -
துன்பம் குறித்துப் பேசிய திருப்பாடகர் (வ.50&71), இடர்களில் ஆண்டவரின் இரக்கத்திற்காக மன்றாடுகிறார். ஆண்டவர் அருளும் மறுவாழ்வு இன்பம் தருவது.

வசனம் 119:78
திருப்பாடகருக்கு எதிராகப் பொய் புனையும் பொல்லார், வெட்கமுறும்படிச் செய்ய வேண்டுதல், வ.31&69; மேலும் பார்க்க, 6:10, 31:17, 35:4&26, 40:14, 70:2, 83:16-17 & 109:29.

வசனம் 119:79
துயருற்ற வேளைகளில், ஒருவேளை ஐயுற்று விலகி நின்ற இறைவழிப் பயணிக்கும் தோழர்கள், ஆண்டவரின் இரக்கத்தால் தப்பிப் பிழைத்த (வ.77 மற்றும் குறிப்பு) தன் பக்கம் வருவதை திருப்பாடகர் விரும்புகிறார்.

வசனம் 119:80
வ.31ல் மன்றாட்டு, இங்கு மனவுறுதி.

இறைச்சட்டத்தை மீறும் பொல்லார் வெட்கமுறும்படிச் செய்ய வேண்டிய (வ.78) திருப்பாடகர், இங்கு தன் உள்ளத்தின் மாசகற்றும் நியமங்களின் பொருட்டுத் தான் வெட்கமடைவதில்லை என்று உறுதியோடு அறிவிக்கிறார்.

அந்த உறுதி நமக்குள் இருக்கிறதா?

## *11. கப் / caph*

*(விடுதலைக்காக மன்றாடல்)*

81 நீர் அளிக்கும் மீட்புக்காக என் நெஞ்சம் ஏங்குகின்றது;
உம் வாக்கை நான் நம்புகின்றேன்.
82 உம் வாக்குறுதியை எதிர்நோக்கி
என் கண்கள் பூத்துப்போயின;
'எப்போது எனக்கு ஆறுதல் தருவீர்?' என்று வினவினேன்.
83 புகைபடிந்த தோற்பைபோல் ஆனேன்;
உம் விதிமுறைகளை நான் மறக்கவில்லை.
84 உம் ஊழியன் எத்தனை நாள் காத்திருக்கவேண்டும்?
என்னைக் கொடுமைப்படுத்துவோரை என்று தண்டிப்பீர்?
85 உமது திருச்சட்டப்படி நடக்காமல்,
செருக்குற்றோர் எனக்குக் குழிவெட்டினர்;
86 உம் கட்டளைகள் எல்லாம் நம்பத்தக்கவை;
அவர்கள் பொய்யுரை கூறி என்னை ஒடுக்குகின்றனர்;
எனக்குத் துணை செய்யும்.
87 அவர்கள் பூவுலகினின்று என் வாழ்வை
ஏறக்குறைய அழித்துவிட்டனர்;
நானோ உம் நியமங்களைக் கைவிடவில்லை.
88 உமது பேரன்புக்கேற்ப
என்னை உயிரோடு வைத்திரும்,
நீர் திருவாய்மலர்ந்த ஒழுங்குமுறைகளை
நான் கடைப்பிடிப்பேன்.

திருப்பாடல் 119:81-88

**சிந்தனைக்கு**

வசனம் 119:81-88
*அழிவின் விளிம்பில் நிற்கின்ற இறைவார்த்தையின் வழியில் நடக்கும் திருப்பாடகர் எதிர்நோக்கும் விடுதலை.*

119ம் *திருப்பாடலின் நடுவில், இந்தப் பகுதி அமைந்துள்ளது.* 176 *வசனங்களை சரிபாதியாகப் பிரித்து ஆய்வு செய்யும் சிலர், முதல் பாதியின் முடிவில் உள்ள மன்றாட்டாக இந்தப் பகுதியையும்,* வ.89-91*ல் உள்ள வசனங்களை இரண்டாம் பாதியின் முன்னுரையாகவும் கருதுகின்றனர்.*

வசனம் 119:81
*தனது துயர நிலையை எடுத்துச் சொல்லி, மீட்பின் ஆண்டவரின் வாக்குறுதிகளை நினைவூட்டிய* (வ.58&61) *திருப்பாடகர், தனது உள்ளம் எந்த அளவுக்கு அவர்தம் மீட்பை நாடுகிறது என்பதைத் தனது மன்றாட்டின் தொடக்கத்திலேயே வெளிப்படுத்துகிறார்.*

*ஏங்கும் நெஞ்சம்,* 84:2.
*வாழ்வு தரும் வாக்கை நம்பும் திருப்பாடகர்,* வ.74.

வசனம் 119:82
"... *எதிர்நோக்கி என் கண்கள் பூத்துப்போயின*" -
*அதேபோன்ற நிலையில் இருந்த தாவீது,* 69:3.

"*எப்போது எனக்கு ஆறுதல் தருவீர்?*" -
*பாடுகளின் நடுவே, நம்பிக்கையோடு காத்திருப்பவரின் கேள்வி. இத்தகைய கேள்விகளை எழுப்பும் ஆசாத்,* 74:9-10.

வசனம் 119:83
"*புகை படிந்த தோற்பை...*" -
*தோற்பை அதன் ஈரத்தன்மையை இழக்கவும், நெகிழ்வுத் தன்மையை இழந்து கடினப் படவும், புகையூட்டப்படும். புகையால் வாட்டப்படும் தோற்பையின் நிலையில் திருப்பாடகர் துயருற்றார்.*
*துன்பங்களின் வழியேதான் கடவுள் நம்பிக்கையில் நம்மை நிலைப்படுத்துகிறார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.*

வசனம் 119:84
*இணை,* வ.82.
*துன்பத்திலும், எதிர்நோக்கிலும் தன் நிலையற்ற வாழ்வு முடிந்து விடுமோ என்கிற அச்சத்தில் எழும் கேள்வியோடு ஆண்டவர் விரைந்து செயல்பட அழைப்பு,* 6:3, 13:1, 35:17, 79:4-5, 89:46-47 & 94:2-3; *திருவெளிப்பாடு* 6:10.

வசனம் 119:85-87
*இறைவார்த்தையில் உறுதியோடு நடக்கும் வேளையிலும், இன்னல்தரும் செருக்குற்றோர் குறித்த முறையீடு,* வ.69&78, 5:8-9, 7:14-15.

வசனம் 119:85
*குழி வெட்டும் செருக்குற்றோர்,* 35:7, 57:6, *எரேமியா* 18:20&22; *லூக்கா* 11:53-54.

இதுபோன்ற தருணங்களில், "பாம்புகளைப் போல முன்மதி உடையவர்களாகவும், புறாக்களைப் போலக் கபடற்றவர்களாகவும் இருக்க" இறைமகன் இயேசு நமக்கு அறிவுறுத்துகிறார் (மத்தேயு 10:16).

வசனம் 119:86
"உம் கட்டளைகள் எல்லாம் நம்பத்தக்கவை" -
ஏனெனில், ஆண்டவர் நம்பத்தக்கவர், நீதி உள்ளவர், மன்னிக்கும் குணமுடையவர், இரக்கம் கொண்டவர். அவர்தம் பிள்ளைகளாகிய நாம், எப்படி இருந்தாலும், ஆபத்துக் காலத்தில் அவரை அழைக்கும் வேளையில், பாதுகாத்துத் தூக்கி நிறுத்தும் கரம் அவருடையது. பயணத்தில் அல்லது பதட்டமாக உணரும் வேளைகளிலெல்லாம் வேண்டுவோம்: "எனக்குத் துணை செய்யும்," "எனக்குத் துணை செய்யும்."

வசனம் 119:87
தன்னுடைய துன்ப நிலையைத் தெளிவாக முறையிடும் திருப்பாடகர்.

"நானோ உம் நியமங்களைக் கைவிடவில்லை" -
ஆபத்துக் காலத்தில் நாம் அவரையே பற்றிக் கொண்டு வாழ்கிறோம். எதிரிகள் பறித்த குழியில் விழாமல், அவரும் நம்மைத் தூக்கி நிறுத்துகிறார்.

எல்லாம் நலமாக நடக்கும் காலத்தில், நாம் எந்த அளவுக்கு அவரைப் பற்றிக் கொண்டுள்ளோம்?

வசனம் 119:88
கடவுளின் கிருபை விரைவில் வெளிப்பட நம்பிக்கையோடு காத்திருத்தல், வ.149,156&159.

கடவுளின் திருச்சட்டத்தை மீண்டும் கைக்கொள்ளும் திருப்பாடகர், தான் அவர்தம் வழிகளில் நடந்து சாட்சியாக விளங்கும் பொருட்டு, உயிர் வாழ மன்றாடுகிறார்.

நமது வாழ்வின் நோக்கம் என்ன?
🕎

## 12. லாமேட் / lamed

(திருச்சட்டத்தின் மீது நம்பிக்கை)

89 ஆண்டவரே!
என்றென்றைக்கும் உள்ளது உமது வாக்கு;
விண்ணுலகைப்போல் அது நிலைத்துள்ளது.
90 தலைமுறை தலைமுறையாய் உள்ளது
உமது வாக்குப் பிறழாமை;
நீர் பூவுலகை உறுதியாய் இருக்கச் செய்தீர்,
அது நிலைபெற்றுள்ளது.
91 உம் ஒழுங்குமுறைகளின் படியே
அனைத்தும் இன்றுவரை நிலைத்துள்ளன.
ஏனெனில், அவை உமக்கு ஊழியம் செய்கின்றன.
92 உமது திருச்சட்டம் எனக்கு இன்பம் தருவதாய் இல்லாதிருந்தால்
என் துன்பத்தில் நான் மடிந்து போயிருப்பேன்.

93 உம் நியமங்களை நான் எந்நாளும் மறவேன்;
ஏனெனில், அவற்றைக்கொண்டு என்னைப் பிழைக்க வைத்தீர்.
94 உமக்கே நான் உரிமை; என்னைக் காத்தருளும்;
ஏனெனில், உம் நியமங்களையே நான் நாடியுள்ளேன்.
95 தீயோர் என்னை அழிக்கக் காத்திருக்கின்றனர்;
நானோ உம் ஒழுங்குமுறைகளை ஆழ்ந்து சிந்திக்கின்றேன்.
96 நிறைவான அனைத்தின் எல்லையையும் நான் பார்த்துவிட்டேன்;
உமது கட்டளையின் நிறைவோ எல்லை அற்றது.

திருப்பாடல் 119:89-96

**சிந்தனைக்கு**

வசனம் 119:89-96
இறைமாண்புமிக்க இறைவார்த்தை.

வசனம் 119:89-91
இரண்டாம் பாதிப் (வ.89-176) பகுதிக்கு முன்னுரையாக அமையும் பொதுவான மூன்று வசனங்கள். படைப்பின் வாக்கு, பராமரிக்கும் வாக்கு, பாதுகாக்கும் வாக்கு; மாறாத வாக்கு; என்றைக்கும் நிலைநிற்கும் வாக்கு.

வசனம் 119:89
கடவுளின் விண்ணகம் போல, என்றைக்கும் நிலைநிற்கும் இறைவாக்கு, 33:4&6, 89:2, 107:20, 111:3,5&7-10, 117:2 & 147:15&18. மேலும் பார்க்க, மத்தேயு 5:18; 1 பேதுரு 1:25.

வசனம் 119:90அ
கடவுளின் வாக்குப் பிறழாமை தலைமுறை தலைமுறையாக நிலைத்திருப்பது, 33:11, 36:5, 89:1, 90:1, 93:5, 96:10 & 105:8; இணைச் சட்டம் 5:10.

வசனம் 119:90ஆ-91
கடவுளால் படைக்கப்பட்ட இயற்கையின் ஆற்றல்கள் அனைத்தும் அவர் வகுத்த ஒழுங்கு முறைகளின்படி, நிலையாகச் செயல்படுகின்றன; படைக்கப்பட்ட அனைத்தும் அவர் வகுத்த இயற்கையின் நியமங்களின்படி, இயங்குகின்றன. அவ்வாறு செயல்படுவதன் வழியாக, அவைகள் வாழும் காலத்தில் அல்லது அவைகளின் இருப்பின் காலத்தில், கடவுள் அருளிய ஊழியத்தை நிறைவேற்றுகின்றன, எரேமியா 31:35 & 33:25. இந்த அடிப்படையில், படைப்பின் மகுடமாக ஆண்டவர் உருவாக்கிய மனிதர்களாகிய நமது நிலை என்ன? நமக்கு அவர் ஒப்புவித்த பொறுப்புகளை, அவரது ஒழுங்குமுறைகளின் வழியில் நாம் நிறைவேற்றுகிறோமா?

வசனம் 119:92
இன்பம் தருவது திருச்சட்டமே என்பதை மீண்டும் மீண்டும் அறிக்கையிடும் திருப்பாடகர், வ.16&24 மற்றும் குறிப்புகள். துன்பத்தில் நல்ல துணை, இறை வார்த்தையே! ஆறுதல் தருவது, ஆற்றித் தேற்றுவது, ஆற்றல் தருவது இறை வார்த்தையே!

இறைவார்த்தையை வாசி - சுவாசி - விசுவாசி!

வசனம் 119:93
வாழ்வூட்டும் இறைவாக்கு, வ.50. அதனால் அதனை நினைவிலிறுத்தி அதன் வழி நடக்க உறுதி, வ.16&24 மற்றும் குறிப்புகள்.

வசனம் 119:94
"உமக்கே நான் உரிமை" -
ஆண்டவருக்கே உரிமை என்றாகிவிட்டால், அவருக்கு உரியதை அவரே காப்பார் அன்றோ!
மேலும் ஒப்பிட்டுத் தெளிக, 1 கொரிந்தியர் 6:19-20.

"உம் நியமங்களையே நான் நாடியுள்ளேன்" -
கிறிஸ்து இயேசு கற்பித்தபடி, "அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள்."

வசனம் 119:95
அழிக்கக் காத்திருக்கும் தீயோர், வ.61,69,78&85. தனது மன்றாட்டை நினைவூட்டும் திருப்பாடகர், வ.81-88.

வசனம் 119:96
19:7ன் விரிவு; எல்லையற்ற இறைவார்த்தையின் நிறைவு; ஒவ்வொரு முறை வாசிக்கும்போதும் நமது மனநிறைவு விரிவடைகிறது. அதன் எல்லையைக் கண்டு அறிந்தவர் யார்?
தொடக்க கால மனிதர்களுக்கு நிறைவளித்த இறைவார்த்தை, கால எல்லை அற்று இன்றைக்கு நம்மையும் வழி நடத்துவதாக இருக்கிறதன்றோ!

## 13. மேம் / mem

(திருச்சட்டத்தின் மீது அன்பு)

97 ஆண்டவரே!
நான் உமது திருச்சட்டத்தின்மீது
எத்துணைப் பற்றுக் கொண்டுள்ளேன்!
நாள் முழுவதும் அதைப்பற்றியே சிந்திக்கின்றேன்.
98 என் எதிரிகளைவிட
என்னை ஞானியாக்கியது உமது கட்டளை;
ஏனெனில், என்றென்றும் அது என்னோடு உள்ளது.
99 எனக்கு அறிவு புகட்டுவோர் அனைவரினும்
நான் விவேகமுள்ளனவாய் இருக்கின்றேன்;
ஏனெனில், உம் ஒழுங்குமுறைகளையே
நான் சிந்திக்கின்றேன்;
100 *முதியோர்களைவிட நான் நுண்ணறிவு பெற்றுள்ளேன்.
ஏனெனில், உம் நியமங்களைக் கடைப்பிடிக்கின்றேன்.
101 உம் வாக்கைக் கடைப்பிடிக்குமாறு தீயவழி எதிலும்
நான் கால்வைக்காது பார்த்துக் கொள்கின்றேன்.
102 உம் நீதிநெறிகளைவிட்டு நான் விலகவில்லை;
ஏனெனில், நீர்தாமே எனக்குக் கற்றுத் தந்தீர்.
103 உம் சொற்கள் என் நாவுக்கு எத்துணை இனிமையானவை!
என் வாய்க்குத் தேனினும் இனிமையானவை.
104 உம் நியமங்களால் நான் நுண்ணறிவு பெறுகின்றேன்.
ஆகவேதான் பொய்வழிகள் அனைத்தையும்
நான் வெறுக்கின்றேன்.

திருப்பாடல் 119:97-104

**சிந்தனைக்கு**

வசனம் 119:97-104
*ஞானம் தரும் என்றுமுள இறைவார்த்தை.*

வசனம் 119:97
"*...எத்துணைப் பற்றுக் கொண்டுள்ளேன்*" -
OV, *எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்; பார்க்க, வ.47 மற்றும் குறிப்பு.*

"*நாள் முழுவதும் ...*" -
*திருச்சட்டத்தின் மீது பற்றுக்கொண்ட திருப்பாடகர் நாள் முழுவதும் அதையே சிந்தித்துக் கொண்டிருக்கிறார்; விழித்திருக்கும் வேளைகளில் ஒருவர் சிந்திக்கும் நேரம் 'இரவு' என்றால், 'நாள்' என்பது ஒருவர் சிந்தித்துச் செயல்படும் நேரம்; செயல்களில் நமது நேர்மை விளங்க, திருச்சட்டம் நமது சிந்தனையாக இருக்க வேண்டும். செயல்படும் வேளைகளில், நமது சிந்தை, ஆதாயக் கணக்குப் பார்க்கிறதா? அல்லது திருச்சட்டத்தில் நிலைகொண்டிருக்கிறதா?*

வசனம் 119:98-100
*ஓர் ஒப்பீட்டு அறிக்கை.*
*ஒருவரை ஞானியாக்கும் திருச்சட்டம், இணைச் சட்டம் 4:5-6. மேலும் பார்க்க, 19:7.*

வசனம் 119:98
*எதிரிகளைவிட ஞானியாக்கும் திருச்சட்டம். ஏனெனில், இவ்வுலகில் ஆதாயம் தேடும் எதிரிகள், இறைச்சட்டத்தைத் தியானிப்பதில்லை.*

வசனம் 119:99
*போதிக்கப்படுதல் அல்லது கற்றல் என்பதை விட, பயில்தல் என்பதே சிறப்பு.*

*பயிற்றுவித்தவர்களை விஞ்சும் மாணவர்; ஏனெனில் பயிற்றுவித்த ஒழுங்குமுறைகளையே சிந்திக்கும், அவற்றில் நடைபயிலும் திருப்பாடகர்.*

*காலையிலும் இரவிலும் வாசிப்பும் ஜெபமும் மட்டுமல்லாமல், எல்லா நேரங்களிலும் வார்த்தையில் வாழும் திருப்பாடகர்.*

வசனம் 119:100
*மிகுந்த அனுபவ அறிவுடைய முதியோரை விட ஞானத்தில் சிறந்து விளங்கும் திருப்பாடகர். ஏனெனில் எவரையும் விட உறுதியோடு ஆண்டவரின் நியமங்களின் வழியில் நடக்கும் திருப்பாடகர்.*

வசனம் 119:101-102
*நேர்மறை அறிக்கைகளுக்குப் (வ.98-100) பிறகு, எதிர்மறையான நிலைகளுக்கு விலகி நிற்பதை அறிக்கை செய்யும் திருப்பாடகர். நினைவுகூர்க, திருப்பாடல் 1.*

வசனம் 119:101
*முதல் நிலையில் நாம் நடக்கும் வழிகளைத் தெரிவு செய்வதில் நமக்கு இருக்க வேண்டிய உறுதியான நிலைப்பாடு. அதேவேளையில், நாம் ஆண்டவரின் வழிகளில் நடக்க அவரும் உதவுகிறார், வ.67 மற்றும் குறிப்பு.*

வசனம் 119:102
கற்பிக்கும் ஆண்டவர், பார்க்க, 25:4-5,8-9&12. "நான் உனக்கு அறிவு புகட்டுவேன்; நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; உன்னைக் கண்ணோக்கி, உனக்கு அறிவுரை கூறுவேன்." (32:8)

மேலும் இணைத்து வாசிக்க, எசாயா 54:13; எரேமியா 31:33-34; 1 கொரிந்தியர் 2:13; 1 தெசலோனிக்கர் 4:9; எபிரேயர் 8:10-11, 10:16; 1 யோவான் 2:27.
இறைவார்த்தையை நாம் ஆழ்ந்து வாசிக்கும் போது, அவற்றின் மெய்ப்பொருளை நமக்கு உணர்த்துபவர் தூய ஆவியாகிய ஆண்டவர். அதன்படி நடக்க அவரே நம்மைப் பயிற்றுவிக்கிறார். ஆண்டவரே கற்றுத் தந்த வழிகளை விட்டு நாம் விலகுவது எப்படி?

வசனம் 119:103
"...தேனினும் இனிமை..." -
பார்க்க, 19:10; நீதிமொழிகள் 24:13-14.
இறைவார்தையின் இனிமை குறித்து மீண்டும் மீண்டும் பேசும் திருப்பாடகர்; இனிமைக்கு ஒப்பாக இங்கு தேனைக் குறிப்பிடுகிறார்.

நாவில்படும் துளி தேன் இனிமை; நாவில் வெளிப்படும் இறைவார்த்தை இனிமை. நாவில்பட்டால்தான் தேன் இனிமை; நாவு வெளிப்படுத்தினால்தான், இறைவார்த்தை இனிமை. நம் நாவு இறைவார்த்தையைப் பேசுகிறதா?

வசனம் 119:104
வ.100ல் உரைத்தபடி, மீண்டும் அறிக்கையிடும் திருப்பாடகர். இறைவார்த்தையை ஆண்டவரின் வழிகாட்டுதலோடு கற்றுத் தேறிய திருப்பாடகர், பொய் வழிகளை அறியும் அறிவைப் பெற்றதால், அவற்றை வெறுக்கிறார்.

பொய்மையை அறியும் தெளிவு நம்மிடம் உள்ளதா?

## *14. நூன் / nun*

*(திருச்சட்டத்தின் ஒளி)*

105 என் காலடிக்கு உம் வாக்கே விளக்கு!
என் பாதைக்கு ஒளியும் அதுவே!
106 நீதியான உம் நெறிமுறைகளை
நான் கடைப்பிடிப்பதாக
ஆணையிட்டு உறுதிமொழி தந்துள்ளேன்.
107 ஆண்டவரே! மிக மிகத் துன்புறுத்தப்படுகின்றேன்;
உம் வாக்குறுதியின்படி என்னை உயிரோடு வைத்தருளும்.
108 நான் மனமுவந்து வாயார உம்மைப் புகழ்வதை
ஆண்டவரே! தயைகூர்ந்து ஏற்றுக்கொள்ளும்;
உம் நீதிநெறிகளை எனக்குக் கற்பியும்.
109 நான் என்னுயிரைக் கையில் வைத்துள்ளேன்;
ஆயினும், உம் திருச்சட்டத்தை நான் மறவேன்.
110 தீயோர் எனக்குக் கண்ணிவைத்தனர்;
ஆனால், உம் நியமங்களினின்று நான் பிறழவில்லை.

111 உம் ஒழுங்குமறைகளை
*என்றும் என் உரிமைச் சொத்தாய்க் கொண்டுள்ளேன்.*
*ஆகவே, அவை என் இதயத்தை மகிழ்விக்கின்றன.*
112 *உம் விதிமுறைகளைச் செயல்படுத்துவதில்*
*என் உள்ளம், என்றென்றும்,*
*இறுதிவரை நாட்டம் கொண்டிருக்கும்.*

திருப்பாடல் 119:105-112

**சிந்தனைக்கு**

வசனம் 119:105-112
*இடுக்கண்மிகு இருள் சூழ் உலகில், வழிகாட்டும் ஒளி இறைவார்த்தையே!*

வசனம் 119:105
இணை, நீதிமொழிகள் 6:23; சேர்த்து வாசிக்க, வ.101.
*ஆண்டவரை மட்டுமே நம்பி எகிப்திலிருந்து வெளியேறிய மக்களுக்குப் பகலில் நிழலாகவும் இரவில் ஒளியாகவும் திகழ்ந்த இறை மாட்சி. காணக் கூடாத ஒளியில் மோசே மற்றும் சவுலுக்கு வெளிப்பட்ட ஆண்டவர். எல்லாக் காலங்களுக்கும் வழிகாட்டும் ஒளியாகத் திகழும் அவர்தம் வாக்கு.*

வசனம் 119:106
"...*ஆணையிட்டு உறுதிமொழி தந்துள்ளேன்*" -
*மக்களினமாக இஸ்ரயேலர் கடவுளுக்கு அளித்த உறுதிமொழி*, நெகேமியா 10:29.
*ஆண்டவரை உளமார ஏற்றுக்கொண்டோர் நாம். அவர்தம் வழிகளில் நடக்க உறுதி பூண்டோர் நாம். அப்படியானால், நமது செயல்களில் அவர்தம் நீதி விளங்க நடப்பதே நமது கடமை.*

வசனம் 119:107
*தனக்கு எதிரான சூழ்ச்சி மற்றும் தனது துன்புறு நிலையை மீண்டும் மீண்டும் நினைவு கூரும் திருப்பாடகர்*, வ.23,28,50,51,61,71,78,84,85,87,92,95,110,116,117,133,134,141,143,153, 157,158,161&175.
*செருக்குற்றோரின் சூழ்ச்சி, தீயோரின் வஞ்சம், இவைகளின் அச்சுறுத்தல்களுக்கு நடுவே ஆண்டவரை அண்டிக் கொண்ட திருப்பாடகர்.*

"...*உயிரோடு வைத்தருளும்*" -
*உயிரைப் பறிக்கும் சூழ்ச்சியினின்று தன்னைக் காத்தருள திருப்பாடகரின் மன்றாட்டு*, வ.25,37, 40,41,77,88,94,116,117,121,122,133,134,146,149,153,154,156,159,166,170&174.

வசனம் 119:108
*புகழ்ச்சியும் மன்றாட்டும்.*

*ஆண்டவர் அருளிய தயை மற்றும் இரக்கத்திற்காக அவரைத் திருப்பாடகர் துதிக்கிறார். துதியை ஏற்றுக்கொண்டு அவர்தம் நீதிநெறிகளைத் தமக்குக் கற்றுத்தர மன்றாடுகிறார்.*

வசனம் 119:109
*உயிர் போகும் ஆபத்தில் திருப்பாடகர்*, இணை, நீதித் தலைவர்கள் 12:3.
இருப்பினும், *ஆண்டவரின் திருச்சட்டத்தை அவர் மறக்கவில்லை*, வ.16,52,61,83,93,141,153& 176.

வசனம் 119:110
"தீயோர் எனக்குக் கண்ணி வைத்தனர்" -
தனக்கு எதிராகச் செயல்படும் தீயோரைக் குறித்து தொடர்ந்து முறையிடும் திருப்பாடகர், வ.85&95.

வசனம் 119:111
"உம் ஒழுங்குமுறைகளே என்றும் என் உரிமைச் சொத்து..." -
பார்க்க, வ.57. என்றைக்கும் அழியாத வார்த்தையே நமது உரிமைச் சொத்து (மத்தேயு 24:35).

இன்றைக்குத் தன் துன்பநிலையில் மட்டுமல்லாமல், ஆண்டவரின் ஒழுங்குமுறைகளை என்றும் தன் உரிமைச் சொத்து என அறிக்கையிடும் திருப்பாடகர். நம் ஒவ்வொருவரின் உரிமைச் சொத்து எது? அதனை எந்த அளவுக்கு நாம் போற்றிக் கடைப்பிடிக்கிறோம்?

வசனம் 119:112
பார்க்க, வ.33,34,44
"காலடியில்" தொடங்கிய இப்பகுதியை "உள்ளத்தில்" நிறைவு செய்யும் திருப்பாடகர். காலடிக்கு விளக்கு, பாதைக்கு ஒளி, அவ்வழியில் இறுதி வரை பயணிக்க என்றென்றும் நாட்டம் கொள்ளும் உள்ளம்!
🕎

## *15. சாமெக் / samech*

*(திருச்சட்டம் தரும் பாதுகாப்பு)*

113 இருமனத்தோரை நான் வெறுக்கின்றேன்;
உமது திருச்சட்டத்தின்மீது பற்றுக் கொண்டுள்ளேன்.
114 நீரே என் புகலிடம்; நீரே என் கேடயம்;
உமது வாக்கில் நான் நம்பிக்கை வைக்கின்றேன்.
115 தீயன செய்வோரே! என்னைவிட்டு விலகுங்கள்;
என் கடவுளின் கட்டளைகளை நான் கடைப்பிடிப்பேன்;
116 நான் பிழைக்குமாறு,
உமது வாக்குறுதிக்கேற்ப என்னைத் தாங்கியருளும்;
எனது நம்பிக்கை வீண்போக விடாதேயும்.
117 என்னைத் தாங்கிக்கொள்ளும்;
நான் மீட்புப் பெறுவேன்;
எந்நாளும் உம் விதிமுறைகளைக்
கருத்தில் கொண்டிருப்பேன்.
118 உம் விதிமுறைகளைவிட்டு விலகுவோர் அனைவரையும்
நீர் ஒதுக்கித் தள்ளுகின்றீர்;
அவர்களின் சூழ்ச்சிகள் வீணாய்ப் போகும்.
119 பூவுலகின் பொல்லார் அனைவரையம்
நீர் களிம்பெனக் கருதுகின்றீர்;
ஆகவே, நான்
உம் ஒழுங்குமுறைகள் மீது பற்றுக்கொண்டுள்ளேன்.
120 உம்மீது கொண்டுள்ள அச்சத்தால்
என் உடல் சிலிர்க்கின்றது;

*உம் நீதித்தீர்ப்புகளை முன்னிட்டு*
*நான் அஞ்சி நடுங்குகின்றேன்.*

திருப்பாடல் 119:113-120

**சிந்தனைக்கு**

வசனம் 119:113-120
*அஞ்சி நடப்போரைப் பாதுகாக்கும் இறைவார்த்தை*

வசனம் 119:113
வீண் சிந்தனைகளை (OV) வெறுக்கிறேன் என்று மொழிபெயர்ப்பதைவிட, இருமனத்தோரை வெறுக்கிறேன் என்பதுவே தெளிவானது. "எத்தனை நாள் இருமனத்தோராய் தத்தளித்துக் கொண்டிருக்கப் போகிறீர்கள்?" என்பது நம்மைப் பார்த்துக் கடவுள் எழுப்பும் கேள்வி (1 அரசர்கள் 18:21). நிலையற்ற போக்குடையவர்கள் ஆண்டவரிடம் ஏதாவது பெற முடியும் என நினைக்காதிருக்கட்டும் (யாக்கோபு 1:8). கடவுள் இருக்கிறாரா இல்லையா? இருந்தால் யார் கடவுள்? கடவுளின் வாக்கு என்ன? அதன் பொருள் இதுதானா? - இப்படி நம்முள் எழும் கேள்விகள் எத்தனை?

இறைவார்த்தையில் தெளிவடையா உள்ளமே தத்தளிக்கும்! எனவே, இருமனத்தோரே, உங்கள் உள்ளங்களைத் தூய்மைப்படுத்துங்கள் (யாக்கோபு 4:8இ).

வசனம் 119:114
"...புகலிடம் ... கேடயம்" -
தாவீது உறுதிபட மீண்டும் மீண்டும் உரைத்தது, 3:3, 9:9, 18:2, 27:5, 32:7, 36:7, 57:1, 61:3, 62:7 & 144:2. பாதுகாக்கும் ஆண்டவரின் வார்த்தையில் திருப்பாடகர் நம்பிக்கை கொள்கிறார்.

வசனம் 119:115
இணை, 6:8. நினைவில் வைக்க, 1:1 & 2 கொரிந்தியர் 6:14-15. பொல்லாரிடமிருந்து தான் விலகாமல், அவர்களை விலகச் சொல்வது போல் தோன்றினாலும், பொல்லாரின் இயல்பு, நல்லோரை விடாது தொடர்ந்து துன்புறுத்துதல் என்பதால், இவ்வாறு சொல்லப்பட்ட சொற்கள்.

வசனம் 119:116
பார்க்க வ.38 மற்றும் குறிப்பு.
நம் வாழ்வில் வாக்குறுதியை நிறைவேற்றும் ஆண்டவர்–
சாரா, தொடக்க நூல் 21:1;
தாவீது, 2 சாமுவேல் 7:25 & 2 குறிப்பேடு 1:9 & 21:7;
எசேக்கியா, 2 அரசர்கள் 20:9-11.

வசனம் 119:117
"என்னைத் தாங்கிக் கொள்ளும்" -
விழுந்து விடும் நிலையில் இருந்த திருப்பாடகரின் மன்றாட்டு.

வசனம் 119:118
"உம் விதிமுறைகளை விட்டு விலகுவோர் அனைவரையும் நீர் ஒதுக்கித் தள்ளுகிறீர்" -
இதனை வாசிக்கிற வேளையில், மனம் திருந்தி ஆண்டவரிடம் வருபவரை அவர் புறம்பே தள்ளிவிட மாட்டார் என்பதை நினைவில் கொள்வோம். மேலும் பார்க்க, எரேமியா 8:5.

வசனம் 119:119
"...களிம்பெனக் கருதுகின்றீர்" -
வெள்ளியில் ஏறும் களிம்பு என்னும் ஒப்பீடு; புரிதலுக்குப் பார்க்க, எசாயா 1:22&25 மற்றும் எசேக்கியேல் 22:18-19.

வசனம் 119:120
இறையச்சத்திற்கு உள்ளாகும் உள்ளம், 19:9; எசாயா 6:5; அபக்கூக்கு 3:16.
அத்தகைய இறையச்சத்தோடு வாழும் திருப்பாடகர்; ஏனெனில் அதுவே ஞானத்தின் தொடக்கம்.

## *16. ஆயின் / ain*

*(திருச்சட்டத்தின் படி நடத்தல்)*

121 *நீதியும் நேர்மையும் ஆனவற்றையே செய்துள்ளேன்;*
*என்னை ஒடுக்குவோர் கையில் என்னை விட்டு விடாதேயும்.*
122 *உம் ஊழியனின் நலத்தை உறுதிப்படுத்தும்;*
*செருக்குற்றோர் என்னை ஒடுக்கவிடாதேயும்.*
123 *நீர் தரும் விடுதலையையும்*
*உமது நீதியான வாக்குறுதிகளையும் எதிர்பார்த்து,*
*என் கண்கள் பூத்துப் போயின.*
124 *உம் பேரன்பிற்கேற்ப உம் ஊழியனுக்குச் செய்தருளும்;*
*உம் விதிமுறைகளை எனக்குக் கற்பியும்.*
125 *உம் ஊழியன் நான், எனக்கு நுண்ணறிவு புகட்டும்;*
*அப்போது உம் ஒழுங்குமுறைகளை அறிந்துகொள்வேன்.*
126 *ஆண்டவரே! நீர் செயலாற்றும் நேரம் வந்துவிட்டது;*
*உம் திருச்சட்டம் மீறப்பட்டுவிட்டது.*
127 *ஆகவே, பொன்னிலும் பசும்பொன்னிலும் மேலாக*
*உம் கட்டளைகளை விரும்புகின்றேன்.*
128 *உம் நியமங்களை எல்லாம் நீதியானவை என்று ஏற்றுக்கொண்டேன்;*
*பொய்யான வழி அனைத்தையும் வெறுக்கின்றேன்.*

திருப்பாடல் 119:121-128

**சிந்தனைக்கு**

வசனம் 119:121-128
தான் எதிர்நோக்கும் ஆண்டவரின் மீட்பில் தாமதம் ஆயினும், இறைவார்த்தையில் நாட்டம் கொள்ளும் திருப்பாடகர்.

வசனம் 119:121
தன்னுடைய செயல்களில் தான் நீதியையும் நேர்மையையும் கடைப்பிடித்துள்ளதை உறுதியோடு சொல்லும் திருப்பாடகர், வ.30, 31,55&56,59-60,69,129. இந்த வகையில் அவரை யோபோடு ஒப்பிடலாம், யோபு 27 & 31.

நீதியோடும், நேர்மையோடும் நாம் நடந்து கொள்வதை விரும்பும் ஆண்டவர், 106:3; தொடக்க நூல் 18:19; நீதிமொழிகள் 21:3; எசாயா 56:1; எசேக்கியேல் 18:5,9,19&21, 33:14-16&19; 45:9.

வசனம் 119:122
*வார்த்தை / சட்டம் / வாக்கு / வாக்குறுதி / நியமம் / ஒழுங்கு / நீதிநெறி போன்ற சொல் ஏதும் எவ்விதத்திலும் இடம்பெறாத ஒரு வசனம்.*

"*உம் ஊழியனின் நலத்தை உறுதிப்படுத்தும்*" -
OV, "*உமது அடியேனுக்கு நன்மையாகத் துணை நில்லும்.*"
KJV, "Be surety for thy servant for good."

*ஒப்பிடுக,* "*நீரே எனக்குப் பணையமாய் இருப்பீராக,*" *யோபு* 17:3. *மொழிபெயர்ப்பு அளவில்,* KJV *தெளிவாக இருக்கிறது என்பது எனது கருத்து. எபிரேய* aw-rab *என்பது பணையம் வைத்தல், அடமானம் வைத்தல், பிணையாக நிற்றல், பொறுப்பேற்றல் என்றெல்லாம் பொருள்படும்.*

*பணையம் / பிணை என்பது பதிலாள்.* '*கிறிஸ்து இயேசு நமக்குப் பதிலாளாக சிலுவையில் அடிக்கப்பட்டார்; ஒருவரை மீட்பதின் மிக உயரிய விலையை நமக்காக அவர் கொடுத்தார்*' *என்பதை நினைவில் கொள்வோம்.*

வசனம் 119:123
*இணை, வ.*82. *முன்பு சொன்னதைவிடக் கூடுதலாக, ஆண்டவர் அருளும் விடுதலையைத் தான் எதிர்நோக்கிக் காத்திருப்பதை முறையிட்டு, அவரிடம் திருப்பாடகர் மன்றாடுகிறார்.*

வசனம் 119:124
"*உம் பேரன்பிற்கேற்ப...*" -
*நாம் நினைப்பதற்கும் வேண்டிக் கொள்வதற்கும் அதிகமாக நமக்கு நன்மைகளை அருளுவது ஆண்டவரின் பேரன்பு / கிருபை. அதனை நினைவூட்டி, திருப்பாடகர் வேண்டுகிறார்.*

வசனம் 119:125
"*உம் ஊழியன் நான், எனக்கு நுண்ணறிவு புகட்டும்*" -
*ஏனெனில், ஆண்டவரின் ஊழியனின் நாவினின்று திருச்சட்டத்தைக் கேட்க மக்கள் நாடி வருவார்களே!* (*மலாக்கி* 2:7)

வசனம் 119:126
"*ஆண்டவரே! நீர் செயலாற்றும் நேரம் வந்துவிட்டது; உம் திருச்சட்டம் மீறப்பட்டு விட்டது*" -
*ஒரு காரணத்தைக் குறிப்பிட்டு, ஒரு காரியத்தை ஆண்டவரிடமிருந்து திருப்பாடகர் எதிர்பார்க்கிறார். தனது துயரின் அழுத்தத்தால் அவர் இவ்வாறு நாடுகிறார்.*
*ஆனால், ஆண்டவர் செயல்பட வேண்டிய காலத்தை நாம் குறிப்பிட முடியுமா? இன்றைக்குப் பல அறிகுறிகளையும் அடையாளங்களையும் குறிப்பிட்டு, ஆண்டவரின் வருகைக்குப் பலரும் நாள் குறிப்பிடுகிறார்களே!*
"*கடவுள் ஒவ்வொன்றையும் அதனதன் காலத்தில் செம்மையாகச் செய்கிறார்; காலத்தைப் பற்றிய உணர்வை மனிதருக்குத் தந்திருக்கிறார். ஆயினும், கடவுள் தொடக்கமுதல் இறுதிவரை செய்துவருவதைக் கண்டறிய மனிதரால் இயலாது.*" (*சபை உரையாளர்* 3:11)

வசனம் 119:127
*இணை, வ.*14, 57, 72, 111 & 162 *மற்றும்* 19:10.
*பார்க்க, வ.*57&72 *மற்றும் குறிப்புகள்.*

வசனம் 119:128
"*உம் நியமங்களை எல்லாம்...*" -

*ஆண்டவர் அருளிய நியமங்களில், நம்மில் பலரும் செய்வது போல, நமது வசதிக்கேற்ப அங்கொன்றும் இங்கொன்றும் என்று இல்லாமல், நியமங்கள் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்ட திருப்பாடகர்.*

*நியமங்கள் அனைத்தையும் ஏற்றுக் கொண்டாலும், திருப்பாடகர் வ.*121*ல் குறிப்பிட்டது போல, அவற்றின் வழியில் நாம் நடந்துள்ளோமா?*

☩

## *17. பே / pe*

*(திருச்சட்டத்தின் மீது ஆவல்)*

129 *உம் ஒழுங்குமுறைகள் வியப்புக்குரியவை;*
*ஆகவே, நான் அவற்றைக் கடைப்பிடித்து வருகின்றேன்.*
130 *உம் சொற்களைப்பற்றிய விளக்கம் ஒளி தருகின்றது;*
*அது பேதைகளுக்கு நுண்ணறிவு ஊட்டுகிறது.*
131 *வாயை "ஆ"வெனத் திறக்கின்றேன்;*
*பெருமூச்சு விடுகின்றேன்; ஏனெனில்,*
*உம் கட்டளைகளுக்காக ஏங்குகின்றேன்.*
132 *உம் பெயரின்மீது பற்றுக்கொண்டோருக்கு*
*நீர் வழக்கமாய்ச் செய்வதுபோல்,*
*என் பக்கம் திரும்பி எனக்கும் இரங்கும்!*
133 *உமது வாக்கில் என் காலடிகளை நிலைப்படுத்தும்!*
*தீயது எதுவும் என்னை மேற்கொள்ளவிடாதேயும்!*
134 *மனிதர் செய்யும் கொடுமையினின்று*
*என்னை விடுவியும்!*
*உம் நியமங்களை நான் கடைப்பிடிப்பேன்.*
135 *உம் ஊழியன்மீது உமது முகஒளி வீசச் செய்யும்!*
*உம் விதிமுறைகளை எனக்குக் கற்பித்தருளும்.*
136 *உமது திருச்சட்டத்தைப்*
*பலர் கடைப்பிடிக்காததைக் கண்டு,*
*என் கண்களினின்று நீர் அருவியாய் வழிந்தது.*

*திருப்பாடல்* 119:129-136

**சிந்தனைக்கு**

*வசனம்* 119:129-136
*வறண்ட நிலங்களில் தண்ணீருக்குத் தவிக்கும் மான் போல வாழ்க்கைத் துயரங்களில் வார்த்தையை வாஞ்சிக்கும் திருப்பாடகர்.*

*வசனம்* 119:129
*"உம் ஒழுங்குமுறைகள் வியப்புக்குரியவை" -*
*கடவுளின் செயல்கள் மட்டுமல்லாமல் அவர்தம் ஒழுங்குமுறைகளும் வியப்புக்குரியவை; கிறிஸ்து இயேசுவின் மலைப்பொழிவைப் (மத்தேயு* 5 ~ 7*) படிப்போருக்கு இன்றும் வியப்பு மேலிடுவதை நாம் கேட்க முடியும்.*

"ஆகவே, நான் அவற்றைக் கடைப்பிடித்து வருகிறேன்" -
முழுமையாக வியப்பூட்டும் வண்ணம் தன்னை மாற்றிக் கொள்ள நீதியுள்ள இறைவார்த்தைக்குத் திருப்பாடகர் கீழ்ப்படிகிறார். இத்தகைய முழுமையான, வெளிப்படையான மாற்றத்தைப் புதிதாக ஆண்டவரை ஏற்றுக் கொள்வோரிடம் நாம் காண முடியும்.

வசனம் 119:130
"உம் சொற்களைப் பற்றிய விளக்கம் ஒளி தருகிறது" -
பார்க்க, வ.98-100 & 19:7-8. இங்கு கூடுதல் சிறப்புப் பெறுவது "விளக்கம்". இன்று வசனத்திற்குத் தரப்படும் விளக்கம் நமக்கு ஒளி தருகிறதா?

நினைவில் கொள்ளுங்கள்: திருச்சட்ட வல்லுநர் கமாலியேலால் போதிக்கப்பட்ட சவுலால், இயேசுவே கிறிஸ்து என்கிற உண்மையை உணர முடியவில்லை!
எனவே கமாலியேல்களின் காலடிகளில் அமர்ந்து உண்மையை உணர முடியாது; தூய ஆவியாரை அருளும்படி, கடவுளிடம் மன்றாடி வார்த்தையில் ஒளி பெறுவோம். அதுவே பேதைகளும் நுண்ணறிவு பெறும் வழி!

(குறிப்பு: விளக்கம் / OV, பிரசித்தம் என்பதன் மூலச் சொல், pay-thakh என்பது, திறத்தல், வெளிப்படுத்தல், நுழைதல் என்று பொருள்படும்.)

வசனம் 119:131
"வாயை 'ஆ'வெனத் திறக்கிறேன்" -
கடும் பசியோடு தங்கள் தாய்க் குருவியின் முன் தங்கள் வாய்களைத் திறக்கும் குஞ்சுகள் போல, வார்த்தைக்கு ஏங்கும் திருப்பாடகர்.

"பெருமூச்சு விடுகின்றேன்" -
ஒப்பிடுக, எசாயா 42:14.

வசனம் 119:132
"உம் பெயரின் மீது பற்றுக் கொண்டோருக்கு நீர் வழக்கமாய்ச் செய்வது போல்..." -
ஆபிரகாம் தொடங்கி இறையடியார்க்கு வழக்கமாக ஆண்டவர் அருளும் நன்மைகளை இங்கு திருப்பாடகர் நினைவூட்டி, அத்தகைய நன்மைக்காகத் தான் காத்திருப்பதை உணர்த்துகிறார்.

வசனம் 119:133
அழிவின் குழியிலிருந்து தூக்கி, உறுதியான கற்பாறையில் நிலைநிறுத்தி, காலடிகளை ஆற்றுப்படுத்தும் ஆண்டவர், 40:2.

வசனம் 119:134
செருக்குற்றோரின் சூழ்ச்சியிலிருந்து தன்னை விடுவிக்க வேண்டல்.

வசனம் 119:135
வெற்றிதரும் ஆண்டவர்தம் முகத்தின் ஒளி, 4:6, 44:3.

வசனம் 119:136
"...கண்களினின்று நீர் அருவியாய் ..." -
இறைவார்த்தையைக் கடைப்பிடிக்காதோர் குறித்து - சீற்றம் கொண்ட (வ.53), ஆண்டவரிடம் முறையிட்ட (வ.126), தன்னையே கரைத்துக் கொண்ட (வ.139), அருவருப்படைந்த (வ.158) திருப்பாடகர், இங்கு அதன் பொருட்டுக் கண்ணீர் வடிக்கிறார்.

இறைவார்த்தை மீறப்படும் போது நாம் சீற்றம் கொள்வதில்லை; கண்ணீர் வடிப்பதில்லை; ஆனால், வார்த்தை நம் அனைவரிலும் வாழ, நம் அனைவரையும் வழிநடத்த ஜெபிக்கிறோமா? 🕎

## *18. த்ஷாடே / tzaddi*

(திருச்சட்டத்தின் ஒழுங்குமுறை)

137 ஆண்டவரே! நீர் நீதி உள்ளவர்;
உம் நீதிநெறிகள் நேர்மையானவை.
138 நீர் தந்த ஒழுங்குமுறைகள் நீதியானவை;
அவை முற்றிலும் நம்பத்தக்கவை.
139 என் பகைவர் உம் வார்த்தைகளை மறந்துவிட்டதால்,
அவற்றின்மீது நான் கொண்டுள்ள
தணியாத ஆர்வம் என்னை எரித்துவிடுகின்றது.
140 உம் வாக்குறுதி
முற்றிலும் சரியென மெய்ப்பிக்கப்பட்டுள்ளது,
உம் ஊழியன் அதன்மீது பற்றுக்கொண்டுள்ளான்.
141 சிறியன் அடியேன்! இழிவுக்கு உள்ளானவன்;
ஆனால், உம் நியமங்களை மறக்காதவன்.
142 உமது நீதி என்றுமுள நீதி;
உமது திருச்சட்டம் என்றும் நம்பத்தக்கது.
143 துன்பமும் கவலையும் என்னைப் பற்றிக்கொண்டன;
எனினும் உம் கட்டளைகள் என்னை மகிழ்விக்கின்றன.
144 உம் ஒழுங்குமுறைகள் எக்காலமும் நீதியுள்ளவை;
நான் வாழுமாறு எனக்கு நுண்ணறிவு புகட்டும்.

திருப்பாடல் 119:137-144

**சிந்தனைக்கு**

வசனம் 119:137-144
*நீதியுள்ள ஆண்டவரின் நேரிய வார்த்தை*

வசனம் 119:137
*நீதி உள்ள ஆண்டவர்*, 7:9, 11:7, 25:8, 116:5, 129:4, 145:17; யோவான் 17:25.

வசனம் 119:138
*நம்பத்தக்க ஆண்டவரின் நீதி*, வ.86&142, 18:30, 19:7, 2 சாமுவேல் 22:31; மத்தேயு 5:17-18; திருவெளிப்பாடு 21:5, 22:6. அவர் நீதியுள்ளவர் என்பதன் அடையாளமே, அவரை அடைக்கலமாகக் கொண்டு, அவர்தம் வார்த்தையைக் கடைப்பிடித்து வாழ்வோரை, அவர் பாதுகாக்கிறார் என்பதுவே! (நீதிமொழிகள் 30:5). அவர்தம் வார்த்தையைக் கடைப்பிடித்து வாழும் நமக்கு, நம்பத்தக்கோராக வாழ வேண்டும் என்ற பொறுப்பும் உள்ளது (எசாயா 26:7, 53:11).

வசனம் 119:139
*எரித்து விடும் தணியாத ஆர்வம்* / OV, பட்சிக்கும் பக்தி வைராக்கியம், 69:9, 139:21; யோவான் 2:17.

மேலும் பார்க்க வ.136 மற்றும் குறிப்பு; அவற்றின் நீட்சியாகவே, உயரிய மனநிலையைத் திருப்பாடகர் இங்கு வெளிப்படுத்துகிறார். வார்த்தையின் மீது இத்தகைய ஆர்வத்தை நாம் பெறுவது எப்போது?

வசனம் 119:140
பார்க்க, 12:6.
சரியென மெய்ப்பிக்கப்பட்ட இறைவார்த்தை; ஊழி ஊழிகளாக ஆளுகை செய்யும் இறைவார்த்தை; சோதனைகளைக் கடந்து, காலங்களைக் கடந்து, தலைமுறைகளைக் கடந்து, எல்லைகளைக் கடந்து உண்மையென மெய்ப்பிக்கப்பட்ட இறைவார்த்தை.

வசனம் 119:141
மாட்சிமிகு ஆண்டவரின் முன்பாகத் தன்னைத் தாழ்த்தும் திருப்பாடகர். ஆயினும் நாம் கடைப்பிடிக்கும் இறைவார்த்தை நம் வாழ்க்கையை மேன்மைப்படுத்துகிறது.

வசனம் 119:142
என்றுமுளது மேலும் நம்பத்தக்கது - இறைவார்த்தையின் இரண்டு பண்புகளை நினைவில் கொள்ளும் திருப்பாடகர், வ.151,160.

வசனம் 119:143
துன்பத்தில் இன்பம்தரும் இறைவார்த்தை என்று மீண்டும் அறிக்கையிடும் திருப்பாடகர்; இதற்குச் சான்றாக வாழ்ந்த பவுலடிகளார், 2 கொரிந்தியர் 6:10, 7:4; பிலிப்பியர் 2:17; கொலோசையர் 1:24.

வசனம் 119:144
நுண்ணறிவூட்டும் இறைவார்த்தை, வ.34,73,125&169.
வாழ்வுதரும் இறைவார்த்தை, இணைச் சட்டம் 8:3; மத்தேயு 4:4. மேலும் வ.25,37,40,50,77 &93.

வார்த்தையின் வழியில் வாழ்வோர், ஆண்டவருக்கென்று வாழ்வோர்; சான்றாக நிற்போர்; சுடரொளி வீசுவோர். வார்த்தையால் தூண்டப்பட்ட வாழ்க்கை வாழ நம்மை அர்ப்பணிப்போம்.

## *19. கோப் / koph*

*(விடுதலைக்காக மன்றாடல்)*

145 முழு இதயத்தோடு
உம்மை நோக்கி மன்றாடுகின்றேன்;
ஆண்டவரே! என் மன்றாட்டைக் கேட்டருளும்;
உம் விதிமுறைகளை நான் பின்பற்றுவேன்.
146 உம்மை நோக்கி மன்றாடுகின்றேன்;
என்னைக் காத்தருளும்;
உம் ஒழுங்குமுறைகளை நான் கடைப்பிடித்தேன்.
147 வைகறையில் நான் உம்மிடம் வந்து
உதவிக்காக மன்றாடுகின்றேன்;
உம் சொற்களில் நம்பிக்கை வைக்கின்றேன்.

148 உம் வாக்குறுதிகளைச் சிந்திப்பதற்காக,
இரவுச் சாம நேரங்களில் நான் கண்விழித்துள்ளேன்.
149 ஆண்டவரே! உமது பேரன்பிற்கேற்ப
என் குரலைக் கேட்டருளும்;
உமது நீதியின்பபடி என்னுயிரைக் காத்தருளும்.
150 சதிசெய்து ஒடுக்குவோர்
என்னை நெருங்கி வருகின்றனர்;
உம் திருச்சட்டத்துக்கும் அவர்களுக்கும் வெகு தொலைவு.
151 ஆண்டவரே! நீர் என் அருகில் இருக்கின்றீர்;
உம் கட்டளைகள் எல்லாம் நிலையானவை.
152 அவற்றை நீர் எக்காலத்திற்குமாக ஏற்படுத்தினீர் என்று
நீர் தந்த ஒழுங்குமுறைகளினின்று
முன்பே நான் அறிந்திருக்கின்றேன்.

திருப்பாடல் 119:145-152

**சிந்தனைக்கு**

வசனம் 119:145-152
இறைவார்த்தையைக் கடைப்பிடிக்க மேலும் உறுதிபூணும் அதே வேளையில், எதிரிகளிடமிருந்து தன்னைக் காத்தருள மன்றாடும் திருப்பாடகர்.

பவர் மொழிபெயர்ப்பில் (OV), வ.146ல் (வ.134கிலும்) "அப்பொழுது" என்ற சொல் சேர்க்கப்பட்டுள்ளது. "என்னை விடுவியும், அப்பொழுது நான் உமது வாக்குகளின் படி நடப்பேன்" என்று ஆண்டவருக்கு நாம் நிபந்தனை விதிக்க முடியுமா?

நெருக்கடியில் இருக்கும் தருணங்களில், நாமும் ஆண்டவரோடு நெருக்கத்தில் இருக்கிறோம், வ.151; மணிக்கணக்காக, நாள்கணக்காக, முழங்காலில் நிற்க நாம் ஆயத்தமாக இருக்கிறோம்; ஆண்டவரிடம் வாக்குக் கொடுக்கிறோம்; பெரிய அளவில் பொருத்தனை செய்கிறோம். அதற்கு மாறாக, எப்போதுமே ஆண்டவரைச் சார்ந்து வாழ்ந்தால், நம் வாழ்க்கை எத்துணை நலமாக இருக்கும்!

வசனம் 119:145 & 146
இணையான அடுத்தடுத்த வசனங்கள்.
'கேட்டருளும்' 'காத்தருளும்' என்கிற சொற்களின் அளவே வேறுபாடு - மன்றாடிய செயல் ஒன்றே!

சேர்த்து வாசிக்க, வ.149.

வசனம் 119:147 & 148 + 150
"வைகறையில்"
"இரவுச் சாம நேரங்களில்" -
இரவு நேர விழிப்பு எதற்காக?
திருச்சட்டத்தைத் தியானிக்கவா?
நெருக்கடியால் உறங்க முடியவில்லையா?
எதுவாயினும், எப்படியாயினும், நம் ஒவ்வொருவரையும், தமக்கு நெருக்கமாக மாற்ற ஆண்டவர் விரும்புகிறார் என்பதே உண்மை.
இன்பங்களின் வழியில் ஆண்டவரை உணர்வோரை விட, இடுக்கண்களின் வழியில் அவரைப் பற்றிக் கொள்வோரே மிகுதி!

வசனம் 119:150 & 151
*மனதளவில் ஆண்டவருக்கு விலகித் தொலைவில் இருக்கும் சதியாளர்கள்; அதேவேளையில் ஆண்டவரின் வார்த்தையை உள்ளத்தில் இருத்தும் திருப்பாடகர்.*

*உடலளவில் நெருங்கி வரும் எதிரிகள் -*
*அதேவேளையில், ஆவிக்குரிய நிலையில், திருப்பாடகரின் அண்மையில் இருக்கும் ஆண்டவர்.*

மேலும் வாசிக்க வ.152.
*துன்புறும் வேளைகளில் மட்டுமல்லாமல், எல்லாக் காலங்களிலும் நமக்குத் துணையாக வாழும் இறைவாக்கு; நம்மோடு, நமக்காக, நம்முள் வாழும் இறைவார்த்தை. அதனைப் பற்றிக் கொண்டோமா என்பதை மட்டும் நினைத்துப் பார்ப்போம். தம் கட்டளைகளைக் கடைப்பிடிப்போரை விட்டு ஆண்டவர் விலகுவதுமில்லை, கைவிடுவதுமில்லை (வாசிக்க, இணைச் சட்டம்* 31:5-6 & *மத்தேயு* 28:20).

## *20. ரேஷ் / rash*

*(உதவிக்காக மன்றாடல்)*

153 *என் துன்ப நிலையைப் பார்த்து*
*என்னை விடுவித்தருளும்; ஏனெனில்,*
*உமது திருச்சட்டத்தை நான் மறக்கவில்லை.*
154 *எனக்காக வழக்காடி என்னை மீட்டருளும்;*
*உமது வாக்குக்கேற்றபடி என் உயிரைக் காத்தருளும்.*
155 *தீயோர்க்கு மீட்பு வெகு தொலைவில் உள்ளது;*
*ஏனெனில், அவர்கள் உம் விதிமுறைகளைத் தேடுவதில்லை.*
156 *ஆண்டவரே! உம் இரக்கம் மிகப்பெரியது;*
*உம் நீதித்தீர்ப்புகளின்படி எனக்கு வாழ்வளியும்.*
157 *என்னைக் கொடுமைப்படுத்துவோரும்*
*பகைப்போரும் பலர்; ஆனால்,*
*உம் ஒழுங்குமுறைகளை விட்டு நான் தவறுவதில்லை.*
158 *துரோகம் செய்வோரை அருவருப்புடன் பார்க்கின்றேன்;*
*ஏனெனில், அவர்கள் உம் வாக்கைக் கடைப்பிடிப்பதில்லை.*
159 *ஆண்டவரே! நான் உம் கட்டளைகள் மீது*
*எத்துணைப் பற்றுக்கொண்டுள்ளேன் என்பதைப் பாரும்;*
*உம் பேரன்பிற்கேற்ப எனக்கு வாழ்வளியும்.*
160 *உண்மையே உமது வார்த்தையின் உட்பொருள்;*
*நீதியான உம் நெறிமுறைகள் எல்லாம் என்றும் நிலைத்துள்ளன.*

திருப்பாடல் 119:153-160

**சிந்தனைக்கு**

வசனம் 119:153-160
*தீயோரை அருவருக்கும் அதேவேளையில் ஆண்டவர்தம் வார்த்தையைச் சார்ந்து, தனக்கு வாழ்வருள ஆண்டவரிடம் மன்றாடும் திருப்பாடகர்.*

திருப்பாடல் தன் நிறைவை நெருங்குவதால், மன்றாட்டின் சொற்கள் மீண்டும் மீண்டும் வருகின்றன.

வசனம் 119:153 & 154
தன் சார்பு நியாயத்தைத் தன் எதிரிகளிடம் வழக்காடி, தன் துன்பநிலையிலிருந்து தன்னை விடுவிக்க ஆண்டவரிடம் மன்றாடும் திருப்பாடகர்.

"எனக்காக வழக்காடி..." -
தம் அன்பர்களுக்காக வாதிடும் ஆண்டவர், 35:1, 43:1; நீதிமொழிகள் 22:23, 23:11; எசாயா 51:22; எரேமியா 51:36; மீக்கா 7:9.

வசனம் 119:155
"தீயோர்க்கு மீட்பு வெகு தொலையில் உள்ளது" -
தன் துன்பத்திலிருந்து விடுவிக்க மன்றாடும் திருப்பாடகர் தீயோரைக் குறித்து முறையிடுகிறார். தீயோரின் எதிர்ப்பு மனநிலையே அவர்களின் மீட்புக்குத் தடையாக இருக்கிறது, மத்தேயு 9:11-13; யோவான் 9:39-41. எப்படிப்பட்ட பாவியாயினும், மனம் திருந்தும் அந்த வேளையில் அவர் மீட்கப்பட வழி திறக்கும், எசாயா 55:7; யாக்கோபு 4:8-10.

நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும்: தீயோர்க்கு மட்டுமல்ல, எந்த மனிதரையும் மீட்பது ஆண்டவருடைய விருப்பமே, 3:8; யோனா 2:9.

வசனம் 119:156 & 159
வாழ்வருளும் ஆண்டவர், வ.50,165; மேலும் பார்க்க, 16:11, 31:15, 33:19, 42:8 & 68:6.

ஆண்டவரின் இரக்கத்தின்படியும், பேரன்பிற்கு ஏற்பவும் தனக்கு வாழ்வளிக்க மன்றாடும் திருப்பாடகர், வ.25, 37 & 40.

வசனம் 119:157
இணை, 3:1-2, 25:19 & 44:15-18. கடவுளின் ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிக்கும் வேளையிலும், தனக்கு எதிராகப் பெருகிவிட்ட தன் பகைவர்களைக் குறித்து முறையிடும் திருப்பாடகர்.

வசனம் 119:158
ஆண்டவரின் வாக்கைக் கடைப்பிடிக்காத தனது பகைவரை அருவருக்கும் திருப்பாடகர். பார்க்க, வ.136 மற்றும் குறிப்பு.

வசனம் 119:160
பார்க்க, 111:8. மேலும் வாசிக்க, யோவான் 17:14-17.

"உண்மையே உமது வார்த்தையின் உட்பொருள்" -
மெய்யானதும் நிலையானதுமான வார்த்தை (மத்தேயு 5:17-19). அந்த வார்த்தையே மனித வடிவில் நம்மிடையே நமக்குச் சான்றாக வாழ்ந்த ஆண்டவர், வாசிக்க, யோவான் 1:1-5&10-11. அவரே வழியும் உண்மையும் வாழ்வும் ஆனவர், யோவான் 14:6.

வார்த்தையை வாசிக்கும் போது, நாம் ஆண்டவரோடு ஐக்கியப்படுகிறோம்; வார்த்தையைக் கடைப்பிடிக்கும் போது, அவர்தம் வழியில் நடக்கிறோம்; அதுவே சரியானதும் உண்மையானதுமான ஒரே வழி!
🕎

## *21. ஷீன்/ schin*

*(திருச்சட்டத்தின் மீது பேரன்பு)*

161 *தலைவர்கள் என்னைக்*
*காரணமின்றிக் கொடுமைப்படுத்துகின்றனர்; ஆனால்,*
*உம் வாக்கை முன்னிட்டு என் உள்ளம் நடுங்குகின்றது.*
162 *திரண்ட கொள்ளைப் பொருளை*
*அடைந்தவன் மகிழ்வது போல*
*உமது வாக்குறுதியில் நான் மகிழ்ச்சியுறுகின்றேன்.*
163 *பொய்யை வெறுத்து ஒதுக்குகின்றேன்;*
*உமது திருச்சட்டத்தின்மீது பற்றுக்கொண்டுள்ளேன்.*
164 *நீதியான உம் நெறிமுறைகளைக் குறித்து*
*ஒரு நாளைக்கு ஏழுமுறை உம்மைப் புகழ்கின்றேன்.*
165 *உமது திருச்சட்டத்தை விரும்புவோர்க்கு*
*மிகுதியான நல்வாழ்வு உண்டு;*
*அவர்களை நிலைகுலையச் செய்வது எதுவுமில்லை.*
166 *ஆண்டவரே!*
*நீர் அளிக்கும் மீட்புக்காக நான் காத்திருக்கின்றேன்;*
*உம் கட்டளைகளைச் செயல்படுத்துகின்றேன்.*
167 *உம் ஒழுங்குமுறைகளை நான்*
*கடைப்பிடித்து வருகின்றேன்;*
*நான் அவற்றின்மீது பற்றுக்கொண்டுள்ளேன்.*
168 *உம் நியமங்களையும் ஒழுங்குமுறைகளையும்*
*நான் கடைப்பிடிக்கின்றேன்;*
*ஏனெனில், என் வழிகள் எல்லாம் உமக்குத் தெரிந்தவை.*

திருப்பாடல் 119:161-168

**சிந்தனைக்கு**

*வசனம்* 119:161-168
*கடைப்பிடிப்போரை நல்வாழ்வை நோக்கி வழிநடத்தும் இறைவார்த்தை.*

*வசனம்* 119:161
*பார்க்க, வ.*23 *மற்றும் குறிப்பு. சூழ்ச்சி செய்து கொடுமைப்படுத்தும் தலைவர்கள்* (OV, *பிரபுக்கள்* / KJV, princes); *திருப்பாடலை வாசிக்கும் போது, இவர்கள் அன்னியராக இருப்பதைவிட, சொந்த மண்ணைச் சேர்ந்தவர்களாக இருக்க அதிக வாய்ப்பு உள்ளது. அதனால்தான், அவர்கள் ஆண்டவரின் திருச்சட்டத்தைக் கடைப்பிடிக்கவில்லை என்று திருப்பாடகர் சீற்றமும் வேதனையும் கொள்கிறார், வ.*136 *மற்றும் குறிப்பு.*

*நடுங்கும் உள்ளம், வ.*120 *மற்றும் குறிப்பு.*

*வசனம்* 119:162
*பார்க்க, வ.*57&72 *மற்றும் குறிப்புகள்.*

*இறைவாக்கில் மகிழ்ச்சி, பார்க்க, வ.*16 & 35 *மற்றும் குறிப்புகள்.*

வசனம் 119:163
*வெறும் பொய்யை அல்ல, பொய்மையை வெறுத்து ஒதுக்கும் திருப்பாடகர். பயனற்ற தெய்வங்களையும் அவைகளின் பெயரால் புனையப்பட்ட பொய்களையும் திருப்பாடகர் தன்னிடமிருந்து முற்றிலும் அகற்றுகிறார். ஒளிக்கும் இருளுக்கும் தொடர்பு ஏது?*

வசனம் 119:164
"ஒரு நாளைக்கு ஏழு முறை" -
அதிகம் பயன்படுத்தப்படும் எண்ணாக ஏழு, பார்க்க, 12:6, 79:12; தொடக்க நூல் 4:15&24; நீதிமொழிகள் 24:16 மற்றும் பல வசனங்கள். ஓர் எண் ஏழு என்பதற்கு மேல், அதற்கு எந்தவொரு அடையாளத்தையும் கூடுதல் விளக்கத்தையும் நம்பாதிருத்தல் நன்று. கடவுளையும் அவர்தம் வார்த்தையையும் மட்டுமே நம்பி நடத்தலே அவருக்குப் பிரியமானது.

நெறிமுறைகள் குறித்து ஏழு முறை மட்டுமா திருப்பாடகர் ஆண்டவரைப் புகழ்ந்திருப்பார்? ஆண்டவரைப் புகழத்தக்க வேளைகளை நாம் அப்படி எண்ணிக்கைக்குள் அடக்க முடியுமா?

வசனம் 119:165
"உமது திருச்சட்டத்தை விரும்புவோர்க்கு மிகுதியான நல்வாழ்வு (shaw-lome) உண்டு" -
நாம் ஆண்டவரையும் அவர்தம் திருச்சட்டத்தையும் நாடுவதன் நோக்கம் (நீதிமொழிகள் 3:1-2). அதுவே வளமையிலும் வறுமையிலும், நிறைவிலும் குறைவிலும், உயர்விலும் தாழ்விலும், நாம் வலுவோடு வாழ நம்மைப் பயிற்றுவிக்கிறது (பிலிப்பியர் 4:12-13).

வசனம் 119:166
பார்க்க, வ.81&123 மற்றும் குறிப்புகள்.

வசனம் 119:167
"... பற்றுக் கொண்டுள்ளேன் ..." -
பார்க்க, வ.47 மற்றும் குறிப்பு.

வசனம் 119:167 & 168
" ... கடைப்பிடித்து வருகின்றேன் ... கடைப்பிடிக்கின்றேன்" -
ஆண்டவரிடம் திருப்பாடகர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி அறிக்கையிடும் ஒன்று, வ.8,17,22,33,34,44,55,56,57,60,67,69,88,100,101,106,115,129,134&146.

நமது துன்ப நேரங்களில், நமது மன்றாட்டுகளில், ஆண்டவரிடம் நாம் இவ்வாறு உறுதியாக அறிக்கையிட முடியுமா? கடைப்பிடிப்பதாக உறுதி அளிக்கலாம் - ஆனால் - கடைப்பிடித்ததாக அறிக்கையிட முடியுமா?

## *22. டௌ/ tau*

*(உதவிக்காக மன்றாடல்)*

169 ஆண்டவரே!
என் வேண்டுதல் உம் திருமுன் வருவதாக!
உமது வாக்குறுதிக்கேற்ப
எனக்கு நுண்ணறிவு புகட்டும்.
170 என் மன்றாட்டு உம் திருமுன் வருவதாக!

உம் வாக்குறுதியின்படி என்னை விடுவியும்.
171 உம் விதிமுறைகளை எனக்கு நீர் கற்பிப்பதால்,
என் இதழ்களினின்று திருப்புகழ் பொங்கிவரும்.
172 உம் வாக்கைக் குறித்து என் நா பாடுவதாக!
ஏனெனில், உம் கட்டளைகள் எல்லாம் நீதியானவை.
173 உம் கரம் எனக்குத் துணையாய் இருப்பதாக!
ஏனெனில், உம் நியமங்களை நான் தேர்ந்தெடுத்தேன்.
174 ஆண்டவரே!
உம்மிடமிருந்து வரும் மீட்பை நான் நாடுகின்றேன்;
உமது திருச்சட்டத்தில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.
175 உயிர்பிழைத்து நான் உம்மைப் புகழ்வேனாக!
உம் நீதி நெறிகள் எனக்குத் துணைபுரிவனவாக!
176 காணாமல்போன ஆட்டைப்போல்
நான் அலைந்து திரிகின்றேன்;
உம் ஊழியனைத் தேடிப்பாரும்; ஏனெனில்,
உம் கட்டளைகளை நான் மறக்கவில்லை.

திருப்பாடல் 119:169-176

**சிந்தனைக்கு**

வசனம் 119:169-176
*புகழ்ச்சியோடும், இறைவார்த்தையில் மகிழ்ச்சியோடும், ஆண்டவரிடமிருந்து மீட்பை எதிர்நோக்கும் திருப்பாடகர்.*

வசனம் 119:169-170
*இணையான இரண்டு வசனங்கள்; அவற்றின் வழியே இரண்டு வேண்டுதல்கள்: "...நுண்ணறிவு புகட்டும் ... விடுவியும்." நுண்ணறிவால் தெளிவு பெறும் உள்ளம், துன்பங்களிலிருந்து அல்லது துன்பங்கள் தரும் வேதனையிலிருந்து விடுதலை பெறுமன்றோ!*

வசனம் 119:171-172
*மீட்பை எதிர்நோக்கும் உள்ளம், அதனைப் பெறுவோம் என்ற நம்பிக்கையில் பாடி மகிழ்கிறது; நீதியுள்ள இறைவார்த்தையில் அவராலேயே பயிற்றுவிக்கப்பட்டு, இறைவழியில் நடைபயிலும் வேளையில், கடவுளைத் திருப்பாடகர் போற்றிப் புகழுகிறார்.*

வசனம் 119:173-174
*ஆண்டவரின் நியமங்களைத் தெரிந்து கொண்டு, அதன் வழியே மகிழ்ச்சியோடு நடக்கும் திருப்பாடகர், அவர் அருளும் மீட்பையே தன் இலக்காக நாடுகிறார்.*

வசனம் 119:174-176
*நீண்ட திருப்பாடலின் முடிவுரையாக எழுதப்பட்ட வசனங்கள்.*

வசனம் 119:175
*எதிரிகளின் சூழ்ச்சிகளுக்குத் தப்பி, ஆண்டவரின் துணையோடு வெற்றியை எதிர்நோக்கும் திருப்பாடகர்.*

வசனம் 119:176
*கடவுளின் கட்டளைகளின் வழியே நடந்தாலும், எதிரிகள் தரும் துன்பத்தில் விடுபட வழி அறியாமல், அலையும் நெஞ்சம்.*

மேலும் பார்க்க, எசாயா 53:6; எரேமியா 50:6; எசேக்கியேல் 34:6&11; லூக்கா 15:4-7; யோவான் 10:11-18; 1 பேதுரு 2:25.

காணாமல் போன ஆட்டைத் தேடிக் கண்டுபிடித்து, தம்மோடு சேர்த்துக் கொள்வது, மேய்ப்பரின் கடமை அல்லவா! அதுவே நமது நம்பிக்கை!

ஆமென்!
அல்லேலூயா!

## சீயோன் மலைத் திருப்பயணத் திருப்பாடல்கள்

(திருப்பாடல்கள் 120 முதல் 134 வரை)

### பொதுவான முன்னுரை

திருப்பாடல் 120 தொடங்கி வரும் 15 திருப்பாடல்கள், சீயோன் மலைத் திருப்பயணத் திருப்பாடல்கள் என்ற தலைப்பில் அமைந்த திருப்பாடல்கள். பவர் மொழிபெயர்ப்பில் இவை ஆரோகண சங்கீதங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஆங்கிலத்தில், Psalms / Songs of Ascents அல்லது Songs of Degrees அல்லது Songs of Steps என்று அழைக்கப்படுகின்றன.

* மலைப் பயணத் திருப்பாடல்களா? அப்படியானால், வேறு தருணங்களில் பாடப்படக் கூடாதா?
* பதினைந்து பாடல்கள் மட்டும்தான் திருமலைப் பயணத் திருப்பாடல்களா?
* ஏறும்போது மட்டுமே பாடத்தக்க பாடல்களா? அப்படியானால் இறங்கும்போது பாடக் கூடாதா?
* திருக்கோவிலின் பதினைந்து படிகளில் ஏறும்போது பாடப்பட்ட பாடல்களா? அப்படியானால், திருக்கோவிலில் பதினைந்து படிகள் மட்டுமே இருந்தனவா?
திருக்கோவில் என்றால் முதலாம் திருக்கோவிலா அல்லது இரண்டாம் திருக்கோவிலா?
* பாடல் பாடும் முறையில் ஆரோகண முறையில் பாடப்பட்ட பாடல்களா? அப்படியானால் இதர திருப்பாடல்களில், ஆரோகண அமைப்பில் திருப்பாடல் எதுவும் பாடப்படவில்லையா?
* உடன்படிக்கைப் பேழையை தாவீதின் நகருக்கு எடுத்துச் சென்றபோது (1 குறிப்பேடு 13:6-8 & 15:15-16) பாடப்பட்ட பாடல்களா? அப்படியானால், பதினைந்து பாடல்களும் தாவீதின் காலத்தில் பாடப்பட்டன போல அல்லவே!
* பாபிலோனியச் சிறையிருப்பிலிருந்து மீண்டு எருசலேம் வந்தபோது பாடப்பட்ட பாடல்களா? அப்படியானால், எருசலேம் நகருக்கு முன்பாக, வந்த வழியில், வேறு எந்த மலையும் அந்த மலை நாட்டில் இல்லையா?

கேள்விகளும், அவற்றிற்கான பதில்களில் முரண்களும் அதிகமாக உள்ளன; ஆனால், இந்தக் குவியத்தில் உள்ள திருப்பாடல்கள், எருசலேம் நகரின் எழிலை, திருக்கோவிலின் மாட்சியை, திருநாள்களின் களிப்பை, கொண்டாட்டத்தின் உற்சாகத்தை, ஆண்டவர் அருளும் மீட்பை, வெற்றியை, பராமரிப்பை, பாதுகாப்பை, ஆண்டவரில் நம்பிக்கையை, எதிர்நோக்கை, நன்றியை, மகிழ்ச்சியை, ஆண்டவரிடம் தங்கள் வேண்டுதல்களை, முறையீடுகளை - இவற்றையெல்லாம் வெளிப்படுத்துவனவாக உள்ளன.

திருமலைப் பயணத் திருப்பாடல் என்பதை, எளிமையாகத் திருநாள் தோறும் கடவுளின் இல்லம் நோக்கி நாடிவரும் ஒவ்வொருவரின் உள்ளமும் பாடும் பாடல் என முடிவு செய்யலாம்.

இஸ்ரயேலின் மரபின் படி, ஆண்டுக்கு மூன்று முறை இஸ்ரயேலர் எருசலேம் கோவிலுக்கு வந்து பலிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதை நாம் அறிவோம் (விடுதலைப் பயணம் 23:14-17; இணைச் சட்டம் 16:16; செக்கரியா 14:16). அத்தகைய வழிப் பயணத்தில் இத்திருப்பாடல்கள் அனைவராலும் பாடப்பட்டன. கிறிஸ்து இயேசுவும் ஆண்டுக்கு மூன்று முறை எருசலேம் ஆலயத்திற்கு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்; அவரும் கூட இத்திருப்பாடல்களைத் தமது பயணங்களில் பாடியிருப்பார்.

சிறந்த பாடல் என்பது ஒருவரின் மண்ணுலக வாழ்க்கைப் பயணத்தில், துன்புற்ற அல்லது தாழ்வுற்ற நிலையில், அவருடைய ஆவியைத் தட்டி எழுப்பி, உள்ளத்தின் சிறகுகளுக்கு வலுவூட்டி, உயர்ந்த இலக்கை எட்ட ஊக்கம் தருவதாக இருக்க வேண்டும். திருப்பாடல்களை நாம் வாசிக்கும் வேளைகளில், நாம் புத்துயிர் பெறுகிறோமே!

நான்கு திருப்பாடல்கள் தாவீது அரசருக்கு உரியன (122, 124, 131 & 133); திருப்பாடல் 127, சாலமோன் அரசருக்கு உரியது. இதர திருப்பாடல்களை எழுதியவர்களின் பெயர்கள் தலைப்புகளில் கொடுக்கப்படவில்லை.

திருப்பாடல்கள் எப்போது, எதற்காகப் பாடப்பட்டன போன்ற செய்திகள் எதுவும் தலைப்புகளில் இல்லை.

திருப்பாடல் 127, 15 திருப்பாடல்களின் நடுவில் அமைந்துள்ளது; அதற்கு முந்தைய 7 திருப்பாடல்களில் இரண்டு தாவீதுக்கு உரியன; அதேபோல, பிந்தைய 7 திருப்பாடல்களில் இரண்டு தாவீதுக்கு உரியன.

இந்தப் 15 திருப்பாடல்களோடு, பெரும்-ஹல்லேல் திருப்பாடல்கள் (Great Hallel) என்று அழைக்கப்படும், 135 மற்றும் 136 ஆகிய திருப்பாடல்களையும், திருப்பாடல் 137-யும் சேர்த்து வாசிக்கக் கிடைப்பது, திருப்பாடல் வாசிப்பில் ஒரு முழுமையான ஆவிக்குரிய அனுபவம் ஆகும்.

இதர செய்திகளை, ஒவ்வொரு திருப்பாடல் வாசிப்பில் பார்ப்போம்.

இறைவார்த்தை சார்ந்து எழுதப்பட்ட நமது பாமாலை / கீர்த்தனை / புத்தெழுச்சிப் பாடல்கள், நமது பக்தி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கின்றன. அவற்றை நாம் ஆலய அல்லது குடும்ப ஆராதனைகளில் மட்டுமா பாடுகிறோம்? தனிமையில் அல்லது சாலையில் நடக்கையில் அல்லது பயணங்களில் அல்லது பணிபுரியும் இடங்களில் - துயரில், நம்பிக்கையில், மகிழ்ச்சியில், நன்றி உணர்வில் - இவ்வாறு எங்கும், எப்போதும், சாவு வீடு உட்பட எந்தச் சூழ்நிலையிலும் நாம் பாடுவனவாக, கடவுளோடு நம்மை இணைக்கும் சங்கிலியின் கண்ணிகளாக நமது பாடல்கள் விளங்குகின்றனவே!

பாடல் வேளை இன்றி, நமது ஆராதனைகள் முழுமை பெறாது; பாடல்கள் இன்றி, நமது வாழ்க்கைப் பயணமும் நிறைவடையாது! வேறெந்த சமயம் சார்ந்தோரை விட, கிறிஸ்தவ வாழ்வில் பாடல்கள் சிறப்பிடம் பெறுகின்றன. அத்தகைய மரபு, திருப்பாடல்களில் தொடங்குகிறது. நம்மைக் கடவுளோடு பிணைக்கும் ஆற்றல் கொண்டவையாகத் திருப்பாடல்கள் உள்ளன. அத்தகைய பிணைப்பைத் திருப்பயணத் திருப்பாடல்கள் மேலும் உறுதி செய்கின்றன.

## 19 திருப்பாடல் 120

*(உதவிக்காக மன்றாடல்)*

*(சீயோன் மலைத் திருப்பயணப் பாடல்)*
1 நான் இன்னலுற்ற வேளையில்
ஆண்டவரை நோக்கி மன்றாடினேன்;
அவரும் எனக்குச் செவி சாய்த்தார்.
2 ஆண்டவரே! பொய் பேசும் வாயினின்று
என்னை விடுவித்தருளும்;
வஞ்சக நாவினின்று என்னைக் காத்தருளும்.
3 வஞ்சகம் பேசும் நாவே!
உனக்கு என்ன கிடைக்கும்?
அதற்கு மேலும்
உனக்கு என்னதான் கிடைக்கும்?
4 வீரனின் கூரிய அம்புகளும்
தணல் வீசும் கரிகளும்தான் கிடைக்கும்!
5 ஐயோ! நான் மேசேக்கில்
அன்னியனாய் வாழ்ந்தபோதும்,
கேதாரில் கூடாரங்களில்
தங்க நேர்ந்தபோதும்,
6 சமாதானத்தைக் குலைப்பவர்களோடு,
நான் நெடுநாள் வாழ வேண்டியதாயிற்று.
7 நான் சமாதானத்தை நாடுவேன்;
அதைப் பற்றியே பேசுவேன்;
ஆனால், அவர்களுக்கோ
போர் ஒன்றில்தான் நாட்டம்!

திருப்பாடல் 120:1-7

### சிந்தனைக்கு

திருப்பயணப் பாடல்களின் முதல் பாடல், தொலை நாட்டில் எதிர்ப்புகளை எதிர்கொள்ளும் நேரிய ஒருவரின் புலம்பல் திருப்பாடல்; வேற்று நாட்டில், தீயோரின் வஞ்சகமான பொய்களையும், அவற்றால் பாதிக்கப்பட்ட இஸ்ரயேலரில் ஒருவர் ஆண்டவரை நோக்கி முறையிடுவதாகவும் இத்திருப்பாடல் அமைகிறது.

பாடலை இயற்றியவர் யார் என்ற குறிப்பு ஏதுமில்லை. அன்னிய மண்ணில் வாழ்ந்த அல்லது நாடு திரும்பி திருக்கோவிலை அல்லது மதில் சுவர்களை எடுத்துக் கட்டும் பணியில் இருந்த ஒருவர் இந்தத் திருப்பாடலை எழுதியிருக்கலாம். வாசிப்பு உணர்வின் அடிப்படையில் இத்திருப்பாடல், திருப்பாடல் 84க்கு இணையானது.

அமைப்பு:
வ.1-2, செவி மடுக்கும் ஆண்டவருக்கு நன்றியும், விடுவிக்க மன்றாட்டும்
வ.3-4, வஞ்சகமாகப் பொய் புனையும் தீயோர்
வ.5-7, முற்றிலும் எதிர்ப்புகளுக்கு நடுவே அமைதியை நாடும் ஒருவரின் முறையீடு

வசனம் 120:1
இணை, 118:5.

வசனம் 120:2
"...*பொய் பேசும் ... வஞ்சக நாவு ...*" -
*பார்க்க*, 5:9, 10:7, 12:2-4, 55:21, 57:4, 59:7, 109:2-3. *மேலும் பார்க்க, யாக்கோபு* 3:5-12.

*ஒருவருக்கு ஒருவர் எதிரிகளாக இருப்போர் மட்டுமா பொய்த் தாக்குதல் நடத்துகின்றனர்? நாமும் ஒருவரைத் தாக்கத் தவறாமல் பயன்படுத்தும் ஆயுதம், நாக்கு. கனியிருப்பக் காய் கவர்ந்தற்று என்று படித்திருந்தாலும், நமது நாவு உரைக்கும் சொற்கள் இனியவையாக இருக்கின்றனவா?*
*நினைவில் கொள்க, மத்தேயு* 5:22.

வசனம் 120:3-4
*எதிரிகளுக்கு எதிராக ஆண்டவர் செயல்படுவார் என்பதில் உறுதி; பார்க்க*, 3:7-8, 6:7-10.

வசனம் 120:5-7
மேசேக்கு, நோவாவுக்கு எப்பேத்தின் வழிப் பேரன், தொடக்க நூல் 10:2; 1 குறிப்பேடு 1:5. *அவன் கட்டிக் கொண்ட நகரும் அதனைச் சுற்றியுள்ள நிலப்பரப்பும் அவன் பெயரைப் பெற்றது, எசேக்கியேல்* 27:13; *அன்றைய அசீரிய நிலப்பகுதி.*

கேதார், இஸ்மவேலின் இரண்டாம் மகன், தொடக்க நூல் 25:13; 1 குறிப்பேடு 1:29. *அவன் பெயரில் உருவாக்கப்பட்ட நகரும் அதனைச் சுற்றியுள்ள நிலப்பரப்பும், இனிமைமிகு பாடல்* 1:5; *எசாயா* 21:16-17. *அரேபிய நிலப்பரப்பில் அமைந்த நகர். வெவ்வேறு திசைகளில் அமைந்துள்ள இரண்டு நகர்களைக் குறிப்பிட்டு, இஸ்ரயேலர் எப்படிப்பட்ட நெருக்கடிக்கு ஆளாகினர் என்பதைத் திருப்பாடகர் உணர்த்துகிறார்.*

"...*சமாதானத்தை ... சமாதானத்தை*..." -
*அமைதியை நாடும் திருப்பாடகரை அழிக்கத் தேடும் எதிரிகள்.*

*சாலோம் என்பது எருசலேமையும் நினைவூட்டும் சொல்; எருசலேம் மீது நாட்டமாக இருந்த திருப்பாடகர் என்றும் உவமையாகக் கொள்ளலாம்.*

போட்டி என்று வரின், ஒருவர் மட்டுமே வெற்றி பெறுவார்; *அமைதியை ஏற்படுத்தும் போதோ, இருவரும் வெற்றி பெறுகிறார்கள்; அமைதியை ஏற்படுத்துவோர் தானே கடவுளின் மக்கள்!* (மத்தேயு 5:9)

✝

## 19 திருப்பாடல் 121

(நம்மைப் பாதுகாக்கும் ஆண்டவர்)

*சீயோன் மலைத் திருப்பயணப் பாடல்*
1 மலைகளை நோக்கி
என் கண்களை உயர்த்துகின்றேன்!
எங்கிருந்து எனக்கு உதவி வரும்?
2 விண்ணையும் மண்ணையும் உண்டாக்கிய
ஆண்டவரிடமிருந்தே எனக்கு உதவி வரும்.
3 அவர் உம் கால் இடறாதபடி பார்த்துக் கொள்வார்;
உம்மைக் காக்கும் அவர் உறங்கிவிடமாட்டார்.
4 இதோ! இஸ்ரயேலைக் காக்கின்றவர்
கண்ணயர்வதுமில்லை; உறங்குவதும் இல்லை.
5 ஆண்டவரே உம்மைக் காக்கின்றார்;
அவர் உம் வலப்பக்கத்தில் உள்ளார்;
அவரே உமக்கு நிழல் ஆவார்!
6 பகலில் கதிரவன் உம்மைத் தாக்காது;
இரவில் நிலாவும் உம்மைத் தீண்டாது.
7 ஆண்டவர் உம்மை எல்லாத் தீமையினின்றும் பாதுகாப்பார்;
அவர் உம் உயிரைக் காத்திடுவார்.
8 நீர் போகும்போதும் உள்ளே வரும்போதும்
இப்போதும் எப்போதும் ஆண்டவர் உம்மைக் காத்தருள்வார்.

திருப்பாடல் 121:1-8

**சிந்தனைக்கு**

*திருமலைப் பயணத்தின் இரண்டாம் பாடல். முந்தைய திருப்பாடல் புலம்பலும் முறையீடும் என்றால், இந்தத் திருப்பாடல் ஆறுதலும் ஆற்றலும் தருவது. மீட்பின் பயணத்தில் ஒரு பயணியான திருப்பாடகர், சாலோமை நாடினார், எருசலேமை வாஞ்சித்தார் (120:6-7); அந்த வாஞ்சை, இடர்களில் வாடும் அவரை விடுவித்து, அவருக்கு வாழ்வை அருளுபவர் மலைகளின் ஆண்டவரே என்ற எதிர்நோக்காக, நம்பிக்கையாக வடிவெடுக்கிறது. அத்தகைய ஆண்டவரின் அருள் தன்மைகளை நன்றியோடு திருப்பாடகர் நினைவுகூர்ந்து மகிழ்கிறார்.*

*நமது பாடல் மரபில், 23 மற்றும் 91ம் திருப்பாடல்களுக்கு அடுத்த நிலையில் மிகவும் கொண்டாடப்படும் திருப்பாடல்.*

*எழுதியவர் யார் என்ற குறிப்பு ஏதுமில்லை. எழுதப்பட்ட காலம், சூழல் மற்றும் நோக்கம் குறித்த நேரடியான குறிப்பு ஏதுமில்லை. ஆனால் எக்காலத்திலும், எந்தச் சூழ்நிலையிலும், புத்துயிர் தருவதாக, தூய ஆவியார் அருளிய, கவிநயமிக்க பாடலாக இத்திருப்பாடல் விளங்குகிறது.*

*அமைப்பு:*
*வ.1-2, படைப்பாளரான கடவுள்*
*வ.3-8, பாதுகாப்பாளராக ஆண்டவர்*

வசனம் 121:1

*"...மலைகளை நோக்கி..." -*

*கடவுளின் இல்லம் கட்டப்பட்டிருக்கும் எருசலேம், யூதேயா மலைத்தொடரில் (ஏழு) மலைகளின் மேல் அமைக்கப்பட்ட நகர், 68:16, 87:1 & 125:2. தலைநகராக எருசலேமைக் கட்டியவர், தாவீது (2 சாமுவேல் 2:1-3 & 5:7-9). அரண்மனைகளையும் திருக்கோவிலையும் பின்னர் சாலமோன் கட்டி முடித்தார். கடவுளின் இல்லம் அங்கு இருந்ததால், இஸ்ரயேலர் அனைவரும் எருசலேமின் திசை நோக்கித் தொழும் வழக்கம் ஏற்பட்டது, தானியேல் 6:10; மேலும் வாசிக்க, 2 அரசர்கள் 8:30,35,38,44&48. அன்னிய மண்ணில் சிறைப்பட்ட இஸ்ரயேலரின் ஏக்கமாக எருசலேமின் மலைகள் மாறின.*

*"...என் கண்களை உயர்த்துகிறேன்" -*

*இன்றைக்கு ஆண்டவரைத் தேடுவோர் கண்களைத் தாழ்த்த வேண்டும் - பைபிளை வாசித்து அவரைத் தேடக் கண்களைத் தாழ்த்த வேண்டும்! வாசித்த பிறகு, நமது உள்ளங்களை ஆராய்ந்து பார்க்க, நமது கண்களை மூடவேண்டும்! வானங்களில் வாசம் செய்யும் ஆண்டவரை நோக்கிப் பார்க்க, கண்களை உயர்த்த வேண்டும்!*

*"எங்கிருந்து எனக்கு உதவி வரும்?" -*

*பார்க்க, 46:1 மற்றும் குறிப்பு. நமது மண்ணுலக வாழ்க்கைப் பயணத்தில் நமது பாதுகாப்பு ஆண்டவரிடமிருந்தே வருகிறது.*

வசனம் 121:2

*எல்லையற்ற ஆற்றல் மிக்க கடவுளே, நமது துணையாளர். ஓர் இடத்தில் மட்டுமே ஆளுகை செய்யும், திருத்தலத் தெய்வம் அல்ல ஆண்டவர்; அவரே படைப்பு முழுமைக்குமான கடவுள், 33:6, 89:11-13, 96:4-5, 104:2-32, 124:8, 134:3 & 136:4-9; இணைச் சட்டம் 10:14; 1 அரசர்கள் 8:27; நெகேமியா 9:6.*

வசனம் 121:3-4

*ஒப்பிடுக, எசாயா 27:3. நம்மைக் கண்ணின் மணி போலப் பாதுகாக்கும் ஆண்டவர்; அதற்காகவே அவர் கண்ணயர்வதில்லை.*

வசனம் 121:3

*கரடுமுரடான மலைப் பாதையில் பயணிக்கும் வேளைகளில், கால் இடறுதல் நடக்கக் கூடிய ஒன்று; அத்தகைய இடறல் எதுவும் இல்லாதபடி, தம் அன்பரை ஆண்டவர் காக்கிறார்.*

வசனம் 121:5

*போர்க்கருவிகள் தாங்கி நிற்கும் வீரன், இடது கரத்தில் கேடயம் தாங்கி நிற்பான்; ஆகவே, அந்தக் கேடயம் அவனுடைய வலது பக்கத்தைப் பாதுகாக்க உதவாது! அதனால், அவனைப் பாதுகாக்க ஆண்டவரே அவனுடைய வலப்பக்கத்தில் இருக்கிறார். அவ்வாறு நிற்கும் ஆண்டவர், அவனுடைய நிழல் போல, அவனை விட்டு விலகுவதே இல்லை, 91:1; எசாயா 49:2, 51:16.*

வசனம் 121:6

*பயணத்தில் இருப்போருக்கு, கடும் வெயிலும், குளிர்ந்த நிலவொளியும் உடல் பாதிப்பை ஏற்படுத்துவன. மலைக்காடுகளில் பயணிக்கயில், இரவில் உணவைத் தேடி வரக் கூடிய விலங்குகளாலும் ஆபத்து நேரிடும். அவை எல்லாவற்றிலிருந்தும் விலக்கிக் காப்பவராக ஆண்டவர் திகழ்கிறார்.*

வசனம் 121:7
என்ன என்ன தீமைகள் என்கிற பட்டியல் தேவையற்றது - ஆண்டவர் தம் அன்பரை எல்லாத் தீமைகளிலிருந்தும் காக்க வல்லவராக இருக்கிறார்.

வசனம் 121:8
இடம் மற்றும் காலம் - இவற்றில் பகுப்பு ஏதுமின்றி, எவ்விடத்திலும் எக்காலத்திலும் நம்மைக் காக்கும் ஆற்றல் கொண்டவர் ஆண்டவர்.

போகும் போதும் வரும் போதும் ஆசி அருளும் ஆண்டவர், இணைச் சட்டம் 28:6. இணைத்து வாசிக்க, 91:11.

இத்தகைய கடவுளே என்றென்றும் நம் கடவுள்; அவரே நம்மை இறுதி வரை வழி நடத்துவார், 48:14.

## 19 திருப்பாடல் 122

(எருசலேமே, நீ வாழி!)

*சீயோன் மலைத் திருப்பயணப் பாடல்; தாவீதுக்கு உரியது*
1 "ஆண்டவரது இல்லத்திற்குப் போவோம்",
என்ற அழைப்பை நான் கேட்டபோது அகமகிழ்ந்தேன்.
2 எருசலேமே! இதோ, நாங்கள் அடியெடுத்து வைத்து
உன் வாயில்களில் நிற்கின்றோம்.
3 எருசலேம் செம்மையாக
ஒன்றிணைத்துக் கட்டப்பட்ட நகர் ஆகும்.
4 ஆண்டவரின் திருக்குலத்தார்
அங்கே செல்கின்றனர்; இஸ்ரயேல் மக்களுக்கு
இட்ட கட்டளைக்களுக்கிணங்க
ஆண்டவரது பெயருக்கு
அவர்கள் நன்றி செலுத்தச் செல்வார்கள்.
5 அங்கே நீதி வழங்க அரியணைகள் இருக்கின்றன.
அவை தாவீது வீட்டாரின் அரியணைகள்.
6 எருசலேமில் சமாதானம் நிலைத்திருக்கும்படி
வேண்டிக்கொள்ளுங்கள்;
"உன்னை விரும்புவோர் வளமுடன் வாழ்வார்களாக!
7 "உன் கோட்டைகளுக்குள் அமைதி நிலவுவதாக!
உம் மாளிகைகளில் நல்வாழ்வு இருப்பதாக!
8 "உன்னுள் சமாதானம் நிலவுவதாக!"
என்று நான் என் சகோதரர் சார்பிலும்
என் நண்பர் சார்பிலும்
உன்னை வாழ்த்துகின்றேன்.
9 நம் கடவுளாகிய ஆண்டவரின் இல்லம்
இங்கே இருப்பதால்,
உன்னில் நலம் பெருகும்படி நான் மன்றாடுவேன்.

திருப்பாடல் 122:1-9

**சிந்தனைக்கு**

*சீயோன் மலைத் திருப்பயணத்தில் மூன்றாம் திருப்பாடல்; அவற்றில் தாவீதுக்குரிய முதலாம் திருப்பாடல். எருசலேமின் தொன்மையை இந்தத் திருப்பாடல் பாடுகிறது என்றால், அதன் வருங்காலத்தை எசாயா முன்னுரைக்கிறார், எசாயா* 2:2-4.

*தலைப்பில் தாவீதுக்கு உரிய திருப்பாடல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது; ஆனாலும் அரமேய மொழிபெயர்ப்பில், தாவீதின் பெயர் குறிப்பிடப்படவில்லை; மேலும் வ.*1*ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டவரின் இல்லம் சாலமோன் காலத்தில் தான் கட்டப்பட்டது என்பதால், தாவீதுக்கு உரியது என்பதை மறுப்போர் உள்ளனர். தாவீதுக்கு உரிய வேறு சில திருப்பாடல்களிலும் கடவுளின் இல்லம் என்ற சொல் பயன்பாடு உள்ளது (பார்க்க,* 5:7, 26:8 & 69:9). *அதன் அடிப்படையில், இது தாவீதுக்கு உரிய திருப்பாடல் என்றே கருதலாம். உடன்படிக்கைப் பேழை எருசலேமில் திருநிலைப்படுத்தப்பட்ட பின்னர் தாவீது பாடிய திருப்பாடலாக இருக்கலாம்.*

*அமைப்பு:*
*வ.*1-2, *மலைத் திருப்பயணம், தொடக்க முதல், நிறைவு வரை*
*வ.*3-5, *எருசலேமின் எழிலும் சிறப்பும்*
*வ.*6-9, *எருசலேமின் நலவாழ்வை நாடுதலும் வேண்டுதலும்*

*வசனம்* 122:1
122:1>5:7>28:2>138:2 - *இந்த வசன அடுக்கில் சிந்தித்தால், ஒரு மணிநேரம் தியானிக்க, சிறப்பான செய்தி கிடைக்கும்!*

*ஆண்டவரின் மாட்சி இலங்கும், அஞ்சுதற்குரிய உடன்படிக்கைப் பேழை, தாவீதின் நகரில் திருநிலைப்படுத்துவதில், இறையச்சம் நிறைந்த தாவீது ஆர்வத்தோடு ஈடுபட்டார். அதுமட்டுமல்லாமல், ஆலயத்திற்குப் போவோம் என்ற அழைப்பே அவருக்கு மனமகிழ்ச்சி!*

*பாவத்தோடு ஆலயம் வருபவருக்குப் பதைபதைப்பு - ஆனால் - மனம் திருந்தியவருக்கோ மனமகிழ்ச்சி!*
*
*நவீன மின்னணுக் கருவிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நமது உள்ளங்களை நெறிப்படுத்த ஆலய வாஞ்சையும் ஈடுபாடும் இன்றைக்கு மிக மிகத் தேவை. வாராந்திர அல்லது மாதாந்திரக் கடமையாக அல்லாமல், ஆர்வத்தோடு ஆலய ஆராதனையில் பங்கேற்று, இறைவாழ்க்கையில் அடுத்த தலைமுறையினரைப் பயிற்றுவிப்போம்.*

*வசனம்* 122:2
*எருசலேம் நகர வாசலில் நிற்போரை நாம் பார்க்கும் அதேவேளையில், அங்கு வரமுடியாதோரின் நிலைமையையும் எண்ணிப் பார்ப்போம்,* 42:1-4 & 137:1-4. *அதுபோலவே, இந்த நாள்களில், ஆராதனை செய்ய ஆலயத்திற்கு வர இயலாதோர்க்காக, வரும் ஓய்வு நாள் ஆராதனையில் அவர்கள் கலந்து கொள்ள நாம் ஜெபிக்க வேண்டும்.*

*வசனம்* 122:3
*பார்க்க,* 48:1-13.
*ஏழு மலைகளின் நகர் என்று உலகில் சற்றேறக் குறைய* 100 *நகர்கள் இருக்கின்றன. ஒரு மலை நகரை அமைப்பது எளிதான பணி அல்ல; முகடுகளும் சரிவுகளும் பள்ளங்களும் கொண்ட*

கரடுமுரடான நில அமைப்பில் தனது தலைநகரை சுமார் ஒரு சதுர கிலோ மீட்டரில் நிறுவிய தாவீது, செம்மையாக ஒருங்கிணைத்துக் கட்டப்பட்ட நகர் எருசலேம் என்று சொல்ல மிகவும் தகுதியானவர்.

கட்டமைப்பில் செம்மையும் ஒன்றிணைப்பும் நகரோடும், நகரில் ஆண்டவரின் இல்லத்தோடும் இருத்தல் மட்டும் போதாது; ஆண்டவரைத் தொழுது கொள்ள ஆலயத்திற்கு வரும் நம்மிலும் இருக்க வேண்டும் (யோவான் 17:21-23).

வசனம் 122:4
"... இஸ்ரயேல் மக்களுக்கு இட்ட கட்டளை..." -
யாக்கோபின் வழிமரபினர் ஆண்டவரின் ஆலயம் சென்று நன்றிப் பலிகளை ஏறெடுப்பது கடவுள் ஏற்படுத்திய நியமம்; பார்க்க, 81:3-5; இணைச் சட்டம் 16:1-17.

வசனம் 122:5
எருசலேம், இஸ்ரயேலருக்கு ஆவிக்குரிய தலைநகர் மட்டுமல்ல; இஸ்ரயேலின் நீதி விளங்கும் நகரும் அதுவே. அந்த நீதி ஆண்டவரின் திருச்சட்டத்தின் வழியில் வழங்கப்படும் நீதி! நீதி வழங்கல் தாவீதின் குடும்பத்திற்கு ஆண்டவர் ஏற்படுத்திய நியமம், 89:3-4&19-37, 2 சாமுவேல் 7:8-16.

வசனம் 122:6-9
நலமும் வளமும் நிறைந்த எருசலேமின் வாழ்வுக்கு மன்றாட்டு! உண்மையுள்ள வழிபாட்டின் விளைவே சமாதானம்! அது கடவுளுக்கும் மனிதருக்கும், மனிதருக்கும் மனிதருக்கும் இடையே உள்ள அன்பால் விளைவது! தம் கண் முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர், கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது (1 யோவான் 4:20ஆ).

வசனம் 122:6
நாம் மன்றாட வேண்டிய எருசலேமின் சமாதான நலவாழ்வு, திருப்பாடல் 133.

வசனம் 122:7-8
நினைவுகூருக, 48:13.

நமது இல்லங்களை அலங்கரிக்கும் ஒர் இறைமொழி, வ.7-8; இது யாருக்காக, எதற்காக உரைக்கப்பட்டது என்பதை நாம் உணர்ந்திருக்கிறோமா?

இந்த அருள்மொழியின் இறுதிப் பகுதியில் தாவீது அறிக்கையிடுவது போல, எருசலேமை நம் சார்பாகவும் நம் இல்லத்தார் சார்பாகவும் நமது மன்றாட்டுகளில் வாழ்த்துகிறோமா?

வசனம் 122:9
"நம் கடவுளாகிய ஆண்டவரின் இல்லம்..." -
தாவீது சந்திப்புக் கூடாரத்தை ஆண்டவரின் இல்லம் என்று குறிப்பிடுவதைப் பார்க்க, 5:7, 26:8, 27:4, 52:8, 55:14 & 69:9.
இதற்கு முன்பு மோசேயின் நாட்களில் சந்திப்புக் கூடாரத்தில் ஆண்டவரின் மாட்சி அங்கு இருந்தது போல (விடுதலைப் பயணம் 40:34-35), இதற்குப் பிறகு சாலமோன் எழுப்பிய ஆலயத்தில் ஆண்டவரின் மாட்சி இருந்ததைப் போல (1 அரசர்கள் 8:10-11; 2 குறிப்பேடு 5:13-14), இறைமாட்சி விளங்கும் இடமாக, சந்திப்புக் கூடாரம். அதனாலேயே, எருசலேம் பெருமைமிகு நகராகிறது; எனவே தாவீது எருசலேமின் நலனுக்காக மன்றாடுகிறார்.
🕎

எருசலேம் / yeroo-shaw-lahim என்பதற்கு அமைதியை அறிவுறுத்துதல் (சமாதானத்தைக் கற்பித்தல்) என்று பொருள். அந்த எருசலேமில் இன்று சமாதானம் இருக்கிறதா? சமாதானத்தின் அடிப்படையான நீதி விளங்குகிறதா? கிறிஸ்து இயேசு எருசலேமைக் குறித்துப் புலம்பியதை நினைவில் கொள்வோம் (மத்தேயு 23:37-39). ஆண்டவரின் பெயரால் வருபவர் ஆசி பெற்றவர் என்று எருசலேமின் மக்கள் கூறும் நாள் வர மன்றாடுவோம்; அந்த நாளே ஆண்டவரின் மறுவருகையின் நாள்!

✝

## 19 திருப்பாடல் 123

(இரக்கத்திற்காக மன்றாடல்)

*சீயோன் மலைத் திருப்பயணப் பாடல்*
1 விண்ணுலகில் வீற்றிருப்பவரே!
உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.
2 பணியாளனின் கண்கள்
தன் தலைவனின் கைதனை நோக்கியிருப்பதுபோல,
பணிப்பெண்ணின் கண்கள்
தன் தலைவியின் கைதனை நோக்கியிருப்பதுபோல,
எம் கடவுளாகிய ஆண்டவரே!
நீர் எமக்கு இரங்கும்வரை,
எம் கண்கள் உம்மையே நோக்கியிருக்கும்.
3 எங்களுக்கு இரங்கும் ஆண்டவரே!
எங்களுக்கு இரங்கும்;
அளவுக்கு மேலேயே
நாங்கள் இகழ்ச்சி அடைந்துவிட்டோம்.
4 இன்பத்தில் திளைத்திருப்போரின் வசைமொழி போதும்.
இறுமாந்த மனிதரின் பழிச்சொல்லும் போதும்.

திருப்பாடல் 123:1-4

**சிந்தனைக்கு**

நான்காவதாக இடம் பெறும் திருப்பயணத் திருப்பாடல்; ஆனால், நகர் அல்லது பயணம் குறித்த எந்தவொரு குறிப்பும் இல்லாத திருமலைப் பயணப் பாடல்.

தொன்மைக்காலமுதலே, நன்னம்பிக்கை தரும் பாடலாக இத்திருப்பாடல் விளங்குகிறது. மார்ட்டின் லூதர் இத்திருப்பாடலைச் சிறப்பாக விவரிக்கிறார்: 'எப்பக்கமும் திரும்பி, ஒரு நண்பனை, பாதுகாவலரை, ஆறுதல் அளிப்பவரைத் தேடி, அப்படி ஒருவரையும் காணாது சோர்ந்து தளர்ந்து, உள்ளத்தின் வேதனையில் ஆழ்ந்த பெருமூச்சு விட்ட ஒருவர், தன் கண்களை ஏறெடுத்து, வானவர் சூழ இறங்கி வரும் ஆண்டவரைக் கண்டு, அவரில் களிகூர்வது போல, இந்தத் திருப்பாடல் அமைகிறது.'

தனியொருவரின் கூக்குரலாகத் தொடங்கும் திருப்பாடல், இரண்டாம் வசனம் முதல் மக்கள் கூட்டத்தின் கூக்குரலாக மாறுவது கவனத்திற்கு உரியது.

திருப்பயணத் திருப்பாடல்களில் நான்கு சிறிய திருப்பாடல்களில் பெரிய திருப்பாடல். நாம் வேண்டிக் கொள்ளும் முன்னரே நமது தேவைகளை அறிந்திருப்பவரிடத்தில், சுருக்கமான மன்றாட்டும் சரியான பதிலைப் பெறும் என்பதற்குச் சான்றான மன்றாட்டு.

பாடலை இயற்றியவர் யார் என்ற குறிப்பு ஏதும் தலைப்பில் இல்லை. அரமேய பைபிளில் இந்தத் திருப்பாடல் தாவீதுக்கு உரியது என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள். நகரின் மதிலைக் கட்டும் பணியில் ஈடுபட்ட நெகேமியா எதிர் கொண்ட எதிர்ப்புகளை, நினைவூட்டுவதாக வ.3-4 அமைந்துள்ளது.

அமைப்பு:
வ.1-2, ஆண்டவரை நோக்கிப் பார்க்கும் திருப்பாடகரின் கண்கள்
வ.3-4, இகழ்ச்சியின் நடுவே இரக்கத்திற்கு மன்றாடல்

வசனம் 123:1
ஒப்பிடுக, 121:1.
மலைகளை நோக்கிப் பார்த்த திருப்பாடகர், இப்போது தனக்கு உதவக் கூடிய ஆண்டவரையே நோக்கிப் பார்க்கிறார்.

"விண்ணுலகில் வீற்றிருப்பவர்" -
பார்க்க, 2:4,11:4; எசாயா 57:15, 66:1, 113:5. ஒப்பிடுக, 1 அரசர்கள் 8:12&27; அதே அதிகாரத்தின் வ.30ம் அதுபோன்ற வசனங்களும்.
உலகில் உள்ள தெய்வங்களைத் தேடுவோர்க்கு ஒரு கோவிலில் அந்தத் தேடுதல் முடிந்து விடும். ஆனால், தம் குடியிருப்பை உயரங்களில் அமைத்துக் கொண்ட கடவுளாகிய ஆண்டவரைத் தேடுதல் எங்கு எப்போது நிற்கும்? அதனாலேயே திருப்பாடகர், மலைகளையோ திருக்கோவிலையோ இங்குக் குறிப்பிடாமல், விண்ணகத்தைக் குறிப்பிடுகிறார்.

நாம் மன்றாடும் போது, தேற்றரவாளரை நமக்கு அவர் அருளாதிருப்பாரோ!

வசனம் 123:2
உரிமையாளரை நோக்கி அமர்ந்திருக்கும் பணியாளன் போல - மிகச் சிறப்பான உவமை!

அடிமை முறை வழக்கத்தில் இருந்த காலத்தில் சொல்லப்பட்ட உவமை; அதுபோன்ற பயத்தோடும் பற்றோடும் நமது அருளாளரை நாம் நோக்கிப் பார்க்கிறோமா?
ஒப்பிடுக:
ஆபிரகாம், தொடக்க நூல் 18:3;
யாக்கோபு, தொடக்க நூல் 32:10;
மரியா, லூக்கா 1:38;
பவுல், உரோமையர் 1:1.

வசனம் 123:3-4
"இன்பத்தில் திளைத்திருப்போரின் வசைமொழி..." -
பார்க்க, நெகேமியா 2:10&19, 4:1-4.
இறைப் பணியின் பொருட்டு, நெகேமியா எதிர் கொண்டதே உண்மையான இகழ்ச்சி, ஏளனம், வசைமொழி! ஆண்டவரின் அருட்பொழிவின் பொருட்டு சவுல் அரசரின் இடர்களை

எதிர்கொண்ட தாவீதின் துயரும் கடுமையானதே! ஆனால், இவ்விரு வசனங்களின் சொற்களை ஒப்பிடுகையில், நெகேமியா 4:1-16 நம் நினைவிற்கு வருவதைத் தவிர்க்க முடியாது.

நெகேமியாவைப் போன்ற அர்ப்பணத்தோடு ஆண்டவரின் பணியில் ஈடுபடுவோரை கடவுள் வெற்றி பெறச் செய்வது உறுதி அல்லவா!

✝

## 19 திருப்பாடல் 124

(இஸ்ரயேலைப் பாதுகாப்பவர்)

*சீயோன் மலைத் திருப்பயணப் பாடல்; தாவீதுக்கு உரியது*
1 ஆண்டவர் நம் சார்பாக இருந்திராவிடில்
- இஸ்ரயேல் மக்கள் சொல்வார்களாக!
2 ஆண்டவர் நம் சார்பாக இருந்திராவிடில்,
நமக்கு எதிராக மனிதர் எழுந்தபோது,
3 அவர்களது சினம் நம்மேல் மூண்டபோது,
அவர்கள் நம்மை உயிரோடு விழுங்கியிருப்பார்கள்.
4 அப்பொழுது, வெள்ளம் நம்மை மூழ்கடித்திருக்கும்;
பெருவெள்ளம் நம்மீது புரண்டோடியிருக்கும்;
5 கொந்தளிக்கும் வெள்ளம்
நம்மீது பாய்ந்தோடியிருக்கும்.
6 ஆண்டவர் போற்றி! போற்றி!
எதிரிகளின் பற்களுக்கு
அவர் நம்மை இரையாக்கவில்லை.
7 வேடர் கண்ணியினின்று தப்பிப் பிழைத்த
பறவைபோல் ஆனோம்;
கண்ணி அறுந்தது;
நாம் தப்பிப் பிழைத்தோம்.
8 ஆண்டவரின் பெயரே நமக்குத் துணை!
விண்ணையும் மண்ணையும் உண்டாக்கியவர் அவரே!

திருப்பாடல் 124:1-8

**சிந்தனைக்கு**

"ஆண்டவரின் பெயரே நமக்குத் துணை! விண்ணையும் மண்ணையும் உண்டாக்கியவர் அவரே!" - இதுவே கால்வின் அவர்களின் ஆராதனைக்குத் தொடக்க வாக்கு!

சீயோன் மலைத் திருப்பயணப் பாடல்களில் ஐந்தாவது திருப்பாடல். முந்தைய திருப்பாடல் போன்றே, பயணம் குறித்த குறிப்பு ஏதுமில்லை. ஆனால் அன்றைய பயணத்தின் ஆபத்துகளை நினைவூட்டும் சொற்கள் பாடலில் இடம்பெற்றுள்ளன.

ஆபத்து அல்லது சாவிலிருந்து மயிரிழையில் தப்பிப் பிழைத்தோர், வியப்பு மேலிடக் களிப்போடு பாடிய திருப்பாடல். அந்த அடிப்படையில், தாவீதின் காலத்தில், சிரிய அம்மோனியப் படைகளை முறியடித்த பிறகு (2 சாமுவேல் 10) தாவீது பாடிய பாடல் என்பது

*பாரம்பரியம். எசேக்கியா அரசரின் காலத்தில், 2 அரசர்கள் 18ல் குறிப்பிடப்பட்டுள்ள அசீரியப் படையெடுப்புக்குப் பின்னர் பாடிய பாடல் என்று கருதுவோர் உள்ளனர். மதில் சுவர்களை கட்டி எழுப்பிய பிறகு, நெகேமியாவின் காலத்தில் எழுதப்பட்ட பாடல் என்றும் சிலர் கருதுகின்றனர்; இப்படிச் சொல்வோர், கிரேக்க, இலத்தீன், ஆர்மீனிய, அரேபிய மற்றும் எத்தியோப்பிய மொழிபெயர்ப்புகளில் தாவீதின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால் பாடல் முழுவதும், தாவீதின் குரல் எதிரொளிப்பதை எவரும் மறுக்க முடியாது.*

*அமைப்பு:*
வ.1-5, *ஆபத்தில் இறைமக்கள்*
வ.6-7, *இறையருளால் தப்பிப் பிழைத்த இறைமக்கள்*
வ.8, *துணையாளரான படைப்பாளர்*

வசனம் 124:1-2
*மக்களையும் அவர்களின் எதிரிகளையும் எதிர் எதிராக நிறுத்தி, ஆண்டவரை மீண்டும் மீண்டும் குறிப்பிடும் கவித்துவமான முன்னுரை. முதலில் மக்களை நோக்கித் திருப்பாடகர் சொல்ல, அவர்கள் அதையே மறுமொழியாக முழங்குவதாக அமைந்த நன்றிப் பாடல்.*

வசனம் 124:3
*பார்க்க,* 56:2 & 57:3; *நீதிமொழிகள்* 1:12. *நிலம் பிளந்து மனிதர்களை விழுங்கிய காட்சி* (106:17; *எண்ணிக்கை* 16:32-33 & 26:10; *இணைச் சட்டம்* 11:6) - *ஓர் உவமையாக இங்கு நினைவூட்டப்படுகிறது.*

வசனம் 124:4-5
வெள்ளம் *ஓர் உவமையாக; தப்பிக் கடந்து வந்த பாதையின் ஆபத்தைக் குறித்த வியப்பு,* 18:4, 32:6, 144:7.
மேலும் *பார்க்க, எசாயா* 43:2.

வசனம் 124:6
*எதிரிகளின் பற்கள், ஓர் உவமையாக,* 79:7; *எசாயா* 9:12; *எரேமியா* 51:34.

வசனம் 124:7
"வேடர் *கண்ணியினின்று தப்பிப் பிழைத்த பறவை*" -
மேலும் *ஓர் உவமை,* 91:3, 140:5, 141:10.

வசனம் 124:8
இணை, 121:2.
*விண்ணையும் மண்ணையும் உண்டாக்கியவர்,* 134:3.

*பாதுகாக்கும் ஆண்டவரில் தொடங்கும் திருப்பாடல் அவரே நம் துணையாளர் என்ற அறிக்கையோடு முடிகிறது. கால்வின் அவர்களின் தொடக்க வாக்கு - அதுவே நமது நம்பிக்கையை அன்றாடமும் உயிர்ப்பிக்கும் வாக்கு!*

## 19 திருப்பாடல் 125

(இறைமக்களைப் பாதுகாப்பவர்)

*சீயோன் மலைத் திருப்பயணப் பாடல்*
1 ஆண்டவர்மீது நம்பிக்கை வைத்துள்ளோர்
சீயோன் மலைபோல் என்றும் அசையாது இருப்பர்.
2 எருசலேமைச் சுற்றிலும் மலைகள் இருப்பதுபோல,
ஆண்டவர் இப்போதும் எப்போதும்
தம் மக்களைச் சுற்றிலும் இருப்பார்.
3 நல்லார்க்கென ஒதுக்கப்பட்ட நாட்டில்
பொல்லாரின் ஆட்சி நிலைக்காது;
இல்லையெனில் நல்லாரும்
பொல்லாதது செய்ய நேரிடும்.
4 ஆண்டவரே!
நல்லவர்களுக்கும் நேரிய இதயமுள்ளவர்களுக்கும்
நீர் நன்மை செய்தருளும்.
5 கோணல் வழிநோக்கித் திரும்புவோரை
ஆண்டவர் தீயவரோடு சேர்த்து இழுத்துச் செல்வார்.
இஸ்ரயேலுக்கு நலம் உண்டாவதாக!

திருப்பாடல் 125:1-5

**சிந்தனைக்கு**

நம்பிக்கையில் வளரும் உள்ளத்திற்கு உற்சாகமூட்டும் திருப்பாடல். திருப்பாடல் 23 போல, கடவுளோடு நம்மை நெருக்கமாக உணர வைக்கும் ஒரு திருப்பாடல்.

எழுதியவர் குறித்த குறிப்பு ஏதுமில்லை. வ.3 மற்றும் வ.5, நாடு வேற்றினத்தாரின் ஆளுகையில் இருப்பதையும், இஸ்ரயேலரில் சிலரும் தங்கள் சொந்த மக்களுக்கு எதிராகச் செயல்பட்டதையும் உணர்த்துகின்றன. அந்த அடிப்படையில், நெகேமியா எதிர்கொண்ட சிக்கல்களை (நெகேமியா 6:10-14&17) இந்த வசனங்கள் உணர்த்துகின்றன. எனவே, நெகேமியா அல்லது எஸ்ரா அல்லது அவர்கள் காலத்தில் வாழ்ந்த ஓர் இறையன்பர் இந்தத் திருப்பாடலை எழுதியிருக்கலாம்.

அமைப்பு:
வ.1-3, ஆண்டவர் பாதுகாக்கும் இறைமக்கள்
வ.4-5, இஸ்ரயேலுக்காக வேண்டுதல்

வசனம் 125:1-4
இறையன்பர்களைக் குறிக்க ஒவ்வொரு வசனத்திலும், வெவ்வேறு சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கவனியுங்கள்:
* நம்பிக்கை வைத்துள்ளோர், வ.1
* ஆண்டவர்தம் மக்கள், வ.2
* நல்லார், வ.3
* நேரிய இதயமுள்ளவர்கள், வ.4

- இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள பண்புகள் நம்மிடம் உள்ளனவா என்பதை ஆய்ந்து அறிந்து, நாமே நம்மில் சீர்படுவோம்.

வசனம் 125:1-3
உவமைகளின் வழியே நமது பற்றுறுதியை நிலைநிறுத்தும் வசனங்கள் - நம்பிக்கையில் உறுதியையும், ஆண்டவர் அருளும் பாதுகாப்பையும் மீட்பையும் வெளிப்படுத்தும் வசனங்கள்.

வசனம் 125:1
ஒப்பிடுக, எசாயா 28:16.
எந்த ஒரு மலையும், நில அதிர்வினால் கூட விழுந்து விடுவதில்லை! நமது இறை நம்பிக்கை எப்படி இருக்கிறது? கல் விழுந்தால் அலைபாயும் குளத்து நீர் போலவா? நிலநடுக்கமே வந்தாலும் அசைவுறாத மலை போலவா?

நம்பிக்கை கொண்டோன் பதற்றம் அடையான்!
*
அசையாத சீயோன் மலை, 46:5. அசையாத பற்றுறுதியாளர், 16:8. இந்தத் திருப்பாடலை எழுதிய காலத்தில், எருசலேம் பாழ்பட்டுக் கிடந்தது என்பதை நாம் மறந்து விடக் கூடாது; ஆனால், எருசலேம் சிறப்புடைய நகர், போற்றுதலுக்குரிய நகர் என்பதைத் திருப்பாடகர் அறிந்திருந்ததால் (தானியேல் 6:10), இவ்வாறு உறுதியாக உரைக்கிறார்.

வசனம் 125:2
ஒப்பிடுக, 2 அரசர்கள் 6:17, செக்கரியா 2:4-5.
நாம் நம்பிக்கையில் பெருகவே இவை நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நாமும் இவற்றைப் பலமுறை வாசிக்கிறோம், அருளுரைகளில் கேட்டிருக்கிறோம்; ஆனால் நமது நம்பிக்கை வளர்ந்திருக்கிறதா?

வசனம் 125:3
பொல்லாரின் ஆட்சி நிலைக்காது என்ற அறிக்கை, ஆண்டவர் அருளும் மீட்பில் திருப்பாடகரின் உறுதியான நம்பிக்கையை இது காட்டுகிறது.

வசனம் 125:4-5
திருப்பாடகரின் மன்றாட்டு மற்றும் விருப்பம்.

வசனம் 125:5
"கோணல் வழி நோக்கித் திரும்புவோரை, ஆண்டவர் தீயவரோடு சேர்த்து இழுத்துச் செல்வார்" -
ஒப்பிட்டு உணர்க, மத்தேயு 7:22 & 24:45-51. வ.3ன் பிற்பகுதியையும் வாசிக்கவும்.

ஒருவர் எதிர்கொள்ளும் சூழலுக்கு ஏற்ப, வளைந்து கொடுத்து வாழ விரும்பினால், ஆண்டவர் விரும்பும் வண்ணம் வாழ முடியாது. ஏனெனில் இறுதி வரை மன உறுதியுடன் இருப்பவரே மீட்புப் பெறுவர் (மத்தேயு 24:13).

"இஸ்ரயேலுக்கு நலம் உண்டாவதாக!" -
திருமலைத் திருப்பயணப் பாடல்களில் காணப்படும் பொதுவான வாழ்த்து, 122:6-9, 128:6 & 131:5.

## 19 திருப்பாடல் 123

(விடுதலைக்காக மன்றாடல்)

*சீயோன் மலைத் திருப்பயணப் பாடல்*
1 *சீயோனின் அடிமை நிலையை*
*ஆண்டவர் மாற்றினபோது,*
*நாம் ஏதோ கனவு கண்டவர் போல இருந்தோம்.*
2 *அப்பொழுது, நமது முகத்தில் மகிழ்ச்சி காணப்பட்டது.*
*நாவில் களிப்பாரவாரம் எழுந்தது;*
*"ஆண்டவர் அவர்களுக்கு மாபெரும் செயல் புரிந்தார்"*
*என்று பிற இனத்தார் தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.*
3 *ஆண்டவர் நமக்கு மாபெரும் செயல் புரிந்துள்ளார்;*
*அதனால் நாம் பெருமகிழ்ச்சியுறுகின்றோம்.*
4 *ஆண்டவரே! தென்னாட்டின் வறண்ட ஓடையை*
*நீரோடையாக வான்மழை மாற்றுவதுபோல,*
*எங்கள் அடிமை நிலையை மாற்றியருளும்.*
5 *கண்ணீரோடு விதைப்பவர்கள்*
*அக்களிப்போடு அறுவடை செய்வார்கள்.*
6 *விதை எடுத்துச் செல்லும்போது -செல்லும்போது-*
*அழுகையோடு செல்கின்றார்கள்;*
*அரிகளைச் சுமந்து வரும்போது -வரும்போது-*
*அக்களிப்போடு வருவார்கள்.*

திருப்பாடல் 126:1-6

### சிந்தனைக்கு

*உவமைகளின் அடிப்படையில், முந்தைய திருப்பாடலுக்கு இணையான திருப்பாடல்.*

*எழுதியவர் பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை. சிரியாக் மொழிபெயர்ப்பில், ஆகாய் மற்றும் செக்கரியா ஆகிய இறைவாக்கினரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்கின்றனர். வ.5&6 வாசிக்கும்போது, உணர்வுகளின் அடிப்படையில், நம்முடைய நினைவுக்கு வருவது, சிறையிருப்பிலிருந்து மீண்ட இஸ்ரயேலர் தங்கள் ஆண்டவருக்கு கோவில் எழுப்ப அடித்தளம் இட்ட நிகழ்வு, எஸ்ரா 3:10-13. வ.1-4ம் சிறை மீண்ட காலத்தையே நினைவூட்டுகிறது. இவற்றின் அடிப்படையில், எஸ்ரா அல்லது அவரது காலத்தில் வாழ்ந்த ஒருவர் இந்தத் திருப்பாடலை எழுதியிருக்கலாம்.*

*பொது மொழிபெயர்ப்பில், வ.4 மற்றும் வ.6ல் சில சொற்கள் சேர்க்கப்பட்டு, சிறந்த கவிதை வாசிப்பு அனுபவம் கிடைக்கிறது. அதேவேளையில், வ.4ல் வான்மழை என்ற சொல் சேர்க்கப்பட்டுள்ளதன் வழியாக, இறையியல் தெளிவில் ஓர் இடைமறிப்பு உள்ளது.*

*அமைப்பு:*
*வ.1-3, சிறை மீட்பு எனும் அருஞ் செயலின் விளைவுகள்*
*வ. 4-6, இஸ்ரயேலின் சீரமைப்பு குறித்த மன்றாட்டு மற்றும் பொறுப்பு*

வசனம் 126:1-2
இஸ்ரயேல் மக்களின் சிறை மீட்சி, முழுக்க ஆண்டவரின் செயலே, எஸ்ரா 1:1-11.

வசனம் 126:1
கடுமையான அடக்குமுறையின்கீழ் வாழ்வோர், சட்டென விடுதலை பெறும்போது ஏற்படும் மனநிலை. உறங்க விடாமல் கனவுகளிலும் துரத்தும் துயர நிலைகள்; எதிர்பாராத ஒரு நாளில் ஆண்டவர் அருளிய மீட்பு. இதுபோலவே, சிறையிலிருந்து வெளியே அழைத்து வரப்பட்ட பேதுருவின் மனநிலை, திருத்தூதர் பணிகள் 12:9.

வசனம் 126:2
விடுதலை பெற்றோரின் உற்சாகமூட்டும் மகிழ்ச்சியை முன்பகுதி வசனம் வெளிப்படுத்துகிறது (எசாயா 12). அந்த ஆரவாரத்தின் விளைவை வசனத்தின் பின்பகுதி காட்டுகிறது.

மகிழ்ச்சியால் வாயை நிரப்புதல், தொடக்க நூல் 21:6. யோபுக்கு அறிவுரையாக, யோபு 8:21. பொது மொழிபெயர்ப்பில், முகத்தில் மகிழ்ச்சி என்று உள்ளது - மகிழ்ச்சி நம் வாய் வழியாக, சாட்சியாகவும் துதியாகவும் வெளிப்பட வேண்டும்.

"...பிற இனத்தார் தங்களுக்குள் பேசிக் கொண்டனர்" -
நமக்கு அருளும் தமது ஆற்றல்மிகு ஆசிகளை நமக்கென்று ஆண்டவர் தருவதில்லை; உலகோர் கண்டு வியந்து, அவருடைய திருப்பெயருக்கு அஞ்சி, அவர்தம் மாட்சியை உணரச் செய்கிறார். பார்க்க, எசாயா 61:9; எசேக்கியேல் 36:23.

வசனம் 126:3
வேற்றினத்தார் ஆண்டவரைக் குறித்துப் பேசியதை, வழிமொழிந்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் இஸ்ரயேலர்.

வசனம் 126:4
பெற்ற விடுதலைக்கு நன்றி செலுத்தும் அதேவேளையில், இன்னும் கடக்க வேண்டிய இடர்களை நினைவிற்கொண்டு ஏறெடுக்கப்பட்ட வேண்டுதல். ஆண்டவர் அருளிய நாட்டுக்கு, இஸ்ரயேலர் முழுமையாகத் திரும்ப வேண்டும் (எஸ்ரா 9:8; நெகேமியா 1:3); நிலங்கள் மற்றும் வீடுகளைத் திரும்பப் பெற வேண்டும்; திருக்கோவிலை எழுப்ப வேண்டும்; நகர் மீண்டும் கட்டப்பட வேண்டும்; இவற்றை உள்ளத்தில் நிறுத்தி ஏறெடுக்கும் வேண்டுதல்.

"தென்னாட்டின் வறண்ட ஓடை..." -
எருசலேம் மலைகளுக்குத் தெற்கே (நெகேப், negeb = தெற்கு நிலப்பகுதி) உள்ள ஓடைகள், ஆண்டின் பத்து மாதங்கள் வறண்டு காணப்படும்; மழைக் காலத்தில் அவற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படும், 68:9 & 84:6; எசாயா 35:1&6. இது ஓர் உவமையாக இங்கு எடுத்தாளப்பட்டுள்ளது.

வசனம் 126:5-6
மீண்டும் ஒரு சிறந்த உவமை. பாடுகளைக் கடக்கும் ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டிய உவமை. விலை மதிப்பற்ற கண்ணீர், விலை மதிப்பற்ற விளைச்சல்.

கட்டுண்ட நிலையில் அன்னிய நாட்டுக்கு கண்ணீரோடு சென்ற இஸ்ரயேலர், களிப்போடு திரும்பினர் (எரேமியா 50:4). ஆனாலும் எருசலேமையும் அங்கே ஆண்டவரின் திருக்கோவிலையும் குறித்த ஏக்கமோ இன்னும் தீரவில்லை.
*
கலங்கி அழும் இஸ்ரயேலர், எஸ்ரா 3:12; நெகேமியா 1:4.

கடவுளாகிய ஆண்டவரின் திருப்பணியில் நாம் இருந்தாலும், கண்ணீர் இன்றி அறுவடை இல்லை (மத்தேயு 13:1-31). நவீனத் திருப்பணிகளின் தந்தை, வில்லியம் கேரியின் வாழ்க்கையை நாம் மறந்து விட வேண்டாம்: மகனைப் பறி கொடுத்தார்; மனைவி மன நோய்க்கு பலியானார்; அச்சகமும் பல்லாண்டுகளாகப் பாடுபட்டு எழுதிய மொழிபெயர்ப்பு நூல்களும் தீக்கிரையாகின; டச்சு ஆட்சியில் இருந்த செராம்பூரிலிருந்து - ஆங்கிலேயராக இருந்த போதிலும் , வணிக வேட்டைக்கு அவரின் திருப்பணி இடையூறாக இருக்கும் என்று அரசு அஞ்சியதால் - அவரால் பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் நீண்ட காலமாக நுழைய முடியவில்லை. இவையெல்லாவற்றையும் கடந்த அவருடைய அர்ப்பணிப்புக்காக, ஏழாம் ஆண்டில் முதல் ஆத்தும அறுவடையை ஆண்டவர் கேரிக்குக் கொடுத்தார். பன்மொழி ஆற்றலை அளித்தார். சதி ஒழிப்புச் சட்ட வரைவை எழுதும் அளவுக்கு, ஆட்சியாளர்கள் நடுவே அவரை உயர்த்தினார். விவசாயத்தில் அறிவியல் புதுமைகளை செயல்படுத்திக் காட்டினார். கிறிஸ்து இயேசு சொன்னதை என்றும் நாம் நினைவில் கொள்வோம்: "நீங்கள் துயருறுவீர்கள்; ஆனால் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும்."

✝

## 19 திருப்பாடல் 127

(சீயோன் மலைத் திருப்பயணப் பாடல்; சாலமோனுக்கு உரியது)

*கடவுளின் அருளும் நலன்களும்*

1 ஆண்டவரே வீட்டைக் கட்டவில்லையெனில்,
அதைக் கட்டுவோரின் உழைப்பு வீணாகும்;
ஆண்டவரே நகரைக் காக்கவில்லையெனில்,
காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்.
2 வைகறையில் விழித்தெழுந்து
நள்ளிரவில் ஓய்வெடுக்கும்வரை
மானிடர் தம் உணவுக்காக
வருந்தி உழைப்பது வீணே!
உறங்கும்போதும் கடவுளின் அன்பர்
தேவையானதை அவரிடமிருந்து பெற்றுக்கொள்வர்.
3 பிள்ளைகள், ஆண்டவர் அருளும் செல்வம்;
மக்கட்பேறு, அவர் அளிக்கும் பரிசில்.
4 இளமையில் ஒருவருக்குப் பிறக்கும் மைந்தர்
வீரரின் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பானவர்.
5 அவற்றால் தம் அம்பறாத் தூணியை
நிரப்பிய வீரர் நற்பேறு பெற்றோர்;
நீதிமன்றத்தில் எதிரிகளோடு வழக்காடும்போது,
அவர் இகழ்ச்சியடையமாட்டார்.

திருப்பாடல் 127:1-5

**சிந்தனைக்கு**

முந்தைய திருப்பாடல், கண்ணீரோடு உழைப்பதைக் குறித்துப் பேசியது; இந்தத் திருப்பாடல் உழைப்பின் பலனைக் குறித்துப் பேசுகிறது. வேறு மொழியில் சொல்ல வேண்டுமானால்: ஆண்டவரைச் சாராத முயற்சி பயனற்றது.

திருப்பயணப் பாடல்களில் (120-134) மையமாக அமைந்துள்ள திருப்பாடல்.

சாலமோனுக்கு உரிய இரண்டாம் திருப்பாடல்; மற்றொன்று, திருப்பாடல் 72 என்பதை நாம் அறிவோம். தன் மகன் சாலமோனுக்கு அறிவுரையாக தாவீது பாடிய திருப்பாடல் இது என்ற கருத்தும் உள்ளது (மேத்யு ஹென்றி, சார்ல்ஸ் ஸ்பர்ஜின் & ஜான் கில்). ஆனால் சாலமோன், 3000 நீதிமொழிகளை மட்டுமல்ல, 1005 பாடல்களையும் எழுதியவர் என்பதை நாம் மறக்கலாகாது (1 அரசர்கள் 4:32). இத்திருப்பாடலோடு நீதிமொழிகள் 10:22ம் ஒப்பிடத் தக்கது.

இது ஒரு ஞானப் பாடல். "உப்பு விற்கப் போனால் மழை பெய்கிறது," "உடலில் எவ்வளவு தான் எண்ணெய் பூசிக்கொண்டு விழுந்து புரண்டாலும், ஒட்டுவது தான் ஒட்டும்" போன்ற சொலவடைகளை நாம் கேட்டிருப்போம். இவற்றுக்குப் பின்னால், நாம் அறிந்துகொள்ள வேண்டிய இறையியல் உண்மையை இத்திருப்பாடல் விளக்குகிறது. அதேவேளையில், உழைப்பின் அருமையை இத்திருப்பாடல் ஒருபோதும் குறைத்து மதிப்பிடவில்லை. உழைப்போடு கடவுளின் அருளை இணைத்து, இறையருளின் சிறப்பை இத்திருப்பாடல் நிலைநிறுத்துகிறது. 🕎

பவர் மொழிபெயர்ப்பில் முதல் வசனம், இரண்டு வசனங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது; 4 மற்றும் 5ம் வசனங்கள், ஒரே வசனமாகச் சேர்க்கப் பட்டுள்ளன.
🕎

அமைப்பு:
வ.1-2, உழைப்பின் போதாமை
வ.3-5, இல்லங்களை எழுப்பும் ஆண்டவர்
🕎

வசனம் 127:1
வீடு -
புதிதாக வீடு கட்டுவோர்க்கு வழக்கமாக நாம் இந்த வசனத்தைச் சொல்லி ஜெபிப்பதுண்டு.

bah-yith / பாயித் என்னும் ஒரே எபிரேயச் சொல்லை, *வீடு, வீட்டார், இல்லம், குடும்பம், குடும்பத்தார்,* மாளிகை, கோவில், சிறை, நிலவறை - என்றெல்லாம் பொருள் கொள்ளலாம்.

அதேபோல், கட்டுதல் என்பது baw-nah / பானா; இதற்குக் குழந்தைப்பேறு என்றும் பொருளுண்டு. எனவே, இங்கு பேசப்படுவது, பொருட்களால் கட்டப்படும் வீடு மட்டுமல்ல; அப்படி எடுத்துக் கொண்டால், வீடற்றோர் ஆசி அற்றோரா? நிச்சயமாக அப்படி அல்ல; உள்ளங்களை ஒன்றிணைத்துக் கட்டப்படும் இல்லம் அல்லது குடும்பம் என்ற பொருளில் இதனைப் பார்க்க வேண்டும். எனவே ஆண்டவரை வெறுமனே வீடு கட்டித் தருபவராகக் குறுக்கி விட வேண்டாம்!

வசனம் 127:2
ஒப்பிடுக, எசாயா 30:7&15.
இன்றைய வாழ்வாதாரப் போராட்டம் ஒருவரின் வாழ்வைத் தின்றுவிடுவதாக உள்ளது. ஆனால் ஆண்டவரோ அவரை நாடுவோர்க்கு அமைதி அருள்கிறார் (1 பேதுரு 5:7).

தங்கள் தொழிலில் நன்மைகளை நாடுவோர், ஆண்டவரையே நாட வேண்டும்; நமது உழைப்பு அவருக்கு மேன்மை தருவதாக இருக்க வேண்டும்; அப்போது அவர் நமது உழைப்பை ஏற்றுக்கொண்டு, அதற்கும் மேலான பலன்களை அருளுவார்.

வசனம் 127:3
சிறப்பான மொழியில் இறைவாக்கு நினைவுகூரப்படுகிறது, இணைச்சட்டம் 7:14 & 28:4,10-11.

வசனம் 127:5
நீதிமன்றம் / OV, ஒலிமுக வாசல்; நகரின் வாயில் நீதி விசாரிக்கும் இடம், வணிகம் நடைபெறும் இடம், இணைச் சட்டம் 17:5; ரூத் 4:1-12; ஆமோஸ் 5:12. ஆற்றல் நிறைந்த மகன்களைப் பெற்ற ஒருவர், நகர வாயிலில் பெரிய அளவில் மதிக்கப்படுவார். தன் தந்தையின் சார்பில் செயல்படுவோராக அவரின் மகன்கள் விளங்குவர்.
🕎

கட்டப்படும் இல்லம், காக்கப்படும் நகர், ஆசி பெறும் உழைப்பு, வழிமரபாகத் தொடரும் தலைமை - இவற்றில் ஆண்டவரைச் சார்ந்து வாழ சாலமோன் வலியுறுத்துகிறார்.

குழந்தைப் பேறு ஓர் ஆசி எனில் நமது சமுதாயத்தில், குழந்தைப் பேறின்மை ஒரு சாபமா? இன்றைக்கு இந்தச் சிக்கல் பல குடும்பங்களிலும் நிலவுகிறது. அந்தக் காலத்துப் போரிடும் சமுதாயங்களில், குழந்தைப் பேறு அவசியமான ஒன்று. இன்று நாம் பாடுபடுவது, உள்ளங்களை வெல்ல, ஆத்துமாக்களைச் சேர்க்க. விண்ணரசு விரிவடையப் பாடுபடும் நமக்கு, இதுபோன்றவை ஒரு குறையே அல்ல என்பதை நாம் உணர வேண்டும். ஓர் உவமையாகச் சொல்லப்பட்டாலும், இந்த வாக்கு உண்மையானது: பிள்ளை பெறாத மலடியே, மகிழ்ந்து பாடு; பேறுகால வேதனை அறியாதவளே, அக்களித்துப் பாடி முழங்கு; ஏனெனில், "கைவிடப்பட்டவளின் பிள்ளைகள், கணவனோடு வாழ்பவளின் பிள்ளைகளைவிட ஏராளமானவர்கள்," என்கிறார் ஆண்டவர். (எசாயா 54:1)

✝

## 19 திருப்பாடல் 128

*(ஆண்டவருக்கு அஞ்சி நடப்பதன் பயன்கள்)*

*சீயோன் மலைத் திருப்பயணப் பாடல்*
1 ஆண்டவருக்கு அஞ்சி
அவர் வழிகளில் நடப்போர் பேறுபெற்றோர்!
2 உமது உழைப்பின் பயனை நீர் உண்பீர்!
நீர் நற்பேறும் நலமும் பெறுவீர்!
3 உம் இல்லத்தில் உம் துணைவியார்
கனிதரும் திராட்சைக்கொடிபோல் இருப்பார்;
உண்ணும் இடத்தில் உம் பிள்ளைகள்
ஒலிவக் கன்றுகளைப் போல் உம்மைச் சூழ்ந்திருப்பர்.
4 ஆண்டவருக்கு அஞ்சி நடக்கும் ஆடவர்
இத்தகைய ஆசி பெற்றவராய் இருப்பார்.
5 ஆண்டவர் சீயோனிலிருந்து
உமக்கு ஆசி வழங்குவாராக!
உம் வாழ் நாளெல்லாம் நீர்
எருசலேமின் நல்வாழ்வைக் காணும்படி செய்வாராக!
6 நீர் உம் பிள்ளைகளின் பிள்ளைகளைக் காண்பீராக!
இஸ்ரயேலுக்கு நலம் உண்டாவதாக!

திருப்பாடல் 128:1-6

**சிந்தனைக்கு**

திருப்பயணத் திருப்பாடல்களில் ஒன்பதாவது திருப்பாடல். முந்தைய திருப்பாடலின் தொடர்ச்சியாகவும் அடுத்த படிநிலை வளர்ச்சியாகவும் எண்ணத்தக்க திருப்பாடல். 1, 34, 49, 73 & 127 ஆகிய திருப்பாடல்களின் வழியில் மற்றுமொரு ஞானப்பாடல். ஆண்டவருக்கு அஞ்சி நடப்போர் அடையும் பேறுகளை அறிவுறுத்தும் திருப்பாடல். "மகிழ்ச்சியான குடும்பங்களின் பாடல்" என்கிறார் மேத்யூ ஹென்றி. "கிறிஸ்தவ திருமணத்தின் திருப்பாடல்" என்றும் "மணவாழ்வில் சிலுவை சுமப்போருக்கு ஆறுதல் தரும் திருப்பாடல்" என்றும் மார்ட்டின் லூதர் உரைக்கிறார். சிலுவையின் வெற்றிப் பாதையில் துயர்களைச் சகித்து வென்ற அவருக்கு, இல்லற வாழ்க்கை எவ்வளவு ஆறுதலாக இருந்தது என்பதை இந்த அறிக்கை வழியாக நாம் உணரலாம்.

ஆண்டவரைச் சார்ந்தே ஆசிகள் என்று திருப்பாடல் 127 போதிக்க, இந்தத் திருப்பாடல் அந்த ஆசிகளைப் பெற நாம் அவருக்கு அஞ்சி நடக்க வேண்டும் என்று போதிக்கிறது. 🕎

பாடலை இயற்றியவர் யார் என்ற குறிப்பு ஏதுமில்லை. சூழல் குறித்துப் பார்த்தோமானால், நெகேமியா 5:1-13 பகுதி, இப்பாடல் உருவாகக் காரணமாக அமைந்திருக்கலாம். போதாமை, பஞ்சம், கடன், வரிச் சுமை குறித்து அங்கு வாசிக்கிறோம்; அதிகாரத்தில் அமர்ந்திருந்த இஸ்ரயேலரை நெகேமியா கடிந்து கொண்டு, "நீங்கள் செய்வது சரியில்லை. நம் எதிரிகளான வேற்றினத்தார் நம்மை ஏளனம் செய்யாதவாறு நீங்கள் நம் கடவுளுக்கு அஞ்சி நடப்பதே முறை" என்றுரைக்கிறார். அந்தப் பின்னணியில், அவரோ அல்லது எஸ்ரா போன்ற வேறு எவருமோ இந்தத் திருப்பாடலை எழுதியிருக்கலாம்.

இப்பாடலுக்கு, எரேமியா 31 மற்றும் செக்கரியா 8 போன்ற இறைவாக்குகளும் பெரும் தூண்டுதலாக இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.
🕎

அமைப்பு:
வ.1-4, ஒருவரின் இல்லற ஆசி
வ.5-6, இஸ்ரயேலின் நல வாழ்வு
🕎

வசனம் 128:1-6
கடவுளுக்கு அஞ்சி, அவர்தம் வழிகளில் நடப்போர் அடையும் பேறுகள்:
* உழைப்பின் உறுதியான பயன்
* நல் மனையாள் மற்றும் நன்மக்கள் பேறு
* நாட்டின் நல்வாழ்வைக் காணும் பேறு
* பிள்ளைகளின் பிள்ளைகளைக் காணும் நெடுவாழ்வு

வசனம் 128:1
இணை, 112:1, 115:13, 119:1-3.
பாலினம், இளையோர் - மூத்தோர், வர்க்கம் என்ற எந்தப் பாகுபாடுமின்றி, எவருக்கும் பொருந்தும் வகையில் திருப்பாடகர் இந்தத் திருப்பாடலை அமைத்துள்ளார்.

வசனம் 128:2
"உமது உழைப்பின் பயனை நீர் உண்பீர்" -
உழைப்பை ஏற்றுக் கொள்ளும் கடவுள். "எனக்கு அஞ்சி நட, வேறு எதுவும் செய்ய வேண்டாம்" என்பது போதனை அல்ல; "மண்ணுலகை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்" என்பதே

கட்டளை. அதேவேளையில், உழைப்பின் பயனை ஒருவர் பெறுவது அவருக்கு அஞ்சி வாழ்வதில் முழுமை பெறுகிறது. அந்தப் பயனைத் துய்க்கும் வகை ஒன்றை சாலமோன் சபை உரையாளர் 3:9-13 பகுதியில் குறிப்பிடுகிறார் (அதன் பொருத்தப்பாடு குறித்துப் பின்னர் பார்ப்போம்).

வசனம் 128:3
இல்லறம் - இனிமையான இல்லறம்! சாப்பாட்டு மேஜை வரை வரும் இரண்டு, உவமைகளாக.

இனியதும் மென்மையானதுமான கனி தரும் திராட்சைக் கொடி போன்ற மனைவி, கணவருக்கு இல்லறத்தை வழிநடத்துவதில் துணைவியார், தீத்து 2:5. வீட்டின் கொல்லையில் அல்லது பாதுகாப்போடு வளர்க்கப்படுவது திராட்சைக் கொடி; அது முட்கள் அற்றது; ஆற்றல் தருவது (1 திமொத்தேயு 5:23). கணவன் - மனைவி உறவின் அன்னியோன்னியத்தை, நெருக்கத்தை உணர்த்தும் வகையில் திராட்சை, இனிமைமிகு பாடல் 7:8-12.

ஒலிவ மரக்கன்றுகளாகப் பிள்ளைகள், 127:3; மேலும் பார்க்க, 52:8; எரேமியா 11:16அ. ஒலிவ மரம் அழிவற்றது; அகன்றும் ஆழமாகவும் உயர்ந்து வளரக் கூடியது. அதுபோல, ஆண்டவருக்கு அஞ்சி நடப்போரின் வழி மரபும் வேர் பிடித்து, கிளை பரப்பி வளரும்.

திராட்சைத் தோட்டங்களும் ஒலிவ மரங்களும் ஒருவரின் செல்வத்தின் அடையாளம். மேலும் பார்க்க, ஒசேயா 14:5-7. திராட்சையும் ஒலிவமும் விடுதலைப் பயணம் 23:11ல் தொடங்கி, பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் சேர்த்துக் குறிப்பிடப்பட்டுள்ளன.

வசனம் 128:4
தனிப்பட்ட வாழ்க்கையில், அவருக்கு அஞ்சி நடக்கும் ஒருவர் பெறும் ஆசிகளைத் திருப்பாடகர் நிறைவு செய்கிறார்.

வசனம் 128:5
ஆண்டவர் சீயோனிலிருந்து உமக்கு ஆசி வழங்குவாராக -
சீயோன் மலையில் ஆலயம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அதுவே ஆண்டவரின் மலை; இதற்கு மாறான கிறிஸ்துவின் போதனை, யோவான் 4:21. கடவுள் விண்ணகத்தில் உறைபவர், 14:2, 103:19; 1 அரசர்கள் 8:30; 2 குறிப்பேடு 6:21, 18:18; எஸ்ரா 5:12; நெகேமியா 1:4; எசாயா 63:15. கடவுளைக் குறிப்பிடும்போதெல்லாம், கிறிஸ்து இயேசு அவரை விண்ணகத் தந்தை என்றே குறிப்பிடுகிறார்.

"...எருசலேமின் நல்வாழ்வைக் காணும் படி..." -
நாட்டின் நல்வாழ்வும், அதன் குடிகளின் நல்வாழ்வும், தலைநகரின் நல்வாழ்வோடு தொடர்புடையது. ஆண்டவரின் இல்லம் அமைந்த ஒரே நகர் எருசலேம் என்பதால், இஸ்ரயேலர் வாழ்வில் எருசலேம் உயர்மதிப்புப் பெறுகிறது.

வசனம் 128:6
பிள்ளைகளின் பிள்ளைகள், நீதிமொழிகள் 17:6. மேலும் பார்க்க, யோபு42:16; செக்கரியா 8:4-5.

"இஸ்ரயேலுக்கு நலம் உண்டாவதாக" -
இறுதி ஆசி மொழி, 125:5ஆ. நாடு இறையாசி பெற வேண்டுமானால், குடிகள் அனைவரும் ஆண்டவருக்கு அஞ்சி நடப்பது இன்றியமையாதது ஆகும். இதை நமது உள்ளத்தில் இருத்தி, நாம் நமது வாழ்க்கையை வடிவமைப்போம்.

## 19 திருப்பாடல் 129

(இஸ்ரயேலின் எதிரிகளை முன்னிட்டு மன்றாடியது)

*சீயோன் மலைத் திருப்பயணப் பாடல்*
1 "என் இளமை முதற்கொண்டே
என்னைப் பெரிதும் துன்புறுத்தினார்கள்"
- இஸ்ரயேல் மக்கள் சொல்வார்களாக!
2 "என் இளமை முதற்கொண்டே
என்னைப் பெரிதும் துன்புறுத்தினார்கள்; எனினும்,
அவர்கள் என்மீது வெற்றி பெறவில்லை.
3 "உழவர் என் முதுகின்மீது உழுது
நீண்ட படைச்சால்களை உண்டாக்கினர்."
4 ஆண்டவர் நீதியுள்ளவர்; எனவே,
பொல்லார் கட்டிய கயிறுகளை
அவர் அறுத்தெறிந்தார்.
5 சீயோனைப் பகைக்கும் அனைவரும்
அவமானப்பட்டுப் புறமுதுகிடுவராக!
6 கூரைமேல் முளைக்கும் புல்லுக்கு
அவர்கள் ஒப்பாவார்கள்;
வளருமுன் அது உலர்ந்துபோகும்.
7 அதை அறுப்போரின் கைக்கு,
ஒரு பிடி கூடக் கிடைக்காது;
அரிகளைச் சேர்த்தால்
ஒரு சுமைகூடத் தேறாது.
8 வழிப்போக்கரும் அவர்களைப் பார்த்து,
'ஆண்டவர் உங்களுக்கு ஆசி வழங்குவாராக!' என்றோ
'ஆண்டவரின் பெயரால் ஆசி வழங்குகிறோம்'
என்றோ சொல்லார்.

திருப்பாடல் 129:1-8

**சிந்தனைக்கு**

இஸ்ரயேல் என்னும் நாடு பாடுவது போல அமைந்த திருப்பாடல். ஒப்பீட்டளவில், திருப்பாடல் 124, இப்பாடலுக்கு இணையானது; அந்தப் பாடல், ஒரு மக்களினமாக இஸ்ரயேலர் பாடும் வகையில் அமைந்துள்ளது. இஸ்-ரா-யேல் (கடவுள் ஆளுகிறார் / மேலெழுகிறார்) / yis-raw-ale (God prevails) என்பது யாக்கோபுக்கு ஆண்டவர் அருளிய பெயர் (தொடக்க நூல் 32:28). இஸ்ரயேலை ஒரு மக்களினமாக யாக்கோபு முன்னெடுக்கிறார் (தொடக்க நூல் 49:16&24; மேலும் 49:28). பின்னர் அவர்களுக்கென நாடு உருவான பிறகு, நாட்டைக் குறிப்பதான சொல்லாக அது மாறியது.

பாடியவர் பெயர் குறிப்பிடப்படவில்லை. வ.4ன் அடிப்படையில், சிறை மீட்பின் பிந்தைய பாடல் என்பது உறுதியாகிறது. பின்னாட்களில், மலைப் பயணப் பாடலாக, சீயோனின் முழுமையான வெற்றியை வாஞ்சிப்போரின் பாடலாக மாறியிருக்கலாம். இவ்வாறு பின்னோக்கிப் பார்த்து, நம்பிக்கையில் எதிர்நோக்குடையதாக இத்திருப்பாடல் விளங்குகிறது.

அமைப்பு:
வ.1-4, துன்புறுத்தும் எதிரிகளிடமிருந்து விடுதலை
வ.5-8, தனது முழுமையான வெற்றியை சீயோன் நாடுதல்
🕎

வசனம் 129:1-2
பார்க்க, 106:41-46.

"என் இளமை முதற் கொண்டே..." -
மக்களினமாக இஸ்ரயேல் வடிவெடுத்த போதே, அவர்கள் எகிப்தில் அடிமைகளாகத் துன்புற்றனர், விடுதலைப் பயணம் 1:8-11. மோவாபியர், கானானியர், அம்மோனியர், பெலிஸ்தியர், சிரியர், அசீரியர், பாபிலோனியர் என்று பின்னரும் எதிர்ப்புகளை எதிர்கொள்ளும் சூழலே இஸ்ரயேலுக்கு நேர்ந்தது. உண்மை என்னவெனில், இன்றும் இஸ்ரயேல் எதிர்ப்புகளுக்கு நடுவேதான் உள்ளது.

"இஸ்ரயேல் மக்கள் சொல்வார்களாக" -
மக்கள் என்னும் சொல் சேர்ப்பு தேவையற்றது.

வசனம் 129:2
"... என் மீது வெற்றி பெறவில்லை"-
இனமாக இஸ்ரயேல் எதிர் கொண்ட எதிர்ப்புகளை, அடக்குமுறைகளை, ஒடுக்குமுறைகளை, இன அழித்தொழிப்பை உலகின் வேறு எந்த இனமும் எதிர்கொண்டிருக்காது. வரலாறு நெடுகிலும் எந்த நாடும் இஸ்ரயேலை வெற்றி கொள்ள முடியவில்லை என்பது இஸ்ரயேல் என்று பெயர் கொடுத்த ஆண்டவருக்கு மாட்சி அளிப்பதாக உள்ளது.

ஆண்டவரின் திருவுடலாகிய திருச்சபைக்கும் இந்த அறிக்கை பொருந்தும், மத்தேயு 16:18.

வசனம் 129:3
"உழவர் என் முதுகின் மீது உழுது நீண்ட படைச்சால்களை உண்டாக்கினர்" -
மிகவும் கொடூரமான, சகிக்க முடியாத துயரை வெளிப்படுத்தும் செயல்; இது கிலயாதுக்கு தமஸ்கு நகரினர் செய்த கொடுஞ்செயலை நினைவூட்டுவதாக உள்ளது, ஆமோஸ் 1:3. இஸ்ரயேல் ஒரு நிலப்பகுதியாகவும் எதிர் கொண்ட சிதைவுகளை இந்த வசனம் நமக்கு உணர்த்துகிறது. வடநாடாகிய சமாரியாவும், தென்னாடாகிய யூதேயாவும், இறுதிப்போர்களில் வீழ்ந்தபோது, அவற்றின் அரண்சூழ் நகர்கள் அனைத்தும் தகர்க்கப்பட்டன; விளைநிலங்கள் அழிக்கப்பட்டன.

வசனம் 129:4
தமது கட்டளைகளை மீறிய இஸ்ரயேலைத் தண்டித்தாலும், மன்னிக்கும் தயை உடையவராக ஆண்டவர் சிறைப்பட்ட இஸ்ரயேலரை விடுவித்தார்.

வசனம் 129:5-7
128:5 எதிர் 129:5-7!
சீயோனை எதிர்ப்போருக்கு என்ன நேரிடும் என்பதை திருப்பாடகர் குறிப்பிடுகிறார்.

வசனம் 129:6-7
மீண்டும் ஓர் உவமை, கூரை மீது முளைத்த புற்கள், எசாயா 37:27. கூரையில் அடர்ந்து வளர்ந்தாலும், வெயில் காலம் வரும் போது அவை அழிவுறும்; அரிந்து கட்டினாலோ அவை

ஒரு சுமை அளவுக்கும் தேறாது. இஸ்ரயேலின் எதிரிகளின் வீழ்ச்சி அவ்வளவு சிறுமையாக இருக்கும்.

வசனம் 129:8
பார்க்க, ரூத் 2:4. மேலும் 122:6-9 மற்றும் குறிப்பு.
சீயோனின் நல்வாழ்வை ஆசிப்போர் யார்? வழிப்போக்கரோ? என்றுமுள ஆண்டவரை உணர்ந்தோர் மட்டுமே, அவர்தம் மறுவருகைக்காகக் காத்திருப்போர் மட்டுமே இஸ்ரயேலுக்காக மன்றாடுவர்.

✝

## 19 திருப்பாடல் 130

(உதவிக்காக மன்றாடல்)

*சீயோன் மலைத் திருப்பயணப் பாடல்*
1 ஆண்டவரே!
ஆழ்ந்த துயரத்தில் இருக்கும் நான்
உம்மை நோக்கி மன்றாடுகிறேன்;
2 ஆண்டவரே!
என் மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்;
என் விண்ணப்பக் குரலை
உம்முடைய செவிகள் கவனத்துடன் கேட்கட்டும்.
3 ஆண்டவரே!
நீர் எம் குற்றங்களை மனத்தில் கொண்டிருந்தால்,
யார்தான் நிலைத்து நிற்க முடியும்?
4 நீரோ மன்னிப்பு அளிப்பவர்;
மனிதரும் உமக்கு அஞ்சி நடப்பர்.
5 ஆண்டவருக்காக
ஆவலுடன் நான் காத்திருக்கின்றேன்;
என் நெஞ்சம் காத்திருக்கின்றது;
அவரது சொற்களுக்காக
ஆவலுடன் காத்திருக்கின்றேன்.
6 விடியலுக்காய்க் காத்திருக்கும் காவலரைவிட,
ஆம், விடியலுக்காய்க் காத்திருக்கும் காவலரைவிட,
என் நெஞ்சம் என் தலைவருக்காய்
ஆவலுடன் காத்திருக்கின்றது.
7 இஸ்ரயேலே! ஆண்டவரையே நம்பியிரு;
பேரன்பு ஆண்டவரிடமே உள்ளது;
மிகுதியான மீட்பு அவரிடமே உண்டு.
8 எல்லாத் தீவினைகளினின்றும்
இஸ்ரயேலரை மீட்பவர் அவரே!

திருப்பாடல் 130:1-8

**சிந்தனைக்கு**

மன்றாட்டுத் திருப்பாடல்களில் ஒன்று (இதர மன்றாட்டுத் திருப்பாடல்கள், 6, 32, 38, 51, 106 & 143). மார்ட்டின் லூதர் கொண்டாடும் மற்றுமொரு திருப்பாடல்; அவர் இத்திருப்பாடலை

அடியொற்றிப் பாமாலை ஒன்றையும் இயற்றியுள்ளார்; கடும் வேதனையில் வாடும் வேளையில், "'ஆழங்களிலிருந்து வெளியே...' திருப்பாடலைப் பாடுவோம், வாருங்கள்," என்று பாடி அவர் தன்னை ஆற்றுப்படுத்திக் கொள்வார்; உடன் ஊழியர்களை ஊக்கப்படுத்துவார். தமிழிலும் இந்தத் திருப்பாடலின் அடிப்படையில் பாடல்கள் உள்ளன. மன்னிப்பின் நற்செய்தியைக் கூறும் திருப்பாடல் என்றும் லூதர் குறிப்பிடுகிறார். பாவத்தின் விளைவுகளைப் பற்றிப் பேசாமல், மன்னிப்பால் நீதிமானாக்கப்படும் மீட்பை முன்வைப்பதாக இந்தத் திருப்பாடல் உள்ளது.

திருப்பயணப் பாடல்களில் பதினோராம் பாடல். சீயோன் மலை அல்லது பயணம் குறித்த எந்தவொரு குறிப்பும் பாடலில் இல்லை. எழுதியவர், எழுதப்பட்ட காலம் மற்றும் சூழல் குறித்த நேரடியான குறிப்பு ஏதுமில்லை.

முதல் ஆறு வசனங்களில் ஆண்டவர் குறித்த தன்னுணர்வை வெளிப்படுத்தும் திருப்பாடகர், கடைசி இரண்டு வசனங்களை, இஸ்ரயேலருக்குப் போதனையாக அமைத்துள்ளார்.

அமைப்பு:
வ.1-4, மன்னிப்பு அருளும் ஆண்டவர்
வ.5-6, திருப்பாடகரின் பற்றுறுதி அறிக்கை
வ.7-8, நற்செய்தியை இஸ்ரயேலருக்கு அறிவித்தல்

வசனம் 130:1
"ஆழ்ந்த துயரத்தில் இருக்கும் நான்..." -
துயர் என்னும் சொல் மூலத்தில் இல்லை; ஆழங்களில் மூழ்கிக் கொண்டிருக்கும் ஒருவரின் மன்றாட்டு, 69:2&14, 71:20, 86:13.
ஒருவேளை, சிறையிருப்பில் ஒடுக்கப்பட்ட ஒருவரின் மன்றாட்டாக இருக்கலாம். துயரில் மூழ்கும் ஒருவரை, இவ்வுலகோர் கைவிடலாம் - ஆனால் அவரை ஆண்டவர் ஒருபோதும் கைவிடுவதில்லை.

வசனம் 130:2
இறையன்பர்களின் நம்பிக்கையுள்ள மன்றாட்டு, 5:1-2, 17:1, 55:1-2, 61:1-2; 2 குறிப்பேடு 6:40; நெகேமியா 1:6&11; எசாயா 37:17; தானியேல் 9:17-19.

வசனம் 130:3
இணை, 76:7. மேலும் பார்க்க, 1 சாமுவேல் 6:20.
நமது பாவங்கள் நம் கண்களுக்கு முன்பாக எப்போதும் இருக்கின்றன; அவை ஆண்டவர் முன்பாக எப்போதும் இருந்தால், நமது நிலை எவ்வளவு பரிதாபமாக, கேவலமாக இருக்கும்! உண்மையில் அவரோ, கிழக்குக்கும் மேற்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாக நமது பாவங்களை நீக்குகிறார் (103:12); மன்னித்த பிறகோ, அந்தப் பாவத்தை அவர் நினைவில் வைப்பதும் இல்லை (எரேமியா 31:34).

வசனம் 130:4
"நீரோ மன்னிப்பு அளிப்பவர்" -
பார்க்க, 25:11-12, 32:1, 34:6-7; விடுதலைப் பயணம் 34:7; தானியேல் 9:9; மற்றும் பல வசனங்கள்.

"மனிதரும் உமக்கு அஞ்சி நடப்பர்" -
மனித மனம், மன்னிப்போருக்கு அஞ்சுமா? தண்டிப்போருக்கு அஞ்சுமா?

இறையச்சம் என்பது கடவுளை நேசிப்போரிடம் இருக்கும் பண்பு; மேலும் மன்னிப்புக்கு முந்தைய நிலை, மனம் வருந்தி மன்னிப்பை வேண்டுதல். அஞ்சாதோர் மன்னிப்பை நினைத்துப் பார்ப்பதும் இல்லை.

வசனம் 130:5-6
காத்திருத்தல் நமது வாழ்வின் பல வேளைகளில் நடப்பது; அவை எதிலிருந்தும் ஆண்டவருக்காகக் காத்திருத்தல் முற்றிலும் வேறானது; எப்படிப்பட்ட மோசமான நிலையிலும் (வ.1), உறுதியான, தளராத நம்பிக்கையோடும், மீட்பின் எதிர்நோக்கோடும் காத்திருப்பது. விசுவாசிக்கிறவன் பதறான்.

வசனம் 130:6
அழகிய மற்றுமோர் உவமை - விடியலுக்காகக் காத்திருக்கும் காவலர்; விடியல் உறுதி, ஆனால் இரவோ நெடிது!

வசனம் 130:7
லூதரின் கோட்பாட்டின் இரண்டு கூறுகள் இந்த வசனத்தில் உள்ளன - விசுவாசத்தால் மட்டும், கிருபையால் மட்டும்.

"மிகுதியான மீட்பு அவரிடமே உண்டு" -
பார்க்க, 111:9; எசாயா 50:2, 55:1-3.

வசனம் 130:8
இணை, 25:22, 103:3-4.
உடன்படிக்கையின் மக்களான இஸ்ரயேலை மட்டுமல்ல, தம் மக்கள் அனைவரையும் பாவங்களிலிருந்து மீட்பவர் கிறிஸ்து இயேசு, மத்தேயு 1:21.

✝

## 19 திருப்பாடல் 131

(பணிவு மிகு மன்றாட்டு)

*சீயோன் மலைத் திருப்பயணப் பாடல்; தாவீதுக்கு உரியது*
1 ஆண்டவரே! என் உள்ளத்தில் இறுமாப்பு இல்லை;
என் பார்வையில் செருக்கு இல்லை;
எனக்கு மிஞ்சின அரிய, பெரிய, செயல்களில்
நான் ஈடுபடுவதில்லை;
2 மாறாக, என் நெஞ்சம்
நிறைவும் அமைதியும் கொண்டுள்ளது;
தாய்மடி தவழும் குழந்தையென
என் நெஞ்சம் என்னகத்தே அமைதியாயுள்ளது.
3 இஸ்ரயேலே!
இப்போதும் எப்போதும்
ஆண்டவரையே நம்பியிரு!

திருப்பாடல் 131:1-3

**சிந்தனைக்கு**

திருப்பயணப் பாடல்களில், மூன்று வசனத் திருப்பாடல்களில், தாவீதுக்கு உரிய இரண்டு திருப்பாடல்களில் முதலில் வருவது. இதற்கு முந்தைய, தாவீதுக்கு உரிய மலைப் பயணத் திருப்பாடல்கள் போலவே, தாவீதின் பெயர் தொன்மையான சில மொழிபெயர்ப்புகளில் இல்லை என்கின்றனர். அந்த ஒரு காரணத்திற்காக, தாவீதுக்கு உரியது என்பதை மறுத்துவிட முடியாது. பாடலும், பாடுபொருளும் தாவீதே! (2 சாமுவேல் 6:22)

"திருப்பாடல்கள் வாசிப்பில் சிறியது; பயில்வதில் நெடியது. சிறு குழந்தையைக் குறித்துப் பேசுவது; ஆனால் கிறிஸ்துவுக்குள் வாழும் ஒருவரின் மாபெரும் அனுபவத்தைத் தருவது," என்று சார்ல்ஸ் ஸ்பர்ஜின் குறிப்பிடுகிறார்.

அமைப்பில் முந்தைய திருப்பாடலோடு இயைந்து இருக்கும் திருப்பாடல். முதலிரு வசனங்கள் மன்றாட்டாகவும், இறுதி வசனம் இஸ்ரயேலுக்கு அறிவுரையாகவும் உள்ளது.

வசனம் 131:1
இறுமாப்பு - தன்னை உயர்வாகவும், மற்றோரை இழிவாகவும் பார்க்கும் தன்மை. இத்தகைய சிந்தனை, நம்முள்ளும், மற்றோர் நடுவிலும் நமது அமைதியைக் குலைப்பது.

ஆனால் இங்கு, உள்ளத்தில் தாழ்மையோடு ஆண்டவரின் திருமுன் நிற்கும் திருப்பாடகர். பார்க்க, நீதிமொழிகள் 3:34; மேலும் பார்க்க, எசாயா 57:15; மத்தேயு 23:12; பிலிப்பியர் 2:3; யாக்கோபு 4:6; 1 பேதுரு 5:5.

தாழ்மை ஆண்டவர் விரும்புவது; ஆண்டவரைத் தங்கள் தலைவராக ஏற்றுக் கொண்டோருக்குள் முதன்மைப் பண்பாக விளைவது;
ஆண்டவருக்கு முன் மட்டும் என்றில்லாமல், சகோதரர்களுக்குள்ளும் பரிணமிப்பது; உலகோர் முன், ஆண்டவரின் அன்பர்களாக நம்மை அடையாளப் படுத்துவது!

"எனக்கு மிஞ்சின அரிய, பெரிய செயல்களில் நான் ஈடுபடுவதில்லை" -
தாழ்மை உள்ளம் கொண்டோர், இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவதில்லை. எல்லாவற்றிலும் மூக்கை நுழைப்பதில்லை. சவுல் மற்றும் இறைவாக்கினருக்கு உரிய மதிப்பைத் தருபவராகவே தாவீது அரசர் வாழ்ந்தார்.
தனக்கு அருளப்பட்ட திருப்பொழிவு குறித்த பெருமையின்றி, அடுத்தவரின் அருட்பொழிவு அல்லது திருப்பொழிவை மதிப்பவராகவும் தாவீது இருந்தார்.

வசனம் 131:2
திருப்பயணப் பாடல்களில் மீண்டுமொரு அருமையான உவமை - தாய் மடி தவழும் குழந்தை. அந்தக் குழந்தையின் அளவுக்கு நம் ஒவ்வொருவரின் நெஞ்சமும் ஆண்டவர் முன், நிறைவும், அமைதியும் கொண்டு இருக்கிறதா?
ஆம் என்று சொல்லும் முன் ஓர் எச்சரிக்கை: 'எனக்கு அது வேண்டும், என் மகளுக்கு இது வேண்டும்' என்று வேண்டினீர்கள் என்றால், நீங்கள் இந்தத் தகுதியை இழந்து விடுவீர்கள்!

குறிப்பு:
இங்கு குழந்தை என்று சொல்லப்பட்டிருப்பது, பால் குடி மறந்த குழந்தை, gaw-mal; பார்க்க, தொடக்க நூல் 21:8. அக்குழந்தை நடந்தாலும், அதன் வட்டம் தாயைச் சுற்றியே இருக்கும்.

வசனம் 131:3
இணை, 130:7 முன் பாகம்.
தன்னில் ஆண்டவருக்குள் நிறைவுடையோர், மற்றவர்களை ஆண்டவருக்குள் வழிநடத்தத் தக்கோர்!

## 19 திருப்பாடல் 132

(திருக்கோவில் வாழ்த்து)

*சீயோன் மலைத் திருப்பயணப் பாடல்*
1 ஆண்டவரே! தாவீதையும்
அவர் பட்ட இன்னல்கள் அனைத்தையும்
நினைவு கூர்ந்தருளும்.
2 அவர் ஆண்டவராகிய உமக்கு ஆணையிட்டுக் கூறியதை,
யாக்கோபின் வல்லவராகிய உமக்குச் செய்த
பொருத்தனையை நினைவுகூர்ந்தருளும்.
3 "ஆண்டவருக்கு ஓர் இடத்தை,
யாக்கோபின் வல்லவருக்கு ஓர் உறைவிடத்தை
நான் அமைக்கும் வரையில்,
4 என் இல்லமாகிய கூடாரத்தினுள் செல்ல மாட்டேன்;
படுப்பதற்காக என் மஞ்சத்தில் ஏற மாட்டேன்;
5 என் கண்களைத் தூங்கவிட மாட்டேன்;
என் இமைகளை மூடவிட மாட்டேன்"
என்று அவர் சொன்னாரே.
6 திருப்பேழை எப்ராத்தாவில்
இருப்பதாய்க் கேள்விப்பட்டோம்;
வனவெளியில் அதைக் கண்டுபிடித்தோம்.
7 "அவரது உறைவிடத்திற்குச் செல்வோம்!
வாருங்கள்; அவரது திருவடிதாங்கி
முன் வீழ்ந்து பணிவோம்!" என்றோம்.
8 ஆண்டவரே! நீர்
உமது வல்லமை விளங்கும் பேழையுடன்
உமது உறைவிடத்திற்கு எழுந்தருள்வீராக!
9 உம் குருக்கள் நீதியை ஆடையென அணிவார்களாக!
உம் அன்பர்கள் அக்களிப்பார்களாக!
10 நீர் திருப்பொழிவு செய்த அரசரை,
உம் ஊழியராகிய தாவீதின் பொருட்டுப்
புறக்கணியாதேயும்.
11 ஆண்டவர் தாவீதுக்கு
உண்மையாய் ஆணையிட்டுக் கூறினார்;
அவர்தம் வாக்குறுதியினின்று பின்வாங்க மாட்டார்;
"உனக்குப் பிறந்த ஒருவனை அரசனாக ஏற்படுத்தி
உன் அரியணையில் வீற்றிருக்கச் செய்வேன்.
12 உன் மைந்தர் என் உடன்படிக்கையையும்,
நான் அவர்களுக்குக் கற்பிக்கும் என் நியமங்களையும்

கடைப்பிடித்தால் அவர்களுடைய மைந்தரும்
என்றென்றும் உன் அரியணையில் வீற்றிருப்பர்."
13 ஆண்டவர் சீயோனைத் தேர்ந்தெடுத்தார்;
அதையே தம் உறைவிடமாக்க விரும்பினார்.
14 "இது என்றென்றும் நான் இளைப்பாறும் இடம்;
இதை நான் விரும்பினதால்
இதையே என் உறைவிடமாக்குவேன்.
15 "இங்கே என் ஆசியால்
உணவுப் பொருள் தாராளமாகக் கிடைக்கச்செய்வேன்;
அதனை ஏழைகள் உண்டு நிறைவு பெறுமாறு செய்வேன்.
16 "இங்குள்ள குருக்களுக்கு
மீட்பெனும் உடையை உடுத்துவேன்;
இங்குள்ள என் அன்பர்கள்
மகிழ்ந்து ஆரவாரிப்பார்கள்.
17 "இங்கே தாவீதின் மரபிலிருந்து
ஒரு வல்லவனை எழச்செய்வேன்;
நான் திருப்பொழிவு செய்தவனுக்காக
ஓர் ஒளிவிளக்கை ஏற்பாடு செய்துள்ளேன்.
18 "அவனுடைய எதிரிகளுக்கு
இகழ்ச்சியெனும் உடையை உடுத்துவேன்;
அவன்மீதோ அவனது மணிமுடி ஒளிவீசும்".

திருப்பாடல் 132:1-18

**சிந்தனைக்கு**

இஸ்ரயேல் நாட்டின் அரசர் மற்றும் குருக்களின் நல்வாழ்வை வேண்டிப் பாடப்பட்ட சீயோன் மலைத் திருப்பயணப் பாடல். தாவீது மற்றும் சாலமோன் அரசர்களின் வாழ்கால நிகழ்ச்சிகளை நினைவூட்டும் திருப்பாடல்:

* வ.8-10 > 2 குறிப்பேடு 6:41-42
* வ.11 > 2 சாமுவேல் 7:12-16; 1 குறிப்பேடு 17:11-14
* வ.17 > 1 அரசர்கள் 11:36

கிரியத் எயாரிம் என்ற இடத்தில் இருந்த உடன்படிக்கைப் பேழையை எருசலேமுக்கு எடுத்து வருதல் என்பது ஒரு பெரும் விழாவாக நடந்தது, 2 சாமுவேல் 6:1-22; 1 குறிப்பேடு 13:1-13&15:1~16:36. பேழை எருசலேமில் பவனியாக எடுத்துச் செல்லப்பட்ட நாளில், அரசரையும் குருக்களையும் சிறப்பித்து, அன்றைக்கு வாழ்ந்த ஒரு லேவியர் பாடிய பாடலாக இருக்கலாம். மோசேயின் காலம் முதல் அரசர்கள் காலம் வரை, உடன்படிக்கைப் பேழைக்கு ஒரு சிறப்பிடம் உண்டு. ஆனால் திருப்பாடல்கள் அனைத்திலும், பேழை இடம்பெறுவது இந்த ஒரு திருப்பாடலில் மட்டுமே.

வ.8-10ன் அடிப்படையில், திருக்கோவில் அர்ப்பண நாளில் பாடப்பட்ட பாடலாக இருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது; அதே அடிப்படையில், சாலமோன் காலத்திற்கு முன்பே இருந்த பாடலை, அவர் தனது மன்றாட்டில் முன் வைத்தார் (2 குறிப்பேடு 6:41-42) என்றே கருதலாம். திருப்பயணப் பாடல் என்பதால், சிறை மீண்டோரின் காலத்தில் எழுதப்பட்ட பாடல் என்ற கருத்தும் உள்ளது (வ.13) - ஆனால் அவ்வாறு கருதுவதற்கு எந்த அடிப்படையும் இல்லை.

மேசியாவின் திருப்பாடல் என்று இப்பாடல் கருதப்படுகிறது; திருத்தூதர் பணிகள் நூலில் (2:30), வ.11 எடுத்தாளப்பட்டுள்ளதை இந்த வாதத்திற்குச் சான்றாக முன்வைக்கின்றனர்;

தாவீதின் வழிவந்த அரசர்கள் அனைவருக்கும் பொருந்தக்கூடிய ஒரு வசனத்தின் அடிப்படையில் மேசியாவின் திருப்பாடல் என்று சொல்லி விடமுடியாது.

அமைப்பு:
வ.1-10, தாவீதின் ஆணையும் மக்களின் மன்றாட்டும்
வ.11-18, மன்றாட்டுக்கு ஆண்டவர் ஆணையிட்டு உரைத்த மறுமொழி

வசனம் 132:1
"தாவீதையும் அவர் பட்ட இன்னல்கள் அனைத்தையும்" -
ஆண்டவர் அருளிய அருட்பொழிவின் பொருட்டு, தன் உயிரைக் காக்க பாறைகளின் இடுக்குகளில் பதுங்கி வாழ்ந்த தாவீது, இஸ்ரயேலின் எதிரிகள் நடுவே வாழ்ந்த தாவீது, சாவு வரை துயரால் துரத்தப்பட்ட தாவீது, அந்த இன்னல்கள் அனைத்திற்கும் மேலாக, கடவுளின் பேழை கூடாரத்தில் இருக்க, தான் கேதுரு மரங்களாலான மாளிகையில் வாழ்வதை எண்ணித் துயருற்றார், 2 சாமுவேல் 7:2.

வசனம் 132:2
"...ஆணை ... பொருத்தனை" -
பார்க்க, வ.3-5.
தாவீது அரசர் இதுபோன்ற பொருத்தனை செய்ததாக வரலாற்று நூல்களில் குறிப்பு ஏதுமில்லை. இந்த வசனத்தின் அடிப்படையில், ஸ்தேவான் அறிக்கையிடல், திருத்தூதர் பணிகள் 7:46.

வசனம் 132:6-7
இவ்விரு வசனங்கள் மிகவும் விரிவாக, 1 குறிப்பேடு 15 ~ 16 அதிகாரங்களில்.

வசனம் 132:6
"திருப்பேழை எப்ராத்தாவில்..." -
எப்ராத்தா என்பது பெத்லகேமின் மறுபெயர் (மீக்கா 5:2). அங்கு பேழை இருந்ததாக வரலாற்று நூல்களில் செய்தி இல்லை. ஒருவேளை, 'எப்ராத்தா ஊரில் தாவீது இருந்த போது, வனவெளியில் பேழை இருந்ததாக' கேள்விப்பட்டார் என்று இருக்கலாமோ? எப்ராயிம் மற்றும் எப்ராத்தா சொற்களுக்கு இடையிலான குழப்பம் 1 சாமுவேல் 1:1ல் உள்ளது (பார்க்க KJV).

டெலிட்ச்ஸ் என்னும் அறிஞர் வேறு ஒரு விளக்கம் தருகிறார்:
காலேபுக்கு எப்ராத் வழியாகப் பிறந்தவன் கூர் (Hur), 1 குறிப்பேடு 2:19; கூர் என்பவன் பெத்லகேமியரின் மூதாதை, 1 குறிப்பேடு 4:4; கூரின் மகனான சோபால், கிரியத் எயாரிமின் மூதாதை, 1 குறிப்பேடு 2:50; கூரின் மற்றொரு மகனான பெத்லகேமின் மூதாதையான சல்மா, 1 குறிப்பேடு 2:51; இவ்வாறு, காலேப் மற்றும் எப்ராத் இணையரின் வழிமரபில் வந்தோர் வாழ்ந்த, பெத்லகேம், கிரியத் எயாரிம் அடங்கிய நிலப்பகுதி எப்ராத்தா என்று அழைக்கப்பட்டு இருக்கலாம் என்பது டெலிட்ச்ஸ் அறிஞரின் ஆய்வு.

வசனம் 132:7
திருவடிதாங்கி முன் -
கடவுளின் கால்மனையாகிய உடன்படிக்கைப் பேழை, 1 குறிப்பேடு 28:2.

வசனம் 132:8-10
முன்னுரையில் குறிப்பிட்டுள்ளபடி, 2 குறிப்பேடு 6:41-42.

வசனம் 132:9
"உம் குருக்கள் நீதியை ஆடையென அணிவார்களாக" -
கடவுளின் குருக்களின் அடிப்படைப் பண்பு; இன்றைக்கு நாம் அனைவருமே ஆண்டவரின் அரசக் குருக்கள் என்பதை மறக்க வேண்டாம்; இறைமக்களாகிய நமது நீதியுள்ள செயல்களே ஆட்டுக்குட்டியானவரின் திருமணத்தில் மணமகளின் ஆடை, திருவெளிப்பாடு 19:6-9. எனவே நாம் ஒவ்வொருவரும் எந்த இடத்தில் என்ன பணியில் இருந்தாலும், நமது செயல்கள் நீதியுள்ளவையாக அமைய வேண்டும்.

வசனம் 132:10
பார்க்க, 61:7.
அரசருக்கான மன்றாட்டு - தாவீதுக்கும் அவரின் வழிமரபுக்குமான மன்றாட்டு - 2 சாமுவேல் 7:16ல் அருளப்பட்ட வாக்குத்தத்தம் மற்றும் அதனைத் தொடர்ந்த மன்றாட்டு, 2 சாமுவேல் 7:26&29.

வசனம் 132:11-12
கடவுள் அருளிய வாக்கு, 89:3-4; 2 சாமுவேல் 7:12-16; 1 குறிப்பேடு 17:11-14.

வசனம் 132:11
வ.2ல், ஆண்டவருக்குப் பொருத்தனை செய்து ஆணையிட்ட தாவீது; இங்கு, தாவீதுக்கு ஆணையிட்டு உரைக்கும் ஆண்டவர்.

வசனம் 132:12
"...என் உடன்படிக்கையையும் ... என் நியமங்களையும்..." -
மோசே வழியாக ஆண்டவர் வழங்கிய திருச்சட்டங்கள்.

வசனம் 132:13
தாவீதிய வழிமரபின் ஆட்சி நிலைபெறுதல் என்பது சீயோனை ஆண்டவர் தெரிந்து கொள்வதில் உறுதி அடைகிறது. அங்கு எழுப்பப்பட்ட திருக்கோவிலில் தமது மாட்சியை அவர் வெளிப்படுத்தி, இஸ்ரயேலர் அனைவருக்கும் அதனை உறுதிப்படுத்தினார், 1 அரசர்கள் 8:10-11. இறையாட்சியின் அச்சாக எருசலேம் - வருங்காலத்திற்குரிய இறைவாக்கு, செக்கரியா 2:12.

வசனம் 132:14
"...நான் இளைப்பாறும் இடம்" -
பார்க்க, வ.8; எசாயா 11:10.
அதேவேளையில், "விண்ணகம் என் அரியணை; மண்ணகம் என் கால்மனை; அவ்வாறிருக்க, ... எத்தகைய இடத்தில் நான் ஓய்வெடுப்பேன்?" என்று ஆண்டவர் எழுப்பும் கேள்வியை நினைவில் கொள்வோம்.

வசனம் 132:15
தாராளமான ஆசி - abundant blessing என்பது இன்றைய பிரசங்க பீடங்களை அலங்கரிக்கும் கருப்பொருள். ஆனால் ஆண்டவர் இங்குத் தெளிவுபடுத்துவது, அவர் அருளும் ஆசிகள் ஏழைகள் நிறைவு பெறுவதற்கு என்பதே!
மேலும் பார்க்க, இணைச் சட்டம் 15:4.

வசனம் 132:16
பார்க்க, வ.9. மேலும், நீதியும் மீட்பும் பல தருணங்களில் சேர்த்தே குறிப்பிடப்பட்டுள்ளன, 40:10, 51:14, 71:15, 98:2; எசாயா 45:8, 46:13, 51:5&6, 56:1, 59:17, 60:17-18, 61:10,62:1.

நீதி நிறைவடைவது மீட்பு விளங்கும் போதே! ஆண்டவரின் குருக்களாக (1 பேதுரு 2:9) இருக்கும் நாம் ஒவ்வொருவரும் எந்தவொரு அடிமைத்தனத்திலிருந்தும் ஏனையோரை விடுவிப்போராக வாழ வேண்டும்.

வசனம் 132:17-18
"தாவீதின் மரபிலிருந்து ஒரு வல்லவனை..." -
வல்லவன் அல்லது கொம்பு என்பது அரசனைக் குறிப்பது. இதுவே இறைவாக்கினரின் நம்பிக்கை, எரேமியா 23:5, 33:15; எசேக்கியேல் 29:21; செக்கரியா 3:8, 6:12.

எதிரிகளுக்கு இகழ்ச்சி என்பது மீட்புக்கு நேர் எதிராக அமைவது, 35:4&26; அவர்களின் குற்றங்களினால் அவர்களுக்கே நேரிடும் மானக்கேடு.

## 19 திருப்பாடல் 133

*(சகோதர அன்பின் சிறப்பு)*

*சீயோன் மலைத் திருப்பயணப் பாடல்; தாவீதுக்கு உரியது*
1 சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது
எத்துணை நன்று,
எத்துணை இனியது!
2 அது ஆரோனின் தலையினிலே
ஊற்றப்பெற்ற நறுமணத்தைலம்;
அவருடைய தாடியினின்று வழிந்தோடி
அவருடைய அங்கியின் விளிம்பை
நனைப்பதற்கு ஒப்பாகும்.
3 அது எர்மோனின் மலைப்பனி
சீயோனின் மலைகள்மேல்
இறங்குவதற்கு ஒப்பாகும்;
ஏனெனில், அங்கிருந்தே
என்றுமுள வாழ்வென்னும் ஆசிதனை
ஆண்டவர் பொழிந்தருள்வார்.

திருப்பாடல் 133:1-3

**சிந்தனைக்கு**

வெவ்வேறு திசைகளில் பிரிந்து கிடந்த இஸ்ரயேலர், சிறை மீண்டு மீண்டும் சந்திக்கும் போது, அதுவும் எருசலேமில் சந்திக்கும் போது, அது எவ்வளவு இன்பமாக இருந்திருக்கும்! அந்த இன்பத்தை நாம் நெகேமியா 8:1-11 பகுதியை வாசித்து உணரலாம். அதிலும் எருசலேமிலேயே குடியிருக்க முன்வந்தோரின் மகிழ்ச்சி! (நெகேமியா 11:2)

திருப்பயணத் திருப்பாடல்களில் பதினான்காம் பாடல்; உணர்வுப் பூர்வமான அழகிய கவிதை! நமது திருவிருந்துகளுக்கு முன்பாக, இப்பாடலின் முதல் வசனம் வாசிக்கப்படுகிறது. மாறாக இப்பாடலின் அடிப்படையில் இயற்றப்பட்ட பாமாலை 170 பாடப்படுவதும் உண்டு.

இஸ்ரயேலர் என்போர் 12 சகோதரர்களின் வழிமரபினர் என்பதை நாம் அறிவோம் (இந்திய சமுதாயம் அடிப்படையிலேயே வருண பேதம் உடையது - பாகுபடுத்தி ஆதிக்கம் செலுத்தி மகிழ்வது); சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களின் தந்தையார் யாக்கோபு வழங்கிய ஆசிகள் வெவ்வேறு (தொடக்க நூல் 49); ஆனால் அவர்களுக்குள் பாகுபாடு ஏதுமில்லை. அவர்கள் எண்ணிக்கையில் பெருகிய போதும், ஆண்டுக்கு மூன்று முறை கடவுளின் கூடாரத்தில் ஒன்று சேர்ந்து நன்றிப்பலிகளை ஏறெடுக்க வேண்டும். அதுபோன்ற ஒரு கூடுகையை இப்பாடல் விவரிக்கிறது.

தாவீதுக்கு உரியது என்பதைத் தலைப்பில் வாசிக்கிறோம். காலம் அல்லது சூழல் குறித்த குறிப்பு ஏதுமில்லை. இஸ்ரயேலர் அனைவரின் கூடுகை எனும் அடிப்படையில், இஸ்ரயேல் முழுமைக்கும் அரசராக தாவீது திருப்பொழிவு பெற்ற நிகழ்வாக (2 சாமுவேல் 5:1-3; 1 குறிப்பேடு 12:38-39) இருக்கலாம். சிறை மீண்ட காலமாக இருக்க வாய்ப்பில்லை, ஏனெனில் தலைமைக் குருவின் தலையில் எண்ணெய் வார்க்கும் வழக்கம் இரண்டாம் திருக்கோவில் காலத்தில் இல்லை என்கின்றனர் ஆய்வாளர்கள்.

வசனம் 133:1
பழைய ஏற்பாட்டுக் காலத்தில் சகோதரர்கள் என்பது குறித்து முன்னுரையில் பார்த்தோம். கடவுள் நம் அனைவரின் விண்ணகத் தந்தை என்கிற அடிப்படையில், புதிய ஏற்பாட்டில் நாம் அனைவருமே சகோதர சகோதரிகளே! நாம் அனைவருமே கிறிஸ்துவுக்குள் ஒன்றாக இருக்கிறோம் (யோவான் 17:11&21-22; உரோமையர் 12:10; 1 தெசலோனிக்கர் 4:9; எபிரேயர் 13:1; 1 பேதுரு 1:22; 2 பேதுரு 1:5-7).

வசனம் 133:2
நறுமணத் தைலம் மகிழ்வூட்டுவது (45:7); ஆரோனுக்கு உரிய தைலம் சிறப்பாக ஆயத்தம் செய்யப்பட்ட திருப்பொழிவு எண்ணெய், விடுதலைப் பயணம் 30:23-33. குருக்கள் மீது திருப்பொழிவு எண்ணெய் தெளிக்கப்படும், தலைமைக் குருவின் தலை மீதோ ஊற்றப்படும் (விடுதலைப் பயணம் 29:21 & 29:7; லேவியர் 8:12 & 21:10). தலையில் வார்க்கப்படும் திருப்பொழிவு எண்ணெய், ஆரோனின் தாடி வழியே வழிந்தோடி ஆடையில் வடிவது என்பது இயல்பு. ஏபோது மீது வழியும் எண்ணெய், ஆரோனின் மார்பில் பொருத்தப்படும் பனிரெண்டு குலங்களைக் குறிக்கும் பனிரெண்டு கற்கள் பதிக்கப்பட்ட மார்புப் பட்டை வழியே வடிந்து இறங்கும். இவ்வாறு பனிரெண்டு குலங்களும் ஆரோனின் திருப்பொழிவால் திருநிலைப்படுத்தப் பெறுகின்றன. சூழ்ந்திருக்கும் இஸ்ரயேலர் நடுவே திருப்பொழிவு எண்ணெய் நறுமணம் வீசிக் கமழும். வேறு எங்கும் கிடைக்காத தூய உணர்வு ஆண்டவரின் கூடாரத்தில் இஸ்ரயேலரை ஆட்கொள்ளும். இவ்வாறு இஸ்ரயேலர் அனைவரும் இசைவிணைப்பாய் ஒன்றுபடுவர். ஆண்டவரில் களிகூருவர், 122:1-9. இங்கு ஆரோன் என்பது தலைமைக் குரு என்பதன் குறியீடு.

வசனம் 133:3
தலையில் வார்க்கப்பட்ட திருப்பொழிவு எண்ணெய் தாடியின் வழியே ஏபோதின் மார்புப் பட்டையை நனைக்க, வெளிவந்த நறுமணம் ஆலயத்தில் கூடியிருந்த மக்களைப் பரவசப்படுத்தியது; இதற்கு ஓர் ஒப்பீடாக இன்னொரு காட்சியைத் தருகிறார், திருப்பாடகர்.

மழைப் பொழிவும் செழிப்பும் மிக்க, பனி படர்ந்த, வடக்கில் உள்ள உயரிய எர்மோன் மலைத் தொடர், அடர்ந்த பனியை, தெற்கே உள்ள, வறண்ட சீயோன் மலை மீது, காற்றில் தவழ்ந்து மழை போல் பொழிகிறது.

*ஆனால் சீயோன் மலையோ, ஆண்டவரின் அருள் பெற்றதாக, என்றுமுள வாழ்வெனும் ஆசியை அனைவருக்கும் வழங்குவதாக உள்ளது* (36:9, 134:3, 147:12-15).

*நிலம் சார்ந்த தொன்மையான சமுதாயங்களில் குடும்பமாக, கிராமமாக இணைந்து உழைக்க வேண்டிய தேவை இருந்தது; ஓர் இயந்திரம் அல்லது கருவி அல்லது கணினி வைத்து பணிபுரியும் இன்று, அந்தத் தேவை இல்லை. பொருளாதார அவசியம் இல்லாவிட்டாலும், உணர்வுகளின் அடிப்படையில், குடும்பங்களில் சகோதர சகோதரிகள் சேர்ந்து வாழ்வது ஓர் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க உதவும். கூடி வாழ்ந்தால் கோடி நன்மை, பொறுத்தார் பூமி ஆள்வார் - என்றெல்லாம் படித்துள்ளோம். ஆனால் இன்று சகிப்புத் தன்மை இல்லை, ஒருவர் எவ்வளவு விட்டுக் கொடுத்தாலும் மற்றவருக்குப் போதவில்லை. பொன்னாசை, பொருளாசை, மண்ணாசை என்று பலவும் சகோதர அன்பைச் சீர் குலைக்கின்றன. "பொருளாசையை விலக்கி வாழுங்கள். உள்ளதே போதும் என்றிருங்கள். ஏனெனில், 'நான் ஒருபோதும் உன்னைக் கைவிடமாட்டேன்! உன்னை விட்டு விலகமாட்டேன்' என்று கடவுளே கூறியிருக்கிறார்" (எபிரேயர்* 13:5).

*ஜாதி, வருணம், சமயம், வண்ணம், அரசியல் - இவையெல்லாம் சமுதாயத்தில் சகோதரத்துவத்தைச் சீர் குலைக்கின்றன. தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்! எல்லோரும் ஆதாம் வழியே வந்தோர் தானே!*

*எனக்கு மிகவும் பிடித்த போதகர், ஓர் ஓய்வுநாள் செய்தியைத் தொடங்கும் போது சொன்னார்: "இதோ சகோதரர் ஒருமித்து* ***வாதம்*** *செய்வது எத்தனை இன்பமானது?" குழுக்களாகப் பிரிந்து கூட்டம் சேர்த்துப் புறம்பேசுவது திருச்சபைகளின் சாபக்கேடு!*
*ஆலயத்தைச் சுற்றியுள்ள மரங்கள் பேச ஆரம்பித்தால், சபை மக்கள் ஒருவரை ஒருவர் கண்கொண்டு பார்க்கக்கூட முடியாது! இன்றைய செயலாளர் அணியோ முந்தைய செயலாளர் அணியோ - அணிகட்டி நின்றால், உங்கள் அணியில் ஆண்டவர் இயேசு இல்லை! எப்போது நாம் ஆண்டவர் அணியில் இணையப் போகிறோம்?*

## 19 திருப்பாடல் 134

(*ஆண்டவரைப் போற்றுதல்*)

*சீயோன் மலைத் திருப்பயணப் பாடல்*
1 *இரவு நேரங்களில்*
*ஆண்டவரின் இல்லத்தில் பணி செய்யும்*
*ஆண்டவரின் ஊழியரே!*
*நீங்கள் அனைவரும்*
*ஆண்டவரைப் போற்றுங்கள்.*
2 *தூயகத்தை நோக்கிக் கைகளை உயர்த்தி*
*ஆண்டவரைப் போற்றுங்கள்.*
3 *விண்ணையும் மண்ணையும் உண்டாக்கிய ஆண்டவர்*
*சீயோனிலிருந்து உங்களுக்கு ஆசி வழங்குவாராக!*

*திருப்பாடல்* 134:1-3

**சிந்தனைக்கு**

சீயோன் மலைத் திருப்பயணப் பாடல்களில் இறுதிப் பாடல்.

ஆண்டவரின் திருமுன் நின்று பணிபுரியத் தெரிந்து கொள்ளப்பட்டோர், லேவியர் (இணைச் சட்டம் 10:8). ஆண்டவரின் ஊழியம் பகலில் மட்டுமன்றி, இரவிலும் தொடர்ந்ததை இந்தத் திருப்பாடல் உறுதிப்படுத்துகிறது; மேலும் பார்க்க, 1 குறிப்பேடு 9:33. இரவுப் பணி என்பதில் விழித்திருந்து ஆண்டவரைப் போற்றுதல் மட்டுமல்லாமல், விழித்திருந்து கண்காணிப்பதும் அடங்கும். அத்துணைப் பணிகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள், அதற்கென ஆண்டவரால் தெரிந்து கொள்ளப்பட்ட லேவியரே! ஆண்டவருக்குரிய பணி எதுவாயினும், அதற்கென ஆண்டவர் தெரிந்து கொண்ட ஒவ்வொருவரும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும் அந்தப் பொறுப்பில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இரவு நேரங்களில் பணிபுரியும் ஊழியர் என்பது இரவுக் காவலரைக் குறிப்பது என்று சில அறிஞர்கள் கருதுகின்றனர். பகலைவிட இரவில் காவல் பணி கூடுதல் கவனம் பெற்றாலும், இந்தக் கருத்து இந்தப் பாடலுக்குப் பொருத்தமானதல்ல.

பாடலை இயற்றியவர், இயற்றிய காலம் மற்றும் சூழல் குறித்த செய்தி ஏதுமில்லை. சிரியாக் மொழிபெயர்ப்பில், இந்தத் திருப்பாடலும் தாவீதுக்கு உரியது என்கிற குறிப்பு தலைப்பில் உள்ளது. கூடாரப் பணிப்பகுப்புகள் அனைத்தும் தாவீதின் காலத்திலேயே உருவாக்கப்பட்டன (1 குறிப்பேடு 23 ~ 26). எனவே தாவீதின் காலம் தொடங்கி, அதன் பிறகு எப்போது எழுதப்பட்ட பாடல் என்பதை அறுதியிட முடியாது. ஆனால் இந்தத் திருப்பாடல் உயரிய நோக்கம் கொண்டது; வாசிக்க, அமைப்பு மற்றும் பின்குறிப்பு.

அமைப்பு:
வ.1-2, குருக்கள் மற்றும் லேவியருக்கு இறைமக்களின் வேண்டுகோள்
வ.3, குருக்கள் மற்றும் லேவியரின் நம்பிக்கையூட்டும் மறுமொழி

வசனம் 134:1
"இரவு நேரங்களில்..." -
தொழுகையும் கோவில் பராமரிப்பும் பகலிரவு பாராமல் நிறைவாக நடப்பதை உறுதி செய்ய, குருக்களும் லேவியரும் முறைவைத்துச் செயல்பட்டனர்.

"...ஆண்டவரின் ஊழியர்..." -
குருக்கள் மற்றும் லேவியர்; விரிவான பகுப்பு, 1 குறிப்பேடு 23 ~ 26.

"ஆண்டவரைப் போற்றுங்கள்" -
மேலும் வ.2, 135:1.

வசனம் 134:2
"தூயகத்தை நோக்கிக் கைகளை உயர்த்தி..." -
பார்க்க, 28:2, 63:4, 119:48, 141:2.
இங்கு 'தூயகத்தை நோக்கி' என்பது கூடாரம் அல்லது கோவிலுக்கு உள்ளிருந்து, பேழை வைக்கப்பட்டுள்ள திருத்தூயகம் நோக்கி என்று பொருள் படும்.

வசனம் 134:3
"விண்ணையும் மண்ணையும் உண்டாக்கிய ஆண்டவர்..." -
பார்க்க, 115:15, 121:2, 124:8, 146:6; தொடக்க நூல் 1:1-31.

"...சீயோனிலிருந்து ... ஆசி..." -
பார்க்க, 133:3 மற்றும் குறிப்பு. மேலும், 20:2, 53:6, 128:5.
🕎

*சீயோன் மலைத் திருப்பயணம் முடிந்தது. கடவுளைத் தொழுது கொள்ள எருசலேம் வந்தோர், தங்கள் நன்றிப் பலிகளை நிறைவேற்றி விட்டு, இந்தத் திருப்பாடலைப் பாடிக் கொண்டே திரும்பிச் சென்றிருப்பர். அவர்கள் மீண்டும் எருசலேம் திரும்பி வரச் சில காலம் ஆகலாம். திருக்கோவிலை விட்டும் நகரை விட்டும் அவர்கள் வெளியேறும் போது, குருக்களும் லேவியரும் திருக்கோவிலின் ஊழியங்களில் தொடர்கிறார்கள் - தங்களின் சார்பாக வழிபாடும் பலிகளும் ஆண்டவருக்கு இடைவிடாது தொடர்கின்றன என்பது அவர்களுக்கு ஊக்கம் தரும் நம்பிக்கை.* (ஜேம்ஸ் மான்ட்கமரி பாய்ஸ்)

*இன்றைக்கு நமது திருச்சபைகளில் இந்த நம்பிக்கை இருக்கிறதா? இந்த உலகப் பணிகளுக்குப் புறப்பட்டுச் செல்லும் தங்கள் சபை மக்களை ஆசி தந்து வழியனுப்பும் சபை ஊழியர்கள், தங்கள் இறைமக்களின் நல்வாழ்வுக்கும் அவர்களின் அடுத்த வருகைக்கும் ஆண்டவர் திருமுன் முழங்காலில் நின்று மன்றாடுகிறார்களா? அத்தகைய திருச்சபையே ஆண்டவர் ஆசிக்கும் திருச்சபை!*

✝

## 19 திருப்பாடல் 135

*(புகழ்ச்சிப் பாடல்)*

1 அல்லேலூயா!
ஆண்டவரின் பெயரைப் புகழுங்கள்;
ஆண்டவரின் ஊழியரே! அவரைப் புகழுங்கள்.
2 ஆண்டவரின் கோவிலுள் நிற்பவர்களே!
நம் கடவுளின் கோவில் முற்றங்களில் உள்ளவர்களே!
3 ஆண்டவரைப் புகழுங்கள்!
ஏனெனில், அவர் நல்லவர்;
அவரது பெயரைப் போற்றிப் பாடுங்கள்;
ஏனெனில், அவர் இனியவர்.
4 ஆண்டவர் யாக்கோபைத்
தமக்கென்று தேர்ந்துகொண்டார்;
இஸ்ரயேலைத் தமக்குரிய
தனிச் சொத்தாகத் தெரிந்தெடுத்தார்.
5 ஆண்டவர் மேன்மைமிக்கவர் என்பதை அறிவேன்;
நம் ஆண்டவர் எல்லாத் தெய்வங்களுக்கும்
மேலானவர் என்பதும் எனக்குத் தெரியும்.
6 விண்ணிலும் மண்ணிலும்,
கடல்களிலும் எல்லா ஆழ்பகுதிகளிலும்,

ஆண்டவர் தமக்கு விருப்பமான
யாவற்றையும் செய்கின்றார்.
7 அவர் பூவுலகின் கடையெல்லைகளிலிருந்து
மேகங்களை எழச் செய்கின்றார்.
மழை பெய்யும்படி மின்னலை உண்டாக்குகின்றார்;
காற்றைத் தம் கிடங்குகளிலிருந்து
வெளிவரச் செய்கின்றார்.
8 அவர் எகிப்தின் தலைப்பேறுகளைத் தாக்கினார்;
மனிதர், கால்நடைகளின் தலைப்பேறுகளை அழித்தார்.
9 எகிப்து நாடே!
உன் நடுவில் பார்வோனையும்
அவனுடைய எல்லா ஊழியர்களையும் தண்டிக்குமாறு,
அடையாளங்களையும் அருஞ்செயல்களையும்
அவர் நிகழச் செய்தார்.
10 அவர் பல்வேறு இனத்தவரைத் தாக்கினார்;
வலிமைவாய்ந்த மன்னர்களைக் கொன்றார்.
11 எமோரியரின் மன்னனாகிய சீகோனையும்
பாசானின் மன்னனாகிய ஓகையும்
கானானின் எல்லா அரசுகளையும் அழித்தார்;
12 அவர்கள் நாட்டைத் தம் மக்களாகிய
இஸ்ரயேலருக்கு உரிமைச்சொத்தாக,
சொந்த உடைமையாகக் கொடுத்தார்.
13 ஆண்டவரே! உமது பெயர் என்றுமுள்ளது;
ஆண்டவரே! உம்மைப்பற்றிய நினைவு
தலைமுறை தலைமுறையாக நீடித்திருக்கும்.
14 ஆண்டவர் தம் மக்களை நீதியுடன் தீர்ப்பிடுவார்;
தம் அடியாருக்கு இரக்கம் காட்டுவார்.
15 வேற்றினத்தார் வழிபடும் சிலைகள்
வெறும் வெள்ளியும் பொன்னுமே;
அவை மனிதரின் கையால் செய்யப்பட்டவையே!
16 அவற்றுக்கு வாய்கள் உண்டு;
ஆனால் அவை பேசுவதில்லை;
கண்கள் உண்டு; அவை காண்பதில்லை;
17 காதுகள் உண்டு; ஆனால் அவை கேட்பதில்லை;
மூக்குகள் உண்டு; ஆனால் அவை மூச்சுவிடுவதில்லை.
18 அவற்றைச் செய்து வைப்பவரும்
அவற்றில் நம்பிக்கை வைக்கும் யாவரும்
அவற்றைப் போலவே இருப்பார்கள்.
19 இஸ்ரயேல் குடும்பத்தாரே!
ஆண்டவரைப் போற்றுங்கள்!
ஆரோன் குடும்பத்தாரே!
ஆண்டவரைப் போற்றுங்கள்!
20 லேவி குடும்பத்தாரே!
ஆண்டவரைப் போற்றுங்கள்!
அவருக்கு அஞ்சி நடப்போரே!
அவரைப் போற்றுங்கள்!
21 எருசலேமைத் தம் உறைவிடமாகக் கொண்டிருக்கும்
ஆண்டவர் போற்றப்படுவாராக;

சீயோனிலிருக்கும் ஆண்டவர் போற்றப்படுவாராக!
அல்லேலூயா!

திருப்பாடல் 135:1-21

**சிந்தனைக்கு**

அல்லேலல் தொகுப்புகள் எதிலும் இடம்பெறாது தனித்து நிற்கும் மற்றுமொரு அல்லேலல் திருப்பாடல். மீட்பின் வரலாறைப் போற்றிப் பாடும் திருப்பாடல். பைபிளின் வெவ்வேறு நூல்களின் சிறப்பான வசனங்கள் எனும் மலர்களால் தொடுக்கப்பட்ட, மணம் கமழும் மாலை போல இத்திருப்பாடல் விளங்குகிறது (அலெக்சாண்டர் மெக்லரென்). அவ்வாறு இடம்பெறும் வசனங்களை, வசனக் குறிப்புகளில் பார்ப்போம்.
🕎

தலைப்பற்ற திருப்பாடல். இயற்றியவர் பெயர், இயற்றப்பட்ட காலம் சூழல் மற்றும் நோக்கம் குறித்த நேரடியான குறிப்பு ஏதுமில்லை. மானிடரின் வார்ப்புகளான வேற்றினத் தெய்வங்களின் செயலற்ற தன்மைகளை முன்னிறுத்தி, படைப்பாளரும் வரலாற்றின் செயற்பாட்டாளருமான கடவுளின் மாட்சிமையைப் போற்றும் திருப்பாடல் என்கிற வகையில், எசேக்கியா அரசரின் கால முதல் சிறை மீண்ட இஸ்ரயேலரின் காலம் வரை எப்போது வேண்டுமானாலும் இத்திருப்பாடல் எழுதப்பட்டு இருக்கலாம்.
🕎

அமைப்பு:
வ.1-3, தொழுகைக்கு அழைப்பு
வ.4-14, படைப்பிலும் நீதிநெறிகளிலும் மீட்பிலும் கடவுளின் போற்றுதலுக்குரிய செயல்கள்
வ.15-18, வேற்றினத் தெய்வங்களின் உணர்வற்ற நிலையும் அவற்றை வணங்குவோரின் நிலையும்
வ.19-21, இறுதிப் புகழ்ச்சி
🕎

வசனம் 135:1
இணை, 113:1.

"அல்லேலூயா" -
வ.21, 104:35, 105:45, 106:1&48, 111:1, 112:1, 113:1&9, 115:18, 116:19, 117:2, 146:1&10, 147:20, 148:1&14, 149:1&9, 150:1&6.
புகழுதலையும் போற்றுதலையும் மீண்டும் மீண்டும் கட்டளையாக வலியுறுத்தும் திருப்பாடல், வ.1,3&19-21.

வசனம் 135:2
ஒப்பிடுக, 134:1.
முந்தைய திருப்பாடலில் குருக்கள், லேவியர், இறைமக்கள் இடம் பெறுவது போல், இவ்வசனத்திலும் இடம்பெறுகின்றனர். இது வ.19&20க்கும் பொருந்தும்.

வசனம் 135:3
"ஆண்டவரைப் புகழுங்கள்! ஏனெனில் அவர் நல்லவர்" -
பார்க்க, 86:5, 119:68.

வசனம் 135:4
*ஒப்பிடுக, விடுதலைப் பயணம்* 19:5; *இணைச் சட்டம்* 7:6

*"ஆண்டவர் யாக்கோபைத் தமக்கென்று தேர்ந்து கொண்டார்" -*
*இஸ்ரயேலர் கடவுளைப் போற்ற முதன்மையான காரணம்.*

*இஸ்ரயேலைத் தமக்குரிய தனிச் சொத்தாகத் தெரிந்தெடுத்தார் -*
*மீண்டும் மீண்டும் மோசே வலியுறுத்திய உண்மை, இணைச் சட்டம்* 4:20, 14:2&21.

*நாம் அனைவருமே கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக,* 1 பேதுரு 2:9.

வசனம் 135:5 & வ.9
*ஒப்பிடுக, விடுதலைப் பயணம்* 18:11.

*தெரிந்தெடுப்புக்காக நன்றியுடையோராய் ஆண்டவரைப் போற்றுதல் முதன்மையானது* (வ.4) *எனில், அவர் பெரியவர், மாட்சி மிக்கவர் என்பது உண்மையானது என்பதால் அவரைப் போற்ற வேண்டும்,* 96:4.

வசனம் 135:6
*ஒப்பிடுக, யோபு* 23:13; *தானியேல்* 4:35.

*நாம் ஆழ்ந்து அறிந்து உணர வேண்டிய எளிமையான உண்மை; இந்த உலகின் தாக்கத்தில் வாழ்கிற நமது விருப்பம், மன்றாடல் ஒன்றாக இருக்கலாம்; ஆனால் கடவுளின் திருவுளத்துக்கு ஒப்புக்கொடுத்தலே நமக்கு மேன்மையைத் தருவது; இதுவே கிறிஸ்து இயேசுவின் போதனையும் வாழ்வும், மத்தேயு* 7:21, 12:50, 26:39&42.

வசனம் 135:7
*இணை, எரேமியா* 10:13 & 51:16.

*இயற்கை ஆற்றல்கள் மீது செயல்படும் ஆண்டவரின் பேராற்றல்.*

வசனம் 135:8-12
*படைப்பிலும் இயற்கை ஆற்றல்கள் மீதும் தாம் விரும்பியபடி செயல்படும் கடவுள், வரலாற்றிலும் தாம் விரும்பியவற்றை நிலைநாட்டுகிறார்; அரசுகளைத் தள்ளிப் புதிய அரசுகளை ஏற்படுத்துகிறார்.*

வசனம் 135:8
*பார்க்க, விடுதலைப் பயணம்* 12:29-30.
*இஸ்ரயேலரை விடுவிக்கச் செய்த மாபெரும் அருஞ்செயல்.*

வசனம் 135:9
*விடுதலைப் பயண நூலில், மோசேயின் அழைப்பு தொடங்கி, செங்கடலை அவர் கடந்தது வரை நடந்த அனைத்து அடையாளங்களையும் நினைவுகூரும் திருப்பாடகர்.*

வசனம் 135:10-12
*மேலும் விரிவாக,* 136:17-22.

வசனம் 135:10
"அவர் பல்வேறு இனத்தவரைத் தாக்கினார்" -
எகிப்தியருக்கு நேரிட்ட அழிவை விடுதலைப் பயண நூலில் பார்க்கிறோம்.

அதே நூலில் (17:8-13), அமலேக்கியரின் எதிர்ப்பும் அழிவும்.

எமோரியரின் எதிர்ப்பும் அழிவும், எண்ணிக்கை 21:24-30 மற்றும் யோசுவா 10:10-21.

பாசான் மக்களின் எதிர்ப்பும் அழிவும், எண்ணிக்கை 21:33-35.

எரிகோ நகரின் மக்களின் எதிர்ப்பும் அழிவும், யோசுவா 6:16-21.

ஆயி மக்களின் எதிர்ப்பும் அழிவும், யோசுவா 8:18-26.
மேலும் இதுபோன்ற பல போர்களில், ஆண்டவரையும் அவர்தம் மக்களையும் எதிர்த்த மக்களின் அழிவை, நீதித் தலைவர்களின் ஆட்சிகளிலும், பின்னர் அரசர்களின் ஆட்சிகளிலும் பார்க்கிறோம்.

"வலிமை வாய்ந்த மன்னர்களைக் கொன்றார்" -
மேலும் வ.11.
மோசே மற்றும் யோசுவா வழியாக ஆண்டவர் கொன்ற மன்னர்கள், யோசுவா 12:1-24.

வசனம் 135:12
தமது சொந்த மக்களாக இஸ்ரயேலரைத் தெரிந்து கொண்டது (வ.4) மட்டுமல்லாமல், அவர்களின் மூதாதையருக்கு தாம் அளித்த வாக்கின்படி (தொடக்க நூல் 12:7, 13:17, 15:7&21, 26:3, 35:12), அவர்கள் நாடோடிகளாக நடமாடிய நாடுகளின் நிலங்களை அவர்களின் வழிமரபினருக்கு வழங்கினார்.

வசனம் 135:13-18
ஒப்பிடுக, எசாயா 44:12-20; எரேமியா 10:6-10.

வசனம் 135:13
பார்க்க, 30:4, 102:12.
ஆண்டவரே உரைத்தது, பார்க்க, விடுதலைப் பயணம் 3:15.

வ.6-12 பகுதியின் அருஞ்செயல்களை, தலைமுறைகள் கடந்து, அன்றைய தலைமுறையினரில் ஒருவராக நன்றியோடு நினைவுகூரும் திருப்பாடகர்.

வசனம் 135:14
மோசேயின் அறிவுரை, இணைச் சட்டம் 32:36.

தீர்ப்பிடும் கடவுளே இரக்கம் செய்பவராக இருப்பதை நாம் நீதித் தலைவர்கள் நூலில் பன்முறை வாசிக்கிறோம் (சான்றாக, நீதித் தலைவர்கள் 3:7-9).

வசனம் 135:15-18
இணை, வசனம் 115:4-8, மேலும் அதே குறிப்புகளை வாசிக்க (பதிவிட்ட நாள், 05-09-2022).

வசனம் 135:19-20
இணை, 115:9-11 மற்றும் குறிப்புகள். மேலும் பார்க்க, 118:2-4.

வசனம் 135:21
பார்க்க 133:3 மற்றும் குறிப்பு. மேலும் பார்க்க, 48:1-3 & 76:2.

சீயோனிலிருக்கும் கடவுள், சீயோனுக்கே உரியவர் அல்ல; அவருடைய பேரருள் பேராற்றலோடு அங்கிருந்து உலகமெங்கும் பாய்ந்து, உலகோர் அனைவரையும் ஆட்கொள்வது. ஆண்டவர் ஆசி வழங்கும் எருசலேமுக்கு நாமும் ஆசி வழங்கி, அதன் அமைதிக்காக மன்றாடுவோம்.

✝

## 19 திருப்பாடல் 136

(என்றுமுள பேரன்பு வாழியவே!)

1 ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்;
ஏனெனில் அவர் நல்லவர்,
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
2 தெய்வங்களின் இறைவனுக்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
3 தலைவர்களின் தலைவருக்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
4 தாம் ஒருவராய் மாபெரும் அருஞ்செயல்களைப் புரிபவர்க்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
5 வான்வெளியை மதிநுட்பத்தால் உருவாக்கியவர்க்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
6 கடல்மீது மண்ணகத்தை விரித்தவர்க்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
7 பெருஞ்சுடர்களை உருவாக்கிவர்க்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
8 பகலை ஆள்வதற்கெனக் கதிரவனை உருவாக்கியவர்க்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
9 இரவை ஆள்வதற்கென
நிலாவையும் விண்மீன்களையும் உருவாக்கியவர்க்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
10 எகிப்தின் தலைப்பேறுகளைக் கொன்றழித்தவர்க்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
11 அவர்கள் நடுவிலிருந்து
இஸ்ரயேலை வெளிக்கொணர்ந்தவர்க்கு

நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
12 தோளின் வலிமையாலும்
ஓங்கிய புயத்தாலும் அதைச் செய்தவர்க்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
13 செங்கடலை இரண்டாகப் பிரித்தவர்க்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
14 அதன் நடுவே இஸ்ரயேலை
நடத்திச் சென்றவர்க்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
15 பார்வோனையும் அவன் படைகளையும்
செங்கடலில் மூழ்கடித்தவர்க்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
16 பாலை நிலத்தில்
தம் மக்களை வழிநடத்தியவர்க்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
17 மாபெரும் மன்னர்களை
வெட்டி வீழ்த்தியவர்க்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
18 வலிமைமிகு மன்னர்களைக்
கொன்றழித்தவர்க்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
19 எமோரியரின் மன்னன்
சீகோனை கொன்றழித்தவர்க்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
20 பாசானின் மன்னன்
ஓகைக் கொன்றழித்தவர்க்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
21 அவர்களது நாட்டைத் தம் மக்களுக்கு
உரிமைச் சொத்தாக ஈந்தவர்க்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
22 அதைத் தம் அடியார்களாகிய இஸ்ரயேலர்க்கு
உரிமைச் சொத்தாக ஈந்தவர்க்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
23 தாழ்வுற்றிருந்த நம்மை நினைவு கூர்ந்தவர்க்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
24 நம் எதிரிகளினின்று நம்மை விடுவித்தவர்க்கு

நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
25 உடல்கொண்ட அனைத்திற்கும் உணவூட்டுபவர்க்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.
26 விண்ணுலகின் இறைவனுக்கு
நன்றி செலுத்துங்கள்;
என்றும் உள்ளது அவரது பேரன்பு.

திருப்பாடல் 136:1-26

**சிந்தனைக்கு**

106 மற்றும் 107ம் திருப்பாடல்களைப் போலவே இஸ்ரயேல் தன் வரலாறைத் திரும்பிப் பார்த்து, கடவுளுக்கு நன்றி செலுத்தும் ஒரு திருப்பாடல். இம்மூன்று திருப்பாடல்களிலும் போற்றப்படுவது ஆண்டவரின் என்றுமுள பேரன்பு / கிருபை. இதற்கு முந்தைய திருப்பாடல் புகழ்ச்சிப்பாடல் எனில், இந்தத் திருப்பாடல் ஒரு நன்றிப்பாடல்.

ஒரு வசனமோ, வசனத்தின் ஒரு பகுதியோ மீண்டும் மீண்டும் இங்குமங்கும் ஒலிப்பதைத் திருப்பாடல்களில் நாம் பார்த்திருக்கிறோம்; இந்தத் திருப்பாடலில் மட்டுமே, ஒவ்வொரு வசனமும் ஒரே சொற்றொடரோடு முடிகிறது; அந்தச் சொற்றொடர்களை எடுத்து விட்டால், வரலாற்றின் அடிப்படையிலான ஒரு சுருக்கமான தொடர்ச்சியாக இத்திருப்பாடல் அமைந்திருப்பதைக் காணலாம்.

சிறந்த கூட்டு வழிபாட்டுத் திருப்பாடல். லேவியர் குழு ஒவ்வொரு வசனத்தின் முற்பகுதியைப் பாட, ஏனைய இஸ்ரயேல் மக்கள், "என்றும் உள்ளது அவரது பேரன்பு" என்று முழங்குவது போல இப்பாடல் விரிகிறது (2 குறிப்பேடு 7:3&6). அதே அமைப்பில், இன்றும் நமது வழிபாடுகளில் பாடத் தக்கது.

தலைப்பற்ற திருப்பாடல்; இயற்றியவர் பெயர், இயற்றப்பட்ட காலம் மற்றும் சூழல் குறித்த குறிப்பு ஏதுமில்லை. முந்தைய திருப்பாடல் போலவே, தாவீதின் காலம் முதல், சிறை மீண்ட காலம் வரை எப்போது வேண்டுமானாலும் இப்பாடல் இயற்றப்பட்டிருக்கலாம். தாவீது அல்லது சாலமோன் அரசர்களின் காலம் என்பதில் பொதுவான உடன்பாடு உள்ளது.

அமைப்பு:
வ.1-3, ஆண்டவருக்கு நன்றி கூற அழைப்பு
வ.4-9, படைப்பாளரின் பேரன்புக்கு நன்றி
வ.10-22, மீட்கும் ஆண்டவரின் பேரன்புக்கு நன்றி
வ.17-22, பாதுகாக்கும் ஆண்டவரின் பேரன்புக்கு நன்றி
வ.23-26, பராமரிக்கும் ஆண்டவரின் பேரன்புக்கு நன்றி

வசனம் 136:1
"...அவர் நல்லவர்" -
பார்க்க, 73:1. எனவே, அவரைப் புகழ்ந்து பாடுவது நல்லது, 147:1. மேலும் பார்க்க, 107:1, 118:1&28; எரேமியா 33:11; புலம்பல் 3:25; நாகூம் 1:7.

"பேரன்பு" -
OV, கிருபை; எபிரேயத்தில், kheh-sed (கேஸேட்); KJV மொழிபெயர்ப்பில் இந்தச் சொல், "mercy," "kindness," "loving kindness," "goodness," "mercies," "kindly," "merciful," "loving kindness," "favour," "good," "goodliness," "pity," "reproach" & "wicked" என்றெல்லாம் இடத்திற்கு ஏற்றார்போல் பொருள் கொள்ளப்பட்டுள்ளது. KJV-ல், khen (கேன்) என்ற எபிரேயச் சொல் grace என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது; சான்றாக 45:2 & 84:11.
இந்தத் திருப்பாடலில், கடவுளின் பேரன்பு எவ்வாறு தொடக்கம் முதல் திருப்பாடகரின் காலம் வரை வாழ்வளிப்பதாக விளங்குகிறது என்பதை அறிவித்து, அவருக்கு நன்றி செலுத்தும் வகையில் திருப்பாடகர் இந்தப் பாடலை அமைத்துள்ளார்.

"என்றும் உள்ளது அவரது பேரன்பு" -
பார்க்க, 34:8, 100:5, 118:1-4&29, 135:3. வரலாற்று முழக்கம், 2 குறிப்பேடு 5:13, 7:3; எஸ்ரா 3:11; எரேமியா 33:11.

வசனம் 136:2
"தெய்வங்களின் இறைவன்" -
முதன்முதலாக, இது மோசே செய்த அறிக்கை, இணைச் சட்டம் 10:17. பின்னர் இதையே யோசுவா அறிவுறுத்துகிறார், யோசுவா 22:22. சிலை வழிபாட்டாளனான நெபுகத்னேசர் இந்த உண்மையை உணர்ந்து அறிக்கை செய்தான், தானியேல் 2:47.

வசனம் 136:3
"தலைவர்களின் தலைவர்" -
இதனையும் மோசே மேற்கூறிய வசனத்தில் (இணைச் சட்டம் 10:17) குறிப்பிடுகிறார். அதுபோலவே நெபுகத்னேசர், கடவுளை, "அரசர்களின் ஆண்டவர்" என்கிறான் (தானியேல் 2:47). இறுதியில், ஆட்டுக்குட்டியானவர் ஆண்டவருக்கெல்லாம் ஆண்டவராக, அரசருக்கெல்லாம் அரசராக வெளிப்படுகிறார், திருவெளிப்பாடு 17:14 & 19:16. மேலும் பார்க்க, 1 திமொத்தேயு 6:15.

வசனம் 136:4
வேறு சொற்களில், 72:18. வியத்தகு செயல்களை நினைவுகூர்தலும், அறிவித்தலும், 75:1, 78:4, 96:3, 98:1, 105:5, 106:7&22, 107:8.

வசனம் 136:5
படைப்பில் கடவுளின் ஞானம் / மதிநுட்பம், நீதிமொழிகள் 3:19; எரேமியா 10:12 & 51:15.

வசனம் 136:6
"கடல் மீது மண்ணகத்தை விரித்தவர்..." -
பார்க்க, 24:2; எசாயா 42:5, 44:24.

வசனம் 136:7-9
"பெருஞ்சுடர்கள்" -
பார்க்க, தொடக்க நூல் 1:14-18.

வசனம் 136:10-15
முந்தைய திருப்பாடலின் ஒரு வசனம் (135:9), இங்கு விரிவாக.

வசனம் 136:11
*இஸ்ரயேலை வெளிக் கொணர்ந்தவர், விடுதலைப் பயணம்* 12:51. *நினைவுகூருதல், இணைச் சட்டம்* 4:34, 5:15 & 26:8; *எரேமியா* 32:21.

வசனம் 136:13-15
*செங்கடலில் கடவுள் நிகழ்த்திய அருஞ்செயல், விடுதலைப் பயணம்* 14:19-31.

வசனம் 136:16
*நாற்பது ஆண்டுகள் பாலை நிலத்தில் தம் மக்களை வியத்தகு முறையில் வழி நடத்திய கடவுள், இணைச் சட்டம்* 8:2-6; 29:5.

வசனம் 136:17-20
*இணை,* 135:10-11, *இதன் குறிப்புகளை வாசிக்க.*

வசனம் 136:21-22
*பார்க்க,* 135:12 *மற்றும் குறிப்பு.*

வசனம் 136:23-24
*பொதுவான முடிவுரை போல இவ்வசனங்கள் சொல்லப்பட்டிருந்தாலும், பாபிலோனியச் சிறையிருப்பையும், அதிலிருந்து இஸ்ரயேலர் விடுதலை பெற்றதையும் இவை குறிப்பிடுவதாகச் சில அறிஞர்கள் கருதுகின்றனர்.*

வசனம் 136:25
*மண்ணுலகில் உடல் கொண்டு வாழும் அனைத்து உயிர்களுக்கும் உணவூட்டும் ஆண்டவர்,* 145:15 & 147:9.

வசனம் 136:26
*விண்ணுலகின் இறைவன் -*
*விண்ணகத்தில் உறையும் கடவுள்,* 1 *அரசர்கள்* 8:43. *தமது பேரன்பால் உலகின் உயிர்கள் அனைத்தையும் படைத்து, காத்து, பராமரித்து வழி நடத்தும் ஆண்டவரே போற்றுதலுக்குரியவர்!*

## 19 திருப்பாடல் 137

*(நாடு கடத்தப்பட்டோரின் புலம்பல்)*

1 *பாபிலோனின் ஆறுகளருகே அமர்ந்து,*
*நாங்கள் சீயோனை நினைத்து அழுதோம்.*
2 *அங்கிருந்த அலரிச் செடிகள் மீது,*
*எங்கள் யாழ்களை மாட்டி வைத்தோம்.*
3 *ஏனெனில், அங்கு எங்களைச் சிறையாக்கினோர்*
*எங்களைப் பாடும்படி கேட்டனர்;*
*எங்களைக் கடத்திச் சென்றோர்*
*எங்களை மகிழ்ச்சிப்பா இசைக்குமாறு கேட்டனர்.*
*'சீயோனின் பாடல்களை*
*எங்களுக்குப் பாடிக்காட்டுங்கள்' என்றனர்.*

4 ஆண்டவருக்கு உரித்தாக்கும் பாடலை,
அன்னிய நாட்டில் எங்ஙனம் பாடுவோம்?
5 எருசலேமே! நான் உன்னை மறந்தால்
என் வலக்கை சூம்பிப்போவதாக!
6 உன்னை நான் நினையாவிடில்,
எனது மகிழ்ச்சியின் மகுடமாக
நான் எருசலேமைக் கருதாவிடில்,
என் நா மேல்வாயோடு ஒட்டிக் கொள்வதாக!
7 ஆண்டவரே! ஏதோமின் புதல்வருக்கு எதிராக,
எருசலேம் வீழ்ந்த நாளை நினைத்துக் கொள்ளும்!
'அதை இடியுங்கள்; அடியோடு இடித்துக் தள்ளுங்கள்'
என்று அவர்கள் எவ்வாறெல்லாம் சொன்னார்கள்!
8 பாழாக்கும் நகர் பாபிலோனே!
நீ எங்களுக்குச் செய்தவற்றை
உனக்கே திருப்பிச் செய்வோர் பேறுபெற்றோர்!
9 உன் குழந்தைகளைப் பிடித்துப்
பாறையின்மேல் மோதி அடிப்போர் பேறுபெற்றோர்!

திருப்பாடல் 137:1-9

**சிந்தனைக்கு**

துயர் மிகு திருப்பாடல்; பழித்துரைத்துச் சபிக்கும் திருப்பாடல்.

பொதுவான கருத்து, சிறை மீண்ட லேவியர், சிறையிருப்பை நினைவுகூர்ந்து பாடிய திருப்பாடல் என்பது. ஆனாலும் துயரின் தொனி சற்றும் குறையாமல் இருப்பதை வாசிக்கிறோம். அழிந்து பாழ்பட்ட நகரைக் கண்டபோது ஏற்பட்ட வேதனையால் வெளிப்பட்ட சொற்களாக இருக்கலாம்.

இறுதியில் கடுமையான சாபம் இத்திருப்பாடலில் உள்ளது; சாபங்கள் இடம் பெறும் வேறு சில திருப்பாடல்களின் பகுதிகள்: 69:22-28 & 109:6-20.

தலைப்பற்ற திருப்பாடல்; பன்மையில் இருப்பதாலும், இசைக்கருவிகள் குறிப்பிடப்பட்டுள்ளதாலும், ஆண்டவரின் பாடலைப் பாடுவோர் என்பதாலும், திருக்கோவிலில் பணிபுரிந்த லேவியர் பாடிய பாடல் எனலாம்.

அமைப்பு:
வ.1-4, சிறையிருப்பின் நாள்களை நினைவுகூர்தல்
வ.5-6, எருசலேம் மீதுள்ள பற்றை வெளிப்படுத்துதல்
வ.7-9, எதிரிகள் மீது வெறுப்பும் அதன் வெளிப்பாடும்

வசனம் 137:1
"பாபிலோனின் ஆறுகள்" -
இஸ்ரயேல் குன்றுகளின் நாடு; ஆனால் பாபிலோனியா நீரோடைகளின் நாடு. தலைநகர் பாபிலோன் யூப்ரடீஸ் ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. ஆறுகள் என்று உள்ளதால், யூப்ரடீஸ் ஆற்றின் கிளை ஆறுகள் என்று சொல்லலாம். நாட்டுப்புறம் எனில், டைக்ரிஸ், கேபார்

(எசேக்கியேல் 1:1-3) அல்லது சூசான் நகர் அமைந்த ஊலாய் (தானியேல் 8:2) போன்ற வேறு ஆறுகளாக இருக்கலாம்.

*"அமர்ந்து" -*
*துயரத்தில் இருப்போரின் தோற்ற அமைவு, எஸ்ரா 9:4; யோபு 2:11-13; எசாயா 47:1&5.*

*"சீயோனை நினைத்து அழுதோம்" -*
*திருக்கோவிலிலேயே வாழ்ந்த லேவியர், அங்கிருந்து சிறைப்பட்டு பாபிலோனுக்கு இழுத்து வரப்பட்ட நிலையில், தாங்கள் வாழ்ந்த, தங்கள் கடவுளின் இல்லம் இருந்த சீயோனை நினைத்து அழுதனர். மேலும் பார்க்க, புலம்பல் 1:7.*

வசனம் 137:2
*மீட்டாத யாழ்கள் -*
*அடிமை வாழ்வில் கிடைத்த ஓய்வில், தாங்கள் இசைத்து மகிழ்ந்த யாழ்களை எடுத்தனர் - ஆனால் மீட்டவோ மனமில்லை. (பார்க்க, எசாயா 24:8)*

வசனம் 137:3-4
*"...மகிழ்ச்சிப்பா இசைக்குமாறு..." -*
*ஆண்டவரைப் போற்றிப் பாடப்படும் பாடல்களை பாடுமாறு கேட்கும் பாபிலோனியர். பாராட்டும் தொனியில் கேட்டிருக்க வாய்ப்பில்லை; நக்கலாகக் கேட்டிருக்கலாம்.*

*அன்னிய நாட்டில் ஆண்டவருக்குரிய பாடலைப் பாடுவது எங்ஙனம்?*
*லேவியரின் மனநிலையை சிறைப்பட்டிருந்த தானியேலின் மனநிலையோடு ஒப்பிட்டுப் பார்த்துத் தெளிவு பெறுதல் நன்று. இறைப் பிரசன்னத்தில் இசைப்பணி செய்த இந்த லேவியர் தெளிவடையவில்லை; அன்னிய மண்ணில் இறைப் பிரசன்னத்தில் வாழப் பழகிய தானியேலோ மேன்மை பெற்றார்.*

*பிலிப்பி நகரில் மக்களால் தாக்கப்பட்டு, நடுவர்களால் ஆடைகள் கிழிக்கப்பட்டு, வீரர்களால் அடித்து நொறுக்கப்பட்டு, சிறைக்குள் தொழுமரத்தில் கால்கள் கட்டப்பட்ட நிலையில், நள்ளிரவில் வலியும் பசியும் வாட்டினாலும், பவுலும் சீலாவும் கடவுளுக்குப் புகழ்ப்பா பாடியதை நினைவில் வைப்போம் (திருத்தூதர் பணிகள் 16:19-25).*

வசனம் 137:5-6
*யாழ் இசைக்க மறந்த கை! பாட விழையா நா!*
*இசையும் பாடலும் கலங்கிய உள்ளத்தைத் தெளிவிப்பவை அல்லவா! (1 சாமுவேல் 16:23)*

வசனம் 137:7
*ஏதோமிய எதிர்ப்பு, கருவிலேயே உண்டானது, தொடக்க நூல் 25:22; வரலாறு நெடுகிலும் தொடர்வது. எருசலேமின் வீழ்ச்சியில் பாபிலோனோடு உடன்பட்டிருந்தது ஏதோம் (எசேக்கியேல் 25:12 & 35:5; மேலும் புலம்பல் 4:21-22; ஒபதியா 1:10-14). ஏதோமுக்கு எதிரான இறைவாக்குகள், எசாயா 63:1-4; எரேமியா 49:7-22; எசேக்கியேல் 25:12-14.*

வசனம் 137:8-9
*"பாழாக்கும் நகர் பாபிலோன்" -*
*மண்ணாசையும் பொருளாசையும் பெருமையும் மிகுந்த பாபிலோன் - அங்கு மன்னனைத் தெய்வம் போல வழிபடுவது வரை நடந்தன. அது பேரரசாக எழும்போதே, அதற்கு எதிராக எசாயா உரைத்த இறைவாக்கு, எசாயா 13 & 47; மேலும், எரேமியா 50 & 51.*
*

இந்த வசனங்களில் பேறுபெற்றோர் (OV, ஆசீர்வதிக்கப்பட்டவன்) என்று சொல்லப்பட்டது போன்ற மக்களை பைபிளில் வேறு எங்கும் காண முடியாது. அதேவேளையில், இது போன்ற வசனங்கள் புதிதானவையும் அல்ல (எண்ணிக்கை 31:17; 1 சாமுவேல் 15:3 & 22:19; 2 அரசர்கள் 8:12; எசாயா 13:16; ஒசேயா 10:14 & 13:16; நாகூம் 3:10). வெறுப்பும் எதிர்ப்பும் சூழ வாழ்ந்த மக்களின் காலத்தில், இஸ்ரயேலிலும் இதுபோன்ற நிகழ்வுகள் நடந்துள்ளன. ஆனால் அன்பை வலியுறுத்தும் போதனைகளே பின்னர் சிறப்பிடம் பெறுகின்றன. அவற்றில் சிறந்ததாக கிறிஸ்துவின் மலைப் பொழிவு உள்ளது; குறிப்பாக, மத்தேயு 5:38-48. நல்லோர் மீதும் தீயோர் மீதும் பாகுபாடின்றி மழையைப் பொழியச் செய்பவர் கடவுள் அல்லவா!

நமது காலத்தில் நிகழ்ந்த மிகப்பெரிய வன்முறையாக குஜராத் வன்கொடுமைகள் உள்ளன. கருவுற்ற பெண்ணின் வயிறைக் கிழித்து பிண்டம் வெளியே எடுக்கப்பட்டது; அந்தப் பெண்ணின் இரண்டு வயதுக் குழந்தை கல்லில் மோதிக் கொல்லப்பட்டது. இன்றைய இஸ்ரயேலில் நடக்கும் நிகழ்வுகள், இந்த வன்முறைக்குச் சற்றும் குறைந்தவை அல்ல. ஒருபோதும் கடவுள் இதுபோன்ற வன்செயல்களை ஏற்றுக் கொள்பவர் அல்லர்; இவ்வாறு செய்வோர் ஒருக்காலும் பேறுபெற்றோரும் அல்லர். எதிரிகளின் மனமாற்றத்திற்காக மன்றாடுதலே நாம் பெற்றுள்ள கட்டளை, மத்தேயு 5:44. நத்தான்யாகு, டொனால்ட் டிரம்ப், நரேந்திர மோடி போன்றோரின் மத அடிப்படைவாத அரசியல், மக்களிடையே வேற்றுமையை வளர்த்து வரும் சூழலை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட தலைவர்கள் யாரும் இஸ்லாமியர் அல்லர் என்பதையும் கருத்தில் கொள்வோம். எருசலேமின் அமைதிக்காக மட்டுமல்லாமல், நமது நாட்டின் அமைதிக்கும் உலக அமைதிக்கும் மன்றாடுவதே நம்முன் உள்ள தலையாய கடமை.

## 19 திருப்பாடல் 138

(நன்றிப்பா)

*தாவீதுக்கு உரியது*
1 ஆண்டவரே! என் முழுமனத்துடன்
உமக்கு நன்றி செலுத்துவேன்;
தெய்வங்கள் முன்னிலையில்
உம்மைப் புகழ்வேன்.
2 உம் திருக்கோவிலை நோக்கித் திரும்பி
உம்மைத் தாள் பணிவேன்;
உம் பேரன்பையும் உண்மையையும் முன்னிட்டு
உமது பெயருக்கு நன்றி செலுத்துவேன்;
ஏனெனில், அனைத்திற்கும் மேலாக
உம் பெயரையும் உம் வாக்கையும்
மேன்மையுறச் செய்துள்ளீர்.
3 நான் மன்றாடிய நாளில் எனக்குச் செவிசாய்த்தீர்;
என் மனத்திற்கு வலிமை அளித்தீர்.
4 ஆண்டவரே!
நீர் திருவாய் மலர்ந்த சொற்களைப்
பூவுலகின் மன்னர் அனைவரும் கேட்டு
உம்மைப் போற்றுவர்.

5 ஆண்டவரே!
உம் வழிகளை அவர்கள் புகழ்ந்து பாடுவர்;
ஏனெனில், உமது மாட்சி மிகப்பெரிது!
6 ஆண்டவரே! நீர் உன்னதத்தில் உறைபவர்;
எனினும் நலிந்தோரைக் கண்ணோக்குகின்றீர்;
ஆனால், செருக்குற்றோரைத்
தொலையிலிருந்தே அறிந்து கொள்கின்றீர்.
7 நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும்,
என் உயிரைக் காக்கின்றீர்;
என் எதிரிகளின் சினத்துக்கு எதிராக
உமது கையை நீட்டுகின்றீர்;
உமது வலக்கையால் என்னைக் காப்பாற்றுகின்றீர்.
8 நீர் வாக்களித்த அனைத்தையும்
எனக்கெனச் செய்து முடிப்பீர்;
ஆண்டவரே! என்றும் உள்ளது உமது பேரன்பு;
உம் கைவினைப் பொருளைக் கைவிடாதேயும்.

திருப்பாடல் 138:1-8

**சிந்தனைக்கு**

138 முதல் எட்டுத் திருப்பாடல்கள் தாவீதுக்கு உரியதாகத் தலைப்பிடப்பட்ட இறுதித் தொகுப்பு. நான் / என் போன்ற தன்னிலைச் சொற்களின் பயன்பாடு, முந்தைய தாவீதியத் திருப்பாடல்களோடு ஒத்திருக்கிறது. ஆனால் சிறைப்பட்ட அல்லது சிறை மீண்ட காலத்திற்குரிய பாடல்கள் இவை என்று கருதுவோரும் உளர். சீயோன் மலைத் திருப்பயணப் பாடல்களிலுள்ள தாவீதியத் திருப்பாடல்களின் தலைப்புகளில், தொன்மையான மொழிபெயர்ப்புகளில் (செப்டுவஜின்ட், அரமேயம், கல்தேயம், சிரியாக், எத்தியோப்பியம் மற்றும் வல்கேட்) "தாவீதுக்கு உரியது" என்பதில் ஒற்றுமை இல்லை; ஆனால், இந்த எட்டுத் திருப்பாடல்களும் "தாவீதுக்கு உரியன" என்பதில் அவை அனைத்தும் ஒன்றுபடுகின்றன.

ஐந்தாம் தொகுதியில் (107-150) தாவீதியத் திருப்பாடல்கள் குறைவேயெனினும், இந்தத் தொகுப்பின் வழியாக ஐந்தாம் தொகுதியே சிறப்படைகிறது என்பதே நமது வாசிப்பு உணர்வாகும்.

தொகுப்பின் முதல் மற்றும் இறுதிப் பாடல்கள், புகழ்ச்சிப் பாடல்களாக உள்ளன. திருப்பாடல் 138, பாடப்பட்ட காலம் மற்றும் சூழல் குறித்த குறிப்பு ஏதுமில்லை. எனவே பொதுவான திருப்பாடல் என்று இதனைக் கருதலாம்.

அமைப்பு:
வ.1-3, ஆண்டவருக்குத் துதி
வ.4-5, ஆண்டவரைப் போற்றும் பூவுலகின் மன்னர்கள்
வ.6-8, எளியோரைப் பராமரிக்கும், காக்கும் ஆண்டவர்

வசனம் 138:1
"தெய்வங்கள் முன்னிலையில்..." -
பார்க்க, 82:1.

வசனம் 138:2

"உம் திருக்கோவிலை நோக்கித் திரும்பி..." -
எங்கிருந்தாலும் கடவுளின் இல்லம் இருக்கும் திசை நோக்கித் திரும்பித் தாள் பணிந்து தொழுவது தொன்மையான மரபு (தானியேல் 6:10).

"திருக்கோவில்" -
ஆண்டவருக்கெனத் திருக்கோவில் கட்டப்படாத தாவீதின் காலத்தில், அவர் எப்படி திருக்கோவிலைக் குறிப்பிட்டிருக்க முடியும் என்று சிலர் சொல்கின்றனர். முந்தைய தாவீதியத் திருப்பாடல்களிலும் அவர் அதே சொல்லைப் (hay-kawl, ஹேகால்) பயன்படுத்தியுள்ளார்; பார்க்க, 5:7, 11:4, 18:6, 27:4, 65:4 & 68:29. தாவீதின் நாள்களில், உடன்படிக்கைப் பேழை கூடாரத்தில் இருந்தபோதிலும் (2 சாமுவேல் 6:17), அவர் அதனை ஆண்டவரின் மாட்சி விளங்கும் தூய கோவிலாகவே நம்பி வழிபட்டுள்ளார்.

"உம் வாக்கையும் மேன்மையுறச் செய்துள்ளீர்" -
இறைவாக்கினர் நாத்தான் வழியாக தாவீதுக்கு அருளப்பட்ட வாக்கை நினைவுகூர்தல், 89:3-4; 2 சாமுவேல் 7:10-16.

வசனம் 138:3

"...மனதிற்கு வலிமை... -
இடுக்கண்களில் நடுவே மன்றாடிய தாவீதுக்கு, அவற்றை மேற்கொள்ள ஆண்டவர் வலிமை அருளினார்.

நினைவில் வையுங்கள்: தொல்லைகளை அவர் நீக்குவதில்லை; மாறாக, அவற்றைக் கடந்து வர நமக்கு அவர் ஆற்றல் தருகிறார் (1 கொரிந்தியர் 10:13).

வசனம் 138:4-5

"நீர் திருவாய் மலர்ந்த சொற்களைப் பூவுலகின் மன்னர்கள் அனைவரும் கேட்டு... உம் வழிகளை..." -
பார்க்க, 22:27-28; சாலமோனின் மொழிகளில், 72:11 & 2 குறிப்பேடு 6:33.
இறைவாக்கினர் வழியாக ஆண்டவர் வெளிப்படுத்திய செய்திகளைக் கேட்டு, அவற்றை அவர் நிறைவேற்றிய வழிகளைக் (25:10) கண்டு, பூவுலகின் மன்னர்கள் அவரைப் போற்றுவர். இதுவே ஓர் இறைவாக்காக, எசாயா 2:1-4; திருவெளிப்பாடு 21:24.

வசனம் 138:6

இணை, 113:4-9.

உன்னதத்தில் உறைபவர், 14:2, 33:13, 102:19, 113:5; எசாயா 57:15.

"...செருக்குற்றோரைத் தொலையிலிருந்தே அறிந்து..." -
எளியோருக்கு அண்மையில் உள்ள ஆண்டவர், செருக்குற்றோரைத் தமக்கு விலக்கி வைக்கிறார். அத்தகையோர் திருக்கோவிலின் உள்ளேயே இருந்தாலும், ஆண்டவரின் அருள் அவர்களுக்குத் தொலைவிலேயே இருக்கும்.

வசனம் 138:7

காக்கும் கடவுளின் வலது கரம் -
பார்க்க, 18:35, 20:6, 21:8, 45:4, 60:5, 74:11, 78:54, 89:13, 98:1 & 118:15-16.

வசனம் 138:8

"நீர் வாக்களித்த அனைத்தையும் எனக்கெனச் செய்து முடிப்பீர்" -

*பார்க்க, 57:2 மற்றும் யோபு 23:14.*

"ஆண்டவரே! என்றும் உள்ளது உமது பேரன்பு" -
திருப்பாடல் 136ன் மையக் கருத்து. நம்மை என்றும் கைவிடாது காக்கும் ஆண்டவரின் பேரன்பு!

## 19 திருப்பாடல் 139

*(முழுமையாய் அறிந்து காக்கும் கடவுள்)*

*பாடகர் தலைவர்க்கு; தாவீதின் புகழ்ப்பா*
1 ஆண்டவரே! நீர் என்னை
ஆய்ந்து அறிந்திருக்கின்றீர்!
2 நான் அமர்வதையும் எழுவதையும்
நீர் அறிந்திருக்கின்றீர்;
என் நினைவுகளை எல்லாம்
தொலையிலிருந்தே உய்த்துணர்கின்றீர்.
3 நான் நடப்பதையும் படுப்பதையும்
நீர் அறிந்துள்ளீர்;
என் வழிகள் எல்லாம்
உமக்குத் தெரிந்தவையே.
4 ஆண்டவரே!
என் வாயில் சொல் உருவாகுமுன்பே,
அதை முற்றிலும் அறிந்திருக்கின்றீர்.
5 எனக்கு முன்னும் பின்னும்
என்னைச் சூழ்ந்து இருக்கின்றீர்;
உமது கையால் என்னைப் பற்றிப்பிடிக்கின்றீர்.
6 என்னைப்பற்றிய உம் அறிவு
எனக்கு மிகவும் வியப்பாயுள்ளது;
அது உன்னதமானது;
என் அறிவுக்கு எட்டாதது.
7 உமது ஆற்றலைவிட்டு
நான் எங்கே செல்லக்கூடும்?
உமது திருமுன்னிலிருந்து
நான் எங்கே தப்பியோட முடியும்?
8 நான் வானத்திற்கு ஏறிச் சென்றாலும்
நீர் அங்கே இருக்கின்றீர்!
பாதாளத்தில் படுக்கையை
அமைத்துக் கொண்டாலும்
நீர் அங்கேயும் இருக்கின்றீர்!
9 நான் கதிரவனின் இடத்திற்கும்
பறந்து சென்றாலும்
மேற்கே கடலுக்கு அப்பால் வாழ்ந்தாலும்,
10 அங்கேயும் உமது கை
என்னை நடத்திச் செல்லும்;

உமது வலக்கை என்னைப் பற்றிக் கொள்ளும்.
11 'உண்மையில் இருள்
என்னை மூடிக்கொள்ளாதோ?
ஒளி சூழ்வதென இரவும்
என்னைச் சூழ்ந்து கொள்ளாதோ?'
என்று நான் சொன்னாலும்,
12 இருள்கூட உமக்கு இருட்டாய் இல்லை;
இரவும் பகலைப்போல
ஒளியாய் இருக்கின்றது;
இருளும் உமக்கு ஒளிபோல் இருக்கும்.
13 ஏனெனில், என் உள் உறுப்புகளை
உண்டாக்கியவர் நீரே!
என் தாயின் கருவில் எனக்கு உருதந்தவர் நீரே!
14 அஞ்சத்தகு, வியத்தகு முறையில்
நீர் என்னைப் படைத்ததால்,
நான் உமக்கு நன்றி நவில்கின்றேன்;
உம் செயல்கள் வியக்கத்தக்கவை என்பதை
என் மனம் முற்றிலும் அறியும்.
15 என் எலும்பு உமக்கு மறைவானதன்று;
மறைவான முறையில் நான் உருவானதையும்
பூவுலகின் ஆழ்பகுதிகளில்
நான் உருப்பெற்றதையும் நீர் அறிந்திருந்தீர்.
16 உம் கண்கள் கருமுளையில்
என் உறுப்புகளைக் கண்டன;
நீர் எனக்குக் குறித்து வைத்துள்ள
நாள்கள் எல்லாம் எனக்கு வாழ்நாள்
எதுவுமே இல்லாத காலத்திலேயே
உமது நூலில் எழுதப்பட்டுள்ளன.
17 இறைவா! உம்முடைய நினைவுகளை
நான் அறிந்துகொள்வது எத்துணைக் கடினம்!
அவற்றின் எண்ணிக்கை எத்துணைப் பெரிது!
18 அவற்றைக் கணக்கிட நான் முற்பட்டால்,
அவை கடல் மணலிலும் மிகுதியாய் உள்ளன;
அவற்றை எண்ணி முடிக்க வேண்டுமானால்,
நீர் உள்ளளவும் நான் வாழ வேண்டும்.
19 கடவுளே! நீர் தீயோரைக் கொன்றுவிட்டால்,
எவ்வளவு நலம்!
இரத்தப்பழிகாரர் என்னிடமிருந்து அகன்றால்,
எத்துணை நன்று!
20 ஏனெனில், அவர்கள் தீயமனத்துடன்
உமக்கு எதிராய்ப் பேசுகின்றார்கள்;
அவர்கள் தலைதூக்கி
உமக்கு எதிராய்ச் சதி செய்கின்றார்கள்.
21 ஆண்டவரே! உம்மை வெறுப்போரை
நானும் வெறுக்காதிருப்பேனோ?
உம்மை எதிர்க்க எழுவோரை
நானும் வெறுக்கின்றேன் அன்றோ?
22 நான் அவர்களை அடியோடு வெறுக்கின்றேன்;
அவர்கள் எனக்கும் எதிரிகள் ஆனார்கள்.

23 இறைவா!
நீர் என் உள்ளத்தை ஆய்ந்து அறியும்;
என் எண்ணங்களை அறியுமாறு
என்னைச் சோதித்துப் பாரும்.
24 உம்மை வருத்தும் வழியில்
நான் செல்கின்றேனோ என்று பாரும்;
என்றுமுள வழியில் என்னை நடத்தியருளும்.

திருப்பாடல் 139:1-24

**சிந்தனைக்கு**

கடவுளுக்கு ஒரு மடல் எழுத விரும்பினால், நாம் என்ன எழுதிவிட இயலும்? தாவீது இந்தத் திருப்பாடலில் என்னவெல்லாம் எழுதியிருக்கிறார் என்று சிந்தியுங்கள்; இதை விடச் சிறந்த ஒரு மடலை எவரேனும் கடவுளுக்கு எழுதக் கூடுமோ! மடலிலும் கவிதையாக வரையப்பட்ட சொல்லோவியம்! தாவீது, இஸ்ரயேலின் இனிமைமிகு பாடகர் அல்லவோ! (2 சாமுவேல் 23:1)

ஒவ்வொரு மனிதனுக்கும் கடவுளைக் குறித்து உள்ளத்தில் எழும் கேள்விகள் - அதிலும் இறைமறுப்பாளர் பலரும் எழுப்பும் கேள்விகள் - அத்தனைக்கும் தாவீது இங்கு விடை காண்கிறார்.

தலைப்பில் பாடகர் தலைவர்க்கு என்ற குறிப்பு உள்ளது (பார்க்க, திருப்பாடல் 4ன் தலைப்பு மற்றும் குறிப்பு); அதேவேளையில், பாடகராகிய தாவீது தன் தலைவராகிய கடவுளுக்கு அனுப்பியது எனல் இத்திருப்பாடலுக்கு மிகவும் பொருத்தமானது.

மேலும் தாவீதுக்கு உரிய திருப்பாடல் என்ற குறிப்பு உள்ளது; ஆனால் சில செப்டுவஜின்ட் மூலப்படிகளில், இறைவாக்கினர் செக்கரியாவின் பெயரும் சேர்த்துக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திருப்பாடலின் மொழிநடை சிறை மீண்ட காலத்தின் மொழிநடை போல உள்ளதாகவும் மொழி அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். ஆனால் தாவீதின் வரலாறோடும், இதர தாவீதியத் திருப்பாடல்களோடும் ஒப்புமைகளை நாம் காண முடியும் (வ.2, இணை 56:8; வ.3, ஒப்புமை 2 சாமுவேல் 12:9-12; வ.6, ஒப்புமை 40:5; வ.10, இணை 63:8 & 2 சாமுவேல் 22:17; வ.13, இணை 22:9-10; வ.19, ஒப்புமை 6:8 & 9:17; வ.21-22, ஒப்புமை 15:4 & 31:6; வ.24, ஒப்புமை 7:3-4, 17:3, 5:8 & 25:8-9). இந்த ஒப்புமைகள் அனைத்தும், இந்தத் திருப்பாடல் தாவீதுக்கு உரியது என்ற பொதுவான நம்பிக்கையை உறுதிப்படுத்துகின்றன. பொதுவான அறிவுரைப் பாடல் என்பதால், சூழல் குறித்த குறிப்பு ஏதும் பாடலில் இல்லை.

அமைப்பு:
வ.1-6, ஒவ்வொருவரையும் உய்த்து உணரும் ஆண்டவர்
வ.7-12, எங்கும் நிறைந்திருக்கும் ஆண்டவர்
வ.13-16, ஒவ்வொருவரையும் உருவாக்கும் ஆண்டவர்
வ17-18, நாம் அறிதற்கு அரிதான ஆண்டவரின் நினைவுகள்
வ.19-22, கடவுளை வெறுக்கும் தீயோர்
வ.23-24, வழி நடத்தும் இறைவர்

வசனம் 139:1
உள்ளத்தை ஆய்ந்து அறியும் கடவுள், 17:3.

வசனம் 139:2
உய்த்து உணரும் ஆண்டவர்; சொல்லாத சொற்களையும் அறிந்தவராக ஆண்டவர்.

வசனம் 139:3
"என் வழிகள் எல்லாம் உமக்குத் தெரிந்தவையே" -
இணை, 119:168ஆ.

வசனம் 139:4
"...சொல் உருவாகு முன்பே..." -
உள்ளத்தின் எண்ணங்களை அறிந்தவர் ஆண்டவர்; எண்ணம் நாவால் சொல்லாக வடிவம் பெறும் போது, ஆளுக்கு ஏற்ப அல்லது சூழலுக்கு ஏற்ப, வெவ்வேறு சொற்களாக வடிவெடுக்கிறது. வெளிவந்த சொற்களையும், அதன் நோக்கத்தையும், இன்னும் உள்ளத்தில் உறைந்திருக்கும் எண்ணத்தையும் அறிந்திருப்பவர் ஆண்டவர் (வ.2; 1 சாமுவேல் 16:7; திருத்தூதர் பணிகள் 1:24; திருவெளிப்பாடு 2:23). வெளிவந்த சொற்களை வைத்து ஒருவரை நாம் தீர்மானிக்கிறோம்; ஆனால் ஆண்டவரோ, உள்ளத்தின் எண்ணங்களை வைத்து நம்மை அறிகிறார்.

வசனம் 139:5
"என்னைச் சூழ்ந்து இருக்கின்றீர்" -
முன்னும் பின்னும் மட்டுமல்ல; இடமும் வலமும் மட்டுமல்ல; 360° நம்மைச் சூழ்ந்து ஆண்டவர் இருக்கிறார்.

"உமது கையால் என்னைப் பற்றிப் பிடிக்கிறீர்" -
ஆண்டவரின் கரம் நம்மீது இருப்பது, நாம் தடுமாறும் போதும், தடம் மாறும் போதும் நம்மைப் பிடித்து நிறுத்தவே!

வசனம் 139:6
"என்னைப் பற்றிய உம் அறிவு..." -
முதல் ஐந்து வசனங்களிலும் சொல்லப்பட்ட ஆண்டவரின் அறிவு; "இதயமே அனைத்திலும் வஞ்சகம் மிக்கது; அதனை நலமாக்க முடியாது. அதனை யார்தான் புரிந்து கொள்வர்?" (எரேமியா 17:9). உள்ளத்தில் இருப்பதையும், அதன் வழிச் செல்லும் ஒருவரின் வீழ்ச்சியையும் அறிந்துள்ள ஆண்டவரின் கரம் ஒருவரைத் தடுத்து நிறுத்தும் போது, நடந்திருக்கக் கூடிய வீழ்ச்சியை எண்ணி, திருப்பாடகர் பெரும் வியப்படைகிறார்.

வசனம் 139:7-12
தனி ஒருவரைச் சூழ இருந்து (வ.5), அவரின் உள்ளத்தை முற்றிலும் அறிந்துள்ள ஆண்டவர், எங்கும் நிறைந்த ஆண்டவராக இங்கு அறியப்படுகிறார். எங்கும் பரவி இலங்கும் இறைவரை ஒருவர் அறிவது, அவர் இந்தப் பேரண்டத்தை அறிந்திருக்கும் அளவே!

வசனம் 139:7
இணை, எரேமியா 23:24; ஆமோஸ் 9:2-4; எபிரேயர் 4:13.

பேரண்டம் முழுவதும் பரவிச் செயல்படும் பேராற்றல் கடவுளுடையது. எல்லைகளற்ற அந்த ஆற்றலுக்கு விலகி நாம் இயங்க இயலாது. நாம் சார்ந்து வாழும் அந்தப் பேராற்றலை உணர, உலகெங்கும் வாழ்வோரைப் பவுலடிகள் அழைக்கிறார், திருத்தூதர் பணிகள் 17:24-28.

வசனம் 139:8-10
*நிலைவாழ்வு பெற்றோரின் உலகு, ஆண்டவர் உறையும் விண்ணுலகு; இறந்தோரின் உலகு பாதாளம். அனைத்தையும் ஆளுகை செய்வது ஆண்டவரின் பேராற்றல். மேலும் பார்க்க, யோபு* 26:6; *ஆமோஸ்* 9:2.

வசனம் 139:9
"*கதிரவனின் இடத்திற்கும்*" *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரேயச் சொற்களை,* "*வைகறையின் இறக்கைகளால்*" *என நேரடியாகப் பொருள் கொள்ளலாம். ஒரு திசை தொடங்கி மறுதிசைக்கு விரையும் கதிரவனின் வேகத்தை இது குறிக்கிறது. அப்படி விரைந்து சென்றாலும், நமது பார்வைக்கு மறையும் கதிரவனைப் போல், கடவுளின் திருமுன் எவரும் மறைந்து கொள்ள முடியாது. எப்போதும், எங்கும் வழிநடத்தும் கரமாக உடன் தொடர்வது, கடவுளின் வலது கரம்.*

வசனம் 139:10
"*வலக்கை*" -
*பார்க்க,* 138:7 *மற்றும் குறிப்பு.*

வசனம் 139:11-12
*இரவிலும் பகலிலும் இயங்கும் இறையாற்றல், கவித்துவமான வருணிப்பாக.*

*கடவுளுக்கு மறைவானது எதுவும் இல்லை; இருளில் ஒருவர் மறைந்து வாழ்தல் எளிது என்றாலும், கடவுளுக்கு இரவும் ஒளி மிக்கதே!*
*பார்க்க,* 1 *யோவான்* 1:5. *ஒப்பிடுக, யோபு* 34:22.

வசனம் 139:13-16
*கருவிலேயே காணும் கடவுள். ஒப்பிடுக, யோபு* 10:8&11.

வசனம் 139:15
"...*பூவுலகின் ஆழ்பகுதியில்*..." -
*கவிஞனின் கற்பனை. நமது பார்வைக்கு மறைவாகக் கருவில் ஒருவர் உருவாகி வளர்வதை விளக்க ஓர் உவமை.*

வசனம் 139:16
"*நீர் எனக்குக் குறித்து வைத்துள்ள நாள்கள் எல்லாம் எனக்கு வாழ்நாள் எதுவுமே இல்லாத காலத்திலேயே உமது நூலில் எழுதப்பட்டுள்ளன*" -
*ஒவ்வொருவரின் வாழ்வின் நாள்களை, அவர்கள் இந்த மண்ணில் பிறக்கும் முன்பே குறித்து வைக்கும் கடவுள். இதையே, துயரின் உச்சத்திலும் யோபு நம்பிக்கையோடு குறிப்பிடுகிறார்:* "*எனக்கு அவர் குறித்துள்ளதை, அவர் நிறைவேற்றுவார்.*"

"...*உமது நூலில்*..." -
*நம் பெயர்கள் எழுதப்பட்டுள்ள நூல்,* 69:28; *விடுதலைப் பயணம்* 32:32&33.

வசனம் 139:17-18
*ஒப்பிடுக, வ.*6 & 40:5.

*திருப்பாடகர் இங்கு வியந்தேத்தும் கருத்திற்கு, இறைவாக்கினர் வழியாக ஆண்டவர் மறுமொழி உரைக்கிறார்:* "*மண்ணுலகத்திலிருந்து விண்ணுலகம் மிக உயர்ந்து இருப்பதுபோல உங்கள் வழிமுறைகளைவிட என் வழிமுறைகளும், உங்கள் எண்ணங்களைவிட என் எண்ணங்களும் மிக உயர்ந்திருக்கின்றன.*" (*எசாயா* 55:9).

மண்ணில் வாழ்வோர் வாழ்வாங்கு நீடு வாழ்ந்தாலும், தாவீது விரும்புவது போல, கடவுளின் ஞானக் களஞ்சியத்தில் குவித்து வைத்திருக்கும் எண்ணங்களை எண்ணி முடிக்க முடியுமோ!

வசனம் 139:19-20
"நீர் தீயோரைக் கொன்று விட்டால், எவ்வளவு நலம்" -
இவ்வாறு ஓர் உலகம் இந்த மண்ணில் அமைந்து விட்டால், அதுவே விண்ணரசு!
அதற்காக மன்றாடுவது மட்டுமல்ல (மத்தேயு 6:10), அமையப் போராடுவதுமே நேர்மையாளருக்கு ஆண்டவர் விதித்த கடமை.

வசனம் 139:21-22
"உம்மை வெறுப்போரை நானும் வெறுக்காதிருப்பேனோ?" -
தாவீது அரசரின் காலத்தை விடவும், வெறுப்பே விதைக்கப்படும் இன்றைய உலகில், நம்மைச் சுற்றிலும் கடவுள் வெறுக்கக்கூடிய மனிதர்களே நிறைந்துள்ளனர். ஆனால் ஆண்டவர் நம்முன் வைக்கும் கேள்வி: "உங்களிடத்தில் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்துவீர்களானால் உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்?" (மத்தேயு 5:46). எனவே தம்மை வெறுப்போரிடமும் அன்புகூரும் கடவுளைப் போன்றே, அவர்களின் நலவாழ்வுக்காக நாம் மன்றாடுவோம்.

வசனம் 139:23-24
இணை, 26:2.

வசனம் 139:24
கடவுளை வருத்தும் வழியில் நாம் செல்கின்றோமா? ஒவ்வொரு செயலுக்கும் முன்பு இந்தக் கேள்வியை நமது உள்ளங்களில் எழுப்புவோம்.

"என்றுமுள வழியில் என்னை நடத்தியருளும்" -
பார்க்க, நீதிமொழிகள் 12:28.

"வாழ்வுக்குச் செல்லும் வாயில் மிகவும் இடுக்கமானது; வழியும் மிகக் குறுகலானது, இதைக் கண்டுபிடிப்போர் சிலரே!" (மத்தேயு 7:14). அந்தச் சிலரில் ஒருவராக நாம் நடக்க, ஆண்டவர் நம்மை வழிநடத்துவாராக!

✝

## 19 திருப்பாடல் 140

(பாதுகாப்புக்காக மன்றாடல்)

*பாடகர் தலைவர்க்கு; தாவீதின் புகழ்ப்பா*
1 ஆண்டவரே!
தீயோரிடமிருந்து என்னை விடுவியும்;
வன் செயல் செய்வோரிடமிருந்து
என்னைப் பாதுகாத்தருளும்.
2 அவர்கள் தம் மனத்தில்
தீயனவற்றை திட்டமிடுகின்றனர்;
நாள்தோறும் சச்சரவுகளைக்

கிளப்பி விடுகின்றனர்.
3 அவர்கள் பாம்பெனத் தம் நாவைக்
கூர்மையாக்கிக் கொள்கின்றனர்;
அவர்களது உதட்டில் உள்ளது
விரியன் பாம்பின் நஞ்சே!
(சேலா)
4 ஆண்டவரே!
தீயோரின் கையினின்று
என்னைக் காத்தருளும்;
கொடுமை செய்வோரிடமிருந்து
என்னைப் பாதுகாத்தருளும்;
அவர்கள் என் காலை
வாரிவிடப் பார்க்கின்றார்கள்.
5 செருக்குற்றோர் எனக்கெனக்
கண்ணியை மறைவாக வைக்கின்றனர்;
தம் கயிறுகளால் எனக்குச்
சுருக்கு வைக்கின்றனர்;
6 நானோ ஆண்டவரை நோக்கி
இவ்வாறு வேண்டினேன்:
நீரே என் இறைவன்!
ஆண்டவரே! உம் இரக்கத்திற்காக
நான் எழுப்பும் குரலுக்குச் செவிசாயும்.
7 என் தலைவராகிய ஆண்டவரே!
எனக்கு விடுதலை வழங்கும் வல்லவரே!
போர் நடந்த நாளில்
என் தலையை மறைத்துக் காத்தீர்!
8 ஆண்டவரே!
தீயோரின் விருப்பங்களை நிறைவேற்றாதேயும்;
அவர்களின் சூழ்ச்சிகளை வெற்றி பெறவிடாதேயும்.
இல்லையெனில், அவர்கள் ஆணவம் கொள்வார்கள்.
(சேலா)
9 என்னைச் சூழ்பவர்கள்
செருக்குடன் நடக்கின்றார்கள்;
அவர்கள் செய்வதாகப் பேசும் தீமை
அவர்கள் மேலே விழுவதாக!
10 நெருப்புத் தழல் அவர்கள்மேல் விழுவதாக!
மீளவும் எழாதபடி படுகுழியில் தள்ளப்படுவார்களாக!
11 புறங்கூறும் நாவுடையோர்
உலகில் நிலைத்து வாழாதிருப்பராக!
வன்செயல் செய்வாரைத்
தீமை விரட்டி வேட்டையாடுவதாக!
12 ஏழைகளின் நீதிக்காக
ஆண்டவர் வழக்காடுவார் எனவும்
எளியவர்களுக்கு நீதி வழங்குவார்
எனவும் அறிவேன்.
13 மெய்யாகவே, நீதிமான்கள் உமது பெயருக்கு
நன்றி செலுத்துவார்கள்;
நேர்மையுள்ளோர் உம் திருமுன் வாழ்வர்.

திருப்பாடல் 140:1-13

**சிந்தனைக்கு**

"தீயோனிடமிருந்து எங்களை விடுவியும்" என ஆண்டவர் கற்பித்த மன்றாட்டில், ஏறெடுப்பதுவே தொடக்கமாக அமைந்ததொரு திருப்பாடல் (ஸ்பர்ஜின்). 140 முதல் 143 முடிய உள்ள தாவீதியத் திருப்பாடல்கள் புலம்பல் மன்றாட்டுப் பாடல்களாக உள்ளன.

திருப்பாடல் 140ன் எபிரேயத் திருப்பாடலில், சில வசனங்களில் (வ.10&11) உள்ள அரமேய வாடையை முன்வைத்து, தாவீதுக்கு உரியது என்ற தலைப்பிற்கு வினா எழுப்புவோர் உண்டு; இருப்பினும் கருப்பொருளின் அடிப்படையில் இத்திருப்பாடல் தாவீதுக்கு உரியது என்பதில் அனைவரும் உடன்படுகின்றனர் (இதுபோன்ற பலவற்றுள் சில தாவீதியத் திருப்பாடல்கள், 7, 10, 17.) காலம் மற்றும் சூழல் குறித்த குறிப்பு ஏதுமில்லை. எனவே பொதுவான அறிவுரையாக எழுதப்பட்ட திருப்பாடல் என்று கொள்ளலாம்.

அமைப்பு:
வ.1-3, தீயோருக்கு எதிரான தொடக்க மன்றாட்டு
வ.4-5, தன்னைக் காக்க மன்றாடும் திருப்பாடகர்
வ.6-8, காக்கும் கடவுள் காக்க மன்றாட்டு
வ.9-11, தீயோரைத் தண்டிக்க மன்றாட்டு
வ.12-13, கடவுள்தம் காப்பில் வாழும் நேர்மையாளர்

வசனம் 140:1
இணை, 17:13, 59:2, 71:4, 86:2, 142:6, 143:9.

வன்செயல் செய்வோர் -
மேலும் பார்க்க, வ.4&11.

வசனம் 140:2-3&8
எண்ணம் மற்றும் சொல்லில் தீயன. இவையே தீச்செயல்களாக விளைவன, வ.4,5&11.

வசனம் 140:3
பாம்பெனத் தீண்டும் நா, 58:3-5.

வசனம் 140:4
சற்றேறக்குறைய வ.1.

வசனம் 140:5
சூழ்ச்சியான வஞ்சகச் செயல்கள், 10:8-9, 31:4, 57:6, 119:110, 124:7.

வசனம் 140:6
மன்றாட்டுக்கு மறுமொழியை வேண்டுதல், 28:2 மற்றும் பல வசனங்கள்.

"நீரே என் இறைவன்" -
தாவீதின் பற்றுறுதி அறிக்கை, 3:7, 5:2, 7:1, மற்றும் பல வசனங்கள்.

வசனம் 140:7
"போர் நடந்த நாளில் என் தலையை மறைத்துக் காத்தீர்" -

ஒரு வரலாற்றுக் குறிப்பு; போரில் தப்பிக்கும் சூழ்நிலை தாவீது அரசருக்கு ஒரு முறை மட்டுமே நேர்ந்தது (2 சாமுவேல் 21:15-17).

வசனம் 140:8
ஒப்பிடுக, 10:2-3. தங்கள் தீச்செயல்களில் வெற்றி பெறும் தீயோர், கடவுள் தங்களோடு இருப்பதாகச் செருக்கடைகின்றனர்; தங்கள் தீய வழிகளில் தீவிரமாக ஈடுபடுகின்றனர். எனவே, தீயோரின் விருப்பங்களையே முறியடிக்க தாவீது வேண்டுகிறார்.

வசனம் 140:9
திட்டமிடும் தீமை திட்டமிடுவோர் மீதே திரும்ப மன்றாட்டு, 7:15-16, 9:15, 141:10.

வசனம் 140:10
"நெருப்புத் தழல் அவர்கள் மேல் விழுவதாக" -
சோதோம் கொமாராவின் தொன்மையான நிகழ்வு நினைவுகூரப்படுதல், 11:6; தொடக்க நூல் 19:24-25.

வசனம் 140:12
ஏழைகளையும் எளியோரையும் ஆதரிக்கும் ஆண்டவர், 10:18, 68:5, 109:31, 146:7-9; இணைச் சட்டம் 10:18.

வசனம் 140:13
நன்றி செலுத்தும் நேர்மையாளர், 7:17, 32:11, 35:27-28, 54:6-7, 58:11.

"நேர்மையுள்ளோர் உம் திருமுன் வாழ்வர்" -
கடவுளோடு இணைந்த வாழ்வை வாஞ்சிக்கும் தாவீது, 16:11, 23:6, 27:13, 41:12, 56:13. மேலும் பார்க்க, 116:9.

ஏனோக்கு கடவுளோடு நடந்தார், தொடக்க நூல் 5:22; நோவா கடவுளோடு நடந்தார், தொடக்க நூல் 6:9; முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் உண்மையோடு நடப்போமானால் (1 அரசர்கள் 2:4), நாமும் கடவுளோடு நடப்போம். நமது தீர்மானம் என்ன?

## 19 திருப்பாடல் 141

*(மாலை மன்றாட்டு)*

*தாவீதின் புகழ்ப்பா*
1 ஆண்டவரே!
நான் உம்மை நோக்கிக் கதறுகின்றேன்;
விரைவாய் எனக்குத் துணைசெய்யும்.
உம்மை நோக்கி நான் வேண்டுதல் செய்யும்போது
என் குரலுக்குச் செவிசாய்த்தருளும்.
2 தூபம்போல் என் மன்றாட்டு
உம் திருமுன் ஏற்றுக்கொள்ளப்படுவதாக!
மாலைப் பலிபோல் என் கைகள்

உம்மை நோக்கி உயர்வனவாக!
3 ஆண்டவரே!
என் நாவுக்குக் காவல் வைத்தருளும்;
என் இதழ்களின் வாயிலில்
காவலாளியை வைத்தருளும்.
4 என் இதயம் தீயது எதையும் நாடவிடாதேயும்;
தீச்செயல்களை நான் செய்யவிடாதேயும்;
தீச்செயல் செய்யும் மனிதரோடு
என்னைச் சேரவிடாதேயும்;
அவர்களோடு இனிய விருந்தினை
நான் உண்ணவிடாதேயும்.
5 நீதிமான் என்னைக் கனிவோடு தண்டிக்கட்டும்;
அது என் தலைக்கு எண்ணெய்போல் ஆகும்;
ஆனால், தீயவரின் எண்ணெய்
என்றுமே என் தலையில் படாமல் இருக்கட்டும்;
ஏனெனில், அவர்கள் செய்யும் தீமைகளுக்கு எதிராய்
நான் என்றும் வேண்டுதல் செய்வேன்.
6 அவர்கள் நீதிபதிகளிடம்
தண்டனைக்கென ஒப்புவிக்கப்படும் பொழுது,
நான் சொன்னது எவ்வளவு உண்மையானது
என்று ஏற்றுக் கொள்வார்கள்;
7 'ஒருவரால் பாறை பிளந்து சிதறடிக்கப்படுவதுபோல்,
எங்கள் எலும்புகளும்
பாதாளத்தின் வாயிலில் சிதறடிக்கப்படும் என்பார்கள்.
8 ஏனெனில், என் தலைவராகிய ஆண்டவரே!
என் கண்கள் உம்மை நோக்கியே இருக்கின்றன;
உம்மிடம் அடைக்கலம் புகுகின்றேன்;
என் உயிரை அழியவிடாதேயும்.
9 அவர்கள் எனக்கு வைத்த கண்ணிகளிலிருந்து
என்னைக் காத்தருளும்;
தீமை செய்வோரின் சுருக்குகளிலிருந்து
என்னைப் பாதுகாத்தருளும்.
10 தீயோர் தாங்கள் வைத்த கண்ணிகளில்
ஒருங்கே வந்து விழுவார்களாக!
நானோ தடையின்றிக் கடந்து செல்வேனாக!

திருப்பாடல் 141:1-10

**சிந்தனைக்கு**

திருப்பாடல் 63 காலை வழிபாட்டின் பாடல் என்றால், திருப்பாடல் 141 மாலை வழிபாட்டின் பாடல், பார்க்க வ.2.

வ.5-7 பகுதி மொழிபெயர்ப்புச் சிக்கல் தரும் பகுதியாக உள்ளது. வெவ்வேறு மொழிபெயர்ப்புகள், வெவ்வேறு புரிதல்களின் அடிப்படையில், முந்தைய மற்றும் பிந்தைய வசனங்களுக்கு இசைவான போக்கைக் கைக்கொண்டு மொழிபெயர்த்துள்ளன.

இந்தத் திருப்பாடல் இதற்கு முந்தைய திருப்பாடலோடு கருப்பொருளில் இணையாக உள்ளது:

தீயோர், 140:4&8 > வ.4&10
நீதிமான், 140:13 > வ.5
காத்தல், 140:4 > வ.9
உதடுகள், 140:3 > வ.3
வன்செயல் / தீச்செயல், 140:1&11 > வ.4&5
கண்ணி / சுருக்கு, 140:5 > வ.9
பற்றுறுதி, 140:6-7 > வ.8

தாவீதியத் திருப்பாடல் என்பதில் ஆய்வறிஞர்கள் அனைவரும் ஒன்றுபடுகின்றனர். ஆனால் காலம் மற்றும் பின்னணி குறித்த செய்திகள் ஏதுமில்லை.

அமைப்பு:
வ.1-2, மாலை மன்றாட்டுக்கு மறுமொழியை வேண்டும் திருப்பாடகர்
வ.3-4, உதடுகளுக்குக் காவல் வைக்க மன்றாடும் திருப்பாடகர், ஆசையைத் தூண்டும் தீயோரின் மயக்கும் விருந்துக்கு விலகி நிற்க வேண்டுதல்
வ.5-7, நீதிமானின் கண்டிப்பை ஏற்கும் திருப்பாடகர், தீயோரின் வீழ்ச்சிக்கு மன்றாடுதல்
வ.8-10, தீயோரின் கண்ணிகளில் அவர்களே சிக்குற மன்றாடல்

வசனம் 141:1
"விரைவாய் எனக்குத் துணை செய்யும்" -
இக்கட்டின் தீவிரத்தை உணர்ந்து தாவீதின் மன்றாட்டு, 22:19, 31:2, மேலும் பல வசனங்கள்.

"என் குரலுக்குச் செவி சாய்த்தருளும்" -
பார்க்க, 140:6 மற்றும் குறிப்பு.

வசனம் 141:2
"தூபம் போல் என் மன்றாட்டு..." -
விண்ணை நோக்கி எழும் தூபம் போல, தன் மன்றாட்டு விண்ணகத்தில் உறைந்திருக்கும் கடவுளை நோக்கி எழுந்துயர தாவீது மன்றாடுகிறார், திருவெளிப்பாடு 8:4.

"என் கைகள் உம்மை நோக்கி உயர்வனவாக" -
ஒரு வழிபாட்டு மரபு, 134:2 மற்றும் குறிப்பு.

வசனம் 141:3
"... நாவுக்குக் காவல்..." -
இவ்வாறு இங்கு வேண்டிக் கொள்ளும் தாவீது, பிறிதொரு பாட்டில், அறிவுரையாகத் தருகிறார், 34:13. மேலும் பார்க்க, நீதிமொழிகள் 10:19, 17:28, 21:23; தனது திருமடலில், நாவடக்கம் குறித்து யாக்கோபு (3:1-12) மிகவும் விரிவாக எழுதியுள்ளார். நாவைக் காத்தல் என்பது நாம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய அறிவுக்குகந்த செயல்; ஆண்டவர் ஞானத்தை அருளுகிறார்; ஆனால் அதன் அடிப்படையில் நாம் நமது நுண்ணறிவைப் பயன்படுத்தி, நமது சொற்கள் அல்லது அமைதியில் கருத்தாகச் செயல்பட வேண்டும்.
சொல் ஓர் ஆயுதம்; பேசாதிருத்தல் ஒரு பேராயுதம்!

வசனம் 141:4
இன்சொல் பேசி ஈர்க்கும் தீயோர், நீதிமொழிகள் 1:10-17.

வசனம் 141:5
*நீதிமான் ஒருவரின் கண்டிப்பு, அருட்பொழிவோடு* (23:5, 45:7, 133:2) *ஒப்புமையாக உரைக்கப்பட்டது.*

வசனம் 141:6
*தீயோர் நீதித் தீர்ப்புக்கென ஒப்புவிக்கப்படும்போது, நேர்மையாளரின் நிலைப்பாடு சரியென மெய்ப்பிக்கப்படும்.*

வசனம் 141:7
*சிதறடிக்கப்படும் எழும்புகள் என்பது மரபான உடலடக்கம் மறுக்கப்படுவதைக் குறிக்கிறது,* 79:2-4.

வசனம் 141:8
*தன் வாழ்வுக்காக, முற்றிலும் கடவுளைச் சார்ந்து வாழும் தாவீது.*

வசனம் 141:9
"... *கண்ணி* ... *சுருக்கு* ..." -
இணை, 140:5.

வசனம் 141:10
"*தீயோர் தாங்கள் வைத்த கண்ணிகளில் ஒருங்கே வந்து விழுவார்*" -
*பார்க்க,* 140:9 *மற்றும் குறிப்பு.*

✝

## 19 திருப்பாடல் 142

(*உதவிக்காக மன்றாடல்*)

*தாவீதின் அறப்பாடல்; குகையில் இருந்த பொழுது மன்றாடியது*
1 ஆண்டவரை நோக்கி
அபயக்குரல் எழுப்புகின்றேன்;
உரத்த குரலில் ஆண்டவரின்
இரக்கத்திற்காக வேண்டுகின்றேன்.
2 என் மனக்குறைகளை
அவர் முன்னிலையில் கொட்டுகின்றேன்;
அவர் திருமுன்னே
என் இன்னலை எடுத்துரைக்கின்றேன்;
3 என் மனம் சோர்வுற்றிருந்தது;
நான் செல்லும் வழியை
அவர் அறிந்தேயிருக்கின்றார்;
நான் செல்லும் வழியில்
அவர்கள் எனக்குக் கண்ணி வைத்துள்ளார்கள்.
4 வலப்புறம் கவனித்துப் பார்க்கின்றேன்;
என்னைக் கவனிப்பார் எவருமிலர்;
எனக்குப் புகலிடம் இல்லாமற் போயிற்று;
என் நலத்தில் அக்கறை கொள்வார் எவருமிலர்.

5 ஆண்டவரே!
உம்மை நோக்கிக் கதறுகின்றேன்;
'நீரே என் அடைக்கலம்;
உயிர் வாழ்வோர் நாட்டில் நீரே என் பங்கு'.
6 என் வேண்டுதலைக் கவனித்துக் கேளும்;
ஏனெனில், நான் மிகவும் தாழ்த்தப்பட்டுள்ளேன்;
என்னைத் துன்புறுத்துவோரிடமிருந்து
எனக்கு விடுதலை அளித்தருளும்;
ஏனெனில், அவர்கள் என்னைவிட வலிமைமிக்கோர்.
7 சிறையினின்று என்னை விடுவித்தருளும்;
உமது பெயருக்கு நான் நன்றி செலுத்துவேன்;
நீதிமான்கள் என்னைச் சூழ்ந்து நிற்பார்கள்;
ஏனெனில், நீர் எனக்குப் பெரும் நன்மை செய்கின்றீர்.

திருப்பாடல் 142:1-7

**சிந்தனைக்கு**

*தான் சிக்குண்ட கண்ணிகளிலிருந்து தன்னை விடுவிக்க மீண்டும் கதறி மன்றாடும் திருப்பாடகர். சொற்களாக வெளிவரும் துயரம், உள்ளத்தின் சுமையைக் குறைக்குமன்றோ! அதுவே ஆண்டவர் முன் ஊற்றப்படும் கண்ணீர், நம்பிக்கையைப் பெருக்குமன்றோ!*

*பாடலின் போக்கு நமக்கு நினைவூட்டும் வேறு சில திருப்பாடல்கள்:* 64, 120 *மற்றும்* 140.
*முந்தைய திருப்பாடலோடு தொடர்புள்ள சொற்கள்:*
*கண்ணி, வ.*3 > 141:9
*அடைக்கலம், வ.*4&5 > 141:8
*நீதிமான், வ.*7 > 141:5

*அறப்பாடல் என்று தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது; பார்க்க, திருப்பாடல்* 32 *தலைப்பின் குறிப்பு. பாடலில், "சிறையினின்று என்னை விடுவித்தருளும்," என்ற குறிப்பு உள்ளது; அதனடிப்படையில், சிறை மீண்ட ஒருவர் இந்தத் திருப்பாடலை எழுதியிருக்கலாம் என்ற கருத்து எழலாம்; ஆனால் குகையில் கைதி போலச் சிக்குண்ட நிலையை, இவ்வாறு ஓர் உருவகமாக தாவீது குறிப்பிடுகிறார்* (*இணை,* 88:8). *தாவீது சவுலுக்கு அஞ்சி ஓடிய காலத்தில், இரண்டு குகைகள் வரலாற்றில் இடம்பெறுகின்றன: அதுல்லாம்* (1 *சாமுவேல்* 22:1) *மற்றும் ஏன்கேதி பள்ளத்தாக்கில் இருந்த குகை* (1 *சாமுவேல்* 24:1-3). *இது குறித்து, திருப்பாடல்* 57 *தலைப்பின் குறிப்பு பார்க்க.*

*அமைப்பு:*
*வ.*1-2, *ஆண்டவரை நோக்கிக் கதறி மன்றாடல்*
*வ.*3-5, *ஆதரவற்றுச் சோர்வுற்ற நிலையிலும், இறைப்பற்றில் உறுதி*
*வ.*6-7, *விடுவிக்க மீண்டும் மன்றாட்டு*

*வசனம்* 142:1
*இணை,* 77:1 & 140:6. *துயரின் மிகுதியில் குரலெழுப்பி முறையிடும் திருப்பாடகர்,* 27:7, 64:1.

வசனம் 142:2
*தன் துயர்களை ஆண்டவரிடம் வடிக்கும் தாவீது*, 3:4, 30:8, 34:6, 62:8; மேலும் பார்க்க, 50:15; *பிலிப்பியர்* 4:6-7; 1 பேதுரு 5:7.

வசனம் 142:3
*நம்பிக்கையையும் சோர்வையும் ஒரே நேரத்தில் வெளிப்படுத்தும் திருப்பாடகர்*, 77:3.

*சிறைப் பிடிக்கக் கண்ணி வைக்கும் தீயோர்*, 140:5 & 141:9.

வசனம் 142:4
*ஆண்டவரைத் தன் வலப்பக்கத்தில் வைத்திருக்கும் தாவீது*, 16:8; இங்கோ தன் மனதில் ஒரு வெறுமையை உணர்கிறார். இதுவே அவரது கதறலுக்குக் காரணமாக அமைகிறது, வ.5.

*யாருமற்றோரின் நலனில் அக்கறை கொள்ளும் கடவுள்*, எரேமியா 30:17.

வசனம் 142:5
*கைவிடப்பட்ட நிலையைத் தன்னுள் உணர்ந்தாலும், மீண்டும் ஆண்டவருக்குள் தஞ்சமடையும் தாவீது, தன் பற்றுறுதியை அறிக்கையிடுகிறார்* (16:5-6; 73:26).

*நிராதரவான நிலையில் ஆண்டவரே அடைக்கலம்*, 7:1, 9:9, 14:6, 37:40, 46:1, 59:16, 61:3, 62:7-8, 71:7, 91:2&9, 94:22.

"*உயிர் வாழ்வோர் நாட்டில்...*" -
*பார்க்க*, 27:13, 116:9.

வசனம் 142:6
*தன் சார்பில் செயல்படும் ஆண்டவரில் நம்பிக்கை வைக்கும் தாவீது*, 31:1-4, 55:2, 62:5-6.

"*அவர்கள் என்னை விட வலிமை மிக்கோர்*" -
எண்ணிக்கையிலும் வலிமையிலும் பெருத்த படையோடு சவுல், 1 சாமுவேல் 24:2.

வசனம் 142:7
"*...நன்றி செலுத்துவேன்*" -
*மீட்பில் நன்றிப் பாடல் பாடும் உள்ளம்*, 22:22-25.

"*நீதிமான்கள் என்னைச் சூழ்ந்து நிற்பார்கள்*" -
*நீதிமானின் மீட்பில் நீதிமான்கள் வெறுமனே சூழ்ந்து நிற்க மாட்டார்கள்; மாறாக ஆர்ப்பரித்து ஆண்டவரைக் கொண்டாடுவார்கள்*, 35:27, 40:16.

*உங்கள் திருச்சபைக்குள் புதியவர் ஒருவரைக் கண்டால், நீங்கள் என்ன செய்வீர்கள்? வெறுமனே கடந்து செல்வீர்களா? வரவேற்றுப் புன்முறுவல் செய்வீர்களா?*

✝

## 19 திருப்பாடல் 143

(உதவிக்காக மன்றாடல்)

*தாவீதின் புகழ்ப்பா*

1 ஆண்டவரே!
என் மன்றாட்டைக் கேட்டருளும்;
நீர் நம்பிக்கைக்கு உரியவராய் இருப்பதால்,
உமது இரக்கத்திற்காக நான் எழுப்பும்
மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்;
உமது நீதியின்படி எனக்குப் பதில் தாரும்.
2 தண்டனைத் தீர்ப்புக்கு
உம் அடியானை இழுக்காதேயும்;
ஏனெனில், உயிர் வாழ்வோர் எவரும்
உமது திருமுன் நீதிமான் இல்லை.
3 எதிரி என்னைத் துரத்தினான்;
என்னைத் தரையிலிட்டு நசுக்கினான்;
என்றோ இறந்தொழிந்தவர்களைப்போல்
என்னை இருட்டில் கிடக்கச் செய்தான்.
4 எனவே, என்னுள்ளே
என் மனம் ஒடுங்கிப் போயிற்று;
என்உள்ளம் எனக்குள் சோர்ந்து போயிற்று.
5 பண்டைய நாள்களை
நான் நினைத்துக் கொள்கின்றேன்;
உம் செயல்கள் அனைத்தையும் குறித்துச்
சிந்தனை செய்கின்றேன்;
உம் கைவினைகளைப்பற்றி
ஆழ்ந்து சிந்திக்கின்றேன்.
6 உம்மை நோக்கி
என் கைகளை உயர்த்துகின்றேன்;
வறண்ட நிலம் நீருக்காகத் தவிப்பது போல்
என் உயிர் உமக்காகத் தவிக்கின்றது.
(சேலா)
7 ஆண்டவரே!
விரைவாக எனக்குச் செவிசாய்த்தருளும்;
ஏனெனில், என் உள்ளம் உடைந்துவிட்டது;
என்னிடமிருந்து
உம் முகத்தை மறைத்துக் கொள்ளாதேயும்;
இல்லையெனில்,
படுகுழி செல்வோருள் ஒருவராகிவிடுவேன்.
8 உமது பேரன்பை நான்
வைகறையில் கண்டடையச் செய்யும்;
ஏனெனில், உம்மீது நம்பிக்கை வைத்துள்ளேன்;
நான் நடக்க வேண்டிய அந்த வழியை
எனக்குக் காட்டியருளும்;
ஏனெனில், உம்மை நோக்கி
என் உள்ளத்தை உயர்த்துகின்றேன்.
9 ஆண்டவரே!
என் எதிரிகளிடமிருந்து

*என்னை விடுவித்தருளும்;*
*நான் உம்மிடம் தஞ்சம் புகுந்துள்ளேன்.*
10 *உம் திருவுளத்தை நிறைவேற்ற*
*எனக்குக் கற்பித்தருளும்;*
*ஏனெனில், நீரே என் கடவுள்;*
*உமது நலமிகு ஆவி என்னைச்*
*செம்மையான வழியில் நடத்துவதாக!*
11 *ஆண்டவரே!*
*உமது பெயரின் பொருட்டு*
*என் உயிரைக் காத்தருளும்!*
*உமது நீதியின் பொருட்டு என்னை*
*நெருக்கடியினின்று விடுவித்தருளும்.*
12 *உமது பேரன்பை முன்னிட்டு*
*என் பகைவரை அழித்துவிடும்;*
*என் பகைவர் அனைவரையும் ஒழித்துவிடும்;*
*ஏனெனில், நான் உமக்கே அடிமை!*

திருப்பாடல் 143:1-12

**சிந்தனைக்கு**

*தாவீதின் புலம்பல் திருப்பாடல்களில் (140-143) இறுதிப் பாடல். தவக் காலத்தில் பாடத்தக்க கழுவாய்த் திருப்பாடல்களிலும் இறுதிப் பாடல் (ஏனைய கழுவாய்த் திருப்பாடல்கள், 6, 32, 38, 51, 102 மற்றும் 130). இதற்கு ஒப்புமையுடைய மற்றொரு பாடல், திருப்பாடல் 6 (ஒப்பிடுக, வ.2 > 6:1). இருப்பினும், திருப்பாடல்கள் 32 மற்றும் 38 போலவே, இப்பாடல்கள் எதிலும், குறிப்பிட்ட பாவ அறிக்கை என ஏதுமில்லை.*

*தாவீதியத் திருப்பாடல் என்பதில் ஐயமில்லை. காலம் மற்றும் பின்னணி குறித்த செய்திகள் எதுவும் திருப்பாடலில் இல்லை. தொன்மையான கிரேக்க இலத்தீன் மற்றும் எத்தியோப்பிய மொழிபெயர்ப்புகளில், இத்திருப்பாடல் அப்சலோமின் கலகத்தோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது என்கின்றனர். இந்தக் கூற்றை மறுப்போர் உளர் எனினும், தாவீதுக்கு உரியது என்பதில் அனைவரும் உடன்படுகின்றனர்.*

*அமைப்பு:*
*சேலா என்ற சொல்லால் சரிபாதியாகப் பிரிக்கப்பட்ட, முதல் ஆறு வசனங்களை "முறையீடுகள்" என்றும் இறுதி ஆறு வசனங்களை "மன்றாட்டுகள்" என்றும் சுருக்கமாகப் பார்க்கலாம். விரிவாக:*
வ.1-2, *புகழ்ச்சிக்குரிய இறைப் பண்புகள்*
வ.3-4, *நெருங்கி வரும் ஆபத்து*
வ.5-6, *வியத்தகு செயல்களை நினைத்து ஆண்டவரை நாடுதல்*
வ.7-8, *விரைந்து செயல்பட மன்றாடல்*
வ.9-10, *ஆண்டவரின் ஆவி வழிநடத்த மன்றாடல்*
வ.11-12, *மீண்டும் இறைப் பண்புகளைப் புகழ்தல்*

*வசனம்* 143:1-2
*போற்றப்படும் இறைப்பண்புகள்:*
* *நம்பத்தக்கவர்*

* இரக்கம் செய்யும் நீதியுடையவர்
* தண்டனைத் தீர்ப்பளிப்பவர்
- இவற்றோடு இறுதி இரண்டு வசனங்களில் கடவுளின் பேரன்பையும் திருப்பாடகர் நினைவுகூருகிறார்.

வசனம் 143:2
பார்க்க, 130:3; தாவீதைப் போலவே யோபு எழுப்பும் கேள்வி, 14:3.
எந்தத் தீங்கும் செய்திராத தாவீது, தொடர்ந்து சவுலால் வேட்டையாடப்பட்டார். தொடரும் நெருக்குதலால் உந்தப்பட்டு, தனக்குள் தன்னைப் பற்றி எழுந்த கேள்வியோடு ஆண்டவரிடம் தன்னைத் தாழ்த்துகிறார்.

வசனம் 143:3
தன் கடுந்துயரை வெளிப்படுத்தும் தாவீது; இங்கு இருட்டில் கிடப்பதாகச் சொல்லும் தாவீது, மீண்டும் வ.7ல் படுகுழியை நோக்கிச் செல்பவன் போல உள்ளதாகச் சொல்கிறார். இவ்வாறு மீண்டும் மீண்டும் இறப்பை அவர் குறிப்பிடுகிறார்.

வசனம் 143:4
இன்னல்களில் தளர்ந்து போன திருப்பாடகர், 6:2, 38:8&17, 61:2, 77:3, 141:9, 142:3.

இங்கு சோர்ந்து போன உள்ளம்; வ.7ல், உடைந்த உள்ளம். எனவே ஆண்டவரின் உற்சாக ஆவியை தாவீது வேண்டுகிறார், வ.10.

வசனம் 143:5
இணை, 77:5.
மனிதர்களாகிய நமது கடந்த காலம், எந்த அளவுக்கு நமக்கு ஊக்கம் தரும் என்று சொல்ல முடியாது. ஆனால் நம் ஒவ்வொருவரின் வாழ்விலும், கடந்த நாட்களில் ஆண்டவர் செய்திருக்கும் எண்ணற்ற நற்செயல்கள் உறுதியாக நம்மை ஊக்கப்படுத்தும்.

வசனம் 143:6
ஆண்டவர் அருளும் விடுதலைக்காக மட்டுமல்லாமல், அவர்தம் ஐக்கியத்திற்காக ஏங்கும் திருப்பாடகர், 42:1&2, 63:1.

வசனம் 143:7
"என்னிடமிருந்து உம் முகத்தை மறைத்துக் கொள்ளாதேயும்" -
பார்க்க, 27:9, 69:17.
பாவங்களைப் பார்க்க விரும்பாத ஆண்டவர், எசாயா 45:15.
தனது பாவங்களுக்கான தண்டனையிலிருந்து விலக்க மன்றாடிய (வ.2) தாவீது, உடைந்த தன் உள்ளத்தின் பொருட்டு, ஆண்டவர்தம் முகத்தை மறைத்துக் கொள்ளாதேயும் என்று மன்றாடுகிறார்.

வசனம் 143:8
தான் செல்ல வேண்டிய வழியை ஆண்டவர் அறிந்திருக்கிறார் என்று அறிக்கை செய்த தாவீது (142:3), அந்த வழியைத் தனக்கு வெளிப்படுத்த மன்றாடுகிறார்.

"உமது பேரன்பை வைகறையில் கண்டடையச் செய்யும்" -
பார்க்க, புலம்பல் 3:22-23. புதிய நாள், புதிய விடியல், புதிய எதிர்நோக்கு, 5:3, 30:5.

வசனம் 143:9
ஒருவனாக இருந்த எதிரி (வ.3), இப்போது பலராகப் பெருகிவிட்டனர். உண்மையில், நமக்கு எதிரான வேளைகளில், எதிர்ப்பின் முகமாக ஒருவன் இருப்பான்; அவனுக்குப் பின்னால், அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் பலரும் இருப்பார்கள். இதனை நாம் தாவீதின் வாழ்க்கையில், அவர் அப்சலோமுக்குத் தப்பி ஓடிய வேளையில் பார்க்கலாம் (2 சாமுவேல் 17 ~ 19). அதேவேளையில், தாவீதுக்காக உறுதியாக நின்ற பலரையும் ஆண்டவர் அவருக்குத் தந்தார் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

"நான் உம்மிடம் தஞ்சம்..." -
தாவீது தனக்கு வந்த எல்லாச் சோதனைகளின் போதும், ஆண்டவரையே அடைக்கலமாகக் கொண்டார், 141:8, 142:4&5.

வசனம் 143:10
தமது ஆவியால் செம்மையான வழியில் நடத்தும் ஆண்டவர்; பார்க்க, 25:4-5.

வசனம் 143:11
"உமது பெயரின் பொருட்டு..." -
தமது பெயரின் பொருட்டுத் தம் மக்களைக் கைவிடாத ஆண்டவர், 1 சாமுவேல் 12:22.

வசனம் 143:12
"நான் உமக்கே அடிமை" -
அடிமையின் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றுவது தலைவரின் (எஜமானரின்) பொறுப்பன்றோ! (86:2&16, 116:15-16).

✝

## 19 திருப்பாடல் 144

(வெற்றிக்கு நன்றி)

*தாவீதுக்கு உரியது*
1 என் பாறையாகிய
ஆண்டவர் போற்றி! போற்றி!
போரிட என் கைகளுக்குப்
பயிற்சி அளிப்பவர் அவரே!
போர்புரிய என் விரல்களைப்
பழக்குபவரும் அவரே!
2 என் கற்பாறையும்
கோட்டையும் அவரே!
எனக்குப் பாதுகாப்பாளரும்
மீட்பரும் அவரே!
என் கேடயமும்
புகலிடமும் அவரே!
மக்களினத்தாரை எனக்குக்
கீழ்ப்படுத்துபவர் அவரே!
3 ஆண்டவரே!
மனிதரை நீர் கவனிக்க
அவர்கள் யார்?

மானிடரை நீர் கருத்தில் கொள்ள
அவர்கள் யார்?
4 மனிதர் சிறுமூச்சுக்கு ஒப்பானவர்;
அவர்களின் வாழ்நாள்கள்
மறையும் நிழலுக்கு நிகரானவை.
5 ஆண்டவரே!
உம் வான்வெளியை
வளைத்து இறங்கி வாரும்;
மலைகளைத் தொடும்;
அவை புகை கக்கும்.
6 மின்னலை மின்னச் செய்து,
அவர்களைச் சிதறடியும்;
உம் அம்புகளை எய்து,
அவர்களைக் கலங்கடியும்.
7 வானின்று உமது கையை நீட்டி
எனக்கு விடுதலை வழங்கும்;
பெருவெள்ளம் போல் எழும்
வேற்றினத்தார் கையினின்று
என்னை விடுவித்தருளும்.
8 அவர்களது வாய் பேசுவது பொய்!
அவர்களது வலக்கை
வஞ்சமிகு வலக்கை!
9 இறைவா, நான் உமக்குப்
புதியதொரு பாடல் பாடுவேன்;
பதின் நரம்பு வீணையால்
உமக்குப் புகழ் பாடுவேன்.
10 அரசர்களுக்கு வெற்றி அளிப்பவர் நீரே!
உம் ஊழியர் தாவீதைக்
கொடிய வாளினின்று தப்புவித்தவரும் நீரே!
11 எனக்கு விடுதலை வழங்கும்;
வேற்றினத்தார் கையினின்று
என்னை விடுவித்தருளும்;
அவர்களது வாய் பேசுவது பொய்!
அவர்களது வலக்கை வஞ்சமிகு வலக்கை!
12 எம் புதல்வர்கள் இளமையில் செழித்து
வளரும் செடிகள்போல் இருப்பார்களாக!
எம் புதல்வியர் அரண்மனைக்கு அழகூட்டும்
செதுக்கிய சிலைகள்போல் இருப்பார்களாக!
13 எம் களஞ்சியங்கள் நிறைந்திருப்பனவாக!
வகை வகையான
தானியங்களால் நிறைந்திருப்பனவாக!
எங்கள் வயல்களில் ஆடுகள்
ஆயிரம், பல்லாயிரம் மடங்கு பலுகட்டும்!
14 எங்கள் மாடுகள் சுமை சுமப்பனவாக!
எவ்விதச் சிதைவோ
இழப்போ இல்லாதிருக்கட்டும்!
எங்கள் தெருக்களில்
அழுகுரல் இல்லாதிருக்கட்டும்;
15 இவற்றை உண்மையாகவே

*அடையும் மக்கள் பேறுபெற்றோர்!*
*ஆண்டவரைத் தம் கடவுளாகக் கொண்ட*
*மக்கள் பேறுபெற்றோர்.*

திருப்பாடல் 144:1-15

**சிந்தனைக்கு**

ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாட முனைந்தாலும் (வ.9), முந்தைய திருப்பாடல்களின் (8, 18, 33, 102 & 104) வசனங்களின் தொகுப்பாக இந்தத் திருப்பாடல் இருக்கிறது. அவ்வாறு சில திருப்பாடல்களை இந்தப் பாடல் பிரதிபலிப்பாக அமைந்தாலும், வண்ணம் காட்டும் வானவில் போலே மிலிரும் திருப்பாடலாக இது விளங்குகிறது. அதிகம் குறிப்பிடப்படும் திருப்பாடல் 18, தாவீது பாடிய வெற்றிப் பாடலாக 2 சாமுவேல் 22ம் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ளதை நாம் அறிவோம். திருப்பாடல்கள் 144 மற்றும் 149, படைப் பயிற்சிகளிலும் போர்க்களங்களிலும் பாடப்பட்டன என்பது மரபுவழிக் கருத்து.

இந்தத் திருப்பாடலின் முதல் பதினோரு வசனங்கள் வேறு சில திருப்பாடல்களின் வசனத் தொகுப்பு எனில், இறுதி நான்கு வசனங்கள் முற்றிலும் மாறுபட்டனவாக, புதிய கருப்பொருளைப் பாடுவனவாக உள்ளன.

தாவீதியத் திருப்பாடல். செப்டுவஜின்ட் திருப்பாடலின் தலைப்பில், கோலியாத்தின் தொடர்பில் பாடப்பட்டதாகக் குறிப்பு உள்ளது.

அமைப்பு:
முதல் பதினோரு வசனங்கள் பாதுகாக்கும் ஆண்டவரையும், இறுதி நான்கு வசனங்கள் பராமரிக்கும் ஆண்டவரையும் குறித்துப் பாடுவதாக இத்திருப்பாடல் அமைந்துள்ளது.
வ.1-2, போருக்குப் பயிற்சி தரும் ஆண்டவருக்கு நன்றித் துதி
வ.3-4, மனித வாழ்வின் நிலையாமை
வ.5-8, காக்கும் கடவுளிடம் மன்றாடல்
வ.9-11, வெற்றி அருளும் ஆண்டவருக்குப் புகழ்ச்சியும் மன்றாட்டும்
வ.12-15, பாதுகாக்கும் கடவுளிடம் பராமரிப்பை வேண்டுதல்

வசனம் 144:1-2
தாவீது தனது போராட்டங்களுக்கும் போர்களுக்கும் தனது ஆற்றலைச் சார்ந்து வாழ்ந்தவர் அல்ல - கடவுளையே சார்ந்து வாழ்ந்தவர்; இதனை அவர் தன் வாழ்வில் முதன்முறையாகக் களம் கண்ட போதே அறிவிக்கிறார் (1 சாமுவேல் 17:45-47). அதன் பிறகும், திருவிருப்பம் அறிந்தே தனது முடிவுகளை எடுத்தார் (1 குறிப்பேடு 14:10&14). அவருடைய இயல்பை வெளிப்படுத்தும் வேறு சொற்களாக இந்த வசனங்கள் விளங்குகின்றன.

வசனம் 144:1
இணை, 18:34.

வசனம் 144:2
இணை, 18:2,46&47.

வசனம் 144:3-4
*கடவுளின் மாட்சியை எண்ணும் வேளையில், மனிதரின் நிலையாமையை நினைவுகூரல்.*

வசனம் 144:3
இணை, 8:4.

வசனம் 144:4
இணை, 39:5, 102:11; *யோபு* 8:9; *சபை உரையாளர்* 6:12.

வசனம் 144:5-8
ஒப்பிடுக, 18:7-15.
*தமது மக்களுக்காகவும், தாம் திருப்பொழிவு செய்த தாவீதுக்காகவும், தாமே போர் செய்யும் ஆண்டவர். தன் முந்தைய நாட்களில் செயல்பட்ட கடவுள்* (1 *சாமுவேல்* 17:34-36), *இப்போதும் செயல்பட்டு, தன்னையும் மக்களையும் காப்பார் என்று தாவீது எப்போதும் முழுமையாக நம்பினார்.*

வசனம் 144:5
இணை, 18:9 & 104:32.
*ஆண்டவர் இறங்கி வந்தபோது, சீனாயின் காட்சி, விடுதலைப் பயணம்* 19:16-18.

வசனம் 144:6
இணை, 18:14. *களத்தில் செயல்படும் கடவுள்,* 7:12-13, 68:1; *அபக்கூக்கு* 3:11-13; *செக்கரியா* 9:13-14.

வசனம் 144:7
*வேற்றினத்தாரின் கையினின்று விடுவிக்கும் ஆண்டவர்,* 124:2-4.

வசனம் 144:8
*இதுவே வ.*11*ன் பின்பகுதியாக.*

*வேற்றின எதிரிகளின் இயல்பு,* 36:3.

வசனம் 144:9
*புதிய விடுதலை பிறப்பிக்கும் புதிய பாடல், பார்க்க,* 33:2-3. *மேலும்* 40:3, 96:1, 98:1, 149:1; *எசாயா* 42:10. *ஆட்டுக்குட்டியானவருக்குப் பாடப்படும் புதிய பாடல், திருவெளிப்பாடு* 5:9 & 14:3.

*நரம்பிசைக் கருவியில் புலமை பெற்ற தாவீது,* 1 *சாமுவேல்* 16:23.

வசனம் 144:10
இணை, 18:50.

வசனம் 144:12-15
*வேற்றின மக்கள் கட்டுப்படுத்தப்பட்டு, நாட்டில் அமைதி நிலவும் போது, அமைதியோடு கிடைக்கும் கூடுதல் ஆசிகளைக் குறித்து இங்கு வாசிக்கிறோம்.*

வசனம் 144:12
"*...புதல்வர்கள் செழித்து வளரும் செடிகள்...*" -

*"பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம்; மக்கட்பேறு அவர் அளிக்கும் பரிசில்,"* (127:3). *'உண்ணும் இடத்தில் ஒலிவக் கன்றுகளைப் போல் அவர்கள் சூழ்ந்திருப்பர்,'* (128:3ஆ). *அமைதிக் காலத்தில் இல்லங்களில் காணப்படும் அழகிய காட்சி.*

*அதேபோல், பெண் பிள்ளைகள் குறித்தும் திருப்பாடகர் குறிப்பிடுகிறார்* (*யோபு* 42:15*அ*).

வசனம் 144:13-14
*பார்க்க, இணைச் சட்டம்* 28:3.
*தானியங்கள், ஆட்டு மந்தைகள் மற்றும் மாடுகளின் பெருக்கம். இவ்வாறு நாடும் வீடுகளும் நலன்களால் நிறைவதை அரசர் தாவீது விரும்புகிறார்.*

வசனம் 144:14
*அழுகுரல் இல்லாத தெருக்கள் -*
*பாதுகாப்பான நாட்டில் போரோ கலகமோ இன்றி அமைதி நிலவுவதால், வீதிகளில் அழுகை இல்லை.*

வசனம் 144:15
*"...பேறுபெற்றோர் ... பேறுபெற்றோர்" -*
*உலகிற்குரிய பேறு; ஆவிக்குரிய பேறு.*

*அன்னிய நாடுகளிலிருந்து அமைதி, உள்நாட்டில் செழிப்பு; நலன்களில் நன்றியோடு ஆண்டவரை உரிமையாகக் கொள்ளும் மக்கள். இரட்டை ஆசிகளில் தானும் நாடும் அடைந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் தாவீது.*

✝

## 19 திருப்பாடல் 145

*(அரசராம் கடவுள் போற்றி)*

*தாவீதின் திருப்பாடல்*
1 என் கடவுளே, என் அரசே!
உம்மைப் புகழ்ந்து ஏத்துவேன்;
உமது பெயரை என்றும்
எப்பொழுதும் போற்றுவேன்.
2 நாள்தோறும் உம்மைப் போற்றுவேன்;
உமது பெயரை என்றும்
எப்பொழுதும் புகழ்வேன்.
3 ஆண்டவர் மாண்புமிக்கவர்;
பெரிதும் போற்றுதலுக்கும்; உரியவர்;
அவரது மாண்பு நம் அறிவுக்கு எட்டாதது.
4 ஒரு தலைமுறை அடுத்த தலைமுறைக்கு
உம் செயல்களைப் புகழ்ந்துரைக்கும்;
வல்லமைமிகு உம் செயல்களை எடுத்துரைக்கும்.
5 உமது மாண்பின் மேன்மையையும்
மாட்சியையும் வியத்தகு உம் செயல்களையும்

நான் சிந்திப்பேன்.
6 அச்சந்தரும் உம் செயல்களின்
வல்லமையைப்பற்றி மக்கள் பேசுவார்கள்;
உமது மாண்பினை நான் விரித்துரைப்பேன்,
7 அவர்கள் உமது உயர்ந்த நற்பண்பை
நினைந்துக் கொண்டாடுவார்கள்;
உமது நீதியை எண்ணி
ஆர்ப்பரித்துப் பாடுவார்கள்.
8 ஆண்டவர் இரக்கமும் கனிவும் உடையவர்;
எளிதில் சினம் கொள்ளாதவர்;
பேரன்பு கொண்டவர்.
9 ஆண்டவர் எல்லாருக்கும் நன்மை செய்பவர்;
தாம் உண்டாக்கிய அனைத்தின்மீதும்
இரக்கம் காட்டுபவர்.
10 ஆண்டவரே, நீர் உருவாக்கிய யாவும்
உமக்கு நன்றி செலுத்தும்;
உம்முடைய அன்பர்கள் உம்மைப் போற்றுவார்கள்.
11 அவர்கள் உமது அரசின்
மாட்சியை அறிவிப்பார்கள்;
உமது வல்லமையைப் பற்றிப் பேசுவார்கள்.
12 மானிடர்க்கு உம் வல்லமைச் செயல்களையும்
உமது அரசுக்குரிய மாட்சியின் பேரொளியையும்
புலப்படுத்துவார்கள்.
13 உமது அரசு எல்லாக் காலங்களிலுமுள்ள அரசு;
உமது ஆளுகை தலைமுறை தலைமுறையாக உள்ளது.
ஆண்டவர் தம் வாக்குகள்
அனைத்திலும் உண்மையானவர்;
தம் செயல்கள்
அனைத்திலும் தூய்மையானவர்.
14 தடுக்கி விழும் யாவரையும்
ஆண்டவர் தாங்குகின்றார்.
தாழ்த்தப்பட்ட யாவரையும் தூக்கிவிடுகின்றார்.
15 எல்லா உயிரினங்களின் கண்களும்
உம்மையே நோக்குகின்றன;
தக்க வேளையில்
நீரே அவற்றிற்கு உணவளிக்கின்றீர்.
16 நீர் உமது கையைத் திறந்து
எல்லா உயிரினங்களின்
விருப்பத்தையும் நிறைவேற்றுகின்றீர்.
17 ஆண்டவர் தாம் செய்யும்
அனைத்திலும் நீதியுடையவர்;
அவர்தம் செயல்கள் யாவும்
இரக்கச் செயல்களே.
18 தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும்,
உண்மையாய்த்
தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும்,
ஆண்டவர் அண்மையில் இருக்கிறார்.
19 அவர் தமக்கு அஞ்சி நடப்போரின்
விருப்பத்தை நிறைவேற்றுவார்;

அவர்களது மன்றாட்டுக்குச் செவிசாய்த்து
அவர்களைக் காப்பாற்றுவார்.
20 ஆண்டவர் தம்மிடம் பற்றுக் கொள்ளும்
அனைவரையும் பாதுகாக்கின்றார்;
பொல்லார் அனைவரையும் அழிப்பார்.
21 என் வாய் ஆண்டவரின் புகழை அறிவிப்பதாக!
உடல்கொண்ட அனைத்தும்
அவரது திருப்பெயரை
என்றும் எப்பொழுதும் போற்றுவதாக!

திருப்பாடல் 145:1-21

**சிந்தனைக்கு**

நூலின் இறுதி தாவீதியத் திருப்பாடல்; அகரவரிசைத் திருப்பாடல்களில் இறுதித் திருப்பாடல்; தெகில்லா / Psalm / திருப்பாடல் / சங்கீதம் என்று தலைப்புப் பெற்ற ஒரே திருப்பாடல். தாவீதின் தனிப்பட்ட பாடலாக இல்லாமல், மக்களனைவரின் பாடலாக, இஸ்ரயேல் அரசின் பாடலாக, அரசின் தலைவராம் ஆண்டவரைப் போற்றி, அரசராம் தாவீது பாடிய திருப்பாடல். ஆற்றல்மிகு ஆண்டவரின் மாட்சியைப் போற்றிப் புகழும் இறுதி ஆறு பாடல்களில் முதல் திருப்பாடல்.

மேசரெடிக் படிகள் என்பவை கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து பதினோராம் நூற்றாண்டுக்குள் எழுதப்பட்ட எபிரேயப் பழைய ஏற்பாட்டுப் படிகளாகும். 1946 மற்றும் 1956ம் ஆண்டுகளுக்கு இடையில், கும்ரான் குகைகளில் பல எபிரேய பைபிள் படிகள் கண்டெடுக்கப்பட்டு, அவை சாக்கடல் சுருள்கள் என அழைக்கப்பட்டன. இவை கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. முதலாம் நூற்றாண்டு வரை எழுதப்பட்ட எபிரேயப் படிகள். 1960க்குப் பிந்தைய மொழிபெயர்ப்புகள் பெரும்பாலும் சாக்கடல் சுருள்களின் அடிப்படையில் செய்யப்பட்டவை. மேசரெடிக் படிகளிலும் ஒரு படி, இந்த முழு வசனத்தையும் கொண்டுள்ளது என்று சொல்லப்படுகிறது. இதனடிப்படையில் இந்தத் திருப்பாடலின் வ.13, பொது மொழிபெயர்ப்பில் இடம் பெற்றிருக்கலாம். செப்டுவஜின்ட், வல்கேட் மற்றும் சிரியாக் மொழிபெயர்ப்புகளில், இந்த வசனம் இடம்பெற்றுள்ளது என்கின்றனர் ஆய்வாளர்கள்.

அகரவரிசைத் திருப்பாடல். ஆனால், 22 எபிரேய எழுத்துகளில் 21 எழுத்துகள் மட்டுமே வசனங்களின் முதல் எழுத்துகளாக உள்ளன; 14வது எழுத்தான நூன் விடுபட்டுள்ளது. அந்த வசனமே, வ.13ன் விடுபட்ட பகுதி என்று சொல்வோர் உண்டு.

அமைப்பு:
வ.1-3, மேன்மை மிகு ஆண்டவர்
வ.4-7, அறிவுக்கு எட்டாத மேன்மை
வ.8-9, ஆண்டவரின் தன்மை
வ.10-13 (முன்பாதி), இறையரசின் மேன்மை
வ.13 (பின்பாதி)-17, பராமரிக்கும் ஆண்டவர்
வ.18-20, நீதி செய்யும் ஆண்டவர்
வ.21, இறுதிப் புகழ்ச்சி

வசனம் 145:1

*ஆண்டவரே அரசராக,* 5:2, 10:16, 22:28, 24:7-10, 29:10, 44:4, 47:2&6-7, 68:24, 74:12, 84:3, 93:1, 96:10, 97:1&5, 98:6, 99:1. *கடவுளை முழு உள்ளத்தோடு ஏற்றுக் கொண்ட நாம், படைப்பு அனைத்தையும் ஆளுகை செய்கிறவர் அவரே என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறோமா? இங்கு தனக்கே உரிமையுடைய ஆண்டவர் என்ற நெருக்கமான நிலையில் தாவீது கடவுளைக் கொண்டாடுகிறார்.*

"...*புகழ்ந்து ஏத்துவேன்*" -

*எபிரேயத்தில்* room / *ரூம்,* meaning, extol / exalt; *வெறும் புகழ்ச்சி அல்ல; ஒப்பீட்டளவில் மிகவும் உயர்ந்த புகழ்ச்சி. பார்க்க,* 18:46, 21:13, 34:3, 46:10, 57:5&11, 99:2,5&9, 107:32, 108:5, 113:4, 118:28. *உயர்ந்த புகழ்ச்சியை நாம் ஏன் கடவுளுக்குத் தர வேண்டும் என்றால், நாம் ஒவ்வொருவரும் எட்டக்கூடிய உயரங்களுக்கும் மேலாக அவர் நம்மை உயர்த்துகிறார்,* 3:3, 27:6, 37:34, 75:10, 89:16-17,19&24, 92:10, 112:9, 113:7, 148:14.

*உமது பெயர்* -

*மேலும் வ.*2&21.

*கடவுளாகிய ஆண்டவரின் பெயர் குறித்து அவரே உரைப்பது, விடுதலைப் பயணம்* 3:14-15. *என்றைக்கும் இருக்கிறவராக இருக்கிறவர் அவரே! ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு தொடங்கி, தலைமுறை தலைமுறையாக "இருக்கின்றவர் நானே" என்பதுவே அவர் பெயர்! என்றைக்கும் எப்போதும் எங்கும் எல்லோராலும் போற்றப்படுவது ஆண்டவர் எனும் பெயரே!* (113:1-3). *அவரால் படைக்கப்பட்ட அனைத்தாலும் போற்றுதலுக்குரியது அவருடைய திருப்பெயரின் மாட்சி* (19:1-4).

வசனம் 145:2

"... *போற்றுவேன் ... புகழ்வேன்*" -

*போற்றுதலே பற்றுறுதியாளரின் அடையாளம்; தகுதி.*

வசனம் 145:3

*அறிவுக்கு எட்டாத, கற்பனை செய்ய முடியாத, அனுமானிக்க இயலாத, கடவுளின் மேன்மை,* 96:4, 139:6, 147:5; *யோபு* 9:10, 36:26; *எசாயா* 40:28. *பவுலடிகள் விரிவாக உரைப்பது, உரோமையர்* 11:33-35.

வசனம் 145:4

*தலைமுறைகள் தோறும் அறிவிக்கப்படும் ஆற்றல்மிகு ஆண்டவரின் வியத்தகு செயல்கள்,* 22:30-31, 78:1-8, 102:18.

வசனம் 145:5-7

*ஒப்பிடுக, ஒவ்வொரு நாளும் கடவுளின் மேன்மையை உலகிற்குப் பறைசாற்றும் இயற்கை,* 19:1-4. *அப்படியானால், தலைமுறை தலைமுறையாக, ஆண்டவர் நமக்குச் செய்த நலமிகு அருஞ்செயல்களை உணர்ந்து கடத்துவது எப்படிப்பட்ட அடிப்படையான கடமை.*

வசனம் 145:5

*பார்க்க,* 44:1, 75:1, 77:12, 105:2, 107:8&15.

வசனம் 145:6

*ஆண்டவரின் அஞ்சுதற்குரிய செயல்கள்,* 65:5, 66:3, 106:22; *இணைச் சட்டம்* 7:21.

வசனம் 145:7 *மற்றும் வ.*17.
*நீதியுள்ள ஆண்டவர்,* 7:9, 19:9.

வசனம் 145:8
*ஆண்டவரே அறிவித்த அவர்தம் தன்மைகள், விடுதலைப் பயணம்* 34:6-7*அ. அந்த இறைமொழிகளை நினைவூட்டி மன்றாடிய மோசே, எண்ணிக்கை* 14:18*அ. அதே இறை மொழியில் ஆண்டவரின் தன்மைகளைப் புகழும் தாவீது. மேலும் பார்க்க,* 86:5&15, 103:8, 111:4, 112:4. *ஆண்டவரின் மாறாத தன்மைகள், நெகேமியா* 9:17.

வசனம் 145:9 *மற்றும் வ.*18-20
"*உண்டாக்கிய அனைத்தின் மீதும் இரக்கம்...*" -
*பார்க்க, இணைச் சட்டம்* 4:7; *யோவான்* 4:23-24. *கடவுளாகிய ஆண்டவரின் பேரன்பு, தனிப்பட்டதாக இல்லாமல், பொதுமையான பேரன்பு; படைக்கப்பட்ட அனைத்திற்குமானது. மேலும் பார்க்க, மத்தேயு* 5:45. *அந்தப் பொதுமையான பேரன்பைப் பெற்றுக் கொள்ள, எவர் ஒருவரும் அவரை அணுக வேண்டும்; தூய உள்ளத்தோராய் அவர்தம் இரக்கத்தை நாடி வர வேண்டும் (யாக்கோபு* 4:8-10).

வசனம் 145:9
"*ஆண்டவர் எல்லாருக்கும் நன்மை செய்பவர்,*" *நாகூம்* 1:7.

"...*அனைத்தின் மீதும் இரக்கம்...*" -
*பார்க்க,* 136:25.

வசனம் 145:10-12
*இணை,* 19:1. *கடவுளின் இறையாண்மையையும் அவர்தம் எல்லைகளற்ற பரந்து விரிந்த ஆளுகையையும் உலகோர் அனைவரும் உணர்ந்து அறிவிப்பர்.*

வசனம் 145:10
*ஆண்டவர் உருவாக்கிய யாவும் -*
*மனிதர்கள் மட்டுமல்லாமல், படைக்கப்பட்ட அனைத்தும் தங்களைப் படைத்த கடவுளை நன்றியோடு போற்றும்,* 98:8, 103:22, 148:1-14.

வசனம் 145:13-20
*தமது ஆளுகைக்குரிய அனைத்தையும், நீதியோடும், இரக்கத்தோடும், பாதுகாத்து, உணவூட்டிப் பராமரிக்கும் ஆண்டவர்.*

வசனம் 145:12
"*மானிடர்க்கு ... புலப்படுத்துவார்கள்*" -
*பார்க்க,* 9:11, 105:1.

வசனம் 145:13
"... *எல்லாக் காலங்களிலுமுள்ள அரசு ... ஆளுகை தலைமுறை தலைமுறையாக ...*" -
*பார்க்க,* 103:19, 146:10; *தானியேல்* 2:44-45, 7:14&27; 1 *திமொத்தேயு* 1:17.
*இறையாட்சியின் தன்மை,* 1 *கொரிந்தியர்* 15:50.

*தம் வாக்குகளில் உண்மையுள்ளவர் -*
*பிள்ளையில்லாத சாராவுக்கு வாக்களித்தபடியே ஈசாக்கைத் தந்து, ஆபிரகாமுக்கு வாக்களித்தபடியே அவர் வழிமரபை ஒரு மக்களினமாகப் பெருகச் செய்து, அவர்களுக்கு*

*வாக்களிக்கப்பட்ட நாட்டை வழங்கி, தமது வாக்குகளை ஆண்டவர் நிறைவேற்றினார்; உலகோரின் மீட்புக்கு, தமது இறைவாக்கினர் வழியாக வாக்களித்த கிறிஸ்துவை அனுப்பி என்றுமுள உடன்படிக்கையை நம்மோடு ஏற்படுத்தினார்; விண்ணுலகிலும் மண்ணுலகிலும், நிறைவுக் காலம் குறித்து, தமது இறைவாக்கினர் வழியாக உரைத்த வாக்குகள் அனைத்தையும், காலம் கனியும் போது கடவுள் நிறைவேற்றுவார்.*

*தம் செயல்களில் தூயவர் -*
*ஆண்டவர் தூயவர்* (*எசாயா* 6:3; *திருவெளிப்பாடு* 4:8); *நாமும் தூயோராக இருக்கக் கட்டளையிட்டவர், விடுதலைப் பயணம்* 22:31; *ஆண்டவருக்குரிய அனைத்தும் தூய்மைப்படுத்தப்பட வேண்டும் என்பது மோசே வழியாக வழங்கப்பட்ட திருச்சட்டங்கள். இன்றோ, இயேசுவின் தூய இரத்தத்தால் பாவத்திலிருந்து மீட்கப்பட்டோராய், கடவுளுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டு தூயோராய் வாழ அழைக்கப்பட்டவர்களாக நாம் இருக்கிறோம்* (*உரோமையர்* 5:4-9, 12:1-2; *எபேசியர்* 1:3-5; *கொலோசையர்* 1:22; 1 *பேதுரு* 1:15-16).

*வசனம்* 145:14
*பார்க்க*, 37:17&23-24, 113:7-9, 146:8.

*வசனம்* 145:15-16
*அன்றாடத் தேவைகளுக்காக எதிர்பார்ப்போடு ஆண்டவரை நோக்கிப் பார்க்கும் உயிர்கள்,* 104:21&27, 111:5, 136:25, 147:9. *கிறிஸ்து இயேசுவின் அறிவுறுத்தல், மத்தேயு* 6:26.

*வசனம்* 145:18-19
*உண்மையோடும் நேர்மையோடும் நம்பிக்கையோடும் ஏறெடுக்கப்படும், கடவுளின் விருப்பத்திற்கு இணக்கமான எல்லா மன்றாட்டுகளுக்கும் அவர் செவிமடுக்கிறார்,* 34:18, 65:2, 102:17; *நீதிமொழிகள்* 15:8*ஆ*&29*ஆ*. *மேலும் பார்க்க, மத்தேயு* 7:7-8&11; 1 *யோவான்* 5:14.

*வசனம்* 145:20
*ஒப்பிடுக*, 31:23, 37:28&38, 97:10.

*வசனம்* 145:21
"*... அறிவிப்பதாக ... போற்றுவதாக*" -
*மேலும் பார்க்க*, 103:20-22, 150:6.
*தாவீது அரசரின் அர்ப்பணிப்பு; இதுவே நமது அர்ப்பணிப்பாக இருந்தால், நமது ஒவ்வொரு நாளும் களிப்பும் உற்சாகமுமாக இருக்கும்.*

*தாவீதின் நாட்களில் திருக்கோவில் கட்டப்படவில்லை; ஆனால், கட்டப்படாத கோவிலைத் தன் மனக் கண்களால் கண்டு, அதற்கு வேண்டிய கட்டுமானப் பொருட்களை அவர் சேமித்து வைத்ததோடு நின்றுவிடவில்லை; கோவில் குருக்கள், பாடற் குழுவினர், வாயிற் காவலர், கருவூலப் பொறுப்பாளர், பொது நிர்வாகப் பணியாளர் என லேவியர் பணிகள் - அனைத்திற்கும் ஆட்களை நியமித்துச் சென்றார். நிறைவுக் காலத்தில், ஆண்டவரின் ஆயிரம் ஆண்டு அரசாட்சி அமையும் என்பதை நாம் அறிவோம். அன்றைக்கு வாழ்வோரும் பாடத்தக்கதொரு புகழ்ச்சிப்பாடலை அன்றே தாவீது பாடியுள்ளார். ஆண்டவரின் அரசாட்சி அமையக் காத்திருக்கும் நாம், திருச்சபை ஆராதனைகளில் இந்தத் திருப்பாடலை எந்த அளவுக்குப் பயன்படுத்துகிறோம்?*

## 19 திருப்பாடல் 146

(மீட்பராம் கடவுள் போற்றி!)

1 அல்லேலூயா! என் நெஞ்சே!
நீ ஆண்டவரைப் போற்றிடு;
2 நான் உயிரோடு உள்ளளவும்
ஆண்டவரைப் போற்றிடுவேன்;
என் வாழ்நாளெல்லாம் என்
கடவுளைப் புகழ்ந்து பாடிடுவேன்.
3 ஆட்சித் தலைவர்களை நம்பாதீர்கள்;
உன்னை மீட்க இயலாத
மானிட மக்களை நம்ப வேண்டாம்.
4 அவர்களின் ஆவி பிரியும்போது
தாங்கள் தோன்றிய மண்ணுக்கே
அவர்கள் திரும்புவார்கள்;
அந்நாளில் அவர்களின்
எண்ணங்கள் அழிந்துபோம்.
5 யாக்கோபின் இறைவனைத் தம்
துணையாகக் கொண்டிருப்போர் பேறுபெற்றோர்;
தம் கடவுளாகிய ஆண்டவரையே
நம்பியிருப்போர் பேறுபெற்றோர்.
6 அவரே விண்ணையும் மண்ணையும் கடலையும்
அவற்றிலுள்ள யாவற்றையும் உருவாக்கியவர்;
என்றென்றும் நம்பிக்கைக்கு உரியவராய்
இருப்பவரும் அவரே!
7 ஆண்டவர் ஒடுக்கப்பட்டோர்க்கான
நீதியை நிலைநாட்டுகின்றார்;
பசித்திருப்போர்க்கு உணவளிக்கின்றார்;
சிறைப்பட்டோர்க்கு விடுதலை அளிக்கின்றார்.
8 ஆண்டவர் பார்வையற்றோரின்
கண்களைத் திறக்கின்றார்;
தாழ்த்தப்பட்டோரை உயர்த்துகின்றார்;
நீதிமான்களிடம் அன்பு கொண்டுள்ளார்.
9 ஆண்டவர் அயல் நாட்டினரைப் பாதுகாக்கின்றார்;
அனாதைப் பிள்ளைகளையும்
கைம்பெண்களையும் ஆதரிக்கின்றார்;
ஆனால், பொல்லாரின் வழிமுறைகளைக்
கவிழ்த்து விடுகின்றார்.
10 சீயோனே! உன் கடவுள்,
என்றென்றும், எல்லாத் தலைமுறைகளுக்கும்
ஆட்சி செய்வார். அல்லேலூயா!

திருப்பாடல் 146:1-10

**சிந்தனைக்கு**

ஹேன்டல் எனும் மேற்கத்திய இசை அறிஞரின் வாழ்நாள் சாதனை என்பது "த மெஸ்ஸியா" என்னும் இசை நாடகம் (oratorio). அதில் மகுடமாகத் திகழ்வது, அதன் இறுதியில் அமைந்த,

நமக்கும் அறிமுகமான, திருவெளிப்பாடு நூலின் வசனங்களால் அமைந்த, "அல்லேலூயா" எனும் குழுப் பாடல். அதுபோல, பழைய ஏற்பாட்டில், உலகோர் விரும்பும் திருப்பாடல்கள் நூலில், மகுடமாக இறுதியில் அமைவது, அல்லேலூயா திருப்பாடல்கள் (146 முதல் 150 வரையிலான ஐந்து பாடல்கள்). கடவுளாகிய ஆண்டவரைப் போற்றிப் பாடுவதன் உச்சம் இந்தத் திருப்பாடல்கள். இவற்றில் - வாட்டும் வேதனைகள் இல்லை; அழுத்தும் கவலைகள் இல்லை; விரட்டும் அவமானங்கள் இல்லை; கதறலுடன் மன்றாட்டு இல்லை; விடுவிக்க வேண்டல் இல்லை; ஏனெனில், "ஆண்டவரின் பேரன்பு முடிவுறவில்லை! அவரது இரக்கம் தீர்ந்து போகவில்லை! காலை தோறும் அவை புதுப்பிக்கப்படுகின்றன; நீர் பெரிதும் நம்பிக்கைக்கு உரியவர்!" (புலம்பல் 3:22-23) என்கிற பற்றுறுதியின் வெளிப்பாடாக இந்தப் புகழ்ச்சித் திருப்பாடல்கள் விளங்குகின்றன.

106 மற்றும் 135 ஆகிய திருப்பாடல்களுக்குப் பிறகு, முதல் மற்றும் இறுதி வசனங்களில் அல்லேலூயா எனும் சொல் இறுதி ஐந்து பாடல்களிலும் இடம்பெற்றுள்ளது. அல்லேலூயா என்ற சொல், திருப்பாடல்கள் மற்றும் திருவெளிப்பாடு நூல்களில் மட்டுமே இடம்பெற்றுள்ளது (தள்ளுபடி ஆகம நூல்களில், தோபித்து நூலில் ஒருமுறை இடம்பெறுகிறது). haw-lal (ஹாலல்) என்றால் praise / துதி என்றும், yah அல்லது jah (yeh-ho-vah என்பதன் சுருக்கம்) என்றால் ஆண்டவர் என்றும் பொருள்படும். இதனை நாம், ஆண்டவருக்கே துதி அல்லது கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்கிறோம். எபிரேயத்தில் hallelujah என்பது, வல்கேட் மொழிபெயர்ப்பில் alleluia என்று ஆகிறது.

தமிழில் நாம் சொல் வழக்கில், தோத்திரம் என்று சொல்கிறோம்; வந்தவருக்கா? கர்த்தருக்கா?

தலைப்பற்ற திருப்பாடல்; செக்கரியா மற்றும் ஆகாய் என்னும் இறைவாக்கினருக்கு உரியதாக, செப்டுவஜின்ட், வல்கேட் மற்றும் சிரியாக் மொழிபெயர்ப்புகளில் இந்தத் திருப்பாடலின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த மரபின்படி, பாடல் எழுதப்பட்ட காலம், இரண்டாம் திருக்கோவிலின் காலம், சிறை மீண்ட இஸ்ரயேலரின் காலம். பின்னர், திருக்கோவிலின் காலை வழிபாட்டுப் பாடல்களாக இந்த ஐந்து பாடல்களும் இடம் பெற்றன என்பது யூத மரபுவழிச் செய்தி.

திருப்பாடல்கள் நூலின் ஐந்து தொகுதிகளை, பைபிளின் முதல் ஐந்து நூல்களோடு இணைத்துச் சொல்வது போல, இந்த இறுதி ஐந்து திருப்பாடல்களை, தொடக்க ஐந்து நூல்களோடு இணைத்துப் பேசுவோர் உண்டு. இதுபோன்ற பேச்சுகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் ஏதும் திருப்பாடல்களில் இல்லை.

அமைப்பு:
வ.1-2, தொடக்கப் புகழ்ச்சி
வ.3-4, நம்பத்தகா மானிடர்
வ.5-6, படைத்தவரே பராமரிப்பார் என நம்புவோர் பேறுபெற்றோர்
வ.7-9, கடவுளின் பாதுகாப்புக்கும் பராமரிப்புக்கும் உரியோர்
வ.10, இறுதிப் புகழ்ச்சி

வசனம் 146:1
படைப்பாளரை நினைவுகூர்ந்து போற்ற, தன் நெஞ்சிற்கு நினைவூட்டும் திருப்பாடகர், மக்களுக்கு அறிவுறுத்தும் புகழ்ச்சியோடு இத்திருப்பாடலை நிறைவு செய்கிறார் (வ.10).

வசனம் 146:2
*உயிருள்ளளவும் கடவுளைப் புகழ்ந்து பாட உறுதி பூணும் திருப்பாடகர்,* 63:4, 104:33.

வசனம் 146:3
*அன்றைய அரசியலைப் பறைசாற்றும் வசனம்!*
*குறைந்த தன்னாட்சி உரிமைகொண்ட நாடாக, இரண்டாம் திருக்கோவிலின் காலத்தில் இஸ்ரயேல் இருந்தது. தாவீது போன்ற இஸ்ரயேல் அரசர்கள் ஆட்சி செய்தபோது, தங்களின் அரசராக ஆண்டவரை முன்வைத்து ஆட்சி செய்தனர்; ஆனால் வேற்றின மன்னர்கள் தங்களையே கடவுளின் பிரதிநிதிகளாக அல்லது கடவுளாகத் தங்களையே முன்னிறுத்துவோர்; அவர்கள் தரும் உறுதிமொழிகளும் நம்பத்தக்கவை அல்ல,* 118:9.

வசனம் 146:4
*ஆள்வோர் மட்டுமல்லாமல், இஸ்ரயேலருக்குள்ளே வாழும் தலைசிறந்த தலைவர்களே ஆயினும், அவர்கள் வழங்கும் உறுதிமொழிகள், வாழ்வின் நிலையாமையின் பொருட்டு, அவர்கள் உடலோடு மண்ணுக்குள் புதைந்து போகும். பார்க்க,* 60:11ஆ, 103:14, 108:12ஆ; *சபை உரையாளர்* 12:7; *எசாயா* 2:22.

வசனம் 146:5
*யாக்கோபின் இறைவன், இஸ்ரயேல் என்ற நாட்டின் தந்தையான யாக்கோபு இங்கு நினைவுகூரப்படுகிறார். பார்க்க,* 20:1, 46:7&11, 84:8; *விடுதலைப் பயணம்* 3:15.

வசனம் 146:6
*படைப்பின் கடவுளாக, அவரே பராமரிப்பார் என்ற நம்பிக்கைக்கு உரியவராக ஆண்டவர், எசாயா* 45:18-24.

வசனம் 146:7-9
*கிறிஸ்து இயேசுவின் நாசரேத்து அறிக்கையை (லூக்கா* 4:18-19) *நினைவூட்டும், இறைவாக்கினர் எசாயாவின் வழியாகக் கடவுள் தந்த வாக்கை* (42:6-7) *நினைவூட்டும் வசனங்கள். மோசேயின் திருச்சட்டமெங்கும் விரவிக் கிடக்கும் இறைக் கோட்பாடு.*

வசனம் 146:7
*ஒடுக்கப்பட்டோருக்கான நீதியை நிலைநாட்டுகின்றவர்,* 9:9, 10:18, 103:6.
*பசித்திருப்போருக்கு உணவளிப்பவர்,* 17:14, 34:10, 107:9.
*சிறைப்பட்டோரை விடுவிக்கிறவர்,* 68:6, 79:11, 102:20, 107:10&14.

வசனம் 146:8
"*பார்வையற்றோரின் கண்களைத் திறக்கிறார்*" -
*பார்க்க, எசாயா* 29:18, 35:5; *யோவான்* 9:1-7.

வசனம் 146:9
"...*அயல்நாட்டினரை* ... *அனாதைப் பிள்ளைகளை* ... *கைம்பெண்களை* ... *ஆதரிக்கிறார்*" -
*பார்க்க, இணைச் சட்டம்* 10:18; *எசாயா* 1:17, 9:17.

வசனம் 146:10
*வ.*3*க்கு எதிர் கோட்பாடு.*

*எல்லாத் தலைமுறைகளின் காலங்களிலும், மண்ணுலகை ஆளுகை செய்யும் கடவுள்.*
*படைப்பாளராக அவர் ஆளுகை செய்கிறார்,* 93:1-5;

மீட்பராக அவர் ஆளுகை செய்கிறார், 99:1-9;
ஆளுகை செய்ய வரவிருக்கும் அரசராக இருக்கிறார், 98:1-9.

## 19 திருப்பாடல் 147

(எல்லாம் வல்ல இறைவன் போற்றி)

1 அல்லேலூயா!
நம்முடைய கடவுளைப்
புகழ்ந்து பாடுவது நல்லது;
அவரைப் புகழ்வது இனிமையானது;
அதுவே ஏற்புடையது.
2 ஆண்டவர் எருசலேமை மீண்டும்
கட்டி எழுப்புகின்றார்;
நாடு கடத்தப்பட்ட இஸ்ரயேலைக்
கூட்டிச் சேர்க்கின்றார்;
3 உடைந்த உள்ளத்தோரைக் குணப்படுத்துகின்றார்;
அவர்களின் காயங்களைக் கட்டுகின்றார்.
4 விண்மீன்களின் இலக்கத்தை எண்ணி,
அவை ஒவ்வொன்றையும்
பெயர் சொல்லி அழைக்கின்றார்.
5 நம் தலைவர் மாண்புமிக்கவர்;
மிகுந்த வல்லமையுள்ளவர்;
அவர்தம் நுண்ணறிவு அளவிடற்கு அரியது.
6 ஆண்டவர் எளியோர்க்கு ஆதரவளிக்கின்றார்;
பொல்லாரையோ தரைமட்டும் தாழ்த்துகின்றார்.
7 ஆண்டவருக்கு நன்றி செலுத்திப் பாடுங்கள்;
நம் கடவுளை யாழ்கொண்டு புகழ்ந்து பாடுங்கள்.
8 அவர் வானத்தை மேகங்களால் மறைக்கின்றார்;
பூவுலகின்மீது மழையைப் பொழிகின்றார்;
மலைகளில் புல்லை முளைக்கச் செய்கின்றார்.
9 கால்நடைகளுக்கும் கரையும்
காக்கைக் குஞ்சுகளுக்கும்,
அவர் இரை கொடுக்கின்றார்.
10 குதிரையின் வலிமையில் அவர்
மகிழ்ச்சி காண்பதில்லை;
வீரனின் கால்வலிமையையும் அவர்
விரும்புவதில்லை.
11 தமக்கு அஞ்சி நடந்து தம் பேரன்புக்காக
நம்பிக்கையுடன் காத்திருப்போரிடம் அவர்
மகிழ்ச்சி கொள்கின்றார்.
12 எருசலேமே! ஆண்டவரைப் போற்றுவாயாக!
சீயோனே! உன் கடவுளைப் புகழ்வாயாக!
13 அவர் உன் வாயில்களின்
தாழ்களை வலுப்படுத்துகின்றார்;

உன்னிடமுள்ள உன் பிள்ளைக்கு
ஆசி வழங்குகின்றார்.
14 அவர் உன் எல்லைப்புறங்களில்
அமைதி நிலவச் செய்கின்றார்;
உயர்தரக் கோதுமை வழங்கி
உன்னை நிறைவடையச் செய்கின்றார்.
15 அவர் தமது கட்டளையை
உலகினுள் அனுப்புகின்றார்;
அவரது வாக்கு மிகவும்
விரைவாய்ச் செல்கின்றது.
16 அவர் வெண்கம்பளி போல்
பனியைப் பொழியச் செய்கின்றார்;
சாம்பலைப்போல்
உறைபனியைத் தூவுகின்றார்;
17 பனிக்கட்டியைத் துகள் துகள்களாக
விழச் செய்கின்றார்;
அவர் வரவிடும் குளிரைத்
தாங்கக் கூடியவர் யார்?
18 அவர் தம் கட்டளையால்
அவற்றை உருகச் செய்கின்றார்;
தம் காற்றை வீசச் செய்ய,
நீர் ஓடத் தொடங்குகின்றது.
19 யாக்கோபுக்குத் தமது வாக்கையும்
இஸ்ரயேலுக்குத் தம் நியமங்களையும்
நீதிநெறிகளையும் அறிவிக்கின்றார்.
20 அவர் வேறெந்த இனத்துக்கும்
இப்படிச் செய்யவில்லை;
அவருடைய நீதிநெறிகள்
அவர்களுக்குத் தெரியாது;
அல்லேலூயா!

திருப்பாடல் 147:1-20

**சிந்தனைக்கு**

படைப்பும் பராமரிப்பும் ஒன்றில் ஒன்றாகப் பிணைத்துப் பாடப்பட்ட திருப்பாடல்; பராமரிப்பு இல்லையேல் படைப்பின் கண்ணி அறுந்து போகும். இவ்வாறு படைப்பின் தொடர்ச்சியைப் பராமரிப்பவராக ஆண்டவர் இருக்கிறார். கருப்பொருளின் அடிப்படையில், திருப்பாடல் 33ம் 145ம் இந்தத் திருப்பாடலோடு ஒப்புமை உடையன.

திருப்பாடல்கள் 9 மற்றும் 10, செப்டுவஜிண்டில் ஒன்றாக உள்ளன என்பதை முன்னரே குறிப்பிட்டோம். இத்திருப்பாடலின் முதல் பதினோரு வசனங்கள் ஒரு திருப்பாடலாகவும், வ.12-20 மற்றொரு திருப்பாடலாகவும் உள்ளன.

இயற்றியவர் போன்ற குறிப்புகளுக்கு முந்தைய திருப்பாடல் குறிப்புகளே இப்பாடலுக்கும் பொருந்தும். வ.13ன் அடிப்படையில், எருசலேம் நகரின் சுற்றுச் சுவர் எழுப்பப்பட்டு, அர்ப்பணித்த நாளில் (நெகேமியா 7:1-3 & 12:27-43) பாடப்பட்ட திருப்பாடல் இது என்று கருதப்படுகிறது.

கடவுளைப் புகழ்தல் என்பது பொதுவாக ஒவ்வொரு பாடலின் தொடக்கத்திலும் இறுதியிலும் அமையும்; ஆனால் இந்தத் திருப்பாடலில், 1, 7 மற்றும் 12ம் வசனங்கள் புகழ்ச்சி வசனங்களாக உள்ளன. இதே வசனங்கள், பாடலை மூன்று பகுதிகளாகப் பிரிப்பனவாக உள்ளன.

அமைப்பு:
வ.1-6, மீட்டுருவாக்கும் ஆண்டவர்
வ.7-11, நம்பிக்கையோடு காத்திருப்போரில் மகிழும் ஆண்டவர்
வ.12-20, செயலூக்கமிக்க வாக்குக்காகப் புகழ்ச்சிக்கு உரிய ஆண்டவர்

வசனம் 147:1
"நம்முடைய கடவுளைப் புகழ்ந்து பாடுவது நல்லது; அவரைப் புகழ்வது இனிமையானது; அதுவே ஏற்புடையது" -
ஆண்டவரைப் போற்றுதல் நல்லது, இன்பமானது (92:1 & 135:3) என்பதை எவரும் மறுக்க மாட்டார். ஆனால் ஏற்புடையது என்பது, அனேக வேளைகளில் கடினமானது. மனதுக்கு நெருக்கமான பருவ மகள் அல்லது மகனின் இறப்பு, திருமணமான சில மாதங்களில் கர்ப்பிணிக்கு அவரின் கணவரின் இழப்பு - இதுபோன்ற சூழலில் ஆண்டவரைப் புகழ்தல் ஏற்புடையது என்று அவர்களால் சொல்ல முடியுமா? வசனங்களைச் சொல்லி ஆறுதல் கூறுதல் தத்துவம் போல இருக்கும்! ஆனால் அதுவே உண்மை; மண்ணில் துயருறும் மானிடருக்கு எப்போதும் எந்தச் சூழ்நிலையிலும் ஆண்டவரைப் போற்றுதலைத் தவிர வேறு ஆறுதல் ஏதுமில்லை. நம் வாழ்க்கையை நேர்மறையாக எதிர்கொள்ள, அப்போது ஆண்டவர் வழி நடத்துவார். யோபு முதல் நாம் வாசிக்கும் வில்லியம் கேரியின் வாழ்க்கை வரை இதுவே காலம் நமக்குக் கற்பிக்கும் உண்மை.

வசனம் 147:2
எஸ்ரா மற்றும் நெகேமியாவின் காலத்தில் எழுதப்பட்ட திருப்பாடல் என்பதை உறுதி செய்யும் வசனம்.

"... கூட்டிச் சேர்க்கிறார்" -
சிறைப்பட்டு வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்ட இஸ்ரயேலரை மீண்டும் எருசலேமில் கூட்டிச் சேர்த்த ஆண்டவர்; இன்றைக்கும் தாம் தெரிந்து கொண்டோரைப் பாவத்திலிருந்து மீட்டு, தமது திருவுடலாகிய திருச்சபையில் கூட்டிச் சேர்க்கிறார், யோவான் 11:52; 2 கொரிந்தியர் 5:19-20.

வசனம் 147:3
பார்க்க, 34:18, 41:3; எசாயா 61:1; எசேக்கியேல் 34:16; திருவெளிப்பாடு 21:4.

இந்த வசனம் பொதுவானது என்றாலும், முந்தைய வசனத்தோடு உள்ள தொடர்பில் சொல்லப்பட்டது. அதுபோலவே, முதல் வசனமும் இதனோடு தொடர்புடையது. பார்க்க, எசாயா 51:11-12.

வசனம் 147:4
மானிடரின் உள்ளங்களை மட்டுமல்லாமல், அண்டப் பெருவெளியின் அனைத்தையும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஆண்டவர்.

படைப்பின் தொடர்ச்சியாகச் சொல்லப்படும் முதல் வசனம்; மற்றவை, வ.8,9,16&17. படைப்பாளரே அருள்மிகு பராமரிப்பாளராக, வழிநடத்துனராக, கட்டுப்பாட்டாளராக வெளிப்படுவது, வ.3,6,11,13-14&19-20.

வசனம் 147:5
"...அவருடைய அறிவு அளவில்லாதது ... நுண்ணறிவு அளவிடற்கு அரியது" -
பார்க்க, 145:3 மற்றும் குறிப்பு.

வசனம் 147:6
"ஆண்டவர் எளியோர்க்கு ஆதரவளிக்கிறார்" -
146:9. புதிய ஏற்பாட்டில் எடுத்தாளப்பட்டுள்ளமை, யாக்கோபு 4:6.

வசனம் 147:7
பார்க்க, 7:17, 27:6, 30:4, 33:2, 42:4, 50:14-15, 56:12, 98:5.

வசனம் 147:8-9 & 16-18
இயற்கை ஆற்றல்கள் மீது தொடர்ந்து செயல்படும் கடவுள்; மேலும் பார்க்க, 77:17-18, 78:26, 104:10-15, 135:6-7, 148:7-10; எசாயா 45:8.

வசனம் 147:9
"அவர் இரை கொடுக்கின்றார்" -
இதனிலும் ஆழமாகவும் அழுத்தமாகவும் கிறிஸ்து இயேசு உரைப்பது, மத்தேயு 6:26, 10:29.

வசனம் 147:10-11
இணை, 33:16-18. மேலும் பார்க்க, 103:11. குதிரையும், கால்களும் வலிமையின் அடையாளம்; படைப் பிரிவுகளில் குதிரைப்படையும் காலாட்படையும் அன்றைக்கு இன்றியமையாதவை. இவை ஆள்வோரின் பெருமையாக இருக்கின்றன.

கடவுளின் மகிழ்ச்சி எதில் என்பதைத் தெளிவுபடுத்தும் திருப்பாடகர். இறையச்சம், நம்பிக்கை, காத்திருத்தல் - இம்மூன்றும் கடவுளின் மகிழ்ச்சிக்கு உரிய பண்புகள். இவை நமது சிறப்பியல்புகளாக இருக்கின்றனவா?

வசனம் 147:12
முந்தைய மற்றும் பிந்தைய வசனங்களோடு இணைத்துப் பார்த்தல் சிறப்பு. அரண்சூழ் எருசலேமில், குதிரைகள் இல்லை, வீரர்கள் இல்லை; இது சாலமோனின் காலத்திய, படை வலிமை மிக்க அரண்சூழ் எருசலேம் அல்ல. மாறாக, இப்போது திருக்கோவில் உண்டு; அதற்குக் குருக்கள் உண்டு; பிரிவுகளாகப் பணிபுரிய லேவியர் உண்டு.

வசனம் 147:13-14
தமக்கு அஞ்சி நடப்போருக்கு ஆண்டவர் அருளும் ஆசிகள். வளமை இல்லாத நகருக்குப் பாதுகாப்பு பயனற்றது.

வசனம் 147:15
விரைந்து செயல்படும் வாக்கு, 33:9. மேலும் பார்க்க, 1 அரசர்கள் 17:2-5 & 8-15; யோபு 37:12; எசாயா 55:11; மாற்கு 4:39-41. படைப்பில் விரைந்து செயல்பட்ட கடவுளின் வாக்கு, படைத்தவற்றை வழிநடத்துவதிலும் கட்டுப்படுத்துவதிலும் அதே விரைவோடு செயல்படுகிறது.

வசனம் 147:19-20
இஸ்ரயேலின் வரலாற்றில் இடைப்பட்ட கடவுளே, படைப்பு அனைத்தின் கடவுள். இறைவாக்கின் பெட்டகமாக இஸ்ரயேலர் இருந்தனர். இன்றைக்கு அதே பெட்டகம் நமக்கும் அருளப்பட்டுள்ளது. இதுவே நமது தனிச்சிறப்பு (இணைச் சட்டம் 4:5-8). தனக்கு வழங்கப்பட்ட வாக்கை அறிவித்த திருப்பாடகர் போல, வாக்கை அறிவிப்பதில் நம் ஒவ்வொருவரின் பங்கை நிறைவேற்ற நாம் உணர்வோடு நடக்கிறோமா?

✝

## 19 திருப்பாடல் 148

*(அனைத்துலகே, ஆண்டவரைப் போற்றிடு!)*

1 அல்லேலூயா!
விண்ணுலகில் உள்ளவையே,
ஆண்டவரைப் போற்றுங்கள்;
உன்னதங்களில் அவரைப் போற்றுங்கள்.
2 அவருடைய தூதர்களே,
நீங்கள் யாவரும் அவரைப் போற்றுங்கள்;
அவருடைய படைகளே,
நீங்கள் யாவரும் அவரைப் போற்றுங்கள்.
3 கதிரவனே, நிலாவே,
அவரைப் போற்றுங்கள்;
ஒளிவீசும் விண்மீன்களே,
அவரைப் போற்றுங்கள்.
4 விண்ணுலக வானங்களே,
அவரைப் போற்றுங்கள்;
வானங்களின் மேலுள்ள நீர்த்திரளே,
அவரைப் போற்றுங்கள்.
5 அவை ஆண்டவரின் பெயரைப் போற்றட்டும்;
ஏனெனில், அவரது கட்டளையின்படி
எல்லாம் படைக்கப்பட்டன;
6 அவரே அவற்றை என்றென்றும்
நிலைபெறச் செய்தார்;
மாறாத நியமத்தை
அவற்றிற்கு ஏற்படுத்தினார்.
7 மண்ணுலகில் ஆண்டவரைப் போற்றுங்கள்;
கடலின் பெரும் நாகங்களே,
ஆழ்கடல் பகுதிகளே,
8 நெருப்பே, கல்மழையே,
வெண்பனியே, மூடுபனியே,
அவரது ஆணையை
நிறைவேற்றும் பெருங்காற்றே,
9 மலைகளே, அனைத்துக் குன்றுகளே,
கனிதரும் மரங்களே,
அனைத்துக் கேதுரு மரங்களே.

10 காட்டு விலங்குகளே,
அனைத்துக் கால்நடைகளே,
ஊர்ந்து செல்லும் உயிரினங்களே,
சிறகுள்ள பறவைகளே,
11 உலகின் அரசர்களே,
எல்லா மக்களினங்களே,
தலைவர்களே, உலகின் ஆட்சியாளர்களே,
12 இளைஞரே, கன்னியரே,
முதியோரே மற்றும் சிறியோரே,
நீங்கள் எல்லாரும் ஆண்டவரைப் போற்றுங்கள்.
13 அவர்கள்
ஆண்டவரின் பெயரைப் போற்றுவார்களாக;
அவரது பெயர் மட்டுமே உயர்ந்தது;
அவரது மாட்சி
விண்ணையும் மண்ணையும் கடந்தது.
14 அவர் தம் மக்களின் ஆற்றலை
உயர்வுறச் செய்தார்;
அவருடைய அனைத்து அடியாரும்
அவருக்கு நெருங்கிய
அன்பார்ந்த மக்களாகிய இஸ்ரயேல் மக்களும்
அவரைப் போற்றுவார்கள்.
அல்லேலூயா!

திருப்பாடல் 148:1-14

**சிந்தனைக்கு**

இணைத் திருமுறை (Apocrypha) நூல்களில், தானியேல் இணைப்பு 1:35-66 வரை உள்ளவை, இளைஞர் மூவரின் பாடல். இதன் சுருக்க வடிவமே, நாம் நமது திருநாள்களில் பாடும், வாலிபர் மூவரின் கீதம். இந்த இணைத் திருமுறை இணைப்பு 1, நமது பழைய ஏற்பாட்டு தானியேல் நூலின், மூன்றாம் அதிகாரத்தின் இணைப்பு ஆகும். இந்த முதல் இணைப்பு, இளைஞர் மூவரின் பாடலாக (The Song of the Three Holy Children) கி.பி. நான்காம் நூற்றாண்டிலிருந்து திருச்சபையில் பாடப்பட்டு வருகிறது. இந்தப் பாடலின் சுருக்கமே திருப்பாடல் 148 என்றும், திருப்பாடல் 148ன் விரிவே, இளைஞர் மூவரின் பாடல் என்றும் இரு வேறு கருத்துகள் உள்ளன. நெகேமியா 9:5-6 வசனங்களோடு இந்தத் திருப்பாடல் இணைத்துச் சொல்லப்படுகிறது. இளைஞர் மூவரின் பாடல் காலத்தால் பிந்தியது என்றே நம்பப்படுகிறது. 🕎

தலைப்பு மற்றும் எழுதியவர் குறித்த குறிப்பு - திருப்பாடல் 146 போன்றதே. 🕎

மனிதர்களாகிய நாம் மட்டுமல்லாமல், படைக்கப்பட்ட அனைத்தும் ஒன்றிசைந்து, தங்கள் படைப்பின் கடவுளான ஆண்டவரைப் போற்றிப் பாடுவதாக இந்தத் திருப்பாடல் அமைந்துள்ளது. உயிரற்றவை எவ்வாறு கடவுளைப் போற்ற இயலும்? அவை அவற்றின் இயக்கத்தினால் அவற்றின் உயிர்ப்பை வெளிப்படுத்துகின்றன (19:1, 50:6, 89:5, 96:11, 97:6; 1 குறிப்பேடு 16:31; எரேமியா 4:28). படைக்கப்பட்ட அனைத்தும் எனும் போது, திருவெளிப்பாடு 5:12-13 வசனங்களையும் நாம் நினைவில் கொள்ளுதல் நன்று. 19, 95 முதல் 100 வரையுள்ள மற்றும் 104ம் திருப்பாடல்களின் கருப்பொருளோடு இந்தத் திருப்பாடல் ஒத்தமைகிறது.

"All" என்ற பொருளில் வரும், "யாவரும்," "அனைத்து," "எல்லாம்" ஆகிய சொற்கள் அதிகம் இடம் பெற்றுள்ளன.

அமைப்பு:
வ.1-6, மண்ணுலகினின்று பெரும் உயரங்களில் உள்ள அனைத்தும் ஆண்டவரைப் போற்ற அழைப்பு
வ.7-13, மண்ணின் ஆழங்களிலும், மண்ணிலும் உள்ள அனைத்தும் / அனைவரும் ஆண்டவரைப் போற்ற அழைப்பு
வ.14, இஸ்ரயேலர் அனைவரும் ஆண்டவரைப் போற்ற அழைப்பு

விண்ணிலிருந்து கீழ்நோக்கியும் (வ.1-4), ஆழங்களிலிருந்து மேல்நோக்கியும் (வ.7-10) வந்து, பல படிநிலைகளில் வாழ்வோர், திருக்கோவிலில் ஒன்றுகூடி ஆண்டவரைப் போற்றுவது போலத் திருப்பாடல் நிறைவடைகிறது.

வசனம் 148:1-6
விண்ணில் உள்ளவைகளின் வரிசை; நமது கண்களுக்குப் புலப்படுபவையும் புலப்படாதவையும்; நமது கண்களுக்குப் புலப்படுபவையோ ஒளி மிக்கவை அல்லது ஒளிரக் கூடியவை. வானில் முழங்கும் போற்றி எனும் ஒலி, தூதர்களில் தொடங்கி, கதிரவன், நிலா, விண்மீன்கள் என்று தவழ்ந்து, மேகங்கள் வழியாக இறங்கி முடிகிறது.

வசனம் 148:7-13
கடல்கள் மேல் பொழியும் மழை போல, வானங்களிலிருந்து (வ.4) ஆழ்கடலை நோக்கிப் படைப்பின் வரிசை மாறுகிறது. அடுத்து, விண்ணிலிருந்து இறங்குவதும் மண்ணில் இருப்பதுமான ஆற்றல்களைத் திருப்பாடகர் குறிப்பிடுகிறார். பின்னர் அசைவற்ற இயற்கையின் ஆற்றல்கள், பிறகு விலங்குகள், கால்நடைகள், ஊர்வன, பறப்பன - என்று மனிதர்களோடு நேரடியான தொடர்பில் இருப்பவை பட்டியலில் வருகின்றன. படைப்பின் வரிசையில், மனிதர்களுக்குத் தேவையான அனைத்தையும் படைத்து இறுதியாக மனிதர்களைப் படைத்த ஒழுங்கைக் கையாண்டு, இறுதியாக வாழ்வின் அடுக்குகளின் வரிசையிலும், வயதின் அடிப்படையிலும் மனிதர்களைப் பாடகர் குழு வரிசையில் திருப்பாடகர் நிறுத்துகிறார்.

வசனம் 148:14
போற்றிப் பாடுவோர் பட்டியலில், இறுதியாக இஸ்ரயேலரைத் திருப்பாடகர் குறிப்பிடுகிறார்; இறுதியாகக் குறிப்பிடப்பட்டாலும், கடவுளாகிய ஆண்டவருக்கு நெருக்கமான அவர்களே முன்னணியில் நிற்போர். சிறையிருப்பிலிருந்து விடுதலை பெற்று எருசலேமில் கூட்டிச் சேர்க்கப்பட்ட அவர்கள், நன்றியோடு ஆண்டவரைப் போற்றுவார்களாக!

படைப்பின் வரிசையில் மானிடரே கடைசியாகப் படைக்கப்பட்டனர். "அனைத்தையும் ஆளுங்கள்" என்று சொல்லப்பட்டதனாலேயே மானிடரின் எதேச்சாதிகாரத்திற்குப் படைப்பு அனைத்தையும் கையளிக்க முடியாது. மானிடர் உட்பட இயற்கை அனைத்தும் ஒன்றோடு ஒன்று இணைந்து வாழப் படைக்கப்பட்டன. அதனாலேயே, ஆதாம் ஏவாள் பாவத்தில் விழுந்த போது, சாபம் நிலத்தின் மீது விழுந்தது.

இஸ்ரயேலர் சிறைப்பட்டு வெளியேறியதற்குக் காரணம், நிலத்திற்குக் கடவுள் விதித்த ஓய்வை அவர்கள் தரவில்லை என்பதும் ஆகும். ஆதாம் வழியாக வந்த சாபம், இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தால் உடைக்கப்பட்டது என்றாலும், சிறை மீண்ட இஸ்ரயேலரைப்

போலவே, மீட்கப்பட்ட நாமும் படைப்பின் நல்வாழ்வில் அக்கரையின்றி, பொறுப்பற்று நடக்கிறோம் என்பதை உணர வேண்டும். மீட்கப்பட்ட நாம், படைப்பை மீட்கப் பொறுப்புள்ளோராக இருக்கிறோம் (உரோமையர் 8:20-22); ஆனால் பொறுப்பற்றோராக, படைப்பைச் சுரண்டி ஆதிக்கம் செலுத்துவோராக நாம் வாழ்கிறோம்.

மீட்கப்பட்ட நமது நலவாழ்வை ஆண்டவர் உறுதி செய்திருப்பது போல, படைப்பின் நலவாழ்வை உறுதி செய்வது அதனை ஆள்வோராக நமது பொறுப்பு அல்லவா?

## 19 திருப்பாடல் 149

(மக்களில் மகிழ்ச்சியுறும் மாமன்னர் போற்றி!)

1 அல்லேலூயா!
ஆண்டவருக்குப் புதியதொரு
பாடலைப் பாடுங்கள்;
அவருடைய அன்பர் சபையில்
அவரது புகழைப் பாடுங்கள்.
2 இஸ்ரயேல் தன்னை
உண்டாக்கினவரைக் குறித்து
மகிழ்ச்சி கொள்வதாக!
சீயோனின் மக்கள்
தம் அரசரை முன்னிட்டுக்
களிகூர்வார்களாக!
3 நடனம் செய்து
அவரது பெயரைப் போற்றுவார்களாக;
மத்தளம் கொட்டி, யாழிசைத்து
அவரைப் புகழ்ந்து பாடுவார்களாக!
4 ஆண்டவர் தம் மக்கள் மீது
விருப்பம் கொள்கின்றார்;
தாழ்நிலையிலுள்ள அவர்களுக்கு
வெற்றியளித்து மேன்மைப் படுத்துவார்.
5 அவருடைய அன்பர்
மேன்மையடைந்து களிகூர்வராக!
மெத்தைகளில் சாய்ந்து
மகிழ்ந்து கொண்டாடுவராக!
6 அவர்களின் வாய்
இறைவனை ஏத்திப் புகழட்டும்;
அவர்களின் கையில் இருபுறமும்
கூர்மையான வாள் இருக்கட்டும்.
7 அவர்கள் வேற்றினத்தாரிடம்
பழிதீர்த்துக் கொள்வார்கள்;
மக்களினங்களுக்குத்
தண்டனைத் தீர்ப்பிடுவார்கள்;
8 வேற்றின மன்னர்களை
விலங்கிட்டுச் சிறைசெய்வார்கள்;

உயர்குடி மக்களை
இரும்பு விலங்குகளால் கட்டுவார்கள்.
9 முன்குறித்து வைத்த தீர்ப்பை
அவர்களிடம் நிறைவேற்றுவார்கள்;
இத்தகைய மேன்மை
ஆண்டவர் தம் அன்பர்
அனைவருக்கும் உரித்தானது.
அல்லேலூயா!

திருப்பாடல் 149:1-9

**சிந்தனைக்கு**

ஆண்டவரைத் தங்கள் அரசராகப் போற்றிப் புதியதொரு பாடலைப் பாடுவதாக அமைந்த திருப்பாடல். கருப்பொருளின் அடிப்படையில், இதனோடு, திருப்பாடல் 109 ஒப்பிடத் தக்கது. இரண்டுக்கும் முரண் எதுவெனில், தாவீது தனது எதிரிகளிடம் அன்பு செலுத்துபவராகவும், இருப்பினும் ஆண்டவர் தன் எதிரிகளுக்கு அவர்களின் செயல்களுக்குத் தக்க கைம்மாறு அளிக்கட்டும் என்றும் வேண்டுகிறார்; இங்கோ, திருப்பாடகர், 'இறைமக்கள் வாளெடுத்துத் தங்கள் எதிரிகளைப் பழிவாங்குவார்கள்' என்று பாடுகிறார். இது கடவுள் நமக்குக் கற்றுத் தரும் இறையியலுக்கு முரணாக உள்ளது. ஏனெனில், பழிவாங்குதல் கடவுளுக்கே உரியது அல்லவா!

தலைப்பற்ற திருப்பாடல். எழுதியவர் யார் என்று தெரியவில்லை. நெகேமியா 4:16 பகுதி, இப்பாடலின் வ.6டன் ஒப்பிடப்பட்டு, சிறை மீண்டோரின் காலப் பாடல் இது என்று கருதப்படுகிறது.

அமைப்பு:
வ.1-3, தொடக்கப் புகழ்ச்சி
வ.4-5, இறைமக்களும் அவர்களை விரும்பும் ஆண்டவரும்
வ.6-9, வெற்றி ஈட்டும் இறை அன்பர்கள்

வசனம் 149:1
"ஆண்டவருக்குப் புதியதொரு பாடல்..." -
பார்க்க, 33:3, 96:1, 98:1.
அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்ற இஸ்ரயேலர், புதியதொரு பாடலைப் பாடி ஆண்டவரைப் போற்றினர் (விடுதலைப் பயணம் 15:1-21). அதைப்போல, சிறையிருப்பிலிருந்து மீட்கப்பட்ட இஸ்ரயேலர், புதியதொரு பாடலைப் பாடத் திருப்பாடகர் ஊக்குவிக்கிறார். வியத்தகு புதிய செயலைச் செய்யும், புதிய நாளில் புதிய அருளைத் தரும் ஆண்டவருக்கே உரிய புதிய பாடல், எசாயா 43:19-21. விண்ணில் எழும் புதியதொரு பாடல், திருவெளிப்பாடு 15:2-4.

"அவருடைய அன்பர் சபையில்..." -
ஆண்டவர் தெரிந்து கொண்ட மக்கள்; அவரால் மீட்கப்பட்ட மக்கள்; அவர் தம் உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்ட மக்கள், 111:1, 148:14.

வசனம் 149:2
ஒப்பிடுக, வ.4. உண்டாக்கியவரில் மகிழும் மக்கள்; தன்னில் மகிழ்வுறும் மக்களை விரும்பும் ஆண்டவர்.

உண்டாக்கியவரைக் குறித்து மகிழ்வுறும் இஸ்ரயேலர், 95:6, 100:3; எசாயா 44:2.

வசனம் 149:3
"நடனம் செய்து..." -
பழைய ஏற்பாட்டில் நடனம் [maw-khole, மாகோல், (30:11, 149:3, 150:3&4; எரேமியா 31:13; புலம்பல் 5:15) மற்றும் kaw-rar, காரர் (2 சாமுவேல் 6:14&21)] என்ற செயல் 8 முறை மட்டுமே குறிப்பிடப்படுகிறது. இந்த வசனங்களின் தொடர்பில் சொல்லப்படும் சபை என்பது இன்றைய திருச்சபை போன்றது அல்ல. தூயகம் மற்றும் திருத்தூயகம் (பரிசுத்த ஸ்தலம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலம்) என்பது லேவியர் மட்டுமே நுழையக் கூடிய இடம். ஆக சபை மொத்தமும் இவற்றுக்கு வெளியே தான் கூட இயலும். இன்றைய திருச்சபை என்பது திருத்தூயகம் மற்றும் தூயகம் இணைந்த அமைப்பு (மத்தேயு 27:51). எனவே நடனம் என்பது தூயகத்தில் நடப்பது அல்ல. நடனத்தால் சபையை எழுப்புவோம் என்போரை, சபைக்கு வெளியே தள்ளி வையுங்கள்.

வசனம் 149:5
"...மெத்தைகளில் சாய்ந்து..." -
பாஸ்கா உணவைப் பகிர்ந்து உண்ணும் போது, ஒருபுறம் உயர்த்தப்பட்ட மெத்தைகளில் சாய்ந்து உண்ணுவது இஸ்ரயேலர் வழக்கம். மீட்கப்பட்டவர்களின் ஓய்வு! இன்றைக்கு நாம் மீட்கப்பட்டோராயின், ஓய்ந்திருக்க முடியாது (மத்தேயு 8:20). ஓய்வு நாளும் ஓய்வெடுக்க அல்ல.

வசனம் 149:6
"...இருபுறமும் கூர்மையான வாள்..." -
கூர்மையாக்கப்பட்ட வாளும் வேண்டும்; அதனைப் பயன்படுத்தும் பயிற்சியும் ஆற்றலும் வேண்டும். கிறிஸ்துவின் படையினருக்கு இருபுறமும் வெட்டக் கூடிய கூர்மையான வாள் என்பது கடவுளுடைய வார்த்தையே (எபிரேயர் 4:12; திருவெளிப்பாடு 1:12); அந்த வார்த்தை கல் மனதையும் பிளக்கக் கூடியது. அந்தப் போர்க்கருவியைக் கையாளப் பயிற்சி பெறுவோம். ஆவியால் ஆற்றல் பெறுவோம்.

வசனம் 149:7
பழி தீர்த்தல் -
கடவுள் கட்டிய அரசுக்கு எதிராக இருப்போர் பழிவாங்கப்படுவோர் (58:10, 79:10, 94:1; எண்ணிக்கை 31:2; இணைச் சட்டம் 32:35,41&43; 2 அரசர்கள் 9:7; எசாயா 34:8, 35:4, 47:3, 59:17, 61:2, 63:4; எரேமியா 46:10, 50:15&28, 51:6,11&36; எசேக்கியேல் 25:14&17; மீக்கா 5:15; நாகூம் 1:2). இந்த வசனங்களை வாசித்தால் நாம் தெளிவு பெறுவது: பழிவாங்குதல் கடவுளுக்கு உரியது; அதை அவரே செய்கிறார் அல்லது அவர் தெரிந்தெடுத்தோர் பழிவாங்க அவர்களை வழி நடத்துகிறார். இங்கே குறிப்பிட்டுள்ள வசனங்களின் தொனியிலிருந்து, வ.6-9ன் தொனி வேறுபடுவது உணரத்தக்கது.

வசனம் 149:8
"வேற்றின மன்னர்களை விலங்கிட்டு..." -
மண்ணுலக மன்னர்களை கட்டுப்படுத்தும் விண்ணுலக அரசர், வ.2.
இறையரசு என்பது போர்களால் கட்டப்படுவது அல்ல; அமைதி அருளும் இறைவாக்கால் எழுவது, எசாயா 9:4-5&7, 60:1-22; எபேசியர் 6:10-17; திருவெளிப்பாடு 1:16.

வசனம் 149:9
"முன்குறித்து வைத்த தீர்ப்பு..." -
வேற்றினத்தாரைக் குறித்த கடவுளின் ஆணை, இணைச் சட்டம் 7:12.
🕎

குடிகளாக இறைமக்கள் தங்களை ஆளும் அரசர்களின் அரசராம் ஆண்டவரைப் போற்றிப் பாடக்கூடிய திருப்பாடல், பேரழிவைச் செய்ய ஊக்கம் தரும் பாடலாக மாற்றப்பட்டது என்பது வேதனையான செய்தி. உரோமைக் கத்தோலிக்கம், கால்வினியம், லூத்தரன் - இவர்களில் யார் பெரியவர் என்பதற்காக, 17ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் நடந்த 30 ஆண்டு காலப் போரில், மூன்று பிரிவினரும் தங்கள் படைகளை ஊக்கப்படுத்த இந்தத் திருப்பாடலைப் பாடினர் என்பது ஒரு நகைமுரண்!
முப்பது ஆண்டுகள் போர் நடந்தது என்றால் எத்தகைய கடுமையான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும்?

நமக்குக் கொடுக்கப்பட்ட ஆண்டவர், "வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவர், என்றுமுள தந்தை, அமைதியின் அரசர்." வாளை எடுக்கச் சொன்ன நெகேமியா (4:16) இஸ்ரயேலின் எதிரிகளைக் கொலை செய்யவில்லை; வாளெடுக்கச் சொன்ன கிறிஸ்து இயேசுவும் (லூக்கா 22:35-38) வன்முறையை எதிர்த்தார் (லூக்கா 22:49-51). அந்த அமைதியின் அரசரைக் கொண்டாடும் நாம், அவர்தம் வார்த்தைகளையும் வழிமுறைகளையும் கைக்கொள்ள உறுதியேற்றுச் செயல்படுவோம்.

✝

## 19 திருப்பாடல் 150

*(தூயகத்தில் இறைவர் போற்றி!)*

1 அல்லேலூயா!
தூயகத்தில் இறைவனைப் போற்றுங்கள்!
வலிமைமிகு விண்விரிவில்
அவரைப் போற்றுங்கள்!
2 அவர்தம் வல்ல செயல்களுக்காய்
அவரைப் போற்றுங்கள்!
அவர்தம் எல்லையிலா மாண்பினைக் குறித்து
அவரைப் போற்றுங்கள்!
3 எக்காளம் முழங்கியே
அவரைப் போற்றுங்கள்!
வீணையுடன் யாழிசைத்து
அவரைப் போற்றுங்கள்.
4 மத்தளம் கொட்டி நர்த்தனம் செய்து
அவரைப் போற்றுங்கள்!
யாழினை மீட்டி, குழலினை ஊதி
அவரைப் போற்றுங்கள்!
5 சிலம்பிடும் சதங்கையுடன்
அவரைப் போற்றுங்கள்!
"கலீர்" எனும் தாளத்துடன்

அவரைப் போற்றுங்கள்!
6 அனைத்து உயிர்களே,
ஆண்டவரைப் புகழ்ந்திடுக!
அல்லேலூயா!

திருப்பாடல் 150:1-6

**சிந்தனைக்கு**

ஆறு புகழ்ச்சிப் பாடல்களில் இறுதிப் பாடல். அல்லேல் திருப்பாடல்களில் இறுதிப் பாடல். பைபிளின் மிக நீண்ட நூலின் இறுதித் திருப்பாடல். எபிரேயத்தில் நூலின் பெயர், Tehillim (தெஹிலீம்); இதற்கு பொருள், புகழ்ச்சிப் பாடல்கள். அதற்கேற்ப, போற்றுதல் என்பதைத் தவிர இந்தத் திருப்பாடலில் வேறு ஏதுமில்லை. நாம் ஏற்கனவே பார்த்தபடி, கடவுளைப் போற்றுதலைவிட வேறு எந்தத் தகுதியும் மனிதர்களாகிய நமக்கு இல்லை.

திருப்பாடல்கள் நூலின் முதல் இரண்டு பாடல்களும், இறுதி இரண்டு பாடல்களும் தலைப்பற்றவை. நூலின் முதல் பாடல் போலவே இறுதிப் பாடலும் ஆறு வசனங்களால் ஆனது. முதல் திருப்பாடல், பேறுபெற்றோர் யார் என்று எடுத்துக் காட்டியது; இறுதித் திருப்பாடல் பேறுபெற்றோரின் எல்லா ஆசிகளுக்கும் ஊற்றும் உறைவிடமுமான ஆண்டவரைப் போற்றுவதாக உள்ளது.

அல்லேல் திருப்பாடல்கள் ஒவ்வொன்றையும் இவ்வாறு வகைப்படுத்தலாம் -
* தனிப்பட்ட போற்றுதல், 146
* மக்களினமாகப் போற்றுதல், 147
* படைப்பனைத்தும் போற்றுதல், 148
* இறையரசைப் போற்றுதல், 149
* மூச்சுள்ள யாவும் போற்றுதல், 150.

இந்தத் திருப்பாடலின் ஆறு வசனங்களில், 13 முறை "போற்றுதல்" எனப் பொருள்படும் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தலைப்பற்ற திருப்பாடல். எழுதியவர் எழுதப்பட்ட காலம் மற்றும் சூழல் குறித்த நேரடியான குறிப்பு திருப்பாடலில் ஏதுமில்லை.

அமைப்பு:
வ.1, யாரைப் போற்ற வேண்டும்? எங்கே போற்ற வேண்டும்?
வ.2, எதற்காகப் போற்ற வேண்டும்?
வ.3-5, எப்படிப் போற்ற வேண்டும்?
வ.6, யார் போற்ற வேண்டும்?

வசனம் 150:1
கடவுளை எதற்காகப் போற்ற வேண்டும்?
* அவரே போற்றுதலுக்குரியவர், 18:3, 113:3-4.
* அருளைப் பொழியும் அவர் போற்றுதலுக்குரியவர், எபேசியர் 1:6
* நல்லவராம் அவர் போற்றுதலுக்குரியவர், 135:3.

தூயகத்தில் கடவுளைப் போற்றுதல், 68:24-26.

ஆற்றல் விளங்க விண்ணுலகில் வீற்றிருக்கும் கடவுளைப் போற்றுதல், 11:4, 20:6, 102:19.

வசனம் 150:2
வல்ல செயல்கள், விடுதலைப் பயணம் 15:3-10; இணைச் சட்டம் 3:24.

ஆண்டவரின் எல்லையில்லா மாண்பு, 48:1, 86:10, 95:3, 145:3; 1 திமொத்தேயு 6:15-16.

வசனம் 150:3-5
இங்கு சொல்லப்பட்டுள்ள இசைக்கருவிகளோடும் நடனத்தோடும் தொழுது கொண்ட தாவீதும், இஸ்ரயேலரும், 2 சாமுவேல் 6:5&15; 1 குறிப்பேடு 13:8, 15:24, 16:42. மேலும் பார்க்க, 81:2

ஆண்டவர் நமக்கு ஆசிகளை அருளுகிறார்; நாம் அவருக்குத் துதிகளைத் தருகிறோம். துதித்தலே நாம் அவருக்கு எனும் வகையில் நம்மைத் தகுதி உள்ளோர் ஆக்குகிறது.

இசைக்கருவிகள் அனைத்தையும் (காற்றிசைக் கருவிகள் - எக்காளம் & குழல், நரம்பிசைக் கருவிகள் - வீணை & யாழ், தோலிசைக் கருவிகள் - மத்தாளம்) இசைத்துப் போற்றிட வேண்டும். இவற்றோடு, கைத்தாளத்துடன் / சதங்கையுடன் வழிபடத் திருப்பாடகர் நம்மை அழைக்கிறார்.

வசனம் 150:4
நர்த்தனம், பார்க்க 149:3 மற்றும் "நடனம்" குறிப்பு.

வசனம் 150:5
இந்த வசனத்தில் கைத்தாளம் என்பதைக் குறிக்கும் mets-ay-leth / மெட்சேலெத் என்ற மூலச் சொல் (1 குறிப்பேடு 15:16,19&28) இரண்டு முறை உள்ளது. இதற்கு கணகண என ஒலி எழுப்பும் சிறுமணிகள் (tinklers) என்று ஒரு பொருளும் உண்டு. அந்தப் பொருளில், சதங்கை என்று பொருள் கொள்ளலாம்.

வசனம் 150:6
"அனைத்து உயிர்களும்..." -
சுவாசமுள்ள யாவும் / மூச்சுள்ள யாவும். உள்ளிருந்து வெளியே வரும் காற்றே ஒலியாக, சொல்லாக, பாட்டாக மாறுகிறது. மூச்சுள்ள யாவும் குரல் எழுப்புகின்றன. அவ்வாறு குரல் எழுப்பும் அனைத்தும் ஆண்டவரைத் துதிக்கத் திருப்பாடகர் அறிவுறுத்துகிறார்.

அவ்வாறு பாடுவோர், மூச்சு உள்ளவரை பாட வேண்டும், 146:1-2.

இடைவிடாத பாடலின் ஒலி - அது விண்ணில் எழும் போற்றுதல், திருவெளிப்பாடு 4:8-11. ஆண்டவர் உறைந்திருக்கும் விண்ணகத்தில் ஒலிக்கும் பாடல்கள் குறித்து, திருவெளிப்பாடு நூலில் மீண்டும் மீண்டும் பார்க்கிறோம், 5:8-14, 7:9-12, 14:1-3, 15:2-4, 19:1-8. இது ஆண்டவர் இருக்கும் இடத்தில் பாடல் எவ்வளவு சிறப்பிடம் பெறுகிறது என்பதை நமக்கு வலியுறுத்துகிறது. எனவே ஆண்டவரின் பிரசன்னம் இருக்கும் எல்லா இடங்களிலும் அவரைப் போற்றிப் பாட வேண்டும்; போற்றுதல் விளங்கும் எல்லா இடங்களிலும் அவர் பிரசன்னமாகிறார். இவ்வாறு போற்றுதல் கடவுளுடன் நம்மை இணைப்பதில் சிறப்பிடம் பெறுகிறது.

மண்ணுலகில் அனைவருமே ஆண்டவரைப் போற்றுவர் எனும் இறைவாக்காக, பிலிப்பியர் 2:11.

*திருப்பாடல்கள் நூலில், முந்தைய நான்கு தொகுதிகளின் இறுதி வசனம் அல்லது வசனங்கள் நிறைவுத் துதியாக இருந்தன; ஆனால் ஐந்தாம் நூலின் இறுதிப் பாடல் முழுவதுமே துதியாக அமைந்து, மொத்த நூலுக்கும் மகிமை சேர்க்கிறது.*

*விண்ணிலோ, எருசலேமில் தூயகத்திலோ அல்ல - எங்கும் நிறைந்த ஆண்டவரே நம் உள்ளங்களில் உறையும் கடவுள், யோவான்* 4:21-24. *எனவே உண்மையான உள்ளத்தோடு அவரை எப்போதும் தொழும் காலமிது. பயணத்தில் தொழுவோம்; பணியிடத்தில் தொழுவோம்; இல்லங்களில் தொழுவோம்; இடைவிடாது அவரைத் தொழுவோம்.*
*அல்லேலூயா*!

Yours suggestions are highly valued.
**Contact Information:**
WhatsApp & Telegram: +919443338739
Facebook: https://facebook.com/groups/orae.vazhi/
Email: paul_palk@yahoo.co.in